ஸ்ரீ:

ஸ்ரீராமாயண பாரதாதி

★ தனிச்லோகம் ★

இரண்டாம்பாகம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் க்ருஷ்ணஸூரயே நம:

ஸ்ரீஸூக்திமாலா மலர்-13. இரண்டாம்பாகம்.

பரமகாருணிகரான
பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

ஸ்ரீராமாயண பாரதாதி
தனிச்லோகம்

[யுத்தகாண்ட தனிச்லோகமும், அபயப்ரதானஸாரமும், பாரதாதி தனிச்லோகமும், தனிச்லோக தர்ப்பணம் என்னும் விவரணத்துடன் கூடியது.]

பதிப்பாசிரியர்:-
ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M. A. B. L.
அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

விலை ரூ. 7-00.
தபாற்கூலி 0-75.

ஸ்ரீநிவாஸம் அச்சகம், புத்தூர், திருச்சி.

பெரியவாச்சான்பிள்ளையின் தனியன்

ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய நமோ யாமுந ஸூநவே ।
யத் கடாக்ஷைக லக்ஷ்யாணும் ஸுலப₄ ஸ்ரீத₄ரஸ் ஸதா₃ ॥

[எவருடைய கடாக்ஷத்துக்கு விஷயமாயிருப்பவர்களுக்கே ஸ்ரீதரன் எப்போதும் ஸுலபனுயிருக்கிறனே, 'ஸ்ரீமத்க்ருஷ்ணர்' என்னும் பெயரையுடையவரும், யாமுநாசார்யரின்புதல்வருமான அந்தப் பெரியவாச்சான்பிள்ளைக்கு நமஸ்காரம்.]

இவர் திருநக்ஷத்ர தனியன்

ஸகலத்ராவிடாம்நாயஸாரவ்யாக்₂யாநகாரிணம்
ச்ராவணே ரோஹிணீஜாதம் க்ருஷ்ணஸம்ஜ்ஞமஹம் ப₄ஜே.

[திராவிடவேதம் முழுவதற்கும் ஸாரமான வியாக்கியானத்தை அருளியவரும், ஆவணியில் ரோஹிணியில் அவதரித்தவரும், 'கிருஷ்ணர்' என்னும் பெயருடையவருமான பெரியவாச்சான்பிள்ளையை நான் உபாஸிக்கிறேன்.]

வாழித்திருநாமம்

தண்மை சிங்கம் ரோகிணிநாள் தழைக்க வந்தோன் வாழியே.
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே.
புன்மை தவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே.
பூதூர் எதிராசர்தாள் புகழுமவன் வாழியே.
மன்புகழ் சேர் சடகோபர் வளமுரைப்போன் வாழியே.
மறைநாலின் பொருள்தன்னைப் பகுத்துரைத்தான் வாழியே.
அன்புடன் *உலகாரியர்தம் அடியிணையோன் வாழியே
அபயப்ரதராஜர் தாள் அனவரதம் வாழியே.

---

* உலகாரியர்–'லோகாசார்யர்' என்னும் பட்டம்பெற்ற நம்பிள்ளை.



இந்நூலின் பதிப்பாசிரியரும், தனிச்லோக த3ர்ப்பணத்தை
இயற்றியவரும்,'ஸ்ரீவைஷ்ணவ ஸுத3ர்சனம்' ஆசிரியருமான
ஸ்ரீ உ. வே. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி.

முகவுரை

சென்ற மன்மத வருஷம் ஆவணியில் ரோஹிணியில் விவரணத்துடன்கூடிய ஸ்ரீராமாயண தனிச்லோகம் ஸுந்தர காண்டம்முடிய முதல்பாகமாக வெளியிடப்பட்டது. பெரிய வாச்சான்பிள்ளை அருளிய அப₄யப்ரதாநஸாரமும், யுத்த காண்ட தனிச்லோகமும், பாரதாதி தனிச்லோகமும் விவ ரணத்தோடுகூட இரண்டாவது பாகமாக வெளியிடப்படு கிறது இன்று. அப₄யப்ரத₃ராஜரும், வியாக்கியான சக்கர வர்த்தியுமான பெரியவாச்சான்பிள்ளையெழுந்தருளியிருக்கும் நாலுஸிம்ஹாஸனங்களில் தனிச்லோகமாகிற தனிப்பெருஞ் சீரியசிங்காசனத்தின் திருப்பணி இவ்வாறு நிறைவேறியது. ஸ்தோத்ரக₃த்ய வ்யாக்யானமாகிற ஸிம்ஹாஸனத்தின் திருப்பணி எந்தையார் காலத்திலேயே நிறைவுபெற்றது. எந்தையாராலே தொடங்கிவைக்கப்பெற்ற ரஹஸ்யவ்யாக் யானமாகிற ஸிம்ஹாஸனத் திருப்பணியும், திவ்யப்ரபந்த வ்யாக்யான ஸிம்ஹாஸனத் திருப்பணியும் தொடர்ந்து நடை பெற்றுவருகிறது. பகவத்பாகவதாநுக்ரஹத்தாலே அவை யும் நிறைவேறும்.

பெரியவாச்சான்பிள்ளையின் இயற்பெயர் 'கிருஷ்ணன்' என்பது. இவர், தஞ்சாவூர்ஜில்லாவில் திருவெள்ளியங்குடிக் கருகே *சங்கநல்லூர் என்னும் கிராமத்தில், (கி. பி. 1227ல்) ஸர்வஜித் வருஷத்தில் ஆவணிமாதத்தில் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியும், ரோஹிணிநக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீஜயந்தியன்று, பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணகுலத் திலே, யாமுநதேசிகருக்கும், நாச்சியாரம்மாளுக்கும் திருக் குமாரராய் அவதரித்தருளினர். கண்ணன் அவதரித்த தினத் தில் அவதரித்தருளினபடியால் 'கிருஷ்ணன்' என்றும் 'கண்ணன்' என்றும் திருநாமமிடப்பெற்றார். ஸ்ரீரங்கத்தில் ஆசார்யபதம் நிர்வஹித்தருளியவரும், கலிகன்றியாகிற திரு மங்கையாழ்வார் அவதரித்த கார்த்திகையில் கார்த்திகை நாளிலே அவதரிக்கையாலே, 'கலிகன்றிதாஸர்' என்று திருநாமமிடப்பெற்றவருமான நம்பிள்ளை என்னும் ஆசார்ய ச்ரேஷ்டரிடம் ஸகலார்த்தங்களையும் கேட்டு, "ராமஸ்ய த₃க்ஷிணோ பா₃ஹு:" என்பதுபோலே அவருக்கு வலதுகை போலேயிருந்து, அவருடைய நியமனம்பெற்று, நாலாயிர

---

* "சேங்கனூர்" என்று இப்போது அழைக்கப்படுகிறது. "சேய்ஞ்ஞலூர்" என்பர் சைவர்.

திவ்யப்ரபந்தங்களுக்கும். ஸ்ரீராமாயண பு₄ாரதாதி₃ தனிச்லோகங்களுக்கும். ஸ்தோத்ரகத்ய ரஹஸ்யங்களுக்கும் இன்சுவைமிக்க வியாக்கியானங்களை அருளிச்செய்து, "வ்யாக்யான சக்ரவர்த்தி" என்று வைதிகர்களனைவராலும் புகழப்படும் பெருமையைப் பெற்றார். பெரியவாச்சான்பிள்ளையில்லையென்றால் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தமில்லை என்று கூறுவது உள்ளதுரைத்ததேயன்றி மிகைமொழியாகாது. "மெய்ம்மை சொல்லில் வெண்சங்கமொன்றேந்திய கண்ண! நின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே" [பெரியதிரு 7-10-10] என்று திருமங்கையாழ்வாராலே நியமிக்கப்பெற்ற கண்ணனே, அவருடைய அவதாரதினத்தன்று அவருடைய அபராவதாரமாக அவதரித்த நம்பிள்ளைக்கு சிஷ்யனாகி, ஸ்ரீஜயந்தியன்று கண்ணன் என்னும் திருநாமத்தோடேயே அவதரித்து, கவியின் பொருளைக் குறிக்கொண்டு கேட்டு, அப்பரகாலகவியின் வாக்கிற்கும், மற்றுமுள்ள திருமாலவன்கவிகளின் வாக்கிற்கும், ஆதிகவியின் வாக்குகளுக்கும் மற்றும் பல நூல்களுக்கும் வியாக்கியானங்கள் எழுதியருளினார் என்று மஹான்கள் பணிப்பர். பரந்த ரஹஸ்யாதிகளிலே, ஸ்ரீகிருஷ்ணனின் அபயப்ரதானச்லோலோகத்திற்கும், ஸ்ரீராமாயண தனிச்லோகத்திலே ஸ்ரீராமனின் அபயப்ரதானச்லோகத்திற்கும், பிராட்டியின் அபயப்ரதானச்லோகத்திற்கும், பாரதாதிதனிச்லோகத்திலே வராஹப்பெருமாளின் அபயப்ரதானச்லோகத்திற்கும் இப்படி எல்லா அபயப்ரதானச்லோகங்களுக்கும் அமுதிலுமினிய வியாக்கியானங்களை அருளிச்செய்த ஆசார்யச்ரேஷ்டர் இவர் ஒருவரேயாகையால் தம் காலத்திலேயே "அப₄'பப்ரத₃ர்" என்றும், "அப₄யப்ரத₃ராஜர்" என்றும் பட்டம் பெற்றார் இப்பேராசிரியர். இவருடைய சிஷ்யர்களான பரகாலதாஸரும், வாதிகேஸரிஜீயரும் தம் நூல்களில் இவரை 'அப₄யப்ரத₃குரு' என்றழைத்திருப்பதைக் காணலாம். இவருடைய திருக்குமாரர் அழகியமணவாளப்பெருமாள்நாயனார் என்னும் திருநாமத்தையுடைய நாயனாராச்சான்பிள்ளையாவர். இவரும், வாதிகேஸரிஜீயரும், அஹோபிலமடஸ்தாபகரான ஆதிவண் சடகோபஜீயரின் பரமாசார்யரான ஸ்ரீரங்காசார்யரும் முதலானவர்கள் இவருடைய சிஷ்யர்களாவர். எம்பெருமானாருடைய சிஷ்யர் கூரத்தாழ்வான்; அவருடைய குமாரர் ஸ்ரீபராசரபட்டர்; அவருடைய சிஷ்யர் நஞ்சீயர்; அவருடைய

சிஷ்யர் நம்பிள்ளை; அவருடைய முக்கியசிஷ்யர் பெரியவாச்சான்பிள்ளை என்னும் குருசிஷ்யக்ரமம் அறியத்தக்கது. நிற்க.

சென்ற ப$_4$ாக$_3$த்திற்போலவே இந்த ப$_4$ாக$_3$த்திலும் பழைய பதிப்புகளிலுள்ள பல அசுத்$_3$த$_4$பாடங்கள் திருத்தப்பெற்றுள்ளன. நூலின் கடைசியில் அவற்றில் முக்கியமானவைகளைக் காட்டியிருக்கிறோம். இப்பாடத்திருத்தங்களில் பல கீர்த்திமூர்த்தியான ஸ்ரீரங்கம் வித்வான் ஸ்ரீ உ. வே. கோவிந்தாசார்ய ஸ்வாமியின் திருக்கை சாத்தப்பெற்ற ஸ்ரீகோசத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவை. மூலத்திலும், வ்யாக்யானத்திலும் உள்ள ஸ்ரீராமாயண ச்லோகங்களுக்குப் பாத$_3$ாநுக்ரமணிகைகளும், மற்ற ப்ரமாணங்களுக்கு அநுக்ரமணிகையும் கொடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீராமாயணச்லோகங்களில் சுமார் இரண்டாயிரம் பாத$_3$ங்களுக்கும், மற்ற ப்ரமாணங்களில் சுமார் ஆயிரம் ப்ரமாணங்களுக்கும் அட்டவணைகள் இந்நூலின் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் நூற்றெழுபது ப்ரமாணங்களுக்கு ஆகரமோ, முழுவடிவமோ அல்லது இரண்டுமோ தெரியவில்லை. அவற்றின் அட்டவணையும் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றின் ஆகரம், அல்லது முழுவடிவம் எவருக்காவது கிடைத்துத் தெரிவித்தால் பின்பதிப்புகளில் சேர்த்துக்கொள்வோம். மூலச்லோகங்களின் ஸூசிகையும், சென்றபாகத்திற்போலே ப்ரமாணாகரபரிசிஷ்டமும், பிழை திருத்தங்களும் நூலின் கடைசியில் கொடுக்கப்பெற்றுள்ள

பாரதாதிதனிச்லோகத்தில் திரௌபதீ சரணாகதிச்லோக வ்யாக்யானத்தில், திரௌபதீ சரணாகதியைப்பற்றிய பல பக்ஷங்களை நடுநிலைநின்று ஆராய்ந்து, ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் பொருந்திய நிர்வாஹத்தைக் காட்டியிருக்கிறேன்.

பல ப்ரமாணங்களின் ஆகரங்களைக் கண்டுபிடிக்கவும் அநுக்ரமணிகைகள் தயாரிக்கவும், மற்றும் பலவிதமாகவும் உதவிய ஸ்ரீ உ. வே. கோழியாலம் ரங்கநாதாசார்யஸ்வாமிகளுக்கும், சில ப்ரமாணாகரங்களைத் தெரிவித்த மற்றும் பல மஹான்களுக்கும் அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,


சார்வரி-ஸு — ஸ்ரீவைஷ்ணவதாஸன்,

தை-ஹஸ்தம். — **ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.**

பூர்வபாகம் – விஷயஸூசிகை

உத்தரபாகம் – விஷயஸூசிகை

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை அருளிய

அபயப்ரதாந ஸாரம்

ப்ரவேசம்

"तौ तु मेधाविनौ दृष्ट्वा वेदेषु परिनिष्ठितौ। वेदोपबृंहणार्थाय तावग्राहयत प्रभुः" (தௌ து மேதாவிநௌ த்ருஷ்ட்வா வேதேஷு பரிநிஷ்டிதௌ। வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:॥) என்று வேதோபப்ருப்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான ப்ரபந்தமாகையாலே ஜகத்காரணபூத பரவஸ்து ப்ரதிபாதகமான "अद्भ्यः संभूतः पृथिव्यै रसाच्च" (அத்ப்யஸ் ஸம்பூத: ப்ருதிவ்யை ரஸாச்ச) இத்யாதி வாக்யங்களையும் அந்த வஸ்துவினுடைய அவதாரோபபாதகமான "अजायमानो बहुधा विजायते" (அஜாயமானோ பஹுதா விஜாயதே) இத்யாதி வாக்யங்களையும், அவதார ப்ரயோஜநமான ஸாதுபரித்ராண துஷ்க்ருத்விநாஶங்களைச் சொல்லுகிற "यो देवेभ्य आतपति यो

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அபயப்ரதாநஸார தர்ப்பணம்

ப்ரவேசம்

''மஹாபுத்திசாலிகளாய், வேதங்களில் நிலைநிற்பவர்களான அவ்விருவரையும் கண்டு, வேதத்தை (ராமாயணத்தின் மூலம்) விவரிப்பதன் பொருட்டு அவர்களை வால்மீகிபகவான் அங்கீகரித்தருளினான்'' [ரா-பா 4-6] என்று வேதத்தை விவரிப்பதற்காகப் பிறந்த கிரந்தமாகையாலே, உலகிற்குக் காரணமான பரம்பொருளைச் சொல்லுமவையான ''உலகம் ஜலத்தினின்றும் உண்டாயிற்று; பூமியிலுள்ள அன்னரஸத்தினால் விருத்தியடைந்தது; பரமபுருஷனிடமிருந்து தோன்றிற்று'' [புருஷஸூக்தம்-உத்தராநுவாகம்-1] என்பது முதலான வாக்கியங்களையும், அப்பரம்பொருளுடைய அவதாரத்தை விளக்கித்தருமவையான ''பிறப்பற்றவனான பரமபுருஷன் பலபடியாகப் பிறக்கிறான்'' [புருஷஸூக்தம்-உத்-3] என்பது முதலான வாக்கியங்களையும், அவதாரத்தின் பயனான நல்லோரைக்

देवानां पुरो हित:'' (யோ தேவேப்ய ஆதபதி யோ தேவாநாம் புரோ ஹித:) என்றும் ஏவமாதிவாக்யங்களையும் உபப்ரும்ஹிக்கிறது ஸ்ரீராமாயணம்.

அதுதான் என்னென்னில்: "व्यक्तमेष महायोगी परमात्मा सनातनः'' (வ்யக்தமேஷ மஹாயோகீ பரமாத்மா ஸநாதந:) "भवान्नारायणो देवः श्रीमान् चक्रायुधो विभुः'' (பவாந் நாராயணோ தேவ: ஸ்ரீமாந் சக்ராயுதோ விபு:) "अर्थितो मानुषे लोके जज्ञे विष्णुः सनातनः'' (அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணு: ஸநாதந:) என்று பரதத்வம் ராமாத்மநா அவதரித்ததென்னுமிடம் கண்டோம். விச்வாமித்ராத்வரத்ராணம், ஸ்ரீதண்டகாரண்யவாஸிகளான ரிஷிகளுடைய ஸம்ரக்ஷணம், ராவணாதிகளுடைய வரபலபுஜபலங்களாலே நோவுபட்ட இந்த்ராதிகளுடைய பரிபாலனம் இவை தொடக்கமானவற்றாலே ஸாமாந்யரக்ஷணத்தையும், "रामो रामो राम इति प्रजानामभवन् कथाः। रामभूतं जगदभूत् रामे

காப்பது தீயவரைத் தகைவது என்பவற்றைச் சொல்லுமவையான "எவனொருவன் தேவர்களுக்காக (அசுரர்களைத்) தபிக்கின்றானோ, எவன் ஆதியிலிருந்து தேவர்களுக்கு நன்மை செய்பவனோ, எவன் தேவர்களுக்கு முதல்வனான விஷ்ணுவாக அவதரித்தானோ, பிரகாசிப்பவனும், பரப்ரஹ்மமுமான அவனுக்கு நமஸ்காரம்'' [புருஷஸூக்தம்-உத்-4] என்பது முதலான வாக்கியங்களையும் விவரிக்கிறது ஸ்ரீராமாயணம்.

அது எப்படியெனில்: "இந்த ராமபிரான் பெருந்தபஸ்வியாய், பழையவனான பரமாத்மாவென்பது தெளிவு'' [ரா-யு 114-14] "தேவரீரே திருவுள்ள தேவனாய், சக்கரதாரியாய், ஸர்வ வ்யாபியான நாராயணனெனும் தேவன்'' [ரா-யு 120-13] "தேவர்களால் யாசிக்கப்பட்ட பழையோனான விஷ்ணு மனிதவுலகில் பிறந்தான்'' [ரா-அ 1-7] என்று பரம்பொருள் நாராயணனே யென்றும், அவன் ராமனாயவதரித்தானென்றும் ஸ்ரீராமாயணத்திலே கண்டோம். இனி, அவதார ப்ரயோஜனத்தைப்பார்த்தால், விசுவாமித்திரனின் யாகஸம்ரக்ஷணம், தண்டகவனத்தில் வசிக்கும் ரிஷிகளை ரக்ஷித்தது, ராவணாதியருடைய வரவலிமையாலும், புயவலிமையாலும் துன்புற்ற இந்திரன் முதலானோரை ரக்ஷித்தது இவை முதலானவற்றாலே ஸாமான்யமான ஸாது ரக்ஷணத்தையும், "ராமன், ராமன், ராமன் என்று குடிகளிடம்(எப்போதும்) பேச்சுக்கள் உண்டாயின;

राज्यं प्रशासति॥'' (ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:। ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி॥) என்றும், "तिर्यग्योनिगताश्चापि सर्वे राममनुव्रताः'' (திர்யக்யோநிகதாச்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா:) என்றும் தம்முடைய அழகாலும் ஶீலத்தாலும் தம்மையொழியச் செல்லாதபடி திருத்தி மோக்ஷப்ரதாநம் பண்ணினரென்று ஸாக்ஷாதவதார ப்ரயோஜனமான விஶேஷரக்ஷணத்தையும் சொல்லுகையாலும் ஸாதுபரித்ராணம் கண்டோம். தத்விரோதிகளான தாடகா தாடகேய ப்ரமுகரென்ன, கரதூஷணத்ரிஶிரஸ்ஸுக்களென்ன, ராவணகும்பகர்ண ப்ரப்ருதிகளென்ன இவர்களுடைய வதத்தாலே துஷ்க்ருத்விநாஶமும் கண்டோம். பித்ரு வசந பரிபாலனம், ரிஷிதேவதாத்யநுவர்த்தநம், சிறியத்தைப் பெரியது நலியாதபடி ரக்ஷித்த க்ஷாத்ரமான தர்மம், அச்வமேதஶதைர் யஜநம் இத்யாதி ஸாமாந்யதர்மங்களையும், "सुग्रीवं शरणङ्गतः'' (ஸுக்ரீவம் சரணங் கதः) "समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति'' (ஸமுத்ரம் ராகவோ

ராமன் அரசாளுகையில் உலகமெல்லாம் ராமமயமாயிற்று''[ரா-யு 131-102] என்றும், "ஊர்வனவாகப்பிறந்தவை யெல்லாமும் ராமனைப் பின் தொடர்ந்தன'' [ரா-உ 109-22] என்றும் தம்முடைய அழகாலும், நீர்மையாலும் தம்மை விட்டிருக்கமாட்டாதபடி திருத்தி மோக்ஷமளித்தாரென்று நேரே அவதார ப்ரயோஜனமான விசேஷரக்ஷணத்தையும் சொல்லுகையாலும் நல்லோரை அளிப்பதையும் ஸ்ரீராமாயணத்திலே கண்டோம். நல்லோர்க்கு விரோதிகளான தாடகை, அவள் மைந்தரான ஸுபாஹு மாரீசர்கள் முதலானோர், கரன், தூஷணன், திரிசிரஸ்ஸு, ராவணன் கும்பகர்ணன் முதலானோர் ஆகியோரை அழித்ததாலே தீயவரைக் காய்வதாகிற அவதாரப்பயனையும் ஸ்ரீராமாயணத்தில் கண்டோம். இனி, மூன்றாவது அவதாரப்பயனாக கீதையில் சொல்லப்பட்ட தர்ம ஸம்ஸ்தாபனத்தையும் —(அறத்தை நிலைநிறுத்துதலையும்)— இவ்விதிஹாஸத்தில் காண்கிறோம். தந்தை சொற் கேட்டுநடப்பது, ரிஷிகள், தேவதைகள் முதலானோரைப் பின்பற்றுவது, பலத்திற்குறைந்த ஸுக்ரீவாதிகளை, அதில் மிக்க வாலி முதலானோர் துன்புறுத்தாதபடி ரக்ஷித்த க்ஷத்ரியதர்மம், நூறு அச்வமேதயாகம் செய்தது முதலான ஸாமாந்ய தர்மங்களையும், "ராமபிரான் ஸுக்ரீவனை சரணமடைந்தார்'' [ரா-கி 4-19] "அரசரான ராமபிரான் கடலரசனைச் சரணமடைவது தகுந்தது''

ராஜா ஶரணம் கந்துமர்ஹதி) என்று விஶேஷதர்மத்தையும், “मर्यादानां च लोकस्य कर्ता कारयिता च सः” (மர்யாதாநாம் ச லோகஸ்ய கர்த்தா காரயிதா ச ஸ:) என்றும், “स्वे स्वे धर्मे नियोक्ष्यति” (ஸ்வே ஸ்வே தர்மே நியோக்ஷ்யதி) என்றும், பிறரை அநுஷ்டிப்பிக்கைக்காக அநுஷ்டித்தபடியாலே தர்மஸம்ஸ்தாபனம் பண்ணக்கண்டோம்.

இப்படி வேதோபப்ரும்ஹணமான ஸ்ரீராமாயணத்துக்கு ப்ரதாந ப்ரமேயமான “न्यास इत्याहुर्मनीषिणो ब्रह्माणं–तस्मान्न्यासमेषां तपसामतिरिक्तमाहुः” (ந்யாஸ இத்யாஹுர் மநீஷிணோ ப்ரஹ்மாணம்- தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:) என்று தர்மங்களில் பரமதர்மமாகச் சொல்லப்பட்ட ஶரணாகதிதர்மத்தை உபப்ரும்ஹிக்கிறுன் ஸ்ரீவால்மீகிபகவான்.

இது ப்ரதாந ப்ரமேயமானபடியென்? என்னில்: இந்த ப்ரபந்தத்தில் சக்ரவர்த்தித் திருமகனைக் குறித்துச் சொல்லுகிற பரத்

[ரா-யு 19-31] என்று விசேஷதர்மமான சரணுகதியையும், “உலகத்தில் (அவரவர்கள் நடக்கவேண்டிய) வரம்புகளை நிச்சயிப்பவரும், அதன்படி நடக்கச்செய்பவரும் ராமபிரானே” [ரா-ஸு 35-11] என்றும், “(அனைவரையும்) அவரவர் தர்மங்களில் நடக்கும்படி செய்கிறுன்” [ரா] என்றும் பிறரை அனுஷ்டிக்கச் செய்வதற்காகத் தாமும் அனுஷ்டித்துக் காட்டுகையாலே தர்மஸம்ஸ்தாபனம் செய்வதையும் இவ்விதிஹாஸத்தில் கண்டோம்.

இப்படி வேதத்தை விவரிக்கும் ஸ்ரீராமாயணத்தில் முக்கியமாய் அறியத்தக்கதாய், “ந்யாஸம் (சரணுகதி) என்று அறிவாளிகள் ப்ரஹ்மத்தையே சொல்லுகிறுர்கள்—ஆகையால் ந்யாஸத்தை இந்தத் தவங்களுள் சிறந்ததாகக் கூறுகிறுர்கள்” [தை-நா] என்று தர்மங்களில் மேலான தர்மமாக வேதத்தில் சொல்லப்பட்டதான சரணுகதிதர்மத்தை விபீஷணனுக்கு அபயமளிக்கும் இப்ரகரணத்திலே விவரிக்கிறுர் வால்மீகிமஹரிஷி.

இது ராமயணத்தில் முக்கியமாய் அறியத்தக்கதானபடி எப்படியெனில்: இந்த ப்ரகரணத்தில் ராமபிரானைப்பற்றிச் சொல்லுகிற

வமும் ஸம்ஸாரி ஸஜாதீயராய் தன் மேன்மை பாராதே குஹ ஶபரீஸுக்ரீவப்ரப்ருதிகளோடே ஒரு நீராகக் கலந்த ஶீலாதிகளும், ஸாதுபரித்ராணம், தர்மஸம்ஸ்தாபனம், துஷ்க்ருத்விநாஶநம், என்று முகபேதேந சொல்லப்படுகிற ஸர்வரக்ஷகத்வமுமாக இவையிறே ஶரண்யஸ்வபாவமாவது. ஆகையாலே இப்ரபந்த க்ரமமடைய விபீஷணவ்ருத்தாந்தத்திற் சொல்லுகிற ஶரணாகதியினுடைய ப்ரதிஸம்பந்தி ஸ்வபாவப்ரதிபாதகமாகையாலே ஶரணாகதியே ப்ரதாநப்ரமேயம்.

இப்ரகரணத்தில் ஶரண்யனுக்கு ஶரணாகதரக்ஷணத்திலுண்டான நிர்ப்பந்தத்தையும், ஶரணாகதரக்ஷணகாலத்திலும் ஆஶ்ரிதபராதீநனாயிருக்குமென்னுமிடமும், தத்விஷயத்தில் ஆஶ்ரிதருடைய பரிவையும், இந்த ஶரணாகதிக்கு அங்கமான ஸ்வபாவங்களையும் ப்ரதிபாதியாநின்றுகொண்டு, ஶரணாகதிவைபவத்தை ப்ரதிபாதிக்கிறான்.

மேன்மையும், ஸம்ஸாரிகளோடு ஒருவராய்ப்பிறந்து தன் மேன்மையை மறந்து தாழ்ந்த ஜாதியரான குஹன், சபரி, சுக்கிரீவன் முதலானவர்களோடு நீரோடு நீர்கலக்குமாபோலே சேர்ந்த நீர்மை முதலானகுணங்களும், நல்லோர்களை அளித்தல், அறம் நிலைநிறுத்துதல், தீயவரைத் தகைதல் என்று ஒவ்வொரு விதமாகச் சொல்லப்படும் ஸர்வரக்ஷகத்வமும் ஆக இவையன்றோ சரணமடையத் தகுந்தவனின் தன்மையாவது. ஆகையாலே, ராமபிரானிடமுள்ள அத்தன்மையை விவரிக்கும் இந்நூல் முழுவதும் விபீஷணவிருத்தாந்தத்திற் சொல்லுகிற சரணாகதியை ஏற்றுக்கொள்ளுமவனின் தன்மையைச் சொல்லுவதாகையாலே சரணாகதியே இவ்விராமாயணத்தில் முக்கியமாய் அறியத்தக்கதாகும்.

இந்த ப்ரகரணத்தில் சரணமடையப்படுமவன் சரணமடைந்தவனை ரக்ஷித்தேயாக வேண்டுமெனும் நிர்ப்பந்தத்தையும், அப்படி ரக்ஷிக்கும்போதும் அடியார்க்கு வசப்பட்டே ரக்ஷிப்பானென்பதும், சரண்யனிடத்திலும் சரணாகதனிடத்திலும் அடியாருடைய பரிவையும், இந்த சரணாகதிக்கு அங்கமான தன்மைகளையும் சொல்லாநின்றுகொண்டு, சரணாகதியின் பெருமையைப் பேசுகிறான் வால்மீகி பகவான்.

ப்ரவேசம் முற்றிற்று.

யுத்தகாண்டம் 16-வது ஸர்க்கம் 1-வது ச்லோகம்

सुनिविष्टं हितं वाक्यमुक्तवन्तं विभीषणम्।
अब्रवीत् परुषं वाक्यं रावणः कालचोदितः॥

ஸுநிவிஷ்டம் ஹிதம் வாக்யமுக்தவந்தம் விபீஷணம்।
அப்ரவீத் பருஷம் வாக்யம் ராவண: காலசோதித:॥

பதவுரை:—**ஸுநிவிஷ்டம்**—(செவிக்கு) இனியதாய், **ஹிதம்**-நன்மை பயப்பதான, **வாக்யம்**—சொல்தொடரை, **உக்தவந்தம்**-சொன்னவனான, **விபீஷணம்**-விபீஷணனைக்குறித்து, **ராவண:**—ராவணன், **காலசோதித:**—யமனால் தூண்டப்பட்டவனாய், **பருஷம்**—கடுமையான, **வாக்யம்**—வாக்கியத்தை, **அப்ரவீத்**—சொன்னான்.

அவதாரிகை:—முதல் ச்லோகத்தாலே "ஆண்பிள்ளையான சக்ரவர்த்தித்திருமகனோடே வைரம்பிறந்து நின்ற தசையிலே, இத்தை நிஸ்தரிக்கலாம்படி ப்ராதாவானவன் பரமஹிதத்தை உபதேசிக்க, இத்தைக் காற்கடைக்கொண்டு நாசகனான காலனுடைய வார்த்தையைக்கேட்டு அவன்பின்போவதே!" என்று ரிஷி வெறுக்கிறான்.

(ஸுநிவிஷ்டம்) அர்த்தத்தளவும் செல்லவேண்டாதே **"संश्रवे मधुरं"** **(ஸம்ச்ரவே மதுரம்)** ஆம்படி அழகிய ஸந்நி

அவதாரிகை:—புருஷோத்தமனான ராமபிரானோடே விரோதமுண்டாகியிருந்த தசையிலே, இவ்விரோதத்தைக் கடக்கும்படியாகத் தம்பியான விபீஷணன் மேலான நன்மையை ராவணனுக்கு உபதேசிக்க, இவ்வுபதேசத்தை அலட்சியம்செய்து இவனை அழிக்கவிருக்கும் யமனுடைய வார்த்தையைக்கேட்டு அவன்பின்போவதே! என்று வால்மீகிமஹரிஷி வெறுத்து அருளிச்செய்கிறான் இந்த முதல்ச்லோகத்தில்.

வ்யா:—(அழகியதாய்) பொருள் வரையிலுங்கூடப் போகவேண்டாதபடியாய், "செவிக்கினியசொல்" [ரா-ஸு 31-1] ஆகும்படி அழகிய அமைப்பையுடையதாயிருக்கும் வார்த்தையை. அதாவது,—இஷ்டமல்

வேஶத்தை உடைத்தாயிருக்கும் வார்த்தையை. அதாகிறது- அநபிமதமானாலும் விடவொண்ணாதிருக்கை. அன்றிக்கே, (ஸுநிவிஷ்டமுக்தவந்தம்) என்று க்ரியாவிஶேஷணமாகவுமாம். வார்த்தை அழகியதானாலும் நெஞ்சிற்படாவிடில் காற்கடைக் கொள்ளலாமிறே; அங்ஙனன்றிக்கே, நெஞ்சிலே அழகியதாக நிவிஷ்டமாம்படி சொன்னானென்கை.

(ஹிதம்) வெறும் செவிக்கு இனிதாயிருக்கையன்றிக்கே துர்த்தசையை நிஸ்தரிக்கலாம்படி பத்யமாயிருக்கும் வார்த்தையை. அநபிமதமானாலும் விடவொண்ணாதாயிருக்கும் வாக்ய ஸந்நிவேஶத்தைப் பார்த்தால்; ச்ரவணகடோரமானாலும் விடவொண்ணாத பத்யதையைப் பார்த்தால். இது ஒருவனுக்கு அஸஹ்யமாவதே! என்கை.

(வாக்யம்) சொல்லவேண்டும் ஹிதம் பரிபூர்ணமாயிருக்கை. வாக்யமாவது—அர்த்தத்தைப் பரிபூர்ணமாகச் சொல்லுமதிறே.

லாததாயினும் செவிக்கினியதாகையாலே கேளாமல் விடமுடியாததாயிருப்பது. அன்றிக்கே (நன்றாக உள்நுழையும்படி சொன்னவனை) என்று வினைச்சொல்லுக்கு விசேஷணமாகவும் கொள்ளலாம். வார்த்தை அழகியதாயினும் நெஞ்சிலே படாவிடில் அலட்சியம் செய்யலாமன்றோ. அப்படியல்லாமல் நெஞ்சிலே நன்றாக நுழையும்படி சொன்னான் என்று கருத்து.

(நன்மைபயப்பதான) செவிக்கு இனிதாய் மாத்திரம் இருப்பதன்றிக்கே, துர்த்தசையைக் கடக்கலாம்படியாக நன்மைபயப்பதாயிருக்கும் வார்த்தையை. இஷ்டமல்லாததாயினும் விடமுடியாததாயிருக்கும் வாக்கியத்தின் இனிய அமைப்பைப்பார்த்தால்; செவிசுடுவதானாலும் விடமுடியாததாயிருக்கும் நன்மையளிக்கும் தன்மையைப்பார்த்தால். இப்படிப்பட்ட வாக்கியம் ஒருவனுக்குப் பொறுக்கவொண்ணாததாவதே! என்று கருத்து.

(வாக்யத்தை) சொல்லவேண்டும் நன்மை நிறைந்துகிடக்கும் சொற்றொடரை. வாக்கியமாவது-பொருளை முழுவதும் சொல்லும் சொற்களின் தொடரன்றோ.

(உக்தவங்கம்) **"नासंवत्सरवासिने प्रब्रूयात्"** (நாஸம்வத்ஸர **வாஸிநே ப்ரப்ரூயாத்)** என்று அத்யாதரம்பண்ணிக் காற்கடை யிலே துவளுவார்க்குச் சொல்லும் வார்த்தையை இவன் தூர்க் கதிகண்டு தன் செல்லாமையாலே சொன்னவனே.

(விபீஷணம்) தூரஸ்தன் சொன்ன வார்த்தையாகில், ஆப் தமோ அநாப்தமோ என்று ஶங்கித்துக் கைவிடலாம். **"भ्राता स्वा मूर्तिरात्मनः"** (ப்ராதா ஸ்வா மூர்த்திராத்மந:) என்கிறபடியே ஹிதஞ்சொன்னவன் ப்ரத்யாஸந்நனென்கை.

(பருஷம் வாக்யமப்ரவீத்) ச்ரவணஸமநந்தரம், **"स्थितोऽस्मि गतसन्देहः"** (ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ:) என்று கலக்கம் தீர்ந்து ஸ்திதனாதல், **"त्वत्तो हि वेदाध्ययनं"** (த்வத்தோ ஹி வேதாத் **யயநம்)** என்று உபகாரஸ்ம்ருதியாலே புகழுதல், "என்னைத் தீ மனங்கெடுத்தாய்" என்று ப்ரத்யுபகாரம் காணாமையாலே தெக டாடுதல் செய்யவேண்டுமளவிலே, ஶத்ருக்களைச் சொல்லும் வார்த்தையைச் சொன்னான்.

(சொன்னவனுன) "ஒரு வருடமாவது உடனிருந்து சுச்ருஷை செய்யாத சீடனுக்கு இதைச் சொல்லலாகாது" [ஐதரேய ஆரண்யகம் 3-2-6] என்று பேரன்பு செலுத்தி, கேட்கவேணும் என்னும் ஆசையாலே காலடியிலே துவண்டு கிடப்பார்க்குச் சொல்லும் வார்த்தையை இவனுடைய துர்த் தசையைக்கண்டு தான் சொல்லாமல் நிற்கமாட்டாமையாலே சொன்னவனே.

(விபீஷணனே) தூரத்திலிருப்பவன் சொன்ன வார்த்தையாகில், ஆப்த வாக்கியமோ அன்றோ என்று ஐயமுற்றுக் கைவிடலாம்; "ஸஹோதரன் தன்னுடைய மற்றோருருவமாவான்" [ ] என்கிறபடியே நன்மை சொன்னவன் நெருங்கினவன் என்கை.

(கடுமையான வாக்கியத்தைச் சொன்னான்) கேட்டவுடன் "கலக்கம் தீர்ந்து நிலைநின்றேன்; நீ சொல்லியபடி செய்கிறேன்" [கீதை 18-73] என்று கலக்கம் தீர்ந்து நிலைநிற்றல், "முனிவரே! வேதம் முழுவதும் உம்மிடமன்றோ என்னால் ஓதப்பட்டது" [வி-பு 1-1-2] என்று நன்றி யறிவாலே புகழுதல், "என்னைத்தீமனங் கெடுத்தாய் உனக்கென் செய்கேன்" [திருவாய் 2-7-8] என்று கைம்மாறு காணாமையாலே திகைத்து நிற்பது ஆகிய இவற்றிலே ஒன்றிரண்டையாவது செய்யவேண் டிய சமயத்திலே எதிரிகளைச் சொல்லும் வார்த்தையைச்சொன்னான்.

(வாக்யம்) அவன் சொல்லவேண்டும் ஹிதங்களை நோக்கச் சொன்னாற்போலே பருஷங்களிலும் இனிச்சொல்லலாவதில்லை என்னும்படி சொன்னான். (பருஷம் அப்ரவீத்) அவன் ஹிதம் சொன்னபோது ஸூநிவிஷ்டமாம்படி சொன்னாற்போலே, இவனும் நெஞ்சிலே புண்படும்படி வ்யக்தமாகப் பருஷித்தான்.

இதுக்கு ஹேது சொல்லுகிறது மேல் பதத்வயம். (ராவண:) "ராவயதி ரோதயதி" என்று பரஹிம்ஸையாலே நாட்டைக் கூப்பிடப்பண்ணுதல்; அஸ்தாநே காலிட்டுக்கொண்டு தானும் கூப்பிடக்கடவனாயிருக்கை. இத்தால் தனக்கும் பிறர்க்கும் ஹித மறியான் என்கை. (காலசோதித:) ப்ராதா சொன்ன வார்த்தை செவிப்படாதபடி ப்ரத்யாஸந்நனான காலன் பிடரிதள்ள அவன் பின்போனான். ப்ராதா 'பெருமாள் திருவடிகளிலே ஶரணம் புகு' என்றான்; காலன் 'அது கடவதல்ல; என் வழியே போ' என்றான்.

(வாக்கியத்தை) அவன் சொல்லவேண்டிய நன்மைகளை முழுமையாகச் சொன்னாற்போலே, கடுஞ்சொற்களிலும் இனிச்சொல்லவேண்டியதில்லை என்னும்படி சொன்னான். (கடுமையாகச் சொன்னான்) அவன் நன்மை சொன்னபோது நெஞ்சிலே நுழையும்படி சொன்னாற்போலே, இவனும் நெஞ்சிலே புண்படும்படி தெளிவாகக் கடிந்தான்.

இதுக்குக் காரணம் சொல்லுகிறது மேலிரண்டு பதங்களும். (ராவண:) "ராவயதி-ரோதயதி-இதி ராவண:" [அழச்செய்கிறானாகை யாலே ராவணன்] என்னும் வ்யுத்பத்தியாலே, பிறரை நலிந்து நாட்டிலுள்ளாரை அழச்செய்வதாலும், தகாதவிடங்களிலே காலிட்டுக்கொண்டு, ஆப்பிலே காலிட்ட குரங்குபோலே தானும் அழுமவனாகையாலும் 'ராவணன் என்னும் பெயர் மிகப்பொருந்தியிருக்கை. கைலாஸத்தினடியிலே காலிட்டுக்கொண்டும், வாலியிடமகப்பட்டும் அழுதது பிரசித்தமன்றோ. இவ்விரண்டு பொருளாலும் தனக்கும் பிறர்க்கும் நன்மையறியான் என்கை. (காலனால் தூண்டப்பட்டவன்) ஸஹோதரன் சொன்ன சொல்லும் செவியிற் படாதபடி மிகநெருங்கி நின்ற காலன் கழுத்தைப் பிடித்துத்தள்ள அவன்பின் போனான். தம்பியானவன், "ராமபிரான் திருவடிகளிலே சரணம்புகு" என்றான்; யமனோவெனில், "அது சரியன்று; நான் சொல்லும் வழியே சென்று சண்டை செய்" என்றான்; தம்பியின்

(உக்தவங்கம்) **"नासंवत्सरवासिने प्रब्रूयात्"** (நாஸம்வத்ஸர **வாஸிநே ப்ரப்ரூயாத்)** என்று அத்யாதரம்பண்ணிக் காற்கடையிலே துவளுவார்க்குச் சொல்லும் வார்த்தையை இவன் துர்க்கதிகண்டு தன் செல்லாமையாலே சொன்னவனே.

(விபீஷணம்) தூரஸ்தன் சொன்ன வார்த்தையாகில், ஆப்தமோ அநாப்தமோ என்று ஶங்கித்துக் கைவிடலாம். **"भ्राता स्वा मूर्तिरात्मनः"** **(ப்ராதா ஸ்வா மூர்த்திராத்மந:)** என்கிறபடியே ஹிதஞ்சொன்னவன் ப்ரத்யாஸந்நனென்கை.

(பருஷம் வாக்யமப்ரவீத்) ச்ரவணஸமநந்தரம், **"स्थितोऽस्मि गतसन्देहः"** **(ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ:)** என்று கலக்கம் தீர்ந்து ஸ்திதனுதல், **"त्वत्तो हि वेदाध्ययनं"** **(த்வத்தோ ஹி வேதாத்யயநம்)** என்று உபகாரஸ்ம்ருதியாலே புகழுதல், "என்னைத் தீமனங்கெடுத்தாய்" என்று ப்ரத்யுபகாரம் காணுமையாலே தெகடாடுதல் செய்யவேண்டுமளவிலே, ஶத்ருக்களைச் சொல்லும் வார்த்தையைச் சொன்னுன்.

(சொன்னவனுன) "ஒரு வருடமாவது உடனிருந்து சுச்ரூஷை செய்யாத சிடனுக்கு இதைச் சொல்லலாகாது" [ஐதரேய ஆரண்யகம் 3-2-6] என்று பேரன்பு செலுத்தி, கேட்கவேணும் என்னும் ஆசையாலே காலடியிலே துவண்டு கிடப்பார்க்குச் சொல்லும் வார்த்தையை இவனுடைய துர்த்தசையைக்கண்டு தான் சொல்லாமல் நிற்கமாட்டாமையாலே சொன்னவனே.

(விபீஷணனே) தூரத்திலிருப்பவன் சொன்ன வார்த்தையாகில், ஆப்த வாக்கியமோ அன்ருே என்று ஐயமுற்றுக் கைவிடலாம்; "ஸஹோதரன் தன்னுடைய மற்ருெருருவமாவான்" [ ] என்கிறபடியே நன்மை சொன்னவன் நெருங்கினவன் என்கை.

(கடுமையான வாக்கியத்தைச் சொன்னுன்) கேட்டவுடன் "கலக்கம் தீர்ந்து நிலைநின்றேன்; நீ சொல்லியபடி செய்கிறேன்" [கீதை 18-73] என்று கலக்கம் தீர்ந்து நிலைநிற்றல், "முனிவரே! வேதம் முழுவதும் உம்மிடமன்ருே என்னுல் ஓதப்பட்டது" [வி-பு 1-1-2] என்று நன்றியறிவாலே புகழுதல், "என்னைத்தீமனங் கெடுத்தாய் உனக்கென் செய்கேன்" [திருவாய் 2-7-8] என்று கைம்மாறு காணுமையாலே திகைத்து நிற்பது ஆகிய இவற்றிலே ஒன்றிரண்டையாவது செய்யவேண்டிய சமயத்திலே எதிரிகளைச் சொல்லும் வார்த்தையைச்சொன்னுன்.

(வாக்யம்) அவன் சொல்லவேண்டும் ஹிதங்களை நோக்கச் சொன்னாற்போலே பருஷங்களிலும் இனிச்சொல்லலாவதில்லை என்னும்படி சொன்னான். (பருஷம் அப்ரவீத்) அவன் ஹிதம் சொன்னபோது ஸுநிவிஷ்டமாம்படி சொன்னாற்போலே, இவனும் நெஞ்சிலே புண்படும்படி வ்யக்தமாகப் பருஷித்தான்.

இதுக்கு ஹேது சொல்லுகிறது மேல் பதத்வயம். (ராவண:) "ராவயதி ரோதயதி" என்று பரஹிம்ஸையாலே நாட்டைக் கூப்பிடப்பண்ணுதல்; அஸ்தாநே காலிட்டுக்கொண்டு தானும் கூப்பிடக்கடவனாயிருக்கை. இத்தால் தனக்கும் பிறர்க்கும் ஹித மறியான் என்கை. (காலசோதித:) ப்ராதா சொன்ன வார்த்தை செவிப்படாதபடி ப்ரத்யாஸந்நனான காலன் பிடரிதள்ள அவன் பின்போனான். ப்ராதா 'பெருமாள் திருவடிகளிலே ஶரணம் புகு' என்றான்; காலன் 'அது கடவதல்ல; என்வழியே போ' என்றான்.

(வாக்கியத்தை) அவன் சொல்லவேண்டிய நன்மைகளை முழுமையாகச் சொன்னாற்போலே, கடுஞ்சொற்களிலும் இனிச்சொல்லவேண்டியதில்லை என்னும்படி சொன்னான். (கடுமையாகச் சொன்னான்) அவன் நன்மை சொன்னபோது நெஞ்சிலே நுழையும்படி சொன்னாற்போலே, இவனும் நெஞ்சிலே புண்படும்படி தெளிவாகக் கடிந்தான்.

இதுக்குக் காரணம் சொல்லுகிறது மேலிரண்டு பதங்களும். (ராவண:) "ராவயதி–ரோதயதி–இதி ராவண:" [அழச்செய்கிறானாகை யாலே ராவணன்] என்னும் வ்யுத்பத்தியாலே, பிறரை நலிந்து நாட்டி லுள்ளாரை அழச்செய்வதாலும், தகாதவிடங்களிலே காலிட்டுக்கொண்டு, ஆப்பிலே காலிட்ட குரங்குபோலே தானும் அழுமவனாகையாலும் 'ராவணன்' என்னும் பெயர் மிகப்பொருந்தியிருக்கை. கைலாஸத்தினடி யிலே காலிட்டுக்கொண்டும், வாலியிடமகப்பட்டும் அழுதது பிரசித்த மன்றோ. இவ்விரண்டு பொருளாலும் தனக்கும் பிறர்க்கும் நன்மையறி யான் என்கை. (காலனால் தூண்டப்பட்டவன்) ஸஹோதரன் சொன்ன சொல்லும் செவியிற் படாதபடி மிகநெருங்கி நின்ற காலன் கழுத்தைப் பிடித்துத்தள்ள அவன்பின் போனான். தம்பியானவன், "ராமபிரான் திருவடிகளிலே சரணம்புகு" என்றான்; யமனோவெனில், "அது சரியன்று; நான் சொல்லும் வழியே சென்று சண்டை செய்" என்றான்; தம்பியின்

ப்ராதாவின் வார்த்தை "द्विधा भज्येयमप्येवं न नमेयं" (த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம்) என்று தன் ப்ரக்ருதிக்குச் சேராமை யாலே காலன் வழியே போனுனென்கை.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 1-வது ச்லோகம்

इत्युक्त्वा परुषं वाक्यं रावणं रावणानुजः।
आजगाम मुहूर्तेन यत्र रामस्सलक्ष्मणः॥

இத்யுக்த்வா பருஷம் வாக்யம் ராவணம் ராவணுநுஜ:।
ஆஜகாம முஹூர்த்தேந யத்ர ராம: ஸலக்ஷ்மண:॥

பதவுரை:—ராவணுநுஜ:—ராவணனுக்குத் தம்பியான விபீஷணன், ராவணம்—ராவணனைக் குறித்து, இதி—இப்படியாக, பருஷம்—கடுமையான, வாக்யம்—சொல்தொடரை, உக்த்வா—சொல்லி, யத்ர—எவ்விடத்தில், ராம:—ஸ்ரீராமபிரான், ஸலக்ஷ்மண:—லக்ஷ்மணனேடு கூடியவராய் எழுந்தருளியிருக்கிருரோ அங்கே, முஹூர்த்தேந—விரைவாக, ஆஜகாம—வந்தார்.

அவதாரிகை:—ராவணன் அதிக்ரமத்திலே கைவளர்ந்திருக்கச் செய்தேயும், நமக்குக் கர்த்தவ்யம் ஏதென்று மந்த்ரத்திலே யிழிந்த இதுவே அவகாசமாக இந்த துர்க்கதியை நிஸ்தரிக்க லாம்படியான பரமஹிதத்தைச் சொல்லச்செய்தே, இவனுக்கு அஸஹ்யமாயிருக்கக்கண்டவாறே, 'இவன் இருந்த தேசமும்

வார்த்தை, "இரண்டாகப்பிளக்கப்பட்டாலும் படுவேனேயொழிய ஒருவனுக்கு வணங்கமாட்டேன்" [ரா-யு 36-11] என்கிற தன் தன்மைக்குப் பொருந்தாமையாலே யமன் சொன்ன வழியே போனுன் என்று கருத்து.

அவதாரிகை:—ராவணன் மறவழியிலேயே பழகினவனுயிருந்த போதிலும், 'ராமன் படையுடன் வந்துவிட்டான்; இனி நாம் என்செய்வது' என்று மந்திராலோசனை செய்யமுற்பட்ட இதையே தக்க தருணமாகக் கொண்ட விபீஷணன், ராவணனுக்கு ஏற்பட்ட இவ்வழிவுகாலத்தைப் போக்கும்படியான மேலான நல்லுரைகளைச் சொல்லச் செய்தேயும் இவ்விராவணனுக்குப் பொறுக்கவொண்ணுததாயிருப்பதைப் பார்த்தவுடன் 'இவனிருக்கும் இடமும் நமக்கு விலக்கத்தக்கது; நல்லறமூர்த்தியான

நமக்கு த்யாஜ்யம்; பரமதார்மிகரான பெருமாள் இருந்த தேஶமே நமக்கு ப்ராப்யம்' என்று புறப்பட்டு, வேகிற அகத்தினின்றும் துடித்துக்கொண்டு புறப்படுவாரைப்போலே போந்தான் என்று இவனுடைய தர்மருசியைக்கண்டு கொண்டாடுகிறுன் ரிஷி.

வ்யா:—(இதி பருஷம் வாக்யமுக்த்வா)–(இதி) என்று "प्रदीयतां दाशरथाय मैथिली" (ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ) என்று கர்த்தவ்யத்தினுடைய ஸௌகர்யத்தையும், "यावन्न गृह्णन्ति शिरांसि बाणाः" (யாவந்ந க்ருஹ்ணந்தி ஶிராம்ஸி பாணா:) என்று அகரணே ப்ரத்யவாயத்தையும் சொன்ன ப்ரகாரத்தை ஸந்தோஷத்தாலே அநுவதிக்கிறுன் ரிஷி. (பருஷம்) ஸர்வாச்வாஸகரமான தென்றல் ஸ்ருகாலத்துக்கு அஸஹ்யமாமாப்போலே, ஆச்ரய தோஷத்தாலே இந்தப் பரமஹிதம் ராவணனுக்குப் பருஷமாயிற்று. (வாக்யம்) ஹிதோபதேஶம் பரிபூர்ணமாயிருக்கை. (உக்த்வா) ஹிதஜ்ஞனுமாய், ப்ராதாவாயுமிருக்கிறவன் இந்த துர்க்கதியிலே கைவிட்டுப்போனுன் என்கிற குறைதீர, சொல்லும்வார்த்தை

ராமபிரானிருக்குமிடமே நாம் சென்று சேரத்தக்கது' என்று நினைத்துப் புறப்பட்டு, எரிகிற வீட்டிலிருந்து துடித்துக்கொண்டு ஓடுவாரைப்போலே ராமனிருக்குமிடந்தேடி ஓடினுன் என்று இவ்விபீஷணனுக்கு அறத்திலுள்ள விருப்பத்தை வால்மீகிபகவான் கொண்டாடுகிறுன்.

வ்யா:—(இம்மாதிரியாகக் கடுமையான சொல்லைச் சொல்லி) (இம்மாதிரியாக) என்று, "தசரத குமாரனிடம் மைதிலியைத் தருவாயாக' [ரா-யு 14-3] என்று ராவணன் செய்யவேண்டிய செயலின் எளிமையையும், "ராமபாணங்கள் ராக்ஷஸர்தலைவர்களுடைய தலைகளைத் தள்ளுவதற்கு முன் மைதிலியை ஸமர்ப்பிப்பாயாக" [ரா-யு 14-4] என்று செய்யாவிடிலேற்படும் அநர்த்தத்தையும் சொன்ன ரீதியை உகப்பாலே திருப்பிச் சொல்லிக்காட்டுகிறுர் வால்மீகி மஹரிஷி. (கடுமையான) அனைவர்க்கும் இதமாயிருக்கும் தென்றற்காற்று நரிக்குப் பொறுக்கவொண்ணுமலிருப்பது போலே, சென்று சேருமிடமான அவனிடமுள்ள தீமையாலே இந்த மிக நல்லவார்த்தை ராவணனுக்குக் கடுமையானதாயிற்று. (வாக்கியத்தை) நல்வார்த்தை நிறைந்திருக்கை. (சொல்லி) நன்மையறிவோனுமாய், தம்பியுமாயிருப்பவன் இந்தக் கஷ்டநிலையிலே கைவிட்டுப்போனுன் என்று பிறர் குறைசொல்லமுடியாதபடி, சொல்லவேண்டிய வார்த்தையை முழு

அடையச்சொல்லி, அவன்பக்கல் அவகாஶமில்லாமையாலே போந்தான். இவ்வநுபாஷணத்துக்கு ப்ரயோஜநம் ராவணனுடைய அதிக்ரமத்தைக் கண்டபோதே கால்வாங்க ப்ராப்தமாயிருக்க, ஹிதஞ்சொல்லி மீட்கலாமோவென்று இவனுக்குண்டான வழியடையச் சொல்லுகை.

சொன்ன ஹிதம் பருஷமானைக்கு ஹேதுவைச் சொல்லுகிறது,—(ராவணம்) வரபலபுஜபலங்களாலே ப்ரபலரோடு துர்ப்பலரோடு வாசியற எல்லாரையும் நலிந்து போந்தவனுக்கு, எதிரிகளுடைய பலஞ்சொன்னால், பருஷமென்னுமிடம் சொல்லவேணுமோ? (ராவணாநுஜ:) அவன் கிடந்த குடலிலே ஸஹவாஸம் பண்ணிப்போந்தவன்கிடீர் ஸத்வோத்தரன் சொல்லும் ஹிதத்தைச் சொல்லுகிறான்! என்று ஸ்ரீவிபீஷணாழ்வானுடைய ஏற்றத்தைச் சொல்லுகிறான் ரிஷி. 'ஹிதம் சொல்லுமிடத்தில் ஜ்யேஷ்ட கநிஷ்டவிபாகமில்லை; அறியுமவன் அறியாதவனுக்குச் சொல்லுமித்தனை' என்றுமாம்.

வதும் சொல்லி, அவன் சிறிதும் இடம் கொடுக்காதபடியாலே அவனை விட்டுப்போனான். 'இப்படிக் கடுமையான வாக்கியத்தைச் சொல்லி' என்று, சொன்னதை எடுக்கும் இதற்குப்பயன் என்ன? எனில்: ராவணனுடைய தீச்செயலைக் கண்டவுடன் அவனைவிட்டுப்போவது தகுந்ததாயிருக்க, நன்மைசொல்லித் திருப்பலாமோ என்று இவனால் முடிந்தவரையில் சொன்னான் என்று விபீஷணனின் நற்குணத்தைத் தெரிவிப்பதே இதற்குப்பயன்.

சொன்ன நன்மை கடுமையானதற்குக் காரணம் சொல்லுகிறது மேலே,—(ராவணனை) வரவலியாலும், புயவலியாலும் வலிமிக்கோரையும் வலியற்றோரையும் ஒருபடியாகத் துன்புறுத்தியவனுக்கு எதிரிகளுடைய பலஞ்சொன்னால் கடுமையாகவே தோற்றும் என்பதைச்சொல்லவேணுமோ? (ராவணன் தம்பி) அவ்விராவணன் கிடந்த குடலிலே கிடந்தவன் கிடீர் ஸாத்விகன் சொல்லத்தக்க நன்மையைச் சொல்லுகிறான் என்று ஸ்ரீவிபீஷணாழ்வானுடைய பெருமையை ஸ்ரீவால்மீகிமஹரிஷி சொல்லுகிறார். அன்றிக்கே, (ராவணன் தம்பி) என்று, நன்மை சொல்லும்போது மூத்தவனென்றும், இளையவனென்றும் வேறுபாடில்லை; அறியுமவன் அறியாதவனுக்குச் சொல்லவேண்டியது என்பதாகவும் கொள்ளலாம்.

(ஜகாம) என்ன அமைந்திருக்க, (ஆஜகாம) என்றது, ராவண கோஷ்டியில் தனக்கு ஸம்பந்தமில்லாமையும், ராமகோஷ்டி தன்னிலமாயிருக்கிறபடியும் தோற்றச் சொல்லுகிறான் ரிஷி. (முஹூர்த்தேந) "न शौरिचिन्ताविमुखजनसंवासवैशसं। वरं हुतवह ज्वालपञ्जरान्तर्व्यवस्थितिः॥" (ந ஶௌரிசிந்தாவிமுக ஜநஸம் வாஸவைஶஸம்। வரம்ஹுதவஹ ஜ்வாலாபஞ்ஜராந்தர் வ்ய வஸ்திதி:॥) என்கிறபடியே நெருப்புப்பட்ட அகத்தில் கால்வாங்குமதல்லது நிற்கமாட்டாதாப்போலே, ராவணகோஷ்டியில் தரிக்க மாட்டாதபடியைச் சொல்லுதல். கட்டிநின்ற கன்றை விட்டால் தாய்முலையில் வாய்வைத்தல்லது தரிக்கமாட்டாதாப்போலே, ராம கோஷ்டியில் புகுந்தல்லது தரிக்கமாட்டாதவனைப் புகுந்தானென்னுதல். "वत्सो गामिव मातरं" (வத்ஸோ காமிவ மாதரம்) "தாய் நாடு கன்றேபோல்" என்னக்கடவதிறே.

(யத்ர ராம:) ராமஸம்பந்தத்தைக்காட்டில் ராமஸம்பந்தி தேஶமே உத்தேச்யமென்கை. "यत्र पूर्वे साध्याः सन्ति देवाः"

(வந்தான்) "ராவணனிடம் வார்த்தை சொல்லிவிட்டு ராமனிருக்குமிடம் போனான்" என்று சொல்லுவதே பொருத்தமாயிருக்க, "ராமனிருக்குமிடம் வந்தான்" என்று சொன்னதற்குக் கருத்தென்னென்னில்: ராவணனுடைய குழுவில் விபீஷணன்தனக்கு இனி உறவில்லாமையும், ராமபிரானின் கோஷ்டியே அவனுக்குரித்தான இடம் என்பதும் தோற்ற ரிஷி 'வந்தான்' என்கிறார். (முஹூர்த்த நேரத்தில்) 'பரமபுருஷனின் நினைவற்ற மக்களிடையேயிருக்கும் உயிர்க்கொலை கொடிது; தீக்கொழுந்து விட்டெரியும் கூட்டினுள் வாழ்வது (அதனினும்) நன்று" [ ] என்கிறபடியே தீப்பற்றியெரியும் வீட்டிலிருந்து புறப்பட்டல்லது நிற்க முடியாததுபோலே, ராவணகோஷ்டியில் நிலைநிற்கமாட்டாதபடியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம்; அல்லது, கயிற்றையிட்டுக் கட்டி வைத்திருந்த கன்றை அவிழ்த்துவிட்டால், தாய்முலையில் வாய்வைத்தல்லது நிலைநிற்கமாட்டாதாப்போலே ராமகோஷ்டியிலே புகுந்தாலல்லது உயிர்தரிக்கமாட்டாதவனாய் விரைவாய் வந்தான் என்பதாகவும் கொள்ளலாம். 'கன்று தாய்ப்பசுவை நாடுவதுபோல்" [ ] என்றும், "தாய்நாடு கன்றேபோல் தண்டுழாயானடிக்கே போய்நாடிக்கொள்ளும் புரிந்து" [முதல்திருவ-30] என்றும் சொல்லப்படுகிறதன்றோ.

(யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:) "सुभगश्चित्रकूटोऽसौ" (ஸுபகச் சித்ரகூடோऽஸௌ) என்னக்கடவதிறே. (ஸலக்ஷ்மண:) இளையபெருமாள் பெருமாளுக்கு நிரூபகராயிருக்கிறபடியைச் சொல்லுகிறது. இத்தால் ஆஸ்ரிதனுக்கு ஆச்ரயணீயனையொழியச் செல்லாதென்கை. அபூர்வரென்றிருக்க வேண்டாதபடி, செல்லுகிறவனுக்கு அங்கே புருஷகாரமுண்டென்னவுமாம். மஹாராஜர் "वध्यतां" (வத்யதாம்) என்ன, "लक्ष्मणं पुण्यलक्षणम्" (லக்ஷ்மணம் புண்யலக்ஷணம்) 'பெருமாள் இவனைக் கைக்கொள்ளுவது காண்!' என்று தன் திருவுள்ளத்தில் தண்ணளிதோற்ற இருந்தா

(எங்கு ராமனிருக்கிறானோ அங்கு) ராம ஸம்பந்தத்தைக்காட்டிலும், ராமபிரானோடு ஸம்பந்தித்த தேசமே உத்தேச்யமென்கை. ராமஸம்பந்தத்திற்கும் ஹேதுவாயிருப்பதன்றோ அது. மேலும், ராம ஸம்பந்தமேற்படாமல் தடுப்பதற்குப் பரிவரான முதலிகளுண்டு. ராம ஸம்பந்தியான தேசத்தையடைவதைத் தடுப்பாரில்லையன்றோ. "யாதொரு பரமபதத்தில் பழையரான ஸாத்யதேவர்கள் உள்ளனரோ" [புருஷஸூக்தம்] என்றும், "ராமன் வாழும் இந்தச் சித்திரகூடமலை பரமமங்களமானது" [ரா-அ 98-12] என்றும் தேசவைபவம் சொல்லப்பட்டதன்றோ. (லக்ஷ்மணனோடு கூடிய ராமபிரான்) லக்ஷ்மணன் ராமபிரானுக்கு நிரூபகனாயிருக்கும்படியைச் சொல்லுகிறது. "ராமாநுஜம் லக்ஷ்மணபூர்வஜஞ்ச" என்கிறபடியே ராம லக்ஷ்மணவர்களிருவரில் ஒருவரை மற்றவரையிட்டு நிரூபிக்கவேண்டும்படியன்றோ அவர்களுடைய சேர்த்தியிருப்பது. 'ஸலக்ஷ்மண:' என்றதால் நிரூபகமான 'கடத்வம்' [கடமாயிருக்கும் தன்மை] நிரூப்யமான கடத்தை விட்டு நிற்கமாட்டாததுபோலே, ஆஸ்ரிதனான லக்ஷ்மணன், ஆச்ரயணீயனான ராமனைவிட்டு நிலை நிற்கமாட்டான் என்றதாயிற்று. அன்றிக்கே, 'ஸலக்ஷ்மண:' என்றதாலே "பகவானைப் பற்றுமவனுக்கு 'பரமபுருஷன் விஜாதியனாயிற்றே' என்னும் பயம் வேண்டியதில்லை; ஸஜாதியரான லக்ஷ்மணன் முதலான புருஷகாரபூதர்கள் அருகிலுள்ளனர்" என்னும் சாஸ்திரார்த்தத்தை வெளியிடுவதாகவும் கொள்ளலாம். ஸுக்ரீவன் "இவன் கடுந்தண்டனையால் ஹிம்ஸிக்கப்படட்டும்" [ரா-யு 17-29] என்று சொல்ல, "கருணையாகிற புண்ணிய லக்ஷணத்தோடிருந்த லக்ஷ்மணனை" [ரா-யு 18-7] என்கிறபடியே 'இவ்விபீஷணனைப் பெருமாள் கைக்கொள்ளவேண்டுமே' என்னும் மனவிரக்கம்தோற்ற இருந்தானன்றோ புருஷகாரபூதனான லக்ஷ்மணன். அன்றிக்கே, 'ஸலக்ஷ்மண:' என்றதாலே தம்பியான தன் சொல் விலைசெல்லாத ராவணகோஷ்டியில் வாழ்ந்த மன

னிறே; தன் சொல் ஜீவியாத ராவணகோஷ்டியில் வர்த்தித்த நெஞ்சாறல் தீரத் தம்பியிட்ட வழக்கான ராமகோஷ்டியிலே புகுந்தானென்னவுமாம்.

இச்லோகத்தால், பகவத்ருசியுடையவனுக்குத் தத்விமுகரிருந்த விடமும் த்யாஜ்யமென்னுமிடமும், பகவத்ஸந்நிதியுண்டானவிடமே ப்ராப்யமென்னுமிடமும் சொல்லிற்றாயிற்று.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 2-வது ச்லோகம்

तं मेरुशिखराकारं दीप्तामिव शतह्रदाम्।
गगनस्थं महीस्थास्ते ददृशुर्वानराधिपाः॥

தம் மேருஶிகராகாரம் தீப்தாமிவ ஶதஹ்ரதாம்।
ககநஸ்தம் மஹீஸ்தாஸ் தே தத்ருஶுர் வாநராதிபா:॥

பதவுரை:— **மேருஶிகராகாரம்**—மேருமலையின் முடிபோன்ற தன்மையையுடையவனாய், **தீப்தாம்**-பற்றி எரிகின்ற, **ஶதஹ்ரதாம் இவ**—மின்னலைப்போன்று, **ககநஸ்தம்**—ஆகாயத்தில் நிற்கிறவனான, **தம்**—அவ்விபீஷணனை, **மஹீஸ்தா:**—பூமியில் நிற்கிற, **தே வாநராதிபா:**—அந்த வானரர் தலைவர்கள், **தத்ருஶு:**—கண்டனர்.

அவதாரிகை:—ராவணகோஷ்டியில் நின்றும் கிளம்பி ஆகாஶஸ்தனானபோதே இவனை முதலிகள் கண்டார்கள் என்கிறான்.

வ்யா:—(தம்) காட்டுத்தீயைத் தப்பினவன் மடுவிலே விழுமாப்போலே தன் அபிநிவேஶமெல்லாம் தோற்ற வந்தவனை.

வருத்தம் தீரும்படியாக, தம்பி லக்ஷ்மணனிட்டது சட்டமாயிருக்கும் ராமகோஷ்டியிலே புகுந்தான் என்னும் கருத்தைத் தெரிவிப்பதாகவும் கொள்ளலாம்.

ஆக, இந்த ச்லோகத்தால் பகவானிடத்தில் ஈடுபாடுடையவனுக்கு அதிலீடுபாடற்றவர்களிருக்குமிடமும் கைவிடத்தக்கதென்பதும், பகவானிருக்குமிடமே சென்றுசேரத்தக்கது என்பதும் சொல்லிற்றாயிற்று.

அவதாரிகை:—ராவணகோஷ்டியிலிருந்து கிளம்பி ஆகாசத்தில் நின்றபோதே இவ்விபீஷணனை வானரமுதலிகள் கண்டனர் என்கிறார் வால்மீகி மஹரிஷி.

(மேருஶிகராகாரம்) ப்ரதிபக்ஷத்தைவிட்டுப் பேரப்பெறுகையாலே ஸ்திரனானபடியும், ஒளிபெற்றபடியும், பாரதந்த்ர்யம் தோற்ற வந்தபடியுமாகிற இஸ்வபாவங்களாலே 'மேருஶிகராகாரம்' என்கிறான். இத்தலைக்கு ப்ரதானாவயவமான ச்ருங்கம் பெற்றதென்றும், ராவணனுக்கு ஒரு ச்ருங்கபங்கம் பிறந்ததென்றும நினைக்கிறான். (தீப்தாமிவ ஶதஹ்ரதாம்) முதலிகளுடைய பரிவைக் கண்டு, பெருமாளைத் திருவடி தொழவொண்ணா தொழிகிறதோ என்கிற நடுக்கமும், புகுந்தல்லது தரிக்கமாட்டாத த்வரையும் தோற்றியிருக்கை. இவனுடைய ஒளிக்கு மின்னலானது த்ருஷ்டாந்தமாகப்போராமையாலே, 'தீப்தாம' என்கிற விஶேஷணம். அபூதோபமை. இத்தால் 'மேருஶிகராகாரம்' என்கிற பதத்தில் ஆர்த்தமாக நினைத்த தீப்தியை இங்கே ஶாப்தமாக்கினான்.

வ்யா:—(அவனை) காட்டுத்தீயிலிருந்து தப்பிப்பிழைத்தவன் மடுவிலே விழுவதுபோலே தன் ஆசையெல்லாம் வடிவிலே தோற்றும்படியாக வந்தவனை. (மேருமலையினுச்சிபோன்ற தன்மையானை) மேருமலையுச்சியாகில், உறுதியானதாகவும், ஒளிபெற்றதாகவும், மலைக்கு சேஷபூதமாகவுமிருக்குமன்றோ. இவ்விபீஷணனும் மறவழிப்பட்ட ராவணகோஷ்டியிலிருந்து நீங்கப்பெறுகையாலே உறுதி பெற்றவனாயும், ஒளிபெற்றவனாகவும், "திருமால் உருவொக்கும் மேரு" [திருவிருத்தம்] என்கிறபடியே மேருமலைபோல் மேனியனான ராமபிரானுக்கு சேஷபூதனாகவுமிருக்கையால், இத்தன்மைகளால் மேருமலையினுச்சிபோன்ற தன்மையான் என்று இவனைச் சொல்லுகிறார். ராமபிரானாகிற மேருமலை முக்கிய அவயவமான முடியைப் பெற்றதென்றும், ராவணனுக்கு ஓர் முடிவீழ்ச்சி பிறந்ததென்றும் கருதுகிறார் ரிஷி. (பற்றியெரியும் மின்னல் போன்று) மின்னலாகில் நடுக்கமும், வேகமும் ஒளியுமுள்ளதாயிருக்குமே; இவ்விபீஷணனுக்கும், பெருமாளிடம் வானர முதலிகளுடைய பரிவைக் கண்டு, 'அவரைத் திருவடிதொழ முடியாமல் போய்விடுமோ' என்கிற நடுக்கமும், அவரிடம் புகுந்தல்லது தரிக்கமாட்டாத வேகமும், மேருமலையுச்சியெனத்தக்க ஒளியும் தோற்றியிருக்கையால் இவனை மின்னலென்கிறார். ஒளிவிஷயத்தில், இவனுடைய ஒளிக்கு மின்னலானது சரியான உபமானமாகப் போராமலிருக்கையால், 'பற்றியெரிகிற' என்று மின்னலை விசேஷிக்கிறார். உலகில் பற்றியெரிகிற மின்னல் இல்லாமையாலே, இது அபூதோபமை (இல்பொருளுவமை) என்னும் அலங்காரம் (அணி) ஆகும். 'பற்றியெரியும் மின்னல் போன்று' என்றதால் 'மேருமலையுச்சி போன்ற தன்மையானை' என்றவிடத்தில் பொருள் வழிக்கிடைக்கக்கூடிய ஒளியை, இங்கு சொல்வழிக்காட்டினார் வால்மீகி பகவான்.

(ககநஸ்தம்) லங்கையில் நின்றும் கால்வாங்கினபோதே கண்டார்களென்கை. (மஹீஸ்தா:) பூமியில் காவலுக்கு அடைத்தவர்கள் தாந்தாம் அதிகரியாத ககநரக்ஷணத்திலும் அவஹிதராணுரென்று அவர்களுடைய காவற்குறிக்கோள் சொல்லுகிறது. (தே தத்ருசு:) ஒருத்தர் கண்டு ஒருத்தருக்குச் சொன்னாலும் எல்லாரும் கண்டாரரவரிறே. அங்ஙனன்றிக்கே, எல்லாருமொக்கக் கண்ணாலே கண்டார்களென்கை. (வாநராதிபா:) காவலடைப்புண்ட முதலிகளுக்கு முன்பே, காவலடைத்த முதலிகள் விட்டவிடத்தேயிருந்து கண்டார்களென்கிறது. பெருமாள்பக்கல் இவர்களுக்குண்டான பரிவு, ஆளிட்டு அந்திதொழுமதன்றிக்கே,

(ஆகாயத்தில் நிற்பவனை) "உத்பபாத கதாபாணி: [ரா-யு 16-16] [கதையைக் கையிலேந்தியவனாய் ஆகாயத்தில் கிளம்பினான்]என்கிறபடியே லங்கையில் ராவணஸபையிலிருந்து ஆகாயத்தில் கிளம்பினபோதே கண்டார்கள் என்கிறது. "திப்தாமிவ சதஹ்ரதாம்" என்று இவனை மின்னலாகச் சொல்லிற்று; மின்னல் ஆகாயத்திலேயே ஒளிவிடுமன்றோ; அதைச் சொல்லுகிறது இங்கு. (பூமியில் நிற்பவர்கள்) பூமியில் ராமனை முன்னிட்ட வானரஸேனையைக் காவல் புரிய ஏற்பட்டவர்கள், தாம் ஏற்றுக்கொள்ளாத ஆகாயவெளிக்காவலையும் ஏற்றுக்கொண்டனர்; ஏற்றுக்கொண்டதோடன்றியில் லங்கையிலிருப்பது அவன் கிளம்பியபோதே அவனைக் காணும்படியாக அவ்வளவு ஜாக்ரதையுடன் இருந்தனர் என்று இவர்களுடைய ரக்ஷணஸாமர்த்தியம் சொல்லுகிறது. (அவர்கள் கண்டனர்) ஒருவர் கண்டு மற்றவருக்குச் சொன்னாலும் அனைவரும் கண்டதாகக் கொள்ளலாமன்றோ; அப்படியல்லாமல், அனைவரும் ஒருபடியாகத் தங்கள் கண்களாலே கண்டனர் என்கை. இத்தால் ரக்ஷணஸாமர்த்தியத்தில் குறைந்தவர்கள் ஒருவருமில்லையென்கை. (அவர்கள் கண்டனர்) பாகவதர்களான அவர்கள் அத்தனைபேரும் கண்டனர் என்று, பின்னால் சரணாகதிபலிப்பதற்குறுப்பான பாகவதகடாக்ஷப்ராபல்யம் சொல்லுகிறது. (வானரர் தலைவர்கள்) ரக்ஷிக்கப்படும் வானரர்கள் காண்பதற்கு முன்பே, ரக்ஷணத்தை ஏற்றுக்கொண்ட வானரர் தலைவர்கள், தங்களுக்குக் காவலுக்கென்று விடப்பட்ட இடத்திலிருந்து கண்டனர் என்கிறது. தலைவராயிருப்பார், தங்கள் ஆட்களைக் காவல் வேலையில் ஈடுபடுத்துவது வழக்கமாயிருக்க, இங்கு சுக்கிரீவன் முதலான வானரத்தலைவர்களே காவல் புரிந்தனர் என்கையாலே ஸ்ரீராமபிரானிடம் இவர்களுக்குள்ள பரிவு, (அசக்தர் முதலானோர்) தங்களுக்காக ஓராளை நியமித்து ஸந்தியாவந்தனம் செய்வதுபோலே

காவல்தான் இவர்களுக்கு உஜ்ஜீவனமாயிருக்கிறபடி. (வாநராதிபா:) என்று, இவர்கள் பரிவிலே அவஹிதரானபடி கண்டு ரிஷி கொண்டாடுகிறானாகவுமாம்.

இச்லோகத்தால், ப்ரதிகூலர் ஸமூஹத்தில் நின்றும் பேரப் பெற்ற லாபத்துக்குமேலே, அநுகூலர் கடாக்ஷத்துக்கும் விஷய மானானென்று கருத்து.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 3-வது சுலோகம்

तमात्मपञ्चमं दृष्ट्वा सुग्रीवो वानराधिपः।
वानरैस्सह दुर्धर्षश्चिन्तयामास बुद्धिमान्॥

தமாத்மபஞ்சமம் த்ருஷ்ட்வா ஸுக்ரீவோ வாநராதிப:।
வாநரைஸ்ஸஹ துர்த்தர்ஷச்சிந்தயாமாஸ புத்திமாந்॥

பதவுரை:—வாநராதிப:—குரங்கரசனும், துர்த்தர்ஷ:—ஒருவராலும் வெல்லவொண்ணாதவனும், புத்திமாந்—நுண்ணிய அறிவையுடையவனாயுமிருக்கிற, ஸுக்ரீவ:—ஸுக்ரீவன், ஆத்மபஞ்சமம்—(துணைவரான நால்வரோடு கூடி) தான் ஐந்தாமவனாயிருக்கும், தம்—அந்த விபீஷணனை, த்ருஷ்ட்வா—பார்த்து, வாநரை: ஸஹ—வானரர்களோடு கூட, சிந்தயாமாஸ—ஆலோசனை செய்தார்.

அவதாரிகை:—பெருமாள்பக்கல் பரிவாலே வந்தவனுடைய ஆநுகூல்யம் நெஞ்சிற்படாதே, 'இவன் ஆரோ' என்கிற அதி

ஆளிட்டு ராமரக்ஷணம் செய்யவிடாது; ராமரக்ஷணமே இவர்களுயிரை தரிக்கவைப்பது என்பதைக் காட்டுகிறது. அன்றிக்கே (வானரர்தலைவர்கள்) என்று, இவர்கள் பரிவிலே குறிக்கொண்டிருப்பதைப் பார்த்து ஸ்ரீவால்மீகி பகவான் கொண்டாடுவதாகவும் கொள்ளலாம்.

இந்த ச்லோகத்தால் இன்னாதார் குழுவிலிருந்து நீங்கப்பெற்ற நன்மைக்கு மேலே இனியவர் கடைக்கண்ணோக்குக்கும் இலக்கானான் என்கிறது.

அவதாரிகை:—'தமாத்ம' என்று தொடங்கும் இந்த ச்லோகத்திலே, ஸ்ரீராமபிரானிடம்பரிவாலே, வந்தவிபீஷணனுடைய நட்புடைமைமனத்திற்

ஸங்கையிலேயிழிந்து, மஹாராஜர் முதலிகளோடே மந்த்ரத்திலே யிழிந்தார் என்கிறது "தமாத்ம" இத்யாதியாலே.

வ்யா:—(தம்) பெரிய அபிநிவேஸத்தோடே வந்தல்லது தரிக்கமாட்டாதபடி வந்த அநுகூலனை வனைக்கிமர் அதிஸங்கித்த தென்கை. (ஆத்மபஞ்சமம்) விபீஷணப்பெருமாள் ஸங்க்யாபூரகரான மாத்ரமே; அவர்களோடு ஸமப்ரதாநராயிருக்கை. அதாவது-அந்யோந்ய முண்டான பவ்யதையும் செறிவும். "दैवं चैवात्र पञ्चमं" (தைவம் சைவாத்ர பஞ்சமம்) என்கிறபடியே, அவர்களுடைய ஸத்தை ஸ்வாதீனையாம்படியான ப்ராதாந்யத்தைச் சொல்லிற்றாகவுமாம். (ஸுக்ரீவ: த்ருஷ்ட்வா) "இவர் கண்டு துணுக்கென்று தலையெடுத்தப்

படாமல், 'இவன் நண்பனோ எதிரியோ' என்னும் ஐயப்பாட்டையடைந்து சுக்ரீவன் வானரர்களோடு மந்திராலோசனை செய்யமுற்பட்டான் என்கிறது.

வ்யா:—(அவனை) பெருங்காதலோடு ராமபிரானிடம் வந்தாலல்லது உயிர்தரிக்கமுடியாதபடி வந்த அவனிடமன்றோ ஐயப்பாடடைந்தது என்கை. (தான் ஐந்தாமவனுனவனை) அவர்கள் நால்வரும் இவனுக்கு அடியாரென்றும், இவன் அவர்களுக்குத் தலைவனென்றும் தோற்றுதபடி, நால்வரான அவர்கள் குழுவின் எண்ணிக்கையை ஐவராக்கும் ஒருவன் என்னும்படி அவர்களோடு வாசியில்லாமலிருந்தான் என்கை. ப்ராதாந்யத்தில் ஐவரும் ஒத்தவர்களாகத்தோற்றினரென்கை. அதாவது—அவர்கள் ஒருவருக்கொருவர் விதேயராகவும், நெருங்கியவராகவும் காட்சியளித்தன ரென்கை. அன்றிக்கே, வஸ்து ஸ்திதியையொட்டி அவர்களுடைய உயிர் தன்னதினமாம்படியான இவனுடைய ப்ராதாந்யத்தைச் சொல்லுவதாக வும் கொள்ளலாம். ஒக்க எடுத்தாலும் வஸ்து ஸ்திதியையொட்டி ப்ராதாந்யம் கொள்ளவேண்டும் என்பதை,

"அதிஷ்டாநம் ததா கர்த்தா கரணம் ச ப்ருதக்விதம் ।
விவிதா ச ப்ருதக் சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம் ॥"
[கீதை 18-14]

[நன்மை தீமைச்செயல்களில் காரணங்களாவன:—சரீரம் முதலாவது; செய்யும் ஜீவன் இரண்டாவது; மனத்துடன் கூடிய ஐவகைக் கருமேந்திரியம் மூன்றாவது; ப்ராணாபாநாதி பஞ்சவிதமான ப்ராணன் நான்காவது; அந்தர்யாமியான பரமாத்மாவே செயல்களைச்செய்வதில் ஐந்தாவது முக்கியமான காரணம்] என்னுமிடத்தில் கண்டோம். "அத்ர தைவம் பஞ்சமம்—பரமாத்மா அந்தர்யாமீ கர்மநிஷ்பத்தௌ ப்ரதாநஹேது

பார்த்தபோது க்ரீவாசோபையிருந்தபடியென்! என்று ரிஷி கொண்டாடுகிறுன்" என்று பிள்ளை திருநறையூரரையர் பணிப்பர். (வாநராதிப:) துணுக்கென்னுகைக்கு கூடி வாநரஸேனையடையத் தமக்குக் குழைச்சரக்காக உடையராகையாலே. ராஜகுமாரர்கள் பக்கல் பரிவு, **"राघवार्थे पराक्रान्ताः-न प्राणे कुरुते दयाम्" (ராகவார்த்தே பராக்ராந்தா:-ந ப்ராணே குருதே தயாம்)** என்கிறவர்களளவும் சொல்லக்கடவதிறே.

(துர்த்தர்ஷ:) ஶரணம் புகுந்தவனுக்கும் பிற்காலிக்கவேண்டும்படி அநபிபவநீயராயிருந்தாரென்கை. (சிந்தயாமாஸ) அதாகிறது-தம்முடைய அநபிபவநீயதை தோற்றுதே கூச்சமே மேற்பட்டுச் சிந்தை

ரித்யர்த்த:" [(இவ்விஷயத்தில் தைவம் ஐந்தாவது). அந்தர்யாமியான பரமாத்மா காரியம் செய்யும் விஷயத்தில் முக்கியஹேது என்று கருத்து] என்று அவ்விடத்தில் கீதாபாஷ்யம். (சுக்கிரீவன் பார்த்து) 'இந்த சுக்கிரீவன் தூரத்தில் விபீஷணனைக் கண்டு, இன்னமும் கூர்ந்து காண்பதற்காகத் தலையைத் துணுக்குற்றுத் தூக்கிப்பார்த்தபோது அந்தக் கழுத்தழகு இருந்தபடியென்!' என்று வால்மீகி மஹரிஷி கொண்டாடுகிறுர்" என்று பிள்ளை திருநறையூரரையர் பணிப்பர். 'ஸுக்ரீவன்' என்னும் பெயருக்கு 'அழகிய கழுத்தையுடையவன்' என்றுபொருள். துணுக்குற்றுப் பார்த்தபோது பொருந்தியபெயருடையவனுனுன் என்று கருத்து. (வாநரர்தலைவன்) துணுக்குறுவதற்குக் காரணம் குரங்குப்படை முழுவதையும் தமக்கு ரக்ஷ்யப் பொருளாகக் கொண்டிருக்கையென்கை. ராமலக்ஷ்மணர்களிடமுள்ள பரிவு, "ராகவர்களுக்காக வெல்லப்பட்டவர்களான வானரர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுவதில்லை" [ரா-யு 27-1] "உயிரில் கருணை வைக்கிறுனல்லன்" [ ] என்கிறபடியே வானரர்கள் அனைவருக்கும் உள்ளதொன்றன்றே.

(வெல்லவொண்ணுதவன்) "தஸ்மாதபி வத்யம் ப்ரபந்நம் ந ப்ரதிப்ரயச்சந்தி" [கொல்லத் தக்கவனுயிருந்தாலும், சரணுகதனைக் காட்டிக் கொடுப்பதில்லை] என்கிறபடியே தண்டிக்கத்தகாதவனுக சாஸ்திரங்களில் சொல்லப்படும் சரணுகதனுக்கும் பின்வாங்கவேண்டும்படி வெல்லவொண்ணுத ஐயப்பாட்டை உடையவனுயிருந்தான் சுக்கிரீவன். (ஆலோசிக்கத் தொடங்கினுன்) வெல்லவொண்ணுதவனுயிருந்தும் ஆலோசிக்கத் தொடங்கினுன். அதாவது:-தன்னுடைய வெல்லவொண்ணுத்தன்மை வெளிப்படாதபடி 'ராமபிரானுக்கு என் வருகிறதோ' என்னும் பயசங்கையே மேற்பட்டு

யிலே இழிந்தாரென்கை. (புத்திமாந் வாநரைஸ் ஸஹ சிந்தயாமாஸ) தாமே சிந்திக்க க்ஷமராயிருக்கச்செய்தே, கார்யகௌரவத்தாலே முதலிகளையும் கூட்டிக்கொண்டு சிந்தித்தார். (புத்திமாந் சிந்தயாமாஸ) தூதனோ, ஆர்த்தனோ, எதிரியோ என்று சிந்தித்தார். ப்ரஶஸ்தபுத்திகளாகையாலே சிந்தித்தார் என்றுமாம். வருகிறவனுடைய முகவிகாராதி லிங்கங்களாலே கண்டபோதே ஆநுகூல்யப்ராதிகூல்யங்களை நிர்ணயிக்கவல்ல ப்ரஶஸ்த புத்திகளாயிருக்கச்செய்தே, ஸ்வாமிபக்கல் பரிவாலே கலங்கிச் சிந்தையிலே இழிந்தாரென்றுமாம். ப்ரஶஸ்த புத்தியாகையாலே சிந்தித்தார் என்றுமாம். 'ஸ்வாமிக்கு என்வருகிறதோ?' என்கையிறே ப்ரஶஸ்தபுத்தியாகிறது. "संस्पृशन्नासनं शौरेर्महामतिरुपाविशत्" (ஸம்ஸ்ப்ருஶந்நாஸநம் ஶௌரேர் மஹாமதிருபாவிஶத்) என்னக்கடவதிறே.

ஆலோசிக்கத் தொடங்கினனென்கை. (அறிவாளியானவன் வானரர்களோடுகூடச் சிந்திக்கத்தொடங்கினன். தான் ஒருவனேயிருந்து சிந்திக்கத் தக்க அறிவையுடையவனுயினும், காரியத்தின் பெருமையாலே மற்ற வானர்களையும் கூட்டிக்கொண்டு சிந்தித்தான். (புத்திமான் ஆலோசிக்கத் தொடங்கினன்) "பூமநிந்தாப்ரசம்ஸாஸு நித்யயோகேதிசாயநே' ஸம்சயேஸ்தி விவக்ஷாயாம் பவந்தி மதுபாதய:" என்கிறபடியே 'மதுப்' ப்ரத்யயம் ஸம்சயார்த்தத்திலேயாய், "இவ்விபீஷணன் ராவணனிடமிருந்து வந்த தூதனோ, அல்லது அவனுல் துன்புறுத்தப்பட்டு வருந்திவந்தவனோ, அல்லது அவனுல் அனுப்பப்பட்டு நம்மை நலியவந்தவனோ" என்று ஆலோசிக்கத் தொடங்கினன். அன்றிக்கே, 'மதுப்' ப்ரத்யயம் ப்ரசம்ஸார்த்தத்திலேயாய், புகழத்தக்க புத்தியையுடையவனுகையாலே ஆலோசிக்கத்தொடங்கினன் என்றுமாம். புத்திகார்யமன்றோ சிந்தை. அன்றிக்கே (புத்திமானுயிருந்தும் சிந்திக்கத்தொடங்கினன்) என்று கொண்டு, "வருகிறவனுடைய முகவேறுபாடு முதலிய அடையாளங்களைக்கொண்டு, கண்டபோதே நண்பனோ எதிரியோ என்பதை முடிவு கட்டவல்ல புகழத்தக்க புத்தியையுடையவனுயிருந்தும், ராமனிடம் பரிவாலே கலங்கிச் சிந்திக்கத் தொடங்கினன்" என்றும் கொள்ளலாம். அன்றிக்கே, கலக்கமாகிற புகழத்தக்க புத்தியையுடையனுகையாலே சிந்திக்கத்தொடங்கினன் என்றும் கொள்ளலாம். ஸ்வாமிக்கு என்னவருகிறதோ என்று எப்போதும் கலங்குகையன்றோ தாஸனுக்கு புகழத்தக்க புத்தியாகிறது. "(துரியோதனனைப் போலேநாமேபொய்யாசனமிட்டிருபோமோ என்னும் கலக்கத்லே) மஹா புத்திமானுன விதுரர் பகவானுடைய ஆஸனத்தைத் தொட்டுப்பார்த்துக் கொண்டே உட்கார்ந்தார்" [பார-உத்] என்று சொல்லப்படுகிறதன்றோ.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 4-வது ச்லோகம்

चिन्तयित्वा मुहूर्तन्तु वानरांस्तानुवाच ह।
हनूमत्प्रमुखान् सर्वानिदं वचनमुत्तमम्॥

சிந்தயித்வா முஹூர்த்தந்து வாநராம்ஸ்தாநுவாச ஹ।
ஹநூமத்ப்ரமுகாந் ஸர்வாநிதம் வசநமுத்தமம்॥

பதவுரை:—முஹூர்த்தம் து-சீக்கிரத்திலேயே, சிந்தயித்வா-முடிவுகட்டி, ஹநூமத்ப்ரமுகாந்—ஆஞ்ஜநேயர் முதலான, ஸர்வாந் தாந்—அவர்கள் அனைவரையும், இதம்—இந்த, உத்தமம்—மிகமிகச்சிறந்த, வசநம்—சொல்லை, உவாஸ ஹ—உரைத்தான்கிடீர்.

அவதாரிகை:—'ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸபரிகரராய்க்கொண்டு சடக்கெனக்கிட்டிக்கொண்டு போகையாலே மந்த்ரத்திலே விளம்பிக்கக் கடவோமல்லோம்' என்று பார்த்துச் சடக்கென நிர்ணயித்து முதலிகளைக்குறித்து நிர்ணயித்த அர்த்தத்தைச் சொல்லுகிறான்.

வ்யா:—(சிந்தயித்வா) சிந்தை நிர்ணயாந்தமாகையாலே, இவ்விடத்தில் சிந்தாசப்தம் நிர்ணயத்தைச் சொல்லுகிறது. சாரனுமல்லன், தூதனுமல்லன், பாதகனென்று நிர்ணயித்து.

அவதாரிகை:—ஸ்ரீவிபீஷணாழ்வான் துணைவரோடு கூட விரைவாக அணுகிவருகையாலே, மந்திராலோசனையில் காலம் தாழ்த்தவொண்ணாது என்று பார்த்து விரைவாக முடிவுகட்டி, வானரர்களைக்குறித்து முடிவு கட்டிய விஷயத்தைச் சொல்லுகிறான் சுக்கிரீவன்.

வ்யா:—(முடிவு செய்து) சிந்தை (ஆலோசனை). நிர்ணயத்தை (முடிவை) முடிவாகக்கொண்டதாகையாலே இவ்விடத்தில் சிந்தாசப்தம் 'முடிவுகட்டுதல்' என்னும் பொருளைக்குறிக்கிறது. 'புத்திமான்' என்று சென்ற ச்லோகத்திற்குறித்த ஸம்சயத்துக்கு முடிவுகட்டி என்று பொருள்; ஆயுதத்தோடும், துணைவரோடும் வெளிப்படையாக வருகையாலே சாரனுமல்லன், தூதனுமல்லன், நலியவந்தவனேயிவன் என்று முடிவுகட்டி. (விரைவில்) "கடலுக்கு எதிர்த்துறையிலே நீரரண், நிலவரண், மலையரண்,

(முஹூர்த்தம்) "எதிர்த் துறையிலே அரண்மிக்க லங்கை; அரணில்லாத வெளிநிலத்திற் பெருமாள் என்று இவனை நலிய வரக்காட்டினன்.; மந்த்ரத்தில் விளம்பிக்கில் பையல் மேலிடும்" என்று சடக்கென நிர்ணயித்தாரென்கை. (து) எதிரியென்று நிர்ணயித்தபின்பு சூக்ஷ்மத்தாலே பூர்வாவஸ்தையிற்காட்டில் வந்த வேறுபாடு. (தாந் வாநராநுவாச) மஹாராஜர் .காணவந்த சோழ ரென்னும்படி பரிவில் ப்ரதாநரானவர்களைக் குறித்துச் சொன்னர். (ஹ) 'ஒரு ஸ்வாமியும் பரிகரமுமிருக்கும்படியென்!' என்று ரிஷி கொண்டாடுகிறான்.

(ஹநூமத்ப்ரமுகாந்) பழமைபார்க்கில், 'ஜாம்பவாத்ப்ரமுகாந்' என்னவேணும்; பரியட்டமுறை பார்க்கில், 'அங்கதப்ரமுகாந்' என்னவேணும்; ஆபத்துக்களில் திருவடியுடைய திறமையைப் பற்ற, 'ஹநூமத்ப்ரமுகாந்' என்கிறான். (ஸர்வாந்) பெருமாள்

காட்டரண் என்னும் அரண்கள் இயற்கையிலேயே மிகுந்த லங்கை; இத்துறையாகிய அரணில்லாத வெளிநிலத்தில் ஸ்ரீராமபிரானிருக்கிறான்" என்னும் காரணத்தாலே இவ்விபீஷணனை ராவணன் துன்புறுத்த அனுப்பினான்; ஆகையால் மந்திராலோசனையில் தாமதம் செய்தால் அரக்கப்பையலான விபீஷணன் மேல்விழுந்து வென்றுவிடுவான் என்று விரைவாக முடிவுகட்டினான் என்கை. (து-எனில்) எதிரியென்று முடிவு கட்டிய பின்பு அஸ்தாநே பயசங்கையாலே முன் நிலையிற்காட்டில் பிறந்த வேறு பாட்டைச் சொல்லுகிறது. (அந்த வானரர்களிடமுரைத் தான்) ஒரு நாடகத்தில், அதில் அரசன் முதலானவருக்கே ப்ரதாந்யமாய், அந்நாடகத்தைக்காணவந்த சோழவரசனுக்கும் ப்ராதாந்யமில்லாமற் போவதுபோலே, ராமபிரான் விஷயத்தில் பரிவைப்பார்க்கும்போது அரசனான சுக்கிரீவனையும் காணவந்த சோழரைப்போலேயாக்கும்படி பரிவில் மிக்கவரான வானரர்களைப் பார்த்துச் சுக்கிரீவனுரைத்தான். (ஹ) 'ஆஹா! ஒரு தலைவனும் தாஸர்களுமிருக்குமழகென்!' என்று மஹரிஷி கொண்டாடுகிறார்.

(அனுமன் முதலானவரை) வயதில் பழமை பார்த்தால் 'ஜாம்பவான் முதலானவர்' என்றுரைத்தல் தகும். இளவரசுப்பட்டமுறைபார்த்தால் 'அங்கதன் முதலானவரை' என்னவேணும். ஆனால் இவை ஆபத்துக் காலமான இப்போது முக்கியமல்லவாகையாலே, ஆபத்துக்களில் அனு மனுடைய திறமையை உத்தேசித்து 'அனுமன் முதலானவரை' என்கிறான். (அனைவரையும்) ஸ்ரீராமபிரானிடம் பரிவில் முக்கியரோடு அமுக்கியரோடு

பக்கல் பரிவிலே ப்ரதாநரோடு அப்ரதாநரோடு வாசியில்லாமைபாலே 'ஸர்வாந்' என்கிறது. (இதம் வசநம்) அர்த்தவிதுரமாக ரிஷி வசந ஸந்நிவேஶத்தைக் கொண்டாடுகிருன். (உத்தமம்) அர்த்தத்தைப் பார்த்தால் ஸர்வோத்க்ருஷ்டமானதை உடைத்தாயிருக்குமென்கை. அதாவது – ஸர்வோத்க்ருஷ்டமான கலக்கத்தை அர்த்தமாக உடைத்தாயிருக்குமென்கை. 'வந்தவன் அநுகூலனல்லன், ப்ரதிகூலன்' என்று கலங்குகை உத்க்ருஷ்டம்; 'வந்தவன் நம்மளவறிந்து போகவந்தான்' என்னுமளவன்றிக்கே, 'நம்மைக் கொல்லவந்தான்' என்று தம்மைப்பாராதே கலங்குகை உத்க்ருஷ்டதரம். பரிகரபூதரான நம்மளவன்றிக்கே, "शरेणैकेन राघवः" (ஶரேணைகேந ராகவ:) என்று ஓரம்பாலே வாலியை அழியச்செய்த பலத்தையும் விஸ்மரித்து, நமக்கெல்லாம் வேர்ப்பற்ருன பெருமாளையும் நலிய வந்தானென்னுமது உத்க்ருஷ்டதமம்.

வித்தியாசமில்லாமையாலே 'அனைவரையும்' என்கிருன். (இந்த வார்த்தையை) பொருளைக்காணுமல், வார்த்தையின் அமைப்பையே கொண்டாடுகிருர் ஸ்ரீவால்மீகிபகவான். (மிகமிகச் சிறந்த வார்த்தையை) பொருளைக் கண்டால் மிகவுயர்ந்த பொருளை உடையதாயிருக்கும் என்கை: அதாவது—மிகவுயர்ந்த கலக்கத்தைப் பொருளாக உடையதாயிருக்கும் என்றபடி. பரிவிஞல் வரும் கலக்கத்திலும் ஏற்றத்தாழ்வுகளுண்டு. வந்த விபீஷணன் இனியவனன்று, இன்ஞதவன் என்று கலங்குவது உயர்ந்தது; இது விபீஷணன் ஒருவனுடைய தன்மையில் ஏற்படும் கலக்கம்; வந்தவன் நம் பலத்தை அறிந்துபோக வந்தான் என்பதோடு நில்லாமல், தன் பலத்தையும் மறந்து நம்மைக் கொல்லவந்தான் என்று கலங்குவது மிக உயர்ந்தது. ஏனெனில்: இங்கு விபீஷணன் தன்மையிலும், தன் பலத்திலுமே கலக்கமேற்படுகிறது. துணைவரான தம்மோடு நில்லாமல், "ராமபிரான் ஓரம்பாலே வாலியைக்கொன்ருன்" [ரா-பா 1-69] என்கிறபடியே ஓரம்பாலே வாலியை அழியச்செய்த ராமபிரானுடைய பலத்தையும் மறந்து நமக்கெல்லாம் மூலாதாரமான ஸ்ரீராமபிரானையும் துன்புறுத்தவந்தான் என்று கலங்குவது மிகமிகச்சிறந்தது. இங்கு விபீஷணன், தான், ராமபிரான் ஆகிய மூவருடைய ஸ்வரூபவிஷயமான கலக்கமாகையாலே இது மிகமிகச்சிறந்தது. கலக்கம் அதிகமாக அதிகமாக அதற்குக் காரணமான பரிவும் அதிகமாகிறதன்ருே. ஆகையால், மிகமிகவதிகமான கலக்கத்தை பொருளாகவுடைய வார்த்தை 'உத்தமம்' (மிகமிகச்சிறந்த வார்த்தை) எனப்படுகிறது.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 5-வது ச்லோகம்

एष सर्वायुधोपेतश्चतुर्भिस्सह राक्षसैः।
राक्षसोऽभ्येति पश्यध्वमस्मान्हन्तुं न संशयः॥

ஏஷ ஸர்வாயுதோபேதச் சதுர்ப்பிஸ்ஸஹ ராக்ஷஸை:।
ராக்ஷஸோऽப்யேதி பச்யத்வமஸ்மாந் ஹந்தும் ந ஸம்ஶய:॥

பதவுரை:— ஸர்வாயுதோபேத:—எல்லா ஆயுதங்களோடும் கூடின, ஏஷ: — இந்த, ராக்ஷஸ: — அரக்கனான விபீஷணன், சதுர்ப்பி: ராக்ஷஸை: ஸஹ — நாலு ராக்ஷஸர்களோடு கூட, அஸ்மாந்—நம்மை, ஹந்தும்—கொல்ல, அப்யேதி—எதிர்நோக்கி வருகிறான்; ந ஸம்ஶய:—ஸந்தேஹமில்லை; பச்யத்வம்—காணுங்கள்.

அவதாரிகை:—'சிந்தயித்வா முஹூர்த்தந்து' என்று நிர்ண யித்த ப்ரகாரத்தை ஸோபபத்திகமாக வெளியிடுகிறான்.

வ்யா:—(ஏஷ:) (பாதக) பாதகத்வத்துக்கு ஏகாந்தமான உள்வாயில் க்ரௌர்யம் இவன் வடிவிலே தோற்றுகிறதில்லையோ? (ஸர்வாயுதோபேத:) நெஞ்சில் க்ரௌர்யாநுகூலமான ஹிம்ஸாபரிகரங்களாலும் பூர்ணனென்கை. "उत्पपात गदापाणिः" (உத்பபாத கதாபாணி:) என்று ஒரு தடியைக் கொண்டுவந்தான் என்னச்

அவதாரிகை:—"சிந்தயித்வா முஹூர்த்தந்து" என்ற முன் ச்லோகத்தில் முடிவுகட்டிய ரீதியை யுக்தியோடுகூட வெளியிடுகிறான் சுக்கிரீவன் இந்த ச்லோகத்தில்.

வ்யா:—(இவன்) இவன் நலியவே வந்தவன் என்பதைக் காட்டித் தரும் நெஞ்சக்கொடுமை இவன் வடிவிலேயே தோற்றுகிறதன்றோ. (எல்லா ஆயுதங்களோடும் கூடியவன்) நெஞ்சக்கொடுமைக்கு உதவிபுரியும் நலிவுக்கருவிகளாலும் நிறைந்தவன் என்கை. "கதையைக் கையிலேந்திய வனாகக் கிளம்பினான் விபீஷணன்" [ரா-யு 16-16] என்று, ஒரு தடியைக் கையில் கொண்டுவந்தான் என்று சொல்லியிருக்கும்போது, இங்கு "எல்லா ஆயுதங்களோடும் கூடியவன்" என்று சொல்லுவானேன்

செய்தே, (ஸர்வாயுதோபேத:) என்பானென்னென்னில்: அநுகூலனை ப்ரதிகூலனாக ஶங்கித்தாற்போலே, ஓராயுதமே பல ஆயுதமாகவும் தோற்றலாமிறே. தோடு வாங்கின காது தோடிட்ட காது என்னுமாபோலே, கையும் ஆயுதமும் பொருந்தினபடியாலே, ஸர்வாயுதங்களிலும் ச்ரமமுண்டு என்கிறார் என்னவுமாம். பெருமாளை நலிகைக்கு நேரே ப்ரஹ்மாஸ்த்ரமான ஶரணாகதியும் இவன் கையிலே உண்டென்கிற நினைவாலே "ஸர்வாயுதோபேத:" என்கிறார் என்னவுமாம். (ராக்ஷஸ:) "सर्पजातिरियं क्रूरा" (ஸர்ப்பஜாதிரியம் க்ரூரா) என்கிறபடியே, கீழ்ச்சொன்ன க்ரௌர்யம் ஜாதிப்ரயுக்தமென்கை. (சதுர்ப்பிஸ்ஸஹ ராக்ஷஸை:) இவனுடைய யுத்தகௌஶலம் கண்டிலீர்களோ? 'பெரும்படையோடே செல்லில் காற்கட்டு படுவதோம்; தனியே வரில் மீண்டுபோகவொண்ணாது' என்று பரிமிதபலனாய் வந்தபடி கண்டிலீர்களோ? (ராக்ஷஸை:) தன் க்ரௌர்யத்தைப் பின்செல்லும் ஸஜாதீயரையே கொண்டுவந்தான் என்கை.

னென்னில்; அன்றாரே பயசங்கையாலே நண்பனான விபீஷணனை எதிரியாக நினைத்து ஸந்தேஹித்தாற்போலே, ஓராயுதமே பல ஆயுதமாகத் தோற்றுமன்றோ இவனுக்கு. "அதிஸ்நேஹ: பாபசங்கீ" என்னும்படியான பரிவுபடுத்துகிற பாடு இது. அன்றிக்கே, "தோடிடப்பெற்றுப் பிறகு கழற்றப்பெற்ற காதைக்காணும்போது 'தோடிட்டகாது' என்று தெரிவதுபோலே, இவனும் ஆயுதங்களனைத்தையும் தரித்திருந்தவனாகையாலே, எல்லாப் போர்க்கருவிகளையும் கொண்டு பொருதவனிவன் என்பதை அறிந்து சொல்லுவதாகவும் கொள்ளலாம். அப்படியுமன்றிக்கே, ஸ்ரீராமபிரானை அடுத்துக்கெடுப்பதற்கு, ஸர்வாயுதஸமமான ஸாக்ஷாத் ப்ரஹ்மாஸ்த்ரம்போலே வீண்போகாததான சரணாகதியாகிற ஆயுதமும் இவன்கையிலே உண்டு என்னும் நினைவாலே "எல்லா ஆயுதங்களோடும் கூடியவன்" என்றுரைப்பதாகவும் கொள்ளலாம். (அரக்கன்) "நான் பிறந்திருக்கும் ஸர்ப்பஜாதி மிகக்கொடியது' [வி-பு 5-7-71] என்று காளியன் சொன்னதுபோலே, கீழ்ச்சொன்ன கொடுமை இவன் ராக்ஷஸ ஜாதியில் தோன்றியதால் உண்டானதென்கை. (நான்கு அரக்கர்களோடு கூட) இவனுடைய போர்த்திறமையைக் காணவில்லையோ? "பெரிய படையோடு சென்றால் நமக்குக் காற்கட்டாகும்; தனியே வந்தால் வானரப்படை மீண்டுபோகவிடாது" என்று நினைத்து அளவுபட்ட துணைவரோடு வந்திருக்கிறபடியைக் காணவில்லையோ? (அரக்கரோடு) தன் கொடுமையையே பின்பற்றும் தன் ஜாதியினரையே கூட்டிக்கொண்டு வந்தான் என்கை.

(அப்யேதி) பிற்காலியாதே தன் நிலத்திலே புகுருமா போலே மதியாதே புகுந்தபடி. இத்தால் சடக்கெனப் பரிஹரிக்க வேண்டும்படி வந்தான் என்கை. (பச்யத்வம்) நானுபதேசிக்க வேணுமோ? உங்கள் முகத்திலும் கண்ணில்லையோ? (அஸ்மாந் ஹந்தும்) நம்மிலே சிலரை நலியில் அல்லாதார்க்குப் பிழைக்கலாம்; நமக்கெல்லாம் வேர்ப்பற்றான பெருமாளை நலியவந்தான். அவர் உளராகில் நாமெல்லாமில்லையாகிலும் உண்டாக்கவல்லவர். (ந ஸம்ஶய:) ஸாயுதனாய், ஸபரிகரனாய் வருகையாலே பாதகனென்னுமிடத்தில் ஸந்தேஹமில்லை; தூதராயிருப்பார் ஸாயுதராய், ஸபரிகரராயின்றிக்கேயிறே வருவது.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 6-வது ச்லோகம்

सुग्रीवस्य वचः श्रुत्वा सर्वे ते वानरोत्तमाः।
सालानुद्यम्य शैलांश्च इदं वचनमब्रवन्॥

ஸுக்ரீவஸ்ய வச: ச்ருத்வா ஸர்வே தே வாநரோத்தமா:।
ஸாலாநுத்யம்ய ஶைலாம்ச்ச இதம் வசநமப்ருவந்॥

பதவுரை:— ஸர்வே தே வாநரோத்தமா:— அந்தச் சிறந்த வானரர் அனைவரும், ஸுக்ரீவஸ்ய—சுக்கிரீவனுடைய, வச:—

(எதிர்முகமாய் வருகிறான்) பின்வாங்காதபடி, தன் புற்றில்நுழையும் பாம்புபோலே நம்மொருவரையும் மதிக்காமல் புகுகிறான்கிடீர். இத்தால் விரைவாகத் தடுக்கவேண்டும்படி வந்தான் என்கை: (காணுங்கள்) நான் இதை உங்களுக்கு உபதேசிக்கவேணுமோ? உங்கள் முகத்திலும் கண் இல்லையோ? நீங்களே காணுங்கள். (நம்மனைவரையும் கொல்ல) "நம்மிலே சிலரைக் கொன்றாலும், மற்றவர்கள் பிழைத்திருக்கலாம்; நம் மனைவர்க்கும் மூலாதாரமான ஸ்ரீராமபிரானைக் கொல்லுவதன்மூலம் நம் மனைவரையுமே அழிக்கவந்தான் படுபாவி. அவர் ஒருவரில்லையேல் நாமனைவருமில்லை; அவருளராகில் நாமெல்லாமழிந்தாலும் நம்மை உண்டாக்கவல்லவர்" என்று கருத்து. (ஐயமில்லை) ஆயுதங்களோடும், துணைவரோடும் கூடிவருகையாலே நலியவந்தவன் என்னும் விஷயத்தில் ஐயமில்லை; தூதராயிருப்பார் ஆயுதத்தோடும் துணைவரோடும் வரமாட்டார்கள்; ஆர்த்தரும் ஆயுதத்தோடு வரமாட்டார்கள்; ஆகையால் இவன் பாதகனே (நலியவந்தவனே) என்று கருத்து.

வார்த்தையை, ச்ருத்வா — கேட்டு, ஸாலாந் — மரங்களையும், ஶைலாந் ச—மலைகளையும், உத்யம்ய—எடுத்துக்கொண்டு, இதம் வசநம்—இந்த வார்த்தையை, அப்ருவந்—உரைத்தனர்.

அவதாரிகை:—மஹாராஜர், "अस्मान् हन्तु न संशयः" (அஸ்மாந் ஹந்தும் ந ஸம்ஶய:) என்று கூசி வார்த்தை சொன்ன படியைக்கேட்டு, அவருடைய கூச்சம் தீர முதலிகள் பரிகரத்தோடே ஸ்ரீவிபீஷணாழ்வானை நலிவார்களாக ஶைலவ்ருக்ஷாதிகளைக் கையிலே கொண்டு இவ்வார்த்தையைச் சொன்னார்கள்.

வ்யா:—(ஸுக்ரீவஸ்ய வச: ச்ருத்வா) தங்கள் துணிவிலே நிர்வாஹகரான மஹாராஜருடைய அநுமதியும் பெற்றார்களென்கை. (ஸர்வே தே) இவர்களுடைய வதோத்ஸாஹத்தில் ப்ரதாநரோடு அப்ரதாநரோடு வாசியற்றிருந்தபடி. (ஸர்வே வாநரோத்தமா:) என்ன அமைந்திருக்க, (தே) என்றது 'அவர்கள்' என்னுமித்தனை போக்கி அவர்களுடைய உத்ஸாஹத்தைப் பரிச்சேதிக்கவொண்ணாதென்கை. (வாநரோத்தமா:) பெருமாள் பக்கல் பரிவில் மஹா

அவதாரிகை:—சுக்கிரீவன் "நம்மைக்கொல்லவே வந்தான்; ஐயமில்லை" என்று அஸ்தானே பயசங்கையாலே பயந்து வார்த்தை சொன்ன படியைக்கேட்டு, அவருடைய பயம்தீர, வானரமுதலிகள் துணைவரோடு கூடிய விபீஷணனை அழிப்பதற்காக மலைகள் மரங்கள் முதலானவற்றைக் கையில் எடுத்துக்கொண்டு இவ்வார்த்தையைச் சொன்னார்கள் என்கிறது இந்த ச்லோகத்தில்.

வ்யா:—(சுக்கிரீவனின் வார்த்தையைக் கேட்டு) 'விபீஷணனைக் கொல்லவேண்டும்' என்னும் தங்கள் உறுதியிலே தலைவனான சுக்கிரீவனின் அனுமதியும் பெற்றார்கள் என்கை. (அவர்களனைவரும்) துணைவரோடு கூடிய விபீஷணனைக் கொல்லும் குதூஹலத்தில் வானரமுக்கியர்களோடு மற்றவரோடு வித்தியாசமில்லாமலிருந்ததென்கை. "வானரச்ரேஷ்டர்களான அனைவரும்" என்றாலே போதுமாயிருக்க, "வானரச்ரேஷ்டர்களான அவர்கள் அனைவரும்" என்றது 'அவர்கள்' என்று சொல்லலாமே யொழிய, அவர்களுடைய போர்க்குதூகலத்தை அளவிடமுடியாது என்கை. (வானரச்ரேஷ்டர்கள்) ஸ்ரீராமபிரானிடம் பரிவில் சுக்கிரீவனைக்காட்டிலும் சிறந்தவர்களாயிருந்தபடியாலே 'சிறந்த வானரர்கள்'

ராஜரிலும் அதிக்ரமித்திருந்தபடி. உத்கர்ஷாபகர்ஷங்களில் ஶேஷித்வ ஶேஷத்வங்களல்ல ப்ரயோஜகப். ஸாக்ஷாதுத்கர்ஷ ஹேதுவான ராமபக்தியே என்கை. (ஸாலாநுத்யப்ய ஶைலாம்ச்ச) மலையோடு மரங்களோடு வாசி யறக் கைக்கெட்டினவையடங்க எடுத்தார்கள். இவர்களுடைய வதத்தில் தங்களுக்குண்டான ஆதராதிஶயத்தாலே தனித்தனியே உபயபரிகரயுக்தரானார்களென்கை. பெருமாளுடைய அநுகூலவ்ருத்தியில் இளையபெருமாள் சத்ரசாமரபாணியானாற்போலே. இவர்களைக்கொல்லுகை ராம கைங்கர்யமென்றிறே இவர்கள் இருக்கிறார்கள். (இதம் வசநம்) தங்களுடைய ஶேஷத்வஸித்திக்காக இவருடைய அநுமதி அபேக்ஷிதமாயிருக்க, அத்தையொழியவே அவர்களுடை வதநிச்ச

என்கிறார். ஸ்வாமியாயிருப்பதால் சிறந்தவனாகிவிடுகிறானென்றோ தாஸனுயிருப்பதால் தாழ்ந்தவனாகி விடுகிறானென்றோ சொல்லிவிடமுடியாது; உயர்வுக்கு நேரே காரணமான ராமபக்தி எவனிடம் இருக்கிறதோ அவனே உயர்ந்தவன்; அதில்லாதவன் தாழ்ந்தவன் என்று கருத்து. (மரங்களையும் மலைகளையும் எடுத்து) பெரியனவான மலைகளாயிருந்தாலும் சரி; சிறியனவான மரங்களாயிருந்தாலும்சரி; எது கைக்கெட்டுகிறதோ அது அனைத்தையும் எடுத்துக் கொண்டார்கள்; 'இவர்களை நாமே கொல்ல வேண்டும்' என்னும் பேராசை, வானரர்கள் ஒவ்வொருவருக்குமிருக்கையாலே தனித்தனியே ஒவ்வொருவரும் ஒருகையில் மலையையும்; ஒரு கையில் மரத்தையும் எடுத்துக்கொண்டார்கள். கைகள் இரண்டேயிருக்கையாலே மலை, மரம் என்னும் இரண்டு போர்க்கருவிகளோடு திருப்தி அடைந்தனர். பட்டாபிஷேக ஸமயத்தில் சத்ரத்தையும் (குடையையும்) சாமரத்தையும் எடுத்துக்கொண்டும், காட்டில் 'கநித்ரம்' என்னும் மண்வெட்டியையும், 'பிடகை' என்னும் கூடையையும் தரித்துநின்றும் ஸ்ரீராமபிரானுக்குக் கைங்கரியம் செய்த லக்ஷ்மணனைப்போலே. தலைவரோடு கூடிய விபீஷணனைக் கொல்லுவது கைங்கரியமோ? எனில்: 'எதிரிகளான இவர்களைக் கொல்லுவது ராமபிரானுக்குச்செய்யும் கைங்கரியமே' என்று நினைத்திருக்கிறார்களிவர்கள். (இந்த வார்த்தையை) தாஸர்களான தங்களுடைய சேஷத்வம் நிலைநிற்பதற்காக சுக்கிரீவனுடைய சாப்தமான அநுமதி வேண்டியிருந்தபோதிலும், அவ்வநுமதியில்லாமலே விபீஷணாதியரை அழித்திடவேண்டும் என்னும் முடிவைக்காட்டும் வார்த்தையைச் சொன்னார்கள். (சொன்னார்கள்) தாஸன், தலைவன் என்னும் ஏற்றத்தாழ்வுகளையும், 'எல்லாரும் சேர்ந்து கூச்சலிடலாகாது' என்னும்

யோபபாதகமான வார்த்தையை. (அப்ருவங்) குணப்ரதாநபாவமும், ஔசித்யமும் பாராதே திரளாகச்சொன்னார்கள்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 7-வது ச்லோகம்

शीघ्रं व्यादिश नो राजन् वधायैषां दुरात्मनाम्।
निपतन्तु हता यावद्धरण्यामल्पतेजसः॥

ஶீக்ரம் வ்யாதிஶ நோ ராஜந் வதாயைஷாம் துராத்மநாம்।
நிபதந்து ஹதா யாவத்தரண்யாமல்பதேஜஸ:॥

பதவுரை:—ராஜந்—அரசனான சுக்கிரீவனே! ஏஷாம்—இந்த, துராத்மநாம்—துஷ்டர்களுடைய, வதாய—அழிவின் பொருட்டு, ந:—எங்களை, ஶீக்ரம்—விரைவாக, வ்யாதிஶ—ஆணையிடும்; அல்ப தேஜஸ:—தாழ்ந்த பலமுள்ள இவர்கள், யாவத் ச—இருப்பவர்களெல்லாம், ஹதா:-(எங்களால்) அடிக்கப்பட்டவர்களாய், தரண்யாம்—பூமியில், நிபதந்து—விழட்டும்.

அவதாரிகை:— எதிரியான ராவணனுக்குப் பரிபவமாகப் பிடித்துக்கட்டியிட்டுவைத்தல், இவனைத்தொடுத்த அம்போடே விடுதல் செய்யக்கடவோமல்லோம்; வதத்திலே அனுமதி பண்ணீர் என்கிறார்கள்.

வ்யா:-(ஶீக்ரம் வ்யாதிஶ) இவர்கள் கொலையுண்டார்களத்தனை. அநுமதி விளம்பிக்குமாகில் ஸ்வதந்த்ரராய்க்கொன்றோம் என்னும்

தகுதியையும் கருதாமல் கூட்டமாகக் கூச்சலிட்டார்கள். பரிவின் மிகுதி படுத்துகிற பாடு இது.

அவதாரிகை:— எதிரியான ராவணனை அவமானப்படுத்துவதற்காக இவர்களைப்பிடித்து இங்கேயே கட்டிவைப்பது, அல்லது அம்புதைத்த உடம்போடே போகவிடுவது ஆகிய இவற்றைச் செய்யவல்லோமல்லோம்; இவனை இங்கேயே கொல்லுவதற்கு அனுமதிக்கவேணும் என்கிறார்கள்.

வ்யா:—(விரைவில் ஆணையிடும்) கொல்ல உறுதிபூண்டபோதே இவர்கள் எங்களால் அழிக்கப்பட்டவர்களே என்பதில் ஐயமில்லை; ஸ்வாமியான உம்முடைய அனுமதி தாமதமாகிற்றாகில், நாங்களே உம்மைக்

ஸ்வரூபஹானிவரும்; அது வராதபடி சடக்கென ஏவவேணும். (ந:) "ஸாலாநுக்யம்ய ஶைலாம்ச்ச" என்று வதத்திலே உத்யுக்தரான எங்களை. வதத்திலே உத்யோகித்திகோளாகில் நம் அநுஜ்ஞை என்னென்னில்: (ராஜந்) ராஜாஜ்ஞையை அநுவர்த்தித்தோமாகைக்காக. (வதாய) உயிரோடே பிடித்துக்கட்டிவைத்தாலும் இங்கேயிருந்து சில அநர்த்தங்களை விளைக்கவொண்ணாது. வதார்த்தமாக அநுமதிபண்ணவேணுமென்கை. (ஏஷாம் துராத்மநாம்) இவர்களுடைய துர்மநோரதம் வடிவிலே தோற்றுகிறதில்லையோ? (நிபதந்து ஹதாயாவத்) எல்லாரும் பட்டு விழுந்தார்களாக புத்தி பண்ணும். "யாவத்தாவச்ச ஸாகல்யே" (யாவத்தாவச்ச ஸாகல்யே) (தரண்யாம்) ஆகாஶத்தில் தொடுத்த அம்போடே போகவிடோம்; பூமியிலே பட்டு விழும்படி பண்ணக்கடவோம். யுத்தத்தில் ஜயாப

கேளாமல் கொன்றோம் என்னும் நீர்மைக்கேடு வரும். அந்த தோஷம் வாராதபடி விரைவில் ஆணையிடவேணும்; (எங்களை) "மரங்களையும், மலைகளையும் எடுத்து" என்று இவனைக் கொல்லுவதில் முயன்றுநிற்கும் எங்களை. 'இவனைக் கொல்லுவதில் நீங்களே முயன்றுவிட்டீர்களானால் என் அனுமதியேதுக்கு' என்னில்: (அரசனே) அரசனுணையைப் பின்பற்றினோம் என்னும் பெருமைபெறுவதற்காக கொல்ல அனுமதி வேண்டும். (வதத்தின்பொருட்டு) உயிரோடே இவர்களைப் பிடித்துக் கட்டிவைத்தாலும், இங்கேயேயிருந்து சமயத்தில் ஏதேனும் தீச்செயலைப் புரியக்கூடும்; அதுவும் கூடாதபடி இவர்களை அடியோடு அழிக்க அனுமதிக்கவேணும். (இந்த துஷ்டர்களுடைய) இவர்களுடை கெட்ட எண்ணம் இவர்களுடம்பிலேயே காட்சியளிக்கிறதன்றோ. (அனைவரும் செத்து விழட்டும்) நீர் அனுமதிக்கவேண்டியதே குறை; இவர்கள் அனைவரையும் இறந்துவிழுந்தவர்களாகவே நினையும்; "யாவத் தாவச்ச ஸாகல்யே" [அமரகோசம் 3-3-246] ['யாவத்' 'தாவத்' என்னும் பதங்கள் 'முழுமை' என்னும் பொருளைக்குறிக்கும்] என்கையாலே 'அனைவரும் செத்து விழட்டும்' என்று பொருள்படுகிறது. (பூமியில் விழட்டும்) இவர்கள் ஆகாசத்திலிருக்கும்போது அம்புதைத்த உடம்போடு போகவிடோம், பூமியிலே இறந்துவிழும்படி செய்யக்கடவோம் என்கை. "அவ்யவஸ்தௌ ஹி த்ருச்யேதே யுத்தே ஜயபராஜயௌ" [ரா-ஸு 37-55] [சண்டையில் வெற்றிதோல்விகள் ஒருநிலையில்லாதவையாகவன்றோ காணப்படுகின்றன] என்கிறபடியே, போரில் வெற்றிதோல்விகள் ஒருவழி நில்லாதவையாயிற்றே; அப்படியிருக்க இவ்வளவு நிச்சயமாகச்சொல்லக்

ஜயங்கள் பாக்ஷிகமன்றோவென்னில்: (அல்பதேஜஸ:) அல்பபலா:; நம்முடைய பலத்துக்கு இவர்கள் ஆனைவாய்க்கீரையன்றோ என்கை.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 8-வது ச்லோகம்

तेषां संभाषमाणानामन्योन्यं स विभीषणः।
उत्तरं तीरमासाद्य खस्थ एव व्यतिष्ठत॥

தேஷாம் ஸம்பாஷமாணாநாமந்யோந்யம் ஸ விபீஷண:।
உத்தரம் தீரமாஸாத்ய கஸ்த ஏவ வ்யதிஷ்டத॥

பதவுரை:—ஸ: விபீஷண:—*அந்த விபீஷணன்*, அந்யோந்யம்—*ஒருவர்க்கொருவர்*, ஸம்பாஷமாணாநாம் தேஷாம்—*அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே*, உத்தரம் தீரம்—*(கடலின்) வடகரையை*, ஆஸாத்ய—*அடைந்து*, கஸ்த ஏவ—*ஆகாயத்தில் நின்றவனாகவே*, வ்யதிஷ்டத—*நிலைநின்றான்.*

அவதாரிகை:-*தன்னுடைய நிரஸநத்திலே வார்த்தை சொல்லுகிற முதலிகளுடைய வார்த்தையை அநாதரித்துத் தாய்முலையைக் கணிசித்துச் செல்லும் கன்றுபோலே பெருமாள் ஸந்நிதியாலே உத்தேச்யமான வடகரையை அடைந்து தரித்தானென்கிறது.*

காரணமென்ன? எனில்: (தாழ்ந்த தேஜஸ்ஸையுடையவர்கள்) தாழ்ந்த பலத்தையுடையவர்கள் என்றபடி. நம்முடைய பெரும்பலத்தைப் பார்த்தால் இவர்கள் ஆனைவாயிலகப்பட்ட கீரைபோலே உருக்குலைந்து போவது நிச்சயமன்றோ என்கை.

அவதாரிகை:—தன்னை அழிக்கவேணும் என்று வார்த்தை சொல்லும் வானரர்களுடைய வார்த்தையை அலட்சியம் செய்து, "தாய்நாடு கன்றே போல் தண்டுழாயானடிக்கே போய் நாடிக்கொள்ளும் புரிந்து" [முதல் திருவ-30] என்கிறபடியே, தாய்முலையை நாடிச்செல்லும் கன்றுபோலே ஸ்ரீ ராமபிரான் எழுந்தருளியிருக்கையாலே, சென்றடையத்தக்கதான (கடலின்) வடகரையைச்சென்று அடைந்து உயிர்தரித்தான் விபீஷணன் என்கிறார் "தேஷாம் ஸம்பாஷமாணாநாம்" என்னும் இந்த ச்லோகத்திலே.

வ்யா:—(தேஷாம்) தன்னுடைய நிரஸனத்திலே விரைந்தவர்களுடைய. अनादरे षष्ठि. (அந்யோந்யம் ஸம்பாஷமாணுநாம்) தன்னுடைய வத்யத்வாநுகூலமாக அந்யோந்யம் வார்த்தை சொல்லாநிற்க. இதுக்கு ஸம்யக்த்வமாவது,—நிர்வாஹகரான மஹாராஜரோடு நிர்வாஹ்யரான முதலிகளோடு வாசியற ஏககண்டராய்ச் சொல்லுகை. தன்னுடைய வதத்திலே உத்யுக்தரானவர்களுடைய வார்த்தையை அநாதரிக்கைக்கு ஹேது சொல்லுகிறது,-(ஸ விபீஷண:) என்று; பாவசுத்தியையும் த்வரையையும் உடையவனென்கை. சுத்தியாவது—அவர்ஜநீயமான ஸம்பந்தமுண்டாகிலும் ப்ரதிகூலனான ராவணகோஷ்டியிற் பொருந்தாமையும், பாதகராகிலும் விடமாட்டாத தார்மிகரான ராமகோஷ்டியில் பொருத்தமும். த்வரையாவது- "आजगाम मुहूर्तेन" (ஆஜகாம முஹூர்த்தேந) என்று வந்தல்லது தரிக்கமாட்டாத பதற்றம். (உத்தரம் தீரமாஸாத்ய) பெருமாளைக் காட்டில் அக்கரை உத்தேச்யமென்றிருக்

வ்யா:—(அவர்கள் அனைவரும்) தன்னைக் கொல்லுவதிலே வேகமுள்ள அவர்கள் அனைவரும். ஆறும் வேற்றுமை அநாதரவுப்பொருளில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. தன்னைக் கொல்லவந்த அவர்கள் விஷயத்திலும் அலட்சியமாயிருந்தான் என்கை. (ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருக்கும் போது) 'தன்னைக் கொல்லவேணும்' என்பதற்குத் தகுதியாக ஒருவர்க்கொருவர் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்குமளவில். (ஸம்பாஷமாணுநாம்— ஸம்யக் பாஷமாணுநாம்—நன்கு பேசிக்கொண்டிருக்கும்போது) பேச்சுக்கு நன்மையாவது-தலைவனான சுக்கிரீவனோடு பிரஜைகளான மற்ற வானரரோடு வித்தியாசமில்லாதபடி ஒருமிடறாய்ச்சொல்லுகை. தன்னைக் கொல்லமுயன்ற அவர்கள் விஷயத்திலும் அநாதரவுடன் இருக்கைக்குக் காரணம் சொல்லுகிறது,—(அந்த விபீஷணன்) என்று. விபீஷணன் – விகதபீஷணன்; (கொல்லவந்தவர்களிடமும்) பயமற்றவன். பயமற்ற புனிதமான நினைவையும், ராமபிரானைச் சென்று அடையவேணும் என்னும் வேகத்தையும் உடையவன் என்கை. நினைவில் புனிதத்தன்மையாவது—தம்பியாகையாலே விடமுடியாத உறவுண்டானாலும் ராமபிரானுக்கு எதிரியான ராவணனுடைய கோஷ்டியில் பொருந்தமாட்டாமையும், தன்னை நலியுமவர்களானாலும் விடமுடியாதபடி அறவழி நடப்பவர்களான ராமனைச் சேர்ந்தவர்களோடு பொருந்துவதும். வேகமாவது-"முஹூர்த்த நேரத்தில் வந்தான்" [ரா-யு 17-1] என்று வந்தாலல்லது உயிர்தரிக்க மாட்டாதபடியான பதற்றம். (வடகரையை அடைந்து) ராமபிரானைக்

கிறான். இலங்கையிலேயிருந்து முடிசூடியிருப்பதிற்காட்டில் பெருமாள் எல்லையிலே போய்க் கொலையுண்டு போகைஉறும் என்றிருக்கிறான். §திருவாழிக்கல்லுக்குள்ளே புகுருகையாலே, பயஸ்தானத்தினின்றும் ஒரு கணையத்துக்குள்ளே புகுந்தாற்போலேயும், காட்டுத்தீயினின்றும் ஒரு கடலிலே புகுந்தாற்போலேயும் நினைத்திருக்கிறான். (கஸ்த ஏவ வ்யதிஷ்டத) முதலிகள் விஷயீகாரம் பெற்றுத் தரையிலே கால்பாவுவதற்கு முன்னே ஆகாசத்திலே தரித்தமைதோற்ற நின்றான். இவர்களுடைய விஷயீகாரத்துக்குடலாகத் தன் வெறுமையே ஆலம்பநமாக நின்றான் என்று பிள்ளான் நிர்வாஹம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 9-வது ச்லோகம்

उवाच च महाप्राज्ञः स्वरेण महता महान्।
सुग्रीवं तांश्च संप्रेक्ष्य खस्थ एव विभीषणः॥

உவாச ச மஹாப்ராஜ்ஞ: ஸ்வரேண மஹதா மஹாந்।
ஸுக்ரீவம் தாம்ச்ச ஸம்ப்ரேக்ஷ்ய கஸ்த ஏவ விபீஷண:॥

காட்டிலும் அவர்நிற்கும் கரை உத்தேச்யமாயிருக்கை. அவரைப் பற்றுகைக்கும் அக்கரையில் நின்றன்றோ பற்றவேண்டும். ராவணனோடு லங்கையிலிருந்து முடிசூடியிருப்பதைக்காட்டிலும், அவனில்லாத பெருமாளிருப்பிடம் சென்று குரங்குகளால் கொலையுண்டு போவதே தகுந்தது என்று இருக்கிறான். § பகவத் ஸாந்நித்யமுள்ள தேசத்தின் எல்லைக்குள்ளே புகுந்து விட்டமையாலே, பயம்விளைக்கும் பிரதேசத்திலிருந்து ஒரு கோட்டைக்குள்ளே புகுந்தாற்போலேயும், தபிக்கும் காட்டுத்தீயிலிருந்து தண்மைமிக்க கடலிலே புகுந்தாற்போலேயும் நினைத்திருக்கிறான். (ஆகாயத்திலேயே நிலைநின்றான்) புருஷகாரபூதர்களான வானரமுதலிகளின் கண்ணுக்கு இலக்காகப்பெற்றபடியாலே, தரையிலே நின்று கால் நிலைநிற்பதற்கு முன்னே ஆகாசத்திலேயே தான் நிலைபெற்றது தோற்ற நின்றான். 'வெட்டவெளியான ஆகாசத்தில் நின்றான்' என்றது ஸ்வாபதேசத்திலே 'வானரர்களுடைய கடாக்ஷத்துக்கு இலக்காவதற்காகத் தன் ஆகிஞ்சன்யத்தையே பற்றி நின்றான் என்னும் கருத்தைத் தெரிவிக்கும்' என்று பிள்ளான் நிர்வாஹம்.

---

§ திருவாழிக்கல்— ஸுதர்சனனாழ்வானால் ரக்ஷிக்கப்படும் ப்ரதேசத்தின் எல்லை; பகவத்ஸந்நிதியுள்ளதேசத்தின் எல்லையென்கை.

பதவுரை:—மஹாப்ராஜ்ஞ:—நல்ல புத்திமானுய், மஹாந்—பெரியோனுன, விபீஷண:–விபீஷணன், கஸ்த ஏவ-ஆகாசத்தில், நின்றவனுகவே, மஹதா—பெரிய, ஸ்வரேண — த்வநியோடு, ஸுக்ரீவம்—ஸுக்ரீவனேயும், தாந் ச—அந்த வானரர்களேயும், ஸம்ப்ரேக்ஷ்ய–பார்த்து, உவாச ச–ஒருவார்த்தையும் சொன்ஞன்.

அவதாரிகை:— தன்னுடைய நிரஸனத்திலே உத்யோகித்த மஹாராஜரையும் பரிகரத்தையுங்குறித்துத் தன் ஆர்த்தியெல்லாம் மிடற்ரேசையிலே தோற்றும்படியாக ஒரு வார்த்தை சொல்லு வதும் செய்தான்.

வ்யா:—(உவாச ச) பெருமாளுடைய விஷயீகாரத்துக்குத் தன்வரவு அமைந்திருக்கச்செய்தே ஒரு வார்த்தையும் சொன்ஞன் என்கிருன் ரிஷி. "पद्भ्यामभिगमाच्चैव" (பத்ப்யாமபிகமாச்சைவ) என்று வரவுதானும் மிகையென்றிருக்குமவர்க்கு அதுக்குமேலே வார்த்தை சொல்லுகை வ்ரணக்ஷாரம் போலேயிறே. (மஹா ப்ராஜ்ஞ:) ஜ்ஞனைகயாவது—ஹேயோபாதேய விபாகஜ்ஞனை.

அவதாரிகை:—தன்னே அழிக்க முயன்ற சுக்கிரிவனேயும், வானரர் களேயும் குறித்துத் தன் வருத்தமெல்லாம் குரலிலே தோற்றும்படியாக ஒரு வார்த்தை சொல்லுவதும் செய்தான் என்கிறது இந்த ச்லோகத்தில்.

வ்யா:—(சொல்லவும் செய்தான்) ராமனுடைய கிருபைக்கு இலக்கா வதற்கு, அவரிருக்குமிடம் தேடி வருவந்த போதுமாயிருக்க, ஒரு வார்த்தையும் சொன்ஞன் என்கிறது.

"அர்ச்சிதாச்சைவ ஹ்ருஷ்டாச்ச பவதா ஸர்வதா வயம்।
பத்ப்யாமபிகமாச்சைவ ஸ்நேஹஸந்தர்சநேந ச॥ [ரா-அ 50-41]

[காலால் நடந்து வந்ததன்மூலமும், அன்பைக்காட்டியதன் மூலமும் உன்ஞல் நாங்கள் பூஜிக்கப்பட்டோம்; உகப்படைந்தோம்.] என்கிறபடியே தான் இருக்குமிடம் தேடி வருவதே அதிகமாயிருக்கும் ராமபிரானுக்கு, அதுக்குமேலே வார்த்தை சொல்லுவது புண்ணில் உப்புநீரையிடுவதுபோ லன்ரே. (பெரும் பேரறிவாளன்) அறிவாளஞகையாவது,–விலக்கவேண்டிய தையும்,பற்றவேண்டியதையும் பிரித்து அறிகை; பேரறிவாளஞகையாவது,-விலக்கவேண்டியதை விலக்கி, பற்றவேண்டியதை அறிகை. பெரும் பேரறி

ப்ராஜ்ஞனுகையாவது—ஹேயத்யாக பூர்வகமாக உபாதேயம் இன்னதென்று அறிகை. மஹாப்ராஜ்ஞனுகையாவது—ஹேயத்யாக பூர்வகமான உபாதேயலாபத்துக்குச் சரதமான உபாயத்தையறிகை. அதாவது-ராவணன் தண்மையையும், பெருமாள் பெருமையையும் அறிகையும், அவனைவிட்டே எம்பெருமானைப் பற்றவேணும் என்றிருக்கையும், அவர்லாபத்துக்கு அவர் திருவடிகளே ஸரதமான உபாயம் என்றிருக்கையும்.

(ஸ்வரேண மஹதா) ஸ்வரத்துக்கு மஹத்தையாவது—"மரங்களுமிரங்கும் வகை" என்கிறபடியே த்வனியைக் கேட்டபோதே ஸரண்யனுக்கேயன்றிக்கே, வழிப்போக்கரும் இரங்கவேண்டும்படி மிக்க ஆர்த்தியை உடைத்தாயிருக்கை. (மஹாந்) ஸ்வரத்தாலே தோற்றுகிற ஆர்த்தியளவன்றிக்கே, ஆச்ரயத்தில் ஆர்த்தி அபரிச்சின்னையாயிருக்கை. ஆச்ரயம் ஆர்த்திக்கு அடைவென்கை. 'மஹாமநா:' என்னவுமாம். அதாவது — "वासुदेवः सर्वमिति"

வாளனுகையாவது— விலக்கவேண்டியதை விலக்கி, பற்றவேண்டியதை அடைவதற்கு வீணாகாத உபாயத்தை அறிகை. அதாவது—விலக்க வேண்டியவனான ராவணனுடைய தாழ்மையையும், பற்ற வேண்டிய பெருமாள் பெருமையையும் அறிகையும், அவனைவிட்ட பின்பே பிரானைப் பற்றவேணும் என்று நினைத்திருக்கையும், அவரையடைய அவர் திருவடிகளே வீணாகாத உபாயம் என்று நினைத்திருக்கையும் ஆகிய இவையே இவன் பெரும்பேரறிவாளன் என்பதைக் காட்டித்தருகின்றன.

(பெருத்த த்வனியோடே) த்வனிக்குப் பெருமையாவது—"மரங்களும் இரங்கும் வகை மணிவண்ணவோ! என்று கூவுமால்" [திருவாய்6-5-9] என்கிறபடியே த்வனியைக் கேட்டபோதே பற்றப்படும் அவனுக்கு மாத்திரமல்லாமல் உதாஸீனராயிருக்கவேண்டிய வழிப்போக்கர்களும் இரங்கவேண்டும்படி மிகுந்த வருத்தத்தை வெளிக்காட்டுவதாயிருக்கை. (பெரியோன்) த்வனியால் தோற்றுகிற வருத்தம் ஒரு சிறிதே என்னும்படி இவன் ஸ்வரூபத்தில் வருத்தம் மிகப்பெரிதாயிருக்கை. இவன் ஸ்வரூபத்தையும் வருத்தமென்னும் ஒரு ஸ்வபாவத்தையும் நிறுத்தால் வருத்தத்துக்கு ஸ்வரூபமெல்லாம் ஸமமாயிருக்கிறதென்னும்படி பெரிய வருத்தத்தை உடையவனாயிருக்கை. (பெரியோன்) பெரிய மனத்தையுடையவன் என்று பொருளாகவுமாம். அதாவது:— "வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ

(வாஸுதேவ: ஸர்வமிதி) என்கிறபடியே, பெருமாள் திருவடிகளே ஸர்வவித பந்துவாயிருக்கை. (ஸுக்ரீவம் தாம்ச்ச ஸம்ப்ரேக்ஷ்ய) "अस्मान् हन्तु न संशयः" (அஸ்மாந் ஹந்தும் ந ஸம்சய:) என்கிற பஹுராஜரையும், "सालानुद्यम्य शैलांश्च" (ஸாலாநுத்யம்ய சைலாம்ச்ச) என்று தன்னுடைய வதோத்யுக்தரான முதலிகளேயும் பஹுமானமாகப் பார்த்து. அதற்கடியென்னென்னில்: பெருமாள் பக்கல் பரிவர் தமக்கு உத்தேச்யராகையாலும், அவர்களே தமக்குப் புருஷகாரமாக வேண்டுகையாலும். ஆச்ரயிக்கிறவன் ஏதேனும் குற்றவாளனேயாகிலும், "ज्ञानी त्वात्मैव मे मतं" (ஜ்ஞாநீ த்வாத்மைவ மேமதம்) என்று தனக்குத் தாரகராகச் சொல்லுமவர்களுடைய வார்த்தையை மறுக்கமாட்டாமையாலே நின்றவிடத்திலே நின்று வார்த்தை சொன்னான்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 10-வது ச்லோகம்

रावणो नाम दुर्वृत्तो राक्षसो राक्षसेश्वरः ।
तस्याहमनुजो भ्राता विभीषण इति श्रुतः ॥

ராவணோ நாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேச்வர:
தஸ்யாஹமநுஜோ ப்ராதா விபீஷண இதி ச்ருத: ॥

மஹாத்மா ஸுதுர்லப:" [கீதை 7-19] [வாஸுதேவனே எனக்கு எல்லாம் என்னுமவன் பெரியோனாவான்; மிகவும் கிடைத்ததற்கரியவனவன்.] என்கிறபடியே ராமபிரானுடைய திருவடிகளே, தான் கைவிட்ட எல்லா உறவினருமாயிருக்கையாகிற மனப்பெருமையை உடையவன். (சுக்கிரீவனேயும் அவர்களேயும் நன்கு பார்த்து) "நம்மைக் கொல்லவே வந்திருக்கிறான் ஐயமில்லை" [ரா-யு 17-5] என்கிற சுக்கிரீவனேயும், "மரங்களேயும் மலேகளேயும் தூக்கியெடுத்து" [ரா-யு 17-6] என்று தன்னைக் கொல்ல முயன்ற வானரரையும் கௌரவத்துடன் பார்த்து. இப்படிப் பார்க்கைக்குக் காரணமென்னென்னில், ராமபிரானிடம் பரிவுள்ளவர்கள் தமக்கு மிகவும் வேண்டியவர்களாகையாலும், அவர்களே தமக்குப் பிரானிடம் புருஷகாரமாகவேண்டுமாகையாலும், பஹுமானமாகப் பார்த்தான். (ஆகாயத்தில் நின்றே) தன்னடியான் எப்படிப்பட்ட குற்றத்தை உடையனேயாயினும் "ஞானியோவெனில் எனக்கே தாரகன் என்பது என்முடிவு" [கீதை7-18] என்று அவனே தனக்கு தாரகராகச் சொல்லுமவர்களுடைய வார்த்தையை மறுக்க முடியாமையாலே, ராமபிரானே அணுகாமல் ஆகாயத்தில் நின்ற இடத்திலிருந்தே வார்த்தை சொன்னான்.

பதவுரை:— துர்வ்ருத்த:— கெட்ட நடத்தையுடையவனாய், ராக்ஷஸேச்வர:—அரக்கர்களுக்கு அரசனான, ராக்ஷஸ:—அரக்கன், ராவண: நாம—ராவணன் என்று பிரசித்திபெற்றவன்; அஹம்—நான், தஸ்ய—அவனுக்கு, அநுஜ:—பின்பிறந்தவனாய், விபீஷண இதி ச்ருத:—விபீஷணன் என்று பெயர்பெற்றவனான, ப்ராதா—தம்பியாவேன்.

அவதாரிகை:— அநந்தரம் ஶரணாகதிக்கு அங்கமான ஸ்வநிகர்ஷத்தையும், பரிக்ரஹபரித்யாகத்தையும் சொல்லி சரணம் புகுகிறான் மேல் ஐந்து ச்லோகத்தாலே. இதில் முதல் ச்லோ

அவதாரிகை:— இனிமேல்,

"ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் ।
ரக்ஷிஷ்யதீதி விச்வாஸோ கோப்த்ருத்வவரணம் ததா ॥
ஆத்மநிக்ஷேபகார்ப்பண்யே ஷட்விதா ஶரணாகதி: ॥"

[1. ஆநுகூல்யஸங்கல்பம், 2. ப்ராதிகூல்யத்தை விலக்குவது, 3. 'ரக்ஷிப்பான்' என்னும் விச்வாஸம், 4. 'ரக்ஷகனுவாயாக' என்று வரிப்பது 5. ஆத்மாவை ஸமர்ப்பிப்பது, 6. தன் தாழ்வை அனுஸந்திப்பது என்று சரணாகதியானது ஆறுவகைப்பட்டது.] என்று சாஸ்திரங்களில் சரணாகதனுக்கு ஸம்பாவிதஸ்வபாவமாகச் சொல்லப்பட்ட தன் தாழ்வையும்,

"பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந் ।
ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச க்ருஹாணி ச ॥
ஸர்வதர்மாம்ச்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ச்ச ஸாக்ஷராந் ।
லோகவிக்ராந்தசரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ ॥"

[பிரானே! தந்தை, தாய், பெண்டுபிள்ளைகள் உறவினர், நண்பர், ஆசாரியர்கள், ரத்தினங்கள், தனதானியங்கள், வயல்கள், வீடுகள், எல்லா உபாயங்கள், கைவல்யமுள்ளிட்ட எல்லா உபேயங்கள், ஆகிய அனைத்தையும் வாஸனையோடு விட்டு, திருவுலகளந்தருளிய உன் திருவடிகளை சரணமடைந்தேன்] என்று சொல்லப்படுகிற உறவினர் முதலானோரைக் கைவிடுவதையும் சொல்லி, விபீஷணாழ்வான் ராமபிரானைச் சரணம் பற்றுகிறான் மேல் ஐந்து ச்லோகங்களாலே. இதில் இந்த ச்லோகத்தாலே

கத்தால், ப்ரதிகூலஶேஷத்வத்தால் வந்த நிகர்ஷமும், ப்ரதிகூலனோடு அவர்ஜநீயஸம்பந்தத்தாலுண்டான நிகர்ஷமும் ஸ்வரூபேண வந்த நிகர்ஷமும் உண்டு என்கிறான்.

வ்யா:—(ராவண: நாம) **"ராவயதி இதி"** ஸர்வலோகங்களும் கூப்பிடும்படி ஹிம்ஸகனாகையாலே ராவணனென்று குண நாமம். **(நாம)** என்று ப்ரஸித்தியாய், பரகோஷ்டியிலும் ஹிம்ஸகன் என்னுமிடம் ப்ரஸித்தமன்றோ என்கை. (துர்வ்ருத்த:) வ்ருத்தமாவது—ஆசாரம்; துர்வ்ருத்தமாவது—ஆஹார நித்ரா பயமைதுநாதிகளில் வரையாமை. **"निहीनाचारोऽहं नृपशुः"** (நிஹீநாசாரோஹம் ந்ருபஶு:) என்றார் ஆளவந்தார்; **"बुद्धिराचारवर्जिता"** **(புத்திராசார வர்ஜிதா)** என்றாள் பிராட்டி. (ராக்ஷஸ:) உக்தமான தோஷங்கள் ஜாதிப்ரயுக்தமாகையாலே தோஷமென்று சொல்லி நிவர்த்திப்பிக்கவொண்ணாதொழிகை. அபிஜாதனுக்கு உண்டான வ்ருத்தஹானி ஜன்மத்தை உணர்த்தி நிவர்த்திப்பிக்கலாம். நிஹீந

எதிரியின் ஆளாயிருந்ததால் வந்த தாழ்வும், எதிரியோடு விடவொண்ணாத (தம்பியெனும்) உறவிருந்ததால் வந்த தாழ்வும், தனக்கே இயற்கையாயுள்ள தாழ்வும் உண்டு என்கிறான்.

வ்யா:—(ராவணனென்பான்) "ராவயதி இதி ராவண:" [(அனைத்துலகையும்) அழச்செய்கிறானாகையால் ராவணனாகிறான்] என்கிற வ்யுத்பத்தியின்படியே எல்லாவுலகமும் கதறியழும்படி அவர்களை நலியுமவனாகையாலே ராவணனென்று குணத்தால் வந்த பெயர். (என்பான்) என்று ப்ரஸித்தியைச் சொல்லுவதாய், எதிரிகள் குழுவிலும் 'பிறரை நலியுமவன்' என்பது ப்ரஸித்தமன்றோ என்கை. (துர்வ்ருத்தன்) வ்ருத்தமாவது,—ஆசாரம்; துர்வ்ருத்தமாவது,—ஆஹாரம், தூக்கம், பயம், மைதுநம் (புணர்ச்சி) முதலிய சேதனகாரியங்களில் அறத்துக்குக் கட்டுப்படாமலிருக்கை. 'தாழ்ந்த ஆசாரத்தையுடையவனாய், மனிதப்பசுவாயிருப்பவன் நான்'' [ஸ்தோ-ர] என்றார் ஆளவந்தார். "உன் அறிவு ஆசாரமற்றதாயிருக்கிறது' [ரா-ஸு 21-9] என்றாள் பிராட்டி. (அரக்கன்) நான் எனக்குச்சொன்ன தோஷங்கள் எங்கள் ஜாதியினாலேயே ஏற்படுமவையாகையால். 'இது தோஷம்' என்று உபதேசித்துப் போக்க முடியாதவை. நற்குடிப்பிறந்தவனுக்கு, அவனுக்குண்டான நடத்தைக் கேட்டை எடுத்துக்காட்டி அதைப் போக்கலாம். தாழ்குலத்தவனுக்கு

ஜாதிக்கு அது குலதர்மமாகையாலே அபரிஹரணீயமிறே. (ராக்ஷஸேச்வர:) ஸ்வதந்த்ரனாகையாலே ஒருத்தன் ஹிதம் சொன்னால் செவிதாழ்க்குமவனல்லன். ஸஜாதியர் பண்ணும் பாபத்துக்கும் ப்ரவர்த்தகனென்றுமாம். வழியடித்து மூலையடியே நடப்பார்க்கெல்லாம் ஒதுங்க நிழலாயிருப்பவன் என்கை.

அத்தால் உனக்கென்? என்கிற சங்கையிலே சொல்லுகிறது உத்தரார்த்தம்,— (தஸ்யாஹம்) "ஶேஷ ஷஷ்டி" அவனுக்கு அதிஶயத்தை விளக்கையிறே ஶேஷபூதனுக்கு ஸ்வரூபம். "राज्यञ्चाहञ्च रामस्य" (ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய) என்று ஸ்வரூபப்ராப்தமான ஶேஷத்வத்தை ராவணன்பக்கல் பண்ணிப்போந்தேன். (அநுஜோ ப்ராதா) அவனாலே தூஷிதமான குடலிலே கிடந்தானொருவன். "भ्राता स्वा मूर्तिरात्मनः" (ப்ராதா ஸ்வா மூர்த்திராத்மந:) என்னும்படி சரீரம்போலே அவனுடைய அநீதிக்கெல்லாம் உபகரணபூதனென்கை.

நடத்தைக்கேடே குலவொழுக்கமாகையாலே போக்கமுடியாதன்றோ. (அரக்கர் தலைவன்) சுதந்திர புருஷனாகையாலே ஒருவன் நன்மை சொன்னாலும் காதுகொடுத்துக் கேட்கமாட்டாதவன். அன்றிக்கே, (அரக்கரை நியமிப்பவன்) என்று, மற்ற அரக்கர்கள் செய்யும் பாபத்துக்கும் இவனே தூண்டுகோலாயிருப்பவன் என்பதாகவும் கொள்ளலாம். ஈச்வரன்-நியமிப்பவன். வழிப்பறிக் கொள்ளையடித்துக குறுக்குவழியிலே நடப்பார்க்கெல்லாம் அண்டுவதற்கு இடமாயிருப்பவன் என்றபடி.

அவன் தாழ்ந்தவனாயிருப்பதால் உனக்கென்ன? என்கிற ஸந்தேஹத்திற்கு பதிலைச் சொல்லுகிறது சுலோகத்தின் பிற்பகுதி: (அவனுக்கு நான்) ஆறும் வேற்றுமை 'சேஷன்' என்னும் பொருளிலே பிரயோகிக்கப்பட்டுள்ளது. ஸ்வாமிக்குச் சிறப்பை உண்டுபண்ணுவதன்றோ சேஷபூதனுக்கு இயற்கை. "ராஜ்யமும் நானும் ராமனுக்கே" [ரா-அ 82-12] என்று ஸ்வரூபத்துக்குத் தகுந்ததான பகவச்சேஷத்வத்தை மாறுபடுத்தி ராவணனிடம் சேஷவ்ருத்தி செய்து போந்தேன். (தம்பி) அவனாலே தோஷமடைந்த வயிற்றிலே கிடந்தவன் நான். "ஸஹோதரன் தன் மற்றொரு மூர்த்தியாவான்" [ ] என்னும்படி சரீரம்போலே அவனுடைய அக்கிரமச்செயல்களுக்கெல்லாம் உதவிசெய்பவனாயிருந்தேன்.

(விபீஷண இதி ச்ருத:) ராவணஸம்ஸர்க்கத்தாலே வந்த தோஷத்தளவன்றிக்கே, "விவிதம் பீஷயதீதி விபீஷண:" என்கிறபடியே பஹுப்ரகார பயங்கரனுக லோகப்ரஸித்தன். அவனுக்குத் தன்னுல் வந்த தோஷமே உள்ளது; ஏனக்கு ஸ்வதோஷத்தளவன்றிக்கே அவனேட்டை ஸம்ஸர்க்கத்தால் வந்த தோஷமும் உண்டென்கை. "विभीषणस्तु धर्मात्मा" (விபீஷணஸ்து தர்மாத்மா) என்று லோகப்ரஸித்தனுயிருக்கச் செய்தேயும் தன்னைத்தான் அநுஸந்தித்தபடியிறே.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம், 11-வது ச்லோகம்

तेन सीता जनस्थानाद्धृता हत्वा जटायुषम् ।
रुद्धा च विवशा दीना राक्षसीभिस्सुरक्षिता ॥

தேந ஸீதா ஜநஸ்தாநாத்த்ருதா ஹத்வா ஜடாயுஷம் ।
ருத்தா ச விவஶா தீநா ராக்ஷஸீபிஸ் ஸுரக்ஷிதா ॥

பதவுரை:—தேந—அந்த ராவணனுலே, **ஜடாயுஷம்**-ஜடாயுவை, **ஹத்வா**-கொன்று, **ஜநஸ்தாநாத்** — ஜனஸ்தானத்திலிருந்து, **ஹ்ருதா**—அபகரிக்கப்பட்ட, **ஸீதா** — ஸீதாதேவி, **ராக்ஷஸீபி:**—ராக்ஷஸிகளால், **ஸுரக்ஷிதா**—நன்ருய் ரக்ஷிக்கப்பட்டவளாய், **விவஶா**-பராதீனையாய், **தீநா**-வருந்தத்தக்கவளாய், **ருத்தா**—(அசோகவனத்தில்) சிறையிடப்பட்டாள்.

(விபீஷணன் என்று பெயர் பெற்றவன்) ராவணனேடு சேர்த்தியால் வந்த தோஷம் மாத்திரமன்றிக்கே, "பலவிதமாக பயமுறுத்துகிறுனுகையாலே வீபீஷணனுகிறுன்" என்கிற வ்யுத்பத்தியின்படியே பலவிதமாக பயமுறுத்துமவனுக உலகில் பெயர்பெற்றிருப்பவன். ராவணனுக்குத் தன்னுல் வந்த தோஷம் ஒன்றே உள்ளது. எனக்கு என்னுடைய தோஷத்தோடன்றியில் அவனேடு சேர்த்தியால் வந்த தோஷமும் உண்டு என்றபடி. "விபீஷணனேவெனில் அறவழி நடப்பவன்; அரக்கரொழுக்கத்தையுடையவனல்லன்" [ரா-ஆ 1-24] என்று அறவழி நடப்பவனுக உலகில் பெயர்பெற்றவனுயிருந்தும் நைச்யாநுஸந்தானம் ஸ்வரூபப்ராப்தமாகையாலே, தன்னைத்தானே தாழ்த்தி அநுஸந்தித்துக் கொள்கிறுன்.

அவதாரிகை:—கீழ்ச்சொன்ன தோஷங்கள் ப்ராயச்சித்த ஸாத்யங்கள்; **"न क्षमामि"** (ந க்ஷமாமி) என்கிறபடியே துஷ் பரிஹ்ரமான பாகவதாபசாரமும் உண்டென்கிறான். "துர்வ் ருத்த:" என்று பிராட்டிபக்கல் பண்ணின அபசாரம் ப்ரஸ் துதமாகையாலே அத்தை விவரிக்கிறதாகவுமாம்.

வ்யா:— (தேந ஹ்ருதா) உக்தஸகலதோஷங்களுக்கும் ஆகரனாயிருந்துள்ளவனாலே. இவ்வதிக்ரமத்தில் இழியும் போதும் அப்படி பாபப்ரசுரனாகவேணுமிறே. (ஹ்ருதா) **"अनन्या राघवेणाहं"** (அநந்யா ராகவேணாஹம்) **"जलान्मत्स्या विवोद्धृतौ"** (ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ) என்று பிரியப்படாதவள் பிரிக்கப்பட்டாள். (ஸீதா ஹ்ருதா)

அவதாரிகை:—முன் ச்லோகத்திலே "துர்வ்ருத்த:" என்று தொடங்கிச் சொன்ன தோஷங்கள் பிராயச்சித்தங்களால் போக்கடிக்கக் கூடியவை; "மத்பக்தம் ச்வபசம் வாபி நிந்தாம் குர்வந்தி யே நரா: பத்ம கோடிசதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே" [வராஹபுராணம்] [பூமியே! நாய் மாமிசம் தின்னும் சண்டாளனாயினும், என் பக்தனை எந்த மனிதர்கள் நிந்திக்கின்றனரோ, அவர்களை நூறுகோடி பத்மகாலமானாலும் பொறுக்கிறேனல்லேன்] என்கிறபடியே பரிஹாரமில்லாத பாகவதாபசாரமும் உண்டு ராவணனுக்கு என்கிறான்; அன்றிக்கே, "துர்வ்ருத்த:" என்றவிடத்திலேயே பிராட்டி விஷயமாகப் பண்ணின அபசாரமும் ஸூசிக்கப் பட்டதாய், தொடங்கிய அதை இந்த ச்லோகத்தாலே விவரிப்பதாகவும் கொள்ளலாம்.

வ்யா—(அவனால் அபஹரிக்கப்பட்டாள்) முன் ச்லோகத்தில் சொல்லப்பட்ட எல்லாத்தீங்குகளுக்கும் இருப்பிடமாயிருப்பவனாலே அபஹரிக்கப்பட்டாள். பிராட்டியை அபஹரிப்பதாகிற இந்த அஸஹ்யாபசாரத்தில் கைவைக்கவேண்டுமாகில், அதற்கு முன்னமே கனக்கப் பாபத்தைச் செய்திருக்க வேண்டுமன்றோ. (ஹ்ருதா) "சூரியனை விட்டுப் பிரியாத ஒளிபோலே நான் ராமபிரானை விட்டுப்பிரியாமலிருப்பவள்" [ரா-ஸு 21-15] "உம்மைப்பிரிந்தால் சீதையும் இலளாவாள்; நானும் இலனாவேன்; ஒருகால் உயிர் வாழ்ந்தால், ஜலத்தை விட்டுப்பிரிந்த மீன்போலே ஒரு முஹூர்த்தநேரமே ஜீவிப்போம்" [ரா-அ 53-31] என்று பிரியமாட்டாதவள் பிரிக்கப்பட்டாள். (சீதை பிரிக்கப்பட்டாள்) "ஸீதா

கர்ப்பவாஸாதி க்லேசமுமின்றிக்கே பரமபதத்திலிருப்பில் ஸௌகுமார்யம் குலையாதபடி பிறந்த ஸுகுமாரியைப் பிரித்தான். (ஜநஸ்தாநாத் ஹ்ருதா) திருவயோத்யையிருப்பு சிறையென்னும்படி புஷ்பாபசயாதிபோகங்களுக்கு ஏகாந்த மான ஜநஸ்தானத்தில் நின்றும் ஹரிக்கப்பட்டாள். (ஹ்ருதா) **“ஏகமவதீ:”** **(ஏகமவதீ:)** என்று வீதராகர்க்கும் அஸஹ்யமானவற்றையிறே செய்தது. உஷையையும் அநிருத் தாழ்வானையும் கூட்டிச் சிறையிலே வைத்தாப்போலே இருவரையும் கூட்டிவைத்தாலுமாமிறே. ராஜகுமாரர்

லாங்கலபத்ததி:” என்கிறபடியே கலப்பையுழுதவழியிலே தோன்றிய வளாகையாலே ‘சீதை’ என்று அவ்வழியின் பெயரையே இடப்பெற்ற வள் பிரிக்கப்பட்டாள்; அதாவது:— “பாதாருந்துதமேவ பங்கஜரஜ:” [அடித்தாமரை மகரந்தத்தூள் திருவடியை வருத்துவதாகிறது] என்று தொடங்கி பட்டர் ஸ்ரீகுணரத்னகோசத்தில் அருளிச்செய்தபடியே மிக மென்மையையுடைய இப்பிராட்டி கர்ப்பவாஸம் முதலான துன்பங்களைப் பொறுக்கமாட்டாள் என்று கருதிய பகவான், பரமபதத்திலிருந்த போதுள்ள மென்மை சிறிதும் குன்றாதபடி அயோநிஜையாகப் பிறக்கும் படி ஸங்கல்பித்தான்; அப்படிப்பட்ட மென்மையையுடைய பிராட்டியைப் பிரித்தான் படுபாவி. (ஜநஸ்தானத்திலிருந்து அபஹரிக்கப்பட்டாள்) திருவயோத்தியில் அந்த:புரத்தில் “அஸூர்யம்பச்யா ராஜதாரா:” [சூரியனைக் காணமாட்டார்கள் அரண்மனைப் பெண்டிர்] என்கிறபடியே யிருந்த இருப்பு அசோகவனிகையில் சிறையோடொத்தது என்னும்படி, பூப்பறித்தல், நதிகளில் குடைந்தாடுதல் முதலான இயற்கையின்பங்களை அனுபவிப்பதற்குரிய போகஸ்தானமான ஜனஸ்தானத்திலிருந்துஅபஹரிக் கப்பட்டாள்.(அபஹரிக்கப்பட்டாள்)**“மாநிஷாத ப்ரதிஷ்டாம் த்வமகம: சாச் வதீ: ஸமா:யத் க்ரௌஞ்சமிதுநாதேகமவதீ: காமமோஹிதம்”**[ரா-பா 2-15] [வேடனே! நீ நெடுங்காலம் புகழை இழந்துவிடுவாய்;ஏனெனில்: காமத்தால் மயங்கியிருந்த ஆண்பெண் க்ரௌஞ்சப்பறவைகளில் ஒன்றைக் கொன்று யன்றோ.] என்ற வால்மீகிபகவானைப்போன்ற வைராக்ய நிஷ்டர்க் கும் பொறுக்கவொண்ணாததான மிதுனத்தைப்பிரிப்பதாகிற செயலை யன்றோ செய்தது. பாணாஸுரன் கிருஷ்ணனுடைய பேரனான அநிருத் தனையும், அவன் காதலியான தன்பெண் உஷையையும் ஒன்றாகச் சிறை வைத்ததுபோலே ராமபிரானையும், பிராட்டியையும் ஒன்றாகச் சிறை வைத்திருந்தாலும் பொறுக்கலாமே; ராமலக்ஷ்மணர்களை மாயமானான

களை மாரீசமாயையாலே பிரித்திறே நலிந்தது. (ஜடாயுஷம் ஹத்வா ஹ்ருதா) "**मम प्राणा हि**" (மம ப்ராணுஹி) "**ज्ञानी त्वात्मैव मे मतं**" (**ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்**) என்னும்படி அபிமதரான பெரியஉடையாரை, மீட்கலாம்படி சிறை செய்யுமளவன்றிக்கே, அங்வயவிநாஶத்தைப் பண்ணியிறே பிரித்தது. சக்ரவர்த்தித்திருமகனேடே ஆழவிருந்த பகை கொள்ளுகையாலே, ஸபரிகரனுகத்தான் நசிக்கும்படி சூழ்த்துக்கொண்டான் என்கை.

(ருத்தாச) இப்படி பிரித்தாலும் அநுதாபம் பிறந்து மீளவிடலாமிறே. துஷ்ப்ராபமான அசோகவனிகையிலே மூச்சுவிடவொண்ணுதபடி ருத்தையாளுள். (விவஶா) "இட்ட காலிட்டகைகளாய்" என்னும்படி, பெருமாளைப் பிரிந்த இழவெல்லாம் தோற்றப் பரவசையாம்படியிருந்தாள்.

மாரீசனின் மாயையாலே பிராட்டியை விட்டுப்பிரித்தன்றோ துன்புறுத்திஞன். (ஜடாயுவைக்கொன்று அபஹரிக்கப்பட்டாள்) "பாண்டவர்கள் எனக்கு உயிரன்றோ' [பார-உத் 91-27] "ஞானியோவெனில் எனக்கே தாரகன் என்பது என் முடிவு" [கீதை 7-18] என்னும்படி தமக்கு இனியவராய், தான் பெரிய தந்தையாக அபிமானித்திருக்கையாலே 'பெரியவுடையார்' என்று ஆசாரியர்களால் வழங்கப்படும் ஜடாயுவை, பிராட்டியைப்போலே மறுபடியும் மீட்கலாம்படி சிறைசெய்துவிடாமல், தேஹயோகத்தை அழித்தன்றோ பிரித்தது. இப்படியாக சக்கரவர்த்தித் திருமகனோடு மிக ஆழ்ந்த பகையை ஏற்படுத்திக்கொள்ளுகையாலே "ஸமித்ரஜ்ஞாதி பாந்தவம்" [ரா-ஆ] [நட்பும், கிளையும், உறவும் சூழ்ந்த ராவணனைக் கொல்லுவேன்] என்கிறபடியே நண்பர் தாயாதிகள் மற்ற உறவினர் ஆகிய அனைவரோடும் தான் அழியும்படியான ஆபத்தை வரவழைத்துக்கொண்டான் என்றபடி.

(சிறைவைக்கவும் பட்டாள்) இப்படிப் பிரித்தாலும், சிறிதுகாலத்தில் அனுதாபம் உண்டாகி மறுபடியும் ராமபிரானிடம் விடலாமன்றோ; அப்படி செய்யாமல், அணுகவரிய அசோகவனத்திலே, பிறரறியாமல் மூச்சும் விடவொண்ணுதபடி சிறையிலும் வைக்கப்பட்டாள். (பரவசையாய்) "இட்டகாலிட்டகைகளாய்" [திருவாய் 7-2-4] என்னும்படி, ராமபிரானைப் பிரிந்த துன்பமெல்லாம் தோற்றும்படி பிறரிட்ட வழக்கா

(தீநா) இவ்வளவில் நமக்கு ஆச்வாஸகர் ஆரோவென்று தன்னுடைய பலஹானிதோற்ற இருந்தாள். பெருமாளோட்டை போகபரம்பரையாலே ஹ்ருஷ்டையாயிருக்குமவளை இவ்விருப்பிருக்கும்படி பண்ணினான் என்கை. (ராக்ஷஸீபிஸ் ஸுரக்ஷிதா) விக்ருதபயங்கரவேஷவசோவ்ருத்தைகளான ஏகாக்ஷியேககர்ணீப்ரப்ருதிகளான ராக்ஷஸிகளாலே ஆச்வாஸகரான திருவடிக்கும் செல்லவொண்ணாதபடி நெருக்குண்டாள்.

ஆக, இரண்டு ச்லோகத்தாலும் ஸகலவாங்மநஸாகோசரமான மஹாபாபங்களைப் பண்ணினவர்களுக்கும் பகவத்ப்ராப்தியிலே அதிகாரமுண்டென்னுமிடம் அகிலவேதார்த்ததர்ஶியான ஸ்ரீவால்மீகிபகவானாலே ஸூசிதமாயிற்று. "शरणं त्वां प्रपन्नानां तवास्मीति च याचतां। प्रसादं पितृहन्तॄणामपि कुर्वन्ति साधवः" (ஶரணம் த்வாம் ப்ரபந்நாநாம் தவாஸ்மீதி ச

யிருந்தாள். (வருந்துபவளாய்) இந்த தசையிலே நமக்கு உயிர்கொடுப்பார் யாரோ? என்று வருந்துமவளாய் தன்னுடைய பலக்குறைவு அனைவர்க்கும் தெரியும்படியிருக்கையாலே வருந்தத்தக்கவளாயிருந்தாள். 'தேவஜுஷ்டா' என்கிறபடியே ஸ்ரீராமபிரானோடு கூடியிருந்து அனுபவிக்கும் பேரின்ப வெள்ளத்தாலே இன்புற்றிருப்பவளைத் துன்புற்றிருக்கும்படி செய்தான் என்றபடி. (ராக்ஷஸிகளாலே நன்கு ரக்ஷிக்கப்பட்டவளாய்) விகாரமாய் பயங்கரமான உருவத்தையும், சொல்லையும், நடத்தையையுமுடையவர்களான ஏகாக்ஷி, ஏககர்ணி முதலான அரக்கிகளாலே அநுகூலனான அனுமனுக்கும் பிராட்டியைக் கண்டபின்பும் நெடுநேரம் அணுகவொண்ணாதபடி நன்கு காவலில் வைக்கப்பட்டாள்.

ஆக, இந்த ச்லோகத்தாலும், மூன்ச்லோகத்தாலும் ஸகலாத்மாக்களுடைய வாங்மனஸ்ஸுக்களுக்கும் எட்டாத பெரும்பாபங்களைச் செய்த ராவணாதியர்க்கும் பகவானை அடைவதிலே அதிகாரமுண்டு என்னும் விஷயம் மறையனைத்தின் பொருளுணர்ந்த ஸ்ரீவால்மீகி பகவானாலே காட்டப்பட்டதாயிற்று. இவ்விஷயம் கீழ்க்கண்ட ப்ரமாணங்களாலும் தெளிவாகிறது:—"உன்னை சரணமடைந்தவர்களுக்கும், 'உனக்குரியேன்' என்று யாசிப்பார்க்கும், அவர்கள் தகப்பனைக் கொன்றவராயிருந்த போதிலும், நல்லோர்கள் அருள்புரிகிறார்கள்" [விஷ்ணுதர்மம் 106-53]

யாசதாம் ப்ரஸாதம் பித்ருஹந்த்ருணமபி குர்வந்தி ஸாதவ:) "कुयोनिष्वपि सञ्जातो यस्सकृच्छरणङ्गतः। तं मातापितृहन्तारमपि पाति भवार्तिहा॥" (குயோநிஷ்வபி ஸஞ்ஜாதோ யஸ்ஸக்ருச்சரணங் கத:। தம் மாதா பித்ருஹந்தாரமபி பாதி பவார்த்திஹா॥) "दुराचारोपि सर्वाशी कृतघ्नो नास्तिकः पुरा। समाश्रयेदादिदेवं श्रद्धया शरणं यदि। निर्दोषं विद्धि तं जन्तुं प्रभावात्परमात्मनः॥" (துராசாரோபி ஸர்வாசீ க்ருதக்னோ நாஸ்திக: புரா। ஸமாச்ரயேதாதிதேவம் ச்ரத்தயா ^ஶ^ரணம் யதி। நிர்த்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந:) "तस्मादपि वध्यं प्रपन्नं न प्रतिप्रयच्छन्ति" (தஸ்மாதபி வத்யம் ப்ரபந்நம் ந ப்ரதி ப்ரயச்சந்தி)

"ஒருகால் சரணமடைந்தவன் தாழ்ந்த யோனிகளில் பிறந்தவனாயினும், தாய்தந்தையரைக் கொன்றவனாயினும், பிறவியென்னும் நோய்க்கு மருந்து வாய் நின்ற மணிவண்ணன் அவனைக்காப்பாற்றுகிறான்" [ஸநத்குமார ஸம்ஹிதை] *"அநாதிகாலமாக ஒருவன் கெட்ட ஒழுக்கமுள்ளவனாகவும், எதையும் சாப்பிடுபவனாகவும், செய்ந்நன்றி மறந்தவனாகவும், நாஸ்திகனாகவும் இருந்தபோதிலும், ஆதிதேவனாகிற பகவானை ச்ரத்தையுடன் சரணமடைவானாகில், அந்த மனிதனை பரமாத்விணுடைய மஹிமையினாலே தோஷமற்றவனாக அறிவாயாக"* [ஸாத்வதஸம்ஹிதை 16-23].

"தேவா வை யஜ்ஞாத் ருத்ரமந்தராயந் ஸ ஆதித்யாநங்வாக்ரமத
தே த்விதைவத்யாந் ப்ராபத்யந்த தாந் ந ப்ரதிப்ராயச்சந்
தஸ்மாதபி வத்யம் ப்ரபந்நம் ந ப்ரதிப்ரயச்சந்தி"

[யஜுஸ் ஸம்ஹிதை 6-5-20]

[தேவர்கள் யஜ்ஞத்தில் உருத்திரனுக்கு ஹவிர்ப்பாகம் கொடுக்க மறுத்தனர்; அந்த உருத்திரன் தேவர்களைக் கொல்லத்தொடங்கினார். அவர்கள் அச்விநீதேவர்களிடம் சரணமடைந்தனர்; அவர்களை அவ்வச்விநீதேவர்கள் காட்டிக்கொடுக்கவில்லை. ஆகையால் கொல்லத்தகுந்தவனாயினும், சரண மடைந்தவனைக் காட்டிக்கொடுப்பதில்லை.

"தேவேந த்வஷ்ட்ரா ஸோமம் பிபேத்யாஹ।
த்வஷ்டா வை பசூநாம் மிதுநாநாம் ரூபக்ருத்
ரூபமேவ ப^ஶு^ஷு ததாதி।
தேவா வை த்வஷ்டாரமஜிகாம்ஸந்। ஸ பத்நீ: ப்ராபத்யத।

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 12-வது ச்லோகம்

तमहं हेतुभिर्वाक्यैर्विविधैश्च न्यदर्शयम् ।
साधु निर्यात्यतां सीता रामायेति पुनः पुनः ॥

தமஹம் ஹேதுபிர் வாக்யைர் விவிதைச்ச ந்யதர்மயம் ।
ஸாது நிர்யாத்யதாம் ஸீதா ராமயேதி புந: புந: ॥

பதவுரை:—அஹம்-*நான்*, தம்-*அவனைக்குறித்து*, "ஸீதா-*ஸீதாபிராட்டியானவள்*, ராமாய-*ஸ்ரீராமபிரானிடம்*, ஸாது-*நன்றாக*, நிர்யாத்யதாம்—*கொடுக்கப்படும்;*" இதி—*என்று*, விவிதை:— *பலவிதமான*, வாக்யை: — *வசனங்களாலும்*, ஹேதுபி: ச—*காரணங்களாலும்*, புந: புந:-*அடிக்கடி*, ந்யதர்மயம்-*அறிவித்தேன்*.

அவதாரிகை:-*இத்தால் உனக்கென்னென்னில்: இவன் பண்ணின அபராதத்தைக்கண்டால் நெருப்புப்பட்ட அகத்தில் நின்றும் புறப்படுமாபோலே அப்போதே புறப்பட ப்ராப்தமாயிருக்க, அவனுக்கும் ஹிதஞ்சொல்லி மீட்டு உஜ்ஜீவிப்பிக்கவிருந்த பாபிஷ்டன் நான் என்கிறான்.*

தம் ந ப்ரதிப்ராயச்சந் । தஸ்மாதபி வத்யம் ப்ரபந்நம் ந ப்ரதிப்ரயச்சந்தி ॥" *[யஜுஸ்ஸம்ஹிதை 6-5-29]*

[தேவனுகிற த்வஷ்டா (ஒரு யாகத்தில்) ஸோமபானம் செய்வேன் என்றுரைத்தான். (அதற்காக) அவன் ஆண் பெண் பசுக்களாக ரூபத்தை தரித்து ஸோமபானம் செய்ய முயற்சித்தான். (அதைக்கண்ட) தேவதைகள் த்வஷ்டாவைக் கொல்ல விரும்பினர். (அதை அறிந்த) த்வஷ்டா தேவ பத்தினிகளை சரணமடைந்தான். அப்பத்தினிகள் அவனை (தேவர்களிடம் காட்டிக்கொடுக்கவில்லை; ஆகையால், கொல்லத்தகுந்தவனுயிருந்தபோதிலும் சரணமடைந்தவனைக் காட்டிக்கொடுப்பதில்லை.]

அவதாரிகை:—ராவணன் இப்படித் தியவனுயிருப்பதால் உனக்கென்ன குறையென்னில்: இவன் பண்ணின அபராதத்தைக் கண்டகணத்திலேயே தீப்பிடித்த வீட்டிலிருந்து பதறி ஓடுவதுபோலே அவனைவிட்டு ஓடவேண்டியிருக்க, கூடப்பிறந்த பாசத்தாலே நெடுங்காலம் அவனோடு கூடியிருந்து அவனுக்கு நன்மை சொல்லித்திருத்தி உய்விக்கப்பார்த்த பெரும்பாவியேன் அடியேன் என்கிருன் இந்த ச்லோகத்தில்.

வ்யா:—(தம்) முதல் ச்லோகத்திலே தச்சேஷத்வத்தால் வந்த தோஷமிறே சொல்லிற்று; அவ்வளவன்றே இது; "सहस्रन्तु पितुर्माता गौरवेणातिरिच्यते" (ஸஹஸ்ரந்து பிதுர் மாதா கௌரவேணுதிரிச்யதே) என்று ஸர்வேச்வரனிற்காட்டில் ஸஹஸ்ரகுணம் அநுவர்த்தநீயையாய், ஸர்வலோகஜநநியான பிராட்டி திறத்திலும், "स महात्मा सुदुर्लभः" (ஸ மஹாத்மா ஸுதுர்லப:) "द्वितीयं मेऽन्तरात्मानं" (த்விதீயம் மேந்தராத்மாநம்) என்று தம் திருவுள்ளத்திலே நினைத்திருக்கும் பெரியவுடையார் திறத்திலும் அபசாரபரம்பரைகளைப்பண்ணினவனை. (அஹம்) இப்படி பாபிஷ்டன் என்னுமிடத்தை அறிந்துவைத்து அவனை அநாதரியாதே ஹிதம் சொல்லியிருந்த நான். (விவிதைர் வாக்யை:) ஸாமபேதாதி முகத்தாலே நாநாவித வாக்யங்களாலும்.

வ்யா:—(அவனை) முன் ச்லோகத்திற்சொல்லியபடியே, பிராட்டி, ஜடாயு ஆகிய இருவர் விஷயத்திலும் அபசாரப்பட்ட அவனை. "ராவணோ நாம துர்வ்ருத்த:" என்று விபீஷணுழ்வான் பேசத்தொடங்கிய முதல் ச்லோக்த்திலே, "தஸ்யாஹமநுஜோ ப்ராதா' [அந்த ராவணனுக்கு நான் தம்பி]என்று அவனுக்கு சேஷபூதனுயிருந்ததால் உண்டான தோஷமன்றோ சொல்லிற்று. இரண்டாவது ச்லோகத்தில் சொல்லிய அபசாரம் அது போல் சிறியதன்றே. ராவணனுடைய அவ்வபசாரத்தில் தனக்கும் பங்குண்டு என்றிருக்கிறுன். (அவனை) "தந்தையைக் காட்டிலும் தாய் ஆயிரம்மடங்கு பெருமையில் விஞ்சியவள்" [ ] என்று ஸர்வேச்வரனைக்காட்டிலும் ஆயிரம்மடங்கு கௌரவிக்கப்படவேண்டியவளாய், அனைத்துலகுக்கும் தாயான பிராட்டி விஷயத்திலும், "(வாஸுதேவனே எல்லாமென்னும்) அந்த மஹாபுருஷன் மிகவும் கிடைத்தற்கரியவன்" [கீதை 7-19] "எனது இரண்டாவது உயிராயிருப்பவனை" [ரா-அ 4-43] என்று தம் திருவுள்ளத்திலே நினைத்திருக்கும் ஜடாயு விஷயத்திலும், அபராதத்தொடர்களைப் பண்ணினவனை. (நான்) இப்படிப் பெரும்பாவி என்று அறிந்ததும், தமையனென்னும் பாசத்தாலே, அவனை அநாதரிக்காமல் நன்மை சொல்லிக்கொண்டு அவனுடனிருந்த நான். (பலவிதமான வாக்கியங்களாலே) ஸாமம் (நல்லுபதேசங்களைச்செய்தல்) பேதம் (பயமுறுத்தல்), தாநம் (விரும்பியபொருளை அளித்தல்), தண்டம் (தண்டித்தல்) என்னும் நாலுவிதமான உபாயத்தையும் உள்ளடக்கியிருக்கையாலே பலவிதமாயிருக்கும் வாக்கியங்களாலும்.

(ஹேதுபிச்ச) அர்த்தத்துக்கு அநுரூபமாயிருந்துள்ள கர தூஷணகபந்த வாலி வதமுகமான நாநாவிதலிங்கங்களாலும். (ந்யதர்ஶயம்) அபோதயம். உறங்குமவனை உணர்த்துமா போலே உணர்த்திச்சொன்னேன்.

போதிதமான அர்த்தம் இன்னதென்கிறது மேல்,-(ஸாது நிர்யாத்யதாம்) நிர்யாதநமாகிறது ப்ரதாநம். **"निर्यातनं वितरणं स्पर्शनं प्रतिपादनं"** (நிர்யாதநம் விதரணம் ஸபர்ஶநம் ப்ரதிபாதநம்) என்னக்கடவதிறே. ஸாதுத்வமாவது-அநுதப்தனாய், ஆகிஞ்சந்யத்தைப் புரஸ்கரித்து ஶரணம் புக்குக் கொடுக்கை. (ஸீதா) அவனுடைமையை அவனுக்குக் கொடுக்கவெண்டியதொழிய நீ ஒன்றைக் கொடுக்கவேண்டுவதில்லை. தம்முடைமையைத் தமக்குக் கொடுத்தாலும், அபஹரித்த அம்ஶத்தைப்பொறுத்து இவனாலே பெற்றோம் என்னும் குணாதிகர் என்கை. தம்முடைமையை நம்மாலே

(காரணங்களாலும்) ஸாதிக்கவேண்டிய அர்த்தத்துக்குப் பொருந்திய வையான காரணங்களாலும்; கரன், தூஷணன், கபந்தன், வாலி ஆகிய மஹாபலசாலிகள் இராமபிரானால் கொல்லப்பட்டது முதலிய பலவிதமான அடையாளங்களாலும். (காட்டினேன்) அறிவித்தேன்; உறங்கினவனை உணர்த்துவதுபோலே உணர்த்திச்சொன்னேன்.

உணர்த்தப்பட்ட பொருள் என்ன என்று காட்டுகிறது மேலே: (நன்றாகக் கொடுக்கப்படட்டும்) 'நிர்யாதநம்' என்னும் சொல் 'கொடுத்தல்' என்னும் பொருளுடையது. "நிர்யாதநமென்பது கொடுத்தல், தொடுதல், ஒப்படைத்தல் என்னும் பொருள்களை உடையது" [ ] என்றல்லவோ நிகண்டுக்களில் சொல்லப்பட்டது. கொடுத்தலுக்கு நன்மையாவது:— திருடினதற்கு அநுதாபமுடையவனாய், வெறுமையை முன்னிட்டுக்கொண்டு சரணமடைந்து கொடுக்கை. ஸ்வாபதேசத்தில், ஆத்மாவானது பரமாத்மாவினிடம் ஸமப்பிர்க்கப்படும்போது மநோவாக்காயங்களாகிற மூன்றினாலும் சரணம் புகுந்து ஸமர்ப்பித்தல், ஸமர்ப்பணத்திற்கு நன்மையாகிறது. (சீதை) 'அநங்யா' என்கிறபடியே அவனுக்கே உரிய பொருளை அவனுக்குக் கொடுக்கிறாயேயொழிய, உன் பொருள் ஒன்றை நீ கொடுக்கவேண்டுவதில்லை. (சீதை கொடுக்கப்படட்டும்) தம் பொருளைத் தமக்குக் கொடுத்தாலும், முன் திருடிய நிலையை நினைத்து 'இவனாலே இப்பொருளைப் பெற்றோம்' என்று நினைக்கும் பெருங்குணவாளர் ராமபிரான் என்கை. தம் பொருளை நம்மாலே பெற்றதாக நினைத்திருந்தாலும், நாம் செய்த

பெற்றேரும் என்றிருந்தாலும் நம்முடைய அபராதத்தைப் பொறுக்கக்கூடுமோ? என்ன; (ராமாய)"स तं निपतितं भूमौ शरण्यः शरणागतम्। वधार्हमपि काकुत्स्थः कृपया पर्यपालयत्॥"(ஸ தம் நிபதிதம் பூமௌ "ரண்ய: "ரணாகதம்। வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்॥) என்கிறபடியே காகாபராதத்தைப் பொறுத்து ரக்ஷித்தவரன்றே. (இதி புந: புந:) அவனுக்கு அபேக்ஷிதமின்றிக்கேயிருக்கச்செய்தேயும் இவன் செய்யுமோ என்கிற நசையாலே பலகாலும் அறிவித்தேன். ஒருவன் ஸாபராதனுமாய், அபேக்ஷையுமின்றிக்கே, ஜ்யேஷ்டனுமாயிருக்குமவனுக்கு ஹிதஞ் சொல்லுகை யுக்தமோ? என்னில்: "आकेशग्रहणान्मित्र" (ஆகே "க்ரஹணாந் மித்ரம்) என்றும், "अपि सन्देष्टुं युक्तं" (அபி ஸந்தேஷ்டும் யுக்தம்) என்றும் துர்க்கதியைக் கண்டால் ஹிதஞ்சொல்லுகை யுக்தம்; ஆனாலும், ஒருகால் சொல்ல அமையும்; பலகால் சொன்னவிடம் அவனைத்திருத்தி உஜ்ஜீவிப்பிக்கையிலுண்டான நசையாலேயிறே.

குற்றத்தைப் பொருத்தருளுவரோ? என்னில்: (ராமபிரானுக்கு) "சரணமடையத் தக்வரான அந்த ராமபிரான், பூமியில் விழுந்தவனும், (அதனாலேயே) சரணமடைந்தவனுமான காகாசுரனை அவன் கொல்லத்தக்கவனாயினும் கருணையாலே. காப்பாற்றினார்" [ரா-ஸு 38-34] என்கிறபடியே உன்னிலும் கொடியவனான காகத்தின் குற்றத்தைப் பொறுத்துக் காத்தவரன்றோ. (என்று மறுபடியும் மறுபடியும் அறிவித்தேன்) அவன் கேளாவிடிலும், இவன் நம்வார்த்தைப்படி நடப்பானோ என்னும் நப்பாசையாலே பலதடவைகள் அறிவித்தேன். குற்றவாளனுமாய், சொற்கேளாதவனுமாய், தமயனுமாயிருப்பவனுக்கு ஒரு தம்பி நன்மை சொல்லுவது பொருந்துமோ? என்னில்: "ஆகேசக்ரஹணாந் மித்ரமக்ருத்யேப்யோ நிவாரயேத்" [ ] [(எதிரிகள்) மயிரைப்பிடிக்கும் வரையில் நண்பனைத் தீச்செயல்களினின்றும் தடுக்கவேண்டும்] "(ஆபத்துக்காலங்களில் நண்பன்) உபதேசிப்பது பொருந்தியதே" [ரா-யு 17-31] "யாவத்தி கேசக்ரஹணத் ஸுஹ்ருத்பி: நிக்ருஹ்ய ராஜா பரிரக்ஷிதவ்ய:" [ரா-யு 14-18] [(எதிரிகள்) மயிரைப் பிடிக்கும் வரையில் நண்பர்களாலே அரசனானவன் நிர்ப்பந்தித்து ரக்ஷிக்கப்படவேண்டும்.] என்று ஒருவன் பேராபத்தை விளைத்துக்கொள்ளும் நிலையிலிருப்பதைக் கண்டால் அவனுக்கு நன்மை சொல்லுவது பொருத்தமே; ஆயினும், அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு தடவை நன்மைசொன்னாலே போதுமானது; இவன் பலதடவை சொன்னது தமயனான அவனைத் திருத்தி உய்விக்கவேண்டுமென்னும் நப்பாசையாலன்றோ; அதைத்தன் குற்றமாகக் கருதி அறிவித்துக்கொள்கிறான் இங்கு.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 13-வது ச்லோகம்

स च नं प्रतिजग्राह रावणः कालचोदितः।
उच्यमानं हितं वाक्यं विपरीत इवौषधम्॥

ஸ ச ந ப்ரதிஜக்ராஹ ராவண: காலசோதித:।
உச்யமாநம் ஹிதம் வாக்யம் விபரீத இவௌஷதம்॥

பதவுரை:—ஸ:-அந்த, ராவண: ச—ராவணனும், காலசோதித:-யமனால் தூண்டப்பட்டவனாய், உச்யமாநம்—சொல்லப்பட்ட, ஹிதம்-நன்மையான, வாக்யம்-வாக்கியத்தை, விபரீத:-சாக இருப்பவன், ஒளஷதம் இவ-மருந்தைப்போலே ந ப்ரதிஜக்ராஹ—ஏற்றுக்கொள்ளவில்லை.

அவதாரிகை—மரணோந்முகனானவன் பிஷக்கின் வார்த்தையைக் கொள்ளாதாப்போலே ஸாதரமாக நான் சொன்ன வார்த்தையை ம்ருத்யுப்ரேரிதனாய்க்கொண்டு பரிக்ரஹித்தானல்லன் என்கிறான்.

வ்யா:—(ஸ ச ந ப்ரதிஜக்ராஹ) கார்யம் செய்திலனேயாகிலும் சொன்ன வார்த்தைக்குச் செவிதாழ்க்கலாமிறே; அதுவும் செய்திலன். (காலசோதித:) அதுக்கு ஹேது—காலசோதிதனாகையாலே கைக்கொண்டிலன். (ராவண:) ப்ராதாவாய் ஹிதைஷியான என் வார்த்தையைக் காற்கடைக்கொண்டு, புதியனாய், ஶத்ருவாயிருந்துள்ள காலன் சொன்ன

அவதாரிகை:—சாகவிருப்பவன் வைத்தியனின் வார்த்தையைக் கைக்கொள்ளாததைப்போலே, அன்புடன் நான் சொன்னசொல்லை, யமனால் ஏவப்பட்டவனாய் செவிக்கொள்ளவில்லை என்கிறான் இந்த ச்லோகத்தில்.

வ்யா:—(அவன் செவியேற்கவுமில்லை) உம்மையாலே, நான் சொன்னபடி செயல் புரியவில்லையாகிலும், சொன்ன வார்த்தைக்குக் காது கொடுக்கலாமே; அதுவும் செய்யவில்லை என்கிறது. (யமனால் ஏவப்பட்டவனாய்) அப்படிச் செவியேற்காததற்குக் காரணம் சொல்லுகிறது; யமனாலே தூண்டப்பட்டவனாகையாலே கேட்கவில்லையென்கிறது. (ராவணன்) தம்பியாய், நன்மையை விரும்பும் என்சொல்லை அவமதித்து பழகியறியாதவனாய், எதிரியாயிருக்கும் யமன் சொன்ன வழியில் போவ

வழியே போகைக்கு ஹேது; அபதேப்ரவ்ருத்தனுய்ப்போந்த துஷ்ப்ரக்ருதியாகையாலே. (உச்யமாநம் வாக்யம்) **"त्वां तु धिक् कुलपांसनम्" (த்வாம் து திக் குலபாம்ஸநம்)** என்று காற்கடைக் கொள்ளாநிற்கச் செய்தேயும் அவ்வளவிலும் விடாதே, **"आत्मानं सर्वथा रक्ष" (ஆத்மாநம் ஸர்வதா ரக்ஷ)** என்று அவனுடைய உஜ்ஜீவனமே ப்ரயோஜநமாகச் சொன்ன வார்த்தையை. (ஹிதம் வாக்யம்) நான் சொல்லிலும், அஹிதமாகில் விடலாமிறே. தன்னுடைய உஜ்ஜீவனத்தில் இதொழிய உபாயாந்தரமில்லாத இந்தப் பரம ஹிதமான வார்த்தையை. எதுபோலவென்னில்: (விபரீத இவௌஷதம்) முமூர்ஷுவானவன் ஸம்யக்பிஷக்காலே சொல்லப்பட்ட வார்த்தையைக் காற்கடைக் கொள்ளுமாப் போலே. **"मुमूर्षवः परेतकल्पा हि गतायुषो जनाः" (முமூர்ஷவ: பரேதகல்பா ஹி கதாயுஷோ ஜநா:)**என்றுனிறே கீழே இவன். அபராதம் பண்ணிப்போந்த ஸமயத்திலே விட்டுப்போந்து ஸ்வரூபம் பெற்றேனல்லேன்; நான் சொன்ன வார்த்தைக்குச்

தற்குக் காணம் சொல்லுகிறது; வழியல்லாவழிச்சென்ற தீயவழுகையாலே அப்படி செய்தான் என்கிறது. (சொல்லப்படுகிற வாக்கியத்தை) "குலத்தை கெடுக்கவந்த உன்னைச் சுடு" [ரா-யு 16-15] என்று அவமதிக்கச் செய்தே, அப்போதும் விடாமல் "உன்னை எல்லாப்படியாலும் காப்பாற்றிக்கொள்" [ரா-யு 16-25] என்று அவனுடைய உய்வே பயனுகச் சொன்ன வார்த்தையை. (நன்மையான வாக்கியத்தை) நான் சொன்னுலும் நன்மையல்லாததாகில் விடலாமன்றே; அப்படியல்லாமல் தான் உய்வதற்கு இதைக்காட்டிலும் வேறு வழி இல்லை என்னும்படி மிகச்சிறந்த நன்மை பயப்பதான வார்த்தையை. எதுபோலே கைக்கொள்ளவில்லையென்னில்: (சாகவிருப்பவன் மருந்தைப்போலே) சாகக்கிடப்பவன், நல்ல வைத்தியன் 'மருந்தை இப்படியிப்படிக் குடிக்கவேண்டும்' என்று சொன்ன வார்த்தையை அலட்சியம் செய்ததுபோலே அலட்சியம் செய்தான். "சாகக்கிடப்பவர்களாய், பெரும்பாலும் பிணத்தையொத்தவர்களாய், ஆயுள் முடிந்தவர்களான மனிதர்கள் நண்பர்களால் சொல்லப்பட்ட நன்மையை ஏற்றுக்கொள்வதில்லை" [ரா-யு 16-26] என்று ராவணனை முன் குறிப்பிட்டானன்றே விபீஷணன். பிராட்டியிடம் குற்றம் புரிந்தபோது விட்டு வந்து என் ஸ்வரூபத்தைப் பெறவுமில்லை; நான் சொன்ன வார்த்தைக்குக்

செவிதாழ்த்து மீளப்பெற்றேனல்லேன். இவனைத்திருத்தி ஜீவிக்கவிருந்த எனக்கு ஸ்வரூபஹானியே பலித்ததென்று கருத்து.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 14-வது ச்லோகம்

सोऽहं परुषितस्तेन दासवच्चावमानितः।
त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गतः॥

ஸோऽஹம் பருஷிதஸ்தேந தாஸவச்சாவமாநித:।
த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் ஶரணம் கத:॥

பதவுரை:-தேந-அவனாலே, பருஷித:-கடுமையாகப் பேசப் பட்டவனும், தாஸவத்—வேலைக்காரன்போலே, அவமாநித: ச-அவமதிக்கப்பட்டவனுமான, ஸ:-அப்படிப்பட்ட, அஹம்-நான், புத்ராந் ச-பிள்ளைகளையும், தாராந் ச-மனைவியையும், த்யக்த்வா-விட்டு, ராகவம்—ராமபிரானை, ஶரணம் கத:—சரணமடைந்தேன்.

அவதாரிகை:—நான் சொன்ன வார்த்தையை ஸ்வீகரியாமையன்றிக்கே, ஹிதஞ்சொன்னதுவே ஹேதுவாகத் தானும் பருஷித்துத் தன் பரிகரத்தாலும் அவமானம் பண்ணுவிக்கையாலே மற்றுமுள்ள ஔபாதிகங்களை விட்டுப் பெருமாள் திருவடிகளிலே ஶரணம் புகுந்தேன் என்கிறான்.

வ்யா:—(ஸோऽஹம்) இவன் விமுகனாயிருக்க, இவன் அநர்த்தத்தையே பார்த்து ஹிதஞ்சொன்ன நான். (பருஷித:)

காதுகொடுத்து, உன்னை அடையவுமில்லை; இவனைத் திருத்தி உய்வித்து, நானும் உய்யவிருந்த எனக்கு ஸ்வரூபக்கேடே வந்தடைந்தது என்று கருத்து.

அவதாரிகை:-நான் சொன்ன சொல்லை ஏற்றுக்கொள்ளாததோடன்றியில், நன்மை சொன்னதுவே காரணமாகத்தானும் கடுஞ்சொற்களைப் பேசி, தமராலும் அவமானம் செய்விக்கையாலே, மற்றுமுள்ள செயற்கை யுறவினர்களை விட்டு, இயற்கை யுறவினனான ராமபிரான் திருவடிகளிலே சரணம் புகுந்தேன் என்கிறான்.

ஹிதஞ்சொன்னதுவே ஹேதுவாக வாக்வஜ்ரத்தாலே நெஞ்சு புண்படும்படி பண்ணினுன். (தேந) நான் சொன்ன ஹிதத்தை அநாதரித்தவளவேயன்றிக்கே, ம்ருத்யுவின் வார்த்தையை ஹிதமென்று பரிக்ரஹித்தவனுலே. (தாஸ வச்சாவமாநித:) நான் சொன்னது அஹிதமானுலும் ஜ்யேஷ்டனுன தான் பரிபவித்துவிடுமளவன்றிக்கே, தன்னடியனுன ப்ரஹஸ்தனையிடுவித்தும், "तात कनिष्ठ वाक्यमनर्थकं" (தாத கநிஷ்ட வாக்யமநர்த்தகம்) என்றுகொண்டு இந்த ப்ரகாரத்தாலே பாலனுன இந்த்ரஜித்தையிடுவித்தும், உச்சிஷ்டபோஜிகளான அடியாரை அவமானம் பண்ணுமாப்போலே அவமானம் பண்ணப்பட்டேன். இத்தால் பாபிஷ்டனுன ராவணனுக்கும் ஆகாதானெருத்தன் என்கை. ப்ரத்யாஸந்நனுன

வ்யா:–(அப்படிப்பட்ட நான்) இவன் பாராமுகத்தோடிருக்க, இவனுடைய ஆபத்தையே கண்டு நன்மையுரைத்த நான். (கடுமையாகச் சொல்லப்பட்டேன்) நன்மை சொன்னதுவே காரணமாக 'ஆறுதே நாவினுற்சுட்டவடு' என்கிற நாவாகிற வஜ்ராயுதத்தாலே நெஞ்சு புண்படுத்தப்பட்டேன். (அவனுல்) நான் சொன்ன நன்மையை அலட்சியம் செய்ததோடன்றியில், யமனுடைய வார்த்தையை நன்மையென்று ஏற்றுக்கொண்டவனுலே. (வேலைக்காரன்போலே அவமதிக்கப்பட்டேன்) நான் சொன்னது தீமையேயானுலும், தமயனுன தான் அவமதித்துவிடவேண்டியிருக்க, அவ்வளவோடு நில்லாமல் தன் அடியானுன பரஹஸ்தனைக் கொண்டும், "சிறிய தந்தையே! உன் (சிறிய) பேச்சு பொருளற்றது" [ரா-யு 15-2] என்று இம்மாதிரியாகப் பிள்ளையான இந்திரஜித்தைக் கொண்டும், எச்சில்தின்னும் வேலைக்காரரை அவமதிப்பதுபோலே அவமதிக்கப்பட்டேன். இத்தால் பெரும்பாவியான ராவணனுக்கும் ஆகாதவனொருவன் நான் என்று தன்னைத் தாழ்த்திச் சொல்லிக் கொள்கிறுன்.

"தேசே தேசே களத்ராணி தேசே தேசே ச பாந்தவா:।
தம் து தேசம் ந பச்யாமி யத்ர ப்ராதா ஸஹோதர:॥"

[ரா-யு 102-12]

[மனைவியர் நாடுதோறும் கிடைப்பர்; உறவினர் தேசந்தோறும் கிடைப்பர்; கூடப்பிறந்த ஸஹோதரன் கிடைக்கும் தேசத்தைக் காண்கிறேனல்லேன்] என்று ராமன் அருளியபடியே மிகநெருங்கிய ஸஹோதரனுடைய உறவு

ப்ராதாவினுடைய பந்தவிபாகம் இதுவாகையாலே, அல்லாதாருடைய அளவும் இவ்விழுக்காடிறே என்று ஸோபாதிகரான பந்துக்களை விட்டு நிருபாதிக பந்துவான பெருமாளையே பற்றினேன் என்கிறான் உத்தரார்த்தத்தாலே. (புத்ராம்ச்ச) நிரயநிஸ்தாரகரான புத்ரர்களையும். இத்தால் ப்ரபத்தி பண்ணுமவனுக்கு ப்ராப்யாபாஸங்களும் ப்ராபகாபாஸங்களும் த்யாஜ்யமென்னுமிடம் தோற்றுகிறது. (த்யக்த்வா) க்த்வாப்ரத்யயத்தாலே பண்ணுகிற ப்ரபத்திக்கு த்யாகம் அங்கமென்னுமிடம் சொல்லுகிறது. (ராகவம் ஶரணம் கத:) "भ्राता भर्ता च बन्धुश्च पिता च मम राघवः" (ப்ராதா பர்த்தா ச பந்துச்ச பிதா ச மம ராகவ:) என்கிறபடியே விட்டவுறவெல்லாம் தாமாகவல்லவரைப் பற்றினேன். "किं त्वर्थिनामर्थित दानदीक्षाकृतव्रत श्लाघ्यमिदं कुलं ते" (கிம் த்வர்த்திநாமர்த்திததாநதீக்ஷாக்ருதவ்ரத ச்லாக்யமிதம் குலம் தே)என்கிறபடியே. ஆஶ்ரிதருடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுக்கும் குடிப் பிறப்பையுடையவரைப் பற்றினேன் என்றுமாம்.

நிலை இப்படியாகையாகையாலே, மற்றுள்ளாருடைய உறவும் இப்படியேயாகும் என்று செய்ற்கை உறவினர்களைவிட்டு இயற்கையுறவினனான ராமனைப் பற்றினேன் என்கிறான் சுலோகத்தின் பிற்பாதியாலே:— (புத்திரர்களையும்) 'புத்' என்னும் நரகத்தைத் தாண்டுவிக்கையால் புத்ரர்கள் எனப்படும் பிள்ளைகளையும். இதனால், சரணமடைபவனுக்கு மேலெழத் தோன்றும் மற்ற ப்ராப்யங்களும், ப்ராபகங்களும் விடத்தக்கவையென்று தோற்றுகிறது. (த்யக்த்வா—விட்டு) 'த்வா' என்னும் விகுதியாலே, இவன் அனுஷ்டிக்கிற சரணாகதிக்கு மற்ற ப்ராப்யப்ராபகத்யாகம் அங்கம் என்று சொல்லுகிறது. (ராகவரை சரணமடைந்தேன்) "எனக்கு ராகவரே தமயனும், ஸ்வாமியும், உறவினரும், தந்தையுமாவார்" [ரா-அ 58-31] என்கிறபடியே, விட்ட உறவெல்லாம் இயற்கையிலேயே தாமாகவல்லவரைப் பற்றினேன். "அங்யேபி ஸந்த்யேவ ந்ருபா: ப்ருதிவ்யாம் மாந்தாதுரேதே தநயா: ப்ரஸூதா:, கிந்த்வர்த்திநாமர்த்திததாநதீக்ஷா க்ருதவ்ரதச்லாக்யமிதம் குலம்தே" [ ] [பூமியில் மற்றும் பல அரசர்களும் உளர்; இவர்களும் மாந்தாதா பெற்றெடுத்த மக்களாவர்; ஆனால் உன் குலமோவெனில் யாசிப்பார்க்கு யாசித்தவற்றையெல்லாம் கொடுக்கக்கங்கணங்கட்டி நிற்பவர்களால் சிறந்து விளங்குகிறது.] என்கிறபடியே அடியாருடைய எல்லாவிருப்பங்களையும் கொடுக்கும் ரகுகுலத்தில் பிறப்பையுடையவரைப் பற்றினேன்; ஆகையால் என் சரணாகதி வீண்போகாது என்றும் பொருள் கொள்ளலாம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 15-வது ச்லோகம்

निवेदयत मां क्षिप्रं विभीषणमुपस्थितम्।
सर्वलोकशरण्याय राघवाय महात्मने॥

நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம் ।
ஸர்வலோகஶரண்யாய ராகவாய மஹாத்மநே ॥

பதவுரை:-ஸர்வலோகஶரண்யாய-*எல்லா உலகினராலும் சரணமடையத்தக்கவராய்,* மஹாத்மநே-*பெருங்குணவாளரான,* ராகவாய-*ஸ்ரீராமபிரான் பொருட்டு,* உபஸ்திதம்—*(அவரை) வந்தடைந்திருக்கிற,* விபீஷணம்-*விபீஷணனென்னும் பெயரையுடைய,* மாம்—*என்னை,* க்ஷிப்ரம்—*விரைவில்* நிவேதயத-*அறிவியுங்கள்.*

அவதாரிகை:-*என் துர்க்கதியைக்கண்டு பெருமாள் விஷயீகரிக்கும்படியாகச் சடக்கென என் வரவை விண்ணப்பம் செய்யவேணும் என்கிருன்.*

வ்யா:–*(மாம் உபஸ்திதம் நிவேதயத) என்ன வேண்டியிருக்க, ப்ரதமத்தில் (நிவேதயத) என்கிறது, தன்னுடைய த்வரையாலே. (மாம்)* “प्रच्युतः” *(ப்ரச்யுத:) என்கிறபடியே, முன்பு பற்றிநின்ற பரிக்ரஹத்தைவிட்டு, உத்தேச்யரான பெருமாள் திருவடியிற் புகுரப்பெறுதே ஆகாஶஸ்தனுய், காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து நிற்கிற என்னை.*

அவதாரிகை:—*என் கீழ்நிலையைக்கண்டு ஸ்ரீராமபிரான் அருள்புரியும்படியாக விரைவில் என் வரவைத் தெரியப்படுத்தவேண்டும் என்று வானரரை வேண்டுகிருன் விபீஷணன்.*

வ்யா:—*(வந்தடைந்த என்னை அறிவியுங்கள்) என்று சொல்லுவதே தகுந்ததாயிருக்க, முதலில் (அறிவியுங்கள்) என்கிறது பற்றியல்லது நிற்கமாட்டாத தன் வேகத்தாலே. (என்னை) “நழுவினவன்” [ ] என்கிறபடியே முன்பு பற்றிநின்ற பற்றுக்கொம்பைவிட்டு சேரவிரும்பிய ராமபிரானடியையும் சேரமுடியாமல் அந்தரத்தில் நிற்பவனுய், “காணவாராய் என்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து” [திருவாய் 8-5-2] என்னும்படி நிற்கிற என்னை.*

(க்ஷிப்ரம்) வந்தவனுடைய குணகுண நிரூபணம்பண்ணி அறிவிக்கவேண்டாவோ? என்னில்: நீங்கள் நிரூபணத்தில் இழிவதற்கு முன்பே நான் முடிவன்; உங்களுக்குப் பழி வாராதபடி சடக்கென அறிவியுங்கோள். நீ ஓரதிகாரியாய் அறிவிக்கவேண்டாவோ? என்னில்: (ராகவாய) ஸர்வாபாச்ரயமான ரகுகுலத்தில் பிறந்தவர்களுக்கு ஓர் அநதிகாரிகளுண்டோ? (மஹாத்மநே) ரகுகுலத்தார்க்கு ஓர் அநதிகாரிகளுண்டாகிலும் எதிர்த்தலையில் சிறுமை பாராதே தம்மளவிலே விஷயீகரிக்கும் பெருமாளுக்கு ஆகாதாருண்டோ? **"रामो रामो राम इति"** (ராமோ ராமோ ராம இதி) என்றும் **"तिर्यग्योनिगताश्चान्ये"** (திர்யக்யோநிகதாச்சாந்யே) என்றும், "அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி" என்றும் சொல்லக்கடவதிறே. இத்தால் பரவ்யூஹாத்யவஸ்தாந்தரங்களிற்காட்டில் ராமாவதாரத்துக்குண்டான நிரவதிகாகஸ்மிக ஸௌஹ்ருத்த்வத்தைச் சொல்லுகிறது.

(விரைவில்) வந்தவனுடைய நன்மைதீமைகளை ஆராய்ச்சிபண்ணி அறிவிக்கவேண்டாவோ? என்று வானரர்களுக்குக் கருத்தாகக்கொண்டு 'விரைவில்' என்று சொல்லுகிறான்;—நீங்கள் ஆராய்ச்சியில் இறங்குவதற்கு முன்னால் நான் உயிரைவிட்டுவிடுவேன். என்னைக்கொன்ற பழி வராமலிருக்க விரைவில் அறிவியுங்கள். நீ நற்குணமுள்ள ஓர் அதிகாரியா என்பதைப் பார்த்துக்கொண்டல்லவோ சக்ரவர்த்தித்திருமகனிடம் அறிவிக்கவேண்டும்? என்று கருத்தாகச் சொல்லுகிறான்,— (ராகவற்கு) அனைவரும் அணையுமிடமான ரகுகுலத்தில் பிறந்தவர்களுக்கு ஆகாத அதிகாரி ஒருவனுண்டோ? (பெரியோனுக்கு) ரகுகுலத்துதித்த மற்றுள்ளார்க்கு ஆகாதார் உண்டானாலும், வந்தடைபவனின் சிறுமை பாராதே தம் பெருமைக்குத்தக்கவாறு அனைவரையும் ஆட்கொள்ளும் பெருந்தகையான ராமபிராற்கு ஆகாதாருண்டோ? "ராமன் அரசாளும்போது ராமன், ராமன், ராமன் என்றே குடிகளுடைய பேச்சு இருந்துவந்தது. உலகமெல்லாம் ராமமயமாயிற்று" [ரா-யு 131-101] என்றும், "அயோத்தியில் ஊர்வனவும் ராமபிரானைப் பின்தொடர்ந்தன" [ரா-உத் 109-33] என்றும். "அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி". [பெருமாள் திருமொழி 10-10] என்றும் சொல்லப்படுகிறதன்றோ. 'பெரியோனுக்கு' என்னும் இப்பதத்தால் பரம், வ்யூஹம், அந்தர்யாமி, மற்ற விபவாவதாரங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் ராமாவதாரத்துக்கிருக்கும் எல்லையற்ற நிர்ஹேதுககாருண்யத்தைச் சொல்லுகிறது.

(ஸர்வலோக ஶரண்யாய) **"लोक्यन्त इति लोकाः"** (லோக்யந்தஇதிலோகா:) என்று லோகஸ்தரான புருஷர்களை நினைக்கிறது. இருந்ததே குடியாக எல்லாருக்கும் ஶரணவரணார்ஹரன்றோ பெருமாள். ராவண பந்தத்தாலே த்யாஜ்யனாக நினைத்திருக்கிற என்னுடைய அளவோ? **"द्विधा भज्येयमप्येवं न नमेयं तु कस्यचित्"** (த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்) என்றவன்தான் வந்தாலும் விடாதவரன்றோ. நீங்கள் என்னை விடில், என்னோபாதி பெருமாளை விடேன் என்றிருக்கத் தட்டுண்டோ? **"मदंशभूतो रामः"** (மதம்ஶபூதோ ராம:) ஸர்வ ஶப்தார்த்தம் மதேகவர்ஜித (ஐ?) மாயோ இருப்பது? (விபீஷணம்) நீங்கள்தான் என்னோடு ஒப்புதிகளோ? புறம்பு ஒருவர்க்கும் ஆகாதானைப் பெருமாள் விஷயீகரித்தார் என்கிற ஏற்றம் அவர்க்குக் கொடுக்கவந்தேனல்லேனோ?

(அனைத்துலகாலும் சரணமடையத்தக்கவனுக்கு) "காணப்படுமவர்கள் உலகர்கள்" என்னும் வ்யுத்பத்தியாலே லோகசப்தம் உலகினரான மனிதர்களைச் சொல்லுகிறது. தன் ஆட்சியின் கீழ் குடிமக்களாயிருப்பதே ஹேதுவாக அனைவர்க்கும் சரணமடையத்தக்கவரன்றோ ராமபிரான். ராவணனோடு உறவாலே விடத்தக்கவனாக நீங்கள் நினைத்திருக்கும் என்னை ரக்ஷிப்பது ஒருபுறமிருக்கட்டும்; "இரண்டாகப் பிளக்கப்பட்டாலும் படுவனேயொழிய ஒருவனுக்கும் வணங்கமாட்டேன்" [ரா-யு 36-11] என்ற அவ்விராவணன்தான் வந்தாலும் விடாதவரன்றோ ராமபிரான். நீங்கள் என்னை விட்டாலும், என்னைப்போலே ஸ்ரீராமபிரானை விடாமலிருக்க ஆட்சேபனையில்லையே. அப்படி அவரை விடாமலிருந்ததாலே போதும் எனக்கும் அவரிடம் பங்குண்டு. "எனக்கும் அம்சமாய் (கிடைக்க வேண்டிய பாகமாய்) இருப்பவர் ராமபிரான்" [ ] "மதேக வர்ஜம் கிமிதம் வ்ரதம் தே" [ஸ்தோ-ர 64] [(ஸர்வபூதங்களுக்கும் அபய மளிக்கும்) உன்னுடைய விரதம் என்னொருவனைத் தவிர்ந்ததோ?] என்கிறபடியே ஸர்வலோக சரண்யரென்னும்போது ஸர்வசப்தம் என்னொருவனைத் தவிர்ந்தோ இருப்பது? (விபீஷணனை) அனைவர்க்கும் விதவிதமாக பயங்கரனாயிருப்பவனை. நீங்கள் தான் இவ்விஷயத்தில் என்னோடு ஒத்திருப்பீர்களோ? மற்றுள்ளார் அனைவர்க்கும், பயங்கரனாயிருக்கையாலே ஆகாதவனாயிருப்பவனை ராமபிரான் ஆட்கொண்டார் என்கிற பெருமையை அவர்க்குக் கொடுக்க வந்தவனன்றோ நான். இப்பெருமையை உங்களால் அவருக்கு அளிக்கமுடியுமோ? (வந்தடைந்திருப்பவனை) லங்கையிலிருந்து

(உபஸ்திதம்) லங்கையிலே நின்று ஶரணமென்றேனாகிலும் லங்கைதான் மடுக்கரை பட்டது படவேண்டாவோ? நாலடி வந்தவிடம் பெருமாள் கார்யம் செய்தேனன்றோ?

இந்த ச்லோகத்திற்கு அபயப்ரதானஸார
வ்யாக்யானம் முற்றிற்று.

இனி, இந்த ச்லோகத்திற்குத் தனிச்லோக வ்யாக்யானம்

அவதாரிகை:— (நிவேதயத மாம் க்ஷிப்ரம் ராகவாய மஹாத்மநே ஸர்வலோகஶரண்யாய விபீஷணமுபஸ்திதம்) கீழ் ச்லோகத்திலே (ஸோऽஹம் பருஷிதஸ் தேந தாஸவச் சாவமாநித: த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் ஶரணம் கத:) என்று பெருமாள் திருவுள்ளத்திற்கு ப்ரிய மாகவும் ராவணனுக்கு அநபிமதமாகவும் சில வார்த்தைகள் சொன்னேன். இப்படிச் சொன்னால், "**प्रत्यक्षे गुरवः स्तुत्याः**" **(ப்ரத்யக்ஷே குரவ: ஸ்துத்யா:)** என்றும், "என்னைத் தீமனங் கெடுத்தாய் உனக்கென்செய்கேன்" என்றும், "அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன" என்றும் க்ருதஜ்ஞனாய்ப்

'ராக்வா சரணம்' என்று கூச்சலிட்டிருந்தாலும், கஜேந்திரன் மடுக்கரையிலிருந்து 'ஆதிமூலமே' என்று கூக்குரலிட்டபோது அரைகுலைய தலைகுலைய ஓடிவந்ததுபோல் ஓடிவந்திருக்கவேண்டாமோ? நான் நாலடி வந்திருப்பது அவர் சிரமத்தைக் குறைத்தபடியாகையாலே பதறிக்காரியம் செய்யவேண்டாவோ?

இந்த ச்லோகத்திற்கு தனிச்லோக வ்யாக்யான விவரணம்

அவதாரிகை:—"நான் அவ்விராவணனால் கடியப்பட்டேன்; அடிமையைப்போல் அவமதிக்கப்பட்டேன்; பிள்ளை பெண்டுகளைவிட்டு ராகவரைச் சரணடைந்தேன்" என்று இதற்கு முந்திய ச்லோகத்தில், ராமபிரான் திருவுள்ளத்திற்கு இனியதாகவும் ராவணனுக்கு இன்னாதாகவும் சில வார்த்தைகள் சொன்னேன், நான் இப்படி நல்லுபதேசம் செய்ததற்கு '(உபதேசம் செய்யும்) ஆசாரியர்கள் நேரே துதிக்கத்தக்கவர்கள்' [ ] என்றும், 'என்னைத் தீமனங்கெடுத்தாய் உனக்கென் செய்கேன்' [திருவாய் 2-7-8] என்றும், 'அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன' [திருவாய் 2-3-2] என்றும் செய்நன்றி மறவாதவனாய் என்னைப்புகழ

புகழ ப்ராப்தமாயிருக்க, அவன் துஷ்ப்ரக்ருதியாகையாலே **"त्वां तु धिक्कुलपांसनं"** (த்வாம் து திக் குலபாம்ஸநம்) என்று பருஷித்து **"अस्मिन्मुहूर्ते न भवेत्"** (அஸ்மிந் முஹூர்த்தே ந பவேத்) என்று தன்னடியார் குற்றஞ்செய்தால் சொல்லுமா போலே வெட்டிவையாதொழிந்தேன் என்று அவமானம் பண்ணுவதாக, 'ஜ்யேஷ்டனுகையாலே அவன் வேண்டிற்றுச் செய்கிருன்' என்றிருந்தேன்; அவ்வளவேயன்றிக்கே, தன் வயிற்றிலே பிறந்தசிறுபையலையிட்டு **"किं नाम ते तात कनिष्ठ वाक्यमनर्थकं चैव सुभीतवच्च । अस्मिन्कुले योऽपि भवेन्न जातो सोपीदृशं नैव वदेन्न कुर्यात्"** ॥ (கிம் நாம தே தாத கநிஷ்ட வாக்யமநர்த்தகம் சைவ ஸுபீதவச்ச। அஸ்மிந் குலே யோऽபி பவேந்ந ஜாதோ ஸோபீத்ருசம் நைவ வதேந்ந குர்யாத்॥) என்று பரிபவிப்பித்தும் செய்தான். அத்தாலே அநுகூலரேயாகிலும் அவனடியாக வந்த பார்யாபுத்ராதிகளை விட்டு, "சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும் அவர்" என்கிறபடியே விட்ட உறவு முறையெல்லாம் பெருமாளேயாம்படி திருவடிகளிலே வந்தேன் என்று நாட்டாரோடியல்வொழிந்து நாரணனை

வேண்டியிருக்க அவ்விராவணன் தீயவனுகையாலே 'குலத்தைக்கெடுக்கும் உன்னை (நாவினுல்) சுடுகிறேன்' [ரா-யு 16-15] என்று கடிந்து 'மற்றொருவனுகில்) இக்கணத்திலேயே இல்லையாயிருப்பான்' [ரா-யு 16-15] என்று தன் அடிமைகள் குற்றம் செய்தால் சொல்லுவதுபோலே 'பையலே! நீ தம்பியாகையாலே உன்னை இந்நேரம் வெட்டித் தள்ளாதிருந்தேன்' [ரா-யு 16-15] என்று அவமானம் பண்ணிவிட, 'தமையனுகையாலே அவன் விரும்பியபடி சொல்லட்டும்' என்றிருந்தேன்; அத்துடன் நில்லாமல் தன் வயிற்றில்பிறந்த சிறுபிள்ளையான இந்திரஜித்தைக்கொண்டு 'சிறியதந்தையே உன் (சிறிய) சொற்கள் பொருளற்றவையாயும் பயங்கொள்ளியுடையவையாயுமிருக்கின்றன. வீரத்திற்சிறந்த இக்குலத்தில் பிறவாதவனும் இப்படிச்சொல்லவும் மாட்டான்; செய்யவும் மாட்டான்' [ரா-யு 15-2] என்று அவமதிப்பிப்பதும் செய்தான்; ஆகையாலே நல்ல எண்ணமுடையவர்களாயிருந்தபோதிலும் அவனோடுண்டான உறவால் வந்த பெண்டு பிள்ளை முதலானுரை விட்டு, 'சேலேய் கண்ணியரும் பெரும்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் அவரேயினியாவரே' [திருவாய் 5-1-9] என்கிறபடியே விட்ட உறவுமுறையெல்லாம் ராமபிரானேயாம்படி அவர் திருவடிகளைப் பற்ற வந்தேன்" என்று கூறிக்கொண்டு 'நாட்டாரோடி

நண்ணி நின்றான் கீழ்; இனி, ராஜநீதி மர்யாதையில், "ஒரு சத்ருவின் தம்பி பொய்யே சரணமென்று வருங்காட்டில் கைக்கொள்ளவிருந்தார்களோ! போகாய்" என்று உதறியிருந் தார்கள் முதலிகள். இவர்களைப்பார்த்து "நீங்கள் உதறுகிறது ஸ்வாமிகார்யமாகவன்றோ? ராக்ஷஸரால் நலிவுபட்டு சரண மென்று வந்தவர்களுக்குப் புகலான ரகுகுலத்திலே பிறந்த பெருமாளுக்கு ராவணன் தம்பி விபீஷணன் சரணம் புகுந் தான் என்று அறிவிக்கைதானும் ஒரு ஸ்வாமிகார்யம்; ஆன பின்பு, தலைக்காவலிலே நிற்கிறவர்கள் அறிவித்திலர் என்று முனிவதற்கு முன்னே சடக்கென விண்ணப்பம் செய்யுங் கோள்" என்றான். தர்சநமர்யாதையில், "**विदितः स हि धर्मज्ञः शरणागतवत्सलः**" (விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல:) என்று பெருமாள் சரணாகதவத்ஸலரென்னுமிடம் கேட்டறி யாயோ? நேரே சொல்லமாட்டாயோ? என்ன, 'அப்படி வழிகெடப்போவானொருவனோ நான்? "**तत्र भरोऽहमकारिषि**

யல்வொழிந்து நாரணனை நண்ணி' [திருவாய் 10-6-2] நின்றான் இதற்கு முன். இனி, ராஜநீதிவழக்குப்படி, "ஓர் எதிரியின் தம்பி பொய்யாகச் சரணமென்று வந்ததாலேயே கைக்கொண்டு விடுவார்களோ? வந்த வழியே திரும்பிப்போ' என்று விபீஷணனை உதறிவிட்டார்கள் வானர முதலிகள். அப்படி உதறும் அவர்களைப்பார்த்து, "நீங்கள் என்னை உதறு கிறது ராமபிரானின் காரியத்துக்காகவன்றோ. அரக்கரால் நலிவுபட்டு அடைக்கலம் புகுந்தார்க்குப் புகலிடமான ரகுவின் குலத்தில் பிறந்த ராமபிரானுக்கு 'ராவணன் தம்பி விபீஷணன் சரணம் புகுந்தான்' என்று அறிவிப்பதும் அவர் காரியமே. ஆனபின்பு 'வாயிற்காப்பவர்கள் வந்த வனை அறிவிக்கவில்லை' என்று ராமபிரான் கோபிப்பதற்கு முன்னே விரைவில் விண்ணப்பம் செய்யுங்கள்" என்றான். இது ராஜநீதி வழக் குப்படி முன் ச்லோகத்துக்கும் இந்த ச்லோகத்துக்குமுள்ள தொடர்ச்சி. இனி, புருஷகாரத்வப்ரதாநமான நம் ஸித்தாந்தரீதியில் ஸங்கதி பின் வருமாறு:—"ராமபிரான் தருமமறிந்தவர்; சரணமடைந்தவனிடம் வாத் ஸல்யமுடையவர்" [ரா-ஸு 21-20] என்று ஸ்ரீராமபிரான் சரணாகதரிடம் வாத்ஸல்யமுடையவர் என்பதைக் கேட்டதில்லையோ? நேரே அவரிடம் சொல்லமாட்டாயோ? என்று வானரர்களுக்குக் கருத்தாகக் கொண்டு, "அப்படி வழியல்லாவழியில் செல்லுமவனோ நான். "நான்

धार्मिकैः'' (தவ பரோஹமகாரிஷி தார்மிகை:) என்றும், வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணியுமவன் காணுங்கோள் நான். ஆனபின்பு, நீங்கள் புருஷகாரமாகப் பெருமாள் திருவடிகளிலே காட்டிக்கொடுங் கோள் என்கிறுனகவுமாம்.

வ்யா:—1. (நிவேதயத மாம்)''यं प्रजापतिर्वेद स पुण्यो भवति'' (யம் ப்ரஜாபதிர் வேத ஸ புண்யோ பவதி) என்று அவர் திருவுள்ளத்திலே பட்டபோதாயிற்று இத்தலைக்கு ஸ்வ ரூபம் ஜீவிப்பது. அத்தனையும் உங்களாலே பெற்றேனுக வேணுமாம். 2. (நிவேதயத) ''उपदेक्ष्यन्ति ते ज्ञानं'' (உப தேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம்) என்றும், ''तैश्चोक्तं पुरुकुत्साय'' (தைச்சோக்தம் புருகுத்ஸாய) என்றும், அவனை

அறத்தில் மிக்கவர்களாலே உனக்கு அடைக்கலமாக்கப்பட்டேன்'' [ர-ஸ்த 2-102] என்றும் ''வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து'' [திருவாய் 4-6-8] என்றும் சொல்லு கிறபடியே புருஷகார பூதர்களான உங்களை முன்னிட்டு அவரை அடி பணியுமவன் நான். ஆகையால் நீங்கள் புருஷகாரமாயிருந்து அவர் திருவடிகளிலே சேரவிடுங்கள் என்பதாகவும் கொள்ளலாம்.

வ்யா:—(என்னை அறிவியுங்கள்) ''ப்ரஜாபதிஸ் த்வம் வேத ப்ரஜாபதிம் த்வோ வேத யம் ப்ராஜபதிர் வேத ஸ புண்யோ பவதி'' [யஜு-காண் 1- ப்ர-6] [பரமபுருஷன் ஒருவனை வரிக்கிறுன்; பரமபுருஷனை ஒருவன் வரிக்கிறுன், எவனைப் பரமபுருஷன் வரிக்கிறுனே அவனே (நிஸ்ஸந்தேஹமாகப்) பர மனை அடைகிறுன்.] என்று ராமபிரான் திருவுள்ளத்திலே பட்டபோது தான் என் ஸ்வரூபம் நிறம்பெறுவது. அப்படிப்பட்ட பெருமையை உங்களாலே பெற்றவனுகச் செய்யுங்கள். 2. (அறிவியுங்கள்)

''தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா।
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்ஸிந:॥''

[அறிவாளிகளை வணங்கியும், கேட்டும், வழிபட்டும் அவ்வறிவை அடை வாயாக. தத்துவ ஞானிகளான அவர்கள் உனக்கு அவ்வறிவை உப தேசிப்பார்கள்.] என்றும்,

''கதயாமி யதாபூர்வம் தக்ஷாத்யைர் முனிஸத்தமை:।
ப்ருஷ்ட: ப்ரோவாச பகவாநப்ஜயோநி: பிதாமஹ:॥

எங்களுக்கு அறிவிக்கிற மாத்ரம் எங்களையும் அவனுக்கு அறிவிக்கவேணும். ஏதேனுமாக அறிவிக்கை உங்களுக்குப் பணியன்றோ. 3. (நிவேதயத) "स्वरेण महता महान्" (ஸ்வரேண மஹதா மஹாந்) என்று நானும் பெருமிடறு செய்து கூப்பிட்டபோதே பெருமாள் திருவுள்ளம் பற்றுவர். நீங்களும் அறிவித்திகோளாய் ஒரு ஸ்வரூபம் பெறப்பாருங் கோள். 4. (நிவேதயத)அறிவியாதபோது பாகவதாபசாரம் பண்ணுவாரைப்போலே உங்களுக்கு ஸ்வரூபஹாநி; அறி வித்தால் கூவுதல் வருதல் செய்திலராகில் சரணாகதபரித் யாகியான அவருக்கு ஸ்வரூபஹாநி. இரண்டு தலையும் இப்படியானபின்பு பரகதாதிசயாதாநம் பண்ணுகை சேஷ த்வலக்ஷணமானால் அத்தலைக்கு அவத்யாவஹனானகையாலே

தைச்சோக்தம் புருகுத்ஸாய பூபுஜே நர்மதாதடே।
ஸாரஸ்வதாய தேநாபி மஹ்யம் ஸாரஸ்வதேந ச॥"

[வி-பு 1-2-8, 9]

[உந்தித்தாமரையில் உதித்த பிரமன், தக்ஷர் முதலான முனிபுங்கவர் களால் கேட்கப்பட்டு எதைச்சொன்னரோ, அதை அப்படியே உனக்குச் சொல்லுகிறேன்; அம்முனிவர்களால் நர்மதைக்கரையில் அரசனான புரு குத்ஸனுக்கு அறிவிக்கப்பட்டது; அவனால் ஸாரஸ்வதருக்கும், அவரால் எனக்கும் இவ்விஷயம் உபதேசிக்கப்பட்டது.] என்றும் அவனை எங்க ளுக்கு அறிவிக்கும் ஆசாரியர்களான நீங்கள், அதுபோலே எங்களையும் அவனுக்கு அறிவிக்கவேணும். யாருக்காவது அறிவிப்பதன்றோ உங்க ளுடைய காரியம் 3. (அறிவியுங்கள்) "பேரியோனான விபீஷணன் பெருங்குரலிலே பேசலுற்றான்" [ரா-யு 17-9] என்று நான் பெருத்த குரலோடே கூப்பிடுவதிலிருந்தே ராமபிரான் என்னைக் கைக்கொள்ளத் திருவுள்ளம் பற்றுவர். நீங்களும் அறிவித்து உங்களுடைய புருஷகாரத்வ ஸ்வரூபத்தைப் பெறப்பாருங்கள். 4. (அறிவியுங்கள்—அடைவியுங்கள்) அறிவிக்காவிடில் பாகவதாபசாம் பண்ணினவர்களைப்போலே உங்களுடைய ஸ்வரூபம் அழியும், அறிவித்தபின்பு "கூவுதல் வருதல் செய்யாய்" [திருவாய் 9-2-10] என்கிறபடியே தானிருக்குமிடத்துக்கு அழைத்துச் செல்லுதல், இங்கு வருதல் செய்யாவிடில் சரணமடைந்தவனை விட்ட அவருடைய ஸ்வரூபம் அழியும். சேஷியிடத்திருக்கும் பெருமையை விளைக்கையே சேஷபூதனின் லக்ஷணமாயிருக்க, சேஷியினுடைய ஸ்வ

சேஷபூதனுன எனக்கு ஸ்வரூபஹாநி. இவையித்தனையும் வாராமல் அறிவித்துச் சேரவிடுங்கோள். 5. (நிவேதயத) வ்யாக்ரவாநரஸம்வாதம் கேட்டறியீர்களோ? இப்படி சரணு கத ரக்ஷணம் பண்ணின ஜாதியிலே பிறந்த நீங்கள் சரணு கதனை அறிவியுங்கோள். 6. (நிவேதயத) என்னை நிர்வே திப்பியாதே பெருமாளுக்கு நிவேதியங்கோள். 7. (நிவேத யத) "**நிப்ருதம் வேதயத**" இப்படிக்கொரு மூர்க்கனே என்று திருவுள்ளம் பற்றும்படி உத்படமாகப் பற்றியறிவியாதே, "அறியச் சென்றுரையாய்" என்னுமாபோலே, உங்களுடைய ஸவிநயகதிப்ரச்நங்களாலே 'இப்படிக்கொரு ஸாத்விகனே அவன்' என்னும்படி நிப்ருதமாக விண்ணப்பம் செய்யுங்கோள். 8. (நிவேதயத) **நிதராம் வேதயத** அதாவது மந்த்ரவ்யா பாராதிகளிலே பராக்கான பெருமாள் திருவுள்ளத்திலே படும்படியாக ஊன்ற விண்ணப்பம் செய்யுங்கோள்.

ரூபத்தையும், சேர்ப்பிப்பாருடைய ஸ்வரூபத்தையும் அழித்து, சேஷிக்குக் குற்றம் விளைக்கையாலே சேஷபூதனுன என் ஸ்வரூபமும் அழியும். இவை யித்தனையும் வாராமல் அறிவிக்கும்போதே பக்குவமாக அறிவித்துச் சேரவிடுங்கள். அறிவிப்பதோடு நில்லாமல் அடைவியுங்கள். 5. (அறிவி யுங்கள்) வ்யாக்ரவாநர ஸம்வாதம் கேட்டறியமாட்டீர்களோ? குற்றம் புரிந்தபோதிலும் சரணமடைந்தவனைக் காப்பாற்றிய குரங்கின் ஜாதியிலே பிறந்த நீங்கள் சரணமடைந்த என்னை அறிவியுங்கள். 6. (நிவேதியுங் கள்) என்னைநிர்வேதிப்பியாதே–(வருத்தாதே)–ராமபிரானிடம் நிவேதியுங் கள் (அறிவியுங்கள்). 7. (அடக்கமாக அறிவியுங்கள்) "**நிப்ருதம் வேதயத**" நீங்கள் அறிவிக்கும் லக்ஷணத்தைப் பார்த்தவுடனே, 'வந்திருப்பவன் இப் படிப்பேசும் மூர்க்கன்போலும்' என்று ராமபிரான் நினைக்கும்படி கர்வத் தோடு மார்பு நெறித்துக்கொண்டு அறிவியாமல், "**நிப்ருத: ப்ரணத: ப்ரஹ்வ:**" [ரா-யு 116-3] [அடங்கியவனுய், வணங்கியவனுய், ஒடுங்கிய வனுய்] என்றும், "அறியச்சென்றுரையாய்' [பெரியதிரு3-6-4] என்றும் சொல்லுகிறபடியே உங்களுடைய அடங்கியொடுங்கிய நடையையும், பேச்சையும் கொண்டு 'வந்திருப்பவனும் இப்படியொரு ஸாத்விகனே' என நிச்சயிக்கும்படி அடக்கமாக அறிவியுங்கள். 8. (ஊன்ற அறிவியுங்கள்) "நி" என்னும் உபஸர்க்கம் ஊற்றத்தைக் காட்டுகிறது. மந்திரலோசனைச் செயல்களில் ஈடுபட்டிருக்கும் பெருமாள் நெஞ்சிற்படும்படி ஊற்றத்துடன் சொல்லுங்கள்.

9. (நிவேதயத) ஒரு பெருந்திரளாயிருந்தால் ஒருவரில்லாது ஒருவர் அறிவிக்கலாகாதே. 10. (நிவேதயத) **'ப்ரார்த்த நாயாம் லோட்'டாய்,** ''அன்னம் செல்வீரும் வண்டானம் செல்வீரும் தொழுதிரந்தேன்'' என்னுமாப்போலே, நீங்களும் ருக்ஷவாநரகோலாங்கூலங்களாகிற அநேகஜாதியாயிருந்தீர்கோள். உங்களை இரக்கிற நான் நிற்கிற நிலையை விண்ணப்பம் செய்யவேணும். 11. (நிவேதயத) ஒருவனைக் குறித்துச் சொல்லாதே ஸமுதாயத்திலே சொல்லுகிறான், இத்திரளில் இதற்கு முன்பு பரிசயமில்லாமையாலே ஸாதகரின்னாரென்று அறியாமையாலே. அன்றியிலே, 12. (நிவேதயத) என்று **''तत्र भागवताः सर्वे श्लाघ्याः पूज्याश्च भारत''** (**தத்ர பாகவதா: ஸர்வே ச்லாக்யா: பூஜ்யாச்ச பாரத**) என்று ராம ஸம்பந்தம் எல்லார்க்கும் ஒக்குமாகையாலே அடைய நமக்கு கௌரவ்யரன்றோ என்று ஸமுதாயத்திலே சொல்லுகிறானாகவுமாம். அன்றிக்கே, 13. (நிவேதயத) **''लोको भिन्नरुचिः''** (**லோகோ பிந்நருசி:**) என்றும், ''வேறுவேறு ஞானமாகி''

---

9. (அறிவியுங்கள்) ஒரு பெருங்கூட்டமாயிருந்தால், ஒருவர் அறிவிக்காமலும், ஒருவர் அறிவித்துமிருக்கக்கூடாதே; ஆகையால் அனைவரும் அறிவியுங்கோள். 10. (அறிவியுங்கள்) 'யுங்கள்' என்னும் விகுதி பிரார்த்தனையைக் குறிப்பதாகையாலே, ''அன்னம் செல்வீரும் வண்டானம் செல்வீரும் தொழுதிரந்தேன்'' [திருவிருத்தம் 30] என்று ஆழ்வார் அன்னங்களும், வண்டுகளுமாகப் பல வகுப்பைச் சேர்ந்தவற்றைத் தூதுவிட்டாப்போலே, ''நீங்களும் கரடி, குரங்கு, கருங்குரங்கு என்னும் அநேக வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருக்கிறீர்கள். உங்களை யாசிக்கிற நான் நிற்கும் நிலையை விண்ணப்பம் செய்யவேணும்'' என்று பிரார்த்திக்கிறான். 11. (அறிவியுங்கள்) இக்குழுவில் முன்னர் பழகியறியாமையாலே, சேரவிடுவார் ஆரென்று அறியாமல் ஒருவரைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் பொதுவாகச் சொல்லுகிறான். அல்லது, 12. (அறிவியுங்கள்) ''பாரதனே! அதில் பகவானைச் சேர்ந்தவர்கள் அனைவரும் சிறந்தவர்களாகவும், பூசைக்குரியவர்களாகவும் உள்ளனர்' [ ] என்று 'ராமபிரானோடு உறவு அனைவர்க்கும் ஒத்திருக்கையால், இவர்கள் அனைவரும் நமக்கு கௌரவிக்கத்தக்கவரன்றோ' என்று நினைத்துப் பொதுவாகச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். அல்லது 13. (அறிவியுங்கள்) ''உலகம் வேறுவேறுபட்ட ருசியையுடையது'' [ ] என்றும், ''வேறு வேறு ஞானமாகி'' [திருச்சந்த-2]

என்றும், ''மதிவிகற்பால்'' என்றும் சொல்லுகிறபடியே, பலராய் பிந்நபுத்திகளாயிருக்கையாலே, ஓட்டேனென்று ஒருவன், விடேனென்று ஒருவன், கட்டேனென்று ஒருவன், கட்டெனப்புகுரலாகாதோ என்று ஒருவன், அறிவிக்கிறேனென்று ஒருவன், ஜீவிக்கலாவதென்பானொருவன் என்னும் ஸமுதாயத்திலே சொல்லுகிறுனைகவுமாம். அன்றியிலே, 14. ''गुरुषु बहुवचनं'' (குருஷு பஹுவசநம்) ஆய், இப்படிக்கெல்லாம் நிர்வாஹகராய் ராஜாவாயிருக்கையாலே, மஹாராஜரை நோக்கிச் சொல்லுகிறுனைகவுமாம். 15. அன்றியிலே, (நிவேதயத) என்று ராவணகோஷ்டியிலே தூதவதம் ஆகாதென்று நல்வார்த்தை சொல்லி க்ருதோபகாரனுகையாலே திருவடியை ஹ்ருதயீகரித்து ப்ரதீகோபாதாநம் பண்ணி, ஒருவனைச்சொன்னல் மற்றவர்கள் விபரீதம் பண்ணுவார்களென்று ஸாமாந்யமாகச் சொன்னுனைகவுமாம். 16. அன்றியிலே, (நிவேதயத) என்று, 'பெருமாள் உங்களை என்னிடையாட்டமாகக்கேட்பர்; அப்போது பேசாதிராதே, சங்கநீய

என்றும் ''மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பலபல'' [திருவிருத்தம்-96] என்றும் சொல்லுகிறபடியே பலராய் பிணங்கும் அறிவையுடையராயிருக்கையால், 'சேரவொட்டேன்' என்று ஒருவன், 'உன்னை விடமாட்டேன்' என்று ஒருவன், 'இவனைக் கட்டமாட்டேன்' என்று ஒருவன், 'கட்டு' என்று விபீஷணன் சொல்ல, இவன் ஸாத்விகன் என்று அறிந்து 'உள்ளே புகுரலாம்' என்று ஒருவன், 'ராமபிரானிடம் அறிவிக்கிறேன்' என்று ஒருவன், 'போனுற்போகிறுன் உயிரோடு விடுங்கள்' என்று ஒருவன் சொல்லுகையாலே பலவித அறிவையுடைய அனைவரையும் சேர்த்துப் பன்மையாகச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். அல்லது, 14. (அறிவியுங்கள்) பெரியோரைப் பன்மையாகச் சொல்லுவதுண்டாகையாலே, இவ்வானரசேனைக்கெல்லாம் தலைவனுய் அரசனுயிருக்கையாலே. சுக்கிரீவனை நோக்கிச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். 15. அல்லது, (அறிவியுங்கள்) என்று ராவண ஸபையிலே 'தூதனைக் கொல்லலாகாது' என்று நல்வார்த்தை சொல்லி உபகரித்தவனுகையால் அனுமனை நெஞ்சிற்கொண்டு அடியெடுத்து, ஒருவனைச் சொன்னல் மற்றவர்கள் 'தங்களைச் சொல்லவில்லையே' என்று தீங்குசெய்வார்கள் என்னும் எண்ணத்தால் பொதுவாகச் சொன்னதாகவும் கொள்ளலாம். அல்லது, 16. (அறிவியுங்கள்) என்று, ''ராமபிரான் உங்களை என் விஷயமாகக் கேட்பார். அப்போது பேசாதிராமல், இவன் ஸந்தேஹப்படவேண்டியவன் என்றுவது நம்பத்

னென்றாகவுமாம் விச்வஸநீயனென்றாகவுமாம், ஸங்க்ராஹ்ய னென்றாகவுமாம் நிக்ராஹ்யனென்றாகவுமாம், ஏதேனுமாகத் தோற்றினார் தோற்றினபடி ஸ்வமதங்களை அறிவியுங்கோள்' என்றாகவுமாம். அன்றியிலே, 17. (நிவேதயத) "**विद्लृ लाभे**" **(வித்ல் லாபே)**என்கிற தாதுவிலேயாய், "**स महात्मा सुदुर्लभः**" **(ஸ மஹாத்மாஸுதுர்லப:)** என்று நேராக நெஞ்சாரறப்பட்டுக் கிடக்கிற பெருமாளுக்கு ஒரு ஆத்மலாபம்பண்ணிக் கொடுங்கோள். அன்றியிலே18. "**विद सत्तायां**" **(விதஸத்தாயாம்)**என்று ஸத்தையிலேயாய் "**अप्यहं जीवितं जह्यां**"**(அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்)**என்று என்னைப் பெறாதபோது அழிகிற பெருமாளுக்கு ஸத்தை யுண்டாக்கி விடுங்கோள். 19. அன்றியிலே, "**विद् विचारणे**"**(வித விசாரணே)**என்று விசாரணத்திலேயாய்,அங்கத சரப ஜாம்பவத்ப்ரமுகரடைய விசாரியுங்கோள் என்றுமாம்.

தக்கவன் என்றாவது, கைக்கொள்ளத்தக்கவன் என்றாவது கைவிடத் தக்கவன் என்றாவது, அவரவர்களுக்குத் தோற்றியபடி உங்கள் அபிப்பிராயமாக எதையாவதொன்றைச் சொல்லி உங்கள் ஸ்வரூபத்தைப் பெறுங்கள் என்பதாகவும் கொள்ளலாம். அல்லது. 17. (அடைவியுங்கள்) 'வித்ல்-லாபே' என்கிற தாதுவிலிருந்து 'நிவேதயத' என்னும் பதம் தோன்றியதாகக் கொண்டு, "வாஸுதேவனே எல்லாம் என்னும் அந்த மஹாபுருஷன் மிகவும் கிடைத்தற்கரியவன்" [கீதை 17-19] என்று ஜீவிதராஜ்ய ஸுகமெல்லாம் ராமனுக்கக்கொண்ட என்னைப் போன்ற ஒருவனைக் கிடைக்கப்பெறாமல் மனவருத்தப்பட்டுக்கிடக்கிற ராமபிரானுக்கு ஒரு சேதநலாபத்தைப் பண்ணிக்கொடுங்கள் என்பதாகவும் கொள்ளலாம். இந்த நிர்வாஹத்தில், 'ராகவாய' என்றவிடத்தில் நாலாம் வேற்றுமையை 'விவக்ஷாத: காரகாணி' என்னும் விதியைக்கொண்டு இரண்டாம் வேற்றுமையாகக் கொள்ளவேண்டும். அல்லது, 18. (உளராக்குங்கள்) 'வித-ஸத்தாயாம்' என்னும் தாதுவிலிருந்து தோன்றியதாகக் கொண்டு, 'நான் என் உயிரையும் விடுவேன்' [ரா-ஆர 10-19] என்று என்னைப் பெறாதபோது அழியக்கூடிய ராமபிராற்கு ஸத்தையை உண்டாக்கி விடுங்கள் என்பதாகவும் கொள்ளலாம். அல்லது 19. (விசாரியுங்கள்) 'விதவிசாரணே' என்னும் தாதுவிலிருந்து தோன்றியதாய்க்கொண்டு, அங்கதன், சரபன், ஜாம்பவான் முதலானார் அனைவரும் என்னைக் கைக்கொள்ளலாமா கூடாதா, என்று விசாரியுங்கள் என்பதாகவும் கொள்ளலாம்.

இப்படிச் சொன்னவாறே, ஆகிறது, விண்ணப்பம் செய்கிறோம்; "सोऽहं परुषितस्तेन" (ஸோஹம் பருஷிதஸ்தேந) என்றும், "राघवं शरणं गतः" (ராகவம் சரணம் கத:) என்றும் இரண்டு அர்த்தத்தைச் சொன்னாயாகில், ராவணன் பருஷித்தபடியை முற்படச் சொல்லவோ? சரணாகதனான உன்னை அறிவிக்கவோ? என்ன;–1. (மாம் நிவேதயத) அவனுடைய பாருஷ்யத்துக்கு ப்ரதிக்ரியை பண்ணியருளுவது நான் அந்த ரங்கனாலல்லவோ; ஆனபின்பு, முற்பட என்னை விண்ணப்பம் செய்யுங்கோள். 'நீ வைக்கும் பொற்குடம் ஏதோ உன்னை அறிவிக்கைக்கு?' என்ன, 2. (மாம்) "இங்கும்மோடு ஒருபாடுழல்வான் ஓரடியானுமுளன்" என்கிறபடியே, நாகபாசப்ரஹ்மாஸ்த்ரங்களாலே நலிந்தவன்றைக்கும் உடன் கேடனாய், விடாதே நிற்கைக்கு ஓரடியான் வந்தானென்று விண்ணப்பம் செய்யுங்கோள். இதுக்கு முன் செய்ததன்றோ மேல் செய்வது? என்ன,–3. (மாம்) "प्रदीयतां दाशरथाय मैथिली" (ப்ரதீயதாம் தாசரதாய மைதிலீ) என்று இங்குற்றைக்கு நல்

இப்படிச் சொன்னவுடன், சரி, அப்படியே ராமபிரானிடம் விண்ணப்பம் செய்கிறோம்; "நான் அவ்விராவணனால் கடுஞ்சொல் பேசப்பட்டேன்" [ரா-யு 17-14] என்றும், 'ராகவரை சரணமடைந்தேன்' [ரா-யு 17-14] என்றும் இரண்டு விஷயத்தைச் சொன்னாயாகில், ராவணன் கடிந்தபடியை முதலில் சொல்லுவதோ? அல்லது சரணமடைந்த உன்னை அறிவிப்பதோ? என்ன,– 1. (என்னை அறிவியுங்கள்) அவனுடைய கடுமைக்குப் பழிவாங்குவது நான் ராமபிரானுக்கு ஆளானாலன்றோ, ஆகையால் முதலில் என்னை விண்ணப்பம் செய்யுங்கள். 'நீ நிறை பொற்குடத்தையோ காணிக்கையாகக் கொண்டு வந்திருக்கிறாய், சக்கரவர்த்தித் திருமகற்கு உன்னை அறிவிப்பதற்கு' என்ன, 2. (என்னை) "இங்கும்மோடு ஒருபாடுழல்வான் ஓரடியானும் உளன்" [திருவாய் 8-3-7] என்கிறபடியே நாகபாசம், பிரம்மாஸ்திரம் ஆகியவற்றாலே துன்புற்றபோதும் துணையிருப்பவனாய் விடாமலிருப்பதற்கு ஓர் அடியான் வந்தான் என்று விண்ணப்பம் செய்யுங்கள் என்கிறான். 'இதற்கு முன் செய்ததைக் கொண்டன்றோ மேல் செய்யப்போவதை அளவிடலாம்; இதுக்கு முன் நன்மை ஏதேனும் செய்ததுண்டோ' என்ன 3. (என்னை) "ராமபிரானிடம் மைதிலிப்பிராட்டியானவள் சேர்ப்பிக்கப்படட்டும்" [ரா-யு 14-3] என்று முன்னமே ராவணஸபையில் நல் வார்த்தை சொன்ன என்னை. 'நெஞ்சாறச் சொல்லாமல் நாக்குநுனியாலே

வார்த்தை சொன்ன என்னே. 'நுனி நாக்காலே ஒரு வார்த்தை சொன்னுயாகில், இத்தால் பெற்றதென்ன? அதுவோ பிராட்டி இங்கே எழுந்தருளி வந்தது' என்ன,– 4. (மாம்) **''यावन्न गृह्णन्ति शिरांसि बाणा रामेरिता राक्षसपुङ्गवानां''** (யாவந்ந க்ருஹ்ணந்தி சிராம்ஸி பாணு ராமேரிதா ராக்ஷஸ புங்கவாநாம்) என்றும், **''विधमेच्च पुरीं लङ्कां''** (விதமேச்ச புரீம் லங்காம்) என்றும் ராவணன் முன்னே பெருமாள் பெருமைகளைச் சொல்லி, **''ऋक्सामे च गेष्णौ''** (ருக் ஸாம ச கேஷ்ணௌ) என்று அரசு புலவரான வேதங்களோபாதி பெருமாள் கீர்த்திபடஹமான என்னே. ''இதுவும் **'गुरुत्वाद्धितमिच्छता'** (குருத்வாத் ஹிதமிச்சதா) என்று ராவணஸ்நேஹத்தாலே ப்ரத்யவாயபுரஸ்ஸரமாக ஹிதம் சொன்னவத்தனையன்றோ; இப்படி ராவணபக்தனுன உன்னையோ அறிவிக்கிறது?'' என்ன,– 5. (மாம்) **''परुषितस्तेन-अवमानितश्च''** (பருஷிதஸ்தேந அவமாநிதச்ச) என்று இவ்வுத்கர்ஷம் பொறுமையாலே பருஷித்துத் தள்ளிவிடப்பட்ட என்னே. **''ज्येष्ठो मान्यः पितृसमः''** (ஜ்யேஷ்டோ மாந்ய: பித்ருஸம:) என்று நீதானே சொல்லிற்றில்லையோ? தமையன் ஒரு வார்த்தை

ஒரு வார்த்தை சொல்லிவிட்டதால் என்னபயன்? நீ சொல்லிவிட்டதால் பிராட்டி இங்கு எழுந்தருளி விட்டாளோ?' என்ன, 4. (என்னை) ''ராமனுல் விடப்பட்ட அம்புகள் ராக்ஷஸர் தலைவர்களின் தலைகளைக் கொய்வதற்கு முன்னுல் சீதையை விடு'' [ரா-யு 14-4] என்றும், ''இலங்காபுரியை ராம பிரான் அழித்துவிடுவார்'' [ரா-ஸு 26-21] என்றும் ராவணனுக்கு முன்னுல் ராமபிரானுடைய பெருமைகளைச் சொல்லி, ''அந்தப் பரம புருஷனுக்கு ருக்வேதமும் ஸாமவேதமும் பாடகர்கள்'' [சாந் 1-8] என்று புருஷோத்தமனுக்கு ஆஸ்தான கவிகளான வேதங்களைப்போலே ராமபிரானின் புகழைப் பறைசாற்றும் என்னை. ''இதுவும், 'தனக்குத் தமயனுகையாலே நன்மையை விரும்பிச் சொல்லப்பட்டது' [ரா-யு 16-24] என்று ராவணனிடம் அன்பாலே, மீறினுல் வரும் தோஷத்தையும் சொல்லி நன்மை சொன்னவித்தனையன்றோ? இப்படி ராவணபக்தனுன உன்னையோ அறிவிக்கிறது?'' என்ன,-5. (என்னை) ''அவனுல் கடியப்பட்டேன்; அவமதிக்கவும் பட்டேன்'' [ரா-யு 17-14] என்று என்னுடைய இப்பெருமையைப் பொறுக்கமாட்டாமையாலே ராவணனுலே கடிந்து தள்ளிவிடப்பட்ட என்னை. '''தமயன் கொண்டாடத்தக்கவன்; தந்தையை ஒத்தவன்' [ரா-யு 16-17] என்று நீதானே சொல்லவில்லையோ? தமயன் ஒரு கடுமை

சொன்னானாகில் இது என்ன தப்பாக வந்தாய்? 6. (மாம்) "त्यक्त्वा पुत्रांश्च दारांश्च" (த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச) என்று பாருஷ்யம் பொறுக்கமாட்டாமையாலே, "आत्मा वै पुरुषस्य दाराः" (ஆத்மா வை புருஷஸ்ய தாரா:) என்றும், "आत्मा वै पुत्रनामासि" (ஆத்மா வை புத்ரநாமாஸி) என்றும் என்னோபாதியான இவர்களை உட்படவிட்டு அவனோடு துவக்கற்ற என்னை. "நீ அவனோடு துவக்கற்றால் லாபமென்? இத்தலையில் ஒரு பற்றாசு இல்லையோ?" என்ன, 7. (மாம்) "राघवं शरणं गतः" (ராகவம் சரணம் கத:) என்று, "தயர தற்கு மகன் தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்றிருக்கிற என்னை. 8. (மாம்) "आत्मानं सर्वथा रक्ष पुरीं चेमां सराक्षसां" (ஆத்மாநம் ஸர்வதா ரக்ஷ புரீம் சேமாம் ஸராக்ஷஸாம்) என்று பருஷிக்கிற ராவணனோடும், அவனோடு சேர்ந்தாரோடும் வாசியற ஹிதஞ்சொல்லுகையாலே, "आनुकूल्यमिति प्रोक्ता सर्वभूतानुकूलता" (ஆநுகூல்யமிதி ப்ரோக்தா ஸர்வபூதாநுகூலதா) என்கிற ஆநுகூல்ய ஸங்கல்பமும், "जातक्रोधो विभीषणः" (ஜாதக்ரோதோ விபீஷண:) என்றும்,

---

யான வார்த்தை சொன்னால் அதையொரு தப்பாகக் கொண்டோ வந்தாய்?" என்ன,–6. (என்னை) "பெண்டு பிள்ளைகளை விட்டு ராகவரை சரண மடைந்தேன்" [ரா-யு 17-14] என்று அவனுடைய கொடுமை பொறுக்க மாட்டாமல், "மனைவியானவள் மனிதனுக்குத் தானாகவேயிருப்பவள்" [ ] என்றும், "புத்திரன் என்னும் பெயர்கொண்ட நானாகவே யிருக்கிறாய்"[மந்த்ரப்ர 2-11-33]என்றும் என்னையொத்த இவர்களையும்விட்டு அவனோடு உறவறுத்துக்கொண்ட என்னை. 'நீ அவனோடு உறவற்றதால் பயனென்? இவரோடு ஓர் உறவில்லையே' என்ன–, 7. (என்னை) "ராகவரை சரணடைந்தேன்" [ரா-யு 17-14] என்று, "தயரதற்கு மகன் தன்னை யன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" [திருவாய் 3-6-8] என்றிருக்கிற என்னை. 8. (என்னை) சரணாகதியின் ஆறுவகைகளையும் குறைவற அனுஷ்டித்த என்னை. "உன்னை எல்லாவிதத்திலும் நீ ரக்ஷித்துக்கொள்; அரக்கரோடு கூட இவ்விலங்கையையும் காப்பாற்றிக்கொள்" [ரா-யு 16-25] என்று கடுஞ்சொல்லுரைக்கும் இராவணனுக்கும் அவனைச்சேர்ந்தவர்களுக்கும் நன்மை சொல்லுகையாலே, "எல்லா உயிர்கட்கும் அநுகூலனாயிருப்பது ஆநுகூல்யமெனப்படுகிறது" [லக்ஷ்மீதந்த்ரம் 17-66] என்கிற ஆநுகூல்ய ஸங்கல்பமும், "கோபங்கொண்ட விபீஷணன்" [ரா-யு 16-17] என்றும்,

“ क्रुद्धो हन्याद्गुरूनपि ” (க்ருத்தோ ஹந்யாத் குருநபி) என்றும் ராவணனைக்கொல்ல ப்ராப்தமாயிருக்க, “उत्पपात गदापाणिः” (உத்பபாத கதாபாணி:) என்று கையிலே கதையிருக்கக் கொல்லாதே போந்தவனுகையாலே, “प्रातिकूल्यञ्च भूतानां सर्वेषां न समाचरेत्” (ப்ராதிகூல்யஞ்ச பூதாநாம் ஸர்வேஷாம் ந ஸமாசரேத்) என்கிற ப்ராதிகூல்யவர்ஜநமும் “सुग्रीवश्चाभिषेचितः” (ஸுக்ரீவச்சாபிஷேசித:) என்று ஸோதாஹரணமாகக்கண்டு நம்மை ரக்ஷிப்பாரென்று அறுதியிடுகையாலே, “रक्षिष्यत्यनुकूलान्न इति या सुदृढा मतिः स विश्वासो भवेत्” (ரக்ஷிஷ்யத்யநுகூலாந் ந இதியா ஸுத்ருடா மதி:। ஸ விச்வாஸோ பவேத்) என்கிற ரக்ஷிஷ்யதீதி விச்வாஸமும், “ भवन्तं शरणङ्गतः ” (பவந்தம் சரணங்கத:) என்று உம்மையே ரக்ஷகராகப் பற்றினேன் என்கையாலே, “गोपायिता भवेत्येवं गोप्तृत्ववरणं तथा” (கோபாயிதா பவேத்யேவம் கோப்த்ருத்வவரணம் ததா) என்கிறகோப்

“கோபங்கொண்டவன் பெரியோரையும் கொல்லுவான்” [ரா-ஸு 55-5] என்றும் ராவணனைக் கொல்லவேண்டியது முறையாயிருக்க, ‘‘கதையைக் கையிர்கொண்டு உயரக்கிளம்பினுன்’’ [ரா-யு 16-16] என்று கையிலே கதையுமிருக்க, ‘‘எல்லா உயிர்களுக்கும் திங்கை விளைக்கலாகாது’’ [லக்ஷ்மீதந்த்ரம் 17-67] என்கிற ப்ராதிகூல்ய வர்ஜனமும், ‘‘சுக்கிரீவன் அபிஷேகம் செய்விக்கப்பட்டதையும், வாலிவதம் செய்யப்பட்டதையும் கேட்டு வந்திருக்கிறுன் விபீஷணன்’’ [ரா-யு 17-66] என்று உதாஹரணத்தோடு ராமனுடைய ரக்ஷகத்வத்தைக்கண்டு, நம்மையும் ரக்ஷிப்பாரென்று அறுதியிடுகையாலே,

‘‘ஶக்தே: ஸௌபஸதத்வாச்ச க்ருபாயோகாச்ச ஶாச்வதாத்।
ஈஶேஶிதவ்யஸம்பந்தாதநிதம்ப்ரதமாதபி॥
ரக்ஷிஷ்யத்யநுகூலாந்ந இதி யா ஸுத்ருடா மதி:।
ஸ விச்வாஸோ பவேத் ஶக்ர (தேவி) ஸர்வதுஷ்க்ருதநாஶந:॥

[லக்ஷ்மீதந்த்ரம் 17-70, 71; ப்ரச்நஸம்ஹிதை 54-26, 27]

[சக்தியினுலும், ஸௌலப்யத்தாலும்,நித்தியமான கருணையினுலும், நியமிக்கும் அவனுக்கும்,நியமிக்கப்படும் இவனுக்குமுள்ள அநாதியான உறவாலும். அன்புடையாரான நம்மை ரக்ஷித்தருளுவான் என்னும் உறுதியான அறிவு விச்வாசம் என்று சொல்லப்படும்; அது எல்லாப்பாபத்தையும் அழிக்கும்.] என்கிற மஹாவிச்வாஸமும், “உம்மை சரணமடைந்தேன்” [ரா-யு 19-5] என்று உம்மையே ரக்ஷகராகப் பற்றினேன் என்கையாலே,

‘‘கருணுவாநபி வ்யக்தம் சக்த: ஸ்வாம்யபி தேஹிநாம்।
அப்ரார்த்திதோ ந கோபாயேதிதி தத் ப்ரார்த்தநாமதி:॥
கோபாயிதா பவேத்யேவம் கோப்த்ருத்வவரணம் ததா॥

[லக்ஷ்மீதந்த்ரம் 17-72, 73; ப்ரச்நஸம்ஹிதை 54-28, 29]

த்ருத்வவரணமும், "भवद्गतं मे राज्यञ्च जीवितञ्च सुखानि च" (பவத்கதம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகாநி ச) என்று பலபரந்யாஸம் பண்ணுகையாலே, "फले स्वाम्यवियुक्तता। केशवार्पणपर्यन्ता ह्यात्मनिक्षेप उच्यते" (பலே ஸ்வாம்யவியுக்ததா। கேசவார்ப்பணபர்யந்தா ஹ்யாத்மநிக்ஷேப உச்யதே) என்கிற ஆத்மநிக்ஷேபமும், "तेन चास्म्यवमानितः" (தேந சாஸ்ம்யவமாநித:) என்று பரிபூதனுய் கையைத் தூக்கிவிடுகையாலே, "इति या गर्वहानिस्तद्दैन्यं कार्पण्यमुच्यते" (இதி யா கர்வஹாநிஸ் தத்தைந்யம் கார்ப்பண்ய முச்யதே) என்கிற கார்ப்பண்யமும், ஆக இப்படி சரணுகதியினுடைய ஷட்ப்ரகாரமும் குறையாதபடி பண்ணின என்னை.

[கருணையுடையவனுயினும், சக்தியை உடையவனுகப் பிரஸித்தனுயினும், சேதனர்க்கு ஸ்வாமியாயினும் பிரார்த்திக்காமல் ரக்ஷிக்கமாட்டான் என்னும் எண்ணத்தால் 'எனக்கு ரக்ஷகனுவாயாக' என்று பிரார்த்திக்கும் புத்தியே 'கோப்த்ருத்வவரணம்' எனப்படுகிறது] என்கிற கோப்த்ருத்வவரணமும், "எனக்கு ராஜ்யமும், உயிரும், இன்பங்களும் உம்மிடமிருக்கின்றன" [ரா-யு 19-6] என்று பலத்தையும், தன் பாரத்தையும் (சுமையையும்) எம்பெருமானிடம் ஸமர்ப்பிக்கையாலே

"தேந ஸம்ரக்ஷ்யமாணஸ்ய பலே ஸ்வாம்யவியுக்ததா।
கேசவார்ப்பணபர்யந்தா ஹ்யாத்மநிக்ஷேப உச்யதே॥"

[லக்ஷ்மீதந்த்ரம் 17-74; ப்ரச்நஸம்ஹிதை 54-30]

[அந்த பகவானுல் ரக்ஷிக்கப்படும் இவனுக்குப் பலத்தில் உரிமையற்றிருக்கையும், கேசவனுகிற அவனிடம் அனைத்தையும் ஸமர்ப்பிப்பதை முடிவாகக் கொண்டதுமான நிலை 'ஆத்ம நிக்ஷேபம்' எனப்படுகிறது] என்கிற ஆத்மநிக்ஷேபமும், "அந்த ராவணனுல் அவமதிக்கப்பட்டேன்" [ரா-யு 19-4] என்று அவமதிக்கப்பட்டவனுய்க் கையைத் தூக்கிவிடுகையாலே,

"த்யாகோ கர்வஸ்ய கார்ப்பண்யம் ச்ருதசீலாதிஜந்மந:।
அங்கஸாமக்ர்யஸம்பத்தேரசக்தேரபி கர்மணும்॥
அதிகாரஸ்ய சாஸித்தேர் தேசகாலகுணக்ஷயாத்।
உபாயா நைவ ஸித்தயந்தி ஹ்யபாயபஹுலாஸ் ததா॥
இதி யா கர்வஹாநிஸ் தத் தைந்யம் கார்ப்பண்யமுச்யதே॥"

[லக்ஷ்மீதந்த்ரம் 17-67...69; 54-24...26]

[கல்வி, கேள்வி, குணம் முதலியவற்றுலுண்டாகும் கர்வத்தின் அழிவு கார்ப்பண்யமாகும்; 'அங்கங்களும், துணைப்பொருள்களும் துர்லபமாகையாலும், கருமங்கள் அநுஷ்டிக்க அரியனவாகையாலும்,(அத்யந்த பரதந்திரனுன)இச்சேதநனுக்கு (ஸ்வப்ருத்திருபமான இவற்றில்) அதிகாரமில்லாமையாலும், தேசம், காலம், குணம் முதலியவை நேராமையாலும், உபாயங்கள் ஸித்திப்பதில்லை; அப்படியே அவை அபாயம் நிறைந்தவையாயுமிருக்கின்றன' என்று யாதொரு கர்வஹானியுள்ளதோ, அந்த தீனத்தன்மையே 'கார்ப்பண்யம்' எனப்படுகிறது:] என்கிற கார்ப்பண்யமும் ஆக இப்படி சரணுகதியின் ஆறு விதங்களையும் குறையாதபடி பண்ணின என்னை.

9. (மாம்) "अहमस्म्यपराधानामालयोऽकिञ्चनोऽगतिः। त्वमेवोपाय-भूतो मे भवेति प्रार्थनामतिः॥" (அஹமஸ்ம்யபராதாநாமாலயோ ऽகிஞ்சநோऽகதி: த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த் தநாமதி:) என்கிறபடியே விபீஷணனாய், துர்வ்ருத்தனான ராவணப்ராதாவாகையாலே அபராதாநாமாலயமாய், உபாயாந்தரமில்லாமையாலே அகிஞ்சநனாய், ராவணனுமகப் படத்தள்ளிவிட்டபடியாலே அநந்யகதியாய், பெருமாளையே உபாயமாகப் பண்ணினபடியாலே * த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதியை உடையனான என்னை. 10. (மாம்) "उत्तरं तीरमासाद्य" (உத்தரம் தீரமாஸாத்ய) என்கையாலே, * அக்கரையென்னுமனத்தக்கடலுளழுந்தி உன் பேரருளால் இக்கரையேறி இளைத்திருக்கிற என்னை. 11. (மாம்) "परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च" (பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச) என்று அங்குள்ள பற்றுசையெல்லாம் போக்கிட்டு, "खस्थ एव व्यतिष्ठत" (கஸ்த

---

9. (என்னை) "நான் குற்றங்களுக்கு ஓர் இருப்பிடமாயிருப்பவன்; (என்னை ரக்ஷித்துக்கொள்ள) ஒரு உபாயமுமற்றவனாயிருக்கிறேன்; (உன்னையொழிய) வேறு கதியில்லாதவனாயிருக்கிறேன்; நீயே எனக்கு உபாயமாக ஆவாயாக என்று பிரார்த்திக்கும் புத்தியே சரணாகதி" [அஹிர்புத்ந்யஸம்ஹிதை 37-30] என்கிறபடியே, விபீஷணன் [விதவிதமாக பயங்கரனாயிருப்பவன்] என்று பெயரையுடையவனாய், தீயொழுக்கமுள்ள ராவணன் தம்பியாகையாலே குற்றங்களுக்கெல்லாம் கொள்கலமாய், வேறு உபாயமில்லாமையாலே கைம்முதலற்றவனாய், தமயனான ராவணனுமுட்படத் தள்ளிவிடுகையாலே கதியற்றவனாய், ஸ்ரீராமபிரானையே உபாயமாக ப்ரபத்தி பண்ணினபடியாலே 'நீயே எனக்கு உபாயமாவாயாக' என்று பிரார்த்திக்கும் புத்தியையுடைய என்னை. 10. (என்னை) "கடலின் வடகரையை அடைந்து ஆகாயத்தில் நின்றான்" [ரா-யு 17-8] என்கையாலே, "அக்கரையென்னும் அனத்தக் கடலுள் அழுந்தி உன் பேரருளால் இக்கரையேறி இளைத்திருந்தேனை" [பெரியாழ் திரு 5-3-7] என்னும் நிலையிலிருக்கும் என்னை. 11. (என்னை) "இலங்கையும், நண்பர்களும், செல்வங்களும் என்னால் கைவிடப்பட்டது" [ரா-யு 19-5] என்று அங்கு நான் பற்றிநின்றவற்றையெல்லாம் விட்டு "ஆகாயத்திலேயே நிலை நின்றான்" [ரா-யு 17-8] என்று ஆகாசத்திலே

ஏவ வ்யதிஷ்டத) என்று ஆகாசத்திலே தடுமாடுகிற என்னை. 12, (மாம்) "सोऽध्वनः पारमाप्नोति तद्विष्णोः परमं पदं" (ஸோऽத்வந: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பதம்) என்று வரும் வழியெல்லாம் வந்து விஷ்ணுபதத்தைப் பற்றின என்னை. 13. "प्रच्युतो वा आस्माल्लोकादागतो देवलोकम्" (ப்ரச்யுதோ வா அஸ்மால்லோகாதாகதோ தேவலோகம்) என்றும், "அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லேன்" என்றும் சொல்லுகிற படியே, ராவணகோஷ்டியில் நின்றும் புறப்பட்டு ராம கோஷ்டியிற்புகப்பெறுதே ஆந்தராளிகனுயிருக்கிற என்னை. 14. (மாம்) "இழை நல்லவாக்கையும் பையவே புயக்கற்றது" என்கிறபடியே, நீங்கள் அறிவித்தால் அது உண்டாய், அறிவியாதபோது இல்லையாம்படியாயிருக்கிற என்னை.

'ஆகிறது, உன் அபேக்ஷயை அறிவித்தாயாகில் ஆறி விண்ணப்பம் செய்கிறோம்' என்ன,-(க்ஷிப்ரம்) ஒண்ணுது; இப்போதே வேணும். 'இப்படிப் பதறுகிறதென்?' என்ன 2. (க்ஷிப்ரம்) 'விரையும் கார்யம் தூங்கேல்; தூங்கும் கார்யம்

தடுமாறுகிற என்னை. 12. (என்னை) "அந்த முக்தன் அர்ச்சிராதி கதியின் அக்கரையில் சென்று விஷ்ணுவின் பரமபதத்தை அடைகிருன்.' [கட 1-3-9] என்றுப்போலே வரவேண்டிய வழியெல்லாம் வந்து விஷ்ணுபதத்தைப் (ராமபிரானின் திருவடியைப்) பற்றி நிற்கும் என்னை. 13. (என்னை) "தேவ லோகத்தை அடைந்து அந்த லோகத்தினின்றும் நழுவினவன்" [ ] என்றும், "அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லேன்" [திருவாய் 5-7-2] என்றும் சொல்லுகிறபடியே, ராவணகோஷ்டியில் நின்றும் புறப்பட்டு ராமகோஷ்டியிலும் புகப்பெறுதே, நடுவில் நிற்பவனுயுள்ள என்னை. 14. (என்னை) "இழை நல்லவாக்கையும் பையவே புயக்கற்றது" [திருவாய் 9-5-10] என்கிறபடியே, நீங்கள் அறிவித்தால் என் உடம்பு உளதாகும்; இல்லையேல் இலதாகும் என்னும்படியான நிலையிலிருக்கும் என்னை.

'அது சரி; உன் விருப்பத்தைக் தெரிவித்துவிட்டாய்; இனி நாங்கள் பொறுத்திருந்து ராமபிரானிடம் விண்ணப்பம் செய்கிறோம்' என்று வானரர்க்குக் கருத்தாகக்கொண்டு சொல்லுகிறுன்,-1, (விரைவில்) கூடாது; இப்போதே அறிவிக்கவேணும்; 'இப்படிப் பதறுவானேன்?' எனில்:

விரையேல்' என்னுமது சொல்லக்கேட்டும் அறியீர்களோ? 'விரையும் கார்யமானபடியென்?' என்ன,—3. (க்ஷிப்ரம்) 'चञ्चलं हि मनः'' (சஞ்சலம் ஹி மந:) என்றும், "चला हि प्राणिनां मतिः'' (சலா ஹி ப்ராணிநாம் மதி:) என்றும் * நின்றவா நில்லா நெஞ்சாயன்றோ எல்லாருமிருப்பது. ஆனபின்பு, எனக்குப் பிறந்த ஆநுகூல்யம் பிரிவதற்கு முன்னே விண்ணப்பம் செய்யுங்கோள். 4. (க்ஷிப்ரம்) "क्षिप्रं रामाय संसध्वं सीतां हरति रावणः'' (க்ஷிப்ரம் ராமாய ஸம்ஸத்வம் ஸீதாம் ஹரதி ராவண:) என்று பிராட்டி சொன்னபோதே தேவதைகள் அறிவியாமையாலே கண்டீர்களோ ரஜநீசரன் வசத்திலே அகப்பட்டாள்? அப்படியே நானும் மனோ ரஜநீசரன் வசத்திலேஅகப்படுவதற்கு முன்னே அறிவியுங்கோள். 5 (க்ஷிப்ரம்) "வந்தொல்லை கூடுமினோ'' என்றும், "ஒல்லை நீ போதாய்'' என்றும் 'சடக்கென வா' என்று நீங்கள் அழைக்க ப்ராப்தமாயிருக்க நான் அபேக்ஷிக்கும்படியாவதே! 6. (க்ஷிப்ரம்

---

2. (விரைவில்) 'விரையும் காரியம் தூங்கேல்; தூங்கும் காரியம் விரையேல்' என்று பழமொழி சொல்லுவதையும் கேட்டறியீர்களோ? 'உன் காரியம் விரையவேண்டிய காரியமென்பது எப்படி' எனில்: 3. (விரைவில்) "மனம் நிலைநில்லாதது'' [கீதை 6-34] என்றும், "பிராணிகளின் புத்தி நிலையற்றது'' [ ] என்றும், "நின்றவா நில்லாநெஞ்சு'' [பெரியதிரு 1-1-4] என்றும் சொல்லும்படியிருப்பதன்றோ மனிதர்களின் நெஞ்சு. ஆகையால் எனக்குப்பிறந்த ராமபக்தி என்னைவிட்டுப் பிரிவதற்குள் அவரிடம் அறிவியுங்கள். 4. (விரைவில்) 'சீதையை ராவணன் அபஹரித்துச் செல்லுகிறான்' என்று விரைவில் ராமபிரானிடம் விண்ணப்பம் செய்யுங்கோள்'' [ரா-ஆ 48-30] என்று பிராட்டி சொன்னபோதே வநதேவதைகள் ராமபிரானுக்கு அறிவிக்காமையாலன்றோ ராக்ஷஸனான பத்துத்தலை ராவணனிடம் அகப்பட்டாள்; அப்படியே நானும் "தசேந்த்ரியாநநம் கோரம் யோ மநோரஜநீசரம்'' என்கிறபடியே பத்து இந்திரியங்களாகிற தலைகளையுடைய கொடியனான மனமெனும் அரக்கன் வசப்படுமுன் விண்ணப்பம் செய்யுங்கள். 5. (விரைவில்) "வந்தொல்லை கூடுமினோ'' [திருப்பல்-4] என்றும், "ஒல்லை நீ போதாய்.' [திருப்பாவை-15] என்றும் 'விரைவில் வா என்று நீங்கள் அழைக்கவேண்டியது தகுந்ததாயிருக்க, நான் வேண்டும்படியாயிருப்பதே! 6. (விரைவில் என்னை அறிவியுங்கள்) "அனுமனே!

மாம் நிவேதயத) **"जीवन्तीं मां यथा रामस्संभावयति कीर्तिमान्। तत्त्वया हनुमन् वाच्यः"** (ஜீவந்தீம் மாம் யதா ராமஸ் ஸம்பா வயதி கீர்த்திமாந்। தத் த்வயா ஹநுமந் வாச்ய:) என்கிற படியே, என் ஸத்தை கிடக்கிறபோதே அவர் கைக் கொண்டாராய்ப் புகழ் படைக்கும்படி அறிவித்துக்கொள் ளுங்கோள். 7. (க்ஷிப்ரம் நிவேதயத) **"त्यक्त्वा पुत्रांश्च दारांश्च"** (த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச) என்னும்படி, * மாதரார் கயற்கணென்னும் வலையுள்பட்டு அழுந்துவேனைப் போதரே யென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருகவைத்தார். ஆனபின்பு, **"दत्तमस्याभयं"** (தத்தமஸ்யா பயம்) என்று முற்படுவதற்கு முன்னே நீங்கள் முற்படுங் கோள்; 8. (க்ஷிப்ரம் நிவேதயத) என்னுற்றுமையாலே இன்னமொருகால் சரணகதி பண்ணி, **"तद्द्वयं सकृदुच्चारो भवति"** (தத் த்வயம் ஸக்ருதுச்சாரோ பவதி) என்றும், **"सकृदेव प्रपन्नाय"** (ஸக்ருதேவ ப்ரபந்நாய) என்றும், ஸக்ருத்ப்ர யோகமே அமைந்திருக்கிற ப்ரபத்திஸ்வரூபத்திற்கு ஹாநி வருவதற்கு முன்னே அறிவியுங்கோள். 9. (க்ஷிப்ரம் நிவேத

நான் உயிரோடிருக்கும்போது ராமபிரான் என்னைக் கொண்டாடும் படியாக நீ வார்த்தை சொல்லவேண்டும்" [ரா-ஸு 39-9] என்கிறபடியே, என் உயிர் இருக்கும்போதே அவருக்கு என்னைக் கைக்கொண்ட புகழ் உண்டாகும்படி அறிவியுங்கள். 7. (விரைவில் அறிவியுங்கள்) "பெண்டு பிள்ளைகளை விட்டு" [ரா-யு 17-14] என்று நானே சொல்லும்படி, *'மாதரார் கயற்கணென்னும் வலையுள்பட்டழுந்துவேனைப் போதரே யென்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன் பால் ஆதரம் பெருக' வைத் தார். ஆகையால், "இவனுக்கு என்னால் அபயமளிக்கப்பட்டது' [ரா-யு18-35] என்று சொல்லத்தான் போகிறார்; அவர் முந்திக்கொண்டு சொல்லுவதற்கு முன் நீங்கள் முற்படப் புருஷகாரம் செய்து பெருமை பெறுங்கள். 8. (விரைவில் அறிவியுங்கள்) என் ஆற்றாமையாலே மற்றுமொருமுறை சரணம் புகுந்து, "அந்த த்வயத்தை ஒருகால் உச்சரித்தால் போதும்" [த்வயோபநிஷத்] "ஒருகாலே சரணம் புகுந்தவனை" [ரா-யு 18-33] என்று ஒரு தடவை செய்வதே போதுமாயிருக்கிற ப்ரபத்தி ஸ்வரூபத் திற்குக் குறை வருவதற்கு முன்னே அறிவியுங்கள். 9. (விரைவில் அறிவியுங்கள்) "உனக்குச் சொல்லப்பட்ட இந்த நான்காம் உபாயம்

---

* திருமாலை 16

யத) "उपायोऽयं चतुर्थस्ते प्रोक्तः शीघ्रफलप्रदः" (உபாயோऽயம் சதுர்த்தஸ்தே ப்ரோக்த: சீக்ரபலப்ரத:) என்றும், "ताव दार्तिस्तथा वाञ्छा तावन्मोहस्तथाऽसुखम्। यावन्न याति शरणं" (தாவதார்த்திஸ் ததா வாஞ்சா தாவந்மோஹஸ் ததாऽஸுகம்। யாவந்ந யாதி சரணம்) என்றும் சொல்லுகிற உபாய ஸ்வ பாவத்தாலே பலித்துக்கொண்டு நிற்கவாயிற்றுப் புகுகிறது. அதுக்குமுன்னே நீங்களும் ஆநுகூல்யம் பண்ணினீர்களாக அறிவியுங்கோள். 10. (க்ஷிப்ரம் மாம் நிவேதயத) பெருமாள், "यदि वा रावणः स्वयं" (யதி வா ராவண: ஸ்வயம்) என்று, ராவணனைத்தேடிப் பிடிக்கவாயிற்றுப் புகுகிறது; அதுக்கு முன்னே சடக்கென என்னை அறிவியுங்கோள். 11. (மாம் நிவேதயத) "तमेव शरणं गच्छ" (தமேவ சரணம் கச்ச) என்று சரண்யனை அறிவிக்கிற நீங்கள் ஒரு சரணாகதனை அறிவி யுங்கோள்

விரைவில் பலமளிப்பது' [லக்ஷ்மீதந்த்ரம் 17-75] என்றும், "எல்லாப் பாபங் களையும் போக்கடிக்கும் உன்னை எதுவரையில் சரணமடையவில்லையோ, அதுவரையிலேயே (செல்வத்தை இழந்ததினாலேற்படும்) வருத்தம்; அது வரையிலேயே (செல்வம் வேண்டுமென்னும்) ஆசை; அதுவரையிலேயே (ஆத்மஜ்ஞானமின்மையினாலேற்படும்) மோஹம்; அதுவரையிலேயே (பகவானை அடையாததினாலேற்படும்) துக்கம். (ஆர்த்தன், அர்த்தார்த்தி, கைவல்யநிஷ்டன், பகவத்ப்ராப்திகாமன் என்னும் நான்கு விதமான அதிகாரிகளுக்கும் ப்ரபத்தியே பலஸாதனம் என்று தாத்பர்யம்.)" [வி-பு 1-9-73] என்றும் சொல்லுகிற உபாயத்தின் தன்மையாலே என் விருப்பம் நிறைவேறத்தான் போகிறது; அதுக்கு முன்னே நீங்களும் எனக்கு நன்மை செய்தவர்களாவதற்காகவாவது அறிவியுங்கள். 10. (விரைவில் அறிவியுங்கள்) "ராவணன் தானேயாயிருந்தாலும் அழைத்து வா" [ரா-யு 18-35] என்று ராமபிரான் ராவணனைத் தேடிப் பிடித்தாவது திருத்த மநோரதித்திருக்கிறார்; அப்படிச் செய்துவிட்டால் அந்த மாபாவிக்கு தண்டனையில்லாமற்போகும்; அப்படியாவதற்கு முன் சடக்கென என்னை அறிவித்தீர்களானால், 'அவன் தம்பியாவது கிடைத் தானே' என்று ஆறியிருப்பார்; ஆகையால் விரைவில் அறிவியுங்கள். 11. (என்னை அறிவியுங்கள்) "அவனையே சரணமடை" [கீதை 18-62] என்று சரணமடையத்தகுந்தவனை எங்களுக்கு அறிவிக்கும் நீங்கள், சரணமடையும் என்னையும் அவனுக்கு அறிவியுங்கள்.

"ஆகிறது; இப்படி சடக்கென அறிவிக்கிறது ஆருக்கு? லங்கையிலே பரிசிதரான திருவடிக்கோ? படைக்கெல்லாம் நிர்வாஹகரான மஹாராஜர்க்கோ?" என்னில்: 1. (ராகவாய) 'इक्ष्वाकूणामियं भूमिः सशैलवनकानना'' (இக்ஷ்வாகூணுமியம் பூமிஸ் ஸைலவநகாநநா) என்று அத்திருவடியோடும், மஹா ராஜரோடும், மால்யவானேடும், சித்ரகூடத்தோடும் வாசியற ரக்ஷகராய், ꟷ பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆளுகிற பெருமாளுக்கு. 2. (ராகவாய) சரணுகதரக்ஷகரான குடியிலே பிறந்த பெருமாளுக்கு சரணு கதனுன என்னைச் சொல்லுங்கோள். 3. (ராகவாய) "सकृदेव प्रपन्नाय—अभयं ददामि—एतद्व्रतं मम" (ஸக்ருதேவ ப்ரபந் நாய-அபயம் ததாமி-ஏதத் வ்ரதம் மம) என்று சரணுகத ரக்ஷணத்திலே காப்புக்கட்டினவருக்குச் சொல்லுங்கோள். 4. (ராகவாய) "राघवाणामयुक्तोऽयंकुलस्यास्य विपर्ययः" (ராகவாணு மயுக்தோயம் குலஸ் யாஸ்ய விபர்யய:) என்றும், "अप्यसुप्रणयितां रघोः कुले न व्यहन्यत कदाचिदर्थिता" (அப்யஸுப்ரணயிநாம்

அது சரி; இப்படி விரைவில் அறிவிக்கவேண்டியது யாருக்கு? லங்கையிலே அறிமுகமான அனுமனுக்கோ? ஸேனைக்கெல்லாம் தலைவரான சுக்ரீவமஹாராஜருக்கோ? என்னில்: 1. (ராகவற்கு) "மலை, நீர்நிலை, காடுகளோடுகூடிய இந்த பூமி இக்ஷ்வாகு வமிசவத்தவர்க்குரியது" [ரா-கி 18-6] என்று த்ாஸபூதரான அவ்வனுமனேடும், அரசரான சுக்ரீவமஹாராஜரோடும், அசேதனமான மாலியவான், சித்திரகூடம் முதலிய மலைகளோடும் வித்தியாசமில்லாதபடி அனைத்தையும் ரக்ஷிப்பவராய், ꟷ 'பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராதே ஆள்கின்ற' ராமபிரானுக்கு அறிவியுங்கள். 2. (ரகுகுலத்தவர்க்கு) ரகுராக்ஷஸ ஸம்வாதம் முதலானவிடங்களில் சரணுகத ரக்ஷகர்களென்று பிரஸித்தர்களுடைய குடியிற்பிறந்த ராமபிரானுக்கு சரணமடைந்தவனுன என்னை அறிவியுங்கள். 3. (ராகவருக்கு) "ஒருகாலே சரணம் புகுந்தவனுக்கு அபயமளிக்கிறேன்; இது என் விரதம்" [ரா-யு 18-33] என்று சரணமடைந்தவர்களை ரக்ஷிப்பதற்குக் கங்கணங்கட்டி நிற்பவருக்கு என்னை அறிவியுங்கள். 4. (ராகவற்கு) "ரகுகுலத்துதித்தவர்களுக்கு இது தகாதது; இக்குலவொழுக்கத்திற்கு மாறுபட்டதாகும்" [ரா-பா 21-2] என்றும்,

ꟷ நாச்-திரு 11-3

ரகோ: குலே ந வ்யஹந்யத கதாசிதர்த்திதா) என்றும், அபேக்ஷித்தார் அபேக்ஷிதப்ரதாநம் பிறந்துபடைத்த தலைவர்க்குச் சொல்லுங்கோள். 5. (ராகவாய) **"अप्यहं जीवितं जह्यां-न हि प्रतिज्ञां संश्रुत्य"** (அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்-ந ஹி ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய) என்று தம்மை அழித்தும் ஆஶ்ரித ரக்ஷணம் பண்ணும் அவர்க்குச் சொல்லுங்கோள். 6. (ராகவாய மாம் நிவேதயத) * மாறில்போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்க்கு என்னை அறிவியுங்கோள். 7. (ராகவாய மாம் க்ஷிப்ரம் நிவேதயத) **"राघवस्य यशो हीयेत्"** (ராகவஸ்ய யசோ ஹீயேத்)என்று ஆர்ஷபரிஷத் ஸுக்ரீவகாக ப்ரமுகரை ரக்ஷித்துத் தேடிப் படைத்த புகழெல்லாம் என்னை ரக்ஷியாதபடியாலே இழக்கவாயிற்றுப் புகுகிறது; அதற்கு முன்னே சடக்கென அறிவியுங்கோள்.

"सति धर्मिणि धर्माः" (ஸதி தர்மிணி தர்மா:) என்று அவர் தம்மைப் பெற்றாலன்றோ புகழ்வேண்டுவது; **"प्राप्तःशत्रुरत-र्कितः"** (ப்ராப்த: சத்ருரதர்க்கித:) என்று சத்ருவாயிருக்கிற

"ரகுகுலத்திலுள்ளவர்களால், உயிரைக்கேட்பவர்களின் பிச்சையும் ஒரு போதும் வீணானதில்லை" [ரகுவம்சம் 11-2] என்றும், விரும்பினவர்கள் விரும்பியதைக் கொடுப்பதைப் பிறப்பிலேயே பெற்றிருக்கும் தலைவரான ராகவருக்குச் சொல்லுங்கள். 5. (ராகவனுக்கு) "நான் உயிரைவிட்டாலும் விடுவேனேயொழிய கொடுத்த வாக்கை விடமாட்டேன்" [ரா-ஆ10-19] என்று தம் உயிரைக்கொடுத்தும் அடியாரைக் காப்பாற்றும் அவருக்குச் சொல்லுங்கள். 6. (ராகவருக்குச் சொல்லுங்கள்) *'மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறுசேவகனார்க்கு' என்னை அறிவியுங்கள். 7. (ராகவற்கு என்னை விரைவில் அறிவியுங்கள்) "ராகவருடைய புகழ் குறையும்" [ரா-ஸு 37-57] என்று ரிஷிகள் குழு, சுக்கிரீவன், காகாசுரன் முதலியவர்களைக் காப்பாற்றியதால் முயன்று ஸம்பாதித்த புகழெல்லாம் என்னை ரக்ஷிக்காதபடியாலே இழக்கப்போகிறார்; அப்படி இழப்பதற்கு முன்னே விரைவில் அறிவியுங்கள்.

"சுவரைவைத்தே சித்திரமெழுதவேண்டும்"என்னும் உலகவழக்குப்படி அவர் உயிரோடிருந்தாலன்றோ புகழ் வேண்டியது; "பரிசீலியாத அடுத்துக்

---

* திருவாய் 6-1-10.

உன்னை அறிவிக்கையாவதென்? என்ன,- விபூதியாக சத்ருக்களானாலும் ஒரு பொல்லாங்கு நினைக்கவொண்ணாதாய்க்காணுங்கோள் அவர் பெருமையிருப்பது. 1. (மஹாத்மநே) "**मर्त्यानां मरणाद्भयं**" (மார்த்யாநாம் மரணாத்பயம்) என்கிற உங்களைப் போலேயன்றியிலே, "**उत्तमानां तु मर्त्यानामवमानात्परं भयं**" (**உத்தமாநாந்து மார்த்யாநாமவமாநாத் பரம் பயம்**) என்று, சரணாகத ரக்ஷணம் பண்ணிற்றிலோமென்று கர்ஹிக்கில் செய்வதென்? என்று பயப்படும்படியான பெருமாளுக்கு அறிவியுங்கோள். 2. (மஹாத்மநே) ஆத்மங்சப்தம் ஜீவவாசியாய், "**तदेवानुप्राविशत्। तदनुप्रविश्य सच्च त्यच्चाभवत्**" (ததேவாநுப்ராவிசத்। **ததநுப்ரவிச்ய, ஸச்ச த்யச்சாபவத்**) என்று தாழ்ந்து வந்தால் வரவொண்ணாதென்று ஏற்கவே புகுந்து கலந்து ஜ்ஞாநஸ்வரூபனென்று அவனைச்சொல்லும் சொல்லாலே தம்மைச் சொல்லலாம்படி ஜீவாந்தர்யாமியாய் இருக்கிறவர்க்கு என்னை அறிவியுங்கோள்.

கெடுக்கும் எதிரி" [ரா-யு 17-26] என்று எதிரியாயிருக்கும் உன்னை அறிவித்தால் அவர் உயிருக்கேயன்றோ ஆபத்து; ஆகையால் புகழுக்காக உன்னைச் சேரவிடமுடியுமோ? என்ன, 'இவ்வுலகம் முழுவதும் எதிரிட்டாலும் ஒரு தீங்கு நேரிடும் என்று நினைக்கவும் முடியாதபடியன்றோ அவர் பெருமையிருப்பது' என்கிறான் அடுத்தபடியாக. 1. (மஹாத்மாவுக்கு) "மனிதர்களுக்கு மரணத்தால் பயம்" [ ] என்கிற உங்களைப் போலன்றியிலே "உத்தம புருஷர்களுக்கோவெனில் அவமானத்தால் பெரிய பயமுண்டாகிறது" [ ] என்று 'சரணாகத ரக்ஷணம் பண்ணவில்லையேயென்று நிந்தித்தால் என்செய்வது?' என்னும் அவமானத்திற்கு பயப்படும்படியான பெருமையையுடைய ராமபிரானுக்கு அறிவியுங்கள். 2. (மஹாத்மாவுக்கு) 'ஆத்மங்' சப்தம் ஜீவனைச் சொல்லுவதாய் "உலகைப் படைத்து, அதையே பரம்பொருள் வியாபித்தது; அதை வியாபித்து சித்தாகவும் அசித்தாகவுமாயிற்று" [தை-ஆந-6] என்று இச்சேதனன் அறிவு, குலம் முதலானவற்றிலே தாழ்ந்து நிற்கும்போது சரணமடையப் பின்வாங்குவானே என்னும் எண்ணத்தால் ஏற்கனவே எங்கும் நிறைந்து கலந்து 'ஸத்' ஜ்ஞாநஸ்வரூபனென்று ஜீவனைச் சொல்லும் சொல் தம்மையும் குறிக்கும்படி ஜீவாந்தர்யாமியாயிருக்கிறவருக்கு என்னை அறிவியுங்கள்'

3. (மஹாத்மநே) 'ஆத்மந்' ஶப்தம் த்ருதிவாசியாய், "आपद्यपि स्वकार्येषु कर्तव्यत्वस्थितिर्धृतिः" (ஆபத்யபி ஸ்வகார்யேஷு கர்த்தவ்யத்வஸ்திதிர் த்ருதி:) என்று ஶத்ருதேஶமாகையாலே ஸாபாயமாயிருந்ததேயாகிலும் ரக்ஷகனுன தம்முடைய க்ருத்யத்திலே நிலையுடையவர் காணுங்கோள் என்றுறுகவும். அன்றியிலே, 4. (மஹாத்மநே) ஆத்மந்ஶப்தம் தேஹவாசியாய், "மஹாதேஹாய" என்கிறபடி. அதாவது-"तद्विश्वरूप वैरूप्यं रूपमन्यद्धरेर्महत्" (தத் விச்வருபவைருப்யம் ருபமந்யத் ஹரேர் மஹத்) என்றும், "न तस्य प्राकृता मूर्तिर्मांस मेदोऽस्थिसंभवा" (ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்திர் மாம்ஸ மேதோஸ்தி ஸம்பவா) என்றும், "नित्यं नित्याकृतिधरं" (நித்யம் நித்யாக்ருதிதரம்) என்றும் சொல்லுகிறபடியே யாரேனும் ஏதேனும் செய்யிலும் கற்கடித்துப் பல்முறித்துத்(ந்து) தங்களோடே போம்படி நித்யவிலக்ஷணவிக்ரஹராய்க் காணுங்கோள் இருப்பது. 5. (மஹாத்மநே) அன்றியிலே,

---

3. (மஹாத்மாவுக்கு) 'ஆத்மந்' சப்தம் தைரியத்தைச் சொல்லுவதாய், "ஆபத்து நேரும்போதும் தன் காரியத்தை முடிப்பதில் உறுதியாயிருக்கை தைரியமாகும்" [ ] என்று எதிரியின் இருப்பிடமாகையாலே அபாயமுள்ளதாயிருந்ததேயாகிலும், ரக்ஷகரான தம் ரக்ஷணச் செயலிலே உறுதியுடையவர் அவர்; என்னைக் கைவிடமாட்டார் என்பதாகவும் கொள்ளலாம். 4. (மஹாத்மாவுக்கு) 'ஆத்மந்' சப்தம் தேஹத்தைச் சொல்லுவதாய். 'பெரிய உடம்பை உடையவருக்கு' என்கிறபடி. அதாவது,— "ஹரியின் அந்த ரூபம், மற்ற உருவங்களைக்காட்டிலும் சிறந்ததாய், திரவியாந்தரமாய், பெரிதாயிருப்பது" [வி-பு 6-7-70] என்றும், "அவனுக்கு மாம்ஸம், மஜ்ஜை, எலும்பு இவைகளாலுண்டான ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ள உடம்பு கிடையாது" [வராஹ 14-41; வாயு 34-40] என்றும், "நித்தியமாயிருப்பவனுய், நித்தியமான தேஹத்தை உடையவனுயிருப்பவனே" [ ] என்றும் சொல்லுகிறபடியே, யாரேனும் இவனுக்கு ஏதேனும் தீங்கு செய்தாலும், கல்லைக்கடித்துப் பல்லை முறித்துக்கொண்டு போவாரைப்போலே, தங்களுடைய தீங்கு தங்களோடு போம்படி நித்தியமாய், மிகச்சிறந்ததாயிருக்கும் திருமேனியை உடையவராயன்றோ இருப்பது. ஆகையாலே என்னாலே அவருக்கு ஒரு தீங்கு வருமோ என்று ஐயமுறவேண்டா என்று கருத்து. 5. (மஹாத்மாவுக்கு) அன்றியிலே, 'ஆத்மந்' சப்தம் ஸ்வபா

ஆத்மஶப்தம் ஸ்வபாவவாசியாய், ஆஶ்ரிதவிஷயத்தில் அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகள் பண்ணியிருக்கை அவருக்கு வந்தேறியன்றிக்கே ஸ்வபாவமாயுடையராய்க் காணுங்கோள் இருப்பது. 6. (ராகவாய மஹாத்மநே) ஆத்மஶப்தம் பரமாத்மவாசியாய், ரகுகுலகுமாரராய், தம்மைத் தாழவிட்டாரேயாகிலும், அதுக்கிப்பால் தான் பரமாத்மாவாய்க் காணுங்கோள் இருப்பது. * யாருமோர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமானாகிலும் * யாருமோர் நிலைமையன் என அறிவெளிய எம்பெருமானாயிறே இருப்பது. வேதபுருஷனும், **“संबाहुभ्यांनमति संपतत्रै”** (ஸம்பாஹுப்யாம்நமதி ஸம்பதத்ரே) என்றும், **“द्यावापृथिवी जनयन् देव एकः”** (த்யாவாப்ருதிவீ ஜநயந் தேவ ஏக:) என்றும், **“वेदाहमेतं पुरुषं महान्तं”** (வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்) என்றும் இப்படி ஸுலபனாயிருக்கிற வஸ்துதான் அப்பெரிய வஸ்துவென்று சொன்னானிறே. வைதிகபுருஷனான விச்வாமித்ரபகவானும் **“रामं महात्मानं वेद्मि”** (ராமம் மஹாத்மாநம் வேத்மி)என்று சொன்னானிறே. அவனைச் சொல்லவேணுமோ?

வத்தைச்சொல்லுவதாய், அடியாருக்கு விரும்பியதைக் கொடுப்பதையும், விரும்பாததைத் தவிர்ப்பதையும் ஒரு கைம்மாறு கருதிச் செய்வதல்லாமல், இயற்கையாகவே செய்பவராயிருப்பவரன்றோ அவர். 6. (மஹாத்மாவான ராகவற்கு) ‘ஆத்மந்’ சப்தம் பரமாத்மாவைச் சொல்லுவதாய், ரகுகுலத் துதித்த பிள்ளையாய்த் தம்மைத் தாழ்த்திக்கொண்டு பிறந்தாராகிலும், முன்னும் பின்னும் பரமாத்மாவாயன்றோ தொழில் புரிகிறான்; பரமாத்மாவாயிருந்தபோதிலும் ராகவனாய் எளியனாயிருப்பவன். “யாருமோர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான்” [திருவாய் 1-3-4] ஆயிருந்த போதிலும், “யாருமோர் நிலைமையன் என அறிவெளிய எம்பெருமான்” [திருவாய் 1-3-4] ஆகவும் இருப்பவன். வேதபுருஷனும், “அனைத்துலகையும் உண்டாக்கும் ஒப்பற்ற தேவன் கால் கைகளோடு இவ்வுலகில் அவதரிக்கிறான்” [தை-நா 1-12] என்றும், “நான் இந்தப் புருஷனை மஹாத்மாவென்று அறிவேன்” [பு-ஸூ] என்றும், இப்படி ஸுலபனாயிருக்கும் வஸ்துதான் அப்பெரிய வஸ்து என்று சொன்னானன்றோ. வைதிக புருஷனான விச்வாமித்ரபகவானும், “ராமனை மஹாத்மாவென்று அறிவேன்” [ரா-பா 19-14] என்று சொன்னானன்றோ. அறிவாளியான அவன் சொன்னது பெரிதோ? “இவனே அக்காகுத்தன் என்று அறிந்தாள்”

"अयं स काकुत्स्थ इति प्रजज्ञे" (அயம் ஸ காகுத்ஸ்த இதி ப்ரஜஜ்ஞே) **"त्वमप्रमेयश्च"** (த்வமப்ரமேயஶ்ச) என்று தாரையென்று ஒரு கைம்பெண்டாட்டியகப்பட அறிந்ததும் உங்களுக்குத் தெரிகிறதில்லையா? 7. (மஹாத்மநே) ஆத்மஶப்தம் அர்க்காக்நிவாசியாய், **"रामदिवाकरः। शत्रुरक्षोमयं तोयमुपशोषं नयिष्यति"** (ராமதிவாகர:। ஶத்ருரக்ஷோமயம் தோயமுபஶோஷம் நயிஷ்யதி) என்றும், **"अभितः पावकोपमं"** (அபித: பாவகோபமம்) என்றும், "முளைக்கதிரை" என்றும், "கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே" என்றும் ஶத்ருக்களுக்கு தாஹகமாயன்றோ அவரிருப்பது. நீங்கள் அஞ்சாதே அவருக்கு அறிவியுங்கோள். 8. (மஹாத்மநே) அன்றியிலே, ஆத்மஶப்தம் மதிவாசியாய் நீங்கள் மேலெழுந்த சாகாசாரிகளத்தனைபோக்கி, ஶாகார்த்த விசாரிகள் அல்லீர்கோளே! **"देवा वै त्वष्टारमजिघांसन्। स पत्नीः प्रापद्यत। तं न प्रतिप्रायच्छन्। तस्मादपि वध्यं प्रपन्नं न प्रतिप्रयच्छन्ति॥"** (தேவா வை த்வஷ்டாரமஜிகாம்ஸந்। ஸ பத்நீ: ப்ராபத்யத। தம் ந ப்ரதிப்ராயச்சந்। தஸ்மாதபி வத்யம் ப்ரபந்நம் ந ப்ரதிப்

[ரா-கி 24-28] "நீ அளத்தற்கரியவன்" [ரா-கி 24-31] என்று தாரையென்னும் ஒரு விதவையுங்கூட அறிந்தது ஆண்பிள்ளைகளான உங்களுக்குத் தெரியவில்லையோ? 7. (மஹாத்மாவாய்) 'ஆத்மந்' சப்தம் சூரியனையும், அக்னியையும் சொல்லுமாகையால், "(சரஸமூஹங்களாகிற கிரணங்களைக் கொண்ட) ராமபிரானுகிற சூரியன் சத்ருராக்ஷஸர்களாகிற நீரை நன்ருக வற்றச்செய்துவிடுவார்" [ரா-ஸு 17-18] என்றும், "சுற்றிலும் நெருப்பை ஒத்திருக்கும் ராமனை பரதன் கண்டான்" [ரா-அ 99-26] என்றும், "முளைக்கதிரை" [திருநெடு 14] என்றும் "கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே" [திருப்பாவை 25] என்றும் சூரியனையும் நெருப்பையும்போலே எதிரிகளை எரிப்பவராயன்றோ அவரிருப்பது; ஆகையால் நீங்கள் அஞ்சவேண்டாமென்கை. 8 (மஹாத்மாவுக்கு) அல்லது, 'ஆத்மந்' சப்தம் அறிவைச் சொல்லுவதாய், "நீங்கள் மேலெழுந்த சாகைகளில் (மரக்கிளைகளில்) ஸஞ்சரிப்பீர்களேயொழிய, (வேத) சாகைகளின் பொருளைச் சிந்திக்கமாட்டீர்கள் போலும். "தேவர்கள் த்வஷ்டாவைக் கொல்லவிரும்பினர்; அவன் தேவபத்தினிகளைச் சரணடைந்தான்; அவனை அவர்கள் காட்டிக்கொடுக்கவில்லை. ஆகையால் சரணாகதன் கொல்லத் தக்கவனுயிருந்தபோதிலும் அவனைக் காட்டிக்கொடுப்பதில்லை" [யஜுஸ்

ரயச்சந்தி) என்றும், ''शरणागतः अरिः प्राणान् परित्यज्य रक्षितव्यः कृतात्मना'' (ஶரணுகத:, அரி: ப்ராணுங் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா) என்றும் சொல்லுகிறபடியே, வேதவைதிகவசனங்களில் நிலவராய், ஶத்ருவேயாகிலும் ஶரணுகதனைத் தன்னையழியமாறியும் ரக்ஷிக்கக்கடவது என்கிற பேரறிவாளராயிருக்கிறவர்க்குச் சொல்லுங்கோள். அன்றியிலே, 9. (மஹாத்மநே) என்று வாதவாசியாய், ''तस्मै वातात्मने नमः'' (தஸ்மை வாதாத்மநே நம:) என்றும், ''காலாய்'' என்றும் சொல்லுகிறபடியே ஶத்ருக்களுக்கு நாஶகராய், ஶரணுகதருக்கு ஆச்வாஸகரராயிருக்குமவர் என்றுமாம்.

அழகியது; நீ தானே 'மஹாத்மநே' என்று அவர் பெருமையைச் சொன்னுயிறே; அப்படிக்கு, ''செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம்'' என்றும், ''அவனெவ்விடத்தான்

ஸம்ஹிதை 6-5-29] என்றும், ''பயந்தவனுகிலும் பயமற்றவனுயினும் சரணமடைந்த எதிரியானவன் நல்லோனுல் உயிரைக் கொடுத்தும் காப்பாற்றத் தக்கவன்'' [ரா-யு 18-28] என்றும் சொல்லுகிறபடியே வேத வைதிகவசனங்களை அறிந்தவராய், 'எதிரியேயாயினும் சரணமடைந்தவனைத் தன் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றவேணும்' என்னும் பெரிய அறிவையுடைய அவருக்குஅறிவியுங்கள்'' என்கிருன். 9. (மஹாத்மாவுக்கு)'ஆத்மந்' சப்தம் காற்றைச்சொல்லுவதாய், ''வாயுஸ்வரூபியாயிருக்கும் அவனுக்கு நமஸ்காரம்'' [வி-பு 1-14-31] என்றும் ''காலாய்த் தீயாய்'' [திருவாய் 6-9-1] என்றும் சொல்லுகிறபடியே, எதிரிகளைச் சுழற்காற்றைப்போலே அழிப்பவராய் சரணமடைந்தவர்க்குத் தென்றலைப்போலே இன்பமளிப்பவராயிருப்பவர் என்று சொல்லுவதாகவும் கொள்ளலாம். ஆக, இவ்வளவால், ''ஆத்மா ஜீவே த்ருதௌ தேஹே ஸ்வபாவே பரமாத்மநி, யத்நே அர்க்கே அக்நௌ மதௌவாதே' [வைஜயந்தி-த்வயக்ஷரகாண்டம் 1-6] [ஆத்மா என்னும் பதம், ஜீவனிடமும், தைரியத்திலும், தேஹத்திலும், ஸ்வபாவத்திலும், பரமாத்மாவினிடமும், யத்னத்திலும், சூரியனிடத்திலும், அக்னியிடமும், புத்தியிலும், காற்றினிடமும் பிரயோகமுள்ளது] என்னும் பொருள்கள் எல்லாம் ராமபிரானின் சரண்யத்வத்வை வலியுறுத்துகின்றன என்று உணர்த்தப்பட்டது.

''மிக நல்லது; நீயே 'மஹாத்மாவுக்கு' என்று அவர் பெருமையைச் சொன்னுயன்றே; அவ்வளவு பெரிதாக, ''நாகணைமிசைநம்பரர் செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம்'' [நாச்-திரு 10-10] என்றும், ''அம்மான்

யானுர்'' என்றும் பர்வதத்துக்குப் பரமாணுபோலே இருக்கிற நாம் அவ்வஸ்துவை அணுகவும் ஶரணவரணம் பண்ணவும் போமோவென்னில்: **1.** (ஸர்வலோக ஶரண்யாய) பெருமாள் நீர்மைக்கு ஆகாதாருண்டோ? **2.** (ஸர்வலோக ஶரண்யாய) **''लोकभर्तारं''**(லோகபர்த்தாரம்)போலே. அந்தஸர்வலோகத்திலே நானும் ஒருவனன்றோ? **3.** (ஸர்வலோக ஶரண்யாய) ''நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச்சோதி'' என்று, எத்தனையேனும் தீர அபராதம் பண்ணினுரையும் அங்கீகரித்து, இத்தாலே தேஜஸ்விகளாயிருக்கிறவர்க்கு. **4.** (ஸர்வலோக ஶரண்யாய) **''सर्वलोकैक वीरस्य दशकण्ठकुलद्विषः''** **(ஸர்வலோகைக வீரஸ்ய தஶகண்ட குலத்விஷ:)** என்று, **''பூர் புவஸ் ஸுவர் மஹர் ஜநஸ் தபஸ்ஸத்**

ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யானுர்'' [திருவாய் 5-1-7] என்றும் மலையின் எதிரே அணுபோலிருக்கும் நாம் அப்பரம்பொருளைக் கிட்டவும் சரணமடையவும் முடியுமோ? என்னில்: 1. (அனைத்துலகுக்கும் சரண்யனுக்கு) ராமபிரானுடைய சரண்யத்வகுணத்துக்கு விஷயமாகாதவர் உண்டோ? 2. (அனைத்துலகுக்கும் சரண்யனுக்கு) ''கௌஸல்யா லோக பர்த்தாரம் ஸுஷுவே யம் மநஸ்விநீ, தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச சிரஸா சாபிவாதய'' [ரா-ஸு 38-56] [லோகநாதனுன எவரை, பெரிய மனம் படைத்த கோசலை பெற்றெடுத்தாளோ, அவரை எனக்காகக் குசலப்ரச்னம் பண்ணித் தலையால் வணங்கு] என்ற சீதா பிராட்டியைப் போலே பேசுகிறுன் விபீஷணன் இங்கு. லோகபர்த்தாவாயிருப்பவர் அவர்; லோகசப்தத்திலே நானும் அடங்கியவளன்றோ என்று பிராட்டிக்குக் கருத்து. அதுபோலே, அவர் ஸர்வலோகசரண்யர்; ஸர்வலோக சப்தத்திலே நானும் அடங்கியவனன்றோ என்று விபீஷணனுக்குக் கருத்து. ''அகல்விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் .செங்கோல் நடாவுதிர், ஈங்கோர் பெண்பால் பொருளோ எனும் இகழ்வோ இவற்றின் புறத்தாள் என்றெண்ணோ'' [திருவிருத்தம்-33] என்ற பராங்குச நாயகியைப்போலே. (ஸர்வலோகத்துக்கும் சரண்யனுக்கு) ''நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண் பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே'' [திருவாய் 3-3-4] என்று கடைசிவரையில் எவ்வளவு அபராதம் பண்ணினுரையும் ஆட்கொண்டு, அதனுலே புகழாளராயிருப்பவருக்கு. 4. (ஸர்வலோகத்துக்கும் சரண்யனுக்கு) ''அனைத்துலகுக்கும் தனிவீரனுயிருப்பவனுய், ராவணனுடைய குலவிரோதியாயிருப்பவனுடைய'' [ ] என்று, ''பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், மஹர்லோகம், ஜநோலோகம், தபோ

யம்" என்கிற ஸப்தலோகத்துக்கும் புகலானவர்க்கு. 5. (ஸர்வ லோகஶரண்யாய) அவ்வளவேயன்றிக்கே, பூர்புவராதிகளோடும், அதல விதலஸுதல தலாதல மஹாதல ரஸாதல பாதாளங்களோடும்வாசியறச் சதுர்த்தஶலோகங்களுக்கும் புகலானவர்க்கு. அன்றியிலே, 6. (ஸர்வலோக ஶரண்யாய) என்று "பொன்னுலகாளீரோ, புவனிமுழுதாளீரோ" என்றும், "புவனியும்விண்ணுலகும் அங்காதும்சோராமே ஆள்கின்ற" என்றும், "हिरण्मये परे लोके" (ஹிரண்மயே பரே லோகே) என்றும், "अस्मिन् सांप्रतं लोके" (அஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே) என்றும் சொல்லுகிறபடியே, உபயவிபூதிக்கும் ப்ராப்யரானவர்க்கு. 7. (ஸர்வலோகஶரண்யாய) "मञ्चाः क्रोशन्ति" (மஞ்சா: க்ரோஶந்தி) போலே, லோகாந்தர்வர்த்தி ஜந்துக்களை லக்ஷிக்கிறதாகவுமாம். அன்றியிலே, 8. லோகமென்று,

---

லோகம், ஸத்யலோகம்" என்கிற அனைத்துலகுக்கும் புகலாயிருப்பவருக்கு. 5. (எல்லாவுலகுக்கும் சரண்யருக்கு) பூர்புவஸ்ஸுவராதியான மேலுலகங்களுக்கு மாத்திரமன்றிக்கே, அவற்றுக்கும் அதல விதல ஸுதல தலாதல மஹாதல ரஸாதல பாதளங்களென்னும் கீழேழு உலகங்களுக்கும் ஆகப் பதினைறு உலகங்களுக்கும் புகலாயிருப்பவருக்கு என்றுமாம். அன்றியிலே, 6. (ஸர்வலோகத்துக்கும் சரண்யருக்கு) என்று "பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ" [திருவாய் 6-8-1] என்றும், "பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்" [நாச்-திரு 11-3] "பொன்மயமான மேலான உலகத்தில் தோஷமற்ற ப்ரஹ்மம் எழுந்தருளியிருக்கிறது" [முண்டகோபனிஷத் 2-2-10] என்றும், "இப்போது இவ்வுலகில் யார் குணவான்? யார் வீர்யவான்?..." [ரா-பா 1-2] என்றும் சொல்லுகிறபடியே இரண்டு விபூதியாலும் அடையத்தக்கவருக்கு என்றும் கொள்ளலாம். 7. (ஸர்வலோகத்துக்கும் சரண்யருக்கு) "படுக்கையில் படுத்திருப்பவர்கள் அழுகிறார்கள்" என்னும் பொருளில் "மஞ்சா: க்ரோசந்தி" [படுக்கைகள் அழுகின்றன] என்று பிரயோகிப்பதுபோலே 'ஸர்வலோகம்' என்று எல்லா உலகிமுள்ள ஜனங்களை லக்ஷணையால் சொல்லுவதாகக் கொள்ளலாம். 'உலகம் சிரிக்கிறது' முதலிய பிரயோகங்களில் உலகினரை உலகம் என்று குறிப்பதையும் காணலாம். அல்லது, 8. 'லோகம்' என்று "லோகம் என்னும் பதம் உலகத்தையும், ஜனங்களையும் குறிக்கிறது"

"लोकस्तु भुवने जने" (லோகஸ்து புவநே ஜநே) என்று ஜந வாசியாகவுமாம். 9. (ஸர்வலோக ஶரண்யாய) ஸர்வவித லோகம். அதாவது; தேவயோநிகளாயும், மநுஷ்யயோநி களாயும், ஸ்தாவரயோநிகளாயும், தர்மார்த்திகளாயும், காமார்த்திகளாயும், அநுகூலராயும், ப்ரதிகூலராயும், உத்க்ருஷ்டராயும், அபக்ருஷ்டராயும் இப்படி அநேகவிதரான வர்களுக்கெல்லாம் புகலானவரன்றோ? அவனை இப்படி எங்கே கண்டோமென்னில்: "महिष्टफलप्रदानैः। कोऽन्यः प्रजापशुपती परिपाति" (மஹிஷ்டபலப்ரதாநை:| கோந்ய: ப்ரஜாபஶுபதீ பரிபாதி) என்று தேவர்களான ப்ரஹ்மாதிகளுக்கு இழந்த பதம் கொடுத்தவர், "विष्णुभक्तिपरो देवः" (விஷ்ணுபக்திபரோ தேவ:) என்று பெருமாளுக்கு நல்லோனாகையாலே தேவனான நானிழந்த ராஜ்யம் தாராரோ? "सुग्रीवमेव तद्राज्ये राघवः प्रत्यपादयत्" (ஸுக்ரீவமேவ தத்ராஜ்யே ராகவ: ப்ரத்யபாதயத்) என்று திர்யக்குகளான ஸுக்ரீவாதிகளுக்கு இழந்த ராஜ்யம் கொடுத்தவர், "ज्ञानेन हीनः पशुभिः समानः" (ஜ்ஞாநேந ஹீந:

[அமரம்3-3-2] என்னும் நிகண்டுவின்படி லோகசப்தம் நேரேயும் ஜனங்களைச் சொல்லுவதாகக் கொள்ளலாம். 9. (ஸர்வலோகத்துக்கும் சரண் யருக்கு) ஸர்வலோகமாவது-ஸர்வவிதலோகம். அதாவது-தேவர், மநுஷ்யர், திர்யக், ஸ்தாவரம் என்னும் நான்குவகைப் பிறப்பை உடையவர்களாயும், தர்மத்தை விரும்புமவராயும், இன்பத்தை விரும்புமவர்களாயும், அன்புடையாராயும், எதிரிகளாயும், உயர்ந்தோராகவும், தாழ்ந்தோராகவும் இப்படிப் பலவிதமானவர்களுக்கும் புகலானவரன்றோ? அந்த வகைகள் ஒவ்வொன்றிலும் சேர்ந்தவனான எனக்கு அவசியம் புகலாவாராகையால் அறிவியுங்கோள் என்பதாகவும் கொள்ளலாம். அவனை இப்படி ஸர்வவிதலோகத்துக்கும் புகலாக எங்கே கண்டோம்? என்றால்: "சிறந்த பலன்களைக் கொடுத்து பிரமனையும் சிவனையும் ரக்ஷிப்பது உன்னையொழிய வேறு யார்? [ஸ்தோ-ர 13] என்று தேவர்களான பிரமன் முதலானோர்க்குத் தாம் இழந்த பதவிகளைக் கொடுத்தவர், "விஷ்ணுபக்தியில் ஈடுபட்டவன் தேவனாவான்; அதில்லாதவன் அசுரனாவான்" [விஷ்ணுதர்மம் 109-74] என்கிற படியே ராமபிரானிடம் அன்புடையவனாகையாலே தேவனான நான் இழந்த ராஜ்யத்தைத் தரமாட்டாரோ? "ஸுக்ரீவனையே வானரராஜ்யத்தில்ராகவன் நிலைநிறுத்தினார்" [ரா-பா 1-70] என்று ஊர்வனவாய் விலங்குகளான ஸுக்ரீவன் முதலானோர்க்கு இழந்த அரசைக் கொடுத்தவர், "அறிவற்றவன்

ப ாபிஸ் ஸமாந:) என்று அறிவில்லாமையாலே திர்யக்கான நான் இழந்த ராஜ்யம் தாராரோ? "अध्यासते चीरभृतो यथास्वं चिरोज्झितान्याश्रममण्डलानि" (அத்யாஸதே சீரப்ருதோ யதாஸ்வம் சிரோஜ்ஜிதாங்யாச்ரம மண்டலாநி) என்று மநுஷ்ய ஶரீரர்களான ஜநஸ்தாநவாஸிகளுக்கு இழந்த தேஶம் கொடுத்தவர் மாநுஷ்யம் கொண்டாடி உறவாய் வந்த நான் இழந்த தேசம் தாராரோ? "शैलरूपं परित्यज्य प्रतिपेदे स्वकां तनुं" (ஶைலரூபம் பரித்யஜ்ய ப்ரதிபேதே ஸ்வகாம் தநும்) என்று ஸ்தாவரமான அஹல்யையைத் தன் ப்ரக்ருதியோடே கூட்டினவர், "खस्थ एव व्यतिष्ठत" (கஸ்த ஏவ வ்யதிஷ்டத) என்று ஸ்தாவரப்ரதிஷ்டையாய் நிற்கிற என்னை என் ப்ரக்ருதியோடே கூட்டாரோ? "रक्षितव्यास्त्वया शश्वद्गर्भभूतास्तपोधनाः" (ரக்ஷிதவ்யாஸ் த்வயா ஶச்வத்கர்ப்பபூதாஸ் தபோதநா:) என்று தபோநுஷ்டாநத்தாலே தர்மார்த்திகளான ரிஷிகளுக்குப் புகலானவர், "विभीषणस्तु धर्मात्मा" (விபீஷணஸ்துதர்மாத்மா) என்றஎனக்குப் புகலாகாரோ?

விலங்கையொப்பான்" [நரஸிம்ஹபுராணம் 16-13] என்று அறிவில்லாமையாலே விலங்காயிருக்கும் நான் இழந்த ராஜ்யத்தைத் தரமாட்டாரோ? "இம்முனிவர்கள் நெடுநாளைக்கு முன்விட்ட ஜனஸ்தானத்திலுள்ள ஆச்ரம மண்டலங்களில் முன்போல் வாழ்கின்றனர்" [ரகுவம்சம் 13-22] என்று மனுஷ்ய சரீரத்தையுடைய ஜநஸ்தானவாஸிகளுக்கு இழந்த தேசத்தை மீட்டுக்கொடுத்தவர், ராக்ஷஸஜாதியைவிட்டு என்னை மனிதனாக அபிமானித்துத் தம்மோடு உறவு கொண்டாட வந்த நான் இழந்த தேசத்தைத் தரமாட்டாரோ?"அஹல்யைகல்லுருத்தவிர்ந்து தன் உருவை அடைந்தாள்" [ ] என்று அசையாப்பொருளான அஹல்யைக்குத்தன் உருவைக்கொடுத்தவர், "ஆகாயத்திலேயே நிலைநின்றான்" [ரா-யு 17-8] என்று அசையாப் பொருளாய் நிற்கும் என்னை என் ஸ்வரூபத்தோடு சேர்ப்பிக்கமாட்டாரோ? "உனக்கு கர்ப்பம் போலேயிருக்கும் தபஸ்விகளான நாங்கள் உன்னால் எப்போதும் ரக்ஷிக்கப்படவேண்டியவர்கள்" [ரா-ஆ 1-21] என்று தவம் புரிகையாலே தர்மத்தை விரும்பும் ரிஷிகளுக்குப் புகலானவர், விபீஷணன் தர்மஸ்வரூபியாயிருப்பவன்" [ரா-ஆ 17-24] என்று தர்மத்தை விரும்பும் எனக்குப் புகலாகமாட்டாரோ?

"**रुदन्राज्यमयाचत**" (**ருதந் ராஜ்யமயாசத**) என்று அர்த்த பலமான ராஜ்யத்தை இரந்த சக்ரவர்த்திக்குக் கொடுத் தவர். ராஜ்யகாங்க்ஷியான எனக்குத் தாராரோ? தாராருமைகளை விரும்பிக் காமபரவரான மஹாராஜர்க்கு தாரங்களைக் கொடுத்தவர், "**त्यक्त्वा पुत्रांश्च दारांश्च**" (**த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச**) என்று பிராட்டி பக்கலிலே ஆநு கூல்யம் பண்ணின தர்மதாரங்களை இழந்த எனக்குத் தாராரோ? "**गच्छ लोकाननुत्तमान्**" (**கச்ச லோகாநநுத்தமாந்**) என்றும் "**आवहत्परमां गतिं**" (**ஆவஹத் பரமாம் கதிம்**) என்றும் ஜடாயுவாலிகளுக்கு மோக்ஷங்கொடுத்தவர் எனக்கு மோக்ஷம் தாராரோ? "**मङ्गलानि प्रयुञ्जानाः**" (**மங்களாநி ப்ரயுஞ்ஜாநா:**) என்று அநுகூலரான ரிஷிகளுக்குப் புகலானவர், ஆநு கூல்ய ஸங்கல்பாதிகளைப்பண்ணின எனக்குப் புகலாகாரோ? "**कबन्धं नाम रूपेण विकृतं घोरदर्शनं। तं निहत्य महाबाहुर्ददाह स्वर्गतश्च सः॥**"

"மூத்தபிள்ளையான ராமனிடம் அழுதுகொண்டே தசரதர் ராஜ்யத்தை யாசித்தார்" [ரா-ஸு 33-24] என்று இரண்டாவது புருஷார்த்தமான அர்த் தத்தின் பலனுன ராஜ்யத்தை, யாசித்த தசரதசக்ரவர்த்திக்குக் கொடுத்தவர், "ராஜ்யகாங்க்ஷீ ச ராக்ஷஸ:" [ரா-யு 18-13] [ராக்ஷஸனுன விபீஷணன் லங்காராஜ்யத்தை விரும்புமவன்] என்கிறபடியே அரசை விரும்பும் எனக்குத் தரமாட்டாரோ? தாரையையும், ருமையையும் விரும்பி மூன்ருவது புரு ஷார்த்தமான காமத்தின் வசப்பட்ட சுக்ரிவனுக்கு இருவரையும் மனைவி யாகக் கொடுத்தவர், "பெண்டுபிள்ளைகளை விட்டு வந்தேன்" [ரா-யு 17-14] என்று பிராட்டியிடம் அன்புவைத்த தர்மபத்நியை இழந்த எனக்கு, அவளைத் தரமாட்டாரோ? "என்னுல் ஆஜ்ஞையிடப்பட்டு நீர் மிகவுயர்ந்த உலகங்களுக்குச் செல்வீராக" [ரா-ஆ 66-30] என்றும், "ராமபாணம் வாலியை மேலான கதிக்கு அழைத்துச் சென்றது" [ரா-கி 17-8] என்றும் ஜடாயு வாலிகளாகிற திர்யக்குகளுக்கும் மோக்ஷம் கொடுத்தவர் எனக்கு மோக்ஷம் தாராரோ? "மங்களங்களைச் சொல்லிக்கொண்டு ரிஷிகள் ராமனை வரவேற்றனர்" [ரா-ஆ 1-12] என்று அநுகூலரான ரிஷிகளுக்குப் புக லானவர் ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலானவற்றைச்செய்த எனக்குப் புகலாக மாட்டாரோ? "விகாரமான உருவத்தையுடையவனுய், காணக் கொடிய வனுயிருக்கும் கபந்தனென்பவனைக் கொன்று, ராமபிரான் அவன் உடம்பை எரித்தார்; அவன் சுவர்க்கத்தையடைந்தான்" [ரா-பா 1-55] என்றும்,

(கபந்தம் நாம ரூபேண விக்ருதம் கோரதர்ஶநம்। தம் நிஹத்ய மஹாபாஹுர் ததாஹ ஸ்வர்க்கதஶ்ச ஸ:||) என்றும், "**विददार स्तनान्तरे**" (விததார ஸ்தநாந்தரே) "**प्रतिपेदे स्वमालयं**" (ப்ரதிபேதே ஸ்வமாலயம்) என்றும் ப்ரதிகூலனான கபந்தனுக்கு ஶாபஜந்யமான விரோதி ஶரீரத்தையும் போக்கி, ஸ்வதேஶத்தையும் கொடுத்து, ப்ரதிகூலனான காகத்துக்கு விரோதியைப்போக்கி, ஸ்வதேஶத்தைக்கொடுத்தவர், "**प्राप्तः शत्रुरतर्कितः**" (ப்ராப்த: ஶத்ருரதர்க்கித:) என்னும்படி ப்ரதிகூலனான எனக்கு என்தேசம் தாராரோ? "**तमब्रुवन् सुराः सर्वे समभिष्टूय सन्नताः**" (தமப்ருவந் ஸுரா: ஸர்வே ஸமபிஷ்டூய ஸந்நதா:) என்று உத்க்ருஷ்டரான தேவர்களுக்குப் புகலானவர் ப்ரபந்நனுகையாலே உத்க்ருஷ்டனான எனக்குப் புகலாகாரோ? "**कपित्वञ्च प्रदर्शितं**" (கபித்வஞ்சப்ரதர்ஶிதம்) என்றும், "**पाषाणगौतमवधूवपुराप्तिहेतुः**" (பாஷாணகௌதமவதூவபுராப்திஹேது:) என்றும் அபக்ருஷ்டங்களான திர்யக் ஸ்தாவரங்களுக்கு ஆபந்நிவாரகரானவர், "**प्रकृत्या राक्षसो**

"காகாசுரன் (என்) மார்பகத்தில் கிழித்தான்" [ரா-ஸு 38-23] "ராமபிரானுல் உயிருடன் விடப்பட்டுத் தன் இருப்பிடம் சேர்ந்தான்" [ரா-ஸு 38-38] என்றும் எதிரியான கபந்தனுக்கு சாபத்தாலேற்பட்ட ஸ்வர்க்கவிரோதி சரீரத்தையும் போக்கி, தன் இருப்பிடமான சுவர்க்கத்தையுங்கொடுத்து, பிராட்டி விஷயத்தில் அபசாரம் செய்து எதிரிட்ட காகத்தின் உயிருக்கு விரோதியான ப்ரஹ்மாஸ்த்ரத்தை விலக்கித் தன் இருப்பிடத்தைக் கொடுத்தவர், 'பரிசீலிக்கப்படாதவனும் அடுத்துக் கெடுக்கும் எதிரி" [ரா-யு 17-26] என்னும்படி எதிரியான எனக்கு என் தேசம் தரமாட்டாரோ? "நன்கு வணங்கின தேவர்கள் அனைவரும் அப்பெருமானைத்துதித்து உரைத்தனர்" [ரா-பா 15-17] என்று உயர்ந்தவர்களான தேவர்களுக்குப் புகலானவர், சிறந்த உபாயமான ப்ரபத்தியைப் பற்றினவனுகையாலே சிறந்தவனுன எனக்குப் புகுமிடமாகாரோ? "என் குரங்குத்தன்மை வெளியிடப்பட்டது" [ரா-ஸு 55-16] என்றும், "கல்லுருவாயிருந்த கௌதமபத்தினியான அஹல்யைக்கு சுயவுருவரக் காரணம்" [ ] என்றும் தாழ்ந்தவையான விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் வந்த ஆபத்துக்களைத் தவிர்த்தவர், "இவன் இயற்கையில் அரக்கனன்றோ" [ரா-யு 17-23] என்று தாழ்ந்தவனுன என் துன்பத்தைத்

ஜ்ஷ:'' (ப்ரக்ருத்யா ராக்ஷஸோ ஹ்யேஷ:) என்று அபக்ருஷ்டனை எனக்கு ஆபந்நிவர்த்தகராகாரோ? இவ்வுதாஹரணங்களிலே கண்டுகொள்வது.

'ஆகிறது, ஆரை அறிவிக்கிறது?' என்ன,–1. (விபீஷணம்) பராஶர பராங்குஶாதி ஶப்தம்போலே விரோதி விபீஷணன் என்றாய். ராவணாதிகளை பயப்படுத்துவேனென்று நினைத்திருந்கோளென்று அவயவ ஶக்திதானாகிலுமாம். 2. (விபீஷணம்) ''भीषास्माद्वातः पवते भीषोदेति सूर्यः'' (பீஷாஸ்மாத் வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய:) என்றும், ''भयं भयानाम पहारिणि'' (பயம் பயாநாமபஹாரிணி) என்றும் பரபயங்கரருமாய், ஆஶ்ரிதாபயங்கரருமான பெருமாள் பரிகரத்துக்கும்

துடைக்கமாட்டாரோ? இவ்வுதாஹரணங்களிலிருந்து ராமபிரான் தேவர், திர்யக், மநுஷ்யர், ஸ்தாவரம், தர்மார்த்த காமமோக்ஷார்த்திகள், அநுகூலர், ப்ரதிகூலர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பன்னிரண்டு வகைப்பட்ட (ஸர்வவித) லோகத்துக்கும் சரண்யரென்பதையும், ஸ்ரீவிபீணன் அவையொவ்வொருவகையிலும் சேர்ப்பிக்கக்கூடியவனென்பதையும் கண்டுகொள்வது. ஆகையால் விபீஷணன் எப்படியாலும் ராமபிரானால் ரக்ஷிக்கத்தக்கவன் என்று கருத்து.

''ராமபிரானுக்கு அறிவிக்கிறோம்; ஆனால், யாரை அறிவிக்கிறது?'' என்ன, 1. (விபீஷணனை) விரோதிகளை அடக்கி அழிப்பவர் என்னும் பொருள் கொண்ட பராசரர், பராங்குசர், பரகாலர் முதலான பெயர்கள் போலே இப்பெயரும் 'விரோதிகளை பயமுறுத்துமவன்' என்னும் பொருளையுடையதாய், 'ராவணாதியரை பயமுறுத்துவேன் என்று நினைத்திருங்கள்' என்று ''விவிதம் பீஷயதீதி விபீஷண:'' என்னும் வ்யுத்பத்திப் பொருளைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். 2. (விபீஷணனை) ''இவனிடம் பயத்தினால் காற்று அடிக்கிறது; இவனிடம் பயத்தால் சூரியன் உதிக்கிறான்'' [தை-ஆந-8] என்றும், ''பயங்களை அழிக்கும் அநந்தன் நெஞ்சிலிருக்கையில் எனக்கு பயம் எவ்வாறு நிற்கும்'' [வி-பு 1-17-36] என்றும் பிறர்க்கு பயத்தையளிப்பவராய், அடியார்க்கு அபயமளிப்பவரான ராமபிரானுடைய ஆட்களான உங்களுக்கும், அவனுக்கு ஆளாகாத மற்றுள்ளாரான ராவணாதியர்க்கும் பயப்படவேண்டுமோ? ஆகையால் விபீஷணன் [விகதபீஷணன்-பயமற்றவன்] வந்திருக்கிறான் என்று

வேறொருவருக்கும் பயப்படவேணுமோ? 3. (விபீஷணம்) ஆணையும் செங்கோலும் நடத்துகைக்கு, 'गदापाणिः' (கதாபாணி:) என்று ஒரு தடிகாரனென்று சொல்லுங்கோள். அன்றிக்கே, 4. (விபீஷணம்) என்று அநுகூலனென்று அறிவிக்கமாட்டீர் கோளாகில், "उत्पपात गदापाणिः" (உத்பபாத கதாபாணி:) என்று கையுந்தடியுமாய் ஒருத்தன் பயப்படும்படி நின்றான் என்று கிலும் சொல்லுங்கோள். நிதாநஜ்ஞனான பிஷக்கின்முன் வ்யாதிக்ரஸ்தன் தான் பண்ணின அபத்யங்களைச் சொல்லி, அதுக்கீடாகப் பரிஹரித்துக்கொள்ளுமாப்போலே, "निर्वाण भेषज भिषक्" (நிர்வாணம் பேஷஜம் பிஷக்) என்றும், "மருத்துவ னாய் நின்ற மாமணிவண்ணன்" என்றும் பேசப்படுகிற ஸர் வஜ்ஞன் முன்பு ஸம்ஸாரி ஸ்வதோஷத்தை முன்னிட்டு ரக்ஷித்துக் கொள்ளுமத்தனை போக்கி, நன்மையை முன் னிடுகைக்கு ஒன்றுமில்லையிறே. ஆகையாலே, 5. (விபீஷ ணம்) "न निन्दितं कर्म तदस्ति लोके सहस्रशो यन्न मया व्यधायि" (ந நிந்தி தம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரஶோ யந்ந மயா வ்யதாயி)

சொல்லுங்கள் என்பதாகவும் கொள்ளலாம். 3. (விபீஷணனை) ஆணையும் செங்கோலும் நடத்தி ஆகாதவர்களை ஆட்டிவைப்பதற்கு, "கதையைக் கையிலேந்தியவன்" [ரா-யு 16-16] என்று ஒரு தடிகாரன் வந்தான் என்று சொல்லுங்கோள். அல்லது, 4. (விபீஷணனை) என்று ராமபிரானிடம் அன் புடையவன் என்று அறிவிக்கமாட்டீர்களாகில், "கதையைக் கையிலேந்திய வனாய் உயரக்கிளம்பினான்" [ரா-யு 16-16] என்று கையும் தடியுமாய் நாங்கள் பயப்படும்படி ஒருவன் நின்றான் என்றாவது சொல்லுங்கள். 5. வியாதிக்குக் காரணமறியும் வைத்தியனின் முன் நோயாளிதான் செய்த அபோஜ்யபோஜ னம் முதலான அபத்தியங்களைச் சொல்லி அதுக்குத்தக்கபடி நோயைத் தீர்த்துக் கொள்வதுபோலே, "மோக்ஷஸாதனமாகவும், (பிறவி என்னும் நோய்க்கு)மருந்தாகவும், வைத்தியனாகவுமிருப்பவன்" [ஸஹஸ்ரநாமம் 584, 585, 586] என்றும் "மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா" [பெரியாழ் திரு 5-3-6] என்றும், பேசப்படுகிற ஸர்வஜ்ஞன் முன்பு ஸம்ஸாரி சேதனன் ஸ்வ தோஷத்தை முன்னிட்டுத் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதொழிய தன்னிட முள்ள நன்மையை முன்னிடுவதற்கு ஒரு நன்மையும் இல்லையன்றோ. ஆகை யாலே, (விபீஷணனை) "என்னால் ஆயிரக்கணக்கான தடவைகள் செய்யப் படாத பாபகர்மம் சாஸ்திரத்திலும் இல்லை" [ஸ்தோ-ர23] என்றும், "கொன்

என்றும், "கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன்றிலாமையினால்" என்றும் என்னுடைய பூர்வவ்ருத்தஜ்ஞானங்கள் இவையென்னுங்கோள். 6. (விபீஷணம்) "**ईदृशं व्यसनं प्राप्तं भ्रातरं यः परित्यजेत्**" (ஈத்ருஶம் வ்யஸநம் ப்ராப்தம் ப்ராதரம் ய: பரித்யஜேத்) என்றும், "உவர்த்த நீர் போல என்றன் உற்றவர்க்கொன்றுமல்லேன்" என்றும் ஸோதரனை ராவணனகப்பட வெருவும்படி பண்ணின தோஷதுஷ்டன் என்னுங்கோள்.

உன்னுடைய வ்ருத்தஜ்ஞானங்கள் இவையாகில் பெருமாள் திருமுன்பே அறிவிக்கும்படியென்? என்னில்: 1. (உபஸ்திதம்) "**दुराचारोऽपि सर्वाशी कृतघ्नो नास्तिकः पुरा। समाश्रयेदादिदेवं श्रद्धया शरणं यदि॥ निर्दोषं विद्धि तं जन्तुं**" (துராசாரோऽபி ஸர்வாஶீ க்ருதக்னோ நாஸ்திக: புரா। ஸமாச்ரயேதாதிதேவம் ச்ரத்தயா ஶரணம்யதி॥ நிர்த்தோஷம் வித்தி தம் ஜந்தும்) என்கிறபடியே முன் அப்படியேயாகிலும், பகவதாஶ்ரயணம் பண்ணினால்

றேன் பல்லுயிரைக் குறிக்கோள் ஒன்றிலாமையினால்" [பெரியதிரு 1-9-3] என்று, என்னுடைய முன் நடத்தையும் அறிவும் ஜீவஹிம்ஸை முதலானவையே என்னுங்கள் என்பதாகவும் கொள்ளலாம். 6. (விபீஷணனை) "இப்படிப்பட்ட ஆபத்தை அடைந்திருக்கும் தம்பியை எவனொருவன் கைவிட்டானோ அவன் எவனைத்தான் கைவிடமாட்டான்?" [ரா-யு 18-5] என்றும், "உவர்த்தநீர்போல என்றன் உற்றவர்க்கொன்றுமல்லேன்" [திருமாலை-31] என்றும் கூடப்பிறந்த ராவணனும் பயப்படும்படி செய்த தீமை நிறைந்தவன் என்று சொல்லுங்கள் என்பதாகவும் கொள்ளலாம்.

உன்னுடைய நடத்தையும் அறிவும் இப்படித் தாழ்ந்தவையாகில், ராமபிரானுக்கு முன் உன்னை எதுகொண்டு அறிவிப்பது? என்னில்: 1. (வந்து நிற்கிறவனை) "நெடுநாளாகத் தீய ஒழுக்கமுள்ளவனாயினும், எதையும் தின்பவனாயினும், செய்ந்நன்றி கொன்றவனாயிலும், நாஸ்திகனாயினும், ஆதிதேவனை சிரத்தையோடு சரணமடைந்தானாகில், அந்த ஜீவனை தோஷமற்றவனென்றறிவாய்" [ஸாத்வதஸம்ஹிதை 16-23] என்கிறப்படியே முன் அப்படித் தாழ்ந்தவனாயிருந்தபோதிலும், பகவானைப் பற்றினபின்பு தோஷமற்றவனாயன்றோ இருப்பது. அப்படியே 'தூயோமாய் வந்து' [திருப்பாவை 5]

நிர்த்தோஷனுயாயிற்று இருப்பது. அப்படிக்குத் * தூயோமாய் வந்துநின்ருேம் என்றும் சொல்லுங்கோள். 2. (விபீஷணமுபஸ்திதம்) முன்னே வந்து நின்றேன் என்னுங்கோள். நாலடியும் வந்து பெருமாளுக்கு உபகரித்தேனென்று சொல்லுங்கோள். வாராதே லங்கையிலிருந்து ஶரணமென்றேனுகில் கடற்கரை மடுவின்கரை பட்டதுபட்டு அரைகுலேயத் தலே குலேய அவர் வந்து விழவேண்டாவோ? 3. (உபஸ்திதம்) எல்லேக்குள்ளே வந்தபின்பு "स्थितोऽस्मि गतसन्देहः" (ஸ்திதோ ऽஸ்மி கதஸந்தேஹ:) என்னும்படி நிலேபெற்றேன். 4. (உபஸ்திதம் நிவேதயத) "என் நிலேமை உரையாய்" என்கிற படியே என்னுடைய வ்யவஸ்திதியை அறிவியுங்கோள். 5. (உபஸ்திதம் நிவேதயத) மதியாத்தனமாக அடுத்துக் கொடு புகுராதே திருவுள்ளம்பார்த்துப் புகுரவேணுமே என்று உங்களருகே நிற்கிற நிலேயைச் சொல்லுங்கோள். 6. (உபஸ்திதம் நிவேதயத) எதிர்சூழல்புக்குத் திரியாதபடி

நின்ருேம் என்று சொல்லுங்கோள் என்கிருன். 2. (வந்து நிற்கும் விபீஷணனே) முன்னே வந்து நின்றேன் என்னுங்கள்; அவரிருக்குமிடம் தேடி நாலடி வந்ததன்மூலம் அவருடைய சிரமத்தைக் குறைத்து உபகரித்தேன் என்று சொல்லுங்கள். இங்கு வாராமல் இலங்கையிலேயிருந்து 'இராகவா சரணம்' என்றிருந்தேனுகில், கஜேந்திரன் "நாராயணுவோ மணிவண்ணு நாகணேயாய் வாராய் என்னுரிடரை நீக்காய்" [சிறியதிருமடல்] என்றதும் மடுக்கரையில் நடந்த காரியம் கடலின் அக்கரையிலே நடந்து, அரையிலிருக்கும் ஆடையும், தலேயிலிருக்கும் சடையும் குலேந்து அவர் அங்கு வந்து விழுந்திருக்கவேண்டாவோ? 3. (அருகில் வந்து நின்றவனே) ராமகோஷ்டியின் எல்லேக்குள் வந்த மஹிமையினுலே "ஐயம் நீங்கி நிலேபெற்றேன்" [கீதை 18-73] என்னும்படி நிலேபெற்றேன். 4. (வந்து நின்றவனே அறிவியுங்கள்) "ஏவரி வெஞ்சிலேயானுக்கு என்நிலேமை உரையாயே" [பெரியதிரு 3-6-1] என்கிற படியே நான் நிற்கும் நிலேயை (சரணம் பற்றவேண்டும் என்னும் உறுதியை) அறிவியுங்கோள். 5. (வந்து நின்றவனே அறிவியுங்கள்) அறியாத்தனமாக சக்ரவர்த்தித் திருமகனுக்கு அருகில்போய் நில்லாமல், 'அவருடைய திருவுள்ளமறிந்து புகவேணும்' என்று உங்களுக்கருகில் வந்து நிற்கிற நிலேயைச் சொல்லுங்கள். 6. (அருகில் நின்றவனே அறிவியுங்கோள்) "ஊழியூழி தொறும் எதிர்சூழல்புக்கு எனேத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய

உடுத்தணித்தாக வந்தபடி சொல்லுங்கோள். 7. (உபஸ்தி தம் நிவேதயத) தந்தாமைத் தேடிக்கொடுக்கச் செய்தேயும், "जग्मुर्गिरितटात्तस्मादन्यं शिखरमुत्तमम्'' (ஜக்முர்கிரிதடாத்தஸ் மாதந்யம் ஶிகரமுத்தமம்) என்றும் ''ஓடினேனோடி'' என்றும் பிறகிட்டுப் போமவர்களை அறிவித்த நீங்கள் இருந்தவிடம் தேடி நானே வந்த என்னை அறிவிக்கலாகாதே? 8. (விபீஷண முபஸ்திதம் நிவேதயத) ராவணன் தம்பியாய், நடுவே ஓரிடத்திலேயிருந்து ஆள் வரவிட்டு ஸந்திவிக்ரஹம் பண்ணிச் செய்யலாம்படிக்குப் பிடியாள் கொண்டு பின்னை வருகை யன்றிக்கே, ''உன்னையெய்தியென் தீவினைகள் தீர்ந்தேன்'' என்றும், ''பொன்னடியே அடைந்துய்ந்தேன்'' என்றும், ''ஆலின் மேலால் அமர்ந்தான் அடியிணைகள்'' என்றும் சொல்லுகிறபடியே, பலம் பின்னே பட்டதும் படப்புகுந்து கொடு நின்றநிலையை விண்ணப்பம் செய்யுங்கோள்.

விதிசூழ்ந்ததால் எனக்கேல் அம்மான் திரிவிக்கிரமனையே" [திருவாய் 2-7-6] என்று அவர் என்னைப் பெறுவதற்காக ஊழிதோறும் அவதாரமெடுத்துத் திரியவேண்டாதபடி உடுத்தியிருக்கும் வஸ்திரம்போலே அருகில் வந்த படியைச் சொல்லுங்கள். 7. (வந்து நின்றவனை அறிவியுங்கள்) தங்களையே தேடிக்கொண்டு வரும்போதும், ''ஒப்பற்ற வில்லாளிகளான ராமலக்ஷ் மணர்களைக்கண்டு பயந்த சுக்ரிவன் முதலானோர் அந்த மலைத்தடத்தி லிருந்து வேறொரு சிறந்த மலைச்சிகரத்தை அடைந்தனர்'' [ரா-கி 2-7] என்றும், ''ஓடினேன் ஓடி'' [பெரியதிரு 1-1-1] என்றும் விலகி ஓடும் சுக்கிரீவாதிகளை அறிவித்த அனுமன் முதலான நீங்கள், இராமபிரான் இருக்குமிடம் தேடி நானே வந்திருக்கும்போது, என்னை அறிவிக்கக் கூடாதா? 8. (வந்து நிற்கும் விபீஷணனை அறிவியுங்கள்) ராஜாவான ராவணன் தம்பியாய், மதிப்புக்கொண்டாடி நடுவே ஓரிடத்திலேயிருந்து தூதனுப்பி சமாதானமோ சண்டையோ செய்யலாம்படி சண்டைக்கு ஆட்களைக்கூட்டிக்கொண்டு தூதனுப்பிச் செய்தி தெரிந்துகொண்டு பின்னே வராமல், ''உன்னையெய்தி என் தீவினைகள் தீர்ந்தேன்'' [பெரியதிரு 6-3-4] என்றும், ''பொன்னடியே அடைந்துய்ந்தேன்'' [பெரியதிரு 5-8-9]என்றும், ''ஆலின் மேலால் அமர்ந்தான் அடியிணைகளே'' [திருவாய் 9-10-1]என்றும் சொல்லுகிறபடியே, ராமகைங்கர்யமாகிற பலம் பின்னே கிடைத்தாலும் கிடைக்கட்டும்; கிடைக்காவிடிலும் போகட்டும்; நான் அருகில் வந்து நிற்கும் நிலையை விண்ணப்பம் செய்யுங்கோள் என்கிறான்.

ஆக இத்தால் பகவத்ஸமாச்ரயணம் பண்ணுவார்க்கு பாகவதர் முன்னிலையாகப் பெறவேணும் என்னுமர்த்தம் சொல்லிற்ருயிற்று.

இனி, அபயப்ரதாநஸாரம்

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம், 16-வது ச்லோகம்

एतत्तु वचनं श्रुत्वा सुग्रीवो लघुविक्रमः।
लक्ष्मणस्याग्रतो रामं संरब्धमिदमब्रवीत्॥

ஏதத்து வசநம் ச்ருத்வா ஸுக்ரீவோ லகுவிக்ரம:।
லக்ஷ்மணஸ்யாக்ரதோ ராமம் ஸம்ரப்தமிதமப்ரவீத்॥

பதவுரை:—ஸுக்ரீவ:-ஸுக்ரீவன், ஏதத்-இந்த, வசநம்-வார்த்தையை, ச்ருத்வா-கேட்டவுடன், லகுவிக்ரம:-விரைவில் வீரத்தையுடையவனுய், லக்ஷ்மணஸ்ய — இலக்குவனுடைய, அக்ரத:-திருமுன்பே, ராமம்-ஸ்ரீராமபிரானிடம், ஸம்ரப்தம்-பரபரப்புடன், இதம்-இவ்வார்த்தையை, அப்ரவீத்-உரைத்தான்.

அவதாரிகை:-மஹாராஜர், பெருமாள் பக்கல் பரிவாலே ஸ்ரீவிபீஷணுழ்வானுடைய அநுகூலபாஷணங்களை விப்ரலம்பமென்று புத்திபண்ணி தந்நிரஸநார்த்தமாகப் பெரிய பதற்றத்தோடேகூடப் பெருமாளுக்கு ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்தார் என்கிறது.

ஆக இத்தால், "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" [திருவாய்4-6-8] என்கிறபடியே பகவானைப் பற்றுவார்க்குப் பாகவதரை முன்னிட்டுக்கொண்டு அவனை அடைய வேண்டும் என்னும் அரும்பொருள் அறிவிக்கப்பட்டதாயிற்ற.

அவதாரிகை:—சுக்கிரீவன், ஸ்ரீராமபிரானிடம் பொங்கும் பரிவாலே ஸ்ரீவிபீஷணுழ்வானுடைய அன்புநிறை சொற்களை வஞ்சனைச் சொற்களாக நினைத்து, அவ்வார்த்தைகளை மறுப்பதற்காக மிகவும் பதறிக்கொண்டு ஸ்ரீராமபிரானிடம் ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்தான் என்கிறது இந்த ச்லோகத்தில்.

வ்யா:—(ஏதத்து வசநம் ச்ருத்வா) “राघवं शरणं गतः” (ராகவம் ஶரணம் கத:) என்கிற அவ்வார்த்தையைக் கேட்டதற்குப் பின்பு, மஹாராஜர் வேறுபட்டார் என்கிறது. “चिन्तयित्वा मुहूर्तं तु” (சிந்தயித்வா முஹூர்த்தந்து) என்கிறவிடத்தில் ‘சாரனுமல்லன், தூதனுமல்லன், சத்ரு’ என்று நிர்ணயித்தபோது கூச்சத்தாற்பிறந்த விக்ருதிபோலன்றிறே இதுதான்; பாதகத்வத்தை மறைத்துப் பெருமாள் தன்னை அநுகூலனென்று ஸ்வீகரிக்கும் வார்த்தையைச் சொல்லி, அம்முகத்தாலே நலியவந்தானென்று பிறந்த விக்ருதியிறே. (லகுவிக்ரம:) ‘இவன் ஶரணோக்தி பெருமாள் செவிப்படு

வ்யா:–(இந்த வார்த்தையைக்கேட்டவுடன்) “ராகவரை சரணமடைந்தேன்” [ரா-யு 17-14] என்கிற வார்த்தையைக் கேட்டபின் சுக்ரீவனுடைய மனநிலை முன்னிலும் வேறுபட்டது என்று ‘து’ என்னும் சப்தம் காட்டுகிறது, “சிந்தயித்வா முஹூர்த்தம் து” [ரா-யு 17-4] [விரைவில் முடிவு செய்து] என்கிற ச்லோகத்திலுள்ள துசப்தம், “விபீஷணன் ஒற்றனுமல்லன், தூதனுமல்லன், எதிரியே” என்று நிர்ணயித்தபோது சுக்ரீவனுக்கு பயசங்கையால் பிறந்த மனவேறுபாட்டைக் காட்டிற்று. அவ்வேறுபாட்டைக் காட்டிலும் இந்த ச்லோகத்தில் சொல்லப்படும் வேறுபாடு விலக்ஷணமானதன்றோ. எதிரியாகவே வந்தான் என்று நிச்சயித்திருக்கையாலே இவனை இராமபிரான் வென்று விடுவார் என்னும் உறுதியால் ஆறுதலடைய இடமுண்டு அப்போது. இப்போதோவெனில் தான் எதிரியென்பதை மறைத்து, ஸ்ரீராமபிரான் தன்னை நண்பனாக நினைத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய சரணவசனத்தைச் சொல்லி அவரை இப்படி அடுத்துக் கெடுக்கவந்தான் விபீஷணன் என்று நினைத்துப் பிறந்த வேறுபாடாகையால் இதில் ஆறுதலடையவும் இடமில்லையன்றோ. (விரைவான நடையை யுடையவனாய்) இவனுடைய சரணவசனம் ஸ்ரீராமபிரானுடைய செவியில் பட்டதெனில், பின்பு இவ்வபாயத்திலிருந்து அவரைத் தப்பச்செய்யமுடியாது; அந்த சப்தம் அவரை எட்டுவதற்கு முன் நாம் அவரிடம் சென்றுவிடவேண்டும் என்று விரைவில் சென்றான் என்கிறது. த்ரிவிக்ரமசப்தத்திற்போலே விக்ரமசப்தம் நடையைக் காட்டுகிறது. அன்றிக்கே, விபீஷணனை வெல்லவேணுமென்ற வீரத்தை

மாகில் பின்பு மீட்கவொண்ணாது; நாம் அந்த ஶப்தத்துக்கு முற்படவேணும்' என்று சடக்கெனப்போனார் என்கிறது.

(லக்ஷ்மணஸ்யாக்ரத:) தம்மோபாதி பரிவரான இளைய பெருமாள் ஸந்நிதியிலே. அவரும் அஸ்தாநே பயஶங்கியான வராகையாலே அவரையும் கூட்டிக்கொள்ளுகிறார். "भरतस्य वधे दोषं नाहं पश्यामि" (பரதஸ்ய வதே தோஷம் நாஹம் பஶ்யாமி) என்றவரிறே. (ராமம்) "राघवं शरणं गतः" (ராகவம் ஶரணங்கத:) என்கிற வாக்யஶ்ரவணத்தாலுண்டான ஸந்தோஷத்தாலே அபிராமராயிருக்கிறவரை. (ஸம்ரப்தம்) பெருமாளுக்கும் இவர் போகிறவழியை அந்யதாகரிக்கவொண்ணாதபடி அடர்த்துக்கொண்டு. அதாகிறது,— ராஜ்யம் விட்டுப்போந்து குவால் நாளுண்டோ? ராஜநீதியை மறந்ததோ? இவ்விடம் லங்காத்வாரமன்றோ? ராவணன் செய்யும் அநீதிகள் அறியவில்லையோ? ஒருத்தன் ஶரணமென்னுங்காட்டில் இவற்றை மறந்ததோ? என்றாற்போலே சொல்லுகை. (இதமப்ரவீத்) 'வந்தவன் ராக்ஷஸேந்த்ரனா

விரைவில் உடையவராய்' என்றுமாம். முந்திய பொருளே சிறந்தது; வ்யாக்யானத்துக்கு ஒட்டியது.

(லக்ஷ்மணனுக்கு முன்னால்) தம்மைப்போல் பரிவையுடைய லக்ஷ்மணனுடைய திருமுன்பே. அவரும் தகாதவிடத்திலும் அபாயம் வரும் என்று ஐயுறும் தன்மையுடையவராகையால் அவரையும் கூட்டிக்கொள்கிறார். "பரதனைக்கொல்லுவதில் குற்றத்தை நான் காணவில்லை" [ரா-அ 96-23] என்று சொன்னவரன்றோ.(ராமபிரானிடம்)"ராகவரை சரணமடைந்தேன்" [ரா-யு 17-14] என்னும் விபீஷணவசனத்தைக்கேட்டதால் அபிராமராய் —அழகியவராய்— விளங்குமவரிடம். (பரபரப்புடன்) ஸ்ரீராமபிரானுக்கும் சுக்ரீவனுடைய வார்த்தையை மறுக்கவொண்ணாதபடி மேல்விழுந்து கொண்டு வார்த்தை சொன்னான் என்கிறது. அதாவது:— "அயோத்தி ராஜ்யத்தை விட்டுவந்து வெகுநாளாயிற்றே? அதனால் ராஜநீதி மறந்து போயிற்றோ? இது லங்கையின் தலைவாசலன்றோ? ராவணன் செய்யும் தீமைகள் தெரியாதோ? ஒருவன் சரணமென்றவுடன் இவையெல்லாம் மறந்துபோயிற்றோ?" என்றாற்போலே பரபரப்புடன் சில பேசினான் என்று கருத்து. (இதைச் சொன்னான்) "வந்தவன் அரக்கர் தலைவனாயிருந்தான்;

யிருந்தான்; அநுகூலபாஷணமும் பண்ணினுன்; இவன் ஆராயிருக்கிருனே' என்று ஸந்தேஹித்துப் பெருமாளுக்கு இவன் வரவு சொல்லுகையன்றிக்கே சத்ருவென்றே நிச்சயித்துத் தத்பரிஹாரத்துக்காகச் செய்யவேண்டும் ஹிதத்தைச்(அம்சத்தைச்)சொன்னுர். (ராமம் லக்ஷ்மணஸ்யாக்ரத: ஸம்ரப்தமிதமப்ரவீத்) பெருமாளைப் பிராட்டி இளையபெருமாளை நோக்கி அடர்த்து வார்த்தை சொன்னுற்போலே சொன்னுரென்னவுமாம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம், 18-வது ச்லோகம்

मन्त्रे व्यूहे नये चारे युक्तो भवितुमर्हसि।
वानराणाञ्च भद्रं ते परेषाञ्च परन्तप॥

மந்த்ரே வ்யூஹே நயே சாரே யுக்தோ பவிதுமர்ஹஸி।
வாநராணுஞ்ச பத்ரம் தே பரேஷாஞ்ச பரந்தப ||

பதவுரை:-பரந்தப-எதிரிகளை வருத்தும் வீரரே! மந்த்ரே-மந்திராலோசனையிலும், வ்யூஹே—(சேனையின்) அணிவகுப்பிலும், நயே—(ஸாமம்முதலிய) உபாயத்திலும், சாரே—வேவுபார்ப்பதிலும், யுக்த: பவிதும்-கவனமுள்ளவராவதற்கு, அர்ஹஸி—தகுந்தவராகிறீர்; தே-உமக்கும், வாநராணும் ச-வானரர்களுக்கும், பரேஷாம் ச-மற்றுள்ளார்க்கும், பத்ரம்-மங்களமுண்டாகுக.

அநுகூல வசனமும் பேசினுன்; இவன் எதிரியோ நண்பனே என்று தெரியவில்லை'' என்று ஐயமுற்று ராமபிரானுக்கு இவனுடைய வரவு சொல்லாமல் எதிரியென்றே நிச்சயித்து அவனை விலக்குவதற்குச் செய்யவேண்டிய நற்காரியத்தைச் சொன்னுன். (லக்ஷ்மணனுக்கு முன்னுல் ராமனிடம் பரபரப்போடு வார்த்தை சொன்னுன்) ''த்வாமாஹ ஸீதா பஹு வாக்யஜாதம்''[ரா-ஆர 13-12][சீதை உன்னிடம் பல வாக்கியங்களைச் சொன்னுள்] என்றவிடத்திலே லக்ஷ்மணனை நோக்கி ராமபிரானை வெற்றிகொள்ளும் வார்த்தைகளைப் பிராட்டி சொன்னுற்போலே சுக்ரீவனும் வார்த்தை சொன்னுன் என்றும் பொருள் கொள்ளலாம்.

அவதாரிகை:— 'இவர்களால் நம்மை ஒன்றும் செய்ய வொண்ணுதபடி தேவர் மந்த்ராதிகளிலே ப்ரவர்த்திக்க வேணும்' என்று சொல்லி, அவ்வளவிலே நில்லாத பரிவாலே மங்களாஶாஸநம் பண்ணுகிருர்.

வ்யா:—(மந்த்ரே) ந்யாயவித்துக்களான ஸசிவரோடே ரஹஸி ராஜகார்யம் நிரூபிக்கை. (வ்யூஹே) யுத்தயோக்ய மான ஸேனைகளை நிலையிலே நிறுத்துகை. (நயே) ஸாமாத் யுபாயத்தாலே கார்யம் நடத்துகை. (சாரே) பராபிப்ராய பரிஜ்ஞானார்த்தமாக நிபுணனை புருஷனை ஏவுகை. (யுக்தோ பவிது மர்ஹஸி) முன்போலே நமக்கு எதிர் ஆரென்று இருக்கவொண்ணுது. ராஜ்யக்ருத்யங்களிலே அவஹிதராகை யோக்யம்.

தைவபௌருஷங்களிலே பௌருஷத்தைப் பூர்வார்த்தத் தாலே சொல்லி, அதுக்கு தைவஸஹாயத்தை ஆஶாஸிக்

அவதாரிகை:—துணைவரோடு கூடிய விபீஷணனுல் நம்மை ஒன்றும் செய்யமுடியாதபடி தேவரீர் மந்திராலோசனை, அணிவகுப்பு முதலிய வற்றைச் செய்வதில் ஈடுபடவேணும் என்று சொல்லி, அத்துடன் நிற்க மாட்டாத பரிவாலே பல்லாண்டு பாடுகிருர் சுக்கிரீவ மஹாராஜர்.

வ்யா:—(மந்திராலோசனையிலும்) மந்திராலோசனையாவது,—ராஜநீதி யறிந்த மந்திரிகளோடு ரஹஸ்யமாக ராஜகாரியங்கள் நடக்கவேண்டிய முறைகளை ஆராய்வதாகும். (அணிவகுப்பிலும்) போர்புரியத்தக்க ஸேனை களை நிற்கவேண்டிய நிலையிலே நிறுத்துவது அணிவகுப்பாகும். (உபாயத் திலும்) ஸாமம், தானம், பேதம், தண்டம் என்னும் நாலுவிதமான உபாயங்களாலே காரியம் நடத்துவதிலும். (வேவுபார்ப்பதிலும்) எதிரியின் கருத்தறிவதற்காக மறைந்திருந்து தொழில்புரியவல்ல ஒற்றனை ஏவுவதிலும். (ஈடுபட்டவர் ஆகத் தகுந்தவராகிறீர்) முன்போலே போரிலே நம்மை வெல்ல வல்லவர் ஒருவருமில்லை என்றிருக்கலாகாது; அடுத்துக் கெடுக்க ஒருவன் வந்திருக்கும் இப்போது ராஜநீதியை ஒட்டிச் செய்யவேண்டிய காரியங்களில் கவனமாயிருப்பது தக்கது.

தைவம் (விதி), பௌருஷம் (சுயமுயற்சி) என்னும் இரண்டிலே சுய முயற்சியை முதலடியிற்சொல்லி, அதற்கு தைவத்தின் துணையைப் பின்

கிருர் உத்தரார்த்தத்தாலே: (பத்ரம்தே) ஸர்வலோகநாதரான தேவர்க்கு மங்களமுண்டாகவேண்டும்.(வாநராணஞ்ச) "राघवार्थे पराक्रान्ता न प्राणे कुर्वते दयां" (ராகவார்த்தே பராக்ராந்தா-நப்ராணே குருதே தயாம்) என்றிருக்கும் வாநர கோலாங்கூலாதிகளுக்கும் (பரேஷாஞ்ச) அல்லாத லக்ஷ்மணாதிகளுக்கும் மங்களமுண்டாகவேணும். (வாநராணும் பரேஷாஞ்ச விஷயே மந்த்ரே வ்யூஹே நயே சாரே யுக்தோ பவிதுமர்ஹஸி) வாநரங்களுடையவும் சத்ருக்களுடையவும் விஷயமாக மந்த்ராதிகளிலே அவஹிதராகவேணும். (பத்ரம் தே) இவர் இப்போது பத்ரமாக நினைக்கிறது ஶரணமென்றவனைக் கைக்கொள்ளாதொழிகை. (பரந்தப) ஶத்ருக்களுடைய ஸேனைக்கூட்டம் மண்ணுண்ணும்படியன்றோ தேவர் ப்ரதாபமிருக்கும்படி. இத்திருநாம் யதார்த்தமாக வேணும்.

னடியாலே வேண்டுகிருர்,–(உனக்கு மங்களமாகுக) ஸர்வலோகநாதரான தேவரீருக்கு மங்களமுண்டாகவேணும். உமக்குத் தீமையெனில் உலகுக்கே தீமையாய் முடியுமன்ருே. (வானரர்களுக்கும்) "ராகவனுக்காகச் சண்டை செய்பவர்கள்" [ரா-யு 27-1] "தம் உயிரிடமும் இரக்கம் காட்டுவதில்லை" [ ] என்றிருக்கும் வானரர்கள், கோலாங்கூலங்கள் முதலியவர்க்கும் மங்களமுண்டாகுக. (மற்றுள்ளார்க்கும்) இவ்விருவகையிலும் சேராத லக்ஷ்மணன் முதலானோர்க்கும் மங்களமுண்டாகட்டும். (வாநராணும் பரேஷாஞ்ச விஷயே மந்த்ரே வ்யூஹே நயே சாரே யுக்தோ பவிதுமர்ஹஸி) என்று அந்வயித்து, வானரங்களுடையவும் எதிரிகளுடையவும் விஷயத்தில் மந்திராலோசனை, அணிவகுப்பு, உபாயம், வேவுபார்த்தல் ஆகியவற்றில் கவனமாயிருக்கவேணும் என்றும் பொருள் கொள்ளலாம். வானரர் விஷயத்தில் அணிவகுப்பிலும், எதிரிகள் விஷயத்தில் மந்திராலோசனை, உபாயம், வேவுபார்த்தல் ஆகியவற்றிலுப் ஈடுபடவேணும் என்று கருத்து. (உனக்கு மங்களமுண்டகுாக) இப்போது இவர் மங்களமாக நினைப்பது சரணமென்றவனைக் கைக்கொள்ளாமலிருப்பதேயாகும். அஃதானே பயசங்கையாலே அமங்களத்தை மங்களமாக நினைக்கிருர். (எதிரிகளை வருத்துமவனே) எதிரிகளுடைய சேனைக்கூட்டம் மண்ணைக்கவ்வும்படி செய்யவல்லதன்ருே உம்முடைய வீரம். பரந்தபன் என்னும் இத்திருநாமம் விபீஷணன் விஷயத்தில் மெய்யான பொருளை உடையதாகவேணும்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 19-வது ச்லோகம்

अन्तर्धा नगता ह्येते राक्षसाः कामरूपिणः ।
शूराश्च निकृतिज्ञाश्च तेषु जातु न विश्वसेत् ॥

அந்தர்த்தாநகதா ஹ்யேதே ராக்ஷஸா: காமருபிண: ।
சூராச்ச நிக்ருதிஜ்ஞாச்ச தேஷு ஜாது ந விச்வஸேத் ॥

பதவுரை:-ஏதே ராக்ஷஸா:-இந்த அரக்கர்கள், **அந்தர்த்தாநகதா:**—மறைந்து நடக்கிறவர்களாயும், **காமருபிண:**-விரும்பிய உருவத்தை எடுக்க.வல்லவராயும், **சூரா: ச**—போர் வல்லவராயும், **நிக்ருதிஜ்ஞா: ஹி**—வஞ்சிக்கும் உபாயங்களை அறிந்தவராயும் உள்ளனரன்றே, **தேஷு**—அவர்களிடத்தில் **ஜாது**-ஒருபோதும், **ந விச்வஸேத்**—நம்பிக்கைவைக்கக்கூடாது.

அவதாரிகை:—'சிலர் அநுகூலராய் வந்தார்களாகில் நீர் இப்படி ஸம்ப்ரமிக்க உமக்கு வந்ததென்?' என்ன,- 'இவர்களாநுகூல்யம் விச்வஸிக்கவொண்ணாது' என்கிறார்.

வ்யா:—(ஏதே அந்தர்த்தாநகதா:) 'ஏதே' என்று ப்ரத்யக்ஷஸித்தமானவர்களை 'அந்தர்த்தாநகதா:' என்கிறபடியென்? என்னில்: 'இவர்கள் காண்கிறவளவல்லர்; பதிபடை உண்டு' என்னும் நினைவாலே. (ஏதே) இவர்களுடைய ஆகாரமே அவிச்வஸநீயதையைச் சொல்லித்தாராநின்றது

அவதாரிகை:—'நாலுபேர் நமக்கு நண்பராக வந்தால் நீரிப்படிப் பரபரப்படையக் காரணமென்ன?' என்று ராமபிரானுக்குக் கருத்தாகக்கொண்டு 'இவர்களுடைய நட்பு வெளிவேஷமே; இதை நம்பமுடியாது' என்கிறார் இந்த ச்லோகத்தில்.

வ்யா:—(இவர்கள் மறைந்து நடப்பவர்கள்) 'இவர்கள்' என்று கண்ணுக்கு நேரே காட்சியளிப்பவர்களை மறைந்து நிற்பவர்கள் என்பது எப்படிப் பொருந்தும்? எனில்: நாம் காணும் நாலுபேரே இவர்கள் என்று நினைக்கவேண்டா; மறைந்திருக்கும் படை முதலானவை இவர்களுக்கு உண்டு என்று கருத்து. (இவர்கள்) இவர்களுடைய ஆயுதமேந்திய

என்கை. 'இவர்கள் நாலைந்து பேர் வந்து நம்மைச் செய்வ தென்?' என்னில்: (சூராச்ச நிக்ருதிஜ்ஞாஸ்ச) நேர்கொடு நேர் நலியமாட்டார்களாகிலும் வஞ்சிக்க விரகறிவார்கள். உமக்குச் செவ்வையிலுண்டான அபியோகமித்தனையும் வஞ்சநத்திலே உண்டுகாணும் அவர்களுக்கு. (தேஷு ஜாது ந விச்வஸேத்) ஆனபின்பு, ஆயிரம் ப்ரபத்தி பண்ணினாலும் அவர்கள் பக்கல் நிரூபகனாயிருக்குமவன் விச்வஸிப்பானல்லன்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம், 20-வது ச்லோகம்

प्रणिधी राक्षसेन्द्रस्य रावणस्य भवेदयं।
अनुप्रविश्य सोऽस्मासु भेदं कुर्यान्न संशयः॥

ப்ரணிதீ ராக்ஷஸேந்த்ரஸ்ய ராவணஸ்ய பவேதயம்।
அநுப்ரவிச்ய ஸோஸ்மாஸு பேதம் குர்யாந் ந ஸம்சய:॥

பதவுரை:-அயம்-இவன், ராக்ஷஸேந்த்ரஸ்ய ராவணஸ்ய- அரக்கர் தலைவனான இராவணனுடைய, ப்ரணிதி:—ஒற்றனாகவே, பவேத்-இருக்கவேண்டும்; ஸ:-அப்படிப்பட்டவன் அஸ்மாஸு—நம்மிடத்தில், அநுப்ரவிச்ய — உள்நுழைந்து, பேதம்குர்யாத்— (ஒருவர்க்கொருவர்) கலஹமுண்டாம்படி செய்வான், ந ஸம்சய:—(இதில்) ஐயமில்லை.

அவதாரிகை:— 'அநுகூலனல்லனாகில் இவன் ஆராய் வந்தான்? வந்தவன்தான் அவஹிதரான நம்பக்கல் செய்யும்

தோற்றமே நம்பத்தகாதவர்களென்று காட்டித்தருகிறது என்று கருத்து. இவர்கள் நாலைந்து பேர் வந்து நம்மை என்ன செய்துவிடமுடியும்? எனில்: (சூரர்களாய் வஞ்சனையறிபவர்களாயுள்ளவர்கள்) நேரே நின்று அறப்போர் புரியமாட்டார்களாகிலும், மாயப்போர் புரிவதில் சூரர்கள். நேர்மையிலே உமக்குள்ள பழக்கமவ்வளவும் இவர்களுக்கு வஞ்சனையிலே உண்டு காணும். (அவர்களிடத்தில் ஒருபோதும் நம்பிக்கை வைக்கக் கூடாது) ஆகையால், ஆயிரந்தடவை சரணம் புகுந்தாலும், அறிவுடையவன் அவர்களிடம் நம்பிக்கை வைக்கக்கூடாது.

அவதாரிகை:-"நமக்கு நண்பனல்லனாகில், உண்மையில் எப்படிப்பட்ட வனிவன்? எதிரியாய் வந்திருந்தாலும் கவனமுள்ள நம் விஷயத்தில் என்ன

கார்யமென்' என்னில் அவற்றைச் சொல்லுகிறது 'ப்ரணிதி:' இத்யாதியாலே.

வ்யா:—(அயம் ப்ரணிதிர் பவேத்) நீர் ஶரணுகதனுக ப்ர மிக்கிற இவன், ராவணன் வரவிட்டானெருத்தனுகக்கடவன். ஒருத்தனுகில் முதலிலே தன்னை அமைத்துக்கொண்டு புகுரும தொழிய "विभीषण :इति श्रुत:" (விபீஷண இதி ச்ருத:)என்றும், "विभीषणमुपस्थितं" (விபீஷணமுபஸ்திதம்) என்றும், "राघवं शरणङ्गत:" (ராகவம் ஶரணங்கத:) என்றும் தன்னை வெளியிட்டுக்கொண்டு சரணம் புகுருமோ? ஶரணமென்று புகுந்தார் சிலர் சங்நர் செய்யும் கார்யத்தைச் செய்வார்களோ? என்னில்: (ராக்ஷஸேந்த்ரஸ்ய ராவணஸ்ய) "वचस्यन्यन्मनस्यन्यत्कर्मण्यन्यत्" (வசஸ்யங்யத் மநஸ்யங்யத் கர்மண்யங்யத்) என்கிறபடியே தான் வேறொருத்தனுயிருக்க வேறொருத்தனுகச் சொல்லி, கார்யகாலத்திலே வேறொருவனுகச் செல்லும் துர்வர்க்கத்துக்கு நிர்வாஹகனுன ராவணன் மதித்து வரவிட்டானுகக்கடவன்.

செய்துவிடுவான்" என்று ராமபிரானுக்குக் கருத்தாகக்கொண்டு பதிலுரைக்கிருர் "ப்ரணிதி:" என்று தொடங்கும் ச்லோகத்திலே.

வ்யா:-(இவன் ஒற்றனுகக்கடவன்) நீர் சரணமடைந்தவனென்று மயங்குமிவன், ராவணன் அனுப்பிய ஒற்றனுகக்கடவன். "ஒற்றனுயிருந்தால் முதலிலேயே தன் வேஷத்தை மாற்றிக்கொண்டல்லவோ புகுவான்; 'விபீஷணனென்று பெயர் பெற்றவன்' [ரா-யு 17-10] 'வந்தடைந்த விபீஷணனை' [ரா-யு 17-15] 'ராகவரை சரணமடைந்தேன்' [ரா-யு 17-14] என்று தன்னை வெளிப்படுத்திக்கொண்டு சரணம் புகுவானே? சரணமென்று புகுந்த இவர்கள் மறைந்துநிற்கும் ஒற்றர் செய்யும் காரியத்தைச் செய்வார்களோ?" என்று ராமபிரானுக்குக் கருத்தாகக்கொண்டு சொல்லுகிருர்,-(அரக்கர் தலைவனுன ராவணனுடைய) "துராத்மாக்களுக்கு வாயில் வேறும், மனத்தில் வேறும், செயலில் வேறுமாயிருக்கும்" [ ] என்கிறபடியே தான் வேறொருவனுயிருக்கும்போது மற்றொருவனுக வாயால் சொல்லி, செயல்புரியும்போது வேறொருவனுக நடக்கும் துஷ்டர்களான அரக்கர்களுக்குத் தலைவனுன ராவணனுல் 'இவனே இவ்வேலைக்குத் தகுந்தவன்' என்று மதித்து அனுப்பப்பட்ட ஒற்றனே இவ்விபீஷணன்.

ஆனால், தான் புகுந்து செய்வதென்? என்னில்: (ஸோऽஸ் மாஸ்வநுப்ரவிஶ்ய) நமக்கு ப்ரதிகூலனானவன் நம் பக்கலிலே அநுகூலவேஷத்தோடே ப்ரவேஶித்து. (பேதம் குர்யாத்) "एकं दुःखं सुखञ्च नौ" (ஏகம் து:க்கம் ஸுகஞ்ச நௌ) என்றிருக்கும் தேவரையும் என்னையும் எதிரிகளாம்படி பண்ணும். (ந ஸம்ஶய:) "ராவணஸம்பந்தத்தாலே ஶத்ருவாக நினைக்கும்படியிருக்கிற இவன், ஶரணம் புகுந்தானானால் 'அநுகூலனோ ப்ரதிகூலனோ' என்று ஸம்ஶயிக்கவன்றோ அடுப்பது" என்ன, அது வேண்டா; துஷ்ப்ரக்ருதியாகையாலே ஆநுகூல்யம் ஸம்பவியாது. வஞ்சகனாயே வந்தானென்று நிஶ்சிதம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 21-வது ச்லோகம்

अथवा स्वयमेवैष छिद्रमासाद्य बुद्धिमान् ।
अनुप्रविश्य विश्वस्ते कदाचित्प्रहरेदपि ॥

அதவா ஸ்வயமேவைஷ சித்ரமாஸாத்ய புத்திமாந்।
அநுப்ரவிஶ்ய விஶ்வஸ்தே கதாசித் ப்ரஹரேதபி ||

பதவுரை:—அதவா—இல்லாவிடில், புத்திமாந்-அறிவாளியான, ஏஷ:-இவ்விபீஷணன், அநுப்ரவிஶ்ய-நம்முடன் கலந்து,

இவன் ராவணனுடைய ஒற்றனேயானாலும், நம்மிடையே புகுந்து நம்மை என்ன செய்துவிடமுடியும்? எனில்: (அவன் நம்மிடத்தில் உள் நுழைந்து) நமக்கு எதிரியாயிருப்பவன் நம்மிடத்தில் அன்பு பூண்டவன் போலே உட்கலந்து. (கலகமுண்டாம்படி செய்வான்) "நம்மிருவர்க்கும் ஸுகதுக்கங்கள் ஒன்றே" [ரா-கி 5-1] என்றிருக்கும் உம்மையும் என்னையும் எதிரிகளாப்படி கலஹம் செய்வான். (ஐயமில்லை) "ராவணனோடு உறவைப் பார்த்தால் எதிரியென்று எண்ணத்தக்கவனாகிறான்; ஆனால் சரணம் புகுந்ததைப்பார்த்தால் அன்பனென்றும் தோன்றுகிறது. இந்நிலையில் எதிரியோ அன்பனோ என்று ஐயமுறலாமேயொழிய எதிரியென்று நிச்சயிக்க முடியுமோ?' என்று ராமபிரானுக்குக் கருத்தாகக் கொண்டு, "அப்படி நினைக்கவேண்டா; துஷ்டனாகையாலே அன்பனாயிருக்கமுடியாது; ஆகையால் வஞ்சிப்பதற்கே வந்தானென்பது உறுதி" என்கிறார்.

விச்வஸ்தே—நம்பிக்கைக்குப் பாத்திரமானவளவில், சித்ரம்—அவகாசத்தை, ஆஸாத்ய—பெற்று, ஸ்வயம் ஏவ—தானே, கதாசித்—ஒருகாலத்தில், ப்ரஹரேத் அபி—(நம்மை) அடித்தாலும் அடிப்பான்.

அவதாரிகை:—நாம் ஏகரஸராயிருக்க, நம் பக்கலிலே இவனுக்கு புத்திபேதம் பண்ணலாயிருக்குமோ? என்ன, அதில் அவகாஶம் பெற்றிலனாகில், அநுகூலனென்று நாம் விச்வஸிக்குமளவும் நம்மோடே ஒருநீராகக்கலந்து, இடம்பெற்றதொரு போதிலே தானே ப்ரஹரிக்கிலும் ப்ரஹரிக்கும் என்கிறார்.

வ்யா:—(அதவா) 'பேதம் குர்யாத்' என்கிற பக்ஷத்தை வ்யாவர்த்திக்கிறது. (ஸ்வயமேவைஷ:) என்னைக்கொண்டு உம்மை நலிதல், உம்மைக்கொண்டு என்னை நலிதல் செய்யவிடம்பெற்றிலனாகில், தானே நலியிலும் நலியும். எப்போது இவன் நலிவதென்னில்; (அநுப்ரவிஶ்ய விஶ்வஸ்தே) நாம் விச்வஸிக்குமளவும் அநுகூலனாய், நம்மோடே ஒருநீராகக் கலந்து, நாம் விச்வஸித்தவளவிலே. விச்வஸித்தாலும் நம்

அவதாரிகை:—"நாம் ஒற்றுமையோடிருக்கும்போது நம்மிடையே இவனால் கலஹம் விளைக்கமுடியுமோ?" என்று கருத்தாகக்கொண்டு, "அப்படி கலஹம் செய்ய இடமில்லாமற்போயிற்றென்றால், அன்பனென்று நாம் நம்பும் வரையில் நம்மோடு ஒன்றாகக் கலந்து, அவகாசம் கிடைத்தபோது தானே நம்மை எதிரிட்டாலும் எதிரிடுவான்" என்கிறார் இந்தச்லோகத்திலே.

வ்யா:-(இல்லாவிடில்) "கலஹம் மூட்டக்கூடும்" என்று சென்ற சுலோகத்தில் சொன்ன பக்ஷத்தை வேறுபடுத்துகிறது. கலஹம் செய்யமுடியாவிடில். (இவ்விபீஷணன் தானே) 'ப்ரஹரேத்' (நலிவான்) என்றதோடு அன்வயம். கலஹம் செய்வதன்மூலம் என்னைக்கொண்டு உம்மையோ உம்மைக்கொண்டு என்னையோ அழிக்க இடம்பெறவில்லையாகில், தானே நமக்குத் தீங்கிழைத்தாலும் இழைப்பான். எப்போது இவன் நமக்குத் தீங்கிழைப்பது? எனில்: (நம்முடன் கலந்து நம்பிக்கைக்குப் பாத்திரமானவளவில்) நாம் இவனை நம்பும்வரையில் அன்பனாய் நம்மோடு ஒன்றாகக்கலந்து நாம் நம்பினவுடன் நலிவான். 'நம்பினாலும் நாம் இருவரும் கூடியிருக்கும்போது இவன்

சேர்த்தியிலே இவனுக்கு நலிய அவகாசமுண்டோ? என்னில்: (சித்ரமாஸாத்ய) நாம் விச்வஸியாதபோது இவனுக்கு இடமின்றிக்கேயொழியுமித்தனைபோக்கி, விச்வஸித்தால் அவனுக்கு நலிய இடமரிதோ? (புத்திமாந்) இடமில்லாவிடிலும் காணவல்ல புத்தி கூர்மையையுடையனென்கை. ரக்ஷணதர்மத்தில் அவஸரப்ரதீக்ஷரான உமக்குள்ள புத்தி யோகத்தளவு உண்டு காணும் இவனுக்குப் பரஹிம்ஸையிலே. (கதாசித் ப்ரஹரேதபி) இடம் பெற்ற ஒரு போதிலே ப்ரஹரிக்கிலும் ப்ரஹரிக்கும்.

(அதவா) இவன் ராவணனுடைய ப்ரணிதிமாத்ரமன்றிக்கே, ராவணன் தான் முன்பு ஸந்யாஸிவேஷங்கொண்டு நலிந்தாற்போலே, சரணாகதவேஷத்தைக்கொண்டு நம்மோடே கலந்து, நாம் விச்வஸித்தவாறே இடம் பெற்ற போதிலே நலியவந்தானாகவும் கூடுமென்றுமாம்.

நம்மை நலிய இடமுண்டோ?' என்னில்: (இடம்பெற்றவளவில்) நாம் நம்பாதபோது இடமிராதேயொழிய நாம் நம்பிக்கை வைத்துவிட்டால் இடம் கிடைக்காமற்போகுமோ? ஒரு காரணத்தால் பிரிந்திருக்கும்போதும் அடிக்கலாம்; தூங்கும்போதும் நலியலாம். (அறிவாளி) இடமில்லாவிடிலும் காணக்கூடிய நுண்ணறிவை உடையவனுயிற்றே. உயிர்களைக் காப்பாற்றுவதற்கு இடம்தேடித்திரியும் உமக்கு அதில் எவ்வளவு நுண்ணறிவு உண்டோ, அவ்வளவு நுண்ணறிவு இவனுக்கு உயிர்களுக்குத் தீங்கிழைப்பதில் உண்டு. (ஒருகாலத்தில் நம்மை அடிக்கவும் கூடும்) இடம் பெற்ற சமயத்திலே நம்மை அடித்தாலும் அடிப்பான்.

(அதவா-அல்லது; இல்லாவிடில்) இப்பதம் 'கலஹம் செய்வான்' என்னும் பக்ஷத்தைக்காட்டிலும் வேறுபாட்டைக் காட்டுவதாக முன் உரைக்கப்பட்டது; அப்படியல்லாமல் 'ராவணனின் ஒற்றனாகக் கூடும்' என்று சென்ற ச்லோகத்தில் சொன்ன பக்ஷத்தைக் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். இவன் ராவணனுடைய ஒற்றன் மாத்திரமல்லன்; ராவணன் முன்பு ஸந்யாஸி வேஷம் கொண்டு பிராட்டியைத் தூக்கிச்சென்று தீங்கிழைத்தாற்போலே, சரணாகத வேஷத்தைக்கொண்டு நம்மோடு கலந்து நாம் நம்பிக்கை வைத்தவுடன் இடம் கிடைத்த சமயத்தில் தீங்கிழைக்கவந்த எதிரியாகவும் கூடும் என்று கருத்து.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 22-வதுச்லோகம்

मित्राटवीबलञ्चैव मौलं भृत्यबलं तथा ।
सर्वमेतद्बलं ग्राह्यं वर्जयित्वा द्विषद्बलम् ॥

மித்ராடவீபலஞ்சைவ மௌலம் ப்ருத்யபலம் ததா ।
ஸர்வமேதத் பலம் க்ராஹ்யம் வர்ஜயித்வா த்விஷத்பலம் ॥

பதவுரை:—த்விஷத்பலம்—எதிரிகளின் சேனையை, வர்ஜயித்வா-நீக்கி, மித்ராடவீ பலம்-நட்புப்படையும் காட்டுப்படையும், மௌலம்—மூலபலமும், ததா ப்ருத்யபலம்—அப்படியே கூலிப்படையுமாகிய, ஏதத் ஸர்வம் பலம்-இந்த எல்லாப் படைகளும், க்ராஹ்யம்-கூட்டிக்கொள்ளத்தக்கவை.

அவதாரிகை:—''நாம் எதிரிகள் மேலே எடுத்துவிட்டவளவிலே அத்தலையில்நின்றும் செவ்வியனாய் வந்தவன் அடியற்று வந்தானாகவேணும்; அவனை ஸ்வீகரிக்கை ராஜநீதியன்றோ? ராஜாக்களாயிருக்கிற உமக்கு இது அறியவேண்டாவோ?'' என்ன, ''அது நீதியன்று'' என்கிறார்.

வ்யா:—(மித்ரபலம்) அ.தாவது—ஸமஸுகது:க்கராயிருக்கை. ததா காமந்தகே— ''**औरसं मित्रसंबन्धं तथा**

அவதாரிகை:—''நாம் எதிரிகள் மேலே படையெடுத்துவிட்டவுடன், எதிர்த்தலையிலிருந்து நம்மைச் சரணம் புகுந்து வந்தவன் எதிரியோடு தொடர்பற்றே வந்திருக்கவேணும்; அவனை அங்கீகரிப்பதன்றோ ராஜநீதி; வானரராஜாவான நீர் இதை அறியவேண்டாமோ?'' என்று ராமபிரானுக்குக் கருத்தாகக் கொண்டு ''ராஜநீதி அதுவன்று; எதிரியின் ஆளைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பதே ராஜநீதி'' என்கிறார் இந்த ச்லோகத்திலே.

வ்யா:—(நண்பர் படை) நண்பராவார், ஒருவனுடைய துன்பத்தில் துன்பத்தையும், இன்பத்தில் இன்பத்தையும் அடைபவர். ''தாய் தந்தையரோடு ஸம்பந்தமுள்ள ஔரஸமித்திரர்; நண்பரோடு ஸம்பந்தமுள்ளவர்;

वंशक्रमागतं। रक्षकं व्यसनेभ्यश्च मित्रं ज्ञेयं चतुर्विधम्॥'' *(ஔரஸம் மித்ரஸம்பந்தம் ததா வம்ஶக்ரமாகதம்। ரக்ஷகம் வ்யஸநேப்யஶ்ச மித்ரம் ஜ்ஞேயம் சதுர்விதம்॥)* (அடவீபலம்) வங்யப் படை. (மௌலம்) பித்ருபைதாமஹக்ரமாகதமான தாஸ வர்க்கம். (ப்ருத்யபலம் ததா) கூலிப்படை. (ஸர்வமேதத் பலம் க்ராஹ்யம்) இந்தச் சதுர்விதபலமும் க்ராஹ்யம். (வர்ஜ யித்வா த்விஷத்பலம்) ஶத்ருபலம் க்ராஹ்யமன்று. ததா காமந்தகே— "अरिर्मित्रमरेर्मित्र मित्रमित्रं ततः परं'' (அரிர் மித்ரமரேர் மித்ரம் மித்ரமித்ரம் தத: பரம்) இத்யாதி. இதுக்கு

வம்சவழியாக நட்புபூண்டவர்; துன்பங்களிலிருந்து காப்பாற்றுமவர்கள் என்று நண்பர் நாலு வகைப்படுவர்'' * [காமந்தக நீதிஸாரம் 4-71] (காட்டுப் படை) காட்டிலிருக்கும் மனிதர்களடங்கிய படை. (மூலபலம்) தகப்பன் பாட்டன் என்று வழிவழியாக அடிமைப்பட்டிருக்கும் ஸேனை. (ப்ருத்ய பலம்-கூலிப்படை) ப்ருதி (भृति) (கூலி)க்காக உழைக்கும்படை என்றபடி. (இந்தப்படைகளனைத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்கவை) இப்படி நாலுவிதமா யிருக்கும் ஸேனைகள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை. (எதிரிப்படையை நீக்கி) எதிரிப்படை ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. தேசக்ரமத்தில் (இயற்கை யில்) நண்பராவாரையும், தேசக்ரமத்தில் (இயற்கையில்) எதிரிகளாவாரை யும் காமந்தகர் நீதிஸாரத்தில் பின்வருமாறு விவரித்தார்:–

---

*காமந்தக நீதிஸாரத்தின் அச்சுப்பிரதியில் இந்தச்லோகத்தின் பாட மும், அதற்குப் பொருளும் பின்வருமாறு தரப்பட்டுள்ளன:–

"ஔரஸம் மைத்ரஸம்பத்தம் ததா தேஶக்ரமாகதம்।
ரக்ஷிதம் வ்யஸநேப்யஶ்ச மித்ரம் ஜ்ஞேயம் சதுர்விதம்॥

[(1) தாய்தந்தையரோடு ஸம்பந்தமுள்ள மனப்பூர்வமான நண்பர்; (2) தாய் தந்தையரோடு ஸம்பந்தமாத்ரத்லுதயுடைய நண்பர், (இவ்விருவரும் ஸஹஜ மித்ரம் என்று கௌடில்யரால் அழைக்கப்பட்டனர்) (3) ஒன்றுவிட்டு அடுத்த தேசத்திலிருப்பதனுல் (இயற்கையில்) நண்பராயிருப்பவர். (இவர்களை ப்ரக்ருதி (இயற்கை) நண்பர் என்றுர் கௌடில்யர்) (4) துன்பங்களிலிருந்து காப்பாற்றப்படுவதால் நண்பராயிருப்பவர் (இவர்களை க்ருத்ரிம (ஔபாதிக) மித்ரம் என்றுர் கௌடில்யர்) என்று நண்பர் நாலு வகைப்படுவர்.]

ஶாஸ்த்ரம் வேணுமோ? அவன் மேலே அம்புபடக் கண்ண நீர்பாயும் இவனையோ நமக்கு பலமாகக் கொள்ளுவது?

''அரிர் மித்ரமரேர் மித்ரம் மித்ரமித்ரமத: பரம்।
அதாரிமித்ரமித்ரஞ்ச விஜிகீஷோ: புர: ஸ்ம்ருதா:॥
பார்ஷ்ணிக்ராஹஸ் தத: பஶ்சாத் ஆக்ரந்தஸ் ததநந்தர:।
ஆஸாராவநயோஶ்சேதி விஜிகீஷோஸ்து ப்ருஷ்டத:॥''

[8-16, 17]

[ஜயிப்பதில் விருப்பங்கொண்ட (விஜிகீஷுவான) ஓரரசனுக்கு (எதிரியிருக்கும்) முன்புறத்தில் அடுத்துள்ள தேசத்துக்குத் தலைவன் (தேசக்ரமத்தில்) எதிரியாவான்; அதற்கடுத்த தேசத்தின் தலைவன் (எதிரிக்கு எதிரியாகையாலே) இவனுக்கு நண்பனுவான்; அதற்கடுத்த தேசத்திலுள்ளவன் எதிரியின் நண்பனுவான்; அதற்கடுத்தவன் நண்பனுக்கு நண்பனுவான்; அதற்கடுத்தவன் எதிரியின் நண்பனுக்கு நண்பனுவான். (இவர்களில் நண்பன், நண்பனுக்கு நண்பன் என்னுமிருவரும் மித்ரகோடியிற் சேர்ந்தவர்; எதிரி, எதிரியின் நண்பன், எதிரியின் நண்பனுக்கு நண்பன் என்னும் மூவரும் சத்ருகோடியிற் சேர்ந்தவர்) விஜிகீஷுவுக்குப் பின்புறத்திலுள்ள தேசத்திலிருப்பவன் (பின்புறத்தில் தாக்கக்கூடியவனுகையாலே) பார்ஷ்ணிக்ராஹன் எனப்படுவான். அவனுக்குப் பின்புறத்திலிருப்பவன் (விஜிகீஷுவானவன் கூப்பிட்டபோது (ஆக்ரந்தனம்-கூப்பீடு) பார்ஷ்ணிக்ராஹனைத்தாக்கக்கூடியவனுகையாலே) ஆக்ரந்தன் எனப்படுவான்; அவனுக்குப் பின்புறத்திலிருப்பவன் (பார்ஷ்ணிக்ராஹனை அநுஸரிக்குமவனுகையாலே) பார்ஷ்ணிக்ராஹாஸாரன் எனப்படுவான். அவனுக்கும் பின்னுலிருப்பவன் (ஆக்ரந்தனை அனுஸரிக்கவுரியவனுகையாலே) ஆக்ரந்தாஸாரன் எனப்படுவான். (இவர்களில் ஆக்ரந்தனும் ஆகரந்தாஸாரனும் மித்ரகோடியிற் சேர்ந்தவர்; பார்ஷ்ணிக்ராஹனும், பார்ஷ்ணிக்ராஹாஸாரனும் சத்ருகோடியிற் சேர்ந்தவர்)]

இதிற்சொல்லியபடி விபீஷணன் ராமபிரானுக்கு அடுத்த தேசத்தவனுகையாலே சத்ருகோடியிற்சேர்ந்தவன் என்று கருத்து. ''இந்த நீதிசாஸ்திரம் ஒருபுறமிருக்கட்டும்; ராவணன்மேலே அம்பு பட்டால் கண்ணீர் விடக்கூடிய அவன் தம்பியாகிய இவனையோ நமக்குத் துணையாகக் கொள்ளுவது?'' என்று சுக்ரீவனுக்கு அபிப்பிராயம்.

ஆக, இந்த ச்லோகத்தால் மித்ரகோடியிற் சேர்ந்தவர்களின் படை, காட்டுப்படை, மூலபலம், கூலிப்படை என்னும் நாலுவகைப் படையையும் ஏற்றுக்கொள்வதும், சத்ருகோடியிற் சேர்ந்தவர்களின் படையை விலக்குவதுமே ராஜநீதி என்று காட்டினுராயிற்று.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 23-வது ச்லோகம்

प्रकृत्या राक्षसो ह्येष भ्राताऽमित्रस्य वै विभो ।
आगतश्च रिपोः पक्षात् कथमस्मिंश्च विश्वसेत् ॥

ப்ரக்ருத்யா ராக்ஷஸோ ஹ்யேஷ ப்ராதாமித்ரஸ்ய வை விபோ ।
ஆகத³ச ரிபோ: பக்ஷாத் கதமஸ்மிம்³ச விச்வஸேத் ॥

பதவுரை:-விபோ-ஸ்வாமியே! ஏஷ ஹி-இவன் தான், ப்ரக்ருத்யா-பிறப்பால், ராக்ஷஸ: வை-அரக்கனன்றே. அமித்ரஸ்ய-எதிரியினுடைய, பக்ஷாத்-பக்கத்திலிருந்து, ஆகத: ச-வந்தவனன்றே. அஸ்மிந் ச-இவனிடத்தில், கதம்-எப்படி, விச்வஸேத்-நம்பிக்கை வைக்கலாம்?

அவதாரிகை:-"வர்ஜயித்வா த்விஷத்பலம்" என்று ஸாமாந்யத்தாலே அநாதரிக்கக்கடவோமோ? அங்குத்தை நசையற்றுப் போந்தவன் விச்வஸநீயனன்றோ? ஆனால் அவனைப் பரிக்ரஹித் தட்டென்? என்ன, அங்குத்தை நசையற்றுப் போராமைக்கும், அத்தாலே விச்வஸநீயனல்லாமைக்கும் ஹேதுக்களைச் சொல்லுகிறது,-"ப்ரக்ருத்யா" இத்யாதியாலே.

வ்யா:-(ப்ரக்ருத்யா ராக்ஷஸோ ஹ்யேஷ:) பிறப்பாலே ராக்ஷஸன் என்னுமிடம் உமக்கு ஸம்ப்ரதிபந்நமே. ஆனால்

அவதாரிகை:-"எதிரிப்படையை விலக்கி" என்று பொதுவாக சத்ரு கோடியிற் சேர்ந்தாரனைவரையும் விலக்கிவிடலாமோ? எதிரியிடம் பற்றற்றுப் போந்தவன் நம்பத்தக்கவனன்றோ? ஆகையால் அவனை ஏற்றுக் கொள்வதில் தடையென்ன?" என்று ராமபிரானுக்குக் கருத்தாகக்கொண்டு இவன் ராவணனிடம் பற்றற்று வரவில்லையென்பதற்கும் அதனால் நம்பத் தகுந்தவனல்லன் என்பதற்கும் காரணங்களைச் சொல்லுகிறது 'ப்ரக்ருத்யா' என்று தொடங்கும் ச்லோகத்தாலே.

வ்யா:-(இவன் பிறப்பிலேயே அரக்கனுவான்) பிறப்பிலே இவன் அரக்கன் என்பது நீரும் ஒப்புக்கொண்ட விஷயமே. அப்படியிருக்கும்போது

அவனை அநாதரித்து விஜாதீயரான நம்மைப்பற்ற ஸம்பாவனை யுண்டோ? (ஹி) ஸம்ப்ரதிபத்தெள. (ப்ராதாऽமித்ரஸ்ய) "भ्राता स्वो मूर्तिरात्मनः" (ப்ராதா ஸ்வோ மூர்த்திராத்மந:) என்று நம் ஶத்ருவுக்கு ஶரீரமென்று சொல்லாம்படியிருக்கிற அவனன்றோ?(வை) "रावणस्यानुजो भ्राता" (ராவணஸ்யாநுஜோ ப்ராதா)என்று தன்வாயாலே சொல்லுகையாலே ப்ரஸித்தமன்றோ? நீரும் ப்ராதாவை விட்டன்றோ நம்மைப்பற்றினது? என்ன,- (ஆகதச்சரிபோ: பக்ஷாத்) என்னைப்போலே நிரஸ்தனாய்வந்தவனன்றே. அவன் ஓலக்கத்தினின்றும் வந்தவனன்றோ?(விபோ) முதலிகள் என்னு ஆராய்ச்சியைக் கைவிடாதே கொள்ளீர். (கதமஸ்மிம்ச்ச விச்வஸேத்) இப்படி அவனை அநாதரிக்கைக்கு அநேகஹேது உண்டாயிருக்க, என்ன ஹேத்வாபாஸங் கொண்டு இவனை விச்வஸிப்பது?

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 24-வது ச்லோகம்

रावणेन प्रणिहितं तमवेहि निशाचरम् ।
तस्याहं निग्रहं मन्ये क्षमं क्षमवतां वर ॥

ராவணேந ப்ரணிஹிதம் தமவேஹி நிஶாசரம் ।
தஸ்யாऽஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம் வர ॥

ராவணனைவிட்டு வேறு சாதியினரான நம்மைப் பற்றுவானென்று நினைக்கவும் இடமுண்டோ? (ஹி-அன்றோ) என்னும் பதம் எதிர்த்தலையாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் இதுவென்று காட்டுகிறது. (எதிரியின் தம்பி) "தன் ஸகோதரன் தன்னுடைய மற்றொருருவமாவான்" [மநு 2-226] என்று நம் எதிரியான ராவணனுக்கு உடம்பு என்று சொல்லும்படியிருக்கிறவனன்றோ. அப்படிப்பட்ட இவன் அவனை விட்டு நம்மைப் பற்றுவனோ? (வை-அன்றோ) "அந்த ராவணனுக்கு நான் தம்பி" [ரா-யு 17-10] என்று விபீஷணன் தன் வாயாலும், "ராவணனுக்குத் தம்பி" [ரா-யு 17-17] என்று சுக்கிரீவன் தன் வாயாலும் சொல்லுகையாலே இதுவும் ஸுப்ரஸித்தமன்றோ; 'நீரும் உம் தமயனான வாலியை விட்டன்றோ நம்மைப் பற்றினீர்' என்று ராமபிரானுக்குக் கருத்தாகக்கொண்டு சொல்லுகிறார்,- (எதிரியின் பக்கத்தினின்றும் வந்தவன்) என்னைப்போலே தமயனால் துரத்தப்பட்டு வந்தவனன்றே. அவன் ஸபையிலிருந்து நேரே வந்திருப்பவனன்றோ. (ஐயனே!) எங்களுக்குத் தலைவர் என்னும் காரணத்தாலே ஆராய்ச்சி செய்யாமலிருந்துவிடாதீர்! (இப்படிப்பட்டவனிடம் எப்படி நம்பிக்கை வைப்பது) இப்படி அவனைக் கைவிடுவதற்குப் பல காரணங்களிருக்கும்போது. மேலெழத்தோன்றும் எந்த ஒரு காரணத்தைக் கொண்டு இவனை நம்புவது?

பதவுரை:—க்ஷமவதாம் வர—தகுதியறிவாரில் தலேவரே! **தம்**—அந்த, **நிஶாசரம்**-அரக்கனே, **ராவணேந**-ராவணனால், **ப்ரணிஹிதம்**—சாரனாக அனுப்பப்பட்டவனாக. **அவேஹி**—அறியும்; **அஹம்**—நான், **தஸ்ய**—அவனுடைய, **நிக்ரஹம்**—வதத்தை, **க்ஷமம்**-தகுந்ததாக, **மந்யே**—நினைக்கிறேன்.

அவதாரிகை:-அவன் தன்னைப் பரிபவிக்கையாலே நசையற்று ஆர்த்தனாய் ஶரணம்புகுந்து வந்தானென்று விச்வஸிக்கத்தட்டென்னென்ன: அந்த ப்ரதிபத்தி விப்ரலம்பக்ருதை என்னுமிடத்தை ஸஹேதுகமாகச் சொல்லுகிறார்.

வ்யா:—(தம் நிஶாசரம் ராவணேந ப்ரணிஹிதம்) நீர் அநுகூலனாக ப்ரமிக்கிறவனை நமக்கு ஶத்ருவான ராவணனாலே ப்ரணிதிகர்மத்திலே நியுக்தனாக புத்திபண்ணீர். (அவேஹி) உமக்கு இவன் ப்ரணிதி என்னுமிடம் தோற்றுகிறதில்லையாகில், என்பக்கல் ஒரு அபூர்வவ்யுத்பத்தி பண்ணியருளீர். அறியாதவை எல்லார்க்கும் கேட்டறியவேணும். ஆனால், இவனைச் செய்யவடுப்பதென்? என்ன, (தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம்) நான் அவனுடைய நிக்ர

அவதாரிகை:—"ராவணன் தன்னை அவமதிக்கையாலே அவனிடம் பற்றற்று மனவருத்தத்துடன் சரணம் புகுந்து வந்தான் என்று நம்பத்தடையென்" என்று பிரானுக்குக் கருத்தாகக்கொண்டு "உம்முடைய அந்நினைவு விபீஷணனுடைய வஞ்சனையால் ஏற்பட்டது" என்று ஹேதுவைக்காட்டி நிரூபிக்கிறார்.

வ்யா:—(அந்த அரக்கனை ராவணனால் வேவுபார்க்க அனுப்பப்பட்டவனாக) நீர் அன்பனாக மயங்குகிறவனை நமக்கு எதிரியான ராவணனாலே வேவுபார்ப்பதில் ஏவப்பட்டவனென்றறிவீர். (அறிவீர்) உமக்கு இவன் ஒற்றனென்று தோற்றவில்லையாகில் என்னிடமிருந்து புதிதாக அதை அறிந்துகொள்வீர். "யுக்தியுக்தம் வசோ க்ராஹ்யம் பாலாதபி சுகாதபி" [மழலைபேசும் குழவியாயினும், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாயினும், யுக்தியுள்ள வார்த்தையைச் சொன்னால் கேட்டறியவேண்டியதே] என்கிறபடியே அறியாத அர்த்தங்களை அனைவரும் கேட்டறியவேண்டியதேயன்றோ. 'அப்படியாகில் இவனை என் செய்வதென்று சொல்லுவீர்' என்று க்ருத்தாகக்கொண்டு சொல்லுகிறார்,—(அவனைக் கொல்லுவதே தகுந்ததென்று நினைக்கிறேன்) நான் அவனுடைய வதமே

ஹமே யுக்தமென்று நினைக்கிறேன். இவனை உள்ளபடி அறிந்த நான், வஞ்சகனுன இவனுடைய நிக்ரஹமே யுக்தமென்று அறுதியிட்டேன் என்கை. பகவத் விரோதமுண்டானவிடத்தில் வதமே கர்த்தவ்யமென்னுமிடம் ஶாஸ்த்ர ஸித்தம். "द्वौ तु मे वधकार्येऽस्मिन् न क्षन्तव्यौ कथञ्चन। यज्ञविघ्नकरं हन्यां पाण्डवानाञ्च दुर्हृदम्॥" (த்வௌ து மே வதகார்யேஸ்மிந் ந க்ஷந்தவ்யௌ கதஞ்சந। யஜ்ஞவிக்நகரம் ஹந்யாம் பாண்டவாநாஞ்ச துர்ஹ்ருதம்॥) *"कर्णौ पिधाय निर्यायात्" (கர்ணௌ பிதாய நிர்யாயாத்) "यस्यामृतामलयशः" (யஸ்யாம்ருதாமலயஶ:) * "नाहमात्मानं" (நாஹமாத்மாநம்) (க்ஷமவதாம்

தகுந்ததென்று நினைக்கிறேன். இவனை உள்ளபடி அறிந்த நான், வஞ்சகனுன இவனைக் கொல்லுவதே தகுதியென நிச்சயிக்கிறேன் என்று கருத்து. பகவானேடு விரோதமுண்டானபோது வதமே செய்யத்தகுந்தது என்பது பின்வரும் சாஸ்திர வசனங்களில் ஸித்தமாகும். "வதமே செய்யத்தக்க குற்றங்களில் இரண்டை மாத்திரம் நான் ஒருபோதும் பொறுக்க மாட்டேன்; யஜ்ஞத்திற்கு இடையூறு செய்பவனைக் கொல்லுவேன்; பாண்டவர்களுக்குத் தீங்கு நினைப்பனையும் கொல்லுவேன்" [பாரத-ஸபா 68-26]
*"(பகவந்நிந்தை கேட்குமிடத்தில்) காதைமூடிக்கொண்டு வெளிச்செல்ல வேண்டியது" [ ]

"யஸ்யாம்ருதாமலயஶ: ச்ரவணாவகாஹ:
ஸத்ய: புநாதி ஜகத் ஆச்வபசாத் விகுண்ட:।
ஸோऽஹம் பவத்ப்ய உபலப்த ஸுதீர்த்த கீர்த்தி:
சிந்த்யாம் ஸ்வபாஹுமபி வ: ப்ரதிகூலவ்ருத்திம்॥"

[பாக 3-16-6]

[எவனொருவனுடைய அமுதிலினிய குற்றமற்ற கீர்த்தியைக் கேட்பதாகிற நீராட்டம் சண்டாளரையுள்ளிட்ட அனைத்துலகையும் உடனே பரிசுத்தப்படுத்துகிறதோ, அப்படிப்பட்டவனுய். உங்களிடமிருந்து பெற்ற பரம பாவனப்புகழையுடைய வைகுண்டனுகிற நான் உங்களுக்கு இடையூறு செய்ததாகில் என் கையையும் வெட்டிக் கொள்வேன்.] *"நான் என்னை..."

---

*இந்த ப்ரமாணங்களின் முழுவடிவமும், ஆகரமும் தெரியவில்லை; ஆகையால் முழுப்பொருளையும் காட்டமுடியவில்லை. தெரிவிப்பார்க்குத் தலையல்லால் கைம்மாறிலேனே.

வர) யுக்தங்களெல்லாமறிவார்க்குத் தலைவரல்லீரோ? யுக்தங்களெல்லாம் அறிந்தருளவேண்டாவோ? அதவா, (தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம்) என்கிறபோது, அவ்வளவிலும் பெருமாளுடைய திருமுகத்தில் இரக்கத்தைக்கண்டு, "உம்முடைய க்ஷமாதிசயத்துக்கு துஷ்டனான இவனோ விஷயம்? ஆஸ்ரிதரன்றோ விஷயம்" என்கிறாரென்றுமாம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 25-வது ச்லோகம்

राक्षसो जिह्मया बुद्ध्या सन्दिष्टोऽयमुपस्थितः ।
प्रहर्तुं मायया छन्नो विश्वस्ते त्वयि चानघ ॥

ராக்ஷஸோ ஜிஹ்மயா புத்த்யா ஸந்திஷ்டோऽய முபஸ்தித: ।
ப்ரஹர்த்தும் மாயயா சந்நோ விச்வஸ்தே த்வயி சாநக ॥

பதவுரை:—அநக — குற்றமற்றவரே! அயம் — இந்த, ராக்ஷஸ:—அரக்கன், ஜிஹ்மயா—வஞ்சகமான, புத்த்யா—புத்தியாலே, ஸந்திஷ்ட:—நியமிக்கப்பட்டவனாய், ப்ரஹர்த்தும்—(உம்மை) அடிப்பதற்கு, உபஸ்தித:—அணுகியிருப்பவனாய், மாயயா—வஞ்சனையால், சந்ந:—மறைந்தவனாகவிருக்கிறான்.

[ ] (தகுதியறிவார்க்குத் தலைவரே) தகுதிகளையெல்லாமறிவார்க்குத் தலைவரல்லீரோ தேவரீர். தகுதிகளெல்லாம் அறிந்தருளவேண்டாவோ? க்ஷமம்-தகுதி; க்ஷமவாந்-தகுதியறிபவன் என்று பொருள் கொள்ளப்பட்டது. அப்படியல்லாமல் க்ஷமை என்று பொறுமையைச் சொல்லுவதாகையாலே, (பொறுமையாளர்க்குத் தலைவரே) என்பதாகவும் கொள்ளலாம்; 'வர' என்னும் சப்தம் ச்ரேஷ்டன், வரணீயன் (வரிக்கத்தக்கவன்) என்னும் இருபொருளையுடையது. "அவனைக் கொல்லுவதே தகுந்தது" என்று தாம் சொன்னபோது, அதைக் கேட்டபின்பும் ஸ்ரீராமபிரானுடைய திருமுகத்தில் இரக்கத்தைக்கண்டு, "பொறுமையாளர் தலைவரே! உம் பொறுமைப்பெருக்கை துஷ்டனான இவனிடமோ காட்டுவது? அடியாரிடமன்றோ காட்டவேண்டும்" என்று சொல்லுவதாகவும் கொள்ளலாம்.

அவதாரிகை:–''தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே'' என்று ப்ரணிதிவதம் யுக்தமென்னக்கடவீரோ? என்ன, கேவலம் ப்ரணிதித்வமேயன்று; துஷ்ப்ரக்ருதியாகையாலே இடம் பெற்றவிடத்திலே நலியக்கூடுமாகையாலே கொல்லத்தட்டில்லை என்கிறார், ''ராக்ஷஸ:'' இத்யாதியாலே.

வ்யா:–(அயம் ராக்ஷஸ:) ராவணப்ரணிதியாய் வந்த ராக்ஷஸன் கேவலம் ப்ரணிதிகார்யத்தளவிலே வ்யாபரிப்பானாய் வந்தானல்லன்; என்செய்ய வந்தானென்னில்: (ஜிஹ்மயா புத்த்யா ஸந்திஷ்ட: ப்ரஹர்த்துமுபஸ்தித:) **குடிலபுத்த்யா ப்ரேரித: த்வாம் ப்ரஹர்த்துமுபஸ்தித:**–ராக்ஷஸராகிறார் குடில புத்திகளென்னுமிடம் நமக்கு அநுபூதமன்றோ ''**ராவணேந** ஸந்திஷ்ட: **குடிலபுத்த்யா உபஸ்தித:**'' என்னவுமாம். 'நம்மை இங்ஙனே நலியலாயிருக்குமோ?' என்னில்: (மாயயா சந்ந:) க்ருத்ரிமத்தாலே தன்னை மறைத்து வந்தவனாகை

அவதாரிகை:–''அவனைக் கொல்லுவதே தகுந்தது'' என்று சாரனைக் கொல்லுவது தகுதியென்கிறீரே; இது சரியன்றே என்ன, இவன் ஒற்றன் மாத்திரமல்லன்; தீயவனாகையாலே அவகாசமுண்டானபோது தீங்கும் செய்வானாகையால் கொல்லுவதில் தவறில்லை என்கிறார்,–''ராக்ஷஸ:'' என்று தொடங்கும் ச்லோகத்தாலே.

வ்யா:–(இந்த அரக்கன்) ராவணனுடைய ஒற்றனாய் வந்த அரக்கன் வேவுபார்ப்பதை மாத்திரம் செய்யவந்தவனல்லன்; பின் என்செய்ய வந்தானெனில்: (வஞ்சகபுத்தியாலே தூண்டப்பட்டு அடிப்பதற்கு வந்திருக்கிறான்) அரக்கரனைவரும் வஞ்சகபுத்தியுடையவரென்பது ஸீதாபஹரணாதி கார்யங்களில் நாம் அறிந்ததன்றோ. இங்கு வஞ்சகபுத்தி என்றது ராவணனுடைய புத்தியை. அப்படியல்லாமல், 'ராவணேந' என்னும் பதத்தை அத்யாஹரித்துக் (வருவித்துக்) கொண்டு, ''ராவணேந ஸந்திஷ்ட: ஜிஹ்மயா புத்த்யா உபஸ்தித:'' [ராவணனால் தூண்டப்பட்டு வஞ்சகபுத்தியோடு வந்திருக்கிறான்] என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். நமக்கு இப்படித் தீங்கிழைக்க முடியுமோ? என்னில்: (மாயையால் மறைந்து) வஞ்சனையாலே தன்னை மறைத்து வருபவனாகையாலே

யாலே நலியலாம். அதாகிறது,—ஶரணாகதவேஷத்தாலே தன் க்ரௌர்யத்தை மறைத்துவருகை. எப்போது இவன் நலிவது? என்னில்: (விச்வஸ்தே த்வயி) இவன் அகவாய் ஆராயாதே உக்திமாத்ரத்தைக்கொண்டு ஶரணாகதனென்று உம்மை அவன் அதீநமாக்கினவளவிலே. (ச)ஶப்தத்தாலே லக்ஷ்மணாதிகளையும் ஸமுச்சயிக்கிறது. **"अप्यहं जीवितं जह्यां" (அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்)** என்று ஆஶ்ரிதர்க்கு அழிவுக்கிட்ட வடிவாகத் தம்மை நினைத்திருப்பாரென்று பார்த்து உமக்கு நெஞ்செரியும் லக்ஷ்மணாதிகளையும் நலியும் என்கிறார். (அநக) ஆத்மாநுமாநத்தாலே பிறர்பக்கல் தோஷங்காண அறியீர். நான் சொல்லவாகிலும் அறிந்தருளீர்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 26-வது ச்லோகம்

प्रविष्टः शत्रुसैन्यं हि प्राप्तः शत्रुरतर्कितः।
निहन्यादन्तरं लब्ध्वा उलूकानिव वायसः॥

தீங்கிழைக்க முடியும். அதாவது-சரணாகதவேஷத்தாலே தன் கொடுமையை மறைத்து வந்தவனாகையாலே தீங்கிழைக்கமுடியுமென்று கருத்து. எப்போது இவன் நலிவது என்னில்: (நீர் நம்பிக்கை வைத்தவுடன்) இவனுடைய உள்ளத்தை ஆராயாமல் வாய்ச்சொல்லைமட்டும்கொண்டு சரணாகதனென்று நம்பி உம்மை நீர் அவனுக்கே ஆக்கினவுடன். (நீரும் நம்பிக்கை வைத்தவுடன்) என்றவிடத்தில் உம்மையாலே லக்ஷ்மணன் அநுமன் முதலான மற்றுள்ளாரையும் கூட்டிக்கொள்கிறார். சகாரம் அநுக்த ஸமுச்சாயகம். "(அடியார்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பதற்காக) நான் என் உயிரையும் விடுவேன்" [ரா-ஆர 10-19] என்று 'அடியார்க்காக உயிர்கொடுப்பதற்கே ஏற்பட்டது தன் உடம்பு' என்று நினைத்திருப்பவராகையாலே 'என் உயிர்போனால் போகிறது' என்று கருதுவார் என்று நினைத்து, "நீர் மாத்திரமல்லாமல் லக்ஷ்மணாதிகளும் இவனிடம் நம்பிக்கைவைத்து விடுவார்கள். உமக்கு நெஞ்செரியும்படி அவர்களையும் இவன் நலியக்கூடும்" என்கிறார். (குற்றமற்றவனே) நீர் குற்றமற்றவராகையாலே உம்மைப்போலே அனைவரையும் குற்றமற்றவராகக் காண்கிறீர். பிறரிடமுள்ள தோஷத்தை அறிந்திரில்லை. நான் சொல்லியாவது விபீஷணனிடமுள்ள குற்றத்தை உணர்ந்துகொள்ளும் என்கிறார்.

ப்ரவிஷ்ட: ஶத்ருஸைந்யம் ஹி ப்ராப்த: ஶத்ருரதர்க்கித:।
நிஹந்யாதந்தரம் லப்த்வா உலூகாநிவ வாயஸ:॥

பதவுரை:—அதர்க்கித:—ஆராயப்படாத, **ஶத்ரு:**-எதிரியானவன், **ஶத்ருஸைந்யம்**—எதிரியின் சேனையினுள், **ப்ரவிஷ்ட:**-நுழைந்தவனாய், **ப்ராப்த:**-(எதிரியின்) அந்தரங்கனாயிருக்கும் நிலையை அடைந்தவனாய், **அந்தரம்**—இடத்தை, **லப்த்வா**-பெற்று, **வாயஸ:**-காக்கை, **உலூகாந் இவ**-கோட்டான்களைப்போலே, **நிஹந்யாத் ஹி**-கொல்லுவானன்றோ.

அவதாரிகை:-ஸ்வநிகர்ஷ பூர்வகமாக நம் பக்கலிலே ஶரணம் புகுந்த இவன் பக்கலிலே தோஷத்தை நினைத்து ஆராய்கைநமக்குப் போருமோ? என்னில்: ஶத்ருவானவன் நம்மைநலிகைக்காக ஶரணம் புகுந்தால், இவனை ஆராயாதே ஸ்வீகரித்தால் மஹாநர்த்தம் விளையும் என்கிறார், 'ப்ரவிஷ்ட:' இத்யாதியாலே.

வ்யா:-(அதர்க்கித: ஶத்ரு. ஶத்ருஸைந்யம் ப்ரவிஷ்டோ ஹி) இவன் அநுகூலனோ, ப்ரதிகூலனோ என்று ஆராயாதே அநுகூலவேஷத்தாலே ஶத்ருஸைந்யத்தை ப்ரவிஷ்டனாய்க் கொல்லும். ஸஸைந்யனானவனை ஒருத்தனாய் கொல்லப்போமோ? என்னில்: (ப்ராப்த:) அந்தரங்கதாம் ப்ராப்த

அவதாரிகை:—தன் தாழ்வை முன்னிட்டுக்கொண்டு நம்மிடம் சரணம் புகுந்த இவனிடம் தோஷத்தை நினைத்து ஆராய்வது நம்பெருமைக்குத் தகுந்ததோ? என்னில்: "எதிரியானவன் நமக்குத் தீங்கிழைப்பதற்காக சரணம் புகுந்தால், இவன் நல்லவனோ, தீயவனோ என்பதை ஆராயாமல் அங்கீகரித்தால் பெருந்துன்பம் விளையும்; குணக்கேட்டுக்குப் பார்த்தால் உயிர்க்கேடு விளையும்" என்கிறார் 'ப்ரவிஷ்ட:' என்று தொடங்கும் ச்லோகத்தாலே.

வ்யா:—(ஆராயப்படாத எதிரி எதிரிச்சேனையில் புகுந்தவனாய்) இவன் அன்பனோ, தியவனோ என்று நம்மால் ஆராயப்படாமல், அநுகூல வேஷத்தோடு, அவனுக்கு எதிரிகளாகிற நம் சேனையில் புகுந்து கொல்வான். சேனையோடு கூடிய நம்மை ஒருவனாய்க் கொன்றுவிடமுடியுமோ?

ஞன ஶத்ருவானவன் ஶத்ருஸைந்யத்தை நலியும். ஒரு திரளை ஒருவனால் நலியப்போமோ? என்னில்: (அந்தரம் லப்த்வா நிஹந்யாத்) ஸ்வாபாதிகளுண்டானவளவிலே கொல்லும். ஸஹஜ ஶாத்ரவத்துக்கும், ஒன்றே அநேகத்தை நஶிப்பிக்கும் என்னுமிடத்துக்கும் த்ருஷ்டாந்தம் சொல்லுகிறார். (உலூகாநிவ வாயஸ:) காகம் ஒன்றுமே தனக்கு ஸஹஜஶத்ருக்களான திவாபீதங்களைத் தனக்கு அவகாஶமான அஹஸ்ஸிலே நலியுமாப்போலே.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 27-வது ச்லோகம்

वध्यतामेष तीव्रेण दण्डेन सचिवैः सह।
रावणस्य नृशंसस्य भ्राता ह्येष विभीषणः॥

வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவை: ஸஹ।
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதா ஹ்யேஷ விபீஷண:॥

பதவுரை:—ஏஷ:—இந்த விபீஷணன், **ஸசிவை: ஸஹ**—மந்திரிகளோடுகூட, **தீவ்ரேண**—கொடியதான, **தண்டேந**—தண்டனையால், **வத்யதாம்**—கொல்லப்படட்டும்; **ஹி**—ஏனெனில்: **ஏஷ:**—இந்த, **விபீஷண:**—விபீஷணன், **ந்ருஶம்ஸஸ்ய**—கொடியவனான, **ராவணஸ்ய**—ராவணனுடைய, **ப்ராதா**—ஸஹோதரன்.

எனில்: (அந்தரங்கநிலையை அடைந்தவனாய்) நமக்கு அந்தரங்கனாயிருக்கும் நிலையை அடைந்தவனான எதிரியானவன் எதிரியின் சேனையையும் நலிவான். ஒரு கூட்டத்தை ஒருவனால் நலியமுடியுமோ? எனில்: (இடம் பெற்று நலிவான்) நாம் தூங்கியிருக்கும் போது முதலான சமயங்களைப் பார்த்திருந்து கொல்லுவன். பிறப்பிலேயே ஒருஜாதி மற்றொரு ஜாதிக்கு எதிரியாயிருக்கும் தன்மைக்கும், ஒன்று ஒரு கூட்டத்தையே அழிக்கும் என்பதற்கும் உதாஹரணம் காட்டுகிறார்,— (கோட்டான்களைக் காக்கை நலிந்தாற்போலே) ஒரே காகம் தனக்குப் பிறப்பிலேயே எதிரிகளான கோட்டான்களை, அவை தூங்கித்தான் விழித்திருக்கும்போதான பகலிலே கொல்லுவதுபோலே, நிசாசரனான இவன், தனக்குப் பிறப்பிலே எதிரிகளான நம்மை, நாம் தூங்கும்போதான இரவிலே கொன்றுவிடுவது உறுதி என்கிறார்.

அவதாரிகை:-இப்படி இவனால் பஹுமுகமாக வரும் அநர்த்தத்தை விண்ணப்பம் செய்திருக்கச் செய்தேயும், பெருமாளுக்கு அவன்பக்கல் தண்ணளி மாறாதேயிருக்கையாலே பீதபீதனாய்ச் சினம்தோற்றி தாமே இவனுடைய வதத்தை ஆஜ்ஞாபிக்கிறார் ''வத்யதாம்'' இத்யாதியாலே.

வ்யா:-(ஏஷ வத்யதாம்) இவனைக் கட்டியிட்டுவைத்தல், மாரீசனைப்போலே மேலே ஓர் அநர்த்தத்தை விளைக்கும்படி தொடுத்த அம்போடேவிடுதல் செய்யக்கடவோமல்லோம்; கொன்றே விடுவோம். (தீவ்ரேண தண்டேந) கொல்லுமிடத்திலும் ஓரம்பாலே ஊதினாற்போலே கொல்லுகையன்றிக்கே, தலையிலே முடிவைத்தாற்போலே சிங்கவிளக்கெரிக்கக்கடவோமென்கை.

அவதாரிகை:—இப்படி இவனால் பலவிதமாக வரக்கூடிய துன்பங்களை விண்ணப்பம் செய்திருக்கும்போதும், ஸ்ரீராமபிரானுக்கு, அவனிடம் இரக்கம் குறையாமலிருப்பதை அவர் திருமுகத்திலே கண்டு 'ராமபிரானுக்கு என்ன திங்கு வரப்போகிறதோ?' என்று மிகப்பயந்து, விபீஷணன் மீது கடுங்கோபங்கொண்டு, தாமே விபீஷணனைக் கொல்லவேண்டும் என்று ஆஜ்ஞையிடுகிறார் ''வத்யதாம்'' என்று தொடங்கும் ச்லோகத்தாலே.

வ்யா:-(இவன் கொல்லப்படட்டும்)இவனைக் கட்டிப்போட்டு வைப்பது, விச்வாமித்ரயாகரக்ஷணத்தின்போது மாரீசனைப்பின்னால்பெருந்திங்கு விளைக்கலாம்படி ஓரம்பைவிட்டு ஓட்டினாற்போலே ஓட்டுவது செய்யக்கூடாது. கொன்றே விடவேணும். (கொடிய தண்டனையால்) கொல்லும்போதும் ஓரம்பைவிட்டு, அவனுக்கு ஆயாஸமில்லாதபடி பஞ்சை ஊதினாற்போலே தலையையறுத்து விடாமல், தலையில் முடிவைத்தாற்போலே அவன் தலையிலே* சிங்க விளக்கெரித்துச் சித்ரவதை செய்யக்கடவோமென்கை.

---

* கோயில்களில் சிங்கவிளக்கு காணப்படுகிறது. சிங்கவுருவிலான ஒரு ஸ்தம்பமாயிருக்குமிது. இதில் சிங்கத்தின் தலைப்பகுதியில் ஒரு குழிவான பள்ளமிருக்கும். அதில் எண்ணெயும் திரியுமிட்டு விளக்கெரிப்பது வழக்கம். மனிதர்களின் தலையிலும் அவ்வாறு பள்ளம் செய்து விளக்கெரிப்பது 'சிங்கவிளக்கெரித்தல்' என்னும் தண்டனையாக முற்காலத்திலிருந்தது.

(ஸசிவைஸ் ஸஹ) நம்மை நலிகைக்குக் கூட்டுப்படையாய் வந்தவர்களைத் தலையறுத்து இவன் கையிலே கொடுத்துப்பின்பு இவனைக் கொல்லக்கடவோம். தீவ்ரதண்டத்தாலே நலிகைக்கு ஹேது சொல்லுகிறது மேல்,– (ஏஷ விபீஷண: ராவணஸ்யந்ருசம்ஸஸ்ய ப்ராதா ஹி) இவன் பாதகனென்னுமிடம் விதிதமாயிருக்கை; க்ரூரகர்மாவான ராவணனுடைய ப்ராதா வென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நமிறே. * சுரிகுழற் கனிவாய்த்திருவினைப்பிரித்த க்ரூரகர்மாவிறே அவன்; பெற்ற தாயையும்தகப்பனையும் சேரவிருக்கப் பொறுதவனிறே. உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே, நித்யாநபாயினியான பிராட்டியையும் பெருமாளையும் கடலொருபுறமும் மலையொருபுறமுமாக ஆக்கின பையலுக்கு. "भ्राता स्वो मूर्तिरात्मनः" (ப்ராதா ஸ்வோ மூர்த்திராத்மந:) என்கிறபடியே அவயவமென்று சொல்லலாம்படி ப்ரத்யாஸந்நனன்றோ. (ஹி)

(மந்திரிகளோடுகூட) நம்மைக் கொல்ல இவனோடு கூட்டுத்துணையாய் வந்த நால்வரையும் முதலில் தலையறுத்து இவன் கையிலே கொடுத்துப் பின்பு இவனைக் கொல்லுவோம். கொடுந் தண்டனையால் கொல்லவேண்டுமென்பதற்குக் காரணம் சொல்லுகிறது மேல்,–(இந்த விபீஷணன் கொடியவனான ராவணனின் தம்பியன்றோ) இவன் தீங்கு செய்பவனென்பது அனைவருமறிந்ததாயிருக்கை. கொடியவனான ராவணன் தம்பியென்பது அனைவரும் அறிந்த விஷயமன்றோ. ஆகையால் இவனும் நலியவந்தவனே. "சுரிகுழற்கனிவாய்த் திருவினைப்பிரித்த கொடுமையில் கடுவிசையரக்கன்" [பெரியதிரு 5-7-7] அன்றோ ராவணன். எல்லாவுலகுக்கும் பெற்ற தாய்தந்தையரான பிராட்டியும் பிரானும் சேரவிருக்கப் பொறுக்காதவனன்றோ. உடலையும் உயிரையும் பிரித்ததுபோலே, இறையும் அகலகில்லாத பிராட்டிக்கும் பெருமாளுக்குமிடையே கடக்கவரிய கடலும் மலையுமாம்படி செய்த துஷ்டப்பையலுக்கு "தன் ஸஹோதரன் தன்னுடைய மற்றொருருவமாவான்" [மநு 2-226] என்கிறபடியே அவனுடைய பகுதியேயிவன் என்று சொல்லலாம்படி நெருங்கியிருப்பவனன்றோ இவ்விபீஷணன். (அன்றோ) இது அனைவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம் என்பதைக் காட்டுகிறது. இவன் அவனுக்குத் தம்பியென்னுமிது, இவன் சாரன்

ஸம்ப்ரதிபத்தெள. இது, ப்ரணிதியென்றும், ஶத்ருவென்றும் சொல்லுகிற பூர்வபக்ஷத்துக்கு மூலயுக்தி.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 28-வது ச்லோகம்

एवमुक्त्वा तु तं रामं संरब्धो वाहिनीपतिः।
वाक्यज्ञो वाक्यकुशलं ततो मौनमुपागमत्॥

ஏவமுக்த்வா து தம் ராமம் ஸம்ரப்தோ வாஹிநீபதி:।
வாக்யஜ்ஞோ வாக்யகுஶலம் ததோ மெளநமுபாகமத்॥

பதவுரை:— தத:— பிறகு, **ஸம்ரப்த:**— பரபரப்போடு கூடினவராய், **வாக்யஜ்ஞ:**—வார்த்தை சொல்லவறிந்தவரான, **வாஹிநீபதி:**—வானரவரசரான சுக்கிரீவமஹாராஜர், **வாக்யகுஶலம்**—வார்த்தை சொல்ல வல்லவரான, **ராமம்**— ராமபிரானைக்குறித்து, **ஏவம் உக்த்வா**—இம்மாதிரி சொல்லி, **மெளநம் உபாகமத்**—மௌனமானர்.

அவதாரிகை:—இப்படி பெருமாளைக்குறித்து விண்ணப்பம் செய்த விடத்திலும், பெருமாளுக்கு அவன்பக்கல் உண்டான ஆபிமுக்யத்தைக்கண்டு, இனி அவர் அருளிச் செய்யும் வார்த்தைக்கு அநுகூலமாக வார்த்தை சொல்லக் கடவோம் என்று பேசாதேயிருந்தார் என்கிறது மேல்.

வ்யா:—(ஏவமுக்த்வா து) துஶப்தத்தால், ஸ்வவாக்யாநாதரமும் விபீஷணபக்ஷபாதமும் பெருமாள் திருமுகத்

என்றும், எதிரியென்றும் சொல்லுகிற (ஸுக்ரீவன் செய்யும்) பூர்வபக்ஷத்திற்கு மூலயுக்தியாகும். அதனாலேயே இதை அடிக்கடி வற்புறுத்துகிறார்.

அவதாரிகை:-இவ்வண்ணமாக, ஸ்ரீராமபிரானைக் குறித்து விண்ணப்பம் செய்தபோதும், அவருக்கு விபீஷணனிடமிருந்த அன்பைக்கண்டு, இனி அவர் பதில் அருளிச்செய்யலாம்படி நாம் பேசாமலிருப்போமென்று நினைத்து மௌனமானார் என்கிறது இந்த ச்லோகத்தில்.

வ்யா:-(ஏவமுக்த்வாது-இவ்வண்ணம் சொல்லியோவெனில்) துசப்தம் வேறுபாட்டைக் காட்டுவது. இவ்விடத்தில் தம்முடைய வார்த்தையில்

தில் தோற்றினவாறே பயத்தாற்பிறந்த வேறுபாட்டைச் சொல்லுகிறது. (தம் ராமம்) ஸ்வவாக்யாநாதரமும் விபீஷணபக்ஷபாதமும் தோற்றவிருந்த பெருமாளை. (ஸம்ரப்த:) பெருமாள் திருவுள்ளத்தைப் பின்செல்லாதே ப்ரேமபரதந்த்ரராய். ஹடாத்கரித்துச் சொன்ன. (வாஹிநீபதி:) பரிவில் வந்தால் அவர்களுக்கு நிர்வாஹகர் என்னலாம்படி இருக்கிறவர். இத்தால் இவர் வார்த்தை முதலிகளுக்கெல்லாம் இஷ்டமென்று கருத்து. (வாக்யஜ்ஞ:) பெருமாளுக்கு மறுநாக்கெடுக்கவொண்ணுதபடி சொல்லும் வார்த்தைகளை அறியுமவர். (வாக்யகுஶலம்) வக்ரஸித்தாந்தத்தையறிந்து அத்தைப் புரட்டித்தன் நினைவிலே விழும்படி வார்த்தை சொல்லவல்லவரை. (தத:) இனி இவர் வார்த்தை சொல்லுமதொழியத் தாம் சொல்லும் வார்த்தையடையச் சொல்லுகையாலே. (மௌநமுபாகமத்) அருளிச்செய்யும் வார்த்தைக்கு அவஸரப்ரதாநம் பண்ணியிருந்தார்.

அநாதரவும், விபீஷணனிடம் அன்பும் ஸ்ரீராமபிரானுடைய திருமுகமண்டலத்தில் தோற்றுவதைக்கண்டு பயத்தாலே பிறந்த வேறுபாட்டைச் சொல்லுகிறது. (அந்த ராமபிரானைக்குறித்து) தம் வார்த்தையில் அநாதரவும், விபீஷணனிடம் அன்பும் தோற்றும்படியிருந்த ராமபிரானைக் குறித்து. (பரபரப்போடு கூடியவராய்) ராமபிரானுடைய திருவுள்ளத்தை அநுஸரிக்காமல் அன்பின் வசப்பட்டவராய் வலிந்து சொன்ன. (வானர சேனைத்தலைவர்) ராமபிரானிடம் பரிவைப் பார்க்கும்போது அவர்களுக்கெல்லாம் தலைவரென்று சொல்லலாம்படியிருப்பவர். இத்தால் இவர் வார்த்தை வானரர் அனைவர்க்கும் இஷ்டமானது என்று கருத்து. (வார்த்தையறிபவர்) ராமபிரான் மறுவார்த்தை பேசமுடியாதபடி சொல்லத்தக்க வார்த்தைகளை அறியும் சுக்கிரீவமஹாராஜர். (வார்த்தை வல்லவரான ராமபிரானைக்குறித்து) அவர் வார்த்தை அறிபவர் என்றால் இவர் வார்த்தை வல்லவராயிருப்பவர். பூர்வபக்ஷியின் கோணல் முடிவுகளை அறிந்து அவற்றைப் புரட்டித்தள்ளி, அவனும் தன் பக்ஷத்தை அங்கீகரிக்கும்படி வார்த்தை சொல்லவல்லவரைக் குறித்து. (பிறகு) தாம் சொல்லவேண்டிய வார்த்தைகளைச் சொல்லிவிட்டபடியாலும், இனி ராமபிரானே வார்த்தை சொல்லவேண்டுமாகையாலும் மௌனமானார். (மௌனமானார்) அவர் அருளிச்செய்யும் வார்த்தைகளுக்கு இடமளிக்கும் முறையில் தாம் பேசாமலிருந்தார்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 29-வ்து ச்லோகம்

सुग्रीवस्य तु तद्वाक्यं श्रुत्वा रामो महाबलः।
समीपस्थानुवाचेदं हनूमत्प्रमुखान् हरीन्॥

ஸுக்ரீவஸ்ய து தத்வாக்யம் ஶ்ருத்வா ராமோ மஹாபல:।
ஸமீபஸ்தாநுவாசேதம் ஹநூமத்ப்ரமுகாந் ஹரீந்॥

பதவுரை:—மஹாபல:—மிகுந்த (மன) வலிமையுடைய, ராம:—ராமபிரான், ஸுக்ரீவஸ்ய—சுக்கிரீவனுடைய, தத்–அந்த, வாக்யம்—வசநத்தை, ச்ருத்வா — கேட்டு, ஸமீபஸ்தாந்—அருகிலிருக்கிற, ஹநூமத் ப்ரமுகாந்—அனுமன் முதலான, ஹரீந்—வானரர்களைக்குறித்து, இதம்–இவ்வார்த்தையை, உவாச—சொன்னார்.

அவதாரிகை:—மஹாராஜர் ப்ரேமாந்தராகையாலே நம் வார்த்தை கேட்கமாட்டாரென்று, பெருமாள் திருவடி முதலானவரைக்குறித்து வார்த்தை அருளிச்செய்கிறார்.

வ்யா:—(ஸுக்ரீவஸ்ய தத் வாக்யம் ச்ருத்வா து) விப்ரதிபந்நத்தைச் சொன்னாலும் இவர் வார்த்தையன்றோவென்று ஸ்வீகரிக்க வேண்டியிருக்குமவருடைய யுக்தியுக்தமான வார்த்தையைக்கேட்டு. துஶப்தத்தாலே இவர் வார்த்தை கேட்டபின்பு பெருமாள் திருவுள்ளத்திற் பிறந்த விஶேஷத்தைச் சொல்லுகிறது. அதாகிறது,— நாம் கைவிட்

அவதாரிகை:–சுக்கிரீவமஹாராஜர் அன்பினாலே அறிவிழந்தவராகையாலே நம் வார்த்தையைக் கேட்கமாட்டாரென்று கருதி ஸ்ரீராமபிரான் அனுமன் முதலானவரைக் குறித்து சிலவார்த்தைகளை அருளிச்செய்கிறார்.

வ்யா:—(சுக்கிரீவனுடைய அந்த வார்த்தையைக்கேட்ட பின்போவெனில்) ஒவ்வாத விஷயத்தைச் சொன்னாலும், இவர் வார்த்தையன்றோவென்று அங்கீகரிக்கவேண்டியிருக்கும் அவருடைய யுக்திகளோடு கூடிய வார்த்தையைக்கேட்டு. 'து' (எனில்) என்னும் சப்தத்தாலே இவர் வார்த்தையைக் கேட்டபின்பு ஸ்ரீராமன் திருவுள்ளத்தில் பிறந்த வேறுபாட்டைச்சொல்லுகிறது. அதாவது,— நாம் கைவிட்டவர்களுக்கும்

டார்க்கும் இவர் உளரென்றிருந்தோம். இவரும் கைவிடும்படியான தயநீயதசையை ப்ராப்தரான விபீஷணனுக்கு நாமல்லது இல்லையாகையாலே என்று திருவுள்ளத்திற்பிறந்த பக்ஷபாதம். (ராமோ மஹாபல:) மஹாராஜர் சொன்ன யுக்திகளால் கலங்காத திண்மையை உடையரானுர் என்கை. (ஸமீபஸ்தாந்) மஹாராஜர் வார்த்தை கேட்டுநின்ற முதலிகளை. (ஹநூமத்ப்ரமுகாந்) மஹாராஜரோபாதி ப்ரேமாந்தராயிருக்கச்செய்தேயும், கருத்தறிந்து கார்யம் செய்ய வல்லரான திருவடி முதலானுரை. (ஹரீநுவாச) **"प्रियेण सेनापतिना"** (ப்ரியேண ஸேநாபதிநா) என்று ஸேனைமுதலியார் பெருமாள் திருவுள்ளம் மதித்து விண்ணப்பம் செய்யத் திருக்கண்களாலே அநுமதிபண்ணிப் போருமது தவிர்ந்து, ராமகார்யத்துக்குக் கடவராகில் குரங்குகளாகவும், அவர்களநுமதியை அபேக்ஷித்துத்தாம் வார்த்தை கேட்கவுமாய் விழுவதே! என்று ரிஷி கொண்

இவர் புருஷகாரச்செயல் புரிந்து சேரவிடுவர் என்று நினைத்திருந்தோம்; இவரும் கைவிடும்படியான வருந்தத்தக்க நிலையையடைந்த விபீஷணனுக்கு நம்மைவிட்டால் வேறெவருமில்லையே என்று திருவுள்ளத்திலே பிறந்த விபீஷண பக்ஷபாதத்தைக் காட்டுகிறது. (மிக்க (மன) வலிமை படைத்த ராமபிரான்) இங்கு பலசப்தம் தேஹபலத்தைக் காட்டுவதில் சுவையில்லையாகையால், மனவலிமையைக் குறிக்கிறது. சுக்கிரீவன் சொன்ன யுக்திகளால் கலங்காத உறுதியையுடையவரானுர் ராமபிரான் என்று கருத்து. (அருகிலிருந்தவர்களை) சுக்கிரீவனுடைய வார்த்தைகேட்டு நின்ற வானரர்களை. (அனுமன் முதலானுரை) சுக்கிரீவனைப்போலே அன்பினுல் அறிவிழந்தவராயிருந்தபோதிலும், ராமபிரானுடைய கருத்தறிந்து காரியம் செய்யவல்ல அனுமன் முதலானுரை. (வானரர்களைக் குறித்துச் சொன்னுர்!) "இனியரான விஷ்வக்ஸேநராலே எது எப்படி விண்ணப்பம் செய்யப்பட்டதோ, அதை அப்படியே வண்மைமிக்க திருக்கண்ணோக்குகளாலே அனுமதிசெய்து கொண்டிருப்பவனை" [ஸ்தோ-ர-42] என்று ஸேனை முதலியார் பரமபுருஷனுடைய திருவுள்ளமறிந்து விண்ணப்பம் செய்ய, திருக்கண்களாலே அனுமதி பண்ணிச்செல்லும் நிலைதவிர்ந்து, ராமனுடைய காரியத்தைச் செய்பவர்கள் குரங்குகளாய், அவர்களுடைய அநுமதியை எதிர்பார்த்துத்தாம் வார்த்தை கேட்கவுமாயிருப்பதே! என்று

டாடுகிறுன். (இதமுவாச) தம் கார்யவறுதிக்கு வேண்டும் வார்த்தையை அநந்தரம் கேட்க ப்ராப்தமாயிருக்க, மஹா ராஜருடைய வைபவப்ரகாஶகமான வார்த்தையைச் சொன்னுர்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 30-வது ச்லோகம்

यदुक्तं कपिराजेन रावणावरजं प्रति ।
वाक्यं हेतुमदर्थ्यं च भवद्भिरपि तच्छ्रुतम् ॥

யதுக்தம் கபிராஜேந ராவணுவரஜம் ப்ரதி।
வாக்யம் ஹேதுமதர்த்யம் ச பவத்பிரபி தச்ச்ருதம்॥

பதவுரை:–**கபிராஜேந**–வானர ராஜாவான சுக்கிரீவனுலே, **ராவணுவரஜம் ப்ரதி**–ராவணன் தம்பியான விபீஷணனைக் குறித்து, **ஹேதுமத்**–காரணங்களோடு கூடியதாகவும், **அர்த்யம் ச**–வேண்டத்தக்கதாயுமிருக்கும், **யத் வாக்யம்**–யாதொரு வசனமானது, **உக்தம்** — சொல்லப்பட்டதோ, **தத்**—அவ் வார்த்தை, **பவத்பி:**–உங்களால், **அபிச்ருதம்**–கேட்கப்பட்ட தன்றோ?

அவதாரிகை:—மஹாராஜர் தம்பக்கல் ப்ரேமாதிஶயத் தாலே சொன்ன வார்த்தையென்று திருவுள்ளம்பற்றி அதைக் கொண்டாடுகிறுர்.

வ்யா:—(யத் வாக்யமுக்தம்) மஹாராஜர் நமக்கு நல்லர் போலே நாமும் நல்லோமாகிலிறே அவ்வார்த்தைக்குப்

வால்மீகிபகவான் கொண்டாடுகிருர். (இதைச் சொன்ஞர்) தம்முடைய கார்யநிர்ணயத்துக்கு வேண்டிய வார்த்தையைப் பிறகு கேட்கலாமாகை யாலே, முதன் முதலில் சுக்கிரீவனுடைய பெருமையை வெளிப்படுத்தும் வார்த்தையைச் சொன்ஞர்.

அவதாரிகை:—'சுக்கிரீவமஹாராஜர் தம்மிடம் அன்பின்மிகுதியாலே சொன்ன வார்த்தைகளன்றே இவை' என்று நினைத்து அவ்வார்த்தை களைக் கொண்டாடுகிருர் இந்த ச்லோகத்தில்.

பாசுரமிடலாவது; யதுக்தம்-என்னுமித்தனை. (கபிராஜேந) குழைச்சரக்குடையார் இதுக்கு என் வருகிறதோவென்று அஞ்சி வார்த்தைசொல்ல ப்ராப்தமிறே. அதவா -(கபிரா ஜேந யதுக்தம்) தம்முடைய முதன்மை தோற்றச் சொல்லப் பட்ட வார்த்தை யாதொன்று; **"संरब्धमिदमब्रवीत्"** (ஸம் **ரப்தமிதமப்ரவீத்**) என்று அடர்த்து வார்த்தை சொல்லிற்று; (ராவணாவரஜம் ப்ரதி) ராவணஸம்பந்தத்தைப் பார்த்தால் இப்படிக் கலங்கி வார்த்தை சொல்லுகைக்குத் தட்டில்லை என்று இவருடைய கலக்கத்துக்கு ஹேது சொல்லுகிறார். (ஹேதுமத்) **"वध्यतां"** (**வத்யதாம்**) என்று ப்ரதிஜ்ஞாமாத் ரமாயிருக்கையன்றிக்கே ராவணாவரஜத்வாத்யுபபத்தியுக்த மாயிருக்கை. (அர்த்யம்)ஒருத்தருடைய பரிவிலே வார்த்தை சொன்ன ப்ரகாரமென்று கேட்டார்க்கெல்லாம் ப்ரார்த்ய

வ்யா:-(யாதொரு வசனம் சொல்லப்பட்டதோ) சுக்கிரீவன் நம்மிடம் வைத்திருக்கும் பரிவுபோலே நாம் அவரிடம் பரிவு வைத்திருந்தோமாகி லன்றோ அவர் வார்த்தையை உள்ளபடி நாம் வருணிக்கலாவது. 'யாதொரு வசனம்' என்று சொல்லுவதொழிய அவ்வார்த்தையின் பெருமையை வர்ணிக்கமுடியுமோ? (வானரவரசரால்) ரக்ஷிக்கப்படவேண்டிய பொருளை யுடையவர்கள், 'இப்பொருளுக்கு என்ன தீங்கு வருகிறதோ?' என்று அஞ்சி, அஸ்தானே பயசங்கைபண்ணி வார்த்தை சொல்லுவது வழக்க மன்றோ. அல்லது, (வானரவரசராலே யாதொரு வசனம் சொல்லப்பட் டதோ) வானரர் தலைவரான தம்முடைய தலைமைதோற்றச் சொன்ன வார்த்தை யாதொன்று; அதாவது-"பரபரப்போடு இதைச் சொன்னார்" [ரா-யு 16-17] என்று பிறரை நியமித்து வார்த்தை சொன்னதைத் தலைமை தோற்றச் சொன்ன வார்த்தை என்கிறார். (ராவணன் தம்பியைக்குறித்து) 'ராவணனோடு விபீஷணனுக்குள்ள உறவைப் பார்த்தால் இவர் இப்படிக் கலங்கி வார்த்தை சொன்னதில் தவறில்லை' என்று இவருடைய கலக்கத் துக்குக் காரணம் காட்டுகிறார். (காரணத்தோடு கூடியது) "விபீஷணன் கொல்லப்படட்டும்" [ரா-யு 17-27] என்று ப்ரதிஜ்ஞை மாத்திரமாயிராமல் "ராவணனுக்குத் தம்பியன்றோ இவன்" [ரா-யு 17-27] முதலான ஹேதுக் களோடுகூடிய பூர்ணாநுமானமாயிருப்பது அவருடைய வாக்யம் என்று கருத்து. (அர்த்திக்கப்படுவது) ஒப்பற்ற அன்பையுடைய ஒருவருடைய பரிவில் சொன்ன வார்த்தை என்று கேட்டவர்களெல்லாம் விரும்புவதா யிருப்பதொன்று என்கிறது. 'ச' என்கிற உம்மையாலே, "அர்த்த

மாயிருக்கை. 'ச' ஶப்தத்தாலே, **"अर्थवन्मधुरं लघु" (அர்த்தவந் மதுரம் லகு)** என்றாற்போலே மற்றுமுண்டான வசந குணங்களை ஸமுச்சயிக்கிறது. (பவத்பிரபி தச் ச்ருதம்) 'அபி-ப்ரச்நே' முதலிகளால் கேட்கப்பட்டதில்லையோ? ச்ருதமாகில் ஒன்றை நியமியாதே அநாவிஷ்க்ருதராயிருக்கை ப்ராப்தமோ? என்று கருத்து. ஸாநுநயப்ரஶ்நமாய், ஸ்வ பக்ஷத்துக்குக் கூட்டும்படி அநுநயஸஹிதராய் ப்ரஶ்நம் பண்ணுகிறாரென்றுமாம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 31-வது ச்லோகம்

सुहृदा ह्यर्थकृच्छ्रेषु युक्तं बुद्धिमता सता।
समर्थेनापि सन्देष्टुं शाश्वतीं भूतिमिच्छता॥

ஸுஹ்ருதா ஹ்யர்த்தக்ருச்ச்ரேஷு யுக்தம் புத்திமதா ஸதா।
ஸமர்த்தேநாபி ஸந்தேஷ்டும் ஶாச்வதீம் பூதிமிச்சதா॥

பதவுரை:-அர்த்தக்ருச்ச்ரேஷு-கார்யஸங்கடங்களில், **புத்திமதா**-அறிவாளியாய், **ஸதா**-நல்லோனாய். **ஸமர்த்தேந**-வல்லமையுடையனாய், **சாச்வதீம்**-நிலையான, **பூதிம்**-செல்வத்தை, **இச்சதா**-ஆசைப்படுகிறவனான, **ஸுஹ்ருதா ஹி**-நண்பனாலே, **ஸந்தேஷ்டும் அபி**-உபதேசிக்கைக்கும், **யுக்தம்**-தகுந்தது.

முடையதும், இனியதும், எளியதுமாயிருப்பது வாக்யமாகும்" [ ] என்றாற்போலே மற்றுமுண்டான வசநகுணங்களைக் கூட்டுகிறது. அநுக்த ஸமுச்சயம். (உங்களாலும் அவ்வார்த்தை கேட்கப்பட்டதோ) 'அபி' சப்தம் ப்ரச்நத்தைக்காட்டுகிறது. வானரமுதலிகளான நீங்கள் உங்கள் தலைவருடைய பேச்சைக்கேட்கவில்லையோ? கேட்கப்பட்டதாகில் அதை ஒட்டியோ வெட்டியோ ஒரு வார்த்தை சொல்லாமல், பேசாமலிருக்கலாமோ? என்று கருத்து. அபிசப்தத்தை ஸமுச்சாயகமாகவே கொண்டு, "உங்களாலும் அது கேட்கப்பட்டதன்றோ" என்று அநுநயத்தோடு (இணக்கத்தோடு) கேட்கும் கேள்வியாகக்கொண்டு, தன் பக்ஷத்திலே அவர்களை இழுப்பதற்காக அநுநயத்தோடு கேள்விகேட்பதாகவும் கொள்ளலாம்.

அவதாரிகை:—"பவத்பிரபி தச்ச்ருதம்" என்று நிர்ணயா பேக்ஷமான வார்த்தையைக்கேட்டு, உபயபரதந்த்ரரான நாம் நிர்ணயிக்கை யுக்தமோ என்று முதலிகள் நினைவாக, இவ்வளவில் ஸௌஹ்ருத்த்வத்தாலே உபதேசம் யுக்தம் என்கிறார். "ஸுஹ்ருதா" இத்யாதியாலே.

வ்யா:—(ஸுஹ்ருதா ஹி) "ஶோபநமாஶம்ஸதீதி ஸுஹ்ருத்" அஸந்நிதானத்திலும் ஶோபநத்தை ஆசம்ஸிக்குமவனிறே ஸுஹ்ருத்தாவான். ஒருத்தனுடைய அநர்த்தத்தில் நெஞ்செரிவுடையனாயிருக்குமவனால். (அர்த்தக்ருச்ரேஷு) கர்த்தவ்யாகர்த்தவ்ய நிர்ணய ஸங்கடங்களில். **"राघवं शरणं गतः"** (ராகவம் ஶரணம் கத:) என்று வந்த விபீஷணனும் வான் தன்னை ஸ்வீகரியாதொழியில் பிழையாதானாயிருந்தான். **"तस्याऽहं निग्रहं मन्ये"** (தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே) என்கிற மஹாராஜர் ஹிம்ஸியாதொழியில் பிழையாதாராயிருந்தார். இப்படியான ஸங்கடத்தில். (புத்திமதா) இது

அவதாரிகை:—"நீங்களும் அதைக்கேட்டீர்களல்லவோ" என்று சென்ற ச்லோகத்தில், தங்களை முடிவுகட்டச் சொல்லி ராமபிரான் சொன்ன வார்த்தையைக்கேட்டு, "ராமபிரானுக்கும் சுக்கிரீவனுக்கும் பரதந்திரர்களான நாம் முடிவுசொல்லுவது தகுந்ததோ" என்று வானரர்கள் நினைக்க, இத்தருணத்தில் எங்களிருவர்க்கும் நல்லது நினைக்கும் நீங்கள் எங்களுக்கு உபதேசம் செய்வது தகுந்ததே என்கிறார் "ஸுஹ்ருதா" என்று தொடங்கும் ச்லோகத்தாலே.

வ்யா:—(நண்பனாலே) "நன்மையை விரும்புமவன் நண்பனாகிறான்" என்னும் ஸுஹ்ருச்சப்த வ்யுத்பத்தியின்படி நன்மை விரும்புவோனைக் குறிக்கிறது. காணாதவிடத்திலும் நன்மையை விரும்புவோன் நண்பனாகிறான். ஒருவனுடைய துன்பம் கண்டால் 'ஐயோ!' என்று வருந்துமவனாலே என்று கருத்து. (கார்யஸங்கடங்களில்) ஒன்றைச் செய்யலாமா கூடாதா என்று முடிவுகட்ட முடியாமலிருக்கும்போது. "ராகவனை சரணடைந்தேன்" [ரா-யு 17-14] என்று வந்த விபீஷணன் தன்னை ஏற்றுக்கொள்ளாவிடில் பிழைக்காதவனாயிருந்தான். "அவனைக்கொல்லுவதேதகுந்தது" [ரா-யு 17-24] என்கிற சுக்கிரீவன் அவனைக் கொல்லாவிடில் பிழைக்க முடியாதவரா

கர்த்தவ்யம்; இது அகர்த்தவ்யம் என்று நிர்ணயிக்க க்ஷமனுயிருந்துள்ளவனுலே. (ஸமர்த்தேந) நிர்ணயித்தபடியே எதிரியால் மறுநாக்கெடுக்கப்போகாமல் தள்ளிச் சொல்ல சக்தனுனவனுலே. (சாச்வதீம் பூதிமிச்சதா) ஒருவனுக்கு நித்யஸித்தமான விபூதியை ஆகாங்க்ஷித்திருந்தவனுலே. இப்போது இவர் சாச்வதியான பூதியாக நினைத்திருக்கிறது, ஶரணுகத ஸம்ரக்ஷண ஸங்கல்பாநுபாலநத்தை. யசச்சரீரத்தை சாச்வதியாக நினைத்திருக்கிறவராகையாலே, நம் சரீரத்துக்கு என் வருகிறதோ என்றிருக்கும் மஹாராஜர் அசாச்வதியான பூதியை இச்சிக்கிருரென்று நினைக்கிருர்.

(ஸதா) பரஸம்ருத்த்யைக ப்ரயோஜநனுயிருந்துள்ளவனுலே. (சாச்வதீம் பூதிமிச்சதா ஸதா) சாச்வதியான பூதியை இச்சித்து, அது உண்டானுல் அத்தால் தான் உளராயிருந்துள்ளவனுலே என்றுமாம். (அபி ஸந்தேஷ்டும் யுக்தம்) அபிஶப்த: அவதாரணே. ஏவம்விதனுன ஸுஹ்ருத்

யிருந்தார். இப்படியான ஸங்கடங்களில். (புத்தியுடையவனுலே) "இது செய்யத்தக்கது; இது தகாதது" என்று முடிவுகட்டவல்லவனுலே. (வல்லமையுடையவனுலே) தான் முடிவு கட்டினதற்கு எதிராக எதிரியால் ஒரு வார்த்தை சொல்லவொண்ணுதபடி எதிரியின் பக்ஷத்தைத் தள்ளிச் சொல்ல வல்லமையுடையவனுலே.

(நிலையான செல்வத்தை ஆசைப்படுமவனுலே) ஒருவனுக்கு என்றும் நிலைநிற்கும் செல்வத்தை ஆசைப்படுமவனுலே. இப்போது ராமபிரான் நிலையான செல்வமாக நினைத்திருப்பது,– 'சரணமடைந்தவனைக் காப்பாற்றியே தீருவேன்' என்னும் தம் விரதத்தைக் கடைப்பிடிப்பதையேயாகும். புகழுடம்பையே நிலையானதென்று நினைத்திருப்பவராகையாலே, தம் உடம்புக்கு என்ன தீங்கு வருமோவென்று நினைத்திருக்கும் சுக்கிரீவன் நிலைநில்லாச் செல்வத்தை விரும்புகிருனென்று நினைக்கிருர். (நல்லோனுலே) பிறர்க்குப் பெருமை விளைப்பதையே தனக்குப் பயனுகக் கொண்டிருப்பவனுலே. (நிலையான செல்வத்தை விரும்பும் உள்ளவனுலே) ஸச்சப்தம் நல்லோனையும் உள்ளவனையும் குறிக்கும். நிலையான செல்வத்தை விரும்பி அதைப்பெற்றுலேயே தான் உயிர்தரிக்கக்கூடியவனுயிருந்துள்ளவனுலே என்று கருத்து. (உபதேசிக்கத் தகுமே) அபிசப்தம் ஏகாரப்பொருளில்

தாலே. "आकेशग्रहणान्मित्र" (ஆகேஶக்ரஹணாந் மித்ரம்) என்கிறபடியே ஹிதம் சொல்லுகை யுக்தம்.

இச்லோகத்தால் ஆஶ்ரிதர் சந்தாநுவர்த்திகளன்றிக்கே க்ஷோபகரராஜுலும் அந்த க்ஷோபம் அவர்களாலே க்ஷமிக்க வேணும் என்கிற பெருமாளுடைய ஆஶ்ரிதபாரதந்த்ர்யம் சொல்லிற்று.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 32-வது ச்லோகம்

इत्येवं परिपृष्टास्ते स्वं स्वं मतमतन्द्रिताः।
सोपचारं तदा राममूचुर्हितचिकीर्षवः॥

இத்யேவம் பரிப்ருஷ்டாஸ்தே ஸ்வம் ஸ்வம் மதமதந்த்ரிதா:।
ஸோபசாரம் ததா ராமமூசுர் ஹிதசிகீர்ஷவ:॥

பதவுரை:—**இதி**-என்று, **ஏவம்**-இவ்வாறாக, **பரிப்ருஷ்டா:**-கேட்கப்பட்ட, **தே**-அந்த வானரர்கள், **அதந்த்ரிதா:**-கவனமுள்ளவர்களாய், **ஹிதசிகீர்ஷவ:**-(ராமபிரானுக்கு) நன்மை புரிவதில் இச்சையுடையவர்களாய், **ததா**-அப்போது, **ராமம்**-ஸ்ரீராமபிரானைக் குறித்து, **ஸோபசாரம்**-துதியுடன் கலந்ததான, **ஸ்வம் ஸ்வம் மதம்**-தங்கள் தங்கள் கருத்தை, **ஊசு:**-சொன்னார்கள்.

அவதாரிகை:— இப்படிப் பெருமாள் அருளிச்செய்தவாறே முதலிகள் ஸோபசாரமாகத் தந்தாம் மதத்தை

பிரயோகிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நண்பனாலே "மயிரைப்பிடித்துத்தள்ளும் வரையில் நண்பனுக்கு உபதேசிப்பது தகும்" [ ] என்கிறபடியே தன் நண்பனுக்கு நன்மை சொல்லுவது தகும்.

இந்த ச்லோகத்தால், அடியார் தன் நினைவைப் பின்செல்லாமல் ஆக்ஷேபித்துக் கலக்கம் விளைத்தாலும், அந்தக் கலக்கத்தை அவர்களைக் கொண்டே போக்கவேண்டும் என்று நினைக்கும் ராமபிரானுடைய ஆஶ்ரித பாரதந்த்ர்யம் (அடியாரிட்ட வழக்காயிருக்கும் தன்மை) சொல்லப்பட்டது.

அவதாரிகை:—இப்படி ராமபிரான் அருளிச்செய்தவுடன் வானரர்கள் அவரைப் புகழ்ந்துகொண்டு தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர் என்கிறது "இத்யேவம்" என்றுதொடங்கும் ச்லோகங்களாலே.

விண்ணப்பம் செய்தார் என்கிறது "இத்யேவம்" இத்யாதியாலே.

வ்யா:— (இத்யேவம்) ப்ரகாரவாசியான பதத்வயத்தாலும் உக்த வசநப்ரகாரத்தையும், அநுநயப்ரகாரத்தையும் சொல்லுகிறது. (பரிப்ருஷ்டாஸ்தே) பரிப்ரச்நமாவது:- பரித: ப்ரச்நமாதல், பரி ஸ்தித்வா ப்ரச்நமாதல். பரித: ப்ரச்நமாவது நேர் நேர் கேட்கையன்றிக்கே, தன் நினைவிலே விழும்படி கேட்கை. விபீஷணாங்கீகாரம் மஹாராஜரைப் போலே உங்களுக்கு இஷ்டமோ அநிஷ்டமோ என்று நேர் நேர் கேட்கையன்றிக்கே, "**सुहृदा सन्देष्टुं युक्तम्**" (**ஸுஹ்ருதா ஸந்தேஷ்டும் யுக்தம்**) என்று ஸாமாந்யேந கேட்கை. பரி ஸ்தித்வா ப்ரச்நமாவது—அபிப்ராயத்தாலே வந்த ஸாநுநய ப்ரச்நம். அதாகிறது-அநுஸரித்துக்கேட்கை. ஆக இத்தால்

வ்யா:-(என்று இவ்வண்ணமாக) 'இதி' (என்று) 'ஏவம்' (இவ்வண்ணமாக) என்னும் இருபதங்களும் வார்த்தை சொன்ன முறையைக் குறிக்கும். இங்கு, 'இதி' (என்று) என்றது சொல்லப்பட்ட வார்த்தையின் முறையையும், 'ஏவம்' (இவ்வண்ணமாக) என்றது அவ்வார்த்தை சொல்லும்போது இணக்கத்தோடு சொல்லப்பட்டது என்பதையும் சொல்லுகிறது. (பரிப்ரச்னம் செய்யப்பட்ட அவர்கள்) பரிப்ரச்னமாவது-பரித: ப்ரச்நம் (சுற்றி வளைத்துக் கேட்பது) என்றோ பரி ஸ்தித்வா ப்ரச்னம் (சூழ்ந்திருந்து கேட்பது) என்றோ பொருள்படுகிறது. சுற்றிவளைத்துக் கேட்பதாவது-நேருக்கு நேர் கேளாமல், தன் கருத்தை அவர்கள் ஆதரிக்கவும் இடங்கொடுத்துச் சுற்றிவளைத்துக் கேட்பது. விபீஷணனை அங்கீகரிப்பது சுக்கிரீவனைப்போலே உங்களுக்கும் இஷ்டமல்லவோ, அல்லது இஷ்டமோ என்று நேருக்கு நேர் கேட்டுவிட்டால், சுக்கிரீவனுக்கு மதிப்புக்கொடுத்து 'இஷ்டமில்லைதான்' என்று எல்லோரும் சொல்லிவிடுவார்கள். ஆகையால் அப்படிக் கேளாமல், அனுமன் முதலான சிலர் தன் கருத்தையும் ஆதரிக்கும்படி "நண்பர்கள் நல்லது சொல்லத்தான் வேண்டும்" என்று பொதுவாகக் கேட்பதே பரித: ப்ரச்னமாவது. சூழ்ந்திருந்து கேட்பதாவது:— அபிசப்தத்தாலே தொனிக்கும் இணக்கம் கூடிய கேள்வி, அதாவது:- "கேட்டீர்களல்லவோ?" என்று அவர்கள் கருத்தை அநுஸரித்துக் கேட்கை. ஆக, இதனால் தம் மேன்மை வெளிப்படும்

தம் மேன்மைதோற்ற ப்ரச்நம் பண்ணுகையன்றிக்கே, ஆசார்யனை சிஷ்யர்கள் கேட்குமாப்போலே கேட்கை.

(தே) கேட்டத்துக்குக் கருத்தறிகையும், கார்ய நிர்ணயத்துக்கு வேண்டும் அளவுடைமையும். (ஸ்வம் ஸ்வம் மதம்) "तेषु जातु न विश्वसेत्" (தேஷு ஜாது ந விச்வஸேத்) என்று மஹாராஜர் மதத்தில் விழும்படியாகப் பரீக்ஷாஹேதுபேதங்களாலே தந்தாமுடைய மதத்தை. (அதந்த்ரிதா:) ராம கார்யத்திலே ஸாவதாநராயுள்ளார். (ஸோபசாரம்) பெருமாளுடைய பெருமையைப் புகழ்ந்துகொண்டு. (ததா) பெருமாளுக்குத் தாங்கள் ஹிதஞ்சொல்லுகை அபேக்ஷிதமான தசையிலே. (ஹிதசிகீர்ஷவ:) பெருமாளுடைய ப்ரியம் ஒருதலையானாலும் ஹிதத்தைப் பேணுவார் (பேணுவதிலே?) இச்சையுடையராயிருக்குமவர்கள். **ராமம் ஊசு:**

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 33-வது ச்லோகம்

आज्ञातं नास्ति ते किञ्चित्त्रिषु लोकेषु राघव।
आत्मानं पूजयन्राम पृच्छस्यस्मान् सुहृत्तया॥

படியாக அதிகாரத்தோடு கேட்காமல், ஆசார்யனை சிஷ்யர்கள் கேட்குமாப்போலே அடக்கத்தோடு கேட்டார் என்று கருத்து.

(அவர்கள்) கேட்டதுக்குக் கருத்தை அறியவல்லவர்கள்; 'இன்னது செய்யவேண்டும்' என்று முடிவுகட்ட வேண்டிய புத்திப்பெருக்கை உடையவர்கள் என்று கருத்து. (தங்கள் தங்கள் முடிவை) "அவர்களிடம் ஒரு போதும் நம்பிக்கை வைக்கக்கூடாது" [ரா-யு 17-19] என்று சுக்ரீவனுடைய முடிவோடு ஒத்துப்போனபோதிலும், ஆராய்ச்சிசெய்யும் முறை, காட்டும் காரணங்கள் ஆகியவற்றாலே வேறுபடும் தங்கள் தங்கள் முடிவை. (கவனமுள்ளவர்கள்) ராமனுடைய காரியத்தில் கவனமுள்ளவர்கள். (உபசாரத்தோடுகூட) ராமபிரானின் பெருமையைப் புகழ்ந்துகொண்டு என்று கருத்து. (அப்போது) ராமபிரானுக்குத் தாங்கள் நன்மை சொல்லுவது அவசியமாயிருந்த அக்காலத்தில். (நன்மை செய்வதில் விருப்பமுள்ளவர்கள்) ஸ்ரீராமபிரானுடைய பிரியத்தையே கைவிடவேண்டி வந்தாலும், அதையும் பொறுத்துக்கொண்டு அவனுக்கு நன்மை செய்வதில் விருப்பமுடையவர்களாயிருக்குமவர்கள். (ராமனிடம் சொன்னார்கள்) என்று அந்வயம்.

அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித் த்ரிஷு லோகேஷு ராகவ।
ஆத்மாநம் பூஜ்யங் ராம ப்ருச்சஸ்யஸ்மாந் ஸுஹ்ருத்தயா ॥

பதவுரை:—ராகவ—ரகுகுலதிலகா! தே-உமக்கு, த்ரிஷு லோகேஷு—மூன்று வகைச் சேதனர்கள் விஷயத்தில், அஜ்ஞாதம்—தெரியாதது, கிஞ்சித்—சிறிதும், ந அஸ்தி—இல்லை, ஆத்மாநம்-உம்மை, பூஜயந் — பெருமைப்படுத்திக்கொண்டு, ஸஹ்ருத்தயா-நட்பினாலே, அஸ்மாந்-எங்களை, ப்ருச்சஸி—கேட்கிறீர்.

அவதாரிகை:—தந்தாமுடைய மதத்தைச் சொல்லுவார்களாக நினைத்துக் கீழில் "ஸோபசாரம்" என்று ப்ரஸ்துதமான ப்ரகாரத்தைச் சொல்லுகிறார்கள் மேல் இரண்டு ச்லோகத்தாலே. அதில் முதல் ச்லோகத்தால், தேவர் ஸர்வஜ்ஞராயிருக்கச் செய்தே எங்களைக் கேட்கிறது, ஆஶ்ரிதர் சொல்லிற்றலது செய்தருளார் என்கிற ஏற்றம் தேவர்க்கு உண்டாகைக்காகவிறே என்கிறது.

வ்யா:— (த்ரிஷு லோகேஷு தேऽஜ்ஞாதம் கிஞ்சித் நாஸ்தி) அநுகூல ப்ரதிகூல மத்யஸ்த கோடித்ரயமாயிருந்துள்ள சேதநர் நிமித்தமாக ஸ்வதஸ் ஸர்வஜ்ஞராயிருந்துள்ள தேவர்க்கு, அவர்களுடைய ஸ்வரூபஸ்வபாவங்க

அவதாரிகை:-தங்கள் தங்கள் முடிவைச் சொல்ல நினைத்து, முன் ச்லோகத்தில் "உபசாரத்தோடுகூட" என்று சொல்லப்பட்ட ராமகுண கீர்த்தனப்ரகாரத்தைச் சொல்லுகிறார்கள் மேல் இரண்டு ச்லோகங்களாலே. அதில் "அஜ்ஞாதம்" என்றுதொடங்கும் இந்த ச்லோகத்தாலே, "தேவரீர் எல்லாமறிந்தவராயிருந்தும் எங்களைக் கேட்பது 'அடியார் சொல்லாமல் எதுவும் செய்யமாட்டார்' என்னும் பெருமை உமக்கு உண்டாவதற்கன்றோ" என்கிறார்கள்.

வ்யா:-(மூவுலகிலும் உமக்கு அறியாததொன்றுமில்லை) ப்ரகரணாநுகுணமாக இங்கு லோகசப்தம் சேதனரைக் குறிக்கிறது. அநுகூலர், எதிரிகள், நடுநிலையாளர் என்னும் மூன்று வகைப்பட்ட சேதனர்கள் விஷயமாகவும் இயற்கையிலேயே எல்லாமறிந்த உமக்கு, உமக்கு, அச்சேதனருடைய ஸ்வரூபஸ்வபாவங்கள் ஏற்றத்தாழ்வுப்பிரிவுகள் கொள்ளுவதும்

ளென்ன, உத்கர்ஷா பகர்ஷவிபாகமென்ன, த்யாஜ்யோபா தேயவிபாகமென்ன. இவற்றில் அஜ்ஞாதமாயிருப்பதொன் றில்லை. "அஜ்ஞாதம்-நாஸ்தி"—என்று வ்யதிரேகத்தாலே சொல்லிற்று அர்த்தஸ்தைர்யத்துக்காக. (ராகவ) இந்தஸார்வ ஜ்ஞ்யமென்ன, வக்ஷ்யமாண ஸ்வபாவங்களென்ன, இவை யெல்லாம் ரகுகுலோத்பவத்வத்தால் வந்ததென்கை. **"यशस्वी ज्ञानसंपन्नः"** (யஶஸ்வீ ஜ்ஞாநஸம்பந்ந:) என்னக்கடவதிறே. (ராம ஸுஹ்ருத்தயா ஆத்மாநம் பூஜயந் அஸ்மாந் ப்ருச்சஸி) ஆஶ்ரிதர்க்கு நன்மையே எண்ணும் திருவுள்ளத்தை உடையீ ரென்கிற இம்மஹாகுணத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக ஆரம் பித்தீர். ஆஶ்ரிதர் சொன்னபடியல்லது செய்யார் என்று தேவர்க்கு வரும் ஏற்றத்தை லோகம் கொண்டாடுகைக்காக, ஸர்வஜ்ஞரான தேவரீர் ஜ்ஞாநத்துக்கு அடைவில்லாத திர்யக்ஜாதியான எங்களைக் கேட்டருளுகிறதித்தனை.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 34-வது ச்லோகம்

त्वं हि सत्यव्रतः शूरो धार्मिको दृढविक्रमः।
परीक्ष्यकारी स्मृतिमान् निसृष्टात्मा सुहृत्सु च॥

தள்ளுவதுமான பிரிவுகள் ஆகிய இவற்றில் அறியாதது ஒன்றுமில்லை- 'எல்லாம் அறிவீர்' என்று அந்வயத்தாலே சொல்லாமல், 'அறியாததுஇல்லை' என்று வ்யதிரேகத்தாலே சொன்னது இவ்வர்த்தத்தின் உறுதிப்பாட்டைக் காட்டுகிறது. (ராகவரே) இந்தப் பேரறிவும் சொல்லப்போகும் மற்ற குணங்களும் ரகுகுலத்தில் பிறப்பாலே வந்ததென்று கருத்து. "கீர்த்தி யுடையவன்; அறிவுடையவன்" [ரா-பா 1-12] என்று சொல்லப்படுகிற தன்றோ. (ராமபிரானே! நண்பனென்றுகாட்டித் தன்னைப் பெருமைப் படுத்திக்கொண்டு எங்களைக் கேட்கிறீர்) அடியார்க்கு நன்மையே எண் ணும் திருவுள்ளத்தை உடையீர் என்கிற இப்பெருங்குணத்தை வெளிப் படுத்துவதற்காகவே இவ்வார்த்தையைச் சொல்லியிருக்கிறீர். இதனால், 'அடியார் சொன்னபடியல்லது செய்யமாட்டார் இராமபிரான்' என்று தேவர்க்கு ஏற்படும் பெருமையை உலகம் புகழ்வதற்காகவே எல்லாமறிந்த தேவரீர் அறிவிற்கு யோக்யதையேயில்லாத விலங்கினத்தைச் சேர்ந்த எங்களைக் கேட்கிறீரேயொழிய வேறில்லை என்கிறார்கள்.

த்வம் ஹி ஸத்யவ்ரத: சூரோ தார்மிகோ த்ருடவிக்ரம:।
பரீக்ஷ்யகாரீ ஸ்ம்ருதிமாந் நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச॥

பதவுரை:—**த்வம் ஹி**–*நீர் தான்,* **ஸத்யவ்ரத:**—*வீணுகாத ஸங்கல்பத்தையுடையவர்;* **சூர:**—*பராக்ரமத்தையுடையவர்;* **தார்மிக:**—*தர்மிஷ்டர்;* **த்ருடவிக்ரம:**—*உறுதியான செயலை யுடையவர்;* **பரீக்ஷ்யகாரீ**-*(எதையும்) ஆலோசித்துச் செய்பவர்.* **ஸ்ம்ருதிமாந்**—*(முன்செய்தவற்றை) நினைவுகொள்ளுமவர்;* **ஸுஹ்ருத்ஸு**–*நண்பர்களிடத்தில்,* **நிஸ்ருஷ்டாத்மா**-*தன்னையே ஒப்படைத்திருப்பவர்.*

அவதாரிகை:–*ஆஸ்ரிதார்த்தமாகச் செய்யவேண்டுமவை தேவர்க்கு ஒருத்தரைக் கேட்டுச் செய்யவேண்டாதேயிருக்க எங்கள் பக்கல் இப்படி பரந்யாஸம் பண்ணிவைத்தீர். இது என்ன ஸ்வபாவம்? என்று தங்கள் ப்ரீத்யதிசயத்தாலே சொல்லுகிருர்கள் ''த்வம் ஹி'' இத்யாதிநா.*

வ்யா:—*(த்வம்) வக்ஷ்யமாணகுணுச்ரயமான தர்மி யுடைய வைலக்ஷண்யம் சொல்லுகிறது. பகவத்வ்யதிரிக்தர்க்கு குணுதீநமிறே ஸ்வரூபோத்கர்ஷம். இவ்விடத்திலே குணேத்கர்ஷம் ஸ்வாச்ரயத்தைப் பற்றியிருக்கும் என்கை.*

அவதாரிகை:–அடியார்க்காகச் செய்யவேண்டும் கார்யங்கள் உமக்கு ஒருவரைக் கேட்டுச் செய்யவேண்டாதேயிருக்க எங்களிடம் இப்படி முடிவுகட்டும் சுமையை வைத்துவிட்டு ஒன்றுமறியாதவர்போலிருக்கிறீர். இது என்ன மஹாகுணம்! என்று தங்களுடைய அன்புப்பெருக்காலே சொல்லுகிருர்கள் "த்வம் ஹி" என்று தொடங்கும் ச்லோகத்தாலே.

வ்யா:–(நீர்) சொல்லப்போகும் குணங்களுக்கு இருப்பிடமான பகவானுடைய திவ்யாத்மஸ்வரூபத்தின் பெருமையை உணர்த்துகிருர்கள். பகவானைத்தவிர்ந்த மற்றவர்களுக்கு குணத்திஞல் ஸ்வரூபத்துக்குப் பெருமையாயிருக்கும். பகவான் விஷயத்தில் ஸ்வரூபத்தாலே குணங்களுக்குப் பெருமையுண்டாவதாயிருக்கும் என்று கருத்து.

“गुणायत्तं लोके” (குணாயத்தம் லோகே) என்றாரிறே ஆழ்வான். (ஹி) கீழ் உக்தமான ஸுஹ்ருத்தாப்ரதிபாதந ஸூசகம். (ஸத்யவ்ரத:) அமோகஸங்கல்ப:. அதாகிறது “अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम” (அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம) என்று ஆஸ்ரிதஸம்ரக்ஷணத்துக்கு விக்நஸூதம் வந்தால் அவற்றை அழியச்செய்யும் ஹிம்ஸாஸாமர்த்யம் சூரத்வம். (தார்மிக:) அதுதான் செவ்வைப்பூசலாலேயாயிருக்கை. அதவா–அந்த ரக்ஷணதர்மம் ஸ்வப்ரயோஜநத்துக்காயிருக்கையன்றிக்கே, தத்ரக்ஷணைக பலமாயிருக்குமென்றுமாம். (த்ருடவிக்ரம:) த்ருடவ்யாபார:-செய்ததொன்றை ஒருத்த

“குணாயத்தம் லோகே குணிஷு ஹி மதம் மங்களபதம்
விபர்யஸ்தம் ஹஸ்திக்ஷிதிதரபதே தத் த்வயி புந:।
குணா: ஸத்யஜ்ஞாநப்ரப்ருதய உத த்வத்கததயா
சுபீபூயம் யாதா இதி ஹி நிரணைஷ்ம ச்ருதிவசாத்॥”

[வரதராஜஸ்தவம் 11]

[உலகத்தில் குணசாலிகளிடத்தில் ‘இவர்கள் நல்லவர்கள்’ என்ற சொல்லானது குணங்களால் வருவதாக உள்ளது. அத்திகிரியப்பனே! உன் விஷயத்தில் அது மாறுபட்டிருக்கிறது. ஏனெனில்: ஸத்யம், ஜ்ஞாநம், முதலான குணங்கள் உன்னையடைந்திருப்பதால் மங்களத்தன்மையை அடைந்தன என்று வேதங்களைக் கொண்டு நிர்ணயித்தோம்.] என்றாரன்றோ ஆழ்வான். (அன்றோ) சென்ற ச்லோகத்தில் “ஸுஹ்ருத்தயா” என்று சொல்லப்பட்ட நட்பையே இந்த ச்லோகத்தில் விவரிக்கிறோம் என்று கருத்து. (ஸத்யவ்ரதர்) வீணாகாத ஸங்கல்பத்தை உடையவர். அதாவது:–“எல்லா பூதங்களுக்கும் அபயமளிக்கிறேன்; இது என் விரதம்” [ரா-யு 18-33] என்று அடியாரைக் காப்பதற்குக் கொண்டுள்ள விரதம் வீணாகாததாயிருக்கை. (சூரர்) அந்தக் காத்தல்தொழிலுக்கு எண்ணற்ற இடையூறுகள் வந்தாலும், அவற்றை அழியச்செய்யும் அழிக்கும் வல்லமையே சூரத்தன்மையாகிறது. (தார்மிகர்) அது செய்யும்போது அதர்மயுத்தமாயிராமல், தர்மயுத்தமாயிருக்கை. அல்லது, “ஸத்யவ்ரத:” என்றவிடத்தில் சொல்லப்பட்ட ரக்ஷணதர்மம் சுயநலத்துக்காகவல்லாமல், அடியாரை ரக்ஷிப்பதையே ஸ்வயம்ப்ரயோஜனமாகக் கொண்டதாயிருக்குமென்பதாகவும் கொள்ளலாம். (த்ருடவிக்ரமர்) உறுதியான செயலையுடையவர். தான் செய்ததொரு காரியத்தை ஒருவராலும் அழிக்க

ராலும் அழிக்கவொண்ணுமை. அதாகிறது-ஆஶ்ரிதர் தங்க ளாலும் பிறராலும் அழிக்கவொண்ணுதிருக்கை. (பரீக்ஷ்ய காரீ) ஆஶ்ரிதார்த்தமாகப் பராக்ரமிக்குமிடத்தில் பார்த் துச் செய்கை. அதாகிறது-பிறரால் வரும் விரோதத்தை விக்ரமத்தால் அழிப்போம். அவன்தன்னுல் வரும் விரோ தத்தைப் பொறையாலே அழிப்போம் என்று பார்த்துச் செய்கை. "दास्यमैश्वर्यवादेन" (தாஸ்யமைச்வர்யவாதேந) "यस्यामृतामलयशःश्रवणावगाहः" (யஸ்யாம்ருதாமலயஶ:ஶ்ர

வொண்ணுமலிருக்கை. அதாவது-அவ்வடியார்களே அழிக்க நினைத்தால், அவர்களாலும், ப்ரஹ்மருத்ரேந்திரர்கள் முதலான மற்றுள்ளாராலும் அழிக்க முடியாதிருக்கை. (ஆராய்ந்து தொழில்புரியுமவர்) அடியார்க்காகச் செயல்படும்போது ஆராய்ந்து செய்கை. அதாவது-பிறரால் வரும் விரோதத்தை வீரச்செயலால் அழிப்போம்; அடியார்தம்மாலேயே வரும் விரோதத்தை நம் பொறுமையாலே போக்குவோம் என்று ஆராய்ந்து செய்கை.

"தாஸ்யமைச்வர்யவாதேந ஜ்ஞாதீநாஞ்ச கரோம்யஹம்।
அர்த்தபோக்தா ச போகாநாம் வாக்துருக்தாநி ச க்ஷமே॥"

[பார-சாந்தி 81-5]

[ஈச்வரனென்று சொல்லிக்கொண்டு, உறவினர்களுக்கெல்லாம் அடிமை செய்கிறேன் நான். போகங்களின் ஒரு பகுதியையே நான் அனுபவிக் கிறேன். அவர்களுடைய கடுஞ்சொற்களையும் பொறுத்துக்கொள்கிறேன்.]

"யஸ்யாம்ருதாமலயஶ:ச்ரவணுவகாஹ:
ஸத்ய: புநாதி ஜகத் ஆச்வபசாத் விகுண்ட:।
ஸோऽஹம் பவத்ப்ய உபலப்த ஸுதீர்த்தகீர்த்தி:
சிந்த்யாம் ஸ்வபாஹுமபி வ: ப்ரதிகூலவ்ருத்திம்"

[பாகவதம் 3-16-6]

[எவனொருவனுடைய அமுதனைய மலமற்ற கீர்த்தியைக் கேட்பதாகிற ஸ்நாநமானது சண்டாளனையுள்ளிட்ட எல்லா உலகையும் உடனே பரி சுத்தப்படுத்துகிறதோ, அப்படிப்பட்டவனுய் வைகுண்டனெனப்படுமவ னுய், உங்களால் கிடைக்கப்பெற்ற அதிபரிசுத்தனென்னும் புகழையுடைய னுன நான், உங்களுக்கு இடையூறு செய்ததாகில் என் கையையும் வெட்டிக்

வஹுவகாஹ:) (ஸ்ம்ருதிமாந்) முன்பு பிறந்த ஜ்ஞாநம் அவஸரே ஸம்ருதிவிஷயமாகை. அதாகிறது:—ஆஶ்ரிதர் புத்த்யா பண்ணும் அபராதத்தைப் பொறுக்கைக்கு அடி, இவன் அடியிற்பண்ணின ஆபிமுக்யத்தையே நினைத்திருக்கை. (நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச) ஆஶ்ரிதர்பக்கல் இப்படி ஸர்வப்ரகார ரக்ஷகராயிருக்கச்செய்தே, தேவர் கார்யம் ஆஶ்ரிதரிட்ட வழக்காம்படி அவர்கள் பக்கலிலே ஸமர்ப்பித்து வைத்தீர். கீழ் உள்ள குணங்களை உண்டறுக்கிலும் இம்மஹாகுணத்தை ஒருத்தராலும் உண்டறுக்கப்போமோ என்று கருத்து. சஶப்தத்தால் அநுக்தமான குணங்களை ஸமுச்சயிக்கிறது.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 35-வது ச்லோகம்

तस्मादेकैकशस्तावद्ब्रुवन्तु सचिवास्तव।
हेतुतो मतिसंपन्नास्समर्थाश्च पुनस्तथा॥

தஸ்மாதேகைகஶஸ் தாவத் ப்ருவந்து ஸசிவாஸ்தவ।
ஹேதுதோ மதிஸம்பந்நாஸ் ஸமர்த்தாஶ்ச புநஸ்ததா॥

பதவுரை:—தஸ்மாத்—ஆகையால், மதிஸம்பந்நா:—புத்திமான்களாயும், புந: ததா—அப்படியே, ஸமர்த்தா: ச—வாக்கு வன்மையுடையவர்களாயுமுள்ள, தவ-உம்முடைய, ஸசிவா:

கொள்ளுவேன்.] என்று தானே சொல்லிக் கொண்டானன்றோ. (நினைவுள்ளவன்) முன்பு பிறந்த அறிவு உரிய காலத்தில் நினைவுவரப்பெற்றவன். அதாவது:-அடியவனொருவன் நெஞ்சறிந்து செய்த பாபங்களையும் பொறுப்பதற்குக் காரணம் இவன் ஆதியில் செய்த ஆநுகூல்யலேசத்தை நினைவுகூர்கையே என்கை. (நண்பர்களிடத்தில் தன்னையே வைத்தவன்) அடியார் விஷயத்தில் இப்படி எல்லாவிதத்திலும் ரக்ஷகராயிருக்கும்போதே, உம்காரியம் அடியாரிட்ட வழக்காம்படி அவர்களிடம் தன்னையே கொடுத்துவைத்திருக்கிறீர். கீழ்ச்சொன்ன குணங்களைக் கரைகண்டாலும் இந்த மஹாகுணத்தை ஒருவராலும் அளவிடமுடியுமோ? என்று கருத்து. 'ச' என்னும் உம்மையாலே சொல்லாத மற்றுள்ள குணங்களைக் கூட்டுகிறது.

தாவத்-மந்திரிகள் அனைவரும், ஹேதுத:-காரணங்காட்டி, ஏகைகஶ:-ஒவ்வொருவராய், ப்ருவந்து-சொல்லட்டும்.

அவதாரிகை:-இப்படி தேவர் கார்யத்தை ஆஶ்ரிதர் இட்ட வழக்காக்கி வைத்தீர் என்பது யாதொன்று; அத்தாலே தேவருடைய ஸசிவராயிருந்துள்ள அங்கதப்ரமுகர் நால்வரும் தனித்தனியே தங்கள் கருத்துக்களை விண்ணப்பம் செய்யக்கடவர்கள்; இது எங்களுக்கெல்லாம் கருத்தாகக் கடவது என்று மேல் விண்ணப்பம் செய்யப்புகுகிற நாலு முதலிகளையும் ஒழிந்தார் அடங்கச் சொல்லுகிறார்கள்.

வ்யா:-(தஸ்மாத்) தேவரை ஆஶ்ரிதபரதந்த்ரராக்கி அடியோங்கள் சொன்னபடி செய்யக்கடவதாக எங்களை வைத்த வைப்பாலே. (ஏகைகஶ:) தனித்தனியே தந்தாமுடைய கருத்துக்களை விண்ணப்பம் செய்யக்கடவர்கள். (தாவத் ப்ருவந்து)முந்துறமுன்னம் எல்லாரும் விண்ணப்பம் செய்யக் கடவர்கள்; கார்யவேளையிலே திருவுள்ளமானபடி செய் தருளுகிறதென்கை. (தவ ஸசிவா:) ஆஶ்ரிதரக்ஷணமஹாத்

அவதாரிகை:—தேவரீர், தம் காரியத்தை அடியாரிட்ட வழக்காக்கி வைத்திருக்கும் காரணத்தாலே, உம்முடைய மந்திரிகளாயிருக்கும் அங்கதன், சரபன், ஜாம்பவன், மைந்தன் என்னும் நால்வரும் தனித்தனியாகத் தங்கள் கருத்துக்களை விண்ணப்பம் செய்யட்டும். அது எங்களனைவருடைய கருத்தாகக் கொள்வோம்-என்று அந்நால்வரைத்தவிர்ந்த வானரர்கள் அனைவரும் சொல்லுகிறார்கள்.

வ்யா:—(ஆகையால்) தம்மை அடியாரிட்ட வழக்காக்கி, அடியோங்கள் சொன்னபடி செய்வதாகச் சொல்லி சேஷிகள் ஸ்தானத்திலே எங்களை நிறுத்திய காரணத்தாலே. (ஒவ்வொருவராக) தனித்தனியாகத் தங்கள் தங்கள் கருத்துக்களை விண்ணப்பம் செய்யட்டும். (அனைவரும் சொல்லட்டும்) 'தாவத்' என்னும் சப்தம் ஸாகல்யவாசி. 'அனைவரும்' என்றபடி. முதன்முதலில் அனைவரும் தங்கள் கருத்தைச் சொல்லட்டும்; செயல் புரியும்போது உம் திருவுள்ளப்படி செய்யலாம் என்னும் பொருளும் தொனிக்கிறது. (உம் மந்திரிகள்) அடியாரைக் காப்பதாகிற பெருவேள்வியிலே தீக்ஷை கொண்டிருக்கும் தேவரீர்க்கு, அவ்வேள்வியை நடத்தி

வரத்திலே தீக்ஷிதராயிருக்கிற தேவர்க்கு ஆர்த்விஜ்யம் பண்ணுகிறவர்கள். இப்படி தாங்கள் சொல்லுகிறது, பெருமாள் ஶரணாகதரக்ஷணத்துக்கு ஸஹகாரியாகத் தங்களை நினைத்திருக்கையாலே. (ஹேதுத:) ப்ரதிபந்நங்களென்று பெருமாளுக்கு உபேக்ஷிக்கவொண்ணாதபடி ஸஹேதுகமாக. (மதிஸம்பந்நா:) கார்யநிர்ணயத்தில் தனித்தனியே நிபுணரென்கை. (ஸமர்த்தாஶ்ச புநஸ்ததா) யாதொருபடி நிர்ணயித்தார்கள்; அப்படியே பின்பு பெருமாள் திருவுள்ளத்திலே படும்படி ப்ரதிபாதநஸமர்த்தராயிருக்குமவர்கள். இப்படி முதலிகள் இவர்கள் நால்வர் வார்த்தையையும் பெருமாள் கௌரவிக்கைக்காக ப்ரஶம்ஸித்து விண்ணப்பம் செய்தார்கள்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 36-வது ச்லோகம்

इत्युक्ते राघवायाऽथ मतिमानङ्गदोऽग्रतः।
विभीषणपरीक्षार्थमुवाच वचनं हरिः॥

இத்யுக்தே ராகவாயாऽத மதிமாநங்கதோऽக்ரத:।
விபீஷணபரீக்ஷார்த்தமுவாச வசநம் ஹரி:॥

பதவுரை:—அத—அதற்குப்பின், இதி-இவ்வண்ணமாக, உக்தே-சொல்லப்பட்டவளவிலே, அக்ரத:-முதலில், மதிமாந்-

---

வைக்கும் ரித்விக்குகளாயிருப்பவர்கள். ராமபிரானுடைய சரணாகதரக்ஷணத்திற்குத் தங்களைத் துணையாக நினைத்திருக்கையாலே, தாங்களே இப்படி வார்த்தை சொல்லுகிறார்கள். (காரணம் காட்டி) 'தெரிந்த விஷயந்தானே' என்று ராமபிரான் அலட்சியமாயிருக்கமுடியாதபடி காரணங்களைக்காட்டிச் சொல்லட்டும். (புத்திசாலிகள்) செய்யவேண்டியதை முடிவுகட்டும் விஷயத்தில் ஒவ்வொருவரும் தனித்தனியே வல்லமையுடையவர்கள் என்று கருத்து.

(அப்படியே வல்லமையுடையவர்கள்) எப்படித் தாங்கள் முடிவுகட்டுகிறார்களோ அப்படியே ராமபிரான் திருவுள்ளத்தில் படும்படி வார்த்தை சொல்ல வல்லமையுடையராயிருப்பவர்கள். இவ்வாறாக, வானரர்கள் இந்த நால்வர் வார்த்தைக்கு ராமபிரான் மதிப்புக்கொடுப்பதற்காக அவர்களைப் புகழ்ந்து பேசினார்கள் இந்த ச்லோகத்தில்.

புத்திமானுன, **அங்கத:**—அங்கதனென்னும், **ஹரி:**-வானரன், **ராகவாய**—ஸ்ரீராமபிரானுக்காக, **விபீஷணபரீக்ஷார்த்தம்**—விபீஷணனே சோதிப்பதற்காக, **வசநம்**—இவ்வார்த்தையை, **உவாச**—சொன்னுர்.

அவதாரிகை:— அநந்தரம் ஸர்வப்ரதாநராய் யுவராஜா வாயிருந்துள்ள அங்கதப்பெருமாள் தம்முடைய மதத்தை உபந்யஸிக்கிருர் "இத்யுக்தே" இத்யாதியால்.

வ்யா:-(இத்யுக்தே) எல்லாருக்கும் இவர்கள் நால்வருமே கடவராக முதலிகள் விண்ணப்பம் செய்துள்ளவிடத்தில். (ராகாவாய ஹரிர் வசநமுவாச) ரகுகுலத்தார் கார்யம் ஒரு குரங்கினுடைய வார்த்தைகொண்டு ஈடறுக்கும்படியாவதே என்று பெருமாளுடைய ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தை ரிஷி கொண்டாடுகிருன். (அதாSக்ரத:) என்கிறது-பரியட்ட முறையாலே மஹாராஜர்க்கு அநந்தரம் அவராகையாலும், முதலிகள் எல்லார்க்கும் ப்ரதாநராகையாலும். (மதிமாநங்கத:) பரியட்டமுறையொழிய கார்யநிர்ணயத்திற்குப் பரிகரமான ஜ்ஞாநாதிக்யத்தையுடைய அங்கதப்பெருமாள்.

அவதாரிகை:—அடுத்தபடியாக, 'இத்யுக்தே' என்றுதொடங்கும் ஐந்து ச்லோகங்களிலே, வானரர்களுக்குள் முக்கியமானவராய் யுவராஜாவாயிருக்கும் அங்கதன் தன் கருத்தைச் சொல்லுகிருன்.

வ்யா:—(இப்படி சொல்லப்பட்டவளவில்) எல்லாருக்கும் இவர்கள் நால்வரும் பிரதிநிதிகளாயிருந்து வார்த்தை சொல்லக் கடவர்கள் என்று வானரர்கள் சொன்னவுடன். (ராகவனுக்கு வானரன் வார்த்தை சொன்ஞன்) ரகுகுலத்துதித்தவர் காரியம் ஒரு குரங்கினுடைய வார்த்தைகொண்டு முடிவுகட்டும்படியாவதே! என்று ஸ்ரீராமபிரானுடைய ஆஸ்ரிதபாரதந்திரியத்தை (அடியாரிட்ட வழக்காயிருக்கும் தன்மையை) வால்மீகிமஹர்ஷி கொண்டாடுகிருர். (அதற்குப்பின் முதலாவதாக) என்கிறது, பட்டங்கட்டும் முறையிலே சுக்கிரீவனுக்கு அடுத்தபடி அங்கதனே பட்டத்துக்குரியவனுகையாலும், வானரர்கள் அனைவர்க்கும் அவனே முக்கியமானவனுகையாலும். (புத்திசாலியான அங்கதன்) பட்டங்கட்டும் முறை ஒருபுறமிருக்க, செய்யவேண்டியதை முடிவுகட்டுவதற்கு உறப்பான அறிவுப்

(விபீஷணபரீக்ஷார்த்தம்) "வத்யதாம்" என்றார் மஹாராஜர். "நத்யஜேயம்" என்னுமளவாயிருந்தது பெருமாள் திருவுள் ளம். இவையிரண்டும் ஆராயாமற்செய்கை யுக்தமல்ல என்று பரீக்ஷார்த்தமாக வார்த்தையைச் சொல்லுகிறார்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 37-வது ச்லோகம்

शत्रोः सकाशात् संप्राप्तः सर्वथा शङ्क्य एव हि।
विश्वासयोग्यः सहसा न कर्तव्यो विभीषणः॥

சத்ரோ: ஸகாஶாத் ஸம்ப்ராப்த: ஸர்வதா ஶங்க்ய ஏவஹி।
விச்வாஸயோக்ய: ஸஹஸா ந கர்த்தவ்யோ விபீஷண:॥

பதவுரை:—விபீஷண:—விபீஷணன், சத்ரோ: ஸகாஶாத்—எதிரியிடத்திலிருந்து, ஸம்ப்ராப்த:—வந்தவன்; ஸர்வதா—எல்லாவிதத்திலும், ஶங்க்ய: ஏவ ஹி—ஐயமுறத்தக்கவனே யன்றோ? ஸஹஸா-விரைவில், விச்வாஸயோக்ய:-நம்பத்தகுந் தவனாக, ந கர்த்தவ்ய:-செய்யத்தகுந்தவனல்லன்.

அவதாரிகை:—சத்ருஸகாசத்தினின்றும் வந்த விபீஷணன் ஸஹஸா விச்வாஸயோக்யனல்லன், ஶங்க்யன் என் கிறார்—"ஶத்ரோ:" இத்யாதியால்.

வ்யா:—(ஶத்ரோ: ஸகாஶாத் ஸம்ப்ராப்த:) த்வேஷாதி ரேகத்தாலே நாமக்ரஹணம் பண்ணாதே 'ஶத்ரோ:' என்கிறார்.

பெருக்கையுடைய அங்கதன். (விபீஷணனைப் பரிசோதிப்பதற்காக) "விபீஷணன் கொல்லப்படட்டும்" [ராயு-17-27] என்றான் சுக்கிரீவன். "அடியடைந்தவனை ஒருபோதும் விடமாட்டேன்" [ரா-யு 18-3] என்று சொல்லும்படியிருந்தது ராமபிரான் திருவுள்ளம். விபீஷணனின் தன்மையை ஆராயாமல் இவ்விரண்டு பக்ஷங்களில் ஒன்றை ஆதரித்து ஒரு முடிவுகட்டுவது சரியல்லவென்று, விபீஷணனைப் பரிசோதிப்பதற் காக வார்த்தை சொல்லுகிறான் அங்கதன்.

அவதாரிகை:—"சத்ரோ:" என்று தொடங்கும் ச்லோகத்தாலே, "எதிரியின் இருப்பிடத்திலிருந்து வந்த விபீஷணன் உடனே நம்பிக்கைக்குப் பாத்திரனாகமாட்டான்" என்கிறான்.

பகவத்விருத்தரை சத்ருக்களென்றிறே ததீயர் நினைத்திருப்பது. ததீயருடைய சத்ருக்களைத் தனக்கு சத்ருவாகவிறே அவன் தானும் நினைத்திருப்பது. இதிறே ஶேஷஶேஷிகளுக்கு அந்யோந்யம் பரிவு இருக்கும்படி. அல்லது, ஸ்வஶத்ருக்களென்று சிலரை மதியார்களிறே. (ஸகாஶாத் ஸம்ப்ராப்தோ ஹி) அவன் ஶத்ருவாகில் இவனுக்கென்? என்ன; அவன் ஓலக்கத்தினின்று வந்தவனென்னுமிடம் தேவர்க்கும் ஸம்ப்ரதிபந்நமன்றோ? ஆனபின்பு அவன் கார்யத்துக்கு வந்தானாகக்கூடாதோ? (ஸர்வதா ஶங்க்ய ஏவ) ஆகையால் ஸர்வப்ரகாரத்தாலும் ஶங்க்யனே. 'வத்யன்' என்னுதொழிந்தது பெருமாள் திருமுகத்தில் இவன்மேல் உண்டான தண்ணளியாலே. அவன் ஸகாஶத்தில் நின்றும் வந்தபடியாலும், அவன் தம்பியென்று தானே சொல்லுகையாலும், ராக்ஷஸ ஜந்மமானபடியாலும் விச்வஸிக்கைக்கு ஒரு ஹேதுவில்லை.

வ்யா:-(எதிரியின் இருப்பிடத்தினின்று வந்தவன்) வெறுப்பின் மிகுதியாலே 'ராவணன்' என்று அவன் பெயரையும் சொல்லாமல் 'எதிரியினுடைய' என்கிறார். பகவானுடைய விரோதிகளைத் தமக்கு எதிரிகளாகவன்றோ அவனடியார் நினைத்திருப்பது. ''த்விஷதந்நம்'' இத்யாதிகளிலே அடியார்களின் எதிரிகளைத் தனக்கு எதரிகளாகவன்றோ அவனும் அறுதியிட்டான். அடியார்க்கும் ஆளுடையவனுக்கும் ஒருவருக்கொருவர் பரிவு இருக்கும்படி இதுவன்றோ. இப்படியல்லாது நேரே தங்களுக்கு எதிரிகள் என்று சிலரை ஸர்வசரீரியான அவனும் நினைக்க மாட்டான்; எல்லாவற்றையும் அவன் விபூதியாகப் பார்க்கும் அவர்களும் நினைக்கமாட்டார்கள். (எதிரியின் அருகிலிருந்து வந்தவனன்றோ) அவன் எதிரியானால் இவனுக்கென்ன? எனில்: அவன் சபையிலிருந்து வந்தவன் என்பது தேவரீரும் ஒப்புக்கொண்டதன்றோ? ஆகையால், அவனுக்கு ஒற்றனாக வந்திருக்கலாமன்றோ? (எவ்விதத்திலும் ஐயுறத்தக்கவனே) ஆகையால் எவ்விதத்திலும் ஸந்தேஹிக்கத்தக்கவனே. 'கொல்லத்தக்கவன்' என்று சுக்கிரீவனைப்போலே சொல்லாததற்குக் காரணம், ஸ்ரீராமபிரான் திருமுகத்திலே விபீஷணன் விஷயமாக வெளிப்படும் வாத்ஸல்யத்தை அங்கதன் கண்டதேயாகும். ராவணஸபையிலிருந்து வந்தபடியாலும், அவனுடைய தம்பியென்று தானே சொல்லுகிறபடியாலும், அரக்கர் குலமாகையாலும் இவனை நம்புவதற்கு ஒரு காரணமும் இல்லை.

(விச்வாஸயோக்ய: ஸஹஸா ந கர்த்தவ்ய:) ஶரண மென்று வந்தவன் விச்வாஸயோக்யனல்லனே என்று பெரு மாள் அபிப்ராயமாக, அப்படிதன்னுலும் சடக்கென விச்வ ஸிக்கைக்கு யோக்யனல்லன். அது எத்தாலே என்னில்: (விபீஷண:) பரஹிம்ஸையாலே ஸர்வலோகபயங்கரனுனவன் பண்ணின சத்ருசரணுகதியாகையாலே, நம்மை நலிகைக்கு இந்த கோஷ்டியிலே விலைச்செல்லும் வார்த்தையைச் சொல்லிவந்தானுக ஸம்பாவனேயுண்டு. ஆகையால், ஸஹஸா விச்வஸிக்க அடுக்காது; ஶங்கிக்கவடுக்கும் என்கை.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 38-வது ச்லோகம்

छादयित्वाऽऽत्मभावं हि चरन्ति शठबुद्धयः ।
प्रहरन्ति च रन्ध्रेषु सोऽनर्थस्तत्कृतो भवेत् ॥

சாதயித்வாऽऽத்மபாவம் ஹி சரந்தி ஶடபுத்தய:।
ப்ரஹரந்தி ச ரந்த்ரேஷு ஸோऽநர்த்தஸ் தத் க்ருதோ பவேத்।

பதவுரை:—ஶடபுத்தய:-துஷ்டபுத்தியையுடைய அரக்கர், ஆத்மபாவம்-தம்முடைய கருத்தை, சாதயித்வா-மறைத்து வைத்து, சரந்தி ஹி-(நல்லோர்போலே) நடையாடுகிறுர்க ளன்றே? ரந்த்ரேஷு-இடம் கிடைத்தபோது, ப்ரஹரந்தி ச-

---

(விரைவில் நம்பிக்கைக்குப் பாத்திரமாக்கத் தக்கவனல்லன்) "சத்துரு வின் உறவினனுகிலும், சரணமென்று வந்தவன் நம்பிக்கை வைக்கத்தக்க வனல்லனே?" என்று ராமபிரானின் திருவுள்ளத்தில் ஓடுவதை அறிந்து "சரணமடைந்தவன் என்னும் காரணத்தினுலும், திடீரென நம்பிக்கை வைத்துவிடமுடியாது; ஆராய்ச்சிசெய்தே கைக்கொள்வதோ கைவிடுவதோ செய்யவேணும்" என்கிறுர். எதனுலெனில்: (விபீஷணன்) (உயிர்களை) ஹிம்ஸையாலே விதவிதமாக பயமுறுத்துமவன் என்பதல்லவோ இவன் பெயர். அப்படிப்பட்ட இவன் பண்ணின கபடசரணுகதியாகையாலே, நம்மைத் துன்புறுத்துவதற்கு, நம் கோஷ்டியிலே இடமளிக்கும் சரணு கதிவாக்கியத்தைச் சொல்லியிருக்க இடமுண்டு. ஆகையால், உடனே நம்பி விடக்கூடாது. ஐயமுறவே வேண்டும் என்கிறுர்.

நலியவும் செய்கின்றார்கள். **ஸ: அநர்த்த:**—அந்தத் தீங்கு, **தத் க்ருத: பவேத்**—நம்பிக்கை வைத்தவன்தானே விளைத்துக் கொண்டதாக முடியும்.

அவதாரிகை:—ஆர்த்தி தோற்ற வந்து ஶரணம் புகுந்த வனை விச்வஸிக்கவேண்டாவோ? என்று ராமாபிப்ராயமாக ஶரணாகதனானாலும் ஸஹஸா விச்வாஸயோக்யனல்லன் என்னுமிடத்தை ஸஹேதுகமாக ப்ரதிபாதித்து, விச்வஸித் தால் வரும் அநர்த்தத்தைச் சொல்லுகிறது.

வ்யா:—(ஶடபுத்தய: ஆத்மபாவம் சாதயித்வா சரந்தி) (ஶடபுத்தய:) **துஷ்டபுத்தய:**—தாமஸப்ரக்ருதிகளாகையாலே ராக்ஷஸர் துஷ்டபுத்திகளாயிறேயிருப்பது. (ஆத்மபாவம் சாதயித்வா) நலியக்கடவதாக நிச்சயித்து வருகிற தன் நினைவை மறைத்து. (சரந்தி) ஸாதுவச்சரந்தி. தங்களுடைய பாவதோஷத்துக்கு எதிர்த்தட்டான அநுகூலவேஷத்தைக் கொண்டு வ்யவஹரியாநிற்பர்கள். (ஹி) பாதகரான ராக்ஷ ஸர் அநுகூலவேஷத்தோடு ஸஞ்சரிப்பர் என்னுமிடம், மாரீசன் பக்கலிலும் ராவணன் பக்கலிலும் நமக்கு அநுபூத

அவதாரிகை:—'தன் வருத்தமெல்லாம் முகத்தில் தோற்றும்படியாக வந்து சரணமடைந்தவனை நம்பவேண்டாமோ?' என்னும் ராமபிரானின் கருத்தையறிந்து, "சரணமடைந்தவனானாலும், சடக்கென நம்பிக்கை வைக் கக்கூடாது"என்பதைக்காரணங்காட்டி நிரூபித்து, அப்படி வைத்தால் வரும் இன்னலைச் சொல்லுகிறார் இந்த ச்லோகத்தாலே.

வ்யா:—(தீக்கருத்தினர் தம்கருத்தை மறைத்து நடையாடுவார்கள்) 'சட புத்திகள்' என்று மூலத்தில் சொன்னது துஷ்டபுத்தியுடையவர்களை. தமோகுணம் நிறைந்திருப்பவர்களாகையாலே அரக்கர் தீயபுத்தியுடைய வர்களாயன்றோ இருப்பது. (தம் கருத்தை மறைத்து) துன்புறுத்த உறுதி பூண்டு வந்த தம் நினைவை மறைத்து. (நடையாடுவார்கள்) நல்லோர்கள் போலே நடையாடுவார்கள். தங்களுடைய தீயநினைவுக்கு எதிரிடையான ஸாதுவேஷத்தை ஏறிட்டுக்கொண்டு நடப்பார்கள். (அன்றோ) பிறரை நலிவதையே இயற்கையாகக்கொண்ட அரக்கர் அன்புடையாரின் உருவிலே நடையாடுவார்கள் என்பதை, மானாய்த்திரிந்த மாரீசனிடமும், முக்கோல் துறவியான ராவணனிடமும் நாம் அனுபவித்தோமன்றோ. இவ்வளவால்

மன்றோ? இவ்வளவால் ஸஹஸா விச்வாஸயோக்யனல்லன் என்னுமிடத்தைச் சொல்லுகிறது. 'ஸ்வதோஷத்தை மறைத்து அநுகூல வேஷத்தோடே தான் வந்தால் அவன் நம்மைச் செய்வதென்?' என்ன; (ப்ரஹரந்தி ச ரந்த்ரேஷு) இடங்களிலே நலியாநிற்பர்கள்; அதாகிறது; தனியிருப்பு, அந்யபரதை, தன்னோடே ஒரு நீராகக் கலக்கை, இவையிறே. (ஸோऽநர்த்தஸ் தத்க்ருதோ பவேத்) அநர்த்தம், ஸஹஸா விச்வஸித்தவனுடைய பலமாகக்கடவது.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 39-வது ச்லோகம்

अर्थानर्थौ विनिश्चित्य व्यवसायं भजेत हि।
गुणतः सङ्ग्रहं कुर्याद्दोषतस्तु विसर्जयेत्॥

அர்த்தாநர்த்தௌ விநிஶ்சித்ய வ்யவஸாயம் பஜேத ஹி।
குணத: ஸங்க்ரஹம் குர்யாத் தோஷதஸ்து விஸர்ஜயேத்॥

பதவுரை:—**அர்த்தாநர்த்தௌ**—நன்மை தீமைகளை, **விநிச்சித்ய**—நன்றாக முடிவுகட்டி, **வ்யவஸாயம்**—(வந்தடைந்தவனைக் கொள்ளுவது விடுவதுவிஷயமான) மனவுறுதியை, **பஜேத ஹி**—(மனிதன்) அடையவேண்டுமன்றோ; **குணத:**—(அவனிடம்) குணமிருந்தால் **ஸங்க்ரஹம் குர்யாத்**—ஏற்றுக்கொள்ளவேண்டியது; **தோஷத: து**—தோஷமிருந்ததாகில், **விஸர்ஜயேத்**—கைவிடவேண்டியது.

விபீஷணன் உடனே நம்பத்தக்கவனல்லன் என்பதைச் சொல்லுகிறார். தன் தீயவினைவை மறைத்து, அன்பன் உருவோடே அவன் வந்தாலுங்கிலும், அவன் நம்மை என்ன செய்துவிடமுடியும்? என்று ராமபிரான் கருத்தாக, உரைக்கிறார்:—(இடம்பார்த்துத் துன்புறுத்துவர்) சமயம் பார்த்து மர்ம ஸ்தானத்திலே அடிப்பார்கள். இடங்களாவன:—தனியேயிருக்குமிடம், வேறொரு செயலில் ஈடுபட்டிருக்கும் ஸமயம், தன்னை நம்பி தன்னோடு வித்தியாசமில்லாமல் கலந்து பரிமாறும் ஸமயம் முதலானவை. (அந்தத் தீங்கு அவன் தன்னாலேயே விளைத்துக்கொண்டதாகும்) வந்தடைந்தவன் செய்த தீங்கு, விசாரியாமல் நம்பினவன் தானே வரவழைத்துக்கொண்ட தீங்காய் முடியும்.

அவதாரிகை:— இவனுடைய த்யாகோபாதானத்துக் குறுப்பான பரீக்ஷாப்ரகாரத்தைச் சொல்லுகிறது.

வ்யா:— (அர்த்தாऽனர்த்தௌ விநிஶ்சித்ய) இவனைப் பரிக்ரஹித்து ஒருகார்யத்திலே நியோகித்தால் இவனால் வரும் ப்ரயோஜனங்களை நிச்சயித்து. (வ்யவஸாயம் பஜேத ஹி) த்யாக பரிக்ரஹவ்யவஸாயத்தைப் பண்ணுவது. இப்படி பரீக்ஷியாதே ஸஹஸைவ த்யாக பரிக்ரஹம் கார்யமல்ல. (ஹி) இது நீதிஶாஸ்த்ர ப்ரஸித்தமன்றோ. நீர் அறியாததொன் றன்றே. (குணத: ஸங்க்ரஹம் குர்யாத் தோஷதஸ்து விஸர் ஜயேத்) நம் கார்யம் முற்றுச்செய்யுந்தனையும் குணவானாகில் பரிக்ரஹிப்பது; நம்கார்யத்தைக் கெடுக்குந்தனையும் குணஹீன னாகில் கடுகவிடுவது. குணங்கண்டுவைத்தே பரிக்ரஹியா தொழிந்தால் இவனாற்கொள்ளும் கார்யம் இழக்கவருமிறே. தோஷங்கண்டு விட்டிலனாகில் ஸ்வநாஶத்தோடே தலைக் கட்டுமிறே. ஆகையாலே, "விஸர்ஜயேத்" என்கிறது.

அவதாரிகை:—விபீஷணனைக் கைவிடுவதா கைக்கொள்வதா என்பதை ஆராய்ந்து முடிவுகட்டுவதற்குரிய வழியைக் காட்டுகிறார் இந்த ச்லோகத்தில்.

வ்யா:—(நன்மை தீமைகளை முடிவுசெய்து) இவனைக் கைக்கொண்டு ஒரு தொழிலிலே ஏவினால் இவனால் வரும் நன்மை தீமைகளை முன்கூட்டியே முடிவுகட்டி. (மனவுறுதி கொள்ளவேண்டும்) இவனைக் கைவிடுவது பற்றியோ, கைக்கொள்வதுபற்றியோ மனவுறுதியைக் கொள்ளவேண்டும். இப்படி ஆராய்ந்து முடிவுக்ட்டவேண்டுமேயொழிய, ஆராயாமல் சடக்கென இவனைக் கைவிடுவதோ, கைக்கொள்வதோ செய்யக்கூடாது. (அன்றோ) இது நீதிசாஸ்திரங்களில் பிரசித்தமன்றோ. நீர் அறியாததொன்று அல்லவே. (குணமிருந்தால் கைக்கொள்வது; தோஷமிருந்தால் கைவிடவேண்டியது) ஆராயும்போது நம் காரியம் முழுவதையும் முடிக்கவல்ல குணமுள்ளவனாகில் நன்கு கைக்கொள்ளவேண்டும்; நம் காரியத்தைக் கெடுக்கவல்ல குணக் கேட்டை உடையவனாகில் விரைவில்விடுவது. குணத்தைக்கண்டு கைக் கொள்ளாதிருந்தால் இவனாலேகொள்ளும் காரியத்தை இழக்கவேண்டிவரும். தோஷங்கண்டு விடவில்லையெனில், தானே அழியவேண்டிவரும். இவை யிரண்டில் தகுதியானதைஅவசியம் செய்தே தீரவேண்டும் என்பதை, ஸங் க்ரஹம் குர்யாத்; விஸர்ஜயேத் என்று உறுதிப்பாட்டோடு கூறுகிறார்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம், 40-வது ச்லோகம்

यदि दोषो महांस्तस्मिन् त्यज्यतामविशङ्कितः ।
गुणान् वापि बहून् ज्ञात्वा सङ्ग्रहः क्रियतां नृप ॥

யதி தோஷோ மஹாம்ஸ்தஸ்மிந் த்யஜ்யதாமவிஶங்கித: ।
குணாந் வாபி பஹூந் ஜ்ஞாத்வா ஸங்க்ரஹ: க்ரியதாம் ந்ருப ॥

பதவுரை:—ந்ருப—அரசனே! தஸ்மிந் — அவனிடத்தில், மஹாந் தோஷ: யதி–பெரிதான குற்றம் இருந்தால், அவிஶங்கித: — ஐயமில்லாமல், த்யஜ்யதாம் — கைவிடப்படட்டும்; பஹூந் குணாந் வா அபி–பல நன்மைகளையாவது, ஜ்ஞாத்வா–(அவனிடம்) அறிந்து, ஸங்க்ரஹ: க்ரியதாம்-(அவனை) ஏற்றுக் கொள்வதைச் செய்யவேண்டும்.

அவதாரிகை:-கட்டடங்க குணவானுயிருத்தல், துஷ்டனுயிருத்தல் செய்வார் ஒருத்தர் இல்லையாகையாலே, த்யாகபரிக்ரஹங்களுக்கு இவை ஹேதுவாகமாட்டாதென்ன; தத்தத் ப்ராசுர்யங்களைக்கொண்டு த்யாகோபாதாநங்களைப்பண்ணத் தட்டில்லை என்கிருர்.

வ்யா:-(ந்ருப) நாடாள இட்டுப்பிறந்த தேவர்க்கு இந்த நீதி நாங்கள் உபதேசிக்கவேணுமோ? தேவர்க்கு ஸம்ப்ரதிபந்நமன்ருே. (தஸ்மிந் தோஷோ மஹாந் யதி அவிஶங்கிதஸ்

அவதாரிகை:–'முழுவதும் நல்லவனுகவோ, தீயவனுகவோ உலகில் ஒருவருமில்லையாகையால், கைக்கொள்வதற்கோ, கைவிடுவதற்கோ இவை காரணமாகமாட்டா' என்று ராமபிரானுக்குக் கருத்தாகக்கொண்டு, குண தோஷங்களின் மிகுதியைக்கொண்டு கைக்கொள்வதோ, கைவிடுவதோ செய்யலாம் என்கிருர்.

வ்யா:–(நிருபனே) குடிகளைப் பாலனம் செய்யும் அரசனே! நாடாளுவதற்கென்றே பிறந்த தேவரீருக்கு இந்த ராஜநீதியை வானரராகிய நாங்கள் உபதேசிக்கவேணுமோ? தங்களுக்கு நன்கு தெரிந்ததொன்றன்ருே இது. (அவனிடம் தோஷம் அதிகமாகில் ஐயமுருமல் கைவிடவேண்டும்)

த்யஜ்யதாம்) தோஷம் மஹானுயிருக்குமாகில், அல்பமான குணம் அத்தாலே அபிபூதமாகையாலே அது ஜீவிக்கமாட்டாது. ஆகையாலே அந்த குணலேசங்கொண்டு ஸ்வீகாரம் கர்த்தவ்யமன்று. கண்ணற்று விடப்படும். (குணாந் வாபி பஹூந் ஜ்ஞாத்வா ஸங்க்ரஹ: க்ரியதாம்) அப்படியே குணம் குவாலாயிருக்குமாகில் அத்தாலே அபிபூதமான அல்ப தோஷம் தலையெடுக்கமாட்டாமையாலே. அந்த தோஷத்தைக் கொண்டு கைவிடக்கடவோமல்லோம். ஸ்வீகாரம் கர்த்தவ்யம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 31-வது ச்லோகம்

शरभस्त्वथ निश्चित्य साध्यं वचनमब्रवीत् ।
क्षिप्रमस्मिन्नरव्याघ्र चारः प्रतिविधीयताम् ॥

ஶரபஸ்த்வத நிஶ்சித்ய ஸாத்யம் வசநமப்ரவீத் ।
க்ஷிப்ரமஸ்மிந் நரவ்யாக்ர சார: ப்ரதிவிதீயதாம் ॥

பதவுரை:—அத–அதற்குப்பின், ஶரப:–சரபர் என்னும் வானரர், ஸாத்யம்—செய்யவேண்டியதை, நிச்சித்ய—முடிவு செய்து, வசநம்—இவ்வார்த்தையை, அப்ரவீத்–உரைத்தார், நரவ்யாக்ர–புருஷர் தலைவரே! அஸ்மிந் — இவனிடத்தில், க்ஷிப்ரம்—விரைவில், சார:—தூதன், ப்ரதிவிதீயதாம்–விடப் படட்டும்.

தோஷம் பெரிதாயிருக்குமாகில் சிறிதான குணம் அந்த தோஷத்திலே அமிழ்ந்து அழிந்துவிடுமாகையாலே நன்மைக்கு ஏதுவாகாது. ஆகையாலே அந்தச் சிறிதுகொண்டு இவனைக் கைக்கொள்ளலாகாது. கருணையில்லாமல் கைவிடவேண்டும். (பல குணங்களையாவது அறிந்து கைக்கொள்ளவேண்டும்) அப்படியே குணம் மிகுதியாயிருந்தால் அதிலே அமிழ்ந்து அழிந்து போகும். சிறியதான தோஷம் தீமை விளைக்கமாட்டாதாகையாலே அந்த தோஷத்தைக்கொண்டு கைவிடுவதும் கூடாது. ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

அவதாரிகை:-இட்படி அங்கதப்பெருமாள் ஸ்வமதத்தை ப்ரதிபாதித்து நின்றவளவிலே, அந்த கோஷ்டியில் த்விதீய ரான ஶரபர் ஸ்வமதத்தை உபபாதிக்கிறுர்.

வ்யா:—(ஶரபஸ்த்வத) பரியட்ட முறையால் அங்கதப் பெருமாளுக்கு அநந்தரம் ப்ராப்தராயிருந்துள்ள ஶரபர் மதம். கீழிற் பக்ஷத்தைக்காட்டில் ஸாஶகதையினுலே வந்த விஶேஷத்தைச் சொல்லுகிறது துஶப்தத்தாலே. (ஸாத்யம் வசநம் நிஶ்சித்யாப்ரவீத்) வசநத்துக்கு ஸாத்யதையாவது- அர்த்தத்தினுடைய கர்த்தும் ஶக்யதை. (ஸாத்யம் நிஶ்சித்ய வசநமப்ரவீத்) செய்யக்கடவ படியை நிஶ்சயித்து வார்த்தை சொன்னுர் என்னவுமாம். (நரவ்யாக்ர)தேவர் ஆண்புலி

அவதாரிகை:-இப்படி அங்கதன் தன் கருத்தை வெளியிட்டு முடித்த வுடன், அந்த வானரகோஷ்டியிலே முதன்மைக்கிரமத்தில் இரண்டாமவ ரான சரபர் தன் கருத்தை இரண்டு ச்லோகங்களாலே விவரிக்கிறுர்.

வ்யா:-(அதற்குப்பின் சரபரோவெனில்) பட்டங்கட்டும் முறையால் அங்கதனுக்கு அடுத்தபடியான முறைமையையுடைய சரபர் அங்கதனுக்கு அடுத்தபடியாகத் தன் கருத்தைத் தெரிவிக்கிறுர். 'சரபஸ்து' [சரபரோ வெனில்] என்றதில் 'து' என்னும் சப்தத்தாலே அங்கதன் மதத்தைக்காட் டிலும் இவருடைய கருத்துக்கு ஒரு சிறப்புண்டு என்று காட்டுகிறுர். 'ஆராய்ச்சிசெய்து குணமிருந்தால் கொள்வது, தோஷமிருந்தால் தள்ளு வது' என்று கூறினுன் அங்கதன். புதிதாக வந்திருக்கும் விபீஷணன் விஷ யத்தில் இப்படிப்பட்ட ஆராய்ச்சியைச்செய்வது எளிதன்று. ஆகையால் இது நடைமுறைக்கு ஒவ்வாது. சரபரோவெனில், ஓர் ஒற்றனை அனுப்பி, இவன் நல்லவனு, தீயவனு என்று ஆராய்ந்து கைக்கொள்வதோ கைவிடு வதோ செய்யலாம் என்கிறுர். இது நடைமுறைக்கு எளிதாயிருப்பது. இச்சிறப்பையே வால்மீகிபகவான் 'து' என்னும் சிறப்பையுணர்த்தும் பதத் தாலே காட்டுகிறுர். (ஸாதிக்கத்தக்க வார்த்தையை முடிவுகட்டிச் சொன் னுர்) ஸாதிக்கத்தக்க வார்த்தையாவது-வார்த்தையால் சொல்லப்படும் பொருள் எளிதில் நிறைவேற்றத்தக்கதாயிருக்கை. அப்படிக் கூட்டாமல், (நடக்கவேண்டியதை-ஸாத்யத்தை-முடிவுகட்டி வார்த்தை சொன்னுர்) என்று கூட்டி, 'சேய்யவேண்டிய முறையை முடிவுகட்டி, (அதற்குத்தக்க) வார்த்தையைச் சொன்னுர்' என்பதாகவும் பொருள்கொள்ளலாம். (ஆண்

யன்றோ? வந்தவனுடைய தண்மை பாராதே நோக்கக்கட வதோ? ஆனால் செய்யக்கடவது என்? என்ன; (அஸ்மிந் சார: ப்ரதிவிதீயதாம்) 'துஷ்டனோ? சுத்தனோ?' என்று ஸம்ஶயாக் ராந்தனான இவன் பக்கலிலே இவனுடைய ஸ்வரூபநிர்ண யார்த்தமாகச் சாரன் விடப்படுவான். (க்ஷிப்ரம்) அநுகூல னாகில் இவனுடைய பரிக்ரஹத்தில் விளம்பியாதபடி சடக் கென விடப்பார்ப்பது.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 42-வது ச்லோகம்

प्रणिधाय हि चारेण यथावत्सूक्ष्मबुद्धिना।
परीक्ष्य च ततः कार्यो यथान्यायं परिग्रहः॥

ப்ரணிதாய ஹி சாரேண யதாவத் ஸூக்ஷ்மபுத்திநா।
பரீக்ஷ்ய ச தத: கார்யோ யதாந்யாயம் பரிக்ரஹ:॥

பதவுரை:—ஸூக்ஷ்மபுத்திநா சாரேண — நுண்ணறிவை யுடைய ஒற்றனைக்கொண்டு, ப்ரணிதாய-(வந்திருப்பவனோடு) சேர்ந்து, யதாவத்—முறைப்படி, பரீக்ஷ்ய ச—சோதிப்பதும் செய்து, தத:—அதற்குப்பின்பே, யதாந்யாயம்—முறைப்படி, பரிக்ரஹ:—அவனைச் சேர்த்துக்கொள்து, கார்ய:—செய்யப் படவேண்டும்.

புலியே!) தேவரீர் ஆண்புலியன்றோ? வந்தவனுடைய தாழ்மை பாராதே தயைபுரியலாமோ? என்று கருத்து. ஆனால் என் செய்வது? என்ன; (இவன் விஷயமாகச் சாரன் விடப்படட்டும்) நல்லவனோ, தீயவனோ என்னும் ஐயத்திற்கு விஷயமான இவனைக் குறித்து, இவனுடைய தன்மையை முடிவுகட்ட ஒற்றனை விடவேண்டும். (விரைவில்) இவன் நல்லவனாயிருந்தாலும், இவனைக் கைக்கொள்வதில் காலதாமதம் கூடா தாகையாலே, விரைவில் ஒற்றனை அனுப்பவேண்டும். இவன் கெட்ட வனாயிருந்தால், இவனால் ஏற்படக்கூடிய தீங்கைத் தவிர்த்துக்கொள்ளு வதற்காக இவனை உடனே கைவிடவேண்டுமாகையாலும், விரைவில் ஒற்றனை அனுப்பவேண்டும். ஆகையால், எவ்விதத்திலும் ஒற்றனை அனுப்பு வதில் காலதாமதம் கூடாது என்று கருத்து.

வ்யா:-(ப்ரணிதாய) இவன் சென்று அவன் வ்ருத்த பரீக்ஷணம் பண்ணலாம்படி அவனோடே ஸங்கதனைப் பரீக்ஷிக்கக்கடவன். "प्रणिधानं समाधानं समाधिश्च समाः स्मृताः" (ப்ராணிதாநம் ஸமாதாநம் ஸமாதிஶ்ச ஸமா: ஸ்ம்ருதா:) என்னக்கடவதிறே. (ஸூக்ஷ்மபுத்திநா சாரேண யதாவத் பரீக்ஷ்ய ச) இங்கிதநிமித்தங்களாலே அவனுடைய குணதோஷங்களை அறியவல்ல புத்திமானன சாரனாலே, அவனுடைய குணதோஷங்களை நிச்சயிப்பதும் செய்து. (ஹி) கண்ணிட்டுக் கண்டாற்போலே சாரமுகத்தாலே அறியவேணுமென்னுமிடம் ராஜாவான உமக்குத் தெரியாதோ? "राजानश्चारचक्षुषः" (ராஜாநஶ் சாரசக்ஷுஷ:) என்னக்கடவதிறே. (யதாந்யாயம் பரிக்ரஹஸ் தத: கார்ய:) 'அநுகூலனாகில் ஶரணாகதனை அங்கீகரிக்கும் ப்ரகாரத்தாலே இவனைப் பரிக்ரஹிக்கை பின்பு கார்யம்; ஸஹஸா கார்யமன்று' என்று கருத்து. "गुणतः सङ्ग्रहं कुर्याद्दोषतस्तु विसर्जयेत्" (குணத: ஸங்க்ரஹம் குர்யாத் தோஷதஸ்து விஸர்ஜயேத்)

வ்யா:—(சேர்ந்து) தூதன் சென்று, அவனுடைய நடத்தையைப் பரிசை செய்யலாம்படி அவனோடு சேர்ந்து, அவனை ஆராயக்கடவன். "ப்ரணிதானம், ஸமாதானம், ஸமாதி என்னும் மூன்று சொற்களும் (ஒற்றனைக்கொண்டு எதிரியோடு கூடுதல் என்னும்) ஒரே பொருளையுடையவை" [ ] என்று சொல்லப்படுகிறதன்றோ. (நுண்ணறிவுடைய ஒற்றனால் உள்ளபடி பரீக்ஷித்து) முகக்குறிகளாலும், மற்ற காரணங்களாலும் வந்திருப்பவனின் குணதோஷங்களை அறியவல்ல ஒற்றனாலே அவனுடைய குணதோஷங்களை நிச்சயிப்பதும் செய்து. (அன்றோ) தன் கண்ணால் கண்டதுபோலே ஒற்றனைக்கொண்டு அறியவேண்டுமென்பது அரசனான உமக்குத் தெரியாதோ? "அரசர்கள் ஒற்றர்களைக் கண்களாகக் கொண்டவர்கள்" [ ] என்று சொல்லப்படுகிறதன்றோ. (அதற்குப் பின் நியாயப்படி ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான்) அநுகூலனென்று தெரிந்தால், சரணமடைந்தவனை ஏற்றுக்கொள்ளும் முறையாலே இவனை ஏற்றுக்கொள்வதை அப்படிப் பரிசை செய்தபின்பு செய்யவேண்டும்; பரிசை செய்யாமல் உடனே செய்துவிடக்கூடாது என்று கருத்து. தனக்கும் அங்கதனுடைய கருத்தே இஷ்டமாயிருந்தபோதிலும், "குணமிருந்தால்

என்று விகல்பியாதே. "பரிக்ரஹ: கர்த்தவ்ய:" என்றது. அவன்பக்கல் பெருமாளுக்குண்டான தண்ணளியைப்பற்ற.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 43-வது ச்லோகம்

जाम्बवांस्त्वथ संप्रेक्ष्य शास्त्रबुद्ध्या विचक्षणः।
वाक्यं विज्ञापयामास गुणवद्दोषवर्जितम्॥

ஜாம்பவாம்ஸ்த்வத ஸம்ப்ரேக்ஷ்ய சாஸ்த்ர புத்த்யா விசக்ஷண:।
வாக்யம் விஜ்ஞாபயாமாஸ குணவத் தோஷவர்ஜிதம்॥

பதவுரை:—அத—அதற்குப்பிறகு, விசக்ஷண:-(நீதிசாஸ்திரத்தில்) வல்லவரான, ஜாம்பவாந் து-ஜாம்பவானென்பவர்-ஶாஸ்த்ரபுத்த்யா-(நீதி) சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட அறிவு கொண்டு, ஸம்ப்ரேக்ஷ்ய-நன்றாக நிரூபித்து, தோஷவர்ஜிதம்-தோஷமற்றதும், குணவத்-குணமுள்ளதுமான, வாக்யம்-வசனத்தை, விஜ்ஞாபயாமாஸ—விண்ணப்பித்தார்.

அவதாரிகை:—அக்கோஷ்டியில் த்ருதீயரான ஜாம்பவ மஹாராஜர் ஸ்வமதத்தை உபந்யஸிக்கிறார்.

வ்யா:-(ஜாம்பவாம்ஸ்த்வத) அத-என்கிற இது, முன்பு போலே. 'து' என்கிறது முன்புத்தைதப்பக்ஷங்கள்

கைக்கொள்வது; தோஷங்கண்டால் கைவிடுவது" [ரா-யு 17-39] என்று அங்கதன் கூறியதுபோலே இரண்டிலொரு பக்ஷமாகச் சொல்லாமல், "விசாரித்தபின்பு, இவனை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று ஒரு பக்ஷம் போலே சொன்னது, விபீஷணனிடம் ஸ்ரீராமபிரானுக்கு ஏற்பட்ட கருணையைக் கண்டபடியாலே.

அவதாரிகை:—வாநரகோஷ்டியில் முதன்மையிலே மூன்றாமவரான ஜாம்பவானென்னும் கரடியரசர் தன் கருத்தை அறிவிக்கிறார்.

வ்யா:—(பிறகு ஜாம்பவானோவெனில்) 'அத' என்றது முன்புபோலே சரபருக்கடுத்தபடி ஜாம்பவானுக்கு அந்த கோஷ்டியில் முதன்மை என்னும் கருத்தைக் காட்டுகிறது. 'து' [எனில்] என்னும் பதம் முன் பக்ஷங்களைப்

போலன்றிக்கே, அவச்யம் பரிக்ரஹணீயன் என்கிற விசே ஷத்தைச் சொல்லுகிறது. (விசக்ஷண:) அங்கதசரபாதிகளும் நீதிசாஸ்த்ரஜ்ஞராயிருக்க, 'விசக்ஷண:' என்கிறது, இவ ருக்கு நீதிசாஸ்த்ரத்திலுண்டான அவகாஹநாதிசயத்தாலே. (சாஸ்த்ரபுத்த்யா ஸம்ப்ரேக்ஷ்ய) பெருமாள் திருவுள்ளத்தைப் பாராதே சாஸ்த்ரபுத்தியினலே அழகிதாக நிரூபித்து. (குண வத்தோஷவர்ஜிதம் வாக்யம்) வாக்யத்துக்கு குணவத்தை யாவது-ஸ்வார்த்தத்தில் பெருமாளுக்கும் ஸந்தேஹமற்றி ருக்கை. தோஷவர்ஜிதமாகையாவது-ஒரு பக்ஷத்தை அநுவர்த் தித்துச்சொல்லாதொழிகை. (விஜ்ஞாபயாமாஸ).

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 44-வது ச்லோகம்

बद्धवैराच्च पापाच्च राक्षसेन्द्राद्विभीषणः।
अदेशकाले संप्राप्तः सर्वथा शङ्क्यतामयम्॥

பத்தவைராச்ச பாபாச்ச ராக்ஷஸேந்த்ராத் விபீஷண:।
அதேசகாலே ஸம்ப்ராப்த: ஸர்வதா சங்க்யதாமயம்॥

பதவுரை:—விபீஷண:-விபீஷணன், பத்தவைராத் ச— விரோதத்தை வரவழைத்துக்கொண்டவனும், பாபாத்ச— வஞ்சகனுமான, ராக்ஷஸேந்த்ராத்-அரக்கர் தலைவனிடமிருந்து,

---

போலன்றிக்கே, வயதின் முதிர்ச்சியாலும் சாஸ்திரஜ்ஞானத்தாலும் இவ னுடைய சொல் அவசியம் கைக்கொள்ளத்தக்கது என்ற பெருமையைச் சொல்லுகிறது. (வல்லவன்) அங்கதன், சரபன் முதலானோரும் நீதிசாஸ் திரமறிந்தவராயினும், இவன் நீதிசாஸ்திரத்தில் ஆழ்ந்த பேரறிவு பெற் றிருக்கையாலே 'வல்லவன்' என்கிறார். (சாஸ்திரபுத்தியாலே நன்கு நிரூ பித்து) ராமபிரானுடைய அன்புக்கண்கொண்டு பாராதே சாஸ்திரத்தின் அறிவுக்கண்கொண்டு பார்த்து. (ஸம்ப்ரேக்ஷ்ய) நன்கு நிரூபித்து. (குண முள்ளதும், தோஷமற்றதுமான வாக்கியத்தை) வாக்கியத்துக்கு குண முடைமையாவது-அதன் பொருளில் ஆதரவில்லாத ஸ்ரீராமபிரானுக்கும் ஐயமேற்படாதபடி தெளிவுடையதாயிருக்கை. தோஷமின்மையாவது-ஒரு பக்ஷத்திலே பக்ஷபாதத்தோடு சொல்லாமல், நடுநிலைநின்று சொல்லுகை. (விண்ணப்பித்தார்) அடக்கத்தோடு சொன்னார்.

அதேஶகாலே—வரத்தகாத தேசத்திலும் காலத்திலும், ஸம்ப்ராப்த:-வந்திருக்கிறுன், அயம் — இவன், ஸர்வதா—எல்லாப்படியாலும், ஶங்க்யதாம்—சங்கிக்கப்படட்டும்.

அவதாரிகை:—அவ்வாக்யம் இன்னதென்கிறது மேல்.

வ்யா;— (பத்தவைராச்ச பாபாச்ச) க்ருத்ரிமஶத்ருவின் பாடுநின்றும்; அதாவது:—ஸர்வலோகஶரண்யரான பெருமாளுடைய திருவுள்ளம் புண்படும்படி தானே சூழ்த்துக் கொண்டவனென்கை. ஶத்ருக்கள் இரண்டுபடிப்பட்டிருப்பர்கள்."सहजः कार्यजश्चैव द्विविधः शत्रुरिष्यते। सहजः स्वकुलोत्पन्न इतरः कार्यजः स्मृतः॥" (ஸஹஜ: கார்யஜச்சைவ த்விவித: ஶத்ருரிஷ்யதே। ஸஹஜ: ஸ்வகுலோத்பந்ந இதர: கார்யஜ: ஸ்ம்ருத:॥) என்று இவன் கார்யஶத்ருவாகையாலே துஷ்ப்ரஸஹனென்று கருத்து. ஸஹஜஶத்ரு செய்யுமவற்றுக்கு ஶத்ருபுத்தி உண்டாகையாலே ஏற்கக்கோலிப்பரிஹரிக்கலாம். (பாபாத்)

அவதாரிகை:—அவர் சொன்ன வாக்கியம் இது என்று காட்டுகிறது "பத்த வைராத்" என்னும் சுலோகத்தாலே.

வ்யா:—(வைரம்பூண்ட எதிரியிடமிருந்து) பாபசப்தம் எதிரியைக் குறிக்கிறது. வஞ்சகசத்ருவிடமிருந்து என்று கருத்து. வைரம் பூண்கையாவது-அனைத்துலகுக்கும் சரணமடையத்தக்கவரான ராமபிரானுடைய திருவுள்ளம் புண்படும்படி தானே விரோதத்தை வரவழைத்துக்கொண்டவன் என்கை. "உடன் பிறந்தவன், செயலால் சத்ருவானவன் என்று சத்துருக்கள் இரண்டுவகைப்படுவர்; தன் குலத்திற்பிறந்து எதிரியாயிருப்பவன் ஸஹஜ (உடன் பிறந்த) சத்துரு; அப்படியல்லாமல், ஒரு காரிய வசத்தால் எதிரியானவன் கார்யஜசத்துரு" [ ] என்கிறபடியே எதிரிகள் இரண்டுவகைப்படுவர்; ராவணன் கார்யஜசத்துரு (செயலால் எதிரி) ஆகையாலே பொறுக்கவொண்ணுதவனுயிருப்பான் என்று கருத்து. உடன்பிறந்த சத்துருவை சத்துருவென்று நாம் அறிவோமாகையாலே, முதலிலேயே ஆலோசித்து அவனுல்வரும் துன்பம் தவிர்க்கலாம்; காரியம் நிகழும்வரை இவனை எதிரியென்று அறியமாட்டோமாகையாலே கார்யஜ சத்ரு ஸஹஜசத்ருவிலும் கொடியவனென்று கருத்து. (பாபியிடமிருந்து) பாபசப்தம் முதலில் சத்ருசப்தபர்யாயமாகக் கொள்ளப்பட்டது. அப்படி

என்று, வஞ்சகனென்றுமாம். (ராக்ஷஸேந்த்ராத்) ஹிம்ஸக ஜாதிக்கு நிர்வாஹகனுயிருக்குமவன் பக்கல் நின்றும். (விபீஷண: அதேசகாலே ஸம்ப்ராப்த:) அவன் அப்படி யானல். இவன் நிர்தோஷனுசுத்தட்டென்? என்னில்: சுத்தன் வரும் தேசமுமன்று; காலமுமன்று. எங்ஙனேயென்னில் இவன் சுத்தனுகில் பிராட்டியைப் பிரிந்த ரிச்யமூககிரியிலே வரவேணும். இவன் வரும் காலமும் அதுவே. அங்ஙனன்றிக்கே, லங்கைக்கு ப்ரத்யாஸந்நமான கடற்கரையிலே வந்தான். அகாலே வருகையாவது:- அடைமதிட்பட்ட தசையிலே நம்மை நலிகைக்கு விரகு பார்த்து வந்தான். பகலிலே வரலாயிருக்க, ராத்ரியிலே வந்தானென்றுமாம். (ஸர்வதா சங்க்யதாமயம்) ஆகையால், உக்தஸர்வப்ரகாரத்தாலும் இவன் சரணுகதனுய் வந்தாலும் சங்கிக்கப்படுவானொருவனென்று கருத்து.

யல்லாமல் 'வஞ்சகன்' என்னும் பொருளிலே பிரயோகிக்கப்பட்டதாகவும் கொள்ளலாம். வஞ்சித்துப் பிராட்டியைக் கவர்ந்தவனென்கை. (அரக்கர் தலைவனிடமிருந்து) பரஹிம்ஸை செய்வதையே தொழிலாகக் கொண்டவர்களுடைய தலைவனுயிருப்பவனிடமிருந்து. (விபீஷணன் தகாத தேசகாலங்களில் வந்துள்ளான்) அவன் அப்படியிருந்தாலும், இவன் தோஷமற்றவனுயிருக்கத் தடையென்ன? எனில்: இவன் வந்திருக்கும் தேசகாலங்கள் குற்றமற்றவன் வரும் தேசகாலங்களன்று. எப்படியெனில்: இவன் நெஞ்சில் கல்மஷமில்லாதவனுகில், ராவணன் பிராட்டியைப் பிரித்தவுடன் ராமபிரானை ரிச்யமூகமலையிலேயே வந்து சரணடைந்திருக்கவேண்டும்; அக்காலத்திலேயே வந்திருக்கவேணும். ராவணன் செய்த தீச்செயல் இன்று தான் இவனுக்குத் தெரிந்ததோ? அவ்விடத்திலே வராமல் இலங்கைக்கு அருகிலுள்ள கடற்கரைக்கு நாம் வந்தபின்பு வந்திருக்கிருன்; தகாத காலத்திலேயும் வந்தான். அதாவது-இலங்கை முற்றுகையிடப்பட்ட நிலையிலே நம்மைத் துன்புறுத்த வழிதேடி வந்திருக்கிருன் என்பது தெளிவு. பகலிலே வராமல் இரவிலே வந்ததைத் தகாத காலத்தில் வந்ததாகச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (எவ்விதத்திலும் இவன் சங்கிக்கப்படட்டும்) இக்காரணங்களால், கீழ்ச்சொன்ன எல்லாவிதத்திலும் இவன் சரணுகதனுய் வந்திருந்தாலும், ஐயமுறத்தக்கவனே என்று கருத்து.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 45-வது ச்லோகம்

ततो मैन्दस्तु संप्रेक्ष्य नयापनयकोविदः।
वाक्यं वचनसंपन्नो बभाषे हेतुमत्तरम्॥

ததோ மைந்தஸ்து ஸம்ப்ரேக்ஷ்ய நயாபநயகோவித:।
வாக்யம் வசநஸம்பந்நோ பபாஷே ஹேதுமத்தரம்॥

பதவுரை:—தத: — அதற்குப்பின், நயாபநயகோவித:— நீதியையும், நீதியல்லாததையும் அறிந்தவனுய், வசநஸம்பந்ந:— வார்த்தை சொல்லவல்லவனுன, மைந்த: து—மைந்தரென்னும் வானரர், ஸம்ப்ரேக்ஷ்ய—நிச்சயித்து, ஹேதுமத்தரம்—நல்ல யுக்திகளோடு கூடியவற்றினுள் சிறந்ததான, வாக்யம்— வாக்கியத்தை, பபாஷே—உரைத்தார்.

அவதாரிகை:—அநந்தரம் மைந்தர் ஸ்வமதத்தை உபந்ய ஸிக்கிருர்.

வ்யா:—(ததோ மைந்தஸ்து)துசப்தத்தாலே, ''ஸர்வதா ஶங்க்யதாமயம்'' என்று விடுமளவன்றிக்கே, அனுகூல ராகக் கூட்டிக்கொண்டு ஆராயக்கடவதான விசேஷத்தைச் சொல்லுகிறது. (நயாபநயகோவித:) ந்யாயாந்யாய நிச்ச யத்தில் பண்டிதனுயிருந்துள்ளவன். (வசநஸம்பந்ந:)

அவதாரிகை:—ஜாம்பவானுக்கு அடுத்தபடி முதன்மையுடையவரான மைந்தர் தன் கருத்தைத் தெரிவிக்கிருர் மூன்று சுலோகங்களாலே.

வ்யா:—(அதற்குப்பின் மைந்தரோவெனில்) 'து' [எனில்] என்ற பதத்தாலே "எவ்விதத்திலும் சங்கிக்கத்தக்கவனே இவன்" [ரா-யு 17-44] என்று ஜாம்பவானைப்போலே கைவிடச்சொல்லாமல், அனுகூலனென்றே கொண்டு இவனை நம்மோடு சேர்த்துக்கொண்டு, இவன் தன்மையை ஆராய்ந்து பார்க்கலாம் என்று சொல்லும் இவருடைய கருத்தின் பெருமையைக் காட்டுகிறது. மற்றவர்களைக் காட்டிலும் ராமபிரானுடைய கருத்துக்கு மிக நெருங்கியிருக்கிறதன்றோ இவருடையது. (நீதி அநீதிகளை அறிந்தவன்) ராஜநீதியெது, ராஜநீதிக்குப் புறம்பானது எது என்பதை முடிவுகட்டுவதிலும் பண்டிதன். வயதுமுதிர்ந்த ஜாம்பவானைக்காட்டிலும் பண்டிதனென்கை. (வார்த்தைவல்லவன்) கேட்பவர்கள் அனைவருடைய

கேட்டாரெல்லார்க்கும் செவிச்செல்லவும், நெஞ்சிலே படும்படியாகவும் நிச்சயித்தபடியே வாய்விடவல்லனுகை. (ஹேதுமத்தரம்) "हेतुमदर्थं च" (ஹேதுமதர்த்யம் ச) என்கிற மஹாராஜர் வார்த்தையிற்காட்டில் உத்க்ருஷ்டமாயிருக்கை. (ஸம்ப்ரேக்ஷ்ய வாக்யம் பபாஷே) ஶங்கநீயனென்று ஆராயும்படி இன்னதென்று நிச்சயித்து வார்த்தை விண்ணப்பம் செய்தார்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 46-வது சுலோகம்

वचनं नाम तस्यैष रावणस्य विभीषणः ।
पृच्छयतां मधुरेणायं शनैर्नरपतीश्वर ॥

வசநம் நாம தஸ்யைஷ ராவணஸ்ய விபீஷண: ।
ப்ருச்யதாம் மதுரேணுயம் ஶனைர்நரபதீச்வர ॥

பதவுரை:—நரபதீச்வர—அரசர்க்கரசனே! ஏஷ:—எதிரிலிருக்கும், அயம் விபீஷண:—இந்த விபீஷணன், தஸ்ய ராவணஸ்ய—அந்த ராவணனுடைய, வசநம்—வாக்கியத்தை, ஶநை:—மெள்ள, மதுரேண—இனிய சொல்லாலே, ப்ருச்யதாம்-நாம—கேட்கப்படலாமே.

அவதாரிகை:—அதில் ஆராய்ந்து கைக்கொள்ள வேணுமென்னுமிடத்தை ஸம்ப்ரதிபத்தி பண்ணி, "ஸர்வதா ஶங்க்யதாமயம்" என்னுதே ஆராயும்படி சொல்லுகிறுர்.

காதிலும் ஏறும்படியாகவும், நெஞ்சிலே படும்படியாகவும், தான் முடிவு கட்டினபடியே வார்த்தை சொல்லவல்லவனுகை. (யுக்தியுடையவற்றில் சிறந்த) "யுக்தியுடையது; விரும்பத்தக்கது" [ரா-யு 17-30] என்று சொல்லப்பட்ட சுக்கிரீவனுடைய வார்த்தையைக் காட்டிலும் சிறந்திருக்கை. (நன்கு நிச்சயித்து வார்த்தை சொன்னுர்) சங்கிக்கத்தக்கவன் என்று ஆராயும் வழி இன்னது என்று நிச்சயித்து வார்த்தை சொன்னுர்.

அவதாரிகை:—இந்த ச்லோகத்திலே, ஆராய்ந்து விபீஷணனை ஏற்றுக்கொள்ள வேணுமென்பதை ஒப்புக்கொண்டு, ஜாம்பவானைப்போலே 'எவ்விதத்திலும் இவன் ஐயமுறத்தக்கவனே' என்னுமல், ஆராயும் வழியைக் காட்டுகிறுர்.

வ்யா:—அதில் அநுகூலனுகக் கூட்டிக்கொண்டு நம்மில் ஒருத்தனுக்கி வார்த்தை கேட்க்வடுக்கும். கேட்கும்படி என்னென்னில் (ஏஷ விபீஷண: தஸ்ய ராவணஸ்ய வசநம் நாம ப்ருச்யதாம்) நமக்கு சத்ருவான ராவணன் நம்பக்கலிலே என்ன சொல்லியிருக்கிருனென்று கேட்பது. (ஶனைர் மதுரேணயம் ப்ருச்யதாம்)கேட்கும்போது இவன் நம்மை அசிராதபடி பதருதே ஆறி இனியபேச்சாலே கேட்கப்படும். (நரபதீச்வர) லோகத்தில் ராஜாக்களுக்கு நிர்வாகரான தேவர்க்கிறே இப்ரகாரத்தாலே கேட்குமிடம் நீதியென்னுமிடம் தெரிவது.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 47-வது ச்லோகம்

भावमस्य तु विज्ञाय तत्त्वतस्त्वं करिष्यसि।
यदि दुष्टो न दुष्टो वा बुद्धिपूर्वं नरर्षभ॥

பாவமஸ்ய து விஜ்ஞாய தத்த்வதஸ் த்வம் கரிஷ்யஸி।
யதி துஷ்டோ ந துஷ்டோ வா புத்திபூர்வம் நரர்ஷப॥

பதவுரை:—நரர்ஷப—*மனிதர்களில் சிறந்தவனே!* துஷ்ட: யதி—*கெட்டவனுகிலுமாம்,* ந துஷ்ட: வா—*நல்லவனுகிலுமாம்,* அஸ்ய-*இவனுடைய,* பாவம்-*நினைவை,* தத்த்வத:-*உள்ளபடி,* விஜ்ஞாய-*அறிந்து,* த்வம்—*நீர்,* புத்திபூர்வம்-*(இவன் தன்மையைப் பற்றிய) அறிவோடு,* கரிஷ்யஸி—*காரியம் செய்வீர்.*

வ்யா:—(கேட்கப்படட்டும்) சரணமடைந்த இவனை அனுகூலனுகவே கொண்டு, நம்மோடே சேர்த்துக்கொண்டு, இவனைச் சில வார்த்தைகள் கேட்பது நல்லது. என்ன வார்த்தை கேட்பது எனில்: (இந்த விபீஷணன், அந்த ராவணனுடைய வார்த்தையைக் கேட்கப்படட்டும்) நமக்கு எதிரியான இராவணன் நம் விஷயமாக என்ன சொல்லியிருக்கிருன் என்று கேட்கலாம். (மெள்ள இனிமையாகக் கேட்கப்படட்டும்) கேட்கும்போது இவன் நம்மை ஸந்தேஹிக்காதபடி, பதருமல் பொறுமையோடு இனிய பேச்சாலே கேட்க வேண்டும். (அரசர் தலைவரே)உலகில் அரசர்க்கெல்லாம் அரசரான தேவரீருக்கல்லவோ எந்த வழியாலே கேட்பது நீதி என்பது தெரியும். அதை நான் விவரித்துச் சொல்ல வேண்டுமோ? என்று கருத்து.

அவதாரிகை:—இப்படியாலே ஆராய்ந்து கைக்கொள்ள வேணும் என்கிறது மேல்.

வ்யா:—(*யதி துஷ்டோ ந துஷ்டோ வா அஸ்ய பாவந்து தத்த்வதோ விஜ்ஞாய த்வம் புத்திபூர்வம் கரிஷ்யஸி*) மஹா ராஜர் நினைவின்படி துஷ்டனாகவுமாம், தேவர் நினைவின் படியே அதுஷ்டனாகவுமாம்; இருவர் நினைவும் அப்ரயோஜகம். நான் சொன்ன ப்ரகாரத்தாலே இவனுடைய நினைவை உள்ளபடி அறிந்து கைக்கொள்ளவேணும். உக்திமாத்ரமே போராது. இவனை இன்னானென்று அறிந்தால், பிறர் கருத் தோடே கூட்டிச் செய்தருளவேண்டா; தேவர் திருவுள் ளத்தின்படியே செய்தருளுகிறது. உக்திமாத்ரமே கொண்டு ஸ்வீகரிக்கை கர்த்தவ்யமன்றென்று கருத்து. (*நரர் ஷப*) எதிர்த்தலையின் உக்தியின் சீர்மையைப் பார்க்க அமை

அவதாரிகை:—'இன்ன வழியாலே ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள வேணும்' என்று, ஆராயும் வழியை விவரிக்கிறார் "பாவமஸ்ய" என்ற சுலோகத்தாலே.

வ்யா:—(தீயவனாகிலும், நல்லோனாகிலும் இவனுடைய நினைவை உள்ளபடி அறிந்து திருவுள்ளத்தின்படி செய்வீர்) சுக்ரீவனுடைய கருத்தின்படி தீயவனாக இருந்தாலும் இருக்கட்டும்; தேவரீருடைய கருத் தின்படி நல்லோனாக இருந்தாலும் இருக்கட்டும். உங்கள் கருத்தினாலே அவன் தீயவனாகவோ நல்லவனாகவோ ஆகிவிடப்போவதில்லை. நான் சொன்ன வழியிலே இவனுடைய கருத்தை உள்ளபடி அறிந்து அதற்குப் பின்தான் ஏற்றுக்கொள்ளவேணும். ஆராயாமல் 'நல்லவன்' என்றோ 'தீயவன்' என்று சொல்லுவதால்மாத்திரம் உண்மையை அறியமுடியாது. ஆராய்ந்து இவன் எப்படிப்பட்டவன் என்றறிந்தால் சுக்கிரீவன் கருத்தைப் பின்பற்றி இவனைக் கைவிடவேண்டுமென்று அவசியமில்லை. தேவரீர் திருவுள்ளத்தின்படி ஏற்றுக்கொள்ளவும் கூடும். 'நான் சரணமடைந்தேன்' என்று விபீஷணன் சொல்லுவது மாத்திரம் கொண்டு ஆராயாமல் ஏற்றுக் கொள்வது சரியன்று என்று கருத்து. (மனிதர்களிற் சிறந்தவனே!) விபீஷணனுடைய சரணவரணச்சொல்லின் பெருமையைப் பார்த்தால்

யுமோ? தேவருடைய சீர்மையைப் பாராதொழிகிறதென்? என்று கருத்து.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 48-வது ச்லோகம்

अथ संस्कारसंपन्नो हनूमान् सचिवोत्तमः।
उवाच वचनं श्लक्ष्णमर्थवन्मधुरं लघु॥

அத ஸம்ஸ்கார ஸம்பந்நோ ஹநூமாந் ஸசிவோத்தம:।
உவாச வசநம் ச்லக்ஷ்ணமர்த்தவந் மதுரம் லகு॥

பதவுரை:—அத:—பிறகு, **ஸம்ஸ்கார ஸம்பந்ந:**—(பதப் பொருள்கள்பற்றிய) ஜ்ஞாநவாஸநைகளை உடையவராய், **ஸசிவோத்தம:**–மந்திரிகளில் சிறந்தவருமான, **ஹநூமாந்**-அநுமன், **ச்லக்ஷ்ணம்**–பொருந்தியிருப்பதும், **அர்த்தவத்**–பொருளுடையதும், **மதுரம்**–இனியதும், **லகு**–சுருக்கமாயிருப்பதுமான, **வசநம்**–வார்த்தையை, **உவாச**–உரைத்தார்.

அவதாரிகை:–இவர்கள் நால்வருடைய கருத்தும் எல்லார்க்கும் இஷ்டமாகையாலே எல்லாரும் பேசாதிருந்தார்களாகையாலே, "வத்யதாம்" என்றவரோடு, ஆராயவேணும் என்றவரோடு வாசியற இவர்கள் வார்த்தைகேட்ட பெருமாள் திருவுள்ளம் தளர்ந்து திருமேனி வெளுக்கிறபடியையும் கண்டு, திருவடி நாயகரத்நமான பெருமாள் உளராக

போதுமோ? நடுநிலைநின்று ஆராயவேண்டிய தேவரீருடைய குணப் பெருமையை ஏன் நோக்கவில்லை? என்று கருத்து.

அவதாரிகை:—அங்கதன், சரபர், ஜாம்பவான், மைந்தர் என்னும் இந்த நாலுபேருடைய கருத்தும் அனைவருக்கும் இஷ்டமாகையாலே எல்லா வானரர்களும் பேசாமலிருந்தார்கள். "கொல்லப்படட்டும்" [ரா-யு17-27] என்ற சுக்கிரீவனோடு ஆராயவேணும் என்ற மைந்தரோடு வாசியில்லாமல் இவர்கள் அனைவருடைய வார்த்தைகளையும் கேட்டார் ஸ்ரீராமபிரான். இவர்களில் ஒருவராவது "சரணமடைந்த விபீஷணனை ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான்" என்று சொல்லவில்லையே என்று நினைத்து ஸ்ரீராமபிரானுடைய திருவுள்ளம் தளர்ந்து, அதனால் திருமேனி வெளுக்கிறதைக் கண்டு,

வேணும் என்று முன்புள்ள வார்த்தைகளைப் பூர்வபக்ஷித்து ஸித்தாந்தத்தை விண்ணப்பம் செய்கிறுன். பெருமாள் திருவுள்ளத்துக்கு அபிமதனுகையாலே திருவடி வார்த்தை யைக் கொண்டாடுகிறுன் ரிஷி முதல் ச்லோகத்தாலே.

வ்யா:—(அத) பூர்வபக்ஷோபந்யாஸாநந்தரமென்னுதல்; ஸித்தாந்தோபக்ரமமென்னுதல். (ஸம்ஸ்கார ஸம்பந்ந:) ஶாஸ்த்ரங்களிலும், ராஜகுலங்களிலும் உண்டான சிரபரி சயத்தாலே ப்ரக்ருத்யாதிகளிலும், ஸந்திவிக்ரஹாதிகளிலும் உண்டான ஜ்ஞாநவாஸனையால் குறைவற்றவன். (ஹநூமாந் ஸசிவோத்தம:) பெருமாளுக்கு அதிஶயத்தை விளைக்கப் புகுகிறவனுகையாலே ராஜகார்ய நிர்வாஹகரில் உத்க்ருஷ்ட

ஹனுமான், உத்தம நாயகனுன ராமன் உயிர்தரிக்கவேண்டுமென்று கருதி முன்பு வானர முதலிகள் சொன்ன வார்த்தைகளைப் பூர்வபக்ஷமாக வைத்து, தன் ஸித்தாந்தத்தைக் கூறுகிறுன் இனி வரப்போகும் பதினெட்டு சுலோகங்களாலே. அவற்றுக்கு அவதாரிகையாய் அமைந்திருக்கும் ''அத ஸம்ஸ்கார'' என்று தொடங்கும் இந்த ச்லோகத்தாலே, ஸ்ரீராம பிரானுடைய திருவுள்ளத்துக்கு அனுமன் மிகவினியவனுகையாலே அனும னுடைய வார்த்தையை வால்மீகி கொண்டாடுகிறுர்.

வ்யா:—(அத-பிறகு) அதசப்தம் பொதுவாகப் 'பிறகு' என்னும் பொருளையுடையது. இங்கு வானரமுதலிகளுடைய பூர்வபக்ஷப்பேச்சு களுக்குப் பிறகு என்று பொருள்படுகிறது. சிலவிடங்களில், ஒரு விஷ யத்தைத் தொடங்கும்போது மங்களசப்தமாக 'அத'சப்தத்தைப் பிரயோ கிப்பதுமுண்டு. அம்முறையிலே, ஸித்தாந்தத்தைத் தொடங்குவதற்காக மங்களசப்தத்தைப் பிரயோகிப்பதாகவும் கொள்ளலாம். (ஸம்ஸ்காரத்தோடு கூடியவன்) ஸம்ஸ்காரமாவது வாஸனை; இங்கு ஜ்ஞாநவாஸனையைச் சொல்லுகிறது. சூரியனிடமிருந்து வியாகரணம் முதலான சாஸ்திரங்களைக் கற்றுத்தேர்ந்ததாலும், வானரராஜகுலத்திலே நெடுநாள் பழகியதாலும் சொற்களின் ப்ரக்ருதிப்ரத்யயங்கள் முதலானவற்றிலும்,ஸந்தி(ஸமாதானம்), விக்ரஹம் (யுத்தம்) முதலான ராஜநீதிகளிலும் உண்டான ஜ்ஞாநவாஸனை களில் குறைவில்லாமலிருப்பவன். (மந்திரிகளிற் சிறந்த அனுமன்) ஸ்ரீராம பிரானை உயிர்தரிக்கச்செய்து அவருக்குப் பலவிதத்திலும் பெருமையை உண்டாக்கப்போகிறவனுகையாலே ராஜ்யகாரியங்களை நிர்வாகம்செய்யும்

தமன். (ஶ்லக்ஷ்ணம்) பூர்வாபரங்கள் ஸங்கதமாயிருக்கை. ஶப்தத்துக்கும் அர்த்தத்துக்கும் உண்டான ஸங்கதியைச் சொல்லிற்றாகவுமாம். (அர்த்தவத்) ஶப்தத்தளவுமன்றிக்கே, அர்த்தமிருக்கை. விலக்ஷணமான அர்த்தத்தை உடையதென்றுமாம். ப்ரயோஜநபஹுளமாயிருக்கும் என்னவுமாம். அதாவது—பெருமாளைப் பெறுகையும், ஸ்ரீவிபீஷணாழ்வானைப் பெறுகையும், மஹாராஜப்ரப்ருதிகள் கலக்கம் தீருகையும். (மதுரம்) நிரர்த்தகமாயிருந்ததேயாகிலும் பாசுரம் இனிதாயிருக்கை. (லகு) அர்த்தம் ஸுக்ரஹமாம்படி பாசுரம் பரப்பற்றிருக்கை. (வசநமுவாச) இவனுடைய வார்த்தை அநுஷ்டானபர்யந்தமாகாதபோது அநர்த்தமாகையாலே, "மநுவசநம்" என்றாற்போலேயிருக்கிற வார்த்தையைச் சொன்னான். எல்லாவிடத்திலும் இப்படியேயிறே இவனுடைய உக்திசாதுர்யம். "संस्कारक्रमसंपन्नामद्रुतामविलम्बिताम्। उच्चारयति

மந்திரிகளில் மிகச்சிறந்தவன். (பொருந்தியிருப்பது) முன் வாக்கியமும் பின் வாக்கியமும் பொருந்தியிருக்கை. சொல்லுக்கும் பொருளுக்கும் உண்டான பொருத்தத்தைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (அர்த்தமுடையது) வெறும் சொல்லாயிராமல் பொருளுடைய சொல்லாயிருக்கை. ப்ரசம்ஸார்த்தத்திலே 'மதுப்'பாய், சிறந்த பொருளையுடையது என்றுமாம். பூமார்த்தத்திலே மதுப்பாய், அர்த்தசப்தம் புருஷார்த்தத்தைக் குறிப்பதாகக் கொண்டால் 'பல பயன்களையுடைய வாக்கியம்' என்று பொருள்படுகிறது. இந்த வாக்கியத்திற்குப் பல பயன்களாவன-ஸ்ரீராமபிரானுக்கு உயிரூட்டுகையாலே அவரைப்பெறுகையும், ஸ்ரீவிபீஷணாழ்வானோடு கூட்டுகையாலே அவரைப்பெறுவதும், சுக்கிரீவன் முதலானோர் கலக்கம் தீருகையும். (இனியது) பொருளற்றதாயினும், கேட்க இனிதாயிருப்பது. (எளியது) எளிதில் பொருளறியலாம்படி சுருக்கமாயிருப்பது. (வாக்கியத்தைச் சொன்னார்) 'வசநம்' என்று விசேஷ்யம் அர்த்தாத் கிடைக்கக்கூடியதாயிருந்தும் தனித்துச் சொல்லுவதால், இவனுடைய வார்த்தையின்படி நடக்காவிடில் பெருந்தீங்கு விளையுமாகையாலே, 'மநுவசனம்' என்பதுபோலே இவனுடைய வார்த்தையின் பெருமையைக் காட்டுகிறது. அப்படிப்பட்ட வார்த்தையைச் சொன்னான். எல்லாவிடங்களிலும் இப்படியேயன்றோ இவனுடைய வாக்குவன்மைப்பெருமையிருக்கிறது. "ஜ்ஞானவாஸனை, முறை ஆகியவற்றோடு கூடியதும், மிகுந்த வேகமில்லாததும், மிகவும்

कल्याणीं वाचं हृदयहर्षिणीं ॥" (ஸம்ஸ்காரக்ரம ஸம்பந்நாம் அத்ருதாமவிளம்பிதாம் । உச்சாரயதி கல்யாணீம் வாசம் ஹ்ரு தயஹர்ஷிணீம் ॥)

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 49-வது ச்லோகம்

न भवन्तं मतिश्रेष्ठं समर्थं वदतां वरम् ।
अतिशाययितुं शक्तो बृहस्पतिरपि ब्रुवन् ॥

ந பவந்தம் மதிச்ரேஷ்டம் ஸமர்த்தம் வததாம் வரம் ।
அதிஶாயயிதும் ஶக்தோ ப்ருஹஸ்பதிரபி ப்ருவந் ॥

பதவுரை:—மதிச்ரேஷ்டம்-அறிவிற்சிறந்தவராய், ஸமர்த்தம்-வல்லமையுடையவராய், வததாம் வரம்-வாக்குவன்மையுள்ளாரில் சிறந்தவரான, பவந்தம்—தேவரீரை, ப்ருவந்—வார்த்தைசொல்லி, அதிசாயயிதும்-வெல்லுவதற்கு, ப்ருஹஸ்பதி: அபி-ப்ருஹஸ்பதியும், ந சக்த:-வல்லமையுள்ளவனல்லன்.

அவதாரிகை:—திருவடி, பெருமாளுடைய நினைவே தனக்கு ஸித்தாந்தமாகையாலே, உம்முடைய நினைவை ஒருவராலும் நிர்ணயிக்கவொண்ணாதென்று பெருமாளைக் கொண்டாடுகிறான். எதுக்காகவென்னில்: நம் நினைவேற்கும் கருத்தனைப் பெற்றோமாகாதே என்று பெருமாள் ப்ரீதராகைக்காக.

தாமதமில்லாததும், மங்களமானதும், நெஞ்சை மகிழ்விப்பதுமான வார்த்தையை இவன் உச்சரிக்கிறான்" [ரா-கி3-32] என்று முதல்முதலில் சந்திக்கும்போதே, ஸ்ரீராமபிரான் அனுமனின் வார்த்தையை இப்படிக் கொண்டாடினானன்றோ.

அவதாரிகை:— ஸ்ரீராமபிரானுடைய கருத்தே தன் முடிவாகையால், 'உம்முடைய கருத்தை ஒருவராலும் வார்த்தைகளால் வெல்லமுடியாது' என்று ஸ்ரீராமனைக் கொண்டாடுகிறான் அனுமன் முதன் முதலில். எதற்காகக் கொண்டாடுகிறானெனில்: 'நம் நினைவுக்குத் தகுந்த நினைவையுடையவனை ஒருவாறு பெற்றோமன்றோ' என்று ஸ்ரீராமன் கலக்கம் தீர்ந்து முகம் மலருவதற்காகக் கொண்டாடுகிறான்.

வ்யா:-(மதிச்ரேஷ்டம்) த்யாஜ்யோபாதேயங்களென்ன, கர்த்தவ்யாகர்த்தவ்யமென்ன. இவற்றினுடைய நிஷ்கர்ஷத்தில் ப்ரஶஸ்ததமராயிருக்கை. (ஸமர்த்தம்) நிர்ணயித்தபடியேசெய்து தலைக்கட்டும் ஸாமர்த்யத்தை உடையவராயிருக்கை. (வததாம் வரம்) செய்யுமிடத்தில் இசையாதாரும் இசையும்படி நெஞ்சில்பட வார்த்தைசொல்ல வல்லவர்களில் தலைவராயிருக்கை. (பவந்தம்) அவ்வளவேயோ? ப்ரக்ருதமான அர்த்தங்களுக்கு உபயோகியாய் அநுக்தமாயிருந்துள்ள கல்யாணகுணங்களால் பரிபூர்ணரல்லீரோ? (அதிஶாயயிதும் ந சக்த: ப்ருஹஸ்பதிரபி ப்ருவந்) அர்த்தஜாதத்தை வ்யக்தமாய்ச் சொல்லுகிற ப்ருஹஸ்பதியும் தேவரை அதிஶயிக்கும்படி வார்த்தை சொல்லுவானுன ஶக்தனல்லன். அதிஶயிக்கையாவது-நின்ற நிலையைப்பேர்க்கை. அஸ்மதாதிகள் அஶக்தரென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தமென்று கருத்து.

வ்யா:— (அறிவிற்சிறந்தவரை) தள்ளத்தகுந்ததையும், கொள்ளத்தகுந்ததையும் செய்யத்தகுந்ததையும் தகாததையும் முடிவுகட்டுவதில் மிகச்சிறந்தவராயிருக்கிறவரை. (வல்லவரை) முடிவுகட்டியபடியே செய்து முடிக்கும் வல்லமையுடையவராயிருக்கிறபடி. (வாக்குவன்மையுள்ளவர்களில் சிறந்தவரை) காரியம் செய்யும்போது, அதற்கு முதலில் இசையாதவர்களும் இசையும்படி, நெஞ்சிலே படும்படியாக வார்த்தைசொல்ல வல்லவர்களில் தலைவராயிருக்கை. (தேவரீரை) இவை மாத்திரமோ? இந்த தேசகாலஸந்தர்ப்பாதிகளுக்குப் பொருந்திய அர்த்தங்களுக்கு உபயோகப்படுமவையும், முன் சொல்லப்படாதவையுமான மற்ற கல்யாணகுணங்களாலும் நிறைந்திருப்பவரன்றோ தேவரீர் என்று கருத்து. (பிருஹஸ்பதியும் வார்த்தை சொல்லி வெல்ல சக்தியுடையவனல்லன்) சொல்லவேண்டிய அர்த்தங்களைத் தெளிவாகச் சொல்லும் தேவகுருவான பிருஹஸ்பதியும் தேவரீரை வெல்லலாம்படி வார்த்தை சொல்லவல்ல சக்தியை உடையவனல்லன். அதிசயிக்கையாவது வெல்லுகை; அதாவது:- எதிரியின் யுக்திகளைத் தள்ளி, அவன் நின்ற நிலையைப் பேர்த்துவிடுகை, பிருஹஸ்பதியாலேயே உம்மைப்பேச்சில் வெல்லமுடியாது என்றதால், நம்மைப்போன்றவர்களால் வெல்லமுடியாது என்பது கிம்புநர்ந்யாயஸித்தம் என்று கருத்து.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 50-வது ச்லோகம்

न वादान्नापि सङ्घर्षान्नाधिक्यान्न च कामतः।
वक्ष्यामि वचनं राजन् यथार्थं रामगौरवात्॥

ந வாதாந்நாபி ஸங்கர்ஷாந்நாதிக்யாந்ந ச காமத:।
வக்ஷ்யாமி வசநம் ராஜந் யதார்த்தம் ராமகௌரவாத்॥

பதவுரை:-ராஜந்-(சுக்கிரீவ) மஹாராஜாவே!, வாதாத்-வாதத்தில் வல்லமை வெளிப்படவேண்டுமென்று, ந (வக்ஷ்யாமி)-சொல்லுகிறேனல்லேன்; ஸங்கர்ஷாத் அபி ந(வக்ஷ்யாமி)-பொறுமையினாலும் சொல்லுகிறேனல்லேன்; ஆதிக்யாத் ந (வக்ஷ்யாமி)-பெரியதனத்தால் சொல்லப்போகிறேனல்லேன். காமத: ச ந (வக்ஷ்யாமி)-பக்ஷபாதத்தினாலும் பேசுகிறேனல்லேன், ராமகௌரவாத்-ஸ்ரீராமபிரானுடைய பெருமையைப் பார்த்து, யதார்த்தம்-உள்ளபடியான, வசநம்-வார்த்தையை, வக்ஷ்யாமி—சொல்லப்போகிறேன்.

அவதாரிகை:—ஸ்வஸித்தாந்தமான விபீஷணசுத்தியை ப்ரதிபாதிக்கைக்காகப் பூர்வோக்த தூஷணத்துக்குக் காரணத்தை மஹாராஜரைக் குறித்துச் சொல்லுகிறான்.

வ்யா:-(ந வாதாத்) என்னுடைய வாதஸாமர்த்ய ப்ரகாசநார்த்தமாக விஜிகீஷுதயா சொல்லுகிறேனல்லேன். (நாபி ஸங்கர்ஷாத்) நம் ஸகாசத்தில் சிலர் வார்த்தை சொல்லுகையாவதென்? என்கிற பொறாமையாலே சொல்லு

அவதாரிகை:— தன் முடிவான விபீஷணனின் சுத்தியை விளக்குவதற்காக, முன் சொல்லப்பட்ட பக்ஷங்களை தூஷிப்பதற்குக் காரணத்தை சுக்கிரீவனைக் குறித்துச் சொல்லுகிறான் அனுமன் "ந வாதாத்" என்னும் சுலோகத்திலே

வ்யா:—(வாதத்தில் வல்லமையாலன்று) என்னுடைய வாதவல்லமையை வெளிப்படுத்துவதற்காக, வாதத்தில் வெற்றிகொள்ள விரும்புமவன் வார்த்தையாக நான் இதைச் சொல்லவில்லை. (பொறாமையாலுமன்று) நாமிருக்கும்போது வேறு சிலர் சில வார்த்தைகளைச் சொல்லுவதா? என்கிற பொறாமையாலும் நான் இதைச் சொல்லவில்லை. (பெருமையா

கிறேனல்லேன். (நாதிக்யாத்) நான் எல்லாரிலும் அதிகனய் என் வார்த்தையாலே கார்யம் தலைக்கட்டவேணுமென்று சொல்லுகிறேனல்லேன். (ந ச காமத:) வருகிறவன் பக்கல் ஸ்நேஹத்தினலே சொல்லுகிறேனல்லேன். விபீஷணன் பக்கல் எனக்கொரு பக்ஷபாதமுண்டாய், அத்தாலே இது செய்தருளவேணுமென்று சொல்லுகிறேனல்லேன். அவன்பக்கல் ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசித்துச் சொல்லுகிறேனல்லேன். தோன்றிற்றுச் சொல்லுகிறேனல்லேன் என்னவுமாம். தான் இத்தனை பரிஹரித்துச் சொல்லவேண்டுகிறதற்கு ஹேது சொல்லுகிறது: (ராஜந்) ராஜஹ்ருதயத்துக்கு விருத்தமான கார்யம் சொல்லுமிடத்தில் இத்தனை பரிஹரித்துச் சொல்லவேணுமிறே. (யதார்த்தம் வசநம் வக்ஷ்யாமி) யதாவஸ்திதார்த்தமான வார்த்தையைச் சொல்லுகிறேன். முதலிகளுடைய மதங்கள் தோஷயுக்தமாகையாலே, அதிருந்தபடி சொல்லுகிறேனென்னுதல்; விபீஷணாழ்வான் சுத்தனயிருக்கையாலே, சுத்தியை உள்ளபடி சொல்லுகிறேன் என்னுதல்.

லன்று) நான் அனைவரிலும் பெரியவனுய், என் வார்த்தையாலே காரியம் முடியவேணும் என்னும் எண்ணத்தாலேயும் சொல்லவில்லை' (காதலாலுமன்று) வருகிற விபீஷணனிடத்தில் அன்பாலும் சொல்லவில்லை; அல்லது அவனிடம் எனக்கு ஒரு பக்ஷபாதமுண்டாய் அதனுலும் அவனைக் கைக்கொள்ளவேணுமென்று சொல்லவில்லை. காமசப்தம் அன்பையும், பக்ஷபாதத்தையும் காட்டும். அன்றிக்கே காமசப்தம் விரும்பப்படும் பிரயோஜனத்தையும் குறிக்குமாகையாலே விபீஷணனிடமிருந்து ஒரு பயனைக் கருதிச் சொல்லவில்லை என்றும் கொள்ளலாம். காமசப்தம் இஷ்டப்படி காரியம் செய்வதைக் குறிக்குமாகையால் "ஏதோ எனக்குத் தோன்றியதை என் இஷ்டப்படி சொல்லவில்லை" என்றும் பொருள் கொள்ளலாம். 'அப்படியன்று, இப்படியன்று' என்று பல முறைகளை விலக்கி வார்த்தை சொல்லுவதற்குக் காரணம் என்னவென்பதைச் சொல்லுகிறது (அரசனே) என்று. அரசனின் கருத்துக்கு மாறுபட்ட செயலைச் சொல்லும்போது தகாதமுறைகள் அனைத்தையும் விலக்கிச் சொல்லவேண்டுமன்றே. (உள்ளபடியான வார்த்தையைச் சொல்லுகிறேன்.) மற்ற வானரர்களுடைய முடிவுகள் தோஷமுடையனவாகையாலே அதை உள்ளபடி சொல்லுகிறேன் என்பதாகக் கொள்ளலாம்; விபீஷணாழ்வான் குற்றமற்றவனுயிருக்கையாலே அவனுடைய சுத்தியை உள்ளபடி சொல்லுகிறேன் என்பதாகவும் கொள்ளலாம்.

ஸ்வாமி ஹ்ருதயத்துக்கு ப்ரதிகூலமாகில் யதார்த்தந் தான்சொல்லக்கடவதோ? என்னில்: (ராமகௌரவாத்) பெருமாளுடைய சீர்மையாலே சொல்லுகிறேன். நான் அர்த்தமிருந்தபடி சொல்லிற்றிலேனாகில் பெருமாளை உமக்குக் கிடையாதென்னுமத்தாலே சொல்லுகிறேனென்று கருத்து.

* இதற்குத் தனிச்லோக வ்யாக்யானம்.

அவதாரிகை:–விபீஷணப்பெருமாள் ராவணனை விட்டுப் பெருமாள் திருவடிகளிலே ஶரணம் புகுகிற இத்தைக் கேட்ட மஹாராஜர், "ப்ரதிகூலனான இவன் விப்ரலம்பிக்கிறான், வத்யன், பத்யன்" என்று வார்த்தை சொல்ல, "நமக்கு × மூப்பரான இவர் நினைவு இதுவாயிராநின்றது; மேலே செய்யும்படியென்?" என்று ஸங்கடப்பட்டு, "இத்திரளில் நமக்காவாருண்டோ?" என்று, "ஸுஹ்ருதாஹ்யர்த்தக்ருச்ச்ரேஷு யுக்தம் புத்திமதா ஸதா। ஸமர்த்தே

ஸ்வாமியான சுக்கிரீவனுடைய கருத்துக்கு மாறுபட்டதாகில், உண்மையைக்கூடச் சொல்லலாமோ? என்னில்: (ராமனின் சீர்மையாலே சொல்லுகிறேன்) ராமனுடைய சீர்மையைப் பார்த்துச்சொல்லுகிறேன். நான் உள்ளதை உள்ளபடி சொல்லாவிட்டில் நீங்கள் அனைவரும் ஸ்ரீராமபிரானையே இழக்கநேரிடும் என்பதாலே சொல்லுகிறேன்என்று கருத்து.

தனிச்லோக வ்யாக்யான விவரணம்.

அவதாரிகை:— விபீஷணன் ராவணனை விட்டு ஸ்ரீராமபிரானைச் சரணம் புகுந்ததைக் கேட்ட சுக்கிரீவன், "எதிரியான இவன் வஞ்சிக்கிறான்; இவன் கொல்லத்தக்கவன், அல்லது இவனைக் கட்டிப்போடவாவது வேண்டும்" என்று இவ்வண்ணமாக வார்த்தை சொல்ல, "நமக்குத் × தலைவரான இவர் நினைவு இப்படியிருந்தது; இனி விபீஷணனைக் கைக்கொள்ள என்ன வழி?" என்று துன்புற்று, "இனி நமக்குப் பக்கபலமாயிருப்பாருண்டோ?" என்று நினைத்து, "நண்பன் எண்ணியபடியே எண்ணும் நெஞ்சையுடையவனாய், விருப்பு வெறுப்பற்ற நல்லறிவையுடைய நல்லோனாய், எண்ணியதுபோல் செய்துமுடிக்கவல்லவனாய், நின்று நிலைக்கும்

---

* இது தெலுங்குப் பதிப்பில் மாத்திரம் காண்கிறது.

× "ஸுக்ரீவம் நாதமிச்சதி" [ரா-கி 4-18] என்றதை நினைப்பது.

நாபி ஸந்தேஷ்டும் ஶாச்வதீம் பூதிமிச்சதா'' என்று. ''பத்தும் பத்தாக எண்ணவல்லனாய், ராகத்வேஷங்களின்றியிலே ஸமீசநனாய், அறுதியிட்டாற்போலே செய்து முடிக்கவல்லனாய், நின்று நிலைக்கும் நன்மைவேணும் என்று இருக்குமவனுமான பந்துவால், கார்யஸங்கடங்களில் இன்னபடி செய்யத்தகும் என்று சொல்லுகை ப்ராப்தமன்றோ'' என்று ஸாமாந்யத்திலே பெருமாள் அருளிச்செய்ய, ''**அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித் த்ரிஷு லோகேஷு ராகவ। ஆத்மாநம் பூஜயந் ராம ப்ருச்சஸ்யஸ்மாந் ஸுஹ்ருத்தயா**'' என்று, ''தேவர் திருவுள்ளத்தில் கிடவாததுண்டோ? ஒன்றுமறியாத அடியோங்களைக் கேட்டருளுகிறது, எங்களைத் திருவுள்ளம் பற்றின நன்மையிறே; இதெல்லாங்கூட, 'பெருமாள் நீர்மையிருந்தபடியென்?' என்று நாட்டார் தேவரீரைக் கொண்டாடுகைக்கிறே' என்று விண்ணப்பம் செய்து ச்லாகித்து, பின்னையும் சோறிட்டு வளர்த்த மஹாராஜருக்கு ஆகமாட்டாதே, அவர் தமக்குங்கூட முதலியாரான பெருமாளுக்கு ஆகவும் மாட்டாதே அவிருத்தமாக, 'பரீக்ஷித்துக் கொள்ளவேணும்' என்பாரும், 'ஸர்வதா ஶங்க

நன்மையை நண்பன் அடையவேணும் என்று விரும்புமவனான உறுதுணைவன், செய்யத்தக்கதுபற்றி. இடையூறு விளையும்போது, 'இப்படியிப்படி செய்யவேண்டும்' என்று உபதேசிக்கவேண்டியது அவசியமன்றோ'' [ரா-யு 17-31] என்று பொதுவாகத் தன் ஸங்கடத்தைத் தவிர்க்கவேண்டும் என்று வானரர்களைக் குறித்து அருளிச்செய்ய, ''மூவுலகிலும் தேவரீர் அறியாதது ஒன்றுண்டோ? ஒன்றுமறியாத வானரங்களாகிற அடியோங்களைக் கேட்டருளுவது, எங்கள் பக்கல் (ஸுஹ்ருத்தான) தேவரீர்க்குள்ள பேரன்பையே காட்டும்; இப்படிக் கேட்பதுங்கூட, ''ராமபிரானுடைய ஸௌலப்யஸௌசீல்யாதிகளிருந்தபடியென்!'' என்று உலகினர் தேவரீரைக் கொண்டாடுவதிலேயே முடியும்'' [ரா-யு 17-33] என்று வானரர்கள் விண்ணப்பம் செய்து புகழ்ந்து, அதற்குப்பின் தங்களுக்குச் சோறிட்டு வளர்த்த சுக்கிரீவனுக்கும் விரோதியாகமுடியாமல், அவருக்கும் தலைவரான ராமபிரானுக்கும் விரோதியாகமுடியாமல், இருவருக்கும் விரோதம் வராதபடி, ''பரீக்ஷித்துக் கைக்கொள்ளவேணும்'' [17-42; சரபர்] என்பாரும், ''எப்படியாலும் ஐயமுறத்தக்கவனே'' [17-37 அங்கதன்; 17-44

னீயன்' என்பாரும், 'ஸஹஸா விச்வாஸயோக்யன் அன்று' என்பாருமாய்க்கொண்டு அங்கத ஶரப ஜாம்பவத் ப்ரப்ருதிகள் ஸ்வஸ்வமதமாகச் சொன்ன வார்த்தையைக்கேட்ட திருவடி, "இவர்கள் நினைவு நினைவாகப் பெருமாளை இழக்கவாகாதே புகுகிறது" என்று பயப்பட்டு, யுக்திகளாலே இவர்கள் பக்ஷங்களை அழித்து, பெருமாள் திருவுள்ளத்துக்கு அநுகுணமாகவும், ஶாஸ்த்ரோசிதமாகவும் அவஸரோசிதமாகவும் வார்த்தை சொல்லக் கோலி, முதலிகள் சிவட்கென்னுதபடி அவையடக்கமாக, "ஹேத்வந்தரங்களாலே சொல்லுகிறவனல்லேன்; பெருமாள்பக்கல் ஆதரத்தாலும் ராஜகார்யந்தான் இதுவாகையாலும் அர்த்தஸ்திதியினுடைய இனிமையாலும் நானும் ஒருவார்த்தை சொல்லப்புகுகிறேன்' என்கிறான்.

வ்யா:—(ந வாதாந் நாபி ஸங்கர்ஷாந் நாதிக்யாநந்ந ச காமத:) 'நாட்டார் ஒரு ஸதஸ்ஸுக்களிலேயிருந்தால் ஒருத்

ஜாம்பவான்] என்பாரும், "விரைவில் நம்பிவிடக்கூடாது" [17-37, அங்கதன்] என்பாருமாய்க்கொண்டு அங்கதன், சரபன், ஜாம்பவான் முதலானோர், தம்தம் முடிவாகச் சொன்ன சொற்களைக்கேட்ட அனுமன், "இவர்கள் நினைவுகளை எண்ணி ஸ்ரீராமபிரான் இவர்களை மீறவும்முடியாமல், விபீஷணனைக் கைவிடவும் முடியாமல் உயிரைவிட்டுவிடுவரோ?" என்று பயப்பட்டு, நல்ல யுக்திகளைச்சொல்லி இவர்கள் பக்ஷங்களைத் தள்ளி, ராமபிரான் திருவுள்ளக்கருத்துக்கும், சாஸ்திரநெறிக்கும் தக்கபடியாகவும், ஸமயோசிதமாகவும் வார்த்தைசொல்ல முற்பட்டு, சுக்கிரீவன், அங்கதன் முதலான வானரமுதலிகள் கோபங்கொண்டு முகஞ்சிவக்காதபடி அவையடக்கமாக, "மற்ற காரணங்களாலே நான் இது சொல்லவில்லை; ராமபிரானிடமுள்ள அன்பினாலும், அரசரான சுக்கிரீவனின் காரியம் இதுவேயாகையாலும், நான் சொல்லும் அர்த்தத்தின் இனிமையாலும் நானும் ஒருவார்த்தை சொல்லப்போகிறேன்'' என்கிறான் "ந வாதாத்" என்று தொடங்கும் இந்த ச்லோகத்திலே.

வ்யா:— (வாதத்தாலுமல்ல; பக்ஷபாதத்தாலுமல்ல; பெருமையாலுமல்ல; இஷ்டப்படியுமல்ல) "உலகினர் ஒரு சபையிலிருந்தால், ஒருவரையொருவர் வெற்றிகொள்ள வார்த்தை சொல்லுவது இந்தக் காரணங்

நாபி ஸந்தேஷ்டும் ஶாச்வதீம் பூதிமிச்சதா'' என்று, ''பத்தும் பத்தாக எண்ணவல்லஞய், ராகத்வேஷங்களின்றியிலே ஸமீசநனுய், அறுதியிட்டாற்போலே செய்து முடிக்கவல்லனுய், நின்று நிலக்கும் நன்மைவேணும் என்று இருக்குமவனுமான பந்துவால், கார்யஸங்கடங்களில் இன்னபடி செய்யத்தகும் என்று சொல்லுகை ப்ராப்தமன்றே'' என்று ஸாமாந்யத்திலே பெருமாள் அருளிச்செய்ய, ''அஜ்ஞாதம் நாஸ்தி தே கிஞ்சித் த்ரிஷு லோகேஷு ராகவ। ஆத்மாநம் பூஜயந் ராம ப்ருச்சஸ்யஸ்மாந் ஸுஹ்ருத்தயா'' என்று, ''தேவர் திருவுள்ளத்தில் கிடவாததுண்டோ?ஒன்றுமறியாத அடியோங்களைக் கேட்டருளுகிறது, எங்களைத் திருவுள்ளம் பற்றின நன்மையிறே; இதெல்லாங்கூட, 'பெருமாள் நீர்மையிருந்தபடியென்?' என்று நாட்டார் தேவரீரைக் கொண்டாடுகைக்கிறே'' என்று விண்ணப்பம் செய்து ச்லாகித்து, பின்னையும் சோறிட்டு வளர்த்த மஹாராஜருக்கு ஆகமாட்டாதே, அவர் தமக்குங்கூட முதலியாரான பெருமாளுக்கு ஆகவும் மாட்டாதே அவிருத்தமாக, 'பரீக்ஷித்துக் கொள்ளவேணும்' என்பாரும், 'ஸர்வதா ஶங்க

நன்மையை நண்பன் அடையவேணும் என்று விரும்புமவனுன உறுதுணைவன், செய்யத்தக்கதுபற்றி. இடையூறு விளையும்போது, 'இப்படியிப்படி செய்யவேண்டும்' என்று உபதேசிக்கவேண்டியது அவசியமன்றோ'' [ரா-யு 17-31] என்று பொதுவாகத் தன் ஸங்கடத்தைத் தவிர்க்கவேண்டும் என்று வானரர்களைக் குறித்து அருளிச்செய்ய, ''மூவுலகிலும் தேவரீர் அறியாதது ஒன்றுண்டோ? ஒன்றுமறியாத வானரங்களாகிற அடியோங்களைக் கேட்டருளுவது, எங்கள் பக்கல் (ஸுஹ்ருத்தான) தேவரீர்க்குள்ள பேரன்பையே காட்டும்; இப்படிக் கேட்பதுங்கூட, ''ராமபிரானுடைய ஸௌலப்யஸௌசீல்யாதிகளிருந்தபடியென்!'' என்று உலகினர் தேவரீரைக் கொண்டாடுவதிலேயே முடியும்'' [ரா-யு 17-33] என்று வானரர்கள் விண்ணப்பம் செய்து புகழ்ந்து, அதற்குப்பின் தங்களுக்குச் சோறிட்டு வளர்த்த சுக்கிரீவனுக்கும் விரோதியாகமுடியாமல், அவருக்கும் தலைவரான ராமபிரானுக்கும் விரோதியாகமுடியாமல், இருவருக்கும் விரோதம் வராதபடி, ''பரீக்ஷித்துக் கைக்கொள்ளவேணும்'' [17-42; சரபர்] என்பாரும், ''எப்படியாலும் ஐயமுறத்தக்கவனே'' [17-37 அங்கதன்; 17-44

னீயன்' என்பாரும், 'ஸஹஸா விச்வாஸயோக்யன் அன்று' என்பாருமாய்க்கொண்டு அங்கத ஶரப ஜாம்பவத் ப்ரப்ருதிகள் ஸ்வஸ்வமதமாகச் சொன்ன வார்த்தையைக்கேட்ட திருவடி, "இவர்கள் நினைவு நினைவாகப் பெருமாளை இழக்கவாகாதே புகுகிறது" என்று பயப்பட்டு, யுக்திகளாலே இவர்கள் பக்ஷங்களை அழித்து, பெருமாள் திருவுள்ளத்துக்கு அநுகுணமாகவும், ஶாஸ்த்ரோசிதமாகவும் அவஸரோசிதமாகவும் வார்த்தை சொல்லக் கோலி, முதலிகள் சிவட்கென்றுதபடி அவையடக்கமாக, "ஹேத்வந்தரங்களாலே சொல்லுகிறவனல்லேன்; பெருமாள்பக்கல் ஆதரத்தாலும் ராஜகார்யந்தான் இதுவாகையாலும் அர்த்தஸ்திதியினுடைய இனிமையாலும் நானும் ஒருவார்த்தை சொல்லப்புகுகிறேன்' என்கிறான்.

வ்யா:—(ந வாதாந் நாபி ஸங்கர்ஷாந் நாதிக்யாநந்ந ச காமத:) 'நாட்டார் ஒரு ஸதஸ்ஸுக்களிலேயிருந்தால் ஒருத்

ஜாம்பவான்] என்பாரும், "விரைவில் நம்பிவிடக்கூடாது" [17-37, அங்கதன்] என்பாருமாய்க்கொண்டு அங்கதன், சரபன், ஜாம்பவான் முதலானோர், தம்தம் முடிவாகச் சொன்ன சொற்களைக்கேட்ட அனுமன், "இவர்கள் நினைவுகளை எண்ணி ஸ்ரீராமபிரான் இவர்களை மீறவும்முடியாமல், விபீஷணனைக் கைவிடவும் முடியாமல் உயிரைவிட்டுவிடுவரோ?" என்று பயப்பட்டு, நல்ல யுக்திகளைச்சொல்லி இவர்கள் பக்ஷங்களைத் தள்ளி, ராமபிரான் திருவுள்ளக்கருத்துக்கும், சாஸ்திரநெறிக்கும் தக்கபடியாகவும், ஸமயோசிதமாகவும் வார்த்தைசொல்ல முற்பட்டு, சுக்கிரீவன், அங்கதன் முதலான வானரமுதலிகள் கோபங்கொண்டு முகஞ்சிவக்காதபடி அவையடக்கமாக, "மற்ற காரணங்களாலே நான் இது சொல்லவில்லை; ராமபிரானிடமுள்ள அன்பினாலும், அரசரான சுக்கிரீவனின் காரியம் இதுவேயாகையாலும், நான் சொல்லும் அர்த்தத்தின் இனிமையாலும் நானும் ஒருவார்த்தை சொல்லப்போகிறேன்'' என்கிறான் "ந வாதாத்" என்று தொடங்கும் இந்த ச்லோகத்திலே.

வ்யா:— (வாதத்தாலுமல்ல; பக்ஷபாதத்தாலுமல்ல; பெருமையாலுமல்ல; இஷ்டப்படியுமல்ல) "உலகினர் ஒரு சபையிலிருந்தால், ஒருவரையொருவர் வெற்றிகொள்ள வார்த்தை சொல்லுவது இந்தக் காரணங்

தருக்கொருத்தர் மிகைக்க வார்த்தை சொல்லுவது இவ்வோ ஹேதுக்களாலேயிறே: அவையெல்லாமல்ல இப்போது' என்கிருன். (ந வாதாத்) கௌரவ்யரான உங்களோடு எனக்கு ஒரு விவாதமுண்டாய் அத்தாலே ஆக்ரஹஸஹிதனுய்ச் சொல்லுகிறவனல்லேன். (நாபி ஸங்கர்ஷாத்) விபீஷணன் பக்கலிலே எனக்கொரு பக்ஷபாதமுண்டாய், அத்தாலே 'இது செய்துதரவேணும்' என்று நிர்ப்பந்தித்துச் சொல்லுகிறவனல்லேன். (நாதிக்யாத்) **"मत्तः प्रत्यवरः कश्चिन्नास्ति सुग्रीवसन्निधौ"** (மத்த: ப்ரத்யவர: கஶ்சிந் நாஸ்தி ஸுக்ரீவஸந்நிதௌ) என்றிருக்கிறவனுகையாலே உங்களைக் காட்டில் நான் மிகைக்கச் சொல்லுகிறவனல்லேன். (ந ச காமத:) பிச்சனுய், நிவாரகனின்றியே வேண்டிற்றுச் சொல்லுகிறவனல்லேன்.

அன்றியிலே, (ந வாதாந்நாபி ஸங்கர்ஷாந் நாதிக்யாந் ந ச காமத:) என்று, வாதவிதண்டாஜல்பாபிநிவேஶங்களாலல்ல. (ந வாதாத்) **"वीतरागकथा वादः"** (வீதராககதா வாத:) என்று ப்ரமாணயுக்திகளாலே தத்வநிஷ்கர்ஷம்

களாலேயேயன்றே; இப்போது அவையெல்லாம் காரணமல்ல" என்கிருன். (வாதத்தாலல்ல) கௌரவிக்கத்தக்க உங்களோடு எனக்கு ஒரு விவாதம் உண்டாய், அதனுலே கொண்டது விடாமல் சொல்லுகிறவனல்லேன். (பக்ஷபாதத்தாலுமல்ல) விபீஷணனிடம் எனக்கு ஒரு பக்ஷபாதமிருந்து அதனுலே 'இதை அவசியம் செய்யவேணும்' என்று நிர்ப்பந்தம் செய்து சொல்லுகிறவனல்லேன். (பெருமையாலல்ல) "ஸுக்ரீவனுடைய ஆட்களில் என்னைக்காட்டிலும் சிறியவனில்லை" [ரா-ஸு 40-38; 68-21] என்று நினைத்திருப்பவனுகையாலே உங்களைக்காட்டிலும் நான் பெருமை பெறச் சொல்லுகிறவனல்லேன். (இஷ்டப்படியல்ல) பைத்தியம் பிடித்தவனுய், தடுப்பாரில்லாமல் விரும்பினதையெல்லாம் சொல்லுகிறவனல்லேன்.

இப்படியல்லாமல், (வாதத்தாலல்ல; ஸங்கர்ஷத்தாலல்ல; ஆதிக்யத்தாலல்ல; காமத்தாலல்ல) என்றதற்கு வாதம், விதண்டை, ஜல்பம், அபிநிவேசம் என்னும் நாலுவகை வாதமுறைகளாலும் உரைக்கிறேனல்லேன் என்பதாகவும் கொள்ளலாம். (வாதத்தாலல்ல) "(இரண்டு பக்ஷத்திலும்) பற்றற்றவரின் பேச்சு வாதமாகும்" [ ] என்கிறபடியே ப்ரமாணங்களையும், யுக்திகளையும் காட்டி உண்மைமுடிவு காண்கையையே ஸ்வயம்

பண்ணிவிடுகையென்று ஒரு புருஷார்த்தமாகச் சொல்லு கிறவனல்லேன். (நாபி ஸங்கர்ஷாத்) வைதண்டிகனாய், அஸதுத்தரம் சொல்லியாகிலும் பிறரை அழிக்கவேணு மென்று ஆக்ரஹக்ரஸ்தனாய், அத்தாலே சொல்லுகிறவனல் லேன். (நாதிக்யாத்) "जल्पोऽस्य विजयः फलम्" (ஜல்போऽஸ்ய விஜய: பலம்) என்று ஜல்பகதை சொல்லிப் பிறரை ஜயித்து, ஓராதிக்யத்துக்காகச் சொல்லுகிறவனுமல்லேன். (நசகாமத:) விபீஷணன் பக்கல் ஓரர்த்தஸ்ப்ருஹையாலே சொல்லுகிற வனுமல்லேன். ஒரு 'நஞ்'ஞையிட்டு இவைதோறும் அழைத் துக்கொள்ளாதே, தனித்தனியே 'நஞ்' இட்டது, இவை தனித்தனியே நிரபேக்ஷஹேதுக்களென்று, இவையித்தனை யும் தன்பக்கலில்லை என்கைக்காக.

(வக்ஷ்யாமி) அமைத்துச் சொல்லுகிறவனல்லேன்; உங்க ளுக்கும் பக்ஷமாய், மஹாராஜருக்கும் திருவுள்ளமாகில், அப் போது சொல்லக்கடவேனத்தனை. (வசநம் வக்ஷ்யாமி) "வக்ஷ்

ப்ரயோஜனமாகக்கொண்டு வாதம் செய்கிறேனல்லேன். (ஆக்ரஹத்தாலு மல்ல) விதண்டாவாதம் செய்பவனாய், தப்பான பதில்களைச் சொல்லி யாவது பிறருடைய பக்ஷத்தைத் தள்ளவேணுமென்று ஆக்ரஹம் கொண்ட வனாய் அதனால் சொல்லுகிறவனல்லேன். (வெற்றிபெறவல்ல) "ஜல்பம்; இதற்கு விஜயம் பலம்" [ ] என்கிறபடியே ஜல்பவாதம் பண்ணிப் பிறரை ஜயித்து ஒரு பெருமைபெறப் பேசுகிறவனல்லேன். (விருப்பத்தாலு மல்ல) விபீஷணனிடம் ஒரு பொருளை விரும்பிச் சொல்லுகிறவனல்லேன். "ந வாதாதபி ஸங்கர்ஷாத் ஆதிக்யாதபி காமத:" என்று நிஷேத வாசகமான ஒரு 'நஞ்'ஞை ('ந' என்னும் எழுத்தை) இட்டு ஒவ்வொரு பதத்திலும் அதைக்கூட்டிப் பொருள்கொள்ளாதே, தனித்தனியே ஒவ்வொரு பதத் திற்கும் 'நஞ்'ஞை இட்டது, இவை ஒவ்வொன்றும் உலகினர் வாதம் செய்வதற்கு ஸ்வதந்த்ர ஹேதுக்களாகையாலே இவையித்தனையும் தன் னிடமில்லை என்று உறுதியாகக் கழிக்கைக்காக.

(சொல்லப்போகிறேன்) "வக்ஷ்யே" என்று ஆத்மநேபதமாகச் சொல்லாமல், "வக்ஷ்யாமி" என்று பரஸ்மைபதமாகச் சொல்லுகையாலே எனக்குப் பயன்தரும்படி பதங்களை அமைத்துச் சொல்லப்போவதில்லை; நான் சொல்லச்சொல்ல வானரமுதலிகளாகிய உங்களுக்கும் இஷ்டமாய், சுக்கிரீவ மஹாராஜர்க்கும் திருவுள்ளமுகந்திருந்தால்தான் மேலே மேலே சொல்லுவேன். (வசனத்தைச் சொல்லுவேன்) 'சொல்லுவேன் என்றாலே

யாமி'' என்னச் செய்தே 'வசநம்' என்பானென்? என்னில்: ''பாகம் பசதி'' போலேயாகவுமாம். அன்றியிலே சொல்லு கிறவிடத்தில், ''கிடக்கிற கார்யவெள்ளத்திலும் இது ஒரு காலக்ஷேபமே!'' என்று முசியாதபடி, ''அர்த்தம் வக்தீதி வசநம்'' ஆய், பாசுரப்பரப்பற்று விவக்ஷிதார்த்தவாசகமாக நறுக்கினாற்போலே சொல்லுகிறேன் என்று ஸப்ரயோஜந மாகவுமாம்.

(ராஜந்) நீங்கள் ராஜாக்களாகையாலே எதிர்த்தாரை அழிக்கவும் அடைந்தாரைக் காக்கவும் வேணும் என்று சொல்லுகிறேனென்றுமாம். (ராஜந்) நீர் ராஜவாய், நான் மந்த்ரியாய்க் கார்யம் சொல்லுமவனாகையாலே சொல்லுகிறே னென்றுமாம். (ராஜந்) "**विस्तीर्णगाधमनसो राजानः**" (**விஸ் தீர்ணகாதமநஸோ ராஜாந:**) என்று நாங்கள் சொல்லப்புகு கிற அர்த்தந்தானும் உம்முடைய நெஞ்சில் தோற்றும்படி

போதுமே; 'வசனத்தை' என்று அர்த்தபலத்தால் தானாகக் கிடைக்குமே; அதைச் சொல்லுவானென்? என்னில்: ''சமையலைச் சமைக்கிறான்'' என் பதைப்போலே வசநசப்தம் பொருளற்றதாய் ''வார்த்தை சொல்லுவேன்'' என்றது வார்த்தைப்பாடாகவுமாம். அல்லது ''அர்த்தம் வக்தீதி வசநம்'' [பொருளை (சுருக்கவிரிவுகளில்லாமல்) சொல்லுவது வசனம்] என்கிற வசநசப்த வ்யுத்பத்தியைக் கருத்திற்கொண்டு வார்த்தை சொல்லும்போது கேட்கிறவர்கள், ''செய்யவேண்டிய காரியங்கள் கடலாகக் கிடக்கின்றன; அதைச் செய்யவொட்டாமல் இவனொருவன் பெரிய உபந்யாஸம் செய்து கொண்டு போதைப்போக்குகிறான்'' என்று சலித்துக் கொள்ளாதபடி, விரிவாக வார்த்தை சொல்லாமல், சொல்ல வந்ததைத் தெளிவாக நறுக் குத்தறித்தாற்போல் (ஓலையை வெட்டினாற்போல்) வெட்டொன்று துண் டிரண்டாக வார்த்தை சொல்லுகிறேன் என்னும் கருத்திலே வசநசப்த ப்ரயோகம் பயனுடையதாகவதாகவும் கொள்ளலாம்.

1. (அரசரே!) நீங்கள் அரசராகையால், எதிர்ப்பவர்களையே அழிக்க வேணும்; விபீஷணனைப்போல் சரணமடைந்தவர்களை ரக்ஷிக்கவேணும் என்று சொல்லுகிறேன். 2. (அரசரே) நீர் அரசராய், நான் மந்திரி யாகையாலே நீர் செய்யவேண்டியதைச் சொல்லவேண்டிய கடமைப்படி சொல்லுகிறேன். 3. (அரசரே) ''பரந்து, ஆழ்ந்த நெஞ்சையுடையவர் கள் அரசர்கள்'' [ ] என்கிறபடியே, நான் சொல்லப் போகிற பொருள் உம்முடைய நெஞ்சிலேயும் தோற்றும்படி நீர் நெஞ்சில்

யான நெஞ்சில் அகலத்தையுடையீராய்த் தோற்றினுலும், அடக்கிவைக்குமவருமாகையாலே சொல்லுகிறேனென்றுமாம். (ராஜந்)நாங்கள் ஏதேனும் சொல்லப்புக்கால்முகத்தைக்கடுத்துக்கொண்டு இருக்கையன்றிக்கே, "प्रजाश्चाप्यनुरञ्जते" (ப்ரஜாஶ்சாப்யநுரஞ்ஜதே)என்றும், "ரஞ்ஜநாத் ராஜா" என்றும், குளிர முகந்தந்து கேட்டபடியாலேசொல்லுகிறேனென்றுமாம்.

முகந்தந்தோமென்றால்தோற்றிற்றுச் சொல்லுமத்தனையோ? என்ன (யதார்த்தம்) ஸம்ப்ரதிபந்நமல்ல; சாஸ்த்ரங்களில் யதோக்தமான அர்த்தம். (ராஜந் யதார்த்தம்) "सत्यं राजसु शोभते" (ஸத்யம் ராஜஸு ஶோபதே) என்று உண்மையொழிய ராஜாக்கள்பாடு ஈடேறுமோ? (யதார்த்தம்) ப்ரமாண யுக்திகளாலே தள்ளுண்கையன்றிக்கே அபாதிதமாயாயிற்றிருப்பது.

ஹேத்வந்தரங்களில்லையென்றுயாகிலும் சொல்லுகிற ப்ரகாரமென்னென்னில்: (ராமகௌரவாத்) ஹேத்வாபாஸங்

அகன்ற அறிவையுடையவராகிலும், அதை அடக்கியும் வைக்கும்படி நெஞ்சில் ஆழத்தையுடையவராகையாலே நான் சொல்லுகிறேன். 4. (ராஜாவே) நாங்கள் ஏதாவது சொல்லப்புகுந்தால் முகத்தைக் கடுத்துக்கொண்டு இராமல், "ராஜாவாயிருப்பவன் குடிகளை ரஞ்ஜனம் செய்கிறான்" [ ] என்றும், "(குடிகளை)ரஞ்ஜநம் செய்வதால் ராஜாவெனப்படுகிறான்" [வ்யுத்பத்தி] என்றும் சொல்லுகிறபடியே குளிர்ந்து முகங்கொடுத்துக் கேட்டபடியாலே சொல்லுகிறேன் என்றுமாம்.

முகங்கொடுத்துக் கேட்டதற்காக, இஷ்டப்படியெல்லாம் சொல்லித் தண்டிப்பதோ? என்று கருத்தாகக்கொண்டு சொல்லுகிறார்,–1. (உள்ளபடியான) எனக்கு நன்கு தோன்றுகிறது என்பதினால் சொல்லுகிறேனல்லேன்; சாஸ்திரங்களில் சொல்லப்பட்டபடியுள்ள அர்த்தத்தைச் சொல்லுகிறேன். 2. (ராஜாவே உண்மையை) "அரசர்களிடத்தில் உண்மையே சோபிக்கும்" [ ] என்று உண்மையைத்தவிர்ந்து பொய் சொன்னால் அரசர்களிடம் நடக்குமா? 3. (யதார்த்தமான) ப்ரமாணயுக்திகளால் தள்ளப்படும் அயதார்த்தமான (பொய்யான) அர்த்தமல்ல; பாதிக்கப்படாமலிருக்கும் உண்மை.

"உலகில் மற்றவர் வாதம்புரியும் காரணங்களால் வார்த்தை சொல்லவில்லையாகில், என்ன காரணத்தால் வார்த்தை சொல்லுகிறாய்?" எனில்:

களில்லையென்றேனத்தனைபோக்கி, ஸம்யக்ஹேதுவுமில்லை யென்றேனே? (ராமகௌரவாத்) இதுக்கு முன்பு பிறந்த வார்த்தைகள், **"अप्यहं जीवितं जह्यां न तु प्रतिज्ञां संश्रुत्य"** (அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்—ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய) என்று பெருமாளுக்கு அஸஹ்யமாகையாலே, 'இச்சிறந்த சரக்கை இழக்கப்புகுகிறோம்' என்கிற பயத்தாலே சொல்லுகிறேன். அன்றியிலே, (ராமகௌரவாத்) என்று, **"शरणागत-वत्सलः"** (ஶரணாகதவத்ஸல:) என்கிறபடியே, "ஶரணாகத ரக்ஷணே ராமகௌரவாத்" என்றாய். ஶரணாகதரக்ஷணத்தில் பெருமாள் விருப்பத்தாலே சொல்லுகிறேன் என்றாகவுமாம். நம்முடைய பக்ஷத்துக்கு விருத்தமாக நம்முடைய பரிகரமான நீ சொல்லப்பெறுவையோ? என்ன: (பவதோபி ராமகௌர வாத்) உமக்குங்கூடப் பேணவேண்டும்படியான பெருமாள் கௌரவத்தாலே சொல்லுகிறேன் என்றாகவுமாம். **"ममाप्यखिललोकानां गुरुर्नारायणोऽगुरुः"** (மமாப்யகிலலோகாநாம் குருர் நாராயணோऽகுரு:) அன்றோ.

---

1. (ராம கௌரவத்தாலே) துஷ்டஹேதுக்களில்லையென்றேனேயொழிய நல்ல ஹேது இல்லையென்று சொல்லவில்லையே; ராமகௌரவத்தாலே சொல்லுகிறேன். 2. (ராமனின் பெருமையாலே) இதற்குமுன் சுக்கிரீவன் அங்கதன் முதலானோர் சொன்ன வார்த்தைகள் "உயிரை விட்டாலும் விடுவேனேயொழிய செய்த ப்ரதிஜ்ஞையை விடமாட்டேன்" [ரா-ஆ 10-19] என்று சொன்ன ஸ்ரீராமபிரானுக்குப் பொறுக்கமுடியாததாயிருகையாலே மனிதர்களில் மாணிக்கமான ராமபிரானை இழக்கவே நேரிட்டுவிடுமோ? என்கிற பயத்தாலே சொல்லுகிறேன். 3. (ராமனுக்கு சரணாகதரக்ஷணத்தி லுள்ள மதிப்பாலே) "சரணாகதரிடம் வாத்ஸல்யமுடையவர் ராமபிரான்" [ரா-ஸு 21-21] என்கிறபடியே சரணாகதரக்ஷணத்தில் ராமபிரான் வைத்திருக்கும் கௌரவபுத்தியையறிந்து சொல்லுகிறேன். 4 'என்னுடைய ஆளான நீ எனக்கு விருத்தமாக வார்த்தை சொல்லலாமோ?' என்று சுக்கிரீவனுக்குக் கருத்தாகலாமாகையாலே சொல்லுகிறார்,- (ராமன் உம்மிலும் பெரியவராகையால்) நீருங்கூட நோக்கவேண்டும்படியான ராமபிரானுடைய பெருமையைப் பார்த்துச் சொல்லுகிறேன். "எல்லாவுலகிற்கும் எனக்குங்கூடப்பெரியவனாயிருப்பவன் தனக்கொரு குருவற்ற நாராயணன்" [வி-பு 5-1-14] என்று சொல்லப்படுகிறதன்றோ.

அன்றியிலே (ராஜந் ராம) என்று இருவரையும் ஸம்போதித்து, ''பவதோ கௌரவாத்'' என்றாய், நீங்கள் ஶாஸ்தாக்களாய் குருக்களாயிருக்க, நாங்கள் ஶாஸ்யராய் சிஷ்யர்களாயிருந்தால் **''नियमातिक्रमं रहसि बोधयेत्''** (நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத்) என்று தப்பினவை விண்ணப்பம் செய்யவேணுமென்று சொல்லுகிறேன் என்றாகவுமாம். அன்றியிலே, (ராஜந்) என்று மஹாராஜரை ஸம்போதித்து, ''ராமகௌவரவாத்'' என்றாகிலுமாம். அன்றியிலே, (கௌரவாத்) என்று, ஶத்ருபக்ஷத்தில் நின்றும் பேதம் பண்ணிக் குலைத்தழிப்பிக்க ப்ராப்தமாயிருக்க, வந்தவனை விடுகிறதென்? என்று ராஜகார்யகௌரவத்தாலே என்றுமாம். அன்றியிலே, (கௌரவாத்) என்று **''अरिः प्राणान् परित्यज्य रक्षितव्यः कृतात्मना''** **(அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா)** என்று ஶரணாகத ரக்ஷணம் கர்த்தவ்யம் என்கிற விதிபலத்தாலே என்றாகவுமாம். அன்றியிலே (கௌரவாத்) என்று ஶரணாகத ரக்ஷணம் பண்ணினிகோள் என்று உங்களுக்கு ஓரேற்றம்

---

1. (அரசரே! ராமபிரானே!) என்று இருவரையும் கூப்பிட்டு 'கௌரவாத்' என்பதை குருத்வாத் என்றுகொண்டு 'பவதோ கௌரவாத்' என்று (நீங்கள் குருவாயிருக்கையால்) என்று அத்யாஹாரம் செய்துகொண்டு, நீங்கள் நியமிக்கும் குருக்களாய் நாங்கள் நியமிக்கப்படும் சிஷ்யர்களாயிருந்தபோதிலும் ''குருவாயிருந்தாலும் வரம்பை மீறினால் ரஹஸ்யமாக அறிவிக்க வேண்டும்'' [ ] என்று குருக்கள் தவறுசெய்தால் விண்ணப்பம் செய்யவேண்டுமாகையாலே சொல்லுகிறேன் என்பதாகவுமாம். 2. (அரசரே!) என்று சுக்கிரீவனைமாத்திரம் கூப்பிட்டு, (ராமபிரான் குருவாயிருக்கையால்) அவருக்கு அறிவிக்கிறேன் என்றும் கொள்ளலாம். 3. (கௌரவத்தாலே) 'எதிரியின் பக்கத்திலிருப்பவர்களைக் கலைத்து, எதிரியைக்குலைத்து அழியச்செய்வதே ராஜநீதியாயிருக்க, தானே வந்தவனை விடலாமோ?' என்று ராஜகார்ய கௌரவத்தாலே சொல்லுகிறேன் என்றுமாம். 4. (கௌரவத்தாலே) ''சரணமடைந்த எதிரி நன்னெஞ்சையுடையவனாலே உயிரைவிட்டாவது காப்பாற்றத்தக்கவன்'' [ரா-யு 18-28] என்று சரணாகதரக்ஷணத்தைத் தவறாமல் செய்யவேண்டும் என்னும் விதியின் பெருமையாலே சொல்லுகிறேன் என்றுமாம். 5. (கௌரவத்தாலே) 'சரணா

வரவேணுமென்கிற இதுவே ஹேதுவாகச் சொல்லுகிறேன். அன்றியிலே, (ராமகௌரவாத்) என்று, **"अस्वर्ग्यं चायशस्यञ्च बलवीर्यविनाशनं" (அஸ்வர்க்யம் சாயஶஸ்யம் ச பல வீர்ய விநாஶநம்)** என்றும், **"शरणागतहन्तॄणां निष्कृतिर्न विधीयते" (ஶரணாகதஹந்த்ரூணாம் நிஷ்க்ருதிர் ந விதீயதே)** என்றும், **"आदाय सुकृतं तस्य सर्वं गच्छेदरक्षितः" (ஆதாய ஸுக்ருதம் தஸ்ய ஸர்வம் கச்சேதரக்ஷித:)** என்றும் ஶரணாகதரக்ஷணம் பண்ணாதபோது வரும் அநர்த்தப்பராசுர்யத்தாலே சொல்லுகிறேனென்றாகவுமாம். அன்றியிலே (கௌரவாத்) என்று **"विभीषणस्तु धर्मात्मा न तु राक्षसचेष्टितः" (விபீஷணஸ்து தர்மாத்மா ந து ராக்ஷஸசேஷ்டித:)** என்று எதிரி கையாலே விடுதிட்டாய், அவர்கள் தாங்களே பரமதார்மிகன் என்று சொல்லும்படியாய், தான் ஸாமாந்யதர்மமன்றியிலே ஶரணாகதியான விஶேஷதர்மநிஷ்டனுமான ஸ்ரீவிபீஷணப்பெருமாளுடைய வைலக்ஷண்யத்தாலே என்றாகவுமாம். அன்றியிலே, (கௌரவாத்) என்று **"ज्येष्ठा कन्यानला नाम विभीषणसुता कपे।**

கதரக்ஷணம் பண்ணினீர்கள்' என்று உங்களுக்கு ஒரு பெருமை வரவேணும் என்று எண்ணிச் சொல்லுகிறேன் என்றுமாம். 6. (ராம கௌரவத்தாலே) "(சரணமடைந்தவனை அழியவிடுவது) மறுமையின்பத்தையழிப்பது; (இம்மைப்) புகழையழிப்பது; பலத்தையும் வீர்யத்தையும் அழிப்பது." [ரா-யு 18-31] என்றும், "சரணமடைந்தவனைக் கொன்றவர்களுக்குப் பிராயச்சித்தமே (சாஸ்திரங்களில்) சொல்லப்படவில்லை" [ ] என்றும், "(சரண்யன் கண்டிருக்கும்போதே அழிவுற்ற சரணாகதன்) சரண்யனுடைய எல்லாப் புண்ணியங்களையும் எடுத்துக்கொண்டு (அவன் செல்லவேண்டிய உலகிற்குப்) போய்விடுகிறான்" [ரா-யு 18-30] என்றும், சரணமடைந்தவனைக் காப்பாற்றாதபோது ராமபிரானுக்கு வரும் கேட்டின் ஆதிக்யத்தை நினைத்துச் சொல்லுகிறேன் என்றுமாம். 7. (கௌரவத்தாலே) "விபீஷணன் அறவழிநடப்போன்; அரக்கருடைய செயலையுடையவனல்லன்" [ரா-ஆ 17-24] என்று மறவழிநிற்கும் அரக்கராலே விரும்பப்படாத அறவழிநிற்பவனாய், அவர்களே "பரமதார்மிகன்" என்று சொல்லும்படியிருப்பவனாய், அதிலும் ஸாமாந்ய தர்மங்களிலல்லாமல் விசேஷதர்மமான சரணாகதியில் நிலைநிற்பவனுமான விபீஷணாழ்வானுடைய பெருமையாலே என்று பொருளாகவுமாம். 8. (பெருமையாலே) "வானரனே! விபீஷணனின் மூத்த

तया मह्येतदाख्यातं'' (ஜ்யேஷ்டா கந்யாநலா நாம விபீஷண ஸுதா கபே। தயா மமைததாக்யாதம்) என்று தன் பெண் பிள்ளையையிட்டுப் பிராட்டிக்கு ஆச்வாஸம் பண்ணுவித்தும், **''न दूतो वधमर्हति''** (ந தூதோ வதமர்ஹதி) என்று ராவணனை நலியப்புக விலக்கியும், **''प्रदीयतां दाशरथाय मैथिली''** (ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ) என்று பிராட்டி விஷயத்தில் நல் வார்த்தை சொல்லியும், **''यावन्न गृह्णन्ति शिरांसि बाणा रामेरिता राक्षसपुङ्गवानाम्''** (யாவந்ந க்ருஹ்ணந்தி ஶிராம்ஸி பாணா ராமேரிதா ராக்ஷஸ புங்கவாநாம்) என்று நமக்காக அண்ணனைப் பாராமல் சொல்லியும், **''बालस्त्वमद्याप्यविपक्ववुद्धिः''** (பாலஸ் த்வமத்யாப்ய விபக்வ புத்தி:) என்றும், **''त्वमेव वध्यश्च सुदुर्मतिश्च''** (த்வமேவ வத்யஶ்ச ஸுதுர்மதிஶ்ச) என்றும் இந்த்ரஜித்தைப் பாராமல் சொல்லியும் இப்படி அவன் நமக்குப் பண்ணின உபகாரப்ராசுர்யத்தாலே என்றுமாம்.

பெண் அநலையென்பவள்; தன் தாயால் அனுப்பப்பட்ட அவளால் இது எனக்குச் சொல்லப்பட்டது'' [ரா-ஸு 37-11] என்று தன் பெண்ணைவிட்டுப் பிராட்டிக்கு ஆறுதல் செய்வித்தும், ''தூதனைக் கொல்லலாகாது'' [ரா-ஸு 52-21] என்று தூதுவந்த என்னைக் கொல்லநினைத்த ராவணனை விலக்கியும், ''ராமபிரானிடம் மைதிலி விடப்படட்டும்'' [ரா-யு 14-3] என்று பிராட்டி விஷயத்தில் நல்வார்த்தை சொல்லியும், ''அரக்கர் தலைவர்களுடைய தலைகளை ராமபாணங்கள் அறுப்பதற்குமுன்னுல் மைதிலி ராமபிரானிடம் விடப்படட்டும்'' [ரா-யு 14-4] என்று நமக்காகத் தமயனிடம் விரோதித்து வார்த்தை சொல்லியும், ''நீ சிறுவன்; இன்னமும் முதிராத அறிவையுடையவன்'' [ரா-யு 15-9] என்றும், ''நீயே கொல்லத்தக்கவன்; மிகக்கெட்ட அறிவையுடையவன்'' [ரா-யு 15-11] என்றும் (தமயன்) பிள்ளையான இந்திரஜித்தை விரோதித்து வார்த்தை சொல்லியும் இப்படி அவன் நமக்குச் செய்த உபகாரப் பெருமையைப் பார்த்துச் சொல்லுகிறேன் என்றுமாம். 9. (கௌரவத்தாலே)

''ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்।
ரக்ஷிஷ்யதீதி விச்வாஸோ கோப்த்ருத்வ வரணம் ததா।
ஆத்மநிக்ஷேப கார்ப்பண்யே ஷட்விதா ஶரணாகதி:॥
[அஹிர்புத்ந்யஸம்ஹிதை 37-27]

அன்றியிலே (கௌரவாத்) என்று. ''स्वस्ति तेऽस्तु'' (ஸ்வஸ்தி தேऽஸ்து) என்று * ஆநுகூல்யஸங்கல்பமும், ''उत्पपात गदापाणिः'' (உத்பபாத கதாபாணி:) என்று கையிலே பிடித்த கதையிருக்கப் பருஷித்தவனைக் கரையவடியாமையாலே * ப்ராதிகூல்யவர்ஜநமும், ''वालिनञ्च हतं श्रुत्वा सुग्रीवञ्चाभिषेचितम्। राज्यं प्रार्थयमानश्च'' (வாலிநஞ்ச ஹ்தம் ச்ருத்வா ஸுக்ரீவஞ்சாபிஷேசிதம்। ராஜ்யம் ப்ரார்த்தயமாநஶ்ச) என்று வோதாஹரணமாக விச்வஸித்துப் பற்றுகையாலே * ரக்ஷிஷ்யதீதி விச்வாஸமும், ''भवन्तं शरणं गतः'' (பவந்தம் ஶரணம் கத:) என்கையாலே * கோப்த்ருத்வவரணமும், ''भवद्गतं मे राज्यञ्च जीवितञ्च सुखानि च'' (பவத்கதம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகாநி ச) என்கையாலே * ஆத்மநிக்ஷேபமும், ''प्रणादश्च महानेषस्ततोऽस्य भयमागतं'' (ப்ரணாதஶ்ச மஹாநேஷஸ் ததோஸ்ய

[1. (அனைவரிடமும்) அநுகூலனாயிருக்க உறுதி; 2. (அனைவரிடமும்) பிரதிகூலனாயிருப்பதை விலக்குவது; 3. 'பகவான் ரக்ஷிப்பான்' என்னும் நம்பிக்கை; 4. 'ரக்ஷிப்பாயாக' என்று அவனிடம் வேண்டுவது; 5. தன்னையும் அவனிடம் வைப்பது; 6. கைம்முதலில்லாமை என்று ஆறுவிதமான தன்மைகளையுடையது சரணாகதி] என்று சொல்லப்பட்ட சரணாகதி லக்ஷணம் இவனிடம் பூர்ணமாயிருக்கும் பெருமையாலே சொல்லுகிறேன் என்றுமாம். ''உனக்கு மங்களமுண்டாகட்டும்'' [ரா-யு 16-25] என்று எதிரியான ராவணனுக்கும் மங்களத்தை விரும்புகையாலே ஆநுகூல்ய ஸங்கல்பமும், ''கதையை கையிலேந்தியவனாய்க் கிளம்பினான்'' [ரா-யு 16-16] என்று கையிலே கதையிருந்தபோதிலும் கடுஞ்சொற்பேசிய ராவணனை அழும்படி அடிக்காமையாலே ப்ராதிகூல்யவர்ஜனமும், ''வாலி கொல்லப்பட்டதையும், சுக்கிரீவன் அபிஷேகம் செய்யப்பெற்றதையும் கேட்டும், ராஜ்யத்தை விரும்பியும் வந்திருக்கிறான்'' [ரா-யு 17-64] என்று வாலிசுக்கிரீவர்களாகிற உதாஹரணத்தைக்கண்டு நம்பிப் பற்றுகையாலே 'காப்பான்' என்னும் நம்பிக்கையும், ''தேவரீரை சரணமடைந்தேன்'' [ரா-யு 19-5] என்று சொல்லுகையாலே 'ரக்ஷிப்பாயாக' என்னும் பிரார்த்தனையும், ''என் ராஜ்யமும், உயிரும், இன்பங்களும் இனி தேவரீரிடமே உள்ளன'' [ரா-யு 19-6] என்கையாலே தன்னை ஸமர்ப்பிப்பதாகிற ஆத்மநிக்ஷேபமும் 'இவனுடைய இந்த (சரணவரண) த்வனியும் பெரிதாயிரா நின்றது; ஆகையால், இவனுக்கு (ராவணனிடம்) பயம் ஏற்பட்டிருக்கிறது'

பயமாகதம்)என்று தைங்யரூப * கார்ப்பண்யமுமாகிற ஶரணு கதிலக்ஷணபௌஷ்கல்யத்தாலே என்றுமாம். அன்றியிலே, (கௌரவாத்) என்று, "न त्वस्य ब्रुवतो जातु लक्ष्यते दुष्टभावता। प्रसन्नं वदनं चापि'' (ந த்வஸ்ய ப்ருவதோ ஜாது லக்ஷ்யதே துஷ்டபாவதா, ப்ரஸந்நம் வதநம் சாபி) என்று தொடங்கி "வார்த்தை சொல்லுகிறவிடத்தில் ஒரு தோஷங் கண்டிலோம்; முகம் குளிர்ந்திருந்தது; அதுஷ்டஹ்ருதயன் இட்படித் தேங்காதவன்; வார்த்தை தடுமாறுதல், குழறு தல், வ்யாஹதமாகுதல், வாக்குப்புறளுதல் செய்கிறதில்லை; அபிப்ராயம் மறைத்தாலும் பின்னையும் பிட்டுக்கொண்டு புறப்படும்; அது கண்டிலோமாகையாலே துஷ்டனல்லன்; சுத்தபாவன்'' என்கைக்கிடான யுத்திப்ராசுர்யத்தாலே என்றுகவுமாம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம், 51-வது ச்லோகம்

अर्थानर्थनिमित्तं हि यदुक्तं सचिवैस्तव।
तत्र दोषं प्रपश्यामि क्रिया न ह्युपपद्यते॥

அர்த்தாநர்த்தநிமித்தம் ஹி யதுக்தம் ஸசிவைஸ் தவ।
தத்ர தோஷம் ப்ரபஶ்யாமி க்ரியா ந ஹ்யுபபத்யதே॥

[ரா-யு 18-14] என்று வருந்ததக்க நிலைமையாகிற கார்ப்பண்யமுமாகிற ஆறு விதமான சரணுகதிலக்ஷணம் இவனிடம் நிறைந்துள்ளதன்றோ. (10)கௌரவத்தாலே) "இவன் பேசும்போது ஒருசமயமும் தீமைகாணப்படவில்லை; இவன் முகம் தெளிந்துள்ளது'' [ரா-யு 17-60] என்று தொடங்கி, "வார்த்தை சொல்லும்போது ஒரு தோஷத்தையும் காணமுடியவில்லை; முகம் குளிர்ந்திருந்தது; தயங்காமல் தெளிவாய் இப்படி வார்த்தை சொல்லுபவன் தீமையற்ற நெஞ்சினனுகவேயிருக்க வேண்டும்; வார்த்தை தடுமாறுதல், குழறுதல், முன்னுக்குப்பின் முரணுதல், சொன்னசொல்லை மாற்றுதல் ஆகிய ஒரு குற்றமும் இவன் பேச்சிலில்லை; எவனுயினும், கருத்தை மறைத்தாலும், அவனையுமறியாமல் வார்த்தையிலே வெளிப்பட்டுவிடும். இவனிடத்தில் அதைக் காணவில்லையாகையாலே தீயவனல்லன்; நல்ல கருத்தினன்'' என்று முடிவுகட்டத்தக்க யுக்திகள் அதிகமிருக்கையாலே சொல்லுகிறேன் என்றுமாம்.

பதவுரை:—தவ—தேவரீருடைய, **ஸசிவை:**— மந்திரிகளான அங்கதப்பெருமாளாலே, **அர்த்தாऽநர்த்தநிமித்தம்**—லாபநஷ்டங்களை ஹேதுவாகவுடைய, **யத்**—யாதொரு வாக்கியம், **உக்தம்**—சொல்லப்பட்டதோ, **தத்ர**—அந்தப் பக்ஷத்தில், **தோஷம்**—தோஷத்தை, **ப்ரபஶ்யாமி**—நன்ருகப் பார்க்கிறேன்; **ஹி** — ஏனெனில்: **க்ரியா** — பரீக்ஷை செய்வது; **ந உபபத்யதே**—பொருந்தாதன்றே.

அவதாரிகை:–ப்ரதமமதமான அங்கதப்பெருமாள் மதத்துக்குதோஷத்தைச் சொல்லுகிருன், 'அர்த்தாநர்த்த' இத்யாதியாலே.

வ்யா–(அர்த்தாநர்த்தநிமித்தம் ஹி யதுக்தம்)ப்ரயோஜநாப்ரயோஜனங்களே இவனுடைய த்யாகஸ்வீகாரங்களுக்கு ஹேதுவென்று யாதொன்று சொல்லப்பட்டது. (தவ ஸசிவை:) தேவருடைய ப்ரக்ருதியறியாதே ஶாஸ்த்ரத்தைப் பார்த்துச் சொன்னுரென்கை. பஹுவசனத்தாலே அங்கதப் பெருமாள் பக்ஷத்தாரெல்லார்க்கும் அவருடைய வாக்யம் அநுமதமென்று சொல்லுகிறது. அவர்பக்கல் கௌரவ்யதையாலென்றுமாம். கார்யமல்லாமையால் நிஷேதிக்கிருனித்தனே;

அவதாரிகை:—முதல் பக்ஷமான அங்கதனுடைய கருத்துக்குள்ள குற்றத்தைச் சொல்லுகிருன் "அர்த்தாநர்த்த" என்று தொடங்கி.

வ்யா:-(லாபநஷ்டங்களைக் காரணமாகக் கொண்ட யாதொரு வார்த்தை சொல்லப்பட்டதோ) இவனுல் வரக்கூடிய நன்மை தீமைகளே இவனை ஏற்றுக்கொள்வதற்கும், கைவிடுவதற்கும் (முறையே) காரணம் என்று யாதொரு வார்த்தை சொல்லப்பட்டது. (தேவரீருடைய மந்திரிகளாலே) தேவரீருடைய தன்மையறியாமல், மந்திரிகளாகையாலே ராஜநீதி சாஸ்திரங்களைப் பார்த்துச் சொன்னுர்களென்று கருத்து. 'மந்திரிகள்' என்ற பன்மையாலே அங்கதனுடைய பக்ஷத்தைப் பல வானரர்கள் அனுமதித்திருந்தார்கள் என்று காட்டுகிறது. அல்லது, யுவராஜாவான அங்கதனிடமுள்ள மதிப்பாலே பன்மையாகப் பேசுகிருனுகவுமாம். அங்கதன் சொன்னது செய்யத்தகாததாகையாலே, அதை அனுமன் மறுக்கிருனே

அவர்பக்கல் கௌரவ்யதையிற் குறையில்லையென்கை. (தத்ர தோஷம் ப்ரபஶ்யாமி) அவஹிதமாகச் சொன்ன மதத்திலே தோஷம் தோற்றுநின்றது. அந்த தோஷம் ஏதென்னச் சொல்லுகிறான்: (க்ரியா ந ஹ்யுபபத்யதே) க்ரியா—பரீக்ஷா க்ரியா. அந்த பரீக்ஷாக்ரியை அநுபபந்நையென்கிறது.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 52-வது ச்லோகம்

ऋते नियोगात्सामर्थ्यमवबोद्धुं न शक्यते।
सहसा विनियोगो हि दोषवान् प्रतिभाति मा॥

ருதே நியோகாத் ஸாமர்த்யமவபோத்தும் ந ஶக்யதே।
ஸஹஸா விநியோகோ ஹி தோஷவாந் ப்ரதிபாதி மா॥

பதவுரை:—நியோகாத் ருதே—(ஒரு செயலில்) ஏவினாலல்லாமல், ஸாமர்த்யம்—(இவனுடைய) பயனுடைமை, அவபோத்தும்-அறிவதற்கு, ந ஶக்யதே-முடியாது. ஸஹஸா-சடக்கென, விநியோக: ஹி-ஏவுகையோவெனில், தோஷவாந்-தோஷமுடையதென்று, மா—எனக்கு, ப்ரதிபாதி—தோற்றுகிறது.

அவதாரிகை:-அநுபபந்நையென்னுமிடத்தை உபபாதிக்கிறது மேல்.

வ்யா:—(நியோகாத் ருதே ஸாமர்த்யம் அவபோத்தும் ந ஶக்யதே)ஸாமர்த்யமாவது—ஸம்யக் ப்ரயோஜநபாவ: அந்த

யொழிய, அங்கதனிடம் அனுமனுக்குள்ள மதிப்பில் குறையில்லையென்று காட்டுகிறது. (அதில் தோஷத்தை நன்கு காண்கிறேன்) கவனத்தோடு சொன்ன அவர் கருத்திலும் தோஷம் தோற்றுகிறது. அது ஏதென்னில்; (செயல் ஒட்டாதன்றோ) க்ரியா—பரீக்ஷைச்செயல். பரீக்ஷை செய்வது ஒட்டாது என்கிறது.

அவதாரிகை:—பரீக்ஷைச்செயல் ஏன் ஒட்டாதென்பதை விவரிக்கிறது "ருதே" என்று தொடங்கும் ச்லோகத்தாலே.

வ்யா:— (ஏவினாலல்லது ஸாமர்த்யமாகிற பயனுடைமையை அறிய முடியாது) அர்த்த சப்தம் ப்ரயோஜனத்தைச் சொல்லுமாகையாலே,

ப்ரயோஜந ஜ்ஞாநார்த்தமாக நியோகிக்கத்தகட்டென்னென்னில்: (ஸஹஸா விநியோகோ ஹி தோஷவாந் ப்ரதிபாதி மா) இவனால் ப்ரயோஜனமுண்டென்றறியாதே சடக்கென ஏவுதோமாகில் கார்யத்துக்கு அநர்த்தமாம் என்று தோற்றா நின்றது. ப்ரயோஜநமுண்டென்று அறிந்தாலல்லது ஏவவொண்ணாது. ஏவினாலல்லது ப்ரயோஜந மறியவொண்ணாது. ஆக, இதரேதராஶ்ரயக்ரஸ்தமாகையாலே பரீக்ஷாக்ரியை அநுபபந்நை.

யுத்தகாண்டம் 17–வது ஸர்க்கம் 53–வது ச்லோகம்

चारप्रणिहितं युक्तं यदुक्तं सचिवैस्तव।
अर्थस्यासंभवात्तत्र कारणं नोपपद्यते ॥

சாரப்ரணிஹிதம் யுக்தம் யதுக்தம் ஸசிவைஸ் தவ।
அர்த்தஸ்யாஸம்பவாத் தத்ர காரணம் நோபபத்யதே॥

பதவுரை:— சாரப்ராணிஹிதம் — ஒற்றனை அனுப்புவது, யுக்தம்–தகும் (என்று), யத்–யாதொன்று, தவ–உம்முடைய, ஸசிவை:—மந்திரிகளான சரபராலே, உக்தம்—சொல்லப் பட்டதோ, தத்ர–அநுவிஷயத்தில், அர்த்தஸ்ய அஸம்பாவாத்–(இவனிடம் ஒற்றன்) செய்யவேண்டியது இல்லையாகையால், காரணம்—காரணம், ந உபபத்யதே—பொருந்தாது.

ஸாமர்த்யமாவது—ஸம்யக் ப்ரயோஜநபாவம் (**संयक्प्रयोजनभावः**) என்று பொருள் படுகிறது. நல்ல பயனுடைமை என்றபடி. இவனால் பயனுண்டென்றறிவதற்கு ஏவத்தடையென்ன? எனில்: (சடக்கென ஏவுவது குற்றமுடையதாக எனக்குப் படுகிறது) இவனால் பயனுண்டென்றறியாமல் சடக்கென ஏவுவோமாகில் நம் காரியம் கெட்டுப்போகும் என்று தோற்றுகிறது. தீயவனாகில் அவசியம் கெட்டுப்போகும்; நல்லவனாகிலும் புதியவனாகையாலே கெட்டுப்போகலாம். பயனுண்டு என்று நிச்சயமாக அறிந்தாலல்லது ஏவமுடியாது. ஏவினாலல்லது பயனுண்டா இல்லையா என்ற அறியமுடியாது. ஆக, 'அந்யோந்யாச்ரயணம்' என்னும் குற்றம் ஏற்படுகிறதாகையாலே பரீக்ஷை செய்வது ஒட்டாது.

அவதாரிகை:-அநந்தரம் ஶரபர் மதத்தை தூஷிக்கிறுன்.

வ்யா:-(சாரப்ரணிஹிதம் யுக்தம் யதுக்தம் தவ ஸசிவை:) ப்ரணிதாநம்—பாவே நிஷ்டா. (தத்ரகாரணம் நோபபத்யதே) அந்த மதத்தில் காரணம் உபபந்நமன்று. ஹேது ஶூந்யமென்கை. (அர்த்தஸ்யாஸம்பவாத்) இவன் ப்ரத்யக்ஷித்து நிற்கையாலே இவன்பக்கல் சாரனுக்குக் கர்த்தவ்யமில்லாமையாலே. அதவா, (அர்த்தஸ்யாஸம்பவாத் சாரணம் நோபபத்யதே)அர்த்த ஶப்தத்தாலே ஸாமந்தாந்த:புர ஸமா

அவதாரிகை:—அடுத்தபடியாக, சரபருடைய கருத்தை தூஷிக்கிறுன் அனுமன்.

வ்யா:—(ஒற்றனை அனுப்புவது தகும் என்று யாதொன்று உம்முடைய மந்திரிகளாலே சொல்லப்பட்டது) 'ப்ரணிஹிதம்' என்னும் சப்தம் 'ப்ரணிதாந'சப்தத்தின் பாவப்ரதாநமான ப்ரயோகம். ஒற்றனை அனுப்புவது என்று பொருள். (அது விஷயத்தில் காரணம் பொருந்தாது) ஒற்றனையனுப்பக் காரணமேயில்லையென்று கருத்து. (செய்யவேண்டியது இல்லையாகையால்) இவன் நமக்கு எதிரே நிற்கையாலே இவனிடத்தில் ஒற்றன் சென்று முடிக்கவேண்டியது ஒன்றுமில்லாமையாலே. இப்படி 'காரணம்' என்று பாடங்கொள்ளாமல், 'சாரணம்' என்று பாடங்கொண்டால், (அர்த்தமில்லையாகையால் சாரணம் ஒட்டாது) என்றதாகிறது. அர்த்தசப்தத்தாலே சிற்றரசர்கள், அந்த:புரம், ராஜஸபை முதலானவை சொல்லப்படுகின்றன. (சாரணம்) என்றது சாரனின் (ஒற்றனின்) தொழில். அதாவது:—

"வணிக் க்ருஷீவலோ லிங்கீ பிக்ஷுகோऽத்யாபகஸ் ததா |
ஸம்ஸ்தா: ஸ்யு: சாரஸம்ஸ்தித்யை தத்ததாயா: ஸுகாச்ரயா||:"

[காமந்தகநீதிஸாரம் 13-36]

[வியாபாரி, விவசாயி, ஸந்யாஸி, வாநப்ரஸ்தன், உபாத்தியாயர் என்னும் வேஷங்கள் ஒற்றனுக்குத் தகுந்தவை. (இந்த வேஷங்கொண்ட ஒற்றர்களுக்கு) வாழ்க்கை வசதிகள் செய்து தரப்படவேண்டும். நல்ல இருப்பிடமும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.] என்று காமந்தகியத்தில் சொல்லப்பட்ட தொழில்கள் சாரண சப்தத்தாலே உணர்த்தப்படுகின்றன. இவ்விபீஷணனுக்குச் சிற்றரசர்கள், அந்த:புரம், ராஜஸபை முதலானவையிருந்தால், ஒற்றர்களை வியாபாரிகளாகவும், விவசாயிகளாகவும், ஸந்யாஸி

பதவுரை:–இஹ–இங்கே, **ஸ: தேஶ:**–(இவன் வரத்தக்க) அந்த இடமும், **ஸ: கால: ச**-(இவன் வரத்தக்க) அந்தக்காலமும், **ஏஷ:**–இதுவேயாக, **யதா**–எப்படி, **பவதி**–ஆகிறதோ, **ததா (தாம் நிபோத)**-அப்படி அதைக்கேளும். **புருஷாத்**-அதமபுருஷனை ராவணனைக்காட்டிலும், **புருஷம்**—உத்தமபுருஷரான தேவரீரையும் **ததா**-அப்படியே, **தோஷகுணௌ அபி**-(அவனை விடாவிடில்) தீமையையும், (உம்மை அடைவதில்) நன்மையையும், **ப்ராப்ய**–அறிந்து, (வருவது தக்கது).

அவதாரிகை:–அந்த விவக்ஷை இன்னதென்கிறது மேல்.

வ்யா:–(இஹ ஸ ஏஷ தேஶ: காலஶ்ச யதா பவதி ததா தாம் நிபோத) இதி பூர்வேணாந்வய:. யாதொரு காலத்திலே யாதொரு தேஶத்திலே வந்தான், இவன் வரவுக்கு இதுவே தேஶமும், இதுவே காலமும் யாதொருபடி ஆம், அப்படிப் பட்ட விவக்ஷை கேட்டருளவேணும். எங்ஙனேயென்னில்: (புருஷாத் புருஷம் ப்ராப்ய ததா தோஷகுணாவபி) தம: ப்ரக்ருதியாகையாலே ஹிம்ஸையே யாத்ரையான ராவணனைக்காட்டில் ஸத்வோத்தரராகையாலே பரரக்ஷணமே யாத்ரையாயிருக்கிற தேவரை ப்ராப்யராக புத்திபண்ணி.

அவதாரிகை:—சொல்ல விரும்பியதை விவரிக்கிறது மேலிரண்டு சுலோகங்களாலே.

வ்யா:—(இங்கே இவன் வரத்தக்க தேசமும் காலமும் இதுவேயாக எப்படியாகிறதோ அப்படி அதைக்கேட்பீராக) "தாம் நிபோத" [அதைக் கேட்பீராக] என்ற முன் சுலோகப்பகுதியோடு கூட்டிக்கொள்ளவேணும். இவன் எந்த தேசத்திலே எந்தக் காலத்திலே வந்தானோ அந்த தேச காலங்களே இவன் வரவேண்டிய தேசகாலங்களாகும் என்பதை நிரூபிக்கும் என் விவக்ஷையைக் (சொல்ல விரும்பியதைக்) கேட்டருளவேணும் என்கை. எப்படியெனில்: (புருஷாதமனைக்காட்டிலும் புருஷோத்தமனையும் அப்படியே தோஷகுணங்களையும் அறிந்து) தமோகுணம் மிக்கவனாகையாலே பரஹிம்ஸையையே தொழிலாகக்கொண்ட ராவணனைக்காட்டிலும், ஸத்வகுணம் மிக்கவராகையாலே பிறரை ரக்ஷிப்பதே தொழிலாயிருக்கும் தேவரீரை அடையத்தக்கவராக புத்திபண்ணி. (ப்ராப்ய) கத்யர்த்தங்கள் புத்யர்த்தங்களாகையாலே 'அறிந்து' எனப்பொருள்படுகிறது. (அப்படியே தோஷகுணங்களையும் அறிந்து) ராவணனை இந்த சமயத்தில்

ப்ராப்ய-புத்த்வா. (கதா தோஷகுணவபி) அவனை அவ்வள விலே விட்டுப்போராதொழிந்தால் வரும் தோஷத்தையும், தேவரீரைப் பற்றினல் வரும் நன்மையையும் புத்திபண்ணி. தோஷமாவது-அவனுடைய கருத்துக்கு ஸஹகாரியாய். அந்த ப்ராதிகூல்யத்தோடே முடிந்துபோகை. நன்மை யாவது-தார்மிகரோடே கூடப்பெறுகையும், அதின் பலமான தேவர் திருவடிகளில் கைங்கர்யமும். இந்த வைஷம்ய ஜ்ஞாநமுடையவனுக்கு வருகை யுக்தம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 56-வது ச்லோகம்

दौरात्म्यं रावणे दृष्ट्वा विक्रमं च तथा त्वयि।
युक्तमागमनं तस्य सदृशं तस्य बुद्धितः॥

தௌராத்ம்யம் ராவணே த்ருஷ்ட்வா விக்ரமம் ச ததா த்வயி।
யுக்தமாகமநம் தஸ்ய ஸத்ருஶம் தஸ்ய புத்தித:॥

பதவுரை:-ராவணே-ராவணனிடத்தில், தௌராத்ம்யம்-துஷ்டத்தனத்தையும், ததா-அப்படியே, த்வயி-உம்மிடத்தில், விக்ரமம் ச—பராக்ரமத்தையும், த்ருஷ்ட்வா—பார்த்து, தஸ்ய—அந்த விபீஷணனுடைய, புத்தித:-புத்திக்கு, ஸத்ருஶம்—தகுந்த, தஸ்ய—அவனுடைய, ஆகமநம்—வரவு, யுக்தம்—தக்கது.

அவதாரிகை:—கிஞ்ச.

விட்டுவராதிருந்தால் வரும் தீமையையும் தேவரீரைப் பற்றினல் வரும் நன்மையையும் அறிந்து. அவனை விடாவிடில் தீமையாவது—அவனுடைய பிறன்மனைநயத்தல் முதலான தீச்செயல்களுக்குத் துணையாய், அந்தப் பாபத்தோடே அழிந்துபோவது. ராமனைப் பற்றினல் நன்மையாவது:- நல்லாரோடு கூடப்பெறுவதும், அதனுலேற்படும் ராமகைங்கர்யமும். இவ்விரண்டு புருஷர்களுக்கும் அவர்களால் ஏற்படும் பலன்களுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்தவனுக்கு இந்த தேசகாலத்தில் வருவது தான் பொருத்தம்.

அவதாரிகை:—மேலும் காரணம் காட்டுகிருன்.

வ்யா:-(ராவணே தெளராத்ம்யம் ததா த்வயி விக்ரமம் ச த்ருஷ்ட்வா தஸ்யாகமநம் யுக்தம்) தேவர் திருவுள்ளத்திலே புண்படும்படி ராவணன் பண்ணின தண்மையைக்கண்டும், துராத்மாக்களை அநாயாஸேந கொல்லவல்ல ஆண்பிள்ளைத் தனத்தை தேவரீர் பக்கலிலே கண்டும் வருகை யுக்தம். (தஸ்ய புத்திதஸ் ஸத்ருமம்) ந்யாயத்திலே ஸஞ்சரிக்கும் அவன் புத்திக்கும் ஸத்ருமம். ராவணன் தன்னைக் கொல்லப்புக, தூதவதம் யுக்தமல்ல என்றவனுகையாலே கைக்கொண்டானிறே.

யுத்தகாண்டம் 17–வது ஸர்க்கம், 57–வது ச்லோகம்

अज्ञातरूपैः पुरुषैस्स राजन् पृच्छयतामिति।
यदुक्तं तत्र मे प्रेक्षा काचिदस्ति समीक्षिता॥

அஜ்ஞாதரூபை: புருஷைஸ்ஸ ராஜந் ப்ருச்ச்யதாமிதி।
யதுக்தம் தத்ர மே ப்ரேக்ஷா காசிதஸ்தி ஸமீக்ஷிதா॥

பதவுரை:—ராஜந்—அரசரே!, அஜ்ஞாதரூபை:—அறியத்தகாத கருத்தையுடைய, புருஷை:-புருஷர்களால், ஸ:-அந்த விபீஷணன், ப்ருச்ச்யதாம்–கேட்கப்படட்டும், இதி–என்று, தவ–உம்முடைய, ஸசிவை:-மந்திரிகளாலே, யத்-யாதொரு வசனம், உக்தம்–சொல்லப்பட்டதோ, தத்ர-அந்தப் பக்ஷத்தில், மே–எனக்கு, ஸமீக்ஷிதா—நன்ருகப் பரிசீலனம் பண்ணப்பட்ட, காசித்-ஒரு, ப்ரேக்ஷா-யுக்தி, அஸ்தி-இருக்கிறது.

வ்யா:—(ராவணனிடம் துஷ்டத்தனத்தையும் அப்படியே உம்மிடம் பராக்ரமத்தையும் கண்டு அவன் வருவது பொருத்தமே) தேவர் திருவுள்ளத்திலே புண்படும்படி ராவணன் பண்ணின பார்யாபஹாரமாகிற தீச்செயலைக் கண்டும், கரதூஷணுதியர், மாரீசன், வாலி முதலான துஷ்டர்களை விளையாட்டாகக் கொல்லவல்ல ஆண்மையை தேவரீரிடம் கண்டும் வருவது பொருத்தமே. (அவன் அறிவின்படி தக்கதே) நீதிவழி நடக்கும் அவன் அறிவுக்கும் தக்கதே. ராவணன் (அனுமனுகிற) தன்னைக் கொல்ல நினைத்தபோது தூதனைக் கொல்லுவது தகாது என்றவனுகையாலே'. அனுமன் இவனை நீதிமானென்று ஏற்றுக்கொண்டானன்ருே.

அவதாரிகை:-அநந்தரம் மைந்தபக்ஷத்தை தூஷிக்கிறுன்.

வ்யா:-(அஜ்ஞாதரூபை: புருஷை:) அஜ்ஞாதாபிப்ராயை:. தந்தாம் நினைவை எதிரிகள் அறியாதபடி மறைத்துச் சொன்ன புருஷர்களாலே. (ஸ ப்ருச்யதாமிதி தவ ஸசிவை: யதுக்தம் ராஜந்) தேவர் ராஜாக்களானல், வக்தாக்கள் ஸுஹ்ருத்துக்களென்றல் ந்யாயபஹிஷ்டமான வார்த்தையைக் கேட்கக்கடவதோ? என்கை. (தத்ர ஸமீக்ஷிதா ப்ரேக்ஷா காசிதஸ்தி) இம்மதத்திலே நீதிவிரோதத்தைப் பற்றி என்னல் நிரூபிதையாயிருப்பதொரு புத்தியுண்டு.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 58-வது ச்லோகம்

पृच्छ्यमानो विशङ्केत सहसा बुद्धिमान्वचः।
तत्र मित्रं प्रदुष्येत मिथ्यापृष्टं सुखागतम्॥

ப்ருச்ச்யமாநோ விஶங்கேத ஸஹஸா புத்திமாந் வச:।
தத்ர மித்ரம் ப்ரதூஷ்யேத மித்யாப்ரஷ்டு: ஸுகாகதம்॥

பதவுரை: — புத்திமாந் — அறிவாளியான விபீஷணன், ஸஹஸா-சடக்கென, வச: ப்ருச்ச்யமாந:-வார்த்தை கேட்கப் பட்டனுய்க்கொண்டு, விஶங்கேத-ஐயமுறுவான். தத்ர-ஐய முற்றவுடன் மித்யாப்ரஷ்டு:-பொய்யாகக் கேட்கிறவனுக்கு, மித்ரம்-நண்பன். ப்ரதூஷ்யேத—கெட்டுவிடுவான்.

அவதாரிகை:—அடுத்தபடியாக மூன்று ச்லோகங்களாலே மைந்தருடைய கருத்தைக் கண்டிக்கிறுன் அனுமன்.

வ்பா:—(கருத்தறியமுடியாத புருஷர்களாலே) நம்முடைய கருத்தை எதிரிகள் அறியாதபடி மறைத்துச் சொன்ன புருஷர்களாலே. (அரசரே! அவன் கேட்கப்படட்டும் என்று உம்முடைய மந்திரிகளாலே யாதொன்று சொல்லப்பட்டதோ) 'ராஜந்' (அரசரே) என்று கூப்பிடுகையாலே, தேவரீர் அரசராயிருக்கும்போது, உமக்கு உபதேசிப்பவர்கள் நண்பர்கள் என்பதைமாத்திரம்கொண்டு நீதிக்குப் புறம்பான வார்த்தையைக் கேட்கலாமோ என்ற கருத்து வெளிப்படுகிறது. (அது விஷயத்தில் நன்கு ஆராயப்பட்ட கருத்து ஒன்று எனக்கு உண்டு) இந்த மதத்திலே நீதிவிரோதமுண்டென்பதுபற்றி என்னல் நிரூபிக்கப்பட்டிருக்கும் கருத்தொன்று உண்டு.

அவதாரிகை:—அது என்னென்ன, இன்னதென்கிறான்.

வ்யா:—(ஸஹஸா வச: ப்ருச்ச்யமாந: ஸ புத்திமாந் விஶங்கேத) தன்னை ஸ்வீகரிப்பதற்கு முன்னே ராவணன் வசனத்தை ப்ரஶ்நம்பண்ணினால், இது ஸ்வீகாரத்துக்குப் பின்பு கார்யவிசாரஸமயத்திலே கேட்குமதுவென்று அறியும் புத்தியோகத்தையுடையவன் ஸ்வநிகர்ஷத்தை முன்னிட்டு ஶரணம்புக்க நம்பக்கலிலே ஶத்ருபுத்தியைப் பண்ணினாரோவென்று மிகவும் ஶங்கிக்கும். ஶங்கையில் வரும் அநர்த்தத்தைச் சொல்லுகிறதுமேல் அர்த்தத்தாலே. (தத்ர) ஶங்கித்தவளவிலே. (மித்யா ப்ரஷ்டு:) ஒன்றை நினைத்து ஒன்றைக் கேட்குமவனுக்கு. (ஸுகாகதம் மித்ரம் ப்ரதூஷ்யேத) இருகைமுடவன் தலையிலே கங்கை குதித்தாற்போலே, அநாயாஸேந வந்த மித்ரம் இழக்கவரும். (மித்யா ப்ருஷ்டம்) என்று பாடமானபோது மித்ரவிஶேஷணமாய் பொய்யே சிலவற்றைக் கேட்கிற மித்ரம் என்றுமாம்.

அவதாரிகை:—அக்கருத்து யாதெனில்: அதைக்கூறுகிறான் இந்த ச்லோகத்தில்.

வ்யா:—(சடக்கென வார்த்தைகளைக் கேட்டால் அறிவுடைய அவன் ஐயமுறுவான்) தன்னை ஏற்றுக்கொள்ளுமுன் ராவணன் விஷயமான வார்த்தையைக் கேட்டால், "இது நம்மை ஏற்றுக்கொண்டபின், செய்ய வேண்டியதை ஆலோசிக்கும்போது கேட்கவேண்டியதன்றோ" என்று அறியும் அறிவாளியான விபீஷணன், 'தன் தாழ்ச்சியைச் சொல்லிக்கொண்டு சரணம் புகுந்த நம் விஷயத்திலே எதிரியென்று நினைவுகொண்டாரோ' என்று ஐயமுறுவான். இப்படி ஐயமுற்றால் வரும் கேட்டைச் சொல்லுகிறது மேல் பாதிச்லோகத்தாலே: (அவ்வளவில்) ஐயமுற்றவளவில். (பொய்யாகக் கேட்கிறவனுக்கு) இவனுடைய கருத்தறிய நினைத்து வேறொன்றைக் கேட்கிறவனுக்கு. (சிரமப்படாமல் வந்த நண்பனை இழக்க நேரிடும்) இருகைகால்களையிழந்த முடவன் தலையிலே கங்கை விழுந்தாற்போலே சிரமப்படாமல் வந்த நண்பனை இழக்கநேரிடும். (மித்யாப்ருஷ்டம்) என்று பாடமானபோது மித்ரசப்தத்துக்கு விசேஷணமாய், பொய்யாகச் சிலவற்றைக் கேட்கப்படுகிற நண்பன் என்று பொருளாகிறது.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 59-வது ச்லோகம்

अशक्यः सहसा राजन् भावो वेत्तुं परस्य वै।
अन्तःस्वभावैर्गीतैस्तैर्नैपुण्यं पश्यतो भृशम्॥

அஶக்ய: ஸஹஸா ராஜந் பாவோ வேத்தும் பரஸ்ய வை।
அந்த: ஸ்வபாவைர் கீதைஸ் தைர் நைபுண்யம் பச்யதோ ப்ருஶம்॥

பதவுரை:—ராஜந்—*அரசே!* ப்ருஶம்—*மிகவும்,* நைபுண்யம்-*குறிக்கொண்டு,* பச்யத:-(*தன் காரியத்தைப்*) *பார்க்கும்* பரஸ்ய—*எதிரியினுடைய,* அந்த: ஸ்வபாவை:—*உள்ளே மறைந்திருக்கும் கருத்தையுடைய,* தை:-*அந்த,* கீதை:-*பதிலுரைகளாலே,* பாவ:-(*அவனுடைய*) *கருத்து,* வேத்தும்—*அறிவதற்கு,* அஶக்யம்—*முடிவதன்று.*

அவதாரிகை:—''*மித்ரத்தை இழக்குமளவேயன்று; அவன் நினைவு ஆராயவுமொண்ணாது*'' என்கிறுன்.

வ்யா:—(*பரஸ்ய வை பாவ: ஸஹஸா வேத்துமஶக்ய:*) *சிரபரிசயத்தாலே அந்யனுடைய ஹ்ருதயத்தை அறியுமதொழியச் சடக்கென அறியப்போகாது.* எங்ஙனேயென்னில்: (ப்ருஶம் நைபுண்யம் பஶ்யத: பரஸ்ய அந்த:ஸ்வபாவை: தைர் கீதை: பாவ: வேத்துமஶக்ய:) துஷ்ட ஸ்வ

அவதாரிகை:—"*முன் சுலோகத்தில் சொன்னதுபோலே நண்பனை யிழப்பதுமாத்திரமல்ல; அவன் நினைவை அறியவும் முடியாது*" என்று *கூறி மைந்தபக்ஷதூஷணத்தை அனுமன் முடிக்கிறுன்* ''அசக்ய:'' என்னும் *சுலோகத்திலே.*

வ்யா:-(*எதிரியின் கருத்தைச் சடக்கென அறியமுடியாது*) நெடுநாள் *பழகிப் பிறருடைய கருத்தை அறியலாமேயொழிய திடீரென அறிய முடியாது. ஏனெனில்:* (*மிகவும் நிபுணனாகக் காரியம் பார்க்கும் எதிரியினுடைய உள்ளடக்கிய கருத்தையுடைய அந்த வார்த்தைகளால் கருத்தை அறியமுடியாது*) *தூர்க்குணங்களையுடையவனுய் தன் காரியத்தைக் குறிக்*

பாவனுய், ஸ்வார்த்தத்தை நிபுணமாகப் பார்க்கிறவனுடைய கூடாபிப்ராயமான உத்தரவசநங்களாலே பாவம் அறியப்போகாது. (அந்த:ஸ்வபாவை:) தன்னுடைய பாவம் வசனத்திலே தோற்றுதே நெஞ்சிலே கிடக்கை. (ராஜந்) நீதிஜ்ஞரான தேவர்க்கு அஜ்ஞாதமுண்டோ? என்கை. நீ உன்னுடைய பாவத்தை மறைத்து ப்ரச்நம் பண்ணினவோபாதி அவனும் தன்னுடைய பாவத்தை மறைத்துத் தான் உத்தரம் சொன்னுல் அறியப்போமோ அவனுடைய பாவம்? என்கை.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 60-வது ச்லோகம்

न त्वस्य ब्रुवतो जातु लक्ष्यते दुष्टभावता।
प्रसन्नं वदनं चापि तस्मान्मे नास्ति संशयः॥

ந த்வஸ்யய ப்ருவதோ ஜாது லக்ஷ்யதே துஷ்டபாவதா।
ப்ரஸந்நம் வதநம் சாபி தஸ்மாந்மே நாஸ்தி ஸம்ஶய:॥

பதவுரை:—ப்ருவத: அஸ்ய—வார்த்தை சொல்லும் இவனுக்கு, ஜாது—ஒருபோதும், துஷ்டபாவதா—துஷ்டத்தனம், ந லக்ஷ்யதே—காணப்படவில்லை. வதநம் ச—முகமும், ப்ரஸந்நம்—தெளிந்திருக்கிறது; தஸ்மாத்—ஆகையால், மே—எனக்கு, ஸம்ஶய:—ஐயம், ந அஸ்தி—இல்லை.

கொண்டு பார்க்கும் எதிரியினுடைய உள்ளடக்கிய கருத்தையுடைய பதிலுரைகளாலே அவனுடைய கருத்தை அறியமுடியாது. ஆகையால் மைந்தபக்ஷம் காரியசாத்தியமன்று என்று கருத்து. (அந்தஸ் ஸ்வபாவை:— உள்ளடக்கிய தன் கருத்தையுடைய வார்த்தைகளாலே) "கிதை:" (வார்த்தைகளாலே) என்றதற்கு விசேஷணம். தன்னுடைய கருத்து வார்த்தையில் தோற்றுமல் நெஞ்சினுள்ளே புதைந்துகிடக்கும் என்று கருத்து. (அரசே) ராஜநீதியறிந்த அரசரான தேவரீருக்கு அறியாததுண்டோ? என்கை. "கேள்விகேட்டுக் கருத்தறியலாம்" என்ற மைந்தபக்ஷத்தில் அனுமன் சொன்ன தோஷத்தின் ஸாரமாவது:-"நீ உன்னுடைய கருத்தை மறைத்து அவனைக் கேள்வி கேட்டதுபோலே, அவனும் தன்னுடைய கருத்தை மறைத்துத் தான் பதில் சொன்னுல் அவனுடைய கருத்தை உன்னுல் அறியமுடியுமோ" என்பது.

அவதாரிகை:—இப்படி பரமதத்தை நிரஸநம்பண்ணி ஸ்வஸித்தாந்தத்தை உபந்யஸிக்கிறன்.

வ்யா:—(அஸ்ய ப்ருவத: துஷ்டபாவதா ஜாது ந லக்ஷ்யதே) இவன் வார்த்தை சொல்லுகிறவிடத்தில் துஷ்டபாவதை ஒருகாலும் காணப்படுகிறதில்லை. அநாதரே ஷஷ்டீ. (ஜாது) துஷ்டபாவனுகில் தன் தோஷத்தை மறைத்தாலும் ஓரளவுகளிலே ப்ரகாஶிக்கும். இவன்பக்கல் ஸர்வகாலமும் தோற்றுகிறதில்லை. துஷ்டபாவமாவது-துஷ்டனுடைய சேஷ்டை; அதாவது-முகவிகாரம், ஸ்வேதகம்பாதி: (स्वेद-कम्पादिः). கதி:, நிரீக்ஷணம், ஆலோகநம் இவை தொடக்கமானவை துஷ்டசேஷ்டிதங்களாக ஶாஸ்த்ரங்களிலே ப்ரஸித்தம். ததா ச யாஜ்ஞவல்க்ய:—"देशाद्देशान्तरं याति सृक्विणी परिलेढि च। ललाटं स्विद्यते चास्य मुखं वैवर्ण्यमेति च॥ परिशुष्यत्स्खल

அவதாரிகை:—இவ்வண்ணமாகப் பிறருடைய பக்ஷங்களை தூஷித்து தன் முடிவைக் கூறுகிறன் இனி வரும் ஏழு சுலோகங்கள் கொண்ட ஸர்க்க சேஷத்தாலே. ஸ்வபக்ஷத்தின் தொடக்கம் "நத்வஸ்ய" என்னும் சுலோகம்.

வ்யா:-(இவன் மிகப்பேசும்போதும் துஷ்டத்தனம் ஒருபோதும் காணப்படவில்லை) ஸாதாரணமாக, துஷ்டனொருவன் அதிகமாகப் பேசினுல் எப்போதாவது துஷ்டத்தனம் வெளிவந்துவிடும். இவன் அதிகமாக வார்த்தை சொன்னபோதிலும் துஷ்டத்தன்மை ஒருபோதும் காணப்படவில்லை. ஆகையால் இவன் துஷ்டனுயிருக்கமுடியாது. (ஒருபோதும்) தீயகருத்தையுடையவனுகில், எவ்வளவுதான் தன் தீயகருத்தை மறைக்க முயன்றுலும், ஒருபோதில்லாவிடில் ஒருபோதாவது கருத்து முகபாவங்களிலே வெளிப்பட்டுவிடும். இவனிடம் எல்லாப்போதிலும் அப்படி வெளிப்படவில்லையாகையால் நல்லவனே இவன். "லக்ஷ்யதே" (காணப்படவில்லை) என்று கண்ணுல் காணத்தக்கதாகச் சொல்லுகையாலே, துஷ்டபாவம் என்றது துஷ்டனுடைய நினைவன்று; துஷ்டனுடைய முகபாவத்தை, அதாவது சேஷ்டையைச் சொல்லுகிறது. முகவிகாரம், வியர்ப்பது நடுங்குவது முதலான சரீரவிகாரம், நடை, பார்வை, சுற்றும்முற்றும் பார்த்தல் முதலானவை துஷ்டனுடைய சேஷ்டைகளாக சாஸ்திரங்களிலே பிரஸித்தம்; "இடம்விட்டு இடம் பெயருவான்; கடைவாய் இரண்டையும்

द्वाक्यो विरुद्धं प्रतिभाषते। स्वभावाद्विकृतिं गच्छेन्मनोवाक्कायकर्मभिः॥'' (தேஶாத் தேஶாந்தரம் யாதி ஸ்ருக்விணீ பரிலேடி ச। லலாடம் ஸ்வித்யதே சாத்ர முகம் வைவர்ண்யமேதி ச॥ பரிஶுஷ்யத் ஸ்கலத்வாக்யோ விருத்தம் ப்ரதிபாஷதே। ஸ்வபாவாத் விக்ருதிம் கச்சேத் மநோவாக்காயகர்மபி:॥) இத்யாதி. மநுரபி- "बाह्यैर्विभाव्यते लिङ्गैर्भावमन्तर्गतं नृणां। स्वरवर्णेङ्गिताकारैश्चक्षुषा चेष्टितेन च॥ आकारैरिङ्गितैर्गत्या चेष्टया भाषितेन वा। नेत्रवक्त्रविकारैश्च दृश्यतेऽन्तर्गतं मनः॥'' (பாஹ்யைர் விபாவ்யதே லிங்கைர் பாவமந்தர்க்கதம் ந்ருணாம்। ஸ்வரவர்ணேங்கிதாகாரைஶ் சக்ஷுஷா சேஷ்டிதேந ச॥ ஆகாரைரிங்கிதைர் கத்யா சேஷ்டயா பாஷிதேந வா। நேத்ரவக்த்ரவிகாரைச்ச த்ருச்யதேऽந்தர்க்கதம் மந:॥) இத்யாதி:. இவன்பக்கல் துஷ்டலிங்கங்களில்லாமையேயன்று; ஶுத்தனென்னுமிடத்துக்கு லிங்கமுண்டு என்கிறான்,-(ப்ரஸந்தம் வதநம் சாபி) என்கிற

நக்குவான்; இவனுடைய நெற்றி வியர்க்கும்; முகம் வெளுக்கும்; வார்த்தை வறண்டு தடுமாறும்; முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவான்; மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களிலும் இயற்கை நிலையினின்றும் மாறுபாடடைவான். (இப்படிப்பட்டவன் துஷ்டனாவான்)" [யாஜ்ஞவல்க்யஸ்மிருதி 2-13, 14] என்று யாஜ்ஞவல்க்யர் உரைத்தார். "மனிதர்களின் உள்ளிருக்கும் உள்ளக் கருத்து வெளியிலுள்ள அடையாளங்களால் அறியப்படும். பேச்சின் (தழுதழுத்தல் முதலான) ஸ்வரம், முகத்தின் (கறுப்பு முதலான) நிறம், (கீழ்நோக்குதல் முதலான) இங்கிதம், (வியர்வை முதலான) ஆகாரம், கண்பார்வை, சேஷ்டைகள் ஆகிய அடையாளங்களைக்கொண்டு மனிதனின் உள்ளிருக்கும் கருத்தை அறியக்கடவன். ஆகாரங்களாலும், இங்கிதங்களாலும், நடையாலும், சேஷ்டையாலும், மொழியாலும், கண்ணும் வாயும் வேறுபடுவதாலும், உள்ளிருக்கும் மனம் அறியப்படுகிறது" [மநு 8-25, 26] என்றுதொடங்கி மனுவும் உரைத்தார். இப்படிச் சொல்லப்பட்ட துஷ்டனின் அடையாளங்கள் இவனிடம் இல்லையென்பது மாத்திரமல்ல; இவன் பரிசுத்தன் என்பதற்கும் அடையாளமுண்டென்கிறான் மேலே,-(முகம் தெளிவாகவேயிருக்கிறது) சகாரம் ஏகாரப்பொருளுடையது. துஷ்டனாயிருந்தால் ஒருகால் தெளிவாயிருந்தாலும், ஒருகால் கலக்கமும் காணப்படும். இவன் முகம் எப்போதும் தெளிவாகவேயிருக்கிறது. வழிப்பறிகொடுத்தவன் தாய்முகத்

வாக்யத்தாலே. இவனுடைய முகம் ப்ரஸந்நமாயே இரா நின்றது. வழியடியுண்டவன் தாய்முகத்திலே விழித்தாற் போலே, இவன் முகம் குளிர்ந்தன்றோ இருக்கிறது. முக ப்ரஸாதம் ஶுத்தலிங்கமாக ப்ரஸித்தம்; யதா ஸ்ரீமத் கிஷ்கிந்தாகாண்டே - "न मुखे नेत्रयोर्वापि ललाटे च भ्रुवोस्तथा। अन्येष्वपि च सर्वेषु दोषः संविदितः क्वचित्॥" (ந முகே நேத்ரயோர் வாபி லலாடே ச ப்ருவோஸ் ததா। அந்யேஷ்வபி ச ஸர்வேஷு தோஷ: ஸம்விதித: க்வசித்॥) இதி. (தஸ்மாந்மே நாஸ்தி ஸம்ஶய:) இவன் பக்கத்தில் தோஷ ராஹித்யத்தாலும், குணசேஷ்டா வைலக்ஷண்யத்தாலும், "सर्वथा शङ्क्य एव हि" (ஸர்வதா ஶங்க்ய ஏவ ஹி) "सर्वथा शङ्क्यतामयं" (ஸர்வதா ஶங்க்யதாமயம்) என்று முதலிகளுக் குண்டான ஸம்ஶயம் எனக்கு இல்லையென்கிறான்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 61-வதுச்லோகம்

अशङ्कितमतिः स्वस्थो नशठः परिसर्पति।
न चास्य दुष्टवागस्ति तस्मान्नास्तीह संशयः॥

அஶங்கிதமதி: ஸ்வஸ்தோ நஶட: பரிஸர்ப்பதி।
ந சாஸ்ய துஷ்டவாகஸ்தி தஸ்மாந் நாஸ்தீஹ ஸம்ஶய:॥

திலே விழித்தாற்போலன்றோ ராவணனைவிட்டுநீங்கி ராமன் முகத்தில் விழிக்கும் இவனுடைய முகம் குளிர்ந்திருக்கிறது. முகத்தெளிவு மனச்சுத்தியுடையவனுக்கு அடையாளமென்பது சாஸ்திரங்களிலே பிரஸித்தம். "இவனுடைய முகத்திலோ, கண்களிலோ, நெற்றியிலோ, புருவங்களிலோ, மற்ற எல்லா அவயவங்களிலுமோ ஒரு குற்றமும் காணப்படவில்லை" [ரா-கி 3-30] என்று கிஷ்கிந்தாகாண்டத்தில் அனுமன் விஷயமாக ராமபிரான் வார்த்தை. (ஆகையால் எனக்கு ஐயமில்லை) இவனிடம் குற்றமில்லையாகையாலும், குணசேஷ்டைகள் நன்மை நிறைந்து விளங்குகையாலும், "எல்லாப்படியாலும் இவன் ஐயமுறத்தக்கவனேயன்றோ" [ரா-யு 17-37] "எல்லாப்படியாலும் இவன் சங்கிக்கப்படட்டும்" [ரா-யு 17-44] என்று மற்ற வானரர்தலைவர்களுக்குண்டான ஸந்தேகம் எனக்கில்லை என்கிறான்.

பதவுரை:-அஶங்கிதமதி:-ஐயமற்ற மனத்தினனாய், ஸ்வஸ்த:—தன் நிலையினின்றும் பிறழாதவனாய், நசட:—துஷ்டனல்லாதவனாய், பரிஸர்ப்பதி—அருகில் வருகிறான். அஸ்ய—இவனுக்கு, துஷ்டவாக் ந அஸ்தி—தோஷமுள்ள வார்த்தையில்லை. தஸ்மாத்-ஆகையால், இஹ-இவன் விஷயத்தில், ந ஸம்ஶய:—(எவருக்கும்) ஐயம்வேண்டியதில்லை.

அவதாரிகை:—இவன் வந்தபடியாலும், வார்த்தை சொன்னபடியாலும் எனக்கேயல்ல, இவனளவில் ஸர்வர்க்கும் ஶங்கிக்க இடமில்லையென்கிறான்.

வ்யா:—(அஶங்கிததமதி: ஸ்வஸ்த:) முதலிகள் "सालानुद्यम्य शैलांश्च" (ஸாலாநுத்யம்ய ஶைலாம்ச்ச) என்று தன்னைக் குறித்துக் கல்லும் தடியுமானவளவிலும், புத்தியில் இவர்கள்பக்கல் ப்ரதிகூலஶங்கையின்றிக்கே வந்தான். (நஶட: பரிஸர்ப்பதி) பரிஸர்ப்பணமாவது-பரிஸமாகமநம். தனக்கு ஓர் அபாச்ரயம் தேடிவருவாரைப்போலே கிட்ட வந்தான். "राक्षसोऽभ्येति" (ராக்ஷஸோऽப்யேதி) என்று நம்மை மதியாதே மேலிட்டு வந்தானென்று முதலிகளும் பயப்படும்படியிறே கிட்டிக்கொண்டுநின்றது. இப்படியோ

அவதாரிகை:—இவன் வந்தபடியையும், வார்த்தை சொன்னபடியையும் கண்டால், எனக்கு மாத்திரமல்லாமல் இவனை எவருமே ஸந்தேஹிக்க இடமில்லை என்கிறான் 'அசங்கித'மென்று தொடங்கும் சுலோகத்திலே.

வ்யா:—(சங்கையில்லாமல் தன்னிலையில் மிகப்பொருந்தியிருப்பவன்) வானரர்தலைவர்கள் "மரங்களையும் மலைகளையும் எடுத்துக்கொண்டு" [ரா-யு 17-6] என்கிறபடியே தன்னைக் குறித்து எறிவதற்காகக் கல்லும் தடியும் (கல்-மலை; தடி-மரம்) ஏந்திய கையரானபோதும், தன் புத்தியில் 'இவர்கள் நமக்கு எதிரிகள்' என்னும் ஸந்தேஹமுமில்லாமல் தன்னிலையினின்றும் ஒரு சிறிதும் பிறழாமல் வந்தான். (தீமையற்றவனாய் அருகில் வந்தான்) பரிஸர்ப்பணமாவது:-ஆதரத்தோடு கிட்டவருகை. களைத்துக் கிடப்பார் தமக்கு ஓர் சாய்மானம் தேடிவருவதுபோலே நம்மருகில் அன்போடுவந்தான். "அரக்கன் வருகிறான்" [ரா-யு 17-ப] என்று 'நம்மைக் கணிசியாமல் வெற்றிகொள்ள வருகிறான்' என்று சுக்கிரீவனும் பயப்படும்

துஷ்டபாவருடைய படி இருப்பது? (ந சாஸ்ய துஷ்டவாகஸ்தி) இவன் வாக்வ்யாபாரத்தில் தளப்பமில்லை. துஷ்டருடைய வாக்வ்யாபாரம் ஸ்கலநாதிதூஷிதமாயிறேயிருப்பது. (தஸ்மாத் இஹ நாஸ்து ஸம்ஶய:) எனக்கேயல்ல, அஸ்தாநே பயஶங்கிகளுக்கும் இவன் விஷயத்தில் ஶங்கை வேண்டா.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 62-வது ச்லோகம்

आकारश्छाद्यमानोऽपि न शक्यो विनिगूहितुं।
बलाद्धि विवृणोत्येव भावमन्तर्गतं नृणां॥

ஆகாரஶ் சாத்யமாநோऽபி ந ஶக்யோ விநிகூஹிதும்।
பலாத்தி விவ்ருணோத்யேவ பாவமந்தர்க்கதம் ந்ருணாம்॥

பதவுரை:—ஆகார:-சரீரவிகாரம், சாத்யமாந: அபி-மறைக்கப்பட்டபோதிலும், விநிகூஹிதும்—மறைப்பதற்கு, ந ஶக்ய:-கூடாததாகும். ஹி-ஏனெனில்: ந்ருணாம்—மனிதர்களுடைய அந்தர்க்கதம்—உள்ளேயிருக்கும், பாவம்—(தீய) கருத்தை, பலாத்-(இவனையும் மீறி) பலாத்காரமாக, விவ்ருணோதி ஏவ-(மறைக்கமுயலும் சரீரவிகாரம்) காட்டிக்கொடுத்தேவிடும்.

படியன்றே இவன் அருகில் வந்தது. தீயசிந்தனையுடையாருடைய தன்மை இப்படியிராதே; மனக்குற்றத்தாலே அருகில்வர அஞ்சி தூரத்தில் ஒதுங்கியன்றே நிற்பார்கள். (இவனிடம் சொற்குற்றமில்லை) இவன் பேசும்போது சொல்லில் தளும்புதலில்லை. துஷ்டர் பேசினால், அவர்களுடைய பேச்சு, தடுமாற்றம் முதலான குற்றங்களையுடையதாயன்றே இருக்கும். ஆகையால் இவன் குற்றமற்றவன். (ஆகையால் இவன் விஷயத்தில் ஐயமென்பதே இல்லை) இன்னுருக்கு என்னுமையாலே, "எனக்குமாத்திரமல்ல; தகாதவிடத்திலும் பயத்தை விளைக்கும்படியான ராமபக்தியுடைய மற்ற வானரமுதலிகளுக்கும் இவன் விஷயத்தில் ஐயம் வேண்டா" என்று கருத்து.

அவதாரிகை:—அவன் விப்ரலம்பத்தை மெய்யாக நினைத்துச் சொல்லுகிறாய் என்று முதலிகளுடைய நினைவாகச் சொல்லுகிறான்.

வ்யா:—(ஆகார:) ஶரீரவிகார: (சாத்யமாநோऽபி) சாதிக்கக்கடவதாக இவன் ப்ரவர்த்தித்தாலும். (ந ஶக்யோ விநிகூஹிதும்) மநஸ்ஸு அந்யதாகரித்திருக்கையாலே இவனால் மறைக்கப்போகாது. மறைக்கப்போகாமைக்கு ஹேது சொல்லுகிறது.—(ந்ருணாமந்தர்க்கதம் பாவம் பலாத் விவ்ருணோத்யேவ) இவன் மறையாநிற்கச் செய்தேயும் இந்த விகாரம் ஸ்வபலத்தாலே புருஷனை அபிபவித்துத் தனக்கடியாய் நமக்குத் தோற்றாதேயிருக்கும் பாவதோஷத்தை ப்ரகாசிப்பியாநிற்கும். (ஹி) ஹேதௌ. அவதாரணத்தால் தப்பாதென்கை. அத்ர மநு:— "आकारैरिङ्गितैर्गत्या" (ஆகாரைரிங்கிதைர் கத்யா) இத்யாதி.

அவதாரிகை:-'அவனுடைய வஞ்சகவேஷத்தை உண்மையாக நினைத்துச் சொல்லுகிறாய்' என்று மற்ற வானரர்களுடைய நினைவாகக்கொண்டு, பதில் உரைக்கிறான் (ஆகார:) என்று தொடங்கும் சுலோகத்தாலே.

வ்யா:-(ஆகாரம்) சரீரவிகாரம். (மறைக்கப்பட்டபோதிலும்) 'மறைத்து விடலாம்' என்று நினைத்து மறைக்கமுயன்றாலும். (மறைக்க இயலாது) மனம் வேறுபட்டிருக்கையாலே, மனத்தையொட்டியிருக்கும் சரீரவிகாரத்தை இவனால் முழுவதும் மறைத்துவிடமுடியாது. தீயகருத்தை மறைக்கமுடியாமைக்குக் காரணம் காட்டுகிறது மேலே,—(மனிதர்களின் உள்ளிருக்கும் கருத்தை பலாத்காரமாக வெளிப்படுத்தியேவிடும்) வெளியே தெரியும் சரீரவிகாரம், உள்ளிருக்கும் கருத்தை மனிதன் மறைத்தபோதிலும், தன் பலத்தாலே மனிதனை வெற்றிகொண்டு, தனக்குக் காரணமாய் மற்றவர்களுக்குத் தோற்றாமலிருக்கும் மநோவிகாரத்தை வெளிப்படுத்திவிடும். (ஹி-ஏனெனில்) மநோவிகாரத்தை மறைக்கமுடியாமைக்குக் காரணம் காட்டுகிறது இவ்வாக்கியம். (வெளிப்படுத்தியேவிடும்) என்ற விடத்தில் ஏகாரத்தாலே இதைத் தவிர்க்கமுடியாதென்று காட்டுகிறது. "ந த்வஸ்ய" [ரா-யு 17-60] என்ற சுலோகத்தின் வியாக்கியானத்தில் எடுக்கப்பட்ட "ஆகாரைரிங்கிதைர் கத்யா" [மநு 8-26] என்னும் மநு வசனம் இங்கு ப்ரமாணமாகும்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 63-வது ச்லோகம்

देशकालोपपन्नं च कार्यं कार्यविदां वर।
सफलं कुरु ते क्षिप्रं प्रयोगेणाभिसंहितम्॥

தேஶகாலோபபந்நம் ச கார்யம் கார்யவிதாம் வர।
ஸபலம் குரு தே க்ஷிப்ரம் ப்ரயோகேணாபிஸம்ஹிதம்॥

பதவுரை:—கார்யவிதாம் வர—செய்வன அறிவாரில் சிறந்தவரே! தேஶகாலோபபந்நம்—தேசகாலங்களோடு பொருந்திய, கார்யம்—(விபீஷண ஸ்வீகாரமாகிற) காரியத்தை, ப்ரயோகேண-அநுஷ்டானத்தோடு, அபிஸம்ஹிதம்-கூடியதாகவும், தே—தேவரீருக்கு, ஸபலம்—பயனுடையதாகவும், க்ஷிப்ரம்—விரைவில், குரு—செய்வீராக.

அவதாரிகை:—இப்படி பரிசுத்தமாய், தைவாதாகதமான மித்ரத்தைப் பரிக்ரஹித்து தேவருடைய ரக்ஷகத்வத்தையும் அவனுடைய வரவையும் ஸபலமாக்கியருளவேணுமென்று ஸித்தாந்தத்தை நிகமிக்கிறார்.

வ்யா:-(தேஶகாலோபபந்நம் ச கார்யம் க்ஷிப்ரம் ப்ரயோகேணாபிஸம்ஹிதம் தே ஸபலம் குரு) (தேஶகாலோபபந்நம் ச) என்று அவன் வரவுக்கு தேஶகாலங்கள் யோக்ய

அவதாரிகை:—''இப்படித் தூய்மையுடையவனாய், அதிருஷ்டவசமாக நம்மை அடைந்திருக்கும் நண்பனைக் கைக்கொண்டு தேவரீருடைய காக்குமியல்வையும், அவனுடைய வரவையும் பயனுடையதாக்கியருளவேணும்'' என்று தன் பக்ஷத்தை முடிக்கிறான் ''தேசகால'' என்று தொடங்கும் சுலோகத்தாலே.

வ்யா:—(தேசகாலங்களோடு பொருந்தியதான கார்யத்தை விரைவில் அநுஷ்டானபர்யந்தமாக்கி உமக்குப் பயனுண்டாம்படி செய்வீர்) (தேசகாலங்களோடு பொருந்தியது) ''ஸ ஏஷ தேசः காலச்ச'' [ரா-யு 17-55] [இதுவே அவன் வரத்தக்க தேசமும் காலமும்] என்று அவன் வரவுக்கு

மாஞற்போலே, தேவருடைய பரிக்ரஹத்துக்கும் யோக்ய மான தேஶகாலங்கள் என்கை. (கார்யம்) கர்த்தவ்யம். ஸ்வீகாரரூபகர்த்தவ்யத்தை. (க்ஷிப்ரம் ப்ரயோகேணுபி ஸம்ஹிதம் தே ஸபலம் குரு) **"आजगाम मुहूर्तेन"** (ஆஜகாம முஹூர்த்தேந) என்று அவன் துடித்து வந்த வரவுக்கு ஸத்ருஶமாம்படி சடக்கெனவேணும். (கார்யவிதாம் வர) காலாநுகூலமாகவும் கர்த்தவ்யங்களை அறியுமவர்களுக்கு வரணீயரன்றோ தேவர். அதவா, (தேஶகாலோபபந்நம் ச கார்யம் க்ஷிப்ரம் ப்ரயோகேணுபிஸம்ஹிதம் ஸபலம் குருதே) கர்த்தவ்யஜ்ஞாநமுடைய புருஷன், தேஶகாலங்களுக்கு உசிதமான கர்த்தவ்யங்களை ப்ரயோகேண அபிஸம்ஹித மாக்கி ஸபலமாகப் பண்ணுநிற்குமிறே என்றுமாம். (கார்யவிதாம் வர) கர்த்தவ்யஜ்ஞாநமுடையார் படி இது வாஞல், அவர்களுக்கு வரணீயரான தேவர்க்கு அநுஷ்டாந மின்றிக்கேயொழியக் கடவதோ?

தேசகாலங்கள் பொருந்திஞற்போலே, தேவரீர் அவனை ஏற்றுக்கொள்வ தற்கும் பொருந்திய தேசகாலங்கள் இவையே என்கை. (காரியத்தை) செய்யவேண்டியதை, அவனை ஏற்றுக்கொள்வதாகிற அவசியம் செய்ய வேண்டிய செயலை என்றபடி. (விரைவில் அநுஷ்டானத்தோடுகூட்டி உம் காரியம் செய்துகொள்வீர்) "ஒரு முஹூர்த்தத்தில் வந்தான்" [ரா-யு 17-1] என்று அவன் துடித்துவந்த வரவுக்குத் தக்கபடி விரைவில் காரியம் செய்யவேணும். (கார்யமறிந்தவர்களால் விரும்பப்படுமவரே) காலத்திற்குத் தக்கபடி காரியம் செய்யுமவர்களாலும் விரும்பப்படுமவ ரன்றோ தேவரீர். "குருதே" என்று ஒரு பதமாகக்கொண்டு வேஞெரு விதமாகவும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்:—(தேசகாலங்களோடு பொருந்திய கார்யத்தை விரைவில் அநுஷ்டானத்தோடு கூட்டிப் பய னுடையதாம்படி செய்கிருன்) செய்யத்தக்கதை அறியும் அறிவாளியான எந்தப் புருஷனும், தேசகாலங்களுக்குப் பொருந்திய செயல்களை அநுஷ் டானத்தோடுகூட்டிப் பயனுடையதாம்படி செய்வானன்றோ என்று கருத்து. (செயலறிவாரால் விரும்பப்படுமவரே) செயலறியும் எவனுடைய வழியும் இதுவாஞல், செயலறிவார் அனைவராலும் வேண்டப்படும் தேவரீர் இதை அநுஷ்டிக்காமலிருக்கமுடியுமோ என்கை.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம் 64, 65-வது ச்லோகங்கள்

उद्योगं तव संप्रेक्ष्य मिथ्यावृत्तं च रावणम् ।
वालिनं च हतं श्रुत्वा सुग्रीवं चाभिषेचितम् ॥

राज्यं प्रार्थयमानस्तु बुद्धिपूर्वमिहागतः ।
एतावत्तु पुरस्कृत्य विद्यते त्वस्य सङ्ग्रहः ॥

உத்யோகம் தவ ஸம்ப்ரேக்ஷ்ய மித்யாவ்ருத்தம் ச ராவணம் ।
வாலிநஞ்ச ஹதம் ச்ருத்வா ஸுக்ரீவம் சாபிஷேசிதம் ॥

ராஜ்யம் ப்ரார்த்தயமாநஸ்து புத்திபூர்வமிஹாகத: ।
ஏதாவத்து புரஸ்க்ருத்ய வித்யதே த்வஸ்ய ஸங்க்ரஹ: ॥

பதவுரை:—தவ—*உம்முடைய*, உத்யோகம்—*முயற்சியை* ஸம்ப்ரேக்ஷ்ய—*பார்த்து*, மித்யா வ்ருத்தம்—*தீயநடத்தையை யுடைய*, ராவணம் ச—*ராவணனையும்*, ஹதம்—*கொல்லப் பட்ட*, வாலிநம் ச—*வாலியையும்*, அபிஷேசிதம்—*அபிஷேகம் செய்விக்கப்பட்ட*, ஸுக்ரீவம் ச—*சுக்கிரீவனையும்*, ச்ருத்வா—*கேட்டு*, ராஜ்யம்—*ராஜ்யத்தை*, ப்ரார்த்தயமாந: து—*விரும்பிய வனாகவே*, புத்திபூர்வம்—*மனப்பூர்வமாக*, இஹ—*இங்கே*, ஆகத:—*வந்தான்*. ஏதாவத் து—*இவ்வளவையும்*, புரஸ்க்ருத்ய—*முன்னிட்டு*, அஸ்ய ஸங்க்ரஹ:—*இவனை ஏற்றுக்கொள்வது*, வித்யதே து—*செய்யத்தக்கதாகவேயிருக்கிறது*.

அவதாரிகை:—*பந்துக்களையும், ஐச்வர்யத்தையும்விட்டு, வெறுமனே நம் பக்கல் மித்ரதையே ப்ரயோஜநமாக வரக் கூடுமோ? என்னில்: அது கூடாதென்று இருந்தீராகிலும் ப்ராத்ரு நிரஸந பூர்வகமாக நம் பக்கலிலே ராஜ்யத்தை*

அவதாரிகை:—*'உறவினரையும் செல்வத்தையும்விட்டு, ஒருபலனு மில்லாமல் நம்மிடம் நட்பையே பயனாகக்கொண்டு வரக்கூடுமோ' என்று கருத்தாகக்கொண்டு, இவனிடத்தில் அதுகூடுமென்று முன் விவரித்தேன்; அது கூடாதென்று தேவரீர் நினைத்தாலும், தமையனைத்தள்ளி நம்மிடம்*

அபேக்ஷித்து வரக்கூடும்; அப்போதும் பரிக்ராஹ்யன் என்கிறான்,—"உத்யோகம்" இத்யாதியால்.

வ்யா:-அவன் ராஜ்யச்ரத்தைபண்ணி வருகைக்கு ஹேது சொல்லுகிறது,—(தவ உத்யோகம் ஸம்ப்ரேக்ஷ்ய) கரதூஷணத்ரிசிராக்கள் முதலான பதினாலாயிரம் ராக்ஷஸரையும் மூன்றே முக்கால் நாழிகையிலே தனியே அழியச்செய்த தேவர், வெளிநிலமான கடற்கரையிலே ஸபரிகரமாக இட்டுக்கொண்டிருக்கிற ஒரு பாட்டைக்கண்டு. (மித்யாவ்ருத்தம் ச ராவணம் வாலிநம் ச ஹதம் ச்ருத்வா, ஸுக்ரீவம் சாபிஷேசிதம், ராஜ்யம் ப்ரார்த்தயமாநஸ்து, புத்திபூர்வமிஹாகத:) தேவர்க்கு எதிரியான ராவணனுடைய மாயாவ்யாபாரத்தையும், ராவணனிலும் அதிப்ரபலனான வாலியை ஓரம்பாலே உம்மை ஆச்ரயித்த தம்பிக்காக அழியச்செய்தபடியையும் கேட்கையாலும், வாலியினுடைய ராஜ்யத்தில் உமக்கு நசையின்றிக்கே தம்பிக்கே

அவனுடைய அரசாட்சியைப் பெறுவதற்காகவாவது வரக்கூடும்; ஆகையால், அப்பக்ஷத்திலும் இவன் ஏற்றுக்கொள்ளத் தக்கவனே" என்று தொடங்கும் இரு சுலோகங்களாலே.

வ்யா:—அவன் அரசாட்சியை விரும்பி வரக்கூடும் என்பதற்குக் காரணம் காட்டுகிறான் முதல் சுலோகத்தாலே. (தேவரீருடைய முயற்சியைக் கண்டு) கரன், தூஷணன், திரிசிரஸ்ஸு முதலான பதினாலாயிரம் அரக்கரையும் சிறிதநேரத்தில் ஒருவராய்நின்று அழித்த தேவரீர், வெளிநிலமான கடற்கரையிலே வாநரஸேனையுடன் செய்துகொண்டிருக்கும் முயற்சிகளைக்கண்டு. (பொய்நின்ற நடத்தையையுடைய ராவணனையும், (உம்மால்) கொல்லப்பட்ட வாலியையும், முடிசூட்டப்பெற்ற சுக்கிரீவனையும் கேள்விப்பட்டு அரசாட்சியை விரும்பியே மனப்பூர்வமாக இங்கு வந்திருக்கிறான்) தேவரீருக்கு எதிரியான ராவணன் வஞ்சனையாலே பிராட்டியை அபஹரித்ததையும், ராவணனைக்காட்டிலும் வலிமை விஞ்சிய துர்நடத்தையுடைய வாலியை, உம்மைச் சரணடைந்த தம்பி சுக்கிரீவனுக்கு முடிசூட்டுவதற்காக ஓர் அம்பாலே கொன்றதையும் கேட்கையாலும் துஷ்டனான வாலியைக் கொன்று அவனுடைய ராஜ்யத்தை நீர் விரும்பாமல் தம்பி சுக்கிரீவனுக்குக் கொடுத்ததைக் கேள்விப்படுகை

கொடுத்தபடியாலும், ராவணனை அழியச்செய்து ராஜ்யத்தைத் தருவாரென்று ராஜ்யகாங்க்ஷியாய்க்கொண்டு வருகையாலே ஶங்க்யனல்லன்; பரிக்ராஹ்யன். (ஏதாவத் து புரஸ்க்ருத்ய அஸ்ய ஸங்க்ரஹஸ்து வித்யதே) நமக்கு அப்படியே பந்துவாய் வந்தானென்னுமிடம் உம்முடைய பரிகரத்துக்கு ஶங்கநீயமானாலும், ஏதாவந்மாத்ரத்தை முன்னிட்டாகிலும் இவனுடைய ஸங்க்ரஹம் கார்யமே. ப்ரதமத்தில் துஶப்தம் ஸமுச்சயார்த்தம். சரமத்தில் துஶப்தம் அவதாரணார்த்தம்.

யுத்தகாண்டம் 17-வது ஸர்க்கம், 66-வது ச்லோகம்

यथाशक्ति मयोक्तं तु राक्षसस्यार्जवं प्रति।
प्रमाणं त्वं हि सर्वस्य श्रुत्वा बुद्धिमतां वर॥

யதாஶக்தி மயோக்தம் து ராக்ஷஸஸ்யார்ஜவம் ப்ரதி।
ப்ரமாணம் த்வம் ஹி ஸர்வஸ்ய ச்ருத்வா புத்திமதாம் வர॥

பதவுரை:—**ராக்ஷஸஸ்ய**—ராக்ஷஸகுலத்தவனான விபீஷணனுடைய, **ஆர்ஜவம் ப்ரதி**—நேர்மையைக் குறித்து, **மயா**—என்னாலே, **யதா ஶக்தி**—இயன்றவரையில், **உக்தம்**—சொல்லப்பட்டது; **புத்திமதாம் வர**—அறிவாளிகளுள் சிறந்தவரே! **த்வம்**—நீர், **ச்ருத்வா**—கேட்டு, **ஸர்வஸ்ய**—அனைத்துக்கும், **ப்ரமாணம்**—முடிவுகட்டவேண்டியவர்.

யாலும், துஷ்டனான ராவணனை அழித்துத் தம்பியான நமக்கு அரசைத் தருவார் என்று அரசை விரும்பி வந்திருக்கிறானுகையாலே ஐயமுறத்தக்கவனல்லன்; ஏற்றுக்கொள்ளத்தக்கவனே. (இவ்வளவையும் முன்னிட்டு இவனை ஏற்றுக்கொள்வதே தக்கது) நம்மிடம் கைம்மாறு கருதாத நண்பனாய் வந்தானென்பதில் உம் நண்பர்களுக்கு ஐயமிருந்தாலும், கைம்மாறு கருதி வந்தானென்பதை முன்னிட்டாவது இவனை ஏற்றுக்கொள்வது தக்கதே. இப்பக்ஷம் அநுமனுக்கு ஸ்வபக்ஷமன்று என்பதைக் காட்டுகிறது. கடைசி அர்த்தத்தில் முதலில் ''ஏதாவத்து'' என்றவிடத்தில் துசப்தம் முன்ஹேதுக்களோடு கூட்டுகிறது. கடைசியில் ''வித்யதே து'' என்றவிடத்தில் துசப்தம் ஏகாரப்பொருளுடையது.

அவதாரிகை;— ஆக, இப்படி லோகப்ரஸித்தியாலும் இவன் ஸங்க்ராஹ்யன் என்னுமிடத்தைச்சொல்லி, மேல் இவனுடைய சுத்த்யதிஶயத்தை உபபாதித்துக்கொண்டு உக்தத்தை நிகமிக்கிருன்.

வ்யா:—(ராக்ஷஸஸ்யார்ஜவம் ப்ரதி) முதலிகள் ஜாதி மாத்ரத்தைப்பற்றி ஶங்கிக்கிற இவனுடைய ஆர்ஜவத்தைக் குறித்து. (மயா) வாநரமாத்ரமான என்னுலே. (யதாஶக்தி உக்தம் து) யதாமதி சொல்லப்பட்டது. (புத்திமதாம் வர) ஸர்வதேஶ ஸர்வகால வர்த்தி ஸகலபதார்த்தங்களையும் ஸ்வத ஏவ அறியும் தேவரீரேயிறே இவனுடைய சுத்தி அறிகைக்கு ஶக்தர்.(ஶ்ருத்வா ஸர்வஸ்ய ப்ரமாணம் த்வம்ஹி) இவனுடைய குணுதிக்யமென்ன, ஸ்வரூபமென்ன, ஸ்வீகார மென்ன, இவை நான் விண்ணப்பம் செய்யக்கேட்டாலும், அவையெல்லாவற்றுக்கும் நிர்ணுயகர் தேவரீரேயிறே.

அவதாரிகை:—ஆக, இப்படி உலகிலுள்ள ஸாமாந்யர்கள் கருத்தாலும் இவன் கைக்கொள்ளத்தக்கவனே என்று கூறி, "யதாசக்தி" என்னும் கடைசி சுலோகத்தில் இவன் மிகப்பரிசுத்தனே என்று விளக்கித் தன் வார்த்தையை முடிக்கிருன் அனுமன்.

வ்யா:—(அரக்கனுடைய நேர்மையைக் குறித்து) வானரர்கள் இவன் ராக்ஷஸகுலத்தவன் என்று ஐயமுறும்படியான இவனுடைய நேர்மையைக் குறித்து. (என்னுல்) வெறும் குரங்கான என்னுல். குலத்தைக்கொண்டு சங்கிப்பதாகில் என்னையும் சங்கிக்கலாம் என்று கருத்து. (சக்தியுள்ள வரையில் சொல்லப்பட்டது) அளவுபட்ட என் புத்தியின் சக்திக்குத் தக்கவாறு சொல்லப்பட்டது. (அறிவாளிகளிற் சிறந்தவனே) எல்லா தேசத்திலும், எல்லாக்காலத்திலுமிருக்கும் எல்லாப் பொருள்களையும் மற்ருென்றின் உதவியில்லாமல் தாமேயறியும் பரமாத்மாவான தேவரீரே யன்ருே இவனுடைய சக்தியை உள்ளபடி அறியவல்லவர். (நான் சொன்னதைக் கேட்டு அனைத்தையும் முடிவுகட்ட வல்லவர் நீரே) இவனுடைய கைம்மாறு கருதாத குணப்பெருமை, உம்மிடம் சேஷபூதனு யிருக்கும் தன்மை, உம்மை சரணமடைந்தமை ஆகியவற்றை நான் விண்ணப்பம் செய்யக்கேட்டாலும், இவையனைத்துக்கும் முடிவுகட்ட வல்லவர் தேவரீரேயன்ருே. சுடர்மிகுசுருதியை, ஸ்மிருதிதிஹாஸ

ச்ருதியை ஸ்ம்ருதி பின்செல்லுமாபோலே, அடியோங்கள் தேவரீர் திருவுள்ளத்தைப் பின் செல்லுமித்தனை என்று கருத்து.

யுத்தகாண்டம் பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 1-வது ச்லோகம்

अथ रामः प्रसन्नात्मा श्रुत्वा वायुसुतस्य ह।
प्रत्यभाषत दुर्धर्षः श्रुतवानात्मनि स्थितम्॥

அத ராம: ப்ரஸந்நாத்மா ச்ருத்வா வாயுஸுதஸ்ய ஹ।
ப்ரத்யபாஷத துர்த்தர்ஷ: ச்ருதவாநாத்மநி ஸ்திதம்॥

பதவுரை:—அத—அதற்குப்பின், துர்தர்ஷ: — அசைக்கவொண்ணாதவராய், ச்ருதவாந்—கேள்விஞானமுடையவரான, ராம:—ஸ்ரீராமபிரான், வாயுஸுதஸ்ய—வாயுவின் பிள்ளையான அனுமனுடைய (சொல்லை), ச்ருத்வா—கேட்டு, ப்ரஸந்நாத்மா—தெளிந்த மனத்தையுடையவராய், ஆத்மநி—தன் மனத்தில் ஸ்திதம்—இருந்ததை, ப்ரத்யபாஷத—பதிலாகச் சொன்னார்.

அவதாரிகை:—முற்பட மஹாராஜர் வார்த்தையாலே க்ருச்ச்ரத்தை ப்ராப்தரான பெருமாள், இப்போது திருவடி வார்த்தையாலே ப்ரதிஷ்டிதராய், முதலிகளைக்குறித்து ஒரு வார்த்தை சொன்னார் என்கிறது முதல் ச்லோகம்.

புராணங்கள் மூலப்ரமாணமாகக்கொண்டு பின் செல்வதுபோலே அடியோங்கள் தேவரீருடைய திருவுள்ளத்தைப் பின்செல்லவல்லோமித்தனை என்று கருத்து.

யுத்தகாண்டம் பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

அவதாரிகை:—முதலில் சுக்கிரீவன் வார்த்தையாலே, 'விபீஷணனை இழக்க நேரிடுமோ' என்னும் கஷ்டதசையை அடைந்த ஸ்ரீராமபிரான் இப்போது அனுமன் வார்த்தையாலே நிலைபெற்றவராய், வானரர் தலைவர்களைக் குறித்து ஒரு வார்த்தை சொன்னார் என்கிறது முதல் ச்லோகத்திலே.

வ்யா:—(அதராம:) அநந்தரம் பெருமாள் உளரானார். அதாகிறது,- ரக்ஷகத்வமே ஸ்வரூபமாகையாலே, ஶரண மென்றபோதே ரக்ஷிக்கப்பெறாத ஸ்வரூபஹாநி போகை. ஸம்ஸாரி சேதனனுக்கு பகவத் ஜ்ஞாநாஜ்ஞாநங்களாலே ஸத்பாவாஸத்பாவங்கள் போலேயிறே ரக்ஷகனுக்குரக்ஷகத்வ ஸித்தியாலே ஸத்பாவமும், ததபாவத்தாலே அஸத்பாவமும். ஸர்வாச்ரயணத்துக்கு ஏகாந்தமாகச் சக்ரவர்த்தித் திரு மகனாய் வந்து அவதரித்த தாம் ஆஶ்ரயணோன்முகனாய் வந்தவனை விஷயீகரியாமையாலே இலராய், திருவடி வார்த்தையாலே உளரானாரென்றுமாம்.

வ்யா:—(பிறகு ஸ்ரீராமபிரான்) விபீஷணனை ரக்ஷிக்கத் திருவுள்ளம் பற்றிய பின்புதான் ராமன் ராமனானார். அதாவது,-அனைவரையும் ரக்ஷிப்பதே இவருக்கு ஸ்வரூபநிரூபகதர்மமாகையாலே, சுக்ரீவாதிகளின் கருத்துக் கேட்பதற்காக விபீஷணனை சரணமென்றபோதே ரக்ஷிக்காத போது ஸ்வரூபமிழந்திருந்தார். விபீஷண ரக்ஷணத்திற்குத் திருவுள்ளம் பற்றிய பின்னர் ஸ்வரூபம் பெற்றார். "அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்மேதி வேத சேத், அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத ஸந்தமேநம் ததோ விது:" [தை-ஆந] [ப்ரஹ்மஜ்ஞானமில்லையாகில் இல்லாதவனாகிறானிவன்; ப்ரஹ்மஜ்ஞானமுள்ளதாகில் இவனை உள்ளவனென்றறிகிறார்கள்] என்கிற படியே இந்த ஸம்ஸாரமண்டலத்தில் கட்டுண்டுகிடக்கும் ஜீவனுக்குப் பரமாத்மஜ்ஞானத்தாலே ஸத்தையுண்டாய், அதில்லாவிடில் ஸத்தையில்லாமலிருப்பதுபோலேயன்றோ, ஸர்வரக்ஷகனுக்கு ரக்ஷணம் கிடைத்தபோது ஸத்தையும், அதில்லாதபோது ஸத்தையின்மையும் ஏற்படுகின்றன. "ருசம் ப்ராஹ்மம் ஜநயந்த: தேவா அக்ரே ததப்ருவந்" [பு-ஸூ] [ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை உண்டாக்கிக்கொண்டு, தேவர்கள், ஆதிகாலத்தில் (ஹிரண்யராவணாதிகளாலே துன்புற்றபோது) 'நம:' என்னும் சொல்லைச் சொன்னார்கள்] முதலான ச்ருதிஸ்ம்ருதிகளில் இவ்வர்த்தம் ப்ரஸித்தமன்றோ. இவ்வர்த்தத்தில், 'அத' [பிறகு] என்றது விபீஷணனை ரக்ஷிக்கத் திருவுள்ளம் பற்றிய பிறகு என்று பொருள். அன்றிக்கே, அனுமன் வார்த்தையைக் கேட்டபிறகு என்றுமாம். அனைவரையும் அளிப்பதற்காகவே சக்கரவர்த்தித்திருமகனாய் அவதரித்த தாம் தம்மைப் பற்ற வந்த விபீஷணனை ஏற்றுக்கொள்ளாமையாலே ஸத்தையிழந்திருந்து, அனுமன் வார்த்தையாலே அவனை ஏற்றுக்கொள்ள இடம் பெற்றமையாலே ஸத்தை பெற்றார் என்றபடி.

(ப்ரஸந்நாத்மா) ப்ரஸந்நமநா:. தர்மியுண்டானவாறே தர்மமுண்டாயிற்று. அதாவது-மஹாராஜர் வார்த்தையாலே கலங்கின திருவுள்ளம் ப்ரஸந்நமாய், "நிலைபெற்றென்னெஞ்சம் பெற்றதுநீடுயிர்" என்கிறபடியே ஸ்வலாபத்தில் ஆழ்வாரைப்போலே ஆனார் என்கை. (வாயு ஸூதஸ்ய ஆத்மநிஸ்திதம் ச்ருத்வா) ஸர்வப்ராணிப்ராணந ஹேதுவான வாயுவினுடைய தத்குணோபேதஸ்நேஹத்தாலே ய(த?) தாபூதனான புத்ரனுடைய நெஞ்சில் கிடந்ததைக்கேட்டு.(ஸ்வாத்மநிஸ்திதம் வாயு ஸூதஸ்ய ச்ருத்வா) தம்முடைய திருவுள்ளத்திற் கிடந்தபடி திருவடி சொல்லக்கேட்டு என்றுமாம். (ஹ) ஒருவன், ஸர்வரக்ஷகனுக்குத் தன் வார்த்தையாலே ரக்ஷகனுவதே! என்று ரிஷி கொண்டாடுகிறான். (துர்த்தர்ஷ:) பூர்வபக்ஷங்களாலே அப்ரத்ருஷ்யராய், ஸ்வமதஸ்தாபந ஸமர்த்தரானார். (ச்ருதவாந்) வஸிஷ்டாதிகள் பக்கல் தமக்குண்டான ச்ருதங்கள் உதவிற்று. அதாவது-கபோத கண்டு-

---

(ப்ரஸந்நாத்மா) ப்ரஸன்னமான மனத்தையுடையவர்; ஆத்மசப்தம் மநோவாசி. தெளிந்த மனத்தையுடையரானாரென்கை. ராமனாகிற தர்மி உண்டான பின்பு, தெளிந்த மனமாகிற தர்மம் தானாகவே உண்டாயிற்று. அதாவது,– சுக்கிரீவன் வார்த்தையாலே கலங்கின திருவுள்ளம் தெளியப் பெற்று "நிலைப்பெற்றென்னெஞ்சம் பெற்றது நீடுயிர்" [திருவாய் 3-2-10] என்கிறபடியே தம்மைப்பெற்றபோது நம்மாழ்வார் உயிரும்பெற்று நெஞ்சமும் தெளிந்தது போலேயானார்.(வாயு குமாரனுடைய மனத்திலிருப்பதைக் கேட்டு) அனைத்துயிர்க்கும் உயிரளிக்கும் வாயுவினுடைய புத்திரனாய்,அனைத்துயிர்க்கும் உயிரளிக்கும் அக்குணத்தையுடைய ராமபிரானிடம் பக்தியாலே, தானும் அனைத்துயிர்க்கும் உயிரளிப்பவனான அனுமனுடைய நெஞ்சிலே கிடந்த கருத்தைக்கேட்டு. (தம் நெஞ்சில் கிடந்ததை அனுமன் சொல்லக் கேட்டு) என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். (ஹ) ஸர்வரக்ஷகனையும், ஒருவன் தன் வார்த்தையாலே ரக்ஷிப்பதே! என்று வால்மீகிபகவான் கொண்டாடுவதைக் காட்டுகிறது. (அசைக்கவொண்ணாதவர்) சுக்கிரீவன் முதலானாரின் பூர்வபக்ஷத்தாலே அசைக்கவொண்ணாதவராய், தன் கருத்தை நிலைநாட்ட வல்லவரானார். (கேள்விஞானமுடையவர்) வஸிஷ்டர் முதலானாரிடம் தாம் கேட்டிருந்த கேள்விஞான

பாக்யாநாதிகள். (ப்ரத்யபாஷத) முதலிகளைக் குறித்து ப்ரதிவசநக்ஷமரானார். (ஆத்மநி ஸ்திதம் ப்ரத்யபாஷத) என்றுமாம். தம்முடைய திருவுள்ளத்திற்கிடந்த அர்த்தத்தை முதலிகளுக்கு அருளிச்செய்தார்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 2-வது ச்லோகம்

ममापि तु विवक्षास्ति काचित् प्रति विभीषणम् ।
श्रुतमिच्छामि तत्सर्वं भवद्भिः श्रेयसि स्थितैः ॥

மமாபி து விவக்ஷாஸ்தி காசித் ப்ரதி விபீஷணம் ।
ச்ருதமிச்சாமி தத்ஸர்வம் பவத்பி: ச்ரேயஸி ஸ்திதை: ॥

பதவுரை:—விபீஷணம் ப்ரதி—விபீஷணனைக் குறித்து, மம அபிது—எனக்குமே, விவக்ஷா காசித்—சொல்லவேண்டிய வார்த்தை ஒன்று, அஸ்தி—இருக்கிறது, ச்ரேயஸி ஸ்திதை:—(என்) நன்மையிலே நிலைநிற்கும், பவத்பி:—உங்களாலே, தத் ஸர்வம்—அவையெல்லாமும், ச்ருதம் இச்சாமி—கேட்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

அவதாரிகை:—உங்கள் வார்த்தையை நான் கேட்டவோபாதி இவன் விஷயமாக நான் சொல்ல நினைக்கிற வார்த்தையையும் கேட்டுத்தரவேணும் என்று முதலிகளை இரக்கிறார்.

மும் இதற்கு உதவிற்று. அவையாவன,—பின்னர் சொல்லப்போகும் புருவின்கதை, கண்டுவின் கதை முதலானவை. (பதிலுரைத்தார்) வானரர் தலைவர்களைக் குறித்து பதில்சொல்ல வல்லவரானார். (தன் நெஞ்சிற் கிடந்ததைப் பேசினார்) என்று கூட்டியும் பொருள்கொள்ளலாம். தம் திருவுள்ளத்தில் கிடந்த அர்த்தங்களை வானரர் தலைவர்களுக்கு அருளிச் செய்தார் என்கை.

அவதாரிகை:— 'உங்கள் வார்த்தையை நான் கேட்டதுபோலே இவன் விஷயமாக நான் சொல்ல நினைக்கிற வார்த்தையையும் நீங்கள் கேட்கவேணும்' என்று வானரர் தலைவர்களை யாசிக்கிறார்.

வ்யா:-(மமாபி து) எல்லாரிலும் தம்முடைய மதத்துக் குண்டான விசேஷத்தைச் சொல்லுகிறார். (காசித் விவக்ஷாஸ்தி) ஒரு விவக்ஷை உண்டாகாநின்றது. (விபீஷணம் ப்ரதி) விபீஷணனைக் குறித்து ஒரு விவக்ஷை உண்டாகாநின்றதென்கை. (தத் ஸர்வம் ச்ருதமிச்சாமி) விவக்ஷாகதமாய் "மித்ரபாவேந" என்றுதொடங்கி, கண்வபுத்ரபர்யந்தமான அர்த்தஜாதத்தை இதுவே அர்த்தமென்று ஸ்வீகரித்திலிகோளாகிலும் செவிதாழ்க்க அமையுமென்று இரக்கிறார். (ச்ரேயஸி ஸ்திதைர் பவத்பி:) என்னுடைய ச்ரேயஸ்ஸிலே நிலைநின்று அத்தாலே ஸத்தையுண்டாகாநின்றுள்ள உங்களாலே என்றுமாம்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 3-வது ச்லோகம்

मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथञ्चन।
दोषो यद्यपि तस्य स्यात् सतामेतदगर्हितम्॥

மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந।
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்॥

வ்யா:—(எனக்குமே) 'அபி' 'து' என்னும் இரண்டு அவ்யயங்களை இடுவதன்மூலம் தம்முடைய கருத்துக்கு உள்ள பெருமையைக் காட்டுகிறார். (சொல்ல விரும்பியது ஒன்று உண்டு) ஒரு வார்த்தை சொல்ல விருப்பமுண்டாகிறது. (விபீஷணனைக்குறித்து) விபீஷணன் விஷயமாக ஒருவார்த்தை சொல்ல விரும்புகிறேன் என்றபடி. (அது அனைத்தும் கேட்கப்பட்டதாகவேணுமென விரும்புகிறேன்) நான் சொல்ல விரும்பியதில் அடங்கியதாய், "மித்ரபாவேந" [ரா-யு 18-3] என்று தொடங்கி, கண்வமஹர்ஷியின் புத்ரரான கண்டுவின் வார்த்தையீறாக [ரா-யு 18-32] உள்ள அர்த்த ஸமூகங்களை, 'இதுவே அனுஷ்டிக்கவேண்டியது' என்று அங்கீகரிக்கவில்லையாகிலும், காதாலேயாவது கேட்கவேணும் என்று யாசிக்கிறார். (நன்மையிலே நிலைநிற்கும் தங்களாலே) வெளிப்படைப்பொருள் நிற்க, என் நன்மையிலே உறுதியாக நின்று, அதனாலே உயிர்தரிக்கும் உங்களாலே என்றும் பொருள் கொள்ளலாம். ராமபிரானுடைய ச்ரேயஸ்ஸிலே (நன்மையிலே) இவர்களுக்கு 'ஸ்திதி' (உயிர்தரிப்பு) உண்டாகிறதென்று கருத்து.

பதவுரை:—மித்ரபாவேந-நண்பனின் பாவத்தோடு, **ஸம்ப்ராப்தம்**—வந்தடைந்த இவனை, **கதஞ்சந**—ஒருபடியாலும், **ந த்யஜேயம்**—கைவிடும் இடமேயில்லை, **தஸ்ய**—அவனுக்கு, **தோஷ: யதி அபி**—தோஷம் இருந்தாலும், **ஸ்யாத்**—இருக்கட்டுமே; **ஏதத்**—இவனைக் கைக்கொள்வது, **ஸதாம்**—நல்லோர்களுக்கு, **அகர்ஹிதம்**—இகழத்தக்கதன்று.

அவதாரிகை:—அநந்தரம் கடற்கரையிலே வாநர ஸமாஜத்திலே ஸர்வப்ராணிப்ராணந ஹேதுபூதமான தன் ப்ரக்ருதியை ப்ராஸங்கிகமாக வெளியிடுகிறார்.

வ்யா:–(மித்ரபாவேந) "மிதாத் த்ராயத இதி மித்ரம்" என்று வ்யுத்பத்தியானபோது, ஸர்வேச்வரன் பண்ணின உபகாரத்தைப் பரிச்சேதித்து, அதுக்கு ஸத்ருஶமான ப்ரத்யுபகாரம் பண்ணமுடியாமையாலே இம்மித்ரஶப்தத்துக்கு அது பொருளன்று. மித்ரமாவது–விச்வஸநீயஸ்தலம். **"तन्मित्रं यत्र विश्वासः" (தந்மித்ரம் யத்ர விச்வாஸ:)** என்னக்கடவதிறே. அதாவது,– ஸ்வநிகர்ஷோக்தி பூர்வகமாக, **"राघवं शरणं गतः" (ராகவம் ஶரணம் கத:)** என்கை. அது

அவதாரிகை:–இனி, "மித்ரபாவேந" என்னும் சுலோகத்தாலே, கடற்கரையிலே வானரர் குழுவிலே, அனைத்துயிரும் உயிர்தரிக்கக் காரணமான தம் தன்மையை ஸந்தர்ப்பவசத்தால் வெளியிடுகிறார்.

வ்யா:—(மித்ரபாவத்தோடு) "மிதாத் த்ராயதே-இதி மித்ரம்" [(உபகாரத்தின்) அளவையிட்டு, (பிரதியுபகாரம் செய்து) ரக்ஷிக்கிறான்-ஆகையாலே மித்ரன் எனப்படுகிறான்] என்று மித்ரசப்தத்தின் வ்யுத்பத்தியாகும். இதன்படி பொருள் கொண்டால், ஸர்வேச்வரன் பண்ணின உபகாரத்தை அளவிட்டு, அதற்குத்தக்க பிரதியுதவி பண்ணமுடியாதாகையாலே, இங்கு மித்ரசப்தத்துக்கு அது பொருளன்று. இங்கு மித்ரசப்தத்துக்குப் பொருந்திய பொருள்,-'நம்பிக்கைக்குரிய பாத்திரம்' என்பதே. "எவனிடத்தில் நம்பிக்கையுள்ளதோ அவன் நண்பனாவான்" [ ] என்று சொல்லப்படுகிறதன்றோ. அத்தன்மை இவனிடமுண்டோ? எனில்: தன் தாழ்வை முன்னிட்டுக்கொண்டு, "ராகவரை சரணடைந்தேன்" [ரா-யு 17-14] என்கையாலே இவன் நம்பிக்கைக்குரியவன். வஞ்சிப்ப

விப்ரலம்பகர்க்கும் பொதுவன்ருே? என்னில்: (பாவேந) பாவ:- க்ரியா; விச்வஸனீயருடைய உக்திவ்யாபாரமே அமையும். (ஸம்ப்ராப்த:) இந்த உக்தி லங்கையிலேயாளுல். * அரைகுலையத் தலைகுலைய மடுக்கரையிலே சென்ருற்போலே நமக்குச் செல்லவேண்டியிருக்க, இங்கேவந்து சொன்ன விடம் நம் கார்யமன்ருே செய்தது. (ந த்யஜேயம்) இவன் வந்த வரவுதன்னையே ச்லாகிக்க வேண்டியிருக்க, விட ஸம்பாவனையில்லை. ஸம்பாவநாயாம் லிங். விட ஸம்பாவனை யுண்டாகிலன்ருே ஆராயவடுப்பது. விட ஸம்பாவனையின் றிக்கேயொழிகிறதென்? என்னில்: இவனை விட்டால் உள

வர்களும் இப்படிச் சொல்லுவதுண்டே எனில்: (பாவத்தோடு) பாவமாவது கிரியை. "பாவோ லீலாக்ரியா சேஷ்டா பூத்யபிப்ராய ஜந்துஷு" [வைஜயந்தி] [பாவசப்தம் லீலை, கிரியை, சேஷ்டை, செல்வம், கருத்து, ஜந்து என்னும் பொருள்கள் உடையது] என்றும், "பாவோ லீலாஸ்வபாவயோः ஜந்த்வபிப்ராய சேஷ்டாஸு பூதௌ வித்வத் பதார்த்தயோः க்ரியாயாம் ஆத்மநி" [நாநார்த்த ரத்நமாலா] [பாவசப்தம் லீலை, தன்மை, ஜந்து, கருத்து, சேஷ்டை, செல்வம், வித்வான், பொருள், கிரியை, ஆத்மா என்னும் பொருள்களில் பிரயோகிக்கப்படுகிறது.] என்னும் கோசங்கள் காண்க. நண்பனின் செயலோடு வந்தவனையும் விடேன் என்கிறது. மனப்பூர்வமான நண்பனுய்வராமல் நம்பிக்கைக் குரியவனுடைய வார்த்தைகளாகிற செயலோடு மாத்திரம் வந்தவனுளுலும் விடேனென்கை. (வந்தடைந்தவனை) இந்த சரணமென்ற சொல்லை லங்கையிலே சொல்லியிருந்தால் கஜேந்திராழ்வானை ரக்ஷிக்க * அரைகுலையத் தலைகுலைய மடுக்கரைக்கு ஓடிவந்ததுபோலே நாம் ஓடிச் செல்லவேண்டியிருந்திருக்கும். இங்கே வந்து சரணமென்றதன்மூலம் நம் சுமையைக் குறைத்தானன்ருே என்கை. (விட ஸம்பாவனையில்லை) இவன் இங்கு வந்ததற்கு இவனைக் கொண்டாடவேண்டியிருக்க, விடுவதற்கு இடமுண்டோ? 'த்யஜேயம்' என்ற வினைச்சொல்லில் 'லிங்' ப்ரயோகம் ஸம்பாவனைப்பொருளதாய் விடுவதற்கு இடமேயில்லையென்றதாகிறது. விடுவதற்கு இடமிருந்தாலன்ருே, விடலாமா வேண்டாமா என்று ஆராயலாம். 'ஏன் விடுவதற்கு இடமேயில்லை?' எனில்: இவனை விட்டால் உயிர்த்தக்கவல்லமையுடையவர்கள் விடலாமா வேண்டாமா

* அரைகுலைய—இடுப்பில் கட்டிய வஸ்திரம் நழுவ; தலைகுலைய—தலையில் தரித்த முடிசரிய.

ராவார்க்கன்றோ ஆராய ஸம்பாவனையுள்ளது. பரீக்ஷியாதே ஸ்வீகரிக்குமவர்கள் தந்தாமை உபேக்ஷித்து ஸ்வீகரிக்கிறார்களன்றோ. உம்மை உபேக்ஷித்து அவனை ஸ்வீகரிக்ரிக்கப் பார்த்தீராகில் உம்மைவிட்டு தரிக்கமாட்டாத எங்களை விடுகையன்றோ? அதாவது ஏதென்னில்: (கதஞ்சந) அப்படி துஷ்கரங்களைச் செய்யவும் இவனை விடேனென்கிறார்.

ராவணப்ராதா, ராக்ஷஸன், லோகபயங்கரன் என்னுமிடம் ஸம்ப்ரதிபந்நம்; அஸ்மத்வதபேதநாதிகர்த்தாவாகவும் கூடும். இப்படி தோஷயுக்தனாயிருக்கிற இவனை ஸர்வப்ரகாரத்தாலும் விடோமென்கிறதென்? என்னில்:(தோஷோயத்யபி தஸ்ய ஸ்யாத்) தோஷங்கள் இவனுக்கு உண்டேயாகிலும், ஶரணாகதிக்கு ஜந்மவ்ருத்த நியதியில்லாமையாலே ப்ரபத்திபண்ணின இவன் பக்கல் என் பக்ஷத்தால் தோஷமில்லை. (தஸ்ய யத்யபி தோஷ:, ததாபி ந த்யஜ்யம்)

என்னும் ஆராய்ச்சி செய்யலாம். எனக்கு இவனை விட்டால் உயிர் தரிக்க வல்லமையில்லையே. ஆகையால் விட இடமேயில்லை. "இப்படி ஆராயாமல் கைக்கொள்ளுகின்றவர்கள் தம்முயிரையும் லட்சியம் செய்யாமலன்றோ ஒருவனைக் கைக்கொள்கின்றனர். உம்முயிரை அலட்சியம் செய்து அவனைக் கைக்கொள்ளப் பார்த்தால் உம்மை விட்டு உயிர்தரிக்க மாட்டாத எங்களைக் கைவிடுவதாயன்றோ முடியும். இது ஆச்ரிதரக்ஷணமாகுமா?" என்று வானரர்களுக்குக் கருத்தாகக் கொண்டு சொல்லுகிறார்,- (எப்படியும்) அவ்வளவு செயற்கரியவற்றைச் செய்தாகிலும் இவனை விடமாட்டேன் என்கிறார்.

இவன் ராவணனின் தம்பி, அரக்கன், 'விபீஷணன்' [உலகனைத்தையும் பயமுறுத்துமவன்] என்று பெயர்பெற்றவன் என்பது அனைவருமிசைந்தது. நம்மைக் கொல்லவும், கருத்துவேற்றுமையுண்டாக்கிப் பிரிக்கவும் கூடியவன். இப்படிக் குற்றமுடையவனான இவனை 'எப்படியாலும் விடேன்' என்கிறதேன்? எனில்: (அவனுக்கு தோஷமிருந்தாலும்) தோஷங்கள் இவனுக்கு உண்டேயானாலும், சரணாகதிக்கு இன்னகுலத்தவனாகவேணும், இன்ன நடத்தையுடனிருக்கவேண்டும், முதலான நியமமில்லையாகையால் ப்ரபத்திபண்ணின இவனிடம் என் கருத்திலே சரணாகதியைத் தடைசெய்யவல்ல தோஷம் இல்லை. (அவனுக்கு தோஷமிருந்தாலும் கை

வதபேதநாதிகர்த்தாவென்று உங்கள் பக்ஷத்தாலே தோஷ முண்டேயாகிலும், நான் அவனை விடேன், இவனை துஷ்ட னென்று அறிந்திருக்கச்செய்தே ஸ்வீகரித்தால் நாட்டார் கர்ஹியார்களோ? என்னில்: (ஸதாமேததகர்ஹிதம்) அஸ் தானே பயஶங்கிகளான உங்களுக்கு கர்ஹாவிஷயமேயாகிலும் ஸத்துக்களுக்கு இவன் ஸ்வீகாரம் அகர்ஹிதமாகக்கடவது.

அதவா, (தோஷோ யத்யபி) தோஷமுண்டாகில் அவ னுடைய தோஷமன்றோ. (ஸ்யாத்) "ப்ரார்த்தநாயாம் லிங்" நாம் ப்ரார்த்தித்திருக்குமதன்றோ. குணவானை ரக்ஷித்தால் அது குணத்துக்கு விலையாய் துஷ்டனை ரக்ஷித்தோமென்கிற ஏற்றம் நமக்குக் கிட்டுமோ? நிரூபித்து "**वध्यतां**" (வத்யதாம்) என்கிற நீரே ஶுத்தனென்கிறீரே.

விடேன்) நம்மைக் கொல்லுதல், பிரித்தல் முதலியன செய்வானென்று உங்கள் கருத்தாலே தோஷமிருந்தாலும், நான் அவனை விடமாட்டேன். இவனை துஷ்டன் என்று அறிந்திருக்கும்போது கைக்கொண்டால் நாட்டி லுள்ளார் இகழார்களோ? என்னில்: (ஸத்துக்களுக்கு இது இகழத்தக்க தன்று) தகாதவிடத்தில் பயஸந்தேஹமுள்ள கலங்கிய அறிவையுடைய உங்களுக்கு இகழத்தக்கதாகுமேயொழிய, கலக்கமற்ற அறிவையுடைய ஸத்துக்களுக்கு இவனைக் கைக்கொள்வது இகழத்தக்கதன்று.

வேறொரு வகையாகவும் பொருள் கொள்ளலாம்: (தோஷமிருந் தாலும்) தோஷமுண்டானால், அது நமக்குப் ப்ரீதிபாத்திரமாயிருப்பா னுடைய தோஷமன்றோ. கன்றின் வழுவைத் தாயுகக்குமே; காமிநீ தேஷம் காமுகனுகப்பனே. (ஸ்யாத்–இருக்கட்டுமே) 'லிங்' ப்ரயோகம் ப்ரார்த்தனைப் பொருளது. அவனுடைய தோஷம் நாம் ஆசைப்பட் டிருப்பதொன்றன்றோ. குணமுடையவனை ரக்ஷித்தால், அது குணத்துக்கு விலையாய்த் தோற்றும்; தோஷமுள்ளவனை ரக்ஷித்தால் வரும் பெருமை அதில் கிட்டாது. ஆகையால் தோஷமுடையவனை ரக்ஷிக்கவேணுமென்றே நாம் ஆசைப்பட்டிருப்பது. மிக ஆராய்ந்து "விபீஷணன் கொல்லப் படட்டும்" [ரா-யு 17-27] என்று முடிவுகட்டிய நீர், ஆராயாமல் "மம சாப் யந்தராத்மாऽயம் சுத்தம் வேத்தி விபீஷணம்" [ரா-யு 18-37] [என்னுடைய நெஞ்சமும் விபீஷணனைப் பரிசுத்தனென்றே அறிகிறது] என்று அவனை சுத்தனென்று சொல்லத்தொடங்குகிறீரே. அப்படிச் சொல்லி என் ஆசை யிலே மண்ணைப் போடாதே கொள்ளீர்.

அதவா, (தோஷோயத்யபி) நம்மை நலிய நினைத்து நாம் ஸ்வீகரிக்கைக்காக **"राघवं शरणं गतः"** **(ராகவம் ஶரணம் கத:)** என்றானாகில், (தஸ்ய ஸ்யாத்) அவன் நினைத்த கார்யம் தலைக்கட்டிற்றாகிறது. மேல் கபோதோபாக்யானமாகையாலே இதுவேபொருளாக உசிதமென்று **பட்டர்** அருளிச்செய்வர். அஸ்மிந்நர்த்தே, **"तस्मादपि वध्यं प्रपन्नं न प्रतिप्रयच्छन्ति"** **(தஸ்மாதபி வத்யம் ப்ரபந்நம் ந ப்ரதிப்ரயச்சந்தி)** இதி. இப்படி துஷ்டனாயிருக்கிறவனை விடாதொழிகிறது, விடில் ப்ரத்யவாயமுண்டென்றோ? புருஷார்த்தஸித்திக்காகவோ? பாபக்ஷயார்த்தமாகவோ? என்னில்: (ஸதாமேததகர்ஹிதம்) இவையொன்றுமல்ல; ஸத்கோஷ்டியில் நம்மைச் 'சீச்சீ' என்னாமைக்காக. ஸத்துக்களாகிறார், தந்தாமை அழியமாறியாகிலும் பிறரைநோக்கும் கபோத விச்வாமித்ராதிகள்.

மற்றொருவகையாகவும் பொருளுரைக்கலாம்: (குற்றம் இருந்ததாகில்) நம்மைத் துன்புறுத்த நினைத்து, நாமிவனை ஏற்றுக்கொள்வதற்காக "ராகவரைச் சரணடைந்தேன்" [ரா-யு 17-14] என்றானாகில்; (அவன் காரியம் ஆகட்டுமே) அவன் நினைத்த நினைவு முடியட்டுமே. உயிரைக் கொடுத்து சரணாகதரக்ஷணம் செய்தான் ராமன் என்னும் புகழ் நமக்கு வரட்டுமே. மேலே, தன் உயிரைக்கொடுத்துத் தன் மரத்தையண்டின வேடனை ரக்ஷித்த புறாவின் கதையைச் சொல்லப்போகிறாராகையாலே இதுவே மிகப்பொருந்திய பொருளாகத்தக்கது என்று ஆசார்யச்ரேஷ்டரான (கூரத்தாழ்வான் திருக்குமாரர்) பராசரபட்டர் அருளிச்செய்வர். இவ்விஷயத்தில், "ஆகையால் கொல்லத்தகுந்தவனாயினும் சரணமடைந்தவனைக் காட்டிக்கொடுப்பதில்லை" [யஜுஸ்ஸம்ஹிதை 6-5-20, 29] என்று முடியும் வேதவிருத்தாந்தங்கள் இரண்டும் ப்ரமாணமாகும். [இவையிரண்டும் "தேந ஸீதா" [ரா-யு 17-11] என்னும் சுலோகத்தின் விவரணத்தின் கடைசியில் (பக்கம் 46, 47) பூர்ணமாக எடுக்கப்பட்டுள்ளன; அங்கே கண்டுகொள்வது.] இப்படி துஷ்டனாயிருப்பவனைக் கைவிடாமலிருப்பது, விட்டால் தோஷமுண்டென்றா? உம்முடைய பயன்பெறுவதற்கா? பாபம் நீங்குவதற்கா? எனில்: (நல்லோர்களுக்கு இது இகழாமைக்குறுப்பு) இக்காரணங்களெல்லாமன்று; நல்லோர்களின் குழுவிலே என்னை "சீச்சீ" என்று இகழாமைக்காக நான் இது செய்தாகவேண்டும். நல்லோர்களாவார்- தன் உயிரைக்கொடுத்தும் வேடனை ரக்ஷித்த புறா, தன் தவவலிமையைக் கொடுத்துத் திரிசங்கு, சுநச்சேபன் முதலானாரை ரக்ஷித்த விச்வாமித்ர மஹரிஷி முதலானார்.

இனி, இந்த ச்லோகத்திற்குத் தனிச்லோக வ்யாக்யாநம்

அவதாரிகை:—பெருமாள் தூரவிருந்தாரென்று ஆறியிருக்கையன்றிக்கே, படைகூட்டிக் கடற்கரையிலே குறுக விட்ட அநந்தரம், ராவணனும், தன் பந்துக்களையும் ஸசிவ ஸாமந்த புரோஹிதவர்க்கத்தையும் திரட்டிக் குறுகவிருந்து கார்யவிசாரம் பண்ணுகிறவளவிலே, ப்ரஹஸ்த மஹா பார்ச்வேந்த்ரஜித் ப்ரமுகரானவர்கள் அவன் சோற்றையுண்டு அவனுக்கு அபிமதங்களைச் சொல்ல, இதுக்கு ராவணனும் மேலெழுத்திட்டு, தோளும் மார்பும் பார்த்து இறுமாந்திருக்க, **"निशाचरेन्द्रस्य निशम्य वाक्यं स कुम्भकर्णस्य च गर्जितानि। विभीषणो राक्षसराजमुख्यमुवाच वाक्यं हितमर्थयुक्तं"** **(நிஶாசரேந்த்ரஸ்ய நிஶம்ய வாக்யம் ஸ கும்பகர்ணஸ்ய ச கர்ஜிதாநி। விபீஷணோ ராக்ஷஸராஜமுக்யமுவாச வாக்யம் ஹிதமர்த்தயுக்தம்)** என்று, விடவொண்ணாக் குடல்துடக்கைப் பார்த்து இவனுடைய அநர்த்தம் தன்னுடையதாகக் கருதிச் சடக்கென இத்தைப் பரிஹரிக்கவேணும் என்கிற

அவதாரிகை:—ஸ்ரீராமபிரான் இலங்கைக்கு வெகுதூரத்திலுள்ள தண்டகாரண்யத்திலிருக்கிறான் என்று பொறுத்திருக்க இடமில்லாமல், வானரஸேனையைக் கூட்டிக்கொண்டு கடற்கரையிலே அணுகின பிறகு, ராவணனும், தன் உறவினரையும், மந்திரிகளையும், சிற்றரசர்களையும், புரோஹிதர்களையும் ஒருவரொழியாமல் திரட்டிக் கூடியிருந்து மந்திராலோசனை செய்கிறபோது, பிரஹஸ்தன், மஹாபார்ச்வன், இந்திரஜித்து முதலானவர்கள், ராவணன் சோற்றையுண்கையாலே அவனுக்குப் பிரியமான வார்த்தைகளைச்சொல்ல, ராவணனும் இதை அங்கீகரித்துத் தன் தோளையும், மார்பையும் பார்த்துக்கொண்டு கர்வங்கொண்டிருக்க, "அந்த விபீஷணன் அரக்கர்தலைவனின் வார்த்தையையும், கும்பகர்ணனுடைய முழக்கங்களையும் கேட்டு, அரக்கரரசர்தலைவனைப்பார்த்து நல்லதும் பொருள்பொதிந்துமான வார்த்தையைச் சொன்னான்" [ரா-யு 14-1] என்று ராவணனுக்குத் தன்னோடுண்டான விடமுடியாத சரீரஸம்பந்தத்தைப் பார்த்து, இவனுடைய துன்பத்தைத் தன்னுடையதாக நினைத்து, விரைவில் இத்துன்பத்தைத் தவிர்க்கவேணும் என்னும் நினைவாலே

புத்தியாலே **"यावन्न गृह्णन्ति शिरांसि बाणाः"** (யாவந்ந க்ருஹ்ணந்தி ஶிராம்ஸி பாணா:) என்று சடக்கென இவனிசையும்படி ப்ரத்யவாய புரஸ்ஸரமாக, **"प्रदीयतां दाशरथाय मैथिली"** (ப்ரதீயதாம் தாஶரதாய மைதிலீ) என்று-"ஶ்ரிய:பதியாய் அவாப்தஸமஸ்தகாமரானவர்க்கு எலியெலும்பனான நீ கொடுக்கவேண்டுவதில்லை; அவர்தம்முடைய உடைமையை அவரதாக இசையவமையும்" என்று வார்த்தை சொல்ல, இத்தைக்கேட்ட இந்த்ரஜித்தானவன் **"किन्नाम ते तात कनिष्ठ वाक्यमनर्थकञ्चैव सुभीतवच्च। अस्मिन् कुले योऽपि भवेन्न जातस्सोऽपीदृशं नैव वदेन्न कुर्यात्।** (கிந்நாம தே தாத கநிஷ்ட வாக்யமநர்த்தகஞ்சைவ ஸுபீதவச்ச। அஸ்மிந் குலே யோऽபி பவேந்ந ஜாதஸ்ஸோऽபீத்ருஶம் நைவ வதேந்ந குர்யாத்) என்று, "இளையவர் சொன்ன வார்த்தை இருந்தபடியென்? கார்யத்திலும் இளமை தோற்றியிருந்தது; இக்குலத்தில்புகுந்தவர்களும் இவ்வார்த்தை சொல்லுவார்களே?" என்றுநெகிழ வார்த்தை சொல்ல;

'அரக்கர்தலைவர்களின் தலைகளை ராமபாணங்கள் அறுப்பதற்குமுன்" [ரா-யு 14-4] என்று, இவன் தான் சொன்னபடி செய்வதற்காக, செய்யாவிடில் வரும் ப்ராணாபத்தை அறிவித்துக்கொண்டு, "ராமபிரானிடம் மைதிலி ஸமர்ப்பிக்கப்படட்டும்" [ரா-யு 14-4] என்று "லக்ஷ்மீநாதனாய் வேண்டுதல் ஒன்றும் இல்லாதவனுக்கு, பலஹீனனான நீ ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை; அவருடைய உடைமையான பிராட்டியை அவருடையவளாக இசைந்தால் போதும்" என்று விபீஷணன் வார்த்தைசொல்ல, இவ்வார்த்தையைக் கேட்ட இந்திரஜித்தானவன், "இளையதந்தையே! ஏன் உன் (இளைய)வாக்கியம் தீயபயனைத் தருவதாயும், பெரும்பயம் கொண்டதாயும் உள்ளது? இக்குலத்தில் பிறவாமல், புகுந்தவனும் இத்தகைய சொல்லைச் சொல்லமாட்டான்; (இதன்படி) செய்யவும்மாட்டான்" [ரா-யு 15-2] என்று, "இளையதந்தை சொன்ன வார்த்தை எப்படியிருந்தது? காரியத்திலும் இளமை வெளிப்பட இருந்தது; இக்குலத்தில் பிறவாமல் புகுந்தவர்களும் இவ்வார்த்தை சொல்லார்களே" என்று தாழ்த்திப்பேச;

"पुत्रप्रवादेन हि रावणस्य त्वमिन्द्रजिन्मित्रमुखोऽसि शत्रुः" (புத்ர ப்ரவாதேந ஹி ராவணஸ்ய த்வமிந்த்ரஜிந் மித்ரமுகோऽஸி ஶத்ரு:) என்று, "வாடா! ராவணனுக்குப் பெருமாளோ ஶத்ரு? கோமுகவ்யாக்ரம்போலே மகனென்று பேரையிட்டு உள்ளேநின்று கழுத்தறுக்கிற நீயன்றோ சத்ரு; **"त्वमेव वध्यश्च सुदुर्मतिश्च"** (த்வமேவ வத்யஶ்ச ஸுதுர்மதிஶ்ச) என்று ஶத்ருக்களைத் தலையறுக்கப்பார்க்கில் உன்னையல்லவோ தலையறுக்க அடுப்பது" என்றாற்போலே சில வார்த்தைகளைச்சொல்ல, **"अब्रवीत्परुषं वाक्यं रावणः कालचोदितः"** (அப்ரவீத் பருஷம் வாக்யம் ராவண: காலசோதித:) என்று தொடங்கி, ராவணன் குபிதனாய் மகனுக்குப் பரிந்து **"जानामि शीलं ज्ञातीनां सर्वलोकेषु राक्षस। हृष्यन्ति व्यसनेष्वेते ज्ञातीनां ज्ञातयस्सदा॥ प्रधानं साधनं वैद्यं धर्मशीलञ्च राक्षस। ज्ञातयो ह्यवमन्यन्ते शूरं परिभवन्ति च। नित्यमन्योन्यसंसृष्टा व्यसनेष्वाततायिनः॥ प्रच्छन्नहृदया घोरा ज्ञातयस्तु भयावहाः॥"** (ஜாநாமி ஶீலம் ஜ்ஞாதீநாம் ஸர்வலோகேஷு ராக்ஷஸ। ஹ்ருஷ்யந்தி வ்யஸநேஷ்வேதே ஜ்ஞாதீநாம் ஜ்ஞாதயஸ் ஸதா॥ ப்ரதாநம் ஸாதநம் வைத்யம் தர்மஶீலம் ச ராக்ஷஸ। ஜ்ஞாதயோ

"அடே! இந்திரசித்தா! நீ ராவணனுக்குப் புத்திரன் என்று பெயர் பூண்ட சத்துருவாயிருக்கிறாய்" [ரா-யு 15-10] என்று, "அடே! ராவணனுக்கு ராமபிரானோ எதிரி? பசுமுகம் தரித்த புலிபோலே மகன் என்னும் பெயரிலே கூடியிருந்து கழுத்தறுக்கிற நீயன்றோ எதிரி; 'நீயே மிகத்திய புத்தியுடையவனும், கொல்லத்தக்கவனுமாயிருக்கிறாய்' [ரா-யு 15-11] என்று எதிரிகளைத் தலையறுப்பதைக்காட்டிலும் முன்னால் உன்னையல்லவோ தலையறுக்கவேண்டும்" என்றாற்போலே விபீஷணன் சில சொற்களைச் சொல்ல, "காலனால் தூண்டப்பட்டு ராவணன் கொடிய வார்த்தை சொன்னான்' [ரா-யு 16-1] என்றுதொடங்கி ராவணன் கடுங்கோபங்கொண்டு மகனுக்குப் பரிந்துகொண்டு, "அரக்கனே! எல்லாவுலகிலும் ஜ்ஞாதிகளுடைய தன்மையை நான் அறிவேன்; ஜ்ஞாதிகள் எப்போதும் தங்களுடைய தாயாதர்களின் துன்பங்களிலே இன்புறுகிறார்கள்; ஜ்ஞாதிகள் தங்களுள் தலைவனாயும், அருஞ்செயல்களை சாதிப்பவனாகவும், வித்வானாகவும், சூரனாகவும், அறவழிநடப்பவனாகவுமுள்ளவனைக் குறைய நினைக்

ஹ்யவமந்யந்தே ஶூரம் பரிபவந்தி ச|| நித்யமந்யோந்யஸம் ஸ்ருஷ்டா வ்யஸநேஷ்வாததாயிந:| ப்ரச்சந்ந ஹ்ருதயா கோரா ஜ்ஞாதயஸ்து பயாவஹா:||) என்று, "ஜ்ஞாதிகளுடைய சீலம் அறியோமோ?" என்று, **"श्रूयन्ते हस्तिभिर्गीताःश्लोकाः पद्मवने क्वचित्"** (ச்ரூயந்தே ஹஸ்திபிர் கீதா: ச்லோகா: பத்மவநே க்வசித்) என்று இதுக்குச் சில உபகதைகளையும் சொல்லி, **"योऽन्यस्त्वेवंविधं ब्रूयाद्वाक्यमेतन्निशाचर। अस्मिन्मुहूर्ते न भवेत् त्वां तु धिक् कुलपांसनं"** (யோऽந்யஸ் த்வேவம் விதம் ப்ரூயாத் வாக்யமேதந் நிஶாசர| அஸ்மிந் முஹூர்த்தே ந பவேத் த்வாம் து திக் குலபாம்ஸநம்||) என்று, "உன்னையொழிய வேறொருத்தன் இந்த வார்த்தை சொன்னுனகில் இப்போதே வேலின்முனையிலேயாதல், ஆனையின் கொம்பிலேயாதல், கழுவின் தலையிலேயாதலாய் ஒழிந்தானிறே; **"न तु राक्षसचेष्टितः"** (ந து ராக்ஷஸசேஷ்டித:) என்னும்படி

கிறுர்கள்; (சமயம் வாய்த்தால்) அவமானமும் செய்கிறுர்கள்; கருத்தை மறைத்துவைத்திருப்பவர்களும், எப்போதும் வெளிப்படையில் நட்புறவு கொண்டாடுமவர்களும், துன்பம் நேரும்போது துரோகம் செய்பவர்களும் கொடியவர்களுமாயிருக்கும் தாயாதிகள் மிகவும் பயங்கரர்கள்" [ரா-யு 16-3, 4, 5,] என்று, "தாயாதிகளின் தன்மை அறியோமோ நாம்', என்றுரைத்து, "ஒரு தாமரைக்காட்டிலே பாசத்தோடுகூடிய மனிதர் களைக்கண்டு யானைகளாலே பாடப்பட்ட சுலோகங்கள் பின்வருமாறு சொல்லப்படுகின்றன:— அக்னியோ, மற்ற ஆயுதங்களோ, வலைகளோ நமக்கு பயத்தையளிக்கவில்லை; சுயநலத்தின்பொருட்டு (நம்மையிழுப்ப தற்காக) ஏவப்படும் நம்முடைய ஜ்ஞாதிகளே பயமளிக்கின்றன; நம்மைப் பிடிக்க அவைகள் வழிசொல்லித்தருகின்றன என்பதில் ஐயமில்லை; எல்லா பயத்தைக்காட்டிலும் தாயாதிபயமே மிகவும் கஷ்டம் என்பது நாமறிந்ததே'" [16-6, 7, 8] என்று இவ்விஷயத்தை விவரிக்கச் சில உபகதைகளையும் சொல்லி, "அரக்கனே! வேறொருவன் இத்தகைய வார்த்தையைச் சொல்லியிருந்தானுகில், இக்கணமே இல்லையாகியிருப் பான்; குலத்தைக் கெடுக்கவந்த உன்னைச் 'சுடுக' என்னும் சொல்லோடு விட்டேன்" [ரா-யு 16-15] என்று, "உன்னைத்தவிர வேறொருவன் இந்த வார்த்தை சொல்லியிருந்தாலுகில் இப்போதே அவனை வேலின் முனையிலோ

இக்குலத்துக்கு இழுக்காய்ப் பிறந்தாய்; உன்னை நாம் வேண்டோம்; என் கண்முகப்பில்நின்றும் ஓடிப்போ" என்ன;

இவரும் ஜ்யேஷ்டவசநாதிலங்கநம் பண்ணலாகாதென்று, **"उत्पपात गदापाणिश्चतुर्भिस्सह राक्षसैः"** (உத்பபாத கதாபாணிஶ் சதுர்ப்பிஸ் ஸஹ ராக்ஷஸை:) என்று ஸம்ஸாரஸாகரத்தைக் கடக்கைக்கு ஒரு தெப்பம்போலேயிருக்கிற கதையும் தாமுமாய், கரசரணாத்யவயவங்கள்போலேயிருக்கும் நாலு ராக்ஷஸரும் தானுமாய், ராவணனைவிட்டபோதே எல்லாருக்கும் மேலானான் என்று தோற்றும்படி கிளம்பி, **"अन्तरिक्षगतः श्रीमान्"** (அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்) என்கிறபடியே மேல் பெறப்புகுகிற லங்கைச்வர்யத்துக்கு அடியுண்டாம்படி விஷ்ணுபதத்தைப்பற்றி, **"आजगाम मुहूर्तेन"** **(ஆஜகாம முஹூர்த்தேந)** என்று, வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ" என்றும், "ஒல்லை நீ போதாய்" என்றும், பிறர் உபதேசிக்கவேண்டாதபடி தானே சடக்கென வந்து,

---

யானையின் தந்தத்திலோ, கழுவின் நுனியிலோ காணவைத்து அழித்திருப்பேன்; 'விபீஷணன்' அறவழி நடப்பவன்; அரக்கச்செயலற்றவன்' [ரா-ஆ 1-24] என்று நம்மவர்களெல்லாம் இகழும்படி இக்குலத்துக்கே ஒரு களங்கமாய்ப் பிறந்தாய்; நீ எங்களுக்கு வேண்டியதில்லை; என் கண்ணெதிரினின்றும் ஓடிப்போ" என்று உரைக்க;

இவ்விபீஷணனும், தமையன் வார்த்தையைத் தட்டக்கூடாதென்று "நாலு ராக்ஷஸர்களோடேகூட கதையைக் கையிலேந்தியவனாய் உயரக் கிளம்பினான்" [ரா-யு 16-16] என்று, ஸம்ஸாரமாம் கடலைக்கடப்பதற்கு ஒரு தெப்பம்போலிருக்கும் கதையும் கையுமாய், கைகால் முதலான அங்கங்கள்போலே அந்தரங்கரான நாலு அரக்கரோடே கூடியவனாய், ராவணனை விட்டபோதே அனைவரிலும் மேலானான் என்பதுதோற்ற உயரே கிளம்பி, "ஆகாயத்தையடைந்த செல்வன்" [ரா-யு 16-17] என்கிறபடியே இனிப் பெறப்போகிற இலங்கைச் செல்வத்துக்கு முதற்படியாக விஷ்ணு பதத்தைப் (1. ஆகாயத்தை. 2. பெருமாளின் திருவடியை) பற்றி "ஒரு முகூர்த்தநேரத்தில் வந்தான்" [ரா-யு 17-1] என்று, "வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ" [திருப்பல்-4] என்றும் "ஒல்லை நீ போதாய்"

"यत्र रामः सलक्ष्मणः". (யத்ர ராம: ஸலக்ஷ்மண:) என்று விபீஷணபூதரான இளையபெருமாள் திருமேனியிலே சாய்ந்து பெருமாளிருக்கிறவிடத்திலே, "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு" என்ன, **"गगनस्थं महीस्थास्ते ददृशुर्वानराधिपाः"** (ககநஸ்தம் மஹீஸ்நாஸ் தே தத்ருஶுர் வா நராதிபா:) என்று தலைக்காவலிருக்கிறவர்கள் காவல் துடிப்பாலே ஆகாஶத்திலே தோற்றினபோதேகண்டு, மஹாராஜரநுமதியோடே, **"सालानुद्यम्य शैलांश्च"** (ஸாலாநுத்யம்ய ஶைலாம்ஶ்ச) என்து கல்லும் தடியும் கொள்ள. **"उवाच च महाप्राज्ञ स्वरेण महता महान्"** (உவாச ச மஹாப்ராஜ்ஞ: ஸ்வரேண மஹதா மஹாந்) என்றும், "மரங்களும் இரங்கும் வகை மணிவண்ண ஓ! என்று கூவுமால்" என்றும் சொல்லுகிறபடியே **"सालानुद्यम्य"** (ஸாலாநுத்யம்ய) என்று இவர்கள் எடுத்த மரத்தோடு, **"वासुदेवतरु"** (வாஸுதேவ தரு) என்றும், **"ब्रह्मतरु"** (ப்ரஹ்மதரு) என்றும், **"निवासवृक्षः"**

[திருப்பாவை-15] என்றும் உபதேசித்தாற்போலே பிறர் உபதேசிக்க வேண்டாதபடி தானே விரைவில் வந்து, "எங்கு இலக்குவனோடு கூட ராமன் எழுந்தருளியிருக்கிறானோ" [ரா-யு 17-1] என்று, ப்ரகாரபூதரான (ஆதிசேஷஅவதாரமான) இளையபெருமாள் திருமேனியிலே சாய்ந்து கொண்டு பெருமாள் இருக்கிறவிடத்திலே சென்று 'நாகணை மிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு' [திருவாய் 5-10-11] என்று உறுதி பூண்டு நிற்க, "ஆகாயத்திலிருக்கும் விபீஷணனை பூமியிலிருக்கும் வானரர் தலைவர்கள் கண்டனர்" [ரா-யு 17-2] என்று முதற்சுற்றிலே காவலிருக்கும் முதலிகள் காவலில் ஊற்றத்தாலே, இலங்கையில் ஆகாசத்தில் எழுந்தபோதே கண்டு, சுக்கிரீவனின் அனுமதியோடு, 'மரங்களையும் மலைகளையும் எடுத்துக்கொண்டு" [ரா-யு 17-6] என்று இவனையடிக்கக் கல்லும் தடியும் கைக்கொள்ள, "பேரறிவாளப்பெரியோனான விபீஷணன் பெரிய ஸ்வரத்தோடே கூறினான்" [ரா-யு 17-9] என்று, "மரங்களும் இரங்கும்வகை மணிவண்ண ஓ! என்று கூவுமால்" [திருவாய் 6-5-9] என்று சொல்லுகிறபடியே, "மரங்களையெடுத்து" [ரா-யு 17-6] என்று இவர்களெடுத்த மரத்தோடு, 'வாஸுதேவதருச்சாயா" [ ] என்றும், "ப்ரஹ்மதரு" [ ] என்றும் ; "ஸாதுக்கள் தங்க

(நிவாஸவ்ருக்ஷ:) என்றும் சொல்லுகிற பெரிய மரத்தோடு வர்சியற நெஞ்சில் இரக்கம் பிறக்கும்படி பெருமிடறுசெய்து கூப்பிட்டு, **"रावणो नाम दुर्वृत्तो राक्षसोराक्षसेश्वरः। तस्याहमनुजो भ्राता विभीषण इति श्रुतः"** (ராவணோ நாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேச்வர:। தஸ்யாஹமநுஜோ ப்ராதா விபீஷண இதி ச்ருத:) என்று ஸ்வதோஷத்தை முன்னிட்டு, **"निवेदयत मां क्षिप्रं राघवाय"** (நிவேதயத மாம் க்ஷிப்ரம் ராகவாய) என்று, ராக்ஷஸர் நிமித்தமாக அஞ்சினார்க்குப் புகலிடமான குடிப்பிறப்புள்ள பெருமாளுக்கு, **"चञ्चलं हि मनः"** (சஞ்சலம் ஹி மந:) என்றும், 'நின்றவா நில்லா நெஞ்சு' என்றும் சொல்லுகிறபடியே, நெஞ்சில் ஆநுகூல்யம் பிரிவதற்குமுன்னே அறிவியுங்கோள்; **"विभीषणमुपस्थितं"** (விபீஷணமுபஸ்திதம்) 'கொன்றேன் அன்றே வந்தடைந்தேன்' என்கிறபடியே, "நெஞ்சில் ஈரமில்லையாகிலும் கையில் ஈரமுலருவதற்கு முன்னே வந்தேன்" என்று வார்த்தை சொல்ல, **"एतत्तु वचनं श्रुत्वा सुग्रीवो लघुविक्रमः।**

நிழல்தரும் மரம்" [ரா-கி 15-19] என்றும் சொல்லுகிற ஸர்வவ்யாபியான பெரியமரத்தோடு வித்தியாசமில்லாமல் எல்லாமரங்களுக்கும் நெஞ்சிலே இரக்கமுண்டாகும்படி பெரிய ஸ்வரத்தோடே கூப்பிட்டு, ராக்ஷஸனான ராவணன் என்னும் தீயநடத்தையுள்ள அரக்கர் தலைவனொருவனுள்ளான்; விபீஷணன் என்று பெயர் பெற்ற நான் அவனுக்குத் தம்பி" [ரா-யு 17-10] என்று தன் தோஷத்தை முன்னிட்டு, "ராகவரிடம் என்னை விரைவில் அறிவியுங்கள்" [ரா-யு 17-5] என்று, "ரகுராக்ஷஸ ஸம்வாதத்திற்படியே, ராக்ஷஸர்களைக்கண்டு பயப்பட்டவர்களுக்கு அடைக்கலமளிக்கும் ரகுகுலத்தில் பிறந்த ராமபிரானுக்கு 'மனம் நிலைநில்லாத தன்றோ' [கீதை 6-34] என்றும், 'நின்றவா நில்லா நெஞ்சு' [பெரியதிரு 1-1-4] என்றும் சொல்லுகிறபடியே நெஞ்சில் அன்பு பிரிவதற்கு முன்னால் அறிவியுங்கள்; (வந்தடைந்த விபீஷணனை) 'கொன்றேன் பல்லுயிரை—அன்றே வந்தடைந்தேன்' [பெரியதிரு 1-9-3] என்கிறபடியே நெஞ்சில் ஈரம் (அன்பு) இல்லையானாலும், கையில் ஈரம் (பலபல உயிர்களைக் கொன்ற இரத்தம்) உலருவதற்கு முன்னே வந்தேன்"

लक्ष्मणस्याग्रतो रामं संरब्धमिदमब्रवीत्॥'' (ஏதத்து வசநம் ச்ருத்வா ஸுக்ரீவோ லகுவிக்ரம:। லக்ஷ்மணஸ்யாக்ரதோ ராமம் ஸம்ரப்தமிதமப்ரவீத்॥) என்று மஹாராஜரும், "**स्वरेण महता।**'' (ஸ்வரேண மஹதா) என்று, அவன் கூப்பிட்ட குரல் பெருமாள் செவியிலே படுவதற்கு முன்னே சென்று விலக்கவேணுமென்று கடுநடையிட்டோடி, ''ராவணுநுஜனுயிருப்பானொரு ராக்ஷஸன் வந்தான்; வருகிற விடந்தன்னில் 'ஶரணம்' என்று விப்ரலம்பத்தைப் பண்ணினுன்; இப்படிக்கலந்து தோற்றி அந்தர்ப்பேதம், பண்ணுதல் நலிதல் செய்யவந்தான்; "**तस्याऽहं निग्रहं मन्ये क्षमं**" (தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே க்ஷமம்) என்று கழுத்திலும் காலிலும் கோக்க அடுக்கும்'' என்பது, அது பெருமாள் பொறுத்தவாறே, "**वध्यतामेष तीव्रेण दण्डेन सचिवैः सह**" (வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவை: ஸஹ) என்று ''இவனைக் கொன்று பொகட அமையும்'' என்ன;

என்று விபீஷணன் வார்த்தை சொல்ல, ''விரைந்த அடிவைப்புக்களையுடைய சுக்கிரீவன் இவ்வார்த்தையைக் கேட்டு, இலக்குவன் முன்னே ராமபிரானைக் குறித்துப் பரபரப்போடு இவ்வார்த்தை சொன்னுன்'' என்று சுக்கிரீவனும், ''பெரிய ஸ்வரத்தோடே'' [ரா-யு 17-9] என்கிற படியே அவன் கூப்பிட்ட கூக்குரல் ராமன் செவியில் படுமுன்னே சென்று அவனை ஏற்றுக்கொள்ளாமல் விலக்கவேணுமென்று விரைவில் நடந்து சென்று, ''ராவணன் தம்பியான ஓர் அரக்கன் வந்தான்; வரும்போது 'சரணம்' [ரா-யு 17-14] என்று வஞ்சகச்சொல்லைச் சொன்னுன்; இவ்வண்ணம் நம்மோடு கலந்து தோற்றி நம்முள் கலஹம் விளைக்கவோ, நம்மைத் துன்புறுத்தவோ வந்தான்'' என்பது, ''அவனைக் கட்டிவைப்பது தக்கது'' [ரா-யு 17-24] என்று, 'கழுத்திலும், காலிலும் கட்டிவைப்பது தகுந்தது' என்பது, அச்சொல்லை ராமன் பொறுத்திருப்பதைக் கண்ட பின்பு, ''இவன் மந்திரிகளோடுகூட கடுமையான தண்டனையினுல் கொல்லபடட்டும்'' [ரா-யு 17-27] என்று இவனைக் கொன்றுபோடுவது நலம் என்பது ஆக இப்படி வார்த்தை சொல்ல;

இத்தைக்கேட்ட பெருமாள், ''यदुक्तं कपिराजेन रावणावरजं प्रति। वाक्यं हेतुमदर्थ्यं च भवद्भिरपि तच्छ्रुतम्'' (யதுக்தம் கபிராஜேந ராவணாவரஜம் ப்ரதி। வாக்யம் ஹேதுமதர்த்யம் ச பவத்பிரபி தச்ச்ருதம்॥) என்று, ''*வ்யாக்ரவாநர ஸம்வாதத்திலே ஶரணாகத ஸம்ரக்ஷணம் பண்ணின நீங்களும் ஶரணாகதவத நிமித்தமாக உங்கள் நாயனார் சொன்ன வார்த்தைகளைக் கேட்டிகோளோ? (யதுக்தம் கபிராஜேந) நெருப்பென்ன வாய்வேமென்று பயப்படுவாரைப்போலே மஹாராஜர் சொன்ன பாசுரம் தம்மால் அநுபாஷிக்கவும் போகாமையாலே ''யத்'' என்கிறார்; (உக்தம்) தோழனார் இத்தை நினைப்பது மன்றிக்கே சொல்லுவதும் செய்வதே! (கபிராஜேந) 'செல்வர் சொல்லவஞ்சார்' என்று உண்டிறே; (கபிராஜேந) இவர் ரக்ஷகராக நன்றாக உண்ணவிருந்தீர்கோள். (கபிராஜேந) ஜாதிப்ரயுக்தமான அறிவுகேடும், ஐச்வர்யத்தால் வந்த அறிவுகேடும், இரண்டு முண்டிறே. (கபிராஜேந ராவணா

இதைக்கேட்ட ராமபிரான், ''வானரர் தலைவராலே ராவணன் தம்பியைக்குறித்துக்காரணங்களோடு கூடியதும், பொருள்பொதிந்ததுமான யாதொரு வாக்கியம் சொல்லப்பட்டதோ, அது உங்களாலும் கேட்கப் பட்டதன்றோ?'' [ரா-யு 17-30] என்று, ''*வ்யாக்ர வாநர ஸம்வாதத்திலே சரணமடைந்த வேடனை ரக்ஷித்த நீங்களும், சரணமடைந்தவனைக் கொல்லவேணும் என்று உங்கள் அரசர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டீர்களோ? (வானரர் தலைவரால் யாதொன்று சொல்லப்பட்டதோ) [நெருப்பென்றாலே வாய்வெந்துவிடும் என்று பயப்படுவாரைப்போலே சுக்கிரீவன், விபீஷணனைக் கொல்லவேணும் என்று சொன்ன கடுஞ் சொல்லைத் தம்மால் திருப்பிச் சொல்லவும் முடியாமையாலே 'யாதொன்று' என்கிறார்.] (சொல்லப்பட்டதோ) நம் நண்பர் இதை நினைப்பது மாத்திர மல்லாமல் சொல்லுவதும் செய்வதே! (குரக்கரசராலே) 'செல்வர் சொல்லுக்கு அஞ்சார்' என்பதன்றோ முதுமொழி. (குரக்கரசராலே) இவரை ரக்ஷகராகக்கொண்டு நீங்கள் போகங்களை அநுபவிக்க நினைத் திருப்பது நன்றாயிருக்கிறது. (குரங்கு அரசராலே) குரங்குச் சாதியிற் பிறப்பாலேயுண்டான அறிவுகேடும், அரசராயிக்கும் செல்வத்தாலேவந்த அறிவுகேடும் ஆகிய இரண்டும் உண்டன்றோ. (குரங்கரசராலே ராவணன்

---

* இந்த ஸம்வாதம் ஸுந்தரகாண்ட தனிச்லோகவிவரணத்தின் இறுதியில் காட்டப்பட்டது.

வரஜம் ப்ரதி) தம் தமயனைக் கொன்ற தாம் கிடீர் இப்ப டிக்கு வந்த ராவணன் தம்பியைச் சொல்லுகிறார்'' என்று அருளிச்செய்ய. "**इत्येवं परिपृष्टास्ते स्वं स्वं मतमतन्द्रिताः**'' (**இத்யேவம் பரிப்ருஷ்டாஸ்தே ஸ்வம் ஸ்வம் மதமதந்த்ரிதா:**) என்று முதலிகளும் தந்தாம் நினைவுகளைச் சொல்ல. இவை பெருமாள் திருவுள்ளத்துக்கு அஸஹ்யமாக, இத்தை யறிந்த திருவடியும் இப்பக்ஷங்களையெல்லாம் அநுபபத்தி களாலே தூஷித்து, ''விபீஷணன் நிர்த்தோஷன், ஸ்வீ கார்யன்'' என்று ஸித்தாந்திக்க, இத்தாலே பவநஸூதனாலே லப்தஸத்தாகரான பெருமாள் "**ममापि तु विवक्षाऽस्ति काचित्प्रति विभीषणं। श्रुतमिच्छामि तत्सर्वं भवद्भिः श्रेयसि स्थितैः**'' (**மமாபி து விவக்ஷாஸ்தி காசித் ப்ரதி விபீஷணம்| ச்ருதமிச்சாமி தத்ஸர்வம் பவத்பி: ச்ரேயஸி ஸ்திதை:||**) என்று ''நாமும் சில வார்த்தை சொல்லப்பாராநின்றோம்; முதலிகள் இத்தைக்கேட்டுத் தரவேணும்'' என்று நீர்மையால் அபேக்ஷித்து, ''ஸதோஷனாகிலுமாம், நிர்த்தோஷனாகிலுமாம், ஶரணாகதனானவனை ஒருகாலும் விடுவதில்லை'' என்று ஸ்வஸித்தாந்தத்தை அருளிச்செய்கிறார்.

தம்பியைக்குறித்து) தம் தமையனான வாலியைக்கொன்று முடிசூடிய தாமல்லவோ இப்படிவந்த ராவணன் தம்பியை குற்றம் சாட்டுகிறார்'' என்று அருளிச்செய்ய "இவ்வண்ணம் கேட்கப்பட்ட அவ்வானரர்கள் தங்கள் தங்கள் மதங்களைக் கவனத்துடன் உரைத்தனர்'' [ரா-யு 17-32] என்று வானரமுதலிகளும் தம் தம் நினைவுகளைச் சொல்ல, இவை ராமனுக்குப் பொறுக்கவொண்ணாததாக, இதைக் குறிப்பாலுணர்ந்த அனுமன் இப்பக்ஷங்களையெல்லாம் பொருந்தாமையைக்காட்டித் தள்ளி, ''விபீஷணன் தோஷமற்றவன்; கைக்கொள்ளத்தக்கவன்'' என்று முடிவுகூற, வாயு ஸூதனுடைய இவ்வார்த்தையாலே உயிர்தரிக்கப்பெற்ற ராமபிரான், ''விபீஷணனைக் குறித்து எனக்கும் சொல்லவிரும்பியதொன்றுண்டு; நன்மையிலே நிலைநிற்கும் உங்களாலும் அது கேட்கப்பட்டதாகவேணுமென விரும்புகிறேன்'' [ரா-யு 18-2] என்று, ''நாமும் சில வார்த்தை சொல்ல நினைக்கிறோம்; வானரத்தலைவர்கள் இதைக் கேட்கவேணும்'' என்று தம் ஸௌசில்யத்தாலே யாசித்து, "தோஷமுடையவனாகட்டும், அல்லது தோஷமற்றவனாகட்டும்; சரணமென்றடைந்தவனை ஒருபோதும் விடமாட்டேன்'' என்று தம் முடிவை அருளிச்செய்கிறார் "மித்ரபாவேந'' என்னும் சுலோகத்தாலே.

இவ்விபீஷண ஶரணாகதி தனக்கு "अहमस्म्यपराधानामाल-योऽकिञ्चनोऽगतिः। त्वमेवोपायभूतो मे भवेति प्रार्थनामतिः॥ शरणागतिः" (அஹமஸ்ம்யபராதாநாமாலயோऽகிஞ்சநோऽகதி:। த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி:॥ ஶரணாகதி:)என்கிற ஶரணாகதிலக்ஷணமுண்டோ? என்னில்: லக்ஷணம் நேராகஉண்டு. "रावणो नाम दुर्वृत्तो राक्षसो राक्षसेश्वरः। तस्याहमनुजो भ्राता विभीषण इति श्रुतः॥"(ராவணோ நாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேச்வர:। தஸ்யாஹமநுஜோ ப்ராதா விபீஷண இதி ச்ருத:॥)என்று ஸ்வயமார்ஜிதமாயும், ராவணஸம்பந்தத்தாலும் தனக்குண்டான தோஷபூயஸ்தையைச் சொன்னபடியாலே, "அஹமஸ்ம்யபராதாநாமாலய:" என்னுமர்த்தம் சொல்லுகிறது; பெருமாள் தமக்கு யுத்தஸாஹாய்யத்துக்காக அழைத்துவிட வந்தவனன்றிக்கே, "राज्यं प्रार्थयमानश्च बुद्धिपूर्व-मिहागतः" (ராஜ்யம் ப்ரார்த்தயமாநஶ்ச புத்திபூர்வமிஹாகத:) என்று தான் ராஜ்யம் வேண்டியவனாய் இங்குத்தைக்கொரு உபகாரமில்லாமையாலே "அகிஞ்சந:" என்னுமர்த்தம்சொல்லுகிறது; "सोऽहं परुषितस्तेन दासवच्चावमानितः" (ஸோऽஹம்

"'நான் குற்றங்களுக்கோர் இருப்பிடம்; கைம்முதலற்றவன்; கதியற்றவன்; நீயே உபாயமாவாயாக' என்று பிரார்த்திக்கும் புத்தியே சரணாகதியாகும்" [அஹிர் 36-38] என்று சரணாகதியின் லக்ஷணம் சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. இந்த லக்ஷணம் விபீஷண சரணாகதியில் உண்டோ? எனில்: லக்ஷணம் நன்றாக உண்டு. "ராவணன் என்னும் தீய நடத்தையுள்ள அரக்கன் அரக்கர்தலைவனாக உள்ளான்; விபீஷணன் என்று பெயர்பெற்ற நான் அவனுக்குத் தம்பியாயிருப்பவன்" [ரா-யு 17-10] என்று 'விபீஷணன்' [மிகபயங்கரன்] என்று பெயர்பெறும்படி நான் சம்பாதித்துக்கொண்ட பாபங்களாலும், ராவணனோடுண்டான உறவாலும் தான் மேலான குற்றவாளியாயிருப்பதைக் கூறியபடியாலே, "நான் குற்றங்களுக்கோர் இருப்பிடம்" [அஹிர் 36-38] என்ற பொருள் சொல்லப்பட்டது. ஸ்ரீராமபிரான் தமக்குப் போர்த்துணைக்காக அழைத்து விட்டதால் வாராமல், "ராஜ்யத்தை விரும்பி மனப்பூர்வமாக இங்கே வந்தான்" [ரா-யு 17-65] என்றுதான் ராஜ்யம் வேண்டியவனாய், ராமபிரானுக்கு ஒரு கைம்முதலுமில்லாமையாலே, "கைம்முதலற்றவன்" [அஹிர் 36-38] என்னும் அர்த்தம் சொல்லுகிறது. "நான் அவனால் கொடுஞ்சொல்

பருஷிதஸ்தேந தாஸவச்சாவமாநித:) என்றும், "**त्वां तु धिक्कुल पांसनं**" (த்வாம் து திக் குலபாம்ஸநம்) என்றும் ப்ராதாவான ராவணகோஷ்டிக்ககப்பட்ட அநர்ஹனுய்ப்போந்தபடியாலே அநந்யகதித்வம் சொல்லுகிறது; "**राघवं शरणं गतः**" (ராகவம் ஶரணம் கத:) என்று பெருமாளையே உபாயமாகப் பற்றின படியாலே "**त्वमेवोपायभूतो मे भवेति प्रार्थनामतिः। शरणागतिः**" (த்வமேவோபாய பூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி:। ஶரணாகதி:) என்னுமர்த்தத்தைச் சொல்லுகிறது. ஆகையாலே லக்ஷணம் புஷ்கலம்.

மஹாபாரதத்திலே க்ருஷ்ண சரமச்லோகம்போலே ஸ்ரீராமாயணத்துக்கும் இதொரு சரமச்லோகமாய் முடிவாகையாலே சரமமாகிறது. ஆகையாலே சரமச்லோகமாகிறது. இங்கு ஸர்க்கமத்யத்தில் சரமமாம்படியென்? என்னில்: ஆத்யந்தங்களல்ல இவ்விடத்தில் சரமத்வத்துக்கு ப்ரயோஜகம்; அங்கு கர்மாத்யுபாயங்களைப் பரக்க முன்னே விதித்து, பின்பு சரமோபாயமாக ப்ரபத்தியை விதிக்கை

பேசப்பட்டேன்; வேலைக்காரனைப்போலே அவமானப் படுத்தப்பட்டேன்" [ரா-யு 17-14] என்றும், "குலத்தைக் கெடுக்கவந்த உன்னைச் சுடுக" [ரா-யு 16-15] என்றும் தமயனான ராவணனுடைய கோஷ்டிக்குள்பட ஆகாதவனாகப் போய்விட்டபடியாலே சரணாகதிலக்ஷணமான கதியின்மை கூறப்பட்டது. "ராகவரை சரணடைந்தேன்" [ரா-யு 17-14] என்று ஸ்ரீராமபிரானையே உபாயமாகப் பற்றினபடியாலே, "'நீயே எனக்கு உபாயமாவாயாக' என்று பிரார்த்திக்குப் புத்தியே சரணாகதி" என்னும் லக்ஷணத்தைச் சொல்லுகிறது. ஆகையால் விபீஷணசரணாகதியில் சரணாகதிலக்ஷணம் நிறைந்துள்ளது.

ஸ்ரீமஹாபாரதத்திலே க்ருஷ்ண சரமச்லோகம்போலே, ஸ்ரீராமாயணத்துக்கும் இது ஒரு சரமச்லோகமாய் ராமபிரானுடைய முடிவாயிருக்கையாலே சரமம் எனப்படுகிறது. ஆகையாலே இது ஸ்ரீராமசரமச்லோகமாகிறது. இங்கு ஸர்க்கத்தின் நடுவிலேயிருக்கும் இதைச்சரமம் (கடைசிச்லோகம்) என்று சொல்லுவது எப்படி? எனில்: இவ்விடத்தில் 'சரமம்' என்பதற்குக் காரணம் முதல், கடைசி என்றவிடத்தில் சொல்லப்படும் கடைசிச்லோகமாயிருப்பதல்ல; ஸ்ரீக்ருஷ்ண சரமச்லோகத்திலே கர்மம்,

யாலே சரமமாக இருந்தது. இங்கும் அங்கத ஶரபப்ரப்ருதிகள் விபீஷணஸ்வீகாரத்தைத் தனித்தனியே சொல்ல, அவற்றைப் பூர்வபக்ஷீகரித்துச் சரமமாக ஸித்தாந்தித்த ச்லோகமாகையாலே சரமமாகிறது. அங்கும் ப்ரஷ்டைச்வர்யனை லப்தைச்வர்யனாக்கிற்று; இங்கும் ப்ரஷ்டைச்வர்யனை லப்தைச்வர்யனாக்குகிறது. அங்கும் ஸேனைக்கு நடுவே நின்று சொன்ன வார்த்தை; இங்கும் ஸேனைக்கு நடுவே நின்று சொல்லுகிற வார்த்தை. அங்கும் ஶோகநிவ்ருத்திக்காகச் சொன்ன வார்த்தை; இங்கும் ஶோகநிவ்ருத்திக்காகச் சொல்லுகிற வார்த்தை. அங்குமொரு கோபால வாக்யம்; இங்கும் ஒரு கோபால வாக்யம். அங்கும் "यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे" (யச் ச்ரேய: ஸ்யாந் நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே) என்று ச்ரேயோர்த்தி கேட்கச் சொன்ன வார்த்தை;

ஜ்ஞானம், பக்தி முதலான உபாயங்களை விரிவாக முன்னம் விதித்துப் பின்பு கடைசி உபாயமாக ப்ரபத்தியை விதிக்கிறபடியாலே சரம ச்லோகம் என்றது கடைசி உபாயத்தை விதிக்கும் ச்லோகமாகிறது; ஸ்ரீராமசரமச்லோகமாகிற இதிலும் அங்கதன், சரபன், ஜாம்பவான் முதலானோர் 'விபீஷணனை ஏற்றுக்கொள்ளலாகாது' என்பதைத் தனித்தனி ஹேதுக்களைச் சொல்லித் தனித்தனியே சொல்ல, அவற்றைப் பூர்வபக்ஷமாக்கி, கடைசியாக ஸித்தாந்தம் (முடிவு) செய்த ச்லோகமாகையாலே இதுவும் சரமச்லோகமாகிறது. இவ்விரண்டுக்கும் பல ஒற்றுமையுண்டு. அங்கும் (ஸ்ரீகிருஷ்ணசரமத்திலும்) ராஜ்யமிழந்து கிடந்த அர்ஜுனனை ராஜ்யம் பெறச்செய்தது; இங்கும் "பரித்யக்தா மயா லங்கா" [ரா-யு 19-5] என்கிறபடியே ராஜ்யமிழந்த விபீஷணனை ராஜ்யம் பெறச் செய்கிறது இந்த ச்லோகம். "ஸேநயோருபயோர் மத்யே" [கீதை 1-21] என்கிறபடியே அங்கும் ஸேனைக்கு நடுவே நின்று சொன்ன வார்த்தை; இங்கும் வானரஸேனைக்கு நடுவே நின்று சொல்லுகிற வார்த்தை. அங்கும், "மாசுச:" [கீதை 18-66] என்று அர்ஜுனனுடைய சோகம் தீருவதற்காகச் சொன்ன வார்த்தை; இங்கும் விபீஷணனுக்கு முதலிகள் வார்த்தையைக்கேட்டு உண்டான சோகம் போவதற்காகச் சொல்லுகிற வார்த்தை. அங்கும் ஒரு கோபாலனின் (இடையனின்) வார்த்தை; இங்கும் ஒரு கோபாலனின் (பூமிபாலனின்) வார்த்தை. (கோசப்தம் பூமிவாசி.) அங்கும், "எனக்கு எது நன்மையாக உன்னால் முடிவுசெய்யப்பெற்றிருக்

இங்கும்“ श्रुतमिच्छामि तत्सर्वं भवद्भिः श्रेयसि स्थितैः”(ச்ருதமிச்சாமி தத்ஸர்வம் பவத்பி: ச்ரேயஸி ஸ்திதை:) என்று, ச்ரேயோர்த்திகள் கேட்கச் சொல்லுகிற வார்த்தை.

அங்கு சரமச்லோகத்தில் இங்கு சரமச்லோகத்துக்கு வாசியுண்டு: அங்கு கேட்கிறவனுக்குத் தேர்மேலெழநின்று சொன்னவார்த்தை; இங்கு நிலத்திலேயிருந்து ப்ரதிஷ்டிதராய்ச் சொல்லுகிற வார்த்தை. அங்கு “मां व्रज” (மாம் வ்ரஜ) என்று தன்னைப்பற்று என்று சரண்யன் ஆசைப்பட்டபடி சொல்லிற்று; இங்கு (ஸம்ப்ராப்தம்) என்று எதிரி உடன்பட்டுப் பற்றினபடி சொல்லுகிறது. அங்கு, “धर्मान् परित्यज्य” (தர்மாந் பரித்யஜ்ய) என்று தர்மத்யாகம் பண்ணிற்று; இங்கு,“परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च” (பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச) என்று தர்மித்யாகம் பண்ணுகிறது. அங்கு “षोडशस्त्रीसहस्राणि” (ஷோடஶஸ்த்ரீ ஸஹஸ்

கிறதோ அதை எனக்குச் சொல்லு” [கீதை 2-9] என்று நன்மையை விரும்பியவன் கேட்கச்சொன்ன வார்த்தை; இங்குப், “என் நன்மையிலே நிலைநிற்கும் உங்களால் அது அனைத்தும் கேட்கப்படவேண்டும்” [ரா-யு 18-2] என்று நன்மையை விரும்பியவர்கள் கேட்கச் சொல்லுகிற வார்த்தை.

ஸ்ரீக்ருஷ்ண சரமச்லோகத்தைக்காட்டிலும் ஸ்ரீராமசரமச்லோகத்திற்கு ஏற்றமுண்டு. அங்கு ச்ரோதாவான அர்ஜுனனுக்குத் தேர்மேல் எழ (உயர) நின்று சொன்ன வார்த்தையானகயாலே மேலெழுந்த வார்த்தையாயிருக்கும்; இங்கு நிலத்திலே நிலையாயிருந்து சொன்ன வார்த்தையாகையாலே நிலைநின்ற வார்த்தையாயிருக்கும். அங்கு “என்னை சரணமடை” [கீதை 18-66] என்று தன்னைப்பற்றவேணும் என்று சரண்யனான தான் ஆசைப்பட்டபடியைச் சொல்லிற்று; அர்ஜுனன் பற்றியதும், பற்றாததும் தெரியவில்லை; இங்கு “வந்தடைந்தவனை” என்று எதிரியான விபீஷணன் சம்மதித்துப் பற்றினபடியைச் சொல்லுகிறது. அங்கு “தர்மங்களை விட்டு” [கீதை 18-66] என்று தர்மங்களை விடச்சொல்லிற்று; இங்கு, “என்னால் இலங்கையும், நண்பர்களும், செல்வங்களும் அடியோடு விடப்பட்டன” [ரா-யு 19-5] என்று தர்மிகளையே (தர்மங்களையுடைய பொருள்களையே) விபீஷணன் விட்டுவந்தமையைச் சொல்லுகிறது.

ராணி) என்று பஹுதாரபரிக்ரஹம் பண்ணினவன் வார்த்தை; இங்கு, "**न रामः परदारांश्च चक्षुर्भ्यामपि पश्यति**" (ந ராம: பரதாராம்ஶ்ச சக்ஷுர்ப்யாமபி பச்யதி) என்று ஏக தாரவ்ரதன் வார்த்தை. அங்கு, "பேதைக்குப் பொய்குறித்து" என்றும், "ஒருவர்க்கும் மெய்யனல்லை" என்றும் அஸத்யனான க்ருஷ்ணன் வாக்யம். இங்கு "**सत्यवाक्यः**" (ஸத்யவாக்ய;) என்றும், "**रामो द्विर्नाभिभाषते**" (ராமோ த்விர் நாபிபாஷதே) என்றும் ஸத்யரான ராமன் வாக்யம். அங்குக் கையும்

"ஜக்ராஹ விதிவத் பாணீந் ப்ருதக் கேஹேஷு தர்மத:।
ஷோடஶஸ்த்ரீ ஸஹஸ்ராணி ஶதமேகம் ததோऽதிகம்।
தாவந்தி சக்ரே ரூபாணி பகவாந் மதுஸூதந:॥"

[வி-பு 5-31-18]

[பதினாறாயிரத்து நூறு பெண்களைத் தனித்தனி வீடுகளில் (ஒரே சமயத்தில்) விதிப்படி தர்மபத்னிகளாகக் கைப்பிடித்தான் மதுசூதனன்; (அதற்காக) அத்தனை ரூபமெடுத்துக்கொண்டான்] என்று அங்கு பல மனைவிகளைக் கொண்டவன் வார்த்தை; இங்கு, "ராமன் பிறர் மனைவியரைக் கண்ணெடுத்தும் காணான்" [ரா-அ 72-48] என்று ஒரே மனைவிக்குமேல் கொள்வதில்லை என்னும் விரதமுடையவன் வார்த்தை.

"கருமலர்க் கூந்தல் ஒருத்திதன்னைக்
கடைக்கணித்(து) ஆங்கே ஒருத்தி தன்பால்
மருவி மனம் வைத்து மற்றொருத்திக்கு
உரைத்(து) ஒரு பேதைக்குப் பொய்குறித்துப்
புரிகுழல் மங்கை ஒருத்திதன்னைப்
புணர்தி அவளுக்கும் மெய்யனல்லை
மருதிறுத்தாய் உன் வளர்த்தியூடே
வளர்கின்றதால் உன்றன் மாயம்தானே"

[பெரு-திரு 6-3]

"நீ ஒருவர்க்கும் மெய்யனல்லை" [பெரியாழ்திரு 5-3-2] என்கிறபடியே அங்கு பொய்யனான கண்ணன் வார்த்தை; இங்கு "உண்மை வார்த்தையுடையோன்" [ரா-பா 1-2] என்றும், "ராமன் (முரணான) இரண்டு வார்த்தை பேசமாட்டான்" [ரா-அ 18-30] என்றும் மெய்யனான ராமன் வார்த்தை. அங்குக் கையும்கசையுமான தேர்ப்பாகன்

உழவுகோலுமான ஸாரதிவாக்யம்; இங்குக் கையும் வில்லுமான தாஶரதி வாக்யம். அங்கு ஶரணாகதாத்யவஸாயம் சொல்லிற்று; இங்கு சரண்யாத்யவஸாயம் சொல்லுகிறது. அங்கு, ''ஶரணாகதனைப் பாபங்களில் நின்றும் விடுவிப்பேன் என்றது; இங்கு, 'நான் விடேன்' என்கிறது. அங்கு 'ஸதோஷனை விடுவிப்பேன்' என்றது; இங்கு 'தோஷவானுனாலும் விடேன் என்கிறது. அங்குக்காலாந்தரபாவியான அத்ருஷ்டபலம் சொல்லிற்று; இங்கு ஸத்ய:பலமான த்ருஷ்டபலம் சொல்லுகிறது. அங்கு ப்ரதிபந்தகரின்றிக்கேயிருக்க ரக்ஷித்தபடி சொல்லிற்று; இங்கு ப்ரதிபந்தகருண்டாயிருக்கச்செய்தேயும் ரக்ஷித்தபடி சொல்லுகிறது.

இனி இஶ்லோகத்தால், புத்திபூர்வகமாகிலுமாம், அபுத்திபூர்வகமாகிலுமாம், நம்மைப் பற்றினவர்களை தோஷமுண்டேயாகிலும் விடுவதில்லை என்கிறார்.

வார்த்தை; இங்குக் கையும் வில்லுமான தசரதன் (பத்துத் திக்கிலும் தேருடையவன்) பிள்ளை வார்த்தை. அங்கு ''மாமேகம் சரணம் வ்ரஜ'' [கீதை 18-66] [என்னை ஒருவனையே சரணடை] என்று சரணமடைபவனுக்கிருக்கவேண்டிய உறுதி சொல்லிற்று; இங்கு சரண்யனுக்கு சரணாகதரக்ஷணத்திலுள்ள உறுதி சொல்லுகிறது. அங்கு, ''சரணமடைந்தவனைப் பாபங்களினின்றும் விடுவிப்பேன்'' [கீதை 18-66] என்றது; இங்கு ''சரணமடைந்தவனை நான் விடமாட்டேன்'' என்கிறது. அங்கு, ''பாபமுடையவனைப் பாபங்களினின்றும் விடுவிப்பேன்'' [கீதை 18-66] என்றது; இங்கு ''தோஷமுடையவனாலும் நான் அவனை விடமாட்டேன்'' என்கிறது. அங்கு, எப்போதோ ஏற்படும் கண்காணா மோக்ஷ பலத்தைச் சொல்லிற்று; இங்கு, உடனே கண்ணுக்குநேரேயுண்டாகும் பலமான விபீஷணஸ்வீகாரத்தைச் சொல்லுகிறது. அங்கு, தடைசெய்வார் ஒருவரும் இல்லாமலிருக்கும்போது அர்ஜுனனை ரக்ஷித்தபடியைச் சொல்லிற்று; இங்குத் தடைசெய்வார் பலர் இருந்தபோதும் விபீஷணனை ரக்ஷித்தபடியைச் சொல்லுகிறது.

இனி, இந்த ச்லோகத்தின் ஸாரப்பொருளாவது,-'நினைவறிந்து செய்தாலும் சரி, நினைவில்லாமல் செய்தாலும் சரி, நம்மைப் பற்றியவர்களை தோஷமிருந்தபோதிலும் கைவிடமாட்டேன்' என்கிறார்.

வ்யா:—'இதெல்லாம் நீர் செய்யவேண்டுவது உம்மை பந்து புத்திபண்ணிவந்து பற்றினாலன்றோ? என்ன,-(மித்ர பாவேந ஸம்ப்ராப்தம்) ஸோதரப்ராதாவான ராவணனையும்விட்டு நம்மையே பந்துவாகவந்து பற்றிநிற்கிற நிலை கண்டீரே! என்கிறார். (மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்) ந து ஶத்ரு பாவேந. "प्राप्तः शत्रुरतर्कितः" (ப்ராப்த: ஶத்ருரதர்க்கித:) என்று தோழனார் ஶத்ருவென்று பொல்லாதாகச் சொன்னார்; மித்ரனாயே வந்தான் காணும். (மித்ரபாவேந) ஒற்றனாய் வந்தானல்லகாணும்; மித்ரனாய் வந்தான். (மித்ரபாவேந) "मितात् त्रायत इति मित्रम्" (மிதாத் த்ராயத இதி மித்ரம்) என்று பண்ணின உபகாரத்தை அளவிட்டு அதுக்கு ஸத்ருஶமான ப்ரத்யுபகாரம் பண்ணுகையிறே மித்ரஶப்தார்த்தமாகிறது. அப்படிக்குத் தாடகா தாடகேய விராத கர தூஷண கபந்த ப்ரப்ருதிகளைக் கொன்று கூறையாடி ப்ராதி

வ்யா:—"இப்படி தோஷமுள்ளவனாகிலும், கைவிடாமல் ரக்ஷிக்க வேண்டியது உம்மை எல்லாவுறவுமாக நினைத்துவந்து சரணமடைந்தாலன்றோ?" என்று சுக்கிரீவனுக்கு நினைவாக, சொல்லுகிறார்,-1. (நண்பனின் தன்மையோடு வந்தடைந்தவனை) கூடப்பிறந்தவனான ராவணனையும்விட்டு நம்மையே உறவாக நினைத்துவந்து சரணம்பற்றி நிற்கிற நிலையைக் கண்டீரோ? என்கிறார். 2. (நண்பனின் தன்மையோடு வந்தவனை) நண்பனின் தன்மையோடு வந்தானேயொழிய எதிரியின் தன்மையோடு வரவில்லைகிடீர்; "பரிசீலிக்கப்படாதவனாய் நம்மை அணுகியிருக்கும் எதிரி" [ரா-யு 17-26] என்று நம் தோழனான மஹாராஜர், விபீஷணனை எதிரியென்று தவறாகச் சொன்னார்; இவன் நண்பனாகவே வந்தான் காணும். 3 (நண்பனின் தன்மையோடு) நீர் சொன்னதுபோலே ஒற்றனாய்வந்தவனல்ல காணும்; நண்பனாகவே வந்தான். 4. (நண்பனின் தன்மையோடு) "(உபகாரத்தின்) அளவையிட்டு, (பிரதியுபகாரம்செய்து) காப்பாற்றுகிறவனாகையால் மித்ரம் எனப்படுகிறான்" என்பது மித்ரசப்தத்தின் வ்யுத்பத்தியினால் ஏற்படும் ஒரு பொருள். ஒருவன் செய்த உபகாரத்தை அளவிட்டு, அதுக்குத் தக்க அளவுள்ள பிரதியுபகாரம் செய்பவனே மித்திரனாவான் என்றபடி. அப்பொருள் இவ்விடத்தில் பொருந்தாது. ஏனெனில்: தாடகை, ஸுபாஹு மாரீசர்கள், விராதன், கர தூஷண த்ரிசிரஸ்ஸுக்கள், கபந்தன் முதலானவரைக் கொன்று அரக்கர்

கூல்யம் பண்ணி ஒரு உபகாரம் பண்ணுமையாலே ப்ரத்யுபகாரம் பண்ணவேண்டுவதில்லை. தேவரீர் தாம் உபகரிக்கப் பார்த்தீராகில். "एष सर्वस्वभूतस्तु परिष्वङ्गः" (ஏஷ ஸர்வஸ்வபூ$_4$தஸ்து பரிஷ்வங்க$_3$:)என்றும்."போகம் நீ எய்திப் பின்னும் நம்மிடைக்கே போதுவாய் என்ற பொன்னருள்" என்றும் சொல்லுகிறபடியே. கொடுத்தருளுவது உபய விபூ$_4$தியாதல். விபூ$_4$திமானை தேவரையாதலாயிருக்கும் இதுக்கு ஸத்ருமாகப் பண்ணலாவதொரு ப்ரத்யுபகார மில்லாமையாலே. மித்ரபாவம் இவனுக்குண்டானபடியென்? என்ன, அது கேளீர்.- மைத்ரியாவது.- பரஸம்ருத்$_3$தி$_4$ ஸஹமான சித்தபரிகர்மம். ஆனபின்பு, நம்முடைய பக்கலிலே இத்தனை உந்மேஷங்களைக் கண்டால். பொருமை

களுடைய செருக்கையழித்து, அரக்கர்களுக்குத் தீமையே செய்து ஒரு நன்மையும் நீர் செய்யாமையாலே, உமக்கு அவன் பிரதியுதவி செய்ய வேண்டியதில்லை; ஆகையால் இவ்வகையில் அவன் மித்திரனாகமாட்டான். அவன் செய்த உதவிகளுக்கு நீர் கைம்மாறு செய்வதன்மூலம் மித்ரசப்தத்திற்கு நீர் பொருளாகலாமென்று பார்த்தால், "இதுவே அனுமனுக்கு எல்லாமாயிருக்கும் ஆலிங்கனம்" [ரா-யு 1-14] என்றும், "போகம் நீ எய்திப் பின்னும் நம்மிடைக்கே போதுவாய் என்ற பொன்னருள்" [பெரியதிரு 5-8-5] என்றும் சொல்லுகிறபடியே, அவன் செய்த உதவிக்குப் பிரதியுதவியாக உபயவிபூதியையாவது, விபூதியையுடைய தேவரீர் தம்மையேயாவது கொடுக்கவேண்டியுள்ளது. அப்படிக் கொடுத்தாலும் அவன் செய்த உதவிக்குத்தக்க பிரதியுதவியாக தேவரீர் திருவுள்ளம் அதைக் கொள்ளாது; ஆகையால், அவனுதவிக்குத்தக்க பிரதியுதவி உம்மாலும் செய்யமுடியாதாகையாலே நீரும் மித்ர சப்தத்திற்குப் பொருளாக முடியாது. ஆகையால், "மித்ரப$_4$ாவம்" [1. மித்திரனின் தன்மை; 2.'மித்திரன்' என்னும் நினைவு] இவனுக்கு எப்படி ஒட்டும்? எனில்: அதைக் கேளீர். "மிதாத் த்ராயதே இதி மித்ரம்" [உபகாரத்தின் அளவையிட்டு பிரதியுபகாரம் செய்து ரக்ஷிக்கிறுனுகையாலே மித்திரனுகிறுன்] என்னும் வ்யுத்பத்தி ஸித்தமான பொருளைத்தவிர ரூடிஸித்தமான (லோகப்ரஸித்தமான) மற்றொரு பொருளும் மித்ரசப்தத்திற்கு உண்டு. அதன்படி—மித்திரனின் தன்மையாவது—மற்றவனுடைய பெருமையைப் பொறுக்கும்படியான நெஞ்சின் உயர்நிலையாகும். இந்நிலை விபீஷணனிடமுள்ளது. நம்மிடம், தாடகை முதலானுரைச் சென்று கொன்று வென்றிகொண்ட

பண்ணுகையன்றிக்கே. இசைந்திருக்கிற இதுதான் காணும் மித்ரபாவமாவது. அன்றிக்கே, (மித்ரபாவேந) என்று, "ञिमिदा स्नेहने" (ஞிமிதா ஸ்நேஹநே) என்கிற தாதுவிலே யாய் ஸ்நேஹியாகையாலே ரக்ஷிக்கவந்தான் என்றுமாம். (மித்ரபாவேந) இதுதான் அவன் புத்த்யா சொன்னோமத்தனைபோக்கி, நம் புத்தியைப்பார்த்தால் இத்தனையக வாய் வேண்டாகாணும். "भावोलीला क्रियाचेष्टाभूत्यभिप्राय जन्तुषु" (பாவோ லீலா க்ரியா சேஷ்டா பூத்யபிப்ராய ஜந்துஷு) என்கிற அர்த்தங்களில் பாவஶப்தமாய், (மித்ரபாவேந) என்றது லீலையாய், லீலையாவதுதான் ஹர்ஷப்ரயுக்தசேஷ்டாவிஶேஷமிறே. இவன் ராஜாவின் தம்பியாய்ச் செருக்கின் மிகுதியாலே, மித்ரமானுர்வேஷ பரிக்ரஹம் பண்ணி எழுதியணிந்து வரவுமாம். அன்றிக்கே,

---

இத்தனை பெருமைகளைக்கண்டும், பொருமை கொள்ளாமல் இசைவுடனிருந்த இதுவே விபீஷணனின் மித்ரபாவமாகும். இப்படி ரூடியினால் ஸித்தித்த பொருளாகக் கொள்ளாமல், 5. (மித்திரனின் தன்மையோடு) என்று, "ஞி மிதாஸ்நேஹநே" என்னும் தாதுவிலிருந்து மித்ரசப்தம் தோன்றியதாகக்கொண்டு, ஸ்நேஹமுடையவனாகையாலே நம்மை ரக்ஷிக்க வந்தான் என்றும் கொள்ளலாம். 6. (மித்திரனின் வேஷத்தோடு) முன் சொன்ன பொருள்கள் எல்லாம் விபீஷணனின் நிலைவைப் பார்த்துச் சொன்னவை. நமக்கு அவன் மித்திரனின் தன்மையோடே வரவேண்டும் என்னும் அவசியமில்லை; நண்பனின் வேஷத்தோடு வந்தாலும் போதுமானது. "'பாவ:' என்னும் சப்தம் லீலை, கிரியை, சேஷ்டை, பூதி, அபிப்ராயம், ஜந்து, (ஏதேனுமொரு பொருள்) ஸத்தை, (பரமாத்மா, தன்மை) என்னும் பொருள்களில் பிரயோகிக்கப்படுகிறது" [வைஜயந்தி-த்வயக்ஷரகாண்டம் 1-43] என்கிற அர்த்தங்களிலே பாவசப்தம் பிரயோகிக்கப்படுகிறதாகையாலே, அவற்றிலே, 7. (மித்திரனின் பாவத்தோடு) என்றது மித்திரனின் லீலையோடு என்றதாய், லீலையாவது-உகப்பினாலுண்டாகும் ஒரு செயலாகையாலே, இவன்தான் அரக்கவரசனின் தம்பியென்னும் செருக்கின் மிகுதியாலே, விளையாட்டிற்காக நண்பனுடைய வேஷத்தையிட்டுக்கொண்டு அதற்குரிய கோலங்களை எழுதியணிந்துகொண்டு வந்தாலும் சரி; அதுகொண்டே இவனைக் கைவிடமாட்டேன். அல்லது 8. (மித்திரனின் பாவத்தோடு) பாவசப்தம் கிரியையைக்

(மித்ரப$_4$ாவேந) என்கிறது க்ரியையாய், புத்திபூர்வ மின்றியிலே வாயூத$_3$காதி$_3$ ப்ரேரிதரைப்போலே கோல் விழுக்காட்டிலே மித்ரமானார் செய்யும் செயலைச் செய்தான் என்றாகவுமாம். அன்றியிலே (மித்ரப$_4$ாவேந) என்று சேஷ்டையாய், ஸ்நேஹமில்லையாகிலும், "राज्यकाङ्क्षी" (ராஜ்யகாங்க்ஷீ) என்று ஒரு ப்ரயோஜநோத்தே$_3$ஶேநவாகிலும் இத்தனை சேஷ்டை பண்ணினான் என்றாகவுமாம். அன்றியிலே ப$_4$ாவஶப்த$_3$ம் பூ$_4$தியாய், பூ$_4$திசப்தம் ஸம்பத்வாசியானபோது (மித்ரப$_4$ாவேந) என்று, தன் புத்தியாலே நம்மை மித்ரமாக அறுதியிட்டு, நமக்கு எல்லா நன்மையும் உண்டாகவேணுமென்று வந்தானாகவுமாம். அன்றிக்கே, பூ$_4$திஶப்தம் ப$_4$வநவாசியானபோது, மித்ரப$_4$ாவத்தோடே வந்தானாகவுமாம். அன்றிக்கே, (மித்ரப$_4$ாவேந) என்று பாவஶப்தம் ஸத்தாவாசியாய், மித்ரமான நம் ஸத்தை கிடக்கைக்காக வந்தானாகவுமாம். அன்றிக்கே (மித்ர

குறிப்பதாய், நினைவறிந்து செய்யமால், காற்றாலும், நீராலும் ஏவப்பட்டுச் சில செயல்களைச் செய்பவரைப்போலே, யத்ருச்சையாக நண்பர் செய்யும் செயலைச் செய்தான் என்றும் கொள்ளலாம். அல்லது, 9. (மித்திரனின் ப$_4$ாவத்தோடு) ப$_4$ாவசப்தம் சேஷ்டையைக் குறிப்பதாய், உள்ளத்தில் உண்மையான அன்பில்லாமற்போனாலும், "ராஜ்யத்தை விரும்பியவன் விபீஷணன்" [ரா-யு 18-33] என்று ஒரு பயனை விரும்பியாவது இச்செயலைச் செய்தான் என்றும் கொள்ளலாம். அல்லது ப$_4$ாவசப்தம் 'பூ$_4$தி' என்னும் பொருளைக் காட்டுவதாய், 'பூதி' என்றது செல்வத்தைக் காட்டுவதாய், 10. (மித்திரனுக்கு ப$_4$ாவத்திற்காக) என்று, தன் நினைவாலே நம்மை நண்பனாக முடிவுகட்டி, நமக்கு எல்லாச் செல்வமும் உண்டாகும்பொருட்டு வந்தான் என்றுமாம். "அத்$_4$யயநேந வஸதி" [அத்யயனத்தின்பொருட்டு வஸிக்கிறான்] என்பதுபோலே "மித்ராப$_4$ாவேந ஸம்ப்ராப்தம்" என்று பலே த்ருதீயை, 11. (மித்ரபாவத்தோடு வந்தான்) பூ$_4$திசப்தம் இருப்பைச் சொல்லுவதாய். மித்ரனாயிருந்துகொண்டு வந்தான் என்றுமாம். 12. (மித்ரப$_4$ாவத்திற்காக) வைஜயந்திநிகண்டுவின்படி பாவசப்தம் ஸத்தையைக் குறிக்கும்போது, நண்பனான நம் ஸத்தை கிடப்பதற்காக வந்தான் என்றுமாம். ப$_2$லே

ப₄ாவேந) என்று ப₄ாவஶப்தம் அபிப்ராயவாசியாய், போக்கற்று ராஜ்யகாங்க்ஷியாய் வந்தவனன்றியே. "परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च। भवद्गतं मे राज्यञ्च जीवितञ्च सुखानि च॥" (பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த₄நாநி ச। ப₄வத்₃க₃தம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுக₂ாநி ச॥) என்று புறம்புள்ளவையெல்லாவற்றையும் கைவிட்டு, நாமே உத்₃தே₃ஶ்யமென்கிற நினைவோடே வந்தான் என்றுகவுமாம். அன்றியிலே, (மித்ரப₄ாவேந) என்று ப₄ாவஶப்தம் ஜந்துவாசியாய், "चतुर्भिस्सह रक्षोभिर्भवन्तं शरणं गतः" (சதுர்பி₄: ஸஹ ரக்ஷோபி₄ர் ப₄வந்தம் ஶரணம் க₃த:) என்று, தானே வருகையன்றிக்கே, பந்து₄ஜநத்தோடே வந்தானென்றுகவுமாம். இத்தால், ஒற்றனாய் நலிய வந்தானாகில் இத்தனை பேரோடே வரக்கூடாதிறே என்கை. அன்றிக்கே, (மித்ரப₄ாவேந) என்று, வருகிறவிடந்தன்னில் ராவணனோடே ருஷ்டனாய்ப் பருஷஞ்சொல்லிப்போருகையன்றிக்கே, "स त्वं भ्रातासि मे राजन् ब्रूहि मां यद्यदिच्छसि। ज्येष्ठो मान्यः पितृसमो न च धर्मपथे स्थितः॥" (ஸ த்வம் ப்₄ராதாऽஸி மே ராஜந் ப்₃ரூஹி மாம்

த்ருதீயை. 13. (மித்ரபாவத்தோடு) ப₄ாவசப்தம் அபிப்ராயத்தைச் சொல்லுவதாய், வேறு விதியில்லாமல் ராஜ்யத்தை விரும்பி வந்தவனல்ல இவன்; "என்னால் இலங்கையும், நண்பர்களும், செல்வமும் கைவிடப்பட்டன; எனக்கு ராஜ்யமும், உயிரும், ஸுகங்களும் உம்மிடமுள்ளது" [ரா-யு 19-5] என்று மற்றுமுள்ள பற்றுக்களையெல்லாம்விட்டு நாமே எல்லாம் என்னும் (நண்பனின்) நினைவோடு வந்தான் என்றுமாம். 14. (மித்ரப₄ாவத்தோடு) ப₄ாவசப்தம் 'ஜந்து' என்னும் பொருளதாய், "நான்கு அரக்கர்களோடு உம்மைச் சரணடைந்தேன்" [ரா-யு 17-17] என்கிறபடியே தான் மாத்திரம் வராமல் தனக்கு நண்பராயிருக்கும் நாலு பேரோடே வந்தான் என்றுமாம். ஒற்றனாய்த் தீங்கிழைக்க வந்தானாகில் இத்தனைபேரோடு வரக்கூடாதே என்று கருத்து. 15. (இனிமையோடு வந்தான்) மித்ரபாவமாவது இனிமையாய், ராவணனைவிட்டு வரும்போது கோபங்கொண்டு கடுஞ்சொற்பேசி வாராமல், "அரசனே நீ எனக்கு தமையனாகிறாய், என்னை விரும்பியபடியெல்லாம் பேசு. தமயன் தந்தையை ஒத்தவன்; மதிக்கத்தக்கவன். (ஆனால்) அறவழிநடக்கிறா

யத்3யதி3ச்ச2ஸி। ஜ்யேஷ்டோ2 மாந்ய: பித்ருஸமோ ந ச த4ர்மபதே2 ஸ்தி2த:॥) என்று உன்னோட்டைக்குடற்றுடக்காலும். நீ கௌ3ரவ்யனாகையாலும், நீ வாய்க்குத் தோற்றினதெல்லாம் சொல்லக்கடவை; நானிதுக்கு வெறுக்கிலேன்; நீ தா4ர்மிகனல்லாமையாலே த4ர்மாத்மாவான எனக்குச் சேராமையாலே போகிறேனித்தனை; **"आत्मानं सर्वथा रक्ष"** (ஆத்மாநம் ஸர்வதா2 ரக்ஷ) **"स्वस्ति तेऽस्तु गमिष्यामि सुखी भव मया विना"** (ஸ்வஸ்தி தேऽஸ்து க3மிஷ்யாமி ஸுகீ2 ப4வ மயா விநா) என்று இனிமையோடே வந்தான் என்றுமாம். **"राघवं शरणं गतः"** (ராக4வம் ஶரணம் க3த:) என்றான்; 'ஶரணாக3தபா4வேந' என்னாதே, (மித்ரபா4வேந) என்பானென்? என்னில்: பிறரைத் தாழவிட்டுத்தந்தாமை உயர வைத்துப்போரும் புல்லியர்களல்லாமையாலே சிறிதாக அருளிச் செய்கிறார். வேடரான ஸ்ரீகுஹப்பெருமாளையகப்பட "உகந்த தோழன் நீ" என்னக்கடவ இவர், இவனைப் பெற்றால் விடுகிறாரோ? இது தன்னை, **"आत्मसमः सखा"**

டல்லை" [ரா-யு 16-18] என்று, "உன்னோடு ஒருவயிற்றிலே பிறந்தமையாலும், நீ கௌரவிக்கத்தக்கவனாகையாலும், நீ வாய்க்கு வந்ததெல்லாம் சொல்லலாம். நான் இதைக்கண்டு வெறுக்கிறேனல்லேன். நீ அறவழி நடப்பவனல்லாமையாலே, *தர்மாத்மாவான எனக்குப் பொருந்தாமையாலே உன்னைவிட்டுப் போகிறேனத்தனை; 'உன்னை எல்லாப்படியாலும் காப்பாற்றிக்கொள்; உனக்கு மங்களமுண்டாகட்டும்; நான் செல்கின்றேன்; நானில்லாமலே நீ இன்புறக்கடவாய்" [ரா-யு 16-25] என்று இனிமையோடே வந்தான் என்றும் பொருள் கொள்ளலாம். "ராகவனை சரணமடைந்தான்" [ரா-யு 17-14] என்றான் விபீஷணன்; இதற்கிசைய சரணாகதனின் நினைவோடு என்னாமல் 'மித்திரனின் நினைவோடு' என்பானேன்? என்னில்: மனமொழிச் செயல்களாலே பிறரைத் தாழவிட்டுத் தம்மை உயரவைத்துப் போருகின்ற புன்மைமிக்கவர்களின் குழுவிலே சேர்ந்தவரல்லரே பெருமாள்; ஆகையாலே சரணமடைந்தவனோடு தனக்குள்ள உறவை ரக்ஷகத்வம் என்று உயர்த்திப்பேசாமல் நட்பென்று தாழ்த்திப் பேசுகிறார். வேடனான குஹனையுங்கூட, "உகந்த தோழன் நீ" [பெரியதிரு 5-8-1] என்று சொல்லக்கூடிய இவர், ராஜகுலத்தைச் சேர்ந்த தர்மாத்மாவான விபீஷணனைப் பெற்றால் விடுவாரோ? இத்

(ஆத்மஸம: ஸகா) என்று பிறரும் சொல்லி. "सोऽहं प्रियसखं रामं" (ஸோऽஹம் ப்ரியஸகம் ராமம்) என்று அவர் தாமும் சொல்லும்படியிறே புரையற நடத்தினபடி. (தேந மைத்ரீ பவது தே) "मित्रमौपयिकं कर्तुं" (மித்ர மௌபயிகம் கர்த்தும்) என்று அருளிச்செய்தாரிறே.

மித்ரபாவம் பண்ணின இத்தால் ப்ரயோஜனமென்ன? அவன் லங்கையிலன்றோ இருக்கிறது? என்ன,-(ஸம்ப்ராப்தம்) அக்கண்ணழிவு தீர்த்தான் என்கிறார். (ஸம்ப்ராப்தம்) "आजगाम मुहूर्तेन" (ஆஜகாம முஹூர்த்தேந) என்று லங்கைக்குமேலே கிளம்பக் கண்டோம்; இக்கரையிலே நிற்கக்கண்டோம்; வந்த சடக்குகாணும். (ஸம்ப்ராப்தம்) அக்கரையிலே ஶரணமென்றானாகில், மடுவின்கரை பட்டது பட்டு, அரைகுலையத் தலைகுலைய நமக்குச் செல்லவேண்டி

தோழமையை "ராமனுடைய உயிரிலினிய நண்பன்" [ரா-அ 50-33] என்று வால்மீகிபகவானும் "பிரியநண்பனான ராமனை நான் ரக்ஷிப்பேன்" [ரா-அ 51-6, 86-7] என்று அந்த குஹப்பெருமாளும் சொல்லும்படியாக வன்றோ குறைவற நடத்தியபடி. "ராமபிரானோடு உனக்கு நட்புண்டாகட்டும்" [ரா-ஸு 21-21] "ராமபிரானை நண்பனாகக் கொள்வதுதக்கது" [ரா-ஸு 21-19] என்று பிராட்டியும் அருளிச்செய்தாரன்றோ.

விபீஷணனுக்கு நண்பனின் நினைவு இருந்ததால் என்ன பயன்? அவன் லங்கையிலேயன்றோ இருக்கிறது என்னில்: 1. (வந்தடைந்தவனை) அக் குறையையும் தீர்த்துவிட்டான்; லங்கையிலிருந்து இங்கு வந்தடைந்தான் என்கிறார். 2. (விரைவில் வந்தவனை) "ஸம்யக் ப்ராப்தம்–ஸம்ப்ராப்தம்" என்று விரைவில் வந்தான். "ஒரு முஹூர்த்தத்தில் வந்தான்" [ரா-யு 17-1] என்று இலங்கைக்கு மேலே கிளம்பக்கண்டோம்; சில நிமிஷங்களில் இக்கரையிலே நிற்கக்கண்டோம், வந்த விரைவிருந்தபடியென்! 3. (வந்தடைந்தவனை) அக்கரையிலே நின்று சரணமென்று சொல்லியிருந்தானாகில், அக்கரையும், கஜேந்திரனை ரக்ஷிக்கவந்தபோது முதலையிருந்த மடுவின் கரைபட்டதுபட்டு, அரைகுலையத் தலைகுலைய நாம் செல்ல வேண்டியிருந்திருக்கும். இந்த நாலடியும்வந்து நம்முடைய சிரமத்தைக்

யிருக்கும். இந்நாலடியும்வந்து நமக்குபகரித்தான்காணும். (ஸம்ப்ராப்தம்) "पद्भ्यामभिगमाच्चैव" (பத்₃ப்₄யாமபி₄ க₃மாச்சைவ) என்றும், "சிற்றஞ்சிறுகாலே வந்து" என்றும், போதல்லாப்போதிலே, வழியல்லாவழியிலே வந்த வரத்து காணும் என்று நெஞ்சாறற்படுகிறுர். (ஸம்ப்ராப்தம்) நாமிங்கு வருகிறவிடத்தில் ஶ்ருங்கி₃பே₃ரபுர ப₄ரத்₃வாஜாஶ்ரம சித்ரகூட பஞ்சவடீ மால்யவத் ப்ரமுக₂மான எத்தனை இடத்திலே தங்கித் தாழ்த்து வந்தோம்? இவன் அங்ஙனன்றியிலே, வழியிலே ஒரு தங்குதாவடியற ஒரு முஹூர்த்தத்திலே வந்தபடிகாணும்! (ஸம்ப்ராப்தம்) வருகிறவிடந்தன்னில் அழகியதாக வந்தான்காணும்! அதாவது,- மைதிலிக்குத் தன் பெண் அநலையையிட்டு ஆஶ்வாஸவசநம்பண்ணியும், ஹநூமானை நலியப்புக, தூ₃தவத₄மாகாதென்று விலக்கியும், "प्रदीयतां दाशरथाय मैथिली" (ப்ரதீ₃யதாம் தா₃ஶரத₂ாய மைதி₂லீ)என்று ராவணனளவிலே நல்வார்த்தைசொல்லியும். இப்படி பஹுமுகமாக உபகாரகனயே வந்தான் என்கை.

குறைத்து நமக்கு உதவிசெய்தான்காணும்! 4. (வந்தடைந்தவனை) "காலாலே நடந்துவந்ததாலேயே நாம் பூஜிக்கப்பட்டோம்; உகப்பதும் செய்தோம்" [ரா-அ 50-41] என்றும், "சிற்றஞ்சிறுகாலே வந்து" [திருப்பாவை 29] என்றும் சொன்னதுபோலே, "போதல்லாப் போதிலே, வழியல்லா (ஆகாய) வழியிலேவந்த வரவைக் கண்டீரே! என்று மனவருத்தப்படுகிறுர். 5. (விரைவில் வந்தவனை) நாம் இங்கு வரும்போது (குஹனின் நகரான) ச்ருங்கிபேரபுரம், பரத்வாஜாச்ரமம், சித்திரகூடமலை, பஞ்சவடீ, மால்யவான் முதலான எத்தனையிடங்களிலே தங்கித் தாமதித்து வந்தோம். இவன் அப்படியல்லாமல், வழியிலே பிரயாணிகள் தங்குமிடமொன்றிலும் தங்காமல் சிறிதுநேரத்திலே வந்தபடிகாணும்! 6. (ஸம்யக் ப்ராப்தம்-அழகாக வந்தவனை) வரும்போது அழகாகவந்தான் காணும்! அதாவது,-பிராட்டிக்குத் தன் பெண் அநலையையிட்டு ஆறுதல் செய்வித்தும், ராவணன் அனுமனைக் கொல்லச்சொன்னபோது தூதனைக் கொல்லலாகாது என்று விலக்கியும், "தசரதபுத்திரனிடம் மைதிலி ஸமர்ப்பிக்கப்படட்டும்" [ரா-யு 14-3, 4] என்று ராவணனிடம் நம் விஷயமாகநல்வார்த்தை சொல்லியும், இப்படிப் பலவிதமாக உதவிசெய்பவனுகவே அழகாக வந்தான் என்கை.

(ஸம்ப்ராப்தம்) தானிருந்தவிடத்திலே நாம் செல்லக்கொள்ள, "जग्मुर्गिरितटात्तस्मादन्यं शिखरमुत्तमं" (ஜக்3முர் கி3ரிதடாத் தஸ்மா-த3ந்யம் ஶிக2ரமுத்தமம்) என்று இருந்த மலையைவிட்டு வேறொரு மலையேறப் போகையன்றிக்கே, நாமிருந்தவிடத்திலே தானே வந்தான் காணும். (ஸம்ப்ராப்தம்) வருகிறவிடந் தன்னில், "बाहुरेषः प्रसारितः" (பா3ஹுரேஷ: ப்ரஸாரித:) என்று கைநீட்டி நம்மை ஸாம்யபுத்திபண்ணுகையன்றிக்கே "पादयोः शरणान्वेषी" (பாத3யோ: ஶரணாந்வேஷீ) என்று காலைப்பிடித்துத் தன்னைத் தாழவிட்டு வந்தான்காணும். (ஸம்ப்ராப்தம்) "विजितारिः सदारश्च राज्ये महति च स्थितः" (விஜிதாரி: ஸதா3ரஶ்ச ராஜ்யே மஹதி ச ஸ்தி2த:) என்று, தம்மையொழியச் செல்லாத மனிதரை மின்னுக்கும் இடிக்கும் இரையாக்கி, வெறுத்த ராஜ்யதா3ரங்களோடே வாழ்கிறவனல்லன்காணும்; "त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गतः" (த்யக்த்வா புத்ராம்ஶ்ச தா3ராம்ஶ்ச ராக4வம் ஶரணம் க3த:) என்று ராஜ்யதா3ரங்களைக் காற்கடைக்

---

7. (வந்தவனை) தாமிருந்தவிடத்திலே நாம் சென்றபோது, "அந்த மலைத்தாழ்வரையிலிருந்து மற்றொரு மிகவுயர்ந்த மலைச்சிகரத்தை அடைந்தனர்" [ரா-கி 2-7] என்று இருந்தமலையைவிட்டு வேறு மலையைத்தேடி அகன்ற உம்மைப்போலல்லாமல் நாமிருந்தவிடத்துக்குத் தானே வந்தான்காணும். 8. (நன்கு வந்தவனை) வரும்போது, "இந்தக் கையானது (நட்பின் அறிகுறியாக) என்னால் நீட்டப்பட்டது" [ரா-கி 5-12] என்று கைநீட்டி நம்மைத் தனக்கு ஸமமானவராக நினைக்கையன்றிக்கே, "சரணம் விரும்பித் திருவடிகளில் வீழ்ந்தான்" [ரா-யு 19-2] என்று காலைப்பிடித்துத் தன்னைத் தாழவிட்டு நன்குவந்தான்காணும். 9. (வந்தவனை) "எதிரியான வாலியைவென்று, மனைவியோடு கூடப்பெற்று, பெரிய ராஜ்யத்திலே நிலைநிற்பவன்" [ரா-கி 28-57] என்று தம்மைவிட்டு உயிர்தரியாத எம்மை மால்யவானிலே மின்னலுக்கும் இடிக்கும் இரையாக்கி, ஒருகாலத்தில் வெறுத்திருந்த ராஜ்யத்தோடும் மனைவியோடும் உம்மைப்போலே வாழ்கிறவனல்லன் கிடீர்; "பெண்டுபிள்ளைகளைவிட்டு ராகவனை சரணடைந்தேன்" [ரா-யு 17-14] என்று அரசையும் மனைவியையும் உதாஸீனம் செய்து நம்மையே பற்றிவந்த

கொண்டு நம்மையே பற்றிவந்தான்காணும். (ஸம்ப்ராப்தம்) நம்மைப்போலே, ''ஒற்றனாய் வந்தானோ, நலியவந்தானோ, நிக்ராஹ்யனோ, அநுக்ராஹ்யனோ, ஸ்வீகார்யனோ, பஹிஷ்கார்யனோ, வத்₄யனோ அவத்₄யனோ'' என்று அளப்பது முகப்பதாகையன்றிக்கே முதலடியிலே த்ருட₄சித்தனாய் நம்மை விச்வஸித்துவந்தான் காணும். (ஸம்ப்ராப்தம்) ''ஸமித்யேகீகாரே'' ஆய், தான் ராக்ஷஸனும், நாம் க்ஷத்ரியனுமாகவன்றிக்கே, **"अस्माभिस्तुल्यो भवतु"** (அஸ்மாபி₄ஸ்துல்யோ ப₄வது) என்கிறபடியே, நம்மிலேயொருவனும்படி ஏகரஸனாய் வந்தான்காணும். (ஸம்ப்ராப்தம்) ''காணவாராய்'' என்றும், ''கூவுதல் வருதல் செய்யாய்'' என்றும், சொல்லுகிறபடியன்றிக்கே, **"यत्र रामः"** (யத்ர ராமः) என்று நாம் இருந்தவிடத்திலே தான் வந்தான்காணும்.

''தானே வந்தானென்று ஓரர்த்தமோ? நம்முடைய காலாலேயோ நடக்கிறது? ராவணானுஜனாய், பா₃தகனான

வன்கிடீர். 10. (உறுதியாக வந்தவனை) நம்மைப்போலே, ''ஒற்றனாய் வந்தானோ, திங்கிழைக்க வந்தானோ, தண்டிக்கத்தக்கவனோ, அநுக்ரஹிக்கத்தக்கவனோ, கொள்ளத்தக்கவனோ, தள்ளத்தக்கவனோ, கொல்லத்தக்கவனோ, கொல்லத்தகாதவனோ'' என்று, ஸந்தேஹத்தாலே தானியத்தைக் கொட்டிக் கொட்டி அளப்பதும் முகப்பதும் செய்வாரைப்போலே ஐயப்படாமல், முதலிலேயே உறுதிபெற்ற மனத்தினனாய் நம்மை நம்பிவந்தான்காணும். 11. (ஒன்றாக வந்தவனை) ''ஸமிதி ஏகீகாரே'' என்று 'ஸம்' என்னும் உபஸர்க்கம் ஒன்றாக்குவதையும் குறிக்குமாகையால் தான் ராக்ஷஸனும் நாம் மனுஷ்ய க்ஷத்ரியனுமாகவல்லாமல், ''நம்மோடு ஒத்தவனாக ஆகட்டும்'' [ரா-யு 18-38] என்கிறபடியே நம்மிலே ஒருவனும்படி ஒரே ரஸமுடையவனாய் வந்தான்காணும். 12. (வந்தவனை) ''காணவாராய்'' [திருவாய் 8-5-1] என்றும், ''கூவுதல் வருதல் செய்யாய்'' [திருவாய் 9-2-10] என்றும் நம்மை அழைக்காமல், ''ராமனிருந்தவிடத்துக்கு வந்தான்'' [ரா-யு 17-1] என்று நாமிருந்தவிடம் தேடித் தான் வந்தான் காணும்.

தானே வந்தான் என்று ஒரு பொருளோ? நம்மைப்போன்று நல்லோருடைய காலோ அவனுடையது? தீயகாலன்றோ. ராவணன் தம்பியாய் நம்மைக் கொல்லவந்தவனாகையாலே பெரும்பாவியான இவனை,

இவனை, "आततायिनमायान्तं हन्यादेवाविचारयन्" (ஆததாயிநமாயாந்தம் ஹந்யாதே₃வாவிசாரயந்) என்று ஶாஸ்த்ர க₃தியைப் பார்த்தால் வருகிறபோதே கொல்ல ப்ராப்தமாயிருக்க, கொல்லாதொழிந்தால் விடவாகிலும் ப்ராப்தங்காணும்'' என்ன, (ந த்யஜேயம்) நீர் சொல்லுகிற வார்த்தையைக் கைவிடுமத்தனைபோக்கி, அவனை ஒருகாலும் கைவிடோம். (ந த்யஜேயம்) "शक्ति लिङ्" (ஶகி லிங்) என்று லிங்காய், தோழனுர் சொல்லும் ஆற்றுமைக்கு விட நினைத்தோமாகிலும் ஶக்திதானே இல்லை. (ந த்யஜேயம்) தோழனுர் மஹாராஜராகையாலே த்யாகம் பண்ணுகிறீர்; தாபஸரான நாங்கள் என்ன த்யாகம் பண்ணுகிறது? (ந த்யஜேயம்) "परित्यक्ता मया लङ्का" (பரித்யக்தா மயா லங்கா) "त्यक्त्वा पुत्रांश्च दारांश्च" (த்யக்த்வா புத்ராம்ஶ்ச தா₃ராம்ச்ச) என்று நாட்டில் த்யாஜ்யமாய்ப் பிறந்தவையடைய அவன் கைக்

"கு₃ரும்வாபா₃லவ்ருத்₃தௌ₄ளவாப்₃ராஹ்மணம்வா ப₃ஹுஶ்ருதம்।
ஆததாயிநமாயாந்தம் ஹந்யாதே₃வாவிசாரயந்॥"

[விஷ்ணுஸ்ம்ருதி 5-185]

[ஆசாரியனையினும், பாலனையனுலும், கிழவனையனுலும், சிறந்த கேள்விஞானமுடைய அந்தணனையினும், ஆததாயி எனப்படும் பெரும்பாவம் செய்தவனை வருகிறபோதே ஆராய்ச்சி செய்யாமலே கொல்லவேண்டும்.] என்று சாஸ்திர வசனங்களைப் பார்த்தால், வருகிறபோதே கொல்லுவதுதக்கதாயிருக்க, இரக்கத்தாலே கொல்லாது விட்டாலும், கைவிடவாகிலும் வேண்டாமோ? என்ன, 1. (கைவிடமாட்டேன்) நீர் சொல்லும் வார்த்தையைக் கைவிடுவேனேயொழிய அவனை ஒருபோதும் கைவிடமாட்டேன். 2. (கைவிட சக்தியில்லை) 'த்யஜேயம்' என்ற வினைச்சொல்லில் 'லிங்' ப்ரயோகம் 'சகி லிங்' ஆய், (ந த்யஜேயம்) என்றது, தோழனுரான நீர் ஆற்றுமையோடு சொல்லுவதைப் பார்த்து விடலாமென்று பார்த்தாலும், கைவிடுவதற்கு எனக்கு சக்தியே இல்லை என்கை. 3. (த்யாகம செய்யவல்லேனல்லேன்) நண்பரான நீர் ஸுக்ரீவனான மஹாராஜராகையாலே த்யாகம் செய்யலாம்; ஒன்றுமில்லாத தபஸ்வியான நாம் எப்படி த்யாகம்செய்வது? 4. (கைவிடமாட்டேன்) "என்னுல் இலங்கை கைவிடப்பட்டது" [ரா-யு 19-5] "பெண்பிள்ளைகளை விட்டு" [ரா-யு 17-14] என்று உலகத்தில் கைவிடவேண்டியவைதெல்லாம் (எனக்கொன்றும் மீதி

கொண்டான்; நமக்குத் த்யாகவிஷயந்தன்னைக் காண்கிறிலோம். (ந த்யஜேயம்) நாம் விடப்பார்த்தாலும், **“चरणौ गाढं निपीड्य”** **(சரணௌ க₃ாட₄ம் நிபீட்₃ய)** என்றும், “இனி நான் போகவொட்டேன்” என்றும், “திருவாணை நின்னாணை” என்றும், “அமரவழும்பத் துழாவி என்னாவி அமரத் தழுவிற்று இனியகலுமோ?” என்றும், அவன் பற்றின ஊற்றத்தாலே நம்மால் விடப்போகாதுகாணும்!

ஆனால், அவனை விடவொண்ணாதாகில், விடலாவாரை விடுமத்தனையன்றோ? என்ன,-(கத₂ஞ்சந) அப்படி துஷ்கரக்ருத்யங்களையெல்லாம் செய்யலாம்; இதுசெய்யப் பார்க்கிறிலோம். **“प्रहर्तुं मायया छन्नो विश्वस्ते त्वयि”** **(ப்ரஹர்த்தும் மாயயா ச₂ந்நோ விச்வஸ்தே த்வயி)** என்று, “ஒருயிரேயோ உலகங்கட்கெல்லாம்” என்கிற தேவரீர் திறத்திலே தீங்கு விளையில் செய்வதென்? என்ன,-(கத₂ஞ்சந) **“अप्यहं जीवितं जह्यां”** **(அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்)** என்கிறபடியே நம் ப்ராணன் ஒருதலையாக விடிலும்

யில்லாமல்) அவன் கைவிட்டுவிட்டான்; நான் இனி எதைக் கைவிடுவது? 5. (கைவிடவல்லேனல்லேன்) இவனைக் கைவிடலாம் என்று பார்த்தாலும் “திருவடிகளை உறுதியாகப் பற்றி” [ரா-அ 31-2] என்றும், “இனி நான் போகவொட்டேன்” [திருவாய் 10-10-1] என்றும், “அமர அழும்பத் துழாவி என்னாவி அமரத் தழுவிற்று இனி அகலுமோ?” [திருவாய் 1-7-9] என்றும் அவன் பற்றின உறுதியைப் பார்த்தால் என்னால் விட முடியாது காணும்.

ஆனால், அவனை விடமுடியாதாகில், மற்றவர்களையெல்லாம் விடும்படி வருமே எனில்: 1. (எப்படியாலும்) அப்படி செயற்கரியன எல்லாவற்றையும் செய்யலாம்; இது செய்யமுடியாது. “நீர் நம்பிக்கையுடனிருக்கையில் வஞ்சனையால் மறைந்துநின்று அடிக்க வந்திருக்கிறான்” [ரா-யு 17-25] என்று, “ஒருயிரேயோ உலகங்கட்கெல்லாம்” [திருவாய் 8-1-5] எனப்படும் தேவரீர் திறத்திலே தீங்குவிளைந்தால் என்ன செய்வது? எனில்: 2. (எப்படியாலும்) “என் உயிரையும் விடுவேன்” [ரா-ஆ 10-19] என்கிறபடியே என் உயிரையே இவனைக் கைக்கொள்வ

அவனை விடோம். **"न जीवेयं क्षणमपि विना तामसितेक्षणाम्"** (ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்) என்கிற பிராட்டியை இழக்கவரில் செய்வதென்? என்ன,-(கதஞ்சந) **"त्वां वा सीते"** (த்வாம் வா ஸீதே) என்கிறபடியே **"प्राणेभ्योऽपि गरीयसी"** (ப்ராணேப்₄யோऽபி க₃ரீயஸீ) ஆன அவளை விடிலும் இவனை விடோம். **"अद्यैवाहं गमिष्यामि लक्ष्मणेन गतां गतिं"** (அத்₃யைவாஹம் க₃மிஷ்யாமி லக்ஷ்மணேந க₃தாம் க₃திம்) என்றன்றோ இளையபெருமாள் பக்கல் தேவரீர் திருவுள்ளமிருப்பது; **"लक्ष्मणे वा महाबाहो"** (லக்ஷ்மணே வா மஹாபா₃ஹோ) என்கிறபடியே அப்படிக் கொத்தவரளவில் ஒரு தீங்கு வரில் செய்வதென்? என்ன,-(கதஞ்சந) **"सलक्ष्मणाम्"** (ஸலக்ஷ்மணம்) என்று அந்த:புரத்தை விடப்பார்த்தால், அந்த:புரபரிகரத்தையொழியவோ? அப்படிக்கு வநவாஸபந்து₄வான லக்ஷ்மணனை விடிலும் இவனை விடப்பார்க்கிறிலோம். **"त्वयि किञ्चित्समापन्ने किं कार्यं सीतया मम"** (த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம)

தற்கு விலையாகக் கொடுக்கவேண்டியிருந்தாலும், அவனைக் கைவிடேன். "கறுத்த கண்களையுடைய அப்பிராட்டியைவிட்டுக் கணமும் வாழேன்" [ரா-ஸு 66-10] என்கிற உயிரிலுமினிய தேவியை இழக்கும்படி வந்தால் என்ன செய்வது? என்ன: 3. (எப்படியாலும்) "ஸீதையே! உன்னையும் கைவிடுவேன்" [ரா-ஆ 10-19] என்கிறபடியே, "உயிரினும் சிறந்தவள்" [ரா-ஆ 10-22] ஆகிய அவளை விடவேண்டிவந்தாலும் இவனைக் கைவிட மாட்டேன். "லக்ஷ்மணன் சென்ற (பரலோக) வழியிலே இன்றே செல்லுவேன்" [ரா-உ 107-3] என்றன்றோ இளையபெருமாள் விஷயத்தில் தேவரீர் திருவுள்ளம் ஈடுபட்டிருப்பது; "நீண்டகையையுடையவரே! உன்னிடத்திலோ இலக்குவனிடத்திலோ தீங்கிழைக்க வந்துள்ளான்", [ரா-யு 18-19] என்கிறபடியே அப்படிப்பட்டவரிடத்தில் இவன் தீங்கிழைத்தானாகில் என்னசெய்வது? எனில்: 4. (எப்படியாலும்) "லக்ஷ்மணனோடு கூடிய உன்னையும் விடுவேன்" [ரா-ஆ 10-19] என்று அந்த:புரமாகிற பிராட்டியை விட உறுதிபூண்டால், அவளுடைய ஆளான லக்ஷ்மணனை விடாமலிருக்கமுடியுமோ? அப்படி வநவாஸத்தில் தவிர்க்கவொண்ணாத உறவினனாக வந்த இலக்குவனை விட்டாலும் இவனை விடமாட்டோம். "உமக்கு ஓரவமானம் வரில் சீதையைப்பெற்று எனக்குப்

என்றன்றோ என்னளவில் தேவரீரிருப்பது. அப்படிக்கு தேவரீரைப் பற்றியிருக்கிற அடியேனுக்கு ஒரு தீங்கு வரில் செய்வதென்? என்ன,-(கத₂ஞ்சந)அப்படி மைதிலியைவிட்டுப்பற்றும் படியான உம்மை விடவுமாம்; அவனை விடப் பார்க்கிறிலோம்.

அதென்? ஶரணாகதனை விடாமைக்காகில் தேவரீர் அருளிச்செய்கிறது, என்னுடைய ஶரணாகதியிலே பாம்பு செத்துக் கிடக்கிறதோ? என்ன, "அன்றீன்ற கன்றுக்காக முன்னீன்ற கன்றைக் கொம்பிலும் குளம்பிலும் கொள்ளும்" என்னும் புதுச்சொல் மறந்தீரோ? **"पूर्वापकारिणां त्यागे न ह्यधर्मो विधीयते"** (பூர்வாபகாரிணாம் த்யாகே₃ ந ஹ்ய த₄ர்மோ விதீ₄யதே) என்று தா₃ராபஹாரம் பண்ணின ராவணாநுஜன் ஒற்றனாய், வந்தவிடமறிந்து நலியவந்தான்; நாம் தம் படைவீட்டில் செல்லாதிருக்கத் தானே நம் பாளையத்திலேவந்து முத்தீம்பு செய்யவந்தவன்; இத்தனை தோ₃ஷது₃ஷ்டனை விடக்காணும் அடுப்பது? என்ன,—

பயன் என்ன" [ரா-யு 41-4] என்றல்லவோ என்னைப்பற்றி தேவரீர் நினைத்திருப்பது. அவ்வளவு நீர் ஈடுபடும்படி உம்மைப் பற்றியிருக்கும் அடியேனுக்கு இவனால் ஒரு திங்குவந்தால் என்னசெய்வது? எனில்: (எப்படியாலும்) அப்படி மைதிலியை விட்டாவது கொள்ளும்படியான உம்மைவிட நேர்ந்தாலும் அவனைவிடமாட்டேன்.

அது எப்படி? 'சரணமடைந்தவனை விடக்கூடாது' என்னும் கருத்தாலே தேவரீர் இப்படிச்சொல்லுகிறதாகில், **'என்னை ரக்ஷிக்கவேணும்'** என்று நான் முன்புசெய்த சரணாகதியிலே பாம்பு செத்துக்கிடந்து கிட்டவொண்ணாதபடி தடைசெய்கிறதோ? என்று ஸுக்ரீவனுக்குக் கருத்தாக, "பசுவானது அன்று ஈன்ற கன்றுக்காக முன் ஈன்ற கன்றைக் கொம்பிலும், குளம்பிலும் கொள்ளும்" என்னும் என்றும் புதியதான சொல்லை மறந்திரோ? என்கிறார். "முன் அபகாரம் செய்தவர்களைக் கைவிடுவதில் அதர்மமில்லை" [ரா-அ 96-24] என்று உம் மனைவியை அபஹரித்த ராவணனின் தம்பி ஒற்றனாகி, நாம் வந்திருப்பதையறிந்து நம்மைத் துன்புறுத்தவந்தான். நாம் இவனுடைய ராஜதானியிலே செல்லாதிருக்கும்போது தானே நாமிருக்குமிடம்வந்து மூன்றுவகைத் தீம்புகளும் செய்யவந்தான். இத்தனை குற்றமுடையவனை விடுவதன்றோ தக்கது என்ன,—1. (குற்றமிருந்தாலும்)

(தோ₃ஷோ யத்₃யபி) "மித்ரபா₄வேந ஸம்ப்ராப்தம்" என்று அவன் நிர்தோ₃ஷனென்னுமிடத்தை உங்களுக்கு உபதேசித்தோம்; அதொன்றும் செவியிற்புகாதே ஸதோஷனென்றே ப்ரதிபத்தியாகில். நீங்கள் சொன்னவளவேயன்றியிலே இன்னமும் சில தோ₃ஷங்களுண்டாகிலும் கைவிடோம். (யத்₃யபி தோ₃ஷ:) உங்களுக்கேற மெய்ப்படவே தோ₃ஷமுண்டோ? (தஸ்ய ஸ்யாத்) தஸ்ய அதி₄கார ஸம்பத்தயே ஸ்யாத். அதாவது,- "अहमस्म्यपराधानामालयोऽकिञ्चनोऽगतिः। त्वमेवोपायभूतो मे भव" (அஹமஸ்ம்யபராதா₄நாமாலயோऽகிஞ்சநோऽக₃தி:। த்வமேவோபாயபூ₄தோ மே ப₄வ) என்றும், "न धर्मनिष्ठोऽस्मि...शरणं प्रपद्ये" (ந த₄ர்மநிஷ்டோऽஸ்மி...ஶரணம் ப்ரபத்₃யே) என்றும் ஶரணாகதனுடைய தோஷமன்றோ? ஒரு த₄ர்மியைக் கைக்கொள்ளும்போது த₄ர்மத்தை விட்டோ கைக்கொள்ளுவது? என்றுமாம். அன்றியிலே (தோ₃ஷோ யத்₃யபி தஸ்ய) என்று அவனுக்கு

"மித்திரனின் தன்மையோடு வந்தவனை" என்று முதலடியிலே அவன் குற்றமற்றவன் என்பதை உங்களுக்கு உபதேசித்தோம்; அதைச் சிறிதும் கேளாமல் 'இவன் குற்றமுள்ளவன்' என்றே நினைத்திராகில், நீங்கள் சொல்லும் குற்றங்களோடு இன்னமும் சில குற்றங்கள் இவனுக்கு உண்டாகிலும் கைவிடமாட்டோம். 2. (குற்றமிருந்தாலும்) ஆராய்ந்தால் உண்மையில் உங்கள் நெஞ்சுக்கே இவனிடம் தோஷமுள்ளதென்று தோன்றுதே. (அவனுக்கு [தகுதிக்கு] ஆகிறது) தோஷமிருந்தால் சரணமடையும் அதிகாரிக்கு இருக்கவேண்டிய தகுதி அவனுக்கும் உள்ளதாகிறது. குற்றமுடைமை அதிகாரிவிசேஷணமாகுமோ? எனில்: "நான் குற்றங்களுக்கெல்லாம் கொள்கலம்; கைம்முதலற்றவன்; கதியற்றவன்; நீயே உபாயமாவாயாக" [அஹிர் 37-31] என்றும் "கர்மயோகநிஷ்டனல்லேன்; ஞானயோகமுமில்லை; திருவடித்தாமரையில் பக்தியுமில்லேன்; கைம்முதலற்றவன்; கதியற்றவன்; சரண்யனே! உன் திருவடித்தாமரையை சரணடைந்தேன்" [ஸ்தோ-ர 22] என்றும் சரணாகதனுடைய தோஷம் அவனுக்கு அதிகாரிவிசேஷணம் என்று சாஸ்திரம் சொல்லிற்றன்றோ. தோஷமே நிரூபகமாயிருப்பவனைக் கொள்ளும்போது தோஷத்தைவிட்டுக் கொள்ளமுடியுமோ? என்றும் கொள்ளலாம். அல்லது 3. (அவனுக்கு தோஷமிருந்தாலும்) என்று அவனுக்கு தோஷம் உண்டோ என்று

தே₃ாஷமுண்டோவென்று ஶங்கித்து, "ஸ்யாத்" என்று பரிஹாரமாகவுமாம். ஔபாதி₃கப₄ந்த₄முள்ளவிடத்திலே ப்ரஜை பண்ணின தப்பும் பொறுக்கவேண்டியிரா நின்றதே; அத்தோபாதியும் பொருதோ அவனுடைய தோஷம்? என்கிறார். (ஸ்யாத்) என்று, **"प्रार्थनायां लिङ्" (ப்ரார்த்தநாயாம் லிங்)** ஆய், அவனுக்கு தோஷமுண்டாகில் அது நமக்கு அலப்₄யலாப₄மன்றோ? ஒரு குணவானை ரக்ஷித்தோமாகில் அதுக்கு விலையாய்ப்போம்; ஒரு குற்றவாளனை ரக்ஷித்தோமென்கிற இப்பேறு பெறுவதுகாணும்! அன்றியிலே, அவனுக்கு முதலில் தே₃ாஷமில்லை; உண்டோ? (தஸ்ய தே₃ாஷ:) அவனுடைய தோஷமன்றோ? அவனிலும் ச்லாக்யமன்றோநமக்கு? என்கிறார். அபி₄மதவிஷயத்தில் அழுக்கு உகப்பாயிருக்குமாப்போலே. அன்றியிலே, (தே₃ாஷோ யத்₃யபி) தோஷமுண்டாகில்; (தஸ்ய ஸ்யாத்) தஸ்யாபி₄மத ஸித்₃தி: ஸ்யாத். அவன் நினைத்துவந்தது பெற்றுனுகிறான் என்றுமாம்.

சங்கித்து, (இருக்கட்டுமே) என்று பரிஹரிப்பதாகவும் கொள்ளலாம். கர்மத்தால் ஏற்படும் உறவுகளிலே, குழந்தை செய்த தவறைத் தகப்பனும், மனைவி செய்த குற்றத்தைக் கணவனும் பொறுக்கவேண்டியிருந்ததே! அவ்வளவுகூடப் பொருதோ இயற்கையுறவையுடைய அவனுடைய தோஷம் என்கிறார். 4. (ஸ்யாத்) என்றதில் 'லிங்' ப்ரயோகம் பிரார்த்தனைப் பொருளதாய், அவனுக்கு தோஷமுண்டாகில் அது நமக்கு கிடைக்காத பொருள் கிடைத்ததுபோலன்றோ? குணமுள்ளவன் ஒருவனை ரக்ஷித்தால், 'இவனிடம் குணமிருந்தது; அதனால் ரக்ஷித்தான்' என்று தோற்றி ரக்ஷணம் குணத்திற்கு விலையாகப்போகும். 'குற்றமுள்ளவனை ரக்ஷித்தான்' என்று பெயர்பெறுவதன்றோ பெரும்பேறு என்கை. அல்லது 5. அவனுக்கு முதலில் தோஷமேயில்லை; (தோஷமிருந்தாலும்) உண்டென்று நீர் நிரூபித்தாலும். (அவனுடைய தோஷமன்றோ ஆகும்) அவனுடைய தோஷமன்றோ? அவனிலும் விரும்பப்படுவதன்றோ நமக்கு. காதலன் காதலியின் அழுக்கை விரும்புவதுபோலே. அல்லது, 6. (தோஷோ யத்யபி) தோஷம் உண்டாகில், (தஸ்ய ஸ்யாத்) தஸ்யஅபி₄மதஸித்₃தி₄: ஸ்யாத்-அவனுக்குப் பலஸித்தி உண்டாகிறது. அவன் நினைத்துவந்தபடியே வேவுபார்த்துப் போகிறான்; அதனால் நமக்கு என்ன ஹானி? நம்மைக் கொல்லவந்தாலும், கொன்றுபோகிறான்; உயிரைக் கொடுத்து சரணாகதரக்ஷணம் செய்தோம் என்று நாம் பெயர்பெற்றுப் போகிறோம்.

அன்றியிலே. (தே$_3$ாஷோ யத்$_3$யபி தஸ்ய ஸ்யாத்-நமம) என்றாய், அதுண்டாயிற்றாகில் அவனுக்குக் குற்றமாகிறது. ரக்ஷித்த நமக்குக் குற்றமில்லையே. அன்றியிலே, (தே$_3$ாஷோ யத்$_3$யபி தஸ்யஸ்யாத்)என்று, அவனுக்கு ஆகிறகாலம்காணும். அதெங்ஙனே? என்றால்: ஒருவன் ஸௌப்$_4$ராத்ரமிருந்தபடி! தமையன் படைக்குறி அழியாதேயிருக்க, படைவீடு கோப்புக்குலையாதேயிருக்க, உடம்பில்வடுப்படாதேயிருக்க விரோதியை அழித்துக் கொடுத்தபடிகாண்! என்று கொண்டாடும்படியிருக்கை. அன்றிக்கே. (தே$_3$ாஷோயத்$_3$யபிஸ்யாத்தஸ்ய) அன்றோ? **“दुराचारोऽपि सर्वाशीकृतघ्नोनास्तिकःपुरा। समाश्रयेदादिदेवं श्रद्धया शरणंयदि। निर्दोषंविद्धि तं जन्तुं”** (து$_3$ராசாரோऽபி ஸர்வாஶீ க்ருதக்$_4$நோ நாஸ்திக: புரா। ஸமாச்ரயே த$_3$ாதி$_3$தே$_3$வம் ஶ்ரத்$_3$த$_4$யா ஶரணம் யதி$_3$। நிர்த்தே$_3$ாஷம் வித்$_3$தி$_4$ தம் ஜந்தும்) என்றும், **“ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते”** (ஜ்ஞாநாக்$_3$நி: ஸர்வகர்மாணி ப$_4$ஸ்மஸாத் குருதே) என்றும், ‘‘மனத்தினால் சிந்திக்கப் போயபிழையும் புகுதருவான்

அல்லது, 7. (தோஷமிருந்தால் அவனுக்காகிறது எனக்கில்லையே) என்றதாய், தோஷமிருந்தால் அது அவனுக்குத்தானே குற்றம்; ரக்ஷித்த நமக்குக் குற்றமில்லையே என்றுமாம். அல்லது, 8. (தோஷமிருந்தால் அவனுக்கு நல்லகாலமாகிறது) என்றுமாம். அதாவது,— விபீஷணன் தமயனிடம் என்ன அன்புகொண்டுள்ளான்? தமையன் படையில் ஒன்றும் சேதமாகாமலிருக்க, ராஜதானி கட்டுக் குலையாமலிருக்க, உடம்பில் ஒரு காயமில்லாமலிருக்க, தமயனுக்காக விரோதியை அழித்துக் கொடுத்தானன்றோ என்று கொண்டாடும்படியான பெருமையை அவன் பெற்றுப்போகிறான். நான் உயிரைவிட்டாலும் அவனுக்குப் பெருமையுண்டானால் சரி. அல்லது, 9. (தோஷமிருந்தாலும் இருக்கலாமே அவனுக்கு) என்றுமாம். ‘‘துர்நடத்தையுடையவனாயினும், அனைத்தையும் உண்பவனாயினும், செய்ந்நன்றி கொன்றவனாயினும், நாஸ்திகனாயினும், அநாதிகாலமாக இந்த துர்க்குணங்களையுடையவனாயினும், ஆதிதேவனை சிரத்தையோடு சரணமடைந்தானெனில், பரமாத்மாவின் மஹிமையாலே அவனைக் குற்றமற்றவனென்று எண்ணுவாய்’’ [ஸாத்வதம் 16-23,24] என்றும், ‘‘அர்ஜுநா! ஞானமாகிற நெருப்பு எல்லாக் கருமங்களையும் சாம்பலாக்குகிறது’’ [கீதை 4-37] என்றும், ‘‘மனத்தினால் சிந்திக்கப் போயபிழையும்

நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்றும், ''பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்'' என்றும் சொல்லுகிறபடியே முன்பு ஸதோஷனேயாகிலும், ஶரணாகதனானபோதே அவையெல்லாம் நசித்து நிர்தோஷனாய்க் காணுமிருப்பது. (தஸ்ய தோஷோ யத்யபி) நம்மைக் கொல்லவந்தானே? (ஸ்யாத்) அதுண்டாவதுகாண்! **"अरिः प्राणान् परित्यज्य रक्षितव्यः कृतात्मना"** (அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா) என்கிறபடியே, நம்மையழியமாறி ஶரணாகத ரக்ஷணம் பண்ணினோம் என்று பேர் படைப்பதுகாண்!

இப்படி ஸதோஷனேயாகிலும் விடாதொழிந்தால் ப்ரயோஜநமென்? என்னில் (ஸதாமேதத$_3$க$_3$ர்ஹிதம்) ''சாது கோட்டியுட் கொள்ளப்படுவார்'' என்கிறபடியே, ஶரணாகதனான யயாதியை ரக்ஷித்த ஶைப்$_3$யாதி$_3$கோஷ்டிக்கும் ஶுநஶ்ஶேபாதிகளை ரக்ஷித்த விஶ்வாமித்ராதி கோஷ்டிக்கும் பஹிஷ்டமன்றிக்கே போகிறோம். (ஸதா

புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'' [திருப்பாவை 5] என்றும் ''பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்'' [பெரியாழ்திரு5-4-2] என்றும் சொல்லுகிறபடியே முன்பு தோஷமுடையவனாகிலும் சரணமடைந்த போதே அவையெல்லாமழிந்து குற்றமற்றவனாயன்றோ இருப்பது என்கை. 10. (அவனுக்கு தோஷமிருந்தாலும்) 'நம்மைக் கொல்லவேணும்' என்னும் தீயநினைவு கொண்டு வந்தான் என்கிறீரோ? (ஸ்யாத்) அந்நினைவு பலிக்கட்டுமே. ''நல்லோனாகில், சரணமடைந்த எதிரியை, உயிரைவிட்டாவது காப்பாற்றவேண்டும்'' [ரா-யு 18-28] என்று, தன்னையழியமாறி சரணாகதரக்ஷணம் செய்தான் ராமன் என்று பேர்படைப்பது பெருப்பேறன்றோ.

இப்படிக் குற்றமுள்ளவனையும் விடாதொழிந்தால் பயனென்ன? எனில், 1. (நல்லோர்களுக்கு இது இகழாமைக்குறுப்பு) ''சாது கோட்டியுள் கொள்ளப்படுவார்'' [பெரியாழ்திரு 3-6-11] என்கிறபடியே சரணமடைந்த யயாதியை ரக்ஷித்த சைப்யன் முதலானோர் குழுவுக்கும் சரணமடைந்த சுநச்சேபன் திரிசங்கு முதலானோரை ரக்ஷித்த விச்வாமித்திரர் முதலானோருடைய குழுவுக்கும் வெளிப்பட்டவனாகாமல் போகிறேன்.

மேதத் ஸ்யாத்) இது ஸத்துக்களான பா₄க்₃யவான்களுக்கு ஸித்திக்குமித்தனை போக்கி மஹாராஜர்க்குப் பரதந்த்ரரான நமக்குக் கிடைக்கப்புகுகிறதோ? என்றுமாம். (ஸதாமேதத் ஸ்யாத்) கபோதவாநராதி₃ திர்யக்குகளுக்கு ஸித்திக்குமித்தனைபோக்கி. மநுஷ்யஶரீரபரிக்ரஹம் பண்ணின நமக்கு ஸித்திக்கப்புகா நின்றதோ? என்றுமாம். (அக₃ர்ஹிதம்) ஸந்த்யாவந்தனாதி பண்ணினால் பலமின்றியேயொழிந்தாலும் பண்ணாதபோது ப்ரத்யவாயமுண்டாமாப்போலே. "**क्षतात्किल त्रायत इत्युदग्रो क्षत्रस्य शब्दो भुवनेषु रूढः**" (க்ஷதாத்கிலத்ராயத இத்யுத₃க்₃ரோ க்ஷத்ரஸ்ய ஶப்₃தோ₃ பு₄வநேஷு ரூட₄:) என்று க்ஷத்ரியரான நமக்கு ஆபந்நிவாரணம் ஸ்வரூபப்ரயுக்தம். அதுபண்ணாதபோது கர்ஹை பிறக்கும். தந்நிவ்ருத்தியைக் கொள்ளுவது. (அகர்ஹிதம்) என்கிற நஞ்ஞுக்குத் தத₃ந்ய தத₃பா₄வ தத்₃விரோதி₄ என்று மூன்றுண்டாகையாலே, (அக₃ர்ஹிதம்) என்று ததந்யமான "**स्वर्ग्यं स्यात्तु फलोदये**" (ஸ்வர்க்₃யம் ஸ்யாத் து ப₂லோத₃யே) என்று ஸ்வர்க்கா₃தி

---

2. (நல்லோர்களுக்கே இகழத்தகாத இது உண்டாகும்) இது தான் பாக்கியசாலிகளான ஸத்துக்களுக்கு உண்டாகுமேயல்லது, சுக்கிரீவனுக்குப் பரதந்திரனான பாக்கியமற்ற எனக்கு எங்கே இப்பெருமை கிட்டப் போகிறது?என்றுமாம். 3. (பிராணிகளுக்கு இது கிட்டும்) புறா, வாநரம் முதலான திர்யக்குகளுக்கு இப்பெருமை கிடைக்குமேயொழிய, மனித சரீரமெடுத்த எனக்கு எங்கே வரப்போகிறது? என்றுமாம். 4. (இகழாமைக் குறிப்பு) ஸந்தியாவந்தம் முதலிய நித்யகர்மங்களைப் பண்ணினால் அதற்கென ஒரு பலமில்லாமற்போனாலும் பண்ணாதபோது தோஷமுண்டாவது போலே, "க்ஷதமாகிற ஆபத்திலிருந்து த்ராணமாகிற ரக்ஷணத்தைச் செய்கிறான் என்னும் பொருளிலே உயர்ந்ததான க்ஷத்ர (க்ஷத்ரிய) சப்தம் உலகில் ஸுப்ரஸித்தமாயுள்ளது" [ரகுவம்சம் 2-53] என்று க்ஷத்ரியரான நமக்குப் பிறருடைய ஆபத்தைப் போக்குவது இயற்கைத் தொழில். அதைச்செய்யாவிடில் லோகாபவாதம் பிறக்கும். அது பிறவாமையையே பலமாகக்கொள்வது. (அகர்ஹிதம்) என்கிற பதத்தில் 'நஞ்'ஞுக்கு "கர்ஹிதத்தைக் காட்டிலும் வேறுபட்டது, அதன் இல்லாமை, அதன் விரோதி" என்று மூன்றுபொருள் உண்டாகையாலே 5. (கர்ஹிதம்-இகழப்படுவது-அல்லாதது) என்று கர்ஹிதத்தைக் (இகழப்படும் நரகாதிகளைக்)

ஸித்தி ப்ரயோஜநமென்றாகவுமாம். அன்றிக்கே, தத்3பா4வமான க3ர்ஹாநிவ்ருத்தி ப்ரயோஜநமாகவுமாம். அன்றியிலே "**यशसश्च**" (யஶஸஶ்ச) என்று தத்விரோதியான ஶ்லாக்4யதைதானே ஸித்திக்குமென்றாகவுமாம்.

ஆக இந்த ச்லோகத்தால் சொல்லிற்றாயிற்று, இவ்வதிகாரிக்கு வேண்டுவது அல்பமாநுகூல்யம். இவ்வளவாலே, "**न स्मरत्यपकाराणां शतमप्यात्मवत्तया। कथञ्चिदुपकारेण कृतेनैकेन तुष्यति॥**" (ந ஸ்மரத்யபகாராணாம் ஶதமப்யாத்மவத்தயா। கத2ஞ்சிது3பகாரேண க்ருதேநைகேந துஷ்யதி॥) என்றும், "**क्षान्तमित्यब्रवीद्धरिः**" (க்ஷாந்தமித்யப்3ரவீத் ஹரி:) என்றும், "**मां व्रज...सर्वपापेभ्यो मोक्षयिष्यासि**" (மாம்வ்ரஜ...ஸர்வபாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி) என்றும், "**मद्भक्तं नयामि परमां गतिं**" (மத்3ப4க்தம் நயாமி பரமாம் க3திம்) என்றும், "சிந்திப்பே அமையும்" என்றும், "எண்ணிலும் வரும்" என்றும் இத்யாதிகளில்

காட்டிலும் வேறுபட்டதாய், "பலம் உண்டாகும்போது சரணாகதரக்ஷணம் சுவர்க்கத்தையளிப்பது" [ரா-யு 18-32] எனப்படுகிற சுவர்க்கம் முதலிய நல்லுலகங்களை அடைவது பயனாகவுமாம். அல்லது, முன்சொன்னபடியே 6. (கர்ஹிதத்தின் இல்லாமை) என்றுகொண்டு, இகழ்வின்மை பயனாகவுமாம். அல்லது, 7. (இகழ்வின் விரோதி) என்றுகொண்டு, "புகழுக்கே ஓரிருப்பிடமாயிருப்பவன் இராமன்" [ரா-கி 15-20] என்று இகழ்வின் விரோதியான புகழே இதன் பலனாகக் கிடைக்கும் என்றும் கொள்ளலாம்.

ஆக, இந்த ச்லோகத்தால் சொல்லப்பட்டதாவது,—சரணமடையும் அதிகாரிக்கு வேண்டியது சிறிது ஆநுகூல்யமேயாகும். இதையே பெரிதாகக்கொண்டு, "நூற்றுக்கணக்கான குற்றங்களையும் இராமன் நினைப்பதில்லை நல்ல நெஞ்சினனாகையாலே; ஒருவாறு செய்யப்பட்ட ஒருபகாரத்தாலேயே மிகவும் உகக்கிறான்" [ரா-அ 1-11] என்றும், "'குற்றம் பொறுக்கப்பட்டது' என்று ஹரி சொன்னார்" [ ] என்றும் "என்னை அடை; உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்" [கீதை 18-66] என்றும், "என் பக்தனை நான் மேலானகதிக்கு அழைத்துச் செல்கிறேன்" [வராஹசரமம்] என்றும், "சிந்திப்பே அமையும்" [திருவாய் 9-1-7] என்றும், "எண்ணிலும் வரும்" [திருவாய் 1-10-2]

சொல்லுகிறபடியே. அவனுக்கு ஏதேனும், ஆரேனும் ப்ரதிபந்த₄கமுண்டாகிலும், ஓரளவிலும் கைவிடாதே தன்னைக் கொடுக்கும் என்னும் அர்த்தம் சொல்லுகிறது.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம், 4-வது ச்லோகம்

सुग्रीवस्त्वथ तद्वाक्यं आभाष्य च विमृश्य च।
ततः शुभतरं वाक्यमुवाच हरिपुङ्गवः॥

ஸுக்₃ரீவஸ் த்வத₂ தத்₃வாக்யம் ஆபா₄ஷ்ய ச விம்ருஶ்ய ச।
தத: ஶுப₄தரம் வாக்யமுவாச ஹரிபுங்க₃வ:॥

பதவுரை:—அத₂—அதற்குப்பின், ஹரிபுங்க₃வ:—வானரர் தலைவரான, **ஸுக்₃ரீவ: து**-சுக்கிரீவமஹாராஜரோவெனில், **தத்வாக்யம்**—அந்த வாக்கியத்தை, **ஆபா₄ஷ்ய ச**-திரும்பவும், (தனக்குத்தானே) சொல்லி, **விம்ருஶ்ய ச**—ஆராய்ச்சியும் செய்து, **தத:**-அதைக்காட்டிலும், **ஶுப₄தரம்**-மிகவும் அழகியதான, **வாக்யம்**—வார்த்தையை, **உவாச**-உரைத்தார்.

அவதாரிகை:—ராமப்ரக்ருதியைக் கேட்ட மஹாராஜர், அதிஸாஹஸமென்று மிகவும் பயப்பட்டு ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்கிறார்.

வ்யா:—(ஸுக்₃ரீவஸ்து இதி) (து) கீழில் ஸர்க்க₃த்தில் **"चिन्तयित्वा मुहूर्तं तु" (சிந்தயித்வா முஹூர்த்தம் து)** என்கிற

என்றும் இதுபோன்ற பலவிடங்களில் சொல்லுகிறபடியே, சரணமடைந்தவனுக்கு, எவராயினும், எதுவாயினும் தடையாக நின்றாலும் எந்த நிலையிலும் கைவிடாதே தன்னைக் கொடுப்பான் எம்பெருமான்-என்னுமர்த்தம் சொல்லுகிறது.

அவதாரிகை:-ராமபிரானுடைய தன்மையை அவர்தாமே அருளிச்செய்யக் கேட்ட சுக்கிரீவன், 'இது பெரிய ஸாஹஸச் செயலாயிருந்ததே!' என்று மிகவும் பயப்பட்டு, ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்கிறார் என்கிறது "ஸுக்₃ரீவ:" என்னும் ச்லோகத்தில்.

வ்யா:-(சுக்கிரீவனோ எனில்) (து—எனில்) கீழ் பதினேழாவது ஸர்க்கத்தில் நாலாவது சுலோகத்தில், "சிந்தயித்வா முஹூர்த்தம் து" என்

துஶப்தத்தால் ராவணப₄வநத்தில் நின்றும் வந்த இவன் நம்மை நலிகை நிஶ்சிதமென்று இவருடைய ஹ்ருதயத்திற் பிறந்த வேறுபாட்டைச் சொல்லிற்று; **"एतत्तु वचनं श्रुत्वा"** **(ஏதத் து வசநம் ச்ருத்வா)** என்கிற துஶப்த₃த்தால், பெருமாள் ப்ரக்ருதியையும் இக்கோ₃ஷ்டி₂யில் விலைச்செல்லும் வார்த்தையையுமறிந்து, **"राघवं शरणं गतः" (ராக₄வம் ஶரணம் க₃த:)** என்பது, "நிவேத₃யத" என்று இங்ஙனே சிலரைப் புருஷகாரமாகப் பிடிப்பதாகநின்றான்; இது பெருமாள் செவிப்படுமாகில் நம் வார்த்தை கொள்ளார் என்று த்வரித்த விஶேஷத்தைச் சொல்லிற்று; இந்தத் 'து' ஶப்தத்தால், "பெருமாள் நாம் போன வழி வருவர்; எதிரிகளை அவரைக்கொண்டு வெல்லலாம்" என்றிருந்தார் "மித்ரபா₄வமுடையார் நம்மை நலியவந்தார்களாகிலும் அதுக்கு இசைந்தோம் என்று அருளிச்செய்கையாலே, இவரும் அவனுக்குக் கூட்டாயிருந்தார்; இனி இவரை நோக்கலாவது என்செய்தால்?" என்கிற ப₄யாதிஶயத்தாலே

கிறவிடத்தில் துசப்தத்தால், ராவணனின் வீட்டிலிருந்து வந்த இவன் நம்மைத் துன்புறுத்துவது உறுதி என்னும் எண்ணத்தாலே சுக்கிரீவனுடைய நெஞ்சிற் பிறந்த விகாரத்தைச் சொல்லிற்று. அதே ஸர்க்கத்தில் பதினாறுவது சுலோகத்தில் "ஏதத்து வசநம் ச்ருத்வா" என்கிறவிடத்தில் துசப்தத்தால், "பெருமாள் தன்மையையும், ராகவர்களும் வானரர்களும் நிறைந்த இந்த கோஷ்டியில் மதிப்புப்பெறும் சரணவரண வார்த்தையையும் அறிந்து, 'ராகவரை சரணமடைந்தேன்' [ரா-யு 17-14] என்றுரைப்பது, 'ராகவருக்கு அறிவியுங்கள்' [ரா-யு 17-15] என்று, சரணாகதியின் சுவடறிந்த வானரரைப் புருஷகாரமாகப் பிடிப்பது ஆகிய செயல்களைச் செய்யாநின்றான்; இது ராமபிரான் திருச்செவிகளில் விழுந்தால் நம் வார்த்தையை ஏற்றுக்கொள்ளாரே" என்று கடுநடையிட்ட விகாரத்தைச் சொல்லிற்று. இந்த 'து' சப்தத்தால், 'பெருமாள் நாம் சொன்னவழியே நடப்பார்; எதிரிகளை அவரைக்கொண்டு வெல்லலாம்' என்று நினைத்திருந்தவர், 'நண்பனின் வேஷமுடையவர்கள் நம்மைத் துன்புறுத்த வந்தார்களானாலும் அதுக்கு அங்கீகரித்தோம்' என்று அருளிச்செய்கையாலே, "இவரும் விபீ₄ஷணனுக்குப் பக்ஷபாதியாயிருக்கிறார்; இனி, இவரை ரக்ஷிப்பது எவ்வகையாலேயென்று தெரியவில்லையே"

வேறுபட்டபடி. (அக₃) ஸ்வாமி வார்த்தை சொன்னால், ஶேஷபூ₄தனானவன் கருத்தையுமறிந்து, தன் ஶேஷத்வத்தையும் பார்த்து விசாரித்து அதுக்குச்சேர வார்த்தை சொல்லவேண்டியிருக்க, அதிஸாஹஸம் விளைந்தபடியாலே க்ரமம் பாராதே வார்த்தை முடிவதுக்கு முன்பே சடக்கென ப்ரதிவசநம் பண்ணத் தொடங்கினபடி. (தத்₃வாக்யம்) மேல் பற்றில்லாத வார்த்தையை. அதாவது, — இவன் துஷ்டனென்றிறே சொல்லலாவது; அத்தையும் இசைந்தோம் என்கையாலே போக்கடியில்லையென்கை. (ஆப₄ாஷ்ய ச) பத₃ஶ:வும் திரளவும் அநுப₄ாஷித்து. (விம்ருஶ்ய ச) வேர்ப்பற்றியான பதத்தை விமர்சிப்பதும் செய்து. அத₂வா-வாக்யாநுப₄ாஷணமும், அதினுடைய அர்த்த₂விமர்ஶமும் என்னவுமாம். (தத: ஶுப₄தரம் வாக்யமுவாச) பெருமாள்

என்னும் பயத்தின் மிகுதியிலே விகாரமடைந்தபடியைச் சொல்லுகிறது. (அடுத்தபடியாக) ஒரு யஜமானன் வார்த்தை சொன்னால், தாஸனாயிருப்பவன், ஸ்வாமியின் கருத்தையுமறிந்து, தன் சேஷத்வஸ்வரூபத்தையும் பார்த்து ஆராய்ந்து, அதற்குத்தக்கபடி வார்த்தை சொல்லவேண்டியிருக்க, "உயிர்போனாலும், சரணாகதனை ரக்ஷிப்பேன்' என்று அதிஸாஹஸமாக ராமபிரான் வார்த்தை சொன்னபடியாலே, முறைபாராமல், அவருடைய வார்த்தை முடிவதற்குமுன்னே, முதல் சுலோகம் முடிந்தவுடனே சடக்கென பதில் சொல்லத் தொடங்கினபடி. (அந்த வாக்யம்) மேலே தொடர்ந்து ஒருவர் ஒன்று சொல்லமுடியாத அந்த வாக்கியத்தை. அதாவது,-மேலே 'இவன் துஷ்டன்' என்னும் வாக்கியத்தைத்தானே சுக்ரீவன் சொல்லப்போகிறான். 'துஷ்டனாகிலும் இருக்கட்டும்; கைவிடேன்' என்று முன்பே ராமபிரான் சொல்லிவிட்டாராகையாலே, இனிமேல் சுக்கிரீவனுக்குச் சொல்லலாவதில்லையே. ஆகையாலே, மேலே ஒரு பதில் சொல்லமுடியாத பெருமையை உடைய அவ்வாக்கியத்தை என்கை. (திரும்பவும் சொல்லி) ஆஸமந்தாத் ப₄ாஷணம்செய்து, பதம் பதமாகவும், மொத்தமாகவும் திரும்பச்சொல்லி. (ஆராய்ச்சியும் செய்து) முக்கியமான பதத்தை ஆராய்ச்சியும் செய்து. அல்லது, 'ஆப₄ாஷ்ய' என்று வாக்கியத்தைச் சொன்னதையும், 'விம்ருச்ய' என்று அதன் அர்த்தத்தை ஆராய்ந்ததையும் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (அதைவிட மங்களமான வாக்கியத்தைச் சொன்னார்) ராமன் அருளிய வார்த்தை மங்கள

அருளிச்செய்த வாக்யம் ஸுப₄ம்; அதிற்காட்டில் ஸுப₄தர மான வாக்யத்தைச் சொன்னர். அதாவது,-"என்னைப் பற்றுவார்க்கு மித்ரப₄ாவமே அமையும்; அவர் குற்றம் பார்த்து விடோம்" என்று தம்மைப் பற்றினர்க்கு இவ் வார்த்தையின் நிழலிலே ஜீவிக்கலாம் வார்த்தையாகை யாலே அது ஸுப₄ம்; "நீர் போனவழியே போய் உம்முடைய ஸத்₃ப₄ாவத்தை இழக்கமாட்டேன்" என்ற வார்த்தை யாகையாலே இது ஸுப₄தரம். (ஹரி புங்க₃வ:) "राजविद्या" (ராஜவித்₃யா) என்கிறபடியே தம்முடைய கலக்கத்துக்குப் போரும்படி பெருமாளுக்கு அவ்வருகை விண்ணப்பம் செய்த அளவுடைமை.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 5-வது ச்லோகம்

सुदुष्टो वाप्यदुष्टो वा किमेष रजनीचरः।
ईदृशं व्यसनं प्राप्तं भ्रातरं यः परित्यजेत्॥
को नाम स भवेत्तस्य यमेष न परित्यजेत्॥

ஸுது₃ஷ்டோ வாப்யது₃ஷ்டோ வா கிமேஷ ரஜநீசர:।
ஈத்₃ருஸம் வ்யஸநம் ப்ராப்தம் ப்₄ராதரம் ய: பரித்யஜேத்॥
கோ நாம ஸ ப₄வேத் தஸ்ய யமேஷ ந பரித்யஜேத்॥

மானது; அதிற்காட்டிலும் மங்களமான வார்த்தையைச் சொன்னர். அதாவது,-"என்னைப் பற்றுவார்க்கு நண்பனின் வேஷமும் போதும்; அவர் குற்றம் பார்த்து விடோம்" என்று தம்மைப் பற்றினவர்களுக்கு இவ் வார்த்தையாகிற நிழல்தருமரத்தின் நிழலிலே உயிர்வாழலாம்படியான வார்த்தையாகையாலே அது மங்களம். "நீர் உம்மிஷ்டப்படி சென்று உம்முடைய உயிரையிழக்க நான் விடமாட்டேன்" என்று அவர் மேலுள்ள அன்பாலே அவரையும் மறுத்துப்பேசும் வார்த்தையாகையாலே இது அதிலும் மங்களமானது. (வானரர்களுள் சிறந்தவர்) "ராஜவித்₃யா" [கீதை 9-2] [வித்யைகளுக்குள் ராஜாவாயிருப்பது] என்கிறபடியே மஹா ராஜரான தம்முடைய கலக்கத்தின் பெருமைக்குத்தக்கபடி ராமபிரானை யும் மறுத்து விண்ணப்பம் செய்த மதிப்புடைமையைக் காட்டுகிறது.

பதவுரை:—ஸுதுஷ்ட: வா—மிகுந்த தோஷத்தை உடையவனாகிலும், **அதுஷ்ட: வா**–தோஷமற்றவனாகிலும், **ய: ஏஷ: ரஜநீசர:**–யாவனொரு இந்த அரக்கன், **ஈத்ருஸம் வ்யஸநம் ப்ராப்தம்**–இப்படிப்பட்ட துன்பத்தை அடைந்த, **ப்ராதரம்**–ஸஹோதரனை, **பரித்யஜேத்**–அடியோடு கைவிட்டானோ, **(தேந) கிம்**-(அவனால்) என்ன பயன்? **ஏஷ:**–அப்படிப்பட்ட இவன், **யம்**—எவனை, **ந பரித்யஜேத்**—கைவிடமாட்டானோ, **ஸ:**-அவன், **தஸ்ய**–அவ்விபீஷணனுக்கு, **கோ நாம**—என்ன உறவினன்தான் ஆவான்?

அவதாரிகை:—தூஷணாந்தரம் சொல்லுவாராக, ஸம்ப்ரதிபந்ந தூஷணத்தை அநுவதிக்கிறார்.

வ்யா:—(ஸுதுஷ்டோ வாப்யதுஷ்டோ வா) குணங்களிலேயிறே விப்ரதிபத்தி; **"सर्पजातिरियं क्रूरा"** (ஸர்ப்பஜாதிரியம் க்ரூரா) என்னுமாப்போலே ராக்ஷஸனென்னுமிடம் ஸம்ப்ரதிபந்நமன்றோ. (கிமேஷ ரஜநீசர:) கிம் க்ஷேப. இவனால் என்ன ப்ரயோஜனமுண்டு? "இவன் ராக்ஷஸனானாலும் 'கிமேஷ:' என்னக்கடவதோ? ஸ்வநிகர்ஷ பூர்வகமாக ஶரணம் புகுந்த நமக்கு ஸஹகாரியாம்" என்னச்

அவதாரிகை:—மற்றொரு தூஷணம் சொல்லுவதாகத் தொடங்கி ஏற்கனவே ராமன் எடுத்துக் கழித்த தூஷணத்தைச் சொல்லுகிறார் "ஸுதுஷ்ட" என்ற ச்லோகத்தாலே.

வ்யா:–(துஷ்டனாகிலுமாம், நல்லோனாகிலுமாம்) இவன் நல்லவனா, தீயவனா என்பதிலேயே விவாதம். "இந்த ஸர்ப்பஜாதியானது கொடியது" [வி-பு 5-7-71] என்பதுபோலே அரக்கன் என்பது அனைவரும் இசைந்ததன்றோ. (அரக்கனான இவன் எதற்கு?) 'கிம்' (எதற்கு) என்றது தாழ்வைக்காட்டுகிறது. இவனால் என்ன பயனுண்டு? என்று கருத்து. இவன் அரக்கனானாலும் 'இவன் எதற்கு?' என்னலாமோ? தன் தாழ்வை முன்னிட்டுக்கொண்டு சரணம் புகுந்த இவன் நமக்குப் படைத்துணையாம் என்னச் சொல்லுகிறது. (இப்படிப்பட்டவனை) ராக்ஷஸராஜாவாய்,

சொல்லுகிறது; (ஶத்$_3$ருஶம்) ராஜாவாகையாலே ஆட்$_4$யனான வனை. (வ்யஸநம் ப்ராப்தம்) ஶத்ருக்களான நம்மாலே பீடி$_3$தனானவனை. வ்யஸநமாவது; லங்காத$_3$ஹநம், பந்து$_4$ வத$_4$ம் இத்யாதி$_3$கள். (ப்$_4$ராதரம்) வ்யஸனமின்றிக்கேயொழிந்தாலும் விடவொண்ணாத ப$_3$ந்த$_4$முடையவனை. (ய: பரித்யஜேத்) 'யாவனொருவன் ஸவாஸநமாக விட்டான்' என்று க$_3$ர்ஹிக்கிறான். 'க$_3$ர்ஹாயாம்லிங்' கீழ்ச்சொன்ன ஒரொன்றே விடாமைக்கு ஹேதுவாயிருக்க, எல்லாவற்றையும் உடையனாயிருக்கிறவனை விட்டான் யாவனொருவன், அந்த இவனால் என்ன ப்ரயோஜனமுண்டு? என்று கீழோடே அந்வயம். அதவா, "ஶத்$_3$ருஶம்" என்று வ்யஸநவிஶேஷணமாகவுமாம். அதாவது,–மாதா பிதாக்களாலும் பரித்யாஜ்யராய், வத$_4$ார்ஹராயிருப்பார்க்கும் உம்முடைய நிழலிலே ஒதுங்கவேண்டும்படியிருக்கிற தேவர், புலி சீறினாற் போலேசீறி அழியச்செய்வதாக எடுத்துவிட்டிருக்கிற இந்த

எல்லாச் செல்வங்களும் நிறைந்தவனாகையாலே 'இப்படிப்பட்டவன்' என்றே சொல்லத்தக்கவன். (துன்பமடைந்தவனை) எதிரிகளான நம்மால் படையெடுக்கப்பட்டுத் துன்பமடைந்தவனை. துன்பமாவது,- லங்கா தஹனம், அக்ஷயகுமாராதிவதம் முதலானவை. (ஸஹோதரனை) துன்பமில்லாவிடினும் விடவொண்ணாத உறவுடையவனை. (எவன் கைவிடுவானோ) எவனொருவன் வாஸனையோடு கைவிட்டானோ என்று நிந்திக்கிறான். 'லிங்' பிரயோகம் இகழ்வுப்பொருளது. கீழ்ச்சொன்ன செல்வமுடைமை, ஆபத்து, உறவு ஆகிய ஒவ்வொன்றும் விடாமைக்குக் காரணமாயிருக்க, எல்லாவற்றையும் உடையவனாயிருக்கிற ராவணனை எவனொருவன் விட்டானோ, அப்படிப்பட்ட இவனால் என்ன பயனுண்டு? என்று கீழோடே அந்வயம். 'ஶத்$_3$ருசம்' என்பது ராவணனைச் சொல்லுவதாகக் கீழே விவரிக்கப்பட்டது. அப்படியல்லாமல், "ஶத்$_3$ருசம் வ்யஸநம் ப்ராப்தம்" (இப்படிப்பட்ட துன்பத்தை அடைந்தவனை) என்று, வ்யஸனத்துக்கு விசேஷணமாகவும் கொள்ளலாம். அதாவது,-"ஸ பித்ரா ச பரித்யக்த:" [ரா-ஸு 38-33] என்று சொல்லப்பட்ட காகாஸுரனைப் போலே தாய்தந்தையராலும் கைவிடப்பட்டுக் கொல்லத்தக்கவராயிருப்பார்க்கும் உம்முடைய நிழலிலே ஒதுங்கவேண்டும்படியிருக்கும் தேவரீர், புலிசீறினாற்போலே ராவணனிடம் சீறி, அவனை அழித்துவிடவேணு

வ்யஸநத்தையன்றோ அவன் ப்ராப்தனாயிற்று. "இப்படி அவனோடு தொத்தற விட்டுப்போந்து நம்பக்கலிலே வந்தவன் நமக்கு ஸஹகாரியாகக் கூடாதோ?" என்னச் சொல்லுகிறார்: (கோ நாம இதி) (தஸ்யாஸ்ய கோ நாம ஸ ப$_4$வேத் யமேஷ விபீ$_4$ஷணோ ந பரித்யஜேத்) க$_3$ர்ஹாப்ரவர்த்தகனாக வந்த இந்த விபீஷணனுக்கு அவன் ஆராவான், யாவனொருவனை இந்த விபீஷணன் விடான், இவன் விடாதொழிகைக்கு ஒருத்தனில்லையென்கை. அதாவது,-நாட்டில் அபரித்யாஜ்யராவார், ஸம்பத்தி விபத்தி ப$_3$ந்து$_4$த்வங்களைத் தனித்தனியே உடையராயிருப்பார் மூவரும், இவற்றிரண்டையுமுடையார் மூவரும் ஸமுதி$_3$தகு$_3$ணனாயிருப்

மென்று படையெடுத்திருக்கும்படியான இப்படிப்பட்ட துன்பத்தையன்றோ அவன் அடைந்திருப்பது என்கை. இப்படி அவனோடு உறவு அறப்படி விட்டுவந்து நம்மை அடைந்தவன் நமக்குத் துணையாகக்கூடாதோ? என்ன, சொல்லுகிறார்,-(எவனைத் தான்) என்றுதொடங்கி. (எவனை இவ் விபீஷணன் கைவிடமாட்டானோ, அவன் இவனுக்கு எவன்தான் ஆவான்) எவனொருவனை இந்த விபீஷணன் கைவிடமாட்டானோ, அவன் இகழ்வின் பிறப்பிடமான இவ்விபீஷணனுக்கு எவனாவான்? என்ன உறவாவான்? எத்தகைய செல்வத்தையுடையவனாவான்? எத்தகைய ஆபத்தையுடையவனாவான்? இவன் விடமாட்டாத அத்தகையவன் ஒருவனுமில்லையென்கை. அதாவது,-உலகில் கைவிடத்தகாதவர்களை ஏழு வகையாகப் பிரிக்கலாம். அவராவார்,—(1) செல்வமுடையவன், (2) ஆபத்தையடைந்தவன், (3) உறவையுடையவன், (இம்மூவரும் அபரித்யாஜ்யர்கள்-கைவிடத்தகாதவர்கள்) (4) செல்வத்தையும் ஆபத்தையுமுடையவன், (5) ஆபத்தையும் உறவையுமுடையவன், (6) உறவையும் செல்வத்தையுமுடையவன், (கைவிடத்தகாமைக்கு இருகாரணமுடைய இம்மூவரும் அபரித்யாஜ்யதரர்கள்-மிகவும் கைவிடத்தகாதவர்கள்) (7) செல்வத்தையும், ஆபத்தையும் உறவையும், ஆகக் கைவிடத்தகாமைக்கான மூன்று குணங்களையும் உடையவனாகையாலே ஸமுதி$_3$தகு$_3$ணன் எனப்படுமவன். (கைவிடத்தகாமைக்குரிய மூன்று காரணங்களையுமுடைய இவன் அபரித்யாஜ்யதமன்- மிகமிகக் கைவிடத்தகாதவன்) 'ஈத்$_3$ருசம்' என்கையாலே ராவணனுடைய செல்வமுடைமையும், 'வ்யஸநம் ப்ராப்தம்' என்கையாலே ராவணனுடைய ஆபத்துடைமையும், 'ப்$_4$ராதரம்' என்கையாலே ராவணனுடைய உறவுடைமையும் சொல்லப்பட்டதாகையாலே ஸமுதிதகுணன் என்னும்

பான் ஒருவனும் ஆக எழுவருமாயிற்று. இவர்களில் ஸமுதி₃த குு₃ணனன ராவணனைவிட்ட இவனுக்கு அபரித்யாஜ்யனு யிருப்பானெருவ அஷ்டமன் இல்லாமையாலே. இவன் விட மாட்டாதானெருவன் முதலிலே இல்லையென்கை.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 6, 7-வது ச்லோகம்

वानराधिपतेर्वाक्यं श्रुत्वा सर्वानुदीक्ष्य च।
ईषदुत्स्मयमानस्तु लक्ष्मणं पुण्यलक्षणम्॥
इति होवाच काकुत्स्थो वाक्यं सत्यपराक्रमः॥

வாநராதி₄பதேர் வாக்யம் ச்ருத்வா ஸர்வாநுதீ₃க்ஷ்ய ச।
ஈஷது₃த்ஸ்மயமாநஸ்து லக்ஷ்மணம் புண்யலக்ஷணம்॥
இதி ஹோவாச காகுத்ஸ்தோ₂ வாக்யம் ஸத்யபராக்ரம:॥

பதவுரை:—ஸத்யபராக்ரம:—தடையற்ற பராக்ரமத்தை யுடைய, காகுத்ஸ்த₂:—ஸ்ரீராமபிரான், வாநராதி₄பதே:— ஸுக்ரீவனுடைய, வாக்யம்—வார்த்தையை, ச்ருத்வா—கேட் டும், ஸர்வாந்—அனைவரையும், உதீக்ஷ்ய ச—பார்த்தும், ஈஷத் உத்ஸ்மயமாந:—சிறிது புன்சிரிப்பையுடையவராய், புண்ய லக்ஷணம்—நல்ல முகக்குறியையுடையவரான, லக்ஷ் மணம்—இலக்குவனைக் குறித்து, இதி—இவ்வண்ணமாக, வாக்யம்—வார்த்தையை, உவாச ஹ-உரைத்தார்.

அவதாரிகை:—மஹாராஜர் வார்த்தையைக் கேட்ட பெருமாள் தாம் நோக்க நினைத்த நன்மையையும் பார்த்து,

---

எழாமவனும் அபரித்யாஜ்யதமன் (மிகமிகக் கைவிடத்தகாதவன்) ஆன ராவணனைக் கைவிட்ட இவனுக்குக் கைவிடத்தகாதவனுயிருக்கும் எட்டா மவன் ஒருவன் உலகிலேயே இல்லையாகையாலே இவனால் கைவிடத் தகாதவன் இல்லவேயில்லை என்று கருத்து.

அவதாரிகை:-சுக்கிரீவனுடைய வார்த்தையைக் கேட்ட ராமபிரான் "நான் ரக்ஷிக்கப்புகுந்த நம்முடைய நன்மையைப் பார்த்துக் கலக்கத்தை

*இதொரு ப்ரமேஸ்வப₄ாவமிருந்தபடியென்? என்று முறுவல் செய்து. இவருடைய பரிகரத்தில் நமக்கு ஆளாவாருண்டோ என்று பார்த்து, அங்கே ஒருவரைக் காணாமையாலே தம்முடைய கருத்தறியும் இளையபெருமாளைக் குறித்து வார்த்தை அருளிச்செய்கிறார்.

வ்யா:— (வாநராதி₄பதேர் வாக்யம் ச்ருத்வா) பேரளவுடையராகையாலே எட்டாநிலத்திலே வார்த்தை சொன்னவருடைய வார்த்தையைக் கேட்டு. தாம்போனவழி எல்லார்க்கும் ஶிரஸா வஹிக்க வேண்டும்படியான நிர்வாஹகத்வத்தையுடையவர் என்றுமாம். (ஸர்வாநுதீ₃க்ஷ்ய) இவர்கள் நம்மையும் பார்ப்பார்களோ? இவர் போனவழியே

உண்டுபண்ணுவதன்றிக்கே, நம் மேல் அன்பாலே நம் நிலைவையும் மறுக்கும் அறிவுத்தெளிவையும் உண்டாக்கும் இது ஒரு அன்பின் தன்மையிருந்தபடியென்!" என்று சுக்கிரீவனின் அன்பை நினைத்து முறுவல் செய்து, இவருடைய ஆட்களான மற்ற வானரர்களில் நம் கருத்துக்குத் துணையாவார் உண்டோ என்று பார்த்து, அவர்களில் ஒருவரும் இல்லாமையாலே, தம் நினைவறியும் இலக்குவனைக் குறித்து ஒரு வார்த்தை அருளிச்செய்கிறார்.

வ்யா:—(வானரர் தலைவருடைய வார்த்தையைக் கேட்டு) (ராமனிடம் அன்புடைமையிலே, வானரர்தலைவராய் பேரன்புடையவராகையாலே அன்பில்லாமல் அறிவை மாத்திரமுடையார்க்கு எட்டாத நிலத்திலே நின்று வார்த்தை சொன்ன சுக்கிரீவனுடைய வார்த்தையைக்கேட்டு. அன்புடைமையிலே வானரர்க்குத் தலைவர் என்று 'வாநராதிபதி' என்றதுக்குக் கருத்து. அல்லது, தாம் சொன்ன சொற்கள் மற்ற வானரர்க்கும் தலையாலே ஏற்றுக்கொள்ளவேண்டும்படி அவர்களுக்குத் தலைவராயிருப்பவர் என்றுமாம். இத்தால், அனுமனுள்ளிட்ட எல்லா வானரர்களும் இவருக்கு அடங்கியவர்களாய், இராமபிரானுக்குப் பக்கபலமில்லாமல் போய்விட்டது என்று கருத்து. (அனைவரையும் பார்த்து) இவர்கள் நம் நிலையைப் பார்த்து நமக்குத் துணையாவார்களோ? அல்லது, சுக்கிரீவன் சென்ற

---

* இவ்விடத்தில் சில பங்க்திகள் விடப்பட்டிருக்கவேணும். 'ஈஷது₃த்ஸ்மயமாந:' என்ற பதத்தின் வியாக்கியானத்தைக் காண்க.

போவார்களோ? என்று பார்த்து. அதவா, "**आचार्यप्राचार्यसन्निपाते प्राचार्यायोपसङ्गृह्य**" (ஆசார்யப்ராசார்யஸந்நிபாதே ப்ராசார்யாயோபஸங்க்ருஹ்ய) என்கிற ந்யாயத்தாலே நாமும் மஹாராஜருமானால், நம்மை அநுவிதா₄நம் பண்ணுவார்களோ என்று பார்த்து என்றுமாம். (ச) ஶப்தத்தாலே முகம்பார்த்தவளவிலேயுமன்றிக்கே, இங்கி₃தங்களையும், ஹ்ருதயத்திலே ஓடுகிற வார்த்தையையும் பார்த்தபடியை ஸமுச்சயிக்கிறது. (ஈஷது₃த்ஸ்மயமாந:) தாம் நோக்கப் புக்க நன்மையும் பார்த்தபடி ஆந்த்₄யத்தைப் பண்ணுமளவன்றிக்கே, நாம் சொன்ன பக்ஷத்துக்கு தூ₃ஷணம் சொல்லும்படி தெளிவையும் பிறப்பிக்குமாகாதே! இதொரு ப்ரேமஸ்வபா₄வமிருந்தபடியென்! என்று ஸ்மிதம் பண்ணினபடி. "நலமே வலிது கொல்" என்னக்கடவதிறே. (து)

வழியே செல்லுவார்களோ? என்று ஆராய்ந்து. அல்லது, "ஆசார்ய ப்ராசார்ய ஸந்நிபாதே ப்ராசார்யாயோபஸங்க்₃ருஹ்ய உபஸஞ்ஜிக்₄ருக்ஷேதா₃சார்யம், ப்ரதிஷேதே₄தி₃தர: லுப்யதே பூஜா சாஸ்ய ஸகாசே" [ஆபஸ்தம்பதர்ம 1-8-19, 20] [ஆசாரியரும், அவருடைய ஆசாரியரும் சேர்ந்திருந்தால், ஆசாரியருடைய ஆசாரியரை முதலில் வணங்கி, ஆசாரியரை அடுத்தபடி வணங்க முயலவேண்டும்; அதை ஆசாரியர் தடுக்கவேண்டும்; தம் ஆசாரியர் அருகிலிருக்கும்போது ஆசாரியருக்கு (இவ்வண்ணமாகப்) பூஜை இல்லாமற்போகிறது] என்கிற நியாயத்தாலே சுக்கிரீவனுக்கும் ஸ்வாமியான நாமும் அவரும் சேர்ந்திருக்கும்போது நம் நெஞ்சைப்பின் செல்லுவார்களோ என்று பார்த்து என்றுமாம். (உதீ₃க்ஷ்யச-பார்ப்பதும் செய்து) என்கிற சகாரம் (உம்மை) அநுக்த ஸமுச்சாயகமாய், இவர்கள் முகத்தைப்பார்த்தது மாத்திரமல்லாமல், முகக்குறிகளையும், நெஞ்சிலிருக்கும் எண்ணங்களையும் பார்த்தபடியைக் கூட்டுகிறது. (சிறிது முறுவலையுடையவராய்) "தான் ரக்ஷிக்கப்புகுந்த நம்முடைய (ராமபிரானுடைய) விலையற்ற உயிரைப்பார்த்துக் கலக்கத்தை உண்டு பண்ணினதோடன்றியில், நாம் சொன்ன பக்ஷத்துக்கு மறுப்புரைக்கும்படி அறிவுத்தெளிவையும் பிறப்பிப்பதே இவ்வன்பு! இப்படி கலக்கத்தையும் அறிவையும் ஒரே சமயத்தில் உண்டாக்கும் இதுஒரு அன்பின் தன்மையிருந்தபடியென்"! என்று நினைத்துப் புன்சிரிப்புச் சிரித்தபடியைக் காட்டுகிறது.

மஹாராஜர் சொன்னபக்ஷத்தைத் தள்ளி. அதுக்கவ்வருகே வார்த்தை சொல்ல நினைத்த வேறுபாடு. அதாகிறது; (யமேஷ ந பரித்யஜேத்) என்கிறவரைக் குறித்து. **"व्यसनेषु प्रहर्तारस्तस्मादयमिहागतः"** (வ்யஸநேஷு ப்ரஹர்த்தாரஸ் தஸ்மாதயமிஹாகத:) என்று வந்தான், விட்டுப்போந்தான் என்று சொல்லுகை. (லக்ஷ்மணம்) மஹாராஜர் பரிகரத்தில் தன் வார்த்தை கேட்பார் இல்லாமையாலே. **"प्रागेव तु महाप्राज्ञः"** (ப்ராகேவ து மஹாப்ராஜ்ஞ:) என்று தம் நினைவுக்கு முற்படக்கடவரான இளையபெருமாளைக்குறித்து அருளிச் செய்தார். (புண்ய லக்ஷணம்) இவ்வளவு ஶரணாகதரை விடாத வார்த்தையாலே மஹாராஜர் பக்ஷத்துக்கு

"நலமே வலிது கொல் நஞ்சூட்டு வன்பேய்
நிலமே புரண்டுபோய் வீழ—சலமேதான்
வெங்கொங்கையுண்டானை மீட்டாய்ச்சியூட்டுவான்
தன் கொங்கை வாய்வைத்தாள் சார்ந்து" [மூன் திருவ-74]

என்கிற பாசுரத்திலே பேயாழ்வார், பேய்ச்சி முலைகொடுத்து உயிர் விட்டதைக் கண்டும், அவனுக்கு முலைகொடுத்த ஆய்ச்சியின் அன்பின் வலிமையைப் பேசினாரன்றோ. அன்பின் வலிமை எதுதான் செய்யாது? (உத்ஸ்மயமாந: து) என்றவிடத்தில் 'து' என்னும் பதத்தாலே, சுக்ரீவன் சொன்ன பக்ஷத்தைத்தள்ளி, அதற்கும்மேல் வார்த்தை சொல்ல உறுதி கொண்டதால் ஏற்பட்ட முகவேறுபாட்டைக் காட்டுகிறது. அதாவது, "எவனைத்தான் இவன் விடமாட்டான்?" [ரா-யு 18-5] என்று சொன்ன இவரைக்குறித்து "துன்பம் வந்தபோது (ராவணன் முதலிய) ஞாதிகள் தன்னைத் துன்புறுத்துவார்கள்; ஆகையால் விபீஷணன் இங்கு வந்தான்" [ரா-யு 18-10] என்று, "நம்மை அண்டியே வந்தான், ராவணன் துன்புறுத்துவானுகையாலே அவனை விட்டுப்போந்தான்" என்று உறுதியோடு சொல்லுகை. (இலக்குவனை) சுக்கிரீவனைச் சேர்ந்தவர்களில் தன் வார்த்தை கேட்பார் ஒருவருமில்லாமையாலே, "பேரறிவாளனான இலக்குவன் வனவாஸத்தில் தமயனைப் பின்தொடர்வதற்காக, ராமனுக்கு முன்னமே மரவுரியால் அலங்கரித்துக்கொண்டான்" [ரா-ஸு 33-28] என்று தம் நினைவுக்கு முன் நிற்கக்கூடியவரான லக்ஷ்மணனைக்குறித்து அருளிச்செய்தார். (நற்குறிகளையுடையவரை) இவ்வளவிலும் "ந த்யஜேயம்" என்று சரணாகதரைவிடாத வார்த்தை சொன்னபடியாலே,

அவ்வருகே வார்த்தை சொல்லக்கடவர் என்று தச்ச்ரவண கௌதூஹலம் வடிவிலே தோற்றும்படியான நற்குறியை உடையவர். (இதி வாக்யமுவாச) மஹாராஜர் தம்மைக் கொண்டாடும்படி அவர் ப்ரேமாதிசயத்தைக்கொண்டாடின ப்ரகாரத்தையும், அவர்சொன்ன பக்ஷத்துக்கு அவ்வருகே வார்த்தை சொன்ன ப்ரகாரத்தையும் சொல்லுகிறது. (ஹ) "தம் மேன்மை பாராதே இப்படி கொண்டாடுவதே! இது என்ன நீர்மை!" என்றும், "அவர் பக்ஷத்துக்கு அவ்வருகே உத்தரம் காண்பதே!" என்றும் ரிஷிகொண்டாடுகிருன். (காகுத்ஸ்த:) இந்த்ராதிகளுக்கும் இக்குடியிற் பிறந்தாரைக் கொண்டு தங்கள் வன்னிய மறுத்துக் கொள்ளும்படியான குடியிற் பிறப்பால் வந்த மேன்மை பாராதே தாழ வார்த்தை சொல்லுவதே! என்கை.

சுக்ரீவனுடைய வார்த்தைக்கும் மேலே வார்த்தை சொல்லப்போகிருர் என்று அறிந்து அதைக் கேட்கவேணும் என்னும் குதூஹலம் வடிவிலே தோற்றும்படியான நல்லகுறிகளையுடையவராயிருந்தவரை. (இவ்வண்ணமாக வார்த்தை சொன்னுர்) எதிர்ப்பக்ஷத்தைச் சேர்ந்த சுக்ரீவனும் தம்மைக் கொண்டாடும்படி அவனுடைய அன்பின் மிகுதியைக் கொண்டாடின ரீதியையும், அவருடைய பக்ஷத்தை மறுத்து, அதற்கும் மேலே வார்த்தை சொன்ன ரீதியையும் 'இதி' சப்தம் காட்டுகிறது. (ஹ) 'தம் மேன்மை பாராதே சுக்ரீவனை இப்படிக் கொண்டாடுவதே! இதென்ன ஸௌசீல்யம்!' என்றும், 'சுக்ரீவனுடைய பக்ஷத்துக்கும் மேலே வார்த்தை சொல்லுவதே!' என்றும் வால்மீகிமஹரிஷி கொண்டாடுகிருர்' (ககுத்தவமிசத்திலே பிறந்தவர்) ராமபிரானுடைய முன்னேர்களில் ஒரு அரசரை இந்திரன் யுத்தத்தில் ஸஹாயமாயிருக்கவேண்ட, நீ 'எனக்கு வாஹனமாயிருக்கவேண்டும்' என்று அவர் சொல்ல, அவன் காளைமாடாய், அவர் அவனுடைய ககுத்தில் (திமிலில்) நின்று போர்புரிந்து இந்திரனுடைய எதிரிகளை அழித்துக்கொடுத்துக் 'ககுத்ஸ்தர்' (ககுத்தில் நின்றவர்) என்று பெயர்பெற்றுர் என்பது இதிஹாஸபுராணங்களில் பிரஸித்தமானது. அப்படி இந்திரன் முதலானுர்க்கும் உதவிபுரியும் குடிப்பிறப்பின் பெருமையைப் பாராமல், ஒரு குரங்கான சுக்ரீவனுக்கும் தாழநின்று அவனைப்புகழ்ந்து வார்த்தை சொல்லுவதே! என்கை.

(ஸத்யபராக்ரம:) அமோக₄பராக்ரம: வ்யாபரிக்கவொண்ணுத படி எதிரிகள் முடுகிஞல் பராக்ரமிக்கவல்லாரைப்போலே. பதகம் முடிந்தாலும் உத்தரங்கண்டு ப்ரதிவாதிகளை வெல்லவல்லவர்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 8-வது ச்லோகம்

अनधीत्य च शास्त्राणि वृद्धाननुपसेव्य च।
न शक्यमीदृशं वक्तुं यदुवाच हरीश्वरः॥

அநதீ₄த்ய ச ஶாஸ்த்ராணி வ்ருத்₃த₄ாநநுபஸேவ்ய ச।
ந ஶக்யமீத்₃ருஶம் வக்தும் யது₃வாச ஹரீச்வர:॥

பதவுரை:—**ஹரீச்வர:**—வானரர் தலைவரான மஹாராஜர் **யத் உவாச**-யாதொரு வார்த்தை சொன்னுரோ, **ஈத்₃ருஶம்**—இப்படிப்பட்ட வார்த்தையை, **ஶாஸ்த்ராணி**—சாஸ்திரங்களை, **அநதீ₄த்ய**—ஓதாமலும், **வ்ருத்₃த₄ாந்**—பெரியவர்களை, **அநுபஸேவ்ய ச**—அநுவர்த்தனம்பண்ணிக் கேளாமலும், **வக்தும்**—சொல்லுவதற்கு, **ந ஶக்யம்**—முடியாது.

அவதாரிகை:—அவர் தாம் சொல்லப்புகுகிற உத்தரத்தினுடைய ஏற்றம் தோற்றுகைக்காக, இவர் சொன்ன வார்த்தையின் கனத்தைக் கொண்டாடுகிருர்.

(ஸத்யமான பராக்ரமத்தை உடையவர்) விணுகாத பராக்ரமத்தை உடையவர். மேலே போர்புரியமுடியாதபடி எதிரிகள் சண்டையிட்டாலும், அப்போதும் உக்ரமாகப் போர்புரியவல்லவர்கள் ஸத்யபராக்ரமர்கள் எனப் படுவார்கள். அவர்களைப்போலே வாதப்போரில் இதற்குமேல் 'கோடி' சொல்லலாவதில்லை என்னும்படி கடைசி நிலையான பதகம் முடிந்தாலும், அதற்கும்மேலே பதிலை ஆராய்ந்து சொல்லி பிரதிவாதிகளை வெல்ல வல்லவர் ராமபிரான் என்கிறது. இப்படி ஸத்யபராக்ரமராகையாலே சுக்கிரீவனுடைய் சோடிக்கும் உத்தரம் சொல்லலாஞர் என்று கருத்து.

அவதாரிகை:—ராமபிரான் தாம் சொல்லப்போகிற பதிலினுடைய பெருமை தோற்றுவதற்காக, சுக்கிரீவன் சொன்ன வார்த்தையின் பெருமையைக் கொண்டாடுகிருர்.

வ்யா:—(ஶாஸ்த்ராண்யநதீ₄த்ய வ்ருத்₃த₄ாம்ஶ்ச அநுப ஸேவ்ய ஈத்₃ருஶம் வக்தும் ந ஶக்யம்) ஒரு ஶாஸ்த்ரத்தையும் ஒரு ஆசார்யனையும்,ஒரு அடிப்பாடான புத்தியையும் உடைய வனுக்குச் சொல்லலாம் வார்த்தையன்று. (ஈத்₃ருஶம்) இவ் வார்த்தை ஒரு பிறர்க்குப் போலியாகவும் சொல்லவொண் ணாது. **“ श्रैष्ठ्यं शास्त्रसमूहेषु प्राप्तः ”** (ச்ரைஷ்ட்யம் ஶாஸ்த்ர ஸமூஹேஷு ப்ராப்த:) என்றும், **“वृद्धोपसेवी”** (வ்ருத்₃தோ₄பஸேவீ) என்றும், **“ यस्तु दोषस्त्वया प्रोक्तः ”** (யஸ்துதோ₃ஷஸ் த்வயா ப்ரோக்த:) என்றும், மேலே சொல்லப்படுகிற தம் மாலும் சொல்லப்போகாது என்று கருத்து. (யது₃வாச) ஸாமாந்யநிர்தே₃ஶத்தால் இவர் வார்த்தையை அநுபா₄ஷிக் கவும் முடியாது என்கை. (ஹரீச்வர:) இதுக்கு ஸத்ருஶ மேதென்னில் இவர் பெருமைக்கு ஸத்ருஶம் என்கை.

வ்யா:—(சாஸ்திரங்களைப் படியாமலும் பெரியவர்களைக் கேளாமலும், இப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்லமுடியாது) ஒரு சாஸ்திரத்தை மாத்திரம் கற்றவனால் இப்படிப் பேசமுடியாது. பலசாஸ்திரங்களைக் கற்றிருக்கவேண்டும். ஓராசாரியனை மாத்திரம் அண்டினவன் சொல்லும் வார்த்தையல்ல இது. ‘பஹுப்₄ய: ச்ரோதவ்யம்’ என்கிறபடியே பல ஆசாரியர்களை ஆச்ரயித்தவனாலேயே இப்படிப்பேசமுடியும். சகாரத்தாலே ஒரு வழியிலே சென்ற புத்தியையுடையவனால் இப்படிச் சொல்லமுடியாது. பல வழிகளிலும் ஆராய்ந்தவன் சொல்லும் வார்த்தையே இது. (இப்படிப்பட்டது) ‘இப்படிப்பட்டது’ என்னலாமேயொழிய ஒருபமான மில்லை. மற்றவர்கள் பேசுவது இவ்வார்த்தையின் நகலாயிருக்கவும் தக்கதன்று. “சாஸ்திரஸமூஹங்களில் சிறந்த அறிவையடைந்தவர்” [ரா-அ 1-27] என்றும், “பெரியவர்களை ஆச்ரயித்திருப்பவர்” [ரா-ஸு 38-61] என்றும் சொல்லப்படுமவராய், “உம்மால் யாதொரு தோஷம் சொல்லப்பட்டதோ” [ரா-யு 18-12] என்று மேலே பதில் சொல்லப் போகிறவருமான தம்மாலும், இப்படிப்பட்ட அன்புக்கலக்கமும் அறிவுத் தெளிவும் நிறைந்த வார்த்தையைச் சொல்லமுடியாது என்று கருத்து. (யாதொன்றைச் சொன்னாரோ) ‘யாதொன்று’ என்று சொல்லலாமே யொழிய வலிமையற்ற ஸாமாந்யசப்தங்களாலே இதைத் திருப்பிச் சொல்லவும் முடியாது என்கை. (வானரர் தலைவர்) இவ்வார்த்தைக்கு உபமானம் இவருடைய பெருமையேயாகும். வானரர்களுக்குள் அன்பிற்

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 9-வது ச்லோகம்

अस्ति सूक्ष्मतरं किञ्चिद्यदत्र प्रतिभाति मे।
प्रत्यक्षं लौकिकं वापि विद्यते सर्वराजसु॥

அஸ்தி ஸூக்ஷ்மதரம் கிஞ்சித்₄ யத₃த்ர ப்ரதிப₄ாதி மே।
ப்ரத்யக்ஷம் லௌகிகம் வாபி வித்₃யதே ஸர்வராஜஸு॥

பதவுரை:—அத்ர — இவ்விஷயத்தில், யத் கிஞ்சித்—யாதொன்று, மே-எனக்கு, ப்ரதிப₄ாதி—தோன்றுகிறதோ, (தத்-அது), ஸூக்ஷ்மதரம்-மிகவும் நுண்ணியதாய், அஸ்தி-உள்ளது; ப்ரத்யக்ஷம்—அனைவர்க்கும் நேரில் தெரிவதாயும், லௌகிகம் வா அபி — உலகத்தோடு ஒட்டியிருப்பதாயும், ஸர்வராஜஸு-எல்லா அரசர்களிடமும் காணப்படுவதாயும், வித்₃யதே—இருக்கிறது.

அவதாரிகை:—இப்படி இளையபெருமாளை நோக்கி, மஹாராஜரை ப்ரசம்ஸித்து, ஸ்ரீவிபீஷணாழ்வானை விச்வஸநீயனென்று தாம் சொல்லப்புகுகிற வார்த்தை ராஜாக்கள் எல்லார்பக்கலிலும் உள்ளது என்று மஹாராஜரைக் குறித்து வார்த்தை சொல்லுகிறார்.

சிறந்தவராயிருக்கும் இவர் தம்பெருமைக்குத் தக்க வார்த்தையைச் சொன்னார் என்று கருத்து. ஸாத்விகர்கள் விவாதம் செய்யும்போது நடந்து கொள்ளவேண்டிய முறையைக் காட்டுகின்றன, "ந வாதாத்" [ரா-யு 17-50] என்னும் ச்லோகமும், "அநதி₄த்ய" என்னும் இந்த ச்லோகமும்.

அவதாரிகை:— முந்திய ச்லோகத்தில் இளையபெருமாளை நோக்கி சுக்கிரீவனைப்புகழ்ந்து, "ராவணனைப்போன்ற ஜ்ஞாதிகள் விபீஷணனைப் போன்றவர்களைத் தமக்குத் துன்பம்நேரும்போது துன்புறுத்துவது ஸஹஜமாகையால் விபீஷணன் நம்மிடம் வந்திருக்கக்கூடுமாகையால் அவன் நம்பத்தக்கவனே" என்று அடுத்த சுலோகத்தில் தாம் சொல்லப் போகிற வார்த்தை சுக்கிரீவனுள்ளிட்ட பல அரசர்களுக்கும் பொருந்துவது என்று சுக்கிரீவனைக் குறித்து அருளிச்செய்கிறார்.

வ்யா:—(அஸ்தி ஸூக்ஷ்மதரம்) மஹாராஜர் கீழ்ச் சொன்ன வார்த்தை ஸூக்ஷ்மம்; இது-ஸூக்ஷ்மதரம்; இதுக்கு மேல் ஒரு அர்த்தமில்லாமையாலே. ஒரு தப்பைப் பொறுப்ப தொன்றில்லாமையாலேயும் எல்லார்க்கும் மேலான வார்த்தையென்கை. எங்ஙனேயென்னில்: மஹாராஜர் பக்கலிலும் உக்தாநுபாஷணமொழிய அர்த்தாந்தரமில்லை; பெருமாளும் இவர் ப்ரேமாந்த்₄யத்தைப் போக்குகைக்குத் தம் தோள்வலியைப் பேசுகிறுரித்தனை; ஆகையாலே எல்லாவற்றுக்கும் மேலான வார்த்தை இது. (கிஞ்சித்) மஹாராஜர் வார்த்தைக்கு அவ்வருகாயிருக்கச்செய்தே, ''கிஞ்சித்'' என்று ஸ்வோக்தியாகையாலே லகு₄வாகப் பேசுகிறுர்.

வ்யா:—(மிகவும் ஸூக்ஷ்மமானதொன்று உண்டு) சுக்கிரீவன் கீழே சொன்ன வார்த்தை ஸூக்ஷ்மமானது; நான் இனிச் சொல்லப்போகிற வார்த்தை மிகவும் ஸூக்ஷ்மமானது. இவ்வார்த்தைக்குமேல் சொல்ல வேண்டிய வேறொரு யுக்தியில்லாமையாலும், ஒரு தோஷத்தையும் பொறுக்கக்கூடியதல்லாமையாலும் இது அனைத்துக்கும் மேலான வார்த்தை. இது எப்படிச் சொல்லலாம்? இவ்வார்த்தைக்கும் மேலே ''ராவணேந ப்ரணிஹிதம்'' [ரா-யு 18-18] ''ராக்ஷஸோ ஜிஹ்மயா'' [ரா-யு 18-19] என்று சுக்கிரீவன் சொல்லப்போகிறபடியாலும், அதற்கும் மேல் ''ஸுது₃ஷ்டோ வாப்யது₃ஷ்டோ வா'' [ரா-யு 18-22] ''பிசாசாந்'' [ரா-யு 18-23] என்று ராமபிரான் வார்த்தை சொல்லப்போகிறபடியாலும் இவ்வார்த்தையே மேலான வார்த்தை என்பது எப்படி? எனில்: 'ராவணேந ப்ரணிஹிதம்' [ரா-யு 18-18] 'ராக்ஷஸோ ஜிஹ்மயா' [ரா-யு 18-19] என்னும் சுலோகங்களில், ஏற்கனவே [ரா-யு 17-24, 25ல்] சொன்ன அர்த்தத்தையே திரும்பிச் சொல்லுகிறுராகையாலும், ராமபிரானும், இவருக்கு அன்பினுல் ஏற்பட்ட அறிவுகேட்டைப் போக்குவதற்காக, ''ஸுது₃ஷ்ட:'' ''பிசாசாந்'' என்றுதொடங்கித் தன் தோள்வலியைச் சொல்லுகிறுராகையாலும், மேலே சொல்லும் கபோத கண்டுபாக்யானங்கள் முன்சொன்ன அர்த்தங்களை வலியுறுத்தவே வந்தவையாகையாலும், யுக்திகளில் எல்லாவற்றுக்கும் மேலான வார்த்தையே இப்போது சொல்லப்போவது. (சிறுவார்த்தை) சுக்கிரீவன் வார்த்தைக்கும் மேலான வார்த்தையாயிருந்தும், தம் வார்த்தையாகையால் ''சிறுவார்த்தை'' என்று சிறிதாகச் சொல்லுகிறுர் தற்புகழ்ச்சியை வெறுப்பவராகையாலே. (இவ்

(யதுத்ர ப்ரதிபாதி மே) விபீஷண விஷயீகாரத்தில். (ப்ரத்யக்ஷம்) ஸர்வப்ரத்யக்ஷஸித்தம். (லௌகிகம் வாபி) ப்ரத்யக்ஷமேயாகிலும் ஜ்ஞாதிவதம் தோஷமன்றோவென்னில் எல்லார்க்கும் ஏறுவதொன்று. எங்ஙனேயென்னில்: (வித்யதே ஸர்வராஜஸு) எல்லா ராஜாக்கள் பக்கலிலும் பரிமாறுவதொன்று. "ஸர்வராஜஸு" என்கையாலே, மஹாராஜர் பக்கலிலும் உள்ளதொன்று. நம்பக்கல் ப்ரேமாந்த்யத்தாலே மறந்தாரித்தனை

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 10-வது ச்லோகம்

अमित्रास्तत्कुलीनाश्च प्रातिदेश्याश्च कीर्तिताः ।
व्यसनेषु प्रहर्तारस्तस्मादयमिहागतः ॥

அமித்ராஸ் தத்குலீநாஶ்ச ப்ராதிதேஶ்யாஶ்ச கீர்த்திதா:।
வ்யஸநேஷு ப்ரஹர்த்தாரஸ் தஸ்மாதயமிஹாகத: ॥

பதவுரை:—தத்குலீநா: ச—(அரசனுடைய) அக்குலத்திலே பிறந்தவர்களும், **ப்ராதிதேஶ்யா: ச**—அடுத்த தேசத்தில் இருக்கும் அரசர்களும், **வ்யஸநேஷு**—(அரசனை)

விஷயத்தில் யாதொன்று எனக்குத் தோன்றுகிறதோ) இவ்விஷயத்தில் என்றது—விபீஷணனை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் என்றபடி. (ப்ரத்யக்ஷமானது) அனைவரும் நேரே அறிந்தது. (உலகத்தோடு ஒட்டியதும் கூட) அனைவர்க்கும் ப்ரத்யக்ஷமான்தாகிலும், ஜ்ஞாதியான ராவணனை ஹிம்ஸித்து நம்மிடம் வந்தது தோஷமன்றோ? என்னில்:. உலகில் அனைவருடைய வாழ்க்கைக்கும் பொருந்தியது. எப்படியெனில்: (எல்லா அரசர்களிலும் உள்ளது) ஆபத்தையடைந்த ஜ்ஞாதிகளால் துன்புறுத்தப்படும் போது, ஜ்ஞாதியின் எதிரியை அடைவதாகிற இவ்விபீஷணனின் நடத்தை, எல்லா ராஜாக்களிலும் காணப்படுவதொன்று. "எல்லா அரசர்களிடமும்" என்கையாலே, வானரமஹாராஜரான சுக்கிரீவனிடமுமுள்ளது; நம்மிடம் அன்பினுலேற்பட்ட கலக்கத்தாலே மறந்துவிட்டுப் பேசுகிருர் என்று கருத்து. சுக்கிரீவனும், ஜ்ஞாதியான வாலியாலே துன்புறுத்தப்பட்டு, ராமனைச் சரண்டைந்தவனேயன்றோ. "சத்ருசம்... ப்ராதரம் ய: பரித்யஜேத்" [ரா-யு 18-5] என்ற வார்த்தை இவருக்கும் பொருந்துமன்றோ.

ஆபத்துக்காலங்களில், **ப்ரஹர்த்தார:**-துன்புறுத்தும் **அமித்ரா:**-எதிரிகளாக, **கீர்த்திதா:**-(ராஜநீதி சாஸ்திரங்களில்) சொல் லப்படுகின்றனர்; **தஸ்மாத்**-ஆகையால், **அயம்**-இவ்விபீஷணன், **இஹ**—இங்கே, **ஆகத:**—வந்தான்.

அவதாரிகை:—அவ்வர்த்தம் இன்னதென்கிறார் ''அமித்ரா:'' இத்யாதியாலே.

வ்யா:—(வ்யஸநேஷு ப்ரஹர்த்தார:, தத்குலீநாஸ்ச, ப்ராதிதேஸ்யாஸ்ச அமித்ரா: கீர்த்திதா:) ராஜாக்களுக்கு வ்யஸநங்கள் வந்தால், ப்ரஹர்த்தாக்களாவார் இரண்டு கோடி; தத்குலீநரான அமித்ரரும், ப்ராதிதேஸ்யரான அமித்ரரும். தத்குலீநராகிறார் வீரகுலஜாதர்: ப்ராதிதேஸ்ய ராகிறார். ப்ரதிதேஸவர்த்திகள்; அநந்தரதேஸவர்த்திகள் என்றபடி. (வ்யஸநேஷு) அவர்களில் அந்யதமனை வ்யஸநங் கள் ப்ராப்தங்களாயுள்ளவிடத்திலே (ப்ரஹர்த்தார: கீர்த்திதா:) ப்ரஹரிப்பார்களென்று நீதிஶாஸ்த்ரவித்துக்க ளாலே சொல்லப்படா நின்றார்கள். ''அமித்ரா: கீர்த்திதா:''

அவதாரிகை:— 'ஸூக்ஷ்மதரம்' என்று சென்ற ச்லோகத்தில் சொன்ன அர்த்தத்தை விவரிக்கிறார் 'அமித்ரா:' என்று தொடங்கும் இந்த ச்லோகத்திலே.

வ்யா:—(துன்பம் நேரும்போது ஹிம்ஸிப்பவர்கள், அதே குலத்திற் பிறந்தவர்களும், அடுத்ததேசத்திலுள்ளவர்களுமான எதிரிகள் என்று சொல்லப்படுகின்றனர்) ஒரு தேசத்தில் அரசனுக்குத் துன்பம் வந்தால் அவனை ஹிம்ஸிப்பவர்கள் இரண்டு வகைப்படுவர். அவனுடைய குலத்தில் வந்த எதிரிகள் ஒருவகை; அடுத்த தேசத்திலுள்ள எதிரிகள் மற்றொரு வகை. வீரனுகிற அவனுடைய குலத்திற்பிறந்தவர் 'தத்குலீநா:' எனப் பட்டனர்; ப்ரதிதேசமாகிற அடுத்ததேசத்தில் வாழ்பவர்கள் 'ப்ராதி தேச்யா:' எனப்பட்டனர். (துன்பங்களில்) இவர்களில் ஒருவனுக்குத் துன்பம் உண்டானபோது. (ஹிம்ஸிப்பவரென்று சொல்லப்படுகின்றனர்) அவனை ஹிம்ஸிப்பார்கள் என்று நீதி சாஸ்திரமறிந்தவர்களாலே கூறப் படுகின்றனர். ''தன்குலத்துதித்தவர்களும், அடுத்ததேசத்திலிருப்பவர்களும், துன்பம் நேரும்போது ஹிம்ஸிக்கும் இரண்டுவகையான எதிரிகள் என்று

என்றுமாம். (தஸ்மாத₃யமிஹாக₃த:) ராவணன் தனக்கு நம்மாலே வ்யஸனங்கள் வந்தவாறே, குலீநனை இவன் நம்மை ப்ரஹரிக்குமென்று அவன் நலியக்கூடுமென்று அத்தாலே வந்தான். ஜ்ஞாதிகள் எல்லார்க்கும் ஒவ்வாதோ? இவனுக்கு விசேஷமென்ன? என்னவொண்ணாது. அவனுக்கு ஹிதம் சொல்லுகிறவிடத்திலே நம்முடைய உத்கர்ஷமும் அவனுடைய அபகர்ஷமும் தோற்றச் சொன்னான்; அத்தாலே இவன் பக்கலிலே ஶத்ருபு₃த்₃தி₄ பண்ணக்கடவன்; அத்தாலே வந்தான். அதவா, "அவனுக்கு வ்யஸநம் வந்தவளவிலே, அவனுக்கு இவன் ஜ்ஞாதியாகையாலே நம்மைக்கொண்டு அவனை நலியவந்தானாகவுமாம்" என்று ஒரு வ்யாக்₂யாதா சொன்னான். இவையிரண்டிலும், "யமேஷ ந பரித்யஜேத்" என்று சொன்ன இவரைக்குறித்து, இவருடைய ஶுத்தியே ஸாதி₄க்கிறுராகையாலும் மேல் "मानयन्ति स्वकान् हितान्"

கூறப்படுகின்றனர்' என்று அந்வயித்தும் பொருள் கூறலாம். (ஆகையால் இவன் இங்கு வந்தான்) "ராவணன் தனக்கு ராமனாலே துன்பங்கள் வந்தவுடன், 'குலத்திற்பிறந்த இவ்விபீஷணன் நம்மைத் துன்புறுத்தக்கூடும்' என்று நினைத்து நம்மைத் துன்புறுத்தக்கூடும்" என்று நினைத்து அதுவே காரணமாக இங்கு வந்திருக்கிறான் விபீஷணன். கும்பகர்ணன் முதலான மற்ற ஜ்ஞாதிகளையும் ராவணன் இப்படி சங்கிக்கக் கூடாதோ? இவனைமாத்திரம் சங்கிக்கும்படி இவனுக்குள்ளவிசேஷமென்ன? என்று ஐயமுற முடியாது. அவனுக்கு நன்மை சொல்லும்போது நம்முடைய பெருமையும் அவனுடைய தாழ்வும் வெளிப்படியாகச் சொன்னான் இவ்விபீஷணன். அதனால் ராவணன் இவனை எதிரியாக எண்ணியிருப்பான்; அதனாலே' இவன் நம்மைத் துன்புறுத்தக்கூடும்' என்று நினைத்து விபீஷணன் வந்திருக்கிறான். இப்படிப் பொருள் கொள்ளாமல், "ராவணனுக்கு நம்மாலே துன்பம் நேர்ந்தவளவில், 'அவனுக்கு இவன் (தத்குலீநனான) ஜ்ஞாதியாகையாலே, நம்மைக்கொண்டு அவனைத் துன்புறுத்துவதற்காக வந்திருக்கிறானென்றும் கொள்ளலாம்" என்று ஸ்ரீராமாயணத்திற்கு வ்யாக்யானம் செய்த ஒருவர் சொன்னார். இவ்விரண்டு பொருள்களுக்குள், "எவனைத் தான் இவன் கைவிடமாட்டானோ அவன் யார்" [ரா-யு 18-5] என்று விபீஷணனுக்குக் குற்றம்சொன்ன சுக்ரீவனுக்கு 'விபீஷணன் சுத்தன்' என்று நிரூபிக்கிறாராகையாலும், அடுத்தச்லோகத்தில், "தோஷமற்ற

(மாநயந்தி ஸ்வகாந் ஹிதாந்) என்று சொல்லுகையாலும், முற்பட்டதே பொருளாகக்கடவது.

ஆக, இஸ்லோகத்தால், "அவனுக்கு அஞ்சிவந்தானாகி லும் ஸங்க்3ராஹ்யன்; நம்மைக்கொண்டு அவனை நலியவந் தானாகிலும் ஸங்க்3ராஹ்யன்; உப4யபக்ஷத்தாலும், 'யமேஷ ந பரித்யஜேத்' என்னுமவனல்லன்; நமக்கு ஸஹகாரி" என்றதாயிற்று.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம், 11-வது ச்லோகம்

अपापास्तत्कुलीनाश्च मानयन्ति स्वकान् हितान् ।
एष प्रायो नरेन्द्राणां शङ्कनीयस्तु शोभनः ॥

அபாபாஸ் தத்குலீநாஸ்ச மாநயந்தி ஸ்வகாந் ஹிதாந் ।
ஏஷ ப்ராயோ நரேந்த்3ராணும் ஸங்கநீயஸ்து ஸோப4ந: ॥

பதவுரை:—அபாபா:— பாபமற்றவரான, **தத்குலீநா:** — அரசனுடைய குலத்தில் பிறந்தவர்கள், **ஸ்வகாந்**— தன்னைச் சேர்ந்த, **ஹிதாந்** — நன்மைவிரும்புமவர்களை, **மாநயந்தி**—கொண்டாடுவார்கள்; **நரேந்த்3ராணும்** — ராஜாக் களுக்கு, **ஏஷ: ஸோப4ந:**-இந்த நல்ல ஸ்வபாவம், **ப்ராய:**- பெரும்பாலும், **ஸங்கநீய: து**-குறைவாகவேயுள்ளது.

தத்குலீநர்கள் தமக்கு நன்மை விரும்புவாரைக் கொண்டாடுவார்கள்" [ரா-யு 18-11] என்று விபீஷணனை ராவணனுக்கு நன்மை விரும்பிய வனுகக் குறிப்பிடுகையாலும் விபீஷணனிடம் குற்றத்தைக் காட்டும் அந்த வ்யாக்யாதா சொன்ன இரண்டாவது பொருள் பொருந்திய பொருளன்று. முதற்பொருளே பொருந்திய பொருள் ஆகும். ஆயினும், அப்4யுபக3ம்ய வாதமாக இரண்டாவது பொருளையும் கொள்ளலாம்.

ஆக, இந்த சுலோகத்தால், என் கருத்தின்படி இவன் ராவணனுக்கு அஞ்சிவந்தவனுயிருந்தாலும் சரி (முதற்பொருள்), அல்லது உம்முடைய கருத்தின்படி நம்மைக்கொண்டு அவனை வெல்லவந்தவனுயிருந்தாலும் சரி (இரண்டாவது பொருள்), இரண்டு வகையிலும் "யாரைத்தான் இவன் விடமாட்டான்?" [ரா-யு 18-5] என்று கழிக்கத்தக்கவனல்லன்; நமக்குத் துணையாகக் கூடியவனே என்றதாயிற்று.

அவதாரிகை—ஸ்வகுலஜராய். அபி₄மதராயிருப்பாரைக் கொண்டாடுமதொழிய நலியக்கூடுமோ? என்னச் சொல்லுகிறார்.

வ்யா:— (அபாபா: தத்குலீநாஸ்ச ஸ்வகாந் ஹிதாந் மாநயந்தி) ஸ்வகுலஜரானாலும் அபாபராகவேணும் தனக்கு இஷ்டவிநியோகர்₃ஹனும்படி ஹிதரானார் புத்₃தி₄களைக் கொண்டாடும்போது என்கை. சஸப்த:— அவத₄ாரணே அபாபரேயாகவேணுங்காண் என்கை. (நரேந்த்₃ராணும் ஏஷ ஸோப₄ந: ப்ராய: ஸங்கநீய:) லோகத்தில் பாபிஷ்ட₂ர் பெருத்திருக்கையாலே, ராஜாக்களுக்கு ப₃ந்து₄ ஸம்ப₄ாவநா ரூபமான இந்த ஸோப₄நஸ்வப₄ாவம் ப்ராயஸங்க நீயம்: இந்த ஸ்வப₄ாவமுடையார்க்குச் சுருக்கம் என்கை.

அவதாரிகை:— தன் குலத்தில் பிறந்தவனாய், தனக்கு இஷ்டனாயிருக்கும் விபீஷணனை ராவணன் கொண்டாடக்கூடுமேயொழியத் துன்புறுத்தக்கூடுமோ? இரண்டாவது பக்ஷத்தில் விபீஷணனும், ராவணனைக் கொண்டாடக் கூடுமேயொழியத் துன்புறுத்தக்கூடுமோ? என்று சுக்ரீவனுக்குக் கருத்தாகச் சொல்லுகிறார்.

வ்யா:— (பாபமற்ற தத்குலீநர்களே தமக்கு நன்மை விரும்பிகளைக் கொண்டாடுவார்கள்) தமக்கு விற்கவும ஆகலாம்படி தங்குலீனராகையாலே சேஷபூதராய் தமக்கு நன்மை விரும்புவாருடைய அறிவைக் கொண்டாடுவதற்கு அவரோடு ஒரே குலத்தில் பிறந்துவிட்டால் மாத்திரம் போதாது. தோஷமற்றவராகவுமிருக்கவேண்டும். ராவணன் அப்படி தோஷமற்றவனாயில்லையே. 'குலீநாச்ச,' என்றவிடத்தில் சகாரம் ஏவகாரப்பொருளை உடையது. இவ்வேகாரம் 'பாபமற்ற' என்னும் அம்சத்திலே அந்வயித்து 'பாபமற்றவர்களே கொண்டாடுவார்கள்' என்று பொருளாகிறது. (அரசர்களுக்கு இந்த நல்லகுணம் பெரும்பாலும் ஐயமுறத்தக்கதாகவேயிருக்கிறது) உலகில் ராவணனைப்போன்ற பாவிகளே பெருத்திருக்கையாலே, அரசர்களுக்குத் தமக்கு நன்மைவிரும்பும் உறவினரைக் கொண்டாடுவதாகிற இந்த நல்லகுணம் பெரும்பாலும் ஸந்தேஹிக்கத்தக்கதாகவேயிருக்கிறது. அரசுடையவர்களுக்கு இத்தன்மை சுருங்கியே காணப்படும் என்று கருத்து. 'ஸம்ப₃ந்த₄ஸாமாந்யேஷ்டி'யாக வைத்துக்கொண்டு

ராஜாக்களில் வைத்துக்கொண்டு ப3ந்து4ஸம்ப4ாவநார்ருபமான இந்த ஶோப4நஸ்வப4ாவத்தை உடையவன் ஶங்கனீய னென்று புருஷபரமாகவுமாம். நிர்த்த4ாரணே ஷஷ்டீ2; துஶப்த3: அவத4ாரணே; ஶங்கனீயனேயென்கை. "**हितं वाक्यमुक्तवन्तं**" (ஹிதம் வாக்யமுக்தவந்தம்) என்றும், "**मया हितैषिणा**" (மயா ஹிதைஷிணு) என்றும் அநுகூல னுகையாலே இஷ்டவிநியோகா3ர்ஹனுயிருந்தானேயாகிலும், விபீ4ஷணன் பரஹிம்ஸாருசியாய்ப் பாபிஷ்ட2னுய்ப்போந்த ராவணனைக் கொண்டாட ஸம்ப4ாவனையில்லை: ஹிம்ஸையே ஸம்ப4ாவிதம் என்கை.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 12-வது ச்லோகம்

यस्तु दोषस्त्वया प्रोक्तो ह्यादानेऽरिबलस्य च।
तत्र ते कीर्तयिष्यामि यथाशास्त्रमिदं शृणु॥

யஸ்து தோ3ஷஸ் த்வயா ப்ரோக்தோ
ஹ்யாதா3நேऽரிப3லஸ்ய ச।
தத்ர தே கீர்த்தயிஷ்யாமி
யதா2ஶாஸ்த்ரமித3ம் ஶ்ருணு॥

இப்படிப் பொருள் உரைக்கப்பட்டது. அப்படியல்லாமல், 'நிர்த்த4ாரணே ஷஷ்டி'யாகக்கொண்டு, 'அரசர்களுக்குள் இப்படி நல்லகுணமுடையவன் பெரும்பாலும் துர்லபனே' என்று சோபநபதத்தை, நல்லகுணமுடைய புருஷனைச் சொல்லுவதாகக் கொண்டும் பொருள் கொள்ளலாம். (சங்கநீயஸ்து) என்றவிடத்தில் துசப்தம் ஏவகாரப் பொருளையுடையது. 'நல்லகுணம் ஐயமுறத்தக்கதாகவே இருக்கிறது' அல்லது, 'நல்லகுண முடையவன் ஐயமுறத்தக்கவனுகவேயிருக்கிறுன்' என்றுபொருள். "நல்ல வாக்கியத்தைச் சொன்ன விபீஷணனை" [ரா-யு 16-1] என்றும், "நன்மையை விரும்பும் என்னுலே" [ரா-யு 16-26] என்றும் விபீஷணன் அநுகூலனுகையாலே ராவணனுக்கு விற்கவுமாம்படி பவ்யப்பட்டிருந் தாலும், பரஹிம்ஸையில் ருசியுடையவனுய், மஹாபாபியான ராவணன் அவனைக் கொண்டாடியிருக்கமாட்டான்; துன்புறுத்தியேயிருப்பான்; ஆகை யால் விபீஷணனும் ராவணனைக் கொண்டாட இடமில்லை. துன்புறுத்தவே இடமுள்ளது. ஆகையால் இரண்டு பக்ஷத்திலும் ஒருவன் மற்றவனைத் துன்புறுத்தவே இடமுள்ளது.

பதவுரை:-அரிபலஸ்ய-எதிரியின் படையைச் சேர்ந்தவனை. ஆதானே-ஏற்றுக்கொள்வதில், ய:-யாதொரு, தோஷ:-தோஷமானது, த்வயா—உம்மாலே, ப்ரோக்த:—சொல்லப்பட்டதோ, தத்ர-அது விஷயத்தில், தே—உமக்கு, யதா ஶாஸ்த்ரம்-சாஸ்திரத்தை ஒட்டி, கீர்த்தயிஷ்யாமி-சொல்லப் போகிறேன். இதம்-இச்சொல்லை, ஶ்ருணு-கேளும்.

அவதாரிகை:-"वर्जयित्वा द्विषद्बलं" (வர்ஜயித்வா த்விஷத்பலம்) என்று, ஶத்ருபலபரிக்ரஹத்தில் யாதொருதோஷம் சொல்லப்பட்டது, அவ்வளவிலே ஒரு விஶேஷமுண்டு; அத்தை நான் சொல்லக்கேளும் என்கிறார்.

வ்யா:-(அரிபலஸ்ய ச ஆதானே ஹி யோ தோஷ: த்வயா ப்ரோக்த: தத்ர து) ஶத்ருபலம் பரிக்ராஹ்யமல்லவென்று தோஷங்களுக்கெல்லாம் நீர் தலையாகச் சொன்ன அதிலே ஸங்க்ராஹ்யனுயிருக்கைக்கு ஒரு ஹேதுவுண்டு; அந்த விஶேஷத்தைக் கேளும் என்கிறார். (யதா ஶாஸ்த்ரம்) ஶத்ருபலம் அபரிக்ராஹ்யம் என்று நீர் நீதி சொல்லுகிறீராக உம்முடைய ப்ரேமத்தை வெளியிட்டீரத்தனை. அப்படியன்

அவதாரிகை:—"எதிரியின் படையைத்தவிர மற்றவை ஏற்றுக் கொள்ளத்தக்கவை" [ரா-யு 17-22] என்று எதிரியின் படையை ஏற்றுக் கொள்வதில் யாதொரு தோஷம் சொல்லப்பட்டதோ, அந்த தோஷத்தைப் பற்றி நாம் சொல்லநினைப்பதொரு விசேஷமுண்டு. அதை நான் சொல்லக்கேட்பீர் என்கிறார்.

வ்யா:—(எதிரியின் படையைச் சேர்த்துக்கொள்வதில் யாதொரு தோஷம் உம்மால் சொல்லப்பட்டதோ, அது விஷயத்தில்) 'எதிரியின் படை ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று' என்று என் பக்ஷத்துக்குள்ள தோஷங்களில் மேலான தோஷமாக நீர் சொன்ன விஷயத்தில், இவனை ஏற்றுக்கொள்ளலாம்' என்பதற்கு ஒரு விசேஷ காரணம் உண்டு. அந்த விசேஷத்தைக் கேட்பீர் என்கிறார். பிற்பகுதியாலே:— (சாஸ்திரத்தையொட்டி) 'எதிரியின் படை கைக்கொள்ளத்தக்கதன்று' என்று சொன்ன உம்மால் என்மேல் உமக்குள்ள அன்பு வெளியிடப்பட்டதேயொழிய ராஜநீதி வெளியிடப்படவில்லை. அப்படியல்லாமல், நீதி சாஸ்திரத்தை

றிக்கே, ஶாஸ்த்ரீயாநதிக்ரமேண சொல்லுகிறோம் என்கை. (தே கீர்த்தயிஷ்யாமி) தோ₃ஷம் சொன்ன உம்முடைய ஹ்ருத₃யம் இசையும் படிக்குச் சொல்லுகிறோம் என்கை. (இத₃ம் ஶ்ருணு) நான் சொன்னதுக்கு விருத்₃த₄மென்றுதல், ராஜாக்கலென்றுதல், நம் பக்கல் ஸங்க₃த்தாலென்றுதல் உபேக்ஷியாதே இத்தைக் கேட்டுத்தாரும் என்கை.

யுத்தகாண்டம் 18–வது ஸர்க்கம் 13–வது ச்லோகம்

न वयं तत्कुलीनाश्च राज्यकाङ्क्षी च राक्षसः।
पण्डिता हि भविष्यन्ति तस्माद्ग्राह्यो विभीषणः॥

ந வயம் தத்குலீநாஶ்ச ராஜ்யகாங்க்ஷீ ச ராக்ஷஸ:।
பண்டி₃தா ஹி ப₄விஷ்யந்தி தஸ்மாத்₃ க்₃ராஹ்யோ விபீ₄ஷண:॥

பதவுரை:—ராக்ஷஸ:—அரக்கனுன விபீஷணன், ராஜ்ய காங்க்ஷீ ச—ராஜ்யத்தில் இச்சையுடையனும் இருக்கிறுன்; வயம்—நாம், ந தத்குலீநா: ச—அவனுடைய குலத்தில் பிறந்தவர்களுமன்று; பண்டி₃தா:—(அரக்கர் குலத்திலும்) அறிவாளிகள், ப₄விஷ்யந்தி ஹி—இருப்பார்களன்றே. தஸ் மாத்—ஆகையால், விபீ₄ஷண:–விபீஷணன், க்₃ராஹ்ய: ஹி–கைக்கொள்ளத்தக்கவனன்றே.

அவதாரிகை:–கீழ் துஶப்த₃த்தாலே சொன்ன விஶேஷம் இன்னதென்கிறுர்.

யொட்டி நாம் சொல்லுகிறோம். (உமக்குச் சொல்லுகிறேன்) என் பக்ஷத்தில் தோஷம் சொன்ன உம் நெஞ்சு இசையும்படியாகச் சொல்லுகிறோம் என்கை. (இதைக் கேட்பீர்) நீர் சொன்னதற்கு விருத்தமென்னும் காரணத்தாலேயோ, நீர் அரசராகையாலே நம்மை யார் மறுத்துப்பேசுவது என்று நினைத்தோ, எம்மிடமுள்ள அன்பினுலேயோ, அலட்சியமாயிராமல் இதைக் கேட்டருளீர் என்கிறுர்.

அவதாரிகை:—''யஸ்து தோ₃ஷ:'' என்று சென்ற சுலோகத்தில் துசப்தத்தாலே சொன்ன விசேஷத்தை விவரிக்கிறுர்.

வ்யா:— (ராக்ஷஸ: ராஜ்யகாங்க்ஷீ ச; ந வயம் தத்குலீநாஸ்ச, பண்டிதா: ஹி ப₄விஷ்யந்தி, தஸ்மாத் க்₃ராஹ்யோ விபீ₄ஷண:) நாட்டிலே ஒரு ராஜாவுக்கு வ்யஸநம் வந்தவளவிலே. தத்குலீநராயிருப்பார்க்கும் அந்த ராஜ்ய ஸ்ப்ருஹையுண்டாகையாலே அவர்கள் தனக்கு ஸஹகாரிகளல்லாமையாலும், தத்குலீநனை அவனுடைய ராஜ்யத்தை ஆசைப்படுகையாலும், தத்குலீநரல்லாமையாலே அந்த ராஜ்யத்தில் ஸ்ப்ருஹையுமின்றிக்கே ப்ரப₃லருமாயிருப்பாரைப்பற்றி ராஜ்யத்தைப் பெறுகைக்கு யத்நம் பண்ணுகிற்கும். ஆகையாலே, இவனும் ராவணனுக்கு நம்மாலே ஓராபத்து வந்தவளவிலே ராக்ஷஸகுலீநத்வேந ராக்ஷஸ ராஜ்யகாங்க்ஷியாகையாலும் கார்யாந்தரத்தைப்பற்றி ராவணனை அழியச் செய்யக்கடவதாகப் பெரிய ஸம்ப்₄ரமத்தோடே கிட்டினதாக எடுத்துவிட்டிருக்கிற நமக்கு அந்தக் குலீந ராஜ்யஸ்ப்ருஹையில்லாமையாலும், நம்மைப்பற்றித் தன்னுடைய ராஜ்யம் பெற்றானாகில் தட்டில்லை. "ஒரு

வ்யா:— (அரக்கன் ராஜ்யத்தை விரும்புமவனுமாகவுமிருக்கிறான்; நாம் அவனுடைய குலத்தவருமல்ல; பண்டிதர்கள் (எக்குலத்திலும்) இருக்கக்கூடுமன்றோ; ஆகையால் விபீஷணன் கைக்கொள்ளத்தக்கவனே) ஒரு தேசத்தில் அரசனுக்குத் துன்பம் வந்தவுடன், அவனுடைய குலத்திற் பிறந்தவர்களுக்கும் அந்த ராஜ்யத்தில் ஆசை உண்டாகையாலே அவர்கள் அவ்வரசனுக்குத் துணையாகமாட்டார்களாகையாலும், தம்குலத்துதித்த அவனுடைய ராஜ்யத்தை ஆசைப்படுகையாலும், அவன் குலத்தில் உதிக்காமையாலே அந்த ராஜ்யத்தில் ஆசையுமில்லாமலிருப்பவராய், மஹாபலமுடையவர்களான சிலரைத் துணையாகப்பற்றித்தான் விரும்பிய ராஜ்யத்தைப்பெற முயற்சிகொள்ளுவார். ஆகையாலே, இவனும் ராவணனுக்கு நம்மால் ஓர் ஆபத்து வந்திருக்கும் இப்போது, ராவணனுடைய அரக்ககுலத்தில் உதித்தவனாகையாலே அவ்வரக்கனின் அரசை விரும்பக் கூடியவனாகையாலும், சீதையை மீட்பதாகிற வேறொரு காரியத்திற்காக ராவணனைக் கொல்லவேணுமென்று பெரிய பரபரப்போடே அருகிலே படையெடுத்திருக்கும் நமக்கு, அக்குலத்துதித்தவருக்குள்ள அந்த ராஜ்யத்தில் விருப்பம் இல்லையாகையாலும், நம்மைப்பற்றி ராவணராஜ்யத்தைப் பெறத்தடையில்லையன்றோ. ஒரு ராக்ஷஸனுக்கு இவ்வளவு அறிவு

ராக்ஷஸனுக்கு இந்த புத்3தி4யெல்லாம் உண்டாகக்கூடுமோ? உம்முடையபேரளவாலே அருளிச்செய்கிறீரித்தனையன்றோ?" என்ன,– (பண்டி3தா ஹி ப4விஷ்யந்தி) ராக்ஷஸனென் என்கிற ஜாதிமாத்ரம் கொண்டு எல்லாரையும் கழிக்கவொண்ணாது. இவ்வளவு எண்ணவல்லாரும் உண்டுகாணும் என்கிறார். (தஸ்மாத்க்3ராஹ்யோ விபீ4ஷண:) நம்மைக்கொண்டு தான் ராஜ்யம்பெற வந்தவனை அழியச்செய்கை அப்ராப்தம். மேல் ஹிதகாரியாகக் கடவனாகையாலும் நமக்கு க்3ராஹ்யன்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம், 14-15 ச்லோகங்கள்

अव्यग्राश्च प्रदुष्टास्ते न भविष्यन्ति सङ्गताः।
प्रणादश्च महानेषस्ततोऽस्य भयमागतम्॥
इति भेदं गमिष्यन्ति तस्माद्ग्राह्यो विभीषणः॥

அவ்யக்ராம்ச ப்ரது3ஷ்டாஸ்தே நப4விஷ்யந்தி ஸங்கதா:।
ப்ராணத3ம்ச மஹாநேஷஸ் ததோऽஸ்ய ப4யமாக3தம்॥
இதி பே4த3ம் கமிஷ்யந்தி தஸ்மாத்3க்3ராஹ்யோ விபீஷண:॥

பதவுரை:—ப்ரது3ஷ்டா: தே—மிகவும் துஷ்டராயிருக்குமவர்கள், அவ்யக்3ரா:—பதறாதவர்களாய், ஸங்க3நா:ச—கூடியிருப்பவர்களுமாய், ந ப4விஷ்யந்தி—இரார்கள்; ஏஷ: ப்ரணத3:–(விபீஷணனுடைய)இந்த த்வனியானது, மஹான்–பெரிதாயிருக்கிறது; தத:—ராவணனிடமிருந்து, அஸ்ய—

உண்டாகக் கூடுமோ? உம்முடைய பேரறிவைக்கொண்டு அருளிச்செய்கிறீரன்றோ என்று கருத்தாக,–(பண்டிதர்கள் இருப்பார்களன்றோ) அரக்கனென்ற ஜாதியை மாத்திரங்கொண்டு எல்லோரையும் கழித்துவிட முடியாது. அந்த ஜாதியிலும் அறிவுபடைத்து இவ்வளவு எண்ணக்கூடியவர்களும் உண்டு காணும் என்கிறார். (ஆகையால் விபீஷணன் கைக்கொள்ளத்தக்கவனே) நம்மைத் துணைகொண்டு தான் ராஜ்யம்பெற வேணுமென்று வந்தவனை அழியச்செய்வது தக்கதன்று. நன்மை செய்த நமக்கு இனிமேல் இவன் பிரதியுதவி செய்வானாகையாலும் இவன் நமக்குக் கைக்கொள்ளத்தக்கவனே.

இவ்விபீஷணனுக்கு, ப₄யம் ஆகு₃தம்—பயம் உண்டாயிருக்கிறது. இதி—ஆகையால், பே₄த₃ம்—வேறுபாட்டை, க₃மிஷ்யந்த்—அடைவர்கள்; தஸ்மாத்—ஆகையால், விபீ₄ஷண:—விபீஷணன், க்₃ராஹ்ய:—கைக்கொள்ளத் தக்கவனே..

அவதாரிகை:— திருவடி இவன் வரவுக்கு ஹேதுவாகப் பிற்படச்சொன்ன ஐச்வர்யார்த்தித்வம் தமக்குப் பூர்வபக்ஷமாகையாலே அத்தை முற்பட உபபாதித்து, அவனுடைய ஶுத்₃தி₄ப்ரகர்ஷத்தையே ஸித்தாந்திக்கிறார் "அவ்யக்₃ரா:" என்று தொடங்கி மூன்று அர்த்த₄த்தாலே.

வ்யா:—(ப்ரது₃ஷ்டா: தே) மிகவும் துஷ்டராகிறார்—நினைவும் சொலவும் செயலும் பே₄தி₃த்திருக்குமவர்கள். (அவ்யக்₃ராஶ்ச ந ப₄விஷ்யந்தி) பதறுதேயுமிரார்கள். இங்குள்ளார், "वध्यतां" (வத்₄யதாம்) என்பாரும், "ஆராயவேணும்" என்பாருமாகாநின்றால் பதறுதிருப்பாரில்லை. இவர்கள் பக்கல் பதற்றம் கண்டிலோம். (ஸங்க₃தாஶ்ச ந ப₄விஷ்யந்தி) "सुग्रीवं तांश्च संप्रेक्ष्य" (ஸுக்₃ரீவம் தாம்ஶ்ச

அவதாரிகை:-"ராஜ்யம் ப்ரார்த்த₂யமாநஸ்து ஆக₃த:" [ரா-யு 17-65] [ராஜ்யத்தை விரும்பிவந்தான்] என்று அனுமன், விபீஷணன் வரவுக்குக் காரணமாகக் கடைசியில் ஸித்தாந்தமாகச் சொன்ன ராஜ்யத்தில் ஆசை-தமக்குப் பூர்வபக்ஷமாகையாலே, அதைச் சென்ற ச்லோகத்தில் முதலில் விவரித்து, அவனுடைய சுத்தியின் ஏற்றத்தை ஸித்தாந்தமாகக் காட்டுகிறார் "அவ்யக்₃ரா:" என்று தொடங்கும் மூன்று ச்லோகப்பாதிகளாலே.

வ்யா:—(மிகவும் துஷ்டரான அவர்கள்) மிகவும் துஷ்டர்களாவார்,-"மநஸ்யந்யத் வசஸ்யந்யத் கர்மண்யந்யத் து₃ராத்மநாம்" [துஷ்டர்களுக்கு மனத்தில் ஒன்றும், வாக்கில் வேறும், காரியத்தில் வேறுமாயிருக்கும்] என்கிறபடியே நினைவும், சொல்லும், செயலும் வெவ்வேறுபட்டிருப்பர்கள். (பதறுதவர்களாயிரார்கள்) பதறுமலிருக்கமாட்டார்கள். இங்கு உள்ள நாம், "இவன் கொல்லப்படட்டும்" [ரா-யு 17-27] என்றும் "ஆராய்ந்து கைக்கொள்ளவேணும்" [ரா-யு 17-42] என்றும் ஆளுக்கு ஒருபடியாகச் சொன்னதைக் கேட்ட எவரும் துஷ்டராயிருந்தால் 'என்ன ஆகுமோ?' என்று பதறுமலிருக்கமாட்டார்கள். இவர்கள் பதறவில்லையாகையால் துஷ்டரல்லர். (சேர்ந்தவர்களாயுமிரார்கள்) "சுக்கிரீவனையும் வானரர்களையும் பார்த்து" [ரா-யு 17-9] என்றும், "என்னை ராகவருக்கு அறிவி

ஸம்ப்ரேக்ஷ்ய) என்றும், “**निवेदयत मां**” (நிவேதயத **மாம்)** என்றும் சொல்லுகிறவிடத்தில் எல்லாரும் ஒருமிடருயிருந்தார்கள். இவர்கள் தன்னிலே சேர்ந்தார் கள். (ப்ராணுதம்ச) இவனுடைய த்வநியும் நம்மோடே ஸம்பந்தம் தோன்றும்படியாயிருந்தது. “**प्राणादस्तु शब्दः स्यादनुरागजः**” (**ப்ராணுதஸ்து ஶப்த: ஸ்யாதநுராகஜ:)** இத்யமர: (மஹாநேஷ:) த்வநி கேட்டார்க்கும் இவன் அபேக்ஷிதபூரணம் பண்ணியல்லது குடியிருக்கவொண்ணுத படி ஆர்த்தி தோற்றியன்றே இருக்கிறது. (ஏஷ:) நான் கேட்டு உபதேஶிக்கிறேனே? நாமிருவரும் கூடக்கேட்ட தன்றே. (ததோ஽ஸ்ய பயமாகதம்) “**व्यसनेषु प्रहर्तारः**” **(வ்யஸநேஷு ப்ரஹர்த்தார:)** என்கிறபடியே அவன் நம்மைக் கொல்லுமென்று ராவணனாலே பயப்பட்டு வந்தான். (இதி- பேதம் கமிஷ்யந்தி) இதிர்ஹேதௌ. சிலராலே சிலர்க்கு பயம் பிறந்தால் அவர்களை அவர்கள் விட்டுப்போவார்கள். (தஸ்மாத்க்ராஹ்யோ விபீஷண:)

யுங்கள்" [ரா-யு 17-15] என்றும் துஷ்டர்கள் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லும்போது எல்லாரும் மாறுபடாமல் ஒரே கருத்துடையவராயிருந்தனர், துஷ்டர்களாயிருந்தால் கருத்துவேறுபாடு உண்டாகியேயிருக்கும் என்றுகருத்து. (இவனுடைய குரலும் பேரொலியாயிருந்தது) இவன் குரலும் நம்மிடம் அன்புதோற்ற இருந்தது. "அன்பினுல் உண்டாகும் சப்தம் 'ப்ரணுதம்' ஆகும்" [1-6-11] என்று அமரகோசம். (இவ்வொலி பெரிதாயிருக்கிறது) இவனுடைய த்வனியைக் கேட்டவர்களுக்கு இவன் விரும்பியதை நிறைவேற்றுமல் இருக்கவொண்ணுதபடி குரலில் பெருவருத்தம் தோற்றியிருந்ததன்றே. (இது) நான் கேட்டு உமக்குச் சொல்லுவதோ இது? நாமிருவரும் கேட்டதன்றே. (ஆகையால் இவனுக்கு பயம் ஏற்பட்டுள்ளது) "துன்பம் நேரும்போது அடிப்பார்கள்" [ரா-யு 18-10] என்கிறபடியே, 'ராவணன் நம்மைக் கொல்லுவான்' என்று ராவணனாலே பயப்பட்டே வந்திருக்கிறன். (இக்காரணத்தாலே வேறுபாட்டை அடைவார்கள்) 'இதி' என்னும் பதம் முன் சென்றது காரணம் என்று காட்டுகிறது. ஒருவனாலே மற்றவனுக்கு பயமுண்டாயிருந்தால் அவ்வொருவன் மற்றவனைவிட்டுப் போவான். (ஆகையால் விபீஷணன் ஏற்கக்கொள்ளத்தக்கவன்) இப்படி விபீஷணன் பல ஹேதுக்களாலும் சுத்தனேயாகையால் கைக்கொள்ளத்தக்கவனேயாவான்.

யுத்தகாண்டம் 18–வது ஸர்க்கம் 16–வது ச்லோகம்

न सर्वे भ्रातरस्तात भवन्ति भरतोपमाः।
मद्विधा वा पितुः पुत्राः सुहृदो वा भवद्विधाः॥

ந ஸர்வே ப்$_4$ராதரஸ் தாத ப$_4$வந்தி ப$_4$ரதோபமா:।
மத்வித$_4$ா வா பிது: புத்ரா: ஸுஹ்ருதே$_3$ா வா ப$_4$வத்$_3$வித$_4$ா:॥

பதவுரை:—தாத—*அப்பா*, ஸர்வே—*எல்லா*, ப்ராதர:—*ஸகோதரர்களும்*, பரதோபமா:–*பரதனை ஒத்தவர்களாகவும்*, பிது:–*தந்தைக்கு*, புத்ரா:—*பிள்ளைகள்*, மத்$_3$வித$_4$ா:—*என்னை ஒத்தவர்களாகவும்*, ஸுஹ்ருத$_3$:–*தோழர்கள்*, ப$_4$வத்$_3$வித$_4$ா:–*உம்மை ஒத்தவர்களாகவும்*, ந ப$_4$வந்தி–ஆகார்கள்.

அவதாரிகை:—*ப$_4$ரதாதி$_3$களோடு தேவர் பரிமாறிப் போந்தவை தேவர் அருளிச்செய்யக் கேட்டிருந்தோம். ஜ்யேஷ்ட$_2$ப்$_4$ராதா நலியப்புக, இவன் அஞ்சிப்போனுனுகை யாலே, இவன் நமக்கு க்$_3$ராஹ்யனென்று தேவர் அருளிச் செய்கிறது யுக்தமோ? என்னச் சொல்லுகிறுர்.*

வ்யா:–(*தாத ஸர்வே ப்$_4$ராதர: ப$_4$ரதோபமா ந ப$_4$வந்தி*) *பிள்ளை ப$_4$ரதனுடைய படி ப்$_4$ராத்ருத்வப்ரயுக்தமல்ல; ப$_4$ர*

அவதாரிகை:—பரதன் முதலான தம்பியரோடு தேவரீர் கலந்து பரி மாறிப்போந்தவைகளை தேவரீர் அருளிச்செய்யக் கேட்டிருக்கிறோம். தாமுகத் தேடிவந்த அரசையும் தமயனுக்கே அளிக்கவேண்டும் என்றும், தமையன் என்ன செய்தாலும் தம்பியானவன் அதற்கு இசைந்திருப்பது தக்கது என்றும் பரதனுடைய நடத்தையிலிருந்து தெரிகிறது. இவனோ தமையன் துன்புறுத்திஞனென்று பயந்து அவனைக் கைவிட்டு வந்துவிட் டான். நம்மைக்கொண்டு அவனுடைய அரசை அபஹரிக்க வந்திருக்கிறுன். அப்படிப்பட்ட இவனை நாம் கைக்கொள்ளவேணுமென்று தேவரீர் அருளிச்செய்வது தக்கதோ? என்று சுக்கிரீவனுக்குக்கருத்தாகச் சொல்லுகிறுர்.

வ்யா:–(பிள்ளாய்! எல்லா ஸஹோதரரும் பரதனை ஒத்தவர்களாகார் கள்) பிள்ளை பரதனுடைய தன்மை ஸஹோதரனுயிருக்கையால் ஏற் பட்டதல்ல; பரதனுயிருக்கையால் ஏற்பட்டது. அதாவது-பரதனுக்கிலே

தத்வப்ரயுக்தம் என்கை. “படியில் குணத்துப் பரதநம்பி” என்னக்கடவதிறே. அதாகிறது,—நடுவிலாய்ச்சி ராஜ்ய ஶுல்கையாகையாலும், தேவாஸுரஸங்க்ராமத்தில் வர ப்ரதாநத்தாலும், ஐயர் தமக்கு ராஜ்யம் கொடுக்க, நாமும் அவர் ஸந்நிதியிலே கொடையை அநாதரித்துக் காட்டிலே போனபின்பு, தாய்வழியே ஒருங்க ப்ராப்தமாயிருக்க, அது செய்யாதே காட்டிலே தொடர்ந்துவந்து, “உம்முடைய ராஜ்யத்தை நீரே கைக்கொள்ளும்” என்று நிர்ப்பந்திப்பானொரு ப்ராதா உண்டோ? அதுக்கும்மேலே நமக்கு ப்ரீத்யர்த்தமாகப் பொருந்தாத ராஜ்யத்தை ஏறிட்டுக்கொண்டு நான் காட்டிற்பட்ட க்லேஶத்தளவன்றிக்கே படைவீட்டிலேயிருந்து படுவானொரு ப்ராதா உண்டோ? இதுவேயன்றோ லோகவ்யவஹாரத்துக்கு த்ருஷ்டாந்தம். அன்றிக்கே, உல்லோகமாயிருப்பது இன்னம் சில வ்யக்திகள் உண்டு என்று ப்ரஸ்துதஸ்தைர்யார்த்தமாக ப்ரதிபாதிக்கிறார். (மத்விதா

அவனே என்கை. பரதனை அளவுகோலாகக்கொண்டு எல்லா ஸஹோதரர்களையும் அளவிடக்கூடாது என்று கருத்து. “படியில் குணத்துப் பரத நம்பி” [பெரியாழ் 3-9-6] [படிஇல்-ஒப்பில்லாத] என்று சொல்லப்பட்டதன்றோ. ஒப்பில்லாமையாவது:-“மத்யமா அம்பா” [ரா-ஆ.16-37] [நடுத்தாய்] என்கிறபடியே நடுவிலாய்ச்சியான கைகேயியை தந்தையாரான தசரதசக்ரவர்த்தி மணம்புரியும்போதே, ‘இவள் பெற்றபிள்ளை ராஜ்யமாளட்டும்’ என்று வாக்குக் கொடுத்திருந்தாராகையாலும், சம்பராஸுர யுத்தத்தில் இரண்டு வரம் கொடுப்பதாக வாக்குக் கொடுத்திருந்தபடியாலும் எந்தையார் பரதனுக்கு அரசைக் கொடுக்க, நாமும் அவன் எனக்குக் கொடுத்திருந்ததை வற்புறுத்தாமல் காட்டுக்கு வந்தபின்பு, தாய் வழியில் ஒதுங்கி அரசாளவேண்டியிருக்க, அது செய்யாமல் காட்டுக்கு சடை மரவுரிதரித்துத் தொடர்ந்துவந்து ‘உம்முடைய அரசை நீரே ஏற்றுக்கொள்ளும்’ என்று பரதனைப்போலே நிர்ப்பந்தம் செய்பவனை ஒரு தம்பி உலகிலே உண்டோ? அதுக்கும்மேலே நம்முடைய உகப்புக்காகத் தான் விரும்பாத அரசைச் சுமந்துகொண்டு, நான் காட்டில் பட்ட துன்பத்துக்குமேலே நாட்டிலே இருந்து பட்ட இவனைப்போன்ற ஸஹோதரன் ஒருவன் உலகிலே உண்டோ? பரதனின் தன்மையைக் கொண்டா உலகவழக்கிற்கு உவமைதேடுவது? இது மாத்திரமல்ல; உலக வழக்கைமீறிய மற்றும் சிலருமுண்டு என்று, இதை நிலைநிறுத்துவதற்காகக் காட்டுகிறார் மேலே,-(தந்தைக்குப் பிள்ளையாயிருப்பார் என்னைப்

வா பிது: புத்ரா:) பித்ருமான்களில் நம்மோடொப்பாரில்லை. அறுபதினுயிரமாண்டு மலடுநின்று பின்பு. "महता तपसा" (மஹதா தபஸா) என்று கனத்த தபஸ்ஸைப்பண்ணி, நம்மைப்பெற்று நம்மைக்கொண்டு ப்ராணத₄ாரணம் பண்ணிப்போந்து நம்முடைய வ்யதிரேகத்திலே லோகாந்தரங் க₃தரான நம் ஐயரைப்போலேயிருக்கும் பிதாக்களை உடையரா யிருப்பார் நம்மையொழிய உண்டோ? நமக்கேயுள்ளதோர் ஏற்றமன்றோ இது? அத₂வா பிது:புத்ரர்களில் நம்மோ டொப்பார் இல்லை. ராஜ்யத்துக்கு உரியோமாய், நம்மைய ராலே ஸ்வேச்ச₂ாத₃த்தமாயிருக்கிற யௌவராஜ்யத்துக்கு நடுவிலாய்ச்சியாலே விக்₄நம் பிறக்க, அதில் விவாதம்பண் ணுதே பித்ருவசநத்தையே ஆதரித்து நெடுநாள் வநவாஸம் பண்ணப்போந்த நம்மைப்போலேயிருப்பாரும் சில ராஜ புத்ரர் உண்டோ? என்றுமாம். "व्यासः साधुः" (வ்யாஸ: ஸாது₄:) என்றாற்போலே மஹாராஜர் தெளிவுக்குறுப்பான

போல்வாரில்லை) தந்தை படைத்தவர்களில் என்னைப்போலே படைத்தவ ரில்லை என்று கருத்து. அறுபதினுயிரம் வருஷம் பிள்ளை பெறுமலிருந்து பிறகு "பெரிய தவத்தால் தசரதரால் பெறப்பட்டீர்" [ரா-ஆ 66-3] என்று பெருந்தவத்தைப் பண்ணி நம்மைப்பெற்று நம்மைக்கொண்டு உயிர் தரித்துநின்று, நம்முடைய பிரிவிலே பரலோகம் சென்ற நம் தந்தையாரைப் போலேயிருக்கும் 'தந்தையரை உடையவர்கள் இவ்வுலகில் உண்டோ? நமக்கே உள்ளதொரு பெருமையன்றோ இது. தசரதரைப்போலே தந்தையரில்லை என்று கருத்து. தற்புகழ்ச்சிக் குற்றத்திற்கு சங்கிக்கவும் இடங்கொடுக்காத பொருள் இது. அப்படியல்லாமல், தந்தைக்குப் பிள்ளை 'யாய்ப் பிறந்தவர்களில் நம்மைப்போன்றவரில்லை என்று தன்னைப் புகழ் வதாகவும் கொள்ளலாம். மூத்தபிள்ளையாகையாலே பட்டத்துக்கு உரிய வனுகையாலே, எந்தையார் இஷ்டப்பட்டுக் கொடுத்த இளவரசுப்பட் டத்துக்கு நடுத்தாயான கைகேயியாலே இடையூறு பிறக்க, அதில் விவாதம் செய்துகொண்டு அரசுக்காகப் போராடாமல், தந்தை சொல்லையே மந் திரமாகக்கொண்டு நெடுங்காலம் காட்டில் வாழப்போன நம்மைப்போலே இருக்கும் ராஜகுமாரர் எவராவது உண்டோ? என்கை. "வ்யாஸர் நல்லவர்" [ ] என்று வியாஸரே தம் ஆப்திக்குறுப்பாகச் சொல்லிக்கொண்டதுபோலே, சுக்கிரீவன் தெளியவேணும் என்று சொல்

யதா₂ர்த்தோ₂க்தியாகையாலே ஆத்ம ப்ரஶம்ஸையில்லை. (ஸுஹ்ருதோ₃ வா ப₄வத்₃விதா₄:) உம்முடைய ஸௌஹார்த்₃மும் ஸுஹ்ருத்த்வஸாமாந்யப்ரயுக்தமன்று. நீர் முன் வரக்கடவதாகப் பண்ணின ஸமயத்தை அல்பம் அதிலங்கி₄க்க. அது பொறுதே, "त्वां तु सत्यादतिक्रान्तं हनिष्यामि सबान्धवं" (த்வாம் து ஸத்யாத₃திக்ராந்தம் ஹநிஷ்யாமி ஸபா₃ந்த₄வம்) என்று, நான் குபிதனாய்ப் பிள்ளையைக் கொடுவரக்காட்ட, அவனும் அதிகுபிதனாய்ச் சொல்லக்கடவதல்லாத வார்த்தையைச் சொன்னவிடத்திலும், ப₃ந்த₄த்தையே பார்த்து, பீ₄தராய், நம்பக்கல் ப்ரேமாதிஶயத்தாலே ஶரணம் புகுந்தவனையும் ஶத்ருவென்று அஸ்தா₂நே ப₄யஶங்கிகளாயிருப்பார் சில ஸுஹ்ருத்துக்கள் புறம்பே உண்டோ? உமக்கே உள்ளதொன்றன்றோ? ஆனபின்பு லோகவ்யவஹாரத்தைப் பார்த்தால் ராவணன் இவனை நலியநினைக்கையும், அவனோடு இவன் பி₄ந்நனாய்ப் போருகையும் கூடும் என்கை.

லும் உண்மை சொல்லாகையாலே, தற்புகழ்ச்சிக்குற்றம் வாராது. (உம்மைப்போலே நண்பரில்லை) உம்முடைய நட்பும் உலகத்தார் நட்பை மீறியது. நீர் முன், சீதையைத் தேடுவதற்கு வருவதாகச் சொல்லியிருந்த காலத்தில் சிறிது தாமதிக்க, அது பொறுக்காமல், "சொன்ன வார்த்தையை மீறின உன்னை உறவினரோடு கொல்கிறேன்" [ரா-கி 30-82] என்று நான் கடுங்கோபங்கொண்டு, லக்ஷ்மணனைக் கிஷ்கிந்தைக்கு அனுப்ப அவனும் மிகக்கோபங்கொண்டு சொல்லத்தகாத வார்த்தையெல்லாம் சொன்னபோதிலும் அதைக் கருதாமல் நட்பையே பார்த்து நம் காரியம் செய்து, விபீஷணன் வந்திருக்கும் இந்நேரத்தில் நமக்கு விபீஷணனால் என்ன நேரிடுமோ என்று பயந்து நம்மிடம் அன்பின் மிகுதியாலே சரணமடைந்தவனையும் எதிரியென்று தகாதவிடத்திலும் பயத்தை நினைக்கும் உம்மைப்போல் வேறு சில நண்பர்கள் உலகிலுண்டோ? உமக்கு ஒருவர்க்கே உள்ளதன்றோ இந்நட்புப் பெருமை. இப்படியிருக்கும்போது உலகவழக்கை மீறியிருக்கும் அபவாதங்களைத் (விதிவிலக்குகளைத்) தள்ளிவிட்டு உலகவழக்கை மாத்திரம்கொண்டு பார்த்தால் ராவணன் இவனைத் துன்புறுத்த நினைப்பதும், அவனோடு இவன் கருத்துவேறுபட்டுப் பிரிவதும் கூடுவதேயாகையால் இதில் ஐயமுறவேண்டியதில்லை என்று கருத்து.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 17-வது ச்லோகம்

एवमुक्तस्तु रामेण सुग्रीवः सहलक्ष्मणः।
उत्थायेदं महाप्राज्ञः प्रणतो वाक्यमब्रवीत्॥

ஏவமுக்தஸ்து ராமேண ஸுக்₃ரீவ: ஸஹலக்ஷ்மண: ।
உத்த₂ாயேத₃ம் மஹாப்ராஜ்ஞ: ப்ரணதோ வாக்யமப்₃ரவீத் ॥

பதவுரை:—ராமேண-ஸ்ரீராமபிரானால், ஏவம்-இவ்வண்ணமாக, உக்த:-சொல்லப்பட்ட, மஹாப்ராஜ்ஞ:—பேரறிவாளரான, ஸுக்₃ரீவ: து-ஸுக்ரீவ மஹாராஜரும், ஸஹலக்ஷ்மண:-இளையபெருமாளோடு கூடினவராய், உத்த₂ாய-எழுந்திருந்து, ப்ரணத:-நமஸ்காரம் பண்ணினவராய், இதம்-இந்த, வாக்யம்-சொல்லை, அப்₃ரவீத்—உரைத்தார்.

அவதாரிகை:— இப்படி ஶரணாக₃தனான விபீஷணாழ்வான் பக்கல் பெருமாளுக்குண்டான பக்ஷபாதாதிஶயத்தைக் கண்டு மஹாராஜரும் ஸ்வாபேக்ஷிதஸித்₄க்காக இளைய பெருமாளையும் கூட்டிக்கொண்டு ஶரணம்புக்கு ஒருவார்த்தை சொல்லுகிறார்.

வ்யா:-(ராமேண ஏவமுக்தஸ் ஸுக்₃ரீவஸ்து) பெருமாள் தம்மை அநுகூலித்துச் சொன்னபடியாலும், தமக்குப் பதகம் முட்டினபடியாலும், அவர் வழியேபோக ப்ராப்த

அவதாரிகை:— இப்படி சரணமடைந்த விபீஷணனிடம் ஸ்ரீராமச்சந்திரனுக்குள்ள பரிவின் பெருமையைக்கண்ட சுக்கிரீவனும் தன் இஷ்டம் நிறைவேறுவதற்காக லக்ஷ்மணனைக் கூட்டிக்கொண்டு சரணம் புகுந்து ஒரு வார்த்தை சொல்லுகிறார் என்கிறார் "ஏவமுக்த:" என்னும் சுலோகத்தாலே.

வ்யா:— (ராமனால் இவ்வண்ணமுரைக்கப்பட்ட சுக்கிரீவரோவெனில்) "அநதீ₄த்ய ச சாஸ்த்ராணி" [ரா-யு 18-8] என்றும், "ஸுஹ்ருதே₃வா ப₄வத்₃விதா₄:" [ரா-யு 18-16] என்றும் ராமபிரான் தம்மைப் புகழ்ந்து பேசினபடியாலும், 'இனிச்சொல்லலாவதில்லை' என்னும் நிலையைத் தாம்

மாயிருக்க, பின்னையும் அவரோடு வேறுபட்டு அவரைத் தம் வழியிலே போக்க யத்நம் பண்ணினபடி. (ஸஹலக்ஷ்மண:) தம்மிலும் பரிவரென்று. "लक्ष्मणस्याग्रत:" (லக்ஷ்மணஸ்யாக்3ரத:)என்று, ப்ரத2மத்திலே கூட்டிக்கொண்டாற்போலே, ப்ரபத்திக்கும் அவரைக் கூட்டிக்கொள்ளுகிறார். (ப்ரணத:) ஶத்ருக்கள்பண்ணும் ப்ரபத்தியேயன்றிறே ப்ரபத்தியாவது. அநுகூலர்பண்ணும் ப்ரபத்திக்கும் இரங்க வேண்டாவோ? என்று அவனுடைய ஒரு ஶரணாகதிக்கு அபவாத3மாக இரண்டு ஶரணாக3தியைப் பண்ணுகிறார் என்று கருத்து. (மஹாப்ராஜ்ஞ:) தமக்குப்பதகம் முட்டின த3ஶையிலும் ஶரணாக3திஸாத்4யர் பெருமாள் என்று அறிகை. (உத்த2ாய ப்ரணத: இத3ம் வாக்யமப்3ரவீத்) பெருமாள் தம்மை அள்ளியெடுத்து, "நீர் சொன்ன கார்யம் செய்கிறோம்" என்று சொல்லும்படி திருவடிகளிலே விழுந்து இந்த வார்த்தையை விண்ணப்பம் செய்தார்.

அடைந்தபடியாலும், ராமனின் நினைவின்படியே நடப்பது தகுதியாயிருக்க, அன்பினாலே மறுபடியும் அவரோடு கருத்துவேறுபாடு கொண்டு அவரைத் தம் வழியிலே இழுக்க முயன்றதைக் காட்டுகிறது 'து' (எனில்) என்னும் சப்தம். (லக்ஷ்மணனோடு கூடியவராய்) தம்மைக் காட்டிலும் பரிவுடையவர் என்னும் காரணத்தாலே முதலிலேயே "இலக்குவனுக்கு முன்னே ராமனிடம் சொன்னான்" [ரா-யு 17-16] என்று கூட்டிக் கொண்டது போலே, 'விபீஷணனை ஏற்றுக்கொள்ளக்கூடாது' என்பதற்காகத் தாம் செய்யும் சரணாகதிக்கும் அவரைக் கூட்டிக்கொள்கிறார். (சரணமடைந்தவராய்) 'எதிரிகள் பண்ணும் சரணாகதிதான் சரணாகதியாகுமோ? அன்புடைய நான் செய்யும் சரணாகதிக்கு இரங்கவேண்டாமோ? என்று நினைத்து அவனுடைய ஒரு சரணாகதிக்கு விதிவிலக்காக தானும் லக்ஷ்மணனுமாக இரண்டு சரணாகதியைச் செய்கிறார் என்று கருத்து. (பேரறிவாளர்) மேல் சொல்லலாவதில்லை என்று ஆனபோதும் ராமன் சரணாகதியினாலேயே வசீகரித்தவன் என்று அறியவல்ல பேரறிவாளர். (எழுந்து அடிவணங்கி இவ்வார்த்தையைச் சொன்னார்) ராமபிரான் தம்மைக்கைதூக்கி எடுத்து, 'நீர் சொன்னபடியே செய்கிறோம்' என்று சொல்லும்படி திருவடிகளிலே விழுந்து இவ்வார்த்தையை விஜ்ஞாபித்தார்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 18-வது ச்லோகம்

रावणेन प्रणिहितं तमवेहि निशाचरम्।
तस्याहं निग्रहं मन्ये क्षमं क्षमवतां वर॥

ராவணேந ப்ரணிஹிதம் தமவேஹி நிஶாசரம்।
தஸ்யாஹம் நிக்₃ரஹம் மந்யே க்ஷமம் க்ஷமவதாம் வர ॥

பதவுரை:—தம்—அந்த, நிஶாசரம்—ராக்ஷஸனை, ராவணேந-ராவணனாலே, ப்ரணிஹிதம்-ஒற்றனாயனுப்பப்பட்டவனாய், அவேஹி–அறியும்; க்ஷமவதாம் வர–பொறுமையாளர்களுக்குத் தலைவரே! அஹம்–நான், தஸ்ய–அவனுடைய, நிக்₃ரஹம்-கொலையை, க்ஷமம்–தக்கதாக, மந்யே–எண்ணுகிறேன்.

அவதாரிகை:—இப்படி ப்ரஸந்நராய், ப்ரபந்நவாக்யம் கேட்டருளுமவர் என்று, "ராவணேந ப்ரணிஹிதம்" என்று முற்பட விண்ணப்பம் செய்தவைதன்னையே விண்ணப்பம் செய்கிறார். புநர்வசனத்துக்கு ப்ரயோஜனம்,-"அவன் ஶரணமென்ற வார்த்தையிலே அபஹ்ருதசித்தராயிருந்தவளவிலேயாயிற்று நாம் அவை சொல்லிற்று; நாம் ஶரணம்புக்க பின்பு தெளிந்து நல்வார்த்தை கேட்பர்" என்று முன்பு சொன்னவை தன்னையே திருவுள்ளத்தில் படுத்துகை.

வ்யா:-(நிஶாசரம்) கள்ளரைப்போலே மத்₄யராத்ரியிலே புறப்பட்டுப் பரஹிம்ஸையைப் பண்ணிக்கொண்டு திரியும்

அவதாரிகை:—இவ்வண்ணமாக, 'சரணமடைந்தவன் வார்த்தையை உகந்து கேட்டருளுவார்' என்று நினைத்து, "ராவணேந ப்ரணிஹிதம்" [ரா-யு 17-24] என்று முன்பு சொன்ன வார்த்தையையே மறுபடியும் உரைக்கிறார். மறுபடியும் சொல்லுவதற்குப் பயன் என்னவெனில்: "அவன் 'சரணம்' என்று சொன்ன வார்த்தையிலே நெஞ்சைப் பறிகொடுத்திருந்தபோது நாம் அவ்வார்த்தை சொன்னோமாகையாலே இவர் செவியில் ஏறியிராது; நாம் சரணம் புகுந்த பிறகு தெளிவுபெற்று யுக்தியுக்தமான இவ்வார்த்தையைக் கேட்பர்" என்று நினைத்து முன்பு சொன்னதையே கூறுகிறார் மேல் இரண்டு ச்லோகத்தாலே

ஜன்மம் என்று இவன் தண்மை திருவுள்ளத்திற் படாமை யிறே இவன் நமக்கு ஸஹகாரியென்று அருளிச் செய்தது; அத்தாலே "நிசாசரம்" என்கிறுர்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 19-வது ச்லோகம்

राक्षसो जिह्मया वुद्धया सन्दिष्टोऽयमिहागतः।
प्रहर्तुं त्वयि विश्वस्ते प्रच्छन्नो मयि चानघ॥
लक्ष्मणे वा महाबाहो स वध्यः सचिवैः सह॥

ராக்ஷஸோ ஜிஹ்மயா புத்$_3$த்$_4$யா ஸந்தி$_3$ஷ்டோऽயமிஹாக$_3$த: ।
ப்ரஹர்த்தும் த்வயி விச்வஸ்தே ப்ரச்ச$_2$ந்நோ மயி சாநக$_4$ ॥
லக்ஷ்மணே வா மஹாப$_3$ாஹோ ஸ வத்$_4$ய: ஸசிவை: ஸஹ ॥

பதவுரை:—அநக$_4$—குற்றமற்றவரே! அயம்-இந்த, ராக்ஷஸ:- அரக்கன், ஜிஹ்மயா—வஞ்சகமான, புத்$_3$த்$_4$யா—புத்தியிஞலே, ஸந்தி$_4$ஷ்ட:—ஏவப்பட்டவனுய், (த்வயி) விச்வஸ்தே (ஸதி)- (நீர்) நம்பிக்கையுடையீராயிருக்கையில், ப்ரச்ச$_2$ந்ந:— மறைந்து நின்று, த்வயி—உம் விஷயத்திலும், மயி—என் விஷயத்திலும், லக்ஷ்மணே ச—இலக்குவன் விஷயத்திலும், ப்ரஹர்த்தும்—ஹிம்ஸையைச் செய்வதற்கு, இஹ—இங்கு, ஆக$_3$த:—வந்தான்; மஹாப$_3$ாஹோ—நீள்கையரே! ஸ:—அவன், ஸசிவை: ஸஹ—மந்திரிகளோடுகூட, வத்$_4$ய:—கொல்லத் தக்கவன்.

வ்யா:—(நிசாசரனை) கள்ளரைப்போலே பாதிராத்திரியிலே புறப் பட்டுப் பிறர்க்குத் தீங்கிழைத்துத் திரியும் பிறப்பையுடையவன் என்று இவனுடைய தாழ்வு திருவுள்ளத்தில் படாமையாலன்றே இவன் நமக்குத் துணை என்று அருளிச்செய்தார் பெருமாள். அதனாலே அத்தாழ்வு நெஞ்சிற்படும்படி "நிசாசரனை" [இரவில் ஸஞ்சரிக்கும் அரக்கனை] என்கிறுர். ச்லோகத்தின் மற்ற பதப்பொருள்கள் முன்பு சொன்ன படியே கோள்வது.

வ்யா:—(அயம் ராக்ஷஸ: ஜிஹ்மயா புத்₃த்₄யா ஸந்தி₃ஷ்ட: ப்ரச்ச₂ந்ந: இஹ ஆக₃த:) நீசஜாதியான இவன், ஸ்வஜாதிக்குக் கார்யம் செய்யுமத்தனைபோக்கி, தா₄ர்மிகரான நமக்குக் கார்யம் செய்யான் காணும்! (ப்ரஹர்த்தும் த்வயி விச்வஸ்தே) தேவர் விச்வஸித்தவாறே ஸஹகாரியன்றிக்கே யொழியுமளவன்றிக்கே, உம்மை நலிவதும் செய்யும். "दोषो यद्यपि तस्य स्यात्" (தோ₃ஷோ யத்₃யபி தஸ்ய ஸ்யாத்) என்று அதுக்கு இசைந்தோமிறே என்றவருக்குப் பரிஹரிக்கைக்காக, (மயிச) என்கிறார். "त्वयि किञ्चित्समापन्ने किं कार्यं सीतया मम"(த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம) என்றும், "सुहृदो वा भवद्विधाः" (ஸுஹ்ருதோ₃ வா ப₄வத்விதா₄:) என்றும் நீர் நினைத்திருக்கிற என்பக்கலிலும் நலியும் காணும் இவன். (லக்ஷ்மணே வா) "मुहूर्तमपि जीवावः" (முஹூர்த்தமபி ஜீவாவ:) என்று, அருளினீராகில் உளராயிருக்கும் அவரையும் நலியும். ஶரணாக₃தரக்ஷணமென்று ஒரு வ்யாஜத்தால் ஒரு ராக்ஷஸனுக்காக எங்களிருவரையும்

வ்யா:—(இவ்வரக்கன் வஞ்சனை நினைவினால் தூண்டப்பட்டு இங்கு வந்திருக்கிறான்) தாழ்ந்த சாதியானுகிற இவன் தன்சாதிக்குரிய வஞ்சனைத் தொழில் செய்வானேயொழிய அறவழிநடக்கும் நமக்குத் துணைத் தொழில் புரியமாட்டான்காணும். (நம்பிக்கைகொண்ட உம்மிடத்தில் ஹிம்ஸிக்க) நீர் இவனிடம் நம்பிக்கை வைத்தவுடன், உமக்குத் துணையாகாததோடன்றியில், உம்மைத் துன்புறுத்தவும் செய்வான். "அவன் தீயநினைவுள்ளவனுனாலும் அவன் காரியம் நிறைவேறட்டுமே" [ரா-யு 18-3] என்று அதுக்கு இசைந்தோம் என்றவருக்குப் பதிலுரைக்கும் கருத்தோடு (என்னிடமும் ஹிம்ஸிக்க) என்கிறார். "நீர் சிறிது அவமதிக்கப்பெற்றால் சீதை கிடைத்துத்தான் எனக்கு என்ன பயன்?" [ரா-யு 41-4] என்றும், "உம்மைப்போன்ற நண்பரில்லை" [ரா-யு 18-16] என்றும் நீர் ஈடுபட்டிருக்கும் என் விஷயத்திலும் தீங்கு செய்வானிவன். (லக்ஷ்மணனிடத்திலும்) "உன்னைப்பிரிந்த நாங்கள் வாழோம், வாழ்ந்தால் ஒரு முஹூர்த்தமே" [ரா-யு 53-31] என்கிறபடியே, உம்முடைய திருவுள்ளத்தில் அருளுண்டாகில் உயிர்வாழ்பவராய், இல்லையேல் இல்லையாமவரான இளைய பெருமாளையும் துன்புறுத்துவான். 'சரணமடைந்தவனை ரக்ஷிக்கிறோம்'

நீர் இழக்கக்கிடீர் புகுகிறது. (அநக$_4$) இந்தப் பொல்லாங்குகள் உமக்கு வாராதொழிந்திடுக! என்று கருத்து. (மஹாபு$_3$ாஹோ) உம்முடைய தோளை அண்டை கொண்டிருக்கிற எங்களை ஶத்ருவின் கையிலே காட்டிக்கொடுக்கலாமோ? எங்கள் பக்கலிலே தண்ணளியும், அவன் பக்கலிலே தோள் வலியுமாகையன்றோ யுக்தம். (ஸ: ஸசிவை: ஸஹ வத்$_4$ய:) ஆகையாலே ஸபரிகரனாக அவன் வத்$_4$யன்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 20-வது ச்லோகம்

एवमुक्त्वा रघुश्रेष्ठं सुग्रीवो वाहिनीपतिः।
वाक्यज्ञो वाक्यकुशलं ततो मौनमुपागमत्॥

ஏவமுக்த்வா ரகு$_4$ச்ரேஷ்ட$_2$ம் ஸுக்$_3$ரீவோ வாஹிநீபதி:।
வாக்யஜ்ஞோ வாக்யகுஶலம் ததோ மௌநமுபாக$_3$மத்॥

பதவுரை:—வாஹிநீபதி:—ஸேநாபதியும், வாக்யஜ்ஞ:—வாக்யங்களின் குணதோஷம் அறியுமவருமான, ஸுக்$_3$ரீவ:—சுக்கிரீவமஹாராஜர், வாக்யகுஶலம்—வாக்கியமுரைப்பதில் வல்லவரான, ரகு$_4$ச்ரேஷ்ட$_2$ம்—ரகுகுலத்தலைவரைக்குறித்து, ஏவம்-இவ்வண்ணமாக, உக்த்வா-உரைத்து, தத:-அதற்குப் பின், மௌநம்-பேசாதிருத்தலை, உபாக$_3$மத்-மேற்கொண்டார்.

வ்யா:—(ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$ம்) ஶரணாக$_3$தனுக்காகத் தன்னை அழியமாறின ரகு$_4$வினுடைய குலத்தார்க்கு ஶேஷ்யரென்னும்

என்னும் வியாஜத்தை முன்னிட்டு ஒரு அரக்கனுக்காக எங்களிருவரையும் நீர் இழக்கவன்றோ போகிறீர். (குற்றமற்றவரே) இப்பெருங்குற்றங்கள் உமக்கு வாராதொழிந்திடுக என்று மங்களாசாஸனம் செய்கிறார். (நெடுந் தடக்கையனே) உம்முடைய தோள்நிழலிலே வாழும் எங்களை எதிரியின் கையில் காட்டிக்கொடுக்கலாமோ? எங்களிடம் அன்பையும் அவனிடம் தோள்பலத்தையும் காட்டுவதன்றோ தக்கது. (அவன் மந்திரிகளோடு கொல்லத்தக்கவன்) ஆகையாலே, துணைவரோடுகூட அவனைக் கொல்லவேண்டும்.

படி ஶரணாகத ஸம்ரக்ஷணத்தில் ப்ரஶஸ்தராயுள்ளவரை. (ஸுக்ரீவோ வாஹிநீபதி:) தாம் போனவழியை அநுவிதாநம் பண்ணும் பரிகரத்தை உடையவர். (வாக்யஜ்ஞ:) ஸர்வவசநவ்யக்திகளுடைய குணதோஷங்களை அறியுமவர். (வாக்யகுஶலம்) எதிரிகளுடைய அபிப்ராய பூர்வகமாக வார்த்தை சொல்லவல்லவரை. (ஏவமுக்த்வா ததோ மௌநமுபாகமத்) தம் சீர்மை அறியாதவரை நாம் சொல்லுவதுண்டோ? என்று ப்ரணயரோஷத்தாலே பேசாதிருந்தார்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 21-வது ச்லோகம்

सुग्रीवस्य तु तद्वाक्यं रामः श्रुत्वा विमृश्य च।
ततः शुभतरं वाक्यमुवाच हरिपुङ्गवम्॥

ஸுக்ரீவஸ்ய து தத்வாக்யம் ராம: ச்ருத்வா விம்ருச்ய ச।
தத: ஶுபதரம் வாக்யமுவாச ஹரிபுங்கவம்॥

பதவுரை: — ராம: — ஸ்ரீராமபிரான், ஸுக்ரீவஸ்ய— சுக்கிரீவனுடைய, தத் வாக்யம்—அந்தச் சொல்லை, ச்ருத்வா- கேட்டு, விம்ருஶ்ய ச—ஆராயவும்செய்து, தத:—அதற்குப் பின், ஹரிபுங்கவம்—வானரர்தலைவனான சுக்கிரீவனைக் குறித்து, ஶுபதரம் — மிகவும் மங்களமான, வாக்யம்— வார்த்தையை, உவாச—உரைத்தார்.

வ்யா:—(ரகுகுலச்ரேஷ்டரை) ரகுராக்ஷஸ ஸம்வாதத்திலே, சரணமடைந்த ப்ராஹ்மணனுக்காகத் தன் உயிரையும் கொடுக்கத் துணிந்த ரகுவினுடைய குலத்தவர்க்கெல்லாம் கொண்டாடத்தக்கவர் என்னும்படி சரணாகதஸம்ரக்ஷணத்தில் புகழ்பெற்றவராயுள்ளவரை. (சேனைத்தலைவரான சுக்கிரீவர்) தாம் போனவழியைப் பின்பற்றி நடக்கும் வானர சேனையையுடையவர். (வாக்கியமறிந்தவர்) எல்லா வசன அமைப்புகளின் நன்மை தீமைகளை அறிந்தவர். (வாக்கியத்தில் வல்லவரைக் குறித்து) எதிர்த்தலையில் பேசுமவர்களின் கருத்தறிந்து வார்த்தை சொல்ல வல்ல ராமபிரானை. (இவ்வண்ணமுரைத்துப் பிறகு மௌனத்தை ஏற்றுக் கொண்டார்) தம் பெருமை தமக்கே தெரியாதவரோடு இதற்கு மேல் வார்த்தைசொல்லிப் பயனென்ன? என்னும் அன்புக்கோபத்தாலே பேசாமலிருந்தார்.

அவதாரிகை:-தத₃நந்தரம் நிதா₃நஜ்ஞரான பெருமாள் மஹாராஜருடைய அதிநிர்ப்பந்த₄ஹேதுவைத் தன் திருவுள்ளத்திலே நிரூபித்து, தத₃நுரூபமாக வார்த்தை அருளிச்செய்கிறார் என்கிறது.

வ்யா:—(ஸுக்₃ரீவஸ்ய தத் வாக்யம் ச்ருத்வா) ப்ரேமாந்த₄ராய் ஹ்ருத₃யமறியாதே சொன்ன வார்த்தையைக் கேட்டு. (ராமஸ்து) இவர் உபபத்திஸாத்₄யரன்று என்று அறிந்த விசேஷம். (விம்ருஸ்ய ச) ப்ரேமாந்த₄ராயிருக்குமவர்க்குப் பரிஹாரம் ஏதென்று விசாரிப்பதும் செய்து. (தத:) இனி இவர்க்கு நம்மைக்குறித்து வார்த்தையில்லையென்று நிச்சயித்தபின்பு வார்த்தை சொன்னார். (ஶுப₄தரம் வாக்யமுவாச) ப்ரேமாந்த்₄யம் செல்லாநிற்கச்செய்தே ஸ்வாமியை எதிரிடும் கலக்கமெல்லாம் தீர்ந்து தத₃நுவர்த்தநம் பண்ணிவைக்கும் வார்த்தையாகை. (ஹரிபுங்க₃வம்) ராஜாக்களாயிருக்கச்செய்தே நீதிஸாத்₄யராயிருக்கை

அவதாரிகை:—அதற்குப்பின், காரியகாரணங்களை அறியுமவரான ராமபிரான், சுக்கிரீவன் இப்படி மிகவும் நிர்ப்பந்திப்பதற்குக் காரணம் தம் மேலுள்ள பரிவே என்று தன் நெஞ்சிலே ஆராய்ந்து முடிவுகட்டி அதற்குத் தக்கபடி வார்த்தையருளிச்செய்கிறார் என்கிறது "ஸுக்₃ரீவஸ்ய து" என்னும் சுலோகத்தாலே.

வ்யா:-(சுக்கிரீவனுடைய அந்த வாக்கியத்தைக் கேட்டு) அன்பினாலே அறிவு கலங்கியவராய், ராமபிரானுடைய திருவுள்ளமறியாமல் சொன்ன வார்த்தையைக்கேட்டு. (ராமனோவெனில்) இவரைக் காரணம்காட்டி வசீகரிக்கமுடியாது என்றறிந்ததாலுண்டான வேறுபாட்டைக் காட்டுகிறது 'து' [எனில்] என்ற சப்தம். (கேட்டு ஆராய்வதும் செய்து) கேட்பதோடல்லாமல், அன்பினாலே அறிவுகலங்கியிருக்கும் இவருக்குத் தகுந்த பதில் எது என்று ஆராய்வதும் செய்து. (அதற்குப்பின்) இனி, இவர் நம்மைக்குறித்துச் சொல்லக்கூடிய வார்த்தை ஒன்றுமில்லை என்று நிச்சயித்துக்கொண்டு அதற்குப்பின் வார்த்தை சொன்னார். (மிகவும் மங்களமான வார்த்தையைச் சொன்னார்) அன்பினால் அறிவுகெட்டுக் கிடக்கும்போதும், ஐயனை எதிர்க்கும் கலக்கமெல்லாம் தீர்ந்து, அவனைப் பின்பற்றச் செய்யும் வார்த்தையாயிருக்கை. (வானரர் தலைவரை) அரசரா

யன்றிக்கேயிருக்கிற ப்ரேமாந்த்₄யத்தை அநுஸந்தி₄த்து ரிஷி கொண்டாடுகிறான்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 22-வது ச்லோகம்

सुदुष्टो वाप्यदुष्टो वा किमेष रजनीचरः।
सूक्ष्ममप्यहितं कर्तुं ममाशक्तः कथञ्चन॥

ஸுது₃ஷ்டோ வாப்யது₃ஷ்டோ வா கிமேஷ ரஜநீசர:।
ஸூக்ஷ்மமப்யஹிதம் கர்த்தும் மமாஶக்த: கத₂ஞ்சந॥

பதவுரை:—ஏஷ:—இந்த, ரஜநீசர:—அரக்கன், ஸுது₃ஷ்ட: வா—மிகவும் து₃ஷ்டனானாலும், அது₃ஷ்ட: வா—தோ₃ஷமற்றவனானாலும், கிம்—என்ன? கத₂ஞ்சந—எப்படியாலும், மம—எனக்கு, ஸூக்ஷ்மம் அபி—சிறிதும், அஹிதம்—தீமையை, கர்த்தும்—செய்ய, அஶக்த:—வல்லமையற்றவன்.

அவதாரிகை:—முந்துறமுன்னம் அதிக்ஷுத்ரனான ராக்ஷஸன் நம்பக்கல் அபகாரத்தை நினைக்கவும் ஶக்தனல்லன் என்கிறார்.

வ்யா:—(ஸுது₃ஷ்டோ வாப்யது₃ஷ்டோ வா) இவன் நீர் சொன்னபடியே து₃ஷ்டனாகவுமாம். நான் சொன்னபடியே அது₃ஷ்டனாகவுமாம். இவ்விரண்டும் அப்ரயோஜ

யிருந்தபோதிலும் மற்ற அரசர்களைப்போலே கேவலம் ராஜநீதிக் கண்ணையே உடையவராயிராமல் அறிவுகேட்டையும் விளைக்கத்தக்க அன்புக் கண்ணையும் உடையவராயிருப்பதைக்கண்டு கொண்டாடுகிறார் மஹரிஷி.

அவதாரிகை:—முதன்முதலில் மிகத்தாழ்ந்தவனான அரக்கன் நம் விஷயத்தில் தீங்கை நினைக்கவும் வல்லவனல்லன் என்கிறார்.

வ்யா:—(மிகத்தீயவனாயினும், நல்லவனாயினும்) இவன் நீர் சொல்லுகிறபடியே துஷ்டனாயிருந்தாலும் சரி; நான் சொன்னபடியே நல்லவனாயிருந்தாலும் சரி; இவையிரண்டும் இவனை ஏற்றுக்கொள்ளுவதற்கோ

கம். எங்ஙனேயென்னில்: ஶரணாக3தனானவன் பக்கலிலே பஹுப்ரகாரங்களாக தோ3ஷங்களைச் சொன்னீரேயாகிலும் து3ஷ்டனென்று என் நெஞ்சிற்படமாட்டாது. உமக்கு மறுமாற்றமில்லாதபடி ஹேதுக்களாலே இவனுடைய நைர்தோ3ஷ்யத்தை ஏற்றித்தந்தாலும், அஸ்தா2நே ப1யஶங்கிகளான உம்முடைய நெஞ்சில்படமாட்டாது. (கிமேஷ ரஜநீசர:) நீர் நினைத்தபடியே பா3த4கனாய் வந்தானாயிடுக; ஆனாலும் இவன்தன்னைக் கண்டிலீரோ? (வா) அஹிதமாத்ரனான இவன் நமக்கு என்ன' அபகாரம் பண்ணுவான்? இவனுக்கு அஞ்சின நீர் எங்ஙனே ராவணவத4ம் பண்ணக்கடவதாக எடுத்துவிட்டிருக்கிறபடி? வஞ்சகராயிருப்பாரை து3ர்ப3லரென்று பரீக்ஷிக்கலாமோ? என்ன: (மம ஸூக்ஷ்மமபி அஹிதம் கர்த்துமஶக்த:) "बाहुच्छायामवष्टब्धो यस्य लोको महात्मनः" (பா3ஹுச்சா2யாமவஷ்டப்3தோ4 யஸ்ய லோகோ மஹாத்மந:) என்று கண்டார் கவிபாடுகிற தோளை இவன் கண்டால் நெஞ்சாலும் ஓரஹிதத்தை இவன் பண்ண

கொள்ளாமைக்கோ காரணமாகாது. எப்படியெனில்: சரணமடைந்த இவனிடம் பலவிதமாக தோஷங்களைச் சொன்னீரேயானாலும், துஷ்டன் என்று என் நெஞ்சில்படாது. உம்மால் பதில் சொல்லமுடியாதபடி பல காரணங்களைக்காட்டி இவன் குற்றமற்றவனென்று நிரூபித்துத் தந்தாலும், காரணமில்லாமல் பயப்படும் உம் நெஞ்சில்படாது. ஆகையால் இவ்விஷயத்தில் நாம் இருவரும் போராடிப் பயனில்லை. (இவ்வரக்கன் எப்படியிருந்தால் என்ன) நீர் நினைத்தபடியே தீங்கிழைக்கவே வரட்டுமே. அப்படியிருந்தாலும், நீர் இவனுடைய வலிமையின்மையைக் காணவில்லையோ? தீங்கு நினைத்துவிட்டதால்மாத்திரம், இவன் நமக்கு என்ன தீங்கை இழைத்துவிடமுடியும்? இவனுக்கு பயப்படும் நீர் எப்படி இவனிலும் வலிமைமிக்க ராவணனைக் கொல்லுவதற்குப் படையெடுத்திருக்கிறீர்? "வஞ்சகராயிருப்பவரை தீங்கிழைக்க வலிமையற்றவரென்று நம்மோடு சேர்த்துக்கொண்டு விஷப்பரீக்ஷை பண்ணலாமோ?" என்ன: (எனக்குச் சிறிதும் தீங்கிழைக்க வல்லவனல்லன்) "உலகமானது எவனுடைய தோள்நிழலை அண்டிநிற்கிறதோ" [ரா-ஸு 34-31] என்று கண்டாரைக் கவிபாடவைக்கும் தோளை இவன் கண்டால் நெஞ்சாலும் ஓர் தீமையை

ஶக்தனல்லன். (கதஂசந) நீர் அநுகூலனென்று விச்வ ஸித்தால் நலியலாமேயென்ன, புலிகிடந்த தூறைக்கண்டு அஞ்சுவாரைப்போலே நம் தோள்வலியைக் கண்டு அவன் எப்போதும் மாட்டான்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 23-வது ச்லோகம்

पिशाचान् दानवान् यक्षान् पृथिव्याञ्चैव राक्षसान् ।
अङ्गुल्यग्रेण तान् हन्यामिच्छन् हरिगणेश्वर ॥

பிஶாசாந் தா₃நவாந் யக்ஷாந் ப்ருதி₂வ்யாஞ்சைவ ராக்ஷஸாந் ।
அங்கு₃ள்யக்₃ரேண தாந் ஹந்யாமிச்ச₂ந் ஹரிக₃ணேச்வர ॥

பதவுரை:—ஹரிகணேச்வர—வானரசமூகத்திற்குத் தலைவரான மஹாராஜரே! பிஶாசாந்-பிசாசங்களையும், தா₃நவாந்-அசுரர்களையும், யக்ஷாந்—யக்ஷர்களையும், ப்ருதி₂வ்யாம்-பூமியிலுள்ள, ராக்ஷஸாந் ச ஏவ-அரக்கர்களையும்கூட, தாந்-அவர்கள் அனைவரையுமே, இச்ச₂ந்—விரும்பினேனாகில், அங்கு₃ள்யக்₃ரேண-விரல்நுனியாலே, ஹந்யாம்—கொல்லக்கடவேன்.

அவதாரிகை:—இப்படி அருளிச்செய்யச் செய்தேயும், எதிர்த்தலையில் ஜாதி ப்ரயுக்தமான க்ரௌர்யமே மேற்கிடந்து நெஞ்சு தெளியாமையாலே, இவர் தெளிகைக்காக இவனளவேயல்ல, லோகத்திலே க்ரூரஜாதி என்று பேர்

நினைக்கவல்லவனல்லன். (எப்படியாலும்) 'நீர் இவ்விபீஷணனை அன்பனென்று நம்பியிருக்கும்போது உமக்குத் தீங்கிழைக்கக்கூடாதோ என்னில்; புலிகிடந்த புதரைக்கண்டு பயப்படுவாரைப்போலே நம் தோள்வலியைக் கண்ட அவன் எப்போதும் தீங்கிழைக்கமாட்டான்.

அவதாரிகை:—இவ்வளவு அருளிச்செய்தபின்பும், சுக்கிரீவனிடம் வானரஜாதிக்குத்தக்க கொடுமையே நிறைந்திருந்து நெஞ்சுதெளியாமையாலே இவரைத் தெளியவைப்பதற்காக, இவ்விபீஷணன் மாத்திரமல்லாமல், உலகத்தில் கொடியவர்கள் என்று பெயர்பெற்றவரனைவரும்

பெற்றவற்றையடங்க அநாயாஸேந அழிக்கவல்ல தம் வீர்யத்தை ஆவிஷ்கரிக்கிறார்.

வ்யா:—(பிஶாசாந் தா₃நவாந் யக்ஷாந்) கள்ளர், பள்ளிகள், வலையர், கொலையர் என்னுமாப்போலே ஹிம்ஸகஜாதியினுடைய அவாந்தரபே₄த₃மிருக்கிறபடி. இந்த துர்வர்க்க₃மடைய அந்யோந்ய முண்டான ஸஹஜஶாத்ரவத்தைப் பொகட்டு நம்மை நலிகைக்காக ஏககண்ட₂ராய் வருகை. (ப்ருதி₂வ்யாஞ்சைவ ராக்ஷஸாந்) லங்கையிலுள்ள ராக்ஷஸரளவன்றிக்கே, பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணையான பூமியிலுள்ள ராக்ஷஸஜாதியடங்கக் கீழ்ச்சொன்னவர்களோடே ஏககண்ட₂ராய் வருகை. (அங்கு₃ள்யக்₃ரேண தாந் ஹந்யாம்) இவர்களடைய அழியச்செய்யுமிடத்தில் நம் ப₃லமெல்லாம் வேண்டா. ஆயுதமும் வேண்டா. விரலில் ஏகதே₃ஶத்தாலே நலியவல்லோம். ஒரு பரிகரத்தாலே கொல்லப் பாற்றம்போராத க்ரிமிகீடாதி₃களை விரல் தலையாலே தேய்க்குமாப்போலே தேய்த்துப் பொகடுகிறோம் என்கை.

திரண்டு வந்தாலும் விளையாட்டாக அழிக்கவல்ல தம் வீர்யத்தை வெளிப்படுத்துகிறார்.

வ்யா:—(பிசாசங்களையும், அஸுரர்களையும், யக்ஷர்களையும்) கள்ளர், பள்ளர், வலையர், கொலையர் என்று இக்காலத்தில் ஹிம்ஸகர்களுள் பல உட்பிரிவுகள் இருப்பதுபோலே அக்காலத்தில் ஹிம்ஸகர்களுடைய உட்பிரிவுகள் இருந்தபடி. துஷ்டர்கூட்டமான இவையனைத்தும், தம்மிடையே ஒருவர்க்கொருவர் இயற்கையிலேயே உள்ள உட்பூசல்களை மறந்து நம்மைத் துன்புறுத்துவதற்காக ஒன்றுசேர்ந்து வந்தாலும். (உலகிலுள்ள அரக்கர்களையும்) இலங்கையிலுள்ள அரக்கர் மாத்திரமல்லாமல், ஐம்பது கோடி விஸ்தீர்ணமுடைய பூமியிலுள்ள அரக்கர்குலம் முழுவதும் கீழ்ச் சொன்னவர்களோடு திரண்டு ஒருமனப்பட்டு வந்தாலும். (விரல் நுனியாலே அவர்களை அழிப்பேன்) இவர்களனைவரையும் அழியச்செய்ய என்னுடைய பலம் முழுவதும் வேண்டியதில்லை. ஆயுதங்களும் வேண்டியதில்லை; விரல்முழுவதும் வேண்டியதுமில்லை; விரல்நுனியாலே அழிக்க வல்லேன்; ஒரு கருவிகொண்டு கொல்லத் தகுதியில்லாத ஈ எறும்பு முதலான பூச்சிபுழுக்களை விரல்நுனியாலே தேய்த்து அழிப்பதுபோலே தேய்த்து அழித்துவிடுவேன் இவ்வனைவரையும் என்று கருத்து.

ஆனல் நம்முடைய ப்ரதிபக்ஷம் குறியழியாமேயிருப்பா னென்? என்னில்: (இச்சூந்) அருமையாலன்று; செய்ய நினையாமையாலே என்கிருர். நம் உயிர்மர்மமான நிலையிலே நலிந்த ராவணனை நலிகைக்கு இசைவின்றிக்கேயிருப்பா னென்? என்னில்: விபீஷணனைப்போலே உயிரோடே தலைசாய்க்குமாகில் வ்யர்த்தமே கொல்லுகிறதென்? என்னும் நினைவாலேயென்று கருத்து. (இச்சூந்) "அங்குல்யக்ரந் தானும் வேண்டா; நம்முடைய ஸங்கல்பமே ஹேதுவாக அழிக்கவல்லோம்" என்று இவருடைய பயநிவ்ருத்திக்காகத் தம்முடைய ஈச்வரத்வத்தை ஆவிஷ்கரிக்கிருர் என்றுமாம். (ஹரிகணேஶ்வர) நாம் மாட்டாதொழிந்தால் ஸபரிகரரான நீர் உளீர் என்று கருத்து. ப்ரேமாந்தராய் நம்மை அறியா தொழிந்தால் உம்மை அறியாதொழியவேணுமோ?

இவ்வளவு திறமையுள்ளவராகில், ராவணன் முதலான எதிரிகள் அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமலிருப்பதற்குக் காரணமென்ன? எனில்: (விரும்பினேனாகில்) அழிக்கமுடியாமையால் அவர்கள் உயிர்வாழ்கிருர்களல்லர்; அழிக்கநினைக்காமையாலே உயிர்வாழ்கிருர்களித்தனை. தமக்கு உயிர்நிலையான பிராட்டி திறத்துத் துன்பம் விளைத்த ராவணனை இன்னமும் அழிக்க நினைக்காததுதான் ஏன்? எனில்: "விபீஷணனைப்போலே உயிரோடே நம்மிடம் சரணமடைந்தானாகில், ராக்ஷஸஜாதிமுழுவதும் வாழலாம்; வீணாக அனைவரையும் அழிப்பானேன்" என்னும் நினைவாலேயே அழிக்க ஸங்கல்பம் செய்யவில்லை என்று கருத்து. அன்றிக்கே, (விரும்பினேனாகில்) என்று, "விரல் நுனியும் வேண்டியதில்லை; நான் ஸங்கல்பித்தேனாகில் ராவணன் அழிவான்" என்று, சுக்கிரீவனுடைய பயம் தெளிவதற்காகத் தம்முடைய ஸர்வேச்வரத் தன்மையை வெளிப்படுத்துகிருர் என்றும் கொள்ளலாம். (வானரர் தலைவரே) அப்படியே ஒருகால் என்னால் முடியாவிடினும், வானரசேனையோடுகூடிய நீர் இருக்கிறீரே. மஹாபலசாலியான உமக்கு ராவணன் ஒரு பொருளோ? அன்பினால் அறிவு கலங்கி என் பலத்தை அறியாதுபோனாலும், உம்முடைய பலத்தைக் கூடவா நீர் அறியாதிருக்கவேண்டும்? என்று கருத்து.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 24-வது ச்லோகம்

श्रूयते हि कपोतेन शत्रुः शरणमागतः।
अर्चितश्च यथान्यायं स्वैश्च मांसैर्निमन्त्रितः॥

ச்ரூயதே ஹி கபோதேந ஶத்ரு: ஶரணமாகத:।
அர்ச்சிதஶ்ச யதாந்யாயம் ஸ்வைஶ்ச மாம்ஸைர் நிமந்த்ரித:॥

பதவுரை:—ஶரணம்—இருப்பிடத்தைக் குறித்து, ஆகத:-வந்தவனை, ஶத்ரு:—எதிரியான வேடன், கபோதேந—புருவிஞல், யதாந்யாயம்—முறைப்படி, அர்ச்சித: ச—பூஜிக்கவும் பட்டான்; ஸ்வை:-தன்னுடைய, மாம்ஸை: ச-மாம்ஸங்களாளாலும், நிமந்த்ரித: ச—விருந்தளிக்கவும்பட்டான் (என்று) ஶ்ரூயதே ஹி—கேட்கப்படுகிறதன்றோ.

அவதாரிகை:— தம்முடைய பலத்தைக் காட்டக்கண்ட மஹாராஜர் நெஞ்சு நெகிழ்ந்தவளவிலே, நாமும் பலஹீநராய், அவனும் நமக்கு பாதகனுனலும் விடவொண்ணுமைக்கடியான ஸத்துக்கள் அநுஷ்டித்த இதிஹாஸத்தைக் கேளீர் என்று கபோதோபாக்யானத்தை அருளிச்செய்கிருர்.

வ்யா:— (ஶ்ரூயதே) "स्मर्यते" (ஸ்மர்யதே) என்னுதே "श्रूयते" (ச்ரூயதே) என்கிறது,- வேதம்போலே கேட்டுப்

அவதாரிகை:— தம்முடைய அதிமாநுஷமான பலத்தைக் காட்டக் கண்ட சுக்கிரீவன் நெஞ்சிலே விபீஷணன் விஷயமாகச் சிறிது இரக்கம் உண்டானவளவில், "நாம் பலசாலி; அவனுல் நம்மை ஒன்றும் செய்ய முடியாது என்பது ஒருபுறமிருக்கட்டும்; நாமும் பலமற்றவராய், அவனும் நமக்குத் தீங்கிழைக்கவல்லவனுனுலும், சரணமடைந்தவனுகையாலே அவனை விடக்கூடாது என்பதை நிரூபிக்கும் நல்லோர்களின் அநுஷ்டானமாகிற இதிஹாஸத்தைக் கேளீர்" என்ற கபோதோபாக்கியானத்தை (ஒரு புருவின் கதையை) அருளிச்செய்கிருர்.

வ்யா:—(கேட்கப்படுகிறது) 'நினைக்கப்படுகிறது' என்னுமல், 'கேட்கப் படுகிறது' என்றதனுல், ஸ்ம்ருதிகளைப்போலே ஒரு சுருதியை நினை

போருவதொன்று. வர்த்தமாந நிர்த்தேசம்,– **"पूर्वे पूर्वेभ्यो वच एतदूचुः" (பூர்வே பூர்வேப்$_4$யோ வச ஏததூ$_3$சு:)** என்னும்படியே ஸம்ப்ரதாயவிச்சேதமின்றிக்கே போருகை. அங்ஙனன்றிக்கே, கேட்டேபோமித்தனைபோக்கி, அநுஷ்டிக்கஅரிது என்கிறது என்றுமாம். (ஹி) இக்ஷ்வாகு ராஜ்யத்தைப்போலே வாநரராஜ்யத்திலும் இதுப்ரஸித்தமன்றோ. (கபோதேந) சாஸ்த்ராதிகாரிகளாய் விவக்ஷிதரான நாம் விசாரியாநின்றோம்; ஒரு திர்யக் அநுஷ்டித்துநின்றது என்று கருத்து. ஏகவசநத்தாலே. நம்மைப்போலே விலக்குகைக்குப் பரிகரமில்லாமையாலும், தன் அபிமாநாந்தர்ப்பூதையான பேடை ஸங்கிஹிதையாய், அதிலே மூட்டுகையாலுமிறே சரணாகதஸம்ரக்ஷணம் பண்ணலாயிற்று என்று கருத்து.

வுறுத்துவதன்மூலம் ப்ரமாணமாகிற இரண்டாந்தரப்பிரமாணமன்று; நேரே கேட்கப்பட்டே அறியும் சுருதியைப்போலே முதல்தரப்பிரமாணம் என்று அறிவுறுத்தப்படுகிறது. 'கேட்கப்படுகிறது' என்ற நிகழ்காலப் பிரயோகத்தாலே, "முன்னோர்கள் முன்னோர்களுக்கு இவ்வார்த்தையை உரைத்தனர்" [யஜுர்-காடகம் ப்ர-3-9] என்கிறபடியே, வேதத்தைப் போலே ஆசார்யசிஷ்யபரம்பரையிலே இடைவெளியில்லாமல் எக்காலத்திலும் தொடர்ந்து கேட்கப்படுகிறது என்று உணர்த்தப்படுகிறது. அப்படியல்லாமல், என்றும் கேட்டுப்போகலாமேயொழிய ஸாமாந்யர்களால் அநுஷ்டிக்க அரிதாயிருப்பது என்பதைக் குறிப்பதற்காக 'கேட்கப்படுகிறது' என்கிறதாகவுமாம். (அன்றோ) இக்ஷ்வாகு ராஜ்யத்திற்போலே, வாநரராஜ்யத்திலும் இது பிரஸித்தமாயிருப்பதன்றோ. (புறாவினால்) சாஸ்திரங்களிற்சொன்ன விதிநிஷேதங்களைப் பின்பற்றவேண்டியவர்களாகச் சொல்லப்படுமவரான நாம் சரணமடைந்தவனை ஏற்றுக்கொள்வதா வேண்டாமா என்று ஆராய்கின்றோம். பகுத்தறிவற்ற ஒரு பிராணி அநுஷ்டித்து நின்றது என்று கருத்து. (புறாவினால்) என்றவிடத்தில் பன்மையில்லாமல், ஒருமையாகப் படித்ததால், என்னை சரணாகதரக்ஷணத்தினின்றும் விலக்குவதற்கு நீங்கள் இருப்பதுபோலே, அப்புறாவை விலக்குவதற்கு ஒருவருமில்லாமையாலும், பிராட்டியைப் பிரிந்திருக்கும் என்னைப்போலல்லாமல், தன் அபிமானத்தில் அடங்கியதாயிருக்கையாலே, தன்னைச்சொன்னால் அதையும் சொன்னதாம்படியிருக்கும் பெண்புறா, அருகில் வேடனின் கூட்டிலேயேயிருந்து சரணாகதரக்ஷணம் செய்யும்படி தூண்டுகையாலுமன்றோ அதற்கு சரணாகதரக்ஷணம்

(ஶத்ரு:) ஶத்ருஸம்பந்தத்தாலே நாம் விசாரியாநின்றோம்; ஸாக்ஷாத் ஶத்ருவிறே அவன். (ஶரணமாகத:) பந்துக்களை யடையவிட்டு, ஸ்வநிகர்ஷபூர்வகமாகப் புகுந்த இவனை விசாரியாநின்றோம்; தான் இருந்த நிழலிலே வந்ததுவே ஹேதுவாக ரக்ஷித்தது. (அர்ச்சிதஶ்ச) நாம் இவனை ஸ்வீ கரிக்கையிலே ஸந்தேஹியாநின்றோம்; அது பூஜ்யரைப் போலே ஆராதித்தது. அதாகிறது—ஶீதபரிஹாராதிகளைப் பண்ணுகை. (யதா₂ந்யாயம்) ஶத்ருவை ஆராதித்ததும் தனக்கோரேற்றமாக நினைத்திருக்கையன்றிக்கே, ப்ராப்த மென்றிருக்கை. ஶீதபரிஹாராதிகள்மாத்ரம் பண்ணுகை யன்றிக்கே, (ஸ்வைஶ்ச மாம்ஸை:) பக்ஷிகளுக்கு தேஹாத்ம

பண்ணமுடிந்தது என்று கருத்து. (எதிரி) எதிரியான ராவணனோடு விபீஷணனுக்கு உண்டான உறவைக்கொண்டு நாம் ஆராய்கின்றோம்; நேரே மனைவியைப்பிடித்த எதிரியை ரக்ஷித்தது அது. (இருப்பிடத்தை அடைந்தவன்) ''த்யக்த்வா புத்ராம்ச்ச தா₃ராம்ச்ச ராக₄வம் சரணம் க₃த:'' [ரா-யு 17-14]என்கிறபடியே உறவினரையெல்லாம் விட்டுத் தன் தாழ்வை முன்னிட்டுக்கொண்டு சரணம்புகுந்த விபீஷணனை ஆராய்கின்றோம் நாம்; ''உபாயே க்₃ருஹ ரக்ஷித்ரோ: சப்₃த₃: சரணமித்யயம் வர்த்ததே'' [அஹிர் 7-29] [உபாயம், வீடு, ரக்ஷிப்பவன் என்னும் மூன்றுபொருள் களையுடையது 'சரணம்' என்னும் சப்தம்] என்கிறபடியே சரணசப்தம் வீடாகிற இருப்பிடத்தைக் குறிக்குமாகையாலும், இவனிடம் இருப்பிடத் திற்கு வந்ததே உள்ளதாகையாலும் (சரணாகத:) என்று இருப்பிடத்திற்கு வந்தவனைக் குறிக்கிறது இங்கு; மனோவாக்காயங்களால் சரணடைந்த விபீஷணனைப்போலல்லாமல் தானிருந்த மரத்தின் நிழலிலே வந்ததுவே காரணமாகப்புறு வேடனை ரக்ஷித்தது. (பூஜிப்பதும் செய்தது) நாம் இவனை ஏற்றுக்கொள்வதற்கே ஐயப்படாநின்றோம். அது பூஜிக்கத்தக்க வர்கள் அர்க்யபாத்யாதிகளைக் கொடுத்து ஆராதிப்பதுபோலே ஆராதித்தது. அதாவது,- உலர்ந்தகுச்சி முதலியவற்றைக்கொண்டு தீமூட்டி, அவ னுடைய குளிரைப்போக்குவது முதலானவற்றைச் செய்தது. (முறைப்படி) எதிரியைப் பூஜித்தது தனக்கு ஒரு பெருமையாக நினைத்திராமல், செய்யவேண்டிய கடமையைச் செய்ததாய் நினைத்திருந்தது. பெருமைக் காகச் செய்வது முறைப்படி செய்வதாகாது; கடமையாகச் செய்வதே முறைப்படி செய்வது என்று கருத்து. குளிரைப்போக்கியது முதலிய உபசாரங்களை மாத்திரமோ செய்தது? (தானுகிற மாம்ஸங்களாலே

விப₄ாகஜ்ஞானமில்லாமையாலே தானான மாம்ஸங்களாலே. ஸ்வஶப்தம் ஸ்வரூபத்திலும் வர்த்திக்கும்; ஸ்வத்திலும் வர்த்திக்கும். ப்ரக்ருத்யாத்மவிவேகம் பண்ணியிருக்கிற நாமிறே ஸந்தேஹிக்கிறோம். (நிமந்த்ரிதஶ்ச) தன்னை அழிய மாறிவிருந்திட்டது.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 25-வது ச்லோகம்

स हि तं प्रतिजग्राह भार्याहर्तारमागतम्।
कपोतो वानरश्रेष्ठ किं पुनर्मद्विधो जनः॥

ஸ ஹி தம் ப்ரதிஜக்₃ராஹ ப₄ார்யாஹர்த்தாரமாக₃தம்।
கபோதோ வாநரச்ரேஷ்ட₂ கிம் புநர் மத்₃விதே₄ா ஜந:॥

பதவுரை:—வாநரச்ரேஷ்ட—வானரர் தலைவனே! ஸ: கபோத:-அந்த ஆண்புறு, ப₄ார்யாஹர்த்தாரம்-தன் பேடையை அபஹரித்தவனாய், ஆக₃தம்—(தன்னை) அடைந்திருக்கிற, தம்—அந்த வேடனை, ப்ரதிஜக்₃ராஹ—வரவேற்றது; மத்₃வித₄:- என்போன்ற, ஜந:—மனிதன், கிம் புந:—(வரவேற்கவேணு மென்பதைச்) சொல்லவேண்டுமோ?

வ்யா:–(ஸ:) பார்யாவிரஹத்தாலே தளர்ந்துள்ள. (தம்) ஜாதிப்ரயுக்தமான ஶாத்ரவத்தை உடையவனாயுள்ளவனை.

விருந்திட்டது) "ஸ்வீயமாம்ஸை:" [தன்னுடைய மாம்ஸங்களாலே] என்னாமல் "ஸ்வை: மாம்ஸை:" [தானாகிற மாம்ஸங்களாலே] என்கையாலே, தேஹம் வேறு, ஆத்மாவேறு என்னும் அறிவற்ற பக்ஷியென்பதைக் காட்டுகிறது. ஸ்வசப்தம் ஸ்வரூபத்திலும், ஸ்வம்மாகிற உடைமையிலும் பிரயோகிக்கப்படுவதாலும், இங்கு பக்ஷியாகையாலே ஸ்வரூபபரமாகவே கொள்ளக்கடவது. தேஹாத்ம விவேகமில்லாத பக்ஷியானது சரணாகத ரக்ஷணம் செய்திருக்க, அந்த விவேகமுள்ள நாமன்றோ ஐயமுறுகின்றோம். (விருந்திட்டது) தன்னையே நெருப்பில் வீழ்த்தி அழித்துக்கொண்டு விருந்திட்டது.

வ்யா:—(அப்புறு) மனைவியைப் பிரிந்துள்ளமையாலே தளர்ந்திருக்கும் அப்புறு. (அவ்வேடனை) ஜாதியினால் ஏற்பட்ட விரோதிபாவத்தை

(ப₄ார்யாஹர்த்தாரம்)தனக்கு ஆபத்துக்கு உதவக்கடவளாய், ஸஹதர்மசாரிணியாய்த் தன்னைப் பிரியமாட்டாத பார்யையை உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே பிரித்தவனை. (ஆகதம்ஹி) தானிருந்த இடத்திலே வந்ததுவே ஹேதுவாக. (கபோத: ப்ரதிஜக்ராஹ) ரக்ஷணத்திலே அயோக்யமான ஜந்மத்திலே பிறந்த கபோதமானது, த்யாக ஹேதுக்கள் அநேகமுண்டாயிருக்க, ரக்ஷணத்தையும் பண்ணக்கடவதாகப் பரிக்ரஹித்தது. இந்த ஶிஷ்டாசாரத்தால், ராவணன்தானே வரிலும் நமக்குப் பரிக்ரஹிக்க வேண்டிக்காணும் இருப்பது. (வாநரச்ரேஷ்ட) வ்யாக்ர வாநரஸம்வாதத்தாலும், நான் உங்கள் ஶரணாகத ஸம்ரக்ஷணத்தில் தப்பினாலும் உமக்குத் திருத்தவேண்டிக் காணுமிருக்கிறது. (கிம் புநர் மத்₃விதே₄ா ஜந:) திர்யக்கினுடைய அநுஷ்டாநம் இதுவானால், ரகுவம்ஶத்திலே பிறந்த நமக்கு எத்தனை செய்யவேணும்? "दोषो यद्यपि तस्य स्यात्"

உடையவனாயிருக்கும் அவ்வேடனை. (மனைவியை அபஹரித்தவனை) தனக்கு ஆபத்துக்காலத்தில் உதவக்கூடியவளாய், தர்மாநுஷ்டானத்துக்குத் துணையாய், தன்னைப் பிரியவொண்ணாதவளான தன் மனைவியை உடலையும், உயிரையும் பிரித்தாற்போலே பிரித்தவனை. (வந்தவனையன்றோ) தானிருந்தவிடத்துக்கு வந்ததுதான் இவன் செய்தது. அதற்கு மேற்பட ஒன்றில்லை. (புறா ஏற்றுக்கொண்டது) ரக்ஷிப்பதற்கு முடியாத பிறப்பை அடைந்த புறாவானது, ஜந்மவிரோதியாய், மனைவியைப் பிடித்துவந்த வேடனைக் கைவிடுவதற்குக் காரணங்கள் பல இருந்தபோதிலும், அவனை ரக்ஷிப்பதையும் செய்வதாக எண்ணி ஏற்றுக்கொண்டது. இந்த சிஷ்டாசாரத்தைக்கொண்டு பார்க்கும்போது, மனைவியை அபஹரித்த ராவணன் தானே வந்தாலும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியே இருக்கிறது என்கை. (வானரர்தலைவனே!) வ்யாக்ரவாநர ஸம்வாதத்தைப் பார்த்தால், சரணாகதரக்ஷணத்தில் நான் தவறினாலும், திங்கிழைத்த சரணாகதனையும் ரக்ஷித்துப் புகழ்படைத்த வானரத்தின் வழியிலேவந்த நீங்கள் என்னைத் திருத்தவேண்டியன்றோ இருக்கிறது. (என்னைப்போன்ற மனிதன் சரணாகத ரக்ஷணம் செய்யவேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?) பறவையினுடைய அநுஷ்டானம் இதுவானால், ரகுகுலத்திலே பிறந்த மனிதனான நான் எத்தனை செய்யவேண்டும்? "தோஷமிருந்தாலும் இருக்

(தோ3ஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்) என்று நான் சொன்ன ஏற்றமும் திர்யக்குக் கொண்டுபோயிற்றித்தனையிறே. அது செய்தாலும், அது செய்ததைச் செய்தோமித்தனையிறே. இவ்வளவிலே, அருளாளப்பெருமாளெம்பெருமானர், அந்திமத்திற்சொன்ன வார்த்தையை ஸ்மரிப்பது.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 26-வது ச்லோகம்

ऋषेः कण्वस्य पुत्रेण कण्डुना परमर्षिणा।
शृणु गाथां पुरा गीतां धर्मिष्ठां सत्यवादिना॥

ருஷே: கண்வஸ்ய புத்ரேண கண்டு3நா பரமர்ஷிணு ।
ஶ்ருணு கா3தா2ம் புரா கீ3தாம் த4ர்மிஷ்டா2ம் ஸத்யவாதி3நா ||

பதவுரை:—கண்வஸ்ய-கண்வர் என்கிற, **ருஷே:**-ரிஷியினுடைய, **புத்ரேண**-புத்திரராய், **ஸத்யவாதி3நா**-உண்மையே உரைப்பவரான, **கண்டு3நா**—கண்டு என்னும் பெயருள்ள, **பரமர்ஷிணு**—மஹாமுனிவரால், **புரா**—முன்னே, **கீ3தாம்**—அருளப்பட்டதாய், **த4ர்மிஷ்டா2ம்**—அறநெறிவழுவாததான, **கா3தா2ம்**—சுலோகத்தை, **ச்ருணு**-கேட்பீராக.

கட்டுமே" [ரா-யு 18-3] என்று நான் சொன்னதும் எனக்கோர் பெருமையன்று; தோஷம் நிறைந்த வேடனை ரக்ஷித்ததன்மூலம் அப்பெருமையை முன்னமே புறு பெற்றுப்போயிற்றன்றே. நான் தோஷமுடைய விபீஷணனை ஏற்றுக்கொண்டாலும் புறு செய்ததைச் செய்தவனுவேனேயொழிய, எனக்குத் தனியே என்ன ஏற்றமுள்ளது? இவ்விடத்திலே ஓரைதிஹ்யம் அநுஸந்திக்கத்தக்கது. அதாவது:—எம்பெருமானுருடைய சிஷ்யர்களில் ஒருவரான (ஞானஸாரமருளிய) அருளாளப்பெருமாளெம்பெருமானுருடைய கடைசிக்காலத்தில் "தேவரீர் நினைத்திருப்பதென்?" என்று சில ஸ்ரீவைஷ்ணவர்கள் அவரைக்கேட்க, "ஒரு புறுவைப்போலும் நாம் சரணுகதரக்ஷணம் செய்யப்பெற்றிலோம். அப்படிச் செய்யநேர்ந்தாலும் அப்பெருமையை நமக்கு முன்னமே ஒருபுறு பெற்றுப்போனது என்று கடற்கரையிலே பெருமாள் திருவுள்ளம் புண்பட்டார். இத்தன்மையை நினைத்து, சரணுகதரான நாம் பரமபதமடைவதில் ஐயமில்லை என்று நிர்ப்பரனுய்க் கிடந்தேன்" என்று அருளிச்செய்தார் என்பது. [இவ்வைதிஹ்யம் திருவாய்மொழி 6-8-6 ஈட்டிலே எடுக்கப்பட்டுள்ளது.]

அவதாரிகை:—ஆக, கபோதத்தினுடைய அநுஷ்டாநத்தாலும் ஶரணாகதஸம்ரக்ஷணம் கர்த்தவ்யம்; அதுக்குமேலே ஆப்ததமரான கண்டுவாக்யத்தாலும் ஶரணாகதஸம்ரக்ஷணம் பண்ணக்கடவேன்; அத்தைக்கேளும் என்கிறார். ஜ்ஞாந ஹீநமான திர்யக்கையும் ஜ்ஞாநாக்ரேஸரரான ரிஷியையும் ஶரணாகதரக்ஷணத்துக்கு ப்ரமாணமாகச் சொல்லுகையாலே, ஶரணாகதரக்ஷணம் சைதந்யப்ரயுக்தம்; ஜ்ஞாநஸங்கோச விகாஸஹேதுவான ஜந்மத்தில் தாழ்வேற்றங்கள் அப்ரயோஜகங்கள் என்றதாயிற்று.

வ்யா:—(ருஷே: கண்வஸ்ய) ஸகலவேதாந்த தாத்பர்யமான தத்வஹிதங்களை ஸாக்ஷாத்கரித்த கண்வபகவானுடைய. (புத்ரேண கண்டுநா) **"स ह्वोवाच व्यासः पाराशर्यः" (ஸ ஹோவாச வ்யாஸ: பாராசர்ய:)** என்று, பராஶரபுத்ரர் என்று வ்யாஸருக்கு ஆப்திசொன்னாற்போலே, கண்வ புத்ரர் என்று கண்டுவசநத்துக்கு ஆப்தி சொல்லுகிறார்.

அவதாரிகை:—ஆக, புறாவின் அநுஷ்டானத்தால் சரணாகதரக்ஷணம் செய்யத்தக்கதே என்பதைக் கீழே சொன்னேன்; இனி அதற்குமேலே உள்ளதை உள்ளபடி சொல்வாரில் சிறந்தவரான கண்டுவாக்கியத்தாலும் சரணாகதரக்ஷணம் செய்யத்தக்கதே என்பதை அநுஷ்டாநபர்யந்தமாகக் காட்டக்கடவேன்; அவ்வாக்கியத்தைக் கேட்பீர் என்கிறார். அறிவற்ற பறவையையும், அறிவிற்சிறந்த ரிஷியையும் சரணாகதரக்ஷணத்துக்கு ப்ரமாணமாகச் சொல்லுகையாலே, சரணாகதரக்ஷணம் எத்தனையேனும் குறைந்த அறிவுடையவராலும் செய்யத்தக்கது. அறிவில் ஏற்றச்சுருக்கங்களுக்குக் காரணமான பிறப்பில் ஏற்றத்தாழ்வுகள் இதுவிஷயத்தில் காரணமல்ல என்று காட்டப்பட்டது.

வ்யா:—(ரிஷியான கண்வருடைய) எல்லா வேதாந்தங்களின் தாத்பர்யமான தத்வத்தையும், ஹிதத்தையும் நேரேகண்ட கண்வபகவானுடைய. ரிஷி—தத்வதர்சி. (புத்திரரான கண்டுவாலே) "பராசர புத்திரரான வியாஸர் உரைத்தார்" [தை-ஆர 1-9] என்று வேதமானது, பராசரபுத்திரர் என்பதன்மூலம் வியாஸர் உள்ளதை உள்ளபடி சொல்லுமவர் என உணர்த்தினாற்போலே, இங்கு கண்வ புத்திரரின் வார்த்தை என்பதன்மூலம் அது உள்ளதை உள்ளபடி சொன்ன வார்த்தை என்று உணர்த்துகிறார்.

(பரமர்ஷிணு) கண்வருக்குத் தபோபலத்தால்வந்த ஸாக்ஷாத்காரம்; இவனுக்கு அவன் வயிற்றிற் பிறந்தாற்போலே ஸர்வஸாக்ஷாத்காரமும் பிறந்த ஏற்றம் சொல்லுகிறது. (ஶ்ருணு) முன்பே கேட்டுப்போராநிற்க "ஶ்ருணு" என்று சொல்லுவானென்? என்னில்: தம்முடைய மிடுக்கைக் காட்டினவிடத்தில் பிறந்த தெளிவையொழிய, விபீஷண விஷயீகாரத்துக்காக இவர் சொல்லுகிற வசநங்கள் நெஞ்சிற் படாமையாலே ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலேயிருக்க, "கேளீர்" என்கிறார். (புராகீ₃தாம்) இப்போது உம்முடைய நெஞ்சில் தெளிவுக்காகச்சொல்லப்பட்டதல்ல; விலக்ஷணர்க்கு அநுஷ்டிக்கப்படுமதொன்று என்று முன்பே சொல்லப்பட்டதொன்று. "உக்தாம்" என்னாதே, "கீதாம்" என்றது,— பகவதுக்திபோலே அதிகௌரவத்தாலே சொல்லுகிறார்.

(பரமரிஷியாலே) தந்தை கண்வரிலும் சிறந்த ரிஷியென்கை; அவரிலும் இவருக்குச் சிறப்பென்ன? எனில்: கண்வர் தம் தபோபலத்தாலே அனைத்தையும் கண்டார்; இவர் அவ்வளவு சிரமமில்லாமல், கண்வர் வயிற்றிற் பிறந்ததாலேயே அனைத்தையும் கண்டார் என்கை. கண்வரை ரிஷியென்றும் இவரைப் பரமரிஷியென்றும் கூறுவதன்மூலம் இவருக்குள்ள இப்பெருமையைக் காட்டுகிறது. (கேட்பீர்) முன்பே கேட்டுக்கொண்டிருக்க, 'கேட்பீர்' என்று சொல்லுவதன் கருத்தென்னவெனில்: "பிசாசாந் தாநவாந்" என்று தம்முடைய பலத்தைக் காட்டினபோது அதில் தெளிவு பிறந்ததேயொழிய, 'சரணுகதனுன விபீஷணனைக் காப்பாற்றவேண்டும்' என்பதற் குறுப்பாகச் சொன்ன கபோதோபாக்கியானத்திலும் மேலே சொல்லப்போகும் கண்டுபாக்கியானத்திலும் மனம் செலுத்தாமல், 'விபீஷணனுல் என்ன நேரிடுமோ?' என்னும் பயத்திலேயே நெஞ்சு செலுத்தி, சதுரங்கம் (ஆனைக்குப்பு) ஆடுவார் மற்றொன்றிலும் மனம் செலுத்தாததுபோலே ராமபிரான் வார்த்தையில் மனம்செலுத்தாமலிருக்க, "கேளீர்" என்று தொடைதட்டி உணர்த்துகிறார். (முன்பே பாடப்பட்டதை) இப்போது உம்முடைய நெஞ்சில் தெளிவு உண்டாகவேண்டுமென்பதற்காகப் புனைந்து கூறியதன்று; நல்லோர் எவராயிருந்தாலும் அநுஷ்டிக்கவேண்டும் என்னும் எண்ணத்தாலே முன்பே சொல்லப்பட்டதொரு வார்த்தை. ஆகையால் ஐயமுற இடமில்லை. "சொல்லப்பட்டது" என்னுமல், "பாடப்பட்டது" என்றது பகவத்கீதைபோலே இதற்

(த₄ர்மிஷ்டாம் க₃ாத₂ாம்) தர்மங்களில் வெளிறு கழிந்த தர்மம் ஶரணாகதரக்ஷணம் என்று சொல்லுகையாலே ''தர்மிஷ்டாம்'' என்கிறது. (ஸத்யவாதிநா) விப்ரலம்பகவாதமன்று; யத₂ார்த்த₂வாதி₃யாலே சொல்லப்பட்டதென்கை. பூ₄தஹிதவாதி₃நா என்றுமாம்.

யுத்தகாண்டம் 18–வது ஸர்க்கம் 27–வது ச்லோகம்

बद्धाञ्जलिपुटं दीनं याचन्तं शरणागतम्।
न हन्यादानृशंस्यार्थमपि शत्रुं परन्तप॥

ப₃த்₃த₄ாஞ்ஜலிபுடம் தீ₃நம் யாசந்தம் ஶரணாகதம்।
ந ஹந்யாத₃ாந்ருஶம்ஸ்யார்த்த₂மபி ஶத்ரும் பரந்தப॥

பதவுரை:—பரந்தப—சத்துருக்களைத் தவிக்கச் செய்பவனே! பு₃த்த₄ாஞ்ஜலிபுடம்—கூப்பிய கையையுடையவனாகவோ, தீ₃நம்-நெஞ்சில் ஆர்த்தியை உடையவனாகவோ, யாசந்தம்-யாசிக்கும் வார்த்தையையுடையவனாகவோ, ஶரணாகதம்—வீட்டை அடைந்திருக்கிற, ஶத்ரும் அபி—எதிரியையும், ஆந்ருஶம்ஸ்யார்த்தம்-கொடியவனாகாமைக்காக, ந ஹந்யாத்—கொல்லக்கூடாது.

அவதாரிகை:–ஶரணம் புகுகிறவன் ஶத்ருவேயாகிலும், அவனுக்கு முக்யமான ஶரணாகதியில்லையேயாகிலும், ஹிம்

குள்ள பெருமையை நினைத்துச் சொல்லுகிறார். (மிகச்சிறந்த அறவழிநிற்கும் பாசுரத்தை) தர்மங்களில் அஸாரம், அல்பஸாரம், ஸாரம், ஸாரதரம் என்பவற்றையெல்லாம் கழித்து ஸாரதமமான தர்மம் சரணாகதரக்ஷணம் என்று [சாஸ்திரங்களும் இந்த ச்லோகமும்] சொல்லுகையாலே, 'தர்மிஷ்டாம்' [மிகச்சிறந்த தர்மத்தைச் சொல்லுவது] என்கிறது. (உண்மையுரைப்போராலே) வஞ்சிப்பவரின் வார்த்தையன்று, உள்ளதைச் சொல்லுமவராலே சொல்லப்பட்டது என்கை. ''ஸத்யம் பூ₄தஹிதம் ப்ரோக்தம்'' [ஜந்துக்களுக்கு நன்மையளிப்பது ஸத்யம்] என்கையாலே, ஜந்துக்களுக்கு நன்மையளிப்பதைச் சொல்லுமவராலே என்றும் கொள்ளலாம்.

அவதாரிகை:—கண்டுபோக்கியானத்தின் முதல் ச்லோகமான ''ப₃த்₃த₄ாஞ்ஜலி'' என்னும் சுலோகத்தாலே, சரணம் புகுகிறவன் எதிரியே

ஶிக்கலாகாது என்கிறது "ப$_3$த்$_3$த$_4$ாஞ்ஜலி" இதி ச்லோகத்தாலே.

வ்யா:—(ப$_3$த்$_3$த$_4$ாஞ்ஜலிபுடம் தீ$_3$நம் யாசந்தம்) காயிகமான அஞ்ஜலியாதல், மாநஸமான ஆதரமாதல், வாசிகமான ப்ரார்த்தனையாதல் ஒன்றே அமையுமென்கை. (ஶரணாகதம்) க்$_3$ருஹே ஆக$_3$தம். அத$_2$வா, பத்தாஞ்ஜலிப்ரப்ருதிகள் கௌ$_3$ணம்; "ஶரணாகதம்" என்று அத்யவஸாயாத்மக ஜ்ஞாநவிஶேஷத்தைச் சொல்லுகிறது என்னவுமாம். (ஶத்ருமபி ந ஹந்யாத்) கீழ்ச்சொன்னபடியே கௌணமாக ஶரணம் புகவுமாம்; முக்யமாக ஶரணம் புகவுமாம்; ஶரணம்

யானாலும், அவனுக்கு மனோவாக்காயம் மூன்றினாலுமான முக்கியமான சரணாகதி இல்லையேயானாலும், அவனைத் துன்புறுத்தக்கூடாது என்கிறது.

வ்யா:-(கைகூப்பினவனையாவது, நெஞ்சில் நெகிழ்ச்சியையுடையவனையாவது, யாசிப்பவனையாவது) கைகூப்புதலாகிற காயத்தால் (உடம்பால்) ஆனசெயலும், நெஞ்சில் நெகிழ்ச்சியும், வாயால் பிரார்த்தித்தலும், ஆக இம்மூன்றும் சேர்ந்திருக்கும் பூர்ணப்ரபத்தி வேண்டியதில்லை; இம்மூன்றில் ஏதாவதொன்று இருந்தாலும்போதும். (சரணாகதனை) "உபாயே க்$_3$ருஹரக்ஷித்ரோ: சப்$_3$த$_3$: சரணமித்யயம் வர்த்ததே" [அஹிர் 7-29] [உபாயம், வீடு, ரக்ஷகன் என்னும் மூன்றுபொருள்களில் 'சரணம்' என்னும் சொல் பிரயோகிக்கப்படுகிறது.] என்கிறபடியே சரண சப்தம் வீட்டையும் குறிக்குமாகையாலே, இப்படி மனோ வாக் காயங்களில் ஏதாவதொன்றில் வேறுபாட்டுடன் வீட்டை அடைந்தவனை என்கை. அல்லது, முன்சொன்ன மூன்றுவிதமான கௌண (அமுக்கிய) ப்ரபத்தியை உடையவனாய் வந்தாலும்சரி; "மஹாவிச்வாஸ பூர்வகம் த்வமேவோபாயபூ$_4$தோ மே ப$_4$வேதி ப்ரார்த்த$_2$நாமதி: சரணாக$_3$தி:" ['நீயே எனக்கு உபாயமாவாயாக' என்று பெருநம்பிக்கையுடன் பிரார்த்திக்கும் அறிவே சரணாகதியாகும்] என்கிறபடியே 'நீயே உபாயமாவாய்' என்னும் உறுதியான அறிவே முக்கியமான சரணாகதியாகையாலே, அந்த முக்கியமான சரணாகதியையுடையவனாய் வந்தாலும்சரி என்று கூறுவதாகவும் கொள்ளலாம். முக்கிய சரணாகதியானாலும் சரி, முக்கியமல்லாத கௌ$_3$ண சரணாகதியானாலும் சரி பலத்தில் வாசியில்லையென்கை. (எதிரியையும் கொல்லக்கூடாது) "பத்தாஞ்ஜலிபுடம் தீநம் யாசந்தம்" என்கிறபடியே கௌணப்ரபத்தியை அநுஷ்டித்தாலும் சரி; 'சரணாகதம்' என்கிறபடியே

புகுந்தவனை ரக்ஷிக்குமித்தனையொழிய, அவன்பக்கலிலே ஶத்ருத்வமுண்டிறே என்று ஹிம்ஸிக்கக்கடவதன்று. (ஆந்ருஶம்ஸ்யார்த்தம்) ஹிம்ஸியாதொழிகிறது, ரக்ஷகத்வ ப்ரஸித்திக்கோ, பாபம்போகைக்கோ, புண்யஸித்திக்கோ? என்னில்: இத்தனைக்குமன்று; நாட்டார் க்ரூரகர்மாவென்று கூசாமைக்காக. (பரந்தப) கேவலம் ஶத்ருவானாலன்றோ நீர் ஹிம்ஸிக்கக்கடவது; அவன் ஶரணாகதனானாலும் ஹிம்ஸிக்கக்கடவீரோ?

யுத்தகாண்டம் 18–வது ஸர்க்கம் 28–வது ச்லோகம்

आर्तो वा यदि वा दृप्तः परेषां शरणागतः ।
अरिः प्राणान् परित्यज्य रक्षितव्यः कृतात्मना ॥

ஆர்த்தோ வா யதி₃ வா த்₃ருப்த: பரேஷாம் ஶரணாக₃த: ।
அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா ॥

பதவுரை:—பரேஷாம்—சத்துருக்களுள், ஶரணாக₃த: அரி:- சரணமடைந்த சத்துருவானவன், ஆர்த்த: வா—பயந்தவனாகிலும், த்₃ருப்த: யதி₃ வா–பயமற்றவனாகிலும், க்ருதாத்மநா–நல்ல நெஞ்சினனாலே, ப்ராணாந் பரித்யஜ்ய—உயிரைவிட்டு, ரக்ஷிதவ்ய:—காப்பாற்றத்தகுந்தவன்.

முக்கியப்ரபத்தியைச் செய்தாலும் சரி; எவனுயிருந்தாலும் சரணம் புகுந்தவனைக் காப்பாற்றவேண்டுமேயொழிய, அவன் எதிரியென்று துன்புறுத்தலாகாது. (கொடியவனாகாமைக்காக). அவனைத் துன்புறுத்தாமலிருப்பது "இவன் எதிரிகளையும் காப்பாற்றியவன்" என்னும் புகழுக்காகவோ, பாபம் நீங்குவதற்காகவோ, புண்ணியம் பெறுவதற்காகவோ? எனில்: இப்பலன்களுக்காகவன்று; உலகினர் 'கொடியவன்' என்று இவனைக்கண்டு கூசாமைக்காகவே அவனைத் துன்புறுத்தக்கூடாது. துன்புறுத்தினால் உலகம இவனைக் கொடியவன் என இகழும் என்று கருத்து. (எதிரிகளைத் துன்புறுத்துமவரே!) பரமேவ தபதீதி பரந்தப:' [எதிரியையே வருத்துமவன் பரந்தபன்] ஆகையாலே கேவலம் எதிரியாயிருந்தாலன்றோ நீர் துன்புறுத்துவது; அவ்வெதிரி சரணமடைந்தால் துன்புறுத்தலாமோ? என்று கருத்து.

அவதாரிகை:—ஏதேனும் ஒருவழியிலேயாகிலும் ஶத்ரு வந்து சரணம் புகுந்தால் ஹிம்ஸியாதே விடுமது போராது; ஆக்மவானுனல் தன் ப்ராணனை நேர்ந்தாகிலும் ரக்ஷிக்கப் படும் என்கிறது "ஆர்த்தோ வா" என்கிற ச்லோகத்தாலே.

வ்யா:—(ஆர்த்த: யதி₃வா த்₃ருப்த:) பீ₄தனுய் வந்து ஶரணம் புகவுமாம்; அபீ₄தனுக ப₄ாவித்துவந்து ஶரணம் புகவுமாம் என்கிருர். 'த்₃ருப்தப்ரபந்நனும் ரக்ஷிக்கப்படும்' என்கிறவித்தால் தாம், "மித்ரப₄ாவேந ஸம்ப்ராப்தம்" என்ற வதுக்கு ஆட்தவசநமும் உண்டு என்கிருர். (பரேஷாம் ஶரணாக₃த: அரி: ரக்ஷிதவ்ய:) ஶத்ருக்களில் வைத்துக் கொண்டு ஶரணாகதஶத்ருவானவன் ரக்ஷிக்கப்படும். "பரேஷாம்" என்கிறவிடத்திலே ஶாத்ரவம் தோற்றியிருக்கப் பின்பும் அரிஶப்தப்ரயோகம் பண்ணினது அவனுடைய ஶாத்ரவாநுவ்ருத்தித்₃யோதநார்த்தமாக. ஶரணாகதனுனல்

அவதாரிகை:—முக்கியமாகவோ, அமுக்கியமாகவோ எதிரி வந்து சரணம்புகுந்தால், முன் சுலோகத்திற் சொன்னதுபோல் அவனைத் துன் புறுத்தாமலிருந்தால் மாத்திரம் போதாது. நல்லோனுனுல் தன் உயிரை விட்டாகிலும் அவனை ரக்ஷிப்பது தக்கது என்கிறது "ஆர்த்தோ வா' என்கிற சுலோகத்தாலே.

வ்யா:—(ஆர்த்தனுகிலுமாம், த்ருப்தனுகிலுமாம்) விரோதிகளைக்கண்டு பயந்தவனுய்வந்து சரணம் புகவுமாம்; பயமில்லாமலிருந்தும், பயந்தவன் போலே பாவித்துவந்து சரணம்புகுந்தவனுகவுமாம். ஆர்த்தன்—ஆர்த்தி அல்லது பயம் உள்ளவன்; த்₃ருப்தன்—பயமற்றவன். ப₄ாவனையே உடைய த்ருப்தப்ரபந்நனையும் ரக்ஷிக்கவேண்டும் என்றதால், தாம் முதலில் "நண்பனின் பாவனேயோடு வந்தவனையும் கைவிடேன்" [ரா-யு 18-3] என்று. சொன்னதற்கு ஆப்தவசநமாகக் கண்டு வசநத்தைக் காட்டுகிருர். (எதிரி களுக்குள் சரணாகதனுன எதிரி காப்பாற்றத்தக்கவன்) எதிரிகளுக்குள்ளே சரணமடைந்தவனுன எதிரி ரக்ஷிக்கப்படவேண்டும். "எதிரிகளுக்குள்ளே" என்றபோதே இவன் எதிரியென்பது தோற்றியிருக்க, 'சரணாகதனுன எதிரி'என்று மறுபடி எதிரியென்றது ஏதுக்கெனில்: சரணமடைந்த பின்பும் எதிரிடும் தன்மை தொடர்ந்து வருவதைக் குறிப்பதற்காக மறுபடியும்

ஶாத்ரவமுண்டோ? என்னில்: ப்ரக்ருதிவஶ்யராகையாலே குணாநுகுணமாக ஶாத்ரவம் அநுவர்த்திக்கவும் கூடும். அங்ஙனன்றிக்கே, "கொன்றேன், அன்றே வந்தடைந்தேன்" என்கிறபடியே ரக்தஹஸ்தனாய்க்கொண்டு ஶரணம் புகுருகையாலே அக்காலத்திலும் ஶத்ருபுத்தி பண்ணலாம்படியிருக்கையாலே சொல்லிற்றாகவுமாம். (ப்ராணாந் பரித்யஜ்ய) "ப்ராணாநபி பரித்யஜ்ய" என்னாதொழிந்தது ஶரணாகத ரக்ஷணத்துக்கு ப்ராணனைப் பரித்யஜிக்கை ஓரேற்றமன்று என்று தோற்றுகைக்காக. (க்ருதாத்மநா ரக்ஷிதவ்ய:) க்ருத ஸ்வரூபனால் ரக்ஷிக்கப்படும்; ஆத்மவானாலே ரக்ஷிக்கப்படுமென்கை. அங்ஙனன்றிக்கே குருகுலவாஸத்தாலே ஸுஶிக்ஷிதமான மநஸ்ஸையுடையவனாலே ரக்ஷிக்கப்படும் என்றுமாம்.

சொல்லுகிறது. சரணமடைந்தபின் சத்துருத்தன்மை தொடர்ந்துவருமோ? எனில்: ப்ரக்ருதிகாரியமான சரீரம் முதலானவற்றுக்கு வசப்பட்டவர்களாகையாலே அவற்றிலுள்ள ரஜஸ்தமோகுணங்களுக்குத் தக்கவாறு சத்துருத்தன்மை தொடரவும்கூடும். அப்படியல்லாமல், "கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோள் ஒன்றில்லாமையினால்...அன்றே வந்தடைந்தேன்" [பெரியதிரு 1-9-3] என்கிறபடியே, பல உயிர்களைக்கொன்று, ரத்தக்கையையும் கழுவாதே சரணம்புகுகையாலே அக்காலத்திலும் இவன் எதிரியென்று நினைக்கலாயிருக்கையாலே சொன்னதாகவும் கொள்ளலாம். (உயிரை விட்டு) "உயிரையும்விட்டு" என்று உம்மையிடாதொழிவானேன்? எனில் சரணாகதரக்ஷணம் செய்வதற்காக உயிரைவிடுவதும் ஒரு பெரிய செயலன்று என்று தோற்றுவதற்காக உம்மையிடவில்லை. (க்ருதாத்மாவால் ரக்ஷிக்கப்படவேண்டும்) ஆத்மசப்தம் ஸ்வரூபத்தைச் சொல்லுமாகையாலே 'க்ருத ஸ்வரூபனால் ரக்ஷிக்கப்படவேண்டும்' என்று பொருளாகிறது. அதாவது,- வசப்படுத்தப்பட்ட ஸ்வரூபத்தையுடையவனாலே ரக்ஷிக்கப்படவேண்டுமென்கை. அப்படியல்லாமல், ஆத்மசப்தம் மனத்தையும் சொல்லுமாகையாலே, குருகுலவாஸத்தாலே நன்கு திருத்தப்பட்ட மனத்தை உடையனாலே ரக்ஷிக்கப்படவேண்டும் என்றும் பொருள்கொள்ளலாம். உயிரைக் கொடுத்தாவது சரணாகதனான எதிரியைக் காத்தால்தான் அவன் நல்னெஞ்சினனாவான் என்று கருத்து.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 29-வது ச்லோகம்

स चेद्भयाद्वा कामाद्वा मोहद्वापि न रक्षति।
स्वया शक्त्या यथातत्वं तत्पापं लोकगर्हितम्॥

ஸ சேத் $ப_4$யாத்$_3$வா காமாத்$_3$வா மோஹாத்$_3$வாபி ந ரக்ஷதி।
ஸ்வயா ஶக்த்யா யத$_2$ாதத்வம் தத்பாபம் லோககர்ஹிதம்॥

பதவுரை:—ஸ:—அவன், $ப_4$யாத் வா —(உயிருக்கு) பயந்தோ, காமாத் வா—பொருளாசையாலோ, மோஹாத் வா அபி-அறியாமையினாலோ, யத$_2$ாதத்வம்-உண்மையாக, ஸ்வயா ஶக்த்யா—தனக்குள்ள சக்தியைக்கொண்டு, ந ரக்ஷதி சேத்-(சரணமடைந்தவனைக்) காப்பாற்றாவிடில், தத்பாபம்-(அவனுடைய) அந்தப் பாபம், லோககர்ஹிதம்—ஜனங்களால் இகழத்தக்கது.

அவதாரிகை:—ப்ராணசாபலத்தாலே ஶரணாகதனை ரக்ஷியாவிடில் வரும் த்ருஷ்டதோஷத்தைச் சொல்லுகிறது.

வ்யா:-($ப_4$யாத்$_3$வா) ப்ராணபயாத் வா. (காமாத் வா) இவனுக்கு $பா_3$த$_4$கனானவன் பக்கலிலே கைக்கூலி கொள்ளுதல்; அவன்பக்கல் பக்ஷபாதத்தாலேயாதல். (மோஹாத்$_3$வாபி) இது கர்த்தவ்யம், இது அகர்த்தவ்யம் என்று அறியாமையாலேயாதல். (ஸ: யதாதத்வம் ஸ்வயா ஶக்த்யா ந ரக்ஷதி சேத்) அவன்

அவதாரிகை:—உயிரில் ஆசையாலே, சரணாகதனை ரக்ஷிக்காவிடில் இம்மையில் வரும் தீமையைச் சொல்லுகிறது.

வ்யா:—(பயத்தினாலோ) 'உயிர் போய்விடுமோ' என்னும் பயத்தாலோ (காமத்தாலோ) சரணமடைந்தவனுக்கு எதிரியினிடம் பொருள் பெற்றுக் கொண்டதாலோ, அல்லது அவனிடம் (சரணாகதனின் சத்ருவிடம்) பக்ஷபாதத்தாலோ. (மோஹத்தாலோ) 'சரணாகதஸம்ரக்ஷணம் செய்யத் தக்கது; அவனைக் கைவிடுதல் செய்யத்தகாதது' என்று அறியாமையாலோ. (அவன் உள்ளபடி இயன்றவரையில் காப்பாற்றவில்லையாகில்) அவன் உண்மையாகத் தனக்கு சக்தியிருக்கும் வரையில் ரக்ஷிக்கவில்லை

மெய்யாகத்தன் ஶக்தியுள்ளவளவும் ரக்ஷியானுகில்; தன் நெஞ்சறிய யாவத்ப்ராணுங் ரக்ஷியானுகில் என்கை. (தத் பாபம் லோக க$_3$ர்ஹிதம்) ஶரணுகதனே ரக்ஷியாதொழிந்த பாபம் "ஸதாமேதத$_3$க$_3$ர்ஹிதம்" என்கிறவளவன்றிக்கே, இருந்ததே குடியாக கர்ஹிக்கும் என்கிறது.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம், 30-வது ச்லோகம்

विनष्टः पश्यतस्तस्य रक्षिणः शरणागतः।
आदाय सुकृतं तस्य सर्वं गच्छेदरक्षितः॥

விநஷ்ட: பஶ்யதஸ்தஸ்ய ரக்ஷிண: ஶரணுக$_3$த: ।
ஆத$_3$ாய ஸுக்ருதம் தஸ்ய ஸர்வம் க$_3$ச்சே$_2$த$_3$ரக்ஷித: ॥

பதவுரை:—**ரக்ஷிண:**—ரக்ஷகனுன, **தஸ்ய பஶ்யத:**—அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போது, **அரக்ஷித:**— ரக்ஷிக்கப் படாதவனுய், **விநஷ்ட:**—அழிந்துபோன, **ஶரணுகத:**— ஶரணமடைந்தவன், **தஸ்ய ஸர்வம் ஸுக்ருதம்**—அவனுடைய எல்லாப் புண்ணியத்தையும், **ஆத$_3$ாய**—பெற்றுக்கொண்டு, **க$_3$ச்சே$_2$த்**-(மேலுவகம்) சென்றுவிடுவான்.

அவதாரிகை:—அத்$_3$ருஷ்டதோ$_3$ஷம் சொல்லுகிறது "விநஷ்ட:" என்கிற ச்லோகத்தாலே.

ய ாகில். சக்தியில்லையென்றே ரக்ஷித்ததாகவோ வேஷம்போடாமல், தன் நெஞ்சறிய, உயிருள்ளவரை ரக்ஷிக்கவில்லையாகில் என்று கருத்து. (அந்தப் பாபம் உலகினரால் இகழத்தக்கது) சரணமடைந்தவனே ரக்ஷியா மலிருந்த பாபச்செயலே "நல்லோர்களுக்கு இது இகழாமைக்குறப்பு" [ரா-யு 18-3] என்கிறபடியே நல்லோர்கள் மாத்திரமல்லாமல், உயிர் வாழும் சேதனர்களனேவரும் இகழ்வார்கள் என்கிறது.

அவதாரிகை:—சரணுகதனே ரக்ஷியாவிடில், மறுமையில் உண்டாகும் தீமையைச் சொல்லுகிறது "விநஷ்ட:" என்றுதொடங்கும் ச்லோகத்தாலே.

வ்யா:— (ரக்ஷிணஸ் தஸ்ய பஶ்யத: அரக்ஷித: விநஷ்ட: ஶரணாகத: தஸ்ய ஸுக்ருதம் ஸர்வமாதாய கச்சேத்) என்று அந்வயம். ரக்ஷிக்கிறவன் காணாநிற்க, அவன் அநாதரிக்கையாலே முடிந்த ஶரணாகதனானவன், அற்றைக்கு முன்பு ஶரண்யார்ஜித ஸுக்ருதத்தையடைய வாங்கிக்கொண்டு, இவனுடைய ஸுக்ருதபலமான லோகத்தேறப்போம்.

யுத்தகாண்டம் 18–வது ஸர்க்கம் 31–வது ச்லோகம்

अस्वर्ग्यमयशस्यं च बलवीर्यविनाशनम्

அஸ்வர்க்யமயஶஸ்யம் ச பலவீர்ய விநாஶநம்

பதவுரை:—அஸ்வர்க்யம்–(புண்ணியம்) சுவர்க்கத்தைத் தராமலிருக்கும்படி செய்வதாயும், அயஶஸ்யம்—புகழை அழிப்பதாயும், பலவீர்ய விநாஶநம் ச—பலத்தையும், வீர்யத்தையும் அழிப்பதாகவும் (சரணாகதனை ரக்ஷியாமை ஆகிறது.)

அவதாரிகை:— த்ருஷ்டாத்ருஷ்டங்கள் இரண்டிலும் வரும் அநர்த்தம் சொல்லுகிறது "அஸ்வர்க்யம்" என்கிற ச்லோகத்தாலே.

வ்யா:–(ரக்ஷிக்கவேண்டியவன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ரக்ஷிக்கப்படாமல் அழிந்த சரணாகதன் ரக்ஷிக்கத்தவறியவனுடைய புண்ணியமனைத்தையும் எடுத்துக்கொண்டு சென்றுவிடுவான்) என்று கூட்டிப் பொருள்கொள்ளவேணும். ரக்ஷிக்கவேண்டியவன் கண்டுகொண்டிருக்கும் போதே, அவன் அலட்சியம் செய்கையாலே அழிந்த சரணாகதன், அது வரையில் சரண்யன் ஸம்பாதித்து வைத்திருக்கும் புண்ணியங்கள் முழுவதையும் எடுத்துக்கொண்டு, அப்புண்ணியங்களாலே அந்த சரண்யன் அடையவேண்டிய லோகங்களுக்குச் சென்றுவிடுவான். ரக்ஷிக்கத்தவறியவனுக்கு மறுமையில் அந்த லோகங்களில்லாமற்போம் என்று கருத்து.

அவதாரிகை:—இம்மையிலும், மறுமையிலும் வரும் தீமைகளைச் சொல்லுகிறது கண்டு கீதையில் கடைசியான "அஸ்வர்க்யம்" என்று தொடங்கும் ச்லோகத்தாலே. 'அஸ்வர்க்யம்' என்று மறுமையிலும், பிற் பகுதியால் இம்மையிலும் வரும் தீமையைச் சொல்லுகிறது.

வ்யா:—(அஸ்வர்க்யம்) "ஆத₃ாய ஸுக்ருதம் தஸ்ய க₃ச்சேத்" என்று அவன் கொண்டுபோக வேண்டாதே தானே நிஷ்பலமாம். (அயஶஸ்யம் ச) முன்பு பலரையும் ரக்ஷித்து ஸம்பாதித்த யஶஸ்ஸு நசிக்கும். (ப₃ல வீர்ய விநாஶநம்) பலமாகிறது தோள்வலி; வீர்யமாகிறது ரக்ஷண த₄ர்மத்தில் அநாயாஸதை. அவையிரண்டுமுண்டாயிருக்க ஶரணாகதனை ரக்ஷியாமையாலே, இவைதானே நசிக்கும்.*

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம், 32-வது ச்லோகம்

करिष्यामि यथार्थं तु कण्डोर्वचनमुत्तमम् ।
धर्मिष्ठं च यशस्यं च स्वर्ग्यं स्यात्तु फलोदये ॥

கரிஷ்யாமி யத₂ார்த்த₂ம் து கண்டோ₃ார் வசநமுத்தமம் ।
த₄ர்மிஷ்ட₂ம் ச யஶஸ்யம் ச ஸ்வர்க்₃யம் ஸ்யாத்து
ப₂லோத₃யே ॥

பதவுரை:— கண்டோ₃:— கண்டு மஹாமுனியினுடைய, உத்தமம்—உயர்ந்ததும், யத₂ார்த்த₂ம்—உண்மையானதுமான, வசநம்—வார்த்தையை, கரிஷ்யாமி—அநுஷ்டிக்கப்போகிறேன்; (அந்த வசனம்) தர்மிஷ்டம்—அறநெறி வழுவாத

வ்யா:—(சுவர்க்கபலத்தைத் தருவிக்காததாயும்) "அவனுடைய புண்ணியத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிடுவான்" [ரா-யு 18-30] என்று அவன் கொண்டுபோகவேண்டிய சிரமமுமில்லாமல், சரணாகதனை ரக்ஷியாமையாலே அந்தப்புண்ணியம்தானே பலனற்றதாய்விடும். (புகழையும் அழிக்கும்) முன்பு பலரையும் ரக்ஷித்துப்பெற்ற புகழையும் அழிக்கும். (பலத்தையும் வீர்யத்தையும் அழிக்கும்) பலமாவது,-தோள்வலி, வீர்யமாவது,-பிறரை ரக்ஷிக்கும்போது சிரமமில்லாமல் ரக்ஷிக்கை. இவையிரண்டும் இருந்தபோதிலும், சரணமடைந்தவனை ரக்ஷிக்காமையாலே, இவை தாமே அழிந்துபோம்.*

---

*குறிப்பு:-"ஏவம் தோ₃ஷோ மஹாநத்ர ப்ரபந்நாநாமரக்ஷணே" [ப்ரபன்னர்களை ரக்ஷியாவிடில், இம்மாதிரி பெரிய தோஷமுண்டாகும்] என்று இந்த ச்லோகத்திற்குப் பூர்வார்த்தம் ஒன்று உள்ளதாகவும், அது ஸ்பஷ்டார்த்தமாகையாலே வ்யாக்யானம் செய்யப்படவில்லையென்றும் பழைய பதிப்புகள் கூறும்.

தாகவும், யஶஸ்யம்—புகழளிப்பதாகவும், ப₂லோத₃யே—பலனுண்டாகும் போது, ஸ்வர்க்₃யம் ச-சுவர்க்கத்தையளிப்பதாகவும், ஸ்யாத்—ஆகும்.

அவதாரிகை:—த்₃ருஷ்டாத்₃ருஷ்டங்களிரண்டிலும் நன்மையைத் தருவதாயிருந்துள்ள கண்டு₃வினுடைய வசநத்தை அநுஷ்டிப்பேன் என்கிறார்.

வ்யா:—(கரிஷ்யாமி யதா₂ர்த்த₂ம் து) உக்தமான அர்த்தங்களில் ப்ரஶம்ஸாதிகளின்றிக்கே, மெய்யேயாயிருக்கை. (கண்டோ₃ர் வசநமுத்தமம்)வசநத்துக்கு உத்தமத்வமாவது, ஶரணம் புகுகிறவன் ஶத்ருவென்றாலும், ரக்ஷிக்குமிடத்துத் தன்னையழியமாறியிருந்ததேயாகிலும், அவனை ரக்ஷிக்க வேணும் என்னும் பாசுரத்தை உடைத்தாயிருக்கை. (த₄ர்மிஷ்ட₂ம் ச) அவனுடைய வசநாநுஷ்டாநம் த₄ர்மாதநபேதமாயிருக்கும். அதாகிறது. ஆந்ருஶம்ஸ்யமாகிற பரம தர்மத்தைப் பற்றியிருக்கை. (யஶஸ்யம் ச) நாட்டார்

அவதாரிகை:—இம்மைமறுமைகள் இரண்டிலும் நன்மையைத் தருவதாயிருக்கும் கண்டுவின் வார்த்தையை அனுஷ்டிக்கப்போகிறேன் என்கிறார்.

வ்யா:—(உண்மையான வசனத்தை அநுஷ்டிப்பேன்) கண்டு கீதையில் சொல்லப்பட்ட விஷயங்களில் புகழற்றதைப் புகழ்ந்துசொல்லுவது முதலான குற்றங்களில்லாமல் உண்மையேயாயிருக்கிறபடி. (கண்டுவின் உத்தமமான வசனத்தை) "சரணம் புகுந்தவன் அநுகூலனானாலும் ரக்ஷிக்காதே' என்பது அதமமான வார்த்தை; 'அநுகூலனை ரக்ஷிப்பாய்' என்பது மத்யமமான வார்த்தை; 'உதாஸீனனையும் ரக்ஷிப்பாய்' என்பது 'உத்' ஆன சிறந்த வார்த்தை; 'எதிரியையும் ரக்ஷிப்பாய்' என்பது 'உத்தரம்' ஆன (மிகச்சிறந்த) வார்த்தை; 'சரணம் புகுந்தவன் எதிரியானாலும், உயிரையும் கொடுத்து ரக்ஷிக்கவேண்டியிருந்தாலும், ரக்ஷிப்பாய் என்று சொல்லுவதாகையாலே கண்டுவின் வார்த்தை 'உத்தமம்' ஆன (மிகமிகச்சிறந்த வார்த்தை) என்கிறது. (அறவழி வழுவாதது) கண்டுவின் வார்த்தையை அநுஷ்டிப்பது அறவழியினின்றும் மீறாததாயிருக்கும். அதாவது:—"ஆந்ருசம்ஸ்யம், பரோத₄ர்ம:" [ரா-ஸு 38-41] [இரக்கமே மேலான அறம்] என்கிற மிகச்சிறந்த தர்மத்தைப் பற்றியிருக்கை. (புகழையளிப்பதும்கூட)

இருந்ததே குடியாகக் கொண்டாடும்படியான ஏற்றத்தை யுடைத்தாயிருக்கும். (ஸ்வர்க்$_3$யம் ஸ்யாத்து ப$_2$லோத$_3$யே) பலோதயத்தில் ஸ்வர்க்கத்தைத் தரக்கடவதாயிருக்கும். ஸ்வர்க்கமென்கிறது நிரதிஶயஸுகத்தை. **"निरस्तातिशयाह्लाद-सुखभाव"** (நிரஸ்தாதிஶயாஹ்லாத$_3$ஸுக$_2$ப$_4$ாவ:)

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 33-வது ச்லோகம்

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम॥

ஸக்ருதே$_3$வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அப$_4$யம் ஸர்வபூ$_4$தேப்$_4$யோ த$_3$தா$_3$ம்யேதத்$_3$ வ்ரதம் மம ॥

பதவுரை:— **ஸக்ருத் ஏவ** — ஒரு தரமே, **ப்ரபந்நாய** — ப்ரபத்தி பண்ணினவன் பொருட்டும், **தவ**—உனக்கு (அடியேனாய்), **அஸ்மி**—ஆகிறேன், **இதி**—என்று, **யாசதே ச**—யாசிக்கிறவன் பொருட்டும், **ஸர்வபூ$_4$தேப்$_4$ய:**— எல்லாப் பிராணிகளிடத்தில் நின்றும், **அப$_4$யம்**—பயமின்மையை, **த$_3$தா$_3$மி**—பண்ணிக் கொடுக்கிறேன்; **ஏதத்**—இது, **மம**— எனக்கு, **வ்ரதம்**—விடமுடியாத ஸங்கல்பம்.

அவதாரிகை:—இப்படி சொன்னவிடத்திலும் மஹாராஜர் நேராகத் தெளியாதே சலிதஹ்ருதயராயிருக்கிற

உலகில் உள்ளார் அனைவரும் புகழும்படியான பெருமையை உடையதாயிருக்கும். (பலனுண்டாகும்போது சுவர்க்கத்தை அளிப்பதாயிருக்கும்) பலனுண்டாகும் காலத்தில் சுவர்க்கத்தைத் தரக்கூடியதாயிருக்கும். இங்கு சுவர்க்கம் என்றது மிகச்சிறந்த ஸுகமான மோக்ஷத்தை. "மற்ற எல்லாவற்றையும் விஞ்சியிருக்கும் ஸுகமாயிருக்கை" [வி-பு 6-5-59] என்கிற பகவத்ப்ராப்தியாகிற மோக்ஷத்தையும் கொடுக்கும் என்கை.

அவதாரிகை:—இவ்வளவு உரைத்தபின்பும், சுக்கிரீவன் நன்றாகத் தெளியாமல், சஞ்சலப்படும் நெஞ்சையுடையவனாயிருப்பதைக்கண்டு, அவனை நன்கு தெளியவைப்பதற்காகத் தம்முடைய தன்மைக்குத் தக்கபடி

படியைக் கண்டருளி, ப்ரக்ருத்யநுகுணமாக ப்ரபந்நபரித்ராணப்ரதிஜ்ஞையைப் பண்ணியருளுகிறார் "ஸக்ருதேவ" என்கிற ச்லோகத்தால். "மித்ரபாவேந" என்கிற ச்லோகத்தில் ப்ரக்ருதியருளிச் செய்தார். இதில் தத₃நுகு₃ணமாக ப்ரதிஜ்ஞையைப் பண்ணுகிறார்.

வ்யா:—(ஸக்ருதே₃வ ப்ரபந்நாய) ஸக்ருச்சப்தத்துக்கு ஸஹஸா ஆதே₃ஶமாய். "ஸஹஸைவ ப்ரபந்நாய" என்கிறபடி. அதாகிறது,—தன் யோக்யதையைப் பார்த்துத் தேங்காதே, நம் குணத்தை விச்வஸித்து ப்ரபந்நனுகை. இது ஆழ்வான் நிர்வாஹம். கீழ் அநாதிகாலம் ஸம்ஸரித்துப் போந்தவன் மேல் அநந்தகாலம் ப₄லாநுப₄வம் பண்ணப் புகுகிறவனுகையாலே, யாவதாயுஷம் அநுவர்த்தித்தாலும் "ஸக்ருத்" என்கைக்குப் போருமத்தனையன்றோ? என்று எம்பார் நிர்வாஹம். "ஈஶ்வரவிஷயீகாரத்துக்கு ஒருகால் அமையும்; ஆவர்த்திக்கிறது, உபாயவைப₄வத்தால் வந்த

சரணுகதரக்ஷணப்ரதிஜ்ஞையைச் செய்தருளுகிறார் "ஸக்ருதே₃வ" என்று தொடங்கும் ச்லோகத்தாலே. "மித்ரபா₄வேந" என்கிற ச்லோகத்தில் தம் தன்மையை அருளிச்செய்தார்; இதில் அத்தன்மைக்குத்தக்க ப்ரதிஜ்ஞையைச் செய்கிறார். ஆக இவ்விரண்டு ச்லோகமும் ராமசரம ச்லோகம் என்று வழங்கப்பெறுகின்றது.

வ்யா:—(ஸக்ருதேவ ப்ரபந்நாய—ஒருதடவை அல்லது சடக்கென சரணம் புகுந்தவனுக்கும்) 'ஸஹஸா' என்னும் சப்தத்துக்கு பதிலாக 'ஸக்ருத்' என்னும் சப்தம் வருவதுண்டாகையாலே 'ஸக்ருத்' என்றதை 'ஸஹஸா' என்றுகொண்டு [ஸஹஸா என்றது உடனே என்றபடி] 'சடக்கென சரணம் புகுந்தவனுக்கு' என்றுகொள்வது. அதாவது,—தன்னுடைய அயோக்யதையைப் பார்த்துத் தயங்காமல், நம் குணத்தை நம்பிச் சடக்கென ப்ரபன்னனுனன் என்கை. இது எம்பெருமானுருடைய முக்கிய சிஷ்யரான கூரத்தாழ்வான் நிர்வாஹம். அப்படிக்கொள்ளாமல் 'ஸக்ருத்' என்றதுக்கு ஒருதரம் என்றே பொருள்கொண்டு, "இதற்குமுன் அநாதி காலம் ஸம்ஸாரஸாகரத்தில் மூழ்கியிருந்தவன், இனிமேல், முடிவில்லாத காலம் பகவதநுபவமாகிற பலத்தை அநுபவிக்கப்போகிறுனுகையாலே, ஆயுளுள்ளவரை சரணம் புகுந்துகொண்டேயிருந்தாலும் 'ஒருதடவை'

ரஸ்யதையாலே'' என்று பட்டர் நிர்வாஹம். ''ஸக்ருதேவ'' என்கையாலே, உபாயத்துக்கு விஹிதமான அஸக்ருதாவ்ருத்தியை வ்யாவர்த்திக்கிறது. (தவாஸ்மி இதி ச யாசதே) இதுக்குமேல், உனக்கு அடியேனாகவேணுமென்று உபேயத்தையும் ப்ரார்த்திக்குமவனுக்கு. ''ஸக்ருதேவ ப்ரபந்நாய' என்கிறது ப்ரபத்தி; ''தவாஸ்மீதி ச யாசதே'' என்கிற வர்த்தமாந நிர்த்தேசத்தால், அநவரதபாவநாரூபமான பக்தியைச் சொல்லுகிறது என்று நிர்வஹிப்பாரும் உண்டு.

என்றுதான் சொல்லலாமாகையாலே, நிரந்தரத்வயாநுஸந்தானத்துக்கும் இங்கு 'ஸக்ருத்' (ஒருதடவை) என்று சொன்னதுக்கும் விரோதமில்லை என்று எம்பெருமானாருடைய மற்றொரு சிஷ்யரான எம்பார் நிர்வஹிப்பர். ''இங்கு 'ஸக்ருதேவ' [ஒருதடவை] என்றது ஸர்வேச்வரன் இவனை ஸ்வீகரிப்பதற்கு ஒருதடவையேபோதும் என்பதைக் காட்டுகிறது; த்வயத்தை ஆயுளுள்ளவரை இடைவிடாமல் அநுஸந்திப்பது உபாயத்தின் பெருமையாலுண்டான இனிமையாலேயாகும்; ஒருகால் சொன்னால்போராது என்னும் நினைவாலேயன்று'' என்று கூரத்தாழ்வானின் திருக்குமாரரும், எம்பாருடைய சிஷ்யருமான பராசரபட்டர் நிர்வஹிப்பர். ''ஒருதடவையே'' என்றதாலே, ''ஆவ்ருத்திரஸக்ருத் உபதேசாத்'' [ப்ரஹ்மஸூத்ரம் 4-1-1] [பலதடவை செய்யப்படும் தியானரூபமான அறிவே மோக்ஷஸாதனமாகும்; அப்படி (சாஸ்திரங்கள்) உபதேசிக்கின்றனவாகையால்] என்கிறபடியே பக்தியாகிற உபாயத்துக்குப் பலதடவை ஆவ்ருத்திசெய்வதை சாஸ்திரங்கள் விதிப்பதுபோலே இதற்கு இல்லை; சரணாகதியாகிற இது ஒருதடவையே செய்யத்தக்கது என்று காட்டுகிறது. சரணாகதிக்கு மஹாவிச்வாஸம் முக்கியமாகையாலும், பலதரம் செய்வது மஹாவிச்வாஸமின்மையைக் காட்டுமாகையாலும், ஒருதடவையென்று நிர்ப்பந்திக்கிறதென்று கருத்து. (உனக்கேயாகிறேன் என்று யாசிப்பவன் பொருட்டும்) த்வயத்தின் பூர்வகண்டத்திற் சொன்ன இவ்வுபாயாநுஷ்டானத்துக்கு மேலே, 'உனக்கு அடியேனாகவேணும்' என்று த்வயத்தின் உத்தரகண்டத்திற்சொன்ன உபேயமாகிற-பரமபுருஷார்த்தமாகிற-கைங்கர்யத்தையும் பிரார்த்திப்பவனுக்கு. '''ஸக்ருதேவ ப்ரபந்நாய' என்று ஒருதடவையே யென்று நிர்ப்பந்திக்கையாலே ஒருதரமே அநுஷ்டிக்கத்தக்க ப்ரபத்தியைச் சொல்லுகிறது; 'தவாஸ்மீதி ச யாசதே'' [உனக்கேயாகிறேன் என்று யாசிக்கிறவனுக்கும்] என்றவிடத்தில் நிகழ்காலப் பிரயோகத்தாலே, எப்போதும் இடைவிடாமல் தியானிப்பதாயிருக்கும் பக்தியைச் சொல்லு

(அப$_1$யம் ஸர்வபூ$_4$தேப்$_4$ய: த$_3$த$_3$ாமி) ஸர்வபூதங்கள் நிமித்தமாக பயநிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுப்பன். **"भीतार्थिनां भयहेतुः"** (பீ$_4$த்ரார்த்த$_2$ாநாம் ப$_4$யஹேது:) இதி ஹேதௌ பஞ்சமீ. மஹாராஜர் எதிரிடிலும் காட்டிக்கொடோம்; இவன்தான் அகலுமளவிலும் அவன் கையிலும் காட்டிக்கொடோம் என்றபடி. (ஏதத் வ்ரதம் மம) நமக்கு அநுபாலநீயமான ஸங்கல்பம் இது. அமோக$_4$ஸங்கல்பரான நமக்கு ஸங்கல்பங்களடையக் குலையிலும் குலையாத ஸங்கல்பமாகும் இது.

இதற்குத் தனிச்லோக வ்யாக்யானம்

அவதாரிகை:—**"स रावणः शस्त्रभृतां मनस्विनां महाबलानां तरसा मनस्वी। तस्यां सभायां प्रभया चकाशे मध्ये वसूनामिव वज्रहस्तः॥"** (ஸ ராவண: ஶஸ்த்ரப்$_4$ருதாம் மநஸ்விநாம் மஹா-

---

கிறது" என்று நிர்வஹிப்பாருமுண்டு. (எல்லா பூதங்களிடத்தினின்றும் அபயமளிக்கிறேன்) "பீ$_4$த்ரார்த்த$_2$ாநாம் ப$_4$யஹேது:" [பாணினிஸூ 1-4-25] [பயம், ரக்ஷணம் ஆகியவற்றைச் சொல்லும் தாதுக்கள் வருமிடத்தில் பயத்துக்குக் காரணமான பொருள் 'அபாதாநம்' எனப்படும்] "அபாத$_3$ாநே பஞ்சமீ"[பாணினிஸூ 2-3-28] [அபாதானபதம் ஐந்தாம் வேற்றுமையில்தான் பிரயோகிக்கப்படும்] என்கிற பாணிநிஸூத்ரங்களின்படி பயஹேதுவாகையால் ஸர்வபூதசப்தம் ஐந்தாம் வேற்றுமையில் படிக்கப்படுகிறது. 'எல்லா பூதங்களிடத்தினின்றும்' என்றதாலே, "எனக்கு உயிரிலுமினிய சுக்கிரீவன் எதிர்த்தாலும் கைவிடமாட்டேன்; இவ்விபீஷணன் தானே நம்மைவிட்டு அகன்றாலும், 'நம்மைவிட்டு அகலுமிவன் தன்னைத் தானே ரக்ஷித்துக்கொள்ளட்டும்' என்று கைவிடமாட்டேன்; அந்த நிலையிலும் மேல்விழுந்து இவனை ரக்ஷிப்பேன்" என்று உணர்த்துகிறார். (இது என் விரதமாகும்) எந்நிலையிலும் நான் காப்பாற்றவேண்டிய விரதமிது. வீணாகாத ஸங்கல்பத்தையுடைய எனக்கு மற்ற எல்லா ஸங்கல்பங்களும் குலைந்தாலும் குலையக்கூடாத ஸங்கல்பமாகும் இது என்று கருத்து.

இனி, இந்த ச்லோகத்திற்குத் தனிச்லோக வ்யாக்யானம்

அவதாரிகை:—"ஆயுதம் தாங்கியவர்களாய், மஹாபலங்கொண்டவர்களாய், நெஞ்சுறுதிகொண்டவர்களான அவர்களிடையே மிகவும் நெஞ்சுவலிமைகொண்ட ராவணன், அந்த சபையிலே, வஸுக்களிடையே

ப₃லாநாம் தரஸா மநஸ்வீ। தஸ்யாம் ஸப₄ாயாம் ப்ரப₄யா சகாஸே மத்₄யே வஸூநாமிவ வஜ்ரஹஸ்த:॥) என்று, பெருமாளும் பரிகரமுமாகக் கடற்கரையிலே குறுகவந்துவிட்டார்கள் என்று கேட்ட ராவணன் ஸசிவ ஸாமந்த மந்த்ரி புரோஹிதாதிவர்க்கத்தைக் குறைவறக் கூட்டி, **"भवद्भिर्मन्त्र्यतां मन्त्रः सुनीतिश्चाभिधीयतां"** (ப₄வத்₃பி₄ர் மந்த்ர்யதாம் மந்த்ர: ஸுநீதிஸ்₂சாபி₄தீ₄யதாம்) என்று நியமித்துக் கார்யவிசாரம் பண்ணுகிறவன், தான் செய்துநின்ற நிலைகளையும், செய்ய வேண்டும் கார்யங்களையும் சொல்ல, **"तस्य कामपरीतस्य निशम्य परिदेवितं। कुम्भकर्णः प्रचुक्रोध वचनञ्चेदमब्रवीत्॥"** (தஸ்ய காமபரீதஸ்ய நிஸ₂ம்ய பரிதே₃விதம்। கும்ப₄கர்ண: ப்ரசுக்ரோத₄ வசநஞ்சேத₃மப்₃ரவீத்॥) என்று, இத்தைக்கேட்ட கும்பகர்ணனும் குபிதனாய், **"यदा तु रामस्य सलक्ष्मणस्य प्रसह्य सीता खलु सा इहाहृता। सकृत्समीक्ष्यैव सुनिश्चितं तदा भजेत चित्तं यमुनेव यामुनम्॥"** (யதா₃ து ராமஸ்ய ஸலக்ஷ்மணஸ்ய ப்ரஸஹ்ய ஸீதா க₂லு ஸா இஹாஹ்ருதா। ஸக்ருத் ஸமீக்ஷ்யைவ ஸுநிஸ்₂சிதம் தத₃ா ப₄ஜேத சித்தம் யமுநேவ யாமுநம்॥) என்று,

---

வஜ்ஜிராயுதமேந்திய இந்திரனைப்போலே விளங்கினான்'' [ரா-யு 11-33] என்று, ஸ்ரீராமபிரானும் வானரஸேனையும் கடற்கரையிலே அணுகி வந்துவிட்டார்களென்று கேட்ட ராவணன் அமைச்சர், சிற்றரசர், மந்திரிகள் புரோஹிதர் முதலானோருடைய கூட்டத்தைக் குறைவில்லாமல்கூட்டி, ''நீங்கள் மந்திராலோசனை செய்யவேண்டும்; நல்ல நீதியைச் சொல்ல வேண்டும்'' [ரா-யு 12-26] என்று கட்டளையிட்டு, மந்திராலோசனை கேட்கிறவனாகையாலே, தான் ஏற்கனவே செய்த செயல்களையும், இனிச் செய்யவிரும்பும் செயல்களையும் சொல்ல, ''விபரீதகாமத்தையுடைய அவனுடைய பிதற்றலைக்கேட்டு, கும்பகர்ணன் மிகவும் கோபங்கொண்டான்' இவ்வார்த்தையையும் சொன்னான்'' [ரா-யு 12-27] என்று, கும்பகர்ணனும் இதைக்கேட்டுக் கோபித்தவனாய், ''லக்ஷ்மணனோடுகூடிய ராமபிரானுடைய (பாதுகாப்பிலிருந்த) ஸீதை எப்போது உன்னால் தனியாகச் சடக்கென ஆலோசனைசெய்து இங்கு அபஹரித்து வரப்பட்டாளோ, அன்றே (பர்வதத்தில் தோன்றிய) யமுனை, யமுனைமடுவை அடைவது எப்படி நிச்சயமோ அப்படியே (இப்படியெல்லாம் நேருமென்று) நம் நெஞ்சம் நிச்சயத்தை அடைந்துவிட்டது' [ரா-யு 12-28] என்று

இவன் அபஹரித்தவன்றே இப்படி விளையுமென்று அறுதியிட்டோமே என்று ஸ்வபுத்$_3$தி$_4$ஸம்வாதத்தை ஸம்வதித்து, **"सर्वमेतन्महाराज कृतमप्रतिमं तव। विधीयेत सहास्माभिरादावेवास्य कर्मणः"** (ஸர்வமேதந் மஹாராஜ க்ருதமப்ரதிமம் தவ। விதீ$_4$யேத ஸஹாஸ்மாபி$_4$: ஆத$_3$ாவேவாஸ்ய கர்மண:॥) என்று செருக்கி நான் செய்தவற்றுக்கு ஒப்புண்டோ? என்ற ராவணனை அதி$_4$க்ஷேபித்து, எங்கள் சொற்கேட்டுச் செய்யவிருந்தாயாகில் இந்த ஸீதாபஹாரத்துக்கு முன்பேயன்றோ செய்வது என்றும், **"यः पश्चात्पूर्वकार्याणि †कृत्वा सन्तप्यते नरः। पूर्वं च परकार्याणि न स वेद नयानयौ॥"** (ய: பஶ்சாத் பூர்வகார்யாணி †க்ருத்வா ஸந்தப்யதே நர:। பூர்வம் ச பரகார்யாணி ந ஸ வேத$_3$ நயாநயௌ॥) என்று பூர்வோத்தரகார்யங்களை க்ரமஹீனமாகப் பண்ணுகிறவன் நயாபநயங்களை அறியான் என்றும், **"दिष्ट्या त्वां नावधीद्रामो विषमिश्रमिवामिषम्"** (தி$_3$ஷ்ட்யா த்வாம் நாவதீ$_4$த் ராமோ விஷமிஶ்ரமிவாமிஷம்) என்று "நஞ்

இவன் சீதையை அபஹரித்தபோதே இப்படி நடக்குமென்று முடிவுகட்டிவிட்டேன் என்று தான் நினைத்தது நடந்ததை ஒட்டியிருப்பதைச் சொல்லி, "மஹாராஜனே! நீ செய்த இந்த ஒப்பற்ற செயலையெல்லாம், இச்செயலைச் செய்யத் தொடங்கும்முன்பே எங்களோடு கலந்தன்றோ செய்திருக்கவேண்டும்" [ரா-யு 12-29] என்று, கர்வத்தாலே 'நான் செய்த செயலுக்கு ஒப்புண்டோ' என்ற ராவணனுடைய கர்வத்தை இறக்குவதற்காக 'ஒப்பற்ற செயல்' என்று விபரீதலக்ஷணையாலே அதை அநுவதித்து, எங்கள் சொல்லைக்கேட்டுச் செய்வதாகில், அப்போதேயன்றோ கேட்டிருக்கவேண்டுமென்றும், "முன் செய்யவேண்டிய காரியங்களைப் பின்னும், பின்செய்யவேண்டிய காரியங்களை முன்னும் செய்துவிட்டு எவன் துன்புறுகிறானோ, அவன் (ராஜ) நீதியையும் அநீதியையும் அறியாதவன்" [ரா-யு 12-32] என்று முன்னும் பின்னும் செய்யவேண்டிய காரியங்களை மாறுபடுத்திச் செய்பவன் ராஜநீதியையும் அநீதியையும் அறியான் என்றும், "விஷங்கலந்த இனிப்புப்பண்டம்போலே (பார்வைக்கு அழகாயிருக்கும்) இராமன் நல்லவேளையாக உன்னைக் கொல்லாமல்விட்டான்" [ரா-யு 12-34] என்று, "நஞ்சு ஏற்றிய பழம்போலே பார்வைக்கு

---

† (பா) கர்மாண்யபி$_4$சிகீர்ஷதி.

சூட்டின பழம்போலே இனியராயிருக்கச் செய்தேயும் அறக்கொடியர் பெருமாள்; அவர் உன்னைக் கொல்லாதொழிந்தது உன் புண்யம் என்றும், அதிற்கோபித்து இவன் வெறுக்கவொண்ணுதென்று. "समीकरिष्यामि" (ஸமீகரிஷ்யாமி) என்று, "பள்ளத்துக்கு மேட்டை நிரவுமாப்போலே உன் அநீதியை என் தோள்வலியாலே ஒக்கவிடுகிறேன்" என்று ஸமாதாநம்பண்ண, மஹாபார்ச்வனும் அவனுக்கு ப்ரிய மாகச் சில வார்த்தைகளைச் சொல்ல, "निशाचरेन्द्रस्य निशम्य वाक्यं स कुम्भकर्णस्य च गर्जितानि। विभीषणो राक्षसराजमुख्यमुवाच वाक्यं हितमर्थयुक्तम्॥" (நிஶாசரேந்த்₃ரஸ்ய நிஶம்ய வாக்யம் ஸ கும்ப₄கர்ணஸ்ய ச க₃ர்ஜிதாநி। வீபீ₄ஷணோ ராக்ஷஸ ராஜ முக்₂யமுவாச வாக்யம் ஹிதமர்த்த₂யுக்தம்॥) என்று, அவர்கள் நிரர்த்தகமாகப் பிதற்றின வார்த்தைகளைக் கேட்டு, விபீஷணப்பெருமாள் ஹிதரூபமாக, "वृतो हि बाह्वन्तरभोग-राशिश्चिन्ताविषः सुस्मिततीव्रदंष्ट्रः। पञ्चाङ्गुलीपञ्चशिरोऽतिकायस्सीता-महाहिस्तव केन राजन्॥" (வ்ருதோ ஹி பா₃ஹ்வந்தரபோ₄க₃ராஶிஶ் சிந்தாவிஷ: ஸுஸ்மிததீவ்ரத₃ம்ஷ்ட்ர:। பஞ்சாங்கு₃ளீபஞ்ச ஶிரோதிகாய: ஸீதாமஹாஹிஸ் தவ கேந ராஜந்॥) என்று

ரமிக்கச் செய்பவனுன ராமன், உண்மையில் மிகக்கொடியவனுயிருப்பவன்; அவன் உன்னைக் கொல்லாமல் விட்டது உன்புண்ணியம்" என்றும் சொல்லி, இப்படிக் கடுமையான வார்த்தை சொன்னதற்கு ராவணன் வெறுக்கக்கூடாது என்று கருதி, "நான் ஸமப்படுத்துகிறேன்" [ரா-யு 12-35] என்று பள்ளத்துக்கு மேட்டைவெட்டி நிரவுவதுபோலே, உன்னுடைய ராஜநீதிக்குப் புறம்பான காரியத்தை என் தோள்வலியாலே சரிப்படுத்து கிறேன் என்று ஸமாதாநம்பண்ண, மஹார்பார்ச்வன் என்னும் மந்திரியும் ராவணனுக்குப் பிரியமாகச் சில வார்த்தைகளைச் சொல்ல, "அரக்கர் தலைவனுன ராவணனின் வார்த்தையையும் கும்பகர்ணனின் கர்ஜனைகளையும் கேட்டு, விபீஷணன் அரக்கரரசர் தலைவனைக்குறித்து நல்லதும் பொருள்பொதிந்ததுமான வசனத்தைச் சொன்னுன்" [ரா-யு 14-1] என்று, அவர்கள் அர்த்தமில்லாம் பிதற்றிய சொற்களைக்கேட்ட விபீஷணன் அர்த்தத்தோடுகூடியதாய், நல்ல வார்த்தையாக, "அரசனே! மார்பாகிற உடலையும், நினைவாகிற விஷத்தையும், புன்சிரிப்பாகிற கூரிய பற்களையும், (கவலையால் தலையின்மேல் வைக்கப்பட்ட) ஐந்துவிரல்களாகிற படமெடுத்த ஐந்து

பாம்போடு ஒரு கூரையிலே பயிலுவாரைப்போலே, ஸீதை யாகிற பெரும்பாம்பினருகே கையை நீட்டுவாருண்டோ? "यावन्न लङ्कां समभिद्रवन्ति वलीमुखाः पर्वतकूटमात्राः। दंष्ट्रायुधाश्चैव नखायुधाश्च प्रदीयतां दाशरथाय मैथिली॥ यावन्न गृह्णन्ति शिरांसि बाणा रामेरिता राक्षसपुङ्गवानाम्। वज्रोपमा वायुसमप्रवेगाः प्रदीयतां दाशरथाय मैथिली॥" (யாவந்ந லங்காம் ஸமபி4த்3ரவந்தி வலீமுக2ா: பர்வதகூட மாத்ரா:। த3ம்ஷ்ட்ராயுத4ாஶ்சைவ நக2ாயுத4ாஶ்ச ப்ரதீ3யதாம் தா3ாஶரத2ாய மைதி2லீ॥ யாவந்ந க்ருஹ்ணந்தி ஶிராம்ஸி பா3ணா ராமேரிதா ராக்ஷஸபுங்க3வாநாம்। வஜ்ரோபமா வாயுஸம ப்ரவேக3ா: ப்ரதீ3யதாம் தா3ஶரத2ாய மைதி2லீ॥) என்று தொடங்கி, "குரங்குகள் கடலையடைத்துப் படை வீட்டை அடைக்கப் பார்க்கப் புகுகிறார்கள்; ராமஶரங்கள் குறுந்தெருவும் நெடுந்தெருவுமாகப் புகுந்து தலைகளைத் திருகப் புகுகிறது; அதுக்கு முன்னே பிராட்டியைப் பெருமாள் பக்கலிலே போகவிடாய்" என்றாற்போலே சில வார்த்தைகளைச் சொல்ல, ப்ரஹஸ்தேந்த்ரஜிதப்ரப்ருதிகளும் அதுக்கு விபரீதமாகச் சில வார்த்தைகளைச் சொல்ல ஸ்ரீவிபீஷணப் பெருமாளும் குபிதராய், "न तात

தலைகளையும் உடையதாய், (பார்வையாலேயே கொல்லும்) சீதையாகிற பெரும்பாம்பு உன்னாலே எக்காரணத்தைக்கொண்டு தீண்டப்பட்டது?" [ரா-யு 14-2] என்று, "பாம்போடு ஒரு கூரையிலே பயின்றாற்போல்" [பெரியதிரு 11-8-3] என்றாற்போலே சீதையாகிற பெரும்பாம்பினருகே எவராவது கையை நீட்டுவார்களா? "மலைச்சிகரம்போன்றவர்களாய், பல்லையும் நகத்தையும் ஆயுதமாகக் கொண்டவர்களான வானரர்கள் லங்கையை முற்றுகையிடுவதற்குள் மைதிலியை ராமனிடம் விட்டுவிடுங்கள்; வஜ்ரம் போன்றவையும், வாயுவேகமுள்ளவையுமான ராமபாணங்கள் அரக்கர் தலைவர்களுடைய தலைகளைக் கொய்வதற்குமுன் சிதையை ராமனிடம் விட்டுவிடுங்கள்" [ரா-யு 14-3,4] என்றுதொடங்கி, "குரங்குகள் கடலில் அணைகட்டி, இலங்கையை முற்றுகையிட முயலப்போகிறார்கள்; ராம பாணங்கள் குறுந்தெருவும் நெடுந்தெருவுமாகப் புகுந்து தலைகளைத் திருகப்போகின்றன; அதற்குமுன் சீதையை ராமனிடம் விட்டுவிடு" என்றாற்போலே சில வார்த்தைகளைச் சொல்ல, பிரஹஸ்தன், இந்திரஜித் முதலானோர் அதை மறுத்துச் சில வார்த்தைகள் சொல்ல, ஸ்ரீவிபீஷணனும்

मन्त्रे तव निश्चयोऽस्ति बालस्त्वमद्याप्यविपक्वबुद्धिः। तस्मात्त्वयाप्यात्मविनाशनाय वचोऽर्थहीनं बहु विप्रलब्धम्॥ पुत्रप्रवादेन तु रावणस्य त्वमिन्द्रजिन्मित्रमुखोऽसि शत्रुः। यश्चेदृशं राघवतो विनाशं निशम्य मोहादनुमन्यसे त्वं॥ त्वमेव वध्यश्च सुदुर्मतिश्च स चापि वध्यो य इहानयत्त्वाम्। बालं दृढं साहसिकं च योऽद्य प्रावेशयन्मन्त्रकृतां समीपम्॥"

(ந தாத மந்த்ரே தவ நிஶ்சயோऽஸ்தி பா3லஸ் த்வமத்3யாப்யவிபக்வபு3த்3தி4:। தஸ்மாத் த்வயாப்யாத்மவிநாஶநாய வசோऽர்த்த2ஹீநம் ப3ஹு விப்ரலப்3த4ம்॥ புத்ரப்ரவாதே3ந து ராவணஸ்ய த்வமிந்த்3ரஜிந்மித்ரமுகே2ாऽஸி ஶத்ரு:। யஶ்சேத்3ருஶம் ராக4வதோ விநாஶம் நிஶம்ய மோஹாத3நுமந்யஸே த்வம்॥ த்வமேவ வத்4யஶ்ச ஸுது3ர்மதிஶ்ச ஸ சாபி வத்4யோ ய இஹாநயத் த்வாம்। பா3லம் த்3ருட4ம் ஸாஹஸிகம் ச யோऽத்3ய ப்ரவேஶயந் மந்த்ரக்ருதாம் ஸமீபம்॥) என்றுதொடங்கி, உனக்கு இவற்றில் அபி4யோகம் இல்லை; பெற்றபிள்ளை நீதான் புத்ரன் என்றொரு ஶத்ருவாயிருந்தாய்; தகப்பனார் அநர்த்தத்தை இப்படி இசைவாருண்டோ? ஶத்ருக்களைக் கொல்லில் முற்பட உன்னைக்

வானும் கோபங்கொண்டவனாய், "பிள்ளாய்! மந்திராலோசனை சொல்லுவதில் உனக்கு நிச்சயபுத்திகிடையாது; இன்னமும் நீ குழந்தைதான்; அறிவுமுதிராதவன்தான்; ஆகையால் உன்னாலும் பொருளற்ற பல வார்த்தைகள் உன் அழிவின்பொருட்டே பிசற்றப்பட்டன; புத்திரன் என்னும் பெயரால், இந்திரஜித்தாகிற நீ ராவணனுக்கு நண்பன் வேஷங்கொண்ட எதிரியாயிருக்கிறாய்; இப்படி ராவணனுக்கு ராமனால் அழிவு ஏற்படும் என்பதைக் கேட்டும் மயக்கத்தாலே அநுமதித்திருக்கிறாயே; தீய புத்தியை உடையவன் நீயே; கொல்லத்தக்கவனும் நீயே; குழந்தையும், பிடிவாதமுள்ளவனும், விசாரியாமல் காரியம் செய்பவனுமான உன்னை அழைத்துவந்தவனும், உன்னை மந்திராலோசகரிடையே வர அநுமதித்தவனும் கொல்லத்தக்கவரே" [ரா-யு 15-9,10,11] என்றுதொடங்கி, "உனக்கு மந்திராலோசனையிலே பழக்கமில்லை; ராவணனுடைய பெற்ற பிள்ளையான நீ பிள்ளையென்று பெயர்படைத்த ஒரு எதிரியாயிருந்தாய்; பெற்ற தகப்பனுக்குத் திங்குவரும்போது உன்னைப்போலே இப்படி இசைந்திருப்பாருண்டோ? எதிரிகளைக் கொல்லவேண்டுமாகில், முதலில் உன்னைக்

கொல்லவேணும்; அறிவிலியாய், மகனான உன்னை அழைத்தவனையும் புகுரவிட்டவனையும் கொல்லவேணும் என்று வார்த்தை சொல்லி, **"धनानि रत्नानि विभूषणानि वासांसि दिव्यानि मणींश्च चित्रान्। सीतां च रामाय निवेद्य देवीं वसेम राजन्निह वीतशोकाः॥"** (த$_4$நாநி ரத்நாநி விபூ$_4$ஷணாநி வாஸாம்ஸி தி$_4$வ்யாநி மணீம்ஶ்ச சித்ராந்। ஸீதாம் ச ராமாய நிவேத்$_3$ய தே$_3$வீம் வஸேம ராஜந்நிஹ வீதஶோகா:॥) என்று, "உபஹாரபுரஸ்ஸரமாகப் பிராட்டியை உடையவன் வசத்திலே விட்டு உங்கள் முடியோடே நெஞ்சாறல் கெட்டிருக்கப் பாருங்கோள்" என்று ஸர்வர்க்கும் ஹிதம் சொல்ல, இத்தைக்கேட்ட ராவணன், **"सुनिविष्टं हितं वाक्यमुक्तवन्तं विभीषणम्। अब्रवीत् परुषं वाक्यं रावणः कालचोदितः॥"** (ஸுநிவிஷ்டம் ஹிதம் வாக்யமுக்தவந்தம் விபீ$_4$ஷணம்। அப்$_3$ரவீத் பருஷம் வாக்யம் ராவண: காலசோதி$_3$த:॥) என்று, இப்படி ஹிதம் சொன்னால், "என்னைத் தீமனம் கெடுத்தாய் உனக்கென்செய்கேன்?" என்றும், "அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன" என்றும் காலிலேவிழ ப்ராப்தமாயிருக்கத் தன் வஶமின்றியிலே காலபரவஶனான படியாலே பருஷங்களைச் சொல்லி, **"त्वां तु धिक्कुलपांसनं"**

கொல்லவேண்டும். அறிவற்றவனாய், சிறுபிள்ளையான உன்னை இங்குவர அழைத்தவனையும், புகவிட்டவனையும் கொல்லவேண்டும்" என்று வார்த்தை சொல்லி, "அரசனே! தனங்களையும், ரத்தினங்களையும், பூஷணங்களையும், வஸ்திரங்களையும், விசித்திரமான திவ்யமணிகளையும், சீதா தேவியையும் ராமனிடம் ஸமர்ப்பித்துவிட்டு, துன்பமற்றவர்களாய் இங்கு வாழ்வோம்" [ரா-யு 15-14] என்று "காணிக்கைகளோடுகூடப் பிராட்டியை ஸர்வஸ்வாமியான ராமபிரானிடம்விட்டு, ராஜசிங்கமான முடியையிழக்காமல் மனவருத்தம் இல்லாமலிருக்கப்பாருங்கள்" என்று அனைவர்க்கும் நன்மையைச் சொல்ல, இதைக்கேட்ட ராவணன், "நல்ல அமைப்பையுடையதும், நன்மையளிப்பதுமான வார்த்தையைச் சொன்ன விபீஷணனைக் குறித்து காலனால் தூண்டப்பட்ட ராவணன் கடுமையான வார்த்தையைச் சொன்னான்' [ரா-யு 16-1] என்று, இப்படி நன்மைசொன்னவனுக்கு, "என்னைத் தீமனம் கெடுத்தாய் உனக்கென் செய்கேன்" [திருவாய் 2-7-8] என்றும், "அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன" [திருவாய் 2-3-2] என்றும் காலிலே விழுவது தக்கதாயிருக்க, தன்வசமாயிராமல் காலன் வசப்பட்டவனாகையாலே கடுஞ்சொற்களைச்சொல்லி, "குலத்தைக் கெடுக்க

(த்வாம் து தி$_4$க் குலபாம்ஸநம்) என்று திக்கரிக்க, "उत्पपात गदापाणिश्चतुर्भिः सह राक्षसैः" (உத்பபாத க$_3$த$_3$ாபாணிஶ் சது ப்பி$_4$ஸ் ஸஹ ராக்ஷஸை:) என்று, 'ஸோதரப்ராதாவுமாய் ஹிதோபதேஶம் பண்ணின என்னை இப்படி சொன்ன இவன் என் படப்புகுகிறன்?' என்று தளர்ந்து தடியூன்றி எழுந்திருந்து தனக்கு ப$_4$வ்யராயிருப்பார் நாலு பேரோடே கிளம்பி, பின்னையும், "आत्मानं सर्वथा रक्ष पुरीं चेमां सराक्षसाम्। स्वस्ति तेऽस्तु गमिष्यामि" (ஆத்மாநம் ஸர்வதா$_2$ ரக்ஷ புரீம் சேமாம் ஸராக்ஷஸாம்| ஸ்வஸ்தி தேऽஸ்து க$_3$மிஷ்யாமி) என்று நாலு வார்த்தை சொல்லி, "आजगाम मुहूर्तेन यत्र रामः सलक्ष्मणः" (ஆஜக$_3$ாம முஹூர்த்தேந யத்ர ராமஸ் ஸலக்ஷ்மண:) என்று, *நின்றவாநில்லா நெஞ்சு புரிவதற்குமுன்னே தம்பி சொல்லு ஜீவியாத ராவணகோஷ்டியில் நின்றும், தம்பி சொல்லு ஜீவிக்கிற ராமகோஷ்டியை நோக்கி வந்து, "निवेदयत मां क्षिप्रं राघवाय महात्मने" (நிவேத$_3$யத மாம் க்ஷிப்ரம் ராக$_4$வாய மஹாத்மநே) என்று, "நெறிகெட மடுத்துக்கொண்டு புகலாகாது, அதி ங்கையும் பண்ணுவர்கள், த்வாரஶேஷி

வந்த உன்னைச் சுடுக" [ரா-யு 16-16] என்று தி$_4$க்காரம்செய்ய, "நான்கு அரக்கர்களோடுகூட கதையைக் கையிலேந்தியவனாய் உயரக்கிளம்பினான்" [ரா-யு 16-17] என்று ஒருவயிற்றிற் பிறந்த ஸஹோதரனுமாய் நன்மையைச் சொன்ன என்னை இப்படி அவமதித்த இவன் என்னபாடு படப்போகிறானோ என்று தளர்ந்து, அத்தளர்ச்சியினாலே தடி (கதை) ஊன்றி எழுந்திருந்து, தனக்கு வசப்பட்ட நாலு அரக்கரோடே ஆகாயத்தில் கிளம்பி, அதற்குமேலும், "உன்னை நன்றாக ரக்ஷித்துக்கொள்; அரக்கரோடு கூடியஇவ்விலங்கையையும் ரக்ஷித்துக்கொள்; உனக்கு மங்களமுண்டாகட்டும்; நான் செல்கின்றேன்" [ரா-யு 16-26]என்று நல்லவார்த்தைகள் நாலு சொல்லி, "லக்ஷ்மணனோடுகூடிய ராமனிருந்தவிடத்திற்குச் சிறிதுநேரத்தில் வந்தான்"[ரா-யு 17-1]என்று, "நின்றவாநில்லா நெஞ்சு" [பெரியதிரு1-1-4] என்று சொல்லப்படும் நெஞ்சு மாறுவதற்கு முன்னால், தம்பிசொல்லை அவமதிக்கும் ராவணன் சபையிலிருந்து, தம்பிசொல்லை மதிக்கும் ராம கோஷ்டியைக் குறித்து வந்து, "மஹாத்மாவான ராகவனிடம் என்னை விரைவில் அடைவியுங்கள்' [ரா-யு 17-15] என்று "வழியல்லாதவழியில் திடீரென அணுகக்கூடாது; அப்படி அணுகினால் ஐயமுறுவார்கள்; அவ

களைக்கொண்டு பெருமாளுக்கு விண்ணப்பம் செய்து 'आनय' (ஆநய) என்னப்புகவேணும்'' என்று நின்ற நிலையிலே நின்று விண்ணப்பம்செய்ய, இத்தைக்கேட்ட மஹாராஜர் ''एतत्तु वचनं श्रुत्वा सुग्रीवो लघुविक्रमः'' (ஏதத்து வசநம் ஶ்ருத்வா ஸுக்₃ரீவோ லகு₄விக்ரம:) என்று, இவன் வார்த்தையைக் கேட்டுப் பெருமாள் முற்பாடராய் வருவதற்குமுன்னே தாம் கடுநடையிட்டுச் சென்று, ''ராஜ்யகார்யங்கள் விசாரிக்க வேண்டாவோ? ஒற்றரைப் போகவிடவேண்டாவோ? நம்மிலும் அவர்கள் முற்பட்டார்கள்; 'प्रणिधी राक्षसेन्द्रस्य रावणस्य भवेदयं' (ப்ரணிதீ₄ ராக்ஷஸேந்த்₃ரஸ்ய ராவணஸ்ய ப₄வேத₃யம்) இங்கே ஆகாஶத்திலே நிற்கிற இவன் ஒற்றனாக வேணும்; ராவணன் தம்பி; மூர்க்கன்; நலியவந்தவன்; இவனைக் கழுத்திலும் காலிலும் கோக்க அடுக்கும்'' என்பது,-அது பெருமாள் செவிக்குப் பொறுத்தவாறே, ''வந்தவனையும் அவனையும் கொல்ல ப்ராப்தம்'' என்று சொல்ல, இத்தைக் கேட்டருளின பெருமாள் திருவுள்ளம் தளும்பி

னடியார்களானமையாலே நமக்கு ஸ்வாமிகளாயிருக்கும் வானரர்களை முன்னிட்டுக்கொண்டு ராமபிரானிடம் விண்ணப்பம்செய்து, 'சுக்கிரீவனே! இவ் விபீஷணனை அழைத்துவா' [ரா-யு 18-34] என்று அவர் அழைக்கும் போது உட்புகவேணும்'' என்று நினைத்து வாநரகோஷ்டிக்கு வெளியே நின்ற நிலையிலேயேநின்று விண்ணப்பம் செய்ய, இதைக்கேட்ட சுக்கிரீவன் 'இவ்வார்த்தையைக்கேட்டு சுக்கிரீவன் கடுநடையிட்டவனாய்'' [ரா-யு17-16] என்று இவன் வார்த்தையைக்கேட்டு ராமபிரான் முற்பட்டு வருவதற்கு முன் தானே அதிவிரைவாகச்சென்று, ராஜாக்கள் காரியம்செய்யும் போது ஆராய்ந்து செய்யவேண்டாமோ? ஒற்றரை அனுப்பவேண்டாமோ? நாம் இதையெல்லாம் செய்யாமலிருக்க,, அவர்கள் நம்மிலும் முற்பட்டு இவர்களை ஒற்றர்களாக அனுப்பிவிட்டனர்; ''இவன் அரக்கர்தலைவனான ராவணனுக்கு ஒற்றனாகவேண்டும்'' [ரா-யு 17-20] என்று இங்கு ஆகாயத்தில் நிற்கிற இவன் ஒற்றனாகவேண்டும்; இவன் ராவணன் தம்பி; பிடிவாதக்காரன்; நம்மைத் துன்புறுத்தவந்தவன்; இவனைக் கழுத்திலும் காலிலும் விலங்கிட்டு வைக்கவேணும் என்றுசொல்லி, இது ராமபிரானுடைய செவிகளுக்குப் பொறுத்தவுடன் வந்தவர்களையும் அவனையும் கொல்வது தக்கது என்றுசொல்ல; இதைக் கேட்டருளிய ராமபிரான்

முதலிகளைப் பார்த்து, **“यदुक्तं कपिराजेन रावणावरजं प्रति। वाक्यं हेतुमदर्थ्यं च भवद्भिरपि तच्छ्रुतम्”** (யது3க்தம் கபிராஜேந ராவணாவரஜம் ப்ரதி। வாக்யம் ஹேதுமத3ர்த்2யம் ச ப4வத்3பி4ரபி தச்ச்2ருதம்) என்று, “தோழனார் ராஜாக்களாய்ச் செருக்கிச் சொன்ன வார்த்தையை ஶரணாகதரக்ஷணம் பண்ணின ஜாதியிலே பிறந்த நீங்களும் கேட்டிகோளோ? உங்கள் நினைவுகளைச் சொல்லுங்கோள்” என்ன, **“स्वं स्वं मतमतन्द्रिताः। सोपचारं तदा राममूचुर्हितचिकीर्षवः”** (ஸ்வம் ஸ்வம் மதமதந்த்3ரிதா:। ஸோபசாரம் தத3ா ராமமூசுர் ஹிதசிகீர்ஷவ:॥) என்று, பெருமாளுக்காகமாட்டார்கள், மஹாராஜர்க்காக மாட்டார்கள், உப4யாவிருத்3த4மாகப் பரீக்ஷித்து, “ஒழுக விசாரித்துக் கைக்கொள்ள ப்ராப்தம்” என்று சொல்லித் தலைக்கட்ட, இத்தைக் கேட்ட திருவடியும் எழுந்திருந்து. **“न वादान्नापि सङ्घर्षान्नाधिक्यान्न च कामतः। वक्ष्यामि वचनं राजन्यथार्थं रामगौरवात्॥”** (ந வாத3ாந் நாபி ஸங்க4ர்ஷாந் நாதி4க்யாந் ந ச காமத:। வக்ஷ்யாமி வசநம் ராஜந் யத2ார்த்தம் ராமகௌ3ரவாத்॥) என்று இப்பக்ஷங்களை அழிக்கப்புகுகிறவனாகையாலே,

---

திருவுள்ளம் மிகவும் கலங்கி, மற்ற வானரர்களைப் பார்த்து, “ராவணன் தம்பியைப்பற்றி வானரர்தலைவன் காரணத்தோடும், பொருள்பொதிந்ததாகவும் சொன்னதை நீங்களும் கேட்டீர்களோ?” [ரா-யு 17-30] என்று “நம் நண்பர் வானரராஜாவாகையாலே அரசருக்குத்தக்க செருக்கோடு சொன்ன வார்த்தையை, வ்யாக்ரவாநரஸம்வாதத்தில் சரணாகத ஸம்ரக்ஷணம் பண்ணின ஜாதியிலே பிறந்த நீங்களும் கேட்டீர்களா? உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள்” என்று உரைக்க; “தங்கள் தங்கள் மதத்தைச் சோம்பலில்லாமல் நன்மையை விரும்பியவராய், ராமபிரானைப் புகழ்ந்து கொண்டு உரைத்தனர்’ [ரா-யு 17-32] என்று, ராமபிரானுக்கு ஸாதகமாகவும் உரைக்கமாட்டாமல் தங்களுடைய அரசனான சுக்கிரீவனுக்கு ஸாதகமாகவும் உரைக்கமாட்டாமல் இரண்டுபேருக்கும் விரோதமில்லாதபடி ஆராய்ந்து, “நன்றாகப் பரீக்ஷைசெய்து கைக்கொள்வது தக்கது” என்று சொல்லிமுடிக்க; இதைக்கேட்ட அனுமனும் எழுந்திருந்து, “வாதம் செய்யவுமல்ல; பொறாமையாலுமல்ல; பெரியவனென்னும் எண்ணத்தாலுமல்ல; இஷ்டப்படி சொல்லவுமல்ல; அரசனே! ராமபிரானுடைய பெருமையைப்பார்த்து இவ்வார்த்தையைச் சொல்லுகிறேன்” [ரா-யு 17-50] என்று, இப்பக்ஷங்களை காரணங்காட்டி அழிக்கப்போகிறவனாகையாலே

''சிலரோடே பிணக்குண்டாயல்ல, சிலரோடே வெறுப்புண்டாயல்ல, எல்லார்க்கும்மேலாய் நியாமகனுயல்ல. ப்ரதிபந்நவாதியாயல்ல, 'अप्यहं जीवितं जह्यां' (அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்) என்கிற பெருமாளை இழக்கவருமென்று பெருமாள்பக்கல் ஆதரத்தாலேசொல்லுகிறேன்'' என்று அவையடக்கம்சொல்லி ''புகுரவிட்டால் பரீக்ஷிப்பது, பரீக்ஷித்தால் புகுரவிடுவது என்று அங்யோங்யாஶ்ரயணம் வரும்; 'तत्र मित्रं प्रदूष्येत मिथ्याप्रष्टुः सुखागतम्' (தத்ர மித்ரம் ப்ரதூ3ஷ்யேத மித்2யாப்ரஷ்டுஸ் ஸுக2ாக3தம்) என்று ஸாமபே3த3ம்பண்ணிக் குலைத்தழைக்க ப்ராப்தமாயிருக்கத் தன்னடையே விஶ்வஸித்து வந்தவனை அதிஶங்கைபண்ணிளுல் குலைந்துபோம்; அப்போது ராஜநீதியல்ல; ஶாஸ்த்ரவிருத்தம்'' என்று பரபக்ஷதூஷணம்சொல்லி ''न त्वस्य ब्रुवतो जातु लक्ष्यते दुष्टभावता। प्रसन्नं वदनञ्चापि'' என்றும், ''अशङ्कितमतिः स्वस्थो नशठः परिसर्पति'' (அஶங்கிதமதி: ஸ்வஸ்தே2ா நஶட2: பரிஸர்ப்பதி) என்றும் இப்புடைகளிலே ஸ்வ

''சிலரோடே விவாதமுண்டானதாலல்ல; சிலரோடே வெறுப்புண்டாகியல்ல; எல்லாருக்கும் மேலானவனுய் அவர்களை நியமிக்கவல்ல; தோற்றினது சொல்லுகிறவனுயல்ல; 'நான் உயிரையும் விடுவேன்' [ரா-ஆ 10-19] என்கிற ராமபிரானை இழக்கும்படி நேரிடுமென்று ராமபிரானிடம் அன்பாலே சொல்லுகிறேன்'' என்று அவையடக்கமாகச் சில வார்த்தைகளைச் சொல்லி, ''விபீஷணனை ஆராய்ந்து புகவிடவேணுமென்றது சரியல்ல; உட்புகவிட்டால்தான் பரீக்ஷிக்கமுடியும்; நீங்களோ பரீக்ஷித்துப் புகவிடவேணுமென்கிறீர்கள்; இதில் அங்யோங்யாச்ரயணம் என்னும் தோஷம் வருகிறது; 'பொய்யாகக் கேட்கிறவனுக்கு, எளிதில் கிடைத்த நண்பன் தவறிவிடுவான்' [ரா-யு 17-58] என்று, ஸாமம், பேதம் முதலான உபாயங்களை அநுஷ்டித்து எதிரியிடமிருந்து பிரித்து நாம் அழைத்துக்கொள்ளவேண்டியிருக்க, தாஞகவே நம்மை நம்பிவந்தவனிடம் ஐயமுற்ருல் நம்மை விட்டுப் போய்விடுவான்; அப்படிச் செய்வது ராஜநீதியல்ல; நீதிசாஸ்திரவிருத்தமாகும்'' என்று மற்றவர்களின் பக்ஷங்களுக்கு தூஷணம் சொல்லி, ''இவன் வார்த்தை சொல்லும்போது ஒருபோதும் தீயகருத்து தென்படவில்லை; இவன் முகமும் தெளிந்துள்ளது'' [ரா-யு 17-60] என்றும்,

பக்ஷஸ்தாபனத்தையும் பண்ணி, திருமுன்னே நாமும் சில அறிந்தோமாகவொண்ணாதென்று, **"यथाशक्ति मयोक्तं तु राक्षसस्यार्जवं प्रति। प्रमाणं त्वं हि सर्वस्य श्रुत्वा बुद्धिमतां वर॥"** (யத₂ாஶக்தி மயோக்தம் து ராக்ஷஸஸ்யார்ஜவம் ப்ரதி। ப்ரமாணம் த்வம் ஹி ஸர்வஸ்ய ஶ்ருத்வா பு₃த்₃தி₄மதாம் வர) "அடியேனுக்குத்தோன்றினவளவு விண்ணப்பம் செய்தேனத்தனை; 'நல்லாரறிவீர் தீயார் அறிவீர் இவ்வுலகத்து எல்லாமறிவீர்' என்று தேவரீர் திருவுள்ளத்தில் அகலத்துக்கு இது எங்கே? இனித் திருவுள்ளமானபடி செய்தருளீர்" என்று தலைக்கட்ட, **"अथ रामः प्रसन्नात्मा श्रुत्वा वायुसुतस्य ह। प्रत्यभाषत दुर्धर्षः श्रुतवानात्मनि स्थितम्"** (அத₂ ராம: ப்ரஸந்நாத்மா ச்ருத்வா வாயுஸுதஸ்ய ஹ। ப்ரத்யபா₄ஷத துர்த₄ர்ஷ: ச்ருத்வாநாத்மநி ஸ்தி₂தம்॥) என்று காற்றின் மகனான திருவடியாலே லப்தஸத்தரான பெருமாள் தன் திருவுள்ளத்தில் கிடந்தது அருளிச்செய்வதாகக்கோலி, **"मित्रभावेन संप्राप्तं"** (மித்ரபா₄வேந ஸம்ப்ராப்தம்) என்கிற ச்லோகத்தாலே, மித்ரபா₄வேந ஸம்ப்ராப்

"ஐயமற்ற மனத்தினனாய், துஷ்டனல்லாதவனாய் ஸஞ்சரிக்கிறான்" [ரா-யு 17-61] என்றும் இவ்விதமாக தன் பக்ஷத்தையும் நிலைநிறுத்தி, ஸர்வஜ்ஞனான ராமன் முன்னே, நாமும் சில அதிகப்ரஸங்கம் செய்ததாக நினைக்கக் கூடாதென்று, "இவ்விபீஷணனுடைய நேர்மையைக்குறித்து இயன்றவரையில் என்னால் உரைக்கப்பட்டது; அறிவாளிகளிற்சிறந்தவரே! எல்லாவற்றையும் கேட்டு நிச்சயிப்பதில் நீரே வல்லவர்" [ரா-யு 17-66] என்று, "அடியேனுக்குத் தெரிந்தவரையில் விண்ணப்பம் செய்தேனவ்வளவே, 'நல்லாரறிவீர்; தீயாரறிவீர்; இவ்வுலகத்தெல்லாமறிவீர்' [பெரியதிரு 4-9-6] என்கிற தேவரீருடைய அறிவின் பெருமையைப் பார்த்தால் இது எம்மாத்திரம்? இனி, திருவுள்ளமானபடி செய்தருளீர்" என்று தம் உரையை முடிக்க, "அதன் பிறகு எதிரிடவொண்ணாதவராய், கேள்விஞானமுடைய ராமபிரான், தெளிந்த மனத்தினராய், வாயுகுமாரனின் வார்த்தையைக்கேட்டு, தன் நெஞ்சில் உள்ள கருத்தைச் சொன்னார்" [ரா-யு 18-1] என்று, ஸர்வலோகத்துக்கும் உயிரளிக்கும் காற்றின் மகனான அனுமனாலே உயிர்பெற்ற ராமபிரான் தன் திருவுள்ளக்கருத்தை அருளிச்செய்ய நினைத்து, "நண்பனின்பாவத்தோடுவந்தவனை" [ரா-யு 18-3] என்கிற சுலோகத்தாலே "மித்திரனின் பா₄வனையோடு வந்தவனை குற்ற

தன் ஸதோஷனேயாகிலும் கைவிடேனென்று சொல்லி, "तस्यानुबन्धाः पाप्मानः सर्वे नश्यन्ति तत्क्षणात्" (தஸ்யாநுப$_3$ந்த$_4$ா: பாப்மாந: ஸர்வே நஶ்யந்தி தத்க்ஷணாத்) என்று ப்ரபந்நனபோதே நிர்தோஷன், இப்படி ப்ரபந்நனாய் நிர்த்தோஷனனவனுக்கு உம்மாலும் என்னாலும் பிறராலும் எல்லாராலும் வரும் பயங்களைப் போக்கக்கடவேன் என்கிறார் இந்த ச்லோகத்தால்.

"वेदोपबृंहणार्थाय तावग्राहयत प्रभुः" (வேதே$_3$ாபப்$_3$ரும்ஹணார்த்த$_2$ாய தாவக்$_3$ராஹயத ப்ரபு$_4$:) என்று வேதோபப்ரும்ஹணப்ரவணப்ரபந்தமன்றோ இது; இவ்விடத்தில் உபப்ரும்ஹிக்கிற வேதார்த்தமெது? வேதவாக்யந்தான் எது? என்னில்: "तं ह देवमात्मबुद्धिप्रसादं मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये" (தம் ஹ தே$_3$வமாத்மபு$_3$த்தி$_4$ ப்ரஸாத$_3$ம் முமுக்ஷுர் வை ஶரணமஹம் ப்ரபத்$_3$யே) என்றும், "प्रयतपाणिः शरणमहं प्रपद्ये स्वस्ति संबाधेष्वभयं नो अस्तु" (ப்ரயதபாணி: ஶரணமஹம் ப்ரபத்$_3$யே ஸ்வஸ்தி ஸம்ப$_3$ாதே$_4$ஷ்வப$_4$யம் நோ அஸ்து) என்றும் சொல்லுகிற ப்ரபத்யுபாயவைபவம் இவ்விடத்தில் உபப்ரும்ஹிக்

முள்ளவனானாலும் கைவிடேன்" என்று சொல்லி, "சரணமடைந்தவனைப் பற்றியிருக்கும் எல்லா வினைகளும் (சரணமடைந்த) அக்கணத்திலேயே நசிக்கின்றன" [அஹிர்புத்ந்ய 37-33] என்று சரணமடைந்தபோதே குற்றமற்றவனாகிறான்; இப்படி ப்ரபந்நனாய், குற்றமற்றவனுக்கு உம்மாலும் என்னாலும் பிறராலும் ஆக இப்படி அனைவராலும் வரும் பயங்களைப் போகச்செய்வேன்—என்கிறார் இந்த ச்லோகத்தாலே,

"வேதத்தை விளக்குவதற்காக அக்குசலவர்களை வால்மீகிபகவான் ஏற்றுக்கொண்டார்" [ரா-பா 4-6] என்று வேதத்தை விளக்கவந்த நூலன்றோ இவ்வால்மீகி ராமாயணம். இவ்விடத்தில் விளக்கப்படுகிற வேதப்பொருள் என்ன? வேதவாக்கியந்தான் எது? எனில்: விளக்கப்படும் வேதார்த்தமாவது:—"தன் விஷயமான அறிவைத்தரும் அந்த தேவனை மோக்ஷமடைய விரும்பும் நான் சரணமடைகிறேன்" [ச்வே 6-18] என்றும், "சுத்திபெற்ற கையனாய் நான் சரணமடைகிறேன்; எங்களுக்கு நன்மையும், இடையூறுகள் வரும்போது பயமின்மையும் உண்டாகட்டும்" [ருக்வேதகிலம்; போதாயநக்ருஹ்யஸூத்ரத்தில் ஸ்வஸ்திஸூக்தத்தில் எடுக்கப்பட்டுள்ளது.] என்றும் வேதத்தில் சொல்லப்படுகிற ப்ரபத்தியாகிற உபாயத்தின் பெருமை இவ்

கிறது. வாக்யமும், "प्रयतपाणिः शरणमहं प्रपद्ये" (ப்ரயத பாணி: ஶரணமஹம் ப்ரபத்$_3$யே) என்கிறவிது. "चरणौ शरणमहं प्रपद्ये" (சரணௌ ஶரண(மஹ)ம் ப்ரபத்$_3$யே) என்றும் "चरणौ गाढं निपीड्य" (சரணௌ க$_3$ாட$_4$ம் நிபீட்$_3$ய) என்றும் திருவடிகளைக் கையாலே பிடிக்கும்போது ஶுத்த ஹஸ்தனாகவேணும்; அந்த ஶுத்தஹஸ்ததையாவது.– "सर्वधर्मान् परित्यज्य" (ஸர்வத$_4$ர்மாந் பரித்யஜ்ய) என்றும், "पितरं मातरं" (பிதரம் மாதரம்) தொடங்கி, "सर्वधर्मांश्च सन्त्यज्य सर्वकामांश्च साक्षरान्" (ஸர்வதர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந்) என்றும், "வீடுமின் முற்றவும்" என்றும், "மற்றொருவரும் பற்றிலேன்" என்றும் உபாயாந்தரங்

விடத்தில்விளக்கப்படுகிறது. வேதவாக்கியமாவது:–"சுத்தியுடையகையுடையவனாய், நான் சரணமடைகிறேன்" என்கிற ருக்வேதகிலமான வாக்கியமேயாகும். "ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளை நான் சரணமடைகிறேன்" [த்வயம்] என்றும், "(ராமபிரானின்) திருவடிகளை உறுதியாகப்பிடித்து" [ரா-அ 31-2] என்றும், சுத்தமான திருவடிகளைக் கையாலே பிடிக்கும்போது சுத்தமானகையை உடையவனாகவேணும்; அப்படி சுத்தமான கையை உடையவனாகையாவது:–"எல்லா உபாயங்களையும் வாஸனையோடு விட்டு" [கிருஷ்ணசரமம்] என்றும்,

"பிதரம் மாதரம் தா$_3$ராந் புத்ராந் ப$_3$ந்தூ$_4$ந் ஸகீ$_2$ந் கு$_3$ரூந் |
ரத்நாநி த$_4$நதா$_4$ந்யாநி க்ஷேத்ராணி ச க்$_3$ருஹாணி ச ||
ஸர்வதர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந் |
லோகவிக்ராந்தசரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ$_4$ ||

[விஹகேச்வரஸம்ஹிதை]

[பரமபுருஷனே! தந்தையையும், தாயையும், மனைவியையும், மக்களையும் உறவினரையும் உற்றாரையும், ஆசாரியர்களையும், ரத்தினங்களையும், தனதானியங்களையும், வயல்களையும், வீடுகளையும், எல்லா உபாயங்களையும், கைவல்யமுள்ளிட்ட எல்லா விருப்பங்களையும், வாஸனையுடன் விட்டு, திருவுலகளந்தருளின உன் திருவடிகளை சரணமடைகிறேன்.] என்றும், "வீடுமின் முற்றவும்" [திருவாய் 1-2-1] என்றும், "மற்றொருவரும் பற்றிலேன்" [பெரியதிரு 8-10-5] என்றும் மற்ற உபாயங்களை விட்டுப் பரமபுருஷன் ஒருவனையே உபாயமாகப் பற்றுகை. இதையன்றோ "சுத்தமான

களை விட்டுப்பற்றுகை. அத்தையிறே "**प्रयतपाणिः**" (ப்ரயதபாணி:) என்கிறது; "**मां व्रज**" (மாம் வ்ரஜ) "**शरणं प्रपद्ये**" (ஶரணம் ப்ரபத்₃யே) "**प्रार्थनामतिः शरणागतिः**" (ப்ரார்த்த₂நாமதி: ஶரணாக₃தி:) என்று உபாயப்ரார்த்தநாரூப ஜ்ஞாநத்தை "**शरणं प्रपद्ये**" (ஶரணம் ப்ரபத்யே) என்று சொல்லுகிறது.

இவ்வாக்யத்தை இந்த ச்லோகம் உபப்ரும்ஹித்தபடியென்? என்னில்: "ஸக்ருத் ஏவ" என்கிற பதங்களாலே அஸக்ருதாவ்ருத்திஸாபேக்ஷையான பக்தியை வ்யாவர்த்திக்கையாலே ஸர்வதர்மத்யாகபூர்வகமான "**प्रयतपाणिः**" (ப்ரயதபாணி:) என்கிற பதத்தையும், "ப்ரபந்நாய" என்கிற பதத்தாலே "**शरणं प्रपद्ये**" (ஶரணம் ப்ரபத்₃யே) என்கிற பதங்களையும், "தவாஸ்மீதி ச யாசதே" என்கிற பதங்களாலே "**स्वस्त्यस्तु**" (ஸ்வஸ்த்யஸ்து) என்கிற பதங்களையும் "அப₄யம் த₃தா₃மி" என்கிற பதங்களாலே, "**अभयमस्तु**" (அப₄யமஸ்து) என்கிற பதங்களையும் உபப்ரும்ஹிக்கிறது.

கையை உடையவன்" என்று ருக்வேதமந்திரம் சொல்லிற்று. அம்மந்திரத்தில் "சரணமடைகிறேன்" என்னும் பகுதியாலே, "என்னை ஒருவனையே சரணமடை" [கிருஷ்ணசரமம்] "ஸ்ரீமந்நாராயண சரணங்களை சரணமடைகிறேன்" [த்வயம்] "'நீயே உபாயமாவாயாக என்று பிரார்த்திக்கும் அறிவே சரணாகதியாகும்" [பரதமுனி] என்று பவானை உபாயமாகப் பிரார்த்திக்கும் அறிவாகிற சரணாகதியைச் சொல்லுகிறது.

இந்த ருக்வேத மந்திரத்தை இந்த ச்லோகம் எப்படி விவரித்தது? எனில்: "ஸக்ருத் ஏவ" [ஒருதடவையே] என்கிற பதங்களாலே பலதடவை ஆவ்ருத்திசெய்யவேண்டிய பக்தியைக்காட்டிலும் வேறுபாட்டைத் தெரிவிக்கையாலே, பக்திமுதலான ஸர்வதர்மங்களையும் விடவேண்டுமென்னும் "ப்ரயதபாணி:" [வெறுங்கையனாய்] என்னும் பதத்தையும், "ப்ரபந்நாய" [ப்ரபத்தி செய்தவனுக்கு] என்கிற பதத்தாலே, "சரணம் அடைகிறேன்' என்கிற மந்திரப்பகுதியையும், "தவாஸ்மீதி ச யாசதே" (உனக்கு அடியேனாகக்கடவேன் என்று யாசிக்கிறவனுக்கும்) என்னும் பதங்களாலே "ஸ்வஸ்தி (நன்மையாகிற கைங்கர்யம்) உண்டாகட்டும்" என்கிற பதங்களையும் "அப₄யம் த₃த₃ாமி' (அபயமளிக்கிறேன்) என்கிற பதங்களாலே, "இடையூறுகளில் அபயம் (பயமின்மை) உண்டாகட்டும்" என்னும் பதங்களையும் விவரிக்கிறது.

ஆகிறது; "ப்ரபத்₃யே" என்று ப்ரபதநதசையில் ஏக வசநமாயிராநின்றது; ப₂லதசையில் "ந:" என்று பஹுவசந மாயிராநின்றது; இது செய்யும்படியென்? என்னில்: "वैष्णवो नः कुले जातः" (வைஷ்ணவோ ந: குலே ஜாத:) என்று ஏகவசநமாகச் சொல்லி, "ते सर्वे मुक्तिमायान्ति" (தே ஸர்வேமுக்திமாயாந்தி) என்று பஹுவசநமாகவும், "ये च वैष्णवसंश्रयाः-तेनैव ते प्रयास्यन्ति" (யே ச வைஷ்ணவஸம்ஶ்ரயா: தேநைவ தே ப்ரயாஸ்யந்தி) என்று ஏகவசந பஹு வசநங்களாலும், இப்படி பஹுப்ரமாணங்கள் உண்டாகை யாலும், லோகத்திலும் ஒருவன் ராஜஸேவைக்ருஷ்யாதி களைப்பண்ண, அவன் யத்நபலமான அந்நதநதாந்யவஸ்த் ராதிபலங்களை அவனபிமானத்திலே பா₄ர்யாபுத்ர ஶிஷ்ய தா₃ஸாதிகள் வருத்தமற புஜிக்கக் காண்கையாலும், இப் படி லோகவேதங்களிலே அநுபூதப(ச?)ரமாகையாலே, ஒரு

ஆகட்டும்; இந்த ருக்வேதமந்திரத்தில் "நான் சரணமடைகிறேன்" என்று சரணமடையும்போது ஒருமையிலே படித்தது; பலனைச்சொல்லும் போது, "எங்களுக்கு" என்று பன்மையிலே படிக்கிறது; இதன் கருத் தென்னவெனில்: "வைஷ்ணவன் எங்கள் குலத்தில் பிறந்தான்" [வராஹ புராணம்] என்று ஒருமையில் வைஷ்ணவனென்று தொடங்கி, "அவர்க ளனைவரும் முக்தியடைகின்றனர்" என்று பலனடைபவரைப் பன்மை யிலும், "பசுர் மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவ ஸம்ச்ரயா:, தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ: பரமம் பத₃ம்" [சாண்டில்யஸ்மிருதி 1-15] [வைஷ்ணவனைப் பற்றியிருக்கும் பிராணியோ, மனிதனோ, பறவையோ எதுவாயிருந்தாலும், அவனாலேயே அவர்களனைவரும் அந்த விஷ்ணுவின் பரமபதத்தை அடைகின்றனர்] என்று 'தேந' (அவனாலே) என்று ஒருமை யிலும், 'தே' (அவர்கள்) என்று பன்மையிலும் இப்படி ப்ரபந்ந ஸம்பந்தி களுக்கும் பலனுண்டென்பதற்குப் பல ப்ரமாணங்கள் உண்டாகையாலும், உலகத்திலும் ஒருவன் ராஜஸேவகம், வியவசாயம் முதலான தொழில் களைச் செய்ய, அவனுடைய முயற்சியின் பலனாக அந்நம் தனம் தானியம் வஸ்திரம் முதலான பலன்களை, அவனால் நம்முடையவரென அபிமானிக் கப்பட்ட மனைவி மக்கள், சிஷ்யர், வேலைக்காரர் முதலானோர் ஒரு சிரமமும் படாமல் அநுபவிக்கக் காண்கிறோமாகையாலும், இப்படி உலகிலும், சாஸ்திரத்திலும் காணப்படுகிறதாகையாலே, ஒருவன் ப்ரபந்நனானால் அவனுடைய அபிமானத்திலே அண்டியிருப்பவர்கள் அனைவருக்கும் முக்தி

வன் ப்ரபந்நனாக அவனபிமானத்திலே ஒதுங்கினார்க்கெல்லாம் பலமாகக்கடவது என்கிறது.

ஆகிறது; ப்ரபத்த்யுபாயமென்பது,—எம்பெருமான் உபாயமென்பதாகாநின்றது; ப்ரபத்தியாவது,—“त्वमेवोपायभूतो मे भवेति प्रार्थनामतिः। शरणागतिः” (த்வமேவோபாயபூ$_4$தோ மே ப$_4$வேதி ப்ரார்த்த$_2$நாமதி:। ஶரணாக$_3$தி:) என்று சேதநனுடைய ப்ரார்த்தநாரூபஜ்ஞாநமாயிராநின்றது; எம்பெருமானாகிறான் ப்ரார்த்தநீயனாயிருப்பானொரு பரமசேதநனாயிராநின்றது. இது செய்யும்படியென்? என்னில்: பராம்ருஷ்டலிங்கம் அநுமானமாயிருக்க, “लिङ्गपरामर्शोऽनुमानं” (லிங்கபராமர்ஶோऽநுமாநம்) என்று பராமர்ஶப்ராதாந்யத்தைப்பற்ற ஔபசாரி

யாகிற பலன் கிடைக்கும் என்கிறது 'ந:' [எங்களுக்கு] என்கிற பன்மையாலே.

ஆகட்டும்; 'ப்ரபத்தி உபாயம்' என்று நாம் வழங்குகிறோம்; 'எம்பெருமானே உபாயம்' என்றும் வழங்குகிறோம்; ப்ரபத்தியும் பகவானும் ஒன்றாகையாலே அப்படி வழங்குகிறோமென்றும் கூறமுடியாது. ப்ரபத்தியாவது,-"நீயே எனக்கு உபாயமாவாயாக என்று பிரார்த்திக்கும் புத்தியே சரணாகதியாகும்" [பரதமுனி] என்று அறிவுடைய ஜீவனின் பிரார்த்தனையாயிருக்கும் அறிவாயிராநின்றது; எம்பெருமானோவெனில்,—இவ்வறிவினாலே பிரார்த்திக்கப்படும் பேரறிவாளன் ஒருவனாயிருக்கிறான். ஆகையால் இருவரையும் உபாயம் என்பது ஒட்டாதே. இதை எப்படி நிர்வஹிப்பது? எனில்: "மலை நெருப்பையுடையது; புகையிருப்பதால்" என்பது ஒரு அநுமான வாக்கியம். இதில் மலை 'பக்ஷம்' என்றும், நெருப்பு 'ஸாத்யம்' என்றும், புகை 'ஹேது' என்றும், 'லிங்கம்' என்றும் சொல்லப்படுகிறது. புகையாகிற அடையாளத்தைக் கொண்டே நெருப்பிருப்பதை ஊஹிக்கிறோமாகையாலே அது 'லிங்கம்' [அடையாளம்] எனப்படுகிறது. நெருப்பை அறியக்காரணமாயிருக்கையாலே, அது 'ஹேது' [காரணம்] என்றும் சொல்லப்படுகிறது. இங்கு "பர்வதத்தில் நெருப்பு உள்ளது" என்னும் அறிவு 'அநுமிதி' எனப்படுகிறது; இவ்வறிவுக்கு முக்கிய காரணமாயிருப்பது 'அநுமானம்' எனப்படுகிறது. இவ்வநுமானம் அறியப்பட்ட லிங்கந்தான் (அதாவது, பராம்ருஷ்டலிங்கந்தான்) என்பது ப்ராசீநதார்க்கிகர்களின் கொள்கை. அப்படியிருக்க, புகை முதலான லிங்கம் அறியப்பட்டாலொழிய, 'அநுமிதி' என்னும் அறிவு உண்டாகாதாகையாலே, லிங்கபராமர்சமெனப்படும் லிங்கத்தைப்பற்றிய அறிவுக்குள்ள

கமாகப் பராமர்ஶத்தைச் சொன்னாற்போலவும், ''நீலஜ்ஞானம், பீதஜ்ஞானம்'' என்றால் ஜ்ஞானத்துக்கு ஒரு நைல்ய பீதிமாதிகளற்றிருக்க விஷயகதமான நைல்யபீதிமாதிகளை விஷயியான ஜ்ஞானத்திலே உபசரித்து ''நீலஜ்ஞானம், பீதஜ்ஞானம்'' என்றாற்போலேயும், ஸ்வீகாரப்ராதாந்யத்தைப் பற்ற ஸ்வீகாரவிஷயமான ப₄க₃வத்க₃தோபாய வ்யவஹாரத்தை விஷயியான ஸ்வீகாரரூபப்ரபத்தி ஜ்ஞானத்திலே உபசரித்துச் சொல்லுகிறதாகையாலே ஒரு விரோதமுமில்லை.

இந்த முக்கியத்துவத்தை நோக்கி, ''லிங்கபராமர்சந்தான் அநுமானம்'' என்று நவீநதார்க்கிகர்கள் ஔபசாரிகமாக (அமுக்கியமாக) லிங்கபராமர்சத்தை 'அநுமானம்' என்று கூறினர். மிகச்சிறியதும், வண்டியின் அவயவமாத்திரமாயிருப்பதுமான கடையாணிக்குள்ள முக்கியத்துவத்தை நோக்கி 'கடையாணிதான் வண்டி' என்று சொல்லுவதுபோன்ற ஔபசாரிகப்ரயோகமிது. அதுபோலவே 'பகவான் உபாயம்' என்பதே உண்மை. ஆயினும், ஸர்வமுக்திப்ரஸங்கம் வாராமைக்காக ஸ்வீகாரமாகிற ப்ரபத்தியை அநுஷ்டிப்பவர்களுக்கே பரமபுருஷன் பரமபுருஷார்த்தத்தை அருளுகிறான் என்னும்(ப்ரபத்திக்குள்ள)இந்த முக்கியத்துவத்தைநோக்கி ஔபசாரிகமாக ப்ரபத்தியும் உபாயம் என்று வழங்கப்படுகிறது. மற்றொரு உதாஹரணம்: ''அர்த்தே₂நைவ விசேஷோஹி நிராகாரதயா தி₄யாம்'' [அறிவுகளுக்கு ஆகாரம் இல்லாமையால், விஷயங்களைக்கொண்டே ஒன்றுக்கொன்று வேறுபாடு உண்டாகிறதன்றோ] என்று உதயணர் குஸுமாஞ்ஜலியில் உரைத்தபடியே, ஜ்ஞானத்துக்கு உண்மையில் நிறம், ஆகாரம் முதலானவை கிடையாது; அப்படியிருந்தும், நீலமானதும், பீதம் (மஞ்சள்) ஆனதுமான விஷயங்களைப்பார்க்கும்போது, ''நீலஜ்ஞானம், பீதஜ்ஞானம்'' என்று விஷயங்களிலிருக்கும் நிறங்களை, அவ்விஷயங்களை அறியும் (நிறமற்ற) அறிவிலே ஏற்றி உபசாரமாக வழங்குகிறோம். இதுவும் அறிவில்லாவிடில் இவற்றையறியமுடியாது என்கிற அறிவின் முக்கியத்துவத்தைப்பற்றவரும் ஔபசாரிக வழக்கு. இதுபோலவே ஸ்வீகாரரூபமான சரணாகதியின் முக்கியத்துவத்தைப்பார்த்து, பகவானிடமிருக்கும் உபாயத்தன்மையை, அது இல்லாத சரணாகதியிலே ஏற்றி ஔபசாரிகமாகச் சொல்லுகிறோமாகையாலே, ''பகவானே உபாயம்; ப்ரபத்தியே உபாயம்'' என்னும் வழக்குகளில் விரோதமில்லை.

ஆகிறது; "स स्वेनैव फलप्रदः फलमपि स्वेनैव नारायणः" (ஸ ஸ்வேனைவ ப₂லப்ரத₃: ப₂லமபி ஸ்வேனைவ நாராயண:) என்றும், "मां व्रज...मामेवैष्यसि" (மாம் வ்ரஜ...மாமேவைஷ்யஸி) என்றும், "இறைவா நீதாராய் பறை" என்றும், "உன்றன்னோடுற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்றும் எம்பெருமானே உபாயமும் உபேயமும் என்றிறே சொல்லுகிறது. அந்த உபாயோபேயங்களாகிறது — கார்யகாரணங்களிறே; "यदनन्तरं यद्दृश्यते तत्तस्य कारणं" (யத₃நந்தரம் யத்₃த்₃ருஶ்யதே தத்தஸ்ய காரணம்) என்றும், "नियतपूर्वभावि कारणं" (நியத பூர்வ பா₄வி காரணம்) என்றும் பூர்வபாவியுமாய் பூர்வகாலத்திலே ஸத்துமாயிறே காரணமிருப்பது. "नियतपश्चाद्भावित्वं च कार्यत्वं" (நியதபஶ்சாத்பா₄வித்வம் ச கார்யத்வம்) என்றும், "प्रागसत्सत्तायोगित्वं कार्यत्वं" (ப்ராக₃ஸத் ஸத்தா

அது அப்படியே ஆகட்டும்; "நாராயணன் தானே பலனையளிப்பவனுமாவான்; தானே பலமாகவும் ஆவான்" [அநர்க்கராகவம் 3-20] என்றும், "என்னைச் சரணடை" [கீதை 18-66] "என்னையே அடைவாய்" [கீதை 18-65] என்றும், "இறைவா நீதாராய் பறை" [திருப்பாவை-28] "உன்தன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்" [திருப்பாவை-29] என்றும் கவிகளோடு, கண்ணனோடு, ஞானிகளோடு வாசியற அனைவரும் நாராயணனே அடைவிக்கும் உபாயமும் அடையப்படும் உபேயமும் ஆகிறான் என்றல்லவோ சொல்லுகிறார்கள். அடைவிப்பதாகையாலே உபாயம் காரணமாகவும், அடையப்படுவதாகையாலே உபேயம் கார்யமாகவுமன்றோ ஆகின்றன. "ஒன்றுக்குப்பின் மற்றொன்று (எப்போதும்) காணப்பட்டதாகில், முந்தியது பிந்தியதற்குக் காரணம்" என்றும், "எப்போதும் கார்யத்திற்கு முந்தியதாகவேயிருப்பது காரணமாகும்" என்றும் ந்யாயசாஸ்திரகாரர்கள் வழங்குவதுபோலே முன்னால் இருப்பதுமாய், (கார்யம் உண்டாவதற்கு) முந்தினக்ஷணத்திலே உள்ளதுமாயிருப்பதன்றோ காரணமாகிறது. "எப்போதும் (காரணத்திற்குப்) பிறகே உண்டாவதாயிருக்கை கார்யத்தின் தன்மை" என்றும், "(காரணமிருக்கும்) முற்காலத்தில் இல்லாமலிருந்து, (பிற்காலத்தில்) உள்ளதாகை கார்யத்தின் தன்மை" என்றும் அவர்கள் வழங்குகிறபடியே, காரண

யோகி$_3$த்வம் கார்யத்வம்) என்றும், பூர்வகாலத்தில் ஸத்து மாயிராதே, அத்தாலே பிறக்கக்கடவதுமாய் பச்சாத் ப$_4$ாவியுமாயிறே கார்யமிருப்பது. இப்படியிருக்க, **"नित्यं विभुं"** (நித்யம் விபு$_4$ம்) என்றும், **"सत्यं ज्ञानं"** (ஸத்யம் ஜ்ஞாநம்) என்றும், **"एकमेवाद्वितीयं"** (ஏகமேவாத்$_3$விதீயம்) என்றும் நித்யமுமாய், ஏகமுமாயிருக்கிற பகவத்வஸ்துவுக்குப் பரஸ்பரவிருத்தமான ப$_4$ாவாப$_4$ாவாத்மகத்வம் கூடும்படியென்? பூர்வோத்தரப$_4$ாவித்வம் கூடும்படியென்? என்னில்: **"सदेव सोम्येदमग्र असीदेकमेवाद्वितीयम्"** (ஸதே$_3$வ ஸோம்யேத$_3$மக்$_3$ர ஆஸீதே$_3$கமேவாத்$_3$விதீயம்) என்றும், **"अविकाराय शुद्धाय नित्याय"** (அவிகாராய ஶுத்$_3$த$_4$ாய நித்யாய) என்றும் அவிகாரமுமாய், நித்யமுமாய், ஏகமுமான ப்ரஹ்மத்துக்கு, **"ब्रह्मवनं ब्रह्म स वृक्ष आसीत्"** (ப்$_3$ரஹ்மவநம் ப்$_3$ரஹ்ம ஸவ்ருக்ஷ

மிருக்கும் பூர்வகாலத்தில் உள்ளதாயிராமல், காரணத்தாலே பிறப்பதாய் காரணத்திற்குப் பிற்காலத்திலேயே இருப்பதாயுள்ளதன்றோ கார்யமாகிறது. இப்படியிருக்க, "எல்லாக் காலத்திலுமிருப்பதாகையாலே நித்யமானதும், எல்லா தேசத்திலுமிருப்பதாகையாலே ஸர்வவ்யாபியாயுமுள்ளது பரம்பொருள்" [மூண்ட 1-1-6] என்றும், "விகாரமற்றதாய், அறிவுமயமானதாய், அளவற்றதாயிருப்பது ப்ரஹ்மம்" [தைத்திரீயம் ஆநந்தவல்லீ 1] என்றும், "ஒன்றேயிருந்தது; இரண்டற்றதாயிருந்தது" [சாங் 6-2-1] என்றும் நித்யமானதாய், ஒன்றுகையாலே ஸர்வதேச ஸர்வகாலத்திலுமிருக்கும் பரம்பொருளுக்கு, ஒருசமயம் இருப்பதும், ஒருசமயம் இல்லாமலிருப்பதுமாகிற பரஸ்பர விரோதமுள்ள கார்யகாரணத்தன்மைகள் எப்படி ஒட்டும்? முற்காலத்திலிருந்து பிற்காலத்திலில்லாமலிருக்கையாகிற காரணத்தன்மையும், பிற்காலத்திலிருந்து முற்காலத்திலில்லாமலிருக்கையாகிற கார்யத்தன்மையும் எப்படிப் பொருந்தும்? எனில்: "இவ்வுலகம் (ஸ்தூலஜகத்விசிஷ்டப்ரஹ்மம்) முன் ஸத்தாகவே (ஸூக்ஷ்மஜகத்விசிஷ்டப்ரஹ்மமாகவே) இருந்தது; ஒன்றாகவேயிருந்தது; இரண்டற்றதாயிருந்தது" [சாங் 6-2-1] என்றும் "விகாரமற்றவனாய், சுத்தனாய், நித்ய(சுத்த)னாய், பரமாத்மாவான விஷ்ணுவுக்கு வணக்கம்" [வி-பு 1-2-1] என்றும், விகாரமற்றதாய், என்றுமிருப்பதாய், ஒன்றான பரம்பொருளுக்கு, "ப்ரஹ்மமேவனமாகவும் (அதிகரணமாகவும்), அந்த ப்ரஹ்மமே மரமாகவும் (உபாதானகாரணமாகவும்) ஆயிற்று" [தைத்-ஸம் 2-8-7-8] என்றும், "அப்பரம்பொருள் 'நானே பலவாகக்கடவேன்; (அதற்காகப்) பிறக்கக்

ஆஸீத்) என்றும், "सोऽकामयत बहु स्यां प्रजायेयेति" (ஸோऽகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி) என்றும், "स एव सृज्यः स च सर्गकर्ता स एव पात्यत्ति च पाल्यते च" (ஸ ஏவ ஸ்ருஜ்ய: ஸ ச ஸர்க்ககர்த்தா ஸ ஏவ பாத்யத்தி ச பால்யதே ச) என்றும் த்ரிவிதகாரணத்வமும் ஸ்ரஷ்ட்ரு ஸ்ருஜ்யத்வமும் பரஸ்பரவிருத்தமாயிருக்க, "ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்ட ப்ரஹ்மம் காரணம், ஸ்தூலசிதசித்விசிஷ்ட ப்ரஹ்மம் கார்யம்" என்று அவ்விருத்ததர்மங்கள் விசேஷணங்களிலே யாய் விசிஷ்டைக்யத்தாலே நிர்வஹித்தாற்போலே, இங்கும், "धातुः प्रसादान्महिमानमीश" (தாது: ப்ரஸாதாந் மஹிமாநமீசம்) என்றும், "तस्मिन् प्रसन्ने क्लेशसङ्क्षयः" (தஸ்மிந் ப்ரஸந்நே க்லேசஸங்க்ஷய:) என்றும், "प्रहर्षयिष्यामि" (ப்ரஹர்ஷயிஷ்யாமி) என்றும், "त्वत्प्रीतये" (த்வத்ப்ரீதயே)

கடவேன்' என்று ஸங்கல்பித்தது' [தை-ஆந 6-2] என்றும், "ஸ்ருஷ்டிக் கப்படுவதும் அவனே; ஸ்ருஷ்டி செய்பவனும் அவனே; அவனே காப் பாற்றுகிறான்; ஸம்ஹரிக்கிறான், காப்பாற்றப்படுகிறான்" [வி-பு 1-2-70] என்றும் நிமித்தகாரணம், உபாதாநகாரணம், ஸஹகாரிகாரணம் என்னும் மூன்றுவிதமான காரணமாயிருக்கும் தன்மையும், ஸ்ருஷ்டிப்பவனாகவும், ஸ்ருஷ்டிக்கப்படுவதாகவுமிருக்கும் தன்மையும் சொல்லப்படுகிறது. காரண மாயிருக்கை, கார்யமாயிருக்கை முதலான இவை ஒன்றுக்கொன்று விருத்தமாயிருப்பவை. ஆயினும், "ஸூக்ஷ்மமான சேதநாசேதநங்களோடு கூடிய ப்ரஹ்மம் காரணம்; ஸ்தூலமான சேதநாசேதநங்களோடு கூடிய ப்ரஹ்மம் கார்யம்" என்று கொள்ளுவதன்மூலம் காரணமாகையும், கார்ய மாகையுமான விருத்ததர்மங்கள் ஸூக்ஷ்மசேதநாசேதநமும், ஸ்தூல சேதநாசேதநமுமாகிற விசேஷணங்களைப் பற்றிநிற்பவையாய், இவ் விசேஷணங்களோடுகூடிய ப்ரஹ்மம் ஒன்றேயாகையாலே காரணமும் கார்யமும் ப்ரஹ்மமே என்னக் குறையில்லை என்று ஸ்ரீபாஷ்யாதிகளில் நிர்வஹித்தாற்போலே, இங்கும் "மஹாமஹிமையையுடைய ஈசனைப் பரம் பொருளின் அருளாலே காண்கிறான்" [தைத்-நா 9-1] என்றும், "அவன் உகந்தானாகில் கிலேசங்கள் மறைந்தொழியும்" [ ] என்றும், "என்று நான் உன்னை உகப்பிக்கப்போகிறேன்?" [ஸ்தோ-ர 46] என்றும் "த்வத்ப்ரீதயே யஜ்வபி: ஸ்வாஹாகாரமுபாஹிதம் ஹவிரிஹ த்ரேதாக்ந் நிராசாமதி" [அநர்க்கராகவம் 1-53] [யாகம் செய்பவர்களால் உன் உகப்

என்றும், "திருவுள்ளமிடர் கெடுந்தோறும் வியக்கவின் புறுதும்" என்றும் ப்ரஸாதவிஶிஷ்டன் உபாயம், ப்ரீதி விஶிஷ்டன் உபேயம்" என்று விஶேஷணபே$_4$த$_3$ம் கிடக்கச் செய்தே விஶிஷ்டைக்யத்தாலே உபாயோபேயம் எம் பெருமான் என்கிறதாகையாலே எல்லாம் கூடும். "இரக்கம் உபாயம்; இனிமை உபேயம்" என்றிறே ஜீயர் அருளிச் செய்யும்படியும்.

"**अनन्यसाध्ये स्वाभीष्टे**" (அநந்யஸாத்$_4$யே ஸ்வாபீ$_4$ஷ்டே) என்று ப்ரபத்யாதி ஸாத்யமிறே மோக்ஷம். ஸாத்யமாவது,- முன்பின்றியிலே பின்புஉத்பந்நமாவது. "**उत्पन्नस्य विनाशयोगात्**" (**உத்பந்நஸ்ய விநாஶயோக$_3$ாத்**)என்று உத்பந்நமாய் நசிக்கு மாகில் உபேயமான பகவத்ப்ராப்திரூபமோக்ஷம் நஶிக்குமா

பின்பொருட்டு 'ஸ்வாஹா' என்று சொல்லி யாகத்தில் போடப்படும் ஹவிஸ்ஸை த்ரேதாக்னியானது உண்கிறது.] என்றும், "உன்றன் திருவுள்ளமிடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்" [திருவாய்10-3-9] என்றும் சொல்லுகிறபடியே அருளோடுகூடிய அவனே உபாயமாகவும், (கைங்கர்யத்தாலுண்டான) இனிமையோடுகூடிய அவனே உபேயமாகவும் ஆகிருன்; இரக்கம், இனிமை என்னும் வெவ்வேறு விசேஷணங்களோடு கூடிய ஒரே பகவானே முறையே உபாயமாகவும், உபேயமாகவும் ஆகிருனுகையாலே உபாயமாகையும், உபேயமாகையுமாகிற விருத்ததர் மங்கள் இரக்கமும் இனிமையுமாகிற விசேஷணங்களைப் பற்றிநிற்பவையாய், இவற்ருேடுகூடிய பகவான் உபாயமாகவும் உபேயமாகவும் ஆகிருன் என்று ப்ரமாணங்கள் சொல்லுகிறதாகையால் இரண்டும்கூடும். இவ் விசேஷணப்ராதாந்யத்தைப் பற்றவேயன்ருே "இரக்கம் உபாயம்; இனிமை உபேயம்" என்று நஞ்சீயர் ஒரு நல்வார்த்தை அருளிச்செய்தார்.

"தான் விரும்பும் மோக்ஷம் வேருென்ருல் ஸாதிக்க இயலாதவளவில் மஹாவிச்வாஸத்தோடுகூடப் பரமபுருஷன் ஒருவனேயே உபாயமாக வேணுமென்று யாசிப்பதுதான் ப்ரபத்தியென்றும் சரணுகதியென்றும் சொல்லப்படுகிறது" [பரதமுனிவாக்யம்] என்கிறபடியே, ப்ரபத்தி, பக்தி முதலான உபாயங்களால் ஸாதிக்கப்படுவதன்ருே மோக்ஷம்; ஸாதிக்கப் படுவதாவது,-முன்பு இல்லாமலிருந்து பிறகு உண்டாவதாகும்; "பிறந்தது எதுவாயினும் நசித்தே திரும்" [ ] என்கிற நியாயத்தாலே பகவானை அடைவதாகிற மோக்ஷம் உண்டாவதாகையாலே, அழியவும்

யிருந்ததியென்னில்; நடியாது. இதுக்கு இரண்டு ப்ரகார முண்டு; அதில் ஒன்று; ஸாத்₄யந்தான் உத்பாத்₃யம் என்றும், ப்ராப்யம் என்றும், விகார்யம் என்று ஸம்ஸ்கார்யம் என்றும் நாலு ப்ரகாரமாயிருக்கும். அவற்றில் உத்பாத்₃யமாவது:- "घटं करोति" (க₄டம்கரோதி) "पटं करोति" (படம்கரோதி)போலே முன்பு இன்றியிலே பின்பு உண்டாவது. ப்ராப்யமாவது:– "ग्रामं गच्छति राजानं गच्छति" (க்₃ராமம் க₃ச்ச₂தி, ராஜாநம் க₃ச்ச₂தி) "गां दोग्धि पयः" (கா₃ம் தோ₃க்₃தி₄ பய:) என்று முன்பே ஸித்தரூபமான வஸ்துவை அதிகாரிக்கு இடுகை. விகார்யமாவது:–"क्षीरमभ्यञ्जयति" (க்ஷீரமப்₄யஞ்ஜயதி) "त्रपुसीसे आवर्तयति" (த்ரபுஸீஸே ஆவர்த்தயதி) பாலைத் தயி ராக்குகையும், ஈயங்களுருக்குகையும். ஸம்ஸ்கார்யமாவது:- "व्रीहीन् प्रोक्षति" (வ்ரீஹிந் ப்ரோக்ஷதி) "व्रीहीनवहन्ति" (வ்ரீஹீநவ ஹந்தி)வஸ்துதன்னை ஃகார்யாந்தரயோக்யமாகப்பண்ணுகை. இங்கும், "ब्रह्मविदाप्नोति परम्" (ப்₃ரஹ்மவித₃ாப்நோதி பரம்)

வேண்டுமே எனில்: அழியாது; இது அழியாதென்பதை இரண்டுவகை யாக நிரூபிக்கலாம்; முதல் வழியாவது:–ஸாதிக்கப்படுவது நாலுவகைப் படும்: அவையாவன:-(1) உண்டுபண்ணப்படுவது, (2) அடையப்படுவது, (3) விகாரமடைவிக்கப்படுவது, (4) ஸம்ஸ்கரிக்கப்படுவது என்பவை. இவற்றில் உண்டுபண்ணப்படுவதாவது:–'குடத்தைச் செய்கிறுன், 'துணியை நெய்கிறுன்' என்கிறவிடங்களிற்போலே முன்பில்லாமல் பிறகு உண்டாவது. அடையப்படுவதாவது:-'கிராமத்தை அடைகிறுன்' 'அரசனை அடைகிறுன்' 'பசுவைப் பால் கறக்கிறுன்' என்றவிடங்களிற்போலே முன்பே இருக்கும் பொருளை ஒருவன் அடைவதாகும். விகாரமடைவிக்கப் படுவதாவது:– "பாலை உறையவைக்கிறுன்" "ஈயங்களை உருக்குகிறுன்" என்ற விடங்களிற்போலே பாலை உறையவைத்துத் தயிராக்குவதும்' ஈயம் முதலானவற்றை உருக்குவதும் முதலானதாகும். ஸம்ஸ்கரிக்கப் படுவதாவது:– யாகங்களிலே, "நெற்களை (மந்திரஜலத்தாலே) ப்ரோக்ஷிக் கிறுன்" "நெற்களை (உரலிலிட்டுக்) குத்துகிறுன்" என்கிற விடங்களிற் போலே யாகம் முதலானவற்றில் உபயோகிக்கப்படும் பொருளை மற்ருெரு கார்யத்திற்குத் தக்கதாம்படி பண்ணுவதாகும். மோக்ஷஸ்தலத்திலும், "ப்ரஹ்மத்தை உபாஸிப்பவன் மேலான பலனை அடைகிறுன்" [தை-ஆந-1] என்றும், "மேலானதிலும் மேலான திவ்யபுருஷனை அடைகிறுன்"

என்றும், "**परात्परं पुरुषमुपैति दिव्यं**" (பராத்பரம் புருஷமுபைதி தி₃வ்யம்) "**परं ज्योतिरुपसंपद्य**" (பரம் ஜ்யோதிருபஸம்பத்₃ய) என்றும் "உன்னையெய்தி" என்றும் பண்டே ஸித்தரூபனான பரமாத்மாவை இவன் கிட்டுகையால் ப்ராப்யம் நித்யமேயாகிறது. இனி மற்றை ப்ரகாரம்; "**नित्यो नित्यानां**" (நித்யோ நித்யாநாம்) என்றும், "**अजो ह्येकः**" (அஜோ ஹ்யேக:) என்றும், "**न हि विज्ञातुर्विज्ञातेर्विपरिलोपो विद्यते**" (ந ஹி விஜ்ஞாதுர் விஜ்ஞாதேர் விபரிலோபோ வித்₃யதே) என்றும், "பரநன்மலர்ச்சோதி" என்றும் ஆத்மாக்கள் நித்யராகையாலும், இவர்களுக்கு த₄ர்மமான ஜ்ஞாநாநந்தாதிகள் நித்யங்களாகையாலும், "**तमसा गूढमग्रे प्रकेतं**" (தமஸா கூ₃ட₄மக்₃ரே ப்ரகேதம்) என்றும், "**तया तिरोहितत्वाच्च शक्तिः क्षेत्रज्ञसंज्ञिता**" (தயாதிரோஹிதத்வாச்ச ஶக்தி: க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞிதா) என்றும் ஆத்மஸ்வரூப தர்மங்களுக்குத் திரோதா₄யகமான ப்ரக்ருதி ஸம்ஸர்க்கம் போய், "**स्वेन रूपेणाभि**

[முண்டகம் 3-2-8] என்றும், "பரஞ்சோதியை அடைந்து" [சாந் 8-12-2] என்றும், "உன்னை எய்தி" [ ] என்றும் ஏற்கனவே இருக்கும் பரமாத்மாவை இவன் கிட்டுவதே மோக்ஷமாகையால், இது 'ப்ராப்யம் (அடையப்படுவது) எனப்படும் இரண்டாவதுவகையான ஸாத்யமாகையால் மோக்ஷமாகிற ப்ராப்யம் நித்யமேயாகக்கூடும். இனி இரண்டாவது வழியாவது:-"நித்தியரான பல சேதனரிடையே ஒரு நித்ய சேதனனுயிருப்பவன் ஈசன்" [கட 2-5-13-ச்வே 6-13] என்றும், "பிறப்பற்றவனான ஒரு ஜீவன்" [தை-நா 10-5] என்றும், "அறிபவனான ஜீவனின் அறிவுக்கு (என்றும்) அழிவில்லையன்றோ" [ப்ருஹ 6-3-30] என்றும், "பரநன்மலர்ச் சோதியோ" [திருவாய் 10-10-10] என்றும் சொல்லுகிறபடியே ஜீவர்களும் ஸர்வகாலத்திலுமிருப்பவராகையாலும், இவர்களுக்கு விசேஷணங்களாயிருக்கும் ஜ்ஞாநம், ஆநந்தம் முதலான குணங்களும் எப்போதும் உள்ளவையாகையாலும், "ப்ரளயகாலத்தில் தமஸ் ஒன்றே இருந்தது; தமஸ்ஸினாலே ஞானமயமான ஜீவஸமூஹம் மறைக்கப்பட்டிருந்தது" [யஜுர்-அஷ்டகம் 2-8-9] என்றும், "அந்த ப்ரக்ருதியினாலே ஜீவன் என்னும் பரமாத்மசக்தி மறைக்கப்பட்டிருந்தபடியால்' [வி-பு 6-7-6] என்றும், ஆத்மஸ்வருபத்திலுள்ள நித்யமான குணங்களை மறைப்பதாகச் சொல்லப்படும் ப்ரக்ருதிஸம்பந்தம் நீங்கி, "பரஞ்சோதியையடைந்து ஜீவன் தன்

निष्पद्यते'' (ஸ்வேந ரூபேணாபி₄நிஷ்பத்₃யதே) என்றும் "आविर्भूतस्वरूपस्तु" (ஆவிர்ப்பூ₄தஸ்வரூபஸ்து) என்றும், "अवबोधादयो गुणाः — प्रकाश्यन्ते न जन्यन्ते नित्या एवात्मनो हि ते" (அவபோ₃தா₄த₃யோ கு₃ணா: — ப்ரகாஶ்யந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மநோ ஹி தே) என்றும், ஸ்வாப₄ாவிகாகாரம் விஸ்ம்ருதமாய் உத்பாத்யமன்றிக்கேயொழிகையாலும் நித்யமாகிறது என்றப்ரகாரம்.

அவையுமப்படியாகிறது; இப்ரதேஶம் ப்ரபத்த்யுபஸம்ஹரணம் பண்ணுகிறதாகில் अहमस्म्यपराधानामालयोऽकिञ्च-

---

ஸ்வரூபம் மலரப்பெறுகிறுன்'' [சாந் 8-12-2] என்றும், "(பரஞ்சோதியை யடைந்து) ஸ்வரூபம் மலரப்பெற்ற முக்தனே (ப்ரஜாபதி வாக்யத்தில் அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களையுடையவனுகச் சொல்லப்பெறுகிருன்)" [ப்ரஹ்மஸூ 1-3-18] என்றும்,

"யதா₂ ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாளநாந் மணே:।
யதோ₃த₃பாநகரணாத் க்ரியதே ந ஜலாம்ப₃ரம்।
ஸதே₃வ நீயதே வ்யக்திம் அஸத: ஸம்ப₄வ: குத:।
ததா₂ ஹேயகு₃ணத்₄வம்ஸாத் அவபோ₃தா₄த₃யோ கு₃ணா:॥
ப்ரகாஶ்யந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மநோ ஹி தே॥"

[விஷ்ணுதர்மம் 104-55, 56]

[மணியைச் சாணையிலிட்டுக்கடைந்து அழுக்குநீக்கினுல் எப்படி ஒளியானது புதிதாக உண்டாகாமல் உள்ளதே வெளிப்படுகிறதோ, குளம் வெட்டினுல் ஜலம் எப்படிப் புதிதாக உண்டாகாமல் உள்ளதே வெளிப்படுகிறதோ, அப்படியே (மூடிக்கொண்டிருக்கும் ப்ரக்ருதியின்) தாழ்ந்த குணங்கள் நசித்தவளவில், (ஆத்மாவுக்கு இயற்கையான) ஞானம், ஆனந்தம் முதலான குணங்கள் வெளிப்படுகின்றன; அப்போது உண்டாவதில்லை; ஆத்மாவுக்கு அக்குணங்கள் எப்போதுமிருப்பவையன்றோ. இல்லாதது எப்படி திடீரென உண்டாகும்?] என்றும் சொல்லுகிறபடியே ஆத்மாவுக்கு இயற்கையான குணங்கள் மோக்ஷத்தில் வெளிப்பட்டவையாய், புதிதாக உண்டுபண்ணப்படாமையாலும், உண்டுபண்ணப்பட்டதற்குத்தான் அழிவுண்டாகையாலும், மோக்ஷம் அழிவற்றதே ஆகிறது என்கை. ஆக, இப்படி இருவழிகளாலும் மோக்ஷம் அழிவற்றது என்று நிரூபிக்கலாம் என்றதாயிற்று.

नोऽगतिः। त्वमेवोपायभूतो मे भवेति प्रार्थनामतिः॥ शरणागतिः" (அஹமஸ்ம்யபராத₄நாமாலயோऽகிஞ்சநோऽக₃தி:। த்வமே வோபாயபூ₄தோ மே ப₄வேதி ப்ரார்த்த₂நாமதி:॥ ஶரணாக₃தி:) என்கிற ப்ரபத்திலக்ஷணம் கிடந்ததோ? என்னில்: "रावणो नाम दुर्वृत्तो राक्षसो राक्षसेश्वरः। तस्याऽहमनुजो भ्राता विभीषण इतिश्रुतः" (ராவணோ நாம து₃ர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர:। தஸ்யாऽஹமநுஜோ ப்₄ராதா விபீ₄ஷண இதிச்ருத:॥) என்று ராவணஸம்பந்தத்தாலும், "भीषयसे स भीरो" (பீ₄ஷயஸே ஸ்மபீ₄ரோ)என்று நாமநிர்வசநத்தாலும்,ஸ்வதோஷத்தை முன்னிடுகையாலே "अहमस्म्यपराधानामालयः" (அஹமஸ்ம்ய பராத₄நாமாலய:) என்னுமர்த்தம் சொல்லுகிறது. "राज्यं प्रार्थयमानश्च" (ராஜ்யம் ப்ரார்த்த₂யமாநஶ்ச) என்று தனக்குராஜ்யம் வேண்டிவந்தவனுய்ப் பெருமாளுக்கு ஒரு கிஞ்சித்காரம் பண்ணவந்தவனல்லாமையாலே "अकिञ्चनः" (அகிஞ்சந:) என்னுமர்த்தம் சொல்லுகிறது.

இதுவும் அப்படியே ஆகட்டும்; வால்மீகி ராமாயணத்தில் இவ்வபய ப்ரதாந ப்ரகரணம் வேதத்திற்சொன்ன சரணுகதியை விவரிக்கிறதாகில், "நான் குற்றங்களுக்கு ஓர் கொள்கலமாயிருப்பவன்; கைம்முதலற்றவன்; புகலற்றவன்; நீயே எனக்கு உபாயமாகவேணும் என்று வேண்டும் அறிவே சரணுகதியாகும்; அது இந்த தேவனிடம் செய்யப்படட்டும்" [அஹிர் 37-30] என்கிற சரணுகதிலக்ஷணம் இவ்விபீஷணசரணுகதியில் உண்டோ? எனில்: "தீயநடத்தையுள்ள ராவணன் என்னும் அரக்கன் அரக்கர்தலைவனுயிருக்கிறுன்; அவனுக்கு நான் தம்பி; விபீஷணன் (பய முறுத்துமவன்) என்று சொல்லப்படுமவன்" [ரா-யு 17-10] என்று ராவணனுேடு உறவைச் சொல்லுகையாலும் "பயங்கொள்ளியே! (உன்பெயருக்குத் தக்கபடி) நீ பயமுறுத்துகிறுய்" என்ற [ரா-யு 16-4] நாமநிர்வசனத்தை நெஞ்சிற்கொண்டு விபீஷணனெனப்படுமவன் என்கையாலும் தன் தாழ்வைச் சொல்லுகையாலே "நான் குற்றங்களுக்குக் கொள்கலம்" [அஹிர் 37-30] என்ற அர்த்தம் சொல்லப்பட்டது; "ராஜ்யத்தை வேண்டுமவனுயுமிருக் கிறுன்" [ரா-யு 17-65] என்று தனக்கு ராஜ்யம் வேண்டிவந்தவனுய், பெருமாளுக்கு ஒரு பெருமையை விளைக்கவந்தவனல்லன் என்கையாலே "கைம்முதலற்றவன்" [அஹிர் 37-30] என்னும் அர்த்தம் சொல்லப்பட்டது.

"त्वां तु धिक्कुलपांसनम्" (த்வாம் து தி₄க் குலபாம்ஸநம்) என்று தள்ளிவிடும்படி ஸோதரப்ராதாவுக்குட்பட ஆளன்றிக்கே போருகையாலே "अगतिः" (அக₃தி:) என்னுமர்த்தம் சொல்லுகிறது. "भवन्तं शरणं गतः" (ப₄வந்தம் ஶரணம் க₃த:) என்கையாலே. "त्वमेवोपायभूतो मे भवेति प्रार्थनामतिः। शरणागतिः" (த்வமேவோபாயபூ₄தோ மே ப₄வேதி ப்ரார்த்த₂நாமதி:। ஶரணாக₃தி:) என்னுமர்த்தம் சொல்லுகிறது. "पादयोः शरणान्वेषी निपपात" (பாத₃யோ: ஶரணாந்வேஷீ நிபபாத) என்கையாலே "सा देवेऽस्मिन् प्रयुज्यताम्" (ஸா தே₃வேऽஸ்மிந் ப்ரயுஜ்யதாம்) என்னுமர்த்தம் சொல்லுகிறது. ஆகையால், இது நேராகக் கிடந்தது.

ஆநுகூல்யஸங்கல்பாதிகளும் கிடந்ததோ? என்னில்: அந்த லக்ஷணமும் புஷ்கலம். "आत्मानं सर्वथा रक्ष पुरीं चेमां

"குலத்தைக் கெடுக்கவந்த உன்னைச் சுடுக" [ரா-யு 16-15] என்று தள்ளிவிடும்படி கூடப்பிறந்த தமையனுக்கும் ஆகாதவனாகையாலே "புகலற்றவன்" [அஹிர் 37-30] என்னும் அர்த்தம் சொல்லுகிறது. "தேவரீரை சரணமடைந்தேன்" [ரா-யு 19-4] என்கையாலே, "நீயே எனக்கு உபாயமாவாயாக என்று வேண்டும் அறிவே சரணாகதியாகும்" [அஹிர் 37-30] என்னும் அர்த்தம் சொல்லுகிறது. "சரணம் வேண்டியவனாய் திருவடிகளில் விழுந்தான்" [ரா-யு 19-2] என்று மேலே சொல்லுகையாலே, "அது இந்த தேவனிடம் செய்யப்படட்டும்" [அஹிர் 37-30] என்னும் அர்த்தம் சொல்லுகிறது. ஆகையால் சரணாகதிலக்ஷணம் பரிபூர்ணமாக இருந்தது.

"ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்।
ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸோ கோ₃ப்த்ருத்வவரணம் தத₂ா॥
ஆத்மநிக்ஷேபகார்ப்பண்யே ஷட்₃வித₄ா ஶரணாக₃தி:॥"
[அஹிர் 37-28]

[(அனைவர்க்கும்) அநுகூலனாயிருப்பேன் என்னும் ஸங்கல்பம்; ப்ரதிகூலனாயிருப்பதை விலக்குவது; (ஸர்வேச்வரன்) ரக்ஷிப்பான் என்னும் நம்பிக்கை; 'ரக்ஷிப்பாய்' என்று வரிப்பது; தன்னை (அவனிடம்) ஸமர்ப்பிப்பது; கைம்முதலில்லாமை என்னும் ஆறுவிதமாயிருப்பது சரணாகதி] என்று சரணாகதிக்குச் சொல்லப்படும் ஆறு லக்ஷணங்களும் இப்ரகரணத்தில் உள்ளனவோ? எனில்: அந்த லக்ஷணங்களும் நிறைந்துள்ளன. "உன்னை

सराक्षसां स्वस्ति तेऽस्तु'' (ஆத்மாநம் ஸர்வதா2 ரக்ஷ புரீம் சேமாம் ஸராக்ஷஸாம்। ஸ்வஸ்தி தேऽஸ்து) என்று ராவணனுக்கும் படைவீட்டுக்கும் நன்மையை ஆஶாஸிக்கையாலே *ஆநுகூல்யஸ்யஸங்கல்பம் சொல்லிற்று. **"उत्पपात गदापाणिः''** (உத்பபாத க3தா3பாணி:) என்று கையிலே தடியிருக்கப் பரிப4வித்தவனைக் கரையவடித்துப் போராமையாலே *ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம் சொல்லிற்று. **"वालिनञ्च हतं दृष्ट्वा सुग्रीवञ्चाभिषेचितम्। राज्यं प्रार्थयमानश्च''** (வாலிநஞ்ச ஹதம் த்3ருஷ்ட்வா ஸுக்3ரீவஞ் சாபி4ஷேசிதம்। ராஜ்யம் ப்ரார்த்த2யமாநஶ்ச) என்று ஸோதாஹரணமாக ராஜ்யம் தரவல்லர் என்று அறுதியிட்டு வருகையாலே *ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸம் சொல்லிற்று. **"भवन्तं शरणं गतः''** (ப4வந்தம் ஶரணம் க3த:)என்று சொல்லுகையாலே கோப்த்ருத்வவரணம் சொல்லிற்று. **"भवद्गतं मे राज्यं च जीवितं च सुखानि वै''** (ப4வத்3க3தம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகா2நி வை) என்று அகிலப4ரஸமர்ப்பணம் பண்ணுகையாலே *ஆத்மநிக்ஷேபம் சொல்லிற்று. **"प्रणादश्च महानेषः**

எல்லாவிதத்திலும் ரக்ஷித்துக்கொள்; அரக்கரோடுகூடிய இவ்விலங்கையையும் ரக்ஷித்துக்கொள். உனக்கு நன்மையுண்டாகட்டும்' [ரா-யு 16-25] என்று தன்னை திக்கரித்த ராவணனுக்கும், அரக்கர்வாழும் இலங்கைக்கும் கூட நன்மையை வேண்டுகையாலே அனைவர்க்கும் அநுகூலனாயிருக்கையாகிற 'ஆநுகூல்யஸங்கல்பம்' சொல்லிற்று. "கதையைக் கையில் ஏந்திய வனாய் உயரக்கிளம்பினான்" [ரா-யு 16-16] என்று கையிலே கதையிருந்தபோதிலும், அவமதித்தவனை அழும்படி அடித்து வராமையாலே, அனைவர்க்கும் பிரதிகூலனாயிராமையாகிற 'ப்ராதிகூல்யவர்ஜனம்' சொல்லிற்று. "வாலி கொல்லப்பட்டதையும், சுக்கிரீவன் அபிஷேகம் செய்யப்பட்டதையும் பார்த்து ராஜ்யத்தைப் பிரார்த்திப்பவனாய்" [ரா-யு 17-64] என்று சுக்கிரீவனை உதாரணமாகக்கொண்டு, 'ராமபிரான் ராஜ்யம் தரவல்லர்' என்று நிச்சயித்து வருகையாலே 'ரக்ஷிப்பான் என்னும் நம்பிக்கை' சொல்லிற்று. "தேவரீரை உபாயமாக அடைந்தேன்" [ரா-யு 19-4] என்று சொல்லுகையாலே 'ரக்ஷிப்பாய் எனவரிப்பது' சொல்லப்பட்டது. "என்னுடைய ராஜ்யமும் உயிரும், இன்பங்களும் உன்னைப்பற்றியுள்ளன" [ரா-யு 19-5] எற்று தன்னைபும் தனதையும் எல்லாவற்றையும் ராமனிடம் ஸமர்ப்பிக்கையாலே 'தன்னை அவனிடம் ஸமர்ப்பிப்பது' சொல்லப்பட்டது.

ततोऽस्य भयमागतं'' (ப்ரஜ்ஞாத$_3$ஶ்ச மஹாநேஷ: ததோऽஸ்ய ப$_4$யமாக$_3$தம்) என்று ஸ்வரத்தில் தளர்த்தியாலும் ''शीघ्रं व्यादिश नो राजन् वधायैषां दुरात्मनां''(ஶீக்$_4$ரம் வ்யாதி$_3$ஶ நோ ராஜந் வத$_4$ாயைஷாம் து$_3$ராத்மநாம்) என்று பெருமாள் பக்கல் போகவொண்ணாதபடி நடுவழியிலே கொல்லநிற்கையாலும் ''दैन्यं कार्पण्यमुच्यते'' (தை$_3$ந்யம் கார்ப்பண்யமுச்யதே) என்கிற * கார்ப்பண்யம் சொல்லிற்று. ஆகையாலே இந்த லக்ஷண மும் புஷ்கலம்.

இப்படி புஷ்கலலக்ஷணையான ப்ரபத்தியைப்பண்ணி இதுக்குப் பலமாகக் கொள்ளைக்குப்புக்குக் கூளமெடுத்தவோ பாதி, நாமிருக்கப் பலாந்தரங்களை ஆசைப்படாதே நம்மையே உகந்துவந்தவனுக்கு ஸகலபயநிவ்ருத்தியும் பண்ணுவேன்; இது நமக்கு வ்ரதமென்கிறார் இந்தச்லோகத்தால்.

வ்யா:—இப்படி அபயப்ரதாநம் பண்ணுவது ஆருக் கென்னில்: (ஸக்ருதே$_3$வ ப்ரபந்நாய) ஸலக்ஷண ப்ரபத்தி

''இவ்வொலி மிகப்பெரிதாயிருந்தது; ஆகையால் இவனுக்கு பயம் ஏற்பட் டிருக்கிறது'' [ரா-யு 18-14] என்று இவன் ஸ்வரம் தளர்ந்திருந்ததைச் சொல்லுகையாலும், ''அரசரே! இந்த துஷ்டர்களுடைய வதத்தின் பொருட்டு விரைவில் ஆணையிடும்'' [ரா-யு 17-7] என்று ராமபிரானை அணுகவும் முடியாதபடி வானரர்கள் நடுவழியிலேயே இவனைக்கொல்ல நிற்பதைச் சொல்லுகையாலும், ''வருந்தத்தக்கவனுயிருக்கையே கார்ப் பண்யம் எனப்படுகிறது'' [லக்ஷ்மீதந்த்ரம் 17-70] என்கிற 'கார்ப்பண்யம்' சொல்லப்படுகிறது. ஆகையாலே இந்த ஆறு லக்ஷணங்களும் பூர்ணமாகின்றன.

''இப்படி நிறைந்திருக்கும் லக்ஷணத்தையுடைய சரணாகதியை அநுஷ்டித்து, கொள்ளையடிக்கச்சென்று குப்பையை எடுத்து வந்த கதையாக, தன்னைத்தரும் கற்பகமான நாமிருக்க, மிகத்தாழ்ந்த மற்ற பலன்களை இந்த சரணாகதிக்குப் பலமாக ஆசைப்படாமல் நம்மையே ஆசைப்பட்டு வந்த விபீஷணனைப்போன்ற எவனுக்கும் எல்லாபயத்தையும் போக்கடிப்பேன்; இது நமக்கு விரதம்'' என்கிறார் ''ஸக்ருதேவ'' என்று தொடங்கும் இந்த சுலோகத்தாலே.

பண்ணினவனுக்கு. அதாவது – ஸக்ருதேவ ப்ரபந்நராயிருக்கை. 'ஸக்ருத்' தனக்குப் பொருள் என்னென்றால்: "आवृत्तिरसकृदुपदेशात्" (ஆவ்ருத்திரஸக்ருது$_3$'பதே$_3$ஶாத்) என்றும். "अनेकजन्मसंसिद्धः" (அநேகஜந்மஸம்ஸித்$_3$த$_4$:) என்றும் பக்திபோலே ஸ்வரூபநிஷ்பத்தியும் பலநிஷ்பத்தியும் சிரகாலஸாத்யையன்றிக்கே. "तद्द्वयं सकृदुच्चारो भवति" (தத்$_3$த்$_3$வயம் ஸக்ருது$_3$ச்சாரோ ப$_4$வதி) என்றும். "उपायोऽयं चतुर्थस्ते प्रोक्तः शीघ्रफलप्रदः" (உபாயோऽயம் சதுர்த்த$_3$ஸ்தே ப்ரோக்த: ஶீக்$_4$ரப$_2$லப்ரத$_3$:) என்றும் ஸ்வரூபநிஷ்பத்தியும், பலநிஷ்பத்தியும் ஒருகாலேயாயிருக்கை.

"ஸக்ருதேவ" என்கிற அவதாரணம் "ப்ரபந்நனே" என்றும், "ஒருகாலே, இருகால் மட்டில்லை" என்றும்

வ்யா:—இப்படி அபயமளிப்பதுதான் யாருக்கு? எனில்: (ஒருதடவை ப்ரபத்தி செய்தவன் பொருட்டே) சரணாகதிலக்ஷணம் வழுவாமல் ப்ரபத்தி செய்தவனுக்கு. அதாவது,- ஒருதடவையே ப்ரபத்தி செய்தவனாயிருக்கை. 'ஸக்ருத்' (ஒருதடவை) என்றதற்குப் பொருள் என்ன? என்றால்; "உபாஸனம் பலதடவை செய்யத்தக்கதொன்று; (அப்படியே உபனிஷத்) உபதேசிக்கையால்" [ப்ரஹ்மஸூ 4-1-1] என்றும், "அநேக ஜன்மங்களில் (பாபம் நீங்கப்பெற்று) பக்தியோக ஸித்திபெற்றவனாய்" [கீதை 6-45] என்றும் சொல்லுகிறபடி பக்தியைப்போலே தான் உண்டாவதற்கும், பழுப்பதற்கும் நெடுங்காலம் அப்யாஸம் செய்யவேண்டியிராமல், "அது த்வயம்; அதை ஒருதடவை உச்சரிக்கவேண்டும்" [கடவல்லீஸித்தமான த்வயோபனிஷத்] என்றும், "(கர்மஜ்ஞாந பக்திகளுக்குமேலே) நான்காவதாக உபதேசிக்கப்பட்ட இப்ரபத்தி விரைவில் பலமளிக்கும்" [லக்ஷ்மீ தந்த்ரம் 17-76] என்றும் தான் உண்டாவதும், பலனளிப்பதும் ஒருதடவை செய்வதனாலேயாயிருக்கும்.

இனி, 'ஸக்ருத் ஏவ' (ஒரு தடவையே) என்னும் பதங்கள் வீணானவை என்று ஓர் ஆக்ஷேபம் எழுப்பப்பட்டு, அதற்கு ஸமாதானம் உரைக்கப்படுகிறது. ஆக்ஷேபமாவது:— 'ஏவ' (ஏ) என்னும் பதத்தை எடுத்துக் கொண்டால், அதை 'ப்ரபந்நாய ஏவ' (ப்ரபந்நனுக்கே) என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம்; 'ஸக்ருத் ஏவ' (ஒருதடவையே) என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். அவை ஒவ்வொன்றிலும் அயோகவ்யவச்

அயோகவ்யவச்சேதமோ? அந்யயோகவ்யவச்சேதமோ? என்னில் ப்ரபந்நனே என்றபோது ப்ரபந்நனை அநுவதித்து அவனுக்கு அபயப்ரதாநம் பண்ணுவனென்று வாக்யத்துக்கு விதே₄யமித்தனைபோக்கி ப்ரபந்நனே அப்ரபந்நனே என்று விமர்சமாய் ப்ரபந்நனே என்று விதே₄யமல்லாமையாலும், "सकृदुच्चारो भवति" (ஸக்ருது₃ச்சாரோ ப₄வதி) என்றும், "सकृदेव हि शास्त्रार्थः" (ஸக்ருதே₃வ ஹி ஶாஸ்-த்ரார்த்த₂:) என்றும் ப்ரபத்தியாகில் ஸக்ருத்ப்ரயோஜ்யையாய், அஸக்ருத்ப்ரயோஜ்யை அல்லாமையாலே ஸக்ருதா

சேதப்பொருளும், அந்யயோக வ்யவச்சேதப்பொருளும் கொள்ளலாம். ஓரிடத்தில் ஒருபொருள் அல்லது தன்மை இல்லையென்பாரைக் குறித்து 'அப்பொருள் அங்கு இருக்கவே செய்கிறது' என்று ஸாதிப்பது அயோக வ்யவச்சேதமாகும். உதாஹரணம்-சங்கில் வெண்மையில்லையென்பாரைக் குறித்து, 'சங்கு வெளுப்பே' என்பது, ஒருபொருள் அல்லது தன்மை பல விடங்களிலும் உள்ளது என்பாரைக்குறித்து ஓரிடத்திலேயே உள்ளது என்று ஸாதிப்பது அந்யயோகவ்யவச்சேதம் ஆகும். உதாஹரணம்—வில்லாளிகள் பலருமுளர் என்பாரிடம் 'பார்த்தன் ஒருவனே வில்லாளி' என்பது. இங்கு, 'ப்ரபந்நாய ஏவ' (ப்ரபந்நனுக்கே) என்று கூட்டும்பேது அயோகவ்யவச்சேதப்பொருள் பொருந்துமா என்று பார்ப்போம். இங்கு, விபீஷணன் ப்ரபத்தி செய்தவனு அல்லவா என்னும் விசாரம் ஏற்பட்டிருந்தால், 'ப்ரபன்னனுன விபீஷணனுக்கே' என்று கூறுவதன்மூலம் அயோகவ்யவச்சேதப்பொருள் பொருந்தக்கூடும். அப்படியொரு விசாரம் இங்கு ஏற்படவேயில்லையாகையால் அப்பொருள் பொருந்தாது. விபீஷணன் ப்ரபந்நன் என்னும் ஸர்வஸம்மதமான உண்மையை அநுவாதம் செய்து 'அவனுக்கு அபயமளிப்பேன்' என்று விதிப்பதே இவ்வாக்கியத்திற்குப் பொருந்திய பொருளாகும். இனி, 'ஸக்ருத் ஏவ' [ஒருதடவையே] என்று கூட்டும்போது அயோகவ்யவச்சேதப்பொருள் பொருந்துமோ என்று பார்த்தால், அதுவும் பொருந்த வழியில்லை; ஏனெனில்: "அது த்வயம்; அதை ஒரு தடவையே உச்சரிக்கவேண்டும்" [கடவல்லீ ஸித்தமான த்வயோபனிஷத்] என்றும், "சாஸ்திரங்களின் பரமதாத்பர்யமான இந்த சரணுகதி ஒருதடவை செய்யப்பட்டாலே (ஸம்ஸாரஸாகரத்தினின்றும்) மனிதனைத் தாண்டுவிக்கும்" [லக்ஷ்மீதந்த்ரம் 17-92] என்றும் சாஸ்திரங்களில் சொல்லியபடியே ப்ரபத்தியென்பது ஒருதடவையே செய்யத்தக்கதொன்று. பலதடவை செய்யக்கூடியதொரு ப்ரபத்தியே கிடையாது.

வ்ருத்தியாயிருப்பதொரு ப்ரபத்தியில் வ்யவச்சேத்யமில்லாமையாலும் அயோகவ்யவச்சேதமல்லாமையாலும், **"अभयङ्गतो भवति"** **(அப$_4$யங்க$_3$தோ ப$_4$வதி)** என்று அப்ரபந்நனை பக்திநிஷ்டனுக்கும் அபயப்ரதாநம் பண்ணினபடியாலே அந்யயோகவ்யவச்சேதமல்லாமையாலும் வ்யாவர்த்யமில்லையென்றிட்டு வ்யர்த்தம். இனி "ஸக்ருதே$_3$வ" என்று இங்கே கூட்டினபோது **"सकृदेव कुर्यान्नासकृत्"** **(ஸக்ருதே$_3$வ குர்யாந்நாஸக்ருத்)** என்று ப்ரபத்தி ஸ்வரூபாபி$_4$த$_4$ாநம் பண்ணுகிறதன்றிக்கே ப்ரபந்நன் அநூத்$_3$யனாய், அபயப்ரதானத்திலே தாத்பர்யமாகையாலே ஸக்ருத்தோடே கூட்டினாலும் வ்யர்த்

அப்படியொன்று இருந்தால்தான் ப்ரபத்தியில் ஸக்ருத்வத்தின் (ஒருதடவை செய்யத்தக்கதாயிருக்கையின்) அயோகத்தை (இல்லாமையை) வ்யவச்சேதம் செய்ய (வேறுபடுத்தித்தர) ஏவகாரத்தால் முடியும். ஆகையால் இங்கும் அயோகவ்யவச்சேதம் பொருள் பொருந்தமாட்டாது. இனி, இரண்டிடத்திலும் அந்யயோகவ்யவச்சேதப்பொருள் பொருந்தாது என்று காட்டுவோம். 'ப்ரபந்நாய ஏவ' (ப்ரபந்நனுக்கே) என்றவிடத்தில் அந்யயோகவ்யவச்சேதப்பொருள் கொண்டால் 'ப்ரபந்நன் ஒருவனுக்கே அபயமளிப்பேனேயொழிய வேறொருவனுக்கும் அபயமில்லை' என்று பொருள் தேறும்; "பரம்பொருளிடம் நிரந்தரமான உபாஸனம் செய்தால் அவன் பயமற்றவனாகிறான்" [தை-ஆ-7] என்று சாஸ்திரத்தில் ப்ரபன்னனில் வேறுபட்டவனான பக்திநிஷ்டனுக்கும் அபயமளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், 'ப்ரபந்நனுக்கே அபயமளிப்பேன்' என்றதை அந்யயோகவ்யவச்சேதமாகக்கொண்டால் சாஸ்திரவிரோதம் வருமாகையால் பொருந்தாது. இனி, 'ஸக்ருத் ஏவ' (ஒருதடவையே) என்றவிடத்தில் அந்யயோகவ்யவச்சேதப்பொருள் பொருந்தவேண்டுமானால், இவ்வாக்யம் "ப்ரபத்தியை ஒருதடவையே செய்யவேண்டும்; பலதடவை செய்யக்கூடாது" என்று ப்ரபத்தியின் ஸ்வரூபத்தைத் தெரிவிக்கும் முறையில் அமைந்திருக்கவேண்டும். இங்கு அப்படியல்லாமல், சாஸ்திரப்ரஸித்தமான ப்ரபத்தியைச் செய்தவனை அநுவதித்து, அவனுக்கு அபயப்ரதானத்தை விதிப்பதாக வாக்கியம் அமைந்துள்ளது. ஆகையால், 'ஏவ' என்கிற அவதாரணத்துக்குள்ள இரண்டு பொருளும் இவ்விடத்தில் பொருந்தாது என்றதாயிற்று. இனி, 'ஸக்ருத் ப்ரபந்நாய' [ஒருதடவை ப்ரபத்தி செய்தவனுக்கு] என்றவிடத்தில் 'ஸக்ருத்' என்று சொன்னதும் முற்கூறிய காரணங்களாலேயே வீணானது. எப்படியெனில்: ப்ரபத்தியென்பது ஒரு

தம். இந்த உபபத்திகளாலே ஸக்ருத்ப்ரயோகமும் வ்யர்த்தம். "ஸக்ருதேவாப4யம் த3த3ாமி" என்று இங்கே அந்வயித்தாலோவென்னில்: ஒரு சரீரிக்குப் பிறக்கக்கடவ பயங்களெல்லாம் ஒருகாலே ஸஹிதமாய், அவற்றினுடைய நிவ்ருத்தியை ஒருகாலே பண்ணுகிறதல்ல. பூதகாலத்தில் பயங்கள் பண்டே அநுபவித்துப்போயிற்றன. ஆகாமிகாலத்தில் பயங்கள் உத்பந்நமல்லாமையாலே தந்நிவ்ருத்தி இப்போது பண்ணவொண்ணாது. இன்னமும், "த3த3ாமி" என்று ப்ராரப்தமாய், பரிஸமாப்தமல்லாத பயங்கள் உத்பந்நங்களல்லாமையாலே மேல்வருமவையடைய வரவரப்போக்குகிறேன் என்கிற வர்த்தமானத்துக்கும் 'ஒருகாலே' என்கிற ஸக்ருத்பதத்துக்கும் வ்யாஹதியும் வரும்; அபயப்ரதாநம் பண்ணுகிற இன்று தொடங்கி ராவணவத4பர்யந்தமாகவும் பயங்

தடவை தவிரப் பலதடவை செய்யக்கூடாததாகையாலே, 'ஒருதடவை ப்ரபத்தி செய்தவனுக்கு' என்றவிடத்தில் 'ஒருதடவை' என்ற விசேஷணம் பயனற்றது. ப்ரபத்தியானது ஒருதடவையே செய்யத்தக்கது என்று காட்டுவதற்குத்தான் அப்படிச்சொன்னது என்றால், அப்போது 'ப்ரபத்தியை ஒருதடவையே செய்யவேண்டும்; பலதடவைகூடாது' என்று வாக்கியமிருக்கவேண்டுமேயொழிய 'ஒருதடவை ப்ரபத்தி செய்தவனுக்கு அபயமளிப்பேன்' என்று வாக்கியமிருக்கக்கூடாது. ஆக, இப்படி 'ஸக்ருத் ஏவ' என்னும் இரண்டு பதங்களும் வீணானதென்று தெரிகிறது. இனி, "ஸக்ருத் ஏவ அப4யம் த3தாமி" (ஒருதடவையிலேயே அபயமளிக்கிறேன்) என்று கூட்டிப்பொருள் கொள்வதன் மூலம் பயனுடையதாக்கலாமே என்றால்: சரீரத்தையுடைய ஒரு ஜீவனுக்கு உண்டாகக்கூடிய பயங்களனைத்தையும் கூட்டி ஒரே தடவையில் அவற்றைப்போக்குவதென்பது பொருந்தாது. இறந்தகாலத்தில் பயங்கள் முன்பே அநுபவித்துத்தீர்ந்துவிட்டன. வருங்காலத்தில் உண்டாகப்போகும் பயங்கள் இப்போது உண்டாகவில்லையாகையாலே, அவற்றை இப்போது போக்கமுடியாது. 'அபயமளிக்கிறேன்' என்ற நிகழ்காலப்பிரயோகம் தொடங்கி முடியாத பயங்களையும், இப்போது உண்டாகாமல் மேலே வரப்போகும் பயங்களையும் வரவர அவ்வப்போது போக்குவேன் என்று காட்டுகிறது. ஆகையால், 'ஒருதடவையிலேயே அபயமளிக்கிறேன்' என்று கூட்டினால் 'ஒருதடவை' என்றதுக்கும், 'அளிக்கிறேன்' என்ற நிகழ்காலப் பிரயோகத்திற்கும் விரோதம் வரும். மேலும் அபயமளிக்கும் இன்று தொடங்கி ராவணவதம்

களுக்கும் பரிஹாரங்களுக்கும் அவதி$_4$யில்லாமையாலே அநுஷ்டாநவிருத்தமுமாகையாலே ''ஸக்ருத்'' என்றும், ''ஏவ'' என்றும் ப்ரஸ்துதபதங்களுக்கு வையர்த்யம் வரும் என்னில்: வாராது; ப்ரபந்நன் என்றார் பெருமாள்; அதுக்கு அநுபபத்தியாக மஹாராஜர் ஸக்ருத் ப்ரயோஜ்யையான ப்ரபத்தியை, **''राघवं शरणं गतः''** (ராக$_4$வம் ஶரணம் க$_3$த:) என்றும் **''भवन्तं शरणं गतः''** (ப$_4$வந்தம் ஶரணம் க$_3$த;) என்றும், **''पादयोः शरणान्वेषी निपपात''** (பாத$_3$யோ: ஶரணாந்வேஷீ நிபபாத) என்றும் முக்கால்பண்ணி ப்ரபத்தி லக்ஷண ஹாநியும், ப்ரபத்த்ருஸ்வரூபஹாநியும், ப்ரபத்தவ்யஸ்வரூப ஹாநியும் பண்ணினான் என்று தூஷணம் சொல்ல; (ஸக்ருதே$_3$வ ப்ரபந்நாய) அவன் பலகால் பண்ணிற்றிலன்; ஒருகால் பண்ணினான் என்கிறார்.

முடியும் வரையில் விபீஷணனுக்கு ஏற்படும் பயங்களுக்கும் அவற்றுக்கு ராமன் செய்யும் பரிஹாரங்களுக்கும் ஒரு எல்லையில்லை; ஆகையால் இப்படிப்பொருள் கொள்வது அநுஷ்டானத்தோடும் விரோதிக்கும். ஆகையால் எப்படிக்கொண்டாலும் 'ஸக்ருத்' 'ஏவ' என்னும் இவ்விரண்டு பதங்களும் வீணானவையே என்றதாயிற்று. இவ்வளவும் ஒரு பூர்வபக்ஷியின் ஆக்ஷேபம். இனி, 'ஸக்ருதேவ ப்ரபந்நாய' என்னும் பதங்களுக்கு எட்டுவிதமாகப் பொருளுரைப்பதன் மூலம் இதற்கு ஸமாதானம் உரைக்கப்படுகிறது: 1. ஸக்ருத் ஏவ' (ஒருதடவையே) என்ற பதங்கள் வீணானவையாகமாட்டா. எப்படியெனில்: 'விபீஷணன் சரணாகதன்' என்றார் ராமபிரான். இதை ஆக்ஷேபிப்பதற்காக, சுக்கிரீவன் ''ப்ரபத்தியானது ஒரு தடவையே செய்யத்தக்கதாயிருக்க, 'ராகவரை சரணடைந்தேன்' [ரா-யு 17-14] என்றும், 'உம்மை சரணடைந்தேன்' [ரா-யு 19-4] என்றும், 'திருவடிகளில் புகலை விரும்பியவனாய் விழுந்தான்' [ரா-யு 19-2] என்றும் மூன்று தடவை ப்ரபத்திசெய்து, ப்ரபத்திலக்ஷணத்தையும் மீறி ஸ்வயத்னத்தில் ஊன்றிநிற்கையாலே சரணமடையும் தன் ஸ்வரூபத்தையும் கெடுத்துக்கொண்டு, 'எழுதும்' என்னும் இதையும் மிகையாய் நினைக்கும் சரண்யனான ராமபிரானுடைய ஸ்வரூபத்தையும் குலைத்தான் விபீஷணன்; ஆகையால் இவன் ப்ரபந்நனல்லன்" என்று தூஷணம் சொன்னான். இதற்கு பதிலாக ''அவன் பலதடவை ப்ரபத்தி செய்யவில்லை; ஒருதடவையே செய்தான்; ஆகையால் இவன் ப்ரபந்நனே" என்கிறார் பெருமாள் இங்கு. ஆகையால், 'ப்ரபந்நாய ஏவ' (ப்ரபன்னனுக்கே) என்று கூட்டி அயோகவ்யவச்சேதப்பொருளைக் கொள்ளலாம் இங்கு; இவன் ப்ரபந்நனல்லன் என்று நிரூபிக்கப் பலதடவை சரணாகதிசெய்தான் என்று கூறினால், அதை மறுக்க, 'ஸக்ருதேவ ப்ரபந்ந:' (ஒருதடவையே ப்ரபபத்தி செய்தான்) என்று கூட்டியும் அயோகவ்யவச்சேதப்பொருளைக் கொள்ளலாம் என்று கருத்து.

நாலு மூன்றுபண்ணை பண்ணிற்ருக எடுத்த ப்ரமாணங்கள் செய்யும்படியென்? என்னில்: "राक्षसोऽभ्येति पश्यध्वमस्मान् हन्तुं न संशयः" (ராக்ஷஸோऽப்$_4$யேதி பஶ்யத்$_4$வமஸ்மாந் ஹந்தும் ந ஸம்ஶய:) என்று அபி$_4$ஶாபம் சொன்ன உங்களைப் பார்த்து, "सोऽहं परुषितस्तेन दासवच्चावमानितः। त्यक्त्वा पुत्रांश्च दारांश्च राघवं शरणं गतः॥" (ஸோऽஹம் பருஷிதஸ்தேந த$_3$ாஸவச்சாவமாநித:। த்யக்த்வா புத்ராம்ஶ்ச த$_3$ாராம்ஶ்ச ராக$_4$வம் ஶரணம் க$_3$த:॥) என்கிறபடி விரோதியாய் வந்தவனல்லேன்; அவன் தானே பரிபவித்துப் போகச்சொல்ல, அவனேட்டை ஸம்பந்தங்களையும் விட்டுப் பெருமாளை ஶரணம்புக வந்தேன் என்று தன் அருள்பாடு சொன்னுன் முற்பட "ஶரணம் க$_3$த:" என்கிற நிஷ்டை. உம்முடைய வார்த்தைகளாலே கலங்கினேமோ? என்று ஶங்கித்து, நம்மைத் தெளியவிடுகைக்கு "भवन्तं शरणं गतः" (ப$_4$வந்தம் ஶரணம் கத:) என்று விண்ணப்பம்

இவன் ப்ரபந்நனு அல்லனு என்னும் விசாரம் நிகழ்ந்ததாக முன் பின் ச்லோகங்களில் தெரியவில்லையே எனில்: ச்லோகங்களில் இல்லாவிடினும் இங்குள்ள வாக்கிய அமைப்பிலிருந்து இப்படியொரு விசாரம் ஏற்பட்டு அதற்கு இவ்வாறு பதிலுரைப்பதாகக் கொள்ளுகிறோம். சுக்கிரீவனின் நெஞ்சில் தோன்றக்கூடிய ஸந்தேஹங்களுக்கும் இராமபிரான் பதிலுரைப்பதைப் பல சுலோகங்களிலும் காண்கிறோமன்றே. அது சரி; இரண்டு மூன்றுதடவை சரணமடைந்ததாகச் சொல்லும் சுலோகங்களை எப்படி நிர்வஹிப்பது? எனில்: "அரக்கன் வருகிருன் பாருங்கள்; நம்மைக் கொல்லவே வருகிருன் என்பதில் ஐயமில்லை" [ரா-யு 17-5] என்று கடுஞ்சொல் சொன்ன உங்களைப்பார்த்து, "அப்படிப்பட்ட நான் அவ்விராவணனுல் கடுஞ்சொல்லுரைக்கப்பட்டேன்; வேலைக்காரனைப்போலே அவமதிக்கப்பட்டேன்; பெண்டுபிள்ளைகளைவிட்டு ராகவனை சரணடைந்தேன்" [ரா-யு 17-14] என்று 'நான் விரோதியாய் வந்தவனல்லேன்; ராவணனே அவமதித்துப் போகச்சொல்ல, அவனேடு உறவுகளையெல்லாம்விட்டு ராமபிரானைச் சரணம் புகவந்தேன்' என்று தான் வந்த காரணத்தைச் சொன்னுன் 'சரணம் க$_3$த:' என்கிற தன் நிலையைத் தெரிவிக்கும் பதங்களாலே. உம்முடைய வார்த்தைகளாலே கலங்கினேமோ என்று ஐயமுற்ற நம்மைத் தெளியச்செய்வதற்கு "தேவரீரை சரணமடைந்தேன்" [ரா-யு 19-4]என்று

செய்தபடி. ''பா$_3$த$_4$கனாய் வந்தவனல்லன். உம்மை ஶரணம் புகுவதாக வந்தவன்'' என்று நமக்குப் பட்டாங்கு சொன்னான் இரண்டாம்பண்ணை. ''**आनय**'' (ஆநய) என்று நாமுமழைத்து ''**अस्माभिस्तुल्यो भवतु**'' (அஸ்மாபி$_4$ஸ்துல்யோ ப$_4$வது) ''**सखित्वञ्चाभ्युपैतु नः**'' (ஸகி$_2$த்வஞ்சாப்$_4$யுபைது ந:) என்று நீர் அநுமதி பண்ணின பின்பாயிற்று, ''**खात्पपातावनिं**'' (க$_2$ாத்பபாதாவநிம்) என்று பூமியிலேயிழிந்து, ''**पादयोः शरणान्वेषी निपपात**'' (பாத$_3$யோ: ஶரணாந்வேஷீ நிபபாத) என்று நம் காலிலே விழுந்ததாகையாலே ஒருகாலேயாயிற்று அவன் ஶரணம் புகுந்தது. ஒரு ஹாநியும் பண்ணிற்றிலன் என்கிறார். ஆகையாலே ''ஸக்ருதே$_3$வ'' என்கிற பதம் ஸப்ரயோஜனமாகிறது.

அன்றியிலே, (ஸக்ருதே$_3$வ ப்ரபந்நாய) என்று, ''**अनेकस्मात् व्यावृत्तो धर्मोऽनेकधर्मः**'' (அநேகஸ்மாத் வ்யாவ்ருத்தோ த$_4$ர்ம:-அநேகத$_4$ர்ம:) என்கிறாப்போலே ''ஸக்ருதே$_3$வ நிஶ்சித்ய ப்ரபந்நன்'' என்றாய். மத்$_4$யமபத$_3$லோபியான ஸமாஸ

வாயாலே சொன்னான். 'தீங்கு செய்யவரவில்லை; உம்மை சரணடையவே வந்தவன் நான்'' என்று நமக்கு உறுதிசொன்னான் இரண்டாவது முறையாக. ''அழைத்துவா'' [ரா-யு 18-34] என்று நாமும் அழைத்து நம்மோடு ஒத்தவனாக ஆகட்டும்—நம்மோடு நட்புக்கொள்ளட்டும்'' [ரா-யு 18-38] என்று நீர் அனுமதிபண்ணின பின்புதான் ''ஆகாயத்திலிருந்து பூமியில் விழுந்தான்'' [ரா-யு 19-1] என்று பூமியில் இறங்கி, ''திருவடிகளில் புகலைத்தேடி விழுந்தான்'' [ரா-யு 19-2] என்று நம் காலிலே விழுந்தானாகையாலே, அந்த ஒருதடவைதான் அவன் சரணம் புகுந்தான்; சரணாகதிலக்ஷணத்துக்கு ஒருகுறைவும் செய்யவில்லை என்கிறார் இங்கு. ஆகையால், 'ஸக்ருத் ஏவ' (ஒருதடவையே) என்கிற பதங்கள் பயனுடையவேயாம் என்பதற்கு ஒரு வழி காட்டினாராயிற்று.

மற்றொரு விதமாகவும் பொருள்கொள்ளலாம்: 2. (ஒருதடவையிலேயே நிச்சயித்து சரணடைந்தவனுக்கு) ''அநேகஸ்மாத் வ்யாவ்ருத்தோ த$_4$ர்ம: அநேகத$_4$ர்ம:'' (அநேகவஸ்துக்களிலிருந்து வேறுபட்ட தர்மம் அநேகதர்மம்) என்று வடமொழியில் ஒரு ஸமாஸம் உண்டு. 'வ்யாவ்ருத்த:'

மாய், ''विचार्य च पुनः पुनः'' (விசார்ய ச புந: புந:) என்று துஷ்டனோ, அதுஷ்டனோ?, ஶத்ருவோ, அஶத்ருவோ?, மித்ரனோ, அமித்ரனோ?, வத்யனோ, அவத்யனோ?, ஸ்வீகார்யனோ, பஹிஷ்கார்யனோ என்று நாம் பட்டாற்போலே, லங்காமித்ர தநாதிகளை விடுவேனோ, பற்றுவேனோ? ராவணனை விடுவேனோ? பற்றுவேனோ? போகிறவிடத்திலே கைக்கொள்ளுவர்களோ? தள்ளுவர்களோ?, ராஜ்யம் கிடைக்குமோ, கிடையாதோ? என்று இப்புடைகளிலே பஹுமுகமாய் விசாரித்து அளப்பது முகப்பதாகையன்றிக்கே, **''सकृत्समीक्ष्यैव सुनिश्चितं तदा''** (ஸக்ருத் ஸமீக்ஷ்யைவ ஸுநிஶ்சிதம் ததா) போலே ஒரு காலே அறுதியிட்டுவந்தவன் என்கிறாராகவுமாம்.

அன்றியிலே, ஸஹஸாஶப்தத்துக்கு ஸக்ருதாதேஶமாய், ''ஸஹஸைவ ப்ரபந்நாய'' என்றாய், அதாவது, **''आजगाम**

(வேறுபட்ட) என்னும் மத்யமபதம் நழுவிவிடுகிறதாகையாலே இதை மத்யமபதலோபி (நடுப்பதம் நழுவும்) ஸமாஸம் என்பர். இங்கும் ''ஸக்ருதேவ நிச்சித்ய ப்ரபந்ந: ஸக்ருதேவப்ரபந்ந:'' (ஒருதடவையிலேயே நிச்சயித்து ப்ரபத்திசெய்வன் ஸக்ருதேவப்ரபந்நன்) என்று மத்யமபதலோபிஸமாஸமாகக்கொண்டு ''மறுபடியும் மறுபடியும் விசாரித்து'' [பார-ஆநு 186-11] என்றாற்போலே, தீயவனோ நல்லவனோ, எதிரியோ அல்லனோ, நண்பனோ அல்லனோ, கொல்லத்தக்கவனோ தகாதவனோ, கைக்கொள்ளத்தக்கவனோ தகாதவனோ என்று நாம் ஐயப்பட்டாற்போலே, இலங்கை, நண்பர், செல்வம் முதலியவற்றை விடலாமா பற்றலாமா, ராவணனை விடலாமா பற்றலாமா, ராமகோஷ்டியில் ஏற்றுக்கொள்ளுவார்களோ தள்ளுவார்களோ, ராஜ்யம் கிடைக்குமோ கிடைக்காதோ என்று இவ்விதமாகப் பலவிதமாய் ஆராய்ந்து, தானியத்தைக் கொட்டிக் கொட்டி அளப்பாரைப்போலே ஐயப்படாமல் ''ஒரு தடவை ஆராய்வதனாலேயே நிச்சயித்து'' [ரா-யு 12-28] என்றவிடத்திற்போலே ஒருதடவையிலேயே முடிவுசெய்து வந்தவன் விபீஷணன் என்று கூறுவதாகவும் கொள்ளலாம்.

வேறொரு விதமாகவும் பொருள் கொள்ளலாம்: 3. (திடீரென சரணமடைந்தவனுக்கு) 'ஸஹஸா' (திடீரென) என்கிற சப்தத்திற்கு பதிலாக 'ஸக்ருத்' என்னும் பதத்தைப் பிரயோகிப்பதுண்டாகையாலே, அப்படிப்

ஸுஹூர்தேந'' (ஆஜகாம முஹூர்த்தேந) என்றும், ''ஒல்லை நீ போதாய்'' என்றும் சொல்லுகிறபடியே, நின்றவா நில்லா நெஞ்சிற் பிறந்த ஆநுகூல்யம் புரிவதற்கு முன்பே வந்தான் என்கை.

அன்றியிலே, (ஸஹஸா ப்ரபந்நாய) என்று ஒன்றையும் நிரூபியாதே ஸாஹஸிகனாய் வந்தான். அதாவது ராவணன் கோஷ்டியிலே நின்று கடற்கரையிலிருக்கிற பெருமாளை ஶரணம் புக்கால், அவர் பிடித்துக்கொண்டுபோய் விலங்கிலேயிடில் செய்வதென்? என்று பயப்படாதே பட்டது படுகிறது என்று அவன் வந்த ஸாஹஸங்காணும் என்கிறாராகவுமாம்.

இப்படி ஶரணாகதரக்ஷணம் பண்ணுகிறீராகில் அடியேன் ஶரணாகதியிலே ஸர்ப்பம்ருதியுண்டோ? என்ன: (ஸஹஸா ப்ரபந்நாய) அன்றீன்ற .கன்றுக்காக முன்னீன்ற கன்றைக்

பிரயோகித்திருப்பதாகக்கொண்டு, ''ஒரு முஹூர்த்தத்தில் வந்தான்'' [ரா-யு 17-1] என்றும், ''ஒல்லை நீ போதாய்'' [திருப்பாவை 15] என்றும் சொல்லுகிறபடியே ''நின்றவா நில்லா நெஞ்சு'' [பெரியதிரு 1-1-4] எனப்படும் சஞ்சலமான நெஞ்சிற்பிறந்த ராமஸ்நேஹம் மாறுவதற்கு முன் வந்தான் என்றும் கொள்ளலாம்.

பிறிதொரு விதமாகவும் பொருள் கூறலாம்: 4. (ஸாஹஸத்தோடு வந்தான்) விளைவது ஒன்றையும் ஆராயாமல் ஸாஹஸச்செயல்புரிபவனாய் வந்தான். அதாவது:–'ராவணஸபையிலிருந்து கடற்கரையிலிருக்கும் ராமபிரானை சரணடைந்தால், அவர் பிடித்துக்கொண்டுபோய் விலங்கைமாட்டி விட்டால் என்னசெய்வது?' என்று பயப்படாமல் 'என்ன ஆனாலும் ஆகட்டும்' என்று ஸாஹஸமாக அவன் வந்ததைப் பார்த்தீர்களா என்கிறார் என்றும் கொள்ளலாம்.

அப்படியல்லாமல், ''இவ்வாறு சரணாகதரக்ஷணம் செய்கிறீராகில், விபீஷணன் சரணம் புகுவதற்கும் முன்னமே சரணம் புகுந்த என்னுடைய சரணாகதியில் பாம்புசெத்துக்கிறதோ நிஷ்பலமாவதற்கு?'' என்று சுக்கிரீவனுக்குக் கருத்தாகக்கொண்டு 5. (இப்போதே சரணமடைந்தவனுக்கு)

கொம்பிலும் குளம்பிலும் கொள்ளும் தாயைப்போலே, பால்பாயப்பாய ஶரணாகதனாய், பலமும்பெறாத இவனுக்கே யாமத்தனைபோக்கி, பூர்வஶரணாகதனாய் ராஜ்யதாரபலமும் பெற்ற உமக்காகோம்.

இப்படியாவது அவன்தான் ஶரணாகதனாகிலன்றோ. "शीघ्रं व्यादिश नो राजन् वधायैषां दुरात्मनाम्" (ஶீக்$_4$ரம் வ்யாதி$_3$ஶ நோ ராஜந் வத$_4$ாயைஷாம் து$_3$ராத்மநாம்) என்றும், "वध्यतामेष तीव्रेण दण्डेन सचिवैस्सह" (வத்$_4$யதாமேஷ தீவ்ரேண த$_3$ண்டே$_3$ந ஸசிவைஸ் ஸஹ) என்றும் நாங்கள் சொன்ன வார்த்தையைக்கேட்டு வெருவிப்போக நிற்கிறவனன்றோ? என்ன; (ப்ரபந்நாயைவ) "நாம் இப்படி விப்ரதிபந்நரானவளவிலும் அவன் ப்ரபந்நனே; போகான்காணும்" என்கிறார்.

"ப்ரபந்நனேகாணும் என்று அருளிச்செய்யாநின்றீர்; இவன்பக்திநிஷ்டனைப்போலே அங்கமாகச் சில தர்மாநுஷ்

அன்று ஈன்ற கன்றுக்காக முன் ஈன்ற கன்றைக் கொம்பால்முட்டிக் குளம்பால் மிதிக்கும் தாய்ப்பசுவைப்போலே, பால் பாயப்பாய்ப் பிறந்த கன்றைப்போலே அன்புப்பால் பாயப்பாய சரணமடைந்தவனாய் சரணாகதிபலனும் பெறாத இவனுடைய காரியத்தையே நான் செய்வேனேயொழிய, முன்னமே சரணமடைந்தவனாய் ராஜ்யம், மனைவி முதலான பலனையும் பெற்ற உன் விருப்பத்தை நிறைவேற்றேன் என்பதாகவும் கொள்ளலாம்.

"இப்படி என்னையும் மீறி அவனை ரக்ஷிக்கவேண்டியது அவன்தான் சரணமடைந்தவன் ஆனாலன்றோ; "அரசரே! இத்தியவர்களைக் கொல்ல வேண்டுமென்று விரைவில் ஆணையிடுங்கள்" [ரா-யு 17-7] என்றும், "இவன் கடும்தண்டனையாலே மந்திரிமாரோடு கொல்லப்படட்டும்" [ரா-யு 17-27] என்றும் நாங்கள் சொன்ன வார்த்தையைக்கேட்டு பயந்து ஓடிப்போக ஸித்தனாகவன்றோ இவன் நிற்கிறான்?" என்று சுக்கிரீவனுக்குக் கருத்தாக, 1. (ப்ரபந்நனுக்கே) என்கிறார்; நாம் இப்படி இவனைக் கைக்கொள்ளலாமா கூடாதா என்று விவாதம் செய்தபோதிலும், அவன் ப்ரபத்திசெய்யவே நிற்கிறான், பயந்து போகமாட்டான் என்கிறார்.

டாநம் பண்ணி, “**प्रतीयतां दाशरथाय मैथिली**” (ப்ரதீ$_3$யதாம் **த$_3$ாஶரத$_2$ாய மைதி$_2$லீ)** என்று நல்வார்த்தை சொல்லுவதும். தூதவத$_4$மாகாதென்பதும். தன்மகள் அநலையையிட்டு நல்வார்த்தை சொல்லுவதுமாய், அநேகம் புரஶ்சரணம் பண்ணியன்றோ வந்தது; ஆனபின்பு அவன் ப$_4$க்திநிஷ்டன்” என்றார் மஹாராஜர். பெருமாள்.- (ப்ரபந்நாயைவ) அவன் நல்வார்த்தை சொல்லிற்று நமக்காகவல்ல. “**विभीषणस्तु धर्मात्मा न तु राक्षसचेष्टितः**” (**விபீ$_4$ஷணஸ்து த$_4$ர்மாத்மா ந து ராக்ஷஸ சேஷ்டித:)** என்று ப்ரக்ருத்யா தார்மிகனாகையாலும். “**गुरुत्वाद्धितमिच्छता**” (**கு$_3$ருத்வாத்தி$_4$தமிச்ச$_3$தா**) என்று தமயன் விஷயத்திலே ஹிதபரனாகையாலும் “**आनुकूल्यस्य सङ्कल्पः**” (**ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப:)** என்று ப்ரபத்த்யதி$_4$காரியாய்ச் சொன்னானித்தனை. ஆகையால் இது அந்யதா$_2$ஸித்தம். “**सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय**” (**ஸேநயோருப$_4$யோர் மத்$_4$யே ரத$_2$ம் ஸ்தா$_2$பய)** என்று பள்ளரும், பறையரும்,

---

“விபீஷணன் ப்ரபந்நனே என்று அருளிச்செய்கிறீர்; இவனோவெனில், பக்தியை அனுஷ்டிப்பவர்களைப்போலே அங்கமாகச் சில தர்மானுஷ்டானங்களைப்பண்ணி, ‘தசரதபுத்திரனிடம் மைதிலியைக் கொடுத்துவிடுங்கள்’ [14-3,4] என்று நல்வார்த்தை சொல்லுவதும், தூதனைக் கொல்லக் கூடாது என்பதும், தன் மகள் அநலையைவிட்டுப் பிராட்டிக்கு நல்வார்த்தை சொல்லுவதுமாக இப்படிப் பல பூர்வாங்கங்களைச் செய்தன்றோ வந்தது; ஆகையால் அவன் பக்திநிஷ்டனாகவேயிருக்கவேணும்” என்றான் சுக்ரீவன். இதற்கு உத்தரமாக ராமபிரான் 2. (ப்ரபந்நனுக்கே) என்கிறார். அவன் நல்வார்த்தை சொன்னது நம்மைப்பற்றுவதற்கு அங்கமாகவல்ல. “விபீஷணனோவெனில் தர்மஸ்வரூபியாயிருப்பவன்; அரக்கச்செயலற்றவன்” [ரா-ஆ 17-24] என்று இயற்கையில் அறவழிநிற்பவனாகையாலும், “தமையனுக்கு நன்மையை விரும்பும் என்னாலே” [ரா-யு 16-24] என்று தமயனுக்கு நன்மை செய்ய விருப்பமுள்ளவனாகையாலும், “(அனைவருக்கும்) அநுகூலனாயிருப்பேன் என்னும் ஸங்கல்பம்” [அஹிர் 37-28] என்று சரணாகதிக்கு வேண்டிய அதிகாரிஸம்பத்தியை உடையவனாய்ச் சொன்னானேயொழிய, உபாயத்துக்கு அங்கமாக அநுஷ்டித்தானல்லன். ஆகையால் இதுகொண்டு இவன் பக்திநிஷ்டன் என்னவொண்ணாது. “இரண்டு சேனைகளுக்கிடையே என் ரதத்தை நிறுத்து” [கீதை 1-21] என்று

பார்ப்பாரும், பார்க்கருமான இருபடைக்கு நடுவே தேரை நிறுத்திச் சரமச்லோகம் உபதேசித்தபோது அர்ஜுனன் எங்கே குளித்துக் குலேகுடுமியும் *தோதவத்தியுமாய் நின்றான்? "இன்னமுறங்குதியோ!" என்ன, "நங்கைமீர் போதர்கின்றேன்" என்றும், "தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்" என்றும், திருவாய்ப்பாடியில் பெண்கள் நோன்புக்குப் போகிறபோது அனந்தலிலே கண்ணையும் கடைவாயையும் துடைத்து வந்தார்களத்தனைபோக்கி எந்த உவர்க்குழியிலே குளித்துவந்தார்கள்? அப்படியே இவனும் **"यो विष्णुं सततं द्वेष्टि तं विद्यादन्त्यरेतसम्"** (யோ விஷ்ணும் ஸததம் த்₃வேஷ்டி தம் வித்₃யாத₃ந்த்யரேதஸம்) என்று விஷ்ணு த்வேஷியாய் கர்மசண்டாளனான ராவணன்கோஷ்டியிலேநின்று போருகிறபோது, **"खस्थ एव व्यतिष्ठत"** (க₂ஸ்த₂ ஏவ வ்யதிஷ்ட₂த) என்று ஆகாசத்திலே நின்றானித்தனைபோக்கி

பள்ளரும் பறையரும் வேதவித்துக்களும் பௌத்தரும் கூடியிருக்கும் இரு படைகளுக்கும் நடுவே தேரைநிறுத்திக் கண்ணன் சரமச்லோகம் உபதேசித்தபோது அர்ஜுனன் எங்கே குளித்து அவிழ்த்த சிகையும் வெளுத்த உடுப்புமாய் நின்றான்? "இன்னமுறங்குதியோ" [திருப்பாவை 15] என்று கூப்பிட, "நங்கைமீர் போதர்கின்றேன்" [திருப்பாவை 15] என்றும், "தூயோமாய் வந்தோம் துயிலெழப்பாடுவான்" [திருப்பாவை 16] என்றும் திருவாய்ப்பாடியில் பெண்கள் நோன்புக்குப் போகிறபோது, தூக்கக் கலக்கத்திலே கண்ணையும் கடைவாயையும் துடைத்து வந்தார்களேயொழிய, எந்த நீர்நிலையிலே குளித்துவந்தார்கள்? அப்படியே இவனும், "எவன் விஷ்ணுவை எப்போதும் வெறுக்கிறானோ அவனைச் சண்டாளனுக்குப் பிறந்தவனாக அறியலாம்" [ப்ரஹ்மாண்டபுராணம்] என்று விஷ்ணு த்வேஷியாய், தீச்செயல்களாலே சண்டாளனான ராவணன் கோஷ்டியிலிருந்து ராமனைச் சரணடைய வரும்போது "ஆகாயத்திலேயே நின்றான்" [ரா-யு 17-8] என்று ஆகாயத்தில் நின்றானேயொழிய எந்தக் கடலிலே குளித்து அல்லது எந்தத் தீர்த்தத்திலே மூழ்கிவந்தான்? "எந்த நாளில்

---

* தோதவத்தி-தௌ₄தவஸ்த்ர என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம்; வெளுத்த உடுப்பையுடையவன் என்று பொருள்; "தோதவத்தித் தூய்மறையோர்" [பெரியாழ் 4-8-1] என்ற பாசுரம் காண்க.

என்ன கடலாடிப் புனலாடிவந்தான்? "यदहरेव विरजेत् तदहरेव प्रव्रजेत्" (யத$_3$ஹரேவ விரஜேத் தத$_3$ஹரேவ ப்ரவ்ரஜேத்) என்றும், "नास्ति नक्षत्रसंबन्धो न निमित्तपरीक्षणम्। श्रद्धैव कारणं नित्यमष्टाक्षरपरिग्रहे" (நாஸ்தி நக்ஷத்ரஸம்ப$_3$ந்தே$_4$ா ந நிமித்த பரீக்ஷணம்। ச்ரத்$_3$தை$_4$வ காரணம் நித்யமஷ்டாக்ஷர பரிக்$_3$ரஹே) என்றும், "போதுவீர் போதுமினோ" என்றும் ருசிபிறந்தபோதே வந்தானத்தனை. கங்கையாடுவார்க்கு ஒரு உவர்க்குழியிலே குளிக்கவேணுமோ? "भगवान् पवित्रं वासुदेवः पवित्रं" (ப$_4$க$_3$வாந் பவித்ரம் வாஸுதே$_3$வ: பவித்ரம்) "पवित्राणां पवित्रं" (பவித்ராணாம் பவித்ரம்) "पावनः सर्वलोकानां त्वमेव रघुनन्दन" (பாவந: ஸர்வலோகாநாம் த்வமேவ ரகு$_4$நந்த$_3$ந) என்று பேசப்பட்ட நம்பக்கல் வருகிறவனுக்கு ஒரு புரஶ்சரணம் வேண்டா, ப்ரபந்நனுகில்-என்கிறார்.

அதிருந்தபடியென்? பக்திக்கு ஶாஸ்த்ரவிஹிதமான வர்ணாஶ்ரமதர்மங்கள் உண்டாயிராநின்றது. இதுக்கு, "सर्वधर्मान् परित्यज्य" (ஸர்வத$_4$ர்மாந் பரித்யஜ்ய) என்று உள்ள தர்மங்களையும் விடச் சொல்லாநின்றது. ஆகையாலே ப்ரபத்தியில் பக்தி விலக்ஷணையாய்த் தோற்றுநின்றதீ என்னில்: அது சொல்லவொண்ணாது.

வைராக்யம் பிறக்கிறதோ, அந்தநாளிலேயே ஸந்யாஸாச்ரமத்தை ஏற்கவேணும்" [ஜாபாலோபனிஷத்-4] என்றும், "நல்ல நக்ஷத்ரஸம்பந்தமும் காணவேண்டியதில்லை; நல்ல நிமித்தங்களும் பார்க்கவேண்டியதில்லை; அஷ்டாக்ஷரத்தை உபதேசம் பெறுவதில் மனிதர்களுக்கு ச்ரத்தையே முக்கியகாரணம்" [நாரதியகல்பம்] என்றும், "போதுவீர் போதுமினோ" [திருப்பாவை-1] என்றும் ராமனை சரணம் பற்றவேணும் என்று ருசி பிறந்தபோதே வந்தானேயொழிய நாள் நக்ஷத்திரம் பார்த்துவரவில்லை. கங்கையிலே தீர்த்தமாடுவார் பரிசுத்திக்காக அதற்குமுன் ஒரு உப்புநீர்க் குட்டையிலே குளிக்கவேண்டுமோ? "பகவானே பரிசுத்தமானவன்; வாஸுதேவனே பவித்திரமானவன்" [பாஞ்சராத்ரம்] "பரிசுத்தமாக்குமவற்றினிடையே எவன் (மிகச்சிறந்த) பரிசுத்தமாக்குமவனோ மங்களமானவற்றினிடையே எவன் (மிகச்சிறந்த) மங்களமானவனோ" [பார-விஷ்ணுஸஹ] "ராகவனே! நீயே உலகனைத்தையும் பரிசுத்தப்படுத்துமவன்" [ரா-உத் 82-9] என்று பேசப்பட்ட நம்மிடம் சரணாகதனாய் வருமவனுக்கு ஒரு பூர்வாங்கமும் வேண்டாம் என்கிறார் ராமபிரான்.

"शब्दप्रमाणके ह्यर्थे यथाशब्दं व्यवस्थितिः" (ஶப்$_3$த$_3$ப்ர-மாணகே ஹ்யர்த்தே$_2$ யதா$_2$ஶப்$_3$த$_3$ம் வ்யவஸ்தி$_2$தி:) என்று ஶாஸ்த்ரப்ரமாணகராகுல் அதுசொன்னபடி கொள்ளக்கடவோம். அதாவது,- "बहवो हि यथा मार्गा विशन्त्येकं महापुरम्। तथा ज्ञानानि सर्वाणि प्रविशन्ति तमीश्वरम्॥" (ப$_3$ஹவோ ஹி யதா$_2$ மார்க்கா$_3$ விஶந்த்யேகம் மஹாபுரம்। ததா$_2$ ஜ்ஞாநாநி ஸர்வாணி ப்ரவிஶந்தி தமீச்வரம்॥), என்று ஓர் ஊருக்குப் போகவென்ருல், பலவழியாயிருக்குமாப்போலே, பகவத்ப்ராப்திக்குப் பல உபாயங்கள் உண்டென்று சொல்லி, ஒருபாயம் ஸ்வயம் அஶக்தமாகையாலே சில ஸஹகார்யந்தரங்களை விதித்து, ஒருபாயம் ஸர்வஶக்தியாகையாலே ஸஹகார்

இதற்குமேல் ஓர் ஆக்ஷேபம் பின்வருமாறு எழக்கூடும்:-பக்தியைக் காட்டிலும் ப்ரபத்தி சிறந்ததாகையாலே சரணுகதனுக்குப் பூர்வாங்கம் வேண்டியதில்லை என்று சொன்னது எப்படிப்பொருந்தும்? பக்திக்கு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட வர்ணுச்ரமதர்மங்கள் அங்கமாக உள்ளன. ப்ரபத்திக்கோவெனில், "எல்லா தர்மங்களையும் வாஸனையோடுவிட்டு" [கீதை 18-16] என்று உள்ளதர்மங்களையும் விடச்சொல்லிற்று. ஆகையாலே, தர்மங்களோடுகூடிய பக்தியே தர்மங்களற்ற ப்ரபத்தியைக்காட்டிலும் சிறந்தது என்று தோற்றுகிறதே. ப்ரபத்தி பக்தியிலும் சிறந்தது என்றது எப்படி ஒட்டும் என்ற ஆக்ஷேபம் எழுகிறது. இனி, இதற்கு ஸமாதானம் உரைக்கப்படுகிறது: ப்ரபத்தியைக்காட்டிலும் பக்திசிறந்தது என்றது சரியல்ல; "சாஸ்திரத்தை ப்ரமாணமாகக்கொண்ட விஷயத்தில் சாஸ்திரத்தில் சொல்லியபடியே அர்த்தநிர்ணயம் செய்யவேண்டும்" [ ] என்ற நாம் சாஸ்திரத்தைப் பிரமாணமாகக் கொள்ளுமவராகுல் சாஸ்திரத்தில் சொன்னபடியே எவ்விஷயத்திலும் அர்த்தநிர்ணயம் செய்யவேணும். அதாவது:-"ஒரு பெரிய பட்டணத்துக்கு எப்படிப் பல வழிகள் செல்லுகின்றனவோ அப்படியே ஜ்ஞானரூபமான பல உபாயங்களும் ஈச்வரனையே சென்றடைகின்றன" [ ] என்று சாஸ்திரமானது, ஓருருக்குப்போகப் பல வழிகளிருப்பதுபோலே பகவானையடையவும் பல உபாயங்கள் உண்டென்று சொல்லி, பக்தியாகிற ஒரு உபாயம் அசேதனமாகையால் துணையாக வர்ணுச்ரமதர்மங்கள் முதலான சில அங்கங்களை அதற்கு விதித்து, பகவானுகிற ஒருபாயம் ஸர்வசக்தியை உடையவனுகையாலே ஒரு துணை

யந்தரங்களை வேண்டாவென்கிறது. ப்ரகாரபேதத்தாலே ஒன்றுக்கொன்று வைலக்ஷண்யம் வாராது. ஸ்வரூபநிரூபக த4ர்மங்களென்றும், நிரூபிதஸ்வரூபத்துக்கு விசேஷஸமர்ப்பகதர்மங்களென்றும் உண்டு. அந்த விசேஷஸமர்ப்பகங்களைப் பார்த்தால் ப்ரபத்தியே விலக்ஷணை. எங்ஙனேயென்னில்: "सोऽन्वेष्टव्यः स विजिज्ञासितव्यः" (ஸோऽந்வேஷ்டவ்ய: ஸ விஜிஜ்ஞாஸிதவ்ய:) என்றும், "ब्रह्मविदाप्नोति परं" (ப்3ரஹ்மவித3ாப்நோதி பரம்) "ज्ञात्वा देवं मुच्यते सर्वपाशैः" (ஜ்ஞாத்வா தே3வம் முச்யதே ஸர்வபாசை:) என்றும், "तमेवैकं जानथात्मानं अन्या वाचो विमुञ्चथ अमृतस्यैष सेतुः" (தமேவைகம் ஜாநத2ாத்மாநம் அந்யா வாசோ விமுஞ்சத2 அம்ருதஸ்யைஷ ஸேது:) என்றும், "मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये" (முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்3யே) என்றும் வேதாந்தவிஹிதத்வமும் மோக்ஷாதி3ஸாத4நத்வமும் ஒத்திருக்

யும் வேண்டாம் என்கிறது. ஆகையால், பக்திக்கு தர்மங்கள் உண்டாகையாலும், ப்ரபத்திக்கு இல்லையாகையாலும் பக்தி ப்ரபத்தியைவிடச் சிறந்தது என்று சொல்லமுடியாது. பின் எதுகொண்டு ஒன்று மற்றொன்றைவிடச் சிறந்ததென்று அறிவது? என்றால்: ஒவ்வொரு பொருளுக்கும் ஸ்வரூபநிரூபகதர்மங்களென்றும் நிரூபிதஸ்வரூபவிசேஷணங்கள் என்றும் இரண்டுவகை குணங்கள் உண்டு. உதாஹரணமாக, ஒரு கறுப்புக் குடத்தை எடுத்துக்கொண்டால், 'கடத்வம்' [குடமாயிருக்கும் தன்மை] என்பது அதன் ஸ்வரூபநிரூபக [ஸ்வரூபத்தை நிரூபித்துத்தரும்] தன்மையாகும். அதன் ஸ்வரூபத்தை நிரூபித்துத்தராத கறுப்புநிறம் முதலான மற்ற எல்லா குணங்களும் அதன் நிரூபிதஸ்வரூபவிசேஷணங்கள் (அல்லது நிரூபிதஸ்வரூபவிசேஷஸமர்ப்பகங்கள்) எனப்படும். பக்திப்ரபத்திகளுடைய நிரூபிதஸ்வரூபவிசேஷணங்களை ஆராய்ந்தால் பக்தியிலும் ப்ரபத்தியே சிறந்தது என்று அறியலாம். எப்படியெனில்: "அப்பரம்பொருளே தேடத்தக்கது; அறியத்தக்கது" [சாந் 8-7-1] "ப்ரஹ்மத்தை அறிந்தவன் (உபாஸிப்பவன்) மேலான பலனை அடைகிறான்" [தை-ஆ 1] "தேவனை அறிந்தால் எல்லாப் பாசங்களினின்றும் விடுபடுகிறான்" [ச்வே 1-8] "அந்தப் பரமாத்மா ஒருவனையே அறியுங்கள்; மற்ற வார்த்தைகளை விடுங்கள்; மோக்ஷத்திற்கு இவனேயன்றோ உபாயம்" [முண்ட 2-2-5] "முமுக்ஷுவாகிற நான் சரணமடைகிறேன்" [ச்வே 6-18] என்று பக்தியாகிற

கச்செய்தேயும், பக்த்யுபாயஸ்வரூபம்போலே, "साध्यभक्त्येक-गोचरः" (ஸாத்$_4$யப$_4$க்த்யேககோ$_3$சர:) என்று இவனாலே ஸாத்யமாகவன்றிக்கே, ப்ரபத்த்யுபாயஸ்வரூபம் "सिद्धरूपं परं ब्रह्म" (ஸித்$_3$த$_4$ரூபம் பரம் ப்$_3$ரஹ்ம) என்றும், "नित्यं नित्याकृतिधरं" (நித்யம் நித்யாக்ருதித$_4$ரம்) என்றும் பண்டே ஸித்$_3$த$_4$ரூபமாய், "ध्यायीत" (த்$_4$யாயீத) "ध्रुवा स्मृतिः" (த்$_4$ருவா ஸ்ம்ருதி:) என்று ஸ்ம்ருதிஸந்தாநரூபஜ்ஞாநமாய் அசேதநமாகையன்றிக்கே, "यस्सर्वज्ञः सर्ववित्" (யஸ் ஸர்வஜ்ஞ: ஸர்வவித்) "सत्यं ज्ञानं" (ஸத்யம் ஜ்ஞாநம்) "सर्वं सर्वत्र सर्वदा जानाति" (ஸர்வம் ஸர்வத்ர ஸர்வதா$_3$ ஜாநாதி) என்று ஜ்ஞாதாவாய், ஸதா$_3$தநஜ்ஞாநஸ்வரூபமாய், ஸ்வீகரிக்குமிடத்தில் "आवृत्तिरसकृदुपदेशात्" (ஆவ்ருத்திரஸக்ருது$_3$பதே$_3$

உபாயமும், ப்ரபத்யுபாயம் எனப்படும் பகவானுகிற உபாயமும் ஆகிய இரண்டும் வேதாந்தங்களில் விதிக்கப்பட்டுமிருக்கின்றன; மோக்ஷம் முதலான பலன்களுக்கு ஸாதனமாகவும் ஆகின்றன. ஸ்வரூபநிரூபகமான இவ்விருவிஷயங்களிலில் ஒத்திருந்தபோதிலும் நிரூபிதஸ்வரூபவிசேஷணங்களான பல விஷயங்களில் பக்தியிலும் ப்ரபத்தி விஞ்சியிற்கிறது. அவையாவன:-"கர்மம் ஞானம் என்னும் இரண்டினாலும் ஸாதிக்கப்படும் பக்தி ஒன்றுக்கே விஷயமாகும் நாராயணன்" [கீதார்த்தஸங்க்ரஹம்-1] என்கிற படியே பக்திஸ்வரூபமானது ஜீவனாலே ஸாதிக்கப்படுவது; "ஸித்தரூபனாயிருக்கும் பரம்பொருள்" [ ] "நித்யனாயும் நித்யமான திருமேனியை உடையவனாயுமிருப்பவனே" [ஸாத்வதம்] என்று ஏற்கனவே ஸித்தனாயிருப்பவன் ப்ரபத்திஸ்வரூபமான பகவான். "தியானிக்கக்கடவன்" [அதர்வசிகை 2-14] "நிலையான நினைவாயிருக்கும் பக்தி" [சாந் 7-26-2] என்று நினைவுத்தாரையான அறிவுமாத்திரமாய் தனக்கு ஒரு அறிவற்றதாயிருப்பது பக்தி, "எவன் எல்லாப் பொருள்களின் ஸ்வரூபஸ்வபாவங்களை அறிகிறானோ" [முண்ட 1-1-10] "விகாரமற்றதாகவும், ஜ்ஞாநஸ்வரூபமாகவுமிருப்பது ப்ரஹ்மம்" [தை-ஆ 1] "எல்லாவற்றையும் எல்லாவிடத்திலும் எப்போதும் அறிகிறான்" [ ] என்று அறிவுமாத்திரமாயிராமல் அறிவையும் உடையதாய், எப்போதும் அறிவை ஸ்வரூபமாகவும் குணமாகவுமுடையதாயிருப்பது பகவானுகிற ப்ரபத்யுபாயம். உபாயத்தைப் பற்றும்போதும் "உபாஸனம் பலதடவை செய்யத்தக்கதொன்று; (அப்படியே உபனிஷத்) உபதேசிக்கையால்" [ப்ரஹ்மஸூ 4-1-1]

ஸாத்) என்று அநேகஜந்மஸம்ஸித்₃த₄மாய் சிரகாலஸாத்₄ய மாயிருக்கையன்றிக்கே, "तद्द्वयं सकृदुचारो भवति" (தத் த்₃வயம் ஸக்ருது₃ச்சாரோ ப₄வதி) "उपायभूतो मे भवेति प्रार्थनामतिः शरणागतिः" (உபாய பூ₄தோ மே ப₄ வே தி ப்ரார்த்த₂நாமதி: ஶரணாக₃தி:) என்று ஸக்ருத்ப்ரயோகத்திலே கைபுகுரக்கடவதாய் "तस्य तावदेव चिरं" (தஸ்ய தாவதே₃வ சிரம்) "यावदधिकारं" (யாவத₃தி₄காரம்) என்று விளம்பித பலப்ரத₃மாகையன்றிக்கே, "उपायोऽयं चतुर्थस्ते प्रोक्तः शीघ्रफलप्रदः" (உபாயோऽயம் சதுர்த்த₂ஸ்தே ப்ரோக்த: ஶீக்₄ரப₂லப்ரத₃:) "तावदार्तिस्तथा वाञ्छा तावन्मोहस्तथाऽसुखम्। यावन्न याति शरणं" (தாவதா₃ர்த்திஸ் தத₂ா வாஞ்சா₂ தாவந்மோஹஸ் தத₂ாஸுக₂ம் । யாவந்நயாதி ஶரணம்) என்று

"அநேகஜந்மஸம்ஸித்₃த₄:" [கீதை 6-45] [அநேக ஜந்மங்களில் பக்தியோகஸித்திபெற்றவனுய்] என்கிற பக்திபோலே பல ஜன்மங்களில் ஸித்திப்பதாய், நெடுங்காலம் முயன்று பெறக்கூடியதாயிராமல், 'அது த்வயம்; (இதை) ஒருதடவையே சொல்லவேண்டும்" [கடவல்லீ ஸித்த த்வயோபனிஷத்] "நீயே எனக்கு உபாயமாவாயாக என்று பிரார்த்திக்கும் அறிவாயிருப்பதே சரணுகதி" [அஹிர் 37-30] என்று ஒரு தடவை உச்சரிப்பதாலேயே ஸித்திக்கக்கூடியதாயிருப்பது ப்ரபத்யுபாயம். "அந்த ஜீவனுக்கு ப்ராரப்தகர்மத்திஞல் உண்டாகும் சரீரங்கள் முடியும் வரையிலேயே (மோக்ஷமடையத்) தாமதம் ஏற்படுகிறது" [சாந் 6-14-2] "யாவத₃தி₄காரமவஸ்தி₂திராதி₄காரிகாணும்" [ப்ரஹ்மஸூ 3-3-31] [(பிரமன் முதலிய) அதிகாரிபுருஷர்களுக்கு அதிகாரம் முடியும்வரையில் (ஸம்ஸாரத்தில்) வாழ்வு நிலைக்கிறது] என்று பக்தியைப் பற்றிஞர்க்குப் ப்ராரப்தகர்மம் அல்லது அதிகாரம் முடியும்வரையில் கா்லம் தாழ்த்தே பலம் கிடைக்கும்; "உனக்குச் சொல்லப்பட்ட நான்காவது உபாயமான இந்த ப்ரபத்தி விரைவில் பலனளிப்பது" [லக்ஷ்மீதந்த்ரம் 17-76] "(செல்வத்தை இழந்தமையாலுண்டான) வருத்தம்; (புதிய செல்வத்தில்) விருப்பம்; (ஆத்மப்ராப்தியுண்டாகாமையால் ஏற்பட்ட) மயக்கம்; (பேரின்பம் ஏற்படாமையாலுண்டான) துன்பம் என்னும் நாலும் எல்லாப் பாபங்களையும்போக்கும் உன்னைச் சரணமடையும்வரையிலேயே நீடிக்கும்" [வி-பு 1-9-37] என்கிறபடியே பகவானைச் சரணம்பற்றிஞர்க்கு இந்த சரீர முடிவுக்குள் பலன்கிடைத்துவிடும். "யஜ்ஞதானங்களாலும், உண்ணுவிரத

ஶீக்₄ரபலப்ரத₃மாய் **"तपसाऽनाशकेन"** (தபஸாऽநாஶகேந) என்றும் **"यज्ञो दानं तपश्चैव"** (யஜ்ஞோ தா₃நம் தபஶ்சைவ) என்றும் **"पञ्चाग्नयो ये च * त्रिणाचिकेताः"** (பஞ்சாக்₃நயோ யே ச * த்ரிணாசிகேதா:) என்றும் **"तपस्सन्तापलब्धस्ते सोऽयं धर्मपरिग्रहः"** (தபஸ்ஸந்தாபலப்₃த₄ஸ்தே ஸோऽயம் த₄ர்ம பரிக்₃ரஹ:) என்றும் **"कार्यस्त्रिष्वभिषेकश्च काले काले च नित्यशः"** (கார்யஸ் த்ரிஷ்வபி₄ஷேகஶ்ச காலே காலே ச நித்யஶ:) என்றும் "ஓதிநாமம் குளித்துச்சிதன்னால் ஒளி மாமலர்ப்பாதம் நாளும் பணிவோம்" என்றும் மாரிகோடையின்றியிலே உப்புநீரிலும் உவர்நீரிலும் சுட்டநீரிலும் சுனை நீரிலும் தோய்ந்தும், நாலுபாடுமுச்சியிலும் அழல்தூவ நின்றும் க்லேஶிக்கும்படியாகையன்றிக்கே, **"आनन्दो ब्रह्म"** (ஆநந்தோ₃ ப்₃ரஹ்ம) **"आनन्दं ब्रह्म"** (ஆநந்த₃ம் ப்ரஹ்ம) **"कं ब्रह्म खं ब्रह्म"** (கம் ப்₃ரஹ்ம க₂ம் ப்₃ரஹ்ம) என்றும், **"सर्वगन्धः सर्वरसः"** (ஸர்வக₃ந்த₄: ஸர்வரஸ:) என்றும் ஸுக

மாகிற தபஸ்ஸினாலும் (ப்ரஹ்மத்தை) அறியவிரும்புகிறார்கள்" [ப்ருஹ 6-4-22] "யஜ்ஞம், தானம், தபஸ்ஸு என்னும் மூன்றும் மனிதர்களைப் பரிசுத்தப்படுத்துபவை" [கீதை 18-5] என்றும், "பஞ்சாக்னி பரிசர்யையாலே பரிசுத்தமான மனத்தையுடைய * த்ரிணாசிகேதர்கள்" [கட 3-1] என்றும், "தவம் செய்ததால் கிடைத்தது இவ்வறப்பலன்" [ரா-ஸு 51-25] "காலை, நண்பகல், மாலை என்னும் மூன்றுகாலங்களிலும் தவறாமல் தினந்தோறும் குளிக்கவேண்டும்" [ ] என்றும், "ஓதிநாமம் குளித்து உச்சிதன்னால் ஒளிமாமலர்ப் பாதம் நாளும் பணிவோம்", [பெரியதிரு 9-3-9] என்றும், மழைகாலம் கோடைகாலம் என்றில்லாமல் உப்புநீரிலும், ஊற்றுநீரிலும், சுட்டநீரிலும், சுனைநீரிலும் குளித்தும், நான்குபுறத்தில் நான்கு அக்னிகளும், உயரே சூரியனுமாகப் பஞ்சாக்னிகளாலே தஹிக்கப்பெற்று நின்றும் மெய்யை வருத்தவேண்டியிருக்கும் பக்தியோகத்தை அநுஷ்டிப்பார்க்கு; "ஆநந்தமே ப்ரஹ்மமென்று அறிந்தார்" [தை-ப்ருகு 6-1] "அறிவாகவும், ஆநந்தமாகவுமிருப்பது ப்ரஹ்மம்" [ப்ருஹ 5-9-28] "சுகருபமாகவும், அளவற்றதாகவுமிருப்பது ப்ரஹ்மம்",

---

* த்ரிணாசிகேதர்கள்:—"அயம் வாவ ய: பவதே" [காடகம் 2-7] என்று தொடங்கும் மூன்று அநுவாகங்களையும் ஓதியவர்கள் 'த்ரிணாசிகேதர்' எனப்படுவர்.

ரூபமாய். "मिथ्याप्रयुक्तो यजमानं हिनस्ति" (மித்3யா ப்ரயுக்தோ யஜமாநம் ஹிநஸ்தி) "ज्ञानदोषपरिभ्रष्टश्चण्डालीं योनिमागतः" (ஜ்ஞாநதே3ாஷபரிப்4ரஷ்டஶ்சண்டா3ளீம் யோநிமாக3த:) என்று அல்பம்தப்பில் கர்த்தா நஶிக்கையன்றிக்கே. "यथातथा वापि सकृत्कृतोऽञ्जलिः। तदैव मुष्णात्यशुभान्यशेषतः शुभानि पुष्णाति न जातु हीयते॥" (யதா2 ததா2வாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி:। ததை3வ முஷ்ணாத்யஶுப4ாந்யஶேஷத: ஶுப4ாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே ||) என்றும், "दुराचारोऽपि सर्वाशी कृतघ्नो नास्तिकः पुरा। समाश्रयेदादिदेवं श्रद्धया शरणं यदि। निर्दोषं विद्धि तं जन्तु प्रभावात् परमात्मनः" (து3ராசாரோபி ஸர்வாஶீ க்ருதக்4நோ நாஸ்திக: புரா। ஸமாஶ்ரயேதா3தி3தே3வம் ஶ்ரத்3த4யா ஶரணம் யதி3। நிர்தே3ாஷம் வித்3தி4 தம் ஜந்தும் ப்ரப4ாவாத் பரமாத்மந:||)

[சாந் 4-10-5] என்கிறபடியே ப்ரபத்யுபாயமாகிற பரம்பொருள் அள வற்ற ஸுகஸ்வருபமாயிருக்கையாலே ப்ரபத்திநிஷ்டர்க்கு ஆயாஸமில்லை.

"மந்த்ரோ ஹீந: ஸ்வரதோ வர்ணதோ வா
மித்2யாப்ரயுக்தோ ந தமர்த்த2மாஹ
ஸ வாக்3வஜ்ரோ யஜமாநம் ஹிநஸ்தி
யதே2ந்த்3ரசத்ரு: ஸ்வரதோபராத4ாத்" [பாணினிசிக்ஷா-52]

[ஸ்வரத்தாலோ, அக்ஷரத்தாலோ குறைவு ஏற்பட்ட அல்லது தவருகப் பிரயோகிக்கப்பட்ட மந்திரம் சொல்லவேண்டிய பொருளைச் சொல்லாது; அந்த வாக்காகிற வஜ்ரம் யாகம் செய்பவனைத் துன்புறுத்துகிறது. "இந்த்ர சத்ரு:" என்னும் பதம் ஸ்வரத்தில் தவறியதால் யாகம் செய்தவனுக்குத் துன்பம் விளைத்தது இதற்கு உதாஹரணம்] "ஜ்ஞானத்தில் குற்றம் விளைந்ததால் நழுவி, சண்டாளஜாதியிலே பிறந்தான்" [ ] என்கிறபடியே பக்தியோகத்தில் சிறிது தவறினுல் செய்பவனுக்கு நாச முண்டாகும்; "எப்போதாவது எவனுலேயாவது எப்படியாவது ஒரு தடவை உன் திருவடியைக்குறித்துச் செய்யப்பட்ட அஞ்ஜலி (காயிகமான ப்ரபத்தி) அப்போதே எல்லாப் பாபங்களையும் போக்குகிறது; நன்மை களைத் தருகிறது. ஒருபோதும் குறைவதில்லை" [ஸ்தோ-ர 28] என்றும், "அநாதிகாலமாகத் தீயநடத்தையுள்ளவனுயினும், அனைத்தையும் உண்பனு யிலும், செய்ந்நன்றிகொன்றவனுயினும், நாஸ்திகனுயினும், ஆதிதேவனை சிரத்தையோடு சரணம் புகுந்தானுகில், பரமாத்மாவின் பெருமையாலே அவனைக் குற்றமற்றவனென்று அறிவாயாக" [ஸாத்வத 16-23] என்றும்,

என்றும், "பயனன்ருகிலும் பாங்கலராகிலும் செயல் நன்ருகத் திருத்திப் பணிகொள்வான்" என்றும் அடைவு கெடப் பண்ணிஞலும் தோஷங்களைப்போக்கித் திருத்தி அநுஷ்டாதாவை உஜ்ஜீவிப்பிக்கக்கடவதாய், "**अविद्यया मृत्युं तीर्त्वा विद्ययाऽमृतमश्नुते**" (அவித்₃யயா ம்ருத்யும் தீர்த்வா வித்₃யயா அம்ருதமஶ்நுதே) "**कषायपक्तिः कर्माणि ज्ञानन्तु परमा गतिः**" (கஷாயபக்தி: கர்மாணி ஜ்ஞாநம் து பரமாக₃தி:) "**कषाये कर्मभिः पक्वे ततो ज्ञानं प्रवर्तते**" (கஷாயே கர்மபி₄: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே) என்றும், "**तर्तुं मृत्युमविद्यया**" (தர்த்தும் ம்ருத்யுமவித்₃யயா) என்றும் ஸ்வோத்பத்திப்ரதிப₃ந்த₄கநிவர்த்தகமாய், "**अन्तवदेवास्य तद्भवति**" (அந்தவதே₃வாஸ்ய தத்₃ப₄வதி) "**न ह्यध्रुवैः प्राप्यते**" (ந ஹ்யத்₄ருவை: ப்ராப்யதே) "**प्लवा ह्येते अदृढा यज्ञरूपाः**" (ப்லவா ஹ்யதே அத்₃ருடா₃ யஜ்ஞரூபா:) என்று நஶ்யத்த்ரவ்யோபகரணமாய் நஶ்வரக்ரியாரூபமுமாய், ஸ்வயமஶக்ததேவதாத்மகமுமாய், ஸ்வர்க்கபஶுபுத்ராதி₃ஸாத₄ரணமுமான கர்மாதிகளை

"பயனன்ருகிலும் பாங்கலராகிலும் செயல்நன்ருகத் திருத்திப்பணிகொள்வான்" [கண்ணிநுண் 10] என்கிறபடியே ப்ரபத்யுபாயம் சரிவர அநுஷ்டிக்காவிட்டாலும் அநுஷ்டிப்பவனைத் திருத்தி உய்விக்கக்கூடியது. "கர்மத்தால் (ஜ்ஞாநாரம்பவிரோதி)பாபத்தைப்போக்கி, ஞானத்தால் மோக்ஷமடைகிருன்" [ஈசாவாஸ்ய 11] "கர்மங்கள் பாபத்தைப் போக்குகின்றன; ஞானமே பரமப்ராப்யத்திற்கு ஸாதனமாகிறது" [ ] "பாபம் கர்மங்களால் நசித்தவளவில் ஜ்ஞானம் உண்டாகிறது' [ ] "கர்மங்களால் பாபத்தைப் போக்குவதற்கு" [வி-பு 6-6-12] என்கிறபடியே பக்தியோகம் தானுண்டாகத் தடையாயிருக்கும் பாபங்களைப் போக்கும் கர்மாநுஷ்டானத்தை அங்கமாக அபேக்ஷிக்கிறது; அக்கர்மமோவெனில், "கர்மங்களால் கிடைக்கும் அப்பலன் அழிவுள்ளதாகவே ஆகிறது" [ப்ருஹ 5-8-10] "நிலையற்ற கர்மங்களால் நிலையான பலன் கிடைக்காதன்ருே" [கட 2-10] "யஜ்ஞரூபமான இவ்வோடங்கள் உறுதியற்றவை" [முண்ட 1-2-7] என்றும் சொல்லுகிறபடியே அழியும் திரவியங்களை உபகரணமாகக்கொண்டதாய், அழியும் செயலாயிருப்பதாய், இயற்கையில் சக்தியற்ற மற்ற தேவதைகளை விஷயமாகக்கொண்டதய், பந்தகமான சுவர்க்கம், பசு, புத்திரன் முதலான

அங்கமாக அபேக்ஷிக்கையன்றிக்கே, **"तमेवैकं जानथात्मानमन्या वाचो विमुञ्चथ"** (தமேவைகம் ஜாநத$_{2}$ாத்மாநமந்யா வாசோ விமுஞ்சத$_{2}$) **"सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज"** (ஸர்வ த$_{4}$ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ) என்றும் **"तदेकोपायतायाच्ञा"** (ததே$_{3}$கோபாயதாயாச்ஞா) என்றும், **"मामेवैष्यसि"** (மாமேவைஷ்யஸி) என்றும் ஸ்ருஷ்டியில் த்ரிவித காரணமும் தானேயாகிறாப்போலே ஆத்யந்திக ப்ரளயமான மோக்ஷத்திலும் அங்கமும் அங்கியும், உபாயமும் உபேயமும் ஒன்றேயாய், ஸர்வமுக்தி வைஷம்யநைர்க்$_{4}$ருண்யாதிகள் வாராமைக்காக அதி$_{4}$காரிஸ்வரூபயோக்யதாபாத$_{3}$கமான ஆநுகூல்யஸங்கல்பாதிமாத்ர ஸாபேக்ஷையாய், இப்படிக் கொத்த அநேககுணபௌஷ்கல்யங்களாலே பக்தியில் ப்ரபத்தியே அத்யந்தவிலக்ஷணை. இப்படிக்கொத்த ப்ரபத்தியைப் பண்ணினவனுக்கு.

மற்ற பலன்களையும் ஸாதித்துக்கொடுப்பதாயுள்ளது. "அப்பரமாத்மா ஒருவனையே அறியுங்கள்; மற்ற வார்த்தைகளை விடுங்கள்" [முண்ட 2-2-5] "எல்லா தர்மங்களையும் வாஸனையோடுவிட்டு என்னை ஒருவனையே சரணடை" [கீதை 18-66] "அவன் ஒருவனையே உபாயமாக யாசிக்கை ப்ரபத்தியென்னும் சரணாகதியாகும்" [பரதமுனிலக்ஷணம்] "என்னையே அடைவாய்" [கீதை 18-65] என்கிறபடியே ஸ்ருஷ்டியில் நிமித்தம் உபாதானம் ஸஹகாரி என்னும் மூன்றுகாரணமாகவும் தானே ஆவதுபோலே திரும்பிவருதலில்லாத ப்ரளயமாகிற மோக்ஷத்திற்கும் அங்கமும் அங்கியும், உபாயமும் உபேயமும் ப்ரபத்யுபாயமாகிற பகவான் ஒருவனேயாய், தானே உபாயமாகில் அனைவரும் மோக்ஷமடைய நேரிடுகையாகிற ஸர்வமுக்தி ப்ரஸங்கமும், ஒருவனுக்கு முக்தியளித்தும் மற்றொருவனுக்கு முக்தியளிக்காமலுமிருக்கையாலுண்டாகும் வைஷம்யமும் (பக்ஷபாதமும்) நைர்க்ருண்யமும் (இரக்கமின்மையும்) ஆகிற இந்த தோஷங்கள் வாராமைக்காக சரணாகதனாகிற அதிகாரியின் ஸ்வரூபத்திற்குத் தகுதியைத்தரும் 'ஆநுகூல்யஸங்கல்பம்' முதலான அதிகாரிவிசேஷணங்களை மாத்திரம் அபேக்ஷிப்பது ப்ரபத்யுபாயம். ஆக, இப்படிப்பட்ட பல குணங்கள் நிறைந்திருக்கையாலே பக்தியைக்காட்டிலும் ப்ரபத்தியே மிகச்சிறந்ததாகும். இப்படிப்பட்ட ப்ரபத்தியைப் பண்ணியவனே விபீஷணன் என்கிறார் 'ப்ரபந்நாயைவ' என்னும் பதத்தால்.

(ப்ரபந்நாயைவ) **"मन्त्रे व्यूहे नये चारे युक्तो भवितुमर्हति"** **(மந்த்ரே வ்யூஹே நயே சாரே யுக்தோ ப₄விதுமர்ஹதி)** என்று கர்மயோக நிஷ்டரான உமக்கும் ஆகோம். **"जांबवांस्त्वथ संप्रेक्ष्य शास्त्रबुद्धया विचक्षणः"** **(ஜாம்ப₃வாம்ஸ்த்வத₂ ஸம்ப்ரேக்ஷ்ய ஶாஸ்த்ர பு₃த்த்₄யா விசக்ஷண:)** என்கிற ஜ்ஞாநயோகநிஷ்டரான ஜாம்பவானுக்கும் ஆகோம். **"भक्तिश्च नियता वीर"** **(ப₄க்திஶ்ச நியதா வீர)** என்கிற ப₄க்தியோக நிஷ்டரான ஹநூமானுக்கும் ஆகோம். **"राघवं शरणं गतः"** **(ராக₄வம் ஶரணம் க₃த:)** என்று ப்ரபந்நனான விபீஷண னுக்கே ஆகக்கடவோம்.

(ப்ரபந்நாயைவ) **"अकारार्थायैव"** **(அகாரார்த்தா₂யைவ)** என்றும், "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்றும் அவன் நமக்கேயாயிருக்குமாப்போலே, "எனக்கே தன்னைத்

---

3. (ப்ரபந்னனுக்கே) "மந்திராலோசனையிலும், சேனை அணிவகுப்பிலும், ஸாமாதி உபாயத்திலும், ஒற்றனையேவுதலிலும், நீர் ஈடுபட்டவராக வேண்டும்" [ரா-யு 17-18] என்று கர்மயோகத்திலே ஈடுபாடுடைய உம் காரியத்தையும் செய்யோம். "சாஸ்திரஜ்ஞானத்தினுல் ஆராய்ந்து நீதிசாஸ்திரம் வல்லவரான ஜாம்பவான் விண்ணப்பித்தார்" [ரா-யு 17-43] என்று ஜ்ஞாநயோகநிஷ்டரான ஜாம்பவான் காரியத்தையும் செய்யோம்; "வீரனே! உன்னிடம் பக்தியும் நித்யமாயிருந்தது" [ரா-உ 40-16] என்கிற பக்தி யோகநிஷ்டரான அனுமன் காரியமும் செய்யோம். "ராகவனைச் சரணமடைந்தேன்" [ரா-யு 17-14] என்று சரணமடைந்த விபீஷணன் காரியமே செய்வோம் என்கிருர். இவ்வழியாலே ஏவகாரத்துக்கு அந்யயோக வ்யவச்சேதப்பொருளும் கூடுமென்று அறிகிறோம்.

4. (ப்ரபந்நனுக்கே) "அகாரப்பொருளாயிருக்கும் விஷ்ணுவுக்கே உடைமையாயிருப்பவன் நான்" [அஷ்டச்லோகீ-3] "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" [திருவாய் 2-9-4] என்று விபீஷணன் எனக்கேயாயிருப்பதுபோலே, "எனக்கே தன்னைத்தந்த கற்பகம்" [திருவாய் 2-7-11] என்று நம் ஆழ்வார் சொன்னபடியே நாம் சரணாகதனான இவனுக்கே ஆயிருப்போம் என்பதாகவும் கொள்ளலாம். ஆக, இப்படி ஐந்தும் மூன்றும் எட்டு வழிகளிலே பொருள் கொள்ளலாமாகையாலே, 'ஸக்ருத்' 'ஏவ' என்னும்

தந்த கற்பகம்'' என்று அபி$_4$யுக்தர் சொன்னபடியே நாம் ப்ரபந்நனுக்கேயாகக்கடவோம்.

அவன் ப்ரபந்நனுவது க்ஷுத்ரப்ரயோஜனத்துக்காக வன்றோ? **"राज्यं प्रार्थयमानश्च बुद्धिपूर्वमिहागतः''** (ராஜ்யம் ப்ரார்த்த$_2$யமாநஶ்ச பு$_3$த்$_3$தி$_4$பூர்வமிஹாக$_3$த:) என்று உம்முடைய ஹநூமானன்றோ சொன்னுன்? என்ன: (தவாஸ்மீதி ச யாசதே) அநந்யப்ரயோஜனனுயே வந்தான்காணும் என்கிறுர். அதாவது-சகாரம் அவதாரணுர்த்தமாய் தூ$_3$தவத்$_4$மாகாதென்று தனக்குப் பண்ணின உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக ராஜ்யம் கொடுக்கவேணுமென்று அபிப்ராயமாக ஹநூமான் சொன்னுனத்தனைபோக்கி விபீஷணன் சொன்னுனே? **"न देवलोकाक्रमणं नामरत्वमहं वृणे। ऐश्वर्यं वापि लोकानां कामये न त्वया विना॥''** (ந தே$_3$வலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே। ஐச்வர்யம் வாபி லோகாநாம் காமயே ந த்வயா விநா ||) என்றும், ''உன்னுலல்லால் யாவராலும்

இரண்டுபதங்களும் வினைவையல்ல என்று இவ்வளவால் நிரூபிக்கப்பட்டது.

''அவன் சரணமடைந்தது தாழ்ந்த பலனைக் கருதியன்றோ; 'அரசை வேண்டியவனுய் புத்திபூர்வகமாகவே இங்கு வந்தான்' [ரா-யு 17-65] என்று உமக்கினிய அனுமனன்றோ சொன்ருன்; மோக்ஷபலன் ஒன்றையே கொடுப்பதில் நோக்குடைய நீர் ப்ரயோஜநாந்தரபரனுன இவனிடம் இவ்வளவு பக்ஷபாதம் காட்டலாமோ? இவன் 'தனக்கேயாக எனைக்கொள்' என்று வந்தான் என்பது பொருந்துமோ?'' என்று சுக்கிரீவனுக்குக் கருத்தாக, 1. (உனக்கேயாவேன் என்றே யாசிப்பவனுக்கு) இவன் என்னைத் தவிர வேறு பலனைக் கருதாதவனுகவே வந்தான் என்கிருர். 'இதிச' என்றவிடத்தில் சகாரம் ஏவகாரப் பொருளையுடையது. தூதனைக் கொல்லலாகாது என்று கூறித்தனக்குப் பண்ணின உதவிக்குக் கைம்மாருகவிபீஷணனுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கவேண்டும் என்னும் கருத்திலே 'அரசை வேண்டியவனுய் வந்தான்' [ரா-யு 17-65] என்று அனுமன் சொன்னுனேயொழிய, விபீஷணன் தன் வாயாலே 'ராஜ்யம் வேண்டும்' என்று சொன்னுனே? ''வானவர் நாடான பரமபதச் செல்வத்தையும், சாவாமையாகிற கைவல்யமோக்ஷமடைவதையும் இவ்வுலக ஐச்வர்யங்களையும்

ஒன்றும் குறைவேண்டேன்'' என்றும் லக்ஷ்மணனும் ஶட கோபனும் சொன்னாற்போலே. ''त्यक्त्वा पुत्रांश्च दारांश्च'' (த்யக்த்வா புத்ராம்ஶ்ச தா₃ராம்ஶ்ச) என்றும், ''परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च। भवद्गतं मे राज्यञ्च जीवितञ्च सुखानि वै॥'' (பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த₄நாநி ச। ப₄வத்₃ க₃தம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுக₂ாநி வை ॥) என்றும் புறம்புள்ளவற்றையடைய விட்டுச்சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் தாமேயாக வந்தவன் என்கிறார்.

(தவாஸ்மீதி ச யாசதே) ''तवैवास्म्यहमच्युत'' (தவை வாஸ்ம்யஹமச்யுத) என்றும், ''உன்றன்னோடுற்றோமேயா வோம்உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்றும் அநந்யப்ர யோஜனனாயே வந்தான்.

(தவாஸ்மி) ''ந மம'' ''ந ராவணஸ்ய'' ஸ்வாதந்த்ர்ய முமில்லை; பரபாரதந்த்ர்யமுமில்லை. மத்பாரதந்த்ர்யமேவ ஸ்வரூபம் என்று வந்தவன்.

நீயில்லாவிடில் நான் வேண்டேன்'' [ரா-அ 31-5] என்று லக்ஷ்மணனும், ''உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்'' [திருவாய் 5-8-3] என்று நம் சடகோபனும் சொன்னாற்போலே, ''பெண்டுபிள்ளைகளைவிட்டு'' [ரா-யு 17-14] என்றும், ''என்னால் இலங்கையும், நண்பர்களும், செல் வங்களும் கைவிடப்பட்டன. என் அரசும் உயிரும் செல்வங்களும் தேவரீ ரிடத்திலேயே உள்ளது'' [ரா-யு 19-5] என்று மற்ற பலன்கள் அனைத்தை யும்விட்டு, 'சேலேய் கண்ணியரும் பெரும்செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய் தந்தையும்' [திருவாய் 5-1-8] ஆகிய எல்லாம் ராமபிரானே என்று நினைத்து வந்தவனன்றோ விபீஷணன் என்கிறார்.

2. (உனக்கே [கைங்கர்யம் செய்பவன்] ஆவேன் என்றும் யாசிப்பவ னுக்கு) ''அச்யுதனே! உனக்கே கைங்கர்யம் செய்பவனாவேன்'' [ ] என்றும், ''உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய் வோம்'' [திருப்பாவை 29] என்றும் கைங்கரியத்தையன்றி வேறொரு பலனை யறியாதவனாய் வந்தான்.

3. (உனக்கேயாவேன்) சகாரம் ஏவகாரார்த்தமாகையாலே, ''எனக்கு மாகேன்'' ''ராவணனுக்குமாகேன்'' என்று வந்தவன் என்கை. அதாவது, ஸ்வாதந்திரியமும், பிறர்க்குப் பாரதந்திரியமுமில்லாமல் எனக்குப் பர தந்திரனாயிருப்பதையே ஸ்வரூபமாக நினைத்து வந்தவன் என்கிறார்.

(தவைவாஸ்மி) அவன் நம்மைநோக்கி "தவைவாஸ்மி" என்றான். நாமும் "भुक्त्वा च भोगान् विपुलान् ततोऽन्ते मत्प्रसादतः। ममानुस्मरणं प्राप्य मम लोकं स गच्छति॥" (பு₄க்த்வா ச போ₄கா₃ந் விபுலாந் ததோऽந்தே மத்ப்ரஸாத₃த: | மமாநுஸ்மரணம் ப்ராப்ய மம லோகம் ஸ க₃ச்ச₂தி) "போகம் நீ எய்திப் பின்னும் நம்மிடைக்கே போதுவாய்" என்று லங்காராஜ்யமும், கைங்கர்ய ஸாம்ராஜ்யமும் "தவைவாஸ்து" என்னக்கடவோம். "श्रीमता राजराजेन लङ्कायामभिषेचितः" (ஶ்ரீமதா ராஜராஜேந லங்காயாமபி₄ஷேசித:) என்றும், "विभीषणविधेयं हि लङ्कैश्वर्यमिदं कृतम्" (விபீ₄ஷணவிதே₄யம் ஹி லங்கைச்வர்யமிதம் க்ருதம்) "लब्ध्वा कुलधनं राजा लङ्कां प्रायाद्विभीषणः" (லப்₃த்₄வா குலத₄நம் ராஜா லங்காம் ப்ராயாத்₃விபீ₄ஷண:) என்றும் இப்படி இரண்டும் கொடுத்துவிட்டருளினானிறே. குலதநமென்னக் கோயிலாழ்வாரைக் காட்டுகிறபடியென்? என்னில்: "इदं विमानमाश्चर्यमिक्ष्वाकुकुलदैवतम्" (இத₃ம் விமாநமாஶ்சர்யம் இக்ஷ்வாகு குலதை₃வதம்) என்றும், "मनुवंशप्रसूतानां क्षत्रियाणामिदं धनं। कामगं कामदं कान्तं विमानं रङ्गसंज्ञितम्" (மநுவம்ஶ ப்ரஸூதாநாம் க்ஷத்ரியாணாமித₃ம் த₄நம் | காமக₃ம்

---

4. (உனக்கேயாவேன்) அவன் நம்மைநோக்கி 'உனக்கேயாவேன்' என்றான். நாமும் "பெரிய இன்பங்களை அனுபவித்துவிட்டு, அதற்குப்பின் என் அருளாலே என் நினைவு உண்டாகி என் உலகை அவன் அடைவான்" [ ] என்றும், "போகம் நீ எய்திப் பின்னும் நம்மிடைக்கே போதுவாய்" [பெரியதிரு 5-8-5] என்றும் இலங்கை முடிசூடுமரசும், அடிசூடுமரசும் 'உனக்கே ஆகக்கடவது' என்போம். "அரசர்க்கரசனான திருவின் செல்வனாலே விபீஷணன் இலங்கையரசுக்கு முடிசூட்டப்பெற்றான்" [ரா-யு 28-27] "விபீஷணனுக்கு வசப்பட்டதாக இவ்விலங்கைச் செல்வம் செய்யப்பட்டது" [ரா-யு 116-13] "குலதனமான ஸ்ரீரங்கவிமானத்தை அடைந்து விபீஷணன் இலங்கை சென்றான்" [ரா-யு 131-9] என்று முடிசூடுமரசையும், (அரங்கநாதனின்) அடிசூடுமரசையும் ராமபிரான் விபீஷணனுக்குக் கொடுத்துவிட்டருளினானன்றோ. 'குலதநம்' என்னும் வால்மீகிவாக்கு ஸ்ரீரங்கவிமானத்தை எப்படிக் காட்டும்? எனில்: "இக்ஷ்வாகு குலத்தின் தெய்வமான ஆச்சர்யமான இந்த ஸ்ரீரங்கவிமானம்" [ ] என்றும், "மநுவம்சத்திலுதித்த அரசர்களுக்கு இந்த ரங்கவிமானம்

ஶாமத₃ம் காந்தம் விமாநம் ரங்க₃ஸம்ஜ்ஞிதம்॥) என்றும் உபபுராணத்திலும் ப்ரஹ்மாண்டபுராணத்திலும் ஸ்பஷ்டமானத்தை இங்கே அநுவதிக்கிறதாகையாலே குறையில்லை.

(தவாஸ்மி) "स्थितमात्मनि शेषत्वं" (ஸ்தி₂தமாத்மநி ஶேஷத்வம்) என்றும், "स्वत्वमात्मनि सञ्जातं" (ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம்) என்றும், "आत्मदास्यं" (ஆத்மதா₃ஸ்யம்) என்றும் ஆத்மஸத்தை உண்டாகிறபோதே ஶேஷமாயன்றோ இருப்பது.

(தவாஸ்மி) "अहं ब्रह्मास्मि" (அஹம் ப்₃ரஹ்மாஸ்மி) போலே ஸாமாநாதி₄கரண்யத்தாலே சொன்னாலும் ஶேஷஶேஷிபா₄வம் ஸித்திக்குமிறே. அப்படிச் சொல்லாதே வ்யதிகரணமாகச் சொல்லிற்று, பூர்வாபரங்களாலும்.

செல்வமாகும்; நினைத்த இடத்திற்குச் செல்லக்கூடியதும், நினைத்ததைத் தரக்கூடியதும், அழகியதும், ஸ்ரீரங்கம் என்று பெயர்பெற்றதுமாயிருப்பது இவ்விமானம்" [ ] என்றும் உபபுராணத்திலும், ப்ரஹ்மாண்டபுராணத்திலும் இக்ஷ்வாகுகுலதனமென்று தெளிவாகச் சொல்லப்பட்ட ரங்கவிமானத்தையே இங்கு 'குலதனம்' என்கிறதாகையாலே இப்பதம் ரங்கவிமானத்தைக் காட்டும்.

5. (உனக்காவேன்) "ஆத்மாவினிடம் சேஷத்வம் (இயற்கையாக) உள்ளது" [ ] என்றும், "ஆத்மாவினிடம் உடைமையாயிருக்கும் தன்மை இயற்கையிலேயே உள்ளது' [விஷ்ணுதத்வம்] என்றும், "ஆத்மாவுக்குள்ள தாஸனாயிருக்கும் தன்மையையும், ஹரிக்குள்ள ஸ்வாமியாயிருக்கும் தன்மையையும் எப்போதும் நினை" [விஷ்ணுதத்வம்] என்றும் ஆத்மா இயற்கையிலேயே சேஷமாயன்றோ இருப்பது.

6. (உனக்காவேன்) "நானே ப்ரஹ்மமாகிறேன்" [ப்ருஹ 3-4-10] என்றவிடத்திற்போலே, 'நீயேயாவேன்' என்று ஒரே வேற்றுமையாலே சொன்னாலும் உனக்கு ப்ரகாரமாவேன் என்றே சொல்லுமாகையாலே இவன் சேஷபூதன் என்னும் அர்த்தம் ஸித்திக்குமன்றோ; அப்படிச் சொல்லாமல், 'உனக்கு நான் ஆவேன்' என்று வெவ்வேறு வேற்றுமைகளில் சொன்னதுக்குக் காரணம் என்னென்னில்: முன் பின் வாக்கியங்களுக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஜீவனுக்கும் வேற்றுமையைச் சொல்லும் மற்ற சாஸ்திரவாக்கியங்களுக்கும் விரோதம் வருவதைக்காட்டி நிர்வஹிக்க

ப்ரமாணாந்தரங்களாலும் உபபாதிக்கவேண்டி ஆபாததத்தில் ஸ்வரூபைக்யம்போலே தோன்றி ப்ரமிக்கவொண்ணாதென்று ஜீவபரமாத்மபேதமும் வ்யக்தமாகைக்காக.

(இதி) இப்பாசுரம் ரஸித்தபடியாலே "தவாஸ்மி" என்ற ப்ரகாரத்தைச் சொல்லுவதே! என்று அநுபாஷித்து ப்ரீதராகிறார். (இதி) "इत्याह माल्योपजीवनः" (இத்யாஹ மால்யோபஜீவந:) என்றாற்போலே யாராகச் சொல்லக்கடவ பாசுரத்தை யார் சொல்லுகிறார்? புலஸ்த்யபுலஹாதிகள் இதிஹாஸமாகச் சொல்லக்கடவ பாசுரத்தை ஒரு ராக்ஷஸன் சொல்லுவதே!

(ச) உபாயமாத்ரத்தை அபேக்ஷித்துவிடாதே பலத்தையும் வேண்டுவதே! என்று ஸமுச்சயார்த்தமாகவுமாம். (தவாஸ்மீதி ச) "चतुर्विधा भजन्ते मां जनाः" (சதுர்விதா பஜந்தே மாம்ஜநா:)என்று பலசதுஷ்டய ஸாதாரணமான உபாயத்தை

வேண்டியிருக்கையாலும், மேலெழுந்தவாரியாகப் பார்ப்பார்க்கு இருவரும் ஒன்றே என மயங்கவைக்கக்கூடுமாகையாலும், இந்த அருமைகள் இல்லாமல் ஜீவனுக்கும், பரனுக்கும் உள்ள வேற்றுமை தெளிவாகத் தெரிவதற்காக 'நான் உனக்கு ஆகிறேன்' என்று வெவ்வேறு வேற்றுமைகளில் படிக்கிறது.

(என்று) 'உனக்கேயாவேன்' என்ற வார்த்தை தமக்கு மிகவும் இனித்தபடியாலே 'உனக்காவேன்' என்று ஒருவன் சொல்லுவதே! என்று அதையேகூறி ஆனந்தப்படுகிறான் இராமபிரான். (என்று) "என்று சொன்னான் மாலைவிற்று வயிறுவளர்ப்பவன்" [வி-பு 5-19-21] என்றாற்போலே எத்தனை உயர்ந்த ஞானிகள் சொல்லத்தக்க பாசுரத்தை எத்தனை தாழ்ந்தவன் சொல்லுகிறான்! ஒரு புலஸ்த்யன், ஒரு புலஹன் முதலான மஹர்ஷிகள் இதிஹாஸமாகச் சொல்லக்கூடிய பாசுரத்தை ஒரு அரக்கன் சொல்லுவதே! என்கிறார்.

1. (ச-உம்) முன்போலே சகாரத்துக்கு ஏவகாரப்பொருள் கொள்ளாமல், ஸமுச்சயப் பொருளேகொண்டு, 'உபாயமாக என்னை வரித்தது மாத்திரமோ? பரம்பலமாகிற கைங்கர்யத்தையுமன்றோ அபேக்ஷித்தான்' என்றும் பொருளுரைக்கலாம். 2. (உனக்கேயாகிறேன் என்றும்) "நாலு வகைப்பட்ட ஜனங்கள் என்னிடம் பக்திசெய்கிறார்கள்; அவராவார்,- செல்வத்தையிழந்த ஆர்த்தன்; புதிதாகச் செல்வத்தை விரும்பும் அர்த்

அபேக்ஷித்தால், உபேயங்களில் த்ரிவர்க்கத்தை அபேக்ஷியாதேபரமபுருஷார்த்தமான அபவர்க்கத்தை அபேக்ஷிப்பதே! (தவாஸ்மீதி ச) பூர்வார்த்த₄த்தில் உபாயத்தை அபேக்ஷித்து ஶரணுகதனுய்ப்போகாதே உத்தரார்த்த₄த்தில் கைங்கர்யத்தையும் அபேக்ஷித்து த்வயநிஷ்டனுவதே! (தவாஸ்மீதி ச) "தவாஸ்மீத்யபி" என்ருய் அதாவது, "परिपालय नो राजन् वध्यमानान्निशाचरैः" (பரிபாலய நோ ராஜந் வத்₄யமாநாந் நிஶாசரை:) என்ற ரிஷிகளேயும், "त्राणकाम इमं लोकं सर्वं वै विचचार ह" (த்ராணகாம இமம் லோகம் ஸர்வம் வை விசசார ஹ) "त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः" (த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் க₃த:) என்ற ஜயந்தனேயும்போலே க்ஷுத்ரஶரீர ரக்ஷணத்துக்காகவன்றிக்கே, ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தமான நம்மை என்கை. ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தம் "श्रीमते नारायणाय" (ஶ்ரீமதே நாராயணுய) என்றும், "सह वैदेह्या...अहं सर्वं करिष्यामि"

தார்த்தீ; கைவல்யத்தை விரும்பும் ஜிஜ்ஞாஸு; என்னை விரும்பும் ஞானி என்னும் நால்வர்" [கீதை 7-16] என்கிறபடியே நாலுபலத்துக்கும் பொதுவான உபாயமான என்னைப்பற்றினுல், உபேயங்களில் மற்ற மூன்றையும் விரும்பாமல் பரமபுருஷார்த்மான மோக்ஷத்தை விரும்பும் பாக்கியசாலியாவதே! 3. (உனக்காகிறேன் என்றும்) முன்கண்டத்தில் சொன்னபடி உபாயமாகமாத்திரம் என்னை வரித்துக் கேவலசரணுகதனுகாமல் பின்கண்டத்தில் சொல்லப்பட்ட கைங்கர்யத்தையும் விரும்பி த்வய(மந்த்ர) நிஷ்டனுவதே! 4. (உனக்காகிறேன் என்றும்) சகாரம் 'அபி' என்னும் சப்தத்துக்குப் பர்யாயமாய், முன் பதங்களில் சொன்னதின் சிறப்பைக் காட்டுகிறதாகவுமாம். அதாவது,-"அரசனே! அரக்கரால் கொல்லப்படும் எங்களைக் காப்பாயாக" [ரா-ஆ 6-19] என்ற ரிஷிகளைப்போலேயும், "ரக்ஷையை விரும்பியவனுய் இவ்வுலகமெல்லாவற்றையும் சுற்றினுன்" [ரா-ஸு 38-33] "மூவுலகையும் நன்கு சுற்றிவிட்டு ராமனையே சரணமடைந்தான்" [ரா-யு 38-34] என்ற காகாசுரனுன ஜயந்தனைப்போலவும் மிகத்தாழ்ந்ததான சரீரத்தை ரக்ஷிப்பதற்காகச் சரணம்புகாமல், ஸ்வரூபத்துக்குத் தக்கபலனுன என்னை அடையவன்ருே சரண்புகுந்தது என்று பலத்தின் சிறப்பைச் சொல்லுகிறது சகாரம். 5. ஸ்வரூபாநுரூபபுருஷார்த்தத்தைப் பற்றினுனென்ருல், அது "ஸ்ரீமானுன நாராயணனுக்குக் கைங்கர்யம் செய்யக்கடவேன்" [த்வயம்-உத்தரகண்டம்] என்றும், "நீர்

(ஸஹ வைதே₃ஹ்யா...அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்றும் இருவருமான சேர்த்தியிலேயன்றோ? தனித்திருக்கிற உமக்கு ஶேஷமானால் ஏகாயனனாகானோ? என்ன: **"पित्रा च परित्यक्तः" (பித்ராச பரித்யக்த:)** என்கிறவிடத்தில் **"मात्रा च परित्यक्तः" (மாத்ரா ச பரித்யக்த:)**என்று அநுக்தஸமுச்சயமானாற்போலே இங்கும்**"तवास्मीति च"** என்றது, **"वैदेह्याश्चास्मि"** (வைதே₃ஹ யாஶ்சாஸ்மி) என்று அநுக்த ஸமுச்சயமாய் மிதுந விஷயத்திலேகாணும் அபேக்ஷித்தது என்கை. அன்றியிலே, உங்களைப்போலே ஶாகாம்ருக₃மாய் ஶாகைக்குமேலே ஸஞ்சரிக்கையன்றிக்கே, **"अग्निहोत्राश्च वेदाश्च राक्षसानां गृहे गृहे"** (அக்₃நி ஹோத்ராஶ்ச வேத₃ாஶ்ச ராக்ஷஸாநாம் க்₃ருஹே க்₃ருஹே) என்றும் **"शुश्राव ब्रह्मघोषांश्च विरात्रे ब्रह्मरक्षसाम्"** (ஶுஶ்ராவ ப்₃ரஹ்மகோ₄ஷாம்ஶ்ச விராத்ரே ப்₃ரஹ்மரக்ஷஸாம்) என்றும் அகத்துக்குள்ளே ஶாகாஸஞ்சாரியானவனுக்குத் தெரியுங்காணும்.

வைதேஹியோடுகூட மலைத்தாழ்வரைகளில் விளையாடுவீர்; (நான் உங்களிருவர்க்கும்) எல்லாவடிமையும் செய்வேன்'' [ரா-அ 31-27] என்றும் இருவருமான சேர்த்தியில் செய்யும் கைங்கர்யமாயன்றோ இருப்பது. தனித்திருக்கும் உம்மையன்றோ இவன் பற்றினதாகத் தெரிகிறது? இவன் ஏகாயனன் (பகவான் ஒருவனையே சேஷியாகக்கொண்டவன்) அன்றோ ஆக வேண்டும்? இவன் பற்றிய புருஷார்த்தம் எப்படி ஸ்வரூபாநுரூபமானதாகும்? எனில்: 5. (உனக்கும் ஆவேன் என்று) "தந்தையாலும் கைவிடப்பட்டவனாய்" [ரா-ஸு 38-33] என்றவிடத்தில் சகாரம் (உம்மை) அநுக்தஸமுச்சயமாய், தாயாலும் கைவிடப்பட்டதைக் காட்டினாற்போலே இங்கும் 'உனக்கும் ஆகிறேன்' என்றவிடத்தில் சகாரம் அநுக்தஸமுச்சயமாய், பிராட்டியையும்கூட்டி, பிராட்டிக்கும் உமக்கும் அடியேனாகிறேன் என்கிறதாகையாலே மிதுனவிஷயத்திலேயே இவனுடைய கைங்கர்யப்ரார்த்தனை என்பதாகவும் கொள்ளலாம். 6. (உனக்கும் ஆவேன்) உங்களைப்போலே வீட்டுக்கு வெளியில் கிளைக்குக்கிளை தாவும் குரங்குகளாய், சாகை (கிளை) களுக்கு மேலே ஸஞ்சரிப்பவனன்றிக்கே, "அக்நிஹோத்ரங்களும் வேதங்களும் அரக்கர்களின் வீடுதோறும் உள்ளன" [ ] "விடியற்காலையில் ப்ராஹ்மண ராக்ஷஸர்கள் வேதமோதுவதையும் கேட்டான்" [ரா-ஸு 18-2] என்று வீட்டுக்குள்ளே (வேத) சாகைகளினுள்ளே ஸஞ்சரிக்கும் இவனுக்குத் தெரியும் பிராட்டி என்னோடு எப்போதும் சேர்ந்திருப்பவளென்பது என்றும் பொருள் கொள்ளலாம்.

அதாவது. "श्रद्धया देवो देवत्वमश्नुते" (ஶ்ரத்₃த₄யா தே₃வோ தே₃வத்வமஶ்நுதே) என்றும். "नित्यैवैषानपायिनी" (நித்யை வைஷாநபாயிநீ) என்றும் "अनन्या राघवेणाहं भास्करेण प्रभा यथा" (அநந்யா ராக₄வேணாஹம் பா₄ஸ்கரேண ப்ரபா₄ யதா₂) என்றும் அப்ருதக்ஸித்தநித்யத₄ர்மமாய் சவ்வுக்குள்ளே உண்டென்றறிந்து சொன்னான் காணும் என்கிறாராகவுமாம்.

இப்படி எல்லாமறிந்திருக்கிற இவன் பரதந்த்ரனாய்ச் செய்தபடி கண்டிருக்க ப்ராப்தமித்தனைபோக்கி நிர்ப்பந்திக்கப் பெறுமோ? என்னில்: (யாசதே) தனக்கு இது அபி₄மதமென்னுமிடம் தோற்ற. இரந்தானித்தனை. (யாசதே) "रक्षापेक्षां प्रतीक्षते" (ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே) என்றும் "अर्थितो... जज्ञे" (அர்த்தி₂தோ...ஜஜ்ஞே) என்றும், "வேண்டித் தேவரிரக்க" என்றும் அத்தலையில் இரப்பை நாம் பாரித்திருந்தபடியாலே இரந்தான். (யாசதே) "कदाहमैकान्तिक -

---

அதாவது:-"ச்ரத்தையெனப்படும் பிராட்டியின் சேர்த்தியாலே பெருமான் தேவனாகிறான்" [யஜு-காடகம் 3-3-9-12] "ஜகந்மாதாவான இப்பிராட்டி என்றுமிருப்பவளே; பகவானிடம் எப்போதும் பிரியாமலிருப்பவள்' [வி-பு 1-8-17] "சூரியனுக்குஒளிபோல் நான் ராகவரைவிட்டுப் பிரியாதவள் [ரா-ஸு 21-16] என்று பகவானைவிட்டுப்பிரியாத விசேஷணமாயிருக்கையாலே சகாரத்துக்குள்ளே பிராட்டியின்ஸம்பந்தமும் உண்டு என்று அறிந்துசொன்னான் என்பதாகவும் கொள்ளலாம்.

"இப்படி வேதப்பொருளும் அறிந்திருக்குமிவன் உம் உடைமையாய் நீர் செய்தபடி பார்த்திராமல், தன் ஸ்வரூபத்துக்குத் தகாதபடி ரக்ஷிக்கவேணும் என்று உம்மை நிர்ப்பந்தம் செய்யலாமோ" எனில்: 1. (யாசிப்பவனுக்கு) தனக்கு இது இஷ்டம் என்பது தெரியும்படியாக யாசித்தானேயொழிய நிர்ப்பந்திக்கவில்லையே என்கிறார். 2. (யாசிப்பவனுக்கு) "ஸர்வேச்வரன் 'ரக்ஷிக்கவேணும்' என்று இச்சேதனன் அபேக்ஷிப்பதை எதிர்பார்க்கிறான்" [லக்ஷ்மீதந்த்ரம் 17-80] என்றும், "யாசிக்கப்பட்டவராய் (விஷ்ணு ராமனாகப்) பிறந்தார்" [ரா-அ 1-7] என்றும், "வேண்டித்தேவர் இரக்கவந்து பிறந்ததும்" [திருவாய்6-4-5]என்றும் 'நம்மைக்கொள்வாருமுண்டோ' என்று ஒருசேதனன் என்னை யாசிப்பதை நான் எதிர்பார்த்திருப்பவனாகையாலே

नित्यकिङ्करः प्रहर्षयिष्यामि'' (கத₃ாஹமைகாந்திகநித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி) என்றும் ''வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்'' என்றும் ப்ரார்த்திக்கிறான். அவன் கண் குழிவும் பையாப்பும் கண்டால் ஆர்க்கு மறுக்கலாம்?

இப்படியிருந்தால், அவனுக்குச் செய்தருளப்புகுகிற தேது? என்னில்: (அப₄யம் த₃த₃ாமி) **"अथ सोऽभयङ्गतो भवति**'' **(அத₂ ஸோப₄யங்க₃தோ ப₄வதி)** என்னும்படி பண்ணுவன். (அப₄யம்) தத₃ந்ய த த₃ ப₄ ா வ தத்₃விரோதிகளை யிறே காட்டுவது. ஆகையாலே, (1) தத₃ந்யமான மங்களங்களைக் கொடுப்பன்; (2) த த பா வ மா ன அச்சமில்லாமையைப் பண்ணுவன்; (3) ப்ரகரிஷ்யமாண ஆபச்சிந்தையிறே ப₄யம்; தத்விரோதி₄யான இவன் பு₄ஜப₃ல ரஞ்ஜிதரான பரரால் பண்ணப்படுகிற உபகாரஸந்துஷ்டியை உடையனும்படி பண்ணுவன். (அப₄யம்) **"अतीते शोकः**

விபீஷணன் யாசித்தான் என்றுமாம். 3. (யாசிப்பவனுக்கு) "ஒருபடிப் பட்டதாய் நித்யமான கைங்கர்யத்தையுடையவனாய் என்று நான் உன்னை உகப்பிக்கப்போகிறேன்'' [ஸ்தோ-ர 46] ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமைசெய்யவேண்டும் நாம்'' [திருவாய் 3-3-1] என்று வேண்டுகிறான். அவனுடைய குழிந்த கண்ணையும் இரங்கத்தக்க நிலையையும் கண்டால் யாரால் அவனுடைய வேண்டுகோளை மறுக்கமுடியும்?

இவ்வளவு பக்ஷபாதம் அவனிடமிருந்தால், அவனுக்கு என்ன செய்யப்போகிறீர்? எனில்: 1. (அபயமளிக்கிறேன்) ''அதற்குப்பின் அவன் அபயம் (பயமின்மை) பெற்றவனாகிறான்'' [தை-ஆ 7] என்னும்படி பண்ணுவேன். (அபயம்) 'ந பயம்-அப₄யம்' என்று வ்யுத்பத்தி. இதில் 'நஞ்'ஞுக்கு மூன்று பொருள்கள் உண்டு. அவையாவன:-வேறுபாடு; இல்லாமை; விரோதி என்பவை. இம்மூன்று பொருள்களையும் முறையேகொண்டு, 2. பயத்தைக்காட்டிலும் வேறுபட்ட மங்களங்களைக் கொடுப்பேன் என்றும் கொள்ளலாம்; 3. பயத்தின் இல்லாமையாகிற பயமின்மையைக் கொடுப்பேன் என்றும் கொள்ளலாம்; 4. எதிரிகளால் செய்யப்படும் ஆபத்தின் நினைவே பயமாகையாலே, விபீஷணனுடைய புயவலிமையில் ஈடுபட்ட எதிரிகளால் செய்யப்படும் உபகாரத்தினால் ஏற்படும் திருப்தியை உடையவனும்படி பண்ணுவேன் என்றும் கொள்ளலாம். 5. (அபயம்)

वर्तमाने व्यथा, आगामिनि भयं" (அதீதே ஶோக:, வர்த்தமாநே வ்யத$_{2}$ா ஆக$_{3}$ாமிநி ப$_{4}$யம்) என்றிறே லக்ஷணம். ஆகையால் மேலொரு அநர்த்தம் வாராதபடி பண்ணுவன்.

ஆர்நிமித்தமாக ப$_{4}$யநிவ்ருத்தி பண்ணுவது? என்ன: (ஸர்வ பூதேப்ய:) ஏதேனுமாக பயஸ்தானமாயுள்ளவையெல்லாம் நிமித்தமாக. (ஸர்வபூ$_{4}$தேப்$_{4}$ய:)பூதங்களாகின்றன அசித்ஸம்ஸ்ருஷ்டங்களிறே. அதாவது தேவதிர்யங்மநுஷ்ய ஸ்தாவராத்மகமாயறேயிருப்பது. இவையித்தனையும் நலியாதபடி பண்ணுவன். (ஸர்வபூ$_{4}$தேப்$_{4}$ய:)ராவணனால் பட்ட பரிப$_{4}$வத்தாலே, அவன் தம்பியென்று இந்த்ராதிகளால் வருமது, நம்பக்கலில் பரிவாலே "**वध्यतां**" (**வத்$_{4}$யதாம்**) என்று திர்யக்கான உம்மால் வருமது, ராவணவிஜயத்திலே பரிபூ$_{4}$தரான மருத்தன் தொடக்கமான மநுஷ்ய ராஜாக்களால் வருமது. பீடத்தோடே பிடுங்குண்ட ஸ்தாவரமான கைலாஸமடி

"இறந்தகாலத் துன்பம் சோகம் எனப்படுகிறது; நிகழ்காலத் துன்பம் வ்யதை (வதை) எனப்படுகிறது; வருங்காலத்துன்பம் பயம் எனப்படுகிறது" [ ] என்கிற லக்ஷணத்தின்படியே வருங்காலத்துன்பம் பயம் எனப்படுகிறது. ஆகையால், இனி வரும் காலமெல்லாம் ஒரு துன்பம் வராதபடி பண்ணுவேன் என்பதாகவும் கொள்ளலாம்.

யாரால் வரும் பயத்தைப் போக்குவது? எனில்: 1. (எல்லா பூதங்களினின்றும்) பயமளிப்பது எதுவாயினும், அதனால் வரும் பயத்தைப் போக்குவேன். 2. (எல்லா பூதங்களினின்றும்) "அசேதனங்களோடு சேர்ந்திருப்பது பூதமாகிறது" என்பது பூதலக்ஷணம். அந்த பூதங்களும் தேவர், திர்யக் (ஊர்வன), மநுஷ்யர், ஸ்தாவரம் (நிலையாய் நிற்பன) என்று நாலு வகைப்படும். இவை எல்லாம் இவனைத் துன்புறுத்தாதபடி பண்ணுவேன் என்பதாகவும் கொள்ளலாம். (எல்லா பூதங்களினின்றும்) நாலுவகைப்பட்ட பூதங்களிடத்தினின்றும் இவனுக்குத் துன்பம் வரக்கூடுமோ? எனில்: கூடும். ராவணனிடம் பட்ட அவமானத்தாலே அவன் தம்பி என்னும் காரணத்தினால் இந்திரன் முதலான தேவர்களால் இவனுக்கு பயம் வரக்கூடும். நம்மிடம் அன்பால் "இவன் கொல்லப்படட்டும்" [ரா-யு 17-27] என்னும் திர்யக்கான (விலங்கான) உம்மால் இவனுக்கு பயம் வரக்கூடும். ராவணனால் ஜயிக்கப்பட்டு அவமதிக்கப்பட்ட மருத்தன் முதலான மனித அரசர்களாலும் பயம் வரக்கூடும். ராவணனால் பீடத்

யாக வருமது இவ்வாபத்தடையப் பரிஹரிப்பன். (ஸர்வ பூ₄தேப்₄ய:) **"पञ्चभूतात्मके देहे"** (பஞ்சபூ₄தாத்மகே தே₃ஹே) **"भौतिकानीन्द्रियाण्याहुः"** (பௌ₄தி₁காநீந்த்₃ரியாண்யாஹு:) என்னும் ப்ரக்ரியையாலே ப்ருதிவ்யாதிபூதகார்யமான ஶரீரேந்த்ரியவிஷயாதிகள் நலியிலும் பரிஹரிப்பன். (ஸர்வ பூ₄தேப்₄யோऽப₄யம் த₃தா₃மி) "நானே நானாவிதநரகம் புகும் பாவம் செய்தேன்" என்கிற உன்னால்வரும் பயமும், **"जगत्सशैलं परिवर्तयामि"** (ஜக₃த் ஸஶைலம் பரிவர்த்தயாமி) என்றும், **"क्षिपामि"** (க்ஷிபாமி) **"न क्षमामि"** (ந க்ஷமாமி) என்றும் நம்மால்வரும் பயமும், ஹிரண்யராவணாதி பித்ருப்₄ராத்ருப்ரப்₄ருதிகளால்வரும் பயமும் போக்குவன். (ஸர்வ பூ₄தேப்₄ய:) **"सर्वपापेभ्यः"** (ஸர்வபாபேப்₄ய:) என்று அசேதனமான பாபங்களும், அவ்வோ பாபங்களடியாக பா₃தி₄க்கும் ஜந்துக்களும், இதடியாகவரும் ப₄யமும் அடைவே

தோடே பிடுங்கப்பட்ட ஸ்தாவரம் ஆன கைலாஸத்தாலும் ராவணன் தம்பியான இவனுக்கு பயம் வரக்கூடும். இப்படி நாலுவகைப்பட்ட பூதங்களால் வரக்கூடிய பயங்களனைத்தையும் போக்கடிப்பேன். 3. (எல்லா பூதங்களினின்றும்) "பஞ்சபூதங்களாலான தேஹத்தில்" [வி-பு 6-7-11] "பஞ்சபூதங்களால் போஷிக்கப்படுபவை இந்திரியங்கள் என்று உரைக்கின்றனர்" [ ] என்னும் ரீதியிலே பூமிமுதலான ஐந்து பூதங்களாலான சரீரம் இந்திரியம் விஷயங்கள் ஆகிய இவை இவனைத் துன்புறுத்தினாலும் அவற்றினின்றும் காப்பாற்றுவேன் என்றும் கொள்ளலாம். 4. (எல்லா பூதங்களினின்றும் அபயமளிக்கிறேன்) "நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்" [பெரியதிரு 1-9-2] என்கிற சேதனன்தன்னால் வருகிற பயமும், "மலைகளோடுகூடிய உலகைத் தலைகீழாக்குவேன்" [ரா-ஆ 64-7] "ஆஸுரயோனிகளில் தள்ளுகிறேன்" [கீதை 16-19] "பாகவதாபசாரம் செய்பவர்களைப் பல்லூழிகாலமானாலும் பொறுக்கிறேனல்லேன்" [வராஹபுராணம்] என்கிற என்னால்வரும் பயமும், ஹிரண்யன் ராவணன் முதலான தந்தை முறையுடையார் தமயன் முதலானோரால்வரும் பயத்தையும் போக்குவேன், 5. (எல்லா பூதங்களினின்றும்) "எல்லாப் பாபங்களினின்றும்" [கீதை 18-66] என்று உயிரற்ற கிரியாரூபமான பாபங்களும், அந்தந்தப் பாபங்கள் காரணமாக நலியும் பிராணிகளும் ஆகிய இவற்றால்வரும் பயங்களையும் கிரமமாகப் போக்குவேன். "பயத்திலின்றும் ரக்ஷணத்தைச் சொல்லுமிடத்தில் எதிலிருந்து பயம் ஏற்

போக்குவன். இப்படி, **"भीतार्थिनां भयहेतुः"** (பீ₄த்ரார்த்தி₂நாம் ப₄யஹேது:) பஞ்சமியாகவுமாம்.

அன்றியிலே, சதுர்த்தியாய், ப்ரபந்நனுய், "தவாஸ்மீதி ச யாசதே" என்று ஶரணாகதனுய், பலார்த்தியான விபீஷணன் ஒருவனுக்குமோ ப₄யநிவ்ருத்திபண்ணுவது? என்ருல்: "இதி ச" என்கிற சவ்வை இங்கேகூட்டி, (ஸர்வபூ₄தேப்₄யஶ்ச) அவனுக்கேயல்ல; **"चतुर्भिस्सह राक्षसैः"** (சதுர்ப்பி₄ஸ் ஸஹ ராக்ஷஸை:) என்று அவனேடு கூடவந்தவர்களுக்கும் அவர்தங்களைப் பற்றினுர்க்கும் அப₄யப்ரதா₃நம் பண்ணுவன் என்ருகவுமாம். ப₄யநிமித்தம் சொல்லவேண்டாவோ? என்னில்: **"राघवेणाभये दत्ते"** (ராக₄வேணுப₄யே த₃த்தே) என்கிற விடத்தில் உண்டோ? **"भयं भयानामपहारिणि"** (ப₄யம் ப₄யாநாம பஹாரிணி) என்கிறவிடத்திலுண்டோ? அது தன்னடையே

படுகிறதோ அது 'அபாதானம்' எனப்படுகிறது" [பாணினிஸூ 1-4-25] "அபாத₃ாநே பஞ்சமீ" [பாணினிஸூ 2-3-28] [அபாதானபதம் ஐந்தாம் வேற்றுமையில் படிக்கப்படுகிறது] என்னும் ஸூத்ரங்களின்படி "ஸர்வ பூதேப்ய:" என்னும் பதத்தை ஐந்தாம் வேற்றுமையாகக்கொண்டு இவ்வைந்து பொருள்களும் உரைக்கப்பட்டன.

இப்படி "ஸர்வபூதேப்ய:" என்னும் பதத்தை ஐந்தாம்வேற்றுமை யாகக் கொள்ளாமல், நான்காம் வேற்றுமையாகக்கொண்டும் பொருள் கூற லாம். ப்ரபந்நனுய், அதிலும் 'உனக்காவேன் என்று யாசிப்பவனுக்கு' என்று சொன்னபடியே பரமபுருஷார்த்தத்துக்காக சரணம் புகுந்தவனுன விபீஷணன் ஒருவனுக்கு மாத்திரமோ பயத்தைப்போக்குவது? எனில்: "தவாஸ்மீதி ச" என்றவிடத்தில் சகாரத்தை 1. (ஸர்வபூதேப்₁ய: ச-எல்லா பூதங்களுக்கும்) என்றுகூட்டி அவன் ஒருவனுக்குமாத்திரமல்ல; "நான்கு அரக்கர்களோடுகூட" [ரா-யு 17-5] என்று அவனேடு கூடவந்தவர்களுக் கும், அவர்களைப்பற்றியவர்களுக்கும் அபயமளிப்பேன் என்றும் பொருள் கொள்ளலாம். இப்படி நாலாம் வேற்றுமையாகக்கொண்டால் எதனிட மிருந்து பயம் உண்டாகிறது என்று சொல்லவேண்டாமோ? அதற்குப் பதமில்லையே? என்னில்: "ராகவன் அபயம் அளித்தவளவில்" [ரா-யு 19-1] என்றவிடத்தில் பயஹேதுவைச் சொல்லவில்லையே. "பயங்களைத் தொலைக் கும் அநந்தன் மனத்திலிருக்கும்போது பயம் எங்கிருக்கும்?" [வி-பு 1-17-36]

வரும். அன்றியிலே, "ப்ரபந்நாய" என்று ப்ரபந்நருக்கேயோ பண்ணுவது? ப₄க்திநிஷ்ட₂ருக்கும் புருஷகார நிஷ்டருக்கும் இல்லையோ? (ஸர்வபூ₄தேப்₄ய:) ப₄க்திநிஷ்ட₂ரோடு புருஷகார நிஷ்டரோடு வாசியற **"अस्ति ब्रह्मेति चेद्वेद सन्तमेनं ततो विदुः"** **(அஸ்தி ப்₃ரஹ்மேதி சேத்₃வேத₃ ஸந்தமேநம் ததோ விது₃:)** என்று பகவத் ஜ்ஞாநத்தாலே ஸத்தைபெற்றார் எல்லார்க்குமாம். இப்படி கைம்முதல் உடையரான விலக்ஷணாதி₄காரிகளுக்கோ கொடுத்தருளுவது? என்றார்: கிம் ப₃ஹுநா (ஸர்வபூ₄தேப்₄ய:) ஸலக்ஷணோபாயநிஷ்டராக வேண்டா; அதிப்ரஸங்கம் வாராதபடி **"भवद्विषयवासिनः"** (ப₄வத்₃ விஷய வாஸிந:) என்று நம் எல்லைக்குள்ளே கிடக்கையே உள்ளது. **"यदि वा रावण स्वयं"** (யதி₃ வா ராவண: ஸ்வயம்) என்று ஶத்ருவான ராவணனோடு, **"विभीषणो वा"** (விபீ₄ஷணோ வா) என்று மித்ரனான விபீஷணனோடு, **"पादमूलं गमिष्यामि यानहं**

என்கிறவிடத்தில் பயகாரணத்தைச் சொல்லவில்லையே. இவ்விடங்களிற்போலே இங்கும் 'அவனிடமிருந்தும்வரும் பயம்' என்னும் பொருள் தானாக ஏற்படும். வேறொருவிதமாகவும் பொருள்கொள்ளலாம்: 'ப்ரபந்நனுக்கு'. என்று அருளிச்செய்கையாலே சரணாகதருக்குத்தான் அபயமளிப்பதோ? பக்திநிஷ்டருக்கும் ஆசார்யநிஷ்டருக்கும் இல்லையோ? எனில்: 2. (எல்லா பூதங்களுக்கும்) பக்திநிஷ்டர், ஆசார்யநிஷ்டர், மற்றும் "ப்ரஹ்ம ஜ்ஞானம் உளதாகில் இவனை உள்ளவனாக அறிகிறார்கள்" [தை-ஆந-6] என்று பரம்பொருளறிவாலே உஜ்ஜீவித்தவர்கள் அனைவர்க்கும் அபயமளிப்பேன் என்றுமாம். இப்படித் தம்மிடத்திலும் சரணாகதி, பக்தி, ஆசார்ய நிஷ்டை, பகவத்ஜ்ஞாநம் என்றாற்போலே சிலவற்றையுடைய சிறந்த அதிகாரிகளுக்குத்தான் அபயமளிப்பதோ? எனில்: பல சொல்லியென்? 3. (எல்லா பூதங்களுக்கும்) சரிவர ஒருபாயத்தை அநுஷ்டிக்கவேணுமென்பதில்லை;'ஸகல சேதனர்க்குமே மோக்ஷமுண்டாகவேண்டிவரும்' என்னும் அதிப்ரஸங்கம் வாராதபடி, "உன் தேசத்திலிருப்பவர்கள்" [ரா-ஆ 1-20] என்கிறபடியே நாம் ஆளும்தேசத்தின் எல்லைக்குள்ளே கிடைப்பார் அனைவர்க்குமே அபயமளிக்கிறோம்; "ராவணன் தானேயானாலும் அழைத்துவா" [ரா-யு 18-34] என்று எதிரியான ராவணனுக்கும், "விபீஷணனானாலும்" [ரா-யு 18-34] என்று நண்பனான விபீஷணனுக்கும், "நான் (இங்கு) அடிமைசெய்த என் ஆசார்யரின் திருவடியை அடைவேன்" [ரா-ஆ 4-14] என்று நம்

पर्यचारिषम्'' (பாத₃மூலம் க₃மிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம்) என்ற உதாஸீநையான ஶபரியோடு, **"आवहत्परमां गतिं**'' (ஆவஹத் பரமாம் க₃திம்) என்று ம்ருகமான வாலியோடு, **"गच्छ लोकाननुत्तमान्**'' (க₃ச்ச₂ லோகாநநுத்தமாந்) என்று பக்ஷியான ஜடாயுவோடு, **"पाषाणगौतमवधूवपुराप्तिहेतुः**'' (பாஷாண கௌ₃தமவதூ₄வபுராப்திஹேது:) என்று ஸ்தா₂வரமான அஹல்யாஶிலையோடு, **"प्रतिपेदे स्वमालयं**'' (ப்ரதிபேதே₃ ஸ்வ மாலயம்) என்று ஜங்கமமான ஜயந்தனோடு, ''புற்பாமுதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன்'' என்று த்ருண குல்மவீருத₄ாதி₃களோடு, **"पितामहपुरोगांस्तान्**'' (பிதாமஹபுரோ காம்ஸ்தாந்) என்று அடியிலே நம்மைப்பெறவேணுமென்று அபேக்ஷித்த ப்ரஹ்மாதிகளோடு வாசியற ப்ரஹ்மாதி பிபீலிகாந்தமான ஸர்வவஸ்துக்களுக்குமாம்.

மிடம் த்வேஷமுமில்லாமல் பக்தியுமில்லாமல் ஆசார்யபக்தியை உடையவளாகையாலே நமக்கு மித்ரசத்ருகோடிகளிலே சேராமல் உதாஸீநகோடியில் சேர்ந்த சபரிக்கும் ''ராமனின் அம்பு வாலிக்கு மேலான கதியைக் கொடுத்தது'' [ரா-கி 17-8] என்று விலங்கான வாலிக்கும், ''மேலான உலகங்களை அடைவாயாக'' [ரா-ஆ 68-30] என்று பறவையான ஜடாயுவுக்கும் ''கல்லாய்க்கிடந்த கௌதமன் மனைவிக்குப் பெண்ணுருவமுண்டாகக் காரணம்'' [ ] என்று ஸ்தாவரமான (அசையாததான) அஹல்யா சிலைக்கும் ''தன் இருப்பிடம் சேர்ந்தான்'' [ரா-ஸு 38-38] என்று ஜங்கமமான (அசைவதான) காகாசுரனுக்கும், ''புற்பாமுதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன்'' [திருவாய் 7-5-1] என்று புல், புதர், கொடி முதலான அறிவற்ற பொருள்களுக்கும், ''பிரமனை முன்னிட்ட அவர்களை'' [ரா-பா 15-26] என்றுநம் அவதாரத்துக்குமுன் நம்மை அவதரிக்கச் செய்ய வேணுமென்று வேண்டிய அறிவிற்சிறந்த பிரமன் முதலிய தேவர்களுக்கும், ஆக இப்படி பிரமன்முதல் எறும்புவரை பிறப்பு, குணம், ஒழுக்கம் ஆகியவற்றில் மிகவும் வேறுபட்ட பலருக்கும், பலத்தில் குறையில்லாதபடி அனைவர்க்கும் நம் அபிமானத்தில் ஒதுங்கினதுவே காரணமாக அபயமளிக்கிறோம் என்றும் கொள்ளலாம்.

இவர்களுக்குச் செய்தருளுவதென்? என்னில்: (த₃த₃ாமி) த்யாகமுமல்ல, ஔதா₃ர்யமுமல்ல, உபகாரமுமல்ல, தாநமாகவே பண்ணுவன்; த்யாக₃மாவது,—"कीर्तिमुद्दिश्य योग्ये योग्यसमर्पणम्" (கீர்த்திமுத்தி₃ஶ்ய யோக்₃யே யோக்₃யஸமர்ப்பணம்) என்று, பிறர் அபேக்ஷித்ததைக் கீர்த்தி பலமாக நசையறக்கொடுக்கை. ஔதா₃ர்யமாவது,- "सर्वविषयवितरणमौदार्यम्" (ஸர்வவிஷயவிதரணமௌதா₃ர்யம்) என்று விஷய வைஷம்யம் பாராதே முலேக்கடுப்பு (தீரச்) சுரக்குமாப்போலே தன் பேறாகக் கொடுக்கை. உபகாரமாவது,-"प्रत्युपकारधिया बन्धुकृतिरुपकारः"(ப்ரத்யுபகாரதி₄யா ப₃ந்து₃க்ருதிருபகார:)என்று ப்ரத்யுபகாரப்ரயோஜனமாக ஆஸந்நருக்குக் கொடுக்கை. "अदृष्टमुद्दिश्य योग्ये योग्यसमर्पणं दानम्" (அத்₃ருஷ்டமுத்₃தி₃ஶ்ய யோக்₃யே யோக்₃ய ஸமர்ப்பணம் தா₃நம்) என்று விலக்ஷண விஷயத்தில் விலக்ஷணபதார்த்தங்களை அத்₃ருஷ்டப₂லமாகக் கொடுக்கை.

இவர்களுக்குச் செய்தருளும் காரியமென்ன? எனில்: 1. (தானம் செய்கிறேன்) இவர்களுக்கு நான் செய்வது த்யாகமுமல்ல; ஔதார்யமும் (வண்மையும்) அல்ல; உபகாரமுமல்ல; தானமாகவே செய்கிறேன். த்யாகமாவது:-"புகழைக்கருதி, தக்கவிடத்தில் தகுந்ததை நன்றாகக் கொடுப்பது த்யாகம்" [ ] என்கிறபடியே பிறர் விரும்பியதைப் புகழை விரும்பி வாங்கிக்கொள்வார் விருப்பம் தீரும்வரையில் கொடுப்பதாகும். ஔதார்யம் (வண்மை) ஆவது:-"அனைவர்க்கும் வரையாது கொடுப்பது ஔதார்யம்" [ ] என்று அபேக்ஷிப்பாரின் ஏற்றத்தாழ்வுபாராமல் பால்பெருக்கையுடைய ஸ்த்ரீகள் முலைக்கடுப்புத் தீருவதற்காகப் பாலைத் தரையிலே பீச்சுவதுபோலே தன் காரியமாகக் கொடுப்பதாகும். உபகாரமாவது:-"கைம்மாறு கருதி உறவினர் செய்வது உபகாரமாகும்" [ ] என்று பிரதியுதவியைக்கருதி உற்றார் செய்வதாகும். தானமாவது:-"மறுமைப்பயன் கருதித் தக்கவருக்குத் தக்கதைக் கொடுப்பது தானம்" [ ] என்று சிறந்தவருக்குச் சிறந்த பொருள்களை மறுமைப்பயன் கருதிக்கொடுப்பதாகும். த்யாகம், ஔதார்யம், உபகாரம் என்னும் மூன்றும், புகழ், ஆற்றாமைதீருதல், கைம்மாறு என்னும் இம்மைப் பயன்கருதிச் செய்யப்படுமவை; தானம் ஒன்றே மறுமைப்பயன்கருதிச் செய்யப்படுவது; ஆகையாலே அம்மூன்றிலும் சிறந்தது. இங்கு ராமபிரானுக்கு மறுமைப்பயனாவது,-ஒருசேதனனை லபிக்கப்பெறுகையாகிற பெரும்பேறு. ஆக, மிகச்சிறந்ததான தானமாகவே கொடுக்கிறேன் என்றபடி.

(த$_3$த$_3$ாமி) **"मोक्षयिष्यामि"** (மோக்ஷயிஷ்யாமி)போலே. "த$_3$ாஸ்யாமி" என்று காலவிளம்பநம்பண்ணேம். (த$_3$த$_3$ாமி) **"तमेवं विद्वानमृत इह भवति"** (தமேவம் வித்$_3$வாநம்ருத இஹ ப$_4$வதி) போலே, **"उपासनप्रारंभे मोक्षप्रारंभः"** (உபாஸநப்ராரம்பே$_4$ மோக்ஷப்ராரம்ப$_4$:) என்று அவன் நம்மைநோக்கிக் கிளம்பினபோதே நாமும் உபக்ரமித்தோம். இது யாவதா$_3$த்மப$_4$ாவியாகக்கடவது. **"प्रारब्धोऽपरिसमाप्तश्च वर्तमानः"** (ப்ராரப்$_3$தே$_4$ாऽபரிஸமாப்தஶ்ச வர்த்தமாந:) இறே. (ப்ரபந்நாய :த$_3$தாமி) **"न्यासमेषां तपसामतिरिक्तमाहुः"** (ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:) என்றும். **"तेषान्तु तपसां न्यासमतिरिक्तं तपः श्रुतं"** (தேஷாம்து தபஸாம் ந்யாஸ மதிரிக்தம் தப: ஶ்ருதம்) என்றும். இதரோபாயங்களில் ப்ரபத்தி விலக்ஷணையானாற்போலே. **"नार्हन्ति शरणस्थस्य कलां कोटितमीमपि"** (நார்ஹந்தி ஶரணஸ்த$_2$ஸ்ய கலாம் கோடிதமீமபி)

---

2. (கொடுக்கிறேன்) "எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்" [கீதை 18-66] என்று வருங்காலப் பிரயோகம்செய்ததுபோலே 'தாஸ்யாமி' (கொடுப்பேன்) என்றுகூறிக் காலதாமதம் செய்யாமல், இப்போதே கொடுக்கிறேன் என்கிறார். 3. (கொடுக்கிறேன்) "அவனை இப்படி அறிபவன் இப்போதே மோக்ஷமடைகிறான்" [பு-ஸூ] என்றதுபோலே, "உபாஸனம் ஆரம்பித்தவுடனேயே மோக்ஷமும் ஆரம்பித்துவிடுகிறது" [ ] என்று அவன் நம்மைநோக்கிக் கிளம்பினபோதே நாமும் அவனுக்குப் பலனளிக்கத் தொடங்கினோம். 'கொடுக்கிறேன்' என்ற நிகழ்காலப் பிரயோகத்தாலே, இப்படிப் பலனளிப்பது என்றும் 'கொடுக்கிறேன்' என்னும் நிலையிலிருக்குமேயொழிய ஒருநாளும் 'கொடுத்துமுடித்தோம்' என்னும் நிலையை அடையாது என்கை. "தொடங்கியதாய், முடியாமலிருப்பது நிகழ்காலம்" என்பதல்லவோ நிகழ்காலத்தின் லக்ஷணம். இவனுடைய ஆத்மா ஸத்தைபெற்றிருக்கும் எல்லாக்காலத்திலும் பலனளிக்கிறேன் என்றபடி. 4. (ப்ரபந்நனுக்குக் கொடுக்கிறேன்) "சரணாகதியை இந்தத் தவங்களுக்குளெல்லாம் சிறந்ததாகச் சொல்லுகின்றனர்" [தை-நா 63] "அந்தத் தவங்களுக்குள் சரணாகதி சிறந்த தவமாக வேதத்தில் கூறப்படுகிறது" [அஹிர் 37-36] என்று மற்ற உபாயங்களில் ப்ரபத்தி சிறந்ததானாற்போலே, "(மற்ற உபாயநிஷ்டர்கள்) சரணாகதிநிஷ்டனுடைய பெருமையில் கோடியில் ஒருபங்குகூடப் பெறமாட்டார்கள்" [ல-த 17-6] என்று

என்று அல்லாத அதி$_4$காரிகளில் ப்ரபந்நாதி$_4$காரி விலக்ஷணனு யிறேயிருப்பது. இவ்விலக்ஷணுதிகாரியைக்கண்டால் தாநம் பண்ணுதிருக்கப்போமோ?

அதுதான் பாக்ஷிகமோ? நியமுமுண்டோ? என்னில்: (ஏதத் வ்ரதம் மம) இது நமக்கு நியதாநுஷ்டே$_2$யம். (ஏதத்) ப்ரபந்நனுக்குப் பண்ணுகிற அப$_4$யப்ரத$_3$ாநம். "அநுபால நீயஸ் ஸ:" என்று ஏறிட்டுக்கொண்டால், முடியுமளவும் விடாதே நடக்குமதிறே வ்ரதமாயிற்று. **"न तु प्रतिज्ञां संश्रुत्य ब्राह्मणेभ्यो विशेषतः"** (நது ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்$_3$ராஹ்மணேப்$_4$யோ விஶேஷத:) என்று அடியிலே சொன்னேமே. (ஏதத் வ்ரதம்) **"परित्राणाय साधूनां...संभवामि"** (பரித்ராணுய ஸாதூ$_4$நாம்...ஸம்ப$_4$வாமி) என்றும், **"शरीरग्रहणं व्यापिन् धर्मत्राणाय केवलम्"** (ஶரீரக்$_3$ரஹணம் வ்யாபிந் த$_4$ர்மத்ராணுய கேவலம்) என்றும், "பொழிலேழும்காவல் பூண்ட" என்றும், "காக்குமியல்வினன்" என்றும் இது நமக்கு ஸத்தாப்ரயுக்தம்.

மற்ற அதிகாரிகளைக்காட்டிலும், சரணுகதனுன இவ்வதிகாரி மிகச்சிறந்த வனுயன்றே இருப்பது. இப்படிப்பட்ட சிறந்த பாத்திரம் நமக்குக் கிடைத் திருக்கும்போது நம்மால் தானம் செய்யாமலிருக்கமுடியுமோ? என்கிறுர்.

இப்படிக் 'கொடுக்கிறேன்' என்றது கட்டாயம் கொடுக்கிறேன் என்று திருவுள்ளமா? 'கொடுத்தாலும் கொடுக்கிறேன்; இல்லாவிட்டாலும் இல்லை' என்று திருவுள்ளமா? எனில்: 1. (இது எனக்கு விரதம்) இது எனக்குக் கட்டாயம் அநுஷ்டிக்கவேண்டியதொன்று. 2. (இது) சரணுகதனுக்கு அபயப்ரதானம் செய்தது. 'இதைச் செய்துமுடிக்கவேண்டும்' என்று ஸங் கல்பித்துத் தொடங்கினுல் கடைசிவரையில் விடாமல் நடத்தவேண்டிய தன்றே விரதம் எனப்படுகிறது. சரணுகதனுக்கு அபயமளித்தது அப்படிப் பட்டதொரு விரதம். "ஒரு ப்ரதிஜ்ஞையைச் செய்தபின் அதிலும் அந்தணர்க்குச் செய்தபின் அதைக் கைவிடமாட்டேன்" [ரா-ஆ 10-19] என்று முதலிலேயே சொல்லிவைத்திருக்கிறேனே என் ப்ரதிஜ்ஞையின் தன்மையை. 3. (இது விரதம்) "நல்லோர்களைக் காப்பதற்காகப் பிறக் கிறேன்" [கீதை 4-8] "ஸர்வவ்யாபியே! நீ சரீரமெடுப்பது தர்மத்தை நிலை நிறுத்தவேயாகும்" [வி-பு 5-1-50] "பொழிலேழும் காவல்பூண்ட" [திருநெடு 10] "காக்குமியல்வினன்" [திருவாய் 2-2-9] என்று இந்த விரதம் நமக்கு இயற்கையிலேயே உள்ளதொன்று.

இது அநுஷ்டேயம் ஆருக்கு? என்ன; (மம) **"अर्थितो मानुषे लोके"** (**அர்த்தி₂தோ மாநுஷே லோகே**) என்றும், வேண்டித்தேவர் இரக்க" என்றும் பராபேக்ஷையாய் அதுக்கு இட்டுப்பிறந்த நமக்கு. (மம) ஸ்ரஷ்டாவான ப்₃ரஹ்மாவுக்கும் பணியல்ல; ஸம்ஹர்த்தாவான ருத்₃ரனுக்கும் பணியல்ல; **"नहि पालनसामर्थ्यं ऋते सर्वेश्वराद्धरेः"** (**நஹி பாலநஸாமர்த்₂யம் ருதே ஸர்வேஶ்வராத் ஹரே:**) என்றும், **"रक्षार्थं सर्वलोकानां विष्णुत्वमुपजग्मिवान्"** (**ரக்ஷார்த்த₂ம் ஸர்வலோகாநாம் விஷ்ணுத்வமுபஜக்₃மிவாந்**) என்றும் ரக்ஷணே நமக்கே பணியென்கிறார். (மமைதத் வ்ரதம்) நம்பக்கல் பரிவாலே விலக்குகையும் உமக்குப் பணியானாற்போலே ஆஶ்ரித ரக்ஷணமும் நமக்குத் தொழில்காணும். (ஏதத் வ்ரதம் மம) "ஸதாமேதத₃கர்₃ஹிதம்" போலே ஸத்தாப்ரயுக்தத்துக்கு ப்ரயோஜநமில்லை; செய்யாதபோது கபோதவாநர விச்வாமித்ராதிகளிருந்து "எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்"

இவ்விரதம் யாருக்கு அநுஷ்டிக்கத்தக்கது? எனில்: 1. (எனக்கு) "தேவர்களால் வேண்டப்பட்டு மனிதருலகில் பிறந்தான்" [ரா-அ 1-7] "வேண்டித்தேவர் இரக்கவந்து பிறந்ததும்" [திருவாய் 6-4-5] என்று பிறரால் வேண்டப்பட்டு, அவர்கள் குறைதீர்க்கவே பிறந்த நமக்கு இது விரதமாகும். 2. (எனக்கு) ஸ்ருஷ்டிக்கும் பிரமனுக்கும் இது காரியமல்ல; ஸம்ஹரிக்கும் உருத்திரனுக்கும் இது காரியமல்ல; "ஸர்வேச்வரனான ஹரியைத்தவிர வேறெவனுக்கும் ரக்ஷிக்கும் வல்லமையில்லை" [வி-பு 1-22-21] "எல்லாவுலகங்களையும் ரக்ஷிப்பதற்காக விஷ்ணுவாயிருக்கும் தன்மையை நாராயணனாகிற நீ அடைந்தாய்" [ரா-உத் 104-9] என்று ரக்ஷிப்பது என்னொருவனுக்கேயான காரியமாகும். 3. (எனக்கு இது விரதம்) நம்மிடம் பரிவாலே விபீஷணனை ரக்ஷிப்பதினின்றும் விலக்குவது உம் காரியமானாற் போலே, சரணமடைந்தவனை ரக்ஷிப்பது என்காரியமாகும். 4. (இது விரதம்) "இது நல்லோர்களுக்கு இகழாமைக்குறப்பு" [ரா-யு 18-3] என்றது போலே, இயற்கையிலேயே செய்யவேண்டிய இச்செயலுக்குத் தனியே ஒரு பயனில்லை; இதைச் செய்யாதபோது சரணாகதரக்ஷணம் செய்த புறா, வானரம், விச்வாமித்ரன் முதலானோர் அனைவரும் "எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்" [திருப்பல்-4] என்று என்னைத் தங்கள் கோஷ்டியில் புகாதபடி கதவடைப்பார்கள். அப்படிச் செய்யாமல், "சாதுகோட்டியுள்

என்று கதவையடைப்பார்கள். அது செய்யாதே, சாது கோட்டியுட் கொள்ளப்படுகிறதே ப்ரயோஜநமாக இது நமக்கு அநுஷ்டேயம் என்கிருர். (ஏதத் வ்ரதம் மம) இது நமக்கு அநுஷ்டேயம்; இத்தைத் தலைக்கட்டித்தாரீர் என்று மஹாராஜரை இரக்கிருர்.

இப்படி பெருமாள் மஹாராஜரைப் பார்த்து, 'அப₄ய ப்ரதாநம் பண்ணி ஆஸ்ரிதனை விபீஷணரக்ஷணம் பண்ண வேணும்' என்று இந்த ச்லோகத்தில் தாத்பர்யார்த்த மருளிச்செய்தாராயிற்று.

இனி அபயப்ரதாநஸாரம்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 34-வது ச்லோகம்

आनयैनं हरिश्रेष्ठ दत्तमस्याभयं मया।
विभीषणो वा सुग्रीव यदि वा रावणः स्वयम्॥

ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட₂ த₃த்தமஸ்யாப₄யம் மயா।
விபீ₄ஷணோ வா ஸு₃க்₃ரீவ யதி₃ வா ராவண꞉ ஸ்வயம்॥

பதவுரை:— **ஹரிச்ரேஷ்ட** —*வானரர்தலைவரே!* **மயா**—*என்னாலே,* **அஸ்ய**—*இந்த விபீஷணனுக்கு,* **அப₄யம்**—*அடைக்கலம்,* **த₃த்தம்**—*அளிக்கப்பட்டது;* **ஸு₃க்ரீவ**-*சுக்கிரீவனே!* **விபீ₄ஷண꞉ வா**-*விபீஷணனாகிலும்,* **ராவண꞉ ஸ்வயம் யதி₃வா**-*ராவணன் தானேயாகிலும்,* **ஏநம்**-*இவனை,* **ஆநய**-*அழைத்துவாரீர்.*

கொள்ளப்படுவாரே'' [பெரியாழ்திரு 3-6-11] என்கிற பயனைப்பெறுவதற்கு இது நம்மால் அநுஷ்டிக்கத்தக்கது என்கிருர். 5. (இது எனக்கு விரதம்) இது எனக்கு அவசியம் அநுஷ்டிக்கத்தக்கது; இதை நிறைவேற்றித்தாரீர் என்று சுக்கிரீவனை யாசிக்கிருர்.

இப்படி ராமபிரான் சுக்கிரீவனைப்பார்த்து, 'அபயப்ரதானம் செய்து சரணாகதனை விபீஷணனை ரக்ஷிக்கவேணும்' என்று, இந்த ச்லோகத்தில் ஸகலசாஸ்திரங்களின் தாத்பர்யார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அவதாரிகை:–''மித்ர ப$_4$ாவேந''விலே ப்ரக்ருதியறிந்தீர்; ''ஸக்ருதே$_3$வ ப்ரபந்நாய''விலே நம்முடைய ஸங்கல்பமறிந்தீர்; அஞ்சாதே ஸ்வீகரிக்கைக்கு ''பிஶாசாந்'' என்கிறதிலே நம்முடைய மிடுக்கும் கண்டீர்; ஒருதிர்யக்குங்கூட அநுஷ்டித்ததாகையாலே நமக்கு அநுஷ்டிக்கவேணுமென்னுமிடமும் கண்டீர்; ''ஶரணம்'' என்றவனை ரக்ஷித்தார்க்கும், ரக்ஷியாதார்க்கும் உண்டான லாபச்சேதங்கள் கண்டுவசநத்திலே கண்டீர். ஆனபின்பு, அவன் ஆரேனுமாகிலும், **''राघवं शरणं गतः''** (ராக$_4$வம் ஶரணம் க$_3$த:) என்கிறபோதே அவனுக்கு அப$_4$யம் தத்தம்; அத்தை க்ரியை செலுத்தீர் என்கிறார்.

வ்யா:—(ஆநயைநம்) ''நிவேத$_3$யத மாம்'' என்று ஸபரிகரரான உம்மைப் புருஷகாரமாகப் புகுர ஆசைப்பட்டவன் நெஞ்சாறல் தீர்ந்து புகுந்தானுவதும், நாம் ஸ்வீகரித்தோமாவதும், நீர் அவனைச் சென்று அழைத்துவந்தாலன்றோ;

அவதாரிகை:—''மித்ரபாவத்தோடு'' [ரா-யு 18-3] என்னும் ச்லோகத்தில் நம் ஸ்வபாவத்தை அறிந்தீர்; ''ஒருதடவையே சரணமடைந்தவனுக்கு'' [ரா-யு 18-33] என்னும் ச்லோகத்திலே நம்முடைய ஸங்கல்பத்தை அறிந்தீர்; அஞ்சாமல் விபீஷணனை ஏற்றுக்கொள்வதற்கு ''பிசாசங்களையும்'' [ரா-யு 18-23] என்கிற ச்லோகத்திலே நம்முடைய பலத்தையும் பார்த்தீர்; பறவையினத்திலே சேர்ந்த புறுவுங்கூட அநுஷ்டித்தது என்பதைக் கபோதோபாக்கியானத்திலே கண்டீர்; 'சரணம்' என்று வந்தவனை ரக்ஷித்தார்க்கு உண்டான லாபமும், ரக்ஷியாதார்க்கு உண்டாகும் நஷ்டத்தையும் கண்டுகீதையிலே கண்டீர்; ஆகையால், அவன் யாராயிருந்தாலும், ''ராகவனை சரணமடைந்தேன்'' [ரா-யு 17-14] என்றபோதே அவனுக்கு நெஞ்சாலே அபயமளித்துவிட்டேன்; அதைக் காரியத்தில் நிறைவேற்றுவீர் என்கிறார்.

வ்யா:-(இவனை அழைத்துவா) ''என்னை அறிவியுங்கள்'' [ரா-யு 17-15] என்ற துணைவரோடுகூடிய உம்மைப் புருஷகாரமாகக்கொண்டு நம் குழுவிலே புக ஆசைப்பட்டவன் மனவருத்தம் தீர்ந்து புகுவதும்,நாம் கைக்கொள்வதும் நீர் சென்று அவனை அழைத்துவந்தாலன்றோ. (வானரர்

(ஹரிச்ரேஷ்ட) அவன் நெஞ்சாறல் தீருமளவேயோ? நம் பக்கல் பரிவுடையார் எல்லாராலும் ப்ரஶஸ்யதமரான உம்முடைய அநுமதியையொழிய நாம் ஸ்வீகரிக்க ஶக்தரோ? (த$_3$த்த$_3$மஸ்யாப$_4$யம் மயா) (அஸ்ய) தன் ப$_3$ந்து$_4$வர்க்கத்தையடைய விட்டு ஸ்வநிகர்ஷபூர்வகமாக ஶரணம் புகுந்தவனுக்கு. (மயா) மித்ரப$_4$ாவமே அமைந்திருந்துள்ள நம்மாலே ஶரணமென்றபோதே அபயம் தத்தம். **"अथ सोऽभयङ्गतो भवति"** (அத$_2$ ஸோऽப$_4$யங்க$_3$தோ ப$_4$வதி). நாம் ஸ்வீகரித்தோமாய் அவனும் ஸ்வீகரிக்கப்பட்டவனும்படி அநுமதிபண்ணுவீர். அழைக்கப்போகிறவரை அழைத்து அருளிச்செய்கிறார்.- (விபீ$_4$ஷணோ வா ராவண: ஸ்வயம் யதி$_3$வா) விபீ$_4$ஷணனையிறே அழைக்கச்சொல்லிற்றென்று மீளாதே, ராவணன்தானேயாகிலும் அழைத்துக்கொண்டு போரும். விபீ$_4$ஷணனைக்கைக்கொண்டோமாகில், **"विभीषणस्तु धर्मात्मा"** (விபீ$_4$ஷணஸ்து த$_4$ர்மாத்மா) என்கிறபடியே தன்

தலைவரே) அவன் மனவருத்தம் தீருவதுமாத்திரமோ? நம்மிடம் பரிவுடைய வானரர் அனைவராலும் மிகவும் புகழப்படுமவரான நீர் அனுமதிக்காவிடில் என்னால்தான் இவனைக் கைக்கொள்ளமுடியுமோ? (இவனுக்கு என்னால் அபயம் அளிக்கப்பட்டது) (இவனுக்கு) தன் உறவினரனைவரையும்விட்டு, தன் தாழ்வை முன்னிட்டுக்கொண்டு சரணம் புகுந்தவனுக்கு. (என்னால்) மித்திரபாவமே போதும் என்னும் நம்மாலே இவன் 'சரணம்' என்ற போதே அபயம் அளிக்கப்பட்டது. "அதற்குப்பின் அவன் அபயம் பெற்றவனாகிறான்" [தை-ஆ-7] என்றாப்போலே. நாமும் இவனைக்கைக் கொண்டோமாய், அவனும் கைக்கொள்ளப்பட்டவனாம்படி நீர் அநுமதி பண்ணவேண்டியதே பாக்கி. இப்படி அழைத்துவர நியமித்தவுடன் சுக்கிரீவன் அழைத்துவரப்போகத்தொடங்க, ஒருவிஷயம் நினைவுக்கு வந்தவராய் மறுபடியும் கூப்பிட்டுச் சொல்லுகிறார்,— (விபீஷணனானாலும், ராவணன்தானேயானாலும்) நீர்போய்ப்பார்க்கும்போது ராவணனே விபீஷணன் வேஷத்தில் வந்திருப்பதாகத் தெரிந்தாலும், "விபீஷணனைத் தானே அழைத்துவரச்சொன்னார்' என்று திரும்பிவராமல், அந்த ராவணனையும் அழைத்துவாரும். (ராவணன் தானே ஆனாலும்) என்றதால் இது பெரும்பேறு என்று காட்டப்படுகிறது. விபீஷணனைக் கைக்கொண்டால் "விபீஷணன் தர்மாத்மாவாயிருப்பவன்" [ரா-ஆ 17-24] என்கிறபடியே

பக்கலிலே ஒரு முதலுடையவனை ஸ்வீகரித்தோமாவுதோம். **'रावणस्य नृशंसस्य'** (ராவணஸ்ய ந்ருசம்ஸஸ்ய) என்கிறபடியே அந்த ந்ருசம்ஸனை ஸ்வீகரித்தோமாகிற் காணும் நமக்கு நிறமுள்ளது. விபீஷணனை ஸ்வீகரித்தால் அவனோடே கூடின நால்வரும் பிழைத்துப்போருமித்தனை; ராவணனை ஸ்வீகரித்தால் துறுப்புக்கூட்டோடே லங்கையடைய நோக்கினோமாவுதோம். (ஸுக்ரீவ) நமக்கு வரும் ஏற்ற மடைய **"एकं दुःखं सुखञ्च नौ"** (ஏகம் து:க்கம் ஸுகஞ்ச நௌ) என்றிருக்கிற உம்முடைய ஏற்றமன்றோ?

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 35-வது ச்லோகம்

रामस्य तु वचः श्रुत्वा सुग्रीवः प्लवगेश्वरः ।
प्रत्यभाषत काकुत्स्थं सौहार्देनाभिचोदितः ॥

ராமஸ்ய து வச: ச்ருத்வா ஸுக்ரீவ: ப்லவகேச்வர: ।
ப்ரத்யபாஷத காகுத்ஸ்தம் ஸௌஹார்த்தேநாபிசோதித: ॥

பதவுரை:—ப்லவகேச்வர:—வானரர் தலைவரான, **ஸுக்ரீவ: து**—ஸுக்ரீவமஹாராஜரும், **ராமஸ்ய** — ஸ்ரீராமபிரானுடைய, **வச:**-வார்த்தையை, **ச்ருத்வா**-கேட்டு, **ஸௌஹார்தேந**-(ராமபிரானுடைய) நட்பினாலே, **அபிசோதித:**-ஏவப்பட்டவராய், **காகுத்ஸ்தம்**-ஸ்ரீராமபிரானைக்குறித்து, **ப்ரத்யபாஷத**-பதில் சொன்னார்.

தன்னிடம் சிலகுணநலங்களை உடையவனைக்கைக்கொண்டதேயாகுமாகையாலே சிறப்பில்லை; "கொடியவனான ராவணனுடைய" [ரா-யு 17-27] என்கிறபடியே அக்கொடியவனையே அங்கிகரித்து நம்மோடு சேர்த்துக் கொண்டால்தான் நமக்குச் சிறப்புள்ளது. மேலும், விபீஷணனை ஏற்றுக் கொண்டால் அவனோடு கூடவந்த நாலுபேர்தான் பிழைத்துப் போவார்கள்; ராவணனை ஏற்றுக்கொண்டால் ஸேநாஸமுத்ரத்தோடு கூடிய இலங்கை முழுவதையும் ரக்ஷித்தோமாவோம். (சுக்கிரீவனே) நமக்கு வரும் சிறப்பெல்லாம் "நமக்கு இன்பதுன்பங்கள் ஒன்றே" [ரா-கி 5-19] என்று நினைக்கும் உம்முடைய சிறப்பன்றோ. ஆகையால் அவசியம் செய்யவேணும் என்கை.

அவதாரிகை:-பெருமாள் அருளிச்செய்த வார்த்தையைக் கேட்டுக் கடல் தெளிந்தாற்போலே தெளிந்து ப்ரீதராய் ஒரு வார்த்தை சொன்னுர்.

வ்யா:-(ராமஸ்ய து வச: ச்ருத்வா) தம்முடைய வடிவுகண்டார்க்கு உண்டறுக்கவொண்ணுதாற்போலே, கேட்ட ஆஶ்ரித வர்க்கத்துக்கு உண்டறுக்கவொண்ணுத வார்த்தையைக் கேட்டு. (து) ப்ரேமாந்த₄ராய்ப் பெருமாளோடு விரோதி₄த்த நிலேகுலேந்து பெருமாளோடு ஏககண்டரான வேறுபாடு. (ஸுக்₃ரீவ: ப்லவகே₃ஶ்வர:) இவருடைய பரிகரமும் முன்பு நின்ற நிலேகுலேந்து இவரைப்போலே ஏககண்டர்களானுர்கள் என்று கருத்து. (ஸௌஹார்தே₃நாபி₄சோ₄தித:) தம்பக்கல் பெருமாளுக்குண்டான ஸௌஹார்த்தத்தாலே ப்ரேரிதராய்ச் சொன்னுர். ஸௌஹார்த்த₃மாவது.-"**दत्तमस्या-भयं मया**" (த₃த்தமஸ்யாப₄யம் மயா) என்று ஸ்வாமிகளான தாம் செய்ததை நமக்குப் பின்செல்லவேண்டியிருக்க, நம்மை ப₃ஹுமுக₂மாகத் தெளிவித்து, நாம் இசைந்தால் ஸ்வீகரிக்கக்கடவோம் என்னும் நீர்மை.

அவதாரிகை:—ஸ்ரீராமபிரான் அருளிய வார்த்தையைக் கேட்டு, சுக்கிரீவன் கடல் தெளிந்தாற்போலே தெளிந்து உகந்தவராய் ஒரு வார்த்தை சொன்னுர்.

வ்யா:—(ராமனுடைய வார்த்தையைக் கேட்டு) ரமிக்கச் செய்பவரான தம்முடைய வடிவழகு கண்டார்க்குக்கண்டு முடிக்கவொண்ணுமலிருப்பது போலே, கேட்ட அடியார்குழுவுக்குக் கேட்டு முடிக்கவொண்ணுமலிருக்கும் வார்த்தையைக்கேட்டு. (து) என்னும் சப்தம், அன்பினுலே அறிவு கலங்கி ராமபிரானேடு விரோதித்த நிலேநீங்கி, அவரோடு ஒரு மனப்பட்ட வேறுபாட்டைக் காட்டுகிறது. (குரங்கரசரான சுக்கிரீவன்) இவருடைய துணேவரான மற்ற வானரரும் 'விபீஷணனேச் சேரவொட்டோம்' என்று முன்பு நின்ற நிலே குலேந்து இவரைப்போலே பெருமாளோடு ஒருமனப் பட்டவரானுர்கள் என்று கருத்து. (நல்லெண்ணத்தாலே தூண்டப்பட்டவராய்) தம்மிடம் ராமபிரானுக்குண்டான நல்லெண்ணத்தாலே தூண்டப் பட்டவராய்ச் சொன்னுர். நல்லெண்ணமாவது:— "என்னுல் இவனுக்கு (சரணமென்றபோதே) அபயம் அளிக்கப்பட்டது" [ரா-யு 18-34] என்று ஸ்வாமியான தாம் ஏற்கனவே முடிவுகட்டியதை நாம் பின்செல்ல வேண்டியிருக்க, நம்மைப் பலவிதமாகத் தெளியச்செய்து நாம் இசைந்த பின்பே கைக்கொள்வோம் என்னும் குணமாகும்.

(காகுத்ஸ்தம் ப்ரத்யபா₄ஷத) இந்நீர்மைக்கடியான குடிப்பிறப்பையுடையவரை ஒரு வார்த்தை சொன்னார். தம்முடைய ஸௌஹார்த்₃ம் ப்ரேரகமாகவொண்ணாதிறே, அது கலக்கத்துக்கு ஹேதுவாகையாலே.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம், 36-வது ச்லோகம்

किमत्र चित्रं धर्मज्ञ लोकनाथ सुखावह।
यत्त्वमार्यं प्रभाषेथाः सत्त्ववान् सत्पथे स्थितः॥

கிமத்ர சித்ரம் த₄ர்மஜ்ஞ லோகநாத₂ ஸு₂கா₂வஹ।
யத் த்வமார்யம் ப்ரபா₄ஷேதா₂: ஸத்வவாந் ஸத்பதே₂ ஸ்தி₂த:॥

பதவுரை:—த₄ர்மஜ்ஞ—*அறமறிந்தவரே!* **லோகநாத₂**—*உலகின் தலைவரே!* **ஸு₂கா₂வஹ**-*இன்பமளிப்பவரே!* **ஸத்வவாந்**-*நன்னெஞ்சையுடையீராய்,* **ஸத்பதே₂ ஸ்தி₂த:**—*நல்வழியில் நடப்பவரான தேவரீர்,* **ஆர்யம் ப்ரபா₄ஷேதா₂: யத்**-*நல்வார்த்தை பேசினது யாதொன்றுண்டோ (அது),* **அத்ர**—*தேவரீர் விஷயத்தில்,* **கிம் சித்ரம்**—*ஆச்சரியமோ?*

அவதாரிகை:—லோகத்தில் ரக்ஷகாபேக்ஷையுடையாரடைய இவ்வார்த்தையின் நிழலிலே ஒதுங்கலாம்படி வார்த்தை சொன்னீர் என்னுமிது தேவர்க்கு ஏற்றமோ? என்கிறார்.

(காகுத்தனைக் குறித்துபதில் சொன்னார்) இந்த குணத்துக்குக் காரணமானகுடிப்பிறப்பையுடையவரைக் குறித்து ஒரு வார்த்தை சொன்னார். "நல்லெண்ணத்தாலே தூண்டப்பட்டு" என்றால் 'சுக்கிரீவன் தன்னுடைய நட்பினாலே தூண்டப்பட்டு' என்று பொருள்கொள்வதன்றோ பொருத்தம் என்னும் ஐயம் சிலருக்கு எழக்கூடும். சுக்கிரீவனுடைய நட்பு கலக்கத்துக்கே காரணமாயிருப்பதைக் கண்டிருக்கிறோமாகையாலே, தெளிந்து வார்த்தை சொல்லும் இப்ரகரணத்துக்கு அப்பொருள் பொருந்தாது.

அவதாரிகை:—'உலகத்தில் ரக்ஷிப்பாரை விரும்பும் அனைவரும் இவ்வார்த்தையின் குளிர்நிழலிலே ஒதுங்கலாம்படியான வார்த்தை சொன்னீர் என்னும் இது தேவரீருக்கு ஒரு பெருமையோ?' என்கிறார்.

வ்யா:-(கிமத்ர சித்ரம்) உம்மையொழிந்தார் இவ் வார்த்தை சொன்னூர்களாகிலன்ரூ ஆச்சர்யமாவது. தேவரீர் அருளிச்செய்தீர் என்றூல் ஆச்சர்யமோ? ஆச்சர்யமன்றென்னு மிடத்துக்கு ஹேதுக்கள் சொல்லுகிறது மேல்: (தர்மஜ்ஞ) தர் மங்களில் வெளிறு கழிந்த தர்மம் ஶரணாகதரக்ஷணமென்று அறியுமவரல்லீரோ? (லோகநாத₂) அவ்வளவேயோ? சிறி யதைப் பெரியது நலியாதபடி நோக்காதொழிந்தால் குறை யாம்படியான ஸர்வநிர்வாஹகத்வத்தை உடையீரல்லீரோ? (ஸுகாவஹ) உம்முடைய நிர்வாஹகத்வம் து:க்கநிவர்த்தக மானவளவேயோ? ஸுகஹேதுவுமாகவன்ரூ இருப்பது. (ஸத்வவாந்)"त्वयि किञ्चित्समापन्ने" (த்வயி கிஞ்சித் ஸமாபந்நே) என்றுபோந்த நீர், நான் "वध्यतां" (வத்யதாம்) என்ன, "न त्यजेयं"(ந த்யஜேயம்) என்று நெஞ்சில் தூய்மையுடையவ ரல்லீரோ? (ஸத்பதே₂ ஸ்தி₂த:) அபி₄மதமானவர்களேயும் ப₃ஹிஷ்கரித்துச் செய்யவேண்டும்படி ஶரணாகதரக்ஷணத்

வ்யா:—(இதில் என்ன ஆச்சரியம்) தேவரீரைத்தவிர மற்றொருவர் இவ்வார்த்தை சொல்லியிருந்தால் ஆச்சரியமாகக்கூடும். இவ்வார்த்தையை நீர் அருளிச்செய்ததில் ஓராச்சரியமுமில்லை. ஏனில்லையென்பதற்குக் கார ணங் காட்டுகிறூர் மேலே:-(தருமமறிந்தவரே) தர்மங்களில் அல்பஸாரம், ஸாரம், ஸாரதரம் முதலியவையெல்லாம் கழித்து ஸாரதமமான தர்மம் சரணுகதரக்ஷணம் என்று அறிந்தவரல்லீரோ? (லோகநாதரே) அறிவு மாத்திரமேயோ? துர்ப்பலரை பலிஷ்டர் துன்புறுத்தாதபடி ரக்ஷியாதிருந் தால் உமக்குக் குறையாம்படி ஸர்வஸ்வாமியாயிருப்பவரல்லீரோ? (இன்ப மளிப்பவரே) உம்முடைய ஸ்வாமித்வம் துன்பத்தைப்போக்குவதுமாத்திர மல்லாமல் இன்பத்தைத் தருவதாகவுமன்ரூ இருக்கிறது. (நன்னெஞ்சை யுடையவர்) "ஸத்வவான்" என்றவிடத்தில் ஸத்வசப்தம் நெஞ்சைக் குறிக்கிறது; ப்ரசம்ஸார்த்தத்தில் மதுப்பாகிறது. "உமக்கு ஏதாவது நேர்ந்தால் சிதையைப்பெற்று எனக்கு என்னபயன்" [ரா-யு 41-4] என் றிருக்கும் நீர், நான் "விபீஷணன் கொல்லப்படட்டும்" [ரா-யு 17-27] என்றுரைக்க, "கைவிடமாட்டேன்" [ரா-யு 18-3] என்னும்படியான நெஞ் சில் தூய்மையை உடையவரல்லீரோ? ஸத்வகுண பூர்ணரானவர் என்ப தாகவும் கொள்ளலாம். (நல்வழியில் நிற்பவர்) உயிரிலுமினியவர்கள் விலக்குவதையும் கேளாமலிருக்கும்படியான சரணுகதரக்ஷணநிஷ்டையாகிற

தில் நிஷ்டரானவரல்லீரோ? (ஆர்யம் த்வம் ப்ரபாஷதே₂: யத்) ஸர்வலோகமும் உம்மையொழியவே உம்முடைய வார்த்தையின் நிழலிலே ஒதுங்கலாம்படி நீர் சொன்னீர் என்றது யாதொன்று; அதாகிறது,- "**दोषो यद्यपि तस्य स्यात्**" (தோ₃ஷோ ய த்₃'ப்பி தஸ்ய ஸ்யாத்) என்றும், "**अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम**" (அப₄யம் ஸர்வபூ₄தேப்₄யோ த₃தா₃ம்யேதத்₃ வ்ரதம் மம) என்றும் சொன்ன வார்த்தையை இஸ்வபாவங்களையுடைய தேவரீர் அருளிச்செய்தீர் என்று இது ஒரு ஆஶ்சர்யமோ? உம்மையொழிந்தார் ஒருவர் சொல்லிலன்றோ ஆஶ்சர்யமாவது.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 37-வது ச்லோகம்

मम चाप्यन्तरात्मायं शुद्धं वेत्ति विभीषणम्।
अनुमानाच्च भावाच्च सर्वतः सुपरीक्षितः॥

மம சாப்யந்தராத்மாயம் ஶுத்₃த₄ம் வேத்தி விபீ₄ஷணம்।
அநுமாநாச்ச ப₄ாவாச்ச ஸர்வத: ஸுபரீக்ஷித:॥

பதவுரை:—**மம**—என்னுடைய, **அயம் அந்தராத்மா அபி**—இந்த உள்ளமும், **விபீ₄ஷணம்**—விபீஷணனாழ்வானை, **ஶுத்₃த₄ம்**-தோஷமற்றவனாக, **வேத்தி**—அறிகிறது; **அநுமாநாத் ச**—அநுமானத்தினாலும், **ப₄ாவாத் ச**—நினைவினாலும், **ஸர்வத:**-எல்லாவிதத்திலும், **ஸுபரீக்ஷித:**—(இவன்) நன்கு ஆராயப் பட்டான்.

நல்வழியில் நிலைநிற்பவரல்லவோ? (நல்வார்த்தையை தேவரீர் பேசினீர் என்பது யாதொன்றுண்டு) எல்லாவுலகமும் உம்மைக்கூட மறந்து உம்முடைய வார்த்தையின் நிழலிலே ஒதுங்கலாம்படியான யாதொரு வார்த்தையைச் சொன்னீரோ, இதில் ஓர் ஆச்சரியமுண்டோ? என்று கீழோடே அன்வயம். அதாவது:-"சரணாகதனுக்குக் குற்றமிருந்தாலும் இருக்கட்டுமே" [ரா-யு 18-3] "எல்லா பூதங்களிடத்தினின்றும் அபயமளிக்கிறேன்; இது என் விரதம்" [ரா-யு 18-33] என்னும் வார்த்தைகளை, 'தர்மஜ்ஞ' என்றுதொடங்கிக் கீழேசொன்ன தன்மைகளையுடைய தேவரீர் அருளிச்செய்தீர் என்பது ஓர் ஆச்சரியமோ? உம்மைத்தவிர வேறொருவர் சொல்லியிருந்தாலன்றோ அது ஆச்சரியமாவது என்கை.

அவதாரிகை:—'நம்முடைய வார்த்தையை நீர் கொண்டாடின இத்தால் ப்ரயோஜநமென்? உம்முடைய நெஞ்சு தெளிந்தாலன்ரூே இவனை ஸ்வீகரிக்கலாவது' என்ன: 'அதுக்கும் ஒரு குறையில்லை' என்கிருர்.

வ்யா:–(அநுமாநாச்ச) முகவிகாரா(ஸா?)தி₃லிங்கங்களாலும். (ப₄ாவாச்ச) அவனுடைய வார்த்தை த்₄வநிகளாலே பரகாசிப்பிக்கப்பட்ட நெஞ்சில் மேன்மையாலும். 'ச' ஶப்தத்தால்நான் "**वध्यतां**" (**வத்₄யதாம்**)என்றபோதோடு,நீர் "**न त्यजेयं**" (**ந த்யஜேயம்**)என்றபோதோடு, திருவடி "**विद्यते त्वस्य सङ्ग्रहः**" (**வித்₃யதே த்வஸ்ய ஸங்க்₃ரஹ:**) என்றபோதோடு வாசியற ஏகரூபனுயிருந்தபடியாலும். (ஸர்வத:) இப்படி ஸர்வப்ரகாரங்களாலும். (ஸுபரீக்ஷித:) ஸம்ஶயவிபர்யயரஹிதமாகப் பரீக்ஷிக்கப்பட்டான்.

அவதாரிகை:–"நம்முடைய வார்த்தையைக் கொண்டாடினதால்மாத்திரம் பயனென்ன? இவனைச் சேர்த்துக்கொள்வதில் உம்முடைய மனம் தெளிந்தாலன்ரூே இவனை நான் கைக்கொள்ளமுடியும்?" என்று பெருமாள் திருவுள்ளமாக;

வ்யா:–(என்னுடைய இந்த உள்ளம் விபீஷணனைப் பரிசுத்தனுகவே அறிகிறது) என் மனம் குறைவறத் தெளிந்துவிட்டது என்கிருர். காரணம் காட்டுகிருர் மேலே: (அநுமானத்தினுலும்) முகமலர்த்தி முதலான அடையாளங்களாலும். (நினைவினுலும்) அவனுடைய குரலின் ஒலிகளால் வெளிப்பட்ட நெஞ்சின் மேன்மையாலும். இரண்டு சகாரங்களில் ஒன்று உக்தஸமுச்சயம். மற்ருென்று அநுக்தஸமுச்சயமாய், சுக்கிரீவன் "கொல்லப்படட்டும்" [ரா-யு 17-27] என்றபோதோடு, ராமபிரான் "கைவிடமாட்டேன்" [ரா-யு 18-3] என்றபோதோடு, அநுமன் "இவனை ஏற்றுக்கொள்ளவே வேண்டும்" [ரா-யு 17-65] என்றபோதோடு வித்தியாசமில்லாமல் ஒரே நிலையிலிருந்தமையைக்கூட்டுகிறது. (எல்லாப்படியாலும்) இப்படி எல்லாவிதத்திலும். (நன்கு பரீக்ஷிக்கப்பட்டான்) ஐயமும் மயக்கமுமில்லாமல்நன்கு ஆராயப்பட்டான்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம் 38-வது ச்லோகம்

तस्मात्क्षिप्रं सहास्माभिस्तुल्यो भवतु राघव।
विभीषणो महाप्राज्ञः सखित्वञ्चाभ्युपैतु नः॥

தஸ்மாத் க்ஷிப்ரம் ஸஹாஸ்மாபி₄ஸ் துல்யோ ப₄வது ராக₄வ।
விபீ₄ஷணோ மஹாப்ராஜ்ஞ: ஸகி₂த்வஞ்சாப்₄யுபைது ந:॥

பதவுரை:—ராகவ—ரகுகுலத்தோன்றலே! தஸ்மாத்—ஆகையால், மஹாப்ராஜ்ஞ:—பெரும்பேரறிவாளனான, விபீ₄ஷண:-விபீஷணாழ்வான் க்ஷிப்ரம்-விரைவிலேயே, அஸ்மாபி₄: ஸஹ-நம்மோடு கூட, துல்ய:-ஒத்தவனாக பவது-ஆகட்டும். ந:-நமக்கு, ஸகித்வம்ச-நண்பனாயிருக்கும் நிலையையும், அப்₄-யுபைது- அடையட்டும்.

அவதாரிகை:—இப்படி ஶுத்₃த₄ஸ்வப₄ாவனாகையாலும், அத்தாலே தேவர்க்குப் பரிகரனாக ப்ராப்தனாகையாலும் நாங்கள் எல்லாரும் பெற்றபேற்றை இவன் ஒருவனும் பெற வேணும் என்கிறார்.

வ்யா:—(தஸ்மாத் க்ஷிப்ரம்) "**आजगाम मुहूर्तेन**" (ஆஜகா₃ம முஹூர்த்தேந)என்று பதறிவந்தபடியாலும், "**दत्तमस्याभयं मया**"(த₃த்தமஸ்யாப₄யம் மயா) என்ற தேவர்படியாலும் விளம்பஹேதுவின்றிக்கேயிருக்க, என்னாலே யாயிற்று அவனை ஸ்வீகரிக்கையில் விளம்ப முண்டாயிற்று. நான் தெளிந்தபின்பு சடக்கென விஷயீகரிக்கவேணும்.

அவதாரிகை:—இப்படித் தூயதன்மையுடையவனாகையாலும், அதனாலே தேவரீருக்குத் துணைவனாகத் தக்கவனாகையாலும் நாங்கள் அனைவரும் பெற்ற பயனை விபீஷணனும் பெறவேண்டும் என்கிறான் சுக்ரீவன்.

வ்யா:—(ஆகையால்—விரைவில்) "முகூர்த்தநேரத்தில் வந்தான்" [ரா-யு 17-1] என்று பதறிவந்தபடியாலும், "இவனுக்கு என்னாலே அபயமளிக்கப்பட்டது" [ரா-யு 18-34] என்ற தேவரீர் தன்மையாலும் இவனைக் கைக்கொள்ளுவதில் தாமதமேற்பட இடமில்லாமலிருக்க, என்னாலே யாயிற்று இவனை ஏற்றுக்கொள்வதில் தாமதமுண்டாயிற்று. நான் தெளிந்து விட்டபின்பு விரைவிலே ஏற்றுக்கொள்ளவேணும். (எங்களோடு ஒத்த

(ஸஹாஸ்மாபி₄ஸ்துல்யோ ப₄வது) எங்களை எல்லாரையும் கொண்டு கொண்ட அடிமையை இவனை ஒருவனையும் கொண்டு கொண்டருளவேணும். "கண்ணன் வானுடை மரும் தெய்வத்தினமோரனையீர்களாய்" என்று நித்ய ஸூரிகள் எல்லாரையும் ஆழ்வார்க்கு ஒப்பாகச் சொல்லக் கடவதிறே. (ஸஹாஸ்மாபி₄:) இவரை அடிமை கொள்ளு மிடத்தில் இவர் ப்ரத₄ாநராய், இவர்க்கு நாங்கள் பரிகர பூ₄தராய் அடிமைசெய்யும்படி விஷயீகரித்தருளவேணும். **"सहयुक्तेऽप्रधाने"** (ஸஹயுக்தேऽப்ரத₄ாநே) (ராக₄வ) ப்ரபந்ந பரித்ராணம் பண்ணுதபோது ஸ்வரூபத்தை அழிக்கும் படியான குடிப்பிறப்பை உடையீரல்லீரோ? (விபீ₄ஷணோ மஹாப்ராஜ்ஞ:) ஜ்ஞனகையாவது நம்மை வறுமையே பற்றாசாக விஷயீகரிப்பரென்றிருக்கை. ப்ராஜ்ஞனகை யாவது,–ராவண ஸம்ஸர்க்கத்தால் வந்த தோஷங்களைப் பாராதே விஷயீகரிப்பர் என்றிருக்கை. மஹாப்ராஜ்ஞனகை யாவது,–எத்தனையேனும் அந்தரங்கரானுர் **"वध्यतां"** (வத்₄ய

வனுகட்டும்)எங்களனைவரையும்கொண்டு தேவரீர்கொண்ட கைங்கர்யங்களை இவன் ஒருவனையே கொண்டு கொண்டருளவேணும். "கண்ணன் வானுடமரும் தெய்வத்தினமோர் அனையீர்களாய்" [திருவிருத்தம்-23] என்று நித்யஸூரிகள் அனைவரையும் ஆழ்வார் ஒருவருக்கு ஒப்பாகச் சொல்லுவதுபோலே இங்கும். (எங்களோடுகூட) "கூட என்னும் அர்த் தத்திலுள்ள 'ஸஹ' 'ஸாகம்' முதலான சப்தங்களோடு கூடியிருக்கும் பதம் அப்ரதாநப்பொருளுடையதாய் மூன்றும் வேற்றுமையில் பிரயோகிக் கப்படும்" [பாணிநிஸூ2-3-19] என்னும் ஸூத்ரத்தின்படி விபீஷணனைக் கைங்கரியம் கொள்ளும்போது அவன் பிரதானமானவனுய், நாங்கள் அப்ரதாநமானவராய், அவனுக்குத் துணைவராய் அடிமைசெய்யும்படி திரு வுள்ளம்பற்றியருளவேணும். (ரகுகுலத்துதித்தவரே) சரணுகதரக்ஷணம் செய்யயாவிடில் தம் உயிரையே மாய்த்துக்கொள்ளும் ரகுவின் குலத்திலே பிறந்தவரல்லீரோ? (பெரும்பேரறிவாளனுன விபீஷணன்) அறிவாளனுகை யாவது:-நம்மைக் கைம்முதலில்லாமையே ஹேதுவாகக் கைக்கொள்ளுவார் பெருமாள் என்று அறிகை; பேரறிவாளனுகையாவது,-ராவணஸம்பந்தத் தால் வந்த தோஷங்களையும் பாராமல் கைக்கொள்ளுவார் என்று அறிகை. பெரும்பேரறிவாளனுகையாவது,–எத்தனையும் நெருங்கியவர்கள் "கொல்

தாம்) என்ருலும். தாம் பிற்காலியதே இவனைத் தெளிய விட்டு விஷயீகரிப்பர் என்றிருக்கை. இப்படி உம்மை உள்ள படி அறியும் பேரறிவாளனல்லனே? (ந: ஸகித்வஞ்சாப்₄ யுபைது) "सखा दासोऽस्मि" (ஸகா₂ தா₃ஸோஸ்மி) என்னும் படியே நான் பெற்றபேறு பெறவேணும். எங்களுக்கு ஸகித்வத்தை அடையவேணும் என்றுமாம். "தோழன் நீ" என்று நீர் அடிமைகொள்ளுமாப்போலே அவனும் எங்களை அடிமைகொள்ளவேணும்.

யுத்தகாண்டம் 18-வது ஸர்க்கம், 39-வது ச்லோகம்

ततस्तु सुग्रीववचो निशम्य तद्धरीश्वरेणाभिहितं नरेश्वरः।
विभीषणेनाशु जगाम सङ्गमं पतत्रिराजेन यथा पुरन्दरः॥

ததஸ்து ஸுக்₃ரீவவசோ நிஶம்ய தத்
ஹரீஶ்வரேணாபி₄ஹிதம் நரேஶ்வர:।
விபீ₄ஷணேநாஶு ஜக₃ாம ஸங்க₃மம்
பதத்ரிராஜேந யதா₂ புரந்த₃ர:॥

இதி ஸ்ரீயுத்₃த₄காண்டே₃ அஷ்டாத₃ஶ: ஸர்க்க₃:

பதவுரை:—தத்—அந்த, ஸுக்ரீவவச:—சுக்கிரீவனுடைய வார்த்தையை, நிஶம்யது—கேட்டு தத: — அதற்குப்பின், நரேஶ்வர:—மனிதர் தலைவரான ராமபிரான், ஹரீஶ்வரேண-

லப்படட்டும்" [ரா-யு 17-27] என்ருலும் தாம் பின்வாங்காமல், விலக்கு வாரைத் தெளியவைத்து நம்மைக் கைக்கொள்வர் என்று அறிகை. இப்படி உம்மை உள்ளபடி அறியும் பெரும்பேரறிவாளனன்ருே இவ் விபீஷணன், (நம்முடன் நட்பையும் அடையட்டும்) "நண்பனுகவும் அடியேனுகவுமிருக்கிறேன்" [ ] என்னும்படி நான் பெற்ற பயனை (உம்முடன் நட்பை) இவனும் பெறவேணும். நம்முடன் என்றது உம் முடனென்றபடி; அன்றியிலே எங்களுக்கு நண்பனுயிருக்கும் தன்மையை அவன் அடையவேணும் என்றும் கொள்ளலாம். "தோழன் நீ" [பெரியதிரு 5-8-1] என்றுகூறி நீர் எங்களை ஆட்கொண்டாற்போலே அவனும் எங்களை ஆட்கொள்ளவேணும்.

வானரர்தலைவரான சுக்கிரீவனாலே, அபி₄ஹிதம்—சொல்லப் பட்ட, விபீ₄ஷணேந ஸங்கமம் — விபீஷணனோடு சேர்த்தியை, புரந்தர:—இந்திரன், பதத்ரிராஜேந யதா— புள்ளரையனை கருடனோடு சேர்ந்ததுபோல், ஆஶு — விரைவில், ஜகாம—அடைந்தார்.

அவதாரிகை:-மஹாராஜர் சொன்னபடியே தன்பேருகக் கிட்டினார் என்கிறது.

வ்யா:—(தத் ஸுக்₃ரீவவசோ நிஶம்யது)"வசஸ்தா"(வத்₄ய தாம்) என்ற மஹாராஜருடைய அநுகூலமான அந்த வார்த்தையைக் கேட்டபின்பு, ப்ரீதியாலே பிறந்த விஶேஷம். (நிஶம்ய தத: நரேஶ்வரோபூ₄த்) அவ்வார்த்தையைக் கேட்டபின்பு நரேஶ்வரருமானார். திருவடி வார்த்தையைக் கேட்டபோது தாம் உளரானார்; மஹாராஜர் வார்த்தை யைக் கேட்டபின்பு ஸர்வநிர்வாஹகரானார். (ஹரீஶ்வ ரேணாபி₄ஹிதம் விபீ₄ஷணேந ஸங்க₃மம்) ஸபரிகரராய்க் கொண்டு புகுரவொட்டோம் என்ற தாமே ஸபரிகரராய்க் கொண்டு விஷயீகரிக்கவேணும் என்கிறார் என்று கருத்து.

அவதாரிகை:—சுக்கிரீவன் சொன்னபடியே ராமபிரான் தன்பேருக விபீஷணனோடு சேர்ந்தார் என்கிறது.

வ்யா:-(அந்த சுக்கிரீவ வசனத்தைக் கேட்டபின்போவெனில்) "கொல் லப்படட்டும்" [ரா-யு 17-27] என்ற சுக்கிரீவனுடைய அநுகூலமான அந்த வார்த்தையைக் கேட்டபின்பு, உகப்பாலே பிறந்த முகமாறுபாட்டைக் காட்டுகிறது 'து' (எனில்) என்னும் சப்தம். (கேட்டு அதற்குப்பின் நர பதியானார்) அவ்வார்த்தையைக்கேட்டபின்பு அரசருமானார். "அதஶ்ராம:" [ரா-யு 18-1] என்கிறபடியே அநுமனின் வார்த்தையைக் கேட்டபோது உயிர்தரித்தார். சுக்கிரீவனுடைய இந்த நல்வார்த்தையைக் கேட்டதும் அரசர்க்கரசரானார். (வாநரராஜாவால் சொல்லப்பட்ட விபீஷணனும்வா னோடு சேர்த்தியை) துணைவரோடு கூடி நின்று 'எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்' என்ற தாமே, இப்போது எல்லாவானரரோடும் கூடி நின்று 'விபீஷணனை ஏற்றுக்கொள்ளவேணும்' என்கிறார் என்று கருத்து.

(ஆரூ ஜக$_3$ாம) கட்டுவிடப்பட்ட தருணவத்ஸதே$_4$நு கன்றின்பேரிலே விழுமாப்போலே சடக்கெனக் கிட்டினுர். மஹாராஜருடைய ப்ரேமம் மறுவலிடில் செய்வதென்? என்று அவர் இசைந்தபோதே சடக்கெனக் கிட்டினுர் என்றுமாம். (புரந்த$_3$ர: பதத்ரிராஜேந யதா$_2$) இந்த்ரன் தன் பேருகப் பெரியதிருவடியைக் கிட்டினுற்போலே, இவரும் தம் பேருகக் கிட்டினுர் என்கை.

அபயப்ரதாநஸாரத்தில் யுத்தகாண்டம்
பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

யுத்தகாண்டம் 19-வது ஸர்க்கம் 1-வது ச்லோகம்

राघवेणाभये दत्ते सन्नतो रावणानुजः।
विभीषणो महाप्राज्ञो भूमिं समवलोकयन्॥
खात्पपातावनिं हृष्टो भक्तैरनुचरैः सह॥

ராக$_4$வேணுப$_4$யே த$_3$த்தே ஸந்நதோ ராவணுநுஜ:।
விபீ$_4$ஷணே மஹாப்ராஜ்ஞோ பூ$_4$மிம் ஸமவலோகயந்॥
க$_2$ாத் பபாதாவநிம் ஹ்ருஷ்டோ ப$_4$க்தைரநுசரை: ஸஹ॥

பதவுரை:—ராக$_4$வேண—ரகுகுலத்துதித்தவரான ராம பிரானுல், அபயே தத்தே—அபயமானது கொடுக்கப்பட்டவள வில், ராவணுநுஜ:—ராவணன் தம்பியாய், மஹாப்ராஜ்ஞ:—

(விரைவில் அடைந்தார்) "யதா$_2$ தருணவத்ஸாவத்ஸம்" [பரமஸம்ஹிதை] என்ருற்போலே இளங்கன்றையுடைய பசுமாடு கட்டவிழ்த்துவிடப் பட்டால் கன்றைமேல்விழுந்து அணைப்பதுபோலே விரைவில் விபீஷண ஞேடு சேர்ந்தார். சுக்கிரீவனுடைய அன்பு மறுபடியும் மேலிட்டு அறிவு கலங்கிஞல் என்ன செய்வது என்னும் ஐயத்தாலே சுக்கிரீவன் இசைந்த வுடனே விரைவில் அணுகிஞர் என்றும் கொள்ளலாம். (இந்திரன் கருட ஞேடு கூடினதுபோலே) இந்திரன் தன்பேருக கருடாழ்வாஞேடு கூடினது போலே இவரும் தம் பேருக விபீஷணுழ்வாஞேடு கூடிஞர் என்கிறது.

யுத்தகாண்டம் பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

பேரறிவாளனாய், ஸந்நத:-நன்கு வணங்கியவனான, விபீ₄ஷண:-விபீஷணன், பூமிம்—பூமியை, ஸமவலோகயந்—பார்த்துக் கொண்டு, அநுசரை:-பின்தொடர்ந்துவந்த, ப₄க்தை:ஸஹ-அன்புநிறைந்த அரக்கரோடு கூட, ஹ்ருஷ்ட: ஆனந்த முடையவனாய், கா₃த்-ஆகாயத்தினின்றும், அவநிம் பபாத-தரையிலே விழுந்தான்.

அவதாரிகை:—அநந்தரம் பெருமாளும் விஷயீகரித்து, மஹாராஜரும் இசைந்ததுக்குப் பின்பு, ஸ்ரீவிபீஷணாழ்வான் செய்தபடி சொல்லுகிறது.

வ்யா:-(ராகவேண) ப்ரபந்நபரித்ராணம் தமக்கு ஏற்ற மன்றிக்கே குலதர்மமென்கை. (அப₄யே த₃த்தே) "**दत्तमस्याभयं मया**" (த₃த்தமஸ்யாப₄யம் மயா, என்றது ஜீவித்தது மஹாராஜர் இசைந்ததுக்குப் பின்பு என்கை. (ராவணாநுஜ: விபீ₄ஷண: ஸந்நத:) "**न नमेयं**" (ந நமேயம்) என்றிருந்த ராவணன் தம்பியாயிருந்துவைத்துப் பிறர் அள்ளியெடுக்க வேண்டும்படி திருவடிகளிலே வந்துவிழுவதே! என்று ரிஷி கொண்டாடுகிறான். (மஹாப்ராஜ்ஞ: ஸந்நத:) தமக்கு அபி₄மதராயிருந்துள்ள மஹாராஜப்ரப்₄ருதிகள் "**वध्यतां**" (வத்₄யதாம்) என்ன, "**न त्यजेयं**" (ந த்யஜேயம்) என்று விஷயீகரித்த

அவதாரிகை:—ராமபிரானும் 'அழைத்துவா' என்று, சுக்ரீவனும் 'நம்மோடு ஒத்தவனாகட்டும்' என்று இசைந்தபின்பு ஸ்ரீவிபீஷணாழ்வான் செய்தபடியைச் சொல்லுகிறது 'ராகவேண' என்னும் ச்லோகத்தாலே.

வ்யா:-(ராகவராலே) சரணாகதரக்ஷணம் தமக்குத் தனிச்சிறப்பல்லாமல், ரகுவின் காலத்திலிருந்தே குலவொழுக்கமாக வந்தது என்கை. (அபயம் அளிக்கப்பட்டவளவில்) "இவனுக்கு என்னால் அபயம் அளிக்கப்பட்டது" [ரா-யு 18-34] என்ற ராமப்ரதிஜ்ஞை நிலைபெற்றது சுக்ரீவன் இசைந்தபின்பே என்கை. (ராவணன் தம்பியான விபீஷணன் நன்கு வணங்கியவனாய்) "ஒருவனுக்கும் வணங்கமாட்டேன்" [ரா-யு 36-11] என்ற ராவணன் தம்பியாயிருந்தும், பிறர் அள்ளியெடுக்கவேண்டும்படி திருவடிகளிலே வந்து விழுவதே! என்று வால்மீகி மஹரிஷி கொண்டாடுகிறார். (பேரறிவாளன் வணங்கியவனாய்) தமக்கு உயிரிலுமினிய சுக்ரீவன் முதலானோர் "கொல்லப்படட்டும்" [ரா-யு 17-27] என்றபோதும், "கைவிட

உபகாரத்தை அறிந்தவனாகையாலே விஷயீகாரமாகிற மஹோபகாரத்துக்குத் தோற்றுத் திருவடிகளிலே விழுந்தான் என்கை. (பூ$_4$மிம் ஸமவலோகயந் ஸந்நத:) "ஏழையேதலன் கீழ்மகன் என்னாதிரங்கி" என்கிறபடியே என்னுடைய நிகர்ஷம் பாராதே தம்முடைய பேருக மேல்விழுவதே! என்று லஜ்ஜாவிஷ்டனாய்க்கொண்டு திருவடிகளிலே விழுந்தபடி. (க$_2$ாத் பபாதாவநிம் ஹ்ருஷ்ட: ப$_4$க்தைரநுசரை: ஸஹ) மஹாராஜர் "**वध्यतां**" (**வத்$_4$யதாம்**) என்றபோது தரையில் கால்பாவ விரகின்றிக்கே ஆகாஶஸ்தனாய் நின்றவன், அவர் தாமே சென்று அழைத்தபின்பு பிறந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பெருமாள் திருவடிகளளவும் செல்லாதே ப்ரியபரிகரனாய்க்கொண்டு ஆகாஶத்தில்நின்றும் தரையிலே விழுந்தான். "**उत्पपात गदापाणिश्चतुर्भिः सह राक्षसैः**" (**உத்பபாத க$_3$த$_3$ாபாணிஶ் சதுர்ப்பி$_4$ஸ்ஸஹ ராக்ஷஸை:**) என்று அவன் லங்காஸம்பந்தமற்றபோது தாங்களும் ஸம்பந்தமற்றுப் போந்தார்கள். "**वध्यतामेव तीव्रेण दण्डेन सचिवैः सहः**" (**வத்$_4$யதாமேஷ தீவ்ரேண த$_3$ண்டே$_3$ந ஸசிவை: ஸஹ**) என்று வதத்

"மாட்டேன்" [ரா-யு 18-3] என்று தன்னைக் கைக்கொண்ட உதவியை அறிந்தவனாகையாலே அப்பேருதவிக்குத் தோற்றுத் திருவடிகளிலே விழுந்தான் என்கிறது. (பூமியைப் பார்த்துக்கொண்டு வணங்கியவனாய்) "ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி" [பெரியதிரு 5-8-1] என்கிறபடியே என்னுடைய தாழ்மை பாராதே தம்முடைய பேருக மேல்விழுவதே! என்று வெட்கம் மேலிட்டவனாய்த் தலைகுனிந்துகொண்டு திருவடிகளிலே விழுந்தபடி. (பக்தர்களான துணைவரோடுகூட ஆகாயததினின்றும் பூமியில் விழுந்தான்) சுக்கிரீவன் "கொல்லப்படட்டும்" [ரா-யு 17-27] என்றபோது தரையில் கால்வைக்க வழியில்லாமல் ஆகாயத்தில் நின்றவன், அச்சுக்கிரீவனே அழைத்தபின்பு உகப்பின் மிகுதியாலே, பெருமாள் திருவடிகள்வரையிலும் செல்லாமல், தனக்கினியரான துணைவரோடுகூட இருந்தவிடத்திலேயே ஆகாசத்திலிருந்து தரையிலே விழுந்தான். "நான்கு அரக்கரோடேகூட கதையைக் கையிலேந்தியவனாய் உயரக்கிளர்பினான்" [ரா-யு 16-16] என்று விபீஷணன் இலங்கையின் தொடர்பை அறுத்துக்கொண்டபோது இவர்களும் தொடர்பை அறுத்துக்கொண்டனர்; "துணைவரோடுகூட இவன் கடுந்தண்டனையால் கொல்லப்படட்டும்" [ரா-யு 17-27]

திலும் ப₄ாகி₃களானுர்கள். ஸ்வீகாரத்திலும் அந்தர்ப்பூத ராஞர்கள். இத்தால் சொல்லிற்றுயிற்று,-ஒருவனைக் கண் ணழிவற்ற வைஷ்ணவனென்று நிர்ணயித்தால், அவனைப் பிரியமாட்டாதே ஸ்நேஹத்தையுடையாரைப் பரீக்ஷிக்கக் கடவதல்ல என்று கருத்து.

யுத்தகாண்டம் 19-வது ஸர்க்கம் 2-வது ச்லோகம்

स तु रामस्य धर्मात्मा निपपात विभीषणः।
पादयोः शरणान्वेषी चतुर्भिः सह राक्षसैः॥

ஸ து ராமஸ்ய த₄ர்மாத்மா நிபபாத விபீ₄ஷண:।
பாத₃யோ: சரணுந்வேஷீ சதுர்ப்பி₄: ஸஹ ராக்ஷஸை:॥

பதவுரை:—ஸ: தர்மாத்மா—அப்படிப்பட்ட அறவழி நெஞ்சினனுன, விபீஷண: து—விபீஷணுழ்வானும், ஶரணுந் வேஷீ-புகலிடத்தைத் தேடினவனுய், ராமஸ்ய-ராமபிரா னுடைய,பாத₃யோ:-திருவடிகளில்,சதுர்ப்பி₄: ராக்ஷஸை: ஸஹ-(துணைவரான) நாலு அரக்கரோடுகூட, நிபபாத-விழுந்தான்.

அவதாரிகை:—பின்பு பதற்றம் தீர்ந்து பெருமா ளுடைய திருவடிகளைப் புகலிடமாக நினைத்து, ஸபரிகரனுய் வந்து விழுந்தான் என்கிறது.

என்று கொல்லநிற்கையிலும் பங்குகொண்டார்கள். ராமபிரான் விபீஷணனை ஏற்றுக்கொள்ளும்போதும் இவர்களுக்காகத் தனியான ஒரு விசாரமில்லாமல் அவனுடைய ஸ்வீகாரத்திலேயே அடங்கினுர்கள். இவ் வநுஷ்டானத்தால், ஒருவனைக் குற்றமற்ற வைஷ்ணவன் என்று முடிவு கட்டிஞல், அவனைப் பிரியமாட்டாத அன்புடையாரை வைஷ்ணவரா? அல்லரா? என்று ஆராயக்கூடாது என்று சொன்னதாயிற்று.

அவதாரிகை:—அடுத்தபடியாகப் பதற்றம் தீர்ந்து ஸ்ரீராமபிரா னுடைய திருவடிகளைப் புகலிடமாக நினைத்துத் துணைவரோடுவந்து விழுந்தான் என்கிறது.

வ்யா:—(ஸது) இப்படி கலங்கின கலக்கம் தீர்ந்த வேறுபாடு. (விபீ$_4$ஷண: த$_4$ர்மாத்மா) எல்லா அவஸ்தை யிலும் ஶரணாகதிதர்மத்தில் நின்றும் நெஞ்சு குலையாதே யிருக்குமவன். அதாகிறது,– "**वध्यतां**" (வத்$_4$யதாம்) என்ற போதோடு, "**शङ्क्यतां**" (ஶங்க்யதாம்) என்றபோதோடு, "**न त्यजेयं**"(ந த்யஜேயம்) என்றபோதோடு, "**आनयैनं**" (ஆநயை நம்) என்றபோதோடு, "**अस्माभिस्तुल्यो भवतु**" (அஸ்மாபி$_4$ஸ் துல்யோ ப$_4$வது) என்றபோதோடு, வாசியற "**राघवं शरणं गतः**" (ராக$_3$வம் ஶரணம் க$_3$த:)என்றுதான் பற்றின பற்றிற் குலையா தொழிகை. (ராமஸ்ய பாத$_3$யோ: ஶரணாங்வேஷீ நிபபாத) (ராமஸ்ய) தன் பக்கத்தில் ஆதராதிஶயம் தோற்றும்படி அபி$_4$ராமமான வடிவையுடையவராயுள்ளவருடைய. (பாத$_3$யோ: ஶரணாங்வேஷீ) ஸ்தநந்த$_4$யப்ரஜை மாதாவி னுடைய ஸ்தநாங்கத்தையே அபாஶ்ரயமாகச் செல்லுமாப் போலே, திருவடிகளிலே தனக்குப் புகலிடத்தை நினைத்த படி. (நிபபாத) சிலர் அள்ளியெடுக்கும்படி விழுந்தான்.

வ்யா:–(அவஸ்ரேவெனில்) சுக்கிரீவன் வார்த்தையைக்கேட்டு நம்மைத் தள்ளிவிடுவாரோ ராமபிரான் என்னும் கலக்கம் தீர்ந்ததாலுண்டான வேறுபாட்டைக் காட்டுகிறது 'து' சப்தம். (தர்மாத்மாவான விபீஷணன்) எல்லா நிலையிலும் சரணாகதியாகிற பரமதர்மத்தில் மனவுறுதி குலையாம லிருந்தவன். ஆத்மசப்தம் மனத்தைச் சொல்லுகிறது. 'தர்மமநா:' என்றபடி. "கொல்லப்படட்டும்"[ரா-யு 17-27]என்றபோதோடு"சங்கிக்கப்படட்டும்" [ரா-யு 17-44] என்றபோதோடு "கைவிடமாட்டேன்" [ரா-யு 18-3] என்ற போதோடு "இவனை அழைத்துவா" [ரா-யு 18-34] என்றபோதோடு "எங்களோடு ஒத்தவனாக ஆகட்டும்"[ரா-யு18-38]என்றபோதோடு வேறுபா டின்றி, "ராகவனை சரணடைந்தேன்" [ரா-யு 17-14] என்று தான் ராமனைப் பற்றினபற்றில்நின்றும்பின்வாங்காமலிருந்தான் என்கிறது. (ராமனுடைய இருதிருவடிகளிலும் புகலைவிரும்பியவனாய் விழுந்தான்) (ராமனுடைய) விபீ ஷணனுன தன்னிடம் அன்புப்பெருக்கம் வெளிப்படும்படி மிகவும் ரமிக்கச் செய்யும்வடிவையுடையவருடைய. (இருதிருவடிகளிலும் புகலைவிரும்பியவ னாய்விழுந்தான்) தாய்ப்பாலுண்ணும் குழந்தை தாயின் முலையையே புகலா கக்கொண்டு செல்வதுபோலே திருவடிகளையே தனக்குப் புகலிடமாக நினைத்தபடி. (நன்றாக விழுந்தான்) 'நி' (நன்றாக) என்னும் உபஸர்க்கம் சிலர் அள்ளியெடுக்கவேண்டும்படி வேரற்றமரம்போலே விழுந்தபடியைக்

(சதுர்ப்பிஸ் ஸஹ ராக்ஷஸை:) "தாளும் தடக்கையும் கூப்பிப்பணியுமவர்" என்னுமாப்போலே. தன்னுடைய விழுக்காட்டிலே அவர்கள் அந்தர்ப்பூதராம்படி விழுந்தான்

யுத்தகாண்டம், 19-வது ஸர்க்கம், 3-வது ச்லோகம்

अब्रवीच्च तदा रामं वाक्यं तत्र विभीषणः।
धर्मयुक्तं च युक्तं च सांप्रतं संप्रहर्षणम्॥

அப்₃ரவீச்ச தத₃ா ராமம் வாக்யம் தத்ர விபீ₄ஷண:।
த₄ர்மயுக்தம் ச யுக்தம் ச ஸாம்ப்ரதம் ஸம்ப்ரஹர்ஷணம்॥

பதவுரை:—விபீ₄ஷண:—விபீஷணாழ்வான். **தத₃ா**—அப்போது, **தத்ர**—அக்கூட்டத்தில், **த₄ர்மயுக்தம் ச**—தர்மங்களோடு கூடினதாயும், **யுக்தம் ச**—தகுந்ததாயும், **ஸாம்ப்ரதம்**-தற்சமயம், **ஸம்ப்ரஹர்ஷணம்** — உகப்பிப்பதாயுமிருக்கிற, **வாக்யம்**—வாக்கியத்தை, **ராமம்**—ஸ்ரீராமபிரானைக்குறித்து, **அப்₃ரவீத் ச**—சொல்லவும் செய்தான்.

வ்யா-(விபீ₄ஷண: அப்₃ரவீச்ச)**"पादयोर्निपपात"**(பாத₃யோர் நிபபாத) என்று காயிகமான ஶரணாக₃தியைப் பண்ணினன்

காட்டுகிறது. (நான்கு அரக்கர்களோடும்கூட) "தாளும் தடக்கையும் கூப்பிப்பணியுமவர்" [திருவாய் 3-7-2] என்று ஒரு சரீரம் பணியும்போது அதன் அவயவங்களான தாளும் தடக்கையும் தானே கூப்பிப்பணிவது போலே விபீஷணன் விழுந்தபோது அவனுடைய கைகால்கள்போலே இவர்களும் விழுந்தாரென்னும்படி விழுந்தான்.

அவதாரிகை:—சரணாகதியானது மனோவாக்காயங்கள் மூன்றாலுமிருந்தால் பூர்ணமாகிறது; முன் ச்லோகத்தில் காயத்தினால் (உடம்பாலே) சரணாகதிசெய்ததைச் சொல்லிற்று. அடுத்தபடியாக வாக்காலும் சரணாகதி செய்தான் என்கிறார் "அப்₃ரவீச்ச" என்றுதொடங்கி மூன்றுச்லோகங்களாலே. "மந: பூர்வோ வாகு₃த்தர:" [தை-ஸம் 7-5-3] [மனம் முதலிலும் வாக்கு அடுத்தபடியாகவும் தொழில்புரிகிறது] என்னும் ரீதியிலே மாநஸ சரணாகதியும் அர்த்தஸித்தமாகிறது.

வ்யா:—(விபீஷணன் சொல்லவும் செய்தான்) "திருவடிகளில் விழுந்தான்" [ரா-யு 19-2] என்று மெய்யாலே சரணமடைந்தான் கீழே;

கில்; அவ்வளவே பெருமாளுக்கும் அமைந்திருக்க, அவ்வளவில் தனக்குப் பர்யாப்தியில்லாமையாலே வாசிகமாகவும் ஶரணம் புகுந்தான். (தத3ா) திருவடிகளிலே விழுந்த ஸமயத்திலே. (தத்ர)பெருமாளும் மஹாராஜரும் முதலிகளும் ஏககண்ட2ராயிருக்கிற கோ3ஷ்டி2யிலே. (ராமம் வாக்யம்) **"सुग्रीवं तांश्च संप्रेक्ष्य"** (ஸுக்3ரீவம் தாம்ஶ்ச ஸம்ப்ரேக்ஷ்ய) என்று தன்னை நிவேதிக்கைக்காக மஹாராஜரையும் முதலிகளையும் குறித்துச் சொன்ன வார்த்தையன்றிக்கே, ஶரண்யரான பெருமாள்தம்மைக் குறித்துச் சொன்ன வார்த்தை. (வாக்யம்) ஸர்வார்த்தத்தைப் பரிபூர்ணமாகச் சொல்லுகை. (த4ர்மயுக்தஞ்ச) ஶரணாகதிக்கு அங்கங்களான த4ர்மங்களோடே கூடியுள்ளதை. (யுக்தஞ்ச) ஶரண்யவிஷயத்தைக் குறித்து ப்ரயோகிக்கிறதாகையாலே யுக்தமாயிருக்கை. (ஸாம்ப்ரதம் ஸம்ப்ரஹர்ஷணம்) **"राघवं शरणं गतः"** (ராக4வம் ஶரணம் க3த:) என்றதுபோலே மஹாராஜருக்கும்

'மித்ரபாவத்தோடு வந்தவனையும்' எனும் ராமபிரானுடைய தன்மையைப் பார்த்தால் அதுவே போதுமானது; ஆனால் விபீஷணனுக்கு அவ்வளவில் திருப்தியில்லையாகையாலே வாயாலேயும் சரணம் புகுந்தான். (தத3ா) திருவடிகளில் விழுந்த ஸமயத்திலேயே. ஆகையாலேயே இரண்டு ப்ரபத்தியாகாது என்று கருத்து. (அங்கு) ராமபிரானும், சுக்கிரீவனும், வானரரும் ஒருமனப்பட்டிருக்கிற கோஷ்டியிலே. (ராமனைக்குறித்து வாக்கியத்தை) புருஷகாரஸமயத்திலே "சுக்கிரீவனையும், வானரர்களையும் பார்த்துச்சொன்னான்" [ரா-யு 17-9] என்று தன்னைத் தெரிவிக்கைக்காக சுக்கிரீவனையும், வானரரையும் பார்த்துச் சொன்னதுபோலல்லாமல், இது உபாயஸமயமாகையாலும், ராமபிரான் நித்யாநபாயினியான பிராட்டியும் துணையாயிருப்பதைப் பொறுக்காத நிரபேக்ஷோபாயபா4வத்தை உடையவராகையாலும் பெருமாள் தம்மையே குறித்துச்சொன்னான் என்கிறது. (வாக்கியத்தை) 'எல்லா அர்த்தத்தையும் பரிபூர்ணமாகச் சொல்லுவது வாக்யம்' என்னும் வாக்யலக்ஷணம் நிறைந்திருந்த சொல்தொடரைச் சொன்னான் என்கிறது. (தர்மங்களோடு கூடியதை) சரணாகதிக்கு அங்கங்களான (அதிகாரிவிசேஷணங்களான) ஆநுகூல்யஸங்கல்பம் முதலான ஆறுதன்மைகளும் நிறையப்பெற்றிருக்கும் வாக்கியம் என்கை. (தகுந்ததை) சரணமடையத்தகுந்த ராமபிரானைக்குறித்துச் சொல்லப்படுவதாகையாலே தகுந்ததாயுமிருக்கும் வாக்கியத்தை என்று கருத்து. (இப்போது ஆநந்திப்பிப்பதாயிருப்பதை) "ராகவரை சரணடைந்தேன்'

பரிகரத்துக்கும் ஶ்ரவணகடுகமாயிருக்கையன்றிக்கே, இப்போது எல்லார்க்கும் ஹ்ருதயங்கமமாயிருக்குமதை.

யுத்தகாண்டம் 19-வது ஸர்க்கம், 4-வது ச்லோகம்

अनुजो रावणस्याहं तेन चास्म्यवमानितः।
भवन्तं सर्वभूतानां शरण्यं शरणं गतः॥

அநுஜோ ராவணஸ்யாஹம் தேந சாஸ்ம்யவமாநித:।
ப₄வந்தம் ஸர்வபூ₄தாநாம் ஶரண்யம் ஶரணம் க₃த:॥

பதவுரை:—அஹம்—நான், ராவணஸ்ய-ராவணனுடைய, அநுஜ:-தம்பியாயும், தேந-அந்த ராவணனாலே, அவமாநித: ச-அவமதிக்கப்பட்டவனாயும், அஸ்மி—ஆகிறேன். ஸர்வபூ₄தாநாம்-எல்லா உயிர்களுக்கும், ஶரண்யம்-புகலிடமாயிருக்கிற, ப₄வந்தம்—தேவரீரை, ஶரணம்—தஞ்சமாக, க₃த:—அடைந்தவனாகிறேன்.

அவதாரிகை:—அவ்வாக்யம் இன்னதென்கிறது மேல்.

வ்யா:-(அஹம் ராவணஸ்யாநுஜ: தேநாவமாநிதோऽஸ்மி ச) இப்பாசுரத்தைச் சொல்லி முன்பே சரணம் புக்கானன்றோ? புநரபி இப்படி ஶரணம் புகுகிறது என்? என்னில்:

[ரா-யு 17-14] என்றபோது சுக்கிரீவனுக்கும் வானரருக்கும் கர்ணகடோரமாயிருந்ததுபோலில்லாமல், இப்போது அனைவர்க்கும் செவிக்கும் நெஞ்சுக்குமினியதாயிருந்தது இவ்வாக்கியம் என்கிறது.

அவதாரிகை:-வாசிகசரணாகதியான அவ்வாக்கியம் இன்னதென்கிறது "அநுஜ:" என்றுதொடங்கும் ச்லோகத்தாலே.

வ்யா:—(நான் ராவணன் தம்பியாய், அவனாலே அவமதிக்கப்பட்டவனாயிருக்கிறேன்) "தஸ்யாஹமநுஜோ ப்₄ராதா" [ரா-யு 17-10] என்று தொடங்கி இதே வார்த்தையை முன்பே சொல்லிச் சரணம்புகுந்திருக்கிறானன்றோ? மறுபடியும் இப்படி சரணம் புகுவானேன்? எனில்:

"**सुग्रीवं तांश्च संप्रेक्ष्य**" (ஸுக்₃ரீவம் தாம்ஶ்ச ஸம்ப்ரேக்ஷ்ய) என்று ஸுக்ரீவரையும் பரிகரத்தையும் குறித்து "நிவேத₃யத" என்கிற ப்ரயோஜனத்துக்காக, "ராக₄வம் ஶரணம் க₃த:" என்று பரோக்ஷரூபேண சொன்னான் அங்கு. இங்கு "ப₄வந்தம் ஶரணம் க₃த:" என்று இவர் தம்மையே குறித்துச் சொல்லுகையாலே புநருக்தியில்லை. (அநுஜ:) என்கிற ஸ்வ தோஷக்யாபநம் ஆகிஞ்சந்யத்துக்கும் உபலக்ஷணம். (ஸர்வ பூ₄தாநாம் ஶரண்யம்) பாபப்ரசுரனாயிருந்துள்ள ராவணன் கிடந்துள்ள குடலிலே கிடந்து அவனிலும் தண்ணியனாகை யாலே "**रावणस्य नृशंसस्य भ्राता**" (ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்₄ராதா) என்று உம்முடைய கோஷ்டிக்கு ஆகாதவளவே யன்றிக்கே, "**त्वां तु धिक्कुलपांसनं**" (த்வாம் துதி₄க் குலபாம்ஸநம்) என்று அவனுக்கும் ஆகாத எனக்கு ஶரணார்ஹரான தேவர்க்கும் ஆகாதார் உண்டோ? (ப₄வந்தம் ஶரணம் க₃த:) ஜ்ஞாநஶக்த்யாதிகளாலும் பூர்ணரான தேவரைப் புகலாகப் பற்றினேன்.

"சுக்கிரீவனையும் வானரரையும் பார்த்து" [ரா-யு 17-9] என்று சுக்கிரீவனை யும் வானரரையும் குறித்து "என்னை அறிவியுங்கள்" [ரா-யு 17-15] என்கிற பயனுக்காக, "ராகவரைச் சரணடைந்தேன்" [ரா-யு 17-14] என்று முன் னிலையல்லாமல் 'ராகவரை' என்று உரைத்தான் அங்கு. இங்கு, (தேவ ரீரைச் சரணடைந்தேன்) என்று இவர் தம்மையே குறித்து முன்னிலைப் படுத்திச் சொல்லுகிறானுகையால் புநருக்தி (கூறியதுகூறல்) என்னும் தோஷமில்லை. (ராவணன் தம்பி) என்று தன் தோஷத்தைச் சொல்லிக் கொள்வது, தன்னிடம் கைம்முதலில்லையென்பதையும் உபலக்ஷணமுறை யிலே காட்டுகிறது. (எல்லா உயிர்களுக்கும் சரணமடையத்தக்கவரை) பாபிஷ்டனான ராவணன் கிடந்த வயிற்றிலே கிடந்து, அவனிலும் தாழ்ந்தவ னாகையாலே, "கொடியவனான ராவணனுடைய தம்பி" [ரா-யு 17-27] என்று உம் குழுவிலே புகத்தகாதவனாயிருப்பதுமாத்திரமல்லாமல், "குலத்தைக் கெடுக்கவந்த உன்னைச் சுடுக" [ரா-யு 16-15] என்று ராவண னுக்கும் ஆகாத எனக்கும் சரணமடையத்தக்க தேவரீருக்கும் ஆகாதவர் உண்டோ? (தேவரீரை சரணமடைந்தேன்) அடியாரை ரக்ஷிக்க உறுப் பான ஜ்ஞாநம், சக்தி முதலான எல்லாகுணங்களும் நிறைந்திருக்கும் தேவரீரை சரணடைந்தேன்.

யுத்தகாண்டம் 19-வது ஸர்க்கம் 5-வது ச்லோகம்

परित्यक्ता मया लङ्का मित्राणि च धनानि च।
भवद्गतं मे राज्यञ्च जीवितञ्च सुखानि वै॥

பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த₄நாநி ச।
ப₄வத்₃க₃தம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுக₂ாநி வை॥

பதவுரை:—மயா—என்னாலே, லங்கா—இலங்கையரசும், பரித்யக்தா—கைவிடப்பட்டது; மித்ராணி ச—நண்பர்களும், த₄நாநிச-செல்வங்களும், பரித்யக்தாநி-கைவிடப்பட்டன; மே-என்னுடைய, ராஜ்யம் ச-அரசும், ஜீவிதம் ச-உயிரும், ஸுக₂ாநி வை-ஸுகங்களும், ப₄வத்₃க₃தம்-தேவரீரிடம் அடங்கியுள்ளன.

அவதாரிகை:-அநந்தரம் ப்ராப்யாந்தரநிரஸநபூர்வகமாக ப்ராப்யம் இன்னதென்கிறது.

வ்யா:-(பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த₄நாநி ச) ராவணஸம்ப₃ந்த₄த்தால் வந்த லங்கையென்ன, தத₃நுப₃ந்தி மித்ரங்களென்ன, தத்₃த்₃வாரா ஸம்ப்ராப்தமான த₄ந மென்ன, மற்றும் ஸோபாதி₄கங்களான ஸம்பந்தங்களை ஸவாஸநமாக விட்டுவந்தவன். இது முமுக்ஷுவுக்கு ஶாஸ்த்ர ஸித்₃த₄மாக த்யாஜ்யமான ப்ராப்யாப₄ாஸங்களுக்கு உப

அவதாரிகை:-ப்ரபத்தியாகிற உபாயத்தைப் பற்றினாலும், மற்ற ப்ரயோஜநங்களாகிற உபேயங்களை வேண்டலாமன்றோ; தான் அப்படிப்பட்டவனல்லன் என்று காட்டுவதற்காக, தனக்கு வேறொரு பயனும் வேண்டியதில்லையென்றும், ராமனே தனக்கு எல்லாப்பயனும் என்றும் காட்டுகிறான்.

வ்யா:—(என்னால் இலங்கையும் நண்பரும் செல்வங்களும் கைவிடப்பட்டன) ராவணனோடு உறவால் தொடர்புண்டான இலங்கை, அதிலேயிருக்கும் நண்பர், அந்த நண்பர்களின் உதவியாலே பெற்ற செல்வம், மற்றும் ஒரு காரணத்தை முன்னிட்டுவரும் செயற்கையுறவுகளையெல்லாம் வாஸனையோடு விட்டு வந்தேன். இப்படி மூன்று ப்ராப்யாந்தரங்களைச் சொன்னது, மற்றும் முமுக்ஷுக்களால் கைவிடத்தக்கனவாக சாஸ்திரங்களிலே சொல்லப்படுமவையாய், மேலெழப்பார்ப்பார்க்கு ப்ராப்யமாயிருப்

லக்ஷணம். (ப₄வத்₃க₃தம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநிவை) "ராஜ்யம்" என்று பரிக்ரஹங்களுக்கெல்லாம் உபலக்ஷணம்; "ஜீவிதம்" என்று த₄ாரகபோஷகபே₄ாக்யங்களுக்கும் உபலக்ஷணம்; "ஸுகாநி" என்று உப₄யத்தாலும் வந்த ஸுகங்களும் தேவர் திருவடிகளே. ஸகலப₄ாக்யங்களும் தேவர் திருவடிகளில் கைங்கர்யஸுகத்திலே அந்தர்பூ₄தம். "माता पिता युवतयः" (மாதா பிதா யுவதய:) "भ्राता भर्ता च बन्धुश्च पिता च मम राघवः" (ப்₄ராதா ப₄ர்த்தா ச ப₃ந்து₄ஶ்ச பிதா ச மம ராக₄வ:) "சேலேய் கண்ணியரும்" என்னக்கடவதிறே. விட்டவை ஓர் உறவாகமாட்டாது. "संबन्धोऽपि न संबन्ध आत्मनः प्राणकाययोः। पुत्रमित्रकलत्रादिसंबन्धः केन हेतुना" (ஸம்ப₃ந்தே₄ாऽபி ந ஸம்ப₃ந்த₄ ஆத்மந: ப்ராணகாயயோ:। புத்ர மித்ர கலாத்ராதி₃ ஸம்ப₃ந்த₄: கேந ஹேதுநா ||) எல்லா உறவும்

பனவான மற்ற எல்லாப் பயன்களையும் உபலக்ஷணமுறையாலே காட்டுகிறது. (என் ராஜ்யமும் உயிரும் இன்பங்களும் தேவரீரிடத்திலிருக்கிறது) "ராஜ்யம்" என்றது மற்றும் இவன் பற்றியிருக்கும் செல்வங்கள் அனைத்துக்கும் உபலக்ஷணம்; "உயிர்" என்று இவனுக்கு த₄ாரகமான ப்ராணனைச் சொன்னது, பருகுநீர் முதலான மற்ற தாரகப்பொருள்களுக்கும், உண்ணுஞ் சோறு முதலான போஷகப்பொருள்களுக்கும், தின்னும் வெற்றிலை முதலான பே₄ாக்₃யப் பொருள்களுக்கும் உபலக்ஷணம்; "இன்பங்கள்" என்றது செல்வங்களாலும், த₄ாரகபோஷக பே₄ாக்₃யங்களாலும் உண்டான இன்பம் எல்லாம் தேவரீர் திருவடிகளே என்று காட்டுகிறது. அதாவது:-உலகில் ஒருவனுக்குள்ள எல்லாப் பாக்கியங்களும் தேவரீர் திருவடிகளில் கைங்கரியவின்பத்திலே அடங்கியுள்ளன என்று கருத்து. "தாய், தந்தை, பெண்டுகள், பிள்ளைகள், செல்வம் ஆகிய எல்லாம் என் வம்சத்திலே வந்தவர்களுக்கு எப்போதும் சடகோபரின் திருவடியிணைகளேயாகும்" [ஸ்தோ-ர5] "தமயனும், ஸ்வாமியும், உறவினரும், தந்தையும் எனக்கு ராகவரே", [ரா-அ58-31] "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் அவரே இனியாவாரே" [திருவாய்5-1-8] என்று சொல்லப்படுகிறதன்றோ. உண்மையைச் சொல்லப்புக்கால் விட்டஉறவுகளெல்லாம் ஓர் உறவே ஆகமாட்டா; பகவானே எல்லா உறவும் ஆவான். "ப்ராணனுக்கும், உடம்புக்கும் உயிரோடுள்ள (நெருங்கிய) உறவே ஓர் உறவாகமாட்டாது; பிள்ளை, நண்பன், மனைவி முதலான (நெருக்கமற்ற)

ஆகவல்லீர் தேவரீர். "पितृमातृसुहृद्भ्रातृदारपुत्रादयोऽपि वा। एकैकफललाभाय सर्वलाभाय केशवः" (பித்ருமாத்ரு ஸுஹ்ருத்$_3$ ப்$_4$ராத்ரு த$_3$ாரபுத்ராத$_3$யோऽபி வா। ஏகைகப$_2$லலாப$_4$ாய ஸர்வ லாப$_4$ாய கேஶவ:॥) என்னக்கடவதிறே.

யுத்தகாண்டம் 19-வது ஸர்க்கம் 6-வது ச்லோகம்

तस्य तद्वचनं श्रुत्वा रामो वचनमब्रवीत्।
वचसा सान्त्वयित्वैनं लोचनाभ्यां पिबन्निव॥

தஸ்ய தத்$_3$வசநம் ச்ருத்வா ராமோ வசநமப்$_3$ரவீத்।
வசஸா ஸாந்த்வயித்வைநம் லோசநாப்$_4$யாம் பிப$_3$ந்நிவ॥

பதவுரை:—ராம:—ஸ்ரீராமபிரான், **தஸ்ய**-அந்த விபீஷணனுடைய, **தத்**-அந்த, **வசநம்**-சொல்லை, **ச்ருத்வா**—கேட்டு, **ஏநம்**-இந்த விபீஷணனை, **வசஸா**—வார்த்தையினாலே, **ஸாந்த்வயித்வா**—ஆறுதல்செய்து, **லோசநாப்$_4$யாம்**-கண்களினாலே, **பிப$_3$ந்நிவ**-பருகுபவர்போலே, **வசநம்**—வார்த்தையை, **அப்$_3$ரவீத்**—உரைத்தார்.

அவதாரிகை:—இவர் தம் ஸ்வரூபாநுரூபமான வார்த்தையைக்கேட்டுத் தமக்கு இவர்பக்கலுண்டான ஆத$_3$ராதிஶயமெல்லாம் கடாக்ஷத்திலே தோற்றும்படி விசேஷ கடாக்ஷம் பண்ணியருளி ஒரு வார்த்தையருளிச் செய்கிறார்.

உறவுகள் எப்படி உறவாகமுடியும்" [ ] என்றும், "தந்தை, தாய், நண்பர், ஸஹோதரர், மனைவி, மக்கள் முதலியோரனைவரும் ஒவ்வொரு பயனைப் பெறும்பொருட்டேற்பட்டவர்; எல்லாப்பயனையும் பெறுவதற்கு ஏற்பட்டவன் கேசவன்" [ ] என்றும் சாஸ்திரங்களிலும்இவ்வர்த்தம் சொல்லப்பட்டதன்றோ.

அவதாரிகை:—விபீஷணனும்வானின் சேஷத்வத்திற்குத் தகுந்த வார்த்தையைக் கேட்டு, தமக்கு இவரிடம் உண்டான அன்புப்பெருக்கெல்லாம் திருக்கண்ணோக்கிலே தோற்றும்படி குளிரப்பார்த்தருளி ஒரு வார்த்தை அருளிச் செய்கிறார் ராமபிரான் என்கிறது.

வ்யா:—(தஸ்ய) தன்னுடைய பரிகரங்களையும் விட்டுப் பெருமாளுடைய திருவடிகளையே ஶரணமாகப் பற்றினவனுடைய. (தத்$_3$வசநம் ஶ்ருத்வா) பெருமாள் திருவடிகளில் கைங்கர்யமே எனக்கு ஸகலபே$_4$ாகங்க$_4$ளும் என்று சொன்ன வார்த்தையைக்கேட்டு. (ஏநம் வசஸா ஸாந்த்வயித்வா) பூர்வவ்ருத்தம் பாராதே நம்மை இங்ஙனே விஷயீகரிப்பதே! என்று ஹ்ருஷ்டராயிருந்துள்ள இவரைக் குறித்து-ஸாபராதன் க்ஷாபணம் பண்ணுமாப்போலே வாயாலே இன்சொல்லைச் சொல்லி. அதாகிறது.-நம்முடைய வைபவத்தைச் சொன்னதே ஹேதுவாக ராவணன், **"कोन्यस्त्वेवंविधं ब्रूयाद्वाक्यमेतन्निशाचर। अस्मिन्मुहूर्ते न भवेत्त्वां तु धिक्कुलपांसनम्"** **(கோந்யஸ்த்வேவம்வித$_4$ம் ப்$_3$ரூயாத்$_3$ வாக்யமேதந் நிஶாசர। அஸ்மிந் முஹூர்த்தே ந ப$_4$வேத் த்வாம் து தி$_4$க் குலபாம்ஸநம்||)** என்று பரிபவிக்கிற தசையிலேவந்து கைக்கொள்ளவேண்டாவோ? குறைவாளர்கள் செய்ததைப் பொறுக்குமித்தனையன்றோ? என்கை. (லோசநாப்$_4$யாம் பிப$_4$ந்நிவ ராமோ வசநமப்$_4$ரவீத்) அந்த இன்சொல்லாலே இவனை நீராக்கிக்

வ்யா:—(அவனுடைய) தன்னுடைய பற்றுக்களையெல்லாம்விட்டு, ராமபிரானுடைய திருவடிகளையே உபாயமாகப் பற்றினவனுடைய. (அந்த வார்த்தையைக் கேட்டு) ராமபிரான் திருவடிகளிலே கைங்கரியமே எனக்கு எல்லா இன்பங்களும் என்று சொன்ன வார்த்தையைக் கேட்டு. (இவனை வார்த்தையால் ஆறுதல் செய்து) நம்முடைய முன் சரிதங்களைப் பாராமல் நம்மை இப்படி சரணமென்றதே காரணமாக ஆட்கொள்வதே! என்று இன்புற்ற வீபீஷணனைக் குறித்து, குற்றம் செய்தவன் மன்னிப்புக் கேட்பதுபோலே வாயாலே இனிய சொல்லைச் சொல்லி. அதாவது-நம்முடைய பெருமையைச் சொன்னதே காரணமாக ராவணன் "அரக்கனே! இத்தகைய வார்த்தையை மற்றொருவன் சொல்லியிருந்தானாகில், இக்கணத்திலேயே இல்லாதவனாகியிருப்பான்; குலத்தைக் கெடுக்கவந்த உன்னைச் "சீ" என்று கூறி விட்டேன்" [ரா-யு 16-15] என்று உம்மை அவமதித்தபோதே வந்து நான் ரக்ஷித்திருக்கவேண்டும். அது செய்யாத நான் பெருங்குற்றம் புரிந்துவிட்டேன்; அக்குற்றத்தைப் பொறுத்தருளவேணும் என்று ராமபிரான் சொன்னார் என்று கருத்து. (கண்களால் பருகுமவரைப்போலே ராமபிரான் வார்த்தை சொன்னார்) அந்த இன்சொல்லாலே விபீஷணனை

கண்ணாலே பருகுவாரைப்போலே விஶேஷகடாக்ஷம் செய்தருளாநின்றுகொண்டு பெருமாள் ஒரு வார்த்தை அருளிச்செய்தருளினார். "என்னில் முன்னம் பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்" என்னக்கடவதிறே.

யுத்தகாண்டம் 19-வது ஸர்க்கம் 7-வது ச்லோகம்

आख्याहि मम तत्त्वेन राक्षसानां बलाबलम् ।

ஆ₂க்யாஹி மம தத்த்வேந ராக்ஷஸாநாம் ப₃லாப₃லம் ।

பதவுரை:—ராக்ஷஸாநாம்—அரக்கர்களுடைய, **ப₃லாப₃லம்**—பலமுடைமையையும், பலமின்மையையும், **மம**—எனக்கு, **த்தத்வேந**—உள்ளபடி, **ஆக்₂யாஹி**—சொல்லும்.

அவதாரிகை:—உம்முடைய விரோதி₄களை அழியச்செய்து லங்காராஜ்யத்திலே உம்மை அபிஷேகம் பண்ணக்கடவோம். உம்முடைய எதிரிகளுடைய பலமிருக்கும்படி சொல்வீர் என்கிறார். யத்₄வா, நம்பக்கல் அநுகூலவ்ருத்தியே உமக்கு ப்ரயோஜநமாகச் சொன்னீரே; காயிகமான வ்ருத்தியைப் பின்னைக் கொள்ளுகிறோம்; வாசிகமாயிருப்பதொரு வ்ருத்தியைப் பண்ணீர் என்கிறார். **"या या चेष्टा तदर्चनं"** (யா

நீர்ப்பண்டமாக உருக்கிக் கண்ணாலே பருகுவதுபோலே விசேஷகடாக்ஷம் செய்து, ராமபிரான் ஒரு வார்த்தை அருளிச்செய்தருளினார். "வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணில் என்று ஆர்வுற்ற என்னையொழிய என்னில் முன்னம் பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்' [திருவாய் 9-6-10] என்று நம்மாழ்வாரும் பரமபுருஷன் தம்மிலும் முற்பட்டுத் தம்மைக் கண்களாலே பருகினமையைக் கூறினாரன்றோ.

அவதாரிகை:—உம்முடைய விரோதிகளை அழியச்செய்து, இலங்கையரசுக்கு உம்மை முடிசூட்டுவோம் பிறகு; முதலில் உம்முடைய எதிரிகளுடைய பலம் எப்படிப்பட்டது என்று உரைப்பீராக என்கிறார் "ஆக்யாஹி" என்றுதொடங்கும் அரைச்லோகத்தாலே. அல்லது, நம்மிடம் கைங்கர்யமே உமக்குப் பயனாகச் சொன்னீரே; உடம்பாலான கைங்கர்யத்தைப் பிறகு கொள்ளுகிறோம். வாயாலாகக்கூடிய ஒரு கைங்கரியத்தை முதலிற் செய்யும் என்கிறார். "நாராயணைக நிஷ்ட₂ஸ்ய யா யா சேஷ்டா

யா சேஷ்டா தத₃ர்ச்சநம்) ஸ்ரீவிபீ₄ஷணாழ்வானுடைய முக மலர்த்தி காண்கைக்காக.

வ்யா:—(ஆக்₂யா ஹி ராக்ஷஸாநாம் ப₃லாப₃லம்) அவர்களிலே அந்யதமனுயிருக்கிற அவனை விஜாதீயருடைய பலம் கேட்பாரைப்போலே கேட்பானென்? என்னில்: "न तु राक्षसचेष्टितः" (ந து ராக்ஷஸசேஷ்டித:) என்னுமளவன்றிக்கே, ராக்ஷஸஜாதீயருமல்லரிவர், இக்ஷ்வாகு வம்ஶ்யர் என்னும் நினைவாலே. "பண்டைக்குலத்தைத் தவிர்ந்து" என்றும், "குலந்தரும்" என்றும் சொல்லலாம்படியிறே பகவத்ஸமாஶ்ரயண வைப₄வமிருப்பது. "विप्राद्द्विषड्गुणयुतात्" (விப்ராத்₃ த்₃விஷட்₃கு₃ணயுதாத்) "न तथा वितथैर्दानैः" (ந ததா₂ விததை₂ர் தா₃நை:) "தமராவார்" (மம தத்த்வேநாக்₂யா ஹி) ராக்ஷஸ

தத₃ர்ச்சநம்" [விஹகேந்த்ரஸம்ஹிதை] [நாராயணனையே பற்றிநிற்பவனுடைய செயல்களத்தனையும் பகவத்கைங்கர்யமாகும்.] என்கிறபடியே இவன் எதுசெய்தாலும் அது பகவத்கைங்கர்யமாகவேயிருக்குமன்றோ. வாடிக்கிடக்கும் விபீஷணனுடைய முகம் மலருவதைக் காண்பதற்காக, அவனுக்கினிய கைங்கர்யத்திலே ஏவுகிறார்.

வ்யா:-(அரக்கர்களுடைய பலாபலங்களைச் சொல்லு) அரக்கர்களில் ஒருவனான விபீஷணனை, இவனைக்காட்டிலும் வேறுபட்டவர்களுடைய பலம் கேட்பதுபோலே கேட்கிறதற்குக் கருத்தென்ன? எனில்: "விபீஷணன் தர்மாத்மாவாய், அரக்கச்செயலற்றிருப்பவன்" [ரா-ஆ 17-24] என்று சூர்ப்பணகை சொன்ன அளவுக்குமாத்திரமல்லாமல், ராமபிரான் இவன் அரக்கர்குலமேயல்லன், இஷ்வாகுவம்சத்திலே நம்மோடு கூடப்பிறந்த மற்றொரு தம்பி என்று நினைத்திருக்கிறார். "நின்னொடும் எழுவரானோம்" என்று ராமன் சொன்னதாகக் கம்பனும் பாடினானன்றோ. குஹனை ஸஹோதரனாக நினைத்ததாக ஆழ்வாரும் உரைத்தாரன்றோ. "பண்டைக் குலத்தைத் தவிர்ந்து" [திருப்பல்லாண்டு] "குலந்தரும்" [பெரியதிரு 1-1-9] என்ற பகவானை அடைவதற்கு முன்னிருந்த தாழ்குலம்மாறி உயர்குலம் வந்தது என்று சொல்லலாம்படியன்றோ பகவத்ஸம்பந்தத்தின் பெருமையிருப்பது. "விப்ராத் த்₃விஷட்₃கு₃ணயுதாத் அரவிந்த₃நாப₄ பாத₃ாரவிந்த₃ விமுகா₂த் ச்வபசம் வரிஷ்ட₂ம்" [பாகவதம்] [பன்னிரண்டு குணங்களையும் உடையவனாய், தாமரையுந்திக்கடவுளின் திருவடித்தாமரையில் பக்தியற்றவனான அந்தணனைக்காட்டிலும் சண்டாளன் மேலானவன்] "(பகவத் பக்தியால் எப்படிப் பெருமைபெறுகிறானோ) அப்படி வீணானதானங்களால் (பெருமைபெற) முடியாது" [ ] "தமராவார் யாவர்க்

பலத்தை அழியச்செய்யக்கடவோமாய், அந்த பலத்தினுடைய அளவறியாத நமக்கு, நிலவராயிருந்துள்ள நீர், நம் முன்பே எதிரிகளுடைய மிடுக்கைச் சொல்லுவதென்னென்றிராதே உள்ளபடி எனக்குச் சொல்லும் என்கிருர்.

யுத்தகாண்டம் 19-வது ஸர்க்கம் 23-வது ச்லோகம்

राक्षसानां वधे साह्यं लङ्कायाश्च प्रधर्षणे।
करिष्यामि यथाप्राणं प्रवेक्ष्यामि च वाहिनीम्॥

ராக்ஷஸாநாம் வதே ஸாஹ்யம் லங்காயாஶ்ச ப்ரதர்ஷணே।
கரிஷ்யாமி யதாப்ராணம் ப்ரவேக்ஷ்யாமி ச வாஹிநீம்।

பதவுரை:—ராக்ஷஸாநாம் வதே—அரக்கர்களை அழிப்பதிலும், லங்காயா: ப்ரதர்ஷணே—இலங்கையை வெல்லுவதிலும், ஸாஹ்யம்—உதவியை, யதாப்ராணம்—உயிருள்ளவரையிலும், கரிஷ்யாமி—செய்வேன்; வாஹிநீம் ப்ரவேக்ஷ்யாமி ச—(அரக்கர்) சேனையிலும் நுழைந்து போரிடக்கடவேன்.

அவதாரிகை:— "अहत्वा रावणं सङ्ख्ये सपुत्रं सहबान्धवम्। अयोध्यां न प्रवेक्ष्यामि त्रिभिस्तैर्भ्रातृभिः शपे॥" (அஹத்வா ராவணம் ஸங்க்யே ஸபுத்ரம் ஸஹபாந்தவம்। அயோத்யாம் ந ப்ரவேக்ஷ்யாமி த்ரிபிஸ் தைர் ப்ராத்ருபி: ஶபே॥) என்று, இவருடைய அபிஷேகபரிபந்தியாக பலத்தை நிர்ணயித்தார் பெருமாள்; இவரும், "ராக்ஷஸாநாம் வதே ஸாஹ்யம் லங்காயாஶ்ச ப்ரதர்ஷணே। கரிஷ்யாமி யதாப்ராணம் ப்ரவேக்ஷ்யாமி ச வாஹிநீம்" என்று தாம் அடிமைசெய்யும்படியைச் சொல்லுகிருர். பெருமாள் அருளிச்செய்தபடியே தாமும் விஜாதீயராய்ப் பேசுகிருர்.

கும் தாமரைமேலாற்கும் அமரர்க்கும் ஆடரவத்தாற்கும் அமரர்கள்" [நான்-திருவ 91] என்றன்றோ பகவத்ஸம்பந்தமுடையாரின் பெருமை சொல்லப்படுகிறது. (எனக்கு உள்ளபடி சொல்லு) அரக்கர் வலியை அழியச்செய்ய நினைத்திருப்பவனும், அந்த பலத்தின் ஏற்றத்தாழ்வுகளை அறியாத எனக்கு அதை அறிந்துள்ள நீர், 'மஹாபலசாலியான ராமபிரான் முன்னே துரும்புபோன்ற எதிரிகளின் பலத்தைச் சொல்லுவதாவது!' என்று ஸங்கோசப்படாமல் உள்ளபடி சொல்லுவீராக என்கிருர்.

வ்யா:—(ஸாஹ்யம்) என்றது, தேவர் அதி$_4$கரித்த கார்யத்தில் என்னுடைய ஸ்வரூபஸித்$_3$த்$_4$யர்த்த$_2$மாக யுத்$_3$த$_4$த்திலே அம்பெடுத்துக் கொடுக்கிறேன் என்கிறார். (யத$_2$ா ப்ராணம்) என்று, "राघवार्थे पराक्रान्ता न प्राणे कुरुते दयाम्" (ராக$_4$வார்த்தே$_2$ பராக்ராந்தா ந ப்ராணே குருதே த$_3$யாம்) என்கிற முதலிகளுடைய நிலையிலேநின்று பேசுகிறார்.

ப$_4$ட்டர் ஸ்ரீபாத$_3$த்திலே அப$_4$யப்ரத$_3$ாநம் கேட்டார் ஒரு ஸ்ரீவைஷ்ணவர், "இப்ரகரணத்தில் செய்ததாயிற்றென்?" என்று கேட்க, "ஸதே$_3$ாஷராயிருப்பார் சரணாக$_3$தராகார்" என்று மஹாராஜர் பக்ஷத்தாலே பூர்வபக்ஷித்து, "தே$_3$ாஷ

அவதாரிகை:—"ராவணனைப் போரில் மக்களோடும் உற்றாரோடும் கொல்லாமல் அயோத்தியினுள் நுழையமாட்டேன்; மூன்று தம்பிகளின் மேலும் ஆணையிடுகிறேன்." [ரா-யு 19-21] என்று விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்கு உறுப்பாகத் தம் பலத்தை அறுதியிட்டார் ராமபிரான். விபீஷணனும், இந்த ச்லோகத்தாலே தம் பலத்தையும், உயிரையும் ராமகைங்கர்யத்துக்காகவே அறுதியிட்டிருப்பதைச் சொல்லுகிறார்.

வ்யா:-(அரக்கர்களுடைய வதத்தில்) ராமபிரான் "ராக்ஷஸர்களுடைய பலாபலங்களைச் சொல்லு" [ரா-யு 19-7] என்று விபீஷணனிலும் அரக்கர்களை வேறுபடுத்திச் சொன்னாற்போலே, தாமும் இங்கு அரக்கர்களைத் தம்மிலும் வேறுபடுத்திச் சொல்லுகிறார். (துணையை) உமக்கு உதவி தேவையில்லையாகிலும் தேவரீர் ஏறிட்டுக்கொண்டிருக்கும் யுத்தகாரியத்தில் என் ஸ்வரூபமான சேஷத்வம் நிறைவுபெறுவதற்காக உமக்கு அம்பு எடுத்துக் கொடுக்கும் காரியத்தையாவது செய்கிறேன் என்கிறார். (உயிருள்ளவரையிலும்) "ராகவனுக்காகப் போரிடுமவர்களாய், தம் உயிரில் கருணை வைக்கவில்லை" [ரா-யு 27-1] என்கிற வானரருடைய நிலையிலே நின்று பேசுகிறார்.

கூரத்தாழ்வான் திருக்குமாரரான பராசரபட்டர் திருவடிகளிலே அபயப்ரதாநம் கேட்டவரான ஒரு ஸ்ரீவைஷ்ணவர், 'இவ்வபயப்ரதானப்ரகரணத்தின் ஸாரார்த்தமென்ன?' என்று கேட்க, "குற்றமுள்ளவர் சரணாகதராகமாட்டார்" என்று சுக்ரீவனைக்கொண்டு பூர்வபக்ஷம்செய்து,

கு₃ணங்கள் அப்ரயோஜகங்கள், சேதநர் நின்றநிலையிலே ஶரணாக₃திக்கு அர்ஹர்'' என்று பெருமாள் திருவுள்ளத்தாலே ஸித்₃த₄ாந்தம்.

அபயப்ரதராஜரான பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
அபயப்ரதாநஸாரம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

* இனி, யுத்தகாண்ட தனிச்லோகம்

யுத்தகாண்டம் 5-வது ஸர்க்கம் 5-வது ச்லோகம்

न मे दुःखं प्रिया दूरे न मे दुःखं हृतेति वा।
एतदेवानुशोचामि वयोऽस्या ह्यतिवर्तते॥

ந மே து₃:க்க₂ம் ப்ரியா தூ₃ரே ந மே து:₃க்கம் ஹ்ருதேதி வா।
ஏததே₃வாநுஶோசாமி வயோऽஸ்யா ஹ்யதிவர்த்ததே॥

பதவுரை:—ப்ரியா—(எனக்கு) இனியையான ஸீதை, தூ₃ரே—தூரத்திலிருக்கிருள் என்று, மே—எனக்கு, து:க்கம்—துன்பம், ந—இல்லை; ஹ்ருதா—(ராவணனால்) அபஹரிக்கப் பட்டாள், இதிவா—என்றுவது, மே—எனக்கு. து:க்கம்—துன்பம், ந—இல்லை; அஸ்யா:—இவளுடைய, வய:—வயது, அதிவர்த்ததே ஹி—கழிகின்றதன்றோ. ஏதத் ஏவ—இதைக்குறித்தே, அநுஶோசாமி—வருந்துகிறேன்.

''குற்றமோ குணமோ சரணாகதி பலிப்பதற்குக் காரணமன்று; அறிவுடையார் அனைவரும் அவரவர் இருந்த நிலையிலே சரணமடையத்தக்கவரே'' என்று ராமபிரான் ஸித்தாந்தம் செய்தார் என்பதே இப்ரகரணத்தின் ஸாரார்த்தம் என்று பட்டர் அருளிச்செய்தார்.

ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமித₃ாஸ விரசிதமான
அப₄யப்ரதாநஸாரத₃ர்ப்பணம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

* அபயப்ரதாநஸாரத்தில் ஆங்காங்கு கொடுக்கப்பட்டவைதவிர மற்ற ச்லோக வ்யாக்யானங்கள் இங்கு தரப்படுகின்றன.

வ்யா:—'மைதிலி நம்மைப் பிரிந்து தூரத்திலே வர்த்தியா நின்றாள்' என்றதுக்கு வெறுக்கிறேனுமல்லேன்; இனி. "வலிய ரக்ஷஸ்ஸாலே பிரிவு பிறந்தது; இனி. எங்ஙனே நாம் ஸாதிக்கும்படி?" என்றதுக்கு வெறுக்கிறேனுமல்லேன்; அதாகிறது.-கடக்கவிருந்தாளாகில், கடலையணைசெய்து நாலு பயணம் உள்ளே எடுத்துவிட்டுத் தீருகிறது. இனி. பிரிவுக்கு ஹேதுபூதனை பையலைக் கிழங்கெடுத்துப் பொகடத் தீருகிறது அக்கார்யம். நான் இதொழிந்த அல்லாதவற்றுக்குவெருவேன்; இதொன்றுக்குமேநான்மோஹிப்பது; அது ஏதென்னில்: (வயோ஽ஸ்யா ஹ்யதிவர்த்ததே) இவை போலேகாணும் என்னம்பால் மீளவிடலாவதொன்றன்றே. அணைக்குக் கிழக்குப்பட்ட நீரை மீட்கப்போகாதிறே.

---

*இனி, யுத்தகாண்ட தனிச்லோக தூர்ப்பணம்

அவதாரிகை:—பிராட்டியைப் பிரிந்த விரஹத்தாலே பெருமாள் பேசும் பாசுரமிது.

வ்யா:—(இனியவளான சீதை தூரத்திலிருக்கிறாள் என்று துன்பம் இல்லை; அபஹரிக்கப்பட்டாள் என்றும் துன்பம் இல்லை) மைதிலியானவள் நம்மைப் பிரிந்து வெகுதூரத்தில் வாழ்கிறாள் என்று துன்புறுகிறேனல்லேன்; பலிஷ்டனான ராக்ஷஸனாலே அபஹரிக்கப்பட்டுப் பிரிவு உண்டாயிற்று; இனி எப்படி நான் அவளைமீட்டு வருவது? என்றும் துன்புறவில்லை. ஏனெனில்: தூரவிருந்தால் கடலிலே அணைகட்டி நாலுகாத தூரம் இலங்கைக்குள்ளே படையெடுத்துவிட்டால் தூரம் தானாகக் குறைகிறது. ராவணனாலே பிரிக்கப்பட்டாள் எனபதும், பிரிவுக்குக் காரணமான அவ்விராவணனைக் கிழங்கோடு களைந்துபோட்டால் தீருகிறது. (இதற்கே நான் வருந்துகிறேன்) இது ஒன்றுக்கே நான் மோஹிப்பது; இதுதவிர மற்ற எதற்கும் வருந்தமாட்டேன். அது எது? எனில்: (இவள் வயஸ்ஸு கழிகின்றதன்றோ) இது ஒன்றுக்குத்தான் நான் வருந்துவது: என் அம்பாலே கழிந்த வயஸ்ஸை மீட்கமுடியாதே. (மேற்கிலிருந்து கிழக்குநோக்கிப் பாயும்) நதியில் வெள்ளம் வந்து அணைக்குக் கிழக்கே போன நீரை மீட்கமுடியாததுபோலே, கழிந்த வயதையும் மீட்கமுடியாதன்றோ.

யுத்தகாண்டம் 21-வது ஸர்க்கம் 22-வது ச்லோகம்

चापमानय सौमित्रे शरांश्चाशीविषोपमान् ।
सागरं शोषयिष्यामि पद्भ्यां यान्तु प्लवङ्गमाः ॥

சாபமாநய ஸௌமித்ரே ஶராம்ஶ்சாஶீவிஷோபமாந் ।
ஸாக₃ரம் ஶோஷயிஷ்யாமி பத்₃ப்₄யாம் யாந்து ப்லவங்க₃மா: ॥

பதவுரை:—ஸௌமித்ரே—*சுமித்திரையின் குமாரனான இலக்குவனே!* சாபம்—*வில்லையும்,* ஆஶீவிஷோபமாந்—*விஷப் பாம்பையொத்த,* ஶராந் ச—*அம்புகளையும்,* ஆநய—*கொண்டு வாரும்;* ஸாகரம்—*கடலை,* ஶோஷயிஷ்யாமி—*உலர்த்தப் போகிறேன்;* ப்லவங்க₃மா:—*வானரர்கள்,* பத்₃ப்₄யாம்—*கால்களினாலே,* யாந்து—*(நடந்து) செல்லட்டும்.*

அவதாரிகை:-*கடலைநோக்கி வரக்கிடந்தபெருமாள்,* §*ஜடப்ரக்ருதியானது வந்து முகங்காட்டாமையாலே* **ஆழியைச் சீறி,* "**मामयं मकरालयः असमर्थं विजानाति**" (மாமயம் மகராலய: அஸமர்த்த₂ம் விஜாநாதி) *என்று மீன்படுகுட்டமான இது நம்மை மதிக்கிறதில்லை, கொடுவா தக்காணை* என்கிறார்.

வ்யா:—(*சாபமாநய*) "*கு₃ணஹீநனான* இவனை *நியமிக்கும்படி கு₃ணவானான வில்லைக் கொடுவாரீர்*" என்கிறார்.

அவதாரிகை:—கடலரசன் வந்து அருள்புரியவேணும் என்று கடலை நோக்கி *தர்ப்பசயனத்திற்கிடந்த* ராமபிரான் §ஜட₃ப்ரக்ருதியான கடல் வந்து முகங்காட்டாமையாலே, "*ஆழியைச் சீறி*" [திருவிருத்தம் 34] என்றாற்போலே கடலைக்கோபித்து, "என்னை இந்த மீன்வாழும் கடல் கையாலாகாதவனாக நினைக்கிறது" [*ரா-யு 21-20*] என்கிறபடியே மீன் வாழும குட்டையான இது நம்மை மதிப்பதில்லை; கொண்டுவா வில்லை என்கிறார் இலக்குவனைப் பார்த்து.

வ்யா:—*1.* (வில்லை எடுத்துவா) குணமற்றவனான இவனை அடக்கும்படி குணம் (*1.* நற்குணம் *2.* நாண்) உடைய வில்லைக் கொண்டுவா என்

---

§ 'ட₃லயோரபே₄த₃:' (ட₃,ல என்னும் எழுத்துக்களுக்குள் பேதமில்லை) என்னும் வழக்கைக்கொண்டு பார்க்கும்போது ஜலப்ரக்ருதியான கடல் என்றும், ஜட(மூட)ப்ரக்ருதியான கடல் என்றும் இரு பொருள்கள் உண்டாகின்றன.

(சாபமாநய) இதின் கட்டைக் குலேக்கும்படி கட்டுடைய வில்லேக் கொண்டுவாரீர் என்கிருர். (சாபமாநய) இதினுடைய இறுமாப்பைப்போக்கும்படி வளேந்த வில்லேக் கொண்டு வாரீர் என்கிருர். (சாபமாநய) இது புல்லேக்கவ்வும்படி வில்லேக் கொண்டுவாரீர்.

என்றவளவிலே இளேயபெருமாள், தாம் படுக்கையான படியாலே படுக்கைப்பற்றைப் படைப்பற்ருக்கவொண்ணுதென்று குசைதாங்கிநிற்க; (ஸௌமித்ரே) தாய்மார் சொல்லிற்றுச் செய்யுமதொழியத் தமயன்மார் சொல்லிற்றுச் செய்யவொண்ணுதோ? (ஸௌமித்ரே) "रामे प्रमादं मा कार्षीः" (ராமே ப்ரமாத₃ம் மா கார்ஷீ:) என்று ஆய்ச்சி சொன்னபடி செய்யவேண்டாவோ? (ஸௌமித்ரே) "एकं दुःखं सुखञ्च नौ" (ஏகம் து₃:க்க₂ம் ஸுக₂ஞ்ச நௌ) என்று மைத்ரியைப் பார்த்தால் நம்மைப் பண்ணின பரிப₄வம் உமக்குமில்லேயோ?

கிருர். 2. (வில்லே எடுத்துவா) இதன் கட்டைக் (வரம்பைக்) குலேக்கும்படி கட்டுடைய (உறுதியுடைய) வில்லேக்கொண்டு வா என்கிருர். 3. (வில்லேக்கொண்டு வா) நமக்கும் வணங்காத இதன் கர்வத்தைப்போக்க இயற்கையில் வளேந்த வில்லேக் கொண்டுவா. 4. (வில்லேக்கொண்டு வா) இக்கடலரசன் புல்லேக் கவ்வும்படி வில்லேக்கொண்டுவா

இராமபிரான் இப்படிச் சொன்னவுடன், ஆதிசேஷனுன லக்ஷ்மணன் தாம் பெருமாளுக்குப் படுக்கையாகையாலே, படுக்கை விரிக்குமிடமான இக்கடலே யுத்தகளமாக்கக்கூடாது என்று, குதிரையின் வேகத்தைக் குறைக்கக் கடிவாளத்தை இழுத்துப் பிடிப்பாரைப்போலே சிறிது காலதாமதம் செய்து நிற்கக் கூறுகிருர்,- 1. (சுமித்திரையின் பிள்ளேயே) சுமித்திரை முதலான தாய்மார் சொன்னதைத்தான் செய்வாயோ? தமயன்மார் சொன்னதைச் செய்யாயோ? 2. (சுமித்திரையின் பிள்ளேயே) "ராமன் விஷயத்தில் கவனக்குறைவாயிராதே" [ரா-அ 40-15] என்று தாயான சுமித்திரை சொன்னபடி செய்யவேண்டாமோ? 3. (நல்ல நட்பையுடையவனே) "நமக்கு இன்பதுன்பங்கள் ஒன்றே" [ரா-கி 5-18] என்ருப்போலே என்னிடம் உம்முடைய நட்பைப் பார்த்தால் என்னேப் பண்ணின அவமானம்உமக்கும் இல்லேயோ?

என்ற/வாறே பயப்பட்டு வில்லைக் கொண்டுவந்து கொடுத்தார். (ஶராம்ஶ்ச) இக்குறையும் தாரீர் என்கிறார். (ஶராம்ஶ்ச) அம்புக்கு அம்பையிட்டு அழிக்கவேணும். **"कण्टकेनेव कण्टकं"** (கண்டகேநேவ கண்டகம்) இறே. **"एकेन महेषुणा"** (ஏகேந மஹேஷுணா) என்று ஓரம்பே அமைந்திருக்கப் பல அம்பு வேண்டுவானென்? என்னில்: **"समित्रज्ञातिबान्धवं"** (ஸமித்ரஜ்ஞாதிபா₃ந்த₄வம்) என்று இக்கடலோடு துவக்கான ஏழுகடலையும் அழிக்கையில் உண்டான திருவுள்ளத்தாலே. **"बिभेद च पुनः सालान् सप्तैकेन महेषुणा। गिरिं रसातलञ्चैव"** (பி₃பே₄த₃ ச புந: ஸாலாந் ஸப்தைகேந மஹேஷுணா। கி₃ரீந் ரஸாதலஞ்சைவ) என்று மராமரமேழும் மலையேழும் கீழ்லேழுலகுமாக மூவேழிருபத்தொன்றையும் ஓரம்பாலே துளையுருவப்பண்ணினவருக்கு, ஓரேழுக்குப் பலவம்பு வேணுமோ? என்ன: ஆனை தன் ப₃லமறியாதாற்

இவ்வாறு உரைத்தவுடன், அவ்வார்த்தை மனத்தில்பட்டு (நாமும் உதவாவிடில் என்ன நேரிடுமோ என்று பயப்பட்டு) லக்ஷ்மணன் வில்லைக் கொண்டுவந்து கொடுத்தார். 1. (சரங்களையும்) அம்பில்லா வில்லால் என்ன பயன்? அம்பைக் கொடுப்பதன்மூலம் இக்குறையையும் போக்குவாயாக என்கிறார். 2. (அம்புகளையும்) அம்புக்கு (ஜலத்துக்கு) அம்பைக்கொண்டே (பாணங்களைக்கொண்டே) அழிக்கவேண்டும்; "முள்ளை முள்ளைக் கொண்டே எடுக்கவேணும்" என்பதுபோலே. "ஒரு பேரம்பாலே ஏழு மராமரங்களைத் துளைத்தான்" [ரா-பா 1-66] என்று ஓரம்பே போதுமாயிருக்கப் பல அம்புகளை இங்கு கொண்டுவரச் சொல்லுவதேன்? எனில்: "நண்பரோடும் தாயாதிகளோடும் உறவினரோடும் கொல்லுவேன்" [ரா-பா 15-27] என்கிற கணக்கிலே இக்கடலோடு இதன் உறவான கடல்களையும் சேர்த்து ஏழுகடல்களையும் அழிக்கைக்குத்திருவுள்ளம் பற்றி ஏழு பாணங்களைக் கொண்டுவரச்சொல்லுகிறார். "ஒரு பேரம்பாலே ஏழு மராமரங்களையும் ஏழு குல மலைகளையும், ரஸாதலமுள்ளிட்ட ஏழு உலகங்களையும் துளைத்தான்" [ரா-பா 1-66] என்கிறபடியே மராமரமேழும், குலமலையேழும், கீழுலகு ஏழையும் ஆக மூவேழு இருபத்தொரு தத்துவங்களை ஓரம்பாலே துளைத்தவனுக்கு ஓரேழுகடலுக்குப் பல அம்புகள் வேணுமோ? என்ன; ஆனைக்குத் தன் பலம் தெரியாததுபோலே

/ (பா) வார்த்தை நெஞ்சில்பட்டு.

போலே கோபத்தின் மிகுதியாலே தம்முடைய மிடுக்கை மறந்து அருளிச்செய்தாராகவுமாம். "ஶோஷயிஷ்யாமி" என்று சுவறப்பண்ணப் போகிறவருக்கு அம்பென்? என்னில்: (ஶராந்) "छिन्न भिन्न शरैर्दग्ध" (சி₂ந்நம் பி₄ந்நம் ஶரைர் த₃க்₃த₄ம்) என்றும், "दीप्तपावकसङ्काशैः शरैः" (தீ₃ப்த பாவகஸங்காஶை: ஶரை:) என்றும் ஶரங்கள்தனக்கே த₃ாஹகஶக்தியுண்டாகையாலே அருளிச்செய்கிறார்.

என்றவாறே போலியாயிருப்பன சிலவம்பைக் கொடுத்தார். (ஆஶீவிஷோபமாந்) இவையன்றே; உம்மைப்போலே உக்தாநுஷ்டானம் பண்ணும்படியானவற்றைக் கொடுவாரீர். (ஆஶீவிஷோபமாந்) ஆஶீவிஷமாகிறது த்₃ருஷ்டிவிஷம். வாயிட்டுக் கடிக்கவேண்டா; கண்ணிட்டுப் பார்த்தபோதே படும்படியாயிருக்குமது. அப்படியே இங்கும் வாய்படவேண்டா; உடலில் கண்பட்டபோதே அழியும்படியாயிருக்கை.

கோபத்தின் மிகுதியாலே தன் பலத்தை மறந்து அருளிச்செய்தார் என்றும் கொள்ளலாம். "கடலை வற்றச்செய்கிறேன்" என்று அடுத்தபடியாகச் சொல்லுகிறபடியே கடலை வற்றடிக்க அம்பு எதற்கு? எனில்: 3. (அம்புகளையும்) "அம்புகளால் தாறுமாறுக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் ராவணஸேனை அழிந்தது" [ரா-யு 94-22] என்றும், "கொழுந்துவிட்டெரியும் நெருப்புப்போன்ற அம்புகளாலே" [ரா-யு 103-4] என்றும் அம்புகளுக்கே எரிக்கும் சக்தியுண்டாகையாலே அருளிச்செய்கிறார்.

இப்படி அருளியவுடன், வலிமையற்ற சில அம்புகளைக் கொடுத்தார் இளையபெருமாள்; 1. (விஷப்பாம்பையொத்தவைகளை) இவையல்ல; ஆதிசேஷனான உம்மைப்போலே 'எதிரிகளை அழி' என்று நான் சொன்னால், விஷாக்னியுமிழ்ந்து கொல்லவல்ல அம்புகளைக் கொண்டுவாரீர். 2. (ஆசிவிஷம்போன்றவைகளை) ஆசிவிஷமாவது-த்₃ருஷ்டிவிஷம்; வாயிட்டுக் கடிக்கவும் வேண்டாமல், கண்ணால் பார்த்தாலே பார்க்கப்பட்டவர் மடியும்படியிருக்கும் பாம்பு. அப்படியே இங்கும் அம்பின் நுனி படவேண்டாமல், உடலில் அம்பின் நோக்கு விழுந்தாலே அழியும்படியாயிருக்கும் அம்புகளைக் கொண்டுவா என்று கருத்து.

என்தான் திருவுள்ளத்தில் ஓடுகிறது? என்ன: (ஸாக₃ரம் ஶோஷயிஷ்யாமி) ஊணடங்க வீணடங்குமே. இதின் ஜீவநத்தைச் சுவறப்பிடிக்கக்காணும் பார்க்கிறது. (ஸாக₃ரம் ஶோஷயிஷ்யாமி) நாம் உண்டாக்கின வருத்தமுண்டோ இத்தை அழிக்கும்போது? (ஸாக₃ரம் ஶோஷயிஷ்யாமி) **"एकस्त्वमसि लोकस्य स्रष्टा संहारकस्तथा"** (ஏகஸ்த்வமஸி லோகஸ்ய ஸ்ரஷ்டா ஸம்ஹாரகஸ் தத₂ா) என்கிறபடியே ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களிரண்டும் ஒருவன் பணியிறே; (ஸாக₃ரம் ஶோஷயிஷ்யாமி) **"अप एव ससर्जादौ"** (அப ஏவ ஸஸர்ஜாதெ₃ள) என்று ஸ்ருஷ்டிக்கு முற்பட்டாற்போலே ஸம்ஹாரத்திலும் ராவணனுக்கு முற்பாடனுக்கு கிறோம். (ஸாக₃ரமித்யாதி) க்ருதக்₄நமான இத்தைத் துடிக்கத் துடிக்க வெறுந்தரையாக்குகிறோம். (ஸாக₃ரமித்யாதி) **"अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च"** (அச்சே₂த்₃யோऽயமதா₃ஹ்யோऽயமக்லேத்₃யோऽஶோஷ்ய ஏவ ச) என்கிற ஆத்மவஸ்துவன்றே. அசேதனமான நீராகையாலே உலர்த்திவிடுகிறோம்.

என்ன செய்வதற்காக அம்புகளைக் கொண்டுவரச் சொல்லுகிறது? எனில்: 1 (கடலை வற்றச்செய்கிறேன்) ஊணடங்க வீணடங்குமன்றோ. இதினுடைய ஜீவனத்தை (1. ஜலத்தை. 2. உயிர்வாழ்வை) வற்றச்செய்யவன்றோ நினைக்கிறேன் நான். 2. (கடலை வற்றச்செய்கிறேன்) குயவனுக்குச் சட்டிபானைகள் செய்யும்போது பட்ட சிரமம் அதை உடைக்கும்போது வேண்டியதில்லையன்றோ. அப்படியே நாரமாகிற இதை ஸ்ருஷ்டிக்க நாராயணனாகிற நான் எடுத்துக்கொண்ட சிரமமும் வேண்டியதில்லை இதை அழிக்க. 3. (கடலை வற்றச்செய்கிறேன்) "உலகை ஸ்ருஷ்டிப்பவனும், அழிப்பவனும் நீ ஒருவனே" [ஜிதந்தே 1-3] என்கிறபடியே ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களிரண்டும் பரம்பொருளாகிற இவன் ஒருவனே செய்யும் காரியமன்றோ. 4. (கடலை வற்றச்செய்கிறேன்) "ஆதியில் நாராயணன் ஜலத்தையே ஸ்ருஷ்டித்தான்" [மநு 1-8] என்று ஸ்ருஷ்டியில் ராவணனுக்கு முற்பட்டாற்போலே ஸம்ஹாரத்திலும் ராவணனுக்கு முற்படும்படி செய்கிறேன். 5. (கடலை வற்றச் செய்கிறேன்) செய்ந்நன்றி கொன்ற இதைத் துடிக்கத்துடிக்க வெறுந்தரையாக்குகிறோம். 6. (கடலை வற்றச்செய்கிறேன்) "இவ்வாத்மா வெட்டவொண்ணாதது; எரிக்கத்தகாதது; நனைக்கத்தகாதது; உலர்த்தத்தகாதது" [கீதை 2-24] என்கிற ஆத்மவஸ்துவல்லவே இக்கடல்; அசேதனமாகையாலே உலர்த்திவிடுகிறேன்.

(ஸாக₃ரமித்யாதி) இது நம்மோடு ஜ்ஞாதித்வம் கொண்டாடுமாகில் நாம் இத்தோடே ஜ்ஞாதித்வம் கொண்டாடுகிறோம். "ज्ञातेः कार्यं महोदधिः" (ஜ்ஞாதே: கார்யம் மஹோத₃தி₄:) என்னக்கடவதிறே. (ஸாக₃ரமித்யாதி) அன்று அறுபதினாயிரம்பேர் கல்லினத்தை நாம் ஒருவருமே அல்லவாக்குகிறோம். (ஸாக₃ரமித்யாதி₃) "विषवृक्षोऽपि संवर्ध्य स्वयं छेत्तुमसांप्रतम्" (விஷவ்ருக்ஷோऽபி ஸம்வர்த்₄ய ஸ்வயம் சே₂த்துமஸாம்ப்ரதம்) என்று நாம் ஆக்கினதை அழிக்கலாகாது. இதின் நீர்க்களிப்பு அறும்படி உலர்த்தி விடுகிறோம். (சோஷயிஷ்யாமி)இத்தை ஆக்கும் போதன்றோ நாம் வேண்டுவது? அழிக்குமிடத்தில் ருத்ராதிகளையிட்டாற் போலே அம்பையிட்டு அழிக்கிறோம்.

இத்தால் பெறப்புகுகிற ப்ரயோஜநமென்? என்னில்: (பத்₃ப்₄யாம் யாந்து ப்லவங்க₃மா:) இவர்கள் மரக்கொம்பு

---

7. (ஸாகரத்தை வற்றச்செய்கிறேன்) என்னுடைய ஜ்ஞாதிகளான ஸகரர் கல்லினகுழியானையாலே 'ஸாகரம்' (ஸகரரால் உண்டானது) என்று பெயர் பெற்ற இக்கடல் அக்காரணத்தாலே என்னோடு தாயாதிக் காய்ச்சல் கொண்டு என்னை அழிக்கநினைத்ததாகில், நானும் தாயாதிக் காய்ச்சல் கொண்டு இதை அழிக்கிறேன். "கா₃நித: ஸக₃ரேணாயமப்ரமேயோ மஹோத₃தி₄:, கர்த்துமர்ஹதி ராமஸ்ய ஜ்ஞாதே: கார்யம் மஹோத₃தி₄:" [ரா-யு 19-32] [அளக்கமுடியாத இக்கடல் ஸகரரால் வெட்டப்பட்டது; தாயாதியான ராமனின் காரியத்தை இக்கடல் செய்யவுரியது.] என்று விபீஷணனாலும் ஸமுத்ரராஜனும் ராமபிரானும் தாயாதிகள் என்று சொல்லப்பட்டதன்றோ. 8. (ஸாகரத்தை வற்றச் செய்கிறேன்) அன்று அறுபதினாயிரம் ஸகரர் வெட்டினதை இன்று நான் ஒருவனே இல்லையாக்குகிறேன். 9. (கடலை வற்றச்செய்கிறேன்) "விஷமரமாயினும் தான் வளர்த்ததைத் தானே வெட்டலாகாது" [குமாரஸம் 2-55] என்று நாம் உண்டாக்கினதை நாமே அழிக்கக்கூடாது; ஆகையால், இதை அழித்துவிடாமல், இதன் பெருமையாகிற நீரை வற்றச்செய்து விடுகிறேன். 10. (வற்றச்செய்விக்கிறேன்) இதை ஸ்ருஷ்டிக்கும்போது தான் நான்வேண்டும்; அழிக்கும்போது உருத்திரன் முதலானோரைக் கருவியாகக் கொண்டு அழிப்பதுபோலே அம்பைக் கருவியாகக்கொண்டு அழிக்கிறேன்.

இப்படி அழிப்பதால் உமக்கு என்ன பயன்? எனில்: 1. (தாவிச் செல்லும் வானரர் காலால் செல்லட்டும்) வானரர்கள் தரையில் மரக்

பாயாமே மணற்குன்றிலே பாய்ந்து போவதாக. (பத்$_3$ப்$_4$ யாம் யாந்து ப்லவங்க$_3$மா:) இவர்கள் கை நீச்சு நீஞ்சாமே காலிட்டு நடப்பனவாக. (பத்$_3$ப்யாம் யாந்து ப்லவங்க$_3$மா:) இவர்கள் அக்கரையோடு இக்கரையோடு தாவாமே காலிட்டு நடப்பனவாக. (பத்$_3$ப்$_4$யாம்யாந்து ப்லவங்கமா:) இவர்கள் நீருக்குமேல் அழுந்தாமே மண்ணிலே நடந்து போவதாக. (ஸாக$_3$ரம் ஶோஷயிஷ்யாமி பத்$_3$ப்$_4$யாம் யாந்து ப்லவங்க$_3$மா:) பண்ணின பாபத்துக்கு இதின் பெருமையெல்லாம் தரைமட்டமாக்கிக் குரங்கின் காலின்கீழே துகையுண்ணும்படி பண்ணுகிறோம்.

யுத்தகாண்டம் 114-வது ஸர்க்கம்
14, 15, 16, 17-வது ச்லோகங்கள்.

व्यक्तमेष महायोगी परमात्मा सनातनः।
अनादिमध्यनिधनो महतः परमो महान्॥ १.
तमसः परमो धाता शङ्खचक्रगदाधरः।
श्रीवत्सवक्षा नित्यश्रीरजेयः शाश्वतो ध्रुवः॥ २.
मानुषं वपुरास्थाय विष्णुः सत्यपराक्रमः।
सर्वैः परिवृतो देवैर्वानरत्वमुपागतैः॥ ३.
सर्वलोकेश्वरः साक्षाल्लोकानां हितकाम्यया।
सराक्षसपरीवारं हतवांस्त्वां महाद्युतिः॥ ४.

கொம்புகளில் பாய்ந்து செல்லுவதற்கு பதிலாகக் கடலில் மணற்குன்று களிலே தாவிச்செல்லட்டும். 2. (வானரர் காலால் செல்லட்டும்) இவர்கள் கைநீச்சு நீஞ்சிக் கஷ்டப்படாமல் காலிட்டு நடந்து சுலபமாகக் கடலைக் கடக்கட்டும். 3. (தாவிச்செல்லும் குரங்குகள் காலால் செல்லட்டும்) இவர்கள் இக்கரையிலிருந்து அக்கரைக்குத் தாவி அவதியுறாமல் காலாற நடந்து செல்லட்டும். 4. (வானரர் காலால் நடந்து செல்லட்டும்) தாவமுடியாமல் நீரில் அழுந்தாமல் மண்ணிலே நடந்துசெல்லட்டும். 5. (ஸாகரத்தை வற்றச் செய்கிறேன்—குரங்குகள் காலால் செல்லட்டும்) இக்கடல் செய்த பாபத்துக்கு இதன் பெருமையையெல்லாம் தரைமட்டமாக்கிக் குரங்கின் காலின்கீழ் துகையுண்ணும்படி செய்கிறோம்.

1. வ்யக்தமேஷ மஹாயோகீ₃ பரமாத்மா ஸநாதந: ।
அநாதி₃மத்₄யநித₄நோ மஹத: பரமோ மஹாந் ॥

2. தமஸ: பரமோ தா₄தா ஶங்க₂சக்ரக₃தா₃த₄ர: ।
ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீரஜேய: ஶாஶ்வதோ த்₄ருவ: ॥

3. மாநுஷம் வபுராஸ்தா₂ய விஷ்ணு: ஸத்யபராக்ரம: ।
ஸர்வை: பரிவ்ருதோ தே₃வைர் வாநரத்வமுபாக₃தை: ॥

4. ஸர்வலோகேஶ்வர: ஸாக்ஷால் லோகாநாம்
ஹிதகாம்யயா ।
ஸராக்ஷஸபரீவாரம் ஹதவாம்ஸ்த்வாம் மஹாத்₃யுதி: ॥

பதவுரை:—ஏஷ: — *இந்த ஸ்ரீராமபிரான்*, மஹாயோகீ— *பெரிய யோகியாய்*, பரமாத்மா—*பரம்பொருளாய்*, ஸநாதந:— *எல்லாக்காலத்திலுமிருப்பவராய்*, அநாதி₃மத்₄யநித₄ந:— *முதல் நடுவு முடிவுகளில்லாதவராய்*, மஹத: பரம:—*மஹத்தைக் காட்டிலும் பெரியவராய்*, மஹாந்—*உயர்ந்தவராய்*, தமஸ:— *மூலப்ரக்ருதியைக்காட்டிலும்*, பரம: — *மேலானவராய்*, தா₄தா—*ஆதாரராய்*, ஶங்க₂சக்ரக₃தா₃த₄ர:—*சங்கு சக்கரம் கதை ஏந்தியவராய்*, ஸ்ரீவத்ஸவக்ஷா:—*ஸ்ரீவத்ஸமென்னும் மறுவை மார்பிலுடையவராய்*, நித்ய ஸ்ரீ:—*இணைபிரியாத ஸ்ரீமஹாலக்ஷ்மியை உடையவராய்*, அஜேய:—*ஜயிக்க முடியாதவராய்*, ஶாஶ்வத:—*விகாரமற்றவராய்*, த்₄ருவ:—*நிலைநிற்பவராயுள்ளவர்*; வ்யக்தம்—*இது தெளிவு*. மஹாத்₃யுதி:— *பேரொளியை உடையவராய்*, ஸர்வலோகேஶ்வர:—*எல்லாவுலகிற்கும் ஸ்வாமியாய்*, விஷ்ணு:—*ஸர்வவ்யாபியான நாராயணன்*, ஸத்யபராக்ரம:—*உண்மையான பராக்ரமத்தையுடையவராய்*, வாநரத்வம் உபாக₃தை:—*வாநரநிலையை அடைந்திருக்கும்*, ஸர்வை: தே₃வை:—*எல்லா தேவர்களாலும்*, பரிவ்ருத:—*சூழப்பட்டவராய்*, மாநுஷம் வபு:—*மனிதவுருவை*, ஆஸ்தா₂ய—*அடைந்து*, ஸாக்ஷாத்—*நேரே*, லோகாநாம்—*உலகங்களுக்கு*, ஹிதகாம்யயா—*நன்மை செய்யவிரும்பி*, ஸராக்ஷஸ பரீவாரம்—*ராக்ஷஸபரிஜனங்களோடுகூடின*, த்வாம்—*உன்னை*, ஹதவாந்—*கொன்றார்*.

அவதாரிகை:-வேதாந்தங்களிலே, "न किरिन्द्र त्वदुत्तरो न ज्यायो अस्ति वृत्रहन्" (ந கிரிந்த்$_3$ர த்வது$_3$த்தரோ ந ஜ்யாயோ அஸ்தி வ்ருத்ர ஹந்) என்றும், "मामुपास्व" (மாமுபாஸ்வ) என்றும், "विश्वाधिको रुद्रो महर्षिः" (விச்வாதி$_4$கோ ருத்$_3$ரோ மஹர்ஷி:) "शिव एको ध्येयः शिवङ्करः" (ஶிவ ஏகோ த்$_4$யேய: ஶிவங்கர:) என்றும், "प्रजापतिरकामयत" (ப்ரஜாபதிரகாமயத) என்றும், "धाता यथापूर्वमकल्पयत्" (தா$_4$தா யதா$_2$பூர்வமகல்பயத்) என்றும், "प्रजापतेः सभां वेश्म प्रपद्ये" (ப்ரஜாபதே: ஸபா$_4$ம் வேஶ்ம ப்ரபத்$_3$யே) என்றும் ஏவமாதிவாக்யங்களாலே ஸமாக்யாப்ரமாணத்தையிட்டு இந்த்$_3$ரருத்$_3$ரப்$_3$ரஹ்மாதிகள் காரணங்களாகவும் மோக்ஷப்ரதராகவும் ஸர்வாதிகராகவும் ஶங்கித்து, "एको ह वै नारायण आसीन्न ब्रह्मा नेशानः" (ஏகோ ஹவை நாராயண ஆஸீந்ந ப்$_3$ரஹ்மா நேஶாந:) என்றும், "अथ पुनरेव नारायणः सोऽन्यं कामं कामयत" (அத$_2$ புநரேவ நாராயண: ஸோऽந்யம் காமம் காமயத) "ब्रह्मा चतुर्मुखोऽजायत" (ப்$_3$ரஹ்மா சதுர்முகோ$_2$ऽஜாயத) "त्र्यक्षः शूलपाणिः पुरुषोऽजायत" (த்ர்யக்ஷ: ஶூலபாணி: புருஷோऽஜாயத), "नारायणद्ब्रह्मा जायते ... रुद्रो जायते...इन्द्रो जायते" (நாராயணாத்

அவதாரிகை:-வேதாந்தங்களிலே, "விருத்திரனைக்கொன்ற இந்திரனே! உன்னைக்காட்டிலும் மேலானவனுமில்லை; பெரியவனுமில்லை" [ருக்வேதம்] "(இந்திரனாகிய) என்னை உபாஸிப்பாயாக" [கௌஷீ.தகி 3-1] என்று இந்திரனையும், "உலகிற் பெரியவனும், பேரறிவாளனுமான உருத்திரன்" [ச்வேதாச்வதரம் 3-4] "மங்களத்தைச் செய்யும் சிவன் ஒருவனே தியானிக்கத்தக்கவன்" [அதர்வசிகை 2-20] என்று உருத்திரனையும், "பிரஜாபதியானவர் ஸங்கற்பித்தார்" [தை-ஸம் 3-1-1] "தா$_4$தா ஸூர்யசந்திரர்களை முன்போலவே ஸ்ருஷ்டித்தார்" [தை-நா 1-38] "பிரஜாபதியின் சபையிருக்குமிடத்தை அடைகிறேன்" [சாந் 8-14-1] என்று பிரமனையும், மற்றும் இதுபோன்ற பல வாக்கியங்களிலும், உலகிற்குக் காரணமாகவும் மோக்ஷமளிப்பவராகவும், அனைவரிலும் பெரியவராகவும் சொல்லுவதாக ஸமாக்யை (இந்திரன், உருத்திரன், சிவன், ப்ரஜாபதி, தா$_4$தா முதலான பெயர்) என்னும் ப்ரமாணத்தைக்கொண்டு பார்க்கும்போது ஸந்தேஹிக்க இடமுண்டாகிறது; "நாராயணன் ஒருவனேயிருந்தான்; பிரமனுமில்லை; ஈசானனுமில்லை" [மஹோபனிஷத்] "பிறகு, மறுபடியும் நாராயணன் ஸங்கல்பித்தான்; நான்முகனான பிரமன் உண்டானான்; சூலமேந்திய முக்கண்ணனான தேவன் உண்டானான்" [மஹோபனிஷத்] "நாராயணனிடமிருந்து பிரமன் உண்டாகிறான்; உருத்திரன் உண்டாகிறான்; இந்திரன்

ப்$_3$ரஹ்மா ஜாயதே... ருத்$_3$ரோ ஜாயதே... இந்த்$_3$ரோ ஜாயதே) **"तत्त्वं नारायणः परः"** (தத்வம் நாராயண: பர:) **"नारायणपरं ब्रह्म"** (நாராயண பரம் ப்$_3$ரஹ்ம), **"ब्रह्मविदाप्नोति परं"** (ப்$_3$ரஹ்மவித$_3$ாப்நோதி பரம்), **"ब्रह्म वेद ब्रह्मैव भवति"** (ப்$_3$ரஹ்ம வேத$_3$ ப்$_3$ரஹ்மைவ ப$_4$வதி) **"सोऽन्वेष्टव्यः स विजिज्ञासितव्यः"** (ஸோந்வேஷ்டவ்ய: ஸ விஜிஜ்ஞாஸிதவ்ய:) **"परात्परं पुरुषमुपैति दिव्यं"** (பராத்பரம் புருஷமுபைதி தி$_3$வ்யம்) என்றும் ஏவமாத்யநந்யபர நாராயணாநுவாக மஹோபநிஷத் ஸுபா$_3$லோபநிஷத் ப்ரப்$_4$ருதிச்ருதி

உண்டாகிறான்" [நாராயணோபனிஷத்] "நாராயணனே பரப்ரஹ்மம் நாராயணனே பரதத்வம்" [தை-நா-11] "ப்ரஹ்மத்தை அறிந்தவனே மேலான பலனை அடைகிறான்" [தை-ஆ 7-1] "ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான்" [முண்ட 3-2-9] "பரமாத்மாவாகிற அவனே தேடத்தக்கவன்; நன்கு அறியத்தக்கவன்" [சாந் 8-7-1] "மேலானவற்றிலும் மேலான திவ்யபுருஷனை அடைகிறான்" [முண்ட 3-2-8] என்பது முதலான வேதாந்தவாக்கியங்களாலே இந்த ஸந்தேஹத்தைப் போக்கி, நாராயணன் ஒருவனே எல்லா உலகிற்கும் காரணனாகவும், பரம்பொருளாகவும், உபாஸிக்கத்தக்கவனாகவும், மோக்ஷமளிப்பவனாகவுமிருக்கிறான் என்று அறிவாளிகள் நிச்சயிக்கிறார்கள். இப்படி நிச்சயிக்கும்போது பற்பல பூர்வோத்தரமீமாம்ஸாநியாயங்களையும், தர்க்கங்களையும் அவர்கள் உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. அவையாவன:-(1) "பூர்வபத$_3$ாத் ஸம்ஜ்ஞாயாமக$_3$:" [பாணிநிஸூ 8-4-3] [முன்பதத்திலுள்ள 'ர' 'ஷ' என்னும் எழுத்துக்களை அடுத்துள்ளதும், 'க$_3$' என்னும் எழுத்தால் இடையிடப்படாததுமான (பின்பதத்திலுள்ள) நகாரம் ஸம்ஜ்ஞைப்பொருளிலே ணகாரமாக மாறும்] என்கிற பாணிநிஸூத்ரத்தின்படி, 'நார, அயந' என்னும் இரண்டு பதங்களும் சேர்ந்த ஸமஸ்தபதமான நாராயணபதத்தில் ஸம்ஜ்ஞைப்பொருளிலே இரண்டாவது பதத்தில் நகாரம்போய் ணகாரம் வந்திருக்கிறதாகையாலே வேதாந்தவாக்கியங்களிலுள்ள நாராயணபதம் நாராயணன் ஒருவனையே காட்டும்; வேறு எந்த தேவதையையும் காட்டாது. ஆகையால் அவ்வாக்கியங்கள் அநந்யபரங்கள். முதலில் எடுக்கப்பட்ட வாக்கியங்களிலுள்ள இந்த்$_3$ரன், ருத்$_3$ரன், சிவன், ப்ரஜாபதி, த$_4$ாதா முதலான பதங்களை நாராயணபரமாகக் கொள்ளுவதில் விரோதமில்லையாகையாகையாலும், வேதவாக்கியங்களில் ஒன்றுக்கொன்று விரோதம் வாராமைக்காக அப்படிக்கொண்டே தீரவேண்டுமாகையாலும் அவை அந்யபரங்கள் (இந்த்ரருத்ரப்ரஹ்மாதிகளில் வேறுபட்ட நாரா

சிரோவாக்யங்களாலும், "श्रुतिलिङ्गवाक्यप्रकरणस्थानसमाख्यानां समवाये पारदौर्बल्यमर्थविप्रकर्षात् " (ச்ருதிலிங்க₃வாக்யப்ரகரண ஸ்த₂ாநஸமாக்₂யாநாம் ஸமவாயே பாரதௌ₃ர்ப்ப₃ல்யமர்த்த₂ விப்ரகர்ஷாத்)என்று ச்ருதிலிங்காதிகரணந்யாயத்தாலே பூர்வ பூர்வத்தைப்பற்ற உத்தரோத்தரம் துர்ப்பலமாய் ஸமாக்யை துர்ப்பலமாகையாலும், உபக்ரமாதி₄கரணந்யாயத்தாலும்,

---

யணனைச் சொல்லுபவை). (2) "ச்ருதி, லிங்கம் (அடையாளம்), வாக்யம், ப்ரகரணம், ஸ்தானம், ஸமாக்யை (பெயர்) ஆகிய ப்ரமாணங்கள் ஒரேயிடத்தி லிருந்தால் (விரோதம் வரும்போது) (இவ்வாறில்) முன்சொல்லப் பட்டவையைக்காட்டிலும் பின்சொல்லப்பட்டவை வலிமை குறைந்தவை; (பிற்பட்ட பிரமாணத்தால் சொல்லப்பட்ட) அர்த்தம் (பூர்வ ப்ரமாணத்தைக் கல்பிக்கவேண்டியிருப்பதன்மூலம்) விலகியிருப்பதால்" [பூர்வமீமாம்ஸை 3-3-14]என்கிற ச்ருதிலிங்காதிகரணந்யாயத்தின்படி முன் னுல் சொல்லப்பட்ட ச்ருதி முதலானவற்றைக்காட்டிலும் பின்னுல் சொல் லப்பட்டவை படிப்படியாகக் குறைந்த பலமுள்ளவையாகையாலும், கடைசியில் சொல்லப்பட்ட 'ஸமாக்₃யை' (பெயர்) என்னும் ப்ரமாணம் மிகவும் பலமற்றதாகையாலும் ச்ருதி முதலானவற்றின் விரோதம் வரும் போது இந்த்ரன், ருத்ரன் முதலான பெயர்கள் வலிமையற்றவையாகை யாலே அப்பெயர்களைக்கொண்டு ருத்ரன் முதலானுர்க்குப் பரத்வம் ஸாதிக்க முடியாது. (3) பூர்வமீமாம்ஸையில் உபக்ரமாதி₄கரணம் (12-2-8) என் றென்று உண்டு. "ஒரு ப்ரகரணத்தில் உபக்ரமம் எனப்படும் தொடக் கத்துக்கும் பின்வருமிடங்கள் சிலவற்றுக்கும் விரோதம்வந்தால் உபக்ர மத்தை ஒட்டிப் பின்னுல் உள்ளவற்றுக்குப் பொருள் கொள்ளவேண்டும்" என்று அவ்வுபக்ரமாதிகரணத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த ந்யாயத்தைக்கொண்டு பார்க்கும்போது "அநந்தச்சாத்மா" [ச்வே 1-9] என்று ச்வேதாச்வதரத்தின் தொடக்கத்திலும், "சதுர்த்யர்த்த₄மாத்ரா புருஷதை₃வத்யா" [அதர்வசிகை 1-11] [ஓங்காரத்தின் நான்காவதான அர்த்த₄மாத்திரை புருஷனை தேவதையாகவுடையது] என்று அதர்வசிகை யின் தொடக்கத்திலும் அநந்தன், புருஷன் என்னும் பகவந்நாமங்களைப் பரம்பொருளைக் குறித்துப் பிரயோகித்திருப்பதால், அதற்கு அநுகுண மாகப் பின்னுல்வரும் ருத்ரன், சிவன் முதலான நாமங்களும் பகவானைச் சொல்லுவதாகவே கொள்ளவேண்டும் என்று தெரியவருகிறது. (4) இனி, இந்த்ரன், ருத்ரன், சிவன், ப்ரஜாபதி முதலான மற்ற தேவதைகளைக்

அந்தர்யாமிபர்யந்த ஸ்வார்த்த₂ாபி₄த₄ாயியாகையாலும், அவயவ ஶக்தியாலும் நாராயணனே ஸர்வகாரணம், பரதத்வம், உபாஸ்யன், மோக்ஷப்ரதன் என்று அறுதியிட வ்யுத்பந்நாதி காரமாய். **"भक्त्या शास्त्राद्वेद्मि जनार्दनम्"** (ப₄க்த்யா ஶாஸ்த்

குறிக்கும் பதங்களை பரமபுருஷனைக் குறிப்பவையாக எப்படிக் கொள்ள முடியும்? என்னும் கேள்வி எழக்கூடும். இதர தேவதா நாமங்களைக் கொண்ட வேதவாக்கியங்களில் இரண்டுவகையுண்டு. "விருத்திரனைக் கொன்ற இந்திரனே! உன்னைக்காட்டிலும் பெரியவனில்லை" [ருக்வேதம்] என்று முன் எடுத்த பிரமாணத்திற்போலே இந்திரன் முதலானோரின் அஸாதாரணமான அடையாளங்களை (விருத்திரனைக் கொன்றது முதலானவற்றை) சொல்லி, அவர்களுக்கு தன்னைக்காட்டிலும் மிக்காரையிலாமை முதலான பெருமைகளைச் சொல்லும் வேதவாக்கியங்கள் ஒருவகை. இப்படிப்பட்ட வாக்கியங்களில் சொல்லப்பட்ட பெருமைகள் கர்மவசப்பட்ட அந்த தேவதைகளுக்குப் பொருந்தாதாகையாலே, அவ்வாக்கியங்களிலுள்ள இந்திரன் முதலான சப்தங்கள் இந்திரன் முதலானோரைக் குறிப்பதோடன்றியில் அவர்களுக்கு அந்தர்யாமியான பரமபுருஷனையும் குறிக்கின்றன என்று கொள்ளவேண்டும். "சிவன் ஒருவனே தியானிக்கத்தக்கவன்" [அதர்வசிகை 2-20] என்றதுபோன்ற ப்ரஸித்த சிவனுக்கேயான அடையாளங்கள் இல்லாத வாக்கியங்கள் இரண்டாவதுவகை. இவ்வாக்கியங்களில் சிவபதத்தின் அவயவசக்தியாலே 'மங்களமானவன்' என்னும் பொருளைக்கொண்டு, "சாச்வதம் சிவம் அச்யுதம்" [தை-நா 11] "சிவ: சிவோபூ₄த்" [பாகவதம்] "மங்களாநாஞ்ச மங்களம்" [விஷ்ணுஸஹஸ்ரநாமம்] "சிவஸ்ஸ்தாணு:" [விஷ்ணுஸஹஸ்ரநாமம்] என்று ச்ருதிஸ்ம்ருதிகளிலே பரமமங்களமானவனாகச் சொல்லப்படும் நாராயணனையே இவை குறிக்கின்றன என்று கொள்ளவேண்டும். ஆக, இதுபோன்ற *பூர்வமீமாம்ஸாநியாயங்களையும், தர்க்கங்களையும்கொண்டு பார்க்கும்போது நாராயணனே பரம்பொருள் என்று அறியலாகும். ஆனால், இப்படி அறிவது அனைவர்க்கும் எளிதல்ல; சாஸ்திரங்களை முறையாகக் கற்றுணர்ந்தவர்களாலேயே இப்படி நியாயஸஞ்சாரம்செய்து நிர்ணயிக்கமுடியும். "சாஸ்த்ரஜ்ஞாநம் ப₃ஹுக்லேசம் பு₃த்₃தே₄ச்சலநகாரணம் உபதே₃சாத் ஹரிம் பு₃த்₃

---

*விரிவு வேண்டுவார் பல்லாயிரக்கணக்கான பக்கங்களில் நாம் பகவத்பரத்வத்தை ஸ்தாபித்து எழுதிவரும் விஷ்ணுசித்தவிஜயத்தைப் படித்து அறியலாம்.

ராத்₃ வேத்₃மி ஜநார்த்த₃நம்) என்று புண்யாதிகாரமுமாய்க்லேசிக்கிறபடியைக்கண்ட ஸ்ரீவால்மீகிபகவான் சதுரருகையாலே, **"आस्त्रीबाल प्रसिद्ध"** (ஆஸ்த்ரீபா₃லம் ப்ரஸித்₃த₄ம்) என்னும்படி உலக்கைப்பாட்டாக ப₄ர்த்ருஹீநைகளாய் ப்ரலாபிக்கிற தாராமந்தோதர்யாதிகளையிட்டுத் தத்வநிர்ணயம் பண்ணுவதாகக் கோலி, கிழே வாலிவத₄ாநந்தரமாக ஸ்த்ரீபா₃லர்களான தாராங்க₃தாதிகளையிட்டு "த்வமப்ரமேயஶ்ச" என்று தொடங்கித் தத்வநிர்ணயம்பண்ணி, இப்போது ராவணவத₄ாநந்தரமாக மந்தோதரியையிட்டுத் தத்வநிர்ணயம் பண்ணுகிறுன் இப்ரதேஶத்தால்,

---

த்₄வா விரமேத் ஸர்வகர்மஸு" [ ] [சாஸ்திரஜ்ஞானம் மிகுந்த கிலேசங்களை விளைப்பது; அறிவு தடுமாறவும் காரணமாகிறது; ஆகையால், ஆசாரியனின் உபதேசம்பெற்று ஹரியை அறிந்து, சாஸ்திரஜ்ஞானம் பெற உதவும் காரியங்களை விடவேண்டும்.] என்கிறபடியே சாஸ்திரஜ்ஞானத்தால் மாத்திரம் இப்படி நிர்ணயித்துவிடமுடியாது. "மாயாம்நஸேவே ப₄த்₃ரம் தே ந வ்ருதா₂ த₄ர்மமாசரே, சுத்₃த₄பா₄வம் க₃தோ ப₄க்த்யா சாஸ்த்ராத்₃வேத்₃மி ஜநார்த்த₃நம்" [பார-உத் 68-5] [வஞ்சனை செய்வேனல்லேன்; மங்களமுண்டாகட்டுமுனக்கு. பயனற்ற செயலைப்புரியேன். பக்தியாலே சுத்தமான நினைவையுடையவனாய், சாஸ்திரஜ்ஞானத்தாலே ஜநார்த்தனனை அறிகிறேன்] என்கிறபடியே பக்தியுடைய புண்ணியசாலிகளாலேயே இப்படி சாஸ்திரஜ்ஞாநத்தாலே பரம்பொருளறிவு பெறமுடியும். இவ்வண்ணம் உலகினர் பரம்பொருளறிவு பெறுமல் வருந்துகிறபடியைக்கண்ட பரமகாருணிகரான ஸ்ரீவால்மீகி மஹர்ஷி, அதிஸமர்த்தராகையாலே, "பெண்டு பிள்ளைகளும் அறியும்படியாக" [ ] என்னும்படி, உலக்கையால் நெற்குத்தும் பெண்டுகள் சிரமம் தெரியாமைக்காகப் பாடிக்கொண்டே குத்தும் உலக்கைப்பாட்டுப்போலே, கணவனையிழந்த வருத்தத்துக்குப் போக்குவீடாகப் பிலாக்கணம் பாடுகிற தாரை, மந்தோதரி, முதலான பெண்டுகளைக்கொண்டு பரதத்வநிர்ணயம் செய்விக்கவேண்டும் என்று நிச்சயித்து, கிழே வாலிவதத்துக்குப்பின் பேதையும் பிள்ளையுமான தாரை, அங்கதன் முதலானுரைக்கொண்டு, "நீயே அளவிடற்கரியவன்" [ரா-கி 24-31] என்றுதொடங்கிப் பரதத்வநிர்ணயம் செய்வித்து, இப்போது ராவணனைப் பெருமாள் கொன்றபின்பு, மந்தோதரியைக்கொண்டு பரதத்வநிர்ணயம் பண்ணிவைக்கிறுர் இந்த ப்ரகரணத்திலே.

எங்ஙனேயென்னில்: "रावणं निहतं श्रुत्वा राघवेण महात्मना। अन्तःपुराद्विनिष्पेतू राक्षस्यः शोककर्शिताः॥" (ராவணம் நிஹதம் ச்ருத்வா ராக₄வேண மஹாத்மநா। அந்த:புராத்₃ விநிஷ்பேதூ ராக்ஷஸ்ய: ஶோககர்ஶிதா:॥) என்று பெருமாள் கையிலே ராவணன் பட்டானென்று கேட்டு, அந்த:புரத்தில்நின்றும் பெண்டுகள் புறப்பட்டு, "उत्तरेण विनिष्क्रम्य द्वारेण सह राक्षसैः। प्रविश्यायोधनं घोरं विचिन्वन्त्यो हतं पतिम्॥" (உத்தரேண விநிஷ்க்ரம்ய த்₃வாரேண ஸஹராக்ஷஸை:। ப்ரவிஶ்யாயோத₄நம்கோ₄ரம் விசிந்வந்த்யோ ஹதம் பதிம்॥) என்று வடக்கு வாசலாலே புறப்பட்டுப் படுகளத்திலே சென்று, "ताः पतिं सहसा दृष्ट्वा शयानं रणपांसुषु। निपेतुस्तस्य गात्रेषु छिन्ना वनलता इव" (தா: பதிம் ஸஹஸா த்₃ருஷ்ட்வா ஶயாநம்ரணபாம்ஸுஷு। நிபேதுஸ் தஸ்ய கா₃த்ரேஷு சி₂ந்நா வநலதாஇவ॥) என்று ராவணனைக்கண்டு அறுப்புண்ட கொடிகள்போலே இவன்மேலே விழுந்து, "बहुमानात्परिष्वज्य काचिदेनं रुरोद ह। चरणौ काचिदालिङ्ग्य काचित्कण्ठेऽवलम्ब्य च॥ उद्धृत्य च भुजौ काचित् भूमौ स्म परिवर्तते॥" (ப₃ஹுமாநாத் பரிஷ்வஜ்ய காசிதே₃நம் ருரோத₃ ஹ। சரணௌ காசிதா₃லிங்க்₃ய காசித் கண்டே₂ऽவ

எப்படியெனில்: "மஹாத்மாவான ராகவரால் ராவணன் கொல்லப்பட்டதைக்கேட்டு, துன்பத்தால் வருந்திய ராக்ஷஸிகள் அந்தப்புரத்தினின்றும் வெளிவந்தார்கள்" [ரா-யு 113-1] என்று ராமபிரான் கையாலே ராவணன் இறந்தான் என்று கேட்டு, அந்த:புரத்தில்நின்றும் பெண்பிள்ளைகள் புறப்பட்டு, "அரக்கர்களோடுகூட வடக்கு வாசலாலே வெளிப்பட்டு, கோரமான போர்க்களத்தில் நுழைந்து இறந்துபோன தம் கணவனான ராவணனைத் தேடினார்கள்' [ரா-யு 113-3] என்று வடக்கு வாசலாலே புறப்பட்டுப் போர்க்களத்திலே சென்று, "போர்க்களப் புழுதியிலே படுத்துக்கிடக்கும் கணவனைச் சடக்கெனக்கண்டு, அறுபட்ட கொடிகள் போலே அவனுடைய உடலிலே விழுந்தார்கள்" [ரா-யு 113-7] என்று ராவணனைக்கண்டு அறுப்புண்ட கொடிகள்போலே அவன்மேலே விழுந்து "ஒருத்தி (அவனிடமுள்ள) மதிப்பாலே அவனைத் தழுவிக்கொண்டு அழுதாள்; ஒருத்தி காலைக்கட்டிக்கொண்டு அழுதாள்; ஒருத்தி கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள்; ஒருத்தி கையைத் தூக்கிக்கொண்டு பூமியில் புரண்டாள்" [ரா-யு 113-8,9] என்று அவனுக்கு இனியவளாயிருப்பவள்

லம்ப்₃ய ச || உத்₃த்₄ருத்ய ச பு₄ஜௌ காசித் பூ₄மௌ ஸ்ம பரிவர்த் ததே ||) என்று வல்லபை₄யாயிருப்பாளொருத்தி ஸர்வாங்க பரிஷ்வங்கம் பண்ணிக்கிடந்து கூப்பிட, அடியாள் கூத்தியா யிருப்பாளொருத்தி காலைக்கட்டிக்கிடந்து கூப்பிட, வேறொரு கந்₃ரப்பிராட்டி பார்ஶ்வத்திலே வந்து கழுத்தைக்கட்டிக் கூப்பிட, ஆற்றாமை மிகுந்திருப்பாளொரு அகப்பரிவாரத் தாள் பறிகொடுத்தாற்போலே கையெடுத்துக் கூப்பிட்டுத் தரையிலே கிடந்து புரள, **"तासां विलपमानानां तथा राक्षस - योषिताम्। ज्येष्टा पत्नी प्रिया दीना भर्तारं समुदैक्षत॥ दशग्रीवं हतं दृष्ट्वा रामेणाचिन्त्यकर्मणा। पतिं मन्दोदरी तत्र कृपणा पर्यदेवयत्॥"** **(தாஸாம் விலபமாநாநாம் தத₂ா ராக்ஷஸயோஷிதாம்| ஜ்யேஷ்ட₂ா பத்நீ ப்ரியா தீ₃நா ப₄ர்த்தாரம் ஸமுதை₃க்ஷத || த₃ஶக்₃ரீவம் ஹதம் த்₃ருஷ்ட்வா ராமேணாசிந்த்யகர்மணா | பதிம் மந்தே₃ாத₃ரீ தத்ர க்ருபணா பர்யதே₃வயத்)** இவர்கள் அப்படிக் கூப்பிடா நிற்க, ப்ரத₄ாநமஹிஷியாய் அபி₄மதையுமாயிருக்கிற மந்தோ தரியானவள் நினைக்கவொண்ணாத தொழிலையுடைய பெருமா ளாலே கொலையுண்டுகிடக்கிறராவணனை ஏறவிழியப்பார்த்து நெஞ்சழிந்து ப்ரலாபித்து அழுகிறாள். அழுதபடி:—**"ननु नाम**

ஒருத்தி உடம்பு முழுவதையும் தழுவிக்கொண்டு கதற, அடிவருடும் தாஸியா யிருப்பவளொருத்தி காலைக்கட்டிக்கொண்டு அழ, கழுத்திலே துவக்குண்ட மற்றொருத்தி பக்கத்திலிருந்து கழுத்தைக்கட்டிக்கொண்டு கூவ, வருத்தம் மிகுந்திருப்பாள் ஒரு அந்தரங்கசேடி அனைத்தையும் பறிகொடுத்தாற் போல் கைதூக்கிக்கொண்டு கதறித்தரையிலேகிடந்துபுரள," ராக்ஷஸபத்னி களாகிற அவர்கள் அப்படி அழும்போது (ராவணனுக்கு) இனியவளும், வருந்தத்தக்கவளும் மூத்தமனைவியுமான மந்தோதரி கணவனைப் பார்த்தாள்; நினைத்தற்கரிய செயலையுடைய ராமனாலே தசமுகனான தன் கணவன் கொல்லப்பட்டதைப் பார்த்து, மந்தோதரியானவள் நெஞ்சழிந்து கதறி யழுதாள்" [ரா-யு 114-1,2] என்கிறபடியே ராக்ஷஸிகள் இப்படி அழுது கொண்டிருக்கும்போது, ராவணனுக்குப் பட்டமஹிஷியாய், இனியவளான மந்தோதரியானவள் நினைத்தற்கரிய செயலையுடைய ராமபிரானாலே கொலைசெய்யப்பட்டிருக்கும் ராவணனை ஏறவிறங்கப்பார்த்து நெஞ்சு குலைந்து கதறியழுதாள். அழுதவிதம் பின்வருமாறு:— "பெருங்கையனே! குபேரன் தம்பியே! கோபங்கொண்ட உன்முன்னே நிற்பதற்கு இந்திரனும் பயப்படுவானன்றோ. ரிஷிகளும், பூஸுரர்களும், புகழ்பெற்ற கந்தர்வர்களும், சாரணர்களும், உன் கோபத்தாலே திசைதோறும் ஒளிந்தனரன்றோ. அப்

महाबाहो तव वैश्रवणानुज। क्रुद्धस्य प्रमुखे स्थातुं त्रस्यत्यपि पुरन्दरः॥ ऋषयश्च महादेवा गन्धर्वाश्च यशस्विनः। ननु नाम तवोद्वेगात् चारणाश्च दिशो गताः। स त्वं मानुषमात्रेण रामेण युधि निर्जितः। न ह्यपत्रपसे राजन् किमिदं राक्षसर्षभ॥'' (நநுநாம மஹாப$_3$ாஹோ தவ வைஶ்ரவணாநுஜ। க்ருத்$_3$த$_4$ஸ்யப்ரமுகே$_2$ ஸ்த$_2$ாதும் த்ரஸ்யத்யபி புரந்த$_3$ர:॥ ருஷயஶ்சமஹாதே$_3$வா க$_3$ந்த$_4$ர்வாச்ச யஶஸ்விந:। நநு நாம தவோத்$_3$வேக$_3$ாச் சாரணாச்ச தி$_3$ஶோக$_3$தா:॥ ஸ த்வம் மாநுஷமாத்ரேண ராமேண யுதி$_4$ நிர்ஜித:। ந ஹ்யபத்ரபஸே ராஜந் கிமித$_3$ம் ராக்ஷஸர்ஷப$_4$॥) என்றும், "मानुषाणामविषये चरतः कामरूपिणः। विनाशस्तव रामेण संयुगे नोपपद्यते॥'' (மாநுஷாணாமவிஷயே சரத: காமரூபிண:। விநாஶஸ்தவ ராமேண ஸம்யுகே$_3$ நோபபத்$_3$யதே॥) என்றும், நாட்டார் இரண்டு தோள் படைப்பார்களாகில் இருபது தோள் படைத்தவனன்றோ? "न शोभार्थाविमौ बाहू'' (ந ஶோப$_4$ார்த்த$_2$ாவிமௌ ப$_3$ாஹூ) என்று நாட்டார் எழிலுக்குத் தோள் படைத்தார்களாகில், அமைக்கைக்கும் ஆண்மைக்கும் தோள்படைத்தாய் நீயன்றோ? ஆளுடைமைக்கும் ஐச்வர்யமுடைமைக்கும் வைஶ்ரவணன் தம்பியன்றோ? நீயுமாய்க் கோபித்தால் நாட்டில் படைவீடெல்லாம் அழித்துத்திரிந்த இந்த்ரனும் உன்முன்னே நிற்கவல்லனோ? ஶாபாநுக்ரஹஶக்தரான ரிஷிகள், ப்ராஹ்மணர், திவ்யரான

படிப்பட்ட நீ கேவலம் ஒரு மனிதனான ராமனாலே சண்டையில் ஜயிக்கப்பட்டாய்; அரக்கர்தலைவனே! அரசனே! ஏன் வெட்கப்படாமலிருக்கிறாய்?'' [ரா-யு 114-3,4,5] என்றும், "மனிதர் ஸஞ்சரிக்கமுடியாத இடங்களிலே ஸஞ்சரிப்பவனும், விரும்பியபடியெல்லாம் உருவம் எடுக்கக்கூடியவனுமான உனக்குப் போரிலே (மனிதனான) ராமனாலே அழிவு ஏற்பட்டது பொருந்தவில்லையே'' [ரா-யு 114-7] என்றும், "உலகிலுள்ளவர்கள் இரண்டுதோளுடையவர்கள் என்றால், நீ இருபது தோள் உடையவனாயிற்றே; 'இக்கைகள் அலங்காரத்துக்காக ஏற்பட்டவையல்ல' [ரா-அ 23-31] என்று உலகினர் அழகுக்குத் தோள்படைத்தவர்களாயிருக்கும்போது, அரசுகளை அமைப்பதற்கும் ஆண்மைக்கும் தோள்படைத்தவன் நீயன்றோ. வலிமைபெற்ற ஆட்களைப்பெற்றிருப்பதிலும், செல்வமுடைவனாயிருப்பதிலும் நீ குபேரனுக்குப் பொருத்தமுள்ள தம்பியன்றோ. நீகோபிக்க ஆரம்பித்தால் உலகில் புரங்களையெல்லாம் அழித்துத்திரிந்த புரந்தரனாகிய இந்திரனும் உன்முன்னே நிற்க வல்லமை உடையவனோ? சாபங்கொடுக்கவும் வரங்கொடுக்கவும்வல்ல ரிஷிகளும், அந்தணரும், ஆகாயத்தி

சாரணக₃ந்த₄ர்வாதிகளகப்பட உனக்கஞ்சி தி₃க₃ந்தங்களிலே யன்றோ ஓடிப்போய்க் கிடப்பது? இப்படி மதிப்பனாயிருக் கிற நீ க்ஷுத்₃ரரான மநுஷ்யருக்குத் தோற்றோம் என்று வெள்கவும் அறிந்திலையீ; வரங்கொள்ளுகைக்குங்கூடப் பாத் தம்போராத மநுஷ்யர் கிட்டவொண்ணாத நிலத்திலே நின்று ஒருடம்பிலே அம்புபட்டால் அவ்வடிவைவிட்டு வேறொரு வடிவு கொள்ளவல்லையாயிருக்கிற உனக்கு ராம னால் பிறந்த விநாஶம் எனக்குக் கூடியிருக்கிறதில்லை என்று அநுபபத்திபட்டு, **"यदैव वानरैर्घोरैर्बद्धः सेतुर्महार्णवे। तदैव हृदयेनाहं शङ्के राममानुषं। यदैव हि जनस्थाने राक्षसैर्बहुभिर्वृतः। खरस्तव हतो भ्राता तदैवासौ न मानुषः॥"** (யதை₃வ வாநரைர் கோ₄ரைர்ப₃த்₃த₄: ஸேதுர் மஹார்ணவே। ததை₃வ ஹ்ருத₃யேநாஹம் ஶங்கே ராம மமாநுஷம்॥ யதை₃வ ஹி ஜநஸ்தா₂நே ராக்ஷஸைர் ப₃ஹுபி₄ர் வ்ருத:॥ க₂ரஸ்தவ ஹதோ ப்₄ராதா ததை₃வாஸௌ ந மாநுஷ:॥) என்று. குரங்குப் படைகொண்டு ஆழிக்கடலையளவிட்டு அணைகட்டினபடியாலும், உனக்ககப்படத் தலைக்காவலாய் அழிவில்லாத பரிகரமும் தானுமாயிருந்த கரனைக்கொன்ற படியாலும், இந்த யுக்திகளாலே இவரை மநுஷ்யரல்ல.

லுள்ள சாரண கந்தர்வர்களுங்கூட உனக்கு அஞ்சி மூலைமுடுக்குகளிலே யன்றோ ஓடி ஒளிந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி பெருமைபெற்ற நீ கொசுப்போன்ற மனிதரிடம் தோற்றோம் என்று வெட்கப்படக்கூட அறிய வில்லையே. பிரமனிடமிருந்து மற்ற அனைவரிடமிருந்தும் உனக்கு சாவு கூடாது என்று வரம்வேண்டிய நீ, மனிதர்களை அலட்சியம் செய்தாய். அவ்வளவு தாழ்ந்தவர்கள் மனிதர்கள். மேலும், அவர்கள் அணுகமுடியாத ஆகாயம் முதலானவிடங்களிலிருந்து போர்புரியக்கூடியவன் நீ; அதோடு ஒருடம்பிலே அம்புபட்டால், அவ்வுடம்பைவிட்டு வேறொரு உடம்பை எடுத்துக் கொள்ளக்கூடியவன் நீ; அப்படிப்பட்ட உனக்கு ராமனால் நேர்ந்த அழிவு என் அறிவுக்குப் பொருத்தமாகத்தோன்றவில்லையே" என்று முதலில் ஐயமுற்று, "கோரமான குரங்குகளாலே கடலிலே அணை எப் போது கட்டப்பட்டதோ, அப்போதே நான் நெஞ்சாலே ராமன் மனித னல்லன் என்று ஐயமுற்றேன்; ஜநஸ்தானத்திலே பல்லாயிரம் அரக்கர் களால் சூழப்பட்ட உன் ஸஹோதரன் கரன் எப்போது கொல்லப்பட் டானோ, அப்போதே ராமன் மனிதனல்லன் என உறுதிகொண்டேன்"

திவ்யர் என்று அறுதியிட்டு. **"अथवा वासवेन त्वं धर्षितोऽसि"** (அதூவா வாஸவேந த்வம் தூர்ஷிதோऽஸி) என்று இந்த்ர னாலே நலிவுபட்டாயோ? யமகுபேராதிகளாலேயோ? ஸம் ஹர்த்தாவான ருத்ரனாலேயோ? என்று ஶங்கித்து. **"वासवस्य कुतः शक्तिस्त्वां द्रष्टुमपि संयुगे"** (வாஸவஸ்ய குத: ஶக்திஸ் த்வாம் த்3ரஷ்டுமபி ஸம்யுகே3) என்றும், **"येन वित्रासितः शक्रो येन वित्रासितो यमः। येन वैश्रवणो राजा पुष्पकेण वियोजितः॥"**(யேந வித்ரா ஸித: ஶக்ரோ யேந வித்ராஸிதோ யம:। யேந வைஶ்ரவணோ ராஜா புஷ்பகேண வியோஜித:॥) என்றும். **"जेतारं लोकपालानां क्षेप्तारं शङ्करस्य च"** (ஜேதாரம் லோகபாலாநாம் க்ஷேப்தாரம் ஶங்கரஸ்ய ச॥) என்றும். "தூசியிலே நின்ற உன் மகன் கையிலே கட்டுண்டுபோன இந்த்ரன் உன் முன்னிலையிலே நிற்கவும்மாட்டான்; எல்லார்க்கும் கூற்றமானாலும் உனக்கஞ்சி ப்ரஹ்மாவையிட்டு உறவுசெய்து நழுவின யம னும்மாட்டான்; தமயனேயாகிலும் ஏற்றபுரவியான புஷ்ப

[ரா-யு 114-11,9] என்று, குரங்குப் படையைத் துணைகொண்டு ஆழ்ந்த கடலை அளவிட்டு அணைகட்டினபடியாலும், உனக்குங்கூட ஜனஸ்தான மாகிற தல்வாசற்காவலாய், அழிக்கமுடியாத அரக்கர்களோடு கூடியிருந்த கரனைக் கொன்றபடியாலும், இந்த யுக்திகளைக்கொண்டே இவர் மனித ரல்லர், தேவலோகத்தவர் என்று நிச்சயித்து, "அப்படியானால் இந்திர னால்தான் நீ வெல்லப்பட்டுவிட்டாயோ?" [ரா-யு 114-13] என்று இந்திர னால் கொல்லப்பட்டாயோ? யமனாலோ? குபேரனாலோ? ஸம்ஹாரம் செய் யும் உருத்திரனாலோ? என்று ஐயமுற்று, "இந்திரனுக்குப் போரிலே உன்னைக் காண்பதற்கும் சக்தி ஏது?" [ரா-யு 114-13] என்றும், "எவனால் இந்திரன் பயமுறுத்தப்பட்டானோ, எவனால் யமனும் பயமுறுத்தப்பட் டானோ, எவனால் அரசனான குபேரனிடமிருந்து புஷ்பகவிமானம் பறிக் கப்பட்டதோ" [ரா-யு 113-12] என்றும், லோகரக்ஷகர்களனைவரையும் ஜயித்தவனும், சங்கரனையும் பிடுங்கி எறிந்தவனும்" [ரா-யு 114-49] என் றும், "சேனை முனையிலே நின்ற உன் மகன் கையாலே கட்டப்பட்டுப் போன இந்திரன் உன் முன்னிலையிலே நிற்கவும்மாட்டான்; எல்லா ருடைய உயிரையும் பிரிப்பவனாயினும், உன்னிடம் பயப்பட்டுப் பிரமனைக் கொண்டு நட்பு ஏற்படுத்திக்கொண்டு நழுவின யமனும் உன்னை எதிர்க்க மாட்டான். தமயனேயானாலும், தக்க வாகனமான புஷ்பகத்தைக்கூடப்

கத்தையகப்படப் ப்றிகொடுத்து இன்றுகூட மீட்கமாட்டாத வைஶ்ரவணனும் மாட்டான்; சந்த்ரஹாஸங்கொடுத்து உபகாரகனுயிருக்கச்செய்தேயும் பீடத்தோடே பிடுங்குண்டவனுகையாலே ருத்ரனும் மாட்டான்;'' என்று கழித்து, **"सतां हि सन्देहपदेषु वस्तुषु प्रमाणमन्तःकरणप्रवृत्तयः"** (**ஸதாம்ஹி ஸந்தே₃ஹபதேஷு வஸ்துஷு** ப்ரமாணமந்த:கரண ப்ரவ்ருத்தய:) என்று மானஸப்ரத்யக்ஷத்தாலும், ராவணவதத்தில் இந்த்ரியப்ரத்யக்ஷத்தாலும், ஸேதுப₃ந்த₄ க₂ரவத₄ வாலிவத₄ாதிகரணங்களால் வருகிற அநுமானத்தாலும், **"परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च"** (பராऽஸ்ய ஶக்திர் **விவிதை₄வ ஶ்ரூயதே ஸ்வாபா₄விகீ ஜ்ஞாந** ப₃லக்ரியா ச) என்றும், **"विचित्राः शक्तयश्चैता नृप यत्र प्रतिष्ठिताः"** (**விசித்ரா:** ஶக்த **யச்சைதா** ந்ருப யத்ர ப்ரதிஷ்டி₂தா:) என்றும், **"सीतालक्ष्मीर्भवान् विष्णुः"** (**ஸீதா லக்ஷ்மீர் ப₄வாந் விஷ்ணு**:) என்றும், **"भवान्नारायणो देवः"** (ப₄**வாந் நாராயணோ தே₃வ**:) என்றும் சொல்லுகிற ஆகமக்ரமங்களாலும், பெருமாளைப் பரவஸ்து

பறிகொடுத்து, இன்றளவும் மீட்கமுடியாத குபேரனும் உன்னைக் கொல்லக்கூடியவனல்லன்; சந்திரஹாஸம் என்னும் கத்தியை உனக்குக் கொடுத்து உபகரித்தவனாயினும், கைலாஸமாகிற பீடத்தோடே பிடுங்கப்பட்ட உருத்திரனும் உன்னை வெல்லமுடியாது என்று தேவர்தலைவர்களனைவரையும் கழித்து, "ஐயமுறத்தக்க விஷயங்களில் நல்லோர்களுக்குத் தங்கள் மனோவ்யாபாரங்களே பிரமாணமாகுமன்றோ'' [சாகுந்தலம் 1-19] என்று மனத்தால் உண்டாகும் ப்ரத்யக்ஷத்தாலும், ராவணனைக் கொன்றதை நேரே காண்கையாலே புலன்களால் உண்டான ப்ரத்யக்ஷத்தாலும் கடலில் அணைகட்டியது, கரனைக் கொன்றது, வாலியைக் கொன்றது, முதலான அஸாதாரண ஹேதுக்களாலே உண்டாகிற அநுமானத்தாலும், "இப்பரம்பொருளுக்கு மேலான சக்தியுண்டென்றும், இயற்கையான அறிவு, வலிமை, செயல் முதலானவை உண்டென்றும் கேட்கப்படுகிறது'' [ச்வே 6-8] "அரசனே! விசித்திரமான இந்த சக்திகளெல்லாம் எவனிடத்தில் நிலைநிற்கின்றனவோ'' [வி-பு 6-7-70] "சீதையே மஹாலக்ஷ்மி; நீரே மஹாவிஷ்ணு'' [ரா-யு 120-28] "தேவரீரே தேவனான நாராயணன்'' [ரா-யு 120-13] என்றாற்போலே சொல்லுகிற சாஸ்திரப்ரமாணங்களாலும் ராமபிரானே பரவஸ்து என்ற தானே நிச்சயித்து, தான் அறிந்த

வென்று தானே அறுதியிட்டுத் தான் அறிந்த ப்ரகாரத்தை பிறர்க்கும் அறிவிப்பதாகக்கோலி, ராவணனைநோக்கி, இவர் கேவலரல்ல, பரவஸ்துவான நாராயணன், தேவாதிகளால் படாதபடி ப்ரஹ்மாந்தர்யாமியாய்நின்று வரங்கொடுத்த படியாலே ஸத்யவாக்யப்ரயோகஜராகைக்காகத் தம்மை மூடி மநுஷ்யச்சட்டையையிட்டு, ஒறுப்புண்ட தேவர்களையும் ருக்ஷவாநரகோபுச்சவிக்ரஹங்களைக் கொள்ளுவித்துத் தம் முடைய விபூதியான லோகத்தை, **"प्रवृद्धं लोककण्टकं"** (ப்ர வ்ருத்தம் லோககண்டகம்) என்னும்படி நீ நலிந்தபடியாலே தமக்கு வேண்டியன்றிக்கே லோகஹிதார்த்தமாக ஸபரி கரனான உன்னைக்கொன்று, பெரிய புகரும் தாமுமாய் நின்றா ரென்று நிஷ்கர்ஷித்துத் தலைக்கட்டுகிறாள் இப்ரதேசத்தில் இச்சதுஃச்லோகியால்.

முதல் ச்லோகம்

அவ:—இதில் முதல் ச்லோகத்தால் லீலாவிபூதியிலே எல்லாரோடும் உருக்கலந்து நிற்கிற இவர் சேதநா

விதத்தைப் பிறர்க்கும் அறிவிப்பதாக எண்ணி, இறந்துகிடக்கும் ராவணனை நோக்கி, "இவர் ஸாமாந்யரல்ல; பரம்பொருளான நாராயணனே இவர்; பிரமனுக்கு அந்தர்யாமியாய்நின்று, 'தேவர் முதலானாரால் நீ அழிய மாட்டாய்' என்று முன் உனக்கு வரம் கொடுத்திருக்கிறபடியாலே, அந்த வரம் உண்மையாவதற்காகத் தம்மை மூடி மனிதவுருவாகிற சட்டையை இட்டுக்கொண்டு உன்னால் துன்புறுத்தப்பட்ட தேவர்களையும் கரடியாகவும் குரங்குவகைகளாகவும் வடிவமெடுக்கச்செய்து, தம்முடைய செல்வமான உலகத்தை "மிகவளர்ந்திருப்பவனுக்கும், உலகிற்கு முள்போன்றவனு மான ராவணனை" [ரா-பா 15-20] என்னும்படி நீ துன்புறுத்தியபடியாலே தமக்காகவல்லாமல், உலகின் நன்மைக்காகத் துணைவரோடுகூடிய உன்னைக் கொன்று பெரும்புகழ் படைத்து நின்றார் இவர்" என்று அறுதியிட்டு முடிக்கிறாள் இந்த ப்ரகரணத்திலுள்ள இந்த நான்கு சுலோகங்களாலே.

முதல் ச்லோகம் அவதாரிகை:— அதில், முதல் ச்லோகத்தாலே, "தமக்கு விளையாட்டுக்கு விஷயமான இவ்வுலகில் பிருகங்களுள்ளிட்ட அனைவரோடும் ஒன்றுகலந்து நிற்கிற இவர் அறிவுள்ள ஜீவர்களையும்,

சேதந விலக்ஷணமான வஸ்து என்று அறிந்தேன் என்கிருள்.

வ்யா:—(வ்யக்தம்) அவரோ இவரோ என்று அலமந்து திரிந்தோம். இப்போது ஒருபடி வெளியாயிற்று. (வ்யக்தம்) தேவதாந்தரவிஷயவிசாரமானபோது தெரியாதபடி இருள் மூடிக்கிடந்தது. ப₃கவத்₃விஷயத்திலே வந்தவாறே ப்ரகாஶமாய் அறியவாயிற்று. "ददामि बुद्धियोगं तं" (த₃தா₃மி பு₃த்₃தி₄யோக₃ம் தம்) என்றும், "मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च" (மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச)என்றும், "அறியாதன அறிவித்த" என்றும் ஜ்ஞாநத்துக்கு ஊற்றுவாய் இவனிறே. (வ்யக்தம்) "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை" என்னுமாப்போலே "இத்தனைபோதுமறிந்திலேன்; இப்போது அறிந்தேன்" என்கிருள். (வ்யக்தம்) "கண்டவாற்ருல் தனதே உலகென நின்ருன்" என்கிறபடியே, கண்டபோதே, "ஸர்வலோகேஶ்வர: ஸாக்ஷாத்" என்னும்படியானுர்.

அறிவற்ற பொருள்களையுங்காட்டிலும் வேறுபட்ட சிறந்த பொருள் என்று அறிந்தேன்" என்கிருள்.

வ்யா:—1. (தெளிவு) 'அவரோ? இவரோ?' என்று தடுமாறித் திரிந்தோம்; இப்போதே ஒருவிதமாகத் தெளிவுபெற்றது. 2. (தெளிவு) 'மற்ற தேவதைகளோ ராமன்' என்று ஆராய்ந்தபோது, தெளிவில்லாதபடி இருள் மூடிக்கிடந்தது; 'பகவானே இவன்' என்று ஆராய்ந்தவுடன் ஒளியுண்டாகி அறிவுபெற்றேன். "என்னையடைய உறுப்பான அவ்வறிவுச் சேர்க்கையை நானே அளிக்கிறேன்" [கீதை 10-10] என்றும், "என்னிடமிருந்தே நினைவும், அறிவும், அறிவின்மறைவும் ஏற்படுகின்றன" [கீதை 15-15] என்றும், "அறியாதன அறிவித்த அத்தா" [திருவாய் 2-3-2] என்றும் அறிவை உண்டாக்குமிடமாயிருக்கும் ஊற்றுவாய் இவனேயன்றே. 3. (தெளிவு) "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை" [நான்-திருவ 96] என்றதுபோலே, இத்தனைநேரம் அறியவில்லை; இப்போதே தெளிந்தேன் என்கிருள். 4. (தெளிவு) "கண்டவாற்ருல் தனதே உலகென நின்ருன்" [திருவாய் 4-5-10] என்கிறபடியே, கண்டவுடனே "நேரே ஸர்வலோகங்களுக்கும் ஈச்வரனுயிருப்பவன்" [ரா-யு 114-17] என்று சொல்லும்படியிருந்தார்.

(வ்யக்தம்) "का त्वं भवसि रुद्राणां मरुतां वा वरानने। वसूनां वा वरारोहे देवता प्रतिभाति मा। किन्नु चन्द्रमसा हीना पतिता विबुधालयात्। रोहिणी ज्योतिषां ज्येष्ठा श्रेष्ठा सर्वगुणान्विता॥ वसिष्ठं कोपयित्वा त्वं नासि कल्याण्यरुन्धती॥" (காத்வம் ப₄வஸி ருத்₃ராணாம் மருதாம் வாவராநநே। வஸூநாம் வா வராரோஹே தே₃வதா ப்ரதிபா₄தி மா॥ கிந்நு சந்த்₃ரமஸா ஹீநா பதிதா விபு₃தா₄லயாத்। ரோஹிணீ ஜ்யோதிஷாம் ஜ்யேஷ்டா₂ ஶ்ரேஷ்டா₂ ஸர்வகு₃ணாந்விதா॥ வஸிஷ்ட₂ம் கோபயித்வா த்வம் நாஸி கல்யாண்யருந்த₄தீ॥) என்று திருவடியானவன். ருத்ரமருத்வஸுக்களுடைய தேவதையோ? சந்த்ரனைப் பிரிந்த ரோஹிணியோ? வஸிஷ்டனைப்பிரிந்த அருந்ததியோ? என்று ஶங்கித்து, யுக்திகளாலே பிராட்டியென்று அறுதியிட்டாற்போலன்றிக்கே, கண்டபோதே பெருமாளென்றும் பெருமாளைப் பரவஸ்துவென்றும் அறுதியிட்டேன் என்கிருள். (வ்யக்தம்) மமவ்யக்தம். "मया ज्ञातं" (மயா ஜ்ஞாதம்) என்கிற த்ரௌபதியைப்போலே சொல்லுகிருள். "महत्यापदि संप्राप्ते स्मर्तव्यो भगवान् हरिः। इत्येवं यत्पुरा गीतं वसिष्ठेन महात्मना॥ तदिदानीं मया ज्ञातं" (மஹத்யாபதி₃ ஸம்ப்ராப்தே ஸ்மர்த்த

---

5. (தெளிவு) "அழகியமுகத்தவளே! அழகியவளே! மங்களமானவளே! நீ யாராயிருக்கிருய்? உருத்திரர், மருத்துக்கள், வஸுக்கள் முதலானுருடைய தேவதையாக எனக்குத் தோன்றுகிருயே; தேவலோகத்திலிருந்து விழுந்தவளும், சந்திரனைப் பிரிந்தவளும், நக்ஷத்திரங்களின் தலைவியும், எல்லாகுணங்களும் பொருந்தியவளுமான ரோஹிணியோ நீ? வஸிஷ்டரோடு கோபித்துவந்த அருந்ததியல்லையோ நீ?" [ரா-ஸு 33-6...9] என்று சீதையைக்கண்ட அனுமன் 'உருத்திரர், மருத்துக்கள், வஸுக்கள் ஆகியவர்களுடைய தேவதையோ? சந்திரனைப் பிரிந்த ரோஹிணியோ? வஸிஷ்டனைப்பிரிந்த அருந்ததியோ' என்று ஐயமுற்று, யுக்திகளாலே பிராட்டியென்று நிச்சயித்தாற்போலேயல்லாமல், கண்டபோதே இவனே ராமபிரானென்றும், இவ்விராமபிரானே பரம்பொருள் என்றும் அறுதியிட்டேன் என்கிருள். 6. (தெளிவு) எனக்குத் தெளிவு. "என்னுல் அறியப்பட்டது" [பார-ஸபா 90-41] என்கிற திரௌபதியைப்போலே சொல்லுகிருள். "'பேராபத்து வந்தபோது பகவானுன ஹரி நினைக்கத்தக்கவன்' என்று முன்னெருநாள் மஹாத்மாவான வஸிஷ்டராலே யாதொன்று

வ்யோ ப₄க₃வாந் ஹரி:। இத்யேவம் யத்புரா கீ₃தம் வஸிஷ்டே₂ந மஹாத்மநா॥ ததி₃த₃ாநீம் மயா ஜ்ஞாதம்) என்றருளிறே. "ஜ்ஞாதம்" என்று ஸாமாந்யவாசியான ஜ்ஞாநஶப்த₃ம் இவ்விடத்தில் ஸ்ம்ருதி விஶேஷத்திலே பர்யவஸிக்கிறது. (வ்யக்தம்) "स हि देवैरुदीर्णस्य रावणस्य वधार्थिभिः। अर्थितो मानुषे लोके जज्ञे विष्णुः सनातनः॥" (ஸ ஹி தே₃வைருதீ₃ர்ணஸ்ய ராவணஸ்ய வதா₄ர்த்தி₂பி₄:। அர்த்தி₂தோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணு: ஸநாதந:॥) என்றும், "வேண்டித் தேவ ரிரக்க" என்றும் ராவணவதா₄ர்த்திகளான தேவர்கள பேக்ஷையாலேவந்து பிறந்தார் என்கிற தேவரஹஸ்யம் இப்போது வெளியாயிற்று. (வ்யக்தம்) வரவிரோதம் வருமென்று ராவணன் படுந்தனையும் தம்மை மறைத்து, நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்காத் திரிந்தது, ராவணன் பட்டவாறே இப்போது வெளியாயிற்று.

வெளியானபடி எங்ஙனே? என்னில்: (ஏஷ: மஹாயோகீ₃, பரமாத்மா, ஶங்க₂சக்ரக₃தா₃.த₄ர:, நித்யஶ்ரீ: இதிவா)

சொல்லப்பட்டதோ அது இப்போது என்னால் அறியப்பட்டது" [பாரஸபா 90-41] என்றருளன்றோ. "அறியப்பட்டது" என்று அறிவைச்சொன்னது இங்கு அறிவில் ஒருவகையான நினைவைச் சொல்லிற்றாய், 'நினைக்கப்பட்டது' என்று பொருள். 7. (தெளிவு) "கொழுத்தவனான ராவணனின் கொலையை விரும்பும் தேவர்களாலே வேண்டப்பட்டவனாய், மனித லோகத்திலே ஸநாதனனான விஷ்ணுவே அந்த ராமனாகப் பிறந்தானன்றோ" [ரா-அ 1-7] என்றும், "வேண்டித் தேவர் இரக்கவந்து பிறந்ததும்" [திருவாய் 6-4-5] என்றும் ராவணனின் அழிவை விரும்பிய தேவர்கள் விருப்பத்தாலேவந்து பிறந்தார் என்கிற தேவரஹஸ்யம் இப்போது வெளியாயிற்று. 8. (தெளிவு) 'மனிதனையொழிந்த எவராலும் சாவில்லை' என்னும் வரத்துக்கு விரோதம் வருமென்று ராவணன் அழியும்வரையிலும் தம்மைமறைத்து, "நாட்டில் பிறந்தது படாதனபட்டு மனிசர்க்கா" [திருவாய் 7-5-2] என்கிறபடியே திரிந்தது, ராவணன் அழிந்தவுடன் இப்போது வெளியாயிற்று.

வெளியானவிதம் எப்படி? எனில்: (இவரே மஹாயோகி; பரமாத்மா; சங்கசக்கரகதைகளைத் தரித்தவர்) என்று, ராமனே பரவஸ்து என்று

பரவஸ்துவென்னுமிடமானல், "வ்யக்த(ம்) ஏஷ:" என்று ஸமாநாதிகரிக்கவேண்டாவோ? என்னில்: வக்தாவினுடைய விவக்ஷாவஶமிறே வாக்ப்ரவ்ருத்தி; ராவணவதம் ராமனல் கூடாதென்பது, இந்த்ராதிகளோ? என்பது, அங்கும் கூடாதென்பதாய் ஸாமாங்யத்திலே விசாரித்து யுக்திகளால் ஒருபடி அறிந்தோமென்று விஶேஷத்திலே நிச்சயித்துத் தனியே ஒரு வாக்யமாய்க் கிடக்கிறது. **"मैनाकः किमयं रुणद्धि गगने मन्मार्गमव्याहतं शक्तिस्तस्य कुतः स वज्रपतनाद्भीतो महेन्द्रादपि। तार्क्ष्यः सोऽपि समं निजेन गुरुणा जानाति मां रावणं"** (மைநாக: கிமயம் ருணத்$_3$தி$_4$ க$_3$க$_3$னே மந்மார்க்க$_3$மவ்யாஹதம் ஶக்திஸ் தஸ்ய குத: ஸ வஜ்ரபதநாத் பீ$_4$தோ மஹேந்த்$_3$ராதபி। தார்க்ஷ்ய: ஸோऽபி ஸமம் நிஜேந கு$_3$ருணா ஜாநாதி மாம் ராவணம்) என்று பஹுமுகமாக விகல்பமாய், **"आः ज्ञातं स जटायुरत्र जरसा क्लिष्टो वधं वाञ्छति"** (ஆ: ஜ்ஞாதம் ஸ ஜடாயுரத்ர ஜரஸா

சொல்லுமிடமாகில், "பரமாத்மாவாயிருப்பவன் தெளிவாக இவனே" என்று "வ்யக்த(:)(ம்)" "ஏஷ:" என்னும் இரண்டும் (ஒரு வேற்றுமையாய்) ஒரே வாக்கியமாகவேண்டியிருக்க, 'வ்யக்தம்' (தெளிவு) என்று தனி வாக்கியமாகச் சொல்லலாமோ? எனில்: சொல்லுகின்றவரின் கருத்தை ஒட்டியன்றோ வார்த்தை வெளிவரும். ராவணவதம் மனிதனான ராமனுல் கூடாதென்பது, இந்திரன் முதலான தேவதைகளில் ஒருவனோ இவன் என்பது, அதுவும் முடியாது என்பதாகப் பொதுவாக ஆராய்ந்து யுக்திகளாலே 'ஒருவிதமாக அறிந்தோம்' என்று ஒரு குறிப்பிட்ட வ்யக்தியே இவன் என்று நிச்சயிக்குமிடமாகையாலே, 'தெளிவு' என்பதைத் தனிவாக்கியமாகக் கொள்வதில்தான் பொருத்தம் உள்ளது. மஹாநாடகத்திலே, ராவணன் ஸீதையை அபஹரித்துச் செல்லும்போது அவனை எதிர்க்கவரும் ஜடாயுவைக்கண்ட ராவணன் "தடையற்ற என் வழியை மைநாகமலையோ தடைசெய்கிறது? அதற்கேது சக்தி? மஹேந்திரனிடமிருந்து வஜ்ராயுதப்ரயோகத்தைக்கண்டே அம்மலை பயப்பட்டதன்றோ. கருடனும் தன் ஸ்வாமியோடுகூட என்னை ராவணனாக (அழவைப்பவனாக) அறிவான்" [மஹாநாடகம் 3-77] என்று பலவிதமாக ஐயமுற்று, "ஆ! அறிந்தேன்! கிழத்தனத்தால் நலிந்த அந்த ஜடாயுதான் என்னிடமிருந்து அழிவை விரும்புகிறன்" [மஹாநாடகம் 3-77] என்று ஒருவிதமாக (ஜடாயுவென்று) நிச்சயித்தவிடத்தில் "ஜ்ஞாதம்" (அறிந்தேன்) என்று சொன்

க்லிஷ்டோ வத₃ம் வாஞ்சா₂தி) போலே கிடக்கிறது. "வ்யக்தம்" என்று தானறிந்தாளாகில் (ஏஷ மஹாயோகீ₃ பரமாத்மா) என்று மேலே சொல்லுகிறதென்? என்னில்: "**स त्वं मानुषमात्रेण रामेण युधि निर्जितः**" (ஸ த்வம் மாநுஷமாத்ரேண ராமேண யுதி₄ நிர்ஜித:) என்றும், "ஸராக்ஷஸபரீவாரம் ஹதவாம்ஸ்த்வாம்" என்றும் ராவணனைநோக்கிச் சொல்லுகிறவளாகையாலே 'அவரோ, இவரோ' என்று ஸந்தேஹித்தவள், "ஆரானுமல்லனறிந்தேனவனை நான்" என்றுள் முற்பட. அநந்தரம் "உமக்கறியக் கூறுகேனோ" என்று ராவணனுக்கும் பிறர்க்குமறியச் சொல்லுகிறாள். பிணமாய்க் கிடக்கிறவனுக்குச் சொல்லுகிறதென்? என்னில்: விரஹிநிகளுமாய்ப் பதிஹீனைகளுமாயிக்கிற ஸ்த்ரீகள் நாயன்மார் அஸந்நிஹிதராயிருக்க, முன்னிலையாக ப₄ாவித்துச் சொல்லக்கடவது. "**ननु नामाविनीतानां विनेतासि परन्तप**" (நநு நாமாவிநீதாநாம் விநேதாஸி பரந்தப) என்றும், "**क्षमसे तं महीपते**" (க்ஷமஸே தம் மஹீபதே) என்றும், "**हा राम हा लक्ष्मण हा सुमित्रे**

னதுபோலே, இங்கு 'வ்யக்தம்' [தெளிவு] என்று தனிவாக்கியமாகக் கிடக்கிறது. "தெளிவு" என்ற தான் அறிந்தாளாகில், "இவனே மஹாயோகி; பரமாத்மா" என்று மேலே எதற்காகச் சொல்லுகிறாள்? எனில்: "அப்படிப்பட்ட நீ கேவலம் ஒரு மனிதனான ராமனால் போரிலே வெல்லப்பட்டாய்" [ரா-யு 114-5] என்றும், "அரக்கர்சேனையோடுகூடிய உன்னைக் கொன்றார்" [ரா-யு 114-17] என்றும் ராவணனைநோக்கிச் சொல்லுகிறவளாகையாலே, 'அவனோ இவனோ' என்று முதலில் ஐயமுற்றவள் "ஆரானுமல்லன் அறிந்தேன் அவனை நான்" [சிறியதிருமடல் 23] என்றாள் "வ்யக்தம்" என்ற சொலலாலே முதலில். அடுத்தபடியாக, "உமக்கறியக் கூறுகேனோ" [சிறியதிருமடல் 24] என்று ராவணனுக்கும் பிறர்க்கும் தெரியும்படியாகச் சொல்லுகிறாள் "ஏஷ மஹாயோகீ₃" என்றுதொடங்கி. பிணமாய்க் கிடக்கிற ராவணனுக்குச் சொல்லுவதெப்படி? எனில்: கணவனைப் பிரிந்திருப்பவர்களும், இழந்திருப்பவர்களுமான பெண்கள், கணவர் அருகிலில்லாமலிருந்தபோதிலும், முன்னேயிருப்பதாக பாவித்துச் சொல்லுவது ஒரு வழக்கு உண்டு. "எதிரிகளை வருத்துமவரே! அடங்காதவர்களையெல்லாம் அடக்கிவைப்பவரன்றோ நீர்" [ரா-ஆ 49-26] என்றும், "அரசரே! உம்மிடமிருந்து என்னைக் கவர்ந்து சென்ற ராவணனை

हा राममातः सह मे जनन्या'' (ஹா ராம ஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரே ஹா ராமமாத: ஸஹ மே ஜநந்யா) என்றும், ''முகில் வண்ணா தகுவதோ'' என்றும், ''வட்கிளலிறையும் மணி வண்ணா'' என்றும், ''தகவிலை தகவிலையே நீ கண்ணா'' என்றும், அஶோகவநிகையிலேயிருக்கிற பிராட்டி, மால்ய வானிலேயிருக்கிற பெருமாளைநோக்கிச் சொன்னாள்; தந் தாம் ஊர்களிலேயிருக்கிற ஆழ்வார்களாகிற நாய்ச்சிமார், தந்தாம் திருப்பதிகளிலேயிருக்கிற நாயன்மாரை நோக்கிச் சொன்னார்கள். தாரையும் வாலிபட்டுக்கிடக்கிறபோது, **''उत्तिष्ठ हरिशार्दूल भजस्व शयनोत्तमम्। नैवंविधाः शेरते हि भूमौ नृपतिसत्तम। अतीव खलु ते कान्ता वसुधा वसुधाधिप। गतासुरपि यां गात्रैर्मां विहाय निषेवसे॥''** (உத்திஷ்ட₂ ஹரிஶார்தூ₃ல ப₄ஜஸ்வ ஶயநோத்தமம்। நைவம்வித₄ா: ஶேரதே ஹி பூ₄மௌ ந்ருபதிஸத்தமா:॥ அதீவ க₂லு தே காந்தா வஸுத₄ா வஸுத₄ாதி₄ப। க₃தாஸுரபி யாம் கா₃த்ரைர் மாம் விஹாய நிஷேவஸே) என்று சொன்னாள். மந்தோதரியும், **''ननु नाम महाबाहो तव वैश्रवणानुज''** (நநு நாம மஹாபா₃ஹோ தவ வைஶ்

ஏன் பொறுத்திருக்கிறீர்'' [ரா-ஸு 38-39] என்றும், ''ஹா! ராம! ஹா! லக்ஷ்மண! ஹா! ஸுமித்ரே! ஹா! என் தாயோடுகூடிய ராமமாதா வான கௌஸல்யே!'' [ரா-ஸு 28-8] என்றும், ''முகில்வண்ணா தகு வதோ'' [திருவாய் 7-2-2] ''வட்கிலள் இறையும் மணிவண்ணா என்னும்... கட்கிலீ உன்னைக் காணுமாறருளாய்'' [திருவாய் 7-2-3] என்றும், ''தகவிலை தகவிலையே நீ கண்ணா'' [திருவாய் 10-3-1] என்றும் ஜந ஸ்தானத்திலும், அசோகவனத்திலும் பெருமாளைப் பிரிந்திருந்த பிராட்டி நெடுந்தூரத்திலுள்ள பெருமாளை முன்னிலைப்படுத்திச் சொன்னாள். தம் தம் ஊர்களிலே இருக்கும் ஆழ்வார்களாகிற நாயகிகள் தாம்தாமுகந்த திருப்பதிகளிலேயுள்ள நாயகரை நோக்கிச் சொன்னார்கள். வாலி இறந்து கிடக்கும்போது, தாரையும், ''வானரர்தலைவனே! எழுந்திரு. மேலான படுக்கையில் சயனிப்பாயாக. உன்னைப்போன்ற பேரரசர்கள் பூமியிலே சயனிப்பதில்லையன்றோ. பூமிநாயகனே! பூமி உனக்கு மிகவும் இனிய பத்தினியாகத்தான் இருக்கவேண்டும். (ஏனெனில்:) உயிர்போனபின்பும் என்னைவிட்டு அவளை உடல்முழுவதாலும் தழுவிக்கொண்டிருக்கிறா யன்றோ'' [ரா-கி 20-5,6] என்று முன்னிலைப்படுத்திச் சொன்னாள். இறந்து கிடக்கும் ராவணனைப் பார்த்து மந்தோதரியும் ''பெருங்கையனே! குபேரன்

ரவணுநுஜ), "उत्तिष्ठोत्तिष्ठ किं शेषे" (உத்திஷ்டோத்திஷ்ட₂ கிம் ேஶஷே) என்று சொன்னாள். ப்ரத்யக்ஷமாக லௌகிக விலாபங்கள்தானே காணாநின்றோம்.

இவள்தான் தனக்கு வ்யக்தமாகச் சொன்ன பாசுர மென்? என்னில்: **"एष परमात्मा नित्यश्रीर्लोकानां हितकाम्यया सराक्षसपरीवारं हतवांस्त्वां महाद्युतिः॥"** (ஏஷ பரமாத்மா நித்யஶ்ரீர் லோகாநாம் ஹிதகாம்யயா ஸராக்ஷஸபரீவாரம் ஹதவாம்ஸ் த்வாம் மஹாத்₃யுதி:) என்று இப்புடைகளிலே. (ஏஷ:) "மாநுஷம் வபுராஸ்த₂ாய" என்று மநுஷ்யச்சட்டையிட்டுத் தம்மை மறைத்துக்கொடுநிற்கிற இவர். (ஏஷ:) **"रामः शोकसमाविष्टमित्युवाच विभीषणम्। क्षत्रियो निहतः सङ्ख्ये न शोच्य इति निश्चयः॥"** (ராம: ஶோகஸமாவிஷ்டமித்யுவாச விபீ₄ஷணம்। க்ஷத்ரியோ நிஹத: ஸங்க்₂யே ந ஶோச்ய இதி நிஶ் சய:॥) என்றும், **"संस्कारः क्रियतां भ्रातुः स्त्रियश्चैता निवर्तय"** (ஸம்ஸ்கார: க்ரியதாம் ப்₄ராது: ஸ்த்ரியஶ்சைதா நிவர்த்தய) என்றும் எங்களுக்கெல்லாம் நியாமகராய், "பூசலில் பட்

தம்பியே! உன்முன் நிற்க இந்திரனும் பயப்படுவானன்றோ" [ரா-யு 114-3] "எழுந்திரு எழுந்திரு! ஏன் படுத்திருக்கிறாய்?" [ரா-யு 114-82] என்று சொன்னாள். இக்காலத்திலும் உலகில் பத்தினிகள் கணவன்மார் இறந்த பின்பு கூப்பிட்டு அழுவதை நாமும் காணாநின்றோம். ஆகையால் பிண மாய்க் கிடக்கும் ராவணனை முன்னிலைப்படுத்தி ராமபிரானுடைய பெருமையை மந்தோதரி சொல்லக் குறையில்லை.

இவள்தான் தனக்குத் தெளிவாகச் சொன்ன பாசுரம் என்ன? எனில்: (இவரே பரமாத்மா; எப்போதும் திருவுடையவர்; உலகங்களுக்கு நன்மையை விரும்பி, பரஞ்சோதியானவர்; அரக்கர் கூட்டத்தோடுகூடிய உன்னைக் கொன்றுவிட்டார்) என்றாற்போலே சொன்னது. 1. (இவர்) "மனிதவுருவை ஏற்றுக்கொண்டு" [ரா-யு 114-16] என்று மனிதவுருச் சட்டையைக்கொண்டு தம்மை மறைத்துக்கொண்டு நிற்கிற இவர். 2. (இவர்) "ராமபிரான் வருத்தம் நிறைந்த விபீஷணனைக்குறித்து 'க்ஷத்ரியன் போரில் கொல்லப்பட்டான்; அதுகுறித்து வருந்தலாகாது என்பது உறுதி' என்று கூறினான்" [ரா-யு 112-14] என்றும், "தமயனுக்கு ஸம்ஸ்காரம் செய்யப்படட்டும்; இந்த ஸ்திரீகளைத் திருப்புவாய்" [ரா-யு 114-92] என்

டார்க்கு வெறுக்கிறதென்? ஸம்ஸ்காரத்தில் ப்ரவர்த்திக்க லாகாதோ? பெண்களை மீளவிடும்'' என்று உத்தரக்ருத்யங் களுக்கு வித$_4$ாயகராயிருக்கிற இவர். (ஏஷ:) விபீ$_4$ஷண ஸ்த்ரீகளை ஆப$_4$ரணபூ$_4$ஷிதைகளாக்கி என்னை வைத$_4$வ்ய பூஷிதையாக்கிநிற்கிற இவர். (ஏஷ:) கொழுந்தனுர் பெண்டு களை அந்த:புரவிபூ$_4$ஷிதைகளாக்கி .எங்களை ரணபூ$_4$ஷிதைக ளாக்கி நிற்கிற இவர். (ஏஷ:) **''धर्मसंस्थापनार्थाय''** (த$_4$ர்ம ஸம்ஸ்த$_2$ாபநாய) என்றும். **''धर्मपालो जनस्यास्य''** (த$_4$ர்மபாலோ ஜநஸ்யாஸ்ய) என்றும் ரிஷிகளுக்கு தர்மத்தைக்கொடுத்து. **''विभीषणविधेयं हि लङ्कैश्वर्यमिदं कृतं''** (விபீ$_4$ஷணவிதே$_4$யம் ஹி லங்கைச்வர்யமித$_3$ம் க்ருதம்) என்று விபீ$_4$ஷணனுக்கு அர்த்தைச்வர்யத்தைக் கொடுத்து. **''भजस्व कामं सुग्रीव''** (ப$_4$ஜஸ்வ காமம் ஸுக்$_3$ரீவ) என்று ஸுக்ரீவனுக்குக் காமத்தைக் கொடுத்து. **''मया त्वं समनुज्ञातो गच्छ लोकाननुत्तमान्''** (மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ க$_3$ச்ச$_2$ லோகாநநுத்தமாந்) என்றும். **''आवहत् परमां गतिं''** (ஆவஹத் பரமாம் கதிம்) என்

றும் எங்களையெல்லாம் நியமிப்பவராய், ''சண்டையிலே இறந்தவனைக் குறித்து வருத்தமோ கோபமோ கொள்ளக்கூடாது; ஸம்ஸ்காரத்தைத் தொடங்குவாய்; பெண்டுகளைத் திரும்பிப் போகச்சொல்வாய்'' என்று மேல் நடக்கவேண்டியவற்றை விதிப்பவராயிருக்கும் இவர். 3. (இவர்) விபீஷணன் பெண்டுகளை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொண்டவர்களாக்கி, என்னை விதவைக்கோலத்தாலே அணிசெய்யப்பட்டவளாக்கிய இவர். 4. (இவர்) என் மைத்துனன் மனைவியரை அந்தப்புரத்தை அலங்கரிப் பவர்களாக்கி, என்னைப் போர்க்களத்தை அலங்கரிப்பவளாக்கிய இவர். 5. (இவர்) ''அறத்தை நிலைநிறுத்துவதற்காகப் பிறக்கிறேன்'' [கீதை 4-8] என்றும், ''இந்த ஜனங்களுக்கு அறத்தை ரக்ஷித்துக்கொடுப்பவன்'' [ரா-ஆ 1-18] என்றும் ரிஷிகளுக்கு தர்மத்தைக் கொடுத்து, ''இலங்கைச் செல்வமாகிற இது விபீஷணனுக்கு வசப்படுத்தப்பட்டது'' [ரா-யு 116-13] என்று விபீஷணனுக்குப் பொருட்செல்வத்தைக்கொடுத்து, ''சுக்கிரீவனே! நீ காமத்தை அடைவாய்'' [ ] என்று சுக்கிரீவனுக்குக் காமத்தைக் கொடுத்து, ''என்னால் அனுமதிக்கப்பெற்று, தமக்கு மேலில் லாத உலகங்களை அடைவாயாக'' [ரா-ஆ 68-30] என்றும், ''மேலான கதியைக் கொடுத்தது'' [ரா-கி 17-8] என்றும் ஜடாயுவாலிகளுக்கு

றும் ஜடாயுவாலிகளுக்கு மோக்ஷத்தைக் கொடுத்து, அறம். பொருள், இன்பம், வீடு என்கிறபுருஷார்த்தம்நாலும்மாண்ட வாறே எனக்குக் கைவல்யத்தையேதந்துநிற்கிற இவர். (ஏஷ:) "सर्वशक्तिस्तु भगवानशक्त इव चेष्टते" (ஸர்வஶக்திஸ்து ப₄க₃வாநஶக்த இவ சேஷ்டதே ||) என்கிறபடியே, க₂ரவாலிவதாதி ஸேதுப₃ந்த₄லங்காப₄ங்க₃ ராவணவதாத்யதிமாநுஷசேஷ்டிதங்களைப் பண்ணி ஒன்றுமறியாதாரைப்போலே நிற்கிற இவர். (ஏஷ:) "मानुषीं तनुमाश्रितं परं भावमजानन्तः" (மாநுஷீம் தநுமாஶ்ரிதம் பரம் ப₄ாவமஜாநந்த:) என்று அபலைகளான என்போல்வார்க்கு, ஆஶ்ரிதஸௌகர்யார்த்தமாகத் தாழவிட்ட நீர்மையைத் தண்மையாக நினைக்கும்படி எளியராயிருக்கிற இவர்.

இப்படி எளியவராயிருக்கிற இவர்தாம் ஆரென்னில்: (மஹாயோகீ₃) கேவலரல்ல; "समस्तकल्याणगुणात्मकोऽसौ" (ஸமஸ்தகல்யாணகு₃ணாத்மகோऽஸௌ) என்று கட்டடங்க நன்றான திவ்யகுணங்களை உடையவர்.

மோக்ஷத்தைக் கொடுத்து, அறம், பொருள், இன்பம், வீடு என்கிற புருஷார்த்தம் நாலும் கொடுத்துத் தீர்ந்துவிட்டதால், எனக்குத் தனியிருப்பாகிற கைவல்யத்தையே கொடுத்துநிற்கிற இவர். 6. (இவர்) "ஸர்வசக்தியான பகவான் சக்தியற்றவன்போல் நடிக்கிறுன்" [ ] என்கிறபடியே கரவதம், வாலிவதம், திருவணை கட்டியது, இலங்கையை அழித்தது, ராவணவதம் முதலான மனிதசக்திக்குமீறிய செயல்களைச் செய்து ஒன்றும் அறியாதாரைப்போலே நிற்கிற இவர். 7. (இவர்) "என் மேலான தன்மையை அறியாமல் மனிதவுருக்கொண்ட என்னை மூடர்கள் அவமதிக்கிறுர்கள்" [கீதை 9-11] என்று ஞானபலமற்ற பெண்ணுன என்னைப் போன்ற அடியார்களும் தன்னை அடைவதற்கு உறுப்பாகத் தன்னைத் தாழவிட்ட மஹாகுணமாகிற ஸௌலப்யத்தைப் பார்த்து 'இவன் தாழ்ந்தவன்' என்று சில மூடர்கள் நினைக்கும்படி எளியவராயிருக்கிற இவர்.

இப்படி எளியவராயிருக்கிற இவர்தாம் ஆர்? என்னில்: 1. (மஹாயோகி) ஸாமாந்யரல்ல; மஹாகுணயோகத்தையுடையவர். "எல்லா மங்களகுணங்களும் நிறைந்தவன் இவன்" [வி-பு 6-5-84] என்று முழுவதும் நன்றான எல்லாக் கல்யாணகுணங்களையும் உடையவர்.

(மஹாயோகீ3) "एषां विभूतियोगञ्च" (ஏஷாம் விபூ4தியோக3ஞ்ச) என்றும். "योगयुक् परमात्माऽसौ नित्यमङ्गलविग्रहः" (யோக3யுக் பரமாத்மாऽஸௌ நித்யமங்க3ள விக்3ரஹ:) என்றும் சொல்லுகிறபடியே. 'யுநக்தீதியோக3:' என்று குணங்களுக்குப்பேராய் "अनवधिकातिशयासङ्ख्येयकल्याणगुणगणः" (அநவதி4காதிஶயா ஸங்க்யேய கல்யாணகு3ணக3ண:) என்றும், "உயர்வற வுயர்நலமுடையவன்" என்றும் அதிவிலக்ஷணமான குணங்களுக்கு ஆகரமானவர். (மஹாயோகீ3) "योगः सन्नहनोपाय-ध्यानसङ्गतियुक्तिषु" (யோக3: ஸந்நஹநோபாய த்4யாந ஸங்க3தியுக்திஷு) என்கிற இவ்வர்த்தங்களிலேயாகிலுமாம். முதல் ஸந்நஹநமாய், "सन्नाहः कवचच्छदः" (ஸந்நாஹ: கவசச்ச2த3:) என்று உடம்புக்கிடாய், மஹாயோகமென்று கேவலமான மாநுஷஸந்நாஹமன்றியிலே இந்த்ரன் வரக்

---

2. (மஹாயோகீ) "யுநக்திதி யோக3:" [(ஆத்மாவோடு) சேர்ந்திருக்கிறதாகையாலே 'யோகம்' எனப்படுகிறது.] என்கிற வ்யுத்பத்தியின்படியே குணங்களுக்கும் யோகமென்று பெயராகிறது. "இவர்களுடைய செல்வத்தையும் குணத்தையும்" [ ] "குணங்களோடு கூடிய இப்பரமாத்மா எப்போதும் மங்களமான திருமேனியை உடையவன்" [ ] என்கிறவிடங்களில் யோகமென்று குணங்கள் உரைக்கப்பட்டன. மஹாயோகீ என்றது பெருங்குணவாளன் என்றதாய் "எல்லையற்ற மேன்மையை உடைய கணக்கற்ற குணங்களை உடையவன்" ['உயர்வறவுயர்நலம் உடையவன்' என்றதற்கு மொழிபெயர்ப்பாக ஆளவந்தார் அருளிச்செய்த சந்தை] என்றும், "உயர்வறவுயர்நலமுடையவன்" [திருவாய் 1-1-1] என்றும் மிகச்சிறந்த குணங்களுக்கு இருப்பிடமானவர் என்று பொருள்படுகிறது. (மஹாயோகீ) "யோகம் என்னும் பதம் ஸந்நாஹம், உபாயம், தியானம், ஸங்கதி, யுக்தி ஆகிய பொருள்களில் பிரயோகிக்கப்படுகிறது" [அமரகோசம் 3-3-22] என்கிற பொருள்களிலே யோகம் எனும் சப்தம் பிரயோகிக்கப்பட்டிருப்பதாகவும் கொள்ளலாம்.
3. யோகம் என்றது ஸந்நஹநம் எனப்படும் ஸந்நாஹமாய், "ஸந்நாஹம் என்பது (உடம்பை) மறைக்கும் கவசம்" [ ] என்கிறபடியே ஸந்நாஹமென்றது உடம்புக்கு இடும் கவசமாய், மஹாயோகம் என்றதாலே, ஸாமாந்யமான மனிதர்க்குரிய கவசமல்லாமல், இந்திரனால்

காட்டினதாய், திவ்யமாய், ராவணஸ்த்ராஸ்த்ரங்களுக்கு ஈடுபடாதே விலக்ஷணமான உடம்புக்கு ஈடுடையராயிருந் தார் என்றுமாம். "சன்னுகம்" என்று தமிழனும் சொன்ன னிறே. அன்றியிலே, (மஹாயோகீ$_3$) என்று, **"सन्नद्धौ विचरिष्यतः"** (ஸந்நத்$_3$தௌ$_4$ விசரிஷ்யத:) என்கிறபடியே ஸந் நாஹம் உத்$_3$யோக$_3$மாய், **"उद्योगं तव संप्रेक्ष्य"** (உத்$_3$யோக$_3$ம் தவ ஸம்ப்ரேக்ஷ்ய) என்று ராஜ்யப்$_3$ரஷ்டரென்று முசித் திராதே படைகூட்டுவது, துணையணைப்பது, அணையடைப் பது, லங்கையையடைக்கப் பாய்ச்சுவது, சுடுவது, இடிப் பது, கருடனையழைப்பது, ஔஷத$_4$மழைப்பிப்பதாய் பெரிய உத்ஸாஹமுடையராயிருந்தார் என்றுமாம். அன்றியிலே, (மஹாயோகீ$_3$) என்று, உபாயமாய், **"उपायः को वधे तस्य"** (உபாய: கோ வதே$_4$ தஸ்ய) என்று இவர் கேட்பது, **"प्रविश्य मानुषीं तनुं अवध्यं दैवतैर्विष्णो समरे जहि"** (ப்ரவிஷ்டோ மாநுஷீம் தநும் அவத்$_4$யம் தைவதைர் விஷ்ணோ ஸமரே ஜஹி) என்று தேவர்கள் சொல்லுவதாய், இப்படி வரத்தின்

மாதலியின்தேரோடு அனுப்பப்பட்டதாய், தேவலோகக் கவசமாய், ராவணனின் ஆயுதங்களுக்கும் அம்புகளுக்கும் இடம் கொடுக்காததான மிகச்சிறந்த கவசத்தை உடையவராயிருந்தார் என்றும் கொள்ளலாம். "சன்னுகம்" [ ] என்று தமிழனும் கவசத்தைச் சொன்ன னன்றோ. 4. (மஹாயோகி) "முயற்சியுடையவராய் ஸஞ்சரிப்பார்கள்" [ ] என்கிற விடத்திற்போலே ஸந்நாஹபதம் முயற்சியைக் குறிப்பதாய், "தேவரீருடைய பெருமுயற்சியைக் கண்டு" [ரா-யு 17-64] என்கிறபடியே, 'அயோத்யாராஜ்யத்தையிழந்து வனம் புகுந்து பிராட்டி யையும் இழந்தோமே' என்று துன்புற்றிராமல், வானரர் படையைக் கூட்டுவது, திருவணையடைப்பது, இலங்கையை முற்றுகையிடுவது, அம்புகளாலே சுடுவது, இடிப்பது, நாகபாசம் போவதற்காக கருடனை வரவழைப்பது, அனுமனைக்கொண்டு ஸஞ்ஜீவிமலையைக் கொண்டுவரச் செய்வது ஆக இப்படிப் பெரிய முயற்சியை உடையவராயிருந்தார் என்றும் கொள்ளலாம். 5. (மஹயோகி) 'யோகம்' என்றது உபாயமாய் "அந்த ராவணனைக் கொல்ல உபாயமென்ன?" [ரா-பா 16-2] என்று இவர் கேட்பது, "விஷ்ணுவே! மனிதவுருவில் நுழைந்தவராய், தேவதை களாலே கொல்லத்தகாதவனுன அவனைப்போரிலே ஜயிப்பீராக" [ரா-பா 15-21] என்று தேவர்கள் உபாயமுரைப்பதாய், இப்படி வரத்தின்

வரியிலகப்படாதபடி இதோருபாயமுடையராயிற்று என்றுமாம். அன்றியிலே, (மஹாயோகீ₃) என்று த்₄யாநமாய், "ध्यै चिन्तायां" (த்₄யை சிந்தாயாம்) இறே. த₃ஶரத₂யஜ்ஞத்தில் தேவர்கள் திரண்டவன்று தொடங்கி, ராவணவத₄பர்யந்தமாக நடுவுள்ள கார்யசிந்தைகளில் ஒன்றும் பழுதுபோகாதபடி பத்தும்பத்தாகக் கார்யவிசாரமுடையராயிருந்தார் என்றுமாம். அன்றியிலே, (மஹாயோகீ₃) என்று ஸங்க₃தியாய், "नासहायस्य सिद्ध्यति" (நாஸஹாயஸ்ய ஸித்₃த்₄யதி) என்று, துணையில்லாதவனுக்கு ஒன்று ஆகாமையாலே, இது முடியும்படியாக ஹநூமத் ஸுக்₃ரீவ விபீ₄ஷணாதி₃களான ஸஹாயஸங்க₃தியுடையராயிருந்தார் என்றுமாம். அன்றியிலே, (மஹாயோகீ₃) என்று யுக்தியாய், "उत्तरोत्तरयुक्तौ च वक्ता वाचस्पतिर्यथा" (உத்தரோத்தரயுக்தௌ ச வக்தா வாசஸ்பதிர் யத₂ா) என்னுமாப்போலே வநவாஸநிவ்ருத்திக்கு இளையபெருமாள் பக்ஷங்களைத் தள்ளியும்,

---

வரம்பில் அகப்படாதபடி மனிதவுருவாகிற ஒருபெருபாயத்தை உடையவரானார் என்றுமாம். 6. (மஹாயோகி) 'யோகம்' என்றது தியானமாய், "த்₄யை-சிந்தாயாம்" என்ற தாதுவிலிருந்து தோன்றியதாகையாலே தியானம் என்றது சிந்தையைக் (விசாரத்தைக்) குறிப்பதாய், தசரதனுடைய யாகத்தில் தேவர்கள் திரண்ட அன்று தொடங்கி ராவணவதம் முடியும் வரையில், நடுவே செய்யத்தக்க காரிய விசாரத்தில் ஒன்றும் குறைவு வாராதபடி பரிபூர்ணமான கார்யவிசாரத்தை உடையவராயிருந்தார் என்றும் கொள்ளலாம். 7. (மஹாயோகி) 'யோகம்' என்றது 'ஸங்கதி' எனப்படும் சேர்த்தியாய், "துணையற்றவனுக்குக் காரியம் நிறைவேறாது" [ ] என்கிறபடியே துணையில்லாதவனுக்கு ஒரு காரியமும் நிறைவேறாதாகையாலே, இது முடியும்படியாக அனுமன், சுக்கிரீவன், விபீஷணன் முதலான துணைவருடைய பெரும் சேர்த்தியை உடையவராயிருந்தார் என்றும் கொள்ளலாம். 8. (மஹாயோகி) 'யோகம்' என்றது யுக்தியாய், "மேலும் மேலும் யுக்திசொல்லுவதில் பிருஹஸ்பதியைப் போன்றவன்" [ரா-அ 1-17] என்றாற்போலே, 'நாட்டைவிட்டுக் காடு செல்லக்கூடாது' என்பதற்கு உறுப்பாக லக்ஷ்மணன் சொன்ன யுக்திகளைத்தள்ளியும், 'தர்மாதர்மங்கள் கிடையாது' என்பதற்கு ஜாபாலி சொன்ன யுக்திகளைத் தள்ளியும், வாலியைக் கொன்றபிறகு, 'என்னைக்

ஜாப₃ாலி சொன்ன த₄ர்மாக்ஷேப பக்ஷங்களைத் தள்ளியும், வாலிவத₄ாநந்தரம் அவன் சொன்ன பக்ஷங்களைத் தள்ளியும், விபீ₄ஷணஶரணாகதிக்கு ஸுக்₃ரீவஶரப₄ஜாம்ப₃வத்ப்ரப்₄ருதி களுடைய பக்ஷங்களைத் தள்ளியும், இப்படி பலரோடே கலந்தவிடத்திலும், இத்தனைபேரையும் தள்ளும்படியான ப்ரப₃லயுக்திகளை உடையராயிருந்தார் என்றுமாம். அன்றி யிலே, (மஹாயோகீ₃) என்று, தலையும் சடையும், அரை யும் மரவுரியுமான வேஷத்தாலும், இத்தனை பெண்டுகள் திரண்டுகிடக்க முகமெடுத்துப்பாராத விரக்தியாலும், வென்றுகொண்ட ராஜ்யங்கள் ஸுக்₃ரீவ விபீ₄ஷணாதி களுக்குக் கொடுத்துத் தாம் அவற்றில் நசைடண்ணாமை யாலும், நினைத்தது முடிக்கும்படியான தபோऽநுஷ்டாநத் தாலும், இவர்தாம் பெரிய யோகிகளாயிருந்தார்என்றுமாம்.

இப்படி யோகிகளாகில் கர்மவஶ்யரான ஸம்ஸாரியா யிருந்தாரோ? என்னில்: (பரமாத்மா) அப்படியல்ல; ஸர்வாந்

கொன்றது அநீதி' என்று அவன் சொன்ன யுக்திகளைத் தள்ளியும், 'விபீஷணசரணாகதியை ஏற்றுக்கொள்ளக்கூடாது' என்பதற்கு சுக்கிரீவன், சரபன், ஜாம்பவான், முதலானோர் சொன்ன யுக்திகளைத் தள்ளியும், இப்படிப் பலரோடு வார்த்தை சொல்லும்போது, அவர்களுடைய பக்ஷங் களைத் தள்ளித் தன் பக்ஷத்தை நிலைநிறுத்தத்தகுந்த மிகவலிமைபெற்ற யுக்திகளை உடையவராயிருந்தார் என்றும் கொள்ளலாம். [இத்துடன் அமரகோசத்தில் யோகசப்தத்திற்குச் சொன்ன பொருள்கள் முடிவு பெற்றன.] 9. (மஹாயோகீ) பெரியயோகி (தபஸ்வி) என்கிறதாய், சடை தரித்த தலையும், மரவுரியுடுத்த அரையுமான வேஷத்தாலும், இத்தனை ரூபவதிகளான ராவண ஸ்திரீகள் கூடிக்கிடக்க, அவர்களை முகமெடுத்துப் பார்க்காத வைராக்யத்தாலும், வாலியையும், ராவணனையும் வென்று பெற்ற கிஷ்கிந்தையிலங்கையரசுகளை சுக்கிரீவனுக்கும் விபீஷணனுக்கும் கொடுத்துத் தான் அதிலே ஆசைவைக்காமலிருக்கையாலும், நினைத்ததை முடிக்கக்கூடியவராயிருக்கையாலே பெருந்தவத்தைச் செய்திருக்க வேண்டு மாகையாலும், இவர்தாம் பெரியயோகிகளாயிருந்தார் என்றும் பொருள் கொள்ளலாம்.

இப்படி யோகியாயிருந்தாரெனில், மற்ற யோகிகளைப்போலே கர்மத் திற்கு வசப்பட்ட ஸம்ஸாரிஜீவனாயிருந்தாரோ? எனில்: 1. (பரமாத்மா)

தர்யாமியான புருஷோத்தமன். (பரமாத்மா) "பரோ மா அஸ்மாதி$_3$தி பரம:" என்றாய். **"यस्मात्परं नापरमस्ति किञ्चित्"** (யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்) என்றும். **"न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते"** (ந தத்ஸமச்சாப்$_4$யதி$_4$கச்ச த்$_3$ருஶ்யதே) என்றும், "ஒத்தார் மிக்காரையிலையாய மாமாயா" என்றும் சொல்லுகிறபடியே ஸமாப்$_4$யதி$_4$கத$_3$ரித்ரனானவன். (பரமாத்மா)**"आत्मा जीवे धृतौ देहे स्वभावे परमात्मनि। यत्नेऽर्केऽग्नौ मतौ वाते"** (ஆத்மா ஜீவே த்$_4$ருதௌ தே$_3$ஹே ஸ்வப$_4$ாவே பரமாத்மநி। யத்நேர்க்கேऽக்$_3$நௌ மதௌ வாதே) என்ற இவ்வர்த்தங்களிலுமாம். (பரமாத்மா) என்று ஜீவவாசியாய், **"सच्च त्यच्चाभवत्"** (ஸச்ச த்யச்சாப$_4$வத்)என்றும், **"स एव सर्वं यदस्ति यन्नास्ति"** (ஸ ஏவ ஸர்வம் யத$_3$ஸ்தி யந்நாஸ்தி) என்றும், "இல்லதும் உள்ளதும்" என்றும் சொல்லுகிறபடியே. ஶரீராத்மப$_4$ாவத்தாலே அவன்தான் என்று சொல்லலாம்படி

அப்படியல்ல; அனைவர்க்கும் அந்தர்யாமியான புருஷோத்தமனாயிருந்தார். 2. (பரமாத்மா) "இவனைக்காட்டிலும் மேலானவனில்லையாகையால் 'பரமன்' எனப்படுகிறான்" என்று பரமசப்தவ்யுத்பத்தி. "எவனைக்காட்டிலும் மேலானது ஒன்றுமில்லையோ" [ச்வே 3-10; முண்ட 1-1-7] [தை-நா 6-23] என்றும், "அவனை ஒத்தவருமில்லை; மிக்கவருமில்லை' [ச்வே 6-8] என்றும், "ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா" [திருவாய் 2-3-2] என்றும் சொல்லும்படியே தன்னை ஒத்தவரும் மிக்கவருமில்லாதவனாயிருப்பவன். (பரமாத்மா) "ஆத்மா என்னும் பதம் ஜீவனிடமும், தைரியத்திலும், தேஹத்திலும், ஸ்வபாவத்திலும், பரமாத்மாவிலும், யத்னத்திலும், ஸூர்யனிடத்திலும், அக்னியிடத்திலும், புத்தியிலும், காற்றினிடத்திலும் பிரயோகமுள்ளது" [வைஜயந்தீ-த்வ்யக்ஷரகாண்டம் 1-6] என்று ஆத்மந் சப்தத்திற்குச் சொல்லப்பட்ட எல்லாப்பொருள்களும் இங்கு பொருந்தும். எப்படியெனில்: 3. (பரமாத்மா) ஆத்மந்சப்தம் ஜீவனைச் சொல்லுவதாய், "பரம்பொருள் அழிவற்ற ஜீவனும், அழிவுள்ள அசேதனமும் ஆயிற்று" [தை-ஆ 6-3] என்றும், "அழிவற்றதாகையாலே உள்ளது எனப்படும் ஜீவனும், அழிவுள்ளதாகையாலே இல்லாதது எனப்படும் அசேதனமும் ஆகிய எல்லாமும் அவனே" [வி-பு 2-12-38] என்றும், "இல்லதும் உள்ளதும்" [திருவாய் 7-8-4] என்றும் சொல்லுகிறபடியே, ஜீவன் சரீரமாகவும் இவன் ஆத்மாவாகவுமிருக்கையாலே, (அசேதனத்திலும் பெருமை பெற்றவனாகையாலே) பரமன் எனத்தக்க ஆத்மாவும் (ஜீவனும்) இவனே

யிருக்கிறவர். அன்றியிலே, (பரமாத்மா) என்று, த்ருதி யிலேயாய், "आपद्यपि स्वकार्येषु कर्तव्यत्वस्थितिर्धृतिः" (ஆபத்₃யபி ஸ்வகார்யேஷு கர்த்தவ்யத்வஸ்தி₂திர் த்₄ருதி:) என்றிறே. ராஜ்யப்₄ரம்ஶ வநவாஸ ஸீதாऽத₃ர்ஶநஜடாயுவத₄ாதி₃யான வ்யஸநங்கள் வந்தவளவிலும் செய்யும் கார்யங்கள் ஈடேறும்படியான நிலையையுடையராயிருந்தார் என்றுமாம். அன்றியிலே, (பரமாத்மா) என்று, தே₃ஹத்திலேயாய், "नित्यं नित्याकृतिधरं" (நித்யம் நித்யாக்ருதித₄ரம்) என்றும், "न भूतसङ्घसंस्थानो देहोऽस्य परमात्मनः" (ந பூ₄தஸங்க₄ஸம்ஸ் தா₂நோ தே₃ஹோऽஸ்ய பரமாத்மந:) என்றும், "மணியுரு வில் பூதமைந்தாய்" என்றும், எதிரிகளுக்கு ஈடுபடாதபடி யான நித்யநிரவத்₃யவிக்₃ரஹராயிருந்தார் என்றுமாம். அன்றியிலே, (பரமாத்மா) என்று, ஸ்வப₄ாவத்திலேயாய், "संबाहुभ्यां नमति संपतत्रैः" (ஸம்பா₃ாஹுப்யாம் நமதி ஸம்

என்று சொல்லலாம்படியிருப்பவன் என்றும் கொள்ளலாம். 4. (பர மாத்மா) ஆத்மஂசப்தம் தைர்யத்தைச் சொல்லுவதாய், "ஆபத்துக்காலத் தில் தன் காரியத்தில் இப்படிச் செய்யவேண்டும் என்று உறுதியோடிருப் பது தைரியம்" [ ] என்பது தைர்யலக்ஷணமாகையாலே,

"ராஜ்யாத்₃ ப்₄ரம்ஶோ வநே வாஸ: ஸீதா நஷ்டா ஹதோ த்₃விஜ:।
ஈத்₃ருஶீயம் மமாலக்ஷ்மீர் நிர்த₃ஹேத₃பி பாவகம்" [ரா-ஆ 67-24]

[ராஜ்யத்தை இழந்தது, வனத்தில் வாழ்ந்தது, ஸீதையின் பிரிவு, ஜடாயு வின் கொலை முதலான இப்படிப்பட்ட எனக்குவந்த சிறுமைகள் நெருப்பைக்கூட எரித்துவிடக்கூடியவை.] என்கிறபடியே எத்தனை துன்பங் கள் வந்தாலும், செய்யவேண்டிய காரியங்களைச் செய்துமுடிக்கும் நிலை யாகிற மஹாதைர்யத்தை உடையவர் என்றும் கொள்ளலாம். 5. (பர மாத்மா) ஆத்மஂசப்தம் தேஹத்தைச் சொல்லுவதாய், "நித்தியனும், நித்தியமான உருவை உடையவனுயுமிருப்பவனை" [ஸாத்வதஸம்ஹிதை] என்றும், "இந்தப் பரமாத்மாவின் திருமேனி ஐம்பூதங்களின் சேர்க்கை யினுல் உண்டானதல்ல" [பார-சாந்தி 206-60] என்றும், "மணியுருவில் பூதமைந்தாய்" [திருநெடு-1] என்றும் எதிரிகளுக்கு அழிக்கமுடியாதபடி யான எப்போதும் குற்றமற்ற திருமேனியுடையராயிருந்தார் என்றும் கொள்ளலாம். 6. (பரமாத்மா) ஆத்மஂசப்தம் ஸ்வபாவத்தைச் சொல்லு

பதத்ரை:) என்றும், "**वाङ्मनसैकभूयये**" (வாங்மநஸைகபூமயே) என்றும், "எளிவருமியல்வினன்" என்றும், "**नहि पालनसामर्थ्यमृते सर्वेश्वराद्धरेः**" (நஹி பாலநஸாமர்த்₂யம் ருதே ஸர்வேஶ்வராத் ஹரே:) என்றும், "காக்குமியல்வினன்" என்றும் ஸௌலப்₄யரக்ஷகத்வாதி₃யான ஸ்வப₄ாவமுடையராயிருந்தார் என்றுமாம். அன்றியிலே, (பரமாத்மா) என்று, பரமாத்ம வாசியாய், "**अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः**" (அந்தர்ப₃ஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:) என்கிறபடியே ஸர்வமும் வ்யாப்யமாய்த் தாம் வ்யாபகரென்னலாம்படியிருந்தார் என்றுமாம். அன்றியிலே, (பரமாத்மா) என்று யத்நத்திலேயாய், "**यत्नवांश्च भविष्यासि**" (யத்நவாம்ச்ச ப₄விஷ்யாமி) என்றும், "**उत्साहः पौरुषं सत्त्वं**" (உத்ஸாஹ: பௌருஷம் ஸத்த்வம்) என்றும், மேலேமேலே உத்ஸாஹமுடையராயிருந்தார் என்றுமாம்.

வதாய், "பரமபுருஷன் சேதனர்க்குக் கைகால்களைக் கொடுக்கிறான்" [தை-நா 1-12] என்றும், "வாக்கு மனம் முதலானவற்றுக்கு ஒரே விஷயமாயிருப்பவனுக்கு" [ஸ்தோ-ர 21] என்றும், "எளிவரும் இயல்வினன்" [திருவாய் 1-2-2] என்றும், "ஸர்வேச்வரனான ஹரியிடம்தவிர வேறொருவரிடம் ரக்ஷிக்கும் வல்லமையில்லை" [வி-பு 1-22-21] என்றும், "காக்குமியல்வினன் கண்ணபெருமான்" [திருவாய் 2-2-9] என்றும் ஸௌலப்யம் (அடைவதற்கெளிமை), ரக்ஷணம், முதலான பெரிய ஸ்வபாவங்களை (தன்மைகளை)உடையவராயிருந்தார் என்றும் கொள்ளலாம். 7 (பரமாத்மா) ஆத்மாவென்றது 'பரமாத்மா' என்றதாய், பரமாத்மாவென்றது, பரமனான (எல்லாரிலும் மேலான) பரமாத்மா என்கிறதாகவும் கொள்ளலாம். "எல்லாவற்றையும் உள்ளும்புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்" [தை-நா 11] என்கிறபடியே எல்லாமும் தன்னால் வியாபிக்கப்படுவதாய் தாம் எல்லாவற்றையும் வியாபித்திருப்பவராகையாலே பரமன் (எல்லாரிலும் மேலானவன்) எனத்தக்க பரமாத்மா என்கை. 8. (பரமாத்மா) ஆத்மசப்தம் யத்னத்தைக் (முயற்சியைக்) குறிப்பதாய், "இவ்வில்லைவளைப்பதிலும், நான் ஏற்றுவதிலும் முயற்சியுடையவனாவேன்" [ரா-பா 67-14] என்றும், "முயற்சி, ஆண்மை, பலம், இரக்கம், செய்நன்றிமறவாமை, பராக்ரமம், பெருமை, ஆகியவை ராமனிடம் உள்ளன" [ரா-ஸு 37-15] என்றும் மேலேமேலே முயற்சியுடையவராயிருந்தார் என்றும் கொள்ள

அன்றியிலே, (பர்மாத்மா) என்று, அர்க்கவாசியாய். **"कपे रामदिवाकरः"** (கபே ராமதி$_3$வாகர:) என்றும், **"तेजसा सूर्यसङ्काशः"** (தேஜஸா ஸூர்யஸங்காஶ:) என்றும். "முளைக் கதிரை" என்றும், "சுடர்களிரண்டாய்" என்றும் ப்ரதாபாதி$_3$ களால்ஆதித்யன்தானுயிருந்தார்என்றுமாம்.அன்றியிலே,(பரமாத்மா) என்று, அக்$_3$நியாய், "அக்$_3$ரம் பத$_3$ம் நயதீத்யக்$_3$நி:" என்ருய், **"नयामि परमां गतिं"** (நயாமி பரமாம் க$_3$திம்) என்றும், **"कालाग्निसदृशः क्रोधे"** (காலாக்$_3$நிஸத்$_3$ருஶ: க்ரோதே$_4$) என்றும், **"निर्दहेदपि काकुत्स्थः क्रुद्धस्तीव्रेण चक्षुषा"** (நிர்த்த$_3$ஹேத$_3$பி காகுத்ஸ்த$_2$: க்ருத்$_3$த$_4$ஸ்தீவ்ரேண சக்ஷுஷா) என்றும், "நிலனுய்த்தீயாய்" என்றும், த$_3$ாஹகத்வாதி$_3$களாலே அக்நிதானுயிருந்தார் என்றுமாம். அன்றியிலே, (பரமாத்மா) என்று, மதிவாசியாய், **"बुद्धिमान् मधुराभाषी"** (பு$_3$த்$_3$தி$_4$மாந் மது$_4$ராபாஷீ) என்றும், **"बुद्ध्या ह्यष्टाङ्गया युक्तः"**(பு$_3$த்$_3$த்$_4$யாஹ்யஷ்டாங்க$_3$யா யுக்த:) என்றும், "மதியினுல் குறள்மாணுய்" என்றும், அவஸரோசிதபு$_3$த்$_3$தி$_4$யோகமுடையரென்றுமாம்.

லாம். 9. (பரமாத்மா) ஆத்மாவென்று ஸூர்யனைக் குறிப்பதாய், "(சர ஸமூஹங்களாகிற கிரணங்களைக்கொண்ட) ராமபிரானுகிற சூரியன் எதிரியரக்கர்களாகிய நீரை வற்றச்செய்துவிடுவான்" [ரா-ஸு 17-18] என்றும், "ஒளியால் சூரியனைப் போன்றவன் ராமன்" [ரா-ஸு 35-9] என்றும், "முளைக்கதிரை" [திருநெடு 14] என்றும், "சீரார் சுடர்களிரண்டாய்" [திருவாய் 6-9-1] என்றும் தபிக்கச்செய்யும் தன்மை முதலானவற்ருல் சிறந்த சூரியன் தானுகவே இருந்தான் என்றும் கொள்ளலாம். 10. (பரமாத்மா) ஆத்மசப்தம் அக்னியைக்குறிப்பதாய், "உயர்ந்த பதவிக்கு அழைத்துச் செல்கிருன்; ஆகையால் அக்னியாகிருன்" என்கிற வ்யுத்பத்தியின்படி "மேலான கதிக்கு அழைத்துச் செல்லுகிறேன்" [வராஹசரமம்] என்கிறபடியே பரமகதிக்கு அழைத்துச் செல்லுமவனுகையாலும், "ராமபிரான் கோபத்தில் ஊழிகால நெருப்பை ஒத்தவர்" [ரா-பா 1-18] என்றும், "கோபங்கொண்ட ராமபிரான் தீக்கக்கும் கண்ணாலே (என்னை) எரித்தும்விடுவார்" [ரா-ஸு 30-14] என்றும், "நிலனுய்த் தீயாய்" [திருவாய் 6-9-1] என்றும் எரிக்கும்தன்மை முதலானவற்ருலும் சிறந்த அக்னி தானுகவே இருந்தார் என்றும் கொள்ளலாம். 11. (பரமாத்மா) ஆத்மசப்தம் புத்தியைச் சொல்லுவதாய், "புத்தியுடையவன்; இன்சொற்பேசுபவன்" [ரா-அ 1-13] என்றும், "எட்டு அங்கங்களோடுகூடிய புத்தியை உடையவன்" [ரா-கி 54-2] என்றும், "மதியினுல் குறள்மாணுய்" [திருவாய் 1-4-3] என்றும் ஸமயத்திற்குத்தக்க புத்தியை உடையவர் என்றும் கொள்ளலாம்.

அன்றியிலே. (பரமாத்மா) என்று வாதவாசியாய். **"तस्मै वातात्मने नमः"** **(தஸ்மை வாதாத்மநே நம:)** *என்றும். "காலாய்" என்றும். ஸர்வப்ராணிப்ராணந ஹேதுவான காற்றுத் தானுயிருந்தார்.*

இதெல்லாம் என்? **"परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन् पुरुषः परः"** **(பரமாத்மேதி சாப்யுக்தோ தே$_{3}$ஹேஸ்மிந் புருஷ: பர:)** *என்று பரமாத்மஶப்த$_{3}$ம் முக்தனுக்கும் பேராயிருந்தது. இது வ்யாவர்த்தகமாகமாட்டது என்ன: (ஸநாதந: பரமாத்மா) முக்தன் நெடுங்காலம் ப$_{3}$த்$_{3}$த$_{4}$னுய்த்திரிந்து, பின்பு முக்தனுனலன்றே பரமாத்மஶப்$_{3}$த$_{3}$வாச்யத்வம் வருவது; இவன் எப்போதும் பரமாத்மஶப்$_{3}$த$_{3}$வாச்யனுயேயிருக்கும். (ஸநாதந: பரமாத்மா) இவன்.* **"नित्यं विभुं सर्वगतं"** **(நித்யம் விபு$_{4}$ம் ஸர்வக$_{3}$தம்)** *என்று ஸர்வகாலத்திலும், ஸர்வதே$_{3}$ஶத்திலும், ஸர்வவஸ்துக்களிலும் இருக்கும்.*

---

12. (பரமாத்மா) ஆத்மபதம் வாயுவைக்குறிப்பதாய், "வாயுரூபியாயிருக்கும் அவனுக்கு நமஸ்காரம்" [வி-பு 1-14-31] என்றும், "காலாய்" [திருவாய் 6-9-1] என்றும் அனைத்துயிரும் உயிர்விடக்காரணமாகையாலே சிறந்த காற்றுத்தானுயிருந்தார்.

இதெல்லாமிருந்தென்ன? "இந்த தேஹத்திலிருக்கும் அளவற்ற அறிவு முதலானவற்றை உடைய இந்த ஜீவன் பரமாத்மா என்றும் சொல்லப்படுகிறுன்" [கீதை 13-22] என்கிறபடியே பரமாத்மசப்தம் அளவற்ற அறிவையுடைய முக்தனுக்கும் பெயராயிருந்தது. ஆகையால், இது அவனிலும் இவனை வேறுபடுத்தித் தராது எனில்: 1. (ஸநாதனனுன (பழையோனுன) பரமாத்மா) நெடுங்காலம் ஸம்ஸாரத்தில் கட்டுண்டுகிடந்து பின்பு முக்திபெற்றுலன்றே ஜீவன்பரமாத்மா எனத்தக்கவனுவது. இவன் எல்லாக்காலத்திலும் பரமாத்மாவெனத்தக்கவன் என்கிறது. 2. (ஸநாதனனுன பரமாத்மா) இவன் "எல்லாக்காலத்திலுமிருப்பவன்; எல்லா இடத்திலுமிருப்பவன்; எல்லாப்பொருள்களிலும் (பரிபூர்ணமாக) இருப்பவன்" [முண்ட 1-1-6] என்று எல்லாக்காலத்திலும், எல்லாதேசத்திலும், எல்லாப் பொருள்களிலுமிருப்பவன் என்று கருத்து.

(ஸநாதந: பரமாத்மா) என்றாலும், ஆத்மஶப்$_3$த$_3$ம் தே$_3$ஹவாசியாய் அசித்தாகையாலும். "**नित्रं सदसदात्मकं**" (**நித்யம் ஸத$_3$ஸத$_3$ாத்மகம்**) என்றும். "**नित्या सततविक्रिया**" (**நித்யா ஸததவிக்ரியா**) என்றும் அசித்துத்தான் ஸநாதனமாகையாலும் பரவஸ்துவாகக்கூடாதோ? என்னில்: (அநாதி$_3$மத்$_4$ய நித$_4$ந:) அசித்து ஸ்வரூபேண நித்யமாகிலும் ஆதி$_3$மத்$_4$யாவஸாநங்களுண்டு; இவன், "**अनादिमध्यान्तमजमवृद्धिक्षयमच्युतम्**" (**அநாதி$_3$மத்$_4$யாந்தமஜமவ்ருத்$_3$தி$_4$க்ஷயமச்யுதம்**) என்று அசித்துப்போலே ஆதி$_3$மத்$_4$யாவஸாநங்களின்றிக்கேயிருக்கும். (அநாதி$_3$மத்$_4$யநித$_4$ந:) ஆதி$_3$மத்$_4$யநித$_4$நங்கள் மூன்றுக்கும் ஒவ்வொன்றுக்கு இரண்டவஸ்தை$_2$யாய், "**अस्ति जायते परिणमते विवर्धते अपक्षीयते विनश्यति**" (**அஸ்தி ஜாயதே பரிணமதே விவர்த்த$_4$தே. அபக்ஷீயதே விநஶ்யதி**) என்று அசித்து ஷட்$_3$ப$_4$ாவவிகாரயுக்தமாயிருக்கும். இவன் அப்படியன்றிக்கே. "**अपक्षयविनाशाभ्यां परिणामर्धिजन्मभिः। वर्जितः शक्यते**

"ஸநாதனனான பரமாத்மா" என்றாலும், 'ஆத்மந்' சப்தம் தேஹத்தைச் சொல்லக்கூடியதாய், அசேதனமாகையாலும், "மூலப்ரக்ருதி எப்போதும் உள்ளதும் இல்லதுமாயிருப்பது" [வி-பு 1-2-19] என்றும், "எப்போதுமிருப்பதாய், எப்போதும் விகாரமடைவதாயிருப்பது ப்ரக்ருதி" [பரமஸம்ஹிதை 2-18] என்றும் சொல்லுகிறபடியே அசேதனமும் எப்போதுமிருப்பதாகையாலும் இங்கு சொல்லப்படும் ஸநாதந பரமாத்மாவாகக் கூடாதோ? எனில்: 1. (முதலும் நடுவும் முடிவுமில்லாதவர்) அசேதநமானது ஸ்வரூபத்தால் நித்யமானாலும், விகாரத்துக்கு உட்படக் கூடியதாகையாலே. முதலும், நடுவும், முடிவுமுண்டு. இவர் "முதலும் நடுவும் முடிவுமில்லாதவனும், பிறப்பற்றவனும், வளருதல் குறைதலில்லாதவனுமான அச்யுதனை வணங்கினேன்" [வி பு 1-17-15] என்று அசேதனத்தைப்போலே முதலும் நடுவும் முடிவுமில்லாமலிருப்பவர். 2. (முதலும், நடுவும், முடிவுமில்லாதவன்) முதல், நடுவு, முடிவு என்னும் மூன்றுக்கும் ஒவ்வொன்றுக்கு இரண்டிரண்டு நிலையாய், "1. இருக்கிறது; 2. பிறக்கிறது (ஆதி); 3. பரிணாமமடைகிறது; 4. வளர்கிறது (மத்$_4$யம்); 5. குறைகிறது; 6. அழிகிறது (முடிவு)" என்னும் ஆறுவிதமான ப$_4$ாவ (பொருள்) விகாரங்களை உடையதாயிருக்கும் அசேதனம். இவன் அப்படியல்லாமல், "குறைதல் அழிதல் (என்னும் முடிவும்), பரிணமித்தல்,

चक्षु यः सदास्तीति केवलम्'' (அபக்ஷயவிநாஶாப்₄யாம் பரிணா மர்த்₃தி₄ஜந்மபி₄:। வர்ஜித: ஶக்யதே வக்தும் யஸ்ஸதா₃ஸ்தீதி கேவலம்॥) என்று ஸர்வதா ஸத்தையேயாய், வ்யதிரிக்தா வஸ்தாபஞ்சகங்களின்றிக்கேயிருக்கும்.

''स्थूलसूक्ष्मात्मने नमः'' (ஸ்தூ₂லஸூக்ஷ்மாத்மநே நம:) ''अव्यक्तव्यक्तरूपाय'' (அவ்யக்தவ்யக்தரூபாய) என்று அசித்துத்தான் ஸூக்ஷ்மமாய் அவ்யக்தமாய், ஸ்தூ₂லமாய் வ்யக்தமாய் இரண்டவஸ்தையாய் ஆயிற்று இருப்பது. ஸ்தூலமாய் விகாரமென்று பேரையுடைத்தான ப்ருதி₂வ்யாதி₃களுக்காயிற்று ஆதி₃மத்₄யாதி₃கள் உள்ளது; ஸூக்ஷ்ம

வளர்தல் (என்னும் நடுவும்), பிறத்தல் (என்னும் முதலும்) ஆகிய இவ்வைந்தும் அற்றவனாய், எப்போதும் 'இருக்கிறான்' என்றே சொல்லத்தக்கவனாயிருப்பவன்'' [வி-பு 1-2-11] என்று எப்போதும் இருப்பு ஒன்றேயாய், மற்ற ஐந்து நிலைகளும் அற்றவனாயிருப்பவன்.

''அவ்யக்தத்தையும், வ்யக்தத்தையும் உருவமாகக்கொண்டு, ஸ்தூல ஸூக்ஷ்மப்ரபஞ்சமாயிருக்கும் பரம்பொருளுக்கு வணக்கம்'' [வி-பு 1-2-3] என்று அசேதனம் இரண்டு நிலைகளையுடையது; ஸ்தூலமாய், வ்யக்தம் (வெளிப்படையாக அறிப்படுவது) எனப்படுவதான பூமி முதலானவை ஒருநிலை; ஸூக்ஷ்மமாய், அவ்யக்தம் (வெளிப்படையாக அறியப்படாதது) எனப்படும் மஹான் முதலானவை மற்றொருவகை. ஸ்தூலமான பூமி முதலானவை நம்மால் அறியப்படுபவையாகையாலே வ்யக்தமெனப்படுபவை. வேறொரு தத்வத்தை உண்டுபண்ணக்கூடியவையல்லவாகையாலே விகாரம் என்றே சொல்லப்படுபவை. மூலப்ரக்ருதியானது அறியப்படாததாகையாலே அவ்யக்தமென்றும், வேறொன்றின் விகாரமல்லாமையாலே, 'அவிக்ருதி' என்றும் கூறப்படுவது. மஹான், அஹங்காரம், ஐந்து தந்மாத்ரைகள் ஆகிய ஏழும் ப்ரக்ருதி முதலானவற்றின் விகாரமாய், பூமி முதலானவற்றுக்குக் காரணம் (ப்ரக்ருதி) ஆயிருக்கையாலே ப்ரக்ருதி விக்ருதி என்னப்படுகின்றன. இவையும் நம்மால் அறியப்படாமையாலே அவ்யக்தம் எனப்படும். ஆக, இருபத்துநாலு அசேதந தத்துவங்களில் மூலப்ரக்ருதியானது அவிருக்தியென்றும், மஹதஹங்கார தந்மாத்ரைகள் ஏழும் ப்ரக்ருதி விக்ருதியென்றும், பூமி முதலான ஐந்துபூதங்கள், பதினொரு இந்திரியங்கள் ஆகிய பதினாறும் (கேவல) விகாரம் என்றும் சொல்லப்படுபவை என்று கூறப்பட்டதாயிற்று. ''மூலப்ரக்ருதிரவிக்ருதி:

மாய், ப்ரக்ருதிவிக்ருதியான மஹதா₃தி₃களுக்கு. "त्रिगुणं यज्जगद्योनिरनादिप्रभवाप्ययं" (த்ரிகு₃ணம் யஜ்ஜக₃த்₃யோநிரநாதி₃ ப்ரப₄வாப்யயம்) என்று ஆதி₃மத்₄யாதி₃களில்லையே? என்ன; (மஹத: பரம:) அப்படியிருக்கிற மஹானுக்கும் அவ்வருகாயிருக்கும். (மஹத: பரம:) இவ்வருகுள்ள கார்ய வர்க்கங்களில் பெருத்து மஹானென்று சொல்லலாம்படியான மஹத்தத்வத்துக்கும் அவ்வருகாயிருக்கும்.

"மஹத: பரம:" என்றால், "महतः परमव्यक्तमव्यक्तात्पुरुषः परः" (மஹதः பரமவ்யக்தமவ்யக்தாத் புருஷः பர:) என்று மஹானுக்குப் பரம் அவ்யக்தமன்றோ? அதுவானாலோ?

மஹதா₃த்₃யா: ப்ரக்ருதிவிக்ருதய: ஸப்த ஷோட₃சகஸ்து விகார:" [விகாரமல்லாதது மூலப்ரக்ருதி; மஹதஹங்கார தந்மாத்ரைகளாகிற ஏழும் ப்ரக்ருதியாகவும், விக்ருதியாகவுமிருப்பவை; பதினொரு இந்திரியங்களும், ஐந்து பூதங்களுமாகிற பதினாறும் விகாரமாகவேயிருப்பவை] என்ற ஸாங்க்யகாரிகையை நோக்குவது. ஸிற்க; விகாரமெனப்படுமவையும், ஸ்தூலமானவையும், வ்யக்தமெனப்படுமவையுமான பூமி முதலானவற்றுக்கு மாத்திரமே முதலும், நடுவும், முடிவுமுள்ளது; ப்ரக்ருதிவிக்ருதிகளாய், ஸூக்ஷ்மமாய், அவ்யக்தமெனப்படும் மஹான் முதலான ஏழுக்கும் "முதலும், நடுவும், முடிவுமற்றதாய், பூமி முதலானவற்றுக்குக் காரணமாய், முக்குணமயமானது" [வி-பு 1-2-21] என்று முதலும் நடுவும் முடிவும் கிடையாதே? அப்படிப்பட்ட மஹான் முதலானவற்றில் ஒன்றாகக் கொள்ளக்கூடாதோ பரம்பொருளை? எனில்: 1. (மஹானைக்காட்டிலும் பெரியவன்) அப்படியிருக்கும் மஹானுக்கும் பெரியவனாயிருப்பவனிவன். 2. (மஹானைக்காட்டிலும் பெரியவன்) இவ்வுலகிலுள்ள கார்யப்பொருள்கள் அனைத்திலும்பெருத்து 'மஹான்' என்று சொல்லலாம்படியான மஹத் தத்வத்திலும் பெரியவனாயிருப்பவனிவன்.

"மஹானைக்காட்டிலும் பெரியது" என்றாலும், "மஹத்தைக்காட்டிலும் பெரியது அவ்யக்தம்; அவ்யக்தத்தைக்காட்டிலும் புருஷன் பெரியவன்"* [கட 1-3-11] என்று மஹானுக்கும் மேற்பட்டது 'அவ்யக்தம்' எனப்படும் மூலப்ரக்ருதியின் நிலையன்றோ? பரம்பொருள் அதுவானாலோ?

---

* இவ்விடம் பூர்வபக்ஷியின் கேள்வியாகையாலே ஸாங்க்யமதரீதியில் இந்த ச்ருதிக்குப் பொருள் கொள்ளப்பட்டது. ஸித்தாந்தத்தில் இது பொருளல்ல. முன்பின் பூர்வபக்ஷங்களும் இப்படியே. "மஹாநவ்யக்தே லீயதே" என்னும் ஸுபாலோபநிஷத் வாக்யத்தை உட்கொண்டு ஸித்தாந்தம் அருளுகிறார்.

என்ன; (மஹாந்) "महतो महीयान्" (மஹதோ மஹீயாந்) என்றும், "महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति" (மஹாந்தம் விபு₄மாத்மாநம் மத்வா தீ₄ரோ ந ஶோசதி) என்றும், பெரியதுக்கும் பெரியதாய், முமுக்ஷூபாஸ்யமுமாயிருக்கும்.

ஆக, இந்த ச்லோகத்தால், லீலாவிபூ₄தியோக₃மும் அங்குள்ள சேதநாசேதநவைலக்ஷண்யமும் சொல்லிற்று.

இரண்டாம் ச்லோகம்

இரண்டாம் ஶ்லோகத்தாலே,—'மஹத: பரமோ மஹாந்' என்று மஹத₃வ்யக்தங்களில் வ்யாவ்ருத்தனைப் பெருத்திருக்குமென்றே சொல்லிநின்றது; "अव्यक्तमक्षरे लीयते" (அவ்யக்தமக்ஷரே லீயதே) என்றும், "मम योनिर्महद्ब्रह्म" (மம யோநிர் மஹத்₃ ப்₃ரஹ்ம) என்றும், "तेनाग्रे सर्वमेवासीद्व्याप्तम्" (தேநாக்₃ரே ஸர்வமேவாஸீத்₃வ்யாப்தம்) என்றும், "तदनन्तमसङ्ख्यातमप्रमाणञ्च" (தத₃நந்தமஸங்க்₂யாதமப்ரமாணஞ்ச) என்றும், "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்

எனில்: (பெரியவன்) "பெரியதுக்கும் பெரியவன்" [கட 1-2-20] என்றும், "பெரியவனும், ஸர்வவ்யாபியுமான பரமாத்மாவை உபாஸித்து, அறிவாளியானவன் வருந்துவதில்லை" [கட 1-2-22] என்றும் அவ்யக்தமாகிற பெரியதுக்கும் பெரியவனாய் மோக்ஷமடைய விரும்புவாரால் உபாஸிக்கத் தக்கவனாயிருப்பவனிவன்.

ஆக, இந்த முதல் ச்லோகத்தால், லீலாவிபூதியை உடையவன் என்பதும், அதிலுள்ள சேதனர், அசேதனம் ஆகிய அவைவரிலும் சிறந்தவன் என்பதும் சொல்லப்பட்டதாயிற்று.

இரண்டாம் ச்லோகம்

இரண்டாம் ச்லோகத்தாலே சொல்லுவதாவது:—சென்ற ச்லோகத்திலே "மஹானைக்காட்டிலும் பெரியவன் (அவ்யக்தத்தைக்காட்டிலும்) பெரியவன்" என்ற மஹானையும், அவ்யக்தத்தையுங்காட்டிலும் பெரியது பரம்பொருள் என்று சொல்லிநின்றது; "அவ்யக்தம் என்னும் ப்ரக்ருதி நிலை (தனக்கு முந்திய) அக்ஷரம் என்னும் ப்ரக்ருதிநிலையில் லயிக்கிறது; அக்ஷரம் தமஸ் என்னும் மூலப்ரக்ருதியில் லயிக்கிறது" [ஸுபாலோபனிஷத்] என்றும், "(உலகிற்குக்) காரணமான என்னுடைய பெரியதான ப்ரஹ்மமெனப்படும் ப்ரக்ருதியிலே சேதனஸமூஹமான கர்ப்பத்தை சேர்ப்பிக்கிறேன்" [கீதை 14-3] என்றும், "அந்த மூலப்ரக்ருதியாலே ப்ரளய காலத்தில் இவையெல்லாம் விழுங்கப்பட்டிருந்தது" [வி-பு 1-2-21] என்

பெரும்பாழ்'' என்றும் இவ்வருகுள்ளவற்றுக்கெல்லாம் மேலாய்ப் பெருத்திருப்பது தமச்ஶப்த$_3$வாச்யையான மூல ப்ரக்ருதியன்றோ? என்ன: (தமஸ: பரம:) **"आदित्यवर्णं तमसः परस्तात्" (ஆதி$_3$த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்)** என்றும், **"क्षयन्तमस्य रजसः पराके" (க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே)** என்றும் ரஜஸ்தம:ஶப்த$_3$வாச்யையான மூலப்ரக்ருதிக்கும் அவ்வருகாயிருக்கும். (தமஸ: பரம:) **"अथ यदतः परोदिवो ज्योतिर्दीप्यते" (அத$_2$ யத$_3$த: பரோதி$_3$வோ ஜ்யோதிர் தீ$_3$ப்யதே)** என்றும், **"हिरण्मये परे लोके" (ஹிரண்மயே பரே லோகே)** என்றும், **"वैकुण्ठे तु परे लोके...आस्ते" (வைகுண்டே$_2$து பரே லோகே...ஆஸ்தே)** என்றும், ப்ராக்ருதத்தைக் கடந்து அவ்வருகாயிருக்கிறவன்.

''தமஸ: பரம:'' என்றுலென்? **"अतीत्य प्राकृतान् लोकान्" (அதீத்ய ப்ராக்ருதாந் லோகாந்)** என்றும், **"तद्विष्णोः परमं पदं"**

றும், ''அந்த மூலப்ரக்ருதியானது காலத்தால் அளவற்றதாயும், (யோஜனை) முதலான எண்ணிக்கையற்றதாகவும், அளவற்றதாகவுமுள்ளது'' [வி-பு 2-7-26] என்றும், ''சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும்பாழ்'' [திருவாய் 10-10-10] என்றும், தன் கார்யங்களான அக்ஷரம், அவ்யக்தம்' மஹான் முதலான எல்லாவற்றிலும் மேலாய்ப் பெருத்திருக்கும் 'தமஸ்' எனப்படும் மூலப்ரக்ருதியன்றோ பரம்பொருள்? என்ன,-1. (தமஸ்ஸுக்கும் மேற்பட்டவன்) ''சூரியன்போன்ற ஒளியுடையவனாய், தமோகுணமுடையதாகையாலே தமஸ் எனப்படும் மூலப்ரக்ருதிக்கு மேற்பட்டவன்'' [பு-ஸூ] என்றும், ''ரஜோகுணமுடையதாகையாலே 'ரஜஸ்' எனப்படும் மூலப்ரக்ருதிக்கு மேலே எழுந்தருளியிருப்பவனே'' [ருக்வேதம் மண் 7-6-100-5] [ஸாம-உத்தர 17-2-7-2] என்றும், ரஜஸ் என்றும், தமஸ் என்றும், சொல்லப்படும் மூலப்ரக்ருதிக்கும் மேற்பட்டிருப்பவன் இவன். 2. (தமஸ்ஸுக்கும் மேற்பட்டவன்) ''அப்ராக்ருதவுலகின்மேல் யாதொரு சோதி விளங்குகின்றதோ'' [சாந் 3-13-7] ''பொன்மயமான மேலான உலகில் குற்றமற்ற ப்ரஹ்மமிருக்கிறது'' [முண்ட 2-2-10], என்றும், ''மேலான உலகமான வைகுண்டத்தில் ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளியிருக்கிறான்'' [லிங்கம்] என்றும் ப்ரக்ருதி மண்டலத்தைக் கடந்து அப்பாலிருப்பவன்.

''தமஸ்ஸைக்காட்டிலும் மேலானது'' என்றதாலென்ன? ''ப்ரக்ருதி மண்டலத்தைச் சேர்ந்த உலகங்களைத் தாண்டி'' [ ] என்றும்,

(தத்$_3$ விஷ்ணோ: பரமம் பத$_3$ம்) என்றும், "**विश्वतः पृष्ठेषु सर्वतः पृष्ठेषूत्तमेष्वनूत्तमेषु लोकेषु**" (விஶ்வத: ப்ருஷ்டே$_2$ஷு ஸர்வத: ப்ருஷ்டே$_2$ஷூத்தமேஷ்வநூத்தமேஷு லோகேஷு) என்றும், இப்ரக்ருதிக்கு மேலாயிருப்பது பரமபதமன்றோ? என்ன: (த$_4$ாதா) "**विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत्**" (விஷ்டப்$_4$யாஹமித$_3$ம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்தி$_2$தோ ஜக$_3$த்) என்று உபயவிபூ$_4$தியும் த$_4$ார்யமித்தனைபோக்கி, த$_4$ாரகனானவனன்றோ? (த$_4$ாதா) "**डुधाञ् धारणपोषणयोः**" (டு$_3$ த$_4$ாஞ் த$_4$ாரண போஷணயோ:) என்றும், "**रसं ह्येवायं लब्ध्वाऽऽनन्दी भवति**" (ரஸம் ஹ்யேவாயம் லப்$_3$த்$_4$வாऽऽநந்தீப$_4$வதி) என்றும், "எனக்கே தன்னைத்தந்த கற்பகம்" என்றும் தன்னை ஸர்வ ஸ்வத$_3$ாநம் பண்ணியிருக்கிறவன். (த$_4$ாதா) "முகுந்த$_3$:" என்றும், "**सकलफलप्रदः**" (ஸகலப$_2$லப்ரத$_3$:) என்றும், "**भुक्त्वा च भोगान्विपुलान्...मम लोकमवाप्स्यसि**" (பு$_4$க்த்வாச பே$_4$ாக$_3$ாந் விபுலாந் மம லோகமவாப்ஸ்யஸி) என்றும், "போகம் நீயெய்திப் பின்னும் நம்மிடைக்கே போதுவாய்" என்றும் பே$_4$ாக$_3$

"அது விஷ்ணுவின் மேலான பதம்" [கட 1-3-9] என்றும், "வ்யஷ்டி தத்வத்துக்கும் மேலாய், ஸமஷ்டி தத்வத்துக்கும் மேலாய், தம்மைக் காட்டிலும் மேலானதிலில்லாத மிகச்சிறந்த லோகங்களில்" [சாந் 3-13-7] என்றும், இந்தப் பிரகிருதிக்கும் மேலாயிருப்பது பரமபதமன்றோ? எனில்: 1. (தாதா) "இவ்வுலகம் முழுவதையும் என் சக்திலேசத்தாலே தரித்து நிற்கிறேன்" [கீதை 10-42] என்று, லீலாவிபூதியான இவ்வுலகைப்போலே, பரமபதமாகிற நித்யவிபூதியும் அவனால் தரிக்கப்படுவதேயொழிய, தரிப்பவனான இவனேயன்றோ பரம்பொருள். 2. (தாதா) "டு$_3$த$_4$ாஞ்-த$_4$ாரண போஷணயோ:" என்று தாதுவாகையாலே, "ரஸமயமானவனான பரம்பொருளை அடைந்து, முக்தன் ஆநந்தமுடையவனாகிறான்" [தை-ஆந 7-1] என்றும், "எனக்கே தன்னைத்தந்த கற்பகம்" [திருவாய் 2-7-11] என்றும் ஆநந்தமயனான தன்னையே எனக்களித்துப் போஷிக்கிறவன் என்றுமாம். 3. (தாதா) "'மு' என்று முக்தியையும், 'கு' என்று பூமியில் உள்ள போகங்களையும் தருபவனாகையாலே முகுந்தன்" என்கிற முகுந்தநாம வ்யுத்பத்தியாலும், "எல்லாப் பலன்களையுமளிப்பவனன்றோ விஷ்ணு" [விஷ்ணுதர்மம் 43-47] என்றும், "விசாலமான போகங்களை அனுபவித்து விட்டு, அதற்குப்பின் என் அருளாலே என் நினைவு ஏற்பட்டு என் உலகை அடைவாய்" [வி-பு 5-19-26] என்றும், "போகம் நீ எய்திப் பின்னும் நம்மிடைக்கே போதுவாய்" [பெரியதிரு 5-8-5] என்றும் பிரமாணங்கள் சொல்லுகிறபடியாலும், இவ்வுலக போகங்களையும் மோக்ஷத்தையும்

மோக்ஷப்ரதன் என்றுகவுமாம். (தா₄தா) "करणकलेबरैः" (கரண களேப₃ரை:) என்றும், "सङ्कल्पादेवास्य पितरः समुत्तिष्ठन्ति" (ஸங் கல்பாதே₃வாஸ்ய பிதர: ஸமுத்திஷ்ட₂ந்தி) என்றும், "स एकधा भवति...सहस्रधा भवति" (ஸ ஏகத₄ா ப₄வதி...ஸஹஸ்ரத₄ா பவதி) என்றும் ஸம்ஸாரிகளுக்கு ஸ்வப்ராப்த்யுபாயோபகரண மாகவும், முக்தருக்கு ஸ்வாநுப₄வோபகரணமாகவும் கரண களேப₃ரப்ரத₃ன் என்றுகவுமாம். அன்றியிலே, (தா₄தா) "यद्द्रव्यं यद्द्रव्यस्य सर्वात्मना स्वार्थे नियन्तुं धारयितुञ्च शक्यं तच्छेषतैकस्वरूपञ्च तत्तस्य शरीरं" (யத்₃த்₃ரவ்யம் யத்₃த்₃ரவ்யஸ்ய ஸர் வாத்மநா ஸ்வார்த்தே₂ நியந்தும் தா₄ரயிதுஞ்ச ஶக்யம் தச்சே₂ ஷதைகஸ்வரூபஞ்ச தத் தஸ்ய ஶரீரம்) என்றும், "यस्यात्मा शरीरं यस्य पृथिवी शरीरं" (யஸ்யாத்மா ஶரீரம் யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம்) என்றும் ஸ்வஶரீரபூ₄தசேதநாசேதநங்களை ஆத்ம தயா நின்று த₄ரிக்கும் என்றுகவுமாம்.

கொடுத்து எல்லாச் சேதனரையும் போஷிப்பவன் என்றுமாம். 4. (தாதா) ஸ்ருஷ்டிகர்த்தாவான பிரமனிடத்தில் ரூடியை உடையதாகையாலே, இங்கு ஸ்ருஷ்டிப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். "ப்ரளயத்தில் அசேதனத் தோடு வாசியில்லாமல் கிடக்கும் ஸம்ஸாரிஜீவர்களைக்கண்டு, அவர்களுக்கு தேஹேந்திரியங்களைக் கொடுக்க மனமிரங்கியவனாய் ப்ரக்ருதியை ஸ்ருஷ்டிக்கிறாய்" [ர-ஸ்த 2-41] என்றும், "முக்தன் பித்ருலோகத்தை அடைய விரும்பினானாகில், ஸங்கல்பத்தினாலேயே இவனுடைய பித்ருக்கள் உயரக்கிளம்பி வருகிறார்கள்" [சாந் 8-2-1] என்றும், "முக்தன் ஒருரு வெடுக்கிறான்; ஆயிரம் உருவெடுக்கிறான்" [ ] என்றும், ஸம் ஸாரிகள் தன்னையடைய உதவும் உபாயங்களை அனுஷ்டிக்க உதவும் உறுப் புக்களாகவும், முக்தர்களுக்குத் தன்னை அநுபவிக்க உறுப்பாகவும் (முறையே) ப்ராக்ருதமானதும், அப்ராக்ருதமானதுமான தேஹேந்திரி யங்களைக் கொடுப்பதற்காக அவற்றை ஸ்ருஷ்டிப்பவன் என்றுமாம். 5. (தாதா) "யாதொரு திரவியம் மற்றொரு திரவியத்திற்கு எல்லாவிதத் திலும், தனக்காக நியமிப்பதற்கும் தரிப்பதற்கும் தகுந்ததாக இருக்கிறதோ, அந்த மற்றொரு திரவியத்திற்கு சேஷமாயிருக்கையையே இயற்கையாகக் கொண்டதாகவும் உள்ளதோ, அந்த திரவியம், அந்த மற்றொரு திரவியத் திற்கு சரீரம்" [ஸ்ரீபாஷ்யம் 2-1-9] என்றும், "எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவனுக்கு பூமி சரீரமோ" [ப்ருஹ 5-7] என்றும் தனக்கு சரீரமான சேதநாசேதனங்களை ஆத்மாவாய் நின்று தரிப்பவன் என்றுமாம். [டு₃த₄ாஞ் த₄ாரண போஷணயோ:" என்றதாதுவில் தாரணார்த்தத்தம் இங்கு கொள்ளப்பட்டது.]

இதெல்லாமென்? "தமஸ: பரமோ த$_4$ாதா" என்றால், ப்ரக்ருதி மண்டலத்துக்கு மேலாய், **"भक्तैर्भागवतैः सह आस्ते विष्णुः"** (ப$_4$க்தைர் ப$_4$ாக$_3$வதைஸ் ஸஹ ஆஸ்தே விஷ்ணு:) என்றும், **"क्षयन्तमस्य रजसः पराके"** (க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே) என்றும், **"प्रजापतेः सभां वेश्म प्रपद्ये"** (ப்ரஜாபதே: ஸப$_4$ாம் வேச்ம ப்ரபத்$_3$யே) என்றும், ஸ்ரீவைகுண்டநாதனும் ஸூரிகளும் முக்தரும் எழுந்தருளியிருக்க ஆத$_4$ாரமாயிருக்கிறது திருமாமணிமண்டபமும், திவ்யலோகமுமன்றோ? என்ன; (ஶங்க$_2$ சக்ர க$_3$த$_3$ாத$_4$ர:) "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ" என்று கேட்கலாம்படி அநுகூலர்க்கு ஆஶ்வாஸம் பண்ணுகிற ஸ்ரீபாஞ்சஜந்யமென்ன, **"ग्राहं चक्रेण माधवः"** (க்$_3$ராஹம் சக்ரேண மாத$_4$வ:) என்றும், "கருதுமிடம் பொருது" என்றும் ப்ரதிகூலரை நிரஸிக்கிற திருவாழியாழ்வானென்ன, **"कौमोदकीं ज्ञानविकासहेतुं"** (கௌமோத$_3$கீம் ஜ்ஞாநவிகாஸ ஹேதும்) என்று ஆஶ்ரிதர்க்கு ஜ்ஞாநவிகாஸஹேதுவாய்

இதனாலெல்லாம் என்னபயன்? "தமஸ்ஸுக்கு மேற்பட்டது; தரிப்பது" என்றாலும், பிரகிருதிமண்டலத்திற்கு மேலேயிருப்பதாய், "பக்தர்களோடும், பாகவதர்களோடும்கூட விஷ்ணு எழுந்தருளியிருக்கிறான்" [லிங்கம்] என்றும், "ரஜஸ் எனப்படும் மூலப்ரக்ருதிக்குமேலே எழுந்தருளியிருப்பவனை" [ருக்-மண் 7-6-100-5] என்றும், "பிரஜாபதியான பரமபுருஷனின் சபையிருக்குமிடத்தை அடைகிறேன்" [சாந் 8-14-1] என்றும் ஸ்ரீவைகுண்டநாதனும், நித்யஸூரிகளும், முக்தரும் எழுந்தருளியிருக்க ஆதாரமாயிருக்கிறது திருமாமணிமண்டபமும், திவ்யலோகமுமன்றோ? ஆகவே அதுவே 'த$_4$ாதா' ஆகலாமே? எனில்: (சங்கசக்ரகதாதரன்) "கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்திருக்குமோ?" [நாச்-திரு 7-1] என்று கேட்கலாம்படி. அன்புடையார்க்கு ஆறுதலளிக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யமென்ன, "முதலையைச் சக்கரத்தினால் மாதவன் அறுத்தான்" [விஷ்ணுதர்மம் 69-81] என்றும், "கைந்நின்றசக்கரத்தன் கருதுமிடம் பொருது" [திருவாய் 10-6-8] என்றும் எதிரிடுவோரை நிரஸிக்கிற ஸுதர்சனாழ்வானென்ன, "அறிவு மலருவதற்குக் காரணமான கௌமோதகியெனும் கதையை" [ ] என்று

புத்த்₄யபி₄மாநிநியான க₃தை₃யென்ன இவற்றையுடையவர். (ஶங்க₂சக்ரக₃த₃ாத₄ர:) என்று ஸ்ரீபஞ்சாயுதோ₄பலக்ஷண மாகவுமாம்.

இத்தாலென்?"मम साधर्म्यमागताः"(மம ஸாத₄ர்ம்யமாக₃தா:) என்றும், "தம்மையே ஒக்க அருள்செய்வர்" என்றும் ஸாருப்யம்பெற்ற நித்யஸூரிகளும் சக்ராதி₃த₄ரராயன்றோ இருப்பது என்ன; (ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ:) அசித்தத்வாபி₄மாநியாகையாலே,"यवनिका माया जगन्मोहिनी" (யவநிகா மாயா ஜக₃ந்மோஹிநீ) என்றிருக்கிற அந்த:புரநாச்சிமாரை உடையவர். இரண்டத்தொன்று அமைந்திருக்க, இரண்டு விஶேஷணமென்? என்னில்: "समस्तहेयरहित" (ஸமஸ்தஹேயர

அடியார்க்கு அறிவு மலரக் காரணமாய், புத்திக்கு அபிமானி தேவதை யான கதையென்ன இவற்றை உடையவர். சங்கம், சக்கரம், கதை என்னும் மூன்று ஆயுதங்களைச் சொன்னது, பஞ்சாயுதங்களில் மற்றுமுள்ள சார்ங்கமென்னும் வில்லையும், நாந்தகமென்னும் வாளையும் உபலக்ஷண முறையாலே காட்டுவதாகவுமாம்.

இதனாலென்ன? "என்னோடு ஒத்த தன்மையுடையவராய்" [கீதை 14-2] என்றும், "தம்மையே ஒக்க அருள்செய்வர்" [பெரிய திரு 11-3-5] என்றும் ஸமாநரூபத்தை அடைந்த ஜயன் விஜயன் முதலான நித்யஸூரிகளும் சங்கம், சக்ரம் முதலானவற்றை உடையவராயன்றோ இருப்பது? அவர்களையும் குறிக்கலாமே? என்ன: (ஸ்ரீவத்ஸத்தை மார்பி லுடையவன்; எப்போதும் திருவையுடையவன்) ஸ்ரீவத்ஸம் என்னும் மறு எம்பெருமானுடைய திருமார்பிலிருப்பது; அது மூலப்ரக்ருதிக்கு அபிமானினி தேவதை. "யவநிகா மாயா ஜகந்மோஹிநீ" [சது:ச்லோகீ-1] [உலகத்தை மயங்கச்செய்வதும், 'மாயை' எனப்படுவதுமான மூலப்ரக்ருதி ஸ்ரீதேவியான உனக்கு முகத்திரையாகும்.] என்கிறபடியே பட்டமஹிஷியான ஸ்ரீதேவி எப்போதும் எழுந்தருளியிருக்கும் அந்த:புரமாகிற திருமார்பிலேயே அவளுக்கு முகத்திரையாயிருக்கும் ஸ்ரீவத்ஸத்தையும் உடையவன் என்று கருத்து. "ஸ்ரீவத்ஸத்தை மார்பிலே உடையவன்" "எப்போதும் திருவுடையவன்" என்னும் இரண்டு விசேஷணங்களிலே ஒன்றை இட்டாலே ஜயன் விஜயன் முதலான ஸாருப்யம்பெற்ற நித்யஸூரிகளை வேறுபடுத்திவிடுமே; இரண்டையும் இடுவானேன்? எனில்: "எல்லாத் தாழ்வுமற்றது விஷ்ணுஸ்வ ரூபம்" [வி-பு 1-2-53] என்றும், "ஆசறுசீலனை......மாசறுசோதி" [திரு

ஹிதம்)என்றும், ''ஆசறுசீலனை'' என்றும், ''மாசற்றுசோதி'' என்றும், ஒரு மறுவற்றிருக்கிறவனை மறுவுடையவனென்றால் அவத்₃யமாமென்று; ''நித்யஸ்ரீ:'' என்கிறவிதுவே விவக்ஷிதம். ப்ரத₄ாநமஹிஷிக்கு உசிதபரிகரம் திரஸ்கரிணியாகையாலே யவநிகையான ஸ்ரீவத்ஸத்தைக் கூட்டிச் சொல்லுகிறாள். அநுகரித்த பௌண்ட₃ரீகவாஸுதே₃வனை வ்யாவர்த்திக்கலாம்; அது பிற்பட்ட அவதாரத்திலேயாகையாலும், ஸூரிகளிலே வ்யாவர்த்திக்கிற ப்ரகரணமாகையாலே ஸம்ஸாரிகளை வ்யாவர்த்திக்கப் போகாதாகையாலும் அநுசிதம். (நித்யஸ்ரீ:) ''नित्यैवैषानपायिनी'' (நித்யைவைஷாநபாயிநீ) என்றும், ''இறையும் அகலகில்லேன்'' என்றும் உபாயத₃ஶை யில் புருஷகாரத்வேந விடாள்; உபேயத₃ஶையில் ப்ராப்

வாய் 5-3-1] என்றும் ஒரு மறு (குற்றம்) அற்றிருக்கிறவனை மறுவொன்றுடையவன் என்பது குற்றமாகும் என்று நினைத்து, ''ஸ்ரீவத்ஸமென்னும் மறுவுடையவன்'' என்பதுடன் நில்லாமல், ''எப்போதும் திருவுடையவன்'' என்கிறார். இரண்டாவது விசேஷணத்திலேயே நோக்கு, முதல் விசேஷணத்தை இட்டிருக்கவே வேண்டாமே எனில்: பட்டமகிஷியான பிராட்டிக்கு முகத்திரை இருக்கவேண்டியது தக்கதாகையாலே யவநிகை (முகத்திரை) யான ஸ்ரீவத்ஸத்தைக் கூட்டிச் சொல்லுகிறாள். கண்ணனைப் போலே சங்கசக்கரங்களைச் செய்வித்து அணிந்துகொண்டு 'நானே வாஸுதேவன்' என்று சொல்லிவந்த பௌண்டரீகவாஸுதேவனை வேறுபடுத்துவதற்காக 'ஸ்ரீவத்ஸவக்ஷா:' என்று கூறியதாகக் கொள்ளலாமே? எனில்: வேறுபாடு ஸித்திக்குமாகிலும், அவனிருந்தது இந்த ராமாவதாரத்துக்குப் பிற்பட்ட கிருஷ்ணாவதாரஸமயத்திலேயாகையாலும், மேலும், இந்த ப்ரகரணம் ஜயவிஜயாதி நித்யஸூரிகளை வேறுபடுத்துகிற இடமாகையாலும் அதனாலேயே ஸம்ஸாரிகளை வேறுபடுத்துவது தகாதாகையாலும் அப்பொருள் பொருந்தாது. (எப்போதும் திருவுடையவன்) ''எப்போதும் (எம்பெருமானிடமிருந்து) பிரிவற்ற இப்பிராட்டி நித்யமானவளே'' [வி-பு 1-8-17] என்றும், ''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா'' [திருவாய் 6-10-10] என்றும் எம்பெருமான் பலங்கொடுக்கும் உபாயமாம்போது இச்சேதநனைச் சேர்ப்பிக்கும் புருஷகாரமாய் நின்று விடாமலிருப்பாள்; இவன் அவனை அடையும் உபேய தசையில் அடையப்படும் வஸ்துக்களிலே இவளும் அடங்கியவளாகை

யாந்தர்கு₃தையாய் விடாள். இப்படிக்கு எப்போதும் அவஸரப்ரதீக்ஷைபண்ணி விடாதேயிருக்கும்.

"நித்யஸ்ரீ:" என்றால்தான் தவிர்ந்ததோ? **"लक्ष्मणो लक्ष्मिसंपन्नः"** (லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:) என்றும், **"अन्तरिक्षगतः श्रीमान्"** (அந்தரிக்ஷக₃த: ஸ்ரீமாந்) என்றும் **"स तु नागवरः श्रीमान्"** (ஸ து நாக₃வர: ஸ்ரீமாந்) என்றும், "பரமனைப் பயிலும் திருவுடையார்" என்றும் நித்யமான தா₃ஸ்யஸ்ரீயும் கைங்கர்யஸ்ரீயுமுடையராய், அவன் பார்யாத்வேந நித்ய ஸ்ரீயாயிருக்குமாப்போலே மாத்ருத்வேந ஸ்வாமித்வேந நித்ய ஸ்ரீக்களுமாயன்றோ ஸூரி பரிஷத்திருப்பது என்னில்: (அஜேய:) அவர்களெல்லாரும் ஜேதவ்யராயிருப்பார்கள்; இவனொருவனுமே ஜயிக்கவொண்ணாதபடியாயிருப்பன். (அஜேய:) "**जितन्ते पुण्डरीकाक्ष**" (ஜிதந்தே புண்டரீகாக்ஷ) என்றும், "**जितं भगवता जगत्**" (ஜிதம் ப₄க₃வதா ஜக₃த்) என்றும்,

---

யாலே அவனை விடாமலிருப்பள். இப்படி எப்போதும் சேதனரை ஆச்ரயிப்பிப்பதற்கும், அநுபவிப்பிப்பதற்கும் ஸமயம் பார்த்திருப்பவளாகை யாலே தன்னை விடாமலிருக்கும் பிராட்டியை உடையவன் என்றுகருத்து.

"எப்போதும் திருவுடையவன்" என்றதால் மாத்திரம் அனைவரையும் வேறுபடுத்தியதாகிவிடுமோ? "கைங்கர்யலக்ஷ்மியை உடையவன் இலக்குவன்" [ரா-பா 18-29] என்றும், "ஆகாயத்தில் கிளம்பிய திருவுடைய வனான விபீஷணன்" [ரா-யு 16-17] என்றும், "திருவுடையவனான அந்த கஜேந்திராழ்வானேனெனில்" [வி-தர் 68] என்றும், "பரமனைப் பயிலும் திருவுடையார்" [திருவாய் 3-7-1] என்றும் நித்யமான அடிமைத்திருவும், கைங்கரியத்திருவும் உடையவராய், அவன் திருவைப் பத்னியாக உடையவனாயிருப்பதுபோலே, பிராட்டியைத் தாயாகவும், சேஷி (கைங் கரியத்தை ஏற்றுக்கொள்ளுமவர்) ஆகவும் உடையவராகையாலே எப் போதும் திருவுடையவராயன்றோ நித்யஸூரிஸமூஹமிருப்பது? எனில்: (ஜயிக்கப்படாதவன்) அவர்களனைவரும் ஜயிக்கப்படுபவர்களாயிருப்பார்கள். இவன் ஒருவனே ஜயிக்கப்படமுடியாதவனாயிருப்பான். (ஜயிக்கப்படாத வன்) "தாமரைக்கண்ணனே! உனக்கு (இவ்வாத்மவஸ்து) ஜயிக்கப் பட்டது" [ஜிதந்தேஸ்தோத்ரம்] என்றும், "தேவா: ஸ்வஸ்தா₂நமாயாந்தி நிஹதா தை₃த்யதா₃நவா: ந ப₄யம் வித்₃யதே கிஞ்சித் ஜிதம் ப₄க₃வதா ஜக₃த்" [ ] [தேவர்கள் தம் இருப்பிடம் சேர்ந்தனர்; அசுர

"தோற்றோம் மடநெஞ்சமெம்பெருமான் நாரணற்கு" என்றும் எல்லாரும் தோற்றுக்கிடக்குமித்தனைபோக்கி இவரை ஒருவராலும் தோற்பிக்கவொண்ணாது.

இவருக்கு ஏற்றமென்? "सर्वविजयः" (ஸர்வவிஜய:) என்றும். "अपराजितः" (அபராஜித:) என்றும், "கூறாய் நீறாய் நிலனாகிக் கொடுவல்லசுரர் குலமெல்லாம் சீறாவெரியும் திருநேமி" என்றும், ஆழ்வான் ஶத்ருக்களுக்கு ஜேதாவாய் அவர்களுக்கு அஜேயரானன்றோ இருப்பது என்னில்: (ஶாஶ்வத: அஜேய:) ஆழ்வான் பூசலுண்டானால் அப்போது ஜயித்திருக்குமத்தனையன்றோ? இவர் ஸர்வகாலமும் அஜேயராயிருப்பர். (ஶாஶ்வத: அஜேய:) காதாசித்கமல்ல; "सत्येन लोकान् जयति दीनान् दानेन राघवः। गुरून् शुश्रूषया वीरो धनुषा युधि शात्रवान्॥" (ஸத்யேந லோகாந் ஜயதி தீ₃நாந் தா₃நேந ராக₄வ:। கு₃ரூந் ஶுஶ்ரூஷயா வீரோ த₄நுஷா யுதி₄ ஶாத்ரவாந்॥)

ரரக்கர்கள் கொல்லப்பட்டனர்; பயம் ஒருசிறிதுமில்லை; (திரிவிக்கிரம) பகவானால் உலகம் ஜயிக்கப்பட்டது] என்றும், "தோற்றோம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு"[திருவாய் 2-1-7]என்றும் எல்லாரும் இவரிடம் தோற்றுக்கிடப்பார்களேயொழிய இவரை ஒருவராலும் வெல்லமுடியாது.

இதுவும் இவருக்கேயான பெருமையல்லவே! "எப்போதும் வெற்றியையே உடையவனாயிருப்பவன்; வெல்லப்படாதவன்" [ஸுதர்சனமந்திரம்] என்றும், "கூறாய் நீறாய் நிலனாகிக் கொடுவல்லசுரர் குலமெல்லாம் சீறாவெரியும் திருநேமி" [திருவாய் 6-10-2] என்றும் ஸுதர்சனாழ்வான் எதிரிகளை வெல்லுமவனாய், அவர்களாலே வெல்லப்படாதவனாயன்றோ இருப்பது என்னில்: 1. (எப்போதும் வெல்லப்படாதவன்) திருவாழியாழ்வான் அசுரரரக்கர்களோடு சண்டையுண்டானால், அப்போது மாத்திரம் ஜயித்திருப்பவனன்றோ; இவர் எல்லாக்காலத்திலும் தன்னையொழிந்தாரனைவரையும் ஜயித்திருப்பவராய், எவராலும் வெல்லப்படாதவராயிருப்பர். 2. (எப்போதும் வெல்லப்படாதவர்) எப்பொதாவது அல்ல; எப்போதும் ஜயித்திருப்பவர்; வெல்லப்படாதவர். "உண்மையுரையாலே உலகங்களை ஜயித்திருக்கிறார்; எளியவர்களைக் கொடையால் வெல்லுகிறார்; ஆசார்யர்களைப் பணிவிடையாலே தோற்பிக்கிறார்; வீரரான இவர் எதிரிகளைச் சண்டையிலே வில்லாலே வெற்றிகொள்ளுகிறார்," [ரா-அ 12-29]

என்றும், **"गुणैर्दास्यमुपागतः"** (கு$_3$ணைர் தா$_3$ஸ்யமுபாக$_3$த:) என்றும் எப்போதும் அநுபோ$_4$க்தாக்களுண்டாகையாலும், அதுதான் ஒரு ப்ரகாரமின்றிக்கே ஸ்வரூபரூபகுணவிபூதி சேஷ்டைகள் எல்லாவற்றிலும் ஆழங்காற்பட்டிருக்கையாலும் எப்போதும் இவர்க்கு எல்லாரும் தோற்றிருப்பார்கள்; இவர் எப்போதும் அஜேயராயிருப்பர்.

"इदानीमिव सर्वत्र दृष्टान्नाधिकमिष्यते" (இத$_3$ாநீமிவ ஸர்வத்ர த்$_3$ருஷ்டாந்நாதி$_4$கமிஷ்யதே) என்று லோகவ்யாப்திவிருத்$_3$த$_4$மாக வருவதுண்டோ? **"भङ्गं जयं चापतुरव्यवस्थं"** (ப$_4$ங்க$_3$ம் ஜயம் சாபது ரவ்யவஸ்த$_2$ம்) என்றும், **"अव्यवस्थौ हि दृश्येते युद्धे जयपराजयौ"** (அவ்யவஸ்தெ$_2$ள ஹி த்$_3$ருஶ்யேதே யுத்$_3$தே$_4$ ஜயபராஜயெள) என்றும் ஜயாபஜயங்கள் அவ்யவஸ்திதங்களன்றோ? ஏகரூபமாகக்கூடுமோ? என்ன; (த்$_4$ருவ:) **"सर्वस्य वशी सर्वस्येशानः"** (ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந:) "**न**

என்றும், "இவருடைய குணங்களுக்குத் தோற்றிருப்பவன் நான்" [ரா-கி 4-12] என்றும் எப்போதும் இவரை அநுபவிப்பவர் கணக்கற்றவர்களுண்டாகையாலும், அதுவும் ஒரு வழியாலல்லாமல் ஸ்வரூபம், ரூபங்கள் குணங்கள், செல்வங்கள், செயல்கள் ஆகியவற்றிலெல்லாம் ஈடுபட்டிருக்கையாலும், இவருக்கு எப்போதும் எல்லாரும் தோற்றிருப்பார்கள்; இவரும் எப்போதும் எவராலும் வெல்லப்படாதவராயிருப்பர்.

"இப்போது போல் எக்காலத்திலும் ப்ரத்யக்ஷமாக அறியப்பட்டதற்கு மேல் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை" [ந்யாயகுஸுமாஞ்ஜலி-2 வது ஸ்தபகம் 3-வது காரிகை-வேத சாகோச்சேதநிரூபண ப்ரகரணம்] என்கிறபடியே உலகிலே அனைவரும் கண்டதற்கு மாறாக ஒன்றை ஒப்புக்கொள்ள முடியுமோ? "நிலையற்றதான தோல்வியையும் வெற்றியையும் அடைந்தனர்" [ரகுவம்சம் 7-54] என்றும், "சண்டையில் வெற்றிதோல்விகள் நிலையற்றவையாயன்றோ காணப்படுகின்றன" [ரா-ஸு 37-55] என்றும் போரில் வெற்றிதோல்விகள் நிலையற்றவையன்றோ. எப்போதும் இவருக்கு வெற்றி என்றது கூடுமோ? எனில் 1. (நிலையானவன்) "எல்லாரையும் தன் வசத்தில் நடத்துமவன்; அனைவர்க்கும் ஈச்வரன்" [ப்ருஹ 6-4-22] "அவனை நியமிப்பதற்கு ஒருவனுமில்லை; பெருங்கீர்த்தி அவனுக்கே

तस्येशे कश्चन तस्य नाम महद्यशः'' (ந தஸ்யேஶே கஶ்சந தஸ்ய நாம மஹத்₃யஶ:) என்றும், ''न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते'' (நதத்ஸமஶ்சாப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே) என்றும், ''ஒத்தார் மிக்காரை யிலையாய'' என்றும் ஸர்வாதி₄கனாய் ஸர்வவிலக்ஷணனா யிருக்கையாலேலோகஸாமாந்யஙகை பண்ணவொண்ணாது. ஜயமும் வ்யவஸ்தி₂தமாயிருக்கும். (அஜேய: ஶாஶ்வதோ த்₄ருவ:) என்று அஜேயராயிருக்குமிருப்பில் ஸர்வகால ஸம்ப₃ந்தி₄யாய், ''ध्रुवमचलममृतं विष्णुसंज्ञं सर्वाधारं धाम'' (த்₄ருவமசலமம்ருதம் விஷ்ணுஸம்ஜ்ஞம் ஸர்வாத₄ாரம் த₄ாம) என்று வ்யவஸ்தி₂தாஶ்ரயமுமாயிருப்பர். (த்₄ருவ:) ''विष्णुः परमः'' (விஷ்ணு: பரம:) என்று லோகத்தில் விலக்ஷண புருஷர்களில் மேலாமிடத்தில் எல்லைநிலமாயிருப்பர். (த்₄ருவ:) ''उभे भवत ओदनः मृत्युर्यस्योपसेचनं'' (உபே₄ ப₄வத ஓத₃ந: ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்) என்றும், ''एको ह वै नारायण आसीन्न ब्रह्मा

உள்ளதன்றோ'' [தை-நா 1-9] என்றும், ''அவனை ஒத்தாரும் மிக்காரும் காணப்படவில்லை'' [ச்வே 6-8] என்றும், "ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா'' [திருவாய் 2-3-2] என்றும் எல்லோரினும் பெரியவனாய், அனை வரினும் வேறுபட்டவனாயிருக்கையாலே உலகிற்காண்பதை வைத்துக் கொண்டு இவனிடம் ஸந்தேஹப்படக்கூடாது. இவனுடைய வெற்றி நிலையாகவேயிருக்கும். 2. (எல்லாக்காலத்திலும் நிலையாக வெல்லப் படாதவன்) வெல்லப்படாதவராயிருக்கும்போது எல்லாக்காலத்திலும் அப்படியிருப்பவராய், ''நிலையாயிருப்பவனாய், அழியாதவனாய், மோக்ஷ ஸ்வருபமாயிருப்பவனாய், 'விஷ்ணு' என்னும் பெயரை உடையவனாய், அனைவர்க்கும் ஆதாரமாயிருப்பவனாய் சோதிமயமானவனைப் பார்க்கிறான்'' [மைத்ராயணீயம்-6] என்று நிலையான ஸ்வருபத்தையுடையவராயும் இருப்பர். 3. (நிலையானவன்) ''தேவர்களுக்குள் அக்னி கீழானவன்; விஷ்ணு மிக மேலானவன்'' [யஜுஸ்ஸம்ஹிதை 5-5] என்று உலகில் சிறந்தவர் களான தேவர்களில் சிறந்தவனாகும்போது, 'பரோமா யஸ்மாதிதி பரம:' [எவனைக் காட்டிலும் மேலானதில்லையோ அவன் பரமன்] என்கிற படியே சிறப்பின் எல்லை நிலமாயிருப்பவன். 4. (நிலையானவன்) ''எவனுக்கு ப்ராஹ்மண க்ஷத்ரியர் முதலான ஸகலசேதனரும் உணவாகின்றனரோ, யமன் எவனுக்கு ஊறுகாய் ஆகின்றானோ'' [கட 1-2-25] என்றும், ''நாராயணன் ஒருவனே இருந்தான்; பிரமனுமில்லை; சிவனுமில்லை;

नेशानः नेमे द्यावापृथिवी" (ஏகோ ஹவை நாராயண ஆஸீந்ந ப்₃ரஹ்மா நேஶாந: நேமே த்₃யாவாப்ருதி₂வீ) என்றும், "யாதுமில்லா வன்று நான்முகன்றன்னோடு தேவருலகோடுயிர் படைத்தான்" என்றும் ப்₃ரஹ்மேஶாநாதி₃ஸர்வமும் ஸம்ஹ்ருதமானவன்று, எல்லாவற்றையும் உண்டாக்குகைக்குத் தான் ஒருவனுமேயுளனுய்ஸ்தி₂ரனுனவன்.

ஆக, இந்த ஶ்லோகத்தால் நித்யவிபூ₄தி பூ₄ஷணுயுத₄ பத்நீ பரிச்ச₂த₃ாதி₃யோக₃மும் ஸ்வேதரவிலக்ஷணத்வமும் சொல்லிற்று.

மூன்ருவது ச்லோகம்

அவ:–இப்படி வ்யாவ்ருத்தரானவர் "**दिवि तिष्ठति**" (தி₃வி திஷ்ட₂தி) என்றும், "**दिव्यो देव एको नारायणः**" (தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:) என்றும், "**हिरण्मये परे लोके**" (ஹிரண்மயே பரே லோகே) என்றும் பரமபத₃த்திலேயன்ருே? "ஏஷ:" என்னும்படி கர்மபூ₄மியிலே ஸந்நிஹிதராய், . மாநுஷ வேஷமும் கையும் வில்லுமான இவரென்? என்ன: (மாநுஷம் வபுராஸ்த₂ாய விஷ்ணு: ஸத்யபராக்ரம:) என்று அவர்தான் தே₃வாதி₃களால் படாதபடி ப்₃ரஹ்மாதி₃முக₂த்தாலே வரங்கொடுத்தபடியாலே, தாம் பொய்யாகாதபடி தம்மைக்காக்க மண்ணிலேயிட்டு மயக்கிச் சுற்றுப்பரிகரம் நரவாநரங்களாய் அவதரித்து நிற்கிறபடிகாண் என்கிருள் மூன்ரும் ச்லோகத்தால்.

இந்தக் கீழ்மேலுலகங்களுமில்லை" [மஹோபனிஷத்] என்றும், "யாதுமில்லாவன்று நான்முகன்றன்னெடு தேவருலகோடுயிர் படைத்தான்" [திருவாய் 4-10-1] என்றும் பிரமன் உருத்திரன் முதலான எல்லாமும் ஸம்ஹரிக்கப்பட்ட அன்றைக்கு, எல்லாவற்றையும் உண்டாக்குவதற்குத் தான் ஒருவனுமே உள்ளவனுய் நிலையாயிருப்பவன்.

ஆக, இந்த ச்லோகத்தால், நித்யவிபூதி, ஆபரணங்களாகவுமிருக்கும் ஆயுதங்கள், பிராட்டி, முகத்திரையாயிருக்கும் ஸ்ரீவத்ஸம் முதலானவற்ருேடு இருப்பவன் பரமாத்மா என்பதும், தன்னைக்காட்டிலும் வேறுபட்ட அனைவரிலும் சிறந்தவன் என்பதும் சொல்லப்பட்டது.

வ்யா:—(மாநுஷம் வபுராஸ்தா₂ய) **"दिवि तिष्ठति"** (தி₃வி திஷ்டதி) என்றும், **"वैकुण्ठे तु परे लोके...आस्ते विष्णुः"** (வைகுண்டே₂து பரே லோகே... ஆஸ்தே விஷ்ணு:) என்றும் பரமபதத்தி லிருந்த விஷ்ணுதான் கிவர் ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்தவர். (மாநுஷம் வபுராஸ்தா₂ய) **"वरमन्यत्र मानुषात्"** (வரமந்யத்ர மாநுஷாத்)என்று வரங்கொள்ளு கைக்கும் பாத்தம்போராத க்ஷு₂த்₃ரமநுஷ்யர் ஶரீரத்தைக் கிவர் பரிக்₃ரஹித்தது. (மாநுஷம் வபு:) "வேதநூல்

மூன்றுவது ச்லோகம்

அவதாரிகை:—இப்படிச் சிறந்து நிற்பவர் "பரமபதத்தில் நிற்கிறுன்" [முண்ட 1-1-7] என்றும், "பரமபதத்தில் இருக்கும் நாராயணனுகிற தேவன் ஒருவனே" [ஸுபாலோபனிஷத்] என்றும், "பொன்மயமான மேலான உலகில்" [முண்டக 2-2-10] என்றும் பரமபதத்திலேயிருப்பவ ரன்றோ? 'இவர்' என்னும்படி கர்ம்வசப்பட்ட நிலத்தில் அருகிலிருப் பவராய், மனிதவுருவுடன் கையிலே வில்லேந்திநிற்கும் இவர் எப்படி ஆகமுடியும்? என்ன, "ஸத்யபராக்ரமரான விஷ்ணு மனிதவுருக்கொண்ட வராய்" என்று தொடங்கும் இந்த ச்லோகத்திலே, "அப்பரம் பொருளே ராவணனுக்கு தேவர்கள் முதலானுரால் அழிவில்லை என்று பிரமன் முதலானுரைச் சட்டையாகக் கொண்டு வரங்கொடுத்திருக்கிறபடியாலே, தம்முடைய அவ்வார்த்தை பொய்யாகாதபடி ரக்ஷிக்கத் தம்மை மண்ணிலே யிட்டு மயக்கி, தமக்குத் துணை வரும் மனிதரும், குரங்குகளுமாம்படி அவதரித்து நிற்கிறபடிகாண் இவர்" என்கிருர் மூன்ரும் ச்லோகத்தாலே.

வ்யா:—(மனிதவுருவைக் கொண்டு) "பரமபதத்தில் நிற்கிறுன்" [முண்ட 1-1-7] என்றும், "வைகுண்டம் என்னும் மேலான உலகத்தில் விஷ்ணு எழுந்தருளியிருக்கிருர்" [லிங்கம்] என்றும் பரமபதத்திலிருந்த விஷ்ணுவேதான் "ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்து இங்குப் பிறந்த வேதமுதல்வன்' [திருவாய் 3-5-5] என்கிறபடியே தன் தன்மைகளை விடாமல் மனிதவுருவிலே பிறந்திருப்பவர். 2. (மனிதவுருக்கொண்டு) "மனிதனைத்தவிர வேறு எவரிடமும் மரணபயமில்லை என்னும் வரத்தைக் கொடுத்தார்" [ரா-பா 16-5] என்று வரங்கொள்வதற்குக்கூடத் தகுதி போராத மிகத்தாழ்ந்த மனிதரின் உருவையன்றோ எடுத்தது. 3. (மனித வுருவை) "வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும் பாதியும்

பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும்'' என்று உபாலம்ப$_4$ விஷயமானத்தைக் கிடீர் ஆதரித்தருளிற்று. (மாநுஷம் வபுராஸ்த$_2$ாய) ''इच्छागृहीताभिमतोरुदेहः'' (இச்ச$_2$ாக்$_3$ருஹீதாபி$_4$மதோருதே$_3$ஹ:) என்று வடிவை மாறாட்டுமித்தனைபோக்கி, ''वस्तु वस्त्वात्मकं कुतः'' (வஸ்து வஸ்த்வாத்மகம் குத:) என்று ஸ்வரூபத்தை மாறாட்டவொண்ணாதே. (மாநுஷம் வபு:) ''अजायमानो बहुधा विजायते''(அஜாயமாநோப$_3$ஹுதா$_4$ விஜாயதே) என்றும், ''பிறப்பில் பல்பிறவிப் பெருமான்'' என்றும், ''உயிரளிப்பான் எந்நின்றயோனியுமாய்ப் பிறந்தாய்'' என்றும் கர்மப$_3$ந்த$_4$மான பிறவி தனக்கின்றிக்கேயிருக்க, அநுக்ரஹத்தாலே ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக அவன் கோலினவடிவுகளிலே இதுவுமொன்றித்தனையன்றோ? ''बहुधा विजायते'' (ப$_3$ஹுதா$_4$ விஜாயதே) என்று, உபேந்த்$_3$ர மத்ஸ்ய கூர்ம வராஹ நாரஸிம்ஹ வாமநாதிகளான தே$_3$வதிர்யங்மநுஷ்யாதி$_3$ பரிக்$_3$

உறங்கிப்போகும் நின்றதிற் பதினையாண்டு பேதை பாலகன் அதாகும் பிணிப் பசி மூப்புத்துன்பம்'' [திருமாலை-3] என்று இகழ்ச்சிக்கு இடமான மனிதவுருவையன்றோ உகந்தருளினான். 4. (மனிதவுருவைக் கொண்டு) ''தன் விருப்பத்தால் எடுத்துக்கொள்ளும் இனிய பெரிய தேஹத்தை உடையவன்'' [வி-பு 6-5-84] என்றும் ''ஒரு தன்மையுடைய பொருள் அத்தன்மையுடைய பொருளாகவேயிருக்குமோ?'' [வி-பு 2-6-47] என்றும் வடிவையும் தன்மைகளையும் மாற்றலாமேயொழிய ஸ்வரூபத்தை மாற்ற முடியாதே. 5. (மனிதவுருவை) ''பிறப்பற்றவனாயினும் பலபடியாகப் பிறக்கிறான்'' [பு-ஸூ 2-3] என்றும், ''பிறப்பில் பல்பிறவிப் பெருமான்'' [திருவாய் 2-9-5] என்றும், ''உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்'' [திருவிருத்தம்-1] என்றும் கர்மஸம்பந்தத்தால் ஏற்படும் பிறவி தனக்கு இல்லாமலிருந்தும் அருளாலே அடியாரை அளிப்பதற்காக அவன் விரும்பிய வடிவுகளிலே இதுவுமொன்றன்றோ. ''பலபடியாக'' [பு-ஸூ 2-3] என்று, உபேந்திரனாகவும், வாமனனாகவும் தேவப்பிறவியிலும், மீன், ஆமை, வராஹம், முதலான திர்யக் பிறவியிலும் ராமன், கிருஷ்ணன் முதலான மனிதப்பிறவிகளிலும், குப்ஜாம்ரம் (குட்டை மாமரம்) முதலான ஸ்தாவரப்பிறவியிலும், நரங்கலந்தசிங்கம் முதலான கலப்புப்பிறவிகளிலும், மற்றும் பலவிதமாகவும் பிறப்பெடுப்பது போராமல், ''விவித$_4$ம் ஜாயதே'' [விதவிதமாகப் பிறக்கிறான்] என்னும் வ்யுத்

ரஹம் பண்ணுகிறது போராமல், "विविधं जायते" (விவித₄ம் ஜாயதே) என்று, நரங்கலந்த சிங்கமாயும், ஹயங்கலந்த நரமாயும், ஹம்ஸங்கலந்த தே₃வனுயும், * அடுத்ததோரு ருவாய், வேறொருவடிவோடே கூடி வேறேயொரு வடிவாயும் தோற்றிலனோ?

(ஆஸ்த₂ாய) ஸ்வதஸ்ஸித்₃த₄மின்றியிலே கொண்டு கூட்டாயிருந்தபடி. (ஆஸ்த₂ாய) ஆஸமந்தாத் ஸ்தி₂த்வா. அணுபரிமாணனை ஜீவனைப்போலே "हृदि ह्ययमात्मा" (ஹ்ருதி₃ ஹ்யயமாத்மா) என்று ஏகதேஶத்திலே அடங்குகையன்றிக்கே விபு₄வாகையாலே ஶரீரம் முழுக்க வ்யாபித்து. (ஆஸ்த₂ாய) ஶரீரத்தளவோ? "अनेन जीवेनात्मना" (அநேந ஜீவேநாத்மநா) என்றும், "देहं ते व्याप्य तिष्ठति" (தே₃ஹம் தே வ்யாப்ய

பத்தியைக்கொண்ட "விஜாயதே" [பு-ஸூ2-3] என்னும்பதத்தை வேதம் பிரயோகிக்கையாலே, நரங்கலந்த சிங்கமாகவும், குதிரையுருக்கொண்ட மனிதனுகவும், ஹம்ஸவுருக்கலந்த தேவனுகவும், "அடுத்ததோருருவாய்" [திருவாய் 8-1-3] என்கிறபடியே ஸமயோசிதமாக ஒரு வடிவோடேகூடி வேறே ஒரு வடிவாகவும் தோற்றினவனல்லவோ? ஆகையால், மனிதவுருக்கொண்ட இவர் அதிமாநுஷகாரியத்தைச் செய்ததில் வியப்பில்லை என்று கருத்து.

1. (எடுத்துக்கொண்டு) மனிதவுருவானது இவருக்கு இயற்கையில் அமைந்ததல்லாமல், ஏறிட்டுக்கொண்டதாயிருந்தபடி. 2. (எங்கும் வியாபித்து) 'ஆ' என்னும் உபஸர்க்கம் 'ஸமந்தாத்' (எல்லாவிடத்திலும்) என்னும் பொருளையுடையது; 'ஆஸ்தாய' என்றபடியால் மனிதவுருவை எங்கும் வியாபித்தார் என்பதாகவும் கொள்ளலாம்; "இருதயத்திலிருப்பவனன்றோ இவ்வாத்மா" [ப்ரச்நோபநிஷத் 3-6] என்று ஜீவர்களைப்போலே இருதயத்தில் ஓரணுமாத்திரமான இடத்திலே அடங்கும் ஸ்வரூபத்தையுடையவரல்லாமல், ஸர்வவ்யாபியாகையாலே இந்த மனிதசரீரம் முழுவதையும் ஸ்வரூபத்தாலே வியாபித்துக்கொண்டிருந்தார் என்று கருத்து. 3. (எங்கும் வியாபித்து) தன் சரீரம் முழுவதும் வியாபித்திருந்தார் என்பதுமாத்திரமல்ல; "நானுயிருக்கும் இந்த ஜீவனுலே" [சாந் 6-3-2] என்றும், "(ஸத்வம் முதலான ப்ராக்ருத) குணங்களற்ற இந்தப் பரமாத்மா உன்னுடைய தேஹத்தை வியாபித்து விளங்குகிறுர்" [பார-ஆரண்ய 14-68]

திஷ்ட₂தி) என்றும், "प्राणोऽस्मि प्रज्ञात्मा" (ப்ராணோऽஸ்மி ப்ரஜ்ஞாத்மா) என்றும், "அடியேனுள்ளான்" என்றும், "ஊனிலுயிரில் உணர்வினில் நின்ற வொன்றை" என்றும் ஆத்மஶரீரேந்த்ரிய ப்ராணப்ரஜ்ஞாதி₃கள் எல்லாத்திலும் நின்றும்.

இப்படி எங்கும் பரந்துளனாகைக்கடியென்? என்னில்: (விஷ்ணு:) "विष्लृ (விஷ்லு) வ்யாப்தௌ" இலே நிஷ்பந்நபதமாகையாலே வ்யாபகனாகையாலே என்கிறது. அன்றியிலே, (விஷ்ணு:) என்று "விஶ ப்ரவேஶநே" என்ற தாதுவாய், "सोऽन्तरादन्तरं प्राविशत्" (ஸோऽந்தராத₃ந்தரம் ப்ராவிஶத்) என்றும், "तत्सृष्ट्वा तदेवानुप्राविशत्। तदनुप्रविश्य सच्च त्यच्चाभवत्" (தத் ஸ்ருஷ்ட்வா, ததே₃வாநுப்ராவிஶத், தத₃நுப்ரவிஶ்ய, ஸச்ச த்யச்சாப₄வத்) என்றும் ஸர்வாநுப்ரவேஷ்டாவாகையாலே என்றுமாம். (விஷ்ணு: ஶங்க₂சக்ரக₃தா₃தா₄ர:) "एतस्मिन्नन्तरे विष्णुरुपयातो महाद्युतिः। शङ्खचक्रगदापाणिः" (ஏதஸ்

என்றும், "ப்ராணனை சரீரமாகக்கொண்டவனாகவும், அறிவுள்ள ஆத்மாவை சரீரமாகக்கொண்டவனாகவுமிருக்கிறேன் நான்" [கௌஷீதகி 2-14] என்றும், "அடியேனுள்ளான்" [திருவாய் 8-8-2] என்றும், "என் ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே" [திருவாய் 8-8-4] என்றும், உலகிலுள்ள ஜீவாத்மாக்களிலும், சரீரங்களிலும், இந்திரியங்களிலும், பிராணன்களிலும், அறிவிலும் மற்றும் எல்லாவற்றிலும் நின்று வியாபித்திருப்பவன்.

"எங்கும் பரந்துளன்" [திருவாய் 1-1-10] என்கிறபடியே, இப்படி எங்கும் வியாபித்திருப்பதற்குக் காரணமென்ன? எனில்: 1. (விஷ்ணு) "விஷ்லு-வ்யாப்தௌ" என்கிற தாதுவிலிருந்து விஷ்ணுபதம் தோன்றியதாகையாலே, இயற்கையிலேயே வியாபித்திருப்பவனாகையாலே என்கிறது. 2. (விஷ்ணு) "விச-ப்ரவேசநே" என்கிற தாதுவிலிருந்து விஷ்ணுபதம் தோன்றியதாய், "பரமாத்மா ஸூக்ஷ்மமானவற்றிலும் ஸூக்ஷ்மமான ஜீவனுள்ளே வியாபித்தார்" [அதர்வசிரஸ்] என்றும், "அதை ஸ்ருஷ்டித்து அதையே வியாபித்தார்; அதை வியாபித்துச் சேதநாசேதநங்களானார்" [தை-ஆந-6] என்றும் எல்லாவற்றையும் ஸ்வரூபத்தாலேயே வியாபித்திருப்பவனாகையாலே என்பதாகவும் கொள்ளலாம். 3. (சங்கசக்கரகதைகளை தரித்த விஷ்ணு) "இதனிடையிலே பேரொளியுடையவராய், சங்க

மிந்₃நந்தரே விஷ்ணுருபயாதோ மஹாத்₃யுதி:। ஶங்க₂சக்ர க₃தா₃பாணி:) என்று, ய₄ாக₃ப்ரதிக்₃ரஹார்த்த₂மாகத் திரண்ட தேவர்கள் திரளிலே வந்தவன் தானே இவன் என்று ப்ரதிஸந்த₄ானம் பண்ணுகிறான் ரிஷி. (விஷ்ணு:) ரிஷியேயல்ல; "सा तं समासाद्य विशुद्धसत्त्वा मनस्विनी" (ஸா தம் ஸமாஸாத்₃ய விஶுத்₃த₄ஸத்வா மநஸ்விநீ) என்ற தாரையைப் போலே ராமஸந்நிதி₄யிலே மயர்வற மதிநலம் பிறந்து ஒரு போகி ஸாக்ஷாத்கரித்து இவளும் தானும் "तत्र त्वं मानुषो भूत्वा प्रवृद्धं लोककण्टकं...समरे जहि रावणम्" (தத்ர த்வம் மாநுஷோ பூ₄த்வா ப்ரவ்ருத்₃த₄ம் லோககண்டகம்... ஸமரே ஜஹி ராவணம்) என்று தேவர்கள் அபேக்ஷித்தவர்தாமே இவர் என்கிறாள்.

இப்படியே பரவஸ்துதானாகில், மநுஷ்யத்வம் ஏறிட்டுக் கொள்ளுகைக்கு அடியென்? என்னில்: (ஸத்யபராக்ரம:) ஸத்யவாக்யராகையாலே என்கிறது. (ஸத்யபராக்ரம:) "க்ரமு பதவிக்ஷேபே"யிறே. பத₃விக்ஷேபமாகிறது பத₃

சக்ரகதைகளை தரித்தவரான விஷ்ணு எழுந்தருளினார்" [ரா-பா 15-16] என்று தசரதருடைய யாகத்திலே ஹவிர்ப்பாகத்தை ஏற்றுக்கொள்வதற்காகத் திரண்ட தேவர்களின் திரளிலே தோன்றினவனே இவன் என்று வால்மீகிமஹரிஷி நினைவுறுத்துகிறார். 4. (விஷ்ணு) ரிஷிமாத்திரமல்ல; "அந்தத் தாரை அவனைக்கிட்டி அழுக்குநீங்கப்பெற்ற நன்னெஞ்சை உடையவளாய்" [ரா-கி 24-3] என்ற தாரையைப்போலே, ராமன் அருகிலிருக்கையாலே, "மயர்வறமதிநலம்" [திருவாய் 1-1-1] எனப்பட்ட அறிவு பெற்று, பரிபூர்ணமாகக்கண்டு, இம்மந்தோதரியும், "அங்கு நீ மனிதனாகி, வளர்ந்திருப்பவனும், உலகிற்கு முள்போன்றவனுமான ராவணனைப் போரிலே ஜயிப்பாயாக" [ரா-பா 15-20] என்று தேவர்களால் வேண்டப் பெற்றுப் பிறந்தவரே இவர் என்கிறாள்.

இப்படியே இவர் பரம்பொருளாகில் மநுஷ்யத்தன்மையை ஏறிட்டுக் கொள்வதற்குக் காரணமென்ன? எனில்: 1. (ஸத்யபராக்ரமன்) ஸத்யமான வாக்யத்தை உடையவராகையாலே ஏறிட்டுக்கொண்டார் என்கிறது. பராக்ரமசப்தம் வாக்யத்தைக் குறிக்குமோ? எனில்: "க்ரமு-பத₃விக்ஷேபே" என்று தாதுவாகையாலே, அதிலிருந்து தோன்றிய ஆக்ரமசப்தம் பதவிக்ஷேபம் எனப்படும் பதப்ரயோகத்தைக் காட்டும். பதம், பதஸமு

ப்ரயோகம். பத₃வாக்யரூபமாயிறே வசநவ்யக்தியிருப்பது. இத்தால் தே₃வர்களால் படாதபடி அடியிலே வரங் கொடுத்தபடியாலே தாமான தன்மையில் கொல்ல வொண்ணுதென்று ஸத்யவசநம் பண்ணினத்துக்காக இவ் வடிவு கொண்டாரென்கை. வேஷம் மாநுஷமாய் மாருடிஞல் வீர்யஶௌர்யாதி₃களும் மாருடுமோ? என்னில்: (ஸத்ய பராக்ரம:) **"सत्यकामः सत्यङ्कल्पः"** (ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:) **"त इमे सत्याः कामाः"** (த இமே ஸத்யா: காமா:) என்றும். **"स्वाभाविकी ज्ञानबलक्रिया च"** (ஸ்வாப₄ாவிகீ ஜ்ஞாநப₃லக்ரியா ச) என்றும் விக்₃ரஹம் மாறினுலும் பராக்ரமாதிகுணங்கள் ஸதை₃கரூபமாயிருக்கும் என்றுமாம். (ஸத்யபராக்ரம:) ஒருபடிப்பட்ட பராக்ரமமுண்டு,— பரரை ஆக்ரமிக்கை; ஶத்ருக்களைப் பரிப₄விக்கை. அத்தையுடையராயிருப்பர்.

இப்படிப் பரிப₄வம் பண்ணிற்று தனியே நின்ருே? என்னில்: (ஸர்வை: பரிவ்ருதோ தே₃வை:) அவனுலே செறுப்

தாயமான வாக்யம் ஆகிய இவற்ருலான வார்த்தை பராக்ரமசப்தத்தால் சொல்லப்படுகிறது. இதஞல், தேவர்களால் மாளாதபடி ஆதியிலே பிரமனைக்கொண்டு வரம் கொடுத்தபடியாலே, தேவாதிதேவனுயிருக்கும் தாம் நேரே ராவணனைக் கொல்லக்கூடாதென்று, உண்மையுரையே உரைத்ததாவதற்காக இந்த மனிதவடிவைக் கொண்டார் என்கிறது. வேஷம் மனிதவுருவாய் மாறினுலும், வீர்யம், சௌர்யம் முதலான குணங்கள் மாறிவிடுமோ? எனில்: 2. (ஸத்யபராக்ரமன்) "ஸத்யமான குணங்களையும் ஸத்யமான ஸங்கல்பத்தையும் உடையவன்" [சாந்8-7-1] "அத்தகைய இவையே ஸத்யமான குணங்கள்" [சாந்8-3-1] என்றும், "இயற்கையான அறிவு, பலம், செயல் முதலானவையும் பரம்பொருளுக்கு உள்ளன" [ச்வே6-8] என்றும் திருமேனியுருவம் மாறிஞலும் பராக்ரமம் முதலான குணங்கள் ஸத்யமாகவே–எப்போதும் ஒருபடிப்பட்டதாகவே–இருக்கும் என்றும் கொள்ளலாம். 3. (ஸத்யபராக்ரமர்) பராக்ரமமாவது–பரரை ஆக்ரமிப்பது; அதாவது எதிரிகளைத் தோல்விகொள்ளவைப்பது. அது எப்போதும் மாருமலிருப்பவர் ஸத்யபராக்ரமர் என்றும் கொள்ளலாம்.

இப்படி எதிரிகளைத் தோல்விகாணவைப்பது தனியே நின்ருே? எனில்: 1. (எல்லா தேவர்களாலும் சூழப்பட்டவன்) ராவணனுலே அடக்கப்பட்ட

புண்ட தே₃வர்களடையக் கூடினர்கள். (ஸர்வைர் தே₃வை:) பூர்வதே₃வர்களான அஸுரர்களோடு அந்யதமரானவர் களோடு வாசியறக் கூடினர்கள். (ஸர்வைர் தே₃வை:) தே₃வ தா₃நவயக்ஷகந்த₄ர்வ கிந்நர கிம்புருஷ ப்ரப்₄ருதி ஸமஸ்த தே₃வஜாதியும் சூழ்ந்தது. (ஸர்வை: பரிவ்ருத:) முப்பத்துமுக் கோடி தேவர்களில் ஒருவர் குறைந்தாரில்லை. (தே₃வை:) **"दिवु-क्रीडाविजिगीषाव्यवहारद्युतिस्तुतिगतिषु"** (தி₃வு-க்ரீடா₃விஜிகீ₃ஷா வ்யவஹாரத்₃யுதிஸ்துதி₃கதிஷு) என்று இத்தனையுண்டிறே தா₄த்வர்த்தம். முதல் க்ரீடை₃யிலேயாய், **"क्रीडन्तो नन्दनवने रौद्रेण किल हिंसिताः"** (க்ரீட₃ந்தோ நந்த₃நவநே ரௌத்₃ரேண கில ஹிம்ஸிதா:) என்று ராவணனாலே நலிவுபட்டு க்ரீடி₃க்கப் பெறுதேயிருந்தார்கள். இப்போது யுத்₃த₄க்ரீடை₃ பண்ணும்படி பெருமாளைப்பற்றினர்கள். (தே₃வை:) **"राक्षसनिर्जिताः"**

எல்லா தேவர்களும் ராமனோடு கூடினர்கள். 2. (எல்லா தேவர்களாலும்) பூர்வதேவர்கள் (தேவர்களுக்கு முன் பிறந்தவர்கள்) எனப்படும் அஸுரர் களோடும், மற்ற தேவர்களோடும் வித்தியாசமில்லாமல் அனைவரும் கூடினர்கள். 3. (எல்லா தேவர்களாலும்) "வித்₃யாத₄ரோப்ஸரோ யக்ஷ ரக்ஷோ க₃ந்த₄ர்வ கிந்நரா: பிசாசோ கு₃ஹ்யக: ஸித்₃தோ₄ பூ₄தோமீ தே₃வயோநய:" [அமரம் 1-1-11] [வித்யாதரன், அப்ஸரஸ், யக்ஷன், ராக்ஷஸன், கந்தர்வன், கிந்நரன், பிசாசம், குஹ்யகன், ஸித்தன், பூதம் ஆகியவை எல்லாம் தேவர்களுக்குப் பிறந்தவர்கள்.] என்கிறபடியே தேவ ஜாதியைச் சேர்ந்தவர்களான தேவர், தானவர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், கிந்நரர்கள், கிம்புருஷர்கள் முதலான அனைவரும் ராமனைச் சூழ்ந்து கொண்டனர். 4. (எல்லா தேவர்களாலும்) முப்பத்துமுக்கோடி தேவர் களில் ஒருவர் குறையவில்லை. (தேவர்களால்) "தி₃வு என்னும் தாது, விளையாட்டு, வெல்லும் விருப்பம், வழக்கு, தேஜஸ், துதி, கதி என்னும் பொருள்களில் பிரயோகிக்கப்படுகிறது" என்று திவுதாதுவுக்கு இத்தனை பொருள்களுண்டன்றோ; அவை எல்லாப் பொருள்களும் இங்கும் பொருந் தும்:–5. (தேவர்களால்) திவுதாது விளையாட்டைக் குறிப்பதாய், "நந்தனம் என்னும் தேவலோகவனத்தில் விளையாடுமவர்கள் கொடியவனான ராவண னாலே துன்புறுத்தப்பட்டார்கள்" [ரா-பா 15-23] என்று ராவணனாலே ஹிம்ஸிக்கப்பட்டு விளையாடாமலிருந்தவர்கள், இப்போது யுத்தவிளையாட்டு விளையாடலாம்படி ராமபிரானைப் பற்றினர்கள் என்றுமாம். 6. (தேவர்

(ராக்ஷஸ நிர்ஜிதா:) என்று முன்பு தோற்றுக்கிடந்தவர்கள் இப்போது இவனை வெல்லுவதாகப் பெருமானை அண்டை கொண்டார்கள். (தே₃வை:) "स्वयं जल्पते" (ஸ்வயம் ஜல்பதே) என்று ப₄யப்பட்டு வாயைத்திறக்கவும் மாட்டாதேயிருந் தவர்கள் இன்று பெருமானை அவஷ்டம்பி₄த்துப் பூசலிலே புக்கு வீரவாதமும் பரோபாலம்ப₄மும் பண்ணும்படி யானார்கள். (தே₃வை:) ராவணன் கையிலே தோற்றுத் தேஜோஹீநராயிருந்தவர்கள் இன்று ராவணனைக் கொன்று புகர் படைக்கும்படி வந்தார்கள். (தே₃வை:) முன்பு ராவ ணனைப் புகழத்தொடங்கி "वीणां संहर नारद स्तुतिकथालापैरलं तुम्बुरो" (வீணும் ஸம்ஹர நாரத₃ ஸ்துதிகத₂ாலாபைரலம் தும்பு₃ரோ) என்று அதுதனக்கும் இடம்பெருதே திரிந்தவர்கள் கலக்க மற்று, "भवान्नारायणो देवः" (ப₄வாந் நாராயணோ தே₃வ:) என்பது, "पुष्कराक्ष महाबाहो" (புஷ்கராக்ஷ மஹாபா₃ஹோ) என்பது, "सीता लक्ष्मीर्भवान्विष्णुः" (ஸீதா லக்ஷ்மீர் ப₄வாந் விஷ்ணு:) என்பதாய் ஸ்தோத்ரம் பண்ணும்படியானார்கள்.

களால்) திவுதாது வெல்லும் விருப்பத்தைச் சொல்லுவதாய், "அரக்க ரால் வெல்லப்பட்டவர்கள்" [ ] என்று, முன்பு இவனிடம் தோற்றுக்கிடந்தவர்கள் இப்போது இவனை வெல்லப்பாரித்து ராமபிரானை அண்டைகொண்டார்கள் என்றுமாம். 7. (தேவர்களால்) திவுதாது-வியவ ஹாரத்தைச் (வாய்வார்த்தையைச்) சொல்லுவதாய், "தானே பிதற்று கிறன்" [ ] என்று பயப்பட்டு வாயைத்திறக்கவும் முடியாமலிருந் தவர்கள் இன்று பெருமானைப் பற்றிநின்று போர்க்களத்திலேபுகுந்து வீரப்பேச்சும், எதிரியை அவமதிக்கும் பேச்சும் பேசும்படியானார்கள் என்றுமாம். 8. (தேவர்களால்) திவுதாது தேஜஸ்ஸைக் குறிப்பதாய், ராவணனுக்குத் தோற்றுத் தேசிழந்துகிடந்தவர்கள் இன்று ராவணனைக் கொன்று ஒளிபெறும்படி வந்தார்கள் என்றுமாம். 9. (தேவர்களால்) திவதாது துதியைக் குறிப்பதாய், முன்பு ராவணனைப் புகழத் தொடங்கி, "நாரதா! வீணையை நிறுத்து; தும்புருவே! புகழ்ப்பாடல்கள் பாடுவது போதும்" [மஹாநாடகம் 7-47] என்று, அப்படிப் புகழ்வதற்கும் இடம் பெருமலிருந்தவர்கள், கலக்கமில்லாமல், "தேவரீரே தேவரான நாரா யணன்" [ரா-யு 120-13] என்பது, "தடக்கையனே! புண்டரீகாக்ஷனே!" [ரா-யு 122-2] என்பது, "சீதையே இலக்குமி; தேவரீரே விஷ்ணு" [ரா-யு 120-28] என்பதாகத் துதிக்கும்படியானர்கள் என்றுமாம்.

(தே₃வை:) "चारणाश्च दिशो गताः" (சாரணாஸ்ச தி₃ஸோ க₃தா:) என்னும்படி வாசலிலே கட்டுண்டுகிடப்பாரும், தி₃க₃ந்தங்களிலே ஓடிப்போய் ஒளித்துக்கிடப்பாருமானவர்கள். "अद्य वै निर्भया लङ्कां प्रविष्टाः सूर्यरश्मयः" (அத்₃ய வை நிர்ப்ப₄யா லங்காம் ப்ரவிஷ்டா: ஸௌர்யரஸ்மய:) என்னும்படி ஸ்வைரக₃திகளாய்த் திரியத் தொடங்கினார்கள்.

இப்படி பீ₄தராய்த் திரிந்தவர்கள் இப்போது ராவணனைக் கொல்லவந்தபடியென்? என்னில்: (வாநரத்வமுபாக₃தை:) அவர்களும் ஸாகா₂ம்ருக₃ங்களாய் மறைந்தவர்களாய் வந்தார்கள். (வாநரத்வமுபாக₃தை:) அவன் நரரூபியானவாறே இவர்கள் வாநரரூபியானார்கள். "हीनान्नवस्त्रवेषः स्यात्सर्वदा गुरुसन्निधौ" (ஹீநாந்ந வஸ்த்ரவேஷ: ஸ்யாத் ஸர்வதா₃ா கு₃ருஸந்நிதௌ₄ள) என்று ஸ்வாமி ஸந்நிதி₄யில் ஒரு மாற்றுத் தாழநிற்கவேணுமிறே. (வாநரத்வமுபாக₃தை:)

---

10. (தேவர்களால்) திவுதாது கதியைக் குறிப்பதாய், "சாரணர்களும் திக்குகளில் ஓடினார்கள்" [ரா-யு 114-4] என்னும்படி ராவணன் வாசலில் கட்டப்பட்டுக்கிடப்பவர்களும், திசைதொறும் ஓடிஒளிப்பவர்களுமாயுள்ளவர்கள் "சூரியகிரணங்கள் இன்றே பயமற்று இலங்கையில் நுழைந்தன" [ரா-யு 114-82] என்னும்படி இஷ்டப்படி திரியுமவர்களானார்கள் என்றும் கொள்ளலாம்.

இப்படி பயந்து திரிந்தவர்கள் இப்போது ராவணனைக் கொல்ல வந்தது எப்படி? எனில்: 1. (குரங்குத்தன்மையை அடைந்தவர்களால்) பரமபுருஷன் மனிதனாய் மறைந்துவந்ததுபோலே, அவர்களும் கிளைக்குக் கிளைதாவுகையாலே சாகாமிருகம் எனப்படும் குரங்குருக்கொண்டு மறைந்து வந்தார்கள். 2. (வாநரத்தன்மையை அடைந்தவர்களால்) தலைவனான அவன் நரரூபியானவுடன் தாஸர்களான இவர்கள் வாநரரூபத்தை அடைந்தார்கள். "எப்போதும் ஸ்வாமியின் முன்னிலையில் உணவு, உடை, வேஷம் ஆகியவற்றில் (ஸ்வாமியைக் காட்டிலும் தாஸன்) குறைந்தவனாயிருக்கவேணும்" [மனு 2-194] என்று தலைவனின் முன்னால் தாஸர்கள் ஒரு மாற்றுத் தாழ நிற்கவேணுமாகையாலே அவன் நரனானபோது இவர்கள் வானரரானார்கள் என்று கருத்து. 3. (வாநரத்தன்மையை

என்று உபலக்ஷணமாய் ருக்ஷகோ$_3$புச்ச$_2$வாநரங்களாகப் பிறந்தார்கள். (வாநரத்வமுபாக$_3$தை:) பின்னையும் இரண்டு ஜாதியுமுண்டாயிருக்க. வாநரவிஶேஷத்தைச் சொல்லுவா னென்னென்னில்: வாநரங்களாலே லங்கை அழியக்கடவது என்ற நந்தி$_3$கேஶ்வரஶாபம் ப$_2$லித்தமை தோற்றுகைக்காக. "வாநரத்வமாக$_3$தை:" என்னுதே, "உபாக$_3$தை:" என்பா னென்? என்னில்: "विज्ञानं ब्रह्माप्नोति" (விஜ்ஞாந ப்$_4$ரம்ஹ மாப்நோதி) என்று பூர்வஜந்மவாஸனையை மறந்து வெறும் வாநரமாகையன்றிக்கே. தே$_3$வதாநுகு$_3$ணஜ்ஞாந ஶக்த்யாதி$_3$ களை விடாதே கார்யப்பட்டாங்காலே வாநரவேஷமாத் ரத்தை ஏறிட்டுக்கொண்டார்களென்று தோற்றுகைக்காக. (வாநரத்வமுபாக$_3$தை:) "सुग्रीवं शरणं गतः" (ஸுக்$_3$ரீவம்

அடைந்தவர்களால்) வாநரமென்றது உபலக்ஷணமாய், கரடி, கோபுச்சம் (மாட்டைப்போன்ற வாலுடைய குரங்குவகை) ஆகியவற்றையும் காட்டுவ தாய், கரடி, கோபுச்சம், வானரம் ஆகியவையாய்ப் பிறந்தார்கள் என்கை. 4. (வாநரத்தன்மையை அடைந்தவர்களால்) கரடி, கோபுச்சம் என்று மற்றும் இரண்டு ஜாதியிலும் பிரமன் முதலான தேவர்கள் பிறந்திருக்க, வாநரம் ஒன்றைமாத்திரம் சொல்லி, அதையிட்டு மற்ற இரண்டையும் உபலக்ஷிப்பானேன்? எனில்: 'வாநரங்களாலே இலங்கை அழியக்கடவது' என்ற நந்திகேச்வரனின் சாபம் பலித்தது தோற்று வதற்காக வாநரத்தைச்சொல்லி மற்ற இரண்டையும் உபலக்ஷிக்கிறது. [உத்தரகாண்டம் பதினாறுவது ஸர்க்கத்தில் நந்திகேச்வர சாபம் சொல்லப் பட்டது.] "வாநரத்வம் ஆக$_3$தை:" என்றாலே குரங்குருக் கொண்டார்கள் என்று தோற்றுமே; "உபாக$_3$தை:" என்று சொன்னதற்குக் கருத்தென்ன? எனில்: 'உப' என்னும் உபஸர்க்கம் 'ஸமீபத்தில்' என்று பொருள்படும். குரங்குத்தன்மைக்கு அருகில் வந்தார்களேயொழியக் குரங்குகளாகவே ஆகிவிடவில்லை என்று கருத்து; அதாவது,– "(பிறந்தவுடன் ஜீவன்) (பூர்வஜந்ம) ஜ்ஞாநம் மறையப்பெறுகிறான்" [வி-பு 6-5-16] என்று பூர்வ ஜந்ம ஜ்ஞாநம், வாஸனை (ஸம்ஸ்காரம்) முதலானவை மறைந்து வெறும் வானரங்களாகவே ஆகிவிடாமல், தேவதைகளுக்குரிய அறிவு, சக்தி முதலியவற்றை விடாமல், ராவணவதமாகிற காரியம் நிறைவேறுவதற்காக வாநரவேஷத்தை மாத்திரம் ஏறிட்டுக்கொண்டார்கள் என்று தோற்று வதற்காக 'உபாக$_3$தை:' என்கிறது என்கை. 5. (வாநரத்தன்மையை

ஶரணம் க₃த:) என்று பெருமாள் ஶரணம் புகும்போது, அதின் வாசியறியும் ஜாதியிலேயாகவேணுமிறே. "समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति" (ஸமுத்₃ரம் ராக₄வோ ராஜா ஶரணம் க₃ந்துமர்ஹதி) என்றும், "अञ्जलिं प्राङ्मुखः कृत्वा प्रतिशिश्ये महोदधेः" (அஞ்ஜலிம் ப்ராங்முக₂: க்ருத்வா ப்ரதிஶிஶ்யே மஹோத₃தே₄:)என்றும் ஸமுத்ரத்தை ஶரணம் புக்கவிடத்தில் அதுவாசியறியாமையாலே ப₂லித்ததில்லையிறே. (வாநரத்வ முபாக₃தை:) கர்த்தரி நிஷ்டை₂யாய் கர்மப₃ந்த₄நமாய், அவஶமாகவன்றிக்கே, வராவிரோத₄மாக ஸ்வபு₃த்₃த்₄யதீ₄ந ஸ்வீகாரத்தைச் சொல்லுகிறது.

இத்தேவர்களால் பெருமாள் பெற்றதென்? என்னில்: (பரிவ்ருத:) நமக்காகக் கீகடதே₃ஶத்திலே எழுந்தருளினர். விரோதி₄ப₃ஹுளமாயிருக்க என்புகுகிறதோ? என்று பரி

அடைந்தவர்களாலே) "ஸுக்கிரீவனை (ராமபிரான்) சரணடைந்தார்" [ரா-கி 4-20] என்று ராமபிரான் சரணம் புகும்போது அது பலிப்பதற்காக சரணுகதியின் பெருமையை அறியும் வாநரஜாதியிலே பிறந்து வைத்தார்கள். வ்யாக்ரவாநரஸம்வாதத்திலிருந்து வானரங்கள் சரணுகதியின் பெருமையை அறிந்தவை என்பது பிரஸித்தமன்றே. "அரசரான ராகவர் கடலரசனை சரணமடையவேண்டும்" [ரா-யு 19-31] என்றும், "கிழக்கு முகமாகக் கடலைக்குறித்து அஞ்ஜலி செய்துகொண்டு சயனித்தார் பெருமாள்" [ரா-யு 21-1] என்றும் ஸமுத்ரராஜனைப் பெருமாள் சரணம் புகுந்தபோது, அவன் சரணுகதியின் பெருமையறியாதவனுகையாலே பலிக்கவில்லையன்றே. 6. (வாநரத்தன்மையை அடைந்தவர்களாலே) 'அடைவிக்கப்பட்டவர்கள்' என்னுமல் 'அடைந்தவர்கள்' என்கையாலே, கர்மத்துக்குக் கட்டுப்பட்டு அதற்குப் பரவசமாகவல்லாமல், தேவர் முதலானுரால் ராவணனுக்கு வதமில்லை என்னும் வரத்துக்கு விரோதமில்லாமலிருக்கத் தாமே அறிந்து இசைந்து இவ்வுருவை ஏற்றுக்கொண்டமையைக் குறிக்கிறது.

இப்படி தேவர்கள் வானரர்களாகத் துணைக்கு வந்ததனுல் ராமபிரான் பெற்ற பயனென்ன? எனில்: 1. (சூழப்பட்டார்) "மிகத்தாழ்ந்த என்னைப் போன்றவனும் உய்வுபெறுவதற்காகக் கீகடமான (நெருக்கமான) இத்தேசத்திலே எழுந்தருளினர்; விரோதிகள் நிறைந்திருக்கும் இத்

வாரங்களாலே சூழ்ந்திருக்கப்பட்டார். (பரிவ்ருத:) "பரிதோ வ்ருத:" ஒரு பார்ஶ்வம் வெளியானால் அவ்விடத்திலே ராக்ஷஸர் புகுவர்களென்று ஸ்ரீநீலரும் பரிக₄ரும் கிழக்கும், ஹநூமதப்ரப்₄ருதிகள் தெற்கும், ஜாம்ப₃வத்ப்ரப்₄ருதிகள் மேற்கும், க₃ஜக₃வயாதி₃கள் வடக்குமாகச் சூழவிட நோக்கும் படியானார். (வாநரை: பரிவ்ருத:) **"शाखामृगा रावणसायकार्ता जग्मुः शरण्यं शरणं स्म रामं"** (ஶாக₂ம்ருகா₃ ராவணஸாயகார்த்தா ஜக்₃மு: ஶரண்யம் ஶரணம் ஸ்ம ராமம்) என்று கோ₃ப்த்ருத்வவரணம் பண்ணப்பட்டார். (தே₃வை: பரிவ்ருதஸ் த்வாம் ஹதவாந்) என்றாய், **"रावणस्य वधार्थिभिः अर्थितः"** (ராவணஸ்ய வதா₄ர்த்தி₂பி₄: அர்த்தி₂த:) என்கிறபடியே தேவர்களாலே அபேக்ஷிக்கப்பட்டு உன்னைக்கொன்றார் என்றுமாம். (தே₃வை: பரிவ்ருதோ ஹதவாந்) என்று ப₄ாக₃ ப்ரதிக்₃ரஹஸமாஜத்தில் அபேக்ஷித்தவளவன்றிக்கே, கார்ய

தேசத்திலே தனியே எழுந்தருளினால் என்ன ஆகுமோ?" என்று விபீஷணனைப்போன்ற அன்புடையார் அஞ்சாமைக்காக வானரங்களாலே சூழ்ந்திருக்கப்பட்டார். 2. (சூழப்பட்டார்) 'பரிதோ வ்ருத:' [சுற்றிலும் சூழப்பட்டார்] என்று பரிவ்ருதசப்தார்த்தம்; ஒரு சிறிதிடத்தில் சூழப் படாமலிருந்தால், அவ்விடத்தின் வழியாக அரக்கர் புகுந்து பெருமாளுக்குத் திங்கிழைத்து விடுவார்களோ என்று ஸ்ரீநீலரும் பரிக₃ரும் கிழக்கிலும், அனுமன் முதலானார் தெற்கிலும், ஜாம்பவான் முதலானார் மேற்கிலும், க₃ஜன், க₃வயன் முதலானார் வடக்கிலுமாகச் சூழ்ந்திருந்து ரக்ஷிக்கும் படியானார். 3. (வானரங்களால் நன்றாக வரிக்கப்பட்டார்) "குரங்குகள் ராவணனின் அம்புகளால் வருந்தி சரணமடையத் தகுந்த ராமனை சரணமாக அடைந்தனர்" [ரா-யு 59-45] என்று வானரர்களாலே, 'நீயே எங்களுக்கு ரக்ஷகனாகவேணும்!' என்று வரிக்கப்பட்டார் என்றும் பொருள் கொள்ளலாம். 'பரிவ்ருத:' என்றது பரித:—நன்றாக, வ்ருத:—வரிக்கப் பட்டார் என்றபடி. 4. (தேவர்களால் நன்றாக வரிக்கப்பட்டு உன்னைக் கொன்றார்) "ராவணனுடைய வதத்தை விரும்பிய தேவர்களால் வேண்டப் பட்டுப் பிறந்தார்" [ரா-அ 1-7] என்கிறபடியே தேவர்களால் வரிக்கப் பட்டு உன்னைக்கொன்றார் என்றும் கொள்ளலாம். 5. (தேவர்களால் சூழ்ந்து நின்று வரிக்கப்பட்டவராய்க் கொன்றார்) என்று தசரதயாகத்தில் பங்குபெற வந்தபோது வரித்ததோடல்லாமல், 'கார்யம் செய்யும்போது

காலத்திலே மறக்கக்கூடுமென்று தேவர்கள்தான் பூசலிலே பெருமாளருகே நின்று, "வைத்த நாள் வரையெல்லை குறுகிற்று; ப்₃ரஹ்மாஸ்த்ரம் தொடுத்தருளீர்" என்று அபேக்ஷிக்கக் கொன்றார் என்றுமாம். (வானரத்வமுபாக₃தைர் தே₃வை: பரிவ்ருத:) விஷத்₃ருஷ்டிகளுடைய கண்படலாகாது என்று தாங்களும் மறைந்து பெருமாளையும் மறைத்தார்கள் என்றுமாம்.

நாலாவது ச்லோகம்

அவ:—இப்படி பரிவாரமனிதரும். தாமும் பிறந்தது ஏதுக்காக? என்னில்: * மனிசர்க்கா நாட்டை நலியுமரக்கரை நாடித்தடிந்திருகைக்காக என்கிறது.

மறந்துவிடுவரோ?' என்று, தேவர்கள் சுயரூபத்தோடே போர்க்களத்தில் ராமபிரானைச் சூழ்ந்து நின்று,

"அத₂ ஸம்ஸ்மாரயமாஸ ராக₄வம் மாதலிஸ் தத₃ா।
அஜாநந்நிவ கிம் வீர த்வமேவ மநுவர்த்தஸே॥
விஸ்ருஜாஸ்மை வத₄ாய த்வம் அஸ்த்ரம் பைதாமஹம் ப்ரபே₄ா।
விநாஶகால: கதி₂தோ ய: ஸுரை: ஸோऽத்₃ய வர்த்ததே॥
[ரா-யு 111-1, 2]

[அதற்குப்பின் மாதலியானவன் ராகவனுக்குப் பின்வருமாறு நினைவுறுத்தினான்:– "வீரனே! தெரியாதவன்போலே ஏன் இப்படிக் காரியம் செய்து கொண்டிருக்கிறாய்? ஐயனே! இவனைக் கொல்ல நீ ப்ரஹ்மாஸ்திரத்தை விடுவாயாக; தேவர்களால் இவனுக்குக் குறிக்கப்பட்ட அழிவுகாலம் இன்று வந்தடைந்தது."] என்கிறபடியே மாதலியைக் கொண்டு, "வைத்த நாள் வரை எல்லை குறுகி' [திருவாய் 3-3-10] என்கிறபடியே இவனுடைய ஆயுள் முடிவு நெருங்கிற்று; ப்ரஹ்மாஸ்திரம் தொடுத்தருளீர்" என்று வரிக்கையாலே உன்னைக் கொன்றார் என்றும் கொள்ளலாம். 6. (குரங்குத் தன்மையை அடைந்த தேவர்களால் சூழப்பட்டவராய்) விஷக்கண் படைத்த அரக்கர்களுடைய கண்பட்டால் த்ருஷ்டிதோஷம் (கண்ணெச்சில்) ஏற்படுமென்று தாங்களும் (வேஷத்தாலே) மறைந்து நின்று, பெருமாளையும் சூழ்ந்துநின்று மறைத்தார்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

வ்யா:— (ஸர்வலோகேஶ்வர: ஸாக்ஷால் லோகாநாம் ஹிதகாம்யயா)இத்தை உடையராகையாலும். உடைமையை இவன் நலிந்தபடியாலும். லோகஹிதமாகக் கொன்றார். (ஸர்வலோகேஶ்வர:) "**पतिं विश्वस्य**" (பதிம் விச்வஸ்ய) என்றும், "**सर्वस्य वशी सर्वस्येशानः**" (ஸர்வஸ்யவஶீ ஸர்வஸ்யேஶாந:) என்றும், "பொழிலேழும் காவல்பூண்ட" என்றும் சொல்லு கிறபடியே. ஒரு ஊருக்கன்று, ஒரு குறிச்சிக்கன்று, ஒரு நாட்டுக்கன்று, ஒரு மண்டலத்துக்கன்று, ப்₃ரஹ்மாண்ட₃ பர்யந்த ஜக₃ஜ்ஜந்மாதி₃காரணமானவன். (ஸர்வலோகேஶ்வர:) சதுஸ்ஸமுத்₃ரமுத்₃ரிதமான பூ₄மண்ட₃லத்துக்கு மாத்ரமன்றியிலே. "**भूर्भुवस्सुवर्महर्जनस्तपस्सत्य**" (பூ₄ர் பு₄வஸ்

நாலாவது ச்லோகம்

அவதாரிகை:–இப்படித் துணைவரும் தாமுமாய்ப் பிறந்தது எதற்காக? எனில்: "நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்கா, நாட்டை நலியும் அரக்கரை நாடித்தடிந்திட்டு நாட்டையளித்து உய்யச்செய்து" [திருவாய்7-5-2] என்கிறபடியே நல்லோர்கள்வாழ, துஷ்டனான உன்னைக் கொல்வதற்காக என்கிறது நாலாம் ச்லோகத்திலே.

வ்யா:—1. (நேரே எல்லா உலகங்கட்கும் ஈச்வரன் உலகங்களுக்கு நன்மையை விரும்பி) உலகங்களை இவர் உடையவராகையாலும், இவருடைய உடைமையான அவற்றை ராவணன் துன்புறுத்தியபடியாலும், உலகங்களுக்கு நன்மைக்காகக் கொன்றார். 2. (எல்லா உலகங்களுக்கும் ஈச்வரன்) "அனைத்துலகுக்கும் ஸ்வாமியாயிருப்பவன்" [தை-நா-11] என்றும், "எல்லாவற்றையும் வசத்தில் வைத்திருப்பவன்; அனைத்தையும் நியமிப்பவன்" [ப்ருஹ 6-4-22] என்றும், "பொழில் ஏழும் காவல்பூண்ட புகழ் ஆனாய்" [திருநெடு-10] என்றும் சொல்லுகிறபடியே, இவர் தலைவராயிருப்பது ஓர் ஊருக்கன்று; சில ஊர்கள்கொண்ட ஒரு குறிச்சிக்கன்று; சில குறிச்சிகள்கொண்ட ஒரு நாட்டுக்கன்று; சில நாடுகள்கொண்ட ஒரு மண்டலத்துக்கன்று; பூமண்டலம், சூரியமண்டலம், சந்திரமண்டலம் முதலான கணக்கற்ற மண்டலங்களைக்கொண்ட ப்ரஹ்மாண்டமிருகவுள்ள எல்லா உலகையும் ஆக்கி அளித்து அழிக்கும் ஜகத்காரணனாயிருப்பவன். 3. (எல்லா உலகிற்கும் ஈச்வரன்) நாற்புறமும் கடலால் சூழப்பட்ட பூமண்டலத்துக்கு மாத்திரமன்றியிலே, "பூ:, புவ:, ஸுவ:, மஹ:, ஜந:, தப:, ஸத்யம்" என்று நாராயணவல்லி முதலான வேதபாகங்களிலும்,

ஸு''வர்மஹர் ஜநஸ்தப: ஸத்யம்) என்கிற லோகங்களோடு. ''हिरण्मये परे लोके'' (ஹிரண்மயே பரே லோகே) என்கிற லோகத்தோடு வாசியற *எல்லாவுலகுமுடைய எம்பெருமான் என்கிறது. ''वेदापहारगुरुपातकदैत्यपीडाद्यापद्विमोचनमहिष्ठफलप्रदानैः'' (வேத$_3$ாபஹாரகு$_3$ருபாதகதை$_3$த்ய பீட$_3$ாத்$_3$யாபத்$_3$ விமோசந மஹிஷ்ட$_2$ ப$_2$லப்ரத$_3$ாநை:) என்று ப்$_3$ரஹ்மாதி$_3$களைப்போலே ஒருவன் காலிலே குனிந்து, அவன் ஆபத்துக்களைப்போக்கி அவன் அபீ$_4$ஷ்டங்களைக் கொடுக்கவந்த பதமோ? என்னில்: (ஸாக்ஷாத் ஸர்வலோகேஶ்வர:) ''य ईशेऽस्य जगतो नित्यमेव नान्यो हेतुर्विद्यत ईशनाय'' (ய ஈஶேऽஸ்ய ஜக$_3$தோ நித்யமேவ நாந்யோ ஹேதுர் வித்$_3$யத ஈஶநாய) என்றும், ''स्वाभाविकानवधिकातिशयेशितृत्वं'' (ஸ்வாப$_4$ாவிகாநவதி$_4$காதிஶயேஶித்ருத்வம்) என்றும் ஒரு காரணஜந்யமன்றிக்கே அவ்யவஹிதமாக ஸ்வதஸ்ஸித்$_3$த$_4$மான ஸர்வாதி$_4$பத்யமுடையவன். (ஸாக்ஷாத் ஸர்வலோகேஶ்வர:) ஒருவன் காணிப்பற்றிலே பலர் குடியேறி அகமெடுத்திருந்து 'இன்னாரகம்' என்று ஆண்டு

மற்ற சாஸ்திரங்களிலும் சொல்லப்படும் ஏழு உலகங்களோடும், ''பொன் மயமான மேலான உலகத்தில்'' [முண்டக 2-2-10] என்கிற பரமபதத்தோடும் வித்தியாசமில்லாமல் எல்லா உலகையுமுடைய எம்பெருமான் என்கிறது. ''வேதத்தைப் பறிகொடுத்தது; ப்ரஹ்மஹத்தி பாபம், அசுர பீடை முதலான ஆபத்துக்களைப்போக்கிப் பெரும்பலனைக் கொடுத்து பிரமருத்திரர்களை உன்னைத் தவிர எவன் காப்பாற்றுகிறான்?'' [ஸ்தோ-ர13] என்று பிரமன் உருத்திரன் முதலானவர்களைப்போலே ஒருவன் காலிலே குனிந்து அவனால் ஆபத்துக்கள் நீங்கப்பெற்ற, அவனால் இஷ்டங்களைக் கொடுக்கப்பெற்று உண்டான பதவியோ இவனுடையது? எனில்: 4. (நேரே ஸர்வலோகேச்வரர்) ''எவன் இந்த உலகை எப்போதும் நியமிக்கிறானோ, எவனை நியமிப்பதற்கு வேறொரு காரணமில்லையோ'' [ச்வே 6-17] என்றும், ''நாராயணனே! இயற்கையானதாய், எல்லையற்ற மேன்மையையுடைய ஈச்வரத்தன்மையை உன்னிடம் பொறுக்காத வைதிகன் எவன்?'' [ஸ்தோ-ர10] என்றும், ஒருகாரணத்தால் உண்டாவதன்றிக்கே, இடைவெளியில்லாமல் இயற்கையாகவே உள்ள ஸர்வேச்வரத் தன்மையை உடையவர். 5. (நேரே ஸர்வலோகேச்வரன்) ஒருவனுடைய நிலத்தைக் குத்தகையெடுத்துக்கொண்டு பலர் குடியேறி வீடுகட்டிக்கொண்

போந்தார்களேயாகிலும் ஸ்வாம்யம் காணிக்காரனதாயிருக்கு மாப்போலே, அவ்வவலோகங்களை இந்த்$_3$ராதி$_3$கள் ஆண்டு போந்தார்களேயாகிலும், அவ்யவஹிதமான ஸ்வத: ஸ்வாம்யம் எம்பெருமானுக்காயிருக்கை. (ஸர்வலோகேஶ்வர: ஸாக்ஷாத்) தம்முடைய ஈஶ்வரபா$_4$வத்திலே நின்று **"न सन्दृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनम्"** (**ந ஸந்த்$_3$ருஶே திஷ்ட$_2$தி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்**) என்றும், "கட்கிலீ" என்றும் ஒருவருக்கும் தோற்றுதபடி நிற்கையன்றிக்கே. **"नन्दामि पश्यन्नपि दर्शनेन"** (**நந்தா$_3$மி பஶ்யந்நபி த$_3$ர்ஶநேந**) என்றும் **"सोममिवोद्यन्तं दृष्ट्वा वै धर्मचारिणः"** (**ஸோமமிவோத்$_3$யந்தம் த்$_3$ருஷ்ட்வா வை த$_4$ர்ம சாரிண:**)என்றும், **"राघवश्च मया दृष्टः"** (ராக$_4$வஶ்ச மயா த்$_3$ருஷ்ட:) என்றும் ராஜாக்களோடு ருஷிகளோடு ராக்ஷஸிகளோடு வாசியறக் கண்ணிட்டுக் காணலாம்படிநின்று என்றுமாம்.

டிருந்து 'இன்னூர் வீடு' என்று அனைவரும் சொல்லும்படி அநுபவித்துக் கொண்டுவந்தார்களேயாகிலும், அவ்விடங்களின் சொத்துரிமை நிலச் சொந்தக்காரனுடையதாயிருப்பதுபோலே, இந்திரலோகம், ப்ரஹ்ம லோகம், கைலாசம் முதலான உலகங்களை இந்திரன், பிரமன், சிவன் முதலானவர்கள் ஆண்டுவந்தார்களானாலும், அந்த எல்லாவுலகங்களிலும் இடையிடாத இயற்கையான உரிமை எம்பெருமானுடையதாயிருக்கிறபடி.
6. (நேரே ஸர்வலோகேச்வரன்) தம்முடைய பரத்துவநிலையிலேநின்று "இவனுடைய உருவம் காணலாம்படி நில்லாது; இவனை எவனும் கண்ணால் காணமாட்டான்" [தை-நா 1-10] என்றும், "கட்கிலீ" [திருவாய் 7-2-3] என்றும் ஒருவருக்கும் காணமுடியாதபடியிருக்காமல், "நந்தா$_3$மி பச்யந்நபித$_3$ர்சநேந, ப$_4$வாமி த்$_3$ருஷ்ட்வா ச புநர் யுவேவ" [ரா-அ 12-104] "நெஞ்சென்னும் உட்கண்ணால் கண்டால் உகக்கிறேன்; கண்ணால் கண்டாலோவெனில் வாலிபனாகவே ஆகிவிடுகிறேன்" என்று தசரதனும், "உதயசந்திரனைப்போலே உள்ள அவனை தர்மாநுஷ்டானபரரான ரிஷிகள் கண்டு மங்களாசாஸனம் செய்து வரவேற்கிறார்கள்" [ரா-ஆ 1-11] என்று ரிஷிகளும், "ராகவரும் என்னால் காணப் பட்டார்" [ரா-ஸு 27-12] என்று ராக்ஷஸியான திரிஜடையும் வித்தியாசமில்லாமல் கண்ணாலே காணலாம்படி நின்று என்றும் கொள்ளலாம்.

அன்றியிலே. (ஸாக்ஷாத்) என்று, "**साक्षाद्भूत्वा हतवान्**" (ஸாக்ஷாத் பூ₄த்வா ஹதவாந்) என்று, அந்தர்யாமிபோலே கண்ணுக்குத் தோற்றாதபடி நிற்கையன்றிக்கே, பௌ₄மரோடு தி₃வ்யரோடு வாசியறக் காட்சிகண்டுநின்று, "**नाददानं शरान् घोरान् न मुञ्चन्तं शरोत्तमान्**" (நாத₃தா₃நம் ஶராந் கோ₄ராந் ந முஞ்சந்தம் ஶரோத்தமாந்) என்று தொடுத்ததும் விட்டதும் தெரியாதே ஓரம்பிலே பல அம்புகள் புறப்பட்டாற்போலே வளைந்த வில்லும் தா₄ரளமான அம்புமிருக்கும்படியென்? என்று கைவாரம்கொள்ளும்படியாக ப்ரத்யக்ஷராயே நின்றார் என்றுமாம்.

இப்படி ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷகரானால், "**सराक्षस परीवारं हतवांस्त्वां**" (ஸராக்ஷஸ பரீவாரம் ஹதவாம்ஸ் த்வாம்) என்று ஒரு ஜாதியாக நிர்வாஹகனோடே கிழங்கெடுக்கப்பெறுமோ? என்னில்: (லோகாநாம் ஹிதகாம்யயா) ஸ்வார்த்தமாக நலிந்தவரல்லர்; பரஹிதமாகச் செய்தா

அல்லது, 7. (நேரே) என்றதை 'ஹதவாந்' (கொன்றார்) என்றதோடுகூட்டி, 'நேரேநின்று கொன்றார்' என்கிறதாய், அந்தர்யாமிபோலே கண்ணால் காணமுடியாதபடியில்லாமல், பூமியிலுள்ளவர்களோடு தேவலோகத்திலுள்ளாரோடு வித்தியாசமில்லாமல், ராமபிரான் போர்புரியும் அற்புதக் காட்சிகண்டு நின்று, "கோரமான அம்புகளை எடுப்பதையும் காணவில்லை; சிறந்த அம்புகளை விடுவதையும் காணவில்லை" [ரா-ஆ,25-39] என்று தொடுத்ததும் விட்டதும் தெரியாமல், ஓரம்பிலிருந்து பல அம்புகள் வெளிவந்தாற்போலே, வளைந்த வில்லும் 'போதும் போதும்' என்னும்படியாக நீர்த்தாரைபோலே இடைவிடாமல் பொழியும் அம்புமிருக்கும்படியென்? என்று எதிரிகளும் அஞ்ஜலி கொள்ளும்படியாக நேரேயேநின்று கொன்றார் என்றும் கொள்ளலாம்.

இப்படி எல்லா உலகங்களுக்கும் ரக்ஷகரானால், "அரக்கர் பரிவாரத்தோடுகூடிய உன்னைக் கொன்றார்" என்று மேலே சொல்லுகிறபடியே, ராக்ஷஸஜாதி முழுவதையும் தலைவனோடு வேரறுக்கலாமோ? என்னில்: 1. (உலகங்களுக்கு நன்மையை விரும்பி) தனக்காக அழிக்கவில்லை, பிறருக்கு நன்மைக்காகவே செய்தார். "நல்லோர்களை ரக்ஷிப்பதற்கும், தீயவர்களை

ரத்தனை. "परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां" (பரித்ராணாய ஸாதூ$_4$நாம் விநாஶாய ச து$_3$ஷ்க்ருதாம்) என்று, பயிர் செய்வான் ஒருத்தன் களைபறிக்குமாப்போலே ஶிஷ்ட பரிபாலநார்த்த$_2$ம் அஶிஷ்டநிக்$_3$ரஹம் பண்ணுகை ப்ராப்தமிறே. (ஸர்வலோகேஶ்வர: லோகாநாம் ஹிதகாம்யயா த்வாம் ஹதவாந்) எல்லாவுலகுமுடைய எம்பெருமானாயிருந்தார் அவர்; "प्रवृद्धं लोककण्टकं" (ப்ரவ்ருத்$_3$த$_4$ம் லோககண்டகம்) என்று அவருடைய நாட்டை நலியும் அரக்கனாயிருந்தாய் நீ; ஆகையாலே, "यथापराधदण्डानां" (யதா$_2$பராத$_4$த$_3$ண்டா$_3$நாம்) என்று குற்றம்செய்கையாலே பொடிந்தாரத்தனை என்றுமாம். (ஸர்வலோகேஶ்வர:) ஈஶ்வரத்வமாவது.—"ईशते देव एकः" (ஈஶதே தே$_3$வ ஏக:) என்றும். "शास्ता राजा दुरात्मनां" (ஶாஸ்தா ராஜா து$_3$ராத்மநாம்) என்றும், "शास्ता विष्णुरशेषस्य" (ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஸ்ய) என்றும் நியந்த்ருத்வமிறே. அந்த ஸ்வாபா$_4$விகநியந்த்ருத்வம் நிலைநிற்கைக்

அழிப்பதற்கும் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கிறேன்" [கீதை 4-8] என்று பயிர்செய்யும் விவசாயி களைபறிப்பதுபோலே நல்லோர்களைக் காக்கத் தீயவர்களை அழிப்பது உரியதன்றோ. 2. (ஸர்வலோகேச்வரன் உலகங்களுக்கு நன்மையை விரும்பி உன்னைக் கொன்றான்) "எல்லா உலகுமுடைய எம்பெருமான்" என்று சொல்லும்படியாயிருந்தார் அவர்; "மிக வளர்ந்திருப்பவனும், உலகிற்கு முள்போன்றவனுமான ராவணனைக் கொல்வீர்" [ரா-பா 15-20] என்கிறபடியே, அவருடைய 'நாட்டைநலியும் அரக்கர்' [திருவாய் 7-5-2] என்று சொல்லும்படியிருந்தாய் நீ; ஆகையாலே, "குற்றத்துக்குத் தக்கபடி தண்டனை விதிப்பவர்களான ரகுகுலத்தலைவர்களுடைய" [ரகுவம்சம் 1-6] என்கிறபடியே நீ குற்றம் செய்கையாலே அதற்குத்தக்க தண்டனையை விதித்தார் என்றும் கொள்ளலாம். 3. (ஸர்வலோகேச்வரன்) ஈச்வரனாகையாவது,-"சேதநாசேதனங்களை ஒரு தேவன் நியமிக்கிறான்' [ச்வே 1-10] என்றும், "கு$_3$ருராத்மவதாம் சாஸ்தா ராஜா சாஸ்தா து$_3$ராத்மநாம் இஹ ப்ரச்ச$_2$ந்நபாபாநாம் சாஸ்தா வைவஸ்வதோ யம:" [வஸிஷ்டஸ்ம்ருதி 20-1; விஷ்ணுதர்மம் 65-27] [நல்லோர்களை ஆசாரியன் நியமிப்பான்; துஷ்டர்களை அரசன் நியமிப்பான், (தண்டனை அளிப்பான்;) பாபம்புரிந்துவிட்டு அதை மறைத்து வாழுமவர்களுக்கு (இறந்தபின்) ஸூர்யபுத்திரனான யமன் (நரக) தண்டனையளிப்பான்] என்றும், "எல்லாவுலகிற்கும் நியந்தா விஷ்ணுவே" [வி-பு 1-17-20] என்றும் நிய

காகச் செய்தார் என்றுமாம். (ஸர்வலோகேஶ்வர: ஹித காம்யயா) *"**राजानं सर्वभूतानां**" (ராஜாநம் ஸர்வபூ$_4$தாநாம்) என்றும், "**राजा त्वशासनात्पापं तदवाप्नोति किल्बिषं**" (ராஜா த்வஶாஸநாத் பாபம் தத$_3$வாப்நோதி கில்பி$_3$ஷம்) என்றும், "**राजा दण्ड्यांश्चैवाप्यदण्डयन्। अयशो महदाप्नोति निरयञ्चैव गच्छति॥**" (**ராஜா த$_3$ண்ட்$_3$யாம் ஶ்சைவாப்யத$_3$ண்ட$_3$யந்। அயஶோ மஹதா$_3$ப்நோதி நிரயஞ்சைவ க$_3$ச்ச$_2$தி॥**) என்றும் குற்றம் செய்தவர்களை த$_3$ண்டி$_3$யாதபோது பாபம்வரும். அது வாராமைக்கு ஸ்வஹிதத்துக்காகச் செய்தார் என்றாகவுமாம். (ஸர்வலோகேஶ்வர: லோகாநாம் ஹிதகாம்யயா) என்று தமக்கு ரக்ஷணீயமான லோகத்திலுள்ளார், "**परिपालय नो राजन् वध्यमानान्निशाचरैः**" (பரிபாலய நோ ராஜந் வத்$_4$யமாநாந் நிஶாசரை:) என்றும், "**राक्षसैर्वध्यमानानां बहूनां बहुधा वने**" (ராக்ஷஸைர் வத்$_4$யமாநாநாம் ப$_4$ஹூநாம் ப$_3$ஹுதா$_4$ வநே) என்றும் முறைபட்டவர்களுடைய ரக்ஷணார்த்தமாக என்றாகவுமாம்.

மிப்பவனுகையன்றே. இயற்கையான அந்த நியமிக்கும்தன்மை நிலைநிற்பதற்காக உன்னைக் கொன்றான் என்றும் கொள்ளலாம். 4. (ஸர்வலோகேச்வரன் நன்மையை விரும்பி) நன்மையென்றது தன் நன்மையாய், "குற்றம் புரிந்தவனுக்கு அரசன் தண்டனையளிக்காவிடில் அக்காரணத்தினுலேயே, குற்றம் செய்தவனுடைய பாபத்தை அரசன் அடைகிறான்" [ரா-கி 18-33] "தண்டிக்கத்தகாதவர்களை தண்டிப்பதாலும், தண்டிக்கத்தக்கவர்களை தண்டியாமலிருப்பதாலும் பேரிகழ்ச்சியை அடைகிறான்; நரகத்திற்கும் செல்கிறான்" [மநு 8-128] என்றும் உன்னைப்போல் குற்றம் செய்தவர்களை தண்டிக்காவிடில் பாபம் வரும்; *"எல்லா உயிர்களுக்கும் அரசனுயிருப்பவனை" [ ] என்கிறபடியே ஸர்வலோக சக்ரவர்த்தியான தனக்கு அது வராமலிருப்பதாகிற தன் நன்மையை விரும்பிக் கொன்றார் என்றுமாம். 5. (ஸர்வலோகேச்வரர் உலகங்களுக்கு நன்மையை விரும்பி) என்று தம்மால் ரக்ஷிக்கத்தக்க உலகத்திலுள்ளார், "அரசனே! அரக்கர்களால் ஹிம்ஸிக்கப்படும் எங்களைக் காப்பாற்றுவாயாக" [ரா-ஆ 6-19] என்றும், "பலரான அரக்கர்களால் பலவிதமாக ஹிம்ஸிக்கப்படும் எங்கள் சரீரங்களை வந்துபார்" [ரா-ஆ 6-16] என்றும்முறையிட, அவர்களுடைய ரக்ஷணத்திற்காகக் கொன்றார் என்றுமாம். 6. (ஸர்வலோகேச்வரர் உன் நன்மையை விரும்பி உன்னைக்

---

*பாரதாதி தனிச்லோகத்தில் "ஸர்வஸ்யவசிநம்" என்றுதொடங்கும் ப்ரமாணம் இதன் பூர்ணச்லோகம்.

(ஸர்வலோகேஶ்வர: தவ ஹிதகாம்யயா த்வாம் ஹதவாந்) என்ருய், "देवानां दानवानाञ्च सामान्यमधिदैवतम्" (தே$_3$வா நாம் தா$_3$நவாநாஞ்ச ஸாமாந்யமதி$_4$தை$_3$வதம்) என்றும், "பொது நின்றபொன்னங்கழல்" என்றும் அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற, "स्वतः सर्वे ह्यात्मानः" (ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந:) என்றுஸம்ப$_3$ந்த$_4$விஶிஷ்டராகையாலே ரக்ஷிக்கவேணுமென்று, "राजभिर्धृतदण्डास्तु कृत्वा पापानि मानवाः। निर्मलाः स्वर्गमायन्ति" (ராஜபி$_4$ர் த்$_4$ருதத$_3$ண்டா$_3$ஸ்து க்ருத்வா பாபாநி மாநவா:।நிர்மலா: ஸ்வர்க்க$_3$ மாயாந்தி) என்று உன்னை த$_3$ண்டித்து ஶுப$_4$னாக்கி உன்னைக் கைக்கொள்ளுகைக்குச் செய்தாராகவுமாம். (ஹிதகாம்யயா) அவர்களுடைய நன்மைக்குறுப்பாகவேணுமென்ற. (லோகாநாம் ஹிதகாம்யயா) "जगतामुपकाराय" (ஜக$_3$தாமுபகாராய) என்றும், "सकलमेतत्संश्रितार्थं चकर्थ" (ஸகலமேதத் ஸம்ஶ்ரிதார்த்த$_2$ம் சகர்த்த$_2$) என்றும், "உயிரளிப்பான்" என்றும் இவருடைய வ்யாபாரமாகில் பரார்த்த$_2$மாயிறேயிருப்பது.

கொன்ருர்) நன்மையென்றது ராவணனுடைய நன்மையாய், "தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் எப்போதும்பொதுவான தெய்வமான உன் திருவடியிணையை சரணமடைகிறேன்" [ஜிதந்தே 1-2] என்றும், "பொதுநின்றபொன்னங்கழல்" [மூன்-திருவ 88] என்றும், அன்புடையார், வெறுப்புடையார் என்னும் வித்தியாசமில்லாமல் "பரமாத்மாவுக்கு எல்லா ஆத்மாக்களும் இயற்கையிலேயே தாஸராயிருப்பவர்கள்" [ஹாரீதஸ்ம்ருதி; ஈச்வரஸம்ஹிதை] என்று எல்லாச் சேதனரும் இவனுக்கு இயற்கையில் அடிமைப்பட்டிருப்பவர்களாகையாலே, வெறுப்புடைய உன்னையும் ரக்ஷிக்கவேணும் என்று, "பாபம் செய்த மனிதர்கள் அரசர்களால் தண்டிக்கப்பட்டார்களாகில், குற்றம் நீங்கி சுவர்க்கமடைகிருர்" [ரா-கி 18-4] என்று உன்னை தண்டித்துப் பரிசுத்தனுக்கி உன்னைத் தன்னிடம் ஏற்றுக்கொள்வதற்காகச் செய்தார் என்றுமாம். 7. (நன்மையை விரும்பி) ராவணன் அழிவதுதானே அவர்களுக்கு நன்மையல்ல; நன்மைக்குத் தடை நீங்குவதன்மூலம் நன்மைக்கு உறுப்பாய் (உதவியாய்) இருப்பதொன்று ராவணஸம்ஹாரம். அதற்காகக் கொன்ருர். 8. (உலகங்களுக்கு நன்மையை விரும்பி) "பரமாத்மாவின் செயல் உலகிற்கு உதவுவதன் பொருட்டேயிருக்கும்; கர்மம் காரணமாக ஏற்படுவதன்று" [வி.பு 6-7-72] என்றும், "உன்னுடையதான எல்லாவற்றையும் அடியார்க்கு ஆக்கிஞய்" [வரதராஜஸ்தவம் 63] என்றும், "உயிரளிப்பான் எந்நின்றயோனியுமாய்ப் பிறந்தாய்" [திருவிருத்தம் 1] என்றும் இவருடைய செயலாகில் பிறர்க்காவேயன்ருே இருக்கும்.

இப்படி பரார்த்தமாகச் செய்தஹிதந்தான் ஏதென்னில்: (ஸராக்ஷஸ பரீவாரம் ஹதவாம்ஸ்த்வாம்) ப₃ாத₄கனுன உன்னையும் உனக்குத் துணையான பரிகரத்தையும் கொன்றார். (ஸராக்ஷஸபரீவாரம்) "பொல்லாவரக்கரைக் கிள்ளிக் களைந்தானை" என்கிறபடியே நிதா₃நஜ்ஞனான பி₄ஷக்கு தோ₃ஷமுள்ளவிடத்திலே குட்டமிட்டுச் சிகித்ஸிக்குமாப்போலே நல்லவரக்கரிருக்க துஷ்டராக்ஷஸரையே நலிந்தார். (ஸராக்ஷஸபரீவாரம்) தனித்தால் இத்தனை ப₃ாத₄கனுகானிறே. இப்படி கறுத்துணையாக்கியிறே இப்படி கைவிஞ்சிற்று. (ஸராக்ஷஸ பரீவாரம்) ப₃ாத₄கனுனவன்றும் கூட்டாய், ப₃ாத்₄யனுனவன்றும் கூட்டாயிற்று. (ஸராக்ஷஸபரீவாரம்) **"सर्पजातिरियं क्रूरा" (ஸர்ப்பஜாதிரியம் க்ரூரா)** என்றும், "அலம்பாவெருட்டாக்கொன்று திரியும் அரக்கரைக் குலம் பாழ்படுத்து" என்றும் ஸ்வத:ப்ரயுக்தப₃ாத₄கத்வமுடைய ஜாதியாகையாலே நிரவஶேஷமாக்கினுர். (ஸராக்ஷஸ பரீ

இப்படிப் பிறர்க்காகச் செய்த நன்மைதான் ஏதென்னில்: 1. (அரக்கர் பரிவாரத்தோடு கூடிய உன்னைக் கொன்றார்) உலகுக்குத் திங்கிழைத்த உன்னையும், உனக்குத்துணையான மற்ற அரக்கர்களையும் கொன்றார். 2. (அரக்கர் பரிவாரத்தோடு கூடிய) "பொல்லாவரக்கரைக் கிள்ளிக் களைந்தானை" [திருப்பாவை 13] என்கிறபடியே, நோயின் காரணமறிந்த வைத்தியன் சரீரத்தில் குற்றமுள்ளவிடத்தைமாத்திரம் அறுத்து வைத்தியம் செய்வது போலே, விபீஷணன்போன்ற நல்ல அரக்கரை உயிர்வாழவிட்டு, துஷ்டரான அரக்கரையே துன்புறுத்திஞர். 3. (அரக்கர் பரிவாரத்தோடுகூடிய) தனியே இருந்திருந்தால் ராவணன் இத்தனை தீயவனுககூட ஆகியிருக்க மாட்டான். இப்படிப்பட்டவர்களோடு கர்ப்பத்திலிருந்து ஸஹவாஸம் பண்ணினதாலேயே இப்படிக் கெட்டவனுனுன். ஆகையால் அவர்களை முதலில் அழித்தார். 4. (அரக்கர்பரிவாரத்தோடு கூடிய) பிறரை ராவணன் நலிந்தபோதும் துணைவராயிருந்தார்கள்; ராமனுல் நலியப்பட்டபோதும் அவனுக்குத் துணைவராஞர்கள்; அவனோடு கூடவே நலியப்பட்டனர் என்கை. 5. (அரக்கர் பரிவாரத்தோடுகூடிய) "இந்த ஸர்ப்பஜாதியானது கொடியது" [வி-பு 5-7-71] என்றும், "அலம்பா வெருட்டாக் கொன்று திரியுமரக்கரைக் குலம்பாழ்படுத்து" [பெரியாழ்திரு 4-2-1] என்றும் சொல்லுகிறபடியே இயற்கையிலேயே பிறரை நலியும் ஜாதியாகையாலே பூண்

வாரம்) இவன் பட்டானென்றால் நம்மரசனைக் கொன்றார் என்று பறைகொட்டி முழக்கிப்பின்பு ஒருத்தன் புறப்படாமே "அசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே...கருவழித்த" என்று அஸுரர்களை அற முடித்தபடி.

இப்பரிகரத்தளவிலே விட்டாரோ? என்னில்: (த்வாம்) இதுக்கெல்லாத்துக்கும் அதி₄ஷ்ட₂ாதாவாய், 'இன்னபடி நலியுங்கோள்' என்று வகையிட்டுக்கொடுத்துப் பகைத் தொடருயிருக்கிற உன்னை. (த்வாம்) "आततायिनमायान्तं हन्यादेवाविचारयन्" (ஆததாயிநமாயாந்தம் ஹந்யாதே₃வாவி சாரயந்) என்று த₃ாராபஹாரம் பண்ணி வத்₄யனுன உன்னை.

போடு அழித்தார். 6. (அரக்கர் பரிவாரத்தோடுகூடிய) ராவணன் அழிந்தான் என்று கேட்டு, 'நம் அரசனைக் கொன்றான் ராமன்' என்று யுத்த பேரிகை கொட்டி முழக்கிக்கொண்டு பின்னர் ஒருவன் புறப்படாதபடி "கீழுலகில் அசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே ஆழிவிடுத்து அவருடைய கருவழித்த அழிப்பன்" [பெரியாழ் 4-8-6] என்றாற்போலே அஸுரராக்கர்களை வேரறுத்தபடி.

இப்படிப் பரிவாரத்தைக் கொன்றதோடு விட்டாரோ? எனில்: 1. (உன்னை) இப்பரிவாரம் அனைத்துக்கும் அதிபதியாய், 'இப்படி உலகினரைத் துன்புறுத்துங்கோள்' என்று வழிசொல்லிக்கொடுத்து, தீர்க்க விரோதியாயிருக்கிற உன்னை. 2. (உன்னை)

"கு₃ரும் வா பா₃லவ்ருத்₃தௌ₄ வா ப்₃ராஹ்மணம் வா ப₃ஹுச்ருதம்।
ஆததாயிநமாயாந்தம் ஹந்யாதே₃வாவிசாரயந்॥
நாததாயிவதே₄ தோ₃ஷோ ஹந்துர் ப₄வதி கஶ்சந।
உத்₃யதாऽஸி விஷாக்₃நிஞ்ச ஶாபோத்₃யதகரம் தத₂ா॥
ஆத₂ர்வணேந ஹந்தாரம் பிஶுநம் சைவ ராஜஸு।
பா₄ர்யாதிக்ரமிணம் சைவ வித்₃யாத் ஸப்தாததாயிந:॥"
[விஷ்ணுஸ்ம்ருதி 5-185...188]

[ஆசாரியனாயினும், சிறுவனாயினும், முதியவனானும், பெருங்கேள்வியறிவுடைய அந்தணனாயினும், (தன்னைநோக்கி) வரும் ஆததாயியைக் (கொல்லலாமோ கூடாதோ என்று) ஆராயாமலே கொல்லவேண்டும். ஆத

(த்வாம்) தா3ரமாத்ரமன்றிக்கே, ராஜதா3ரமாய் ராஜத்3ரோஹியான உன்னை. (த்வாம்) தம்மளவன்றியிலே அநரண்யவத4த்தாலே குல விரோதி4யான உன்னை. (த்வாம்) அநுஜபா4ர்யாபஹாரம் பண்ணின வாலிபட்டபடி கண்டும் அக்3ரஜபார்யாபஹாரம் பண்ணி விடாதேயிருந்த உன்னை. (த்வாம்) **"विभीषणस्तु धर्मात्मा"** (விபீ4ஷணஷ்து த4ர்மாத்மா) என்று பரமதா4ர்மிகனான விபீ4ஷணன் ஹிதம் சொன்னால், **"पृच्छ बालमपि बुद्धिशालिनं"** (ப்ருச்ச2 பா3லமபி பு3த்3தி4 ஶாலிநம்) என்றும், **"यदस्य कथनायासैर्योजितोऽसि मया गुरो तत्क्षम्यताम्"** (யத3ஸ்ய கத2நாயாஸைர் யோஜிதோऽஸி மயா கு3ரோ। தத்

தாயியைக் கொல்லுமவனுக்கு அதனால் ஒரு தோஷமும் கிடையாது. (1, 2, 3,) (தன்னைக்கொல்ல) கத்தி, விஷம், அக்னி ஆகியவற்றை ஏந்தி நிற்பவர் மூவர் 4. சாபம் கொடுக்கக் கைதூக்கி நிற்பவன் 5. அபிசாரத்தால் கொல்லவிருப்பவன் 6. (தன்னைப்பற்றி) அரசர்களிடம் கோட் சொல்லுமவன் 7. (தன்) மனைவியிடம் தகாத செயலைப் புரிபவன் ஆகிய எழுவரையும் ஆததாயிகள் என்று அறியவேண்டும்.] என்று விஷ்ணு ஸ்மிருதியில் சொல்லியபடியே, இவருடைய மனைவியை அபஹரித்து, அதனாலே ஆததாயியாய், ஆராயாமல் கொல்லத்தக்க உன்னை. 3. (உன்னை) ஒரு ஸாமாந்யனுடைய மனைவியையோ அபஹரித்தது? அயோத்திநகர்க் கதிபதியான அரசனின் மனைவியை அபஹரித்தபடியாலே ராஜத்ரோஹியான உன்னைக் கொன்றார். 4. (உன்னை) தமக்கு மாத்திரமல்லாமல், தம் முன்னோனான அநரண்யனை நீ கொன்றபடியாலே குலவிரோதியான உன்னைக்கொன்றார். [இவ்விதிஹாஸம் உத்தரகாண்டம் பத்தொன்பதாம் ஸர்க்கத்திலுள்ளது.] 5. (உன்னை) தம்பியின் மனைவியை அபஹரித்த வாலீ பட்ட பாட்டைக்கண்டும், "பூர்வோ யோ தே3வேப்4ய: ஜாத:" [பு.ஸூ] [எவன் முன்னோனாயிருந்து தேவர்களுக்காகப் பிறந்தானோ] "மஹாபுருஷ பூர்வஜ" [ஜிதந்தே 1-1] [மஹாபுருஷனே! முன்னோனாய்ப் பிறந்தவனே!] என்கிறபடியே அக்3ரஜனான (1. பூர்வஜனான 2. தமயனான) ராமனின் மனைவியை அபஹரித்து விடாமலிருந்த உன்னை. 6. (உன்னை) "விபீஷணனோவெனில் அறவழிநிற்கும் தன்மையன்" [ரா-ஆர 17-24] என்று பரமதர்மிஷ்டனான விபீஷணன் நன்மை சொன்னபோது, "அறிவாளியாயிருக்கும் சிறுவனையும் கேட்கலாம்" [ ] என்றும், "இவ்விஷ்ணுபுராணத்தைச் சொல்லும் சிரமத்தை என்னால் நீர் அடைந்தீர் என்பது யாதொன்றுண்டோ, அதைப்பொறுத்தருளவேணும்"

க்ஷம்யதாம்) என்றும், "என்னைத் தீமனங்கெடுத்தாய் உனக்கென் செய்கேன்" என்றும், "அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன" என்றும் ப்ரத்யக்ஷத்தில் குருஸ்தோத்ரமும் ஶரீரார்த்த ப்ராணதி₃ நிவேத₃நமும் பண்ண ப்ராப்தமாயிருக்க, "अब्रवीत्परुषं वाक्यं" (அப்₃ரவீத் பருஷம் வாக்யம்) என்றும், "दासवच्चावमानितः" (தா₃ஸவச்சாவமாநித:) என்றும் பரிப₄வபரம்பரைகளைப் பண்ணி குருத்₃ரோஹியாய் ப₃ந்து₄ பரித்யாக₃ம் பண்ணின உன்னை. (த்வாம்) இந்த்ராதி ஶங்கரபர்யந்தமாக தேவதைகளைச் சிறைவைத்தும், அழித்தும், உதைத்தும் தே₃வதாத்₃ரோஹம் பண்ணிப் ப₂லப₄ுக்கான உன்னை. (த்வாம்) மருத்தாதி₃களுடைய யாக₃ப₄ங்க₃ம் பண்ணின உன்னை. (த்வாம்) யஜ்ஞஶத்ருவென்று இது விருதுபேராய், "फलमस्याप्यधर्मस्य क्षिप्रमेव प्रपत्स्यसे" (ப₂லமஸ்யாப்யத₄ர்மஸ்ய க்ஷிப்ரமேவ ப்ரபத்ஸ்யஸே) என்று அத₄ர்மம் பிடரியைப் பிடித்துக்கொண்டு நிற்கிற உன்னை.

[வி-பு 6-8-11] என்றும், "என்னைத் தீமனம் கெடுத்தாய் உனக்கென் செய்கேன்' [திருவாய் 2-7-8] என்றும், "அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன அடியேன் அறியேனே" [திருவாய் 2-3-2] என்றும், "ப்ரத்யக்ஷே கு₃ரவ: ஸ்துத்யா:" [ ] [ஆசாரியர்கள் நேரே புகழத் தக்கவர்கள்] "சரீரமர்த்த₂ம் ப்ராணம் ச ஸத்₃கு₃ருப்₄யோ நிவேத₃யேத்" [விஹகேச்வரஸம்ஹிதை] [சரீரம், பொருள், உயிர் ஆகிய அனைத்தையும் நல்ல ஆசாரியன் பொருட்டு ஸமர்ப்பிக்கவேண்டியது] என்றும் கூறுகிற படியே பிரதியுதவி செய்யவேண்டியிருக்க, "ராவணன் விபீஷணைக்குறித்துக் கடுஞ்சொல் பேசினான்" [ரா-யு 16-1] என்றும், "ராவணனால் வேலைக்காரனைப்போலே அவமதிக்கப்பட்டேன்" [ரா-யு 17-14] என்றும் பற்பல அவமானங்களைச் செய்து தம்பியைக் கைவிட்ட உன்னைக் கொன்றார். 7. (உன்னை) இந்திரன் முதல் சங்கரனீறாக உள்ள தேவதைகளைச் சிறை வைத்தும், அழித்தும், உதைத்தும், இருப்பிடத்தைப் பெயர்த்தெடுத்தும் தேவர்களுக்கு துரோஹம் செய்து அதன் பலத்தை அனுபவிக்கின்ற உன்னைக் கொன்றார். 8. (உன்னை) உத்தரகாண்டம் பதினெட்டாவது ஸர்க்கத்தில் விவரித்தபடி மருத்தன் முதலானோருடைய யஜ்ஞத்தை அழித்தவனாகையாலே, உன்னை "யஜ்ஞவிக்₄நகரம் ஹந்யாம்" [பார-ஸபா 68-26] [யாகத்துக்கு இடையூறு விளைவிப்பவனை கொல்லுவேன்] என்கிறபடியே கொன்றார். 9 (உன்னை) 'யாகவிரோதி' என்பதைப் பட்டப்பெயராகக்கொண்டு, "இந்த அதர்மத்தின் பலனை விரைவிலேயே அடைவாய்" [ரா-யு 51-30] என்று அதர்மம் பிடரியைப் பிடித்துக்கொண்டிருக்கிற உன்னைக் கொன்றார்.

(த்வாம்) மாரீச மால்யவத் கும்ப$_4$கர்ண விபீ$_4$ஷணாதி$_3$ பந்து$_4$ வாக்யங்களைக் கேளாதே விபரீதமே செய்த உன்னை. (த்வாம்) தே$_3$வதாத்ருப்தி பண்ணுகிறேனென்று. உன் தலையை அறுக்கைக்கு வழியிட்டுக் கொடுத்த உன்னை.

இவனைச் செய்ததென்? என்னில்: (ஹதவாந்) கண்ணோட்டமறக் கொன்றுவிட்டார். (ஹதவாந்) **"यादृशं कुरुते कर्म तादृशं फलमश्नुते"** (யாத்$_3$ருஶம் குருதே கர்ம தாத்$_3$ருஶம் ப$_2$லமஶ்நுதே) என்று யதே$_2$ாபாஸநம் ப$_2$லமாய் பிறரை ஹிம்ஸித்தாற்போலே தானும் ஹிம்ஸிதனானன். (ஹதவாந்) ஸ்வர்க்க$_3$ாரோஹண ஸாத$_4$நமான யுத்$_3$த$_4$யஜ்ஞத்திலே பஶ்வாலம்ப$_4$நம் பண்ணினார். (ஹதவாந்) "ஹந ஹிம்ஸா க$_3$த்யோ:" இறே. அந்தர்ப்ப$_4$ாவேணிச்சாய் ஸ்வர்க்க நரகங்களை க$_3$மிப்பித்தார் என்றாகவுமாம்.

---

10. (உன்னை) மாரீசன், மால்யவான், கும்பகர்ணன், விபீஷணன் முதலான உறவினரின் வார்த்தைகளைக் கேளாமல் அவற்றுக்கு விரோதமாகவே காரியம் செய்த உன்னைக் கொன்றார். 11. (உன்னை) சிவனைத் திருப்தி செய்விக்கிறேன் என்றுதொடங்கித் தலையை ஒவ்வொன்றாக அறுத்து ஆஹுதிசெய்ததன்மூலம் ராமன் உன்தலையை அறுப்பதற்கு வழி காண்பித்துக் கொடுத்த உன்னைக் கொன்றார்.

இவ்விராவணனைச் செய்ததென்? என்னில்: 1. (கொன்றார்) கண்ணோட்டமில்லாமல் (1. தாட்சண்யமில்லாமல், 2. உன் கண்ணில் ஓட்டமில்லாதபடி) கொன்றுவிட்டார். 2 (கொன்றார்) "எத்தகைய செயலைச் செய்கிறானோ அதற்கேற்ற பலனைப் பெறுகிறான்" [பார-ஆநு 196-34] என்று செயலுக்குத்தக்க பலனாய், ராவணன் பிறரைக் கொல்லுகையாலே தானும் கொல்லப்பட்டான். 3. (கொன்றார்) வீரசுவர்க்கம் புக ஸாதனமான யுத்த மாகிற யாகத்திலே ராவணனான பசுவை பலியிட்டார். 4. (செல்லுவித்தார்) "ஹந- ஹிம்ஸாக$_3$த்யோ:" என்கிறபடியே 'ஹந' தாது கொல்லுவதைச் சொல்லுவதோடல்லாமல், 'கதி, என்னும் செல்வதையும் சொல்லும். உள்ளடக்கிய'ணிச்' பிரயோகத்தையுடையதாகக் கொள்ளும்போது 'ஹதவாந்' என்றது 'செல்லுவித்தார்' என்றும் பொருள்படும்; புண்ய பாப

இப்படி விரோதி₄யைப் போக்கிச் செய்ததென்? என்னில்: (மஹாத்₃யுதி:) வடிவில் புகரிலே தொடை கொள்ளலாம்படியிருந்தார். (மஹாத்₃யுதி:) நடுவுண்டான ராஜ்யப்₄ரம்ஶவநவாஸாதி₃களால் பிறந்த செறுப்புத்தீர்ந்து இப்போது லோககண்டகனை நீ பட்டவாறே பெரிய தேஜஸ்வியாயிருந்தார். (மஹாத்₃யுதி:) "अभिषिच्य च लङ्कायां राक्षसेन्द्रं विभीषणं। कृतकृत्यस्तदा रामः" (அ₄பிஷிச்ய ச லங்காயம் ராக்ஷஸேந்த்₃ரம் விபீ₄ஷணம்। க்ருதக்ருத்யஸ் தத₃ா ராம:) என்று ஆஶ்ரிதகார்யம் செய்யப் பெறுகையால் வந்த தீ₃ப்தியாகவுமாம். (ஹதவாந் மஹாத்₃யுதி:) ராவணனைக் கொன்றது ஆயுத₄த்தையிட்டு என்றிருந்தோம். அங்ஙனன்றியிலே.

பலமான சுவர்க்கத்தையும், நரகத்தையும் அடைவித்தார் என்றபடி. "வெந்நரகம் சேராவகையே சிலைகுனித்தான்" [சிறியதிருமடல் 40-41] என்றாற்போலே, ராமபிரான் வில்வளைக்கையைக் காண்கையாலுண்டான பெரும்பயமாகிற நரகத்தையும், வீரசுவர்க்கத்தையும் அடைவித்தான் என்றுமாம்.

இப்படி விரோதியைப்போக்கினபின்பு என் செய்தார் என்னில்: 1. (பேரொளியுடையவர்) 'வடிவில் ஒளியை வழித்தெடுத்து மாலை தொடுக்கலாம்' என்று சொல்லலாம்படியான பேரொளியை உடையவரானார். 2. (பேரொளியுடையவர்) "ராஜ்யாத்₃ப்₄ரம்சோ வநே வாஸோ ஸீதா நஷ்டா ஹதோ த்₃விஜ:, ஈத்₃ருசீயம் மமாலக்ஷ்மீர் நிர்த₃ஹேத₃பி பாவகம்" [ரா-ஆ 67-24] [ராஜ்யத்திலிருந்து நழுவியது, வநத்தில் வாஸம், சீதை அபஹரிக்கப்பட்டது, ஜடாயு இறந்தது என்னும் இத்தகைய எனக்கு வந்த பெருமைக்குறைவுகள் தீயையும் சுடும்.] என்கிறபடியே இடையிலே உண்டான ராஜ்யநாசம், வநவாஸம், ஸீதாபஹாரம் முதலானவற்றால் பிறந்த குறைகள் தீர்ந்து, "உலகத்துக்கு முள்போன்றவன்" [ரா-பா 15-20] எனப்படும் நீ அறிந்தவுடன் பேரொளிபெற்றவரானார். 3. (பேரொளியுடையவர்) "அரக்கரரசனாக விபீஷணனை இலங்கையிலே முடிசூட்டி, செய்ய வேண்டியதைச் செய்துமுடித்த ராமபிரான்" [ரா-பா 1-85] என்று அடியவனான விபீஷணனின் காரியத்தைச் செய்யப்பெறுகையால் உண்டான ஒளியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். 4. (பேரொளியுடையவர் கொன்றார்) ராவணனைக் கொன்றது ப்ரஹ்மாஸ்திரத்தாலே என்று கேள்விப்பட்டோம்; இங்கு வந்துபார்த்தால், அதுசரியில்லை; "காகுத்தன்

"निर्दहेदपि काकुत्स्थः क्रुद्धस्तीव्रेण चक्षुषा" (நிர்த₃ஹேத₃பி காகுத்ஸ்த₂: க்ருத்₃த₄ஸ்தீவ்ரேண சக்ஷுஷா) என்று ப்ரதாபத்தையிட்டுச் சுட்டுவிட்டாரத்தனையாயிருந்தது. (மஹாத்₃யுதி:) "तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति" (தமேவ ப₄ாந்தமநுப₄ாதி ஸர்வம் தஸ்ய ப₄ாஸா ஸர்வமித₃ம் விப₄ாதி) என்று நீ புகர்கொள்ளுகைக்குப் பற்றின க்ஷுத்₃ர தே₃வதைகளடையக் கரிக்கொள்ளியாம்படி நிரவதி₄க தேஜோரூபரானவர். (மஹாத்₃யுதி:) "भारूपः" என்றும், "तेजसां राशिमूर्जितम्" (தேஜஸாம் ராஶிமூர்ஜிதம்) என்றும், "ஒண்சுடர்க்கற்றை" என்றும் தேஜ:பதா₃ர்த்தங்களையடையத் திரளப்பிடித்து ஓராக்கையிட்டாற்போலேயிருந்தார்

(ஏஷ த்வாம் ஹதவாந்) "विनाशस्तव रामेण संयुगे नोपपद्यते" என்று மூலியான அநுமானத்தையிட்டு மூலமான

கோபங்கொண்டானாகில் திக்கக்கும் கண்ணாலே எரித்தும் விடுவார்" [ரா-ஸு 30-14] என்கிறபடியே தம் ஒளியாலே சுட்டிருக்கவேண்டும் என்று தோற்றுகின்றது. 5. (பேரொளிபெற்றவர்) "ஒளி வீசும் அப்பரம்பொருளைப் பின்பற்றியே சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், அக்னி முதலான எல்லாம் ஒளிவிடுகின்றன; அவனுடைய ஒளியாலே இவையெல்லாம் ஒளி வீசுகின்றன" [கட 2-5-15] என்று நீ ஒளிபடைப்பதற்காகப் பற்றின பிரமன் உருத்திரன் முதலானவர்களெல்லாம் இவருக்குமுன்னே கரிக்கட்டையாம்படி எல்லையற்ற ஒளியுருப்படைத்தவர். 6. (பேரொளியாயிருப்பவர்) "ஒளியுருவானவர்" [சாந் 3-14-1] "உறுதிபெற்ற ஒளியுருவாயிருப்பவன்" [வி-பு 1-9-67] "ஒண்சுடர்க்கற்றை" [திருவாய் 1-7-4] என்கிறபடியே ஒளியுடைய பொருள்களையெல்லாம் ஒன்றுசேர்த்து ஒரு திருமேனியாக வடித்தாற்போலேயிருந்தார் என்றும் கொள்ளலாம்.

1. (இவர் உன்னைக் கொன்றார்) "மனிதனான ராமனால் போரிலே நீ அழிந்தது பொருந்தவில்லையே" [ரா-யு 114-7] என்று, "ராமன் அரக்கனான உன்னைக் கொன்றது பொருந்தாது; ராமன் மனிதனாகையாலே" என்னும் அநுமானத்தைக்கொண்டு நீ ராமனால் இறந்திருக்கமுடியாது என்று ஸாதிக்கப்பார்த்தேன்; அது சரியன்று; ஏனெனில்: லோகவ்யாப்தியில்லாத அநுமானமில்லாமையாலே அநுமானம் ப்ரத்யக்ஷத்தை மூலமாகக்கொண்டது;

ப்ரத்யக்ஷத்தை பா₃தி₄க்கவொண்ணுதாயிருந்தது. மநுஷ்ய ரான இவரே ராக்ஷஸனுன உன்னைக்கொன்ருர். (மஹா யோகீ₃ த்வாம் ஹதவாந்) ஶௌர்யவீர்ய தை₄ர்யஸ்தை₂ர்ய சாதுர்ய மாது₄ர்யாதி₃ ஸமஸ்தகல்யாண குணங்களையுடைய இவர் **"अमर्यादः क्षुद्रश्चलमतिरसूयाप्रसवभूः कृतघ्नो दुर्मानी स्मरपरवशो वञ्चनपरः। नृशंसः पापिष्ठः"** (அமர்யாத₃: க்ஷுத்₃ரஶ் **சலமதிரஸூயாப்ரஸவபூ₄: க்ருதக்₄நோ து₃ர்மாநீ ஸ்மரபரவஶோ வஞ்சநபர:। ந்ருஶம்ஸ: பாபிஷ்ட₂:**) என்று சொல்லுகிற ஸமஸ்தஹேயகுணபூர்ணனுன உன்னைக் கொன்ருர். (பரமாத்மா த்வாம் ஹதவாந்) எல்லாருக்கும் மேலாய் நியாமகாரயிருக்கிறவர். எல்லாருக்கும் கீழாய் நியாம்யனுன உன்னைக்கொன்ருர். (மஹத: பரமஸ் த்வாம் ஹதவாந்) மஹதா₃த்₃யசித்₃விலக்ஷணரானவர் அசித்ஸம்ஸ்ருஷ்டனுன உன்னைக்கொன்ருர். (ஹதவாந் ஸநாதநஸ்த்வாம்)

ராமன் உன்னைக் கொன்றதை ப்ரத்யக்ஷமாகக் காண்கிருேம். இப்படி மூல மான ப்ரத்யக்ஷப்ரமாணத்தைக்கொண்டு அறியப்பட்ட விஷயத்தை மூலி யான (மூலத்திலிருந்து உண்டான) அநுமானத்தால் அசைக்கமுடியாதென் பதை இப்போது அறிந்தேன்; மனிதரான இவரே அரக்கரான உன்னைக் கொன்ருர் என்கிருள். 2. (மஹாயோகி உன்னைக் கொன்ருர்) மஹாயோகி- பெருங்குணவாளர். சூரத்தன்மை, வீரத்தன்மை, தீரத்தன்மை, ஸ்திரத் தன்மை, சதுரனுய் (ஸமர்த்தனுய்) இருக்கும் தன்மை, இனிமை, முதலான எல்லா மங்களகுணங்களையுமுடைய இவர், "உலகவரம்பை மீறினவன், தாழ்ந்த விஷயங்களில் பற்றுள்ளவன்; நிலையற்ற நெஞ்சையுடையவன்; பொருமைக்குப் பிறப்பிடம்; நன்றிகொன்றவன்; தீயகர்வத்தையுடையவன்; காமவசப்பட்டவன்; வஞ்சனையே பொழுதுபோக்காயிருப்பவன்; கொடுஞ் செயல்புரிபவன்; பாபத்திலேயே ஊன்றியிருப்பவன்" [ஸ்தோ-ர 62] என்று சொல்லப்பட்ட எல்லாக் கெட்டகுணங்களும் நிறைந்திருக்கும் உன்னைக் கொன்ருர். 3. (பரமாத்மா உன்னைக் கொன்ருர்) எல்லாருக்கும் மேலாய் நியமிப்பவராயிருப்பவர், எல்லாருக்கும் கீழாய் நியமிக்கப்படுமவ னுன உன்னைக் கொன்ருர். 4. (மஹானுக்கு மேற்பட்டவர் உன்னைக் கொன்ருர்) மஹான் முதலான அறிவற்ற பொருள்களில் மிகச்சிறந்தவரா யிருப்பவர் அறிவற்ற சரீரத்தோடுகூடிய உன்னைக் கொன்ருர். 5. (பழைமை யானவர் உன்னைக் கொன்ருர்) எப்போதும் உள்ளவராயிருப்பவர் ஒரு

எப்போதும் உளராயிருக்கிறவர் காலகதேஶாவர்த்தியான உன்னைக்கொன்றார். (அநாதி₃மத்₄யநித₄நஸ் த்வாம் ஹதவாந்) முதலும் நடுவும் முடிவுமில்லாத இவர் ஜநமமும் ஆயுரவதி₄யு முடைய உன்னைக்கொன்றார். (மஹாந் த்வாம் ஹதவாந்) மஹானான இவர் "एषोऽणुरात्मा" (ஏஷோऽணுராத்மா) என்கிற உன்னை ஶரீரவியுக்தனும்படி பண்ணினார். (தமஸ: பரமஸ் த்வாம் ஹதவாந்) அப்ராக்ருதராயிருக்கிற இவர் ப்ராக்ருதனான உன்னைக் கொன்றார். (தா₄தா த்வாம் ஹதவாந்) ஜகத்₃த்₄தா₄ரகராயிருக்கிற இவர் தா₄ர்யங்களில் ஏகதேஶனான உன்னைக் கொன்றார். (ஶங்க₂சக்ரக₃தா₃தா₄ரஸ் த்வாம் ஹதவாந்) தி₃வ்யாயுத₄த₄ரரான இவர் க்ஷுத்ராயுத₄த₄ரனான உன்னைக் கொன்றார். (ஸ்ரீவத்ஸவக்ஷாஸ் த்வாம் ஹதவாந்) பரத்வசிந்ஹங்களை உடையவர் அபரத்வ சிந்ஹங்களையுடைய உன்னைக் கொன்றார். (நித்யஸ்ரீ; த்வாம் ஹதவாந்) நித்யாநபாயினியான ஸ்ரீயையுடையவர் ஆக₃மாபாயினியான ஸ்ரீயையுடைய உன்னைக் கொன்றார். (அஜேயஸ் த்வாம்

காலத்திலேயே இருக்கும் உன்னைக் கொன்றார். 6. (முதலும் நடுவும் முடிவுமில்லாதவர் உன்னைக் கொன்றார்) முதலும் நடுவும் முடிவுமில்லாத இவர் பிறப்பும் ஆயுளுக்கு எல்லையுமுடைய உன்னைக் கொன்றார். 7. (பெரியவர் உன்னைக் கொன்றார்) ஸ்வரூபத்தால் பெரியவரான இவர், "இந்த ஆத்மா அணுவாயிருப்பது" [முண்டக 3-1-9] என்கிற உன்னை சரீரத்தைப் பிரிந்தவனும்படி செய்தார். 8. (தமஸ்ஸுக்கு மேற்பட்டவர் உன்னைக் கொன்றார்) பிரகிருதிக்கு மேற்பட்ட இவர், பிரகிருதிக்கு உட்பட்ட உன்னைக் கொன்றார். 9 (தாரகர் உன்னைக் கொன்றார்) உலகனைத்தையும் தரிப்பவர், தரிக்கப்படுமவற்றில் ஒன்றான உன்னைக் கொன்றார். 10. (சங்கசக்ரகதைகளைத் தரிப்பவர் உன்னைக் கொன்றார்) மேலான ஆயுதங்களை தரிக்குமிவர் கீழான ஆயுதங்களை தரிக்கும் உன்னைக் கொன்றார். 11. (ஸ்ரீவத்ஸத்தை மார்விற்கொண்டவர் உன்னைக் கொன்றார்) மேன்மைக்கான அடையாளங்களை உடையவர் தாழ்விற்கான அடையாளங்களை உடைய உன்னைக் கொன்றார். 12. (எப்போதும் திருவுடையவர் உன்னைக் கொன்றார்) "நித்யாநபாயிநீ" [வி-பு 1-8-17] என்கிறபடியே பிரியாத திருவையுடையவர் வந்துபோகும் திருவை (செல்வத்தை) உடைய உன்னைக் கொன்றார். 13. (ஜயிக்கப்படாதவர் உன்னைக் கொன்றார்) ஜயிக்கப்படாதவர்

ஹதவாந்) அபராஜிதரானவர் தன்பக்கல் பராஜயமேயான உன்னைக் கொன்றார். (ஶாஶ்வதஸ் த்வாம் ஹதவாந்) போது செய்யாதவர் போதுசெய்கிற உன்னைக் கொன்றார். (த்₄ருவஸ்த்வாம் ஹதவாந்) ஸ்தி₂ரஸ்வபு₄வராயிருக்கிறவர் அஸ்தி₂ரனான உன்னைக் கொன்றார். (மாநுஷம் வபுராஸ் தூ₂ாய த்வாம் ஹதவாந்) மாநுஷ்யமுடையவர் மாநுஷ்யமில்லாத உன்னைக் கொன்றார். (விஷ்ணுஸ் த்வாம் ஹதவாந்) வ்யாபகரானவர் வ்யாப்யையகதே₁ஶனான உன்னைக் கொன்றார். (ஸத்யபராக்ரமஸ் த்வாம் ஹதவாந்) உண்மையான வாக்யசேஷ்டைகளையுடையவர் அஸத்ய வாக்ய சேஷ்டனான உன்னைக் கொன்றார். (ஸர்வை: பரிவ்ருதோ தே₃வைஸ் த்வாம் ஹதவாந்) விலக்ஷணராலே சூழப்பட்டவர் ஹேயராலே சூழப்பட்ட உன்னைக் கொன்றார். (வாநரத்வமுபாக₃தை: பரிவ்ருதஸ் த்வாம் ஹதவாந்) ராக்ஷஸனாய் ப்ரப₃லனான உன்னை க்ஷுத்₃ரம்ருக₃ங்களைக் கொண்டு கொன்றார். (ஸர்வலோகேஶ்வரஸ் த்வாம் ஹதவாந்) ஸர்வ நிர்வாஹகராயிருக்கிறவர் ஏகதே₃ஶ நிர்வாஹகனான உன்னைக்

தன்னிடம் முதலிலிருந்து கடைசிவரை தோல்வியே அடைந்த உன்னைக் கொன்றார். 14. (சாச்வதமானவர் உன்னைக் கொன்றார்) காலத்துக்குக் கட்டுப்படாதவர் காலத்துக்குக் கட்டுப்பட்ட உன்னைக் கொன்றார். 15. (உறுதியானவர் உன்னைக் கொன்றார்) உறுதியான தன்மைகளை உடையவர் உறுதியற்ற தன்மைகளை உடைய உன்னைக் கொன்றார் 16. (மனிதவுருவையுடைவராய் உன்னைக் கொன்றார்) மனிதத்தன்மையுடையவர் மனிதத் தன்மையில்லாத உன்னைக் கொன்றார். 17. (விஷ்ணு உன்னைக் கொன்றார்) ஸர்வவ்யாபியானவர் வியாபிக்கப்படுமவற்றில் ஒன்றான உன்னைக் கொன்றார். 18. (ஸத்யபராக்ரமர் உன்னைக் கொன்றார்) உண்மையான வார்த்தைகளையும், செயல்களையுமுடையவர் பொய்யான வார்த்தைகளையும் சேஷ்டைகளையும் உடைய உன்னைக் கொன்றார். 19. (எல்லா தேவர்களாலும் சூழப்பட்டவர் உன்னைக் கொன்றார்) உயர்ந்தவர்களாலே சூழப்பட்டவர் தாழ்ந்தவர்களாலே சூழப்பட்ட உன்னைக் கொன்றார். 20. (குரங்குத் தன்மையை அடைந்தவர்களால் சூழப்பட்டவர் உன்னைக் கொன்றார்) வலிமிக்க அரக்கனான உன்னை மிகத்தாழ்ந்த மிருகங்களைக்கொண்டு கொன்றார். 21. (ஸர்வலோகேச்வரர் உன்னைக் கொன்றார்) எல்லா உலகையும் ஆளுமவர் உலகில் ஒரு மூலையை ஆளும் உன்னைக் கொன்றார். 22. (நேரே உன்னைக் கொன்றார்) நேரே தனக்கு ஒரு குற்றம் செய்யாமையாலே

கொன்ருர். (ஸாக்ஷாத் த்வாம் ஹதவாந்) நேரே தனக்கொரு குற்றம் செய்யாமையாலே வாலியை மறைந்து நின்று கொன்றவர், நீ திரக்கழியத் தனக்குக்குற்றம் செய்தபடியாலே நேர்கொடு நேரே நின்று உன்னைக் கொன்ருர். (லோகாநாம் ஹிதகாம்யயா த்வாம் ஹதவாந்) லோகஹிதத்துக்காக அஹிதனை உன்னைக் கொன்ருர். (மஹாத்₃யுதிஸ் த்வாம் ஹதவாந்) பெரிய தேஜஸ்ஸையுடையவர் தேஜோஹீனனை உன்னைக் கொன்ருர். எதிரியைப்பெருப்பித்து, அவனைக் கொன்ருன் என்ருலல்லவோ நாயகனுக்குப் பெருமையாவது, பெருமாள் பெருமையும் ராவணனுடைய அபகர்ஷமும் சொல்லப்பெறுமோ? என்னில்: இவ்விடத்தில் நாயகனுடைய உத்கர்ஷாபகர்ஷங்களில் தாத்பர்யமில்லை. **"मानुषाणामविषये चरतः कामरूपिणः। विनाशस्तव रामेण संयुगे नोपपद्यते ॥"** (மாநுஷாணா மவிஷயே சரத: காமரூபிண:। விநாஶஸ்தவ ராமேண ஸம்யுகே₃ நோபபத்₃யதே ॥) என்று பெருமாளைச்சிறியராகவும், ராவணனைப் பெரியனுகவும் ப்₄ரமித்துப் பெருமாளால் இவனுக்கு வத₄ம் கூடாதென்று நினைத்திருந்து அவரை யுக்திகளாலே தெளிந்து, "பெருமாள் பெரியவர், ராவணன் ஓராப₄ாஸன்" என்று அறுதியிடுகிருளாகையால் ஓரநுபபத்தியில்லை.

வாலியை மறைந்துநின்று கொன்றவர், நீ கடைசிவரையில் தனக்குக் குற்றம் செய்கையாலே நேருக்கு நேரே நின்று உன்னைக் கொன்ருர். 23. (உலகங்களுக்கு நன்மையை விரும்பி உன்னைக் கொன்ருர்) உலக நன்மைக்காகத் தீயவனுன உன்னைக் கொன்ருர். 24. (பேரொளியுடையவர் உன்னைக் கொன்ருர்) பெரிய ஒளியை உடையவர் ஒளியற்ற உன்னைக் கொன்ருர். எதிரியின் பெருமையைச் சொல்லி, அவனைக்கொன்ருர் என்ருலல்லவோ தலைமகனுக்குப் பெருமை; இந்த ராமனைச் சிறந்தவனுகவும், ராவணனைத் தாழ்ந்தவனுக சொல்லி, அவன் இவனைக் கொன்ருன் என்பது ஒரு பெருமையோ? எனில்: இவ்விடத்தில் தலைமகனுன ராமனுக்கு ஒரு பெருமையையோ சிறுமையையோ சொல்ல ஏற்பட்டதல்ல இவ்வார்த்தை. "மனிதர்கள் ஸஞ்சரிக்கமுடியாத ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவனுய், வேண்டுமுருவம் கொள்ளவல்ல உனக்கு ராமனுல் சண்டையில் அழிவு பொருந்தாது" [ரா-யு 114-7] என்று ராமனை வலியற்ற மனிதனுகவும் ராவணனை வலிமிக்க அரக்கனுகவும் மயங்கி, ராமனுல் இவன் அழிந்தது பொருந்தவில்லையே என்று நினைத்திருந்து, அவரே பரமாத்மா என்று யுக்திகளாலே தெளிவுபெற்று, "ராமபிரான் மிகப்பெரியவன்; ராவணன் அவருக்கெதிரே

ஆக, இச்சதுஃச்லோகியால் சொல்லிற்றாயிற்று;—இவளுடைய முன்செய்வினை வெளிப்பட்டு "स त्वं मानुषमात्रेण रामेण युधि निर्जितः। न ह्यपत्रपसे राजन् किमिदं राक्षसर्षभ" (ஸ த்வம் மாநுஷமாத்ரேண ராமேண யுதி₃ நிர்ஜித:। ந ஹ்யபத்ரபஸே ராஜந் கிமித₃ம் ராக்ஷஸர்ஷப₄ ||) என்று ராவணனை உத்கர்ஷித்துப் பெருமானை உபாலம்பி₄த்து ஸாபராதை₄யான மந்தோ₃தா₃ரி அநுதப்தையாய் அவனுடைய ஸ்வரூபரூபகு₃ண விபூ₄திசேஷ்டைகளைத் தெளிந்துபேசி ஸ்தோத்ரமுக₂த்தாலே ப்ராயஶ்சித்தம் பண்ணிப் பூதையாகிறாள்.

யுத்₃த₄காண்டம் 116-வது ஸர்க்கம் 44-வது ச்லோகம்

पापानां वा शुभानां वा वधार्हाणां प्लवङ्गम।
कार्यं करुणमार्येण न कश्चिन्नापराध्यति॥

பாபாநாம் வா ஶுப₄ாநாம் வா வத₄ார்ஹாணாம் ப்லவங்க₃ம।
கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந் நாபராத்₄யதி॥

பதவுரை:—ப்லவங்க₃ம—வானரனே! பாபாநாம் வா—பாபிகள் விஷயத்திலும், ஶுப₄ாநாம் வா—புண்ணியவான்கள் விஷயத்திலும், வத₄ார்ஹாணாம்—கொல்லத்தக்கவர் விஷயத்திலும், ஆர்யேண—நல்லோனாலே, கருணம்—கருணையானது, கார்யம்—செய்யத்தக்கது. கச்சித்—எவனும், ந அபராத்₄யதி—குற்றம் செய்யவில்லை என்பது, ந—இல்லையே.

லிற்கவும் தகுதியற்றவன்" என்று இவ்விடத்தில் முடிவுகட்டுகிறாளாகையாலே பொருந்தாமை ஒன்றுமில்லை.

ஆக, இந்த நான்கு சுலோகங்களிலும் சொன்னதின் ஸாரமாவது:-மந்தோதரியானவள் தன் பூர்வஜந்மபாபத்தாலே, "அப்படிப்பட்ட நீ கேவலம் ஒரு மனிதனான ராமனாலே சண்டையில் வெல்லப்பட்டாய்; அரக்கர் தலைவனே! ஏன் வெட்கப்படுகிறாயில்லை?" என்று ராவணனைத் தூக்கிவைத்தும், ராமனைச் சிறுமைப்படுத்தியும் குற்றம்புரிந்த மந்தோதரி அநுதாபம் பிறந்து, ராமபிரானுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள், செல்வங்கள், செயல்கள் ஆகியவைகளைத் தெளிவடைந்துபேசித் துதிக்கும் முகத்தாலே பிராயச்சித்தம்செய்து பரிசுத்தையாகிறாள்.

அவதாரிகை:—ராவணனும் பட்டுப் பெருமாளும் விஜயிகளானுர் என்று பெரிய ப்ரியத்தைப் பிராட்டிக்குத் திருவடி விண்ணப்பஞ்செய்ய. பிராட்டியும் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே, விம்மல் பொருமலாய் ஸ்தப்₃தை₄யாயிருக்க, இவனும் விக்கலுக்கு வெம்மாற்றம்போலே **"किन्नु चिन्तयसे देवि किं त्वं मां नाभिभाषसे"** (கிந்நு சிந்தயஸே தே₃வி கிம் த்வம் மாம் நாபி₄ப₄ாஷஸே) என்று, "பெரிய ப்ரியத்தை விண்ணப்பம் செய்த எனக்கு ஒரு மறுமாற்றம் சொல்லாதே தேவர் எழுந்தருளியிருக்கிற இருப்பு என்தான்?" என்று திருவடி விண்ணப்பஞ்செய்ய, பிராட்டியும் உனக்கு ஸத்₃ருஶமாகத் தரலாவதொன்றில்லாமைகாண் நான் பேசாதிருந்தது என்ன; இவனும் இவ்வளவிலே நம் அபேக்ஷிதத்தை விண்ணப்பம் செய்து கொள்வோம் என்று பார்த்து, தேவரைச் சுற்றுமுற்றும் நலிந்த ராக்ஷஸிகளாகிறுர் க்ரூரைகளாய், தத₃நுகு₃ணநுப₄ாவைகளாயிற்று; ராவணனுக்கு முன்னே கொல்ல வேண்டுவது இப்பெண்பிள்ளைகளேயாயிற்று. அவனும்

அவதாரிகை:—'ராவணனும் அழிந்து, ராமபிரானும் ஜயித்தார்' என்னும் இனிய செய்தியைப் பிராட்டிக்கு அனுமன் விண்ணப்பம் செய்ய, பிராட்டியும் உகப்பின் மிகுதியாலே, விம்மல் பொருமல்கள் ஏற்பட்டுச் செயலற்றவளாயிருக்க, விக்கலெடுத்தால் கடுஞ்சொல்பேசி அவ்விக்கலைத் தடுப்பதுபோலே, அனுமனும் "தேவி! என்ன நினைக்கிறீர்? தேவரீர் எதனுல் என்னேடு பேசவில்லை" [ரா-யு 116-16] என்று, மிகவினிய செய்தியை விண்ணப்பம் செய்த எனக்கு ஒரு பதிலுரைக்காமல் தேவரீர் எழுந்தருளியிருக்கிற இருப்பை என்னென்று சொல்வது? என்று வெறுத்தாற்போலே வார்த்தை சொல்ல, பிராட்டியும், 'நீ செய்த பேருபகாரத்துக்குத் தக்கபடி நான் தரக்கூடியதொன்றில்லையே' என்று நினைத்தே பேசாமலிருந்தேன்' என்று கூற, அனுமனும் இச்சமயத்தில் 'நாம் விரும்பியதைச் சொல்லி நிறைவேற்றிக்கொள்வோம்' என நினைத்து, "தேவரீரைச் சூழ்ந்திருந்து மிகவும் துன்புறுத்திய அரக்கிகள் மிகக்கொடியவர்களாய், அதற்குத்தக்க மனப்பான்மையுடையவர்களாயிருக்கிறுர்கள்; ராவணனுக்கு

இவர்களோபாதி கேடனல்லன்; இவர்கள் இப்போது பாம்பு படமடங்கினாற்போலே இருக்கிறார்களித்தனையாயிற்று. இவர்களை ப₃ஹுப்ரகாரமாக ஹிம்ஸிக்கப்பாராநின்றேன். **"मुष्टिभिः पाणिभिश्चैव"** (முஷ்டிபி₄: பாணிபி₄ஶ்சைவ) என்று கையாலே குத்தியும், காலாலே துகைத்தும், நக₂ங்களாலே சே₂தித்தும், பற்களாலே கடித்தும் துண்டித்தும் **"छिन्नं भिन्नं शरैर्दग्धं"** (சி₂ந்நம் பி₄ந்நம் ஶரைர்த₃க்₃த₄ம்) என்று பெருமாள் திருச்சரங்கள் செய்ததெல்லாம் நானே பண்ணப் பாராநின்றேன்; ப₄க₃வத₃பசாரிகளையும் பா₄க₃வதாபசாரிகளையும் தண்டிக்கும் க்ரமத்தாலே தண்டிக்க முயலாநின்றேன். முன்பு வந்தபோது இடமில்லாமல் விட்டுப் போனேனித்தனை. இப்போது எனக்கு எல்லா ப்ரத்யுபகாரங்களும் பண்ணியருளிற்றாகலாம்; இத்தனையும் திருவுள்ளமாகவேணும்" என்ன; "பாபாநாம் வா" என்று அருளிச்செய்கிறாள்.

முன்னமே இவ்வரக்கிகளைக் கொன்றிருக்கவேண்டும்; அவன்கூட இவர்களைப்போல் கெட்டவனல்லன்; ராவணன் அழிந்துவிட்டபடியாலே இவர்கள் இப்போது பாம்பு படமடங்கினாற்போலே இருக்கிறார்களே யொழிய இவர்களுடைய விஷம் நீங்கிவிடவில்லை. இவர்களைப் பலவிதமாகத் துன்புறுத்தவேணுமென்று எனக்கு ஆசையாயிருக்கிறது. 'முஷ்டிகளாலும் கைகளாலும் கால்களாலும் அடித்துக்கொல்ல விரும்புகிறேன்' [ரா-யு 116-33] என்று கையாலே குத்தியும், காலாலே துகைத்தும், நகங்களாலே வெட்டியும், பற்களாலே கடித்தும், வெட்டியும் 'சேனை ராமனுடைய அம்புகளாலே கண்டதுண்டமாக்கப்பட்டு எரிக்கப்பட்டது' [ரா-யு 94-22] என்று ராமபிரானுடைய திருச்சரங்கள் செய்ததெல்லாம் இவர்கள் விஷயத்தில் நானே செய்ய நினைக்கிறேன்; பகவானிடம் அபசாரம் செய்தவர்களையும், பாகவதாபசாரம் செய்தவர்களையும் தண்டிக்கும் ரீதியிலே தண்டிக்க முயற்சிசெய்கின்றேன்; முன்புவந்தபோது அவகாசமில்லாமையாலே விட்டுப்போனேன்; இப்போது இந்த வரத்தை எனக்குக் கொடுத்தால் எல்லா வரமும் கொடுத்ததற்கு ஸமானம்; நியமிக்கவேணும்" என்று கூற, 'பாபாநாம் வா' என்றுதொடங்கும் இந்த ச்லோகத்தை அருளிச்செய்கிறாள் பிராட்டி.

வ்யா:— (பாபாநாம் வா ஶுபா₄நாம் வா) இவர்கள் நீ நினைத்திருக்கிற படியே பாபைகளாகவுமாம்; நான் நினைத்திருக்கிறபடியே ஶுபை₄களாகவுமாம்; அதுதானேயன்றே உத்தேஶ்யம்; "दोषो यद्यपि तस्य स्यात्" (தோ₃ஷோ யத்₃யபி தஸ்ய ஸ்யாத்) என்றாற்போலே அழுக்குடையவனன்றோ குளிக்க ப்ராப்தியுடையான்? அவர்கள் பாபைகளாகிலன்றோ நாம் முகங்கொடுக்கவேண்டுவது. சுபை₄களாகில் உன் வால் வேணுமோ? அவர்கள் புண்யங்களே கைகொடுக்குமே! கை முதலில்லாதார்க்கன்றோ கைமுதலாகவேண்டுவது என்றாள். (வதா₄ர்ஹாணும்) தண்ட்₃யனை தண்டிக்கவும் அல்லாதாரைத் தவிரவும் சொல்லுகிற த₄ர்மஶாஸ்த்ரம் தேவரீரைத் தோற்றிக் கிழித்துப் புகடக்கடவதோ? என்ன, ஆரேனு

வ்யா:—(பாபிகளாயினும், பரிசுத்தர்களாயினும்) இவர்கள் நீ நினைக்கிறபடி பாபம் செய்தவராக இருந்தாலும்சரி; நான் நினைத்திருக்கிறபடியே பரிசுத்தராயிருந்தாலும்சரி; எப்படியிருந்தாலும் கருணைகாட்ட வேண்டியதே; பரிசுத்தர் என்னும் பக்ஷத்தில் கருணைகாட்டவேண்டும் என்பதை நீயும் இசைவாய்; பாபிகளாயினும் கருணைகாட்டவேண்டும் என்பதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன் கேள்; 'நாம் கருணைகாட்டுவதற்கு மஹாபாபிகள் கிடைக்கமாட்டார்களா' என்றே நல்லோர்கள் எதிர் பார்த்திருப்பார்கள். "குற்றமிருந்ததாகில் மிகவும் நன்று" [ரா-யு 18-3] என்ற ராமபிரானைப்போலே. அழுக்குடையவனைத்தானே குளிப்பாட்ட வேணும். அதுபோலவே பாபமாகிற அழுக்குடையவர்கள் அகப்பட்டால் கருணைக்குளிர்நீராலே அவர்களைக் குளிப்பாட்டவேண்டியிருக்கும். ஆகையால் ராக்ஷஸிகள் பாபம் செய்தவராயிருப்பதால்தான் அவர்களுக்கு நாம் கருணைமுகம் காட்டவேண்டும். பாபமற்றவராகில் அவர்கள் உன் வாலைப் பிடித்துக்கொண்டு கடைத்தேறவேண்டிய அவசியமே இல்லை; அவர்களுடைய புண்ணியங்களே அவர்களைக் கைதூக்கிவிட்டுவிடும். தங்களைக் கடைத்தேற்றிக்கொள்ளத் தங்கள் கையில் ஒன்றுமில்லாதவர்களைத்தான் நல்லோர்கள் கைகொடுத்து தூக்கிவிடவேண்டும் என்றாள் பிராட்டி. இதைக் கேட்டதும், "குற்றமுள்ளவனை தண்டிக்கவேண்டுமென்றும், குற்றமற்றவர்களை தண்டிக்கக்கூடாது என்றும் சொல்லுகிற தர்மசாஸ்திரங்களை நீர் பிறந்தபின்பு கிழித்துப்போடவேண்டியதுதானோ?" என்று கேட்டான் அனுமன்; அதற்குச் சொல்லுகிறாள் பிராட்டி:-(கொல்லத் தக்கவராயினும்) நீ சொன்னது ஸாமாந்ய சாஸ்திரம். "தஸ்மாத₃பி வத்₄யம்

மாக ஶரணாகதரை ரக்ஷிக்கக்கடவது என்கிற விஶேஷ ஶாஸ்த்ரம் உன்னைத் தோற்றிக் கிழித்துப்புகடக்கடவதோ? என்கிறாள். (ப்லவங்கமு) பின்னையும் அவன் புத்தி திரிய விடாமையாலே, *"ஹரிஹரி" என்கிறாள். (ப்லவங்கம) என்று நச்சினத்தை நச்சும் ஜாதியானமை கண்டோம் என்கிறாள். வஸிஷ்டப்ரப்ருதிகள் மந்த்ரிக்கும்படியான இக்ஷ்வாகுவம்ஶத்தில் பிறந்தாயில்லை. யோகிகளாய் ஜநககுலத்திலே பிறந்தாயில்லை. காட்டிலே பணையோடு பணை தாவித்திரிகிற ஜாதியிலேயிறே பிறந்தது. அங்ஙனொத்தாருக்கு ஶரணாகதியோட்டையது தெரியாது என்கிறாள். "வானரோத்தம" (வாநரோத்தம) என்றவள் தானேயிறே

ப்ரபந்நம் ந ப்ரதிப்ரயச்சந்தி" [யஜுஸ் ஸம்ஹிதை 6-5-20] [ஆகையால் கொல்லத்தக்கவனாயினும், சரணமடைந்தவனைக் கைவிடுவதில்லை.] என்கிறபடியே கொல்லத்தக்க மஹாபாபத்தைச் செய்திருந்தபோதிலும், சரண மடைந்தவனை ரக்ஷிக்கவேண்டும் என்னும் விசேஷசாஸ்திரத்தை நீ பிறந்த பின்பு கிழித்துப்போடவேண்டியதுதானோ? ஸாமாந்ய சாஸ்திரத்திற்கும் விசேஷசாஸ்திரத்திற்கும் விரோதம்வந்தால் ஸாமாந்ய சாஸ்திரத்தைத் தள்ளி, விசேஷசாஸ்திரத்தையன்றோ கொள்ளவேணும் என்கிறாள் பிராட்டி. (தாவித்திரியும் குரங்கே) இப்படிச் சொன்னபின்பும், அனுமன் புத்தியை மாற்றிக்கொள்ளாமையாலே, *'ஹரி ஹரி' என்கிறாள் பிராட்டி. பிடித்தபிடியை விடாத உன் குரங்குப்புத்தியைத்தான் காண்கிறேன் உன் செயலில் என்கிறாள். வஸிஷ்டர், வாமதேவர் முதலானோர் மந்திராலோசனை சொல்லும்படியான இக்ஷ்வாகு வமிசத்தில் பிறந்தவனல்லையே நீ! கர்ம யோகிகளான ஜநககுலத்தில் பிறந்தவனுமன்றே நீ! காட்டில் கிளைக்குக் கிளை தாவித்திரியும் ஜாதியிலேயன்றோ நீ பிறந்தது! அப்பேர்ப்பட்ட உனக்கு சரணாகதியின் பெருமை எப்படித் தெரியும்? என்கிறாள். பேருப காரம் செய்த அனுமனைப் பிராட்டி இப்படி நிந்திக்கலாமோ? எனில்: அவன் செய்த பேருபகாரத்துக்குத்தோற்று "வாநரோத்தம" [ரா-யு 16-18] என்றவளே, அவன் அடாதசெயல்புரிவதில் பிடிவாதமாயிருப்பதைக் காண்கையாலே, அவனைத் திருத்துவதற்காக 'குரங்கே!' என்று நிந்திக்கிறு

* தகாத செயலைக்கண்டதால், பகவந்நாமோச்சாரணம் செய்வதாகவு மாம்; ஹரிசப்தம் குரங்கைச் சொல்லுவதாகையாலே 'குரங்கே குரங்கே' என்று சொல்லுவதாகவுமாம்.

''ப்லவங்கம'' என்கிருள். ராஜாக்களுமாய் மூலையடியே நடக்கவுரியருமாயிருக்கிற பெருமாளும் எங்கள்முன் இத்தனை, கோபித்தறியார். நீ வாநரஜாதியாயிருந்துவைத்து இங்ஙனே கோபிக்கக்கடவையோ? (கார்யம் கருணமார்யேண) இவர்கள் புண்யபாபங்கிடக்க, இப்போது ஒடுகிற தயநீயதசையைப் பாராய். இவர்களுக்கு ஒரு ரக்ஷகனில்லையே; இப்போது இவ்வளவிலே நாம் இரங்கவேணுங்காண். (ஆர்யேண) இவையெல்லாம் இப்போது நான் கற்பிக்கவேண்டும்படியாவதே உனக்கு. (ஆர்யேண) ஐந்த்ரவ்யாகரண பண்டிதனென்கிறது பொய்யோ? அவையுமெல்லாம் கற்றுக் கேட்டிருக்கச்செய்தேயும் இப்போது ராமகோஷ்டியில் பரிசயமானபடியாகாதே! அந்த கோஷ்டியில் பரிசயம் பழக்கமிறே நீ இங்ஙனே சொல்லவல்லையாயிற்று. நான் பிரிந்தபின்

ளாகையாலே குற்றமில்லை. (குரங்கே) ராஜாவாய், இஷ்டப்படி நடக்கத்தக்க ஸ்வாதந்திரியத்தையுடைய ராமபிரானும் எங்கள்முன் இத்தனை கோபமாகப் பேசியறியார்! நீ கேவலம் ஒரு குரங்காயிருந்து என்முன்னே இத்தனை கோபமாகப் பேசலாமோ?

(நல்லோனல் கருணைகாட்டப்படவேண்டும்) இவர்களுடைய புண்ய பாபத்தைப்பற்றிய ஆராய்ச்சி இப்போது எதற்கு? அது ஒருபுறமிருக்கட்டும். இப்போது இவர்களுக்குள்ள வருந்தத்தக்க நிலையைப்பார்! உன்னைப்போல் ஒருவன் இவர்களைத் துன்புறுத்தினுல் இவர்களை ரக்ஷிக்கக் கூடியவன் ஒருவனுமில்லையே! இப்படிப்பட்ட சமயத்திலே இந்நிலையிலுள்ளவர்களுக்கன்றோ நாம் இரங்கவேண்டும் என்கிருள். (நல்லோனுலே) நல்லோனுன உனக்கு இவையெல்லாம் இப்போது நான் சொல்லித்தர வேண்டியிருப்பதே! (நல்லோனுல்) இந்திரன் செய்ததாகையாலே 'ஐந்த்ர வ்யாகரணம்' எனப்படும் இலக்கணத்தையுட்படக் கற்ற பண்டிதன் என்று உன்னை அனைவரும் சொல்லுவது பொய்யோ? இப்படி எல்லா சாஸ்திரமும் கற்றுக் கேட்டிருந்தபோதிலும் இப்போது ராமகோஷ்டியில் பழகின பின்பு இத்தன்மையுடையவனுனுய்போலும்! அந்த கோஷ்டியில் பழக்கத்தினுலேயே நீ இப்படிச் சொல்லவல்லவனுனுயோ? நான் பிரிந்தபின்பு பெருமாளுடைய கோஷ்டி இப்படி (நீர்விடப்பட்ட பால்போலே) தரம் குறைந்துபோயிற்றுபோலும்! என்று கருத்து. (குற்றம் செய்யாதவன்

அக்கோஷ்டி இங்ஙன் நீர்த்ததாகாதே' என்று கருத்து. (ந கஶ்சிந் நாபராத்₄யதி) ''ஸம்ஸாரத்தில் குற்றமில்லா தாரார்? திரை நீக்கிக் கடலாடப்போமமோ? நற் குதிரையாக ப₄ாவித்திருக்கிற பெருமாள்தான் குற்றவாள ரல்லரோ? நான்தான் குற்றப்பட்டவளல்லேனோ? நீ தான் குற்றவாளனல்லையோ? 'பெருமாள் குற்றவாளரானபடி யென்?' என்னில்: தாம் காடேறப் போந்தார்; அவர்பின்னே மடலூருவாரைப்போலே இளையபெருமாளும் போந்தார்; தம்மோடே ஏகாந்தபோ₄கம் பண்ணக்கடவதாக இலே யகலப்படுத்திக்கொண்டு நானும் போந்தேன்; என்னைப் பிரிந்து பத்துமாஸம் இருந்தார்; தான் வாராவிட்டால் தன்னதோரம்பு இயங்கமாட்டாமையில்லையிறே. இவ்வழி இத்தனை நாள் பிரிந்திருக்க வல்லரானபோதே பெருமாள் பக்கலிலேயல்லவே குற்றம். பாரதந்த்ர்யத்துக்கநுகுண

ஒருவனுமில்லையே) இந்த உலகவாழ்க்கையில் குற்றமில்லாதவர் யார்? அலைபோனபின்பு கடலிலே குளிக்கலாம் என்று சொல்லமுடியுமோ? அது போலவே குற்றமில்லாதாரைப் பார்த்துக் கருணைகாட்டுவோமென்று சொன்னால் கருணைகாட்ட ஒருவருமே அகப்படமாட்டார்களே! குதிரை களில் சிறந்ததை 'நற்குதிரை' (நல்ல ஜாதிக்குதிரை) என்பதுபோலே 'நன்மனிதர்' என்னும்படி மனிதரிற் சிறந்தவராக வேஷமிட்டுக்கொண் டிருக்கும் ராமபிரான்தான் குற்றம் செய்யாதவரோ? நான்தான் குற்றம் செய்யாதவளோ? நீதான் குற்றம் செய்யாதவனோ? ராமபிரான் என்ன குற்றம் செய்தார்? எனில்: அவர் காடுசென்றார்; மடலூருவார் நாயகன் சென்றவிடமெல்லாம் செல்லுவதுபோலே லக்ஷ்மணனும் பின்னே காடு சென்றார்; ராமபிரானோடு காட்டில் தனிமையிலே இஷ்டப்படி விளையாடி இன்புறலாம் என்று மநோரதம் செய்துகொண்டு நானும் பின்தொடர்ந் தேன். இப்படிப்பட்ட என்னைப்பிரிந்து பத்துமாஸம் இருந்தார்; தான் மனிதபாவனைக்குச்சேர வரமுடியவில்லையென்றாலும், தன்னுடையதோர் அம்பைவிட்டு ராவணனை நினைத்தமாத்திரத்தில் அழிக்கக்கூடவா முடிய வில்லை? இது செய்யமுடிந்திருந்தபோதிலும், என்னை இத்தனைநாள் பிரிந் திருந்திருக்கவல்லவரானபோதே பெருமாள் குற்றம் செய்தவர் என்பது தெரியவில்லையா? என்னுடைய பாரதந்திரியத்துக்குத் தகுதியாக நான் அவர் என்ன செய்தபோதிலும் பேசாமலிராமல் அவர் குற்றத்தை உன்

மாகப் பேசாதிராதே. அது தன்னைச் சொன்ன என்பக்க லன்றோ குற்றம். இந்நாயகன் சொன்ன கார்யம் செய்த அடியாரை தண்டிக்கப்பார்த்தவன்று பெருமாள் அருளிச் செய்த கார்யம் செய்யப்போந்த உன்னை முற்பட தண்டித்துக்கொண்டன்றோ ராவணன் சொன்ன கார்யம் செய்த இவர்களை தண்டிப்பது. ஆகையாலே நீ யல்லையோ குற்றவாளன். 'எல்லாப்படியாலும் பெருமாள் ஒரு விஷயத்தை முனிந்தவன்று ஆறவிடுகைக்கு நானுண்டு. நானும் அவர் வழியோடு போகவேண்டியிருந்தவன்று எனக்கு நீயுண்டு' என்றிருந்தேன். நீயும் இங்ஙனேயானால் அபராதஞ் செய்வார்க்குப் புகலாவார் உண்டோ?'' என்கிறாள்.

யுத்தகாண்ட தனிச்லோகம் முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

னிடம் சொன்னபோதே நான் குற்றம் செய்தவளென்பது தெரியவில்லையா? தங்கள் தலைவனான ராவணன் சொன்னதைச் செய்ததற்காக அவனடியாரான இவ்வரக்கிகளை தண்டிக்க நினைத்தால் ராமபிரானுடைய காரியம் செய்யவந்த உன்னை முதலில் தண்டித்துவிட்டன்றோ ராவணன் சொன்ன காரியம் செய்த இவர்களை தண்டிக்கவேண்டும். ஆகையால், உன் நினைவின் படியே நீ குற்றம்செய்தவனாகிவிட்டாயே! ஆகவிப்படி ராமபிரானும், நானும் நீயுமே குற்றவாளிகளாய்விட்டபின்பு உலகில் குற்றம் செய்யாதவர் யார்? கெடுவாய்! நான் ஒருவிதமாக நினைக்க, அந்நினைவைப் பாழ்படுத்தி விட்டாயே! அதாவது:-எல்லாவிதத்திலும் ராமபிரான் ஒரு சேதனனைக் கோபித்தபோது, அவருடைய கோபத்தை ஆற்றுவதற்கு (புருஷகார பூதையான) நான் உண்டு; நானும் அவர்வழியிலேசென்று ஒரு சேதனனைக் கைவிட்டபோது, (ஆசாரியனான) நீ உண்டு அச்சேதனனையும் எங்களையும் திருத்திச் சேர்ப்பிப்பதற்கு என்று நினைத்திருந்தேன். நீயும் இப்படிக் கருணையற்றவனானால் குற்றம் செய்தவருக்கு யார் புகல்? என்கிறாள் 'அஜ்ஞாதநிக்ரஹா' [கோபம் என்பதையே அறியாதவள்] 'கருணா' [கருணையே வடிவெடுத்தவள்] என்று சாஸ்திரங்களில் பேசப்படும் பிராட்டி. அரக்கிகளிலும் கொடிய நம்மைப்போன்ற மஹாபாபிகளுக்குத் தஞ்சமாவது பெருமாளுடைய சரமச்லோகங்களன்று; பிராட்டியினுடைய இந்தச் சரமச்லோகமே நமக்கு எப்போதும் தஞ்சமாகக்கடவது.

உத்தரகாண்டம் 40-வது ஸர்க்கம், 16-வது ச்லோகம்

स्नेहो मे परमो राजन् त्वयि नित्यं प्रतिष्ठितः।
भक्तिश्च नियता वीर भावो नान्यत्र गच्छति॥

ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டி₂த:।
ப₄க்திஶ்ச நியதா வீர ப₄ாவோ நாந்யத்ர க₃ச்ச₂தி॥

பதவுரை:—ராஜந்—*அரசரே!*, மே—*எனக்கு*, பரம:—*மிகச்சிறந்த*, ஸ்நேஹ:—*அன்பானது*, த்வயி—*தேவரீரிடத்தில்*, நித்யம்—*எப்போதும்*, ப்ரதிஷ்டி₂த:—*நிலைநிற்கிறது*. ப₄க்தி: ச—*பக்தியும்*, நியதா—*நித்தியமாயிராநின்றது;* வீர—*சூரனே!* ப₄ாவ:—*(என்) நினைவு*, அந்யத்ர—*வேறொரு இடத்தில்*, ந க₃ச்ச₂தி—*செல்கின்றதில்லை*.

"மாதர் மைதி₂லி ராக்ஷஸீஸ் த்வயி ததை₃-
வார்த்₃ராபராத₄ாஸ்த்வயா
ரக்ஷந்த்யா பவநாத்மஜால் லகு₄தரா
ராமஸ்ய கோ₃ஷ்டீ₂ க்ருதா।
காகம் தம் ச விபீ₄ஷணம் ஶரணமித்-
யுக்திக்ஷமௌ ரக்ஷத:
ஸா ந: ஸாந்த்₃ரமஹாக₃ஸ: ஸுக₂யது
க்ஷாந்திஸ் தவாகஸ்மிகீ" [ஸ்ரீகுணரத்நகோசம்-50]

[மைதிலித்தாயே! அப்போதே குற்றம்செய்து உதிரக்கைகழுவாமலிருந்த அரக்கிகளை அனுமனிடமிருந்து ரக்ஷித்த உன்னால், 'சரணம்' என்னும் வார்த்தைசொல்ல வல்லவராயிருந்த காகாஸுரனையும், விபீஷணாழ்வானையும் ரக்ஷித்த பெருமாளுடைய கோஷ்டி மிகச்சிறியதாக்கப்பட்டது. அப்படிப்பட்ட உன்னுடைய நிர்ஹேதுககிருபை மஹாபாபிகளான எங்களை இன்பமடைவிக்கட்டும்.] என்றார் பட்டரும்.

யுத்தகாண்ட தனிச்லோக த₃ர்ப்பணம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

உத்தர ஸ்ரீராமாயணம் 40-வது ஸர்க்கம் 16-வது ச்லோகம்

அவதாரிகை:—*வானரரை விடையனுப்பும்போது அனுமனுக்குப் பரமபதமளிக்கப் பெருமாள் திருவுள்ளமாக, அனுமன் சொன்ன வார்த்தையிது.*

வ்யா:—(ஸ்நேஹோ மே பரம:) "என்றனளவன்றால் யானுடைய அன்பு" (ராஜந்த்வயி) இதுதானும் என்னால் வந்ததன்று; "அதுவுமவனதின்னருளே" (நித்யம் ப்ரதிஷ்டி$_{2}$த:) இன்றன்றாகில் மற்றொருபோது கொடுபோகிறோம் என்ன; அங்ஙன் செய்யுமதன்று; த$_{4}$ர்மியைப்பற்றி வருகிற தாகையாலே. "நின்னலால் இலேன் காண்" என்னுமாப் போலே. (ப$_{4}$க்திர்ச நியதா) ஸ்நேஹமாவதென்? ப$_{4}$க்தியாவ தென்? என்னில்: பெருமாளையொழியச் செல்லாமை பிறந்து, வ்யதிரேகத்தில் முடிந்த சக்ரவர்த்திநிலை ஸ்நேஹம்; ப$_{4}$க்தி யாவது—"நில்" என்ன, **"குருஷ்வ"** (குருஷ்வ) என்னும்படியாய் முறையறிந்து பற்றின இளையபெருமாள் நிலை. (வீர)

வ்யா:—(என் அன்பு மிகப்பெரியது) "என்றனளவன்றால் யானுடைய அன்பு" [இர-திருவ 100] என்ற பூதத்தாழ்வாரைப்போலே உன்னிடம் எனக்குள்ள அன்பு என்னிலும் பெரிது என்கிறான். (அரசனே உன்னிடத்தில்) இவ்வன்பும் என்னால் ஏற்பட்டதன்று; உன் சிறப்பைக்கண்டு தானே ஏற்பட்டது; உன் அருளாலே ஏற்பட்டது என்றமாம். "அதுவுமவன தின்னருளே" [திருவாய் 8-8-3] என்றாற்போலே. 'இன்று பரமபதம் வேண்டாவிடிலும், பின்பொருகால் கொண்டுபோகிறோம்' என்று பெருமாள் திருவுள்ளமாக,–(எப்போதும் நிலைநிற்பது) எப்போதும் என் ராமஸ்நேஹம் அழியாதது; ஔபாதிகஸம்பந்தமுள்ள ஒரு விஷயத்தில் அன்பு நிலை நிற்காது; ஒளியை சூரியன் தர்மமாகக் (ப்ரகாரமாக; விசேஷணமாகக்) கொண்டிருப்பதுபோலே, தேவரீர் என்னை த$_{4}$ர்மமாகக் கொண்ட த$_{4}$ர்மி யாகையாலே இயற்கையான ஸம்பந்தமுள்ள உம்மைப்பற்றி வரும் அன்பாகையாலே இது என்றும் நிலைநிற்பது. "நின்னலாலிலேன்காண்" [பெரியதிரு 7-7-4] என்றாற்போலே கூறுகிறான். (பக்தியும் நித்யமானது) ஸ்நேஹத்துக்கும் பக்திக்கும் வித்தியாசமென்ன? எனில்: ராமபிரானைப் பிரிந்து உயிர்வாழமாட்டாமல் பிரிவிலே உயிர்விட்ட தசரதசக்ரவர்த்தியின் நிலை ஸ்நேஹமாகும்; பக்தியாவது:–"காட்டுக்கு வராதே; நில்" என்று சொன்னபோதிலும், "என்னைத் துணைவனாகக் கூட்டிக்கொள்ளவேணும்" [ரா-அ 31-22] என்று சொல்லி, சேஷசேஷிபா$_{4}$வமுறையறிந்து பற்றின லக்ஷ்மணனின் நிலையாகும். இருநிலையும் தனக்கு நித்யமானது என்கிறான். (வீரனே!) தன்னைத் தோல்வியுறச்செய்த (ராமபிரானுடைய) வீரகுணத்தைப்

தன்னைத் தோற்பித்த துறை. உம்முடைய வீரங்கொண்டு புறம்பே வென்றீர் என்று இங்கு வெல்லமுடியாது. தானும் வீரனுகையாலே தோற்பித்த துறையைப் பிடித்துப் பேசுகிறுன். (ப₄ாவோ நாந்யத்ர க₃ச்ச₂தி) என்னை மீட்டீராகிலும் என்னுடைய நெஞ்சை மீட்கப்போகாது. ''அந்யத்ர'' என்கிறது ''மற்ருரானுமுண்டென்பார்'' என்னுமாப்போலே கொடுபோக நினைத்த தேஶத்தின் பேருங்கூடத் தனக்கு அஸஹ்யமாயிருக்கிறபடி.

உத்தரகாண்ட தனிச்லோகம் முற்றிற்று.
பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
ஸ்ரீராமாயண தனிச்லோகம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பேசுகிறுன். உம்முடைய வீரங்கொண்டு மற்றுள்ளவரை வெற்றி கொண்டதுபோலே என்னை வெற்றிகொள்ளமுடியாது. [நான் நீர் வெற்றி கொள்ளுமுன்னமே அதற்குத் தோற்றிருப்பவன் என்று கருத்து.] தானும் வீரனுகையாலே, மஹாவீரனுன ராமனுடைய வீரகுணத்துக்குத் தோற்று, அந்த குணத்தையிட்டுத் துதிக்கிறுன். (என் நெஞ்சு மற்றென்றில் செல்லாது) என்னை உம்மிடமிருந்து இழுத்துப் பரமபதநாதனிடம் ஈடுபடச்செய்தாலும், என் நெஞ்சை இழுத்து அவனிடம் ஈடுபடுத்த உம்மாலும் முடியாது. ''மற்றென்று'' என்று பரமபதநாதனைச் சொல்லுவது, ''மற்ருரானுமண்டென்பார்'' [சிறியதிருமடல் 5] என்று மடலெடுத்த பரகாலநாயகி அருளிச்செய்ததுபோலே, தன்னைக் கொண்டுபோக நினைத்த தேசத்தின் பெயர்கூடத் தனக்கு நினைக்கப் பொறுக்கவொண்ணுமலிருக்கையைக் காட்டுகிறது. ''அச்சுவை பெறினும் வேண்டேன்'' [திருமாலை-2] என்ற தொண்டரடிப்பொடியாழ்வாரைப்போலே கூறுகிறுன். அனுமனுடைய ராமபக்தியின் மிகுதியைக் காட்டுகிறது.

உத்தரகாண்ட தனிச்லோக த₃ர்ப்பணம் முற்றிற்று.
ஸ்ரீவைஷ்ணவ ஸுத₃ர்சன பத்ராதிபனுன ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தாஸன்
இயற்றிய தனிச்லோக த₃ர்ப்பணம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

★

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிய

பாரதாதி தனிச்லோகம்

1. ஸ்ரீவிஷ்ணுபுராணம்

5-வது அம்சம் 13-வது அத்யாயம் 43-வது ச்லோகம்

ततो ददृशुरायान्तं विकासिमुखपङ्कजम्।
गोप्यस्त्रैलोक्यगोप्तारं कृष्णमक्लिष्टचेष्टितम् ॥

ததோ த₃த்₃ருஶூராயாந்தம் விகாஸிமுக₂பங்கஜம்।
கோ₃ப்யஸ் த்ரைலோக்யகோ₃ப்தாரம் க்ருஷ்ணமக்லிஷ்ட
சேஷ்டிதம் ॥

பதவுரை:—தத:—(கண்ணனைத் தேடிக் காணாமல் திரும்பின)பிறகு, ஆயாந்தம்—வருகின்றவனாய், விகாஸிமுக₂பங்கஜம்–மலர்ந்த முகத்தாமரையை உடையவனாய், த்ரைலோக்ய கோ₃ப்தாரம்—மூன்று உலகங்களுக்கும் ரக்ஷகனாய், அக்லிஷ்ட சேஷ்டிதம்—குற்றமற்ற செயலையுடையவனான, க்ருஷ்ணம்–கண்ணனை, கோ₃ப்ய:-கோபிகள், த₃த்₃ருஶு:-கண்டனர்.

வ்யா:—1. (தத:) இவ்விடத்தில் க்ருஷ்ணன் போனான் என்று நெடுந்தூரமெல்லாம் சென்று, "प्रविष्टः काननं कृष्णः

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பாரதாதி தனிச்லோக த₃ர்ப்பணம்

1. ஸ்ரீவிஷ்ணுபுராண ச்லோகம் (5-13-43)

அவதாரிகை:—பொறுக்கப் பொறுக்க அநுபவிப்பிப்பதற்காக, ஓரளவு கலந்து பரிமாறியபிறகு கோபியரை விட்டுப்பிரிந்து விடுகிறான் கண்ணன். கண்ணனைப் பிரிந்த கோபிகள், நெடுந்தூரம்தேடி, அவனைக் கண்டபடியைச் சொல்லும் ச்லோகமிது.

पदमत्र न लक्ष्यते। निवर्तध्वं'' (ப்ரவிஷ்ட: காநநம் க்ருஷ்ண: ப$_3$தமத்ர ந லக்ஷ்யதே। நிவர்த்தத்$_4$வம்) என்றும், "निवृत्तास्तास्ततो गोप्यो निराशाः कृष्णदर्शने" (நிவ்ருத்தாஸ் தாஸ்ததோ கே$_3$ாப்யோ நிராஶா: க்ருஷ்ணத$_3$ர்ஶநே) என்றும் நிராஶைகளான கோபீஜநங்கள் மீண்டவநந்தரம். 'இப்படிமுடிய நிராஶைகளாய், காணப் பெருதே விட்டார்களோ!' என்னில்: (த$_3$த்$_3$ருஶு:) நெடும் போது காணப்பெருத உருவுதல் தீரக்கண்டுகொண்டார்கள். 'இவர்கள் கண்டுகொண்டது அவரிருந்தவிடத்திலே சென்ருே?' என்னில்:(ஆயாந்தம்)பெண்களைநெடும்போதுண்டு நாம் அலைச்சல்படுத்துகிறது; அவர்கள் இத்தனைபோது என் படுகிருர்களோ?என்னும் த்வரை தோற்ற, *"स्वेदाम्बुघनतां गतौ'' (ஸ்வேத$_3$ாம்பு$_3$க$_4$நதாம்கதௌ) என்னும்படியே, குருவேர் பரம் பித்தமுகமும், குலைந்த பரியட்டமுமாய்க்கொண்டு வாரா நின்ருன். வருகிறவிடந்தன்னில் முகத்திலே ஒரு விஷாத$_3$ம்

முதல் வ்யாக்யானம்:–(பிறகு) இவ்விடமாகத் தான் கண்ணன் போனுன் என்று நெடுந்தூரம் தேடிச் சென்று, ''கண்ணன் காட்டில் புகுந்து விட்டான்; இங்கு அவனுடைய அடிச்சுவட்டைக் காணுமே'' [வி-புப்-13-41] என்றும், ''கண்ணனைக் காண்பதில் ஆசையற்றவர்களாய் அந்த கோபிகள் திரும்பினுர்கள்'' [வி-பு-5-13-42] என்றும் ஆசையற்றுப்போன ஆய்ச்சிகள் திரும்பினபிறகு. இப்படிக் கடைசிவரையில் விருப்பம் நிறைவேருமல் கண்ணனைக் காணுமலே கைவிட்டார்களோ? எனில்: (கண்டார்கள்) நீண்டநேரம் காணுமலிருந்த வாட்டம் தீரக் கண்டுகொண்டார்கள். இவர்கள் கண்டனுபவித்தது கண்ணனிருந்தவிடம் சென்ருே? எனில்: (ஆயாந்தம்) பெண்களை நெடுநேரமாக நாம் அலையவைத்திருக்கிருேம். அவர்கள் இந்நேரம் என்னபாடு படுகிருர்களோ? என்னும வேகம் தெரியும்படியாக, ''கே$_3$ாபீ கபோலஸம்ச்லேஷமபி$_4$க$_3$ம்ய ஹரேர் பு$_4$ஜௌ, புலகோத்$_3$க$_3$மஸஸ்யாய ஸ்வேத$_3$ாம்பு$_3$ க$_4$நதாம் க$_3$தௌ'' [வி-பு 5-13-55] [ஆயர் சிறுமியரின் கன்னத்தை அணைந்ததினுலே, அக்கன்னத்திலுள்ள கூச்செரியும் மயிர்களாகிற பயிர்களுக்கு, கண்ணனின் கைகள் வேர்வைநீர் பொழியும் மேகமாயின.] என்னும்படியே சிறுவியர்வைத்துளிகள் பரவிய முகமும் கலைந்த வஸ்திரங்களையு முடையவனுய் வந்தான். வரும்போது

---

*''ஸ்வேத$_3$ாம்பு$_3$கணிகாஞ்சிதம்'' என்று பழைய பதிப்புகளில் பாடம்.

தோற்றவந்தானே? என்னில்: (விகாஸிமுக₂பங்கஜம்) இவர்களைக்கண்ட அநந்தரம், "இத்தனைபோது உங்களை அம்பலமாகப்பண்ணினேனேயிறே;நம்மைத் தேடிக் காணமாட்டிற்றிலைகோள்; இத்தனையே உங்கள் சக்தி?" என்று தன் வெற்றியும் அவர்களுடைய தோல்வியும் தோற்றும்படி முறுவல் செய்து கொண்டு வந்தானாயிற்று. 'இப்படி அவன் வந்தவிடத்தில் அவர்கள் செய்ததென்? தங்களை அவன் பண்ணின தீயறத்தாலே முகத்தை மாறவைத்து ப்ரணயகலஹம் பண்ணியிருந்தார்களோ?' என்னில்: (கோ₃ப்ய:) ப்ரக₃ல்ப₄வநிதைகளன்றிக்கே,எட்டுமிரண்டுமறியாத இடைப்பெண்களாகையாலே **"काचिदालोक्य गोविन्दमायान्तमतिहर्षिता। कृष्ण कृष्णेति बहुशः प्राह नान्यदुदीरयत्"** (காசித₃ாலோக்ய கோ₃விந்த₃மாயாந்தமதிஹர்ஷிதா| க்ருஷ்ண க்ருஷ்ணேதி ப₃ஹுஶ: ப்ராஹ நாந்யது₃தீ₃ரயத்||) என்றும், **"तस्यैव रूपं ध्यायन्ती"** (தஸ்யைவ ரூபம் த்₄யாயந்தீ) என்றும், **"नेत्रभृङ्गाभ्यां पपौ तन्मुखपङ्कजम्"** (நேத்ரப்₄ருங்க₃ாப்₄யாம் பபௌ தந்முக₂ பங்கஜம்) என்றும் அவன் தூரத்திலே தோற்றுங்காட்டில் அறிந்துகொண்டு மேல்

முகத்திலே ஒரு கவலைதோற்ற வந்தானோ? எனில்: (மலர்ந்த முகத் தாமரையை உடையவன்) இவர்களைக் கண்டவுடன் "இத்தனை நேரம் உங்களை அம்பலத்திலே ஆட்டிவைத்தேன்; என்னைத் தேடித்தேடிக் காணாமல் இளைத்தீர்கள். இவ்வளவுதானோ உங்கள் சக்தி" என்று தன் வெற்றியும், அவர்களுடைய தோல்வியும் தோற்றும்படி முறுவல் செய்து கொண்டு வந்தானாயிற்று. இப்படி அவன் வந்தபோது அவர்கள் செய்ததென்ன? தங்களுக்கு அவன் செய்த கொடுந்தொழிலாலே முகத்தை மாற்றி வைத்துக்கொண்டு ஊடல் புரிந்திருந்தார்களோ? என்னில்: (கோபிகள்) ஊடல்கொள்வதற்கு, விஷயம் தெரிந்த முதிர்ந்த பெண்களல்லரே இவர்கள்; எட்டுமிரண்டும் பத்து என்று கூட அறியாத இடைப்பெண்களாகையாலே, "வருகின்ற கோவிந்தனைக் கண்டு மிகவுகந்து, ஒருத்தி 'கிருஷ்ணா! கிருஷ்ணா!' என்று பலகால் சொன்னாள். வேறொன்றும் சொல்லவில்லை" [வி-பு 5-13-44] என்றும், "ஒருத்தி கோவிந்தனுடைய உருவத்தை தியானித்தவளாய் யோகநிலையிலிருப்பவள் போலானாள்" [வி-பு 5-13-46] என்றும் "ஒருத்தி கண்களாகிற வண்டுகளாலே அவனுடைய முகத்தாமரையைப் பருகினாள்" [வி-பு 5-13-45] என்றும் அவன் வெகு

விழுந்தார்கள். அதுக்கடியென்? என்னில்: (த்ரைலோக்ய கோப்தாரம்) ரக்ஷ்யவர்க்கும் கூடுபூரித்துக் கிடக்கிற இத்ரை லோக்யத்திலே இந்த நாலிரண்டுபேரை ரக்ஷித்தாலென்? தவறிலென்? அவனுடைய ரக்ஷகத்வத்துக்கு பங்கம் வரப் புகுராநின்றதோ? இனி, ஸ்வதந்த்ரனோடே ப்ரணயரோஷம் கொண்டாடில் முட்டவிழ்ந்துவிடுமித்தனை. என்று மேல் விழுந்தார்கள். இப்படி ஸ்வதந்த்ரனாகில், தானிருந்த விடத்தே இவர்களடைய வந்து விழும்படியிருக்க, இருந்த விடத்திலிராதே வருவதென்? என்னில்: (க்ருஷ்ணம்) அவர் களுடைய ஸ்பர்சத்தையும், அவர்களுடைய தாழ்ந்த உக்தி களையுமொழியச் செல்லாமையுடையனாகையாலே. இப்படித் தங்களையொழியச் செல்லாமையுடையனான பின்பு, அவன் தானே வந்து கால் கட்டும்படியிராதொழிவானென்? என் னில்: (அக்லிஷ்டசேஷ்டிதம்) உபகார ஸ்ம்ருதியாலே. அதா கிறது,— இனிச்சிறிதுபோது தாழ்க்குமாகில் அடியே தொடங்கி "बहु स्यां" (பஹு ஸ்யாம்) என்று ஸங்கல்பித்து ஸ்த்ரீஸருஷ்டி பண்ணவேண்டும்படியாய் விடுமிறே. அப்படி

தூரத்தில் காட்சியளித்தபோதே அவனைக்கண்டு முன்சென்று அநுப வித்தனர். அதற்குக் காரணமென்ன? என்னில்: (மூவுலகரக்ஷகனை) "ரக்ஷிக் கப்படுமவர்கள் நிறைந்திருக்கும் இம்மூவுலகிலும் நம்மை நாலிரண்டுபேரை ரக்ஷித்தாலும் சரி, ரக்ஷியாவிட்டாலும் சரி அவனுடைய ரக்ஷகத்தன்மைக்குக் குறைவரப்போகிறதோ? ஸ்வதந்திரனான அவனோடே நாம் ஊடற்கோபம் கொண்டாடினால் நம்முடைய உயிர் போய் விடும்" என்றறிந்து மேல்விழுந் தார்கள். இப்படி ஸ்வதந்திரனாயிருந்தானாகில், தானிருந்த விடத்திலேயே இவர்கள் அத்தனைபேரும் வந்து விழவேண்டியிருக்கையாலே, தான் இருந்த விடத்தில் இராமல், இவர்களிருக்குமிடம் தேடி வருவானேன்? எனில்: (கிருஷ்ணனை) அவர்களுடைய ஸ்பரிசமும், அவர்களுடைய தாழ்வுப்பேச்சு களுமில்லாவிடில் இவன் உயிர்தரிக்கமாட்டானே? இப்படித் தாங்களில்லா விடில் கண்ணன் உயிர்தரியானாகில், இவ்வாய்ச்சிகள்தான் இவனே வந்து இவர்கள் காலைக்கட்டும்படி இருந்தவிடத்திலிருக்கக்கூடாதோ? எனில்: (குற் றமற்ற செயலையுடையவனை) செய்ய்நன்றியறிவாமையாலே தேடிவந் தார்கள். அதாவது:—கண்ணன் இனிச்சிறிது நேரம் வராமல் காலம் தாழ்த்திருந்தால் முதலிலிருந்து "நான் பலவாகக்கடவேன்" [சாந் 6-2-3]

செய்யாதே ஓரளவிலே மறைந்தானாய், பிசகாதபடி ரக்ஷித்த உபகாரத்துக்காக.

2. (தத:) பு₄க₃வத்₃ விஷயத்தை விஸ்லேஷித்தால் அரைக்ஷணமும் செல்லாதபடியானவிடாய் பிறந்த அநந்தரம். (தத:) ஸ்வயத்நத்தாலே அவனைத்தேடிக் காணமாட்டாதே இயங்கி அவன் தலையிலே சுமையைத் தள்ளின அநந்தரம். இப்படி செய்தபின்பு தேஹாந்தரே தேசாந்தரே காலாந் தரே காணப்பெற்றதோ? என்றால்: (ததோ த₃த்₃ருஶு:) சுமைதள்ளின அநந்தரமே பேற்றிலே தோள்மாறினார்கள். கண்படைத்த ப்ரயோஜநம் பெற்றார்கள். “யஶ்ச ராமं ந

[தை-ஆ 36-2] என்று ஸங்கல்பித்து ஸ்திரீகளை ஸ்ருஷ்டி செய்யவேண்டியிருந்திருக்கும். [பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களும் அடியோடு அழிந்து போயிருப்பார்கள் என்று கருத்து] அப்படி நேராதபடி ‘இதற்குமேல் தாங்கமுடியாது’ என்னும் அளவு வரையில் மறைந்துநின்று, இவர்கள் ஸத்தைகுலையாதபடி ரக்ஷித்த உபகாரத்தைக்கருதி இவர்களும் நாலடி நடந்தார்கள் என்று கருத்து. விடாய்த்தவன் விக்கிச் சாவாமலிருப்ப தற்காகச் சிறிதுசிறிதாக நீரூற்றுவாரைப்போலே, இவன் மறைவதும், இவர்களை ஸாத்மிக்க ஸாத்மிக்கத் (பொறுக்கப்பொறுக்கத்) தன்னை அநுபவிப்பிக்கவாகையாலே உபகாரமாகவேயிருக்கும்.

இரண்டாவது வ்யாக்யானம்:—(பிறகு) ‘கண்ணனைப்பிரிந்தால் இனி அரைக்கணமும் உயிர் நில்லாது’ என்னும்படியான விடாய்–கிருஷ்ண திருஷ்ணை (கண்ணனைப் பெறவேண்டுமெனும் தாகம்)–பிறந்தபிறகு ஸாத்மிக்க ஸாத்மிக்க (பொறுக்கப்பொறுக்க) அநுபவிக்கச்செய்ய வேணுமென்று பிரிந்தவன் இவர்கள் ஸத்தைக்கேமோசம் வரும்படி பார்த்துக்கொண்டிருக்க மாட்டானே. (பிறகு) தம் முயற்சியாலே அவனைத்தேடிக் காணமாட்டாமல், மனமிசைந்து அவன் தலையிலே தங்களை ரக்ஷிக்கும் பாரத்தைப் போட்டபின்பு என்றும் கொள்ளலாம். இப்படி ரக்ஷாபரத்தை அவன் தலையிலிட்ட பின்பும், அப்ராக்ருத சரீரம்போன்ற மற்றொரு தேஹமெடுத்தோ பரமபதம் போன்ற மற்றொரு தேசத்திலோ, இத்தேஹ முடிவுபோன்ற மற்றொரு காலத்திலோ கண்ணனைக் கண்டார்களோ? எனில்: (பிறகு கண்டார்கள்) தம் முயற்சியாகிற துன்பச்சுமையைத் தள்ளினவுடனேயே பெரும்பேறான கிருஷ்ணநுபவமாகிற இன்பச்சுமையைத் தோளிலே சுமந்தனர். கண்படைத்த பயன் பெற்றனர். “எவன் ராமனைக் காண

पश्येत्...स निन्दितः'' (யஶ்ச ராமம் ந பஶ்யேத்...ஸ நிந்தி₃த:) என்றிறே காணப்பெறாதபோது இருப்பது. ''**न सन्दृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनं**'' (ந ஸந்த்₃ருஶே திஷ்ட₂தி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்) என்றும், ''**न चक्षुषा गृह्यते नापि वचा नान्यैर्देवैः**'' (ந சக்ஷுஷா க்₃ருஹ்யதே நாபி வாசா நாந்யைர்தே₃வை:) என்றும், ''**यत्तदद्रेश्यमग्राह्यं**'' (யத்தத₃த்₃ரேஶ்யமக்₃ராஹ்யம்) என்றும் ''**अनिर्देश्यमरूपञ्च**'' என்றும், ''**கட்கிலீ**'' என்றும் நிஷேதிக்கிறது ஸ்வயத்னத்தாலே காண்பார்க்கிறே; ''**तस्यैष आत्मा विवृणुते तनूं स्वां**'' (தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்) என்றும், ''**मनसा तु विशुद्धेन**'' (மநஸா து விஶுத்₃தே₄ந) என்றும் ''**यद्भूतयोनिं परिपश्यन्ति धीराः**'' (யத்₃பூ₄தயோநிம் பரிபஶ்யந்தி தீ₄ரா:) என்றும், ''**तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः**'' (தத்₃விஷ்ணோ: பரமம்பத₃ம் ஸதா₃ பஶ்யந்தி ஸூரய:) என்றும், ''காண்பனவன் கண்களாலே'' என்றும் அவனாலே அவனைக் காணலாம்போது காணலாமிறே.

இல்லையோ அவன் நிந்திக்கப்பட்டவன்'' [ரா-அ 17-14] என்றன்றோ காணாதபோது இருப்பது. ''இவன் உருவம் கண்ணால் காண்பதற்கு நில்லாது; எவனும் இவனைக் கண்ணால் கண்டவனல்லன்'' [தை-நா 1-10] என்றும், ''கண்ணாலும், வாக்காலும், மற்ற இந்திரியங்களாலும் காணப்படாதவன்'' [முண்ட 3-1-8] என்றும், ''காணப்படாததும், அறியப்படாததுமான யாதொரு பரம்பொருள்'' [முண்டக 1-1-6] என்றும், ''இப்படிப்பட்டது என்று காட்டமுடியாததும், உருவமற்றதுமாயிருப்பது பரப்ரஹ்ம ஸ்வரூபம்" [வி-பு 6-5-66] என்றும், ''கட்கிலீ'' [திருவாய் 7-2-3] என்றும் இவனை அறியமுடியாது என்று கூறுவது தம் முயற்சியால் காண்பவர்களுக்கன்றோ. தானே தன்னைக் கண்ணாகவும் ராமனாகவும் காட்டக் கண்டவர்களுக்கு அல்லவே. ''எவனை இப்பரமாத்மாவே வரிக்கிறானோ, அவனுக்கு இவன் தன் திருமேனியைக் காட்டுகிறான்' [கட 1-2-23] என்றும், ''பரிசுத்தமான மனத்தினால் காணலாம்'' [வி-தர்மோத்தரம் 275-2] என்றும், ''ஜகத் காரணமாகவுள்ள பரம்பொருளைப் பேரறிவாளர்கள் காண்கிறார்கள்'' [முண்ட 1-1-6] என்றும், ''விஷ்ணுவினுடைய அந்த மேலான ஸ்தானத்தை நித்யஸூரிகள் எப்போதும் காண்கிறார்கள்'' [ருக்வேதம் அஷ்டகம் 1-2-7; ஸாம 3-18-2-4] என்றும், ''காண்பன் அவன் கண்களாலே'' [திருவாய் 1-9-9] என்றும் காணலாகாது என்று கூறிய அந்த வேதசாஸ்திரங்களை, அவனாலே அவனைக் காணும்போது காணலாம் என்றும் கூறினவன்றோ.

இப்படி காண்கிறவிடத்திலே தே₃ஹாவஸாநத்திலே அர்ச்சிராதி₃மார்க்கு₃த்தாலே ஒரு தே₃ஶவிஶேஷத்திலே போயோ? என்னில்: (ஆயாந்தம்) எதிர்சூழல்புக்கு க்ருஷிபண்ணித்திரிகிறவனை. "இங்கேகாண இப்பிறப்பே மகிழ்வர்" என்கிற படியே அவ்விடத்திலே காணப்பெற்ருர்கள். "ஆயாந்தம்" என்கிற வர்த்தமான நிர்த்தேஶமென்? என்னில்: யுக₃பந் மோக்ஷம் உண்டாகிலிறே எதிர்சூழல்மாறுவது; இஸ்ஸம்ஸாரமாக அவன் க்ருபையாக எதிர்சூழல்மாருதிறே. 'நம்மைக் கொடு வந்து ஸுலபனுக்கிக் காட்சி கொடுத்தோமாகில், இத்தால் வரும் ப்ரீத்யப்ரீதிகள் தங்களுக்கன்றோ?' என்று நிர்விகாரனுயிருந்தானே? என்னில்: (விகாஸிமுக₂பங்கஜம்) **"विज्वर:" (விஜ்வர:) என்றும். "प्रमुमोद ह" (ப்ரமுமோத₃ஹ)**

இப்படிக் காண்கிறபோதும் முக்தர்களுக்குப்போலே, ஒரு தேஹத்தின் முடிவில் அர்ச்சிராதிவழியாலே, ஓரப்ராக்ருத ஸ்தானத்திற்குச் சென்று கண்டார்களோ? எனில்: (வருகின்றவனை) "எதிர்சூழல்புக்கு" [திருவாய் 2-7-6] என்கிறபடியே, சேதனரையடையத் தான் முயன்று திரிபவனை. இப்படி 'க்ருஷி' (முயற்சி) செய்து திரிவதாலன்றோ இவன் 'க்ருஷ்ணன்' என்று பெயர்பெற்றான். "இங்கேகாண இப்பிறப்பே மகிழ்வர்" [திருவாய் 8-5-11] என்கிறபடியே தேடிப்போன இடத்திலேயே காணப்பெற்றனர். "வந்தவனை" என்று இறந்தகாலத்தில் சொல்ல வேண்டியிருக்க, "வருகின்றவனைக் கண்டார்கள்" என்று நிகழ்காலத்தில் சொல்லுவானேன்? எனில்: ஒருகாலே எல்லாரும் வீடுபெற்ருலன்ருே இவன் எதிர்சூழல் புகுந்து திரிவது நிற்கமுடியும்; அப்படி நடக்கப் போவதில்லையே. இந்த ஸம்ஸாரத்திற்கும் என்றும் அழிவில்லை; அவனுடைய கருணைக்கும் என்றும் குறைவில்லை. ஆகையால் சேதனரைத் திருத்த அவன் எதிர்வளைத்து வருவதற்கும் என்றும் அந்தமில்லை. ஆகையாலே "வருகின்றவனை" என்று நிகழ்காலத்திலே படிக்கிறது. எத்தனை காலம் சென்ருலும் "வருகின்றவனை" என்னும் நிலையே இருக்குமேயொழிய, "வந்தவனை" என்னவேண்டிய நிலை வாராது என்று கருத்து. "இவர்கள் விரும்பும் நம்மைக் கொண்டுவந்து ஸுலபனுக்கி, காட்சிகொடுத்து விட்டோம்; இனி உகப்பதோ வெறுப்பதோ இவர்கள் கடமை" என்று என்று எண்ணி விகாரமற்றவனுயிருந்தானே? எனில்: (மலர்ந்த முகத் தாமரையை உடையவனை) "விபீஷணனை இலங்கையில் அரக்கர்ரசனுக

என்றும் ஆஶ்ரிதகார்யம் தலைக்கட்டினது தன்பேறாக உகந்து அவ்வுகப்பு தன் முகத்திலே நிழலெழும்படி இருந்தான் காண்! நின்றவர்கள்தான் ஆர்? "दिव्यज्ञानोपपन्नास्ते" (தி₃வ்ய ஜ்ஞாநோபபந்நாஸ்தே) என்றும், "अहं वेद्मि महात्मानं रामं सत्यपराक्रमम् । वसिष्ठोऽपि महातेजा ये चेमे तपसि स्थिताः ॥" (அஹம் வேத்₃மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம். வஸிஷ்டோ₂ऽபி மஹாதேஜா யே சேமே தபஸி ஸ்தி₂தா: ॥) என்றும், "वेदाहमेतं पुरुषं महान्तं" (வேத₃ாஹமேதம் புருஷம் மஹாந்தம்) என்றும் பேசப்படுகிற வேதங்களாதல், வைதிக புருஷர்களாதலோ? என்னில்: (கோ₃ப்ய:) கோ₃க்களையும், கவ்யங்களையும் பரதே₃வதையாக நினைத்திருக்குமவர்களா யிற்று. இவர்கள் அதி₄காரிகளாக இப்படி ஸுலபனாகைக்கு அடியென்? என்னில்: (கோ₃ப்ய:) தங்கள் வருத்தத்தாலே அவனைக் காணவிருந்து அவனாலே அவனைக் காணப்பெறுவது என்று அறுதியிட்டுப் பின்னையும் ப்ராப்யருசி இருந்த விடத்திலே இருக்க வொட்டாமையாலே "कृष्णोऽहमेष ललितं

அபிஷேகம் செய்தபிறகு ராமபிரான் கவலை நீங்கப்பெற்று, மிகவுகந்தான்" [ரா-பா 1-85] என்கிறபடியே, அடியார் கார்யம் முடிந்ததால், அதைத் தன்பேறாக நினைத்து உகந்து அவ்வுகப்பு தன்முகத்திலே ஒளிவீசும்படி யிருந்தான் காண்! எதிரே நின்றவர்கள் தான் யார்? "திவ்யஜ்ஞானம் நிறைந்த அந்த மஹரிஷிகள்' [ரா-ஆ 1-10; வி-பு 5-37-9] என்றும், "ஸத்யபராக்ரமனாய் மஹாத்மாவான ராமனை நானறிவேன்; மஹாதேஜஸ் வியான வஸிஷ்டரும் அறிவார்; தவத்தில் நிலைநிற்கும் இம்முனிவர்களும் அறிவர்" [ரா-பா 19-14] என்றும், "இப்புருஷனைப் பெரியவன் என நான் அறிகிறேன்" [பு-ஸூ] என்றும் பேசப்படுகிற வேதங்களோ? அல்லது வைதிக புருஷர்களோ? எனில்: (கோபிகள்) பசுக்களையும், பால்தயிர் வெண்ணெய்களையும் பரம்பொருளாக நினைத்திருக்கும் அறிவற்ற ஆய்ச்சி களுக்கன்றோ இப்பேற்றை அருளினான் என்கிறார். இவ்வளவு தாழ்ந்த அதிகாரிகளான இவர்களுக்கு இப்படி ஸுலபனாவதற்குக் காரணமென்ன? எனில்: (கோபிகள்) தம் முயற்சியாலே அவனைக்காண நினைத்து, அது முடியாதென்வறிந்து அவனாலேயே அவனைக் காணவேணும் என்று நிச்சயித்து, அதன்பிறகும் அவனைப்பெறுவதிலாசை இருந்தவிடத்தில் இருக்கவிடாமையாலே, "நானே கண்ணன்; அழகாக நடக்கிறேன்

व्रजामि" (க்ருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாமி) என்றும் "दुष्ट कालिय तिष्ठात्र" (து₃ஷ்ட காளிய திஷ்டா₂த்ர) என்றும் அவனுடைய க₃திப₄ாஷிதசேஷ்டிதங்களைக்கொண்டு காலயாபநம் பண்ணின இது பற்றாசாக. (கோ₃ப்ய த₃த்₃ருஶு:) "सदा पश्यन्ति सूरयः" (ஸதா₃ பஶ்யந்தி ஸூரய:) என்று இமைகொட்டி விழிப்பதுங்கூட ப₄க₃வத₃நுப₄வவிரோதி₄யென்று நிமேஷோந்மேஷங்களைத் தவிர்ந்து நித்யஸூரிகள் பெறும் பேற்றையிறே 'இவன் பசுமேய்க்கப்போனான், ஒருபகலாகிலும் பிழைக்கும்' என்று இருக்கும் இவர்கள் பெறுகிறது! ப்ராப்ய வஸ்துவைப் பேசுமிடமடைய "कारणं तु ध्येयः" (காரணம் து த்₄யேய:) என்றும், "सर्वस्य वशी सर्वस्येशानः" (ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந:) என்றும், "क्षयन्तमस्य रजसः पराके" (க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே) என்றும், "वैकुण्ठे तु परे लोके" (வைகுண்டே₂ து பரேலோகே) என்றும்

பாருங்கள்" [வி-பு 5-13-26] என்றும், "துஷ்டகாளியநாகமே! நில்! நானே கண்ணன்" [வி-பு 5-13-27] என்று கண்ணனுடைய நடை, பேச்சு செயல்கள் முதலானவற்றைக்கொண்டு பொழுதுபோக்கிய இதையே கொண்டு தன்னை அவர்களுக்குக் காட்டினான். (கோபிகள் கண்டார்கள்) "நித்யஸூரிகள் எப்போதும் காண்கிறார்கள்" [ருக்வேதம் அஷ்டகம் 1-2-7; ஸாம 3-18-2-4] என்று இமைகொட்டி விழிப்பதுங்கூட அவனையனுபவிப்பதற்கு விரோதியாயிருக்கும் என்று கருதி கண்களை மூடித்திறப்பதையும் விட்டு நித்யஸூரிகள் பெறும் ஸதாதர்சனத்தையன்றோ, "ஆமருவின நிறை மேய்க்க நீ போக்கு ஒருபகல் ஆயிரமூழியாலோ" [திருவாய் 10-3-1] என்கிறபடியே இவன் பசுமேய்க்கப்போவது ஒரு பகலானாலும், 'என்ன நேரிடுமோ? கண்ணன் பிழைத்துவருவானோ மாட்டானோ?' என்னும் அஸ்தாநேபயசங்கையாலே ஆயிரமூழியாய்த் தோற்றும் அறிவிலிகளான இவர்கள் பெறுகிறது. இனி மற்றோர் ஐயம் எழக்கூடும்; மோக்ஷத்தில் அடையப்படும் பொருளைப் பேசுமிடமெல்லாம், "காரணவஸ்துவே தியானிக்கத்தக்கது" [அதர்வசிகை] என்றும், "எல்லாவற்றையும் வசத்தில் நடத்துமவன்; அனைவர்க்கும் ஈச்வரன்" [ப்ருஹ 6-4-22] என்றும், "'ரஜஸ்' எனப்படும் ப்ரக்ருதிக்கு மேலே எழுந்தருளியிருக்கும் உன்னைத் துதிக்கிறேன்" [ருக்-அஷ்ட 5-1-25; ஸாம-உத்தர 17-2-7-2] என்றும், "வைகுண்டமென்னும் மேலான உலகில் ஸ்ரீதேவியோடுகூடிய லோகஸ்வாமி

"दिवि तिष्ठत्येक:" (தி₃வி திஷ்ட₂த்யேக:) என்றும், **"दिव्यो देव एको नारायण:"** (தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:) என்றும் பேசப் படுகிறவன் கிடீர் இடையர்க்கும் இடைச்சிகளுக்கும் இலக்கானவன். இங்கே ஸங்நிஹிதனென்றால் இது வஸ்த்வந்தர ஸூசகமாய்த் தோற்றுதோ? என்னில்: (த்ரைலோக்ய கோ₃ப்தாரம்) இப்படி பரத்வத்தில் எல்லையிலே நிற்கிறவன் கிடீர்! இவனுடைய பரத்வத்தைப் பார்க்கக் கீழ் சொன்ன ஸௌலப்யம் கூடாதபடியாயிருந்ததீ! என்ன; (க்ருஷ்ணம்) **"पारे पुरातनगिरां पार्श्वे सा घोषयोषितां"** (பாரே புராதநகி₃ராம் பார்ஶ்வே ஸா கோ₄ஷயோஷிதாம்) என்று வேதங்களுக்கு **"नेति नेति"** (நேதி நேதி) என்றும் **"यतो वाचो निवर्तन्ते"** (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்றும், **"अविज्ञातं विजानतां"** (அவிஜ்ஞாதம் விஜாநதாம்) என்றும் எட்டாதபடியாயிருக்கும். இடையருக்கும் இடைச்சிகளுக்கும் கால்மேற்கால் ஏறிட

யான விஷ்ணு பக்தபாகவதர்களோடு எழுந்தருளியிருக்கிறான்" [சைவம்] என்றும், "பரமபதத்தில் (ஒப்பற்றவனாய்) நிற்கிறான்" [முண்டக 1-1-7] என்றும், "எல்லாவுயிர்க்கும் ஆத்மாவானவன் அப்ராக்ருதலோகத்திலிருக்கும் நாராயணன் ஒருவனே" [ஸுபால] என்றும் பரம்பொருள் பேசப் படுகிறவனன்றோ. இடையர்க்கும் இடைச்சிகளுக்கும் கட்டவும் அடிக்கவு மாம்படி இருக்கும் கண்ணன் இவர்களுக்குக் காட்சியளித்தான் என்று சொல்லுகிறது. இதிலிருந்து இருவரும் வெவ்வேறானவர்கள் என்று உணர்த்தப்படவில்லையா? எனில்: (மூவுலகரக்ஷகன்) இப்படி மேன்மையின் மேல் எல்லையில் நிற்பவனன்றோ நீர்மையின் கீழெல்லையோடு வந்து கண்ணனாய்ப் பிறந்தான் என்கிறார். இவனுடைய மேன்மையும், கீழ்ச் சொன்ன நீர்மையும் ஒன்றுக்கொன்று விருத்தமாய்ப் பொருந்தாததாயிருந்ததே! எனில்: (கிருஷ்ணனை) "பழமறையின் அக்கரையில்நிற்கும் வஸ்து ஆய்ச்சிகளின் அண்டையிலே நின்றது" [ ] என்று வேதங்களுக்கும் "இது இப்படிப்பட்டதன்று; இது இப்படிப்பட்டதன்று" [ப்ருஹ 4-3-6] என்றும், "எதனிடமிருந்து வாக்குகள் திரும்பிவருகின்றனவோ" [தை-ஆ 9-1] என்றும், "(அளவிட்டு) அறிந்தவர்களுக்குப் பரம்பொருள் அறியப்படாததாகிறது" [கேந 2-3] என்றும் எட்டாதபடியாயிருக்கும் இவ்வஸ்து, இடையருக்கும் இடைச்சிகளுக்கும் கால்மேலே காலிட்டுக்கொள்ளலாம்படியிருக்கும். மோக்ஷத்தில் அடையப்படும் பரம்

லாம்படியிருக்கும். ப்ராப்யவஸ்துவுக்கு லக்ஷணம் பரத்வ ஸௌலப்₄யங்களிரண்டுமிறே. அத்யந்ததுர்லப₄மான வஸ்து இப்படி ஸுலபமாகக் கூடுமோ? என்னில்: (அக்லிஷ்ட சேஷ்டிதம்) "**परास्य शक्तिर्विविधैव श्रूयते**" (பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே) என்றும், "**सर्वशक्तिस्तु भगवान्**" (ஸர்வ ஶக்திஸ்து ப₄க₃வாந்) என்றும் ஏவம்விதமான அக₄டிதக₄டநாஸாமர்த்₂யத்தை உடையவன்.

2. ஹரிவம்ஶம் 113-வது அத்தியாயம், 62-வது ச்லோகம்

एष नारायणः श्रीमान् क्षीरार्णवनिकेतनः।
नागपर्यङ्कमुत्सृज्य ह्यागतो मधुरां पुरीम्॥

ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:।
நாக₃பர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாக₃தோ மது₄ராம் புரீம்॥

பதவுரை:— **ஸ்ரீமாந்**—ஸ்ரீதேவியோடு பிரியாதவனாய், **க்ஷீரார்ணவநிகேதந:**— திருப்பாற் கடலில் பள்ளிகொள்ளுமவனான, **ஏஷ: நாராயண:**—இந்த நாராயணன், **நாகபர்யங்கம்**—சேஷசயனத்தை, **உத்ஸ்ருஜ்ய**—விட்டு, **மதுராம் புரீம்**-மதுரை நகரத்தைக்குறித்து, **ஆக₃த:**-எழுந்தருளினான்.

அவதாரிகை:—"**भोक्ता भोग्यं प्रेरितारञ्च मत्वा**" (போ₄க்தா போ₄க்₃யம் ப்ரேரிதாரம் ச மத்வா) என்கிறபடியே, சேதனனாயிருப்பானொருத்தனுக்குச் சித₃சிதீ₃ச்வரதத்வத்ரயஜ்ஞானமுண்டாகவேணும். அதில் அசித்து-"**अजामेकां लोहितशुक्लकृष्णां**

பொருளுக்கு மேன்மை, நீர்மை ஆகிய இரண்டும் லக்ஷணமன்றோ. 'கிடைத்தற்கரிய இப்பொருள் இப்படிக் கிடைத்தற்கு எளியதாகமுடியுமோ?' என்னில்: (எளிதில் செய்ல்புரிபவனை) செயற்கரிய செயல்களையும் எளிதில் செய்துமுடிப்பவனை என்று கருத்து. "இவனுடைய சக்தி மேலானதாகவும், பலபடிப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது" [ச்வே 6-8] என்றும், "எல்லா சக்தியும் உடைய பகவான், சக்தியற்றவன்போலே நடக்கிறான்" [விஷ்வக்ஸேநஸம்ஹிதை] என்றும் இப்படிப்பட்ட செயற்கரிய செய்யும் செயல்திறமையை உடையவன் என்கிறது.

वह्नीं प्रजां जनयन्तीं सरूपां'' (அஜாமேகாம் லோஹித ஶுக்ல க்ருஷ்ணாம் பஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம் ஸரூபாம்) என்கிற படியே, ப₄க₃வத் ஸ்வரூபத்தை மறைக்கைக்கு ப₃ஹுவித₄வர்ணையான திரஸ்கரிணிபோலே இருக்கக்கடவதாய், விபரீதஜ்ஞாநஜநகமாய், ஷட்₃வித₄விகாராஸ்பத₃மாய், ஸததபரிணாமியாய், ஸததக்ஷணக்ஷரணஸ்வபா₄வமாய், ஸர்வேச்வரனுக்கு லீலோபகரணமாயிருக்கும். சித்₃வஸ்துவைப் பார்த்தால், தே₃ஹேந்த்₃ரியாதி₃விலக்ஷணமாய், ஜ்ஞாநாநந்த₃ ஸ்வரூபமாய், ஜ்ஞாநகு₃ணகமாய், ப₄க₃வச்சே₂ஷபூ₄தமாய், ஸ்ரீகௌஸ்துபா₄தி₃களோபாதி ஸர்வேஸ்வர

ஹரிவம்சம் 113-வது அத்தியாயம் 63-வது ச்லோகம்

அவதாரிகை:—''அநுபவிப்பவன், அநுபவிக்கப்படுவது, அநுபவிக்கச் செய்பவன் என்னும் இம்மூன்று தத்துவங்களையும் நினைத்து'' [ச்வே 1-12] என்கிறபடியே அறிவுள்ள சேதனன் ஒவ்வொருவனுக்கும் (1) சித், (2) அசித், (3) ஈச்வரன் என்னும் மூன்று தத்துவங்களின் (உண்மைப் பொருள்களின்) அறிவு உண்டாகவேணும். அதில் அசித்தானது,-''சிவப்பு (ரஜஸ்ஸு), வெளுப்பு (ஸத்வம்), கறுப்பு (தமஸ்ஸு) என்னும் மூன்று நிறங்களை (குணங்களை) உடையதும், தன்னையொத்த பல குழந்தைகளை (மஹான், அஹங்காரம், பூதங்கள் முதலானவற்றை) உண்டாக்குவதும், ஒன்றாயிருப்பதும், பிறப்பற்றதுமான ப்ரக்ருதியை'' [ச்வே 4-5] என்கிற படியே பகவத்ஸ்வருபத்தை மறைப்பதற்குப் பலவித வர்ணத்தையுடைய திரைபோலேயிருப்பதாய், தவறான அறிவை உண்டாக்குவதாய், ''பிறக்கிறது; இருக்கிறது; பரிணமிக்கிறது; வளர்கிறது; குறைகிறது; அழிகிறது'' என்னும் ஆறுவிதமான விகாரத்துக்கு இருப்பிடமாய், எப்போதும் கணத்துக்குக்கணம் மாறும் தன்மையுடையதாய், ஸர்வேச்வரனுடைய *உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டுக்குக் கருவியாயிருக்கும். 'சித்' எனப்படும் சேதனவஸ்துவைப் பார்த்தால், ''தே₃ஹேந்த்₃ரியமநః ப்ராணதீ₄ப்₄யோங்ய:'' [ஆத்மஸித்தி-1] [1. தேஹம், 2. இந்திரியம், 3. மனம், 4. ப்ராணன், 5. அறிவு ஆகிய அனைத்திலும் வேறுபட்டவன் ஆத்மா] என்கிறபடியே தேஹம் இந்திரியம் முதலானவற்றில் வேறுபட்டதாய், அறிவையும் ஆநந்தத்தையும் ஸ்வரூபமாகவுடையதாய், அறிவை குணமாகவும் உடையதாய், பகவானுக்கு அடிமைப்பட்டதாய், ஸ்ரீகௌஸ்துபம் முதலான

னுக்கு ஸ்ப்ருஹணீயமாயிருக்கும். ஈச்வரனைப் பார்த்தால், இவையிரண்டையும் வ்யாபித்திருப்பவனுய், இவற்றுக்கு ஆத₄ாரபூ₄தனுய், இவையிரண்டையும் ஶரீரவத் பரதந்த்ர மாகவுடையனுயிருக்கும்.

இப்படி த்யாஜ்யதையாலும், உபாதே₃யதையாலும் ஜ்ஞாதவ்யமான தத்வத்ரயத்தில் அபி₄யோக₃மின்றியே, பகவதபசார பாகவதாபசாராஸஹ்யாபசாரங்களிலே கை வளர்ந்து போருகிற சேதனரைப் பார்த்தால், பாரலௌகிக பலஸித்திஹேதுவாக ''பதிம் விஶ்வஸ்ய'' என்கிற லோகோத்தீர்ணனை ஆஶ்ரயியாதே லோகாயதமதாநு ஸாரிகளாயும், ''स्यादस्ति स्यान्नास्ति'' (ஸ்யாத₃ஸ்தி ஸ்யாந்நாஸ்தி)

ஆபரணங்களைப்போலே ஸர்வேச்வரனுக்கும் விரும்பப்படுவதாயிருக்கும். ஈச்வரனைப்பார்த்தால், சித் அசித் என்னும் இரண்டையும் வியாபித்திருப்ப வனுய்,இவற்றுக்கு ஆதாரமாயிருப்பவனுய்,இவையிரண்டையும் சரீரத்தைப் போலே பரதந்திரமாக உடையவனுயிருப்பான்.

இந்த தத்வத்ரயங்களில் அசித்தானது கைவிடத்தக்கதாகையாலே அறியத்தக்கது. சித்தும் ஈச்வரனும் கைக்கொள்ளத்தக்கவையாகையாலே அறியத்தக்கவை. இப்படி இருவகையிலே அறியத்தக்க மூன்றுதத்துவங் களின் ஸ்வரூபஸ்வபாவங்களை அறிவதில் ஈடுபாடேயில்லாமல், பகவதப சாரம், பாகவதாபசாரம், அஸஹ்யாபசாரம் என்னும் மூன்றுவிதமான அபசாரங்களிலேயே ஊறி வளர்ந்துவரும் சேதனர் எப்படியிருக்கிருர்கள் என்று ஆராய்வோம். மேலுலகப்பயன் பெறுவதற்காக, ''உலகம் முழுமைக் கும் பதியாயிருப்பவனை'' [தை-நா-11] என்கிற லோகாதிதனை அடிபணி யாமல் 'இவ்வுலகப் பலனே உண்டு'' என்னும் உலகாயதமதத்தைப் பின் பற்றியவர்களாயுள்ளனர் பலர். ''1. ஸ்யாத₃ஸ்தி, 2. ஸ்யாந்நாஸ்தி 3. ஸ்யாத₃ஸ்தி ச நாஸ்தி ச, 4. ஸ்யாத₃ஸ்தீதி வக்தவ்யம், 5. ஸ்யாந் நாஸ்தீதி வக்தவ்யம், 6. ஸ்யாத₃ஸ்தி ச நாஸ்தி சேதி வக்தவ்யம். 7. ஸர்வதா₂ வக்தவ்யம்'' [(கடாதிபதார்த்தங்கள்) 1. உள்ளதாகவுமிருக் கலாம் 2. இல்லாததாகவுமிருக்கலாம் 3. உள்ளதாகவும் இல்லாததாகவு மிருக்கலாம் 4. உள்ளதாயிருக்கலாம் என்றும் சொல்லலாம் 5. இல்லாத தாயிருக்கலாம் என்றும் சொல்லலாம் 6. உள்ளதாகவுமில்லாததாகவு மிருக்கலாம் என்றும் சொல்லலாம். 7. எப்படி வேண்டுமானுலும்

இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே ஸப்தப$_4$ங்கி$_3$வாதிகளாய். பகவதாச்ரயணத்துக்கு அர்ஹராகாதே ஆர்ஹதராயும். **"गति-सिच्छेज्जनार्दनात्"** (க$_3$திமிச்சே$_2$ஜ்ஜநார்த்த$_3$நாத்) என்கிறபடியே ஸர்வேஶ்வர ஸமாஶ்ரயணத்தாலே ஸுக$_3$தராகப்ராப்தமாயிருக்க. ஸுகதமதாநுஸாரிகளாயும். ப$_4$க$_3$வத்ஸமாச்ரயணத்தாலே ஸங்க்$_3$யாவான்களாக ப்ராப்தமாயிருக்க ஸாங்க்$_2$யாவஷ்டம்ப$_4$ம் பண்ணி ஜந்மத்திலே அஸங்க்$_2$யாதராயும். **" नारायणपरावयं "** (நாராயணபராவயம்) என்கிறபடியே பகவத்யோக$_3$ராக ப்ராப்தமாயிருக்க. மெய்யக்$_3$ஜ்ஞாந வியுக்த யோக$_3$நிஷ்ட$_2$ராயும். பகவத்ஜ்ஞாநவிஶேஷதத்பரராக ப்ராப்தமாயிருக்க வைஶேஷிகமதாநுஸாரிகளாயும், புண்டரீகாக்ஷ ஸமாஶ்ரயணத்தாலே மாயாநிஸ்தரணம் பண்ண ப்ராப்தமாயிருக்கமாயாவாத நிரதராயும்.

சொல்லலாம்] என்கிறபடியே 'ஸப்தப$_4$ங்கி' (ஏழுவாக்கியராசிகள்) என்னும் பரஸ்பர விருத்தப்பேச்சுக்களைப் பேசி, பகவானை அடைய அருகதையுடையவராகாமல் ஆர்ஹதர் (ஜைனர்) ஆயிருக்கிறார்கள் பலர். "மோக்ஷத்தை ஜநார்த்தனனிடமிருந்து பெறவிரும்பவேண்டும்" [ப்ரஹ்மாண்டபுராணம்?] என்கிறபடியே பகவானை அடைந்து ஸுக$_3$தர் (நற்கதியுடையவர்) ஆக உரிமையிருக்கும்போது, துர்க்கதியை அடைவிக்கும் ஸுக$_3$த (பௌ$_3$த்த$_4$) மதத்தைப் பற்றுமவர்களாயிருப்பர் பலர். பகவானை அடைந்து ஸங்க்யை (அறிவு) உடையவர்களாக உரியவர்களாயிருக்க, அறிவுகெடுக்கும் ஸாங்க்யமதத்தைப் பற்றிக்கொண்டு ஸங்க்யை (எண்ணிக்கை)யற்றபிறப்புக்களை உடையவர்களாயிருப்பர் பலர். "நாங்கள் நாராயணனைப் பற்றியவர்கள்" [வில்லிபுத்தூர்ப்பகவர் வார்த்தை] என்கிறபடியே பகவானோடு யோகத்தை (சேர்த்தியை) உடையவராக உரியவராயிருக்க, நல்லறிவற்ற யோகமதத்தில் நிலைநிற்பவர்கள் பலர். பகவானைப் பற்றிய ஜ்ஞாநவிசேஷமான (அறிவுகளில் ஒன்றான) பக்தியிலோ, ப்ரபத்தியிலோ ஈடுபட உரியவராயிருக்க, பரமாணுவுக்கு விசேஷமென்றொன்றைக் கற்பித்துக்கொண்டு, அதனாலேயே 'வைசேஷிகர்' என்று அழைக்கப்படுபவர்களின் வைசேஷிகமதத்தைப் பற்றிநிற்பார் பலர். தாமரைக்கண்ணனைப் பற்றிநின்று 'மாயை' எனப்படும் முக்குணமயமான இப்ரக்ருதியைப் தாண்டலாமாயிருக்க, 'ப்ரஹ்மத்தை மாயை மறைக்கிறது' என்று வாதம் செய்யும் மாயாவாதமாகிற அத்வைதமதத்தைப் பற்றிநிற்பார் பலர்.

ஆக இப்படி இடுகுபடுகிற சேதனரைக்கண்டு, ஈஶ்வரன் த₃யமானமனாவாய்க்கொண்டு. "मानं प्रदीपमिव कारुणिको ददाति" (மாநம் ப்ரதீ₃பமிவ காருணிகோ த₃தா₃தி) என்று வேதார்த்தத்தை ப்ரகாஶிப்பித்தவளவிலும் ஐஹிக புருஷார்த்தத்தைக் கோரி;

[ப₄த்₃ரம் கர்ணேபி₄: ஶ்ருணுயாம தே₃வா:] தேவர்களே! ப₄த்₃ரமானவற்றைக் கேட்கவேணும். "ஶ்ருணுயாம" என்றபோதே ஸித்₃த₄மன்றோ; "கர்ணேபி₄:" என்ன வேணுமோ? ப₄த்₃ரஶ்ரவணத்தோபாதி கரணபாடவமும் விதே₄யமென்கைக்காக. "கர்ணேபி₄:" என்றது "கர்ணை:" என்றபடி. "தே₃வா:" என்கிற தேவஶப்தம் க்ரீடார்த்தத்திலேயாய், உங்களுடைய ப₄த்₃ரரூபமான விநோதத்தைக்

ஆக இப்படிச் சேதனர் ஒருவரோடொருவர் விவாதித்து நெருக்குண்டு திரிவதைக்கண்டு, ஈச்வரன் கருணைநிறைந்த நெஞ்சினனாய், "கருணைக் கடலான ஸர்வேச்வரன் வேதத்தை விளக்கைப்போல் கொடுத்தருளினான்" [ர-ஸ்த 2-4] என்கிறபடியே வேதப்பொருளை வெளிப்படுத்தினான்.

அப்போதும், அவ்வேதத்தில் மேலெழத்தோன்றும் பொருளையே அறிந்து, இம்மைப் பலன்களைப் பெற்றுப்போந்தனர் சேதனர்கள். உதாரணமாக, "ப₄த்₃ரம் கர்ணேபி₄:" [தை-ஆர-1 சாந்திபாடம்] என்று தொடங்கும் மந்திரத்திற்கு ஸம்ஸாரிசேதனர் கொள்ளும்பொருளை முதலிற்காண்போம். (ப₄த்₃ரம் கர்ணேபி₄: ச்ருணுயாம தே₃வா:) இந்திராதி தேவர்களே! மங்களமானவற்றைக் காதாலே கேட்கவேணும்! 'கேட்க வேணும்' என்றாலே போதாதோ? காதாலே என்பது தானே ஸித்திக்குமே; 'காதாலே' என்று விசேஷிக்கவேணுமோ? எனில்: நல்லதைக் கேட்பதை வேண்டுவதோடல்லாமல், காது நன்றாயிருக்கவேணும் என்பதையும் வேண்டுவதற்காக, 'காதாலே' என்று விசேஷிக்கிறது. "கர்ணேபி₄:, என்றது "கர்ணை:" என்றபடி. (தேவா:) தேவர்களே! "தி₃வுக்ரீடா₃விஜிகீ₃ஷா வ்யவஹார த்₃யுதி......க₃திஷு" என்று திவு தாதுவுக்குப் பல பொருள்கள் உண்டு. 1. தி₃வுக்ரீடா" என்று விளையாட்டு என்று பொருளாகும்போது, 'விளையாடும் உங்களுடைய மங்களரூபமான விளையாட்டுக்

கேட்கவேணும். [தே$_3$வா: ப$_4$த்$_3$ரம் ஶ்ருணுயாம] விஜிகீ$_3$ஷார்த்தத்திலேயாய், "தேவர்களே! விஜிகீஷாரூபமான உங்களுடைய நன்மையைக கேட்கவேணும். [தே$_3$வா: ப$_4$த்$_3$ரம் ஶ்ருணுயாம] உங்களுடைய இனியதான வார்த்தையைக் கேட்கவேணும். [தே$_3$வா: ப$_4$க்$_3$ரம் ஶ்ருணுயாம] உங்களுடைய ஒளியுண்டாய்ப் போருகிற வார்த்தையைக் கேட்கவேணும். [தே$_3$வா: ப$_4$க்$_3$ரம் ஶ்ருணுயாம] உங்களுடைய கதியுண்டான வார்த்தையைக் கேட்கவேணும். [ப$_4$த்$_3$ரம் கர்ணேபி$_4$: ஶ்ருணுயாம தே$_3$வா: ப$_4$த்ரம் பஶ்யேம] பத்ரஶ்ரவணமாத்ரமே போராது; பத்ரதர்ஶனமும் பண்ணவேணும். [ப$_4$க்$_3$ரம் பஶ்யேமாக்ஷபி$_4$ர்யஜத்ரா:] [அக்ஷபி$_4$: ப$_4$க்$_3$ரம் பஶ்யேம] இங்கே "பஶ்யேம" என்றபோதே ஸித்தமன்றோ? 'அக்ஷபி$_4$:' என்கைக்கு அடியென்? என்னில்: தர்ஶனத்தோபாதி தர்ஶநகரணபாடவமும் வேணுமென்றபடி. "கர்ணேபி$_4$:" "அக்ஷபி$_4$:" என்று

களைக் கேட்கவேணும்' என்கிறது 2. "தி$_3$வுவிஜிகீ$_3$ஷா" என்று 'வெல்லும் விருப்பம்' என்று பொருளாம்போது, 'வெல்லும் விருப்பமுடைய உங்களுடைய வெல்லும் விருப்பமாகிற நன்மையைக் கேட்கவேணும்' என்கிறது. 3. தி$_3$வு–வ்யவஹார: என்று 'வார்த்தை' என்னும் பொருளானபோது 'வார்த்தை சொல்லும் உங்களுடைய இனிய வார்த்தையைக் கேட்கவேணும்' என்கிறது. 4. 'தி$_3$வு–த்$_3$யுதி:' என்று 'ஒளி' என்னும் பொருளானபோது 'ஒளியுடைய உங்களுடைய ஒளியுடைய வார்த்தையைக் கேட்கவேணும்' என்கிறது. 5. தி$_3$வு–க$_3$தி:' என்று 'க$_3$தி' என்னும் பொருளானபோது 'நல்ல நடையுடைய உங்களுடைய நல்ல நடையுடைய வார்த்தையைக் கேட்கவேணும்' என்கிறது. [ப$_1$த்$_3$ரம் கர்ணேபி$_4$: ச்ருணுயாம தே$_3$வா: ப$_4$த்$_3$ரம் பச்யேம] நன்மையைக் கேட்பதோடன்றியில் நன்மையைக் காணவும் வேணும். [ப$_4$த்$_3$ரம் பச்யேம அக்ஷபிர்யஜத்ரா:] [அக்ஷபி$_4$: ப$_4$த்$_3$ரம் பச்யேம] கண்ணாலே நன்மையைக் காணவேணும். இங்கேயும் 'காணவேணும்' என்றாலே போதுமாயிருக்க, கண்ணாலே காணவேணும் என்றது நன்மையைக் காண்பதோடன்றியில், கண்ணிந்திரியம் நன்றாயிருக்க வேண்டும் என்பதையும் வேண்டுவதற்காகச் சொல்லுகிறது. அல்லது, "**கண்ணாலே காணவேணும்**" "காதாலே கேட்கவேணும்" என்று அந்தந்த இந்திரியங்களின் ஸ்வபாவத்தைச் சொல்லிப்பிரார்த்திக்கிறதாகவுமாம்.

ஸ்வபா₄வாக்₃யாநமாகவுமாம். [அக்ஷபி₄: ப₄த்₃ரம் ப’ஶ்யேம] ப்ரோத்ரேந்த்ரியத்துக்கு இரையிட்டவோபாதி சக்ஷுரிந்த்ரியத்துக்கும் ஆனந்தமுண்டாம்படி விலக்ஷணவஸ்துவை தர்ஶிப்போமாகவேணும். [யஜத்ரா:] "யஜநாத் த்ராயந்த இதி யஜத்ரா:" என்றுய்.யஜநநிமித்தமாக ரக்ஷிக்கிறவர்களே! என்றபடி. அதாவது:— காலகாலங்களிலே வர்ஷத்தை உண்டாக்கி, அத்தாலே ஸஸ்யவ்ருத்₃தி₄யையுமுண்டாக்கி, அதடியாக யஜ்ஞபதார்த்த ஸாமக்ரியையுமுண்டாக்கிக் கொடுக்கையாலே "யஜத்ரா:" என்கிறது; இதுவும் தேவ ஶப்தம்போலே ஸம்போதனமாயிருக்கிறது. [ஸ்தி₂ரை ரங்கைஸ் துஷ்டுவாம்ஸ:] பத்ர ஶ்ரவணத்துக்கும் ப₄த்ர தர்ஶனத்துக்கும் அநுரூபமாம்படியான ஸ்தோத்ரம் பண்ணவேணும்; ஸ்தோத்ரம் பண்ணும்போது ஸ்திரமான அங்கங்களோடே கூடவேணும். [ஸ்தி₂ரைரங்கை₃ஸ் துஷ்டுவாம்ஸ:] ஸ்தி₂ரமான அங்கங்களோடே உபலக்ஷிதனுய்க்கொண்டு மேலே மேலே ஸ்தோத்ரம் பண்ணவேணும். "**क्रियासमभिहारे यङ्**"

[கண்ணுலே நன்மையைக் காணவேணும்] தேவர்களே! காதாகிற இந்திரியத்துக்கு இரையிட்டதுபோலே, கண்ணுகிற இந்திரியத்துக்கும் ஆநந்தமுண்டாகும்படி உங்களுடைய விளையாட்டுகள், வெற்றிகள், வார்த்தை சொல்லுமழகு ஒளி, நடை முதலான நன்மைகளைக் காணவேணும் என்கை. [யஜத்ரா:] "யஜநாத் த்ரா:யந்தே—இதி யஜத்ரா:" [யாகம் செய்வதால் ரக்ஷிப்பவர்கள் யஜத்ரர்கள்]. என்று வ்யுத்பத்தியாய், யாகம் செய்வதுகாரணமாக ரக்ஷிப்பவர்களே! என்றபடி. அதாவது- யாகம் செய்வதாலே அவ்வக்காலங்களிலே மழையை உண்டாக்கி, அதனுலே பயிர்களை வளரச்செய்து, அதன் மூலம் யாகத்துக்கு வேண்டிய நெய்முதலான பொருள்களைப் பெருக்கிக் கொடுக்கையாலே "யஜத்ரா:" [யாகத்தினுலே ரக்ஷிப்பவர்கள்] என்கிறது. இதுவும் 'தேவா:' என்றதைப்போலே விளிச்சொல்லாயிருக்கிறது. [ஸ்தி₂ரைரங்கை₃ஸ் துஷ்டுவாம்ஸ:] நல்லதைக் கேட்பதற்கும், நல்லதைப் பார்ப்பதற்கும் தக்கபடியாகத் துதி செய்யவேணும். துதிக்கும்போது உறுதியான அங்கங்களோடு கூடிநின்று துதிக்கவேணும். [ஸ்தி₂ரைரங்கை₃ஸ் துஷ்டுவாம்ஸ:] உறுதியான அங்கங்களோடு கூடியவனுயிருந்துகொண்டு மேன் மேலே துதிக்கவேணும். "துஷ்டு

(க்ரியாஸமபி$_4$ஹாரே யங்) ஆய். யங்லுகந்தமாகையாலே ஸ்தோத்ரத்தினுடைய மிகுதியைக் காட்டுகிறது. [தநூபி$_4$ர் வ்யஶேம தே$_3$வஹிதம் யத$_3$ாயு:] இப்படியே ஸ்தோத்ரம் பண்ணுகைக்கீடாக தே$_3$வஹிதமான ஆயுஸ்ஸுயாதொன்று அத்தை ஶரீரத்தோடே ப்ரவேஶிப்போமாகவேணும். [தநூபி$_4$ர் வ்யஶேம தே$_3$வஹிதம் யத$_3$ாயு:] க்ரிமி கீடாதிகளுடைய ஆயுஸ்ஸாகவொண்ணாது; திர்யக்யோநிகளுடைய ஆயுஸ்ஸாகவொண்ணாது; "शतायुर्वै पुरुषः" (ஶதாயுர் வை புருஷ:) என்கிற புருஷாயுஸ்ஸாகவொண்ணாது; ஒருவத்ஸரம் தினமாகக்கொண்டு தேவர்களுடைய ஆயுஸ்ஸு யாதொன்றுண்டு, அத்தை ஶரீரத்தோடே ப்ரவேசிப்போமாகவேணும். "வ்யஶேம" என்றுசா$_2$ந்த$_3$ஸமாகையாலே அடா$_2$கமம் பண்

வாம்ஸ:" என்பது, "ஷ்டுஞ்—ஸ்துதௌ" என்னும் தாதுவின் யங்லுகந்த ப்ரயோகம். "धातोरेकाचो हलादेः क्रियासमभिहारे यङ्" (தா$_4$தோரேகாசோ ஹலாதே$_3$: க்ரியாஸமபி$_4$ஹாரே யங்) [ஓர் உயிரெழுத்தை உடையதாயும், மெய்யெழுத்தை முதலில் உடையதாயும் உள்ள தாதுவிற்கு, கிரியையின் ஸமபி$_4$ஹாரத்தை (1. திரும்பித்திரும்பிவருதலை. 2. மிகுதியை)காட்டுவதற்கு 'யங்' பிரயோகம்] என்கிற பாணினி [3-1-22] ஸூத்ரத்தின்படி 'யங்' பிரயோகிக்கப்படும் இடங்களில் கிரியையின் ஸமபி$_4$ஹாரத்தைக் காட்டும். "பௌந:புந்யம் ப்$_1$ருசார்த்த$_2$ச்ச க்ரியாஸமபி$_4$ஹார:" [க்ரியாஸமபி$_4$ஹாரமாவது. 1. திரும்பித்திரும்பிவருதலும் 2. மிகுதிப் பொருளுமாகும்] என்று கௌமுதி. இங்கு "துஷ்டுவாம்ஸ:" என்னும் பதம் துதியாகிற கிரியையின் மிகுதியைக் காட்டுகிறது. [தநூபி$_4$:வ்யசேம தே$_3$வஹிதம் யத$_3$ாயு:] இவ்வண்ணம் மிகுதியாகத் துதிக்கத் தக்கபடி தேவர்களுக்கு ஏற்பட்ட ஆயுளளவை இந்த சரீரத்தோடே பிரவேசிக்கவேணும். [தநூபி$_4$: வ்யசேம தே$_3$வஹிதம் யத$_3$ாயு:] புழுப்பூச்சிகளுடைய ஆயுளும் போராது. ஊர்வனவான விலங்குகள் பறவைகளின் ஆயுளும் போராது. "மனிதன் நூறு வயதை ஆயுளாக உடையவன்" [யஜுர்-ப்ரா 3-8-15] என்கிற மனிதன் ஆயுளான வேதநூற்பிராயம் நூறும் போராது. நம்முடைய ஒருவருடத்தை ஒருநாளாகக் கொண்டு நூறு வருஷம் நடப்பது தேவர்களுடைய ஆயுள். அந்த ஆயுளை இந்த சரீரத்தோடே பிரவேசிக்கவேணும். "விசேம" என்று இருக்கவேண்டியிருக்க, "வ்யசேம" என்று "அடா$_3$கமம்" [அதிகப்படியாக 'அ' என்னும் எழுத்து

ணிக்கிடக்கிறது. ஆக, இத்தாலே ப₄த்₃ரஶ்ரவணமும், ப₃த்ர த₃ர்ஶநமும் தத₃நுரூபமான ஸ்தோத்ரமும், அதுக்கீடான ஆயுர்தை₃ர்க்₄யமும் ப்ரதிபாதித்ததாயிற்று.

அங்ஙனன்றியிலே, "उतो त्वस्मै तन्वं विसस्रे" (உதோ த்வஸ்மை தந்வம் விஸஸ்ரே) என்றுகொண்டு ச்ருதியினுடைய தாத்பர்யமறிந்தவனுக்கு இதினுடைய அர்த்தயோகமான ஸமயத்திலே பரமபுருஷார்த்தாந்வயியாக வேணும்; எங்ஙனேயென்னில்: [ப₄த்₃ரம் கர்ணேபி₄: ஶ்ருணுயாம தே₃வா:] இங்கு தே₃வஶப்₃தம் "देवमिवाचार्यमुपासीत" (தே₃வமிவாசார்யமுபாஸீத) என்கிறபடியே ஆசார்யஶப்₃தத்துக்கு உபலக்ஷணம். "தே₃வா:" என்கிற பாஹுள்யத்தாலே,

---

வந்திருப்பது] பண்ணிக்கிடப்பது சா₂ந்தஸம். ஆக, இத்தாலே, நன்மையைக் கேட்பதும், நன்மையைக் காண்பதும், அதுக்குத் தக்க துதியும், அதற்குத் தக்க ஆயுள்மிகுதியும் பிரார்த்திக்கப் பட்டதாயிற்று. இது ஸம்ஸாரிகள் இம்மந்திரத்திற்குக் கொள்ளும் பொருள். இப்படியல்லாமல்,

"உத த்வ: பச்யந் ந த₃த₃ர்ச வாசம்
உத த்வ: ச்ருண்வந் ந ச்ருணோத்யேநாம்
உதோ த்வஸ்மை தந்வம் விஸஸ்ரே
ஜாயேவ பத்ய உசதீ ஸுவாஸா:
[ருக்ஸம்ஹிதை அஷ்டகம்-8, அத்தியாயம்-2 வர்க்கம்-23, மந்திரம்-4]

[வேதவாக்கைக் க்ண்டபோதும் (அஞ்ஞானியான) ஒருவன் காண்பதில்லை; (அஞ்ஞானியான) ஒருவன் கேட்டபோதிலும் கேட்பதில்லை (ஞானியான) ஒருவனுக்கோவெனில், மங்களவஸ்திரமுடுத்திக் கலவியை விரும்பும் பத்தினியானவள் கணவனுக்குத் தன்உடலைக் காட்டுவதுபோல் வேதவாக்கானது தன்உடலை வெளிப்படுத்துகிறது] என்ற மந்திரத்தின் பிற்பகுதியில் உரைத்தபடியே வேதத்தின் உட்பொருளை அறிந்தவனுக்கு இதின் அர்த்தம் அறியும்போது மேலான புருஷார்த்தத்தைச் சொல்லுவதாக இம்மந்திரம் பொருள்படும். எப்படியெனில்: [ப₄த்₃ரம் கர்ணேபி₄: ச்ருணுயா மதே₃வா;] இங்கு தே₃வசப்₃த₃ம் "பரம்பொருளைப்போலே ஆசாரியனை உபாஸிக்கவேணும்" [ஆபஸ்தம்பதர்ம 1-6-13] என்கிறபடியே ஆசாரியனைக் காட்டுகிறது. "தேவா:" என்கிற பன்மையாலே

''கு₃ருஷு ப₃ஹுவசநம்'' என்கிற ந்யாயம் தோற்றுகிறது. ஸ்ரீபராஶரப்ரஹ்மர்ஷி பக்கலிலே ஸ்ரீமைத்ரேயப₄க₃வான் கேட்குமாப்போலே ஆசார்யன் பக்கலிலே பரமார்த்தம் கேட்கவேணும் என்கிறதற்கும் உபலக்ஷணம். [ப₄த்₃ரம் கர்ணேபி₄: ஶ்ருணுயாம] [ப₄த்₃ரம் ஶ்ருணுயாம] ''श्रोत्रियं ब्रह्मनिष्ठं'' (ஶ்ரோத்ரியம் ப்₃ரஹ்மநிஷ்ட₂ம்) ''कर्णाभ्यां भूरि विश्रुवं'' (கர்ணாப்₄யாம் பூ₄ரி விஶ்ருவம்) ''यत्कथाश्रवणं हरेः'' (யத்கத₂ா ஶ்ரவணம் ஹரே:) ''கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றும் கேட்பரோ'' என்று சொல்லுகிறபடியே பகவத் விஷயத்தைக் கேட்கைக்கு உபலக்ஷணமாயிருக்கிறது ப₄த்₃ர ஶப்த₃ம். ''ஶ்ருணுயாம'' என்று ப்ரார்த்தநாரூபமாகையாலே அதி₄காரியினுடைய ப்ரார்த்த₂நாவிசிஷ்டத்வமும் உப லக்ஷிதம். இப்படி ஆசார்யன் பக்கலிலே பரமார்த்த₂ஶ்ரவணாநந்தரம் அநுப₄ாவ்யமான பகவத் விக்ரஹதர்ஶனம் பண்ண வேணும் என்னுமதுக்கு உபலக்ஷணம் [ப₄த்₃ரம் பஶ்யே மாக்ஷபி₃ர் யஜத்ரா:] என்று. இங்கு ப₄த்₃ரஶப்₃த₃த்தாலே

''ஆசாரியர்களைச் சொல்லும்போது பன்மையிற் சொல்லவேண்டும்'' என்கிற நியாயம் வெளிப்படுகிறது. ஸ்ரீபராசர ப்ரஹ்மரிஷியிடம், ஸ்ரீமைத்ரேயபகவான் ஸ்ரீவிஷ்ணுபுராணம் கேட்டபோது, கௌரவ புத்தியோடே கேட்டதுபோலே ஆசாரியனிடம், சிஷ்யன் சிறந்த பொருள் களைக் கேட்கும்போது ஆசாரியனிடம் கௌரவபுத்தியோடு கேட்க வேணும் என்பதையும் காட்டுகிறது. [நல்லதைக் காதாலே கேட்போ மாக], நல்லதைக் கேட்போமாக. "ப்ரஹ்மத்திடம் நிலைநிற்கும் வேத மறிந்த ஆசாரியனையே சிஷ்யன் அடையவேண்டும்'' [முண்ட 1-2-12] ''காதுகளாலே மிகப்பெரியதான பரமபுருஷனின் கீர்த்தியைக் கேட்கக் கடவோம்'' [தை-சிக்ஷா-4] ''ஹரியின் கதையைக் கேட்பதென யாதொன் றுண்டோ (அது பேரின்பத்திலும் பெரிது)'' [ ] ''கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றும் கேட்பரோ'' [திருவாய் 7-5-3] என்று சொல்லுகிறபடியே, ப₄த்₃ரசப்தத்தால் பகவத்விஷயத்தைக் காட்டுகிறது. ''ச்ருணுயாம'' [கேட்கக்கடவோம்] என்று பிரார்த்தனாரூபமாயிருக்கை யாலே, இச்சேதனன் பிரார்த்தனையாகிற அதிகாரி விசேஷணத்துடன் கூடியிருக்கவேணும் என்றும் காட்டப்படுகிறது. [ப₄த்₃ரம் பச்யேம அக்ஷபி₄ர் யஜத்ரா:] இப்படி ஆசாரியனிடம் சிறந்த பொருளைக் கேட்ட

"सदैकरूपरूपाय" (ஸதை3கரூபரூபாய) என்றும், "न भूतसङ्ग-संस्थानो देहोऽस्य परमात्मनः"(நபூ4தஸங்க4ஸம்ஸ்த2ாநோ தே3ஹோ-ऽஸ்ய பரமாத்மந:) என்றும், "रूपौदार्यगुणैः पुंसां दृष्टिचित्तापहारिणं" (ரூபௌத3ார்யகு3ணை: பும்ஸாம் த்3ருஷ்டிசித்தாபஹாரிணம்) என்றும், "ददृशुर्विस्मिताकारा रामस्य वनवासिनः" (த3த்3ருஶுர் விஸ்மிதாகாரா ராமஸ்ய வநவாஸிந:) என்றும் "साक्षान्मन्मथमन्मथः" (ஸாக்ஷாந்மந்மத2மந்மத2:) என்றும் பகவதநுரூப விக்ரஹமிறே கண்ணுக்கு இலக்காகுவது. [யஜத்ரா:] யஜநநிமித்தமாக ரக்ஷணம் தோற்றுகிறது. "योऽहमस्मि स सन् यजे" (யோऽஹமஸ்மி ஸ ஸந் யஜே) என்றும் "स स्वर्ग उदीरितः" (ஸ ஸ்வர்க்க3 உதீ3ரித:) என்றும் சொல்லுகிற படியே த3ாஸ்யாநுஸந்த4ாநாநுரூபமான ஹவி:ப்ரதானமும், அத்தாலே வரக்கடவதான ந்யாஸமும், ஏவம்பூ4தமான ந்யாஸவித்3யாப்ரத3ானத்தால் விபரீதஜ்ஞானர்க்கும் ப்ரகட

பிறகு, அநுபவிக்கத்தக்க பகவானுடைய திருமேனியைக் கண்ணாலே காணவேணும் என்று காட்டுகிறது. இங்கு "ப4த்3ர" சப்3த3த்தாலே "எப்போதும் ஒருபடிப்பட்ட உருவத்தை உடையவனுக்கு நமஸ்காரம்" [வி-பு 1-2-1] என்றும், "பரமாத்மாவின் தேஹம் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டானதன்று" [பார-சாந்தி 206-60] என்றும், "உருவம் வண்மை, குணங்கள் ஆகியவற்றால் ஆண்களின் கண்ணையும் நெஞ்சையுங் கூட ஈர்க்குமவனை" [ரா-அ 3-29] என்றும், "வனத்தில் வசிக்கும் ரிஷிகள் ராமனின் வடிவழகு, திருவுடைமை, மென்மை, நல்லவேஷமுடைமை ஆகியவற்றை ஆச்சரியத்தைத்தெரிவிக்கும் அமைப்புடன் கூடியவர்களாய்க் கண்டார்கள்" [ரா-ஆ 1-13] என்றும், "நேரே மன்மதனுக்கும் மன்மதனாய் (மனத்தை இழுப்பவனாய்) இருப்பவன்" [பாகவதம் 10-32-2] என்றும் கூறப்படும் பரமபுருஷனுக்குத் தகுந்ததான பரமமங்களமான உருவத்தை யன்றோ இவர்கள் காண்பது; அதை 'ப4த்3ரம்' என்கிறது பொருத்தமே யன்றோ [யஜத்ரா:] யாகம் காரணமாக ரக்ஷிப்பவர்களே! என்றும் பொருள் தோற்றுகிறது. "நான் எவ்வண்ணமிருக்கிறேனோ அவ்வண்ணமிருந்து கொண்டே (ஆத்மஸமர்ப்பணமாகிற) யாகத்தைச் செய்கிறேன்" [யஜுர் ப்ரா 3-7] என்றும், "அதுவே ஸ்வர்க்கம் எனப்படுகிறது" [   ] என்றும் கூறுகிறபடியே எம்பெருமானுக்கு நாம் அடிமைப்பட்டிருப்பதை அநுஸந்திப்பதாகிற ஆத்மஹவிஸ்ஸை அளிப்பதும், அதனாலே ஏற்படும் ஆத்மாத்மீயப4ரந்யாஸமும் (தன்னையும், தன்னுடைமையையும் அவன்

மாம்படி ரக்ஷித்துப்போருகை தோற்றுகையாலே, இதுவும் ஆசார்யஶப்3தத்துக்கு உபலக்ஷணமாய்ப் போருகிறது. [ஸ்தி2ரைரங்கைஸ் துஷ்டுவாம்ஸஸ் தநூபி4ர் வ்யஶேம தே3வஹிதம் யதாயு:] **"श्रद्धया देवो देवत्वमश्नुते" (ச்ரத்3த4யா தே3வோ தே3வத்வமஶ்நுதே)** என்ற ஶ்ரிய:பதிக்கு, உள்ள வளவும் ப்ரதிக்ஷணவிநாஶியான தேஹம்போலன்றியே, அப்ராக்ருதவிக்3ரஹமாய்த் தோற்றும்படி ஸ்தி2ரமாயிருக்கிற அங்கங்களோடே கூடியிருக்கிற ஶரீரத்தோடே **"हा वुहा वुहा वु एतत्साम गायन्नास्ते" (ஹா வுஹா வுஹா வு-ஏதத் ஸாம கா3யந்நாஸ்தே)** என்று;

ஶ்ருதிதாத்பர்யபர்யாலோசநம் பண்ணமாட்டாத சேதநரை உத்தீர்ணராக்குகைக்காகத்தான் அவதீர்ணனான அவ்வவதாரங்களில் மத்ஸ்யாவதாரத்தைப் பார்த்தால்,

---

பொறுப்பிலே விட்டுவிடுவதும்) ஆக இப்படிப்பட்ட ந்யாஸவித்யையாகிற யாகத்தை அளித்து, தீயறிவுகொண்டவர்களையும் தெளிவித்து ரக்ஷித்துப் போகின்றவர்களாகையாலே, 'யஜத்ர' சப்தமும் ஆசாரியர்களைக் காட்டுகிறது. [ஸ்தி2ரைரங்கைஸ் துஷ்டுவாம்ஸ: தநூபி4ர் வ்யசேம தே3வஹிதம் யத3ாயு:] "சிரத்தை எனப்படும் பிராட்டியாலே பெருமான் பெருமானாகிறான்" [யஜு-கா 3-3] என்கிற ஸ்ரீமந்நாராயணன் பக்கலிலே கைங்கரியம் செய்யவேணும்; அதுவும் இருக்கும்போதெல்லாம் பின்னின் நிலையற்றதாய் கணத்துக்குக்கணம் செத்துப்பிழைக்கும் இந்ததேஹம் போலல்லாமல், அப்ராக்ருதவிக்ரஹமாய்த் தோற்றும்படி உறுதியான அங்கங்களோடே கூடியிருக்கும் சரீரத்தோடே, "ஹா வுஹா வுஹா வு- என்னும் இந்த ஸாமத்தைப் பாடிக்கொண்டிருக்கிறான் முக்தன்" [தை-ப்4ருகு3 10-5] என்றாற்போன்ற வாசிககைங்கர்யமான மிகுதியான துதியைப் பண்ணவேணும்; அதுவும் தேவர்களுக்குண்டான ஆயுளோடு இந்த சரீரத்தோடே இங்கேயே துதிபாடவேணும் என்று வேதத்தின் உட்பொருளை அறிந்தவனுக்கு இம்மந்திரம் பொருள்படும்.

இப்படி அருமறையின் ஆழ்பொருளை ஆலோசிக்க மாட்டாத ஜீவர்களை ஸம்ஸாரஸாகரத்திலிருந்து கரையேற்றுவதற்காக, ஸர்வேச்வரன்தானே பல அவதாரங்களை எடுத்தான். அவற்றில் மத்ஸ்யாவதாரத்தைப் பார்த்தால்

பஹு ஜீவனாயிருக்கச் செய்தேயும் * கூர்மாவதாரத்தைப் பார்த்தால் ஜகத்துக்கு ஆதா4ரபூ4தனாயிருக்கச் செய்தேயும் ஒருபுறஞ்சொல்லவாயிருக்கும்; ஸ்ரீவராஹாவதாரத்தைப் பார்த்தால் ஆஶ்ரயணஸௌகர்யம் தோற்றியிருக்கச்செய்தேயும் கோ3த்ரோத்3பே4த3ம் பண்ணியிருக்கும்; ஸ்ரீநரஸிம்ஹாவதாரத்தைப் பார்த்தால் இதிஹாஸமடியாகப் பற்றுவார்க்கு அநிர்ப்ப4ரணம் தோற்றும்படி இருக்கும்; ஸ்ரீவாமநாவதாரத்தைப் பார்த்தால் தான் சிறியனாயிருக்கச் செய்தேயும் ஜகத்தையடையத்தன் அடிக்கீழாக்காநிற்கும். பரஶு ராமாவதாரத்தைப் பார்த்தால் ப்3ராஹ்மணோத்தமனாயிருக்கச்செய்தேயும். புண்யஜநஹாநி பண்ணாநிற்கும். ஸ்ரீராமாவதாரத்தைப் பார்த்தால் "दृष्ट्वा वै धर्मचारिणः। मङ्गलानि प्रयुञ्जानाः

ப3ஹு ஜீவனாய் (1. அதிகமான ஆயுளை உடையவனாய்; 2. அதிகமான நீரில் வாழ்பவனாய்) இருக்கச்செய்தேயும், * கரையிலே கணநேரமும் வாழமுடியாத அல்ப ஜீவனாயிருப்பன். கூர்மாவதாரத்தைப்பார்த்தால், ஆதாரகூர்மமாகையாலே உலகிற்கு ஆதாரமாயிருந்தபோதிலும், கீழ்ப் புறம் மிகவும் மிருதுவென்று சொல்லும்படியிருக்கும், ஸ்ரீவராஹாவதாரத்தைப் பார்த்தால் தாழ்வுக்குக்கீழ்நிலமான பன்றியாயவதரிக்கையாலே ஆச்ரயிப்பதற்கு உறுப்பான ஸௌலப்யஸௌசீல்ய வாத்ஸல்யாதி குணங்கள் உண்டானாலும் கோத்ரோத்3பே4த3ம் [1. கோத்திரக்கலப்பு 2. மலைகளைப் பிளத்தல்.] செய்யும் இயல்பையுடையதாயிருக்கும். ஸ்ரீநரஸிம்ஹாவதாரத்தைப்பார்த்தால், பிரஹ்லாதனை ரக்ஷித்த விருத்தாந்தத்தை நினைத்துப் பற்றுவார்க்கு, அநிர்ப்ப4ரணம் [1. பொறுப்பில்லாமை 2. அகாரவாச்யனான பகவானின் பொறுப்பு] தோற்றும்படியிருக்கும். ஸ்ரீவாமநாவதாரத்தைப் பார்த்தால், தான் சிறியவனாயிருக்கச்செய்தேயும், உலகம் முழுவதையும் தன் அடிக்கீழ ஆக்குமவனாயிருப்பான். பரசு ராமாவதாரத்தைப் பார்த்தால் அந்தணர் தலைவனாயிருந்தபோதிலும், புண்ணியம் செய்து அரசராகப்பிறந்தவர்களை அழிப்பவனாயிருப்பன். ஸ்ரீராமாவதாரத்தைப் பார்த்தால், "தர்மவழிநடக்கும் உறுதியான விரதமுடைய அந்த முனிவர்கள் ராமனைப்பார்த்து, மங்களங்களை உரைத்துக்

---

* இங்கு மூலத்தில் பங்க்திகள் நழுவியுள்ளன. விவரணத்தில் ஒருவாறு ஊஹித்துப் பொருள் எழுதப்படுகிறது.

प्रत्यगृह्णन् दृढव्रताः'' (த்₃ருஷ்ட்வா வை த₄ர்மசாரிண: । மங்க₃ளாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்₃ருஹ்ணந் த்₃ருட₄வ்ரதா:॥) என்று புண்யஜநஸேவை உண்டாயிருக்கச் செய்தேயும் புண்யஜந ஹானி பண்ணுநிற்கும். க்ருஷ்ணாவதாரத்தைப் பார்த்தால், ''**रूपमेतच्चतुर्भुजं**'' (ரூபமேதச்சதுர்பு₄ஜம்) என்னும்படி அவதார தூ₃ஶையிலும் ஆஸ்ரிதஸம்ரக்ஷணத்தில் கைவாசி தோற்றி யிருக்கும். அர்ஜுநப்ரப்₄ருதிகளைக்கண்டால் தன் மேன்மை தோற்றாதபடி தௌ₃த்யஸாரத்₂யங்களைப் பண்ணுநிற்கும். ஆழ்வார்களும் ஈடுபடுவதும் இவ்வவதாரத்திலேயிறே. ''உரலினோடிணைந்திருந்தேங்கிய எளிவு எத்திறம்'' என்றும், ''கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்'' என்றும், ''திருமதுரையுட் சிலைகுனித்து ஐந்தலைய பைந்நாகத்தலைப்பாய்ந் தவனே உன்னைப் பல்லாண்டு கூறுதுமே'' என்றும், ''கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப்பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்?'' என்றும், ''துவராடையுடுத்து ஒரு செண்டு சிலுப்பிக் கவராக

கொண்டு வரவேற்றனர்'' [ரா-ஆ 1-12] என்று புண்ணியம்புரிந்த ரிஷிகளால் ஸேவிக்கப்பட்டபோதிலும் 'புண்யஜநங்கள்' என்னும் பெயரையுடைய அரக்கருக்கு அழிவைப்பண்ணுவதாயிருக்கும். கிருஷ்ணாவதாரத்தைப்பார்த்தால், ''உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதச்சதுர்பு₄ஜம்'' [வி-பு 5-3-13] [ஸர்வாந்தர்யாமியே! நான்கு திருக்கைகளையுடைய இந்த உருவத்தை மறைத்துக் கொள்வாயாக.] என்கிறபடியே மனிதனாய் அவதரிக்கும்போதும் நாலுகையோடு அவதரிக்கையாலே அடியாரை ரக்ஷிக்கும்போது நாலு புருஷார்த்தங்களையும் அளிக்கவல்ல கைவாசிதோற்றியிருக்கும். அர்ஜுனன் முதலான அடியாரைக்கண்டால், தன் மேன்மை தோற்றாதபடி தூதுநடத்தல், தேர்நடத்துதல் முதலான காரியங்களைச் செய்யும் ஸௌலப்யஸௌசீல்யாதி குணக்கடலாயிருக்கும். ஆழ்வார்களும் ஈடுபடுவது இவ்வவதாரத்திலேயேயன்றோ. ''உரலினோடிணைந்திருந்து ஏங்கிய எளிவு-எத்திறம்?'' [திருவாய் 1-3-1] என்று நம்மாழ்வாரும், ''கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்'' [அமலனாதி-10] என்று திருப்பாணாழ்வாரும், ''திருமதுரையுட் சிலைகுனித்து ஐந்தலையப்பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே உன்னைப்பல்லாண்டு கூறுதுமே'' [திருப்பல்-10] என்று பெரியாழ்வாரும், ''கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப்பிறவி செய்யாமே இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்?'' [நாச்-திரு 13-9] என்று ஆண்டாளும், ''துவராடையுடுத்தொரு செண்டு சிலுப்பிக் கவராக

முடித்துக் கலிக்கச்சுக்கட்டிச் சுவரார் கதவின் புறமே வந்து நின்றீர்'' என்றும். ''வார்மணற்குன்றில் புலரநின்றேன் வாசுதேவா உன் வரவுபார்த்தே'' என்றும் இப்புடைகளிலே ஆழ்வார்களும் இவ்வவதாரத்தையே ஆதரித்துக் கொண்டுபோந்தார்கள். ஏவம்பூ₄தனான க்ருஷ்ணனுடைய ஸகல ஜகத்காரணத்வத்தையும், ஸர்வாதி₄கத்வத்தையும், ஸமுத்ரசாயித்வத்தையும், ஸகலமநுஜநயநஸார்த்தூ₂ஜீவாதுவாம்படி மது₄ராபுரீஸங்க₃தத்வத்தையும் ப்ரதிபாதிக்கிறது.- (ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:। நாக₃பர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாக₃தோ மது₄ராம் புரீம்)

வ்யா:-ஆனால் ஜகத்காரணமுமாய், ஸர்வாதி₄கமுமானால் அதீந்த்ரியமாயன்றோ இருப்பது? என்னில்: 1. அவனுடைய ஸௌலப்₄யாதிசயம் தோற்றும்படி ''ஏஷ:'' என்கிறார். 2. (ஏஷ:) அநுமாநாக₃மார்த்தா₂பத்த்யாதி₃களான ப்ரமாணம்

முடித்துக் கலிக்கச்சுக்கட்டி, சுவரார் கதவின் புறமே வந்து நின்றீர்'' [பெரியதிரு 10-8-2] என்று திருமங்கையாழ்வாரும், ''வார்மணற்குன்றில் புலரநின்றேன் வாசுதேவா உன் வரவு பார்த்தே'' [பெருமாள்திரு 6-1] என்று குலசேகராழ்வாரும், ஆக இப்படிப் பலவிதமாக எல்லா ஆழ்வார்களும் இந்தக் கிருஷ்ணாவதாரத்தையே ஆதரித்துக்கொண்டு போந்தார்கள். இப்படிப்பட்ட கண்ணன் எல்லா உலகிற்கும் காரணனாயிருப்பதையும், அனைவரிலும் பெரியவனாயிருப்பதையும், கடலிற்கண்வளருமவனாயிருப்பதையும், எல்லா மனிதர்களின் கண்களுக்கு அருமருந்தாம்படி மதுரை நகரிலே பொருந்தியிருப்பதையும் சொல்லுகிறது (ஏஷ நாராயண:) என்று தொடங்கும் இந்த ச்லோகம்.

வ்யா:-உலகிற்குக் காரணமாகவும், அனைவரிலும் பெரியவனாகவுமிருந்தால் கண்ணுக்குப் புலப்படாதவனாயன்றோ இருப்பது? என்னில்: 1. (இவன்) அவனுடைய ஸௌலப்₄யப்பெருமை தெரியும்படியாக 'இவன்' என்கிறார். 2. (இவன்) ஒரு ஹேதுவைக்கொண்டு ஒரு ஸாத்யத்தை ஸாதிக்கும் அனுமானப்ரமாணத்தாலும், கண்ணுக்குப் புலப்படாததைச் சொல்லும் ஆகமம் என்னும் சப்தப்ரமாணத்தாலும், பகலில் உண்ணாமலிருக்கும் ஒருவன் கொழுத்திருப்பது முதலான ஒன்றுக்கொன்று பொருந்தாத நிலைகளைப் பொருந்தவிடுவதற்காக அவன் இரவில் உண்கிறான் என்று பொருந்த

வேண்டாதபடி ப்ரத்யக்ஷஸித்3த4மாய் நிற்கிற ஆகாரம் தோற்றுகிறது. 3. (ஏஷ:) அங்ஙனன்றியே ஆஸந்நாவதாரமாகையாலே சொல்லும் எளிமையைக் காட்டிற்றாகவுமாம். 4. (ஏஷ:) அங்ஙனன்றியே "உளன் சுடர்மிகு சுருதியுள்" என்று ஸ்ருதிஸித்3த4னாயிருக்கச் செய்தேயும் மாநஸவிஷயமாகையாலே சொல்லிற்றாகவுமாம்.

இப்படி ஸங்குசிதவ்ருத்தியாயிருப்பானொருவனோ? என்னில்: 1. (நாராயண:) "अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः" (அந்தர்ப3ஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி2த:) என்று ஸர்வவ்யாபகனாயிருப்பானொருவன். 2. (நாராயண:) ரூபகுணவிபூ4த்யாதி3களையுடைய ஏகதே3ஶத்திலே ஒதுங்கும்

வைக்கும் நிலையொன்றைக் கல்பிப்பதாகிற அர்த்தாபத்திப்ரமாணத்தாலும், ஒருவஸ்து ஓரிடத்தில் காணப்படாமையாலே, அது அங்கு இல்லை என்று ஸாதிக்கும் அநுபலப்திப்ரமாணத்தாலும், மற்றும் இதுபோன்று புத்திச்ரமத்தை அபேக்ஷிக்கும் ப்ரமாணங்களாலும் அறியவேண்டாதபடி, கண்ணாலே காணும்படி ப்ரத்யக்ஷமாய் நிற்கிறபடியைக் காட்டுகிறது. 3. (இவன்) முற்கூறியதுபோலல்லாமல், தமக்கு அருகிலிருக்கும் அவதாரமாகையாலே 'ஸௌலப்1யம்' என்று சொல்லப்படும் எளிமையைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். 4. (இவன்) அப்படியுமல்லாமல், "உளன் சுடர்மிகுசுருதியுள்" [திருவாய் 1-1-7] என்று மறைமுடியில் உள்ளவனாயிருந்தும், நெஞ்சுக்குத் தோற்றுகையாலே 'இவன்' என்கிறதாகவுமாம்.

'இவன்' என்றே சொல்லும்படி குறுகிய இடத்திலே அடைபட்டுக் கிடப்பானோ? எனில்: (நாராயணன்) "இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமாகவுள்ள எல்லாப் பொருள்களினுள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்" [தை-நா-11] என்று நாரங்களாகிற எல்லாப் பொருள்களையும் அயனமெனும் இருப்பிடமாகக்கொண்ட ஸர்வவ்யாபியாயிருப்பவனிவன். 2. (நாராயணன்) 'ரிங்-க்ஷயே' என்று தாதுவாகையாலே 'ர' என்னும் எழுத்து அழியும்பொருள்களைக் குறிக்கிறது. 'நர' என்று அழிவில்லாப்பொருள்களையும், 'நார' என்று அப்பொருள்களின் ஸமூஹத்தையும் குறிக்கிறது. பகவானுடைய ரூபங்கள், குணங்கள், விபூ1திகள், (செல்வங்கள்) ஆகிய அழியாப்பொருள் கூட்டங்கள் நாரங்களாகின்றன. நாரங்களுக்கு அயநமாக (இருப்பிடமாக) இருப்பவன் நாராயணன் ஆகை

படி ஸ்வரூபமஹத்தையை உடையனுயிருப்பாஞெருவன். 3. (நாராயண:) ஸகலஜகத்தும் ஸம்ஹ்ருதமான ஸமயத்திலும் தம்முடைய ஸத்3பா4வம் தப்பாதபடியிருப்பாஞெருவன். "एको ह वै नारायण आसीत्, न ब्रह्मा नेशानः नेमे द्यावापृथिवी" (ஏகோ ஹவை நாராயண ஆஸீந்ந ப்3ரஹ்மா நேஶாந: நேமே த்3யாவாப்ருதி2வீ) என்றும், "आभूतसंप्लवे प्राप्ते नष्टे स्थावरजङ्गमे। एकस्तिष्ठति विश्वात्मा स तु नारायणः प्रभुः॥" (ஆபூ4தஸம்ப்லவே ப்ராப்தே நஷ்டே ஸ்த2ாவரஜங்க3மே। ஏகஸ் திஷ்ட2தி விச்வாத்மா ஸ து நாராயண: ப்ரபு4:॥) என்றும் சொல்லுகையாலே. ஆனுல். கார்யாம்ஶமடையக்குலேந்து காரணமான தான் ஒருத்தனும் நிற்குமத்தனையோ? என்னில்: 4. "नराज्जातानि

யாலே, முற்கூறியவையெல்லாம் தன் ஸ்வருபத்தின் ஒரு மூலையிலே ஒதுங்கியுள்ளன என்னலாம்படியான ஸ்வரூபப்பெருமையை உடையவன் என்கிறது. 3. (நாராயணன்) ப்ரளயகாலத்தில் நரஸமூஹங்களுக்குச் சேருமிடமாயிருப்பவன் நாராயணன். எல்லாவுலகும் ஸூக்ஷ்மநிலையை அடைந்து 'இல்லை' என்னும்படி அழிந்தபோதிலும் தான் ஒருவனே 'உள்ளவன்' என்னும்படி என்றும் மாறுபடாத உண்மைநிலையை உடையவன்.-"நாராயணன் ஒருவனே முதலில் இருந்தான்; பிரமனுமில்லை; சிவனுமில்லை; இந்தக்கீழ்மேலுலகங்களுமில்லை" [மஹோபனிஷத்] என்றும் "அனைத்தையும் கடல்கொண்ட பிரளயகாலத்தில் அசைவனவும் அசையாதனவுமான எல்லாம் அழிந்தபோது ஸர்வாந்தர்யாமியும், ஸர்வேச்வரனுமான நாராயணன் ஒருவனேயிருந்தான்" [பாரதம் சாந்தி 210-24] என்றும் பிரமாணங்கள் சொல்லுகையாலே. இப்படி எல்லாம் இல்லாமல் தான் ஒருவனே உள்ளவனுகில், கார்யப்பொருள்களெல்லாம் அடியோடு அழிந்து, காரணமான தான் ஒருவனேயிருக்கிறுனே? எனில்: 4. (நாராயணன்) அப்போதும் ஸூக்ஷ்மநிலையிலுள்ள நாரங்களுக்கு இருப்பிடமாகவேயிருக்கிறுன்.

> "நராஜ்ஜாதாநி தத்வாநி நாராணீதி ததோ விது3:।
> தாந்யேவ சாயநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத:॥"
>
> [பார-ஆநு 186-7]

[நரனுகிற (அழியாதவனுகிற) பகவானிடமிருந்து பிறந்தவையாகையாலே எல்லாப் பொருள்களையும் நாரங்கள் என்கின்றனர்; இந்த நாரங்களே

तत्त्वानि'' (நராஜ்ஜாதாநி தத்த்வாநி) என்கிறபடியே, ஸகல தத்வோத்பாதகனுயிருப்பானெருத்தன். 5. (நாராயண:) அங்ஙனன்றியிலே, மேல் "க்ஷீரார்ணவ நிகேதந:" என்று சொல்லுகையாலே, அப்புக்களைத் தனக்கு இருப்பிடமாக உடையன் என்ருகவுமாம். **"ता यदस्यायनं पूर्वं तेन नारायणः स्मृतः"** (தா யத₃ஸ்யாயநம் பூர்வம் தேந நாராயண: ஸ்ம்ருத:) என்கையாலே. 6. (நாராயண:) அங்ஙனன்றியே, ஸகலருக்கும் அவர்ஜநீயமாம்படி உடலுமுயிரும்போலே அந்தர்பூ₄தமான ஸம்ப₃ந்த₄விஶேஷத்தை உடையனுயிருப்பானெருத்தன் என்ருகவுமாம். 7. (நாராயண:) அங்ஙனன்றியே, அந்தர்வ்யாப்தி ப₃ஹிர்வ்யாப்திபே₄தத்தாலே, ஜகத்துக்கு ஆதாரபூ₄தனுமாய், நியந்தாவுமாயிருப்பானெருத்தன். 8. (நாராயண:)

(ஸ்ருஷ்டிகாலத்தில்) இவனுக்கு இருப்பிடமாயிருந்தன; அதனுல் இவன் நாராயணன் என்று எண்ணப்படுகிருன்.] என்கிறபடியே ஸூக்ஷ்மநிலையில் அவனிடம் உள்ளவையான அவற்றை உண்டாக்குகிறவனுகையாலும் நாராயணன் எனப்படுமவன். 5. (நாராயணன்) மேலே "பாற்கடற்பள்ளியான்" என்று சொல்லுகையாலே, அதையொட்டி நாரங்களாகிற ஜலங்களைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டவன் நாராயணன் என்கிற தாகவுமாம். "நரனுகிற பகவானிடமிருந்து தோன்றியவையாகையாலே அப்புக்கள் (ஜலங்கள்) நாரங்கள் எனப்படுகின்றன. அந்த ஜலங்கள் இவனுக்கு ஸ்ருஷ்டிகாலத்தில் இருப்பிடமாயிருக்கையாலே, இவன் நாராயணன் எனப்படுகிருன்" [மநு 1-10] என்று மனு இப்பொருளைக் காட்டினுரன்ருே. 6. (நாராயணன்) எவருக்கும் இவனை விடவொண்ணுதபடி நாரங்களாகிற அவை இவனுக்கு சரீரமாகவும், நாராயணனுன இவன் அவர்களுக்கு ஆத்மாவாகவுமிருக்கையாலே, உடலும் உயிரும் போலே நெருங்கிய உறவையுடையவன் என்கிறதாகவுமாம். 7. (நாராயணன்) நாரங்களுக்கு அயநமாய்–இருப்பிடமாயிருப்பவன் என்கையாலே எல்லாப்பொருள்களையும் வெளியே வியாபித்திருக்கிருன் என்றதாகிறது. நாரங்களை அயநமாக–இருப்பிடமாகக் கொண்டவன் என்கையாலே எல்லாப்பொருள்களையும் உட்புறமும் வியாபித்திருக்கிருன் என்றதாகிறது. இப்படி அந்தர்வ்யாப்தியையுடையவனுகையாலே, உலகை உள்நுழைந்து நியமிப்பவனென்றும், பஹிர்வ்யாப்தியை உடையவனுகையாலே உலகிற்கு ஆதாரமாயிருப்பவனென்றும் கூறுகிறதாகவுமாம். 8. (நாராயணன்)

"माता पिता भ्राता" (மாதா பிதா ப்₄ராதா) இத்யாதி₃பே₄த₃த் தாலே ஸர்வவித₄ப₃ந்து₄த்வமும், ஆஶ்ரயணோந்முகனான அதி காரிக்கு அநுரூபமாம்படி வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும், ஸௌசீல்யமும், ஸௌலப்₄யமும், ஜ்ஞாநஶக்த்யாதி₃யோக மும் இக்குணவிஶேஷங்களளவிலே விமுகரையும் ஆப₃த்₃த₄ ராக்கும் என்னுமிடமும் தோற்றுகிறது.

ஆனால், இதில் தோற்றுகிற காரணத்வம், "न सन्न चासच्छिव एव केवलः" (ந ஸந்ந சாஸச்சி₂வ ஏவ கேவல:) என் றும், "पतिरेक आसीत्" (பதிரேக ஆஸீத்) என்றும் சொல்லு கிறபடியே, ஹிரண்யக₃ர்ப₄சிவாதி₃ஸாத₄ாரணமன்றோ? என்னில்: 1. (ஸ்ரீமாந்) ஸர்வாதி₄கன் என்கிறது. "ஸ்ரீமாந்"

'அயனம்' என்று ப்ராப்யத்தையும், ப்ராப்யமாயிருக்கும் உறவையும் சொல்லுகையாலே, நரஸமூஹங்களுக்கு எல்லாவிதமான உறவுமாயிருப் பவன் நாராயணன் என்கிறதாகவுமாம். ஆக, "தாயும், தந்தையும், தமையனும், இருப்பிடமும், உபாயமும், நண்பனும், ப்ராப்யமும் நாரா யணனே" [ஸுபால] என்று சொல்லப்படும் எல்லாவுறவுமாயிருக்கும் தன்மையும், ஜீவாத்மஸமூஹங்களான நாரங்கள் இவனை அடைய எண்ணும் போது, அவை தன்னை அடையலாம்படியான வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்₄யம் என்னும் ஆச்ரயண ஸௌகர்யாபாத₃க குணங்களும், ஜ்ஞானம், சக்தி, அவாப்தஸமஸ்தகாமத்வம், ஸர்வஸ்வா மித்வம், தயை என்னும் ஆஸ்ரிதகார்யாபாத₃ககுணங்களும் கூடியிருக்கப் பெற்றவன் என்றும், இக்குணங்களாலே அன்பற்றவர்களையும், அன்புடைய வராக்குமவன் என்றும் உணர்த்தப்படுகிறது.

நாராயணசப்தத்தால் தோற்றுகிற காரணத்வம், "அப்போது உள்ளது மில்லை; இல்லதுமில்லை; சிவன் ஒருவனேயிருந்தான்" [ச்வே 4-18] என்றும், "ஹிரண்யகர்ப்பன் ஒருவனே எல்லாப்பொருள்களுக்கும் ஒரே ஸ்வாமியாய் ஆதியில் இருந்தான்" [தை-ஸம் 4-2-8] என்றும் சொல்லுகிறபடியே ஹிரண்யகர்ப்பன் எனப்படும் பிரமனுக்கும் சிவன் எனப்படும் உருத்திர னுக்கும் பொதுவாயிருக்கும் பெருமையன்றோ? எனில்: 1. (திருவுடையவன்) திருவுடைய தேவனாகையாலே இவனே ஸர்வேச்வரன் என்கிறது. திருவும் ஐச்வர்யமும் பர்யாயமன்றோ. திருவுடையவன் என்கையாலே அனைவ

என்கிறவித்தாலே, ஆஶ்ரயணீயதையும், போ₄க்₃யதையும் தோற்றுகிறது. 2. (ஸ்ரீமாந்) இதில் மதுப்பு நித்யயோகார்த்தத்திலேயாய், இத்தால் பூவும் மணமும்போலே அவினாப₄ாவம் தோற்றுகிறது. (ஸ்ரீ:) எல்லாராலும் ஆஶ்ரயிக்கப்பட்டிருப்பாள் ஒருத்தியாய், உத்தரோக்த(த்தர?)மான அதிஶயங்களெல்லாம் தன்னுடைய கடாக்ஷாதீ₄னமாம்படியிருப்பாள் ஒருத்தியுமாய், "यस्य सा जनकात्मजा" (யஸ்ய ஸா ஜநகாத்மஜா) என்கிறபடியே, ஈச்வரனிலும் கால்வாசி ஏற்றமுடையளாயிருப்பாள் ஒருத்தி. ஆனால், இப்படிக்கொத்த இவளாலே வந்த அதிஶயமோ அத்தலைக்கு? என்றால்:

ராலும் அடையத்தக்கவன் என்பதும், இனிமைமிக்கவன் என்பதும் விளங்குகிறது. 2. (ஸ்ரீமாந்-திருவுடையவன்) 'ஸ்ரீமாந்' என்பதில் 'மதுப்' ப்ரத்யயம் "பூ₄மநிந்தா₃ ப்ரசம்ஸாஸு நித்யயோகேதிசாயநே ஸம்ஸர்க்கேஸ்திவிவக்ஷாயாம் ப₄வந்தி மதுபா₃த₃ய:" ['மதுப்' முதலான ப்ரத்யயங்கள் பூ₄மா (பெருமை), நிந்தை, புகழ், நித்யயோக₃ம் (எப்போதும் கூடியிருத்தல்), விஞ்சியிருத்தல், கூடியிருத்தல், உள்ளது என்னல் ஆகிய பொருள்களில் பிரயோகிக்கப்படுகின்றன.] என்கிற பலபொருள்களிடையே நித்யயோகப்பொருளில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. "நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ" [வி-பு 1-8-17] [உலகின் தாயான ஸ்ரீதேவியானவள் என்றும் விஷ்ணுவை விட்டுப்பிரியாதவள்.] என்றும், "அகலகில்லேன் இறையும் என்று அலர்மங்கையுறைமார்பா" [திருவாய் 6-10-10] என்றும் இவள் பூவைவிட்டுப்பிரியாத மணம்போலே பரமபுருஷனைவிட்டுப் பிரியாதவள் என்கிறது. "ஸ்ரீமாந்" என்பதில் ஸ்ரீசப்₃த₃ம் "ஸ்ரீயதே-இதி ஸ்ரீ:" [(அனைவராலும்) ஆச்ரயிக்கப்படுகிறுளாகையாலே 'ஸ்ரீ:' எனப்படுகிருள்.] என்கிற வ்யுத்பத்தியாலே அனைவராலும் ஆச்ரயிக்கப்பட்டிருப்பவளாய், மேன்மேலான பெருமைகளெல்லாம் தன்னுடைய கடாக்ஷத்தைப் பற்றியிருக்கும் பெருமை பெற்றவளாய், "ஜநகராஜன் திருமகள் எவனுக்கு உரியவளோ, அவனுடைய தேஜஸ்ஸு அளவிடவொண்ணுகது" [ரா-ஆ 37-18] என்கிறபடியே ஸர்வேச்வரனுன அவனுக்கும் தன் கால் நலத்தாலே பெருமையளிப்பவளாகையாலே, அவனிலும் கால்வாசி ஏற்றமுடையவளாயிருப்பாளொருத்தி என்று காட்டுகிறது. இப்படிப்பட்டவளோடு என்றும் கூடியிருக்கப்பெற்றவன் என்பது ஸ்ரீமச்₂சப்த₃ார்த்த₂ம். ஆனால், இப்படிப்பட்ட இவளாலே வந்த பெருமைதானே அவனுக்கு எனில்:

3. (ஸ்ரீமாந்) இவளும் அநவரதஸேவை பண்ணும்படியாய், ''இறையும் அகலகில்லேன்'' என்று அலர்மேல்மங்கை திரு மார்பில் சுவடறிந்தபின்பு, பிறந்தகமான தாமரையும் நெருஞ்சிமுள் என்னும்படி ஸ்ப்ருஹாஸ்பதனாய், ''திருவுக்கும் திருவாகிய செல்வா'' என்றும், **''श्रियः श्रियं''** (ஸ்ரிய: ஸ்ரியம்) என்றும் சொல்லுகிறபடியே, இவள்தானும் மேல்விழும்படி ஸ்வதஸ்ஸித்₃த₄போ₄க்₃யதையை உடையனாய், இவள் தர்ம மாய்த் தான் த₄ர்மியாயிருப்பான் ஒருத்தன். 4. (ஸ்ரீமாந்) இச்சேர்த்தியைப் பிரியக்கண்டாருண்டாகில், ராவணனும் சூர்ப்பணகையும் பட்டதுபடுவார்கள். ஆக, இந்த இரண்டு பதத்தாலும், ஆஶ்ரயணாதி₄காரிக்கு அநுஸந்தே₄யமான காரணத்வமும், ஸ்ரிய:பதித்வமும் ப்ரதிபாதித்ததாயிற்று. இத்தைப்பற்றவிறே ஆழ்வார்களும், ''திருவில்லாத்தேவரைத் தேறேல்மின்'' என்றும், ''திருநின்றபக்கம்'' என்றும் ப்ரதி

---

3. (திருவுடையவன்) இவளும் என்றும் விட்டுப்பிரியாமல் தன்னை ஸேவித் திருக்கப்பெற்றவனாய், ''இறையும் அகலகில்லேன்'' [திருவாய் 6-10-10] என்று அலர்மேல்மங்கையான அவள் தன் திருமார்பின் இனிமையை அறிந்தபின்பு, அவளுடைய பிறந்தகமான தாமரையையும் நெருஞ்சி முள்ளாக நினைக்கும்படி அவளாலே விரும்பப்படுமவனாய், ''திருவுக்கும் திருவாகிய செல்வா'' [பெரியதிரு 7-7-1] என்றும், ''திருவுக்கும் திருவான வனை'' [ஸ்தோ-ர-45] என்றும் சொல்லுகிறபடியே, இவள்தானும் மேல் விழும்படி இயற்கையான இனிமையை உடையவனாய், இவள் தனக்கு விசேஷணமாய் (ப்ரகாரமாய் அல்லது தர்மமாய்) தான் இவளுக்கு விசேஷ்ய மாய் (ப்ரகாரியாய் அல்லது தர்மியாய்) இருப்பவன் என்கிறது. 4. (திரு வுடையவன்) திருவையும் இவனையும் ஒருவரிடமிருந்து மற்றொருவரைப் பிரித்து அநுபவிக்க நினைத்தால் ராவணனையும், சூர்ப்பணகையும்போலே தலையோ மூக்கோ அறுக்கப்படுவார்களித்தனையென்கிறது. ஆக, ''நாரா யண:'' ''ஸ்ரீமாந்'' என்ற இந்த இரண்டு பதத்தாலும் ஆச்ரயிக்கும் அதி காரியால் அநுஸந்திக்கத்தக்க காரணத்வமும், ஸ்ரிய:பதித்வமும் சொல்லப் பட்டதாயிற்று. இதனாலன்றோ ஆழ்வார்களும் ''திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு'' [நான்-திருவ-53] என்றும், ''திருநின்றபக்கம்

பாதித்தது. மஹிஷ்யந்தரங்கள் உண்டாயிருக்கச்செய்தேயும். **"तस्य चास्यां प्रतिष्ठितं"** (தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டி₃தம்) என்று இவளளவிலே நெஞ்சுண்டாய்ப்போருவான் ஒருத்தன்.

அது எங்கே கண்டோம்? என்றால்: 1. (க்ஷீரார்ணவ நிகேதந:) இவள் பிறந்தகத்தை விடாதபோதே கண்டதிறே. 2. (க்ஷீரார்ணவ நிகேதந:) பாற்கடலிலே சாய்ந்த பயோத₄ரம்போலே இருப்பான் ஒருத்தன். 3. (க்ஷீரார்ணவ நிகேதந:) அங்ஙனன்றியே, "பெரும்புறக்கடல்" என்றும், **"समस्तकल्याणगुणामृतोदधिः"** (ஸமஸ்தகல்யாணகு₃ணாம்ருதோத₃தி₄:) என்றும் சொல்லுகிறபடியே கடலிலே கடல் தோய்ந்தாற் போலே இருக்கிறவர் என்னவுமாம். 4. (க்ஷீரார்ணவ நிகேதந:) கீழ்ச்சொன்ன நாராயணத்வம் இங்கே புறவெள்ளமிட்டுக் கிடக்கிறது.

திறவிது" [நான்-திருவ-62] என்றும் அருளிச்செய்தது. பூமி, நீளை முதலான மற்ற மஹிஷிகள் இருந்தபோதிலும் "ராமனுடைய மனம் ஸீதையிடமே நிலைநிற்கிறது" [ரா-ஸு 155-2] என்கிறபடியே இவள் விஷயத்திலேயே மனம் ஈடுபட்டிருப்பவனாகையாலே, "ஸ்ரீமாந்" என்று இவளையிட்டுச்சொல்லுகிறது.

இவளிடத்திலேயே ஈடுபட்டிருப்பான் என்பதை எங்கே கண்டோம்? எனில்: 1. (பாற்கடற்பள்ளியான்) இவள் பிறந்தவீட்டை விடாமலிருப்பதிலிருந்தே கண்டோமே. 2. (பாற்கடற்பள்ளியான்) பாற்கடலிலே சாய்ந்த நீருண்டமேகம்போலேயிருப்பவன். 3. (பாற்கடற்பள்ளியான்) "பெரும்புறக்கடல்" [பெரியதிரு 7-10-1] என்றும், "எல்லாக்கல்யாண குணங்களுக்கும் அமுதக்கடலாயிருப்பவன்" [ஸ்தோ-ர-18] என்றும் சொல்லுகிறபடியே பாற்கடலிலே குணக்கடல் கிடப்பதுபோலேயுள்ளவன் என்றுமாம். 4. (பாற்கடற் பள்ளியான்) நாரமாகிற ஜலத்தை இருப்பிடமாகக் கொண்டவன் என்பதன்றோ நாராயணசப்தார்த்தம். அந்த நாராயணத்வம் க்ஷீராப்தியிலே புறவெள்ளமிட்டுக்கிடக்கிறபடியைச் சொல்லுகிறதாகவுமாம்.

ஆனால், வ்யூஹவிசேஷமானால், ஸநகாதிகளுக்கு ஊஹ விஷயமாய், ஸர்வஜநஸமாச்ரயத்வமில்லையோ? என்னில்: 1. (நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்) அநேகசிரஸ்கமான இடத்தைவிட்டு, "திகழும் மதுரைப் பதிக் கொற்றவன்" என்று ஏகாதபத்ரம் நடத்துகிற இடத்தேற வந்தான். 2. (நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய......) ஆசீவிஷமுள்ள இடத்தைவிட்டு மதுரோத்தரமான இடத்தேறப்போந்தான். 3 (நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்) ஸாகரத்தைவிட்டு, நாகரனும்படி வந்துபுகுந்தான்.

கிடையழகொழிய, அநுபாவ்யமான நடையழகில்லையோ? என்னில்: 1. (ஆகத:) "கனத்திருந்த களிறு" என்றும், "தறியார்ந்த கருங்களிறு" என்றும் சொல்லுகிறபடியே கண்டவர்களுடைய நயநஸாபல்யம் பசேளிமமாம்படி, மத்தமாதங்ககல்பனும்படி பிசகி நடந்தான். 2. (ஆகத:)

பாற்கடலிலிருக்கும் அநிருத்தன் என்னும் வியூஹமூர்த்தியானால், ஸநகர், ஸநந்தனர் முதலான மஹரிஷிக்களுக்கே ஊஹத்திற்கு விஷயமாய், எல்லா ஜனங்களும் ஆச்ரயிக்கமுடியாதோ? எனில்: 1. (நாகணையை விட்டு மதுராநகரத்திற்கு வந்தவனன்றோ) பல தலையாட்டமான (1. பலர் ஆட்சி செலுத்தும் 2. திருவனந்தாழ்வானின் பல தலைகள் ஆடும்படியான) இடத்தை விட்டு, "திகழும் மதுரைப்பதிக் கொற்றவன்" [நாச்-திரு 4-6] என்று ஒருகுடை நிழலின்கீழ் தான் ஆட்சிசெலுத்தும் இடத்திற்கு வந்தான். 2. (நாகணையை விட்டு) கடுவிஷமுள்ள இடத்தைவிட்டு மதுரை (இனிமைமிக்கது) ஆகையாலே இனிமைமிக்க இடத்திற்கு வந்தான். 3. (நாகணையை விட்டு மதுரை நகர்க்கு வந்தானன்றோ) ஸாகரத்தை (கடலை) விட்டு, நாகரனும்படி (1. நகரத்திலுள்ளவனும்படி 2. நாகரிகனுமான வனும்படி) நகருக்குள் வந்து புகுந்தான்.

நாகணையில் கிடக்கும் அழகேயாய், அநுபவிக்கத்தக்க நடக்குமழகு இல்லையோ? என்னில்: 1 (நடந்தான்) "கனத்திருந்த களிறு" [ ] என்றும், "தறியார்ந்த கருங்களிறே போலநின்று" [பெரியதிரு 2-10-6] என்றும் சொல்லுகிறபடியே, கண்டவர்கள் கண்படைத்த பயன் நிறைவேறும்படியாக மதங்கொண்ட யானைபோலே கம்பீரமாக நடந்து

வருகிறபோதே மது₄ராவிலாஸிநீஸார்த்த₂த்துக்குத் தன் வடிவழகை தூ₄ளிதா₃நம்பண்ணிக்கொண்டு வந்தான். 3. (ஆக₃த:) தன்னடையழகாலே **"संसारपदवीं व्रजन्"** (ஸம்ஸார பத₃வீம் வ்ரஜந்) என்கிற ஜங்க₄ாலதையைக் குலைத்துக் கொண்டு வந்தான்.

இப்படி வருகிறதுதான் பரமபதத்திலேயோ, திருப்பாற் கடலிலேயோ? என்னில்: 1. (மது₄ராம் புரீம்) **"मधुरा नाम नगरी पुण्या पापहरी शुभा"** (மது₄ரா நாம நக₃ரீ புண்யா பாபஹரீ ஶுப₄ா) என்கிறபடியே அவன்றன்னைப்போலே தே₃ஶமும் அநிஷ்டநிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் பண்ணிக் கொடுக்கிறது மண்வாசியிலே தோற்றுமிறே. 2. (மது₄ராம் புரீம்) **"देवानां पूरयोध्या"** (தே₃வாநாம் பூரயோத்₄யா) என்கிற தேஶம்போலே துஷ்ப்ராபையாயிருக்கையன்றிக்கே, ஶத்ரு மித்ரோதா₃ஸீனரான கோடித்ரயத்துக்கும் ஆஶ்ரயமான

நடையழகையும் காட்டினான். 2. (வந்தான்) வருகிறபோதே வடமதுரை அழகியர் கூட்டத்திற்குத் தன் வடிவழகை தூளிதானம் பண்ணிக்கொண்டு வந்தான். 3. (நடந்தான்) தன் நடையழகாலே "ஸம்ஸார வழியிலே நடந்துகொண்டேயிருக்கும் ஜீவன்" [வி-பு 6-7-19] என்று கூறப்படும் ஸம்ஸாரி ஜீவனின் ஒய்வொழிவில்லாத ஸம்ஸாரமண்டல நடையைக் குலைத்துக்கொண்டு நடந்தான்.

இப்படி வருகிறதுதான் பரமபதத்திலேயோ திருப்பாற்கடலிலேயோ? என்னில்: 1. (மதுராநகரத்தை) மதுரை என்னும் பெயரிலிருந்தே அவற்றிலும் இனிமையும், ஸம்ஸாரிகளும் அடையலாம்படியான எளிமையும் தோற்றும். "மதுரை என்னும் நகரம் மனிதனை நற்கதிக்கு அழைத்துச் செல்வதாயும், பாபத்தை அழிப்பதாயும், சுபமானதாகவுமிருக்கிறது" [ ] என்கிறபடியே அவனைப்போலே தேசமும் பாபங்களைப் போக்குவதாகிற அநிஷ்டநிவ்ருத்தியையும், நற்கதிக்கு அழைத்துச் செல்வதாகிற இஷ்டப்ராப்தியையும் பண்ணிக்கொடுக்கவல்லது என்பது மண்வாசியிலே தோற்றுமன்றோ. 2. (மதுராபுரியை) "தேவர்களின் புரியாகவும், முற்றுகையிட வொண்ணாததாகையாலே 'அயோத்யா' என்று பெயருள்ளதாகவுமுள்ள ஸ்ரீவைகுண்டம்" [தை-ஆர] என்கிற தேசம்போலே ஞானிகளும் அணுகமுடியாததாயிராமல், எதிரிகள், நண்பர் இரண்டிலும் சேராத உதாஸீனர் என்னும் மூவகைப்பட்ட சேதனருக்கும்

தே₃ஶமிறே. 3. (மது₄ராம் புரீமாக₃தோ ஹி) ஹிஶப்தம் ப்ரஸித்தியிலேயாய், "மண்ணின் பாரம் நீக்குதற்கே வட மதுரைப் பிறந்தான்" என்கிற ப்ரஸித்₃தி₄யைக் காட்டுகிறது. 4. (க்ஷீரார்ணவ நிகேதந: நாக₃பர்யங்கமுத்ஸ்ருஜ்ய மது₄ராம் புரீமாக₃தோ ஹி) ஜடப்ரக்ருதி ஸம்ஸர்க்கத்தை விட்ட பின்பு நாகரிகமான ஆகாரம் நடையிலே தோற்றுகிறதிறே. 5. (நாராயண: மது₄ராம் புரீமாக₃தோ ஹி) ஸர்வகாரண பூ₄தனுன தான் கார்யைகதே₃ஶத்திலே ஒதுங்கிவந்தான். 6. (ஸ்ரீமாந் மது₄ராம் புரீமாக₃தோ ஹி) ஏகதா₃ரவ்ரதனுன வன் "**सुप्रभाता च रजनी मधुरावासयोषितां। पश्यन्त्यच्युतवक्त्राब्जं यासां नेत्रालिपङ्क्तयः**" (ஸுப்ரபா₄தா ச ரஜநீ மது₄ராவாஸயோஷிதாம்। பஶ்யந்த்யச்யுதவக்த்ராப்₃ஜம் யாஸாம் நேத்ராளி பங்க்தய:॥) என்கிறபடியே படைவீடேறிப் பத்ந்யந்தர பரிக்₃ரஹம் பண்ணுவாரைப்போலே வந்தான். 7. அங்ஙனன்றியே, அதிஶயிதலக்ஷ்மியுடையவன் ஒரு படைவீடு ஸாபேக்ஷனுய் வந்தான். 8. (நாக₃பர்யங்க முத்ஸ்ருஜ்ய

இருப்பிடமான தேசத்தையன்றே அடைந்தது. 3. (மதுராபுரியை அடைந்தானன்றே) 'ஹி' [அன்றே] என்னும் பதம் பிரஸித்தியைக் காட்டுவதாய், "மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்" [திருவாய் 9-1-10] என்கிற பிரஸித்தியைக் காட்டுகிறது. 4 (பாற்கடற் பள்ளியான் நாகணையைவிட்டு மதுராபுரிக்கு நடந்தானன்றே) ஜட (ல) ப்ரக்ருதியான கடலோடு உறவு நீங்கினபின்பு நாகரிகனுனுன் என்பது நடையிலேயே தோற்றுவதொன்றுன்றே. 5. (நாராயணன் மதுராபுரியை அடைந்தானன்றே) ஸர்வகாரணபூதனுன நாராயணன் தன்னுல் உண்டாக்கப்படும் உலகின் ஒருமூலையான மதுரையிலே ஒதுங்கி வந்தான்! 6. (ஸ்ரீமாந் மதுராபுரியை அடைந்தானன்றே) ஒரே பத்தினியையுடைய அரசன் மற்றதேசங்களை வெற்றிகொண்டு, அங்குள்ள ராஜகுமாரிகளையும் மணந்துகொள்வதுபோலே, பிராட்டியொருத்தியைப் பத்தினியாகக் கொண்ட ஸ்ரீமானுனவன், "அச்சுதனுடைய முகத்தாமரையைப் பருகும் கண்களாகிற வண்டுகளையுடைய மதுரைநகர்ப் பெண்களுக்கு இன்று இரவு நன்ருக விடிந்துள்ளது" [வி-பு 5-18-24] என்கிறபடியே மதுரை நகர்ப்பெண்களை அழகாலே தோற்பிக்க வந்தான். 7. (திருவுடையவன் மதுராபுரியை அடைந்தான்) மிகுந்த செல்வத்தை உடையவன் இந்த

மது₄ராம் புரீமாக₃தோ ஹி) பு₄ஜங்க₃ஶய்யையை விட்டவன் பு₄ஜங்க₃ஸம்மர்த்த₃முள்ளவிடத்திலே வந்தான்.

ஆக, இந்த ஶ்லோகத்தாலே, வாக்யத்₃வயம்போலே உபாயத்வேநவும் உபேயத்வேநவும் ஆஶ்ரயணீயனாய், ஒரு தே₃ஶவிஶேஷத்திலே செல்லவேண்டாதபடி தங்குபயண மாக வந்து, அங்கு செல்லமாட்டாத பங்கு₃களுக்கு க₃ங்கா₃ பதநம்போலே ஆஶ்ரிதரிருந்த தேஶத்திலே தான்வந்து தன் வடிவழகாலும், நடையழகாலும் அஜ்ஞரானவர்களையும் வஶீகரித்துச் சரிதார்த்த₂ராம்படி பண்ணிற்றாயிற்று.

அங்ஙனன்றியே, "பண்டிவரைக் கண்டறிவது" என்று ஏதச்சப்₃தார்த்த₂த்தையும், "புவனியெல்லாம் படைத்த

ஒரு நகரத்தைப் பெறவேணுமென்னும் குறையுடையவனாய் வந்தான்.
8. (நாகணையை விட்டு மதுராபுரியை அடைந்தானன்றோ) மதுரமான (இனிய) பெண்களையுடைய நகரமாகையாலே 'மதுராபுரீ' என்னும் பெயர் ஏற்பட்டதாகக்கொண்டு, பு₃ஜங்க₃ம் (பாம்பு) ஆகிற படுக்கையை விட்டவன் பு₃ஜங்க₃ஸம்மர்த்த₃ம் (காமினிகளின் நெருக்கம்) உள்ள இடத்துக்கு வந்தான்! இதில் வியப்பில்லை என்று கருத்து.

ஆக, இந்த ச்லோகத்தாலே த்வயத்தில் பூர்வவாக்யத்திலும், உத்தர வாக்யத்திலும்போலே உபாயமாகவும், உபேயமாகவும் பற்றத்தக்கவனாய், ஸ்ரீவைகுண்டமாகிற கண்காணாத தேசத்தில் சென்று காணவேண்டாதபடி, அங்கு நின்றும் தங்குபயணமாக வந்து அங்கு செல்லமாட்டாத பங்கு₃ (நொண்டி) களின் தலையிலே கங்கை விழுந்ததுபோலே அடியாரிருந்த விடத்திலே கண்ணனாய்த்தானே வந்து தன் வடிவழகாலும் நடையழகாலும் அறிவிலிகளையும் ஈடுபடுத்திப் பயனடையச் செய்தபடியைச் சொல்லிற்றாயிற்று.

அப்படிக் கண்ணனாய்ப் பிறந்த விபவாவதாரத்தைச் சொல்லுவதாகக் கொள்ளாமல், 'க்ருஷ்ணபுரீ' எனப்படும் திருக்கண்ணபுரத்திலே, "சௌரி ராஜன்" என்று கண்ணனுடைய பெயரையே கொண்ட அர்ச்சாவதாரப் பெருமானையே இங்கு சொல்லுவதாகவும் கொள்ளலாம். "பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில் யாம் என்றே பயில்கின்றாளால்" [பெரியதிரு 8-1-9] என்று கண்ணெதிரே முகமறிய நிற்கிறபடியைச் சொல்லுகையாலே

வனே'' என்றும் ''தேவரையுமசுரரையும் திசைகளையும் படைத்தவனே'' என்றும் உத்பாதகத்வத்தாலே நாராயண ஶப்₃தா₃ர்த்த₂த்தையும் ''அணியுருவிற்றிருமாலை'' என்று ஸ்ரீமச்ச₂ப்₃தா₃ர்த்த₂த்தையும், ''கடற்கிடந்த பெருமானை'' என்று க்ஷீரார்ணவநிகேதநஶப்₃தா₃ர்த்த₂த்தையும் ''வடவரை நின்றும் வந்து'' என்று ஆக₃தஶப்₃தா₃ர்த்தத்தையும், ''கண்டவர்தம் மனம் வழங்கும்'' என்றும் ''கற்றூர்சேர் கண்ணபுரம்'' என்றும், மது₄ராபுரீஶப்₃தா₃ர்த்த₂த்தையும் ப்ரதிபாதி₃க்கையால் ஆபாத₃சூடம் க்ருஷ்ணபுரீநாயகனுடைய ஸௌரிராஜவைப₄வத்தையே ப்ரதிபாதி₃த்ததாயிற்று.

3. ஸ்ரீவிஷ்ணுபுராணம், 1-வது அம்சம் 1-வது அத்தியாயம், ச்லோகம்-1.

पराशरं मुनिवरं कृतपौर्वाह्णिकक्रियम्।
मैत्रेयः परिपप्रच्छ प्रणिपत्याभिवाद्य च॥

'ஏஷ:' என்னும் பதத்தின் பொருளையும், ''புண்டரிகமலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே!'' [பெருமாள்திரு 8-2] என்றும், ''தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே!'' [பெருமாள்திரு 8-10] என்றும் எல்லாப்பொருளையும் உண்டாக்கினவன் என்னும் நாராயண சப்தார்த்தத்தையும், ''அணியுருவில் திருமாலை'' [பெரியதிரு 8-9-2] என்கையாலே ''ஸ்ரீமாந்' என்கிற சப்தத்தின் பொருளையும், ''கடற்கிடந்த பெருமானை'' [பெரியதிரு 8-9-2] என்று ''க்ஷீரார்ணவநிகேதந:'' என்னும் பதப்பொருளையும், ''வடவரை நின்றும் வந்து இன்று கணபுரம் இடவகை கொள்வது'' [பெரியதிரு 8-2-6] என்று ''ஆகத:'' [வந்தான்] என்னும் பதப்பொருளையும், ''கண்டவர் தம் மனம் வழங்கும் க(ண்)ணபுரம்'' [பெருமாள்திரு 8-2; பெரியதிரு 8-1-9] என்றும், ''கற்றூர் சேர் கண்ண புரம்'' [பெரியதிரு 8-10-5] என்றும் ''மது₄ராம்புரீம்'' [இனியநகரத்தை] என்னும் பதங்களின் பொருளையும் ஆழ்வார்கள் இக்கண்ணபுரத்தெம் பெருமான் விஷயத்திலேயே அருளிச்செய்கையாலே, இந்த ச்லோகம் அடிமுதல் நுனிவரை கண்ணபுரத்தெம்பெருமானுடைய சௌரிராஜனையே கூறுவது என்றும் கொள்ளலாம்.

பராஶரம் முநிவரம் க்ருதபௌர்வாண்ஹிகக்ரியம் ।
மைத்ரேய: பரிபப்ரச்ச₂ ப்ரணிபத்யாபி₄வாத்₃ய ச ॥

பதவுரை:—முநிவரம்—முனிவர் தலைவராய், க்ருதபௌர்வாண்ஹிகக்ரியம் — காலைக்கடன்களை முடித்தவராயுள்ள, பராஶரம்—பராசரமஹரிஷியை, மைத்ரேய:—மைத்திரேயர் என்னும் ரிஷி, ப்ரணிபத்ய—வணங்கி, அபி₄வாத்₃ய ச—அபிவாதனமும் செய்து, பரிபப்ரச்ச₂—நன்றாகக்கேட்டார்.

அவதாரிகை:—ஶ்ரோதாக்களுக்கு இப்ரப₃ந்த₄ம் ஆப்ததமம் என்று, இதிலே பு₃பு₄த்ஸை பிறக்கைக்காக விலக்ஷணனான ஆசார்யன்பக்கலிலே பு₃பு₄த்ஸுவாய், அபி₄ஜாதனான ஶிஷ்யன் அவஸரத்திலே ப்ரஶ்நம் பண்ணின படியைச் சொல்லுகிறது.

வ்யா:-1.(பராஶரம்)"स होवाच व्यासः पाराशर्यः"(ஸ ஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:) என்று வேதாசார்யனான ஸ்ரீவேதவ்யாஸ ப₄க₃வானுக்கும் இவனோட்டை ஸம்ப₃ந்த₄த்தாலே ஆப்தி சொல்லவேண்டும்படி,ச்ருதியிலேஆப்தனாகஸித்₃த₄னானவனை.

---

3. ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-1-1)

அவதாரிகை:—கேட்பார்க்கு இவ்விஷ்ணுபுராணம் உள்ளதை உள்ளபடியே சொல்லுமவற்றில் தலைசிறந்தநூல் என்று தோற்றி, இதைக் கேட்பதில் விருப்பமுண்டாவதற்காக, மிகச்சிறந்த ஆசார்யனான பராசர மஹர்ஷியிடம், அறிவதில் விருப்பமுள்ளவனாய், நற்குடிப்பிறந்த சிஷ்யனான மைத்ரேயன் உரியகாலத்திலே கேள்விகேட்டபடியைச் சொல்லுகிறது இந்த ச்லோகம்

வ்யா:—1.(பராசரரை)"பராசரபுத்திரரான வியாஸரன்றோ சொன்னார்" [தை-ஆர 1-9] என்று வேதங்களைப் பிரித்து வேதாசார்யரான ஸ்ரீவேதவ்யாஸ பகவானுக்கும், இவருடைய வார்த்தையின் உண்மையை நிரூபிக்கப் பராசரரின் புத்திரர் என்று பெருமை சொல்லவேண்டும்படி வேதத்திலே உள்ளதை உள்ளபடி உரைப்பவராகப் பிரஸித்தராயிருப்பவரை.

2. (பராஶரம்) வைதிகபக்ஷத்துக்கு ஶத்ருக்களான பா₃ஹ்ய குத்₃ருஷ்டிகளை ப்ரமாணதர்க்கங்களாகிற ஶரங்களாலே ஹிம்ஸியாநின்றான் என்றாகவுமாம். அத₂வா. 3. (பராஶரம்) ஆந்தர ஶத்ருக்களான ராக₃த்₃வேஷாதி₃களை ஶமத₃மாதி₃களாலே ஹிம்ஸியாநின்றான் என்றாகவுமாம். (முநிவரம்) பரமாத்ம விஷயத்தில் மநநஶீலரானவர்களில் உத்க்ருஷ்டனானவனை. இத்தால் ஜ்ஞாநஸம்ருத்₃தி₄ சொல்லுகிறது. (க்ருதபௌர்வாண்ஹிகக்ரியம்) என்று இவ்வுபாஸநத்துக்கு அங்க₃மாக ஶாஸ்த்ரசோதி₃தமாய், ஜ்ஞாநபூர்வகமான அநுஷ்டானமும் அநுஷ்டிதமான ஸமயத்திலே. (க்ருதபௌர்வாண்ஹிகக்ரியம்) என்கையாலே ஸத்வோத்தர

---

2. (பராசரரை) "பராந்- பா₃ஹ்யகுத்₃ருஷ்டீந்- ஸம்யக் ப்ரமாணதர்க்கை: ஆச்ருணுதி- இதி பாரசர:" [பிறரை- அதாவது வேதத்துக்குப் புறம்பாயிருக்கும் பா₃ஹ்யரையும், வேதத்துக்கு அவப்பொருளுரைக்கும் குத்₃ருஷ்டிகளையும்— நல்ல ப்ரமாணதர்க்கங்களாலே ஹிம்ஸிக்கிறாராகையாலே பராசரராகிறார்.] என்று எங்களாழ்வானும் ஸ்ரீவிஷ்ணுசித்தாசார்யர் காட்டிய வ்யுத்பத்தியின்படியே வைதிக பக்ஷத்திற்கு எதிரிகளாகையாலே வேதபா₃ஹ்யர்களான பௌத்₃த₄ர், ஜைநர் முதலானோரையும், வேதத்திற்கு அபார்த்தம் உரைக்கையாலே வேதகுத்ருஷ்டிகளான சைவர், அத்வைதிகள் முதலானோரையும் ப்ரமாணங்கள், ப்ரமாணங்களை ஒட்டிய தர்க்கங்கள் ஆகிய சரங்களாலே ஹிம்ஸிக்கிறாராகையாலே பராசரர் எனப்படுமவரை என்றும் பொருள் கொள்ளலாம். 3. (பராசரரை) உட்பகைகளாகையாலே பரர் (எதிரிகள்) எனத்தக்க விருப்பு வெறுப்பு முதலானவற்றை மனவடக்கம் புலனடக்கம். முதலான சரங்கலாலே ஹிம்ஸிக்கிறார் என்றும் கொள்ளலாம். அடுத்தபடி சொல்லப்போகும் உபாஸனத்துக்கு சமதமாதிகளும் தேவையன்றோ. (முனிவரரை) பரமாத்ம விஷயத்தில் மனனம் செய்பவர்கள் முனிவராகிறார்கள். அவர்களில் சிறந்தவர் முனிவரராகிறார். இதனால் உபாஸநாநிஷ்டரான பராசரரின் ஞானப்பெருமை சொல்லப்பட்டதாயிற்று. (முற்பகற் கருமங்களைச் செய்தவரை) முற்கூறிய உபாஸனையாகிற பக்தியோகத்திற்கு அங்கமாக சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டதாய் ஆத்மாவைப்பற்றிய உண்மையறிவை முன்னிட்டதான ஸந்த்யாவந்தனம் முதலான கர்மயோகாநுஷ்டானத்தைச் செய்து முடித்த ஸமயத்திலே. "முற்பகற்கடன்களை செய்துமுடித்தவரை" என்கையாலே ஸத்வகுணம்

காலத்திலே என்கை. இத்தாலே, வஸிஷ்டன் அந்யபரனு யிருக்க, த்ரிஶங்கு சென்று கேட்டாற்போலன்றிக்கே, ஆசார்யன் அநந்யபரனுயிருக்கிற ஸமயத்திலே கேட்டான் என்கை. பரபக்ஷப்ரதிக்ஷேபம் பண்ணுகிறபோது அவஸர மன்று; உபாஸநகாலமும் அவஸரமன்று; ததங்கமான அநுஷ்டாநஸமயமும் அவஸரமன்று; ஆகையாலே, க்ருத க்ருத்யனுய்த் தன்னுடைய ஜ்ஞாநத்துக்கு வீடு தேட்டமான அவஸரத்தே கேட்டான் என்கை. (மைத்ரேய:) யாஜ்ஞ வல்க்யபகவானை இடங்களிலே ப்ரஶ்நம் பண்ணிப்போரும் ப்ரஹ்மவிதுஷியான மைத்ரீஸுதனுகையாலே, அவஸரத் திலே ப்ரஶ்நம் பண்ணுகை தன்னைத்தோன்றி வந்ததன்று தன்னுடைய பிறப்பாலே வந்தது என்கை. அன்றியிலே, மித்ரயுபுத்ரனுய், "केकयमित्रयुप्रलय" (கேகயமித்ரயுப்ரளய)

விஞ்சிநிற்கும் காலத்திலே என்கிறது. இதனுல், வஸிஷ்டன் வேருெரு காரியத்திலே ஈடுபட்டிருக்கும்போது, 'எனக்கு யாகம் செய்விக்கவேணும்' என்று திரிசங்கு கேட்டாற்போலன்றிக்கே, ஆசார்யன் ஸத்வகுணப்ர வர்த்தகனுன பகவானின் பெருமையைச் சொல்ல ஸித்தனுயிருந்த ஸமயத் திலே கேட்டான் என்கிறது. புறமதங்களைக் கண்டிக்கும் காலமும் புராணச்ரவணத்துக்கு சரியான காலமன்று; உபாஸநகாலமும் சரியான ஸமயமன்று. உபாஸனத்துக்கு அங்கமான கர்மத்தை அனுஷ்டிக்கும் காலமும் சரியான வேளையன்று. ஆகையாலே, பராசரம் என்கையாலே புறமதகண்டனத்தையும் செய்து முடித்து, 'முநிவரம்' என்கையாலே உபாஸனத்தையும் செய்த, 'க்ருத பௌர்வாண்ஹிகக்ரியம்' என்கையாலே உபாஸநாங்கமான கர்மாநுஷ்டானத்தையும் செய்து முடித்து, ஆக இப் படிச் செய்ய வேண்டிய செயல்களை யெல்லாம் செய்து முடித்துத் தன்னு டைய அறிவு வெள்ளத்திற்கு வடிகால் தேவையாயிருக்கும் காலத்திலே கேட்டான் என்கிறது. (மைத்ரேயன்) மைத்ரியின் புத்திரன் மைத்ரேயன் என்று கொள்ளலாம். யாஜ்ஞவல்க்யபகவானை ஸமயம்பார்த்துக் கேள்வி கேட்கும் ப்ரஹ்ம ஜ்ஞானமுடைய 'மைத்ரீ' என்பபடும் தேவியின் பிள்ளை யாகையாலே, வேளைபார்த்துக்கேட்கும் குணம் தான்தோன்றியாக வந்த தன்று, இத்தாயாரிடம் பிறப்பாலே வந்தது என்கிறது. 'மித்ரயு' என்ப வரின் புத்திரன் மைத்ரேயர் என்றும் கொள்ளலாம். "கேகயமித்ரயுப்ரள யாநாம் யாதேரிய:" [பாணிநி 7-3-2] [கேகய, மித்ரயு, ப்ரளய என்

இத்யாதிஸூத்ரத்தாலே நிஷ்பந்நமாய்க்கிடக்கிறதாகவுமாம். (பரிபப்ரச்ச$_2$) ஒரு வார்த்தை சொல்லுகை அபேக்ஷிதமான போது கண்ணுக்கு எட்டாதபடி பின்னே இருக்கவும் கடவதன்று. கண்படும்படி பார்ஶ்வத்திலே இருக்கை சிஷ்யனுக்கு ப்ராப்தம். அந்த ஸ்தாநத்திலே நின்று கேட்டான் என்கை. (பரிபப்ரச்ச$_3$) நினைத்த அர்த்த$_2$த்திலே ஆசார்யன் உதாரனும்படி பாடே அத்தைக் கேட்கை. அதாகிறது,-"यन्मयं च जगद्ब्रह्मन्" (யந்மயம் ச ஜக$_3$த்$_3$ப்$_3$ரஹ்மந்) என்று ஸாமாந்யத்திலே ப்ரஶ்நமாய், "विष्णोः सकाशादुद्भूतं" (விஷ்ணோ: ஸகாஶாது$_3$த்$_3$பூ$_4$தம்) என்று விஶேஷத்திலே உத்தரமாம்படி கேட்டான் என்கை. (பரிபப்ரச்ச$_2$) அன்றி

னும் சப்தங்களின் கடைசி எழுத்துக்களான 'ய' 'யு' 'ய' என்பவைக்கு பதிலாக(மக்களைச் சொல்லும்போது) 'இய' என்னும் ப$_3$தம் வருகிறது]என்கிற பாணிநிஸூத்ரத்தின்படி கேகயனின் புத்திரி கைகேயியாவது போலே, மித்ரயுவின் புத்திரன் மைத்ரேயன் என்கிறதாகிறது. 1. (பக்கத்திலிருந்து கேட்டான்) பரிஸரத்தில் (அருகில்) நின்று கேட்டானுகையாலே 'பரிப்ரச்ச$_2$' என்கிறது. ஆசாரியனிடம் சிஷ்யன் ஒரு வார்த்தை சொல்லவேண்டியிருக்கும்போது, கண்ணுக்குத் தோன்ருதபடி பின்னேயிருக்கவும் கூடாது; ஸம்ப்ராதாந்யமுள்ளவன்போலே நேர் முன்னேயிருக்கவும் கூடாது. கண்படும்படியாகவும், தன் அப்ராதாந்யம் தோற்றும்படியாகவும் பக்கத்திலேயிருந்து கேட்பதே சிஷ்யனுக்குத் தகுந்தது. அப்படிப் பக்கத்தில் நின்று கேட்டான் என்கிறது. 2 (போதுமானவளவு கேட்டான்) "பர்யாப்தம் யதா$_2$தத$_2$ா பப்ரச்ச$_2$ —பரிபப்ரச்ச$_2$" ['பரிபப்ரச்ச' என்ருல் எவ்வளவு கேட்டால் போதுமானதோ அவ்வளவு கேட்டான் என்று பொருள்] என்று வ்யுத்பத்தி கொண்டு, தான் கேட்க நினைத்த பொருளை ஆசாரியன் விசேஷமாகப் பொழியும்படி, ஆசாரியனிடத்தில் கேட்கவேண்டியதைக் கேட்டான் என்கிறது. அதாவது:—

"யந்மயம் ச ஜக$_3$த்$_3$ ப்$_3$ரஹ்மந் யதஶ்சைதச் சராசரம் ।
லீநமாஸீத்$_3$ யதா$_2$ யத்ர லயமேஷ்யதி யத்ர ச ॥"

[வி-பு 1—1—5]

[பிராம்மணரே! இவ்வுலகம் எவர்மயமாயிருக்கிறது? அசைவனவும் அசையாதனவுமான பொருள்கள் எங்கிருந்து தோன்றுகின்றன? எங்கு எப்படி ஒடுங்கியிருந்தன? எங்கே லயமடைகின்றன?] என்று பொதுவிலே போதுமான வரையில் கேள்விகேட்டு,

யிலே. "பரி" என்கிறது ஸாகல்யவசநமாய், ஜ்ஞாதவ்யங் களையடையக் கேட்டான் என்றாகவுமாம். (ப்ரணிபத்ய) ப்தநமாகிறது, ஸர்வாவயவங்களும் தரையிலே பொருந்த விழுகை. நிபதநமாகிறது, ஆந்தரமான அபி$_4$மானமும் ப$_4$க்$_3$னமாய் விழுகை. ப்ரணிபதநமாகிறது, இதுதானே விஹிதமென்றிருக்கையன்றிக்கே, ப்ரீதிபூர்வகமாக இருக்கை. (அபி$_4$வாத்$_3$ய) ஸ்வநாமத்தை ஆவிஷ்கரித்துக்கொண்டு பாதே$_3$ாபஸங்க்$_3$ரஹணம் பண்ணுகை (ச) ஆசார்யன் பக்கல் அநுஷ்டிக்கக்கடவ விஷயங்களை ஸமுச்சயிக்கிறது.

"விஷ்ணோ: ஸகாஶாது$_3$த்$_3$பூ$_4$தம் ஜக$_3$த்தத்ரைவ ச ஸ்தி$_2$தம் ।
ஸ்தி$_2$திஸம்யமகர்த்தா஽ஸௌ ஜக$_3$தோ஽ஸ்ய ஜக$_3$ச்ச ஸ:॥"
[வி-பு 1—1—31]

[உலகம் விஷ்ணுவினிடமிருந்தே உண்டாயிற்று; அவரிடமே நிலைபெற்கிறது; இவ்வுலகிற்கு ரக்ஷணத்தையும் நியமனத்தையும் அவரே செய்கிறார்; இவ்வுலகமும் அவரே. (ஸர்வம் விஷ்ணுமயமே என்று கருத்து)] என்று விஷ்ணுவாகிய தேவதாவிசேஷமே ஜகத்காரணம் என்று விசேஷத்திலே பதிலாம்படி கேள்விகேட்டான் என்று கருத்து. இத்தால், கேள்வி கேட்டவரின் ஸாமர்த்தியம் விளங்குகிறது. "லிங்கத்தின் பெருமையைச் சொல்லு" என்று ஒருவன் கேட்க, அதைப்போரப் பொலியச் சொன்ன லிங்கபுராணத்திலும் வாசியும் விளங்குகிறது. இலிங்கத்திட்ட புராணம்போலே ஒன்றில் பக்ஷபாதத்தாலே சொன்னான் என்று குறைகூற முடியாதபடி மைத்ரேயர் நடுநிலை நின்று பொதுவிலே கேள்விகேட்ட ஸாமர்த்தியத்தை 'பரி' என்னும் உபஸர்க்கம் காட்டுகிறதென்றதாயிற்று. பி. (ஸகலார்த்தங்களையும் கேட்டான்) "பரி —ஸாகல்யே" என்று ஸாகல்யத்தைச் சொல்லுவதாய் அறிய வேண்டியவை அனைத்தையும் கேட்டான் என்றுமாம். (ப்ரணிபாதம் செய்து) பாதம் அல்லது பதநமாவது,—உடலின் எல்லா அவயவங்களும் தரையிலே பொருந்தும்படி விழுவது. நிபாதமாவது— உள்ளேயிருக்கும் 'நான், எனது' என்னும் அபிமானமும் அழிந்துவிழுகை. ப்ரணிபாதமாவது— 'இப்படி விழும்படி சாஸ்திரம் சொல்லுகையாலே விழுகிறோம்' என்று நினையாமல், 'வகுத்த ஸ்வாமியாகையாலே இது நம் ஸ்வரூபம்' என்று உகப்புடன் காலில் விழுகை(அபிவாதநம் செய்து)" அபி$_4$வாத$_3$யே... மைத்ரேயசர்மா நாமாஹமஸ்மி போ$_1$: [அபிவாதம் செய்கிறேன்...மைத்ரேயனென்னும் பெயருடையவனாயிருக்கிறேன்] என்று தன் கோத்ரப்ரவரங்களை முன்னிட்டுக்கொண்டு தன் பெயரை வெளிப்படுத்தித் திருவடிகளைப் பிடிக்கை. (ச) அநுக்தஸமுச்சயமாய், ஆசாரியனிடம் சிஷ்யன் மேலும் அநுஷ்டிக்கவேண்டிய அடக்கத்தைக் காட்டும் செயல்களையும் செய்தார் என்று காட்டுகிறது.

4. ஸ்ரீரங்கராஜஸ்தவம், உத்தரஶதகம் 19-வது ச்லோகம்

आदौ वेदाः प्रमाणं स्मृतिरुपकुरुते सेतिहासैः पुराणैः
न्यायैः सार्धं त्वदर्चाविधिमुपरि परिक्षीयते पूर्वभागः।
ऊर्ध्वो भागस्त्वदीहागुणविभवपरिज्ञापनैस्त्वत्पदाप्तौ
वेद्यो वेदैश्च सर्वैरहमिति भगवन् स्वेन च व्याचकर्थ॥

ஆதௌ வேதா: ப்ரமாணம்
ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை: புராணை:
ந்யாயை: ஸார்த்தம் த்வதர்ச்சாவிதிமுபரி
பரிக்ஷீயதே பூர்வபாக: ।
ஊர்த்வோ பாகஸ்த்வதீஹா
குணவிபவபரிஜ்ஞாபநைஸ்த்வத்பதாப்தௌ
வேத்யோ வேதைஶ்ச ஸர்வைரஹமிதி
பகவந் ஸ்வேந ச வ்யாசகர்த்த ॥

பதவுரை:— வேதா:— வேதங்களானவை, ஆதௌ— *முதலிலே [மற்றொரு பிரமாணத்தை எதிர்பாராமல் தானாகவே],* ப்ரமாணம்— *(உண்மையறிவையுண்டாக்கும்) பிரமாணமாகின்றன.* ஸ்ம்ருதி:—*(மநு முதலானோர் இயற்றிய) ஸ்மிருதி ஸமூஹம்.* ஸேதிஹாஸை: புராணை:—*இதிஹாஸங்களோடு கூடிய புராணங்களோடும்,* ந்யாயை: ஸார்த்தம்— *பூர்வோத்தர மீமாம்ஸாந்யாயங்களோடும் கூட,* உபகுருதே— *(வேதங்களுக்குப் பொருள்காணும் விஷயத்தில்) உதவுகிறது.* பூர்வபாக:—*(வேதத்தில்) கர்மகாண்டமெனப்படுகிற முற்பகுதி,* த்வத் அர்ச்சாவிதிம் உபரி—*தேவரீருடைய திருவாராதனமுறையைச் சொல்லும் வழியில்,* பரிக்ஷீயதே—*தலைக்கட்டுகின்றது.* ஊர்த்வ: பாக:—*ப்ரஹ்மகாண்டம் எனப்படும் பிற்பகுதியாகிய உபநிஷத்பாகம்,* த்வத் ஈஹா குண விபவ: பரிஜ்ஞாபநை:—*தேவரீருடைய சேஷ்டிதங்கள், குணங்கள், செல்வங்கள், ஆகிய இவற்றை விளங்கத் தெரிவிப்பதாலே,* த்வத் பத ஆப்தௌ—*தேவரீருடைய திருவடிகளை*

அடைவதில். (பரிக்ஷீயதே)-தலைக்கட்டுகின்றது. ப₄கவந்—எம்பெருமானே! ஸர்வை: சவேதை:—"(பூர்வோத்தரபாகரூபமான) எல்லா வேதங்களாலும். அஹம்—நானே. வேத்₃ய: இதி—அறியப்படுபவன்" என்று, ஸ்வேந-தேவரீர் தாமே, வ்யாசகர்த்₂ச—அருளிச்செய்தும் வைத்தீரன்றோ.

அவதாரிகை:—ஈஶ்வரன் அநுமாநப்ரமாணஸித்₃த₄ன் என்று சொல்லுகிற வாதி₃பக்ஷப்ரதிக்ஷேபத்தைப் பண்ணிக்கொண்டு, ஸபரிகரமான க்ருத்ஸ்நவேத₃மே இவ்விஷயத்தில் ப்ரமாணமென்றும், பூர்வோத்தரப₄ாக₃ங்கள் இரண்டிலும் அவனே ப்ரதிபாத்₃யன் என்றும் சொல்லி, இவ்வர்த்தத்தில் ஸ்ரீகீ₃தோக்தமான ப₄க₃வத்₃வசநத்தையும் மூதலிக்கிறார்.

வ்யா:-அதில் முற்பட வேத₃ப்ராமாண்யம் உண்டாகிலிறே இவ்விஷயத்தில் ப்ரமாணமாவது? என்னில்; அதுமுற்பட முன்னம் ஸூத்₃ரூட₄ப்ரமாணம் என்கிறார். (ஆதெ₃ள) ப₄க₃வத்ஸ்வரூபரூப விப₄வாராத₄நாதி₃களை அகல இட்டுப்

ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2–19)

அவதாரிகை:—ஈச்வரன் அநுமானப்ரமாணத்தாலே அறியப்படுபவன் என்று கூறும் வைசேஷிகமதத்தைத் தள்ளிக்கொண்டு, அங்கங்கள் உபாங்கங்களோடு கூடிய வேதம் முழுவதுமே பகவத் விஷயத்தில் ப்ரமாணமென்றும், வேதத்தின் பூர்வபாகமான கர்மகாண்டத்திலும், உத்தரபாகமான உபநிஷத்பாகத்திலும் சொல்லப்படுபவன் ஈச்வரனே என்றும் சொல்லி, இவ்விஷயத்தில் ப்ரமாணமாக ஸ்ரீ கீதையிலுள்ள பகவத்வசனத்தையும் காட்டுகிறார் கூரத்தாழ்வான் திருக்குமாரரான பராசரபட்டர் இந்த ச்லோகத்தில்.

வ்யா :—அதில் முதன்முதலில், "வேதத்திற்கே ப்ராமாண்யமுண்டானாலன்றோ வேதம் ஈச்வரவிஷயத்தில் ப்ரமாணமாக முடியும்" என்னும் ஐயத்தை நீக்கிக்கொண்டு, "முதன்முதலில் வேதம் உறுதியான ப்ரமாணம் என்கிறார்:—(முதலில் வேதங்கள் ப்ரமாணம்) பரமபுருஷனுடைய ஸ்வரூபம், ரூபம், விபூதிகள் (செல்வங்கள்), ஆராதனங்கள் முதலானவற்றை விஸ்தாரமாக வைத்துப்பேசி வாக்கியங்களாலும், யுக்திகளாலும் நிரூப்ப்பதைக்

பேசி, வாக்யதர்க்கங்களாலே உபபாதி3க்கக்(கொ)ண்டு, 'இது உபபாதி3த்தபடி அழகிது; ப்ரமாணமாகப் பெற்றிலோம்' என்று இழவுபடவேண்டாதபடி, க்ருத்ஸ்நவேத3மும்முற்பட ஸாக்3ருட4ப்ரமாணம் என்கிறார். (ப்ரமாணம்) ஸம்யக்கான ப்ரமிதிக்கு ஸாதனமிறே ப்ரமாணமாவது; அஸம்யக்த்வஹேது ப்4ரமவிப்ரலம்ப4ாதிகாரணதோ3ஷமும், 'நேத3ம்' இத்யாதி3பா3த4கப்ரத்யயமுமிறே. காரணாநபேக்ஷமுமாய், அதுதான் அபௌருஷேயமுமாகையாலே, காரணதோ3ஷபா3த4கப்ரத்யயங்களில்லையென்றிட்டு ப்ரமாணமாகக்கடவது.

இப்படி ப்ரமாணமாகிறது; இப்ராமாண்யத்துக்கு ஆலம்ப3நவ்யக்திகள்தான் எது? சக்ஷுராதி3கரணங்களோ?

காண்பார், "நிரூபித்திருக்கும்விதம் அழகாகத்தானிக்கிறது; ஆயினும் ப்ரமாணமாயில்லையே!" என்று குறைபடவேண்டாதபடி வேதம் முழுவதுமே முதலில் மிகவுறுதியான ப்ரமாணமாயிராநின்று என்கிறார். (ப்ரமாணம்) நல்ல அறிவு 'ப்ரமிதி' எனப்படுகிறது; அந்த ப்ரமிதியாகிற நல்லறிவுக்கு ஸாதநமாயிருப்பது 'ப்ரமாணம்' எனப்படுகிறது. உலகிலுள்ள மற்ற சப்தராசிகளுக்கு இரண்டு வகையான குற்றமுண்டு:— (1) அந்த சப்தங்களைச் சொன்னவரின் இருள் துயக்கு மயக்கு மறப்புக்களாகிற காரண தோஷத்தாலே அவை தீய அறிவை விளைப்பதுமுண்டு. (2) காமாலைக் கண்ணனொருவன் 'பால் மஞ்சள்' என்று ஒருவாக்கியத்தைச் சொன்னால், நல்ல கண்ணையுடையவன் 'பால் மஞ்சளன்று; வெள்ளையே' என்று அறிவதைக் காண்கிறோம். இங்கு 'பால் மஞ்சள்' என்றும் வாக்கியத்தை பாதிக்கும் நல்லறிவு இருக்கிறதாதையாலே, 'பால் மஞ்சள்' என்னும் சப்தம் தீய அறிவை விளைப்பது என்னும் குற்றமுள்ளதாகிறது. இவையிரண்டிலிருந்தும் காரணதோஷம், பா3த4கப்ரத்யயம் என்னும் இரண்டு ஹேதுக்களாலே சப்தங்கள் குற்றமுள்ளவையாகின்றன என்று காண்கிறோம். வேதமாகிற சப்த3ராசியைப் பார்த்தால் அபௌருஷேயமான அதைச் சொன்னவர் ஒருவருமில்லையாகையாலே காரணதோஷமில்லை. வேதத்தில் சொல்லப்பட்ட எந்த அர்த்தத்தையும் 'இது இப்படியில்லை' என்று எவரும் எக்காலத்திலும் அறிவதுமில்லை; ஆகையால் பா3த4கப்ரத்யயமுமில்லை. ஆகையால் வேதங்கள் ப்ரமாணமாகவேயிருக்கின்றன.

வேதங்கள் ப்ரமாணமாகட்டும்; ப்ரத்யக்ஷத்திற்குப்போலே இந்த ப்ராமாண்யத்திற்கும் ஆலம்பநவ்யக்திகள் ப்ராமாண்யத்திற்கு ஆதாரமா

என்னில்: (வேதா3:) காசதிமிராதி3தோ3ஷஸம்பா4வனையுமுடைத்தாய், அநித்யங்களுமான அவையன்றியே. **“वाचा विरूप नित्यया”** (வாசா விருப நித்யயா) என்றும். **“अनादिनिधना ह्येषा वागुत्सृष्टा स्वयंभुवा”** (அநாதி3நித4நா ஹ்யேஷா வாகு3த் ஸ்ருஷ்டா ஸ்வயம்பு4வா) என்றும் சொல்லுகிறபடியே. அநாதி3நித4நாவிச்சி2ந்நஸம்ப்ரதா3யமாய், நித்யநிர்த்தோஷமாய். ப்4ரமவிப்ரலம்பா4தி3 தோ3ஷக3ந்த4ரஹிதமான வேதங்கள். (வேதா3:) “வேத3யதி” என்கிற வ்யுத்பத்தியாலே. ஸவிபூ4திகனான ப4க3வானுக்கு ப்ரதிபாத3கதயா ப்ரமாணமாகிறது. “வேத3யதி” என்று இது பிறரை அறிவிக்கையாவதென்? “யோ பு3த்3த்4யதே ஸ பராந் போ3த4யதி” என்று தானறிந்தால், பின்பல்லவோ பிறரை அறிவிப்பது;

யிருக்கும் பதார்த்தங்கள்) உண்டா? உண்டாகில் அவை எவை? ப்ரத்யக்ஷ ப்ராமாண்யத்திற்குப்போலே கண் முதலிய இந்திரியங்கள்தான் வேதப்ராமாண்யத்திற்கும் ஆலம்பநவ்யக்திகளோ? எனில்: 1. (வேதங்கள்) காசம் திமிரம் முதலான குற்றங்கள் ஏற்பட இடமுடையவையாய், அழிவுடையவையான அந்தக் கண் முதலான இந்திரியங்கள் இந்த சப்தப்ராமாண்யத்திற்கு ஆலம்பநவ்யக்திகளன்று. “அழகிய உருவமுள்ளவனே! நித்யமான வாக்காகிற வேதத்தாலே (நீ சொல்லப்படுகிறாய்)” [யஜு-கா 2-6-2-2] என்றும், “ஆதியந்தமற்ற இந்த வேதமாகிற வாக்கு தானேயுண்டான பரமாத்மாவாலே வெளிவிடப்பட்டது” [பார-சாந்தி 231-5] என்றும் சொல்லுகிறபடியே, முதலும் முடிவுமில்லாததாய் இடையறாததான சிஷ்யாசார்ய ஸம்ப்ரதாயத்தையுடையதாய், எப்போதும் குற்றமற்றிருப்பதாய், இருள் துயக்குமயக்கு மறப்புக்களாகிற குற்றங்களின் நாற்றமும் அற்றதான வேதங்களே இந்த சப்தப்ராமாண்யத்திற்கு ஆலம்பநவ்யக்திகளாகும். 2. (வேதங்கள்) “வேத3யதி–இதி வேத3:” [அறிவிக்கிறதாகையாலே வேதமாகிறது] என்கிற வ்யுத்பத்தியாலே உபயவிபூதிகளோடுகூடிய பகவானை அறிவிப்பதாகையாலே பகவத்விஷயத்தில் ப்ரமாணமாகிறது. “வேத3யதி” என்று இது பிறரை அறிவிப்பது எப்படி? “எவன் தான் அறிகிறானோ அவனே பிறரை அறிவிக்க முடியும்” என்று தான் அறிந்தபிறகல்லவோ பிறரை அறிவிப்பது.

''**नेति नेति**'' (நேதி நேதி) என்றும்; ''**क इत्था वेद**'' (க இத்த$_2$ா வேத$_3$) என்றும், ''**यतो वाचो निवर्तन्ते**'' (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்றும், ''**यतो न वेद मनसा सहैनमनुप्रविशन्ति**'' (யதோ ந வேத$_3$ மநஸா ஸஹைநமநுப்ரவிஶந்தி) என்றும் சொல்லுகிறபடியே, தானகப்பட நெஞ்சாலுங்கூட அறியமாட்டிற்றில்லையென்று சொல்லச்செய்தே, பிறரை அறிவிக்கும்படியென்? என்னில்: ஒன்றை அறிகையாவது,—வஸ்து இருந்தபடியே அறிகையிறே; இங்கும், ''**सत्यं ज्ञानमनन्तं ब्रह्म**'' (ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்$_3$ரஹ்ம) என்றும், ''**बृहति बृंहयति तस्मादुच्यते परंब्रह्म**'' (ப்$_3$ருஹதி ப்$_3$ரும்ஹயதி தஸ்மாது$_3$ச்யதே பரம் ப்$_3$ரஹ்ம) என்றும், ''**स्वरूपेण गुणैश्च यत्रानवधिकातिशयं**'' (ஸ்வரூபேண கு$_3$ணைஶ்சயத்ராநவதி$_4$காதிசயம்) என்றும், ''**तवानन्तगुणस्यापि**'' என்றும், ''**आनन्त्यात् प्रथमो राशिः**'' (ஆநந்த்யாத் ப்ரத$_2$மோ

''(இப்பரம்பொருள்) இப்படிப்பட்டதல்ல; இப்படிப்பட்டதல்ல'' [ப்ருஹ 4-3-6] என்றும், ''பரம்பொருள் இப்படிப்பட்டது என்பதை யாரறிவார்?'' [கட 1-2-25] என்றும், ''மனத்துடன் கூடிய வேதவாக்குகள் எந்தப்பரம்பொருளை அறியமுடியாமல் திரும்புகின்றனவோ''[தை-ஆந 9-1] என்றும், ''யதோ ந வேத$_3$ மநஸா ஸஹைநமநுப்ரவிசந்தி ததை$_2$வ மௌநம்'' [ ] [மனத்துடன் கூடிய வேதவாக்குகள் இவனை அறியமுடியாமையால் மௌனத்தை ஏற்றுக்கொள்கின்றன] என்றும் சொல்லுகிறபடியே வேதமாகிற தானுங்கூட நெஞ்சாலும் அறியமுடியவில்லை என்று சொல்லும்போது, இது பிறரை எப்படி அறிவிக்கமுடியும்? எனில்: ஒன்றை அறிகையாவது,– அது எப்படியுள்ளதோ அப்படியே அறிகையன்றோ. இங்கும், ''விகாரமற்றதாகவும், ஞானமாகவும், அளவற்றதாகவுமிருப்பது ப்ரஹ்மம்'' [தை-ஆந-1] என்றும், ''தான் பெரிதாயிருக்கையாலும், பிறரைப் பெரியவராக்குகையாலும் பரப்ரஹ்மம் எனப்படுகிறது'' [அதர்வசிரஸ்-4] என்றும், ''ஸ்வரூபத்தாலும், குணங்களாலும் எங்கு எல்லையற்ற மேன்மையுள்ளதோ அப்பொருளே ப்ரஹ்மசப்தத்திற்கு முக்கியார்த்தமாகும்'' [ஸ்ரீபாஷ்யம் ஜிஜ்ஞாஸாதிகரணம் ஆரம்பம்] என்றும், ''கணக்கற்ற குணங்களை உடையவனாயினும் உனக்கு ஆறுகுணங்களே முக்கியமானவை'' [விஷ்ணுதர்மம் ஷாட்குண்யவிவேகம்]; என்றும், ''ஸங்க்$_2$யாதும் நைவ சக்யந்தே கு$_3$ணா தோ$_3$ஷாச்ச சார்ங்கி$_3$ண:

ராஶி:) என்றும், "अनवधिकातिशयासङ्ख्येयकल्याणगुणगणः" (அந
வதி4காதிசயாஸங்க்2யேய கல்யாணகு3ணக3ண:) என்றும்
சொல்லுகிறபடியே வஸ்து, ஸ்வரூபகு3ணங்களால் அபரிச்
சி2ந்நமாகையாலே, அபரிச்சிந்நம் என்று அறிகையிறே.
அபரிச்சி2ந்நத்தைப் பரிச்சி2ந்நமென்று அறிகையாகிறது,
நீலத்தைப் பீதமென்கிறமாத்ரமிறே; அபரிச்சி2ந்நவஸ்துவை,
அபரிச்சி2ந்நமென்றறிகையால், ஸ்வஜ்ஞாநத்துக்கும் குறை
யில்லை; பரஜ்ஞாநத்திற்கும் குறையில்லை. வேதபுருஷன்
தானே "वेदाहमेतं पुरुषं" (வேத3ாஹமேதம் புருஷம்) என்று,
'இவ்வஸ்துவை அறிவேன்' என்றாய், அறிந்தபடியென்?
என்ன, "महान्तं" (மஹாந்தம்) என்று, அபரிச்சி2ந்நனென்று
அறிந்தேன் என்றானிறே. வைதி3காக்3ரேஸரரும், "अहं वेद्मि
महात्मानं"(அஹம்வேத்3மிமஹாத்மாநம்) என்றும், "येच वेदविदो विप्रा

ஆநந்த்யாத் ப்ரத2மோ ராசி: அப4ாவாதே3வ பச்சிம:" [சார்ங்கமென்னும் வில்லாண்டதேவனுடைய குணங்களும் தோஷங்களும் எண்ண இயலாதவை. முற்பட்டதான குணங்கள் எல்லையில்லாதவையாகையாலே அவற்றை எண்ணிமுடியாது. பிற்பட்டவையான தோஷங்கள் முதலிலே இல்லாமையாலே அவற்றையும் (விரலிட்டு) எண்ணமுடியாது.] என்றும், "எல்லையற்ற மேன்மையையுடைய கணக்கற்ற கல்யாணகுணக்கூட்டங்களை உடையவன்" ["உயர்வறவுயர் நலமுடையவன்" என்றதற்கு மொழி பெயர்ப்பாக ஆளவந்தார் அருளிய சந்தை] என்றும் சொல்லுகிறபடியே இப்பரம்பொருள் ஸ்வரூபகுணங்களால் அளவற்றதாகையாலே இதை அளவிடமுடியாதது என்றே அறியமுடியும். அளவிடமுடியாததை அளவுள்ளதாக அறிவது நீலநிறத்தை மஞ்சள் நிறமாக அறிவது போன்றதேயன்றோ. அளவிடவொண்ணாத இப்பரம்பொருளை அளவிட வொண்ணாதது என்றே வேதபுருஷன் அறிகையாலே தான் அறிவதிலும் குறையில்லை; பிறரை அறிவிப்பதற்கும் குறையில்லை. "வேத்தி-வேத3யதி இதி வேத3:" [தான் அறிகிறபடியாலும், அறிவிக்கிறபடியாலும் வேதம்] என்னும் இரண்டு வ்யுத்பத்தியாலும் கிடைக்கும் இரண்டு பொருள்களும் பொருந்தும். வேதபுருஷன்தானே "நான் இந்தப்புருஷனை அறிகிறேன்" [பு-ஸூ] என்று கூறினவுடன், அறிந்தவிதம் எப்படி? என்னும் கேள்வி யெழ, "பெரியோனை" [பு-ஸூ] என்று அளவிடவொண்ணாதபடி பெரியவன் என்று அறிந்தேன் என்றானன்றோ. வைதிகர்தலைவரான ரிஷிகளும்

ये चाध्यात्मविदो जनाः। ते वदन्ति महात्मानं'' (யே ச வேத$_3$விதே$_3$ர் விப்ரா யே சாத்$_4$யாத்மவிதே$_3$ா ஜநா:। தே வத$_3$ந்தி மஹாத்மாநம்) என்றார்களிறே. இவற்றை உபப்$_3$ரும்ஹித்த ப$_4$க்தர்களும், ''அறிந்தனவேதம்'' என்றாய், அறிந்தபடியென்? என்ன, ''அரும்பொருளாதல்'' என்றார்களிறே. நிஷேத$_4$ வாக்யங்கள் தன்னிலும், **''नेति नेति''** (நேதி நேதி) என்றும், **''अप्राप्य मनसा सह''** (அப்ராப்ய மநஸா ஸஹ) என்றும் மநுஷ்யானந்தம் தொடங்கி, ப்$_3$ரஹ்மாநந்த$_3$த்தளவும் ஒன்றுக்கொன்று மேல் அவதி$_4$யைப் பேசிக்கொடுபோந்து, மேல் ஓர் அவதிகாணாமையாலே, 'இவ்வளவு' என்கிற இயத்தாராஹித்யத்தைப்பற்றச் சொன்னவித்தனைபோக்கி, நேராகத் தத்$_3$விஜ்ஞானமில்லை என்றதன்றே. இப்படித் தான் அறிந்து பிறரையும் அறிவிக்கிறதுதான் ஒன்றிரண்டோ? என்னில்:

''நான் ராமனைப் பெரியவன் என்று அறிகிறேன்'' [ரா-பா 19-14] என்றும், ''வேதமறிந்த அந்தணர்களும், ஆத்மஜ்ஞானமுள்ள ஞானிகளும், கண்ணனைப் பெரியோன் என்று கூறுகின்றனர்'' [பார-ஆர 71-123] என்றார்களன்றோ. இவற்றை விளக்கிய ஆழ்வார்களும் ''அறிந்தன வேத அரும்பொருள் நூல்கள்'' [திருவாய் 9-3-3] என்று கூறியவுடன், அறிந்தபடியெப்படி? என்னும் கேள்வியெழ, ''அறிந்தன கொள்க அரும்பொருளாதல்'' [திருவாய் 9-3-3] என்று அளவிட்டு அறியமுடியாதவனென்றோ அறிந்தன என்றனரன்றோ. அறியமுடியாது என்று நிஷேதிக்கும் வாக்கியங்களிலும் ''(பரம்பொருள்) இப்படிப்பட்டதில்லை; இப்படிப்பட்டதில்லை'' [ப்ருஹ 4-3-6] என்றும், ''மனத்தோடு கூடிய வாக்குகள் எந்தப்பரம் பொருளை அடையமுடியாமல் திரும்புகின்றனவோ'' [தை-ஆந 9-1] என்றும் மனிதரின் ஆநந்தத்தில் தொடங்கி, ப்ரஹ்மாநந்தம் வரையிலும் ஒன்றுக்கொன்று மேலான எல்லைகளைக் கற்பித்துக்கொண்டு போந்து ப்ரஹ்மாநந்தத்துக்கும்மேலே ஓர் எல்லை இல்லாமையாலே, அந்த ப்ரஹ்மாநந்தத்தை மனுஷ்யானந்தஸ்தானத்தில் வைத்து மறுபடியும் மேலே மேலே போய்த் திரும்பித்திரும்பிக் காலமெல்லாம் ஆனந்தத்தைப் பெருக்கிக்கொண்டுபோந்தாலும் அநந்தகாலத்திலும் ப்ரஹ்மாநந்தத்தை அளவிடமுடியாது என்று இவ்வளவென்னும் அளவின்மையைச் சொல்லுகின்றனவேயொழிய, நேரே ப்ரஹ்மத்தை அறியமுடியாது என்று சொல்லவில்லையே. இப்படித் தானும் அறிந்து, பிறரையும் அறிவிக்கும்

(வேதா₃:) "ऋचो यजूंषि सामानि तथैवाथर्वणानि च" (ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததை₂வாத₂ர்வணாநி ச) என்கிறபடியே, ருக்₃யஜுஸ்ஸாமாத₂ர்வாத்மகமான சதுர்வித₄கோடியிலும் அடைப்புண்டு, "अनन्ता वै वेदाः" (அநந்தா வை வேதா₃;) என்கிறபடியே, காண்வமாத்₄யந்தி₃நாதி₃பே₄த₃த்தாலே அஸங்க்₂யாதமாயிருக்கும். "ये चेमे तपसि स्थिताः" (யே சேமே தபஸி ஸ்தி₂தா:) என்னுமாப்போலே, ஸாக்ஷிகளத்தனையும் சொல்ல ப்ரமாணதா₃ர்ட்₄யத்துக்கு உறுப்பென்றிருக்கிறார். "एकः सन्दिग्धे कार्ये वस्तुनि" (ஏக: ஸந்தி₃க்₃தே₄ கார்யே வஸ்துநி) என்று ஒருத்தன் உபபாத₃கனானபோதிறே; "ज्ञानादसन्निकृष्टेऽर्थे विज्ञानं" என்றும், "अप्राप्ते हि शास्त्रमर्थवत्" (அப்ராப்தே ஹி ஶாஸ்த்ரமர்த்த₂வத்) என்றும் சொல்லுகிறபடியே, ப்ரமாணாந்தராவிஷயமான ப₄க₃வத்₃விஷயத்தில் ப்ரமிதிஜநகமாம்போது, கார்யார்த்த₂த்தோடு, பரிநிஷ்பந்நவஸ்துவோடு

வேதம்தான் ஒன்றிரண்டோ? என்னில்: 3. (வேதங்கள்) "ருக்குகளும், யஜுஸ்ஸுக்களும், ஸாமங்களும், அதர்வணங்களும்" [நாரதீயம் 1-10] என்கிறபடியே ருக்யஜுஸ்ஸாமாதர்வணங்களாகிற நாலுவிதமான வகுப்புக்களிலும் சேர்ந்து, "வேதங்கள் அநந்தமானவை" [காடகம் 1-11] என்கிறபடியே காண்வம், மாத்₄யந்திநம் முதலான பேதங்களாலே எல்லையற்றதாயிருக்கும். "தவத்தில் நிலைநிற்கும் இந்தத் தபஸ்விகளும் அறிவார்கள்" [பா-பா 19-14] என்றதுபோலே ஸாக்ஷிகளை அதிகப்படுத்தப்படுத்த ப்ராமாண்யம் உறுதிப்படும் என்று நினைக்கிறார். "ஒருகாரியம் செய்யும்போது ஒருவனுயிருந்தால் ஸந்தேஹிக்கிறான்" என்கிற நியாயத்தின்படி ஒருவனுயிருந்து நிரூபித்தாலன்றோ ஸந்தேஹமுள்ளது. இங்கு வேதங்கள் பலவாகையாலே ஸந்தேஹமில்லை என்று கருத்து. "(ப்ரத்யக்ஷம் அநுமாநம் என்கிற மற்ற) அறிவுகளால் அறியப்படாத விஷயத்தில் சாஸ்த்ர ஜ்ஞானம் (பயன்படுகிறது)" [ ] என்றும், "மற்ற ப்ரமாணங்களால் அறியப்படாத விஷயங்களிலன்றோ சாஸ்திரம் பயனுடையதாகிறது" [ ] என்றும் கூறுகிற நியாயத்தின்படி ப்ரத்யக்ஷம் அநுமானம் என்னும் மற்ற ப்ரமாணங்களால் அறியப்படாத பகவத்விஷயத்தில் சாஸ்திரமே ப்ரமாணமாகிறது. சிலர் சாஸ்திரம் "அதைச்செய், இதைச்செய்" என்றதுபோன்ற கார்யார்த்தத்தில் ப்ரமாணமேயொழிய, ஸித்தவஸ்துவான ப்ரஹ்மத்தை அறிவிக்கமாட்டாது

வாசியற போ$_3$த$_4$ஜநநஶக்தமான வேத$_3$மேயாகக்கடவது. வ்யாப்தியை உபஜீவிக்கிற அநுமானத்தையிட்டு ஸாதி$_4$க்கும்போது வ்யாப்திஸித்$_3$த$_4$மாய், த்$_3$ருஷ்டாந்தக$_3$தமான கர்ம வஶ்யத்வாதி$_3$கள் ஈச்வரனுக்கு ப்ரஸங்கிப்பதும் செய்யும். இவனுக்கு ஸஜாதீயமாயிருக்கும் த்$_3$ருஷ்டாந்தமுண்டாகையில். "न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते" (ந தத்ஸமஶ்சாப்$_4$யதி$_4$கஶ்ச த்$_3$ருச்யதே) என்றும், "न त्वत्समोऽस्त्यभ्यधिकः कुतोऽन्यो लोकत्रये-

---

என்றனர். "உனக்குப்பிள்ளை பிறந்தான்" என்பதுபோன்ற விடங்களில் ஸித்தவஸ்துக்களிலும் சப்தம் ப்ரமாணமாகிறதாகையாலே, வேதமும் ஸித்தவஸ்துவான ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கும் ப்ரமாணமாகக்கூடும் என்று ப்ரஹ்மஸூத்ரத்தில் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் நிரூபிக்கப்பட்டது. இப்படிப் பட்ட ப்ரஹ்மவிஷயத்தில் வேதங்கள் ஒன்றே ப்ரமாணம். அநுமானமும் ஈச்வரவிஷயத்தில் ப்ரமாணமாகக்கூடாதோ? எனில்: "பூமிமுதலானவை ஒரு கர்த்தாவை உடையவை; கார்யப்பொருள்களாயிருக்கையாலே; கடம் முதலான கார்யப்பொருள்கள் குயவனைக் கர்த்தாவாக உடையவையா யிருப்பதுபோலே" என்னும் அனுமானத்தைக்கொண்டு ஈச்வரனை ஸாதிக்கப்பார்த்தால், அதில் இரண்டு தோஷங்கள் வருகின்றன:— (1) முற்கூறிய அனுமானம் "எவையெவை கார்யமாயிருக்கின்றனவோ அவை யெல்லாம் கர்த்தாவை உடையவை" என்னும் வ்யாப்தியை உயிர்நாடி யாகக்கொண்டது. கார்யப்பொருளாயிருக்கும் கடம் முதலானவையெல்லாம் குயவன் முதலான கர்த்தாவை உடையவையாயிருப்பதை உலகத்தில் நாம் காண்கிறோமன்றோ, ஆனால், இப்படிக் காணும்போது குயவன் முதலானோர் கர்மத்திற்கு வசப்பட்டவர்களாகவும், அற்பமான ஜ்ஞானசக்திகளை உடையவர்களாகவுமே இருப்பதையும் காண்கிறோம். ஆகையால் இந்த வ்யாப்தியை முன்னிடும் அனுமானத்தினால் ஸாதிக்கப்படும் ஈச்வரனும் கர்மவசப்பட்டவனாகவும், அற்பமான ஜ்ஞானசக்திகளை உடையவனாகவும் ஆகவேண்டிவரும். அநுமானத்தினால் ஈச்வரனை ஸாதிக்கும் நையாயிக வைசேஷிகர்களும் ஈச்வரனைக் கர்மவசப்படாதவனாகவும், அளவற்ற ஜ்ஞான சக்திகளை உடையவனாகவுமே, ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால் அவர் களுக்கும் இது அநிஷ்டமே (2) மேலும், இப்படி அநுமானத்தைக் கொண்டு ஈச்வரனை ஸாதிக்கும்போது, ஈச்வரனுக்கு த்ருஷ்டாந்தமாகக் குயவன் முதலானோரைச் சொல்லவேண்டியிருக்கிறது. "அவனை ஒத்தாரும் மிக்காரும் காணப்படவில்லை" [ச்வே 6-8] என்றும், "மூவுலகிலும்

ऽप्यप्रतिमप्रभाव'' (ந த்வத்ஸமோऽஸ்த்யப்1யதி1க: குதோऽந்யோ லோகத்ரயேऽப்யப்ரதிமப்ரப1ாவ) என்றும், ''नास्ति नारायणसमो न भूतो न भविष्यति'' (நாஸ்தி நாராயணஸமோ ந பூ1தோ ந ப1விஷ்யதி) என்றும் ஸமாப்1யதி1கநிஷேத4ம் பண்ணுகிற ப்ரமாணங்களுக்கு நைரர்த்த2க்யமும் ப்ரஸங்கிக்கும். ஆகையால் இவ்விஷயத்தில் ப்ரமாணமாம்போது வேதமேயாகக் கடவது. வேதந்தான் நிரபேக்ஷமாக ப்3ரஹ்மணி ப்ரமாணமாயிருக்கிறபடியாலே, உக்ததோ3ாஷங்கள் வாராது.

ஆனால், ''वेदोऽखिलो धर्ममूलं स्मृतिशीले च तद्विदाम्'' (வேதோ3ऽகி2லோ த4ர்மமூலம் ஸ்ம்ருதிஶீலே ச தத்3விதா3ம்) என்றும், ''श्रुतिः स्मृतिः सदाचारः'' (ஶ்ருதி: ஸ்ம்ருதி: ஸதா3சார:) என்றும் ப்ருத2கு3பாத்தமாய், ஸஹபடி2தமான ஸ்ம்ருத்யாதி3

ஒப்பற்ற பெருமையுடையவனே! உன்னையொத்தவரே இல்லை; மிக்கவனொருவன் எப்படியிருக்கமுடியும்?'' [கீதை 11-43] என்றும் ''நாராயணனை ஒத்தவரில்லை; இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை''[ஹரிவம்சம் 3-32] என்றும் சாஸ்திரங்கள் ஸர்வேச்வரனுக்கு ஒத்தவரில்லை என்று உத்கோஷிக்கின்றன. குயவன் முதலான த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு ஈச்வரனை ஸாதிக்கும் பக்ஷத்தில் இந்த வாக்கியங்கள் பொருளற்றவையாகும். ஆக, அநுமானத்தால் ஈச்வரனை ஸாதிக்கப்பார்த்தால் இந்த இரண்டு தோஷங்களும் வருகையாலே வேதங்கள் மாத்திரமே பகவத்விஷயத்தில் ப்ரமாணமாகும். வேதம் ப்ரஹ்மவிஷயத்தில் ப்ரமாணமாகும்போது, அநுமானம் போலே வ்யாப்தி த்ருஷ்டாந்தம் முதலானவற்றை அபேக்ஷிப்பதில்லையாகையாலே, வேதப்ரமாணவாதிகளான வைதிகர்களின் பக்ஷத்தில் கீழ்ச்சொன்ன தோஷங்கள் வரமாட்டா.

ஆனால், ''(1) வேதம் முழுவதும், (2) வேதமறிந்தவர்களின் ஸ்மிருதிகளும் (3) வேதமறிந்தவர்களின் ஆசாரங்களும் தர்மத்திற்கு மூலமாகின்றன.'' [மநு 2-6] என்றும், ''வேதம், ஸ்மிருதி, நல்லோர்களின் ஆசாரம் என்னும் மூன்றும் (தர்மவிஷயத்தில்) பரமாணங்கள்'' [யாஜ்ஞவல்க்யஸ்மிருதி 1-7] என்றும் வேதத்தைக்காட்டிலும் தனிப்ரமாணமாக எடுக்கப்பட்டவையாய், வேதத்தோடு கூடப்படிக்கப்பட்டவையான ஸ்மிருதி, ஸதாசாரம் ஆகிய ப்ரமாணங்களால் பயனென்ன? வேதமே ப்ரஹ்ம

க்ருத்யமென்? வேதத்தாலே சரிதார்த்த$_2$மாகில், ஸ்ம்ருத்யாதி$_3$களுக்கு க்ருதகரத்வாதி$_3$களாலே ஆநர்த்த$_2$க்யமும், இவை தான் ஸமுச்சித்ய ப்ரமாணமாகிறதாகில்,கேவல வேத$_3$த்தினுடைய ப்ராமாண்யத்துக்கு வைகல்யமும், மூலமான வேதத்தினுடைய உபஜீவ்யத்வஹானியும் வாராதோ? என்னில்: (ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை: புராணைரித்யாதி$_3$) "धर्मे प्रमीयमाणे तु वेदेन करणात्मना। इतिकर्तव्यताभागं मीमांसा पूरयिष्यति॥" (த$_4$ர்மே ப்ரமீயமாணே து வேதே$_3$ந கரணாத்மநா। இதிகர்த்தவ்யதாப$_4$ாக$_3$ம் மீமாம்ஸா பூரயிஷ்யதி॥) என்று ப்ரதிபாத்$_3$யார்த்த$_2$த்தில் ப்ரமிதிஜநகமாம்போது, வேத$_3$மே கரணமாயிருக்கச்செய்தே, பரிநிஷ்பந்நமான கரணத்துக்கு இதிகர்த்தவ்யதாரூபேண உபகாரமாகையாலே குறையில்லை. இதுக்கு உபகாரமாமிடத்தில் ஸ்ம்ருதிகளென்ன, இதிஹாஸ புராணங்களென்ன, ந்யாயமென்ன இவற்றில் அந்யதமத்

விஷயத்தில் ப்ரமாணமாகில், ஸ்மிருதி முதலானவை மற்றொரு ப்ரமாணத்தால் சொல்லப்பட்டதையே சொல்லுகையால் வீணானவையாகும். இவை மூன்றும் சேர்ந்து ப்ரஹ்மவிஷயத்தில் ப்ரமாணமாகிறதாகில், வேதம் ஒன்றே நிரபேக்ஷமான (வேறொன்றையும் எதிர்பாராத) ப்ரமாணம் என்றது ஒட்டாது. ஸ்மிருதியும் ஸதாசாரமும் வேதத்தை மூலமாகக் கொண்டவை என்று வைதிகர்கள் கூறுவதும் பொருந்தாது. ஆகையால், ஸ்மிருதிஸதாசாரங்கள் எவ்வகையில் ப்ரமாணமாகின்றன எனில், கூறுகிறார் மேலே,– 1. (இதிஹாஸங்களோடு கூடிய புராணங்களோடும் நியாயங்களோடும் கூடிய ஸ்மிருதியானது உபகரிக்கிறது) "வேதமாகிற உபகரணத்தாலே தர்மம் அறியப்படும்போது, அந்த தர்மத்தை இப்படியிப்படி அநுஷ்டிக்கவேண்டும் என்று கூறும் இதிகர்த்தவ்யதைப் பகுதியை மீமாம்ஸை நிறைவேற்றுகிறது" [குமாரிலபட்டரின் காரிகை] என்கிறபடியே அறிவிக்கவேண்டிய அர்த்தத்தில் அறிவை உண்டாக்குவதற்கு வேதமே உபகரணமாயிருந்தபோதிலும், பரிபூர்ணமான அவ்வுபகரணத்துக்கு உதவிசெய்யும் இதிகர்த்தவ்யதாரூபமாயிருந்துகொண்டு ஸ்மிருதிகள், இதிஹாஸபுராணங்கள், ஸதாசாரம் முதலானவை உபகரிக்கின்றனவாகையாலே வேதத்தின் ப்ராமாண்யத்திற்கு ஒரு குறையுமில்லை, வேதத்திற்கு உபகரிக்கும்போது ஸ்மிருதிகளென்ன, இதிஹாஸபுராணங்களென்ன, ந்யாயங்களென்ன இவற்றில் ஒன்று போதாதோ? இவையெல்லாம் எதற்கு?

தாலே அமையாதோ? இவையெல்லாமென்? என்னில்: இவற்றுக்குத் தனித்தனியே க்ருத்யபே$_4$த$_3$முண்டாகையாலே புநருக்தங்களன்று; அதில் ஸ்ம்ருதிகளினுல் வேதத்தில் பூர்வபா$_4$கா$_3$ர்த்த$_2$விஶதீ$_3$கரணமும், இதிஹாஸபுராணங்களினுல் உத்தரபா$_4$கா$_3$ர்த்த$_2$விஶதீ$_3$கரணமும் பண்ணப்படுகிறது. அதில் இதிஹாஸம் ஸௌலப்$_4$யைகபரம்; புராணம் பரத்வைகபரம். "ந்யாயை:" என்று ஶீக்ஷாகல்பவ்யாகரண நிருக்திச்ச$_2$ந்தோ$_3$ஜ்யோதிஷங்களாகிற ஷட$_2$ங்கங்களென்ன, மீமாம்ஸைகளென்ன, இவற்றுக்கும் உபலக்ஷணமாயிருக்கிறது. இந்த ஷட$_3$ங்க$_3$ங்களும், ந்யாயமீமாம்ஸைகளும் வாக்யார்த்த$_2$விசாரமென்ன, வாக்யாங்க$_3$மான பத$_3$வர்ணஸ்வராதி$_3$நிர்ணயமென்ன, இவற்றில் விநியுக்தமாகையாலே உப$_4$யபா$_4$க$_3$த்துக்கும் ஸாத$_4$ரணமாயிருக்கிறது.

எனில்: இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே காரியவிசேஷங்கள் உண்டாகையாலே மூன்றும் வேண்டியவையே. அதாவது:-மநுஸ்மிருதி முதலான தர்மசாஸ்திரங்களால் வேதத்தின் பூர்வபாகமாகிற கர்மகாண்டத்தின் பொருள் விளக்கப்படுகிறது. இதிஹாஸபுராணங்களினுல் உத்தரபாகமாகிற உபனிஷத்துக்களின் பொருள் விளக்கப்படுகிறது. உத்தரபாக விவரணமாக இரண்டெதற்கு? எனில்: அவதாரசரித்திரங்களையே விவரிக்கும் இதிஹாஸம் பரமபுருஷனுடைய ஸௌலப்யகுணத்தையே விவரிப்பது. பகவானுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளையெல்லாம் விவரிக்க ஏற்பட்ட புராணம் பரத்வகுணத்தையே விவரிப்பது. "நியாயங்களோடு" என்று நல்ல யுக்திகளைச் சொன்னது சிக்ஷை, கல்பம், வ்யாகரணம், நிருக்தி, சந்தஸ்ஸு, ஜ்யோதிஷம் எனப்படும் ஆறு அங்கங்களென்ன, (பூர்வபாகத்தை விவரிக்கும்) பூர்வமீமாம்ஸை, (உத்தரபாகத்தை விவரிக்கும்) உத்தரமீமாம்ஸை என்னும் மீமாம்ஸைகளென்ன இவற்றையும் உபலக்ஷணமுறையாலே காட்டுகிறது. இந்த ஆறு அங்கங்களும் நியாயமீமாம்ஸைகளும் வேதவாக்யங்களின் பொருளை நிர்ணயிப்பதற்கும், வேதவாக்யங்களின் அவயவங்களான பதங்களின் ஸ்வரம் வர்ணம் முதலானவற்றை நிர்ணயிப்பதற்கும் ஏற்பட்டவையாகையாலே வேதத்தின் பூர்வபாகம் உத்தரபாகம் என்னும் இரண்டு பாகங்களுக்கும் பொதுவாயிருக்கின்றன.

ஆக, இத்தால்; "पुराणन्यायमीमांसाधर्मशास्त्राङ्गमिश्रिताः। वेदाः स्थानानि विद्यानां धर्मस्य च चतुर्दश॥" (புராணந்யாயமீமாம்ஸா த$_4$ர்மஶாஸ்த்ராங்க$_3$மிஶ்ரிதா:। வேத$_3$ா: ஸ்த$_2$ாநாநி வித்$_3$யாநாம் த$_4$ர்மஸ்ய ச சதுர்த$_3$ஶ॥) என்றும், "अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तरः। पुराणं धर्मशास्त्रं च विद्या ह्येताश्चतुर्दश॥" (அங்க$_3$ாநி வேத$_3$ாஶ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர:। புராணம் த$_4$ர்ம ஶாஸ்த்ரம் ச வித்$_3$யா ஹ்யேதாஶ் சதுர்த$_3$ஶ॥) என்றும். "शिक्षायां वर्णशिक्षा पदसमधिगमो व्याक्रियानिर्वचोभ्याम् छन्दश्छन्दश्चितौ स्याद्गमयति समयं ज्यौतिषं रङ्गनाथ। कल्पेऽनुष्ठानमुक्तं ह्युचितगसितयोर्न्यायमीमांसयोः स्यादर्थव्यक्तिः पुराणस्मृतिषु तदनुगास्त्वां विचिन्वन्ति वेदाः॥" (ஶீக்ஷாயாம் வர்ணஶிக்ஷா பத$_3$ஸமதி$_4$க$_3$மோ வ்யாக்ரியா நிர்வசோப்$_4$யாம் ச$_2$ந்த$_3$ஶ்ச$_2$ந்த$_3$ஶ்சிதௌ ஸ்யாத்$_3$க$_3$மயதி ஸம யம் ஜ்யௌதிஷம் ரங்க$_3$நாத$_2$। கல்பேऽநுஷ்ட$_2$ாநமுக்தம் ஹ்யு

ஆக இவ்வளவால், "புராணம், நியாயம், மீமாம்ஸை, தர்மசாஸ்திரம், ஆறு அங்கங்கள் ஆகிய இப்பத்துடன் கூடிய நாலு வேதங்களாகிய பதினான்கும் வித்யைகளுக்கும், தர்மத்திற்கும் இருப்பிடமான வித்யாஸ்தானங்களாகும்" [யாஜ்ஞவல்க்யஸ்மிருதி 1-3] என்றும், "ஆறு அங்கங்கள், நாலு வேதங்கள், மீமாம்ஸை, நியாயசாஸ்திரம், புராணம், தர்மசாஸ்திரம் ஆகிய இவை பதினான்கு வித்யாஸ்தானங்கள் (கலைஞானங்கள்)எனப்படுகின்றன" [ப்ரஹ்மாண்டபுராணம்—பூர்வபாகம் 35-87; விஷ்ணுதர்மோத்தரத்திலும்] என்றும், "திருவரங்கப்பெருமானே! சிக்ஷையென்கிற வேதாங்கத்தில் அக்ஷரங்களின் உச்சாரணக்ரமம் முதலியவற்றின் சிக்ஷை (செய்யப்பட்டது); வியாகரணம், நிருக்தி என்னும் அங்கங்களாலே பதங்களின் ப்ரக்ருதிப்ரத்யய விபாகம், அர்த்தசிக்ஷை முதலானது (செய்யப்படுகிறது); சந்த:சாஸ்திரமெனும் அங்கத்தில் காயத்ரி, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தீ, த்ரிஷ்டுப், ஜகதீ என்னும் சந்தஸ்ஸுக்களின் ஸ்வருபம் விவரிக்கப்பட்டிருக்கும். சோதிடசாஸ்திரம் என்னும் வேதாங்கம் (வைதிககர்மங்களை அநுஷ்டிக்கவுரிய) காலத்தைத் தெரிவிக்கிறது. கல்பஸூத்ரமெனும் வேதாங்கத்தில் வைதிககர்மங்களை அனுஷ்டிக்கவேண்டிய முறைமை சொல்லப்பட்டது. (வைதிகஸித்தாந்தத்திற்குப்) பொருந்தும்படி பிரயோகிக்கப்பட்ட நியாயமீமாம்ஸாசாஸ்திரங்களிலும், புராணங்களிலும், ஸ்மிருதிகளிலும் (வேதவாக்கியங்களின்) பொருளைப்பற்றிய தெளிவுண்டாகும். கீழ்ச்சொன்ன பத்து சாஸ்திரங்களோடும் கூடிய நாலு

ஙிதக3மிதயோர் ந்யாயமீமாம்ஸயோ: ஸ்யாத3ர்த்த2வ்யக்தி: புராணஸ்ம்ருதிஷு தத3நுக3ாஸ் த்வாம் விசிந்வந்தி வேத3ா:॥) என்றும் சொல்லுகிறபடியே, அங்க3ாதி3ஸஹிதமான வேத3மே ப்ரமாணமென்று சொல்லுகிறது. வேதத்தினுடைய ப்ராத4ாந்யத்தையும் இதரங்களினுடைய அப்ராத4ாந்யத்தையும் பற்றியிறே. (ஸேதிஹாஸை: புராணை: ந்யாயைஸ்ஸார்த்த4ம் ஸ்ம்ருதிருபகுருதே) என்று "बिभेत्यल्पश्रुताद्वेदो मामयं प्रतरिष्यति। इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्॥" (பி3பே4த்யல்பஶ்ருதாத்3வேதே3ா மாமயம் ப்ரதரிஷ்யதி। இதிஹாஸபுராணாப்4யாம் வேத3ம் ஸமுபப்3ரும்ஹயேத்॥) என்கிறபடியே, அஸங்க்யாதமான க்ருத்ஸ்நவேதத்தையும், வேதாந்தத்தையும் கப3ளீகரிக்கைக்கீடான அளவில்லாத மந்த3மதிகள் நம்மை நலியில் செய்வதென்? என்று பயப்படுகிற வேத3ங்களுக்கு உபப்3ரும்ஹணமுக2த்தாலே ப4யநிவ்ருத்தியைப்பண்ணி உபகரிக்கிறதென்றாகவுமாம். ஸ்ம்ருதிஶப்3த3ார்த்த2ந்தான், "ஸ்மர்யதே" என்கிற வ்யுத்பத்தியாலே ஆசார்யமுக2த்தில்நின்றும் அதி4க3தமான வேத3ார்த்

வேதங்களும் தேவரீரைப்பற்றி விசாரிக்கின்றன" [ர-ஸ்த 2-18] என்றும் சொல்லுகிறபடியே ஆறு அங்கங்களோடும், நாலு உபாங்கங்களோடும் கூடிய வேதமே ப்ரமாணமென்று சொல்லுவது வேதத்தின் முக்கியத்தையும் மற்றவை அதற்கு உதவிசெய்பவை மாத்திரமேயாகையால் அவற்றின் அமுக்கியத்தையும் கருத்தில் கொண்டன்றோ. 2. (இதிஹாஸங்களோடு கூடிய புராணங்களோடும், நியாயங்களோடும் கூடிய ஸ்மிருதியானது உபகரிக்கிறது) "அற்பமான கேள்விஞான முடையவனைக்கண்டு வேதமானது 'இவன் என்னைக் கலக்கிவிடுவான்' என்று பயப்படுகிறது. ஆகையால், இதிஹாஸபுராணங்களைக்கொண்டு வேதத்தை விவரிக்க வேண்டும்." [பார-ஆதி 1-293] என்கிறபடியே அளவற்ற வேதம் முழுவதையும், வேதாந்தத்தையும் விழுங்கிச் சீரணிக்கத்தக்க அறிவில்லாத மந்த புத்திகள் நம்மை அபார்த்தம் செய்து விட்டால் என்ன செய்வது? என்று பயப்படுகிற வேதங்களுக்கு, அவற்றின் பொருளை மந்தபுத்திகளுக்கும் தெளிவுபடுத்துவதாகிற உபப்ரும்ஹணத்தைச் செய்வதன் மூலம் பயத்தைப் போக்கி, அவ்வேதத்திற்கு உபகரிக்கிறது என்றும் பொருள் கொள்ளலாம். 'ஸ்ம்ருதி' என்னும் சொல்லின் பொருளாவது:— "ஸ்மர்யதே—இதிஸ்ம்ருதி:" [நினைக்கப்படுகிறதாகையாலே 'ஸ்மிருதி' எனப்

த₂த்தை அந்த வாஸனையாலே நினைத்து ப்ரப₃ந்தீ₄கரிக்கை. இதிஹாஸமாவது-"यो वै वेदांश्च प्रहिणोति तस्मै" (யோ வை வேதா₃ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை) என்கிறபடியே, கூடஸ்த₂னாயிருப்பானொரு ஆசார்யன், ஒரு சிஷ்யனுக்கு உபதேசித்து, அவ்வளவிலே தலைசாய்ந்துபோகையன்றியிலே, "इतिहासे श्रूयते" (இதிஹாஸே ஶ்ரூயதே) என்றும், "तैश्चोक्तं पुरुकुत्साय भूभुजे नर्मदातटे। सारस्वताय तेनापि मम सारस्वतेन च॥" (தைஶ் சோக்தம் புருகுத்ஸாய பூ₄பு₄ஜே நர்மதா₃தடே। ஸாரஸ்வதாய தேநாபி மம ஸாரஸ்வதேந ச॥) என்றும், "विवस्वान् मनवे प्राह मनुरिक्ष्वाकवेऽब्रवीत्। एवं परंपराप्राप्तं" (விவஸ்வாந் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவேऽப்₃ரவீத்। ஏவம் பரம்பராப்ராப்தம்) என்றும் சொல்லுகிறபடியே, அந்த வேதா₃ர்த்த₂த்தை கு₃ருபரம்பரையாலே அவிச்சி₂ந்நஸம்ப்ரதா₃யமாம்படி வர்த்திப்பிக்கை. புராணமாவது-"புராபி நவ:" என்றாய், அநாதி₃யான வேத ஸித்தார்த்தத்தை நூதநமாக ப்ரபந்தீகரிக்கை. ந்யாய

படுகிறது] என்கிற வ்யுத்பத்தியாலே ஆசாரியனிடமிருந்து கற்ற மறைப் பொருளை, அந்த வாஸனையாலே நினைத்துப் பிரபந்தம் செய்கை. இதிஹாஸமாவது :— "எந்தப் பரமாத்மா பிரமனுக்கு வேதங்களை உபதேசிக்கிறாரோ" [ச்வே 6—18] என்கிறபடியே மூலபுருஷனாயிருப்பவனான ஒரு ஆசாரியன் ஒரு சிஷ்யனுக்கு உபதேசித்து அதோடு பரம்பரை முடிந்துபோகாமல், "இதிஹாஸத்தில் கேட்கப்படுகிறது" [ ] என்றும், "நர்மதைக் கரையிலே அவர்களாலே அவ்வர்த்தம் அரசனான புருகுத்ஸனுக்குச் சொல்லப்பட்டது; அவனால் ஸாரஸ்வதனுக்கும், ஸாரஸ்வதனால் எனக்கும் சொல்லப்பட்டது" [வி-பு 1—2—9] என்றும், "சூரியன் இவ்வர்த்தத்தை மனுவுக்குச் சொன்னார்; மனு இக்ஷ்வாகுவுக்குச் சொன்னார். இப்படி சிஷ்யாசார்ய பரம்பரையாக வந்தது இது" [கீதை 4—1,2] என்றும் சொல்லுகிறபடியே அந்த வேதப்பொருளை சிஷ்யாசார்ய பரம்பரையாலே இடையறாத ஸம்பிரதாயத்தை உடையதாம்படி வெளிப்படுத்துகை. "இதி ஹ" [இவ்வண்ணமாகச் சொல்லப்பட்டது] என்று சிஷ்யாசார்ய பரம்பரையாலே வருகையாலே 'இதிஹாஸம்' என்று பெயர் வந்ததென்று கருத்து. புராணமாவது,— "புராபி நவ:" [பழையதாயினும் (என்றும்) புதியதாயிருப்பது] என்னும் வ்யுத்பத்தியாலே, அநாதியான வேதத்திற் சொன்ன பொருளைப் புதியதாக ஒரு நூலிலேயிட்டுச் சொல்லுகை. ந்யாய

மாவது-பூர்வபக்ஷஸித்₃தா₄ந்தயுக்திகளாலே அபார்த்தங்களை ஆராய்ந்து நிஷ்கர்ஷித்துக் கொடுக்கை. ஆக, இப்படி ஸாங்க₃மாயும் ஸசிரஸ்கமாயுமுள்ள க்ருத்ஸ்நவேத₃மும் ப்ரஹ்மப்ரதிபாத₃கமாகையாலே ப்ரமாணம் என்றே சொல்லுகிறது.

அது செய்யும்படியென்? **"अग्नये पथिकृते पुरोडाशमष्टाकपालं निर्वपेत्"** (அக்₃நயே பதி₂க்ருதே புரோடா₃ஶமஷ்டாகபாலம் நிர்வபேத்) என்றும், **"वायव्यं श्वेतमालभेत भूतिकामः"** (வாயவ்யம் ஶ்வேதமாலபே₄த பூ₄திகாம:) என்றும், **"ऐन्द्रं चरुं निर्वपेत्पशुकामः"** (ஐந்த்₃ரம் சரும் நிர்வபேத் பஶுகாம:) என்றும் இத்யாதி₃களாலே அக்₃நீந்த்₃ராதி₃தே₃வதாந்தரங்களையும், தது₃பாஸனங்களையுமன்றோ ப்ரதிபாதி₃க்கிறதாகத் தோற்றுகிறது? என்னில்: (த்வத₃ர்ச்சாவிதி₄முபரி பரிக்ஷீயதே பூர்வபா₄க₃:) அவ்விடத்தில் உன்னையே ப்ரதிபாதிக்கிறது என்கிறார். **"काकस्य कार्ण्यात् शबलः प्रसादः"** (காகஸ்ய கார்ஷ்ண்யாத் ஶப₃ள:

மாவது— பூர்வபக்ஷயுக்திகள், ஸித்தாந்த யுக்திகள் ஆகியவற்றை ஆராய்ந்து அர்த்தத்தை முடிவுகட்டித்தருகை. ஆக, இப்படி அங்கங்களோடும், உபநிஷத்தாகிற தலையான பாகத்தோடும் கூடிய வேதம் முழுதுவதும் ப்ரஹ்மத்தை அறிவிப்பதாகையாலே ப்ரமாணம் என்று இவ்வளவால் சொல்லிற்றுயிற்று.

வேதம் முழுவதும் ப்ரஹ்மத்தை அறிவிப்பது என்று சொன்னது எப்படி? "வழிகாட்டும் அக்னிக்கு எட்டுக்கபாலங்களில் ஸம்ஸ்கரிக்கப்பட்ட புரோடாசத்தை இடவேண்டும்"[யஜு-காண் 2-2-2]என்றும், "செல்வத்தை விரும்புமவன் வாயுவைதேவதையாகக் கொண்ட ச்வேதயாகத்தைச் செய்ய வேண்டும்"[யஜு—காண் 2—1—1] என்றும், "பசுவைவிரும்புமவன் இந்திரனைக்குறித்து அந்ந விசேஷத்தை இடவேண்டும்" [யஜு-காண் 2-2-7] என்றும் இதுமுதலான வாக்கியங்களால் அக்னி, இந்திரன், வாயு முதலான மற்ற தேவதைகளையும் அவற்றைப்பற்றிய உபாஸனங்களையுமன்றோ அறிவிப்பதாகத் தோன்றுகின்றது? என்னில்; (பூர்வபாகம் உன்னுடைய ஆராதனவிதியிலே தலைக்கட்டுகின்றது) முன் எடுத்த வாக்கியங்களும் உன்னையே சொல்லுகின்றன என்கிறார். "காகம் கறுப்பாயிருக்கையாலே, அன்னம் வெள்ளையாயிருக்கிறது" என்பது போலே முன்னுக்குப்பின்

ப்ரஸாத₃:) என்று அக்₃நீந்த்₃ராதி₃தே₃வதா விஶேஷங்களை ப்ரதிபாதி₃யாநிற்க, நம்மை ப்ரதிபாதி₃க்கையாவதென்? என்னில்: "इष्टापूर्तं बहुधा जातं जायमानं विश्वं बिभर्ति भुवनस्य नाभिः" (இஷ்டாபூர்த்தம் ப₃ஹுதா₄ ஜாதம் ஜாயமாநம் விஶ்வம் பி₃ப₄ர்த்தி பு₄வநஸ்ய நாபி₄:) என்றும், "यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत्। यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम्॥" (யத் கரோஷி யத₃ஶ்நாஸி யஜ்ஜுஹோஷி த₃தா₃ஸி யத்। யத் தபஸ்யஸி கௌந்தேய தத் குருஷ்வ மத₃ர்ப்பணம்) என்றும், "ये यजन्ति पितॄन् देवान् ब्राह्मणान् सहुताशनान्। सर्वभूतान्तरात्मानं विष्णुमेव यजन्ति ते॥" (யே யஜந்தி பித்ரூந் தே₃வாந் ப்₃ராஹ்மணாந் ஸஹுதாஶநாந்। ஸர்வபூ₄தாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே॥) என்றும், "अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च" (அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போ₄க்தா ச ப்ரபு₄ரேவ ச) என்றும், "स ब्रह्मा स शिवः सेन्द्रः सोऽक्षरः परमः स्वराट्" (ஸ ப்₃ரஹ்மா ஸ சிவ: ஸேந்த்₃ர: ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட்) என்றும்,

---

முரணுயன்றோ இருக்கிறது இப்பேச்சு, அக்னி முதலான தேவதைகளையே இவ்வாக்கியங்கள் சொல்லுகின்றன என்பது தெளிவாயிருக்க, என்னையே சொல்லுகின்றன என்பதெப்படி? என்று பெரிய பெருமாள் திருவுள்ளமாகக் கூறுகிறார்,— "ஸம்ஸாரசக்கரத்திற்கு நாபி₄போலே ஆதாரமாயிருக்கும் பரமபுருஷன், யாகங்கள் முதலான இஷ்டங்களையும், குளம் வெட்டுதல் முதலான பூர்த்தங்களையும், பலவிதமாக உண்டானவையும், உண்டாகின்றவையுமான எல்லாவற்றையும் தாங்குகிறான்" [தை—நா 1—6] என்றும், "அர்ஜுநு! எதைச் செய்கின்றாயோ, எதை உண்கின்றாயோ, எதை ஹோமம் செய்கின்றாயோ, எதைக் கொடுக்கின்றாயோ, யாதொரு தவத்தைச் செய்கின்றாயோ அதனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்" [கீதை 9—26] என்றும், "பித்ருக்களையும், தேவர்களையும், அக்னிகளோடு கூடிய அந்தணர்களையும் குறித்து எவர்கள் யாகம் செய்கிறார்களோ அவர்கள் எல்லா ஜீவராசிகளுக்கும் அந்தராத்மாவாகிய விஷ்ணுவைக்குறித்தே யாகம் செய்கிறார்கள்" [தக்ஷஸ்மிருதி; பார—சாந்தி 355—41] என்றும், "எல்லா யஜ்ஞங்களையும் அநுபவிப்பவனும், அவற்றுக்குப் பலனளிப்பவனும் நானே" [கீதை 9—24] என்றும், "பிரமனும் நாராயணனே; சிவனும் நாராயணனே; இந்திரனும் நாராயணனே; அழிவற்றவனும் மேலான ஸ்வாதந்திரியமுள்ளவனுமான முக்த புருஷனும் நாராயணனே. (அனைவருக்கும் அவனே ஆத்மா என்று கருத்து)" [தை— நா—11] என்றும்,

"एनमेके वदन्त्यग्निं मनुमन्ये प्रजापतिं। इन्द्रमन्ये परे प्राणं अपरे ब्रह्म शाश्वतम्॥" (ஏநமேகே வத₃ந்த்யக்₃நிம் மநுமந்யே ப்ரஜாபதிம்। இந்த்₃ரமந்யே பரே ப்ராணம் அபரே ப்₃ரஹ்ம ஶாஶ்வதம்) என்றும் ப்ரமாணக₃ணங்கள் உபபாதி₃க்கிறபடியே. ஸமாக்₂யைக்கு பா₃த₄கமான ஶ்ருதிலிங்க₃ப்ரகரணாதி₃யான ப்ரப₃ல ப்ரமாணத்தாலே, தத்தத்ப்ரதே₃ஶாநுகுணமான அவயவஶக்தி

"இந்தப் பரமபுருஷனைச்சில வேதவாக்கியங்கள் அக்னியென்றும், மற்றும் சில வாக்கியங்கள் மநுவென்றும், இன்னம் சில வாக்கியங்கள் பிரஜாபதியென்றும், வேறு சில வாக்கியங்கள் இந்திரனென்றும், பிறிதும் சில வாக்கியங்கள் பிராணனென்றும், மற்ற சில வாக்கியங்கள் நித்யமான ப்ரஹ்மமென்றும் கூறுகின்றன" [மநு 12-123] என்றும் ப்ரமாணஸமூஹங்கள் விவரித்துக்காட்டுகிறபடியே எல்லா தேவதைகளைப்பற்றிய சப்தங்களும் பரமாத்மாவையே சொல்லுகின்றனவாகையாலே எல்லா யாகங்களாலும் ஆராதிக்கப்படுபவன் அவனேயாகிறான். அக்னி, இந்திரன் முதலான பெயர்கள் அந்தந்த தேவதைகளுக்கே பிரஸித்தமான பெயர்களாயிருக்கும் போது அவற்றைப் பரமாத்மவாசகமாகக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமென்ன? எனில்: "ச்ருதிலிங்க₃ வாக்ய ப்ரகரண ஸ்தா₂ந ஸமாக்₂யாநாம் ஸமவாயே பாரதௌர்ப்ப₃ல்யமர்த்த₂விப்ரகர்ஷாத்" [பூர்வமீமாம்ஸை 3-3-14] [ச்ருதி, லிங்கம் (அடையாளம்), வாக்யம், ப்ரகரணம், ஸ்தாநம், ஸமாக்யை (பெயர்) ஆகிய ப்ரமாணங்கள் ஒரேயிடத்திலிருந்தால்(விரோதம் வரும்போது) (இவ்வாறில்) முன் சொல்லப்பட்டவையைக் காட்டிலும் பின் சொல்லப்பட்டவை வலிமை குறைந்தவை; (பிற்பட்ட ப்ரமாணத்தால் சொல்லப்பட்ட) அர்த்தம் (பூர்வ ப்ரமாணத்தைக் கற்பிக்கவேண்டியிருப்பதன்மூலம்) விலகியிருப்பதால்.] என்கிற ச்ருதிலிங்காதிகரண ந்யாயத்தின்படி முன்னால் சொல்லப்பட்ட ச்ருதி முதலானவற்றைக் காட்டிலும் பின்னால் சொல்லப்பட்டவை படிப்படியாகக் குறைந்த பலமுள்ளவையாகையாலும், கடைசியில் சொல்லப்பட்ட 'ஸமாக்யை' (பெயர்) என்னும் ப்ரமாணம் மிகவும் பலமற்றதாகையாலும் அக்நீந்திராதி தேவதைகளே யாகங்களால் ஆராதிக்கப்பட்டுப் பலனளிப்பதாகக் கொண்டால் "இஷ்டாபூர்த்தம்" முதலான ச்ருதிகளுடையவும் மற்றும் லிங்கம் (அடையாளம்), ப்ரகரணம் முதலானவற்றினுடையவும் விரோதம் வருகையாலே முற்கூறிய வேதவாக்கியங்களில் அக்னி முதலான சப்தங்கள் பரமாத்மாவைக் குறிப்பதாகக்கொண்டே தீரவேண்டும். அக்னி இந்திரன் முதலான சப்தங்கள் பரமாத்மாவை எப்படிக் குறிக்கமுடியும்? எனில்: இதரதேவதாநாமங்களைக்கொண்ட வேதவாக்கியங்களில் இரண்டு வகை

யாலேயாதல், அபர்யவஸாநவ்ருத்தியாலேயாதல், அவ்வோ ஸப்₃த₃ங்கள் தேவருக்கே வாசகமாகையால், அவ்வாக்யங்களும் தேவருடைய ஸமாராத₄நப்ரகாரத்தைச் சொல்லிற்றாகக்கடவது. (த்வத₃ர்ச்சாவிதிமுபரி) ''यज्ञेन दानेन तपसानाशकेन''

யுண்டு. ''விருத்திரனைக்கொன்ற இந்திரனே! உன்னைக் காட்டிலும் பெரியவனில்லை'' [ருக்வேதம் அஷ்டகம் 3-6-19] முதலான வாக்கியங்களில் இந்திரன் முதலானோரின் அஸாதாரணமான அடையாளங்களை (விருத்திரனைக் கொன்றது முதலானவற்றைச்) சொல்லி, அவர்களுக்குத் தன்னைக் காட்டிலும் மிக்காரையில்லாமை முதலான பெருமைகளைச் சொல்லும் வேதவாக்கியங்கள் ஒருவகை. இப்படிப்பட்ட வாக்கியங்களில் சொல்லப்பட்ட பெருமைகள் கர்மவசப்பட்ட அந்த தேவதைகளுக்குப் பொருந்தாதாகையால், அவ்வாக்கியங்களிலுள்ள இந்திரன் முதலான சப்தங்கள் இந்திரன் முதலானோரைக் குறிப்பதோடன்றியில், அவர்களுக்கு அந்தர்யாமியான பரமபுருஷனையும் குறிக்கின்றன என்று கொள்ளவேண்டும். இப்படி சப்தங்கள் அந்தந்த வ்யக்திகளைச் சொல்லுவதோடு முடியாமல், அவரவர்க்கு அந்தர்யாமியான பரமாத்மாவையும் சொல்லும் சக்தியை உடையவை என்று ''பிரமனும் நாராயணனே'' [தை-நா] முதலான வேதாந்தவாக்கியங்கள் காட்டுகின்றன. இதையே 'அபர்யவஸாநவ்ருத்தி' [(ரூடியுள்ள வ்யக்திகளோடு) முடியாமல் (அந்தர்யாமிபர்யந்தம்) செல்லுகை] என்று வேதாந்திகள் உரைப்பர். இனி, வேறொரு வகையான வாக்கியங்களுமுண்டு. ''சிவன் ஒருவனே தியானிக்கத்தக்கவன்'' [அதர்வசிகை 2-20] என்றவிடத்திற்போல் சிவன் முதலான சப்தங்களால் பிரஸித்திபெற்ற உருத்திரன் முதலானோர்க்கேயான அடையாளங்களில்லாத வாக்கியங்களவை. இவ்வாக்கியங்களில், தியானிக்கத்தக்கவனைச் சொல்லும் பிரகரணமாகையாலே, அதற்கனுகுணமாக சிவபதத்தின் அவயவசக்தியாலே 'மங்களமானவன்' என்னும் பொருளைக்கொண்டு, ''சாச்வதம் சிவம் அச்யுதம் நாராயணம்'' [தை-நா-11] ''சிவः சிவோபூத்'' [பாகவதம்] ''சிவः ஸ்தாணு:'' [விஷ்ணுஸஹஸ்ரநாமம்] என்கிறபடியே பிரஸித்த சிவனுக்கும் பரிசுத்தியைத்தரும் பரமமங்களமானவனான நாராயணனையே இவை குறிக்கின்றன என்று கொள்ளவேண்டும். அப்படியே ''அக்₃ரம் நயதீதி அக்₃நி:'' [உயர்கதிக்கு அழைத்துச்செல்லுகிறனாகையாலே அக்₃நியாகிறான்] என்னும் வ்யுத்பத்தியாலே அக்நி சப்தத்தையும் பரமாத்மபரமாகக் கொள்ளவேண்டும். ''இதி₃ பரமைச்வர்யே என்னும் தாதுவிலிருந்து தோன்றியதாகையாலே, இந்த்₃ரசப்த₃மும்

(யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந)என்றும், "वर्णाश्रमाचारवता पुरुषेणपरः पुमान्। विष्णुराराध्यते पन्था नान्यः" (வர்ணாஶ்ரமாசாரவதா புருஷேண பர: புமாந்। விஷ்ணுராராத்4யதே பந்தா2 நாந்ய:) என்றும் சொல்லுகிற தேவருடைய ஸமாராத4நத்தைச் சொல்லுகிறது. நம்முடைய அர்ச்சநமாகில் சொல்லுகிறது, நம்முடைய ஸ்வரூபவிஷயமாகச் சொல்லத்தட்டென்? என்னில்: (அர்ச்சாவிதி4முபரி பரிக்ஷீயதே பூர்வப4ாக3:) நேராக ஶப்3த3ாதி3விஷயங்களிலே ப்ரவணரான ஸம்ஸாரிசேதநரை இதோ விமுக2ராக்கி, நல்வழியே போக்குகைக்குத் தானே பண்ணுகையாலே, அதிலே உபக்ஷீணமாயாயிற்று பூர்வப4ாக3மிருப்பது. ஆகையாலே, ஸ்வரூபப்ரதிபாத3னத்துக்கு அவஸரமில்லையாயிற்று.

இயற்கையான பரமைச்வர்யத்தையுடைய நாராயணனையே கூறுவதாகக் கொள்ளவேண்டும். மற்ற சப்தங்களுக்கும் இப்படியே கண்டுகொள்வது. ஆக, இப்படி அக்நீந்திராதி சப்தங்களும் தேவரீரையே சொல்லுமவையாகையாலே, பூர்வபாகத்தில் சொல்லப்பட்ட அந்தந்த யாகங்களும் உம்முடைய ஆராதனமாகவே இருக்கின்றன என்று அருளிச்செய்தாராயிற்று. (உம்முடைய ஆராதனவிதியிலே) "யஜ்ஞத்தினாலும், தானத்தினாலும் அழிவற்றதவத்தினாலும் அந்தணர்கள் பரம்பொருளை அறிய விரும்புகின்றனர்" [ப்ருஹ 6-4-22] என்றும், "வர்ணாச்ரமங்களுக்குரிய ஒழுக்கத்தையுடைய புருஷனாலேயே பரமபுருஷரான விஷ்ணுவானவர் ஆராதிக்கப்படுகிறார். அவரை உகப்பிக்க வேறு வழியில்லை" [வி-பு 3-8-9] என்றும் ஸர்வகர்மஸமாராத்யனுகச் சொல்லப்படும் தேவரீருடைய திருவாராதனத்தையே சொல்லுகிறது பூர்வபாகம். "நம்முடைய அர்ச்சனமே சொல்லுகிறதாகில், நேரே நம்முடைய ஸ்வரூபவிஷயமாகச் சொல்லாமல், நம்முடைய சரீரமான மற்ற தேவதைகளை விஷயீகரித்துச் சொல்லுவானேன்?" எனில்: (ஆராதனவிதியைக்குறித்துச் சென்று முடிகின்றது பூர்வபாகம்) நேரே சப்தஸ்பர்சரூபரஸகந்தங்களாகிற விஷயங்களிலே மண்டித்திரியும் ஸம்ஸாரிஜீவர்களை அவற்றினின்றும் நீக்கி நல்வழியில் நடத்துவதற்குத்தானே முயற்சியெடுத்துக்கொள்கின்றதாகையாலே, பூர்வபாகம் படிப்படியாக உம்முடைய ஆராதனவிதியை நோக்கிச் சென்று முடிவதாயிருக்கிறது. ஆகையாலே அதிலே நேரே ஸ்வரூபத்தைச் சொல்லுவதற்கு இடமில்லையாயிற்று.

ஏதேனுமாக ஸம்ஸாரிகளுடைய ஹிதப்ரவ்ருத்தியாகில் இதுக்கு க்ருத்யம். ப்ராப்ய ஸ்வரூபத்தையும். ப்ராப்தி (ப்ராபக?) ஸ்வரூபத்தையும், ப்ராப்த்ருஸ்வரூபத்தையும், விரோதி₄ஸ்வரூபத்தையும். ப₂லஸ்வரூபத்தையும் முதல்தன்னிலே அறிவிக்கத் தட்டென்? என்னில்: அது ஒண்ணுது. முதல் பழுவிலே தவறி ஏழாம் பழு விலே அடிவைக்கப்போகாதிறே. ஸ்தந்யபாநாதி₃களிலே பரக்க வாஸநைபண்ணிப் போருகிறவனைச் சடக்கென, "அவை ஹேயம்: இப்போதே அநர்த்த₂கரமான ஶரீரத்தை விட்டு மோக்ஷத்தைப் பெறு" என்று சொன்னுல், **"अपसर्पेदसौ मोक्षकथाप्रस्तावगन्धतः" (அபஸர்ப்பேத₃ஸௌ மோக்ஷகத₂ா ப்ரஸ்தாவக₃ந்த₄த:)** என்கிறபடியே, இவன் முகங்கெட்டுக் கழியுமாகையாலே, அவனுகந்த ஸாம்ஸாரிகப₂லங்களிலே

"ஸம்ஸாரிகளுக்கு எப்படியாவது நன்மை செய்யவேண்டுமென்று வேதம் விரும்பிற்ருகில், (1) ஜீவனுல் அடையத்தக்க ப்ரஹ்மம் இப்படியிப்படி யிருப்பது, (2) அதையடையும் வழிகளான பக்திப்ரபத்தி முதலானவை இப்படிப்பட்டவை, (3) அடைபவனுன ஜீவன் இவ்வண்ணமிருப்பவன், (4) அடையவிரோதியான கர்மம் முதலானவை இப்படியிப்படியுள்ளன, (5) ப்ரஹ்மத்தையடைந்து பெறும் பலன் இவ்வண்ணமுள்ளது என்று முதலிலேயே சொல்லிவிடலாமே; எதற்காக இப்படிச் சுற்றி வளைக்கவேண்டும்? எனில்: நேரே கூறினுல் பலரும் அறியமுடியாது. முதல் படியிலே இடறிவிழுந்தவன் ஏழாம்படியிலே நேரே ஏறிவிடமுடியாதே. தாய்ப்பாலிலும், அதுபோன்ற இனிய பொருள்களிலும் மிகவும் பழகிக் கொண்டிருப்பவனை திடீரென்று "அவையெல்லாம் தாழ்ந்தவையப்பனே, பெருந்துன்பத்தை விளைக்கும் உடலையும், உடலை உறுதிப்படுத்தும் பொருள்களையும் இப்போதேவிட்டு மோக்ஷத்தைப் பெறுவாயாக" என்று உபதேசித்தால், "மோக்ஷத்தைப் பற்றிய பேச்சின் நாற்றமடிக்கு மிடத்திற்கூட நில்லாமல் அவன் ஓடிவிடுவான்" [ஸ்ரீபாஷ்யம்–ஜிஜ்ஞாஸாதிகரணம்— அஹமர்த்தாத்மத்வஸமர்த்த₂நப்ரகரணம்] என்கிறபடியே இந்த ஸம்ஸாரி ஜீவன் முகம் மாறி ஓடிவிடுவாணுகையாலே, முதன்முதலில் வேதம் அவன் விரும்பும் இவ்வுலகப்பலன்களிலேயிறங்கி, அவற்றை

இழிந்து, அவனுக்கு போ₄கவிரோதி₄யான ஶத்ருக்களைப் போக்குகைக்கு ஶ்யேநவிதி₄யை உபதே₃சித்து, அது பலித்து அந்த வாக்யத்தில் விஶ்வாஸம் பிறந்தவாறே, போ₄கோ₃பகரணமான த்₃ரவ்யஸம்பத்திக்கு உடலாக வ்ருஷ்ட்யர்த்த₂மாகக் காரியை விதி₄த்து, அது பலித்துத் தத்₃விதா₄யக வாக்யத்திலே விஶ்வாஸம் பிறந்தவாறே, ஐஹிகஸுக₂த்தைக் காட்டிலும் ஆமுஷ்மிகஸுகம் நன்றென்கைக்காக ஸ்வர்க்க₃ஸாத₄நமான ஜ்யோதிஷ்டோமாதி₃களைவிதித்து, அது பலித்துத் தது₃பபாத₃கவாக்யங்களிலே விஶ்வாஸம் பிறந்து, இவ்வளவு புகுரநின்று வ்யுத்பந்நபத₃ பதா₃ர்த்த₂னாய் விவேகியானவனுக்கு, **"अन्तवदेवास्य तद्भवति"** (அந்தவதே₃வாஸ்ய தத்₃ப₄வதி), **"न ह्यध्रुवैः प्राप्यते"** (ந ஹ்யத்₄ருவை: ப்ராப்யதே),

---

அடைந்து அனுபவிக்கத் தடையாயிருக்கும் எதிரிகளை அழிப்பதற்காக 'ச்யேநயாகம்' என்று ஒன்றை உபதேசிக்கிறது. அந்த யாகத்தை அனுஷ்டித்த ஒருவன், அதுபலிக்கக் கண்டவுடன் அந்த வாக்கியத்தில் நம்பிக்கை பிறக்கிறது. அடுத்தபடியாக நல்ல செல்வத்தைப் பெற்று அநுபவிப்பதற்காகத் தன் நிலங்களிலே மழைபொழியவேண்டும் என்ற அவன் விரும்புகிறான். "**காரீர்யா வ்ருஷ்டிகாமோ யஜேத**" [மழையை விரும்புமவன் காரீரி யாகத்தைச் செய்யக்கடவன்] என்னும் வேதவாக்கியத்தைக் கண்டு அதை அநுஷ்டித்து அதுபலித்தவுடன் அவ்வாக்கியத்திலும் நம்பிக்கை பிறக்கிறது. இப்படிப் பெற்ற இம்மைப்பயன்கள் மிக அற்பமாகவும், மிகவும் நிலையற்றதாகவுமிருப்பதைக் கண்டு இதைவிடச் சிறந்த இன்பங்களுண்டோ? என்று வேதவாக்கியங்களை அவன் ஆராய்கிறான். "**ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்க₃காமோ யஜேத**" [சுவர்க்கத்தை விரும்புமவன் ஜ்யோதிஷ்டோமயாகத்தைச் செய்யக்கடவன்] முதலான வாக்கியங்கள் இம்மைப் பலன்களிலும் சிறந்த மறுமைப்பலனான சுவர்க்கத்தை அடைய ஜ்யோதிஷ்டோமம் முதலான யாகங்களை விதிப்பதைக்கண்டு, முன்னமே ஏற்பட்ட விச்வாஸத்தாலே அதையும் அனுஷ்டித்து, அவையும் பலிக்கக்கண்டு அவ்வாக்கியங்களிலும் நம்பிக்கையடைகிறான். இவ்வளவு தூரம் முன்னேறி, பதங்களையும் அவற்றின் பொருளையும்அறிந்துபகுத்தறிவையும் உடையவனான அவனுக்கு, "சுவர்க்கம் முதலான பலன்கள் முடிவுடையவையாகவே ஆகின்றன" [ப்ருஹ 5–8–10] "நிலையற்ற யாகாதிகருமங்களாலே நிலையான பலன் கிடைக்காதன்றோ." [கட 2–10] "யஜ்ஞரூபமாயிருக்கும் இக்கருமங்கள் உறுதியற்ற ஓடங்கள்"

"प्लवा ह्येते अदृढा यज्ञरूपाः" (ப்லவா ஹ்யேதே அத்3ருட4ா யஜ்ஞரூபா:) **"परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायात्"** (பரீக்ஷ்ய லோகாங் கர்மசிதாங் ப்3ராஹ்மணோ நிர்வேத3மாயாத்) என்றும், **"स्वर्गेऽपि पातभीतस्य क्षयिष्णोर्नास्ति निर्वृतिः"** (ஸ்வர்க்கே3ऽபி பாதபீ4தஸ்ய க்ஷயிஷ்ணோர் நாஸ்தி நிர்வ்ருதி) என்றும், **"आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनः"** (ஆப்3ரஹ்மபு4வநால்லோகா: புநராவர்த்திந:) என்றும், **"एते वै निरयास्तात स्थानस्य परमात्मनः"** (ஏதே வை நிரயாஸ்தாத ஸ்தா2நஸ்ய பரமாத்மந:) என்றும் உபதேசித்து இந்த ப்ரமாணக3ளை நுஸந்தா4நம் பண்ணி நிர்விண்ணனானவனுக்கு மோக்ஷஶாஸ்த்ரத்திலே அதி4காரமாகையாலே, மெள்ள இவனை இதிலே மூட்டுகைக்காக முற்படக் கர்மபா4க3மே உத்தேஶ்யமாக்கடவது.

அழகியது; பூர்வபா4க3மானது இவனுடைய ஸத்கர்மத்துக்குரிய நித்யநைமித்திக காம்யரூபமான விஹிதகர்மங்களை உபதே3சித்ததாகில், உத்தரபா4க3த்துக்கு க்ருத்யமென்? என்

[முண்டகம் 1-2-7] "கர்மத்தாலடையும் உலகங்கள் அற்பமாகவும் அஸ்திரமாகவுமிருப்பதைக்கண்டு வேதமறிந்த அந்தணன் வருத்தத்தை அடைவான்" [முண்ட 1-2-12] என்றும் வேதங்களும், "எப்போது கீழே விழுந்துவிடுவோமோ? என்னும் பயத்தையுடையவனாய், சுவர்க்கவின்பம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வரும் ஜீவனுக்கு சுவர்க்கத்திலிருக்கும் போதும் ஆனந்தமில்லை" [வி. பு 6—5—50] என்றும், "ப்ரஹ்மலோகத்திலிருந்து தொடங்கி இவ்வுலகிலுள்ள எல்லாவுலகங்களும் நிலையானவையல்ல"[கீதை 8-16] என்றும், "குழந்தாய்! பரமாத்மாவின் ஸ்தானத்தோடு ஒப்பிடும்போது இவையெல்லாம் நரகங்களே" [பார-சாந்தி 196-6] என்றும் இதிஹாஸ புராணங்களும் உபதேசிக்கின்றன. இவைகளை நினைத்துநினைத்து வருந்துமவனுக்கு மோக்ஷசாஸ்திரத்தில் விருப்பம் பிறந்து, அதைப்பற்றிப் பேசும் உத்தரபாகத்தில் படிப்படியாக இவனை மூட்டுவதற்காக முதன்முதலில் வேதத்தின் முதல்பாகமான கர்மகாண்டமே உத்தேச்யமாகிறது.

"அழகாயிருக்கிறது; கொண்டிமாட்டுக்குத் தடிகட்டிவிடுவாரைப் போலே பூர்வபாகமானது ஸம்ஸாரி சேதனனை நல்வழிப்படுத்துவதற்காக இவன் செய்யவேண்டிய நித்யம், நைமித்திகம், காம்யம் முதலான கர்மங்களை உபதேசித்ததாகில் உத்தரபாகம் எதற்காக ஏற்பட்டது?" எனில்:

னில்: (ஊர்த்₄வோ பூ₄ாக₃ஸ்த்வதீ₃ஹாகு₃ணவிப₄வபரிஜ்ஞா பனஸ் த்வத்பத₃ாப்தௌ) **"कषायपक्तिः कर्माणि ज्ञानं तु परमा गतिः"** (கஷாயபக்தி: கர்மாணி ஜ்ஞாநம் து பரமா க₃தி:) **"कषाये कर्मभिः पक्वे ततो ज्ञानं प्रवर्तते"** (கஷாயே கர்மபி₄: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே) என்றும், **"अविद्यया मृत्युं तीर्त्वा विद्यया-ऽमृतमश्नुते"** (அவித்₃யயா ம்ருத்யும் தீர்த்வா வித்₃யயாऽம்ருதமஶ்நுதே) என்றும், **"तपोज्ञानसमाधिभिः नराणां क्षीणपापानां कृष्णे भक्तिः प्रजायते"** (தபோஜ்ஞாநஸமாதி₄பி₄: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே ப₄க்தி: ப்ரஜாயதே) என்றும் சொல்லுகிற படியே, பூர்வபா₄கோ₃தி₃தமான கர்மாநுஷ்டா₂னத்தாலே ம்ருதி₃தகஷாயனானவனுக்கு ப₄க₃வத்ப்ராப்திஸாத₄நதயா அநந்தரப்ராப்தமான ப்₃ரஹ்மஸ்வரூபகு₃ண விப₄வசேஷ்டாதி₃ஜ்ஞாபநம் பண்ணுவிக்கிறது. இக்கர்மந்தன்னை, **"अथातो ब्रह्मजिज्ञासा"** (அதா₂தோ ப்₃ரஹ்ம ஜிஜ்ஞாஸா) என்றும், **"वृत्तात्कर्माधिगमादनन्तरं तत एव हेतोर्ब्रह्म ज्ञातव्यमित्युक्तं भवति"** (வ்ருத்

(மேல் பாகம் உன்னுடைய செயல், குணம், செல்வம் ஆகியவற்றை அறிவிப்பதின்மூலம் உன் திருவடியை அடைவிப்பதில் சென்று முடிகின்றது) "கருமங்கள் பாபம் நீங்குவதற்காக ஏற்பட்டவை; கர்மங்களால் அடையப் படும் மேலான பலன் ஞானமே. கருமங்களால் பாபம் அழிந்தவுடன் ஞானம் உண்டாகிறது" [பார-சாந்தி 276-39] என்றும், "அவித்யை (வித்யையெனப்படும் ஞானத்தைக் காட்டிலும் வேறுபட்டது) எனப்படும் கர்மத்தாலே பாபங்களைத் தாண்டி, வித்யையாகிற ஞானத்தாலே மோக்ஷமடைகிறான்" [ஈசா-11] என்றும், "தவம், ஞானம், தியானம் என்னும் கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களால் பாபம் நீங்கப்பெற்ற மனிதர்களுக்கே கிருஷ்ணனிடம் பரபக்தி உண்டாகிறது" [லக்வத்ரிஸ்மிருதி] என்றும் சொல்லுகிறபடியே, பூர்வபாகத்தில் சொல்லப்பட்ட கர்மத்தை அநுஷ்டிப்பதால் பாபம் நீங்கப்பெற்றவனுக்கு பகவானை அடைய ஸாதனமாக அடுத்தபடி அறியவேண்டிய பகவானுடைய ஸ்வரூபகுணவிபூதி சேஷ்டிதங்களை உத்தரபாகம் அறிவிக்கிறது. இப்படிக் கர்மவிசாரத்திற்குப் பின்பே ப்ரஹ்ம விசாரம் செய்யவேண்டும் என்னும் முறையை, "(கர்ம விசாரத்திற்குப்) பிறகு, அக்காரணத்தாலேயே ப்ரஹ்மத்தை அறிவதில் விருப்பம் ஏற்படுகிறது" [ப்ரஹ்மஸூத்ரம் 1-1-1] என்றும், "முன்நடந்த கர்மத்தை அறிந்ததற்குப்பின் அக்காரணத்தாலேயே ப்ரஹ்மம் அறியத்

தாத் கர்மாதி₄க₃மாத₃நந்தரம் தத ஏவ ஹேதோர் ப்₃ரஹ்ம ஜ்ஞா தவ்ய மித்யுக்தம் ப₄வதி) என்றும் அபி₄யுக்தர்கள் பேசினுர் களிறே. (ஊர்த்₄வோ ப₄ாக₃:) "श्रुतिशिरसि विदीप्ते" (ஶ்ருதிசிரஸி விதீ₃ப்தே) என்கிறபடியே ஸத்₃வாரகமாக ப₄க₃வத்ப்ரதிபாத₃நம் பண்ணுகிற பூர்வப₄ாக₃த்திற்காட்டில், அவ்யவஹித ப₄க₃வத்ப்ரதிபாத₃நம்பண்ணுகையாலே, இவ்வாஸத்தியைப் பற்ற எல்லாத்துக்கும் மேலான ப₄ாகம் என்கிருர். இப்பாகத்தில்ப்ரதிபாதி₃க்கிற அர்த்தந்தான் ஏதென்னில்: (த்வதீ₃ஹா கு₃ணவிப₄வபரிஜ்ஞாபநை:) ஈத்₃ருஶமான அர்த்த₃ங்கள் என்கிருர். (த்வதீ₃ஹேத்யாதி₃) ஒருவனையொருவன் பேசுகையாவது.- அவனுடைய தொழில்களையும், குணங்களையும் பெருமைகளையும் பேசுகையிறே. ஆகையாலே இங்கும் தி₃வ்யாபதா₃நங்களையும் கல்யாணகுணங்களையும் உப₄ய விபூ₄தியோக₃த்தையும் பேசுகிறது. (த்வதீ₃ஹா) ஜக₃த்₃ரக்ஷணேபயோகி₃யாக, "बहु स्यां" (ப₃ஹு ஸ்யாம்) என்கிற ஸங்கல்ப வ்யாபாரம் தொடக்கமான அந்த:ப்ரவேஶநியமநவ்யாபாரங்

தக்கது என்று சொல்லிற்றுயிற்று" [ஸ்ரீபாஷ்யம்-ஜிஜ்ஞாஸாதிகரணம் ஸூத்ரார்த்தநிகமநம்] என்று ஸூத்ரகாரரும் ஸ்ரீபாஷ்யகாரரும் பேசினுர்களன்றே. (மேல்பாகம்) "வேதத்தின் தலையான பாகத்தில் மிகவிளங்கும் ப்ரஹ்மமான ஸ்ரீநிவாஸனிடத்தில்" [ஸ்ரீபாஷ்யமங்களச்லோகம்] என்கிற படியே, தேவதைகளையிடையிட்டு பகவானைச் சொல்லும் பூர்வபாகத்தைக் காட்டிலும், நேரே பரமபுருஷனைச் சொல்லுகையாலே, பரம்பொருளோடுள்ள இந்த நெருக்கத்தைக் கருத்திற்கொண்டு எல்லாவற்றுக்கும் மேலான பாகம் என்கிருர். இந்த பாகத்தில் சொல்லுகிறதுதான் என்ன? எனில், (உன்னுடைய சேஷ்டிதங்கள் குணங்கள் விபூதிகள் ஆகியவற்றை அறிவிப்பதன் மூலம்) இன்ன இன்ன அர்த்தங்களைச் சொல்லுகிறது என்கிருர்: (உன்னுடைய சேஷ்டிதங்கள்...) ஒருவனை ஒருவன் பேசுவதாவது,— அவனுடைய தொழில்களையும், குணங்களையும் பெருமைகளையும் பேசுகையன்றே. ஆகையாலே இவ்வூர்த்₄வபாகத்திலும் பரமபுருஷனுடைய மத்ஸ்ய கூர்மவராஹ நரஸிம்ஹ வாமநத்ரிவிக்ரமாதி திவ்ய சேஷ்டிதங்களையும், ஜ்ஞாநசக்தி முதலான திவ்யகுணங்களையும், அகல்விசும்பும் நிலனுமாகிற உபயவிபூதியுடைமையாகிற செல்வத்தையும் பேசுகிறது. (உன்னுடைய சேஷ்டிதங்கள்) உலகை ரக்ஷிப்பதற்குறுப்பாக, "நானே பலவாகக் கடவேன்" [சாந் 6-2-3; தை-ஆந 6-2] என்கிற ஸங்கல்பம் செய்வது

களையும். ஹிரண்யராவண சிசுபாலாதி$_3$வத$_4$தெள$_3$த்ய ஸாரத்$_2$யாதி$_3$களான பரத்வஸூசகமாயும் ஸௌலப்$_4$யஸூசகமாயுமிருக்கிற தி$_3$வ்யாபத$_3$னங்களையும் சொல்லுகிறது. “चेष्टा तस्याप्रमेयस्य व्यापिन्यव्याहतात्मिका” (சேஷ்டா தஸ்யாப்ரமேயஸ்ய வ்யாபிந்யவ்யாஹதாத்மிகா) என்றும், “क्रीडा हरेरिदं सर्वं क्षरमित्युपधार्यताम्”(க்ரீட$_3$ா ஹரேரித$_3$ம் ஸர்வம் க்ஷரமித்யுபத$_4$ார்யதாம்) என்றும், “क्रीडा जगत्पतेस्तस्य छन्दतः संप्रवर्तते” (க்ரீட$_3$ா ஜக$_3$த்பதேஸ் தஸ்யச$_2$ந்த$_3$த: ஸம்ப்ரவர்த்ததே) என்றும் ரிஷிகள் பேசாநின்றார்களிறே.

இப்படி அவாப்தஸமஸ்தகாமனாயிருக்கிற இவன் இவ்யாபாரபரம்பரைகளைப் பண்ணுகைக்கு அடியென்? என்னில்: (குண) குணங்கள் இருந்தவிடத்தில் இருக்கவொட்டாமையாலே என்கிறது. “यस्सर्वज्ञः सर्ववित्” (யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்) இத்யாதிகளின்படியே ஸ்ருஷ்ட்யுபயோகி$_3$யான ஸர்வஜ்ஞத்வாதிகளென்ன, ஸ்வரூபக$_3$தமான ஜ்ஞாநாநந்த$_3$ாதிக

முதலாக, உள்நுழைந்து நியமிக்கும் செயலையும், ஹிரண்யன், ராவணன், சிசுபாலன் முதலானோரை அழித்தது, தூது நடந்தது, தேர்நடத்தியது முதலான பரத்வத்தையும், ஸௌலப்யத்தையும் காட்டும் திவ்ய சேஷ்டிதங்களையும் சொல்லுகிறது. “அளவிடவொண்ணாதவனான அவனுடைய செயல் எங்கும் பரவிநிற்பதாயும், தடையற்றதாயும் உள்ளது” [வி-பு 6-7-72] என்றும், “அழிவுள்ளதான இவையெல்லாமும் ஹரியின் விளையாட்டு என்று அறியப்படட்டும்” [பார-சாந்தி 206-58] என்றும், “லோகஸ்வாமியான அவனுடைய விளையாட்டான இவையெல்லாம் அவனுடைய விருப்பப்படி ஆடுகின்றது” [வி-பு 5-22-18]என்றும் ரிஷிகளும் பேசுகின்றார்களன்றோ.

இப்படி எல்லாப் பெருமைகளையும் பெற்றிருக்குமிவன் இந்தச் செயல்களைச் செய்வதற்குக் காரணமென்ன? எனில்: (குணம்) ஸௌலப்ய ஸௌசீல்ய வாத்ஸல்ய காருண்யாதிகுணங்கள் இருந்தவிடத்தில் இருக்கவிடாமையாலே இப்பாடுபடுகிறான் என்கிறது. “எவன் எல்லாப் பொருள்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களை உள்ளபடி அறிகிறானோ” [முண்டக 2-2-7] முதலான வாக்கியங்களிற் சொன்னபடியே ஸ்ருஷ்டிக்கு உறுப்பான ஸர்வஜ்ஞத்வம் முதலான குணங்களென்ன, ஸ்வரூபத்திலுள்ள ஜ்ஞானம், ஆநந்தம் முதலான குணங்களென்ன, திவ்யமங்களவிக்ரஹத்திலுள்ள

ளென்ன, விக்$_3$ரஹகு$_3$தமான ஸௌந்த$_3$ர்ய ஸௌகுமார்யாதி கஸென்ன, பரத்வஸூசகமான ஸௌர்யாதி$_3$கஸென்ன, ஸௌலப்$_4$யஸூசகமான ஸௌசீல்யாதி$_3$கஸென்ன, ஆக இந்த நிரவதி$_4$ககுணங்களைப் பேசுகிறது.

இப்படி அபரிமிதசேஷ்டிதனுமாய், அபரிமிதகுண கனுமான இவனுக்குத் தனக்கு வ்யாவ்ருத்தமாயிருப்பதொரு இருப்பிடமாதல், ஒருபோ$_4$க$_3$மாதல், பரிகரமாதல் இல்லையோ? என்னில்: (விப$_4$வ) **"सर्वस्य वशी सर्वस्येशानः"** (ஸர்வஸ்ய வஸீ ஸர்வஸ்யேஸாந:) என்றும், **"पतिं विश्वस्य"** (பதிம் விஸ்வஸ்ய) என்றும், **"प्रधानक्षेत्रज्ञपतिर्गुणेशः"** (ப்ரத$_4$ாநக்ஷேத்ரஜ்ஞபதிர் கு$_3$ணேஸ:) என்றும், **"हिरण्मये परे लोके विरजं ब्रह्म निष्कलं"** (ஹிரண்மயே பரே லோகே விரஜம் ப்$_3$ரஹ்ம நிஷ்கலம்) என்றும், **"क्षरं प्रधानममृताक्षरं हरः क्षरात्मानावीशते देव एकः"** (க்ஷரம் ப்ரத$_4$ாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தே$_3$வ ஏக:) என்றும், **"दिवि तिष्ठत्येकः"** (தி$_3$வி திஷ்ட$_2$த்யேக:) என்றும்,

---

ஸௌந்தர்யம் (அழகு), ஸௌகுமார்யம் (மென்மை) முதலானவையென்ன, மேன்மையைக்காட்டும் சௌர்யம், வீர்யம் முதலானவையென்ன, நீர்மையைக்காட்டும் ஸௌசீல்யம், வாத்ஸல்யம் முதலானவையென்ன ஆக இப்படி எல்லையற்றிருக்கும் குணங்களைப் பேசுகிறது.

இப்படி அளவற்ற செயல்களையும் குணங்களையும் உடைய இவனுக்குத் தனக்கேயுரியதொரு இருப்பிடமோ, ஒருபோகமோ, துணைவர்களோ இல்லையோ? என்னில்: (விபவம்) "அனைத்தையும் வசப்படுத்தியிருப்பவன்; அனைத்துக்கும் ஈச்வரனுயிருப்பவன்" [ப்ருஹ 6-4-22] என்றும், "உலகத்திற்குப்பதியாயிருப்பவனை" [தை-நா-11] என்றும், "பிரகிருதிக்கும், ஜீவனுக்கும் ஸ்வாமியாயிருப்பவன்; குணங்கள் நிறைந்திருப்பவன்" [ச்வே 6-16] என்றும், "பொன்மயமான மேலான உலகத்தில் ப்ராக்ருத குணமற்றதாய், குற்றமற்றதான ப்ரஹ்மம் எழுந்தருளியிருக்கிறது" [முண்டக 2—2—10] என்றும், "க்ஷரம் (அழிவுள்ளது) எனப்படுவது ப்ரதானம்; அழிவற்றதாகையாலே அக்ஷரம் எனப்படுபவன் ஜீவன்; இவ்விரண்டையும் நியமிக்கிறுன் ஒப்பற்ற ஒரு தேவன்" [ச்வே 1-10] என்றும், "பரமபதத்தில் ஒப்பற்றவனுய் நிற்கிறுன்; அந்தப்புருஷனுல் இவை யெல்லாம் நிறைந்திருக்கிறது" [ச்வே 3—9; முண்டக 1—1—7] என்றும், "பரமபதத்திலிருக்

"तेनेदं पूर्णं पुरुषेण सर्वं" (தேநேத₃ம் பூர்ணம் புருஷேண ஸர்வம்) என்றும், **"दिव्यो देव एको नारायणः"** (தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:) என்றும் சொல்லுகிறபடியே நித்யவிபூ₄தியென்ன, லீலோபகரணமான போ₄க₃பூ₄மியென்ன, ஆக உப₄யவிபூ₄தியையும் உடையன் என்கிறது.

கு₃ணசேஷ்டாதி₃களும் ப₄க₃வத்₃க₃தமாகில் இவ்வேதம் செய்கிறதென்? என்னில்: (பரிஜ்ஞாபநை:) அவற்றை உள்ளபடி அறிவிக்கிறது. "பரி" என்று பரீக்ஷாபூர்வகஜ்ஞாபநமாய், யுக்திதர்க்கங்களோடேகூட நிஸ்ஸந்தே₃ஹமாக அறிவிப்பிக்கிறது என்றாகவுமாம். அன்றியிலே பரிஜ்ஞாபநமாகிறது,-விடுவேடெடுத்துப் பார்த்தல், ஸ்வபு₃த்₃தி₄யாலே ஆத்₂மநிரீக்ஷணம் பண்ணுதல் செய்கையன்றிக்கே, **"आचार्याद्धि विद्या विदिता साधिष्ठं प्रापत्"** (ஆசார்யார்த்₃தி₄ வித்₃யா விதி₄தா ஸாதி₄ஷ்ட₂ம் ப்ராபத்) என்று ஆசார்யோபதேஶமுக₂த்தாலே கு₃ஹநமான ஸ்வார்த்த₂ங்களை அறிவிப்பிக்கிறதென்றாகவுமாம்.

கும் ஒப்பற்ற தேவனான நாராயணன் ஒருவனே ஸர்வபூதாந்தராத்மாவாயிருப்பவன்" [ஸுபால-7] என்றும் சொல்லுகிறபடியே தனக்கு போகத்துக்கு உறுப்பான பரமபதமாகிற நித்யவிபூதியென்ன, விளையாட்டுக்கே உறுப்பாய் ஸம்ஸாரிக்குக் கர்மபோகத்திற்காக ஏற்பட்ட இவ்வுலகமாகிற லீலாவிபூதி யென்ன ஆக உபயவிபூதியையும் உடையவன் என்கிறது.

செயல், குணம், செல்வம் எல்லாம் பகவானிடமிருக்கிறதாகில் இவ்வேதம் செய்கிறதென்ன? எனில்: (நன்கு அறிவிப்பதன் மூலம்) "பரி" என்றதாலே உள்ளபடி அறிவிப்பதைச் சொல்லுகிறது அல்லது, பரி, என்ற உபஸர்க்கத்தாலே பரீக்ஷை செய்து அறிவிக்கிறது என்கிறதாகவும் கொள்ளலாம். யுக்திகளோடும் தர்க்கங்களோடும்கூட ஐயமற அறிவிக்கிறது என்றபடி. அப்படியுமல்லாமல், பரிஜ்ஞாபனமாவது, ஏடெடுத்துப் பார்த்தல் தன் அறிவைக்கொண்டு பொருள் கொள்ளுதல் செய்யாமல், "ஆசாரியனிடமிருந்து பெற்ற கல்வியே நிலைநிற்கிறது" [சாந் 4—9—3] என்று ஆசார்யோபதேச மூலமாக ஆழ்ந்த பொருள்களையும் அறிவிப்பிக்கிறது என்பதாகவும் கொள்ளலாம்.

இவை அறிவிக்கிற இத்தால் ப்ரயோஜநமென்? என்னில்: (த்வத்பத3ாப்தௌ) "क्षेत्रज्ञस्येश्वरज्ञानाद्विशुद्धिः परमा मता" (க்ஷேத்ரஜ்ஞஸ்யேஶ்வரஜ்ஞாநாத்3விஶுத்3தி4: பரமா மதா) என்றும், "ब्रह्मविदाप्नोति परं" (ப்3ரஹ்மவித3ாப்நோதி பரம்) என்றும் சொல்லுகிறபடியே இந்த ஜ்ஞானம் கைம்முதலாக பரம ப்ராப்யனானவன் திருவடிகளைப் பெறுகை. ஜ்ஞாநத்தாலே ப4க3வல்லாபம் என்கையில் ப்ரமாணமென்? என்னில்: "तस्य धीराः परिजानन्ति योनिं मरीचीनां पदमिच्छन्ति" (தஸ்ய தீ4ரா: பரிஜாநந்தி யோநிம் மரீசீநாம் பத3மிச்ச2ந்தி) என்றும், "विष्णोः कर्माणि पश्यत" (விஷ்ணோ: கர்மாணி பஶ்யத) என்றும், "तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति" (தத்3விஷ்ணோ: பரமம் பத3ம் ஸதா3 பஶ்யந்தி) என்றும், "जन्म कर्म च मे दिव्यं एवं यो वेत्ति तत्त्वतः। त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति" (ஜந்ம கர்ம ச மே தி3வ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத:। த்யக்த்வா தே3ஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி) என்றும் ப4க3வத3பத3ாநஜ்ஞாநத்தாலே

வேதங்கள் இவற்றை அறிவிப்பதாலே என்ன பயன்? எனில்: (உன் திருவடிகளை அடைவிக்கையில் சென்று முடிகிறது) "ஜீவனுக்குப் பரமனை அறிவதாலேயே மேலான பரிசுத்தியுண்டாவதாகச் சொல்லப்படுகிறது" [யாஜ்ஞவல்க்யஸ்மிருதி 3-34] என்றும், "ப்ரஹ்மத்தை அறிந்தவன் மேலான பலனை அடைகிறான்" [தை-ஆந-1] என்றும் சொல்லுகிற படியே இவ்வறிவே காரணமாக பரமப்ராப்யனான பரமபுருஷனுடைய திருவடிகளைப் பெறுவதே இதனாலடையும் பயன் என்கிறது. ஞானத்தாலே பகவானை அடைகிறான் ஜீவன் என்பதற்கு ப்ரமாணம் என்ன? எனில்: "அறிவாளிகளிற் சிறந்தவர்கள் அவனுடைய அவதாரத்தை அறிகின்றனர்; (இதனால்) வானவர் நாட்டைப் பெறவிரும்புகின்றனர்" [பு-ஸூ] என்றும், "விஷ்ணுவின் செயல்களைப் பாருங்கள்" [ருக்-அஷ்டகம் 1—2—7] என்றும், "விஷ்ணுவினுடைய அந்த மேலான பதத்தை நித்யஸூரிகள் எப்போதும் கண்டு கொண்டிருக்கின்றனர்" [ருக்-அஷ்ட-1-2-7] என்றும், "என்னுடைய அப்ராக்ருதமான பிறப்பையும் செயல்களையும் எவனிப்படி உள்ளபடி அறிகிறானோ, அவன் தேஹத்தை விட்டு மறுபிறப்பை அடைவதில்லை, என்னை அடைகிறான்" [கீதை 4-9] என்றும் பகவானுடைய சேஷ்டிதங்களை அறிவதாலே பகவானை அடையலாமென்றும்,

ப4க3வத்ப்ராப்தி என்றும், "**आनन्दं ब्रह्मणो विद्वान् न बिभेति कुतश्चन**" (ஆநந்த3ம் ப்3ரஹ்மணோ வித்3வாந் ந பி3பே4தி குதஶ்சந) என்றும், "**आत्मानमनुविद्य व्रजन्त्येतांश्च सत्यान् कामान् तेषां सर्वेषु लोकेषु कामचारो भवति**" (ஆத்மாநமநுவித்3ய வ்ரஜந்த்யேதாம்ஶ்ச ஸத்யாந் காமாந் தேஷாம் ஸர்வேஷு லோகேஷு காமசாரோ ப4வதி) என்றும் இக்கு3ணஜ்ஞாநத்தாலே ப4க3வத்ப்ராப்தியென்றும், "**यो वेद निहितं गुहायां परमे व्योमन् सोऽश्नुते सर्वान् कामान्**" (யோ வேத3 நிஹிதம் கு3ஹாயாம் பரமே வ்யோமந் ஸோऽச்நுதே ஸர்வாந் காமாந்) என்றும், "**सर्वस्य वशिनं देवं सर्वस्यायतनं हरिं। राजानं सर्वभूतानां तं वै ज्ञात्वा विमुच्यते**" (ஸர்வஸ்ய வஶிநம் தே3வம் ஸர்வஸ்யாயதநம் ஹரிம்| ராஜாநம் ஸர்வபூ4தாநாம் தம் வை ஜ்ஞாத்வா விமுச்யதே) என்றும், "**ब्रह्म वेद ब्रह्मैव भवति**" (ப்3ரஹ்ம வேத3 ப்3ரஹ்மைவ ப4வதி) என்றும் உப4ய விபூ4தியோக3ஜ்ஞாநத்தால் ப4க3வத்ப்ராப்தியென்றும், ஶ்ருதி ஸ்ம்ருதிகள் தானே சொல்லுகையாலே, இந்த ஈஹாகு3ண விப4வஜ்ஞாநத்தாலே தத்பத3ப்ராப்திக்குக் குறையில்லை. "**अद्रेश्यमग्राह्यं**" (அத்3ரேஶ்யமக்3ராஹ்யம்) என்றும், "**न चक्षुषा गृह्यते नापि**

"ப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை அறிந்தவன் எதனின்றும் பயப்படுவதில்லை" [தை-ஆந9] என்றும் "எவர்கள் இங்கு பரமாத்மாவையும், அவனுடைய இந்த விரும்பத்தக்க உண்மையான குணங்களையும் உபாஸித்துப் பரலோகமடைகிறார்களோ, அவர்களுக்கு எல்லா உலகங்களிலும் விருப்பப்படி ஸஞ்சரிக்க வல்லமையுண்டாகிறது" [சாந்8-1-6] என்றும் பகவத்குணங்களை அறிவதாலே பகவானையடையலாம் என்றும், "எவன் ப்ரஹ்மத்தை ஹ்ருதய குஹையிருப்பதாகவும், பரமபதத்திலிருப்பதாகவும் அறிகிறானோ, அவன் ப்ரஹ்மத்தோடுகூட எல்லாக் கல்யாணகுணங்களையும் அநுபவிக்கிறான்" [தை-ஆந1]என்றும், "எல்லாவற்றையும் வசத்திலுடைய தேவனும், எல்லாவற்றுக்கும் இருப்பிடமாயிருப்பவனும், எல்லா உயிர்களுக்கும் அரசனுமான அந்த ஹரியை அறிந்தால் மோக்ஷமடைகிறான்" [ ] "ப்ரஹ்மத்தை அறிந்தால் ப்ரஹ்மமாகவே ஆகிறான்" [முண்ட3-2-9] என்றும் உபய விபூதியையும் உடையவன் என்றறிவதாலே பகவானை அடையலாம் என்றும் ச்ருதிஸ்மிருதிகள் தானே சொல்லுகையாலே, பகவானுடைய சேஷ்டித குணவிபூதிஜ்ஞானத்தாலே அவன் திருவடிகளை அடையக்குறையில்லை. (உன்னுடைய திருவடியை அடைவதில்) "காணமுடியாதது, அறிய முடி

वाचा नान्यैर्देवैः" (ந சக்ஷுஷா க்$_3$ருஹ்யதே நாபி வாசா நாந்யைர் தே$_3$வை:) என்றும், "**नमो नमो वाङ्मनसातिभूमये**" (நமோ நமோ வாங்மநஸாதிபூ$_4$மயே) என்றும் சொல்லுகிறபடியே ஶ்ரோத்$_3$ரோபகரணர்களான எங்களுக்கு வாங்மநஸாகோ$_3$சரவைப$_4$வஞயிருக்கிற உன்னைப் பெறும்போது "**मनसा तु विशुद्धेन**" (மநஸா து விஶுத்$_3$தே$_4$ந) என்றும், "**हृदा मनीषा मनसाऽभिक्लृप्तः**" (ஹ்ருத$_3$ா மநீஷா மநஸாऽபி$_4$க்லுப்த:) என்றும், "**भक्त्या त्वनन्यया शक्यः**" (ப$_4$க்த்யா த்வநந்யயா ஶக்ய:) என்றும் சொல்லுகிறபடியே ஸவிபூ$_4$திகஞன தே$_3$வருடைய ஜ்ஞாந மொழிய வேறுகைம்முதல் உண்டோ? "த்வத$_3$ாப்தெ$_3$ள" என்ஞதே, "த்வக்பத$_3$ாப்தெள" என்கிறது விஶேஷித்து ஸ்வரூபாநுகு$_3$ணமாகத் திருவடிகளே ப்ராப்யமென்கைக்காக. ஆத்$_4$யாத்மிகாதி$_3$ தாபத்ரயத்தாலே தப்தரானவர்களுக்கு, "**तद्विष्णोः परमं पदं**" (தத்$_3$விஷ்ணோ: பரமம் பத$_3$ம்) என்று பரமபத$_3$ப்ராப்தியைச் சொல்லிற்றாகவுமாம். ஆக, இப்படி

யாதது" [முண்டக 1—1—6] என்றப், "பரம்பொருள் கண்ணாலும், வாக்கிஞலும் மற்ற இந்திரியங்களாலும் அறியப்படுவதில்லை" [முண்ட 1-1-6] என்றும், "வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவஞயிருப்பவனே" [ஸ்தோ-ர 21] என்றும் சொல்லுகிறபடியே ப்ராக்ருதமாகையாலே வலிமையற்ற இந்திரியங்களை உடைய எங்களுக்கு வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத பெருமையுடைய உன்னைப் பெறும்போது, "விசுத்தமான மனத்தாலே அறியப்படுபவன்" [விஷ்ணுதர்மோத்தரம் 275—2] என்றும், "பக்தியும் தரிப்புமுள்ள மனத்திஞலே அறியப்படுபவன்" [தை-நா 1-10] என்றும், "வேறொன்றிலீடுபடாத பக்தியிஞலே அறியத்தக்கவன்" [கீதை 11-54] என்றும் சொல்லுகிறபடியே விபூதிகளோடு கூடிய தேவரீரைப்பற்றிய அறிவையொழிய வேறொரு ஸாதனமுண்டோ? "உன்னை அடைவதில்" என்ஞமல், "உன்னுடைய திருவடியை அடைவதில்" என்கிறது, விசேஷித்து நம் சேஷத்வஸ்வரூபத்திற்குத் தக்கபடி திருவடிகளே ப்ராப்யம் என்று தெரிவிக்கைக்காக. "பதாப்தெள" என்றவிடத்தில் 'பதம்' என்றது "விஷ்ணுவின் மேலான அந்தப்பரமபதத்தை" [ருக்-அஷ்ட 1-2-7] என்கிற பரமபதத்தைச் சொல்லுகிறதாய், தேஹத்தைப் பற்றிவரும் ஆத்யாத்மிகம், தெய்வச் செயலால் வரும் ஆதி$_4$தைவிகம், மற்ற பூதங்களால் வரும் ஆதிபௌதிகம் என்னும் மூன்றுவகைத் துன்பங்களாலும் வருந்துகின்றவர்

யால் ஊர்த்4வப4ாக3மானது, "த்வதீ3ஹாகு3ணவிப4வ பரிஜ்ஞாபனைஸ் த்வத்பத3ாப்தெள பரிக்ஷீயதே" என்று சொல்விற்றுகிறது. "ஈஹாகு3ணவிப4வ பரிஜ்ஞாபனை:" என்கிற விடத்தில் உபாஸநம் கண்டிலோமே என்னில்: உபாஸநமாகிறது.- த்வதீ3ஹாகு3ணவிபவங்களினுடைய அவிச்சி2ந்நாநுஸந்த4ாநமாகையாலே அத்தை அறிந்தபோதே உபாஸநமும் சொல்விற்றுய்விட்டது. ஆக, இத்தால் **"नता: स्म सर्ववचसां प्रतिष्ठा यत्र शाश्वती"** (நதா:ஸ்ம ஸர்வவசஸாம் ப்ரதிஷ்ட2ா யத்ர ஶாஶ்வதீ) என்றும், **"वेदे रामायणे पुण्ये भारते भरतर्षभ। आदौ मध्ये तथान्ते च विष्णुः सर्वत्र गीयते"** (வேதே3 ராமாயணே புண்யே ப4ாரதே ப4ரதர்ஷப4। ஆதெ3ள மத்4யே தத2ாந்தே ச விஷ்ணு: ஸர்வத்ர கீ3யதே||) என்றும், **"विष्णुनामा स वेदेषु वेदान्तेषु च गीयते"** (விஷ்ணுநாமா ஸ வேதே3ஷு வேத3ாந்தேஷு ச கீ3யதே) என்றும் சொல்லுகிறபடி ஸகலவேத3 வேத3ாந்தங்களில் அவனே ப்ரதிபாத்3யன் என்று சொல்விற்று.

களுக்கு, அத்துன்பங்கள் நீங்குவதற்காகப் பரமபதத்தை அடைவதைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். இவ்வண்ணமாக வேதத்தின் உத்தரபாகம் உம்முடைய குணசேஷ்டித விபூதிகளை அறிவிப்பதன் மூலம் உம் திருவடிகளை அடைவிப்பதில் தலைக்கட்டுகிறது என்று சொன்னதாகிறது. "சேஷ்டிதம், குணம், விபூதி ஆகியவற்றை அறிவிப்பதில்" என்றதில் பகவத்ப்ராப்திஸாதனமான உபாஸனத்தைச் சொல்லக்காணோமே எனில்: உபாஸனமாவது,— பகவானுடைய குணவிபூதி சேஷ்டிதங்களின் இடையறாத நினைவேயாகையாலே, இவற்றை அறிவிப்பதாகச் சொன்னபோதே உபாஸனமும் சொல்லிற்றுய் விட்டது. ஆக இவ்வளவால், 'எல்லா வாக்குகளும் எங்கு எப்போதும் நிலைநிற்கின்றனவோ, அந்த பவவத் ஸ்வரூபத்தை வணங்குகிறோம்" [வி–பு 1–14–23]] என்றும், "பரதச்ரேஷ்டனே! வேதத்திலும், புண்ணியமான ராமாயணத்திலும், பாரதத்திலும் அடியிலும் நடுவிலும் முடிவிலும் ஆகிய எங்கும் விஷ்ணுவே பாடப்படுகிறான்" [.] என்றும், "விஷ்ணுவென்று பெயரையுடையவனாய் அவன் வேதங்களிலும் வேதாந்தங்களிலும் பாடப்படுகிறான்"[வி 46-4-40]என்றும் சொல்லுகிறபடியே எல்லா வேத வேதாந்தங்களிலும் அவனே சொல்லப்படுபவன் என்று சொல்லிற்றுயிற்று.

இவ்வர்த்தத்தை **“वेदैश्च सर्वैरहमेव वेद्य:”** (வேதை₃ஶ்ச ஸர்வைரஹமேவ வேத்₃ய:) என்று திருத்தேர்த்தட்டிலே ஸர்வலோகஸாக்ஷிகமாகச் சொன்னவனையிட்டே இசைவிக்கிறார். (வேத்₃யோ வேதை₃ஶ்ச ஸர்வைரஹமிதி ப₄க₃வந் ஸ்வேந ச வ்யாசகர்த்த₂) (ஸர்வைர் வேதை₃:) அதீ₄யமானமாயும், விப்ரகீர்ணமாயுமுள்ள க்ருதஸ்ந வேதத்துக்கும் அவனே ப்ரதிபாத்₃யன் என்கிறார். (அஹமிதி) ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வஸமாராத்₄யனாய் ஸர்வப₂லப்ரத₃னானவன் என்கிறார். “ப்ராஹ்மணோ யஜேத” “க்ஷத்ரியோ யஜேத” என்கிற க்ஷத்ரியாதி₃ ஶப்₃த₃ங்கள் தஜ்ஜாதிவிஶிஷ்ட பிண்ட₃த்₃வாரா ஆத்மபர்யந்தமாகிறாப்போலே, அக்₃நீந்த்₃ராதிஶப்₃த₃ங்களும், தத₃தி₄ஷ்டாந ஜீவத்₃வாரா அநுப்ரவேஶத்தாலே நம்மளவிலே பர்யவஸிக்கக்கடவது என்கிறார். (வேத்₃ய:) வாசகஶப்₃த₃மானது வாச்யமான அர்த்த₂பர்யவஸாயியாயல்லது நில்லாமையாலே, **“वचसां वाच्य-**

இவ்வர்த்தத்தை “எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே” [கீதை 15—15] என்று திருத்தேர்த்தட்டிலே எல்லாவுலக முமறியும்படிச் சொன்ன அவனையிட்டே இசைவிக்கிறார் மேலே: (பகவானே! வேதங்கள் எல்லாவற்றாலும் நானே அறியப்படுபவன் என்று தேவரீரே வியாக்கியானம் செய்தீர்.) (எல்லா வேதங்களாலும்) அத்யயனம் செய்யப்படுமவையாயும், கிலமாயும் உள்ள எல்லா வேதத்தாலும் அறிவிக்கப்படுபவன் அவனே என்கிறார். (நானே என்று) ஸர்வாந்தர்யாமியாய், அனைவராலும் ஸர்வகர்மங்களாலும் ஆராதிக்கப்படுபவனாய், ஸர்வகர்மத்துக்கும் பலனளிப்பவனான நானே என்று கருத்து. “ப்ராஹ்மணன் யாகம் செய்யக்கடவன்; க்ஷத்ரியன் யாகம் செய்யக் கடவன்” என்கிற வாக்கியங்களில் ப்ராஹ்மணன், க்ஷத்ரியன் முதலான சப்தங்கள், அந்தந்த ஜாதியோடு கூடிய பிண்டத்தைக் குறித்து, அதன் மூலம் ஆத்மபர்யந்தம் சொல்லுகிறாற்போலே அக்னி, இந்திரன் முதலான சப்தங்களும் அந்த சப்தங்களால் சொல்லப்படும் ஜீவன் மூலமாக, அவர்களுக்கு அந்தர்யாமியான என்னைச் சொல்லக்கடவது என்கிறார். (அறியத்தக்கவன்) ஒருபொருளைச் சொல்லும் சொல், சொல்லத்தக்க பொருளைச் சொல்லியல்லது நில்லாதாகையாலே “வாக்குக்களால் சொல்லத்தக்கவைகளில் மேலானவனாயிப்பவனே” [ஜிதந்தே1–7] என்றும், “சொற்பொருள் விஷ்ணுவே” [வி–பு–1–8–18] என்

मुत्तमं" (வசஸாம் வாச்யமுத்தமம்) என்றும். "अर्थो विष्णुः" (அர்த்தோ விஷ்ணு:) என்றும் சொல்லப்படுகிற நாமே க்ருத்ஸ்நவேதப்ரதிபாத்யன் என்று பகவத்வசநம். (பகவந்) ஜ்ஞாநாதிகுணங்களால் பரிபூர்ணனுகையாலே போக்கடி சொல்லுகையும் உனக்கே பரம் என்கிறுர். (ஸ்வேந ச வ்யாச கர்த்த) மத்யஸ்தரான வைதிகர் சொன்னவளவேயோ? எதிரிகள் முன்பே நீதானே சொல்லிற்றில்லையோ? என்கிறுர்.

5. வராஹபுராணம் வராஹசரமச்லோகம்

स्थिते मनसि सुस्वस्थे शरीरे सति यो नरः।
धातुसाम्ये स्थिते स्मर्ता विश्वरूपञ्च मामजम्॥
ततस्तं म्रियमाणं तु काष्ठपाषाणसन्निभम्।
अहं स्मरामि मद्भक्तं नयामि परमां गतिम्॥

ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே ஶரீரே ஸதி யோ நர:।
தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஶ்வரூபஞ்ச மாமஜம்॥
ததஸ்தம் ம்ரியமாணந்து காஷ்டபாஷாணஸந்நிபம்।
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்॥

பதவுரை:–மநஸி ஸ்திதே (ஸதி)—மனம் (கலக்கமின்றி) நிலைநிற்கையில். ஶரீரே ஸுஸ்வஸ்தே ஸதி—உடம்பு நோயற்று நன்ருயிருக்கையில், தாதுஸாம்யே ஸ்திதே(ஸதி)-வாதம். பித்தம். ச்லேஷ்மம் என்னும் மூன்று தாதுக்களும் ஓரளவாயிருக்கையில், ய: நர:—எந்த மனிதன், விச்வருபம்—

றும் சொல்லப்படுகிற நானே எல்லா வேதத்தாலும் அறிவிக்கப்படுபவன் என்று பகவான் கீதையில் அருளிய வார்த்தையைக் காட்டுகிறுர். (பகவானே) "ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யசஸ: ஶ்ரிய: ஜ்ஞாநவைராக்யயோச்சைவ ஷண்ணாம் பகஇதீரணா" [வி-பு 6-5-74] [பூர்ணமான ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, செல்வம், ஜ்ஞானம், வைராக்யம் ஆகிய ஆறும் 'பக' எனப்படுகின்றன] என்கிறபடியே ஞானம் முதலான ஆறு குணங்களாலும் நிறைந்தவராகையாலே, இதற்கு பதில் சொல்லுவதும் உம்முடைய பொறுப்பே என்கிறுர். (தேவரீரே வியாக்கியானம் செய்தீர்) நடுநிலையிலுள்ள வைதிகர் சொன்னது மாத்திரமோ? எதிரிகள் முன்பே யுத்தபூமியில் தேவரீரே சொல்லவில்லையோ? என்கிறுர்.

உலகை உடம்பாக உடையவனும், அஜம் ச—பிறப்பு (முதலான விகாரங்கள்) இல்லாதவனுமான, மாம்—என்னை, ஸ்மர்த்தா—நினைக்கிறானோ, தத:—பிற்காலத்தில், காஷ்ட₂ பாஷாணஸந்நிப₄ம் — கட்டையோடும், கல்லோடும் ஒத்தவனாய், ம்ரியமாணம்-மரணமடையாநிற்கிற, தம் மத்₃ப₄க்தம்-அந்த என் பக்தனை, அஹம்—நான், ஸ்மராமி—நினைக்கிறேன்: பரமாம்—உயர்ந்த, க₃திம்—பதவியை, நயாமி-அழைத்துச் செல்கிறேன்.

அவதாரிகை—(ஸ்தி₂தே மநஸீத்யாதி₃) அநுப₄ாவ்ய வஸ்துலாப₄த்துக்கு நிரபாயோபாயமான ஆஶ்ரயணகாலத்தையும், ஆஶ்ரயணாதி₄காரியையும், ஆஶ்ரயணப்ரகாரத்தையும், ஆஶ்ரயணீய வ்யக்திவிஶேஷத்தையும், ஆஶ்ரயண ப₂லத்தையும் சொல்லுகிறது இந்த ஶ்லோகத்₃வயம். "ஸ்தி₂தே மநஸி ஸுஸ்வஸ்தே₂ ஶரீரே ஸதி தா₄துஸாம்யே ஸ்தி₂தே" என்று ஆஶ்ரயண காலத்தைச் சொல்லுகிறது. "யோ நர:" என்று ஆஶ்ரயணாதி₄காரியைச் சொல்லுகிறது. "ஸ்மர்த்தா" என்று ஆஶ்ரயணப்ரகாரத்தைச் சொல்லுகிறது. "விஶ்வரூபம் ச மாமஜம்" என்று ஆஶ்ரயணீய வ்யக்தி விஶேஷத்தைச் சொல்லுகிறது. மேல் ஶ்லோகம் ஆஶ்ரயண ப₂லத்தைச் சொல்லுகிறது.

வராஹ சரமச்லோகம்

அவதாரிகை:—அநுபவிக்கத்தக்க வஸ்துவான பரம்பொருளை அடையக் குறையற்ற உபாயமான ஆச்ரயணகாலத்தையும், ஆச்ரயிக்கும் அதிகாரியையும், ஆச்ரயிக்கும் விதத்தையும், ஆச்ரயிக்கத்தக்கவன் யாரென்பதையும், ஆச்ரயிப்பதால் உண்டாகும் பலனையும் சொல்லுகின்றன இவ்விரண்டு ச்லோகங்களும். "மனம் நிலைநிற்கையில் சரீரம் ரோகமில்லாமலிருக்கையில், தாதுக்கள் ஒரேயளவாயிருக்கையில் என்று ஆச்ரயணகாலத்தைச் சொல்லுகிறது, "எந்த மனிதன்" என்று ஆச்ரயிக்கும் விதத்தைச் சொல்லுகிறது. "உலகனைத்தையும் உருவாகக்கொண்டவனும் பிறப்பற்றவனுமான என்னை" என்று ஆச்ரயிக்கத்தக்கவன் யாரென்பதைச் சொல்லுகிறது. இரண்டாவது ச்லோகம் முழுவதும் ஆச்ரயிப்பதால் உண்டாகும் பலனைச்சொல்லுகிறது

வ்யா:—(மநஸி ஸ்தி₂தே) மநஸ்ஸானது எது? அதுக்கு அவஸ்தானமாவது எது? என்னில்: மநஸ்ஸானது - அநாதி₃ காலபாபவாஸநையாகிற மஹாவாதத்தாலே ப்ரேரிதமாய். தனக்கு ஆவாஸபூ₄மியான ஹ்ருத₃யகு₃ஹையில் க்ஷணகாலம் தங்கப்பெருதே கண்ட விஷயங்களிலே மண்டிப் * புக்குத் திரியாமல் நிர்விஷயமாகை. ஆக, இதில் மநஸ்ஸினுடைய விஷயாதீ₄னமான அங்யபரதை தவிர்ந்தபடி சொல்லுகிறது. அநந்தரம் ஶரீராலஸ்யநிப₃ந்தனமான மநஸ்ஸினுடைய அங்யபரதாஶாந்திக்கு ஹேது சொல்லுகிறது,- (ஶரீரே ஸுஸ்வஸ்தே ஸதி) என்று; ஶரீரம் ஸ்வஸ்தமாய் அழகிதான வளவிலே, வ்யாதிநாமாகரமாயிறே ஶரீரமிருப்பது. அந்த வ்யாதி₄களில் ஒன்று தலையெடுத்ததாகில், தஜ்ஜநிதமான து₃:க்கா₂நுபலத்திலே உபக்ஷீணமாகையாலே ப₄க₃வத்விஷயத்துக்கு யோக்₃யமாகமாட்டாதிறே நெஞ்சு. ஆகையாலே. ஶரீராலஸ்யநிவ்ருத்தி மநஸ்ஸ்வாஸ்₂த்யத்துக்கு ஹேது.

வ்யா:-(மனம் நிலைநிற்கையில்)மனமாவது எது? அதுநிலை நிற்பதாவது என்ன? எனில்: மனமாவது:—அநாதிகாலமாயுண்டான பாபவாஸனையாகிற புயற்காற்ருலே சுழற்றியடிக்கப்பட்டதாய், தனக்கு இருப்பிடமான இருதயகுஹையில் கணநேரமும் தங்கப் பெருமல் கண்ட கண்ட விஷயங்களிலே மண்டித் திரிவதொரு தத்துவம். அது நிலைநிற்பதாவது:– இப்படிக் கண்டவிஷயங்களிலே மண்டித் திறந்துகிடக்கும் வாசல்தோறும் புகுந்து புறப்படும் நாய்போலே நினைத்தவிடமெல்லாம் புக்குத்திரியாமல் விஷயங்களிலே பற்றற்றிருக்கை. "மனம் நிலைநிற்கையில்" என்றதால், மனம் மற்ற விஷயங்களைப் பற்றி நின்று பகவத் விஷயத்தில் ஈடுபாடில்லாமலிருக்கும் நிலை தவிர்ந்தபடியைச் சொல்லுகிறது: அடுத்தபடியாக, சரீரத்தில் வியாதி காரணமாக மனம் நிலைநில்லாமலிருக்குமிருப்பு தீருகைக்குக் காரணம் சொல்லுகிறது,- (சரீரம் நல்ல ஆரோக்கியத்துடனிருக்கையில்) என்று. சரீரம் நல்ல நிலையில் அழகாயிருக்கையில். வியாதிகளுக்கு இருப்பிடமாயன்ருே சரீரமிருப்பது; அந்த விதியாகளில் ஒன்றுதலையெடுத்ததாகில் அதனுலுண்டான துன்பத்தை அனுபவிப்பதிலேயே மனம் ஈடுபட்டிருக்குமன்ருே. ஆகையாலே சரீரம் ரோகமில்லாமலிருப்பது மனம் நிலைநிற்பதற்குக் காரணமாகிறது.

---

* இங்கு சில பங்க்திகள் நழுவியுள்ளன.

அந்த ஶரீராலஸ்யநிவ்ருத்திக்கு ஹேது சொல்லுகிறது,- (த4ாதுஸாம்யே ஸ்தி2தே) என்று; த4ாதுக்களாவன-வாத பித்தஶ்லேஷ்மங்கள். அந்த த4ாதுக்களுக்கு ஸாம்ய முண்டாகையாவது,- ஒன்றுக்கொன்று ந்யூநாதிரேகமற்று ஒத்திருக்கை. அந்த த4ாதுக்களினுடைய ந்யூநாதிரேகங்கள் வ்யாதி4ஹேது. மூன்றினுடைய ப்ரகோபம் மரணமிறே. ஆகையால் அந்த வ்யாதி4ஹேதுக்கள் தன்னில் ஒத்தவாறே. அவற்றினுடைய நிம்நோந்நதத்தால் வரும் வ்யாதி4 உண்டாகாது. வ்யாதி4 உண்டாகாமையாலே ஶரீரம் ஸ்வஸ்த2மாம். ஶரீரஸ்வாஸ்த்2யத்தாலே மநஸ்ஸ்வாஸ்த்2யம் பிறக்கும்; பின்பு மநஸ்ஸு ஸ்மரணக்ஷமமாம். ஆக, கீழித்தனையாலும் ஸ்மரணகாந்தமான காலவிஶேஷத்தைச் சொல்லிற்று.

அநந்தரம் ஸ்மரணாதி4காரியைச் சொல்லுகிறது,- (யோ நர:) என்று; நரஶப்3த3ம் மநுஷ்யவாசீ; இதிலே தே3வதைகளையும் உபலக்ஷிக்கிறது. இத்தால் ப4க3வத் ஸமாஶ்ரயணத்துக்குக் கரணபாடவமே அபேக்ஷிதம் என்ற

சரீரம் அப்படி வியாதியில்லாமலிருப்பதற்குக் காரணம் சொல்லுகிறது; (தாதுக்கள் ஸமநிலையிலிருக்கும்போது) என்று; தாதுக்களாவன,-வாதம், பித்தம், ச்லேஷ்மம் எனப்படுபவை. அந்த தாதுக்கள் ஸமநிலையிலிருப்பதாவது,—ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வில்லாமல் ஒத்திருக்கை. இந்த தாதுக்கள் ஏற்றத்தாழ்வோடிருக்கை வியாதிக்குக் காரணம். மூன்றும் தாறுமாறாக ஆகிவிட்டால் மரணமே ஏற்பட்டுவிடுமன்றோ. ஆகையால், வியாதிக்குக் காரணமான அவை ஒன்றுக் கொன்று ஒத்திருக்கும்போது, அவற்றின் ஏற்றத்தாழ்வால் வரும் வியாதி உண்டாகாது. வியாதியுண்டாகாமையாலே சரீரம் நல்ல நிலையிலிருக்கும். சரீரம் நல்ல நிலையிலிருந்தால் மனமும் நல்ல நிலையிலிருக்கும். நல்ல நிலையிலிருக்கும் மனமே பகவத் விஷயத்தை நினைக்கவல்லதாகும். ஆகக் கீழ்ச்சொல்லப்பட்ட எல்லாவற்றாலும் பகவானை நினைப்பதற்கு உரியகாலத்தைச் சொல்லிற்றாயிற்று.

அடுத்தபடியாக, நினைக்கும் அதிகாரியைச் சொல்லுகிறது,-(எந்த மனிதன்) என்று. நரசப்தம் மனிதனைச் சொல்லுகிறது. நரசப்தத்தாலே தேவதைகளை உபலக்ஷணமுறையாலே காட்டுகிறது. இத்தால், பகவானை ஆச்ரயிப்பதற்குக் கரணங்கள் நன்றாயிருப்பதொன்றே வேண்டியது

தாயிற்று. வக்ஷ்யமாணமான ஸ்மரணத்துக்கு ஜந்மவ்ருத்தாதிகள் அப்ரயோஜகங்கள்; ஏதேனும் ஜந்மமாகவுமாம், வ்ருத்தமாகவுமாம்,- கரணபாடவமும் ருசியுமே வேண்டுவது.

(ஸ்மர்த்தா) ஸ்மரணமாவது,-ஒரு ஜ்ஞாநவிசேஷம். மேல், "விஶ்வரூபம்" என்று சேஷித்வத்தையும், "நயாமி" என்று உபாயத்வத்தையும், "பரமாம் கதிம்" என்று உபேயத்வத்தையும் சொல்லுகையாலே இம்மூன்றும் இந்த ஸ்மரணத்துக்கு விஷயமாகக்கடவது. ஆகவித்தால் ஆஶ்ரயணப்ரகாரம் சொல்லிற்றாயிற்று.

அநந்தரம் ஆஶ்ரயணீயவஸ்துவைச் சொல்லுகிறது,—(விஶ்வரூபம்) என்கிறபதம். விஶ்வத்தையும் தனக்கு ரூபமாக உடையவன் விச்வரூபியாகிறான். இவன் விஶ்வசரீரியாயிருக்குமாகில், உபயகதமான தோஷமும் ஸ்பர்சியாதோ?

என்றதாயிற்று. அடுத்தபடியாகச் சொல்லப்போகும் நினைவுக்குக் குடிப்பிறப்பு, ஒழுக்கம், நற்குணங்கள் முதலானவை காரணமன்று. ஒருவன் எந்தக்குலத்தில் பிறந்தாலும் சரி; எவ்வொழுக்கமுடையவனாயினும் சரி; எக்குணத்தை உடையவனாயினும் சரி, சரீரமும் மனம் முதலான இந்திரியங்களும் நல்லநிலையிலிருப்பதும், நினைக்கவேணும் என்னும் ருசியுமே வேண்டியது.

(நினைக்கிறான்) நினைப்பதாவது,-அறிவில் ஒருவகை. அதாவது:- "அவனே உபேயமும் உபாயமும்" என்று நினைக்கும் ப்ரபத்தி. மேலே, "உலகை உருவாகக்கொண்டவனை" என்று பரமபுருஷனுடைய ஸ்வாமியாயிருக்கும் தன்மையும், "நான் அழைத்துச் செல்லுகிறேன்" என்று பகவானே உபாயமென்பதும், "மேலான கதியை" என்கையாலே அவனே ப்ராப்யமென்பதும் சொல்லுகையாலே இம்மூன்றையும் இவ்வதிகாரி நினைக்கவேண்டும் என்றதாகிறது. ஆக, இதனால் ஆச்ரயிக்கவேண்டிய விதம் சொன்னதாயிற்று.

அடுத்தபடியாக, ஆச்ரயிக்கத்தக்கவன் யாரென்று சொல்லுகிறது,-(விச்வரூபனை) என்கிற பதம். "'விச்வம்' எனப்படும் எல்லாவற்றையும் தனக்கு ரூபமாக உடையவனாகையால் விச்வரூபனாகிறான். இவன் சேதனம், அசேதனம் எனப்படும் எல்லாவற்றையும் சரீரமாகக்கொண்டவனாகில்,

என்னச்சொல்லுகிறது.-(அஜம்)ஜநநமரணாதி₃ஶூந்யம்.இந்த ஜநநம் ஶரீரத₄ர்மமான ஷட்₃பா₄வவிகாரங்களுக்கும், ஆத்ம த₄ர்மமான அஜ்ஞாநது₃:க்கா₂திகளுக்கும் உபலக்ஷணம். (ச) இச்சேதனனுடைய ஹிதாஹிதஜ்ஞாந விஶேஷத்தையும், ஜ்ஞாநாநுகு₃ணமாகக் கார்யம் தலைக்கட்டுகைக்கு ஈடான ஶக்தியையும், த₃யையும் கணிசிக்கிறது. (மாம்) என்னை யென்றபடி. அஸாதா₄ரணவிக்₃ரஹத்தை அஸ்மதா₃தி₃கள் கண்ணுக்கு விஷயமாக்கிக்கொண்டு நிற்கிற ஸௌலப்₄யத் தையும், "மானமிலாப்பன்றி" என்று அத்யந்தநிஹீநமான வராஹஜந்மத்திலே அத்யபி₄நிவிஷ்டனும்படியான ஸௌஶீல் யாதிஶயத்தையும் மூதலித்துக் காட்டினபடி.

அநந்தரம் "தத:" இத்யாதி₃ ஶ்லோகத்தாலே, ஆஶ்ர யித்தவனுக்கு ஈஶ்வரன் உண்டாக்கும் ப்ரயோஜந விஶே

அவ்விரண்டு வகைப்பட்டவற்றிலுமுள்ள தோஷங்களெல்லாம் இவனைத் தொடாதோ? என்னில்,-(பிறப்பற்றவனை) பிறப்பு இறப்பு முதலான விகாரமற்றவனை. பிறப்பு என்றது சரீரத்தின் தன்மையான பிறப்பு, இறப்பு, இருத்தல், வளர்தல், குறைதல், பரிணமித்தல் என்னும் ஆறு விகாரங்களையும், ஆத்மாவின் தன்மையான அஜ்ஞாநம், துன்பம் முதலான வற்றையும் உபலக்ஷணமுறையாலே காட்டுகிறது. (ச-உம்) என்னும் உம்மை, ஸர்வேச்வரன் இந்த ஜீவனுடைய நன்மை தீமைகளை அறிந்த வன் என்பதையும், அப்படி அறிந்ததற்கேற்பத் தீமைகளை விலக்கி நன்மை களைப் பெருக்கி இவனுடைய காரியங்களை முடிக்கக்கூடிய சக்தியையுடைய வனென்பதையும், மிகவுயர்ந்த தான் மிகத்தாழ்ந்த இவனுடைய காரி யத்தைச் செய்யக்கூடிய கருணையை உடையவனென்பதையும் காட்டுகிறது. இத்தால் ஆஶ்ரிதகார்யாபாத₃க குணங்கள் காட்டப்பட்டன. (என்னை) தனக்கேயுரிய அப்ராக்ருத திவ்யமங்களவிக்ரஹத்தை நம்மைப்போல்வார் கண்ணுக்கு இலக்காக்கிக்கொண்டு நிற்கிற ஸௌலப்யத்தையும், "மான மிலாப்பன்றி" [நாச்-திரு 11-8] என்கிறபடியே மிகத்தாழ்ந்த வராஹஜாதி யிலே மிகவும் ஈடுபாட்டுடன் ப்றந்த ஸௌசீல்யகுணத்தையும், வாத் ஸல்யகுணத்தையும் நிருபித்துக்காட்டுகிறார். இத்தால் ஆச்ரயண ஸௌகர்யாபாத₃ககுணங்களைச் சொன்னபடி.

அடுத்தபடியாக, "தத:" என்று தொடங்கும் இரண்டாவது ச்லோ கத்தாலே தன்னை அடைந்தவனுக்கு ஸர்வேச்வரன் கொடுக்கும் பலனைக்

ஷத்தைச் சொல்லுகிறது. (தத:) பின்பென்றபடி. இத்தால், ஸ்ம்ருதியினுடைய நைரந்தர்யத்தைக் கழிக்கிறது. (தம்) ''ஸமர்த்தா'' என்கிறபடியே என்னையே உபாயோபேயமாக அத்₄யவஸித்த அதி₄காரியை. இவனுக்குப் பலங்கொடுப்பது எப்போதோ? என்னில்: (ம்ரியமாணம்) மரணோந்முக₂மான ஸமயத்திலே. ஶுஶப்₃த₃ம் ஸாத₄கனிற்காட்டில் இவ்வதி₄காரிக்கு வக்ஷ்யமாணமான விஶேஷத்தை த்₃யோதிப்பிக்கிறது. அந்த விஶேஷமென்? என்னில்: (காஷ்ட₂பாஷாண ஸந்நிப₄ம்) ஜ்ஞாநஸம்ஸர்க்க₃ ஶூந்யமான காஷ்ட₂பாஷாணங்களோடு ஒத்திருக்க அமையும்.

ஶாஸ்த்ரம் அந்திமஸ்ம்ருதிகொண்டு உஜ்ஜீவிக்கவேணும் என்று சொல்லாநிற்க, அந்திமஸ்ம்ருதியொழிய உஜ்ஜீவிப்பிக்கக்கடவன் என்கை ஶாஸ்த்ரவிருத்₃த₄மன்றோ? என்னில்: 'அதுவும் அப்படியே; இந்த அம்ஶம் என்னது' என்கிறார்.-

---

காட்டுகிறது. (பின்பு) இத்தால், பக்தியோகத்தைப்போலே, ப்ரபத்தியாகிற இந்நினைவு இடைவிடாமல் செய்யவேண்டியதொன்றன்று என்று காட்டுகிறது. (அவனை) ''நினைக்கிறேன்'' என்று என்னையே உபாயமாகவும் உபேயமாகவும் அறுதியிட்ட அதிகாரியை. இவனுக்குப் பலங்கொடுப்பது எப்போது? எனில்: (மரணமடையின்றவனை) மரணமடையும் ஸமயத்திலிருக்கும்போது பலனளிக்கிறேன். (து-எனில்) என்னும் சப்தம் பக்தியோகநிஷ்டனைக்காட்டிலும் இவ்வதிகாரிக்குச் சொல்லப்போகும் விசேஷத்தைக் காட்டுகிறது. அந்த விசேஷம் யாதெனில்: (கட்டையையும் கல்லையும் போலிருப்பவனை) ஞானஸம்பந்தமேயில்லாத கல்லையும் கட்டையையும் போல் இவனிருந்தாலும் நான் பலன் கொடுக்கிறேன். பக்தியோகநிஷ்டனுக்குப்போலே பலனைப்பெற இவனுக்கு அந்திமஸ்மிருதி அவசியமில்லை என்று கருத்து.

சாஸ்திரங்கள் மரணமடையும்போது மோக்ஷமடையும் ஜீவன் பரமனை நினைத்தேயாக வேண்டும் என்று சொல்லும்போது. அந்த அந்திமஸ்மிருதியில்லாமலே இவனை உய்விப்பேன் என்பது சாஸ்திரவிருத்தமன்றோ? எனில்: அது மற்ற உபாயங்களைப் பற்றியவர்களுக்காகச் சொன்னது. என்னையே உபாயமாகப் பற்றுவார்க்கு நான் விசேஷித்துச் செய்யும் அம்சம்

(அஹம் ஸ்மராமி) என்று. அபேக்ஷித ஸ்மரணத்துக்குக் கர்த்தா நானே; க்ருஷ்யம்ஶம் கர்ஷகனுக்கன்றே. (ஸ்மர்த்தா) இவன் ஒருகால் ஸ்மரித்தானாகில், அநவரதபாவநை பண்ணக் கடவேன். நீ இப்படி மேல்விழுந்து நினைக்கைக்கு இவன் பக்கல் தன்னேற்றமென்? என்னில்: (மத்பக்தம்) எனக்கு நல்லவனன்றே. 'மத்பக்தம்' என்று ப்ரபந்நாதிகாரியைச் சொல்லுகிறது. ஆக, என் பக்கலிலே அநந்யப்ரயோஜந பக்தியை உடையவனாகையாலே, அவன் காஷ்டபாஷாண ஸந்நிபனேயாகிலும் நான் ஸ்மரிப்பன். இங்குச்சொல்லுகிற ஸ்மரணமாவது.— இவன் தன் கார்யத்தில் கைவாங்கி நம் பக்கலிலே தன் ஸர்வபரங்களையும் ஸந்யஸித்தான். ஆன பின்பு, இவன் கார்யமடைய நமக்கே பரம்: இவன் இன்னமொருகால் உத்க்ராந்திக்லேஶமநுபவித்தல், யமன் முகத்திலே விழித்தல், கர்ப்பகுஹையிலே கிடத்தல்

இது என்கிறார் (நான் நினைக்கிறேன்) என்று. கடைசியில்நினைவுதானே வேண்டியது; அவனால் நினைக்கமுடியாவிடில் நான் நினைத்துவிட்டுப் போகிறேன். அவனைப் பெறுவது என் பலனாயிருக்க நான் நினைக்காமல் யார் நினைப்பது? பயிரைப் பெறும் குடியானவனன்றோ உழவேண்டும்? பயிரா உழும்? (ஒருகால் நினைக்கிறான்— எப்போதும் நினைக்கிறேன்) அங்கு இறந்தகாலத்தையும், இங்கு நிகழ்காலத்தையும் பிரயோகிக்கையாலே, அவன் ஒருகால் என்னை நினைத்ததற்குக் கைமாறாக நான் எப்போதும் அவனை நினைக்கக்கடவேன். "நீ இப்படி மேல்விழுந்து அவனை நினைக்கைக்கு இவனிடம் உள்ள பெருமையென்ன?" எனில்: (என்பக்தனை) எனக்கு நல்லவனன்றோ அவன். அனைவரிலும் விஞ்சிய அன்புடையவனாகையாலே 'பக்தன்' என்று ப்ரபத்திநிஷ்டனான அதிகாரியைச் சொல்லுகிறது. ஆக, என்னிடம் என்னைத்தவிர வேறுபயனைவிரும்பாத பக்தியையுடையவனாகையாலே அவன் கட்டையையும் கல்லையும்போலே அறிவற்றவனான போதிலும் நான் நினைக்கிறேன்என்கை. 'நான் நினைக்கிறேன்' என்று இங்கு சொல்லுகிற நினைவாவது.— "இவன் தன் காரியங்களில் முயலாமல் நம்மிடம் தன் எல்லாச் சுமைகளையும் இறக்கிவைத்தான். ஆகையால் இவன் காரியமெல்லாம் நமக்கே பொறுப்பு. இவன் இன்னமொருதடவை மரணவேதனையை அநுபவிப்பதும், யமன்முகத்தில் விழிப்பதும், கர்ப்பக்

செய்யாதே, இவன் நித்யகைங்கர்யம் பண்ணி, நித்யாநந்தி₃யாகவேணும் என்கிற ஸங்கல்பம்.

(நயாமி பரமாம் க₃திம்) என்றது, பரமப்ராப்யப்ரகாரத்தைச் சொல்லுகிறது. (பரமாம் க₃திம் நயாமி) பரமையான க₃தியைக்கொண்டு ஸ்வீகரிப்பிக்கக்கடவன். க₃தியாவது—"க₃ம்யத இதி க₃தி:" என்கிற வ்யுத்பத்தியிலேயாய், ப்ராப்யத்தைச் சொல்லுகிறது. அதில் பரமக₃தியாவது,— அதுக்கு அவ்வருகில்லாத ப்ராப்யம். அதாவது—பரமபுருஷார்த்த₂லக்ஷணமோக்ஷம். நாட்டில் புருஷார்த்த₂மாக வேண்டுவது,—த₄ர்மார்த்த₂காமமோக்ஷம். இவை புருஷார்த்தமாகக் காட்டாமையாலே, அத்தை வ்யாவர்த்தித்து, ஸ்வயம் புருஷார்த்த₂மாய் ஸ்வரஸமாய், நிரதிஶயமான ப₄க₃வத்கைங்கர்யரூபமான பரமப்ராப்யத்தைச் சொல்லுகிறது, (நயாமி) அந்த ப்ராப்யத்தை ப்ராபிக்குமிடத்தில் ஆதி

குழியிலே கிடப்பதும் செய்யாமல் நித்யகைங்கரியம்பண்ணி நித்யானந்தத்தை உடையனாகவேணும்" என்கிற ஸங்கல்பம்.

(மேலான கதிக்கு அழைத்துச் செல்லுகிறேன்) என்று இவனுக்குத் தரும் மேலான ப்ராப்யம் எப்படிப்பட்டது என்று சொல்லுகிறது. (மேலான கதிக்கு அழைத்துச் செல்லுகிறேன்) மேலான கதியை நானே அழைத்துச் சென்று அவனை ஏற்றுக்கொள்ளச் செய்வேன். கதியாவது,— "அடையப்படுகிறதாகையாலே கதியெனப்படுகிறது" என்கிற வ்யுத்பத்தியாலே அடையத்தக்க ப்ராப்யத்தைச் சொல்லுகிறது. அதில் பரமகதியாவது,— இதற்குமேலில்லை எனத்தக்க ப்ராப்யம், அதாவது,— பரமபுருஷார்த்தமாகிற பகவத்கைங்கர்யத்தையே நிரூபகமாகக் கொண்ட மோக்ஷம். உலகத்தில் மனிதர் புருஷார்த்தமாக வேண்டுவது,—அறம் பொருள் இன்பம் வீடு என்னும் தர்மார்த்தகாம மோக்ஷங்கள். அந்த அறம் பொருளின்பங்களும், ஸம்ஸாரமோக்ஷமும் மேலான ப்ராப்யமாக மாட்டாவாகையாலே, "பரமாம்கதிம்" என்று இவற்றிலும் வேறுபட்டதாய், தானே புருஷார்த்தமாயிருப்பதாய், இயற்கையில் ரஸமயமாயிருப்பதாய், தனக்குமேலில்லாத பகவத்கைங்கர்யரூபமான பரம ப்ராப்யத்தைச் சொல்லுகிறது. (அழைத்துச் செல்லுகிறேன்) அந்த ப்ராப்யத்தை அடைவிக்கும்

வாஹிகர்கள் கையிலே காட்டிக்கொடேன். அத்தவாளத் தலையாலே முட்டாக்கிட்டு நானே கொண்டுபோகக் கடவேன். லங்காஜநபத₃த்திலிருந்த பிராட்டியைப் புஷ்ப கத்தின் மேலே தானே எடுத்து வைத்துக்கொண்டு போனாற் போலே காணும் இவ்வாத்மாவைக் கொண்டுபோம்படியும்.

6. மஹாபாரதம் ஸபா₄பர்வம்
90-வது அத்தியாயம், 43-வது ச்லோகம்
த்₃ரௌபதீ₃ ஶரணாகதி ஶ்லோகம்

शङ्खचक्रगदापाणे द्वारकानिलयाच्युत।
गोविन्द पुण्डरीकाक्ष रक्ष मां शरणागताम्॥

ஶங்க₂சக்ர க₃த₃ாபாணே த்₃வாரகாநிலயாச்யுத।
கோ₃விந்த₃ புண்ட₃ரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாக₃தாம்॥

பதவுரை:—ஶங்க₂சக்ரக₃த₃ாபாணே—சங்கு சக்கரம் கதை என்னும் ஆயுதங்களைத் திருக்கைகளிலே உடையவனே; த்₃வாரகாநிலய—துவாரகையில் வாழ்பவனே! அச்யுத—அடியாரை நழுவவிடாதவனே! கோவிந்த—கோவிந்தனே! புண்ட₃ரீகாக்ஷ— தாமக்கண்ணனே! ஶரணாக₃தாம்— சரணமடைந்திருக்கிற, மாம்— என்னை, ரக்ஷ— காப்பாற்றவேணும்.

போது மற்றவரைப்போல் ஆதிவாஹிகர்களையிட்டு அழைத்துவரச் செய்ய மாட்டேன். நான் யாரென்று தெரியாமைக்காக அத்தவாளம் என்னும்மேற் கட்டித்தலைப்பாலே முட்டாக்கிட்டுச்கொண்டு நானே அவனை அழைத்துச் செல்லுவேன். லங்காராஜ்யத்திலிருந்த பிராட்டியைப் புஷ்பகத்தின்மேலே தானே எடுத்துவைத்துக்கொண்டு போனாற்போலே காணும் இவ்வாத்மாவை ஸர்வேச்வரன் பரமபதத்திற்குக் கொண்டுபோம்படியும்.

த்ரௌபதீ சரணாகதி ச்லோகம்

த்ரௌபதீ ப்ரபத்தி ஸித்தாஞ்ஜநம்

न वादान्नापि सङ्घर्षान्नाधिक्यान्न च कामतः।
वक्ष्यामि वचनं प्राज्ञाः यथार्थं गुरुगौरवात्॥

ந வாத₃ாந்நாபி ஸங்க₄ர்ஷாந்நாதி₄க்யாந் ந ச காமத:।
வக்ஷ்யாமி வசநம் ப்ராஜ்ஞா: யதா₂ர்த்த₂ம் கு₃ருகௌ₃ரவாத்॥

[அறிவாளிகளே! வாதம் செய்யவேண்டுமென்றல்ல; பொருமையாலுமல்ல; பெருமைபெறவேண்டுமென்றுமல்ல; மனம்போனபடியுமல்ல. ஆசாரியர்களிடமுள்ள கௌ₃ரவ பு₃த்தியாலே உண்மையான வார்த்தையைச் சொல்லுகிறேன்.]

த்ரௌபதி சரணாகதிச்லோகத்தின் வ்யாக்யானத்தை விவரிக்கும் முன்பு த்ரௌபதி சரணாகதியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம்.

த்ரௌபதி ப்ரபத்தியைப்பற்றி ஒரு நூறாண்டுகாலமாகத் தென்னாசார்ய ஸம்பிரதாய நூல்களில் சில கருத்து வேற்றுமைகள் விளைந்துள்ளன. அவற்றையெல்லாம் நடுநிலை நின்று ஆராய்ந்து, பூர்வாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகள் எல்லாவற்றுக்கும் பொருந்தும் கருத்தைத் தெரிவித்துவிட்டுத் தனிச்லோக வ்யாக்யான விவரணத்தைத் தொடர்வோம்.

1. த்ரௌபதிப்ரபத்தியானது புருஷகார பலமில்லாமையாலே பலிக்கவில்லை என்று சில மஹான்கள் கருதுகிறார்கள். உதாஹரணமாக, ஸ்ரீவசநபூஷணம் (31–வது வாக்கியம்) எம்பார் ஜீயர்ஸ்வாமி யரும்பதத்தில் இக்கருத்து காணப்படுகிறது. இப்படிக்கொள்வது தனிச்லோக வ்யாக்யானத்தில் பெரிய வாச்சான் பிள்ளை த்ரௌபதிசரணாகதியானது யாதொரு குறையுமற்றதென்றும், புஷ்கலமானதென்றும், அந்த சரணாகதிக்குப் பரமபுருஷன் பலனளித்தான் என்றும் பலவிடங்களில் அருளியிருப்பதற்குப் பொருந்தாது. இங்கு திரௌபதிக்கு "ஜ்ஞாதம் மயா வஸிஷ்டே₂ந புரா கீ₃தம்" என்று பரமாசார்யரான வஸிஷ்டரின் ஸ்மரணமுள்ளதாகையாலும் மேல் ச்லோகமொன்றில், "ஹே ரமாநாத₂" என்றுள்ளதாகையாலும் புருஷகாரபுரஸ்ஸரணம் உள்ளதென்றே கொள்ளலாம். இவை புருஷகார புரஸ்ஸரணமாகாதெனிலும், புருஷகாரபுரஸ்ஸரணம் சாப்தமாகவே இருக்கவேணும் என்னும் நிர்ப்பந்தமில்லை. கஜேந்திர சரணாகதி முதலான

பலவிடங்களில் பலஸித்தியைக் கொண்டு அர்த்தபலத்தாலே புருஷகார புரஸ்ஸரணத்தைக் கற்பித்துக்கொள்வதுபோலே இங்கும் கற்பித்துக் கொள்ளலாம். மோக்ஷம் தவிர்ந்த மற்ற பலன்களைக் குறித்த ப்ரபத்திகளுக்கு புருஷகாரமே வேண்டியதில்லை என்று சில மஹனீயர்கள் கூறுவதும் சரியல்ல. பிராட்டி ஸந்நிதியாலே காகாஸுரன் தலைபெற்றான் என்றும், அவள் அருகிலில்லாமையாலே ராவணன் தலையிழந்தான் என்றும் ஆசாரியர்கள் நிரூபிக்கையாலே. ஆக இவ்வளவால் புருஷகார பலமில்லாமையாலே த்ரௌபதீப்ரபத்தி பலிக்கவில்லை என்றது பொருந்தாது என்றதாயிற்று.

2. இனி, த்ரௌபதீப்ரபத்திக்குக் கிடைத்த பலன்கள் யாவை? எப்போது கிடைத்தன? என்னும் கேள்விகள் எழுகின்றன. ''ரக்ஷமாம்'' என்ற பதங்களின் வியாக்கியானத்திலே, ''ரக்ஷிக்கையாவது ;— விரோதியைப் போக்குகையும், அபேக்ஷிதங்களைக் கொடுக்கையும்'' என்றும், ''சரணாகதாம்'' என்ற பதத்தின் வியாக்கியானத்தில், ''இவளுக்கு வஸ்த்ர வர்த்தனமும் சத்ருஸம்ஹாரமும் அபேக்ஷிதம்'' என்றும் பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்தார். இதிலிருந்தும் மற்றுமுள்ள வ்யாக்யான ஸ்ரீஸூக்திகளிலிருந்தும் ப்ரபத்திக்குப் பலனாக வஸ்திர விருத்தியையும் கூராராழி வெண்சங்கேந்தி வந்தருளி முகங்காட்டுகையையும், மயிர் முடித்தலையும், கண்ணாலே அலரவிழித்துக் குளிர நோக்குதலையும், மற்றும் அரசினையளித்தல் முதலான இஷ்டப்ராப்திகளையும், நூற்றுவரை மரணமடைவித்தல் முதலான அநிஷ்டநிவ்ருத்திகளையும் இவள் விரும்பினாள் என்று தெளிவாகிறது. கோவிந்தநாம வ்யாக்யானத்தில், ''இவளுக்குப் புடைவை சுரக்கும் திருநாமமிருக்கும்படி'' என்று புடைவை சுரந்ததைத் திருநாமத்தின் பலனாக அருளிச் செய்தார். (இதையடியொற்றியே பிள்ளை லோகாசார்யரும் முமுக்ஷுப்படியில் வஸ்திரவிருத்தியைத் திருநாம ஸங்கீர்த்தனத்தின் பலனாக அருளிச் செய்தார். திருவாய்மொழி (3–3–6) ஈட்டிலும் ''நம் பேர்தன் காரியம் செய்ததித்தனை போக்கி, நாம் இவளுக்கு ஒன்றும் செய்திலோமிறே'' என அருளிச் செய்யப்பட்டது.) மற்ற பலன்களெல்லாம் ப்ரபத்தியின் பலனாகப் பின்பு கிடைத்தன என்றும் தனிச்லோக வ்யாக்யானத்தில் பலவிடங்களில் அருளிச் செய்தார். புடைவை சுரந்ததைத் திருநாமஞ்சொன்னதின் பலனாக அருளிச் செய்ததற்கும், மற்ற பலன்கள் நீண்டநாள் கழித்து சரணாகதியின் பலனாகக் கிடைத்ததாக அருளியதற்கும் காரணம் என்னவென்று ஆராயவேண்டியது அவசியமாகிறது.

3. இவ்விடத்தில் சில மஹான்கள் கருதுவதாவது :— ''முமுக்ஷுப்படி முதலானவிடங்களில் திருநாமஸங்கீர்த்தனத்தின் பலனாகப் புடைவை சுரந்ததாக அருளியது திருநாமஸங்கீர்த்தனம் என்னும் உபாயாந்தரத் தாலே த்ரௌபதிக்குப் புடைவை கிடைத்தது என்னும் கருத்திலேயன்று ; ப்ரபத்தி செய்பவர்கள் பல திருநாமங்களையும் ஸங்கீர்த்தனம் செய்வதுண் டாகையாலே, திருநாமஸங்கீர்த்தனம் ப்ரபத்தியின் ஒரு சிறு அம்சமாகவே ஆகிறது. ப்ரபத்தியின் அவயவமாயிருக்கும் ஒரு கோவிந்தநாமமே புடை வையைச் சுரந்துவிட்டது; ப்ரபத்தியின் மற்றபலன்களை நிரங்குசஸ்வதந்திர னான பரமபுருஷன் பிற்காலத்தில் கொடுத்தான். ஆகையால் எல்லாப் பலன் களும் ப்ரபத்தியாலேயே கிடைத்தன என்று கொள்ளக்குறையில்லை'' என்று.

4. இந்தப் பக்ஷத்தில் பல அஸ்வாரஸ்யங்கள் வருகின்றன. முமுக்ஷுப் ப்படி ஸ்ரீ ஸூக்திகள் பொருளற்றவையாகின்றன என்பது அவற்றிலே முக்கி யமான அஸ்வாரஸ்யம். அதாவது:— ''வாச்ய ப்ரபாவம் போலன்று வாசக ப்ரபாவம்'' என்பது முமுக்ஷுப்படியில் பதினொலாவது ஸூத்ரம். இதன் பொருளாவது:—வாச்யனான பகவானைக் காட்டிலும் வாசகமான திருநாமம் பெருமையில் விஞ்சியது என்கை. ''அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும்'' என்பது அடுத்த ஸூத்ரம். இதன் பொருளாவது:— ''அவ் வெம்பெருமான் உதவாத தசையிலும் திருநாமம் உதவும்'' என்பது. இதை எங்கே கண்டோம் என்னும் கேள்வி எழக்கூடும். ''த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே'' என்னும் அடுத்த ஸூத்ரம் இதற்கு பதிலுரைக்கிறது. அதாவது :— எம்பெருமான் உதவாத தசையி லும் த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமஸங்கீர்த்தன மேயன்றோ என்று கூறுகிறது. இதிலிருந்து த்ரௌபதிக்கு எம்பெருமான் உதவவில்லை என்றும், திருநாமம் உதவிற்று என்றும் தெரிகிறது. நம் ஸம் ப்ரதாயத்தில் திருநாமஸங்கீர்த்தனம் என்பது தனி உபாயமாகக் கொள்ளப் பட்டிருக்கிறது. இங்கு திருநாமம் என்றது ப்ரபத்தியே என்று கொண் டால், ''த்ரௌபதிக்கு எம்பெருமான் உதவவில்லை ; ப்ரபத்தி உதவிற்று'' என்று சொன்னதாகிறது. நம் ஸம்ப்ரதாயத்தில் ப்ரபத்திக்கு உபாயத்வம் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. ப்ரபத்தி உதவிற்று என்றால் எம்பெருமான் உதவினான் என்றே கொள்ளவேணும். ஆகையால், த்ரௌபதிக்கு ப்ரபத் தியே புடைவை சுரந்தது என்னும் பக்ஷத்தில் ''எம்பெருமான் உதவ வில்லை; எம்பெருமான் உதவினான்'' என்று முன்னுக்குப்பின்முரணாகச் சொல்லுவதே முமுக்ஷுப்படி ஸூத்ரங்களின் பொருளாய் முடியும். ஆகையால் ப்ரபத்தியின் ஓர் அம்சமான திருநாமம் புடவை சுரந்தது. என்னும் பக்ஷம் பிள்ளைலோகாசார்யர் உகந்ததாயிருக்கமுடியாது. உபா யாந்தரமான திருநாமஸங்கீர்த்தனத்தின் பலனாகவே த்ரௌபதிக்குப்

புடைவை சுரந்தது என்று பிள்ளைலோகாசாரியரின் கருத்தாகக் கொண்டாலொழிய முன் எடுத்த முமுக்ஷுப்படி ஸூத்ரங்கள் பொருளற்றவையாய் முடியும். தனிச்லோக வ்யாக்யான ஸ்ரீஸூக்திகளும், திருவாய்மொழி (3-3-6) ஈட்டு ஸ்ரீஸூக்திகளும், மற்றும் பல பூர்வாசார்ய ஸூக்திகளும் திருநாம ஸங்கீர்த்தனத்தின் பலனாகவே திரௌபதிக்குப் புடைவை சுரந்தது என்பதை வலியுறுத்துகின்றன. ஆக இவற்றிலிருந்து திரௌபதியானவள் ''சங்கசக்ரகதாபாணே'' என்னும் ச்லோகத்தாலே லஜ்ஜாபுரஸ்ஸரமாக மற்ற உபாயங்களை விட்டுப் பரிபூர்ணமான சரணாகதியைச் செய்தபின்பு; இவளுக்கு மஹாவிச்வாஸம் நிலைத்து நிற்கிறதா என்று பரீக்ஷிப்பதற்காகப் பரமபுருஷன் சிலகணங்கள் தாமதிக்க, அடுத்த க்ஷணத்திலேயே பலன் வரக்காணாமையாலே, கணத்துக்குக் கணம் பெருகிவரும் ஆபத்தாலே அறிவுகலங்கி ப்ரபத்தியிலே மஹாவிச்வாஸம் சிறிது தளரப்பெற்று, “அவனைக்காட்டிலும் விஞ்சிய மஹாப்ரபாவமுள்ள கோவிந்தநாமமாவது நம்முடைய மானத்தையாவது காக்காதா?” என்னும் நினைவுடன் கோவிந்தநாமத்தை உபாயத்வபுத்₃தியுடன் உச்சரித்துவிட்டாள் என்றும், உபாயாந்தர ஸம்ஸர்க்கத்தாலே சணற்கயிறுகண்ட ப்ரஹ்மாஸ்திரம்போலே ப்ரபத்தி தடைபட்டுவிட்டது என்றும், உபாயத்வபுத்தியுடன் உச்சரிக்கப்பட்ட கோவிந்தநாமம் புடைவை சுரந்து, திரௌபதியின் மானத்தைக் காத்தது என்றும் கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

5. மஹாபாரதம் ஸபாபர்வம் [கிருஷ்ணாசார்யர் பதிப்பு 90-வது அத்தியாயம்] த்ரௌபதி சரணாகதிகட்டத்தில், ''சங்கசக்ரகதாபாணே'' என்னும் சரணாகதி ச்லோகத்தைச் சொன்னபின்பு,

''ஹா க்ருஷ்ண த்₃வாரகாவாஸிந் க்வாஸி யாத₃வநந்த₃ந ।
இமாமவஸ்த₂ாம் ஸம்ப்ராப்தாமநாத₂ாம் கிமுபேக்ஷஸே ॥
கே₃ாவிந்த₃ த்₃வாரகாவாஸிந் க்ருஷ்ண கோபீஜநப்ரிய ।
கௌரவை: பரிபூ₄தாம் மாம் கிம் ந ஜாநாஸி கேஶவ ॥
ஹே நாத₂ ஹே ரமாநாத₂ வ்ரஜநாத₂ார்த்திநாஶந ।
கௌரவார்ணவமக்₃நாம் மாமுத்₃த₄ரஸ்வ ஜநார்த்த₃ந ॥
க்ருஷ்ண க்ருஷ்ண மஹாயோகிந் விச்வாத்மந் விச்வப₄ாவந ।
ப்ரபந்நாம் பாஹி கே₃ாவிந்த₃ குருமத்₄யேऽவஸீத₃தீம் ॥''

[பார-ஸபா 90-44...47]

[கிருஷ்ணா! துவாரகையில் வஸிப்பவனே! யாதவரின்பமே! எங்கிருக்கிறாய்? இந்நிலையையடைந்து நாதனற்றுக்கிடக்கும் என்னை ஏன் உபேக்ஷிக்கிறாய்?

கோவிந்தா! துவாரகையில் வஸிப்பவனே! கிருஷ்ணனே! கோபீஜன ப்ரியனே! கேசவனே! கௌரவர்களால் அவமதிக்கப்பட்ட என்னை ஏன் அறிகிருயில்லை? ஸர்வஸ்வாமியே! லக்ஷ்மீநாதனே! ஆய்ப்பாடிக்கரசனே! துக்கநாசனனே! ஜநார்த்தனனே! கௌரவக்கடலிலே அழுந்தும் என்னைக் கைதூக்கி விடுவாய். கிருஷ்ணா! கிருஷ்ணா! மஹாயோகியே! விச்வாத்மாவே! விச்வகர்த்தாவே! கௌரவர் மத்தியிலே வருந்தும் ப்ரபந்நையான என்னைக் காப்பாற்றுவாய் கோவிந்தனே!] என்று தான் விரும்பியது கிடைக்கவில்லையே என்னும் மனக்குறையைப் பலகால் தெரிவிக்கிருள் திரௌபதி. பற்பல நாமங்களை அநுஸந்திக்கிருள். சரணுகதிச்லோகத்தில் ஒருதடவை அநுஸந்திக்கப்பட்ட கோவிந்தநாமத்தை, அதற்குப்பின் இரண்டுதடவை அநுஸந்திக்கிருள். திரௌபதி கடைசியாகச் சொன்ன பகவந்நாமம் கோவிந்த நாமமே என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. "கோவிந்தே₃தி ஸமாபா₄ஷ்ய க்ருஷ்ணேதி ச புந: புந:" [கோவிந்தா என்றும், கிருஷ்ணா என்றும் மறுபடியும் மறுபடியும் சொல்லியழுதாள் திரௌபதி] என்று இப்ரகரணத்தில் ஓரர்த்த₂ம் உள்ளதாகவும் அரும்பத வுரைகளிலிருந்து தெரிகிறது. திரௌபதி இப்படிப் பலகால் கோவிந்த நாமத்தை அநுஸந்தித்ததையும், கடைசியாக அதை உபாயத்வ புத்தியுடன் சொன்னதையும் திருவுள்ளத்திற்கொண்டே, "கோ₃விந்தே₃தி யத₃ாக்ரந்த₃த் க்ருஷ்ணாமாம் தூ₃ரவாஸிநம் ருணம் ப்ரவ்ருத்₃த₄மிவமே ஹ்ருத₃யாந்நாபஸர்ப்பதி" [பார-உத் 47-39] [தூரத்திலிருந்த என்னைக் குறித்து 'கோவிந்தா!' என்று திரௌபதி கதறினது, மிக விருத்தியடைந்த கடன்போலே என் நெஞ்சிலிருந்து அகலுகின்றதில்லை.] என்று கண்ணன் அருளிச்செய்தான் என்பது இவையெல்லாவற்றையும் பார்க்கும் நடுநிலையாளர்க்கு விளங்கும்.

6. வனவாஸத்தின்போது கண்ணபிரான் பாண்டவர்களைப் பார்க்க இரண்டுதடவை வருகிருன். அதில் முதல்தடவை வரும்போது,

"நைவ மே பதய: ஸந்தி ந புத்ரா ந ச பா₃ந்த₄வா: ।
ந ப்₄ராதரோ ந ச பிதா நைவ த்வம் மது₄ஸூத₃ந ॥
யே மாம் விப்ரக்ருதாம் க்ஷுத்₃ரைருபேக்ஷத்₄வம் விஶோகவத் ।
ந ச மே ஶாம்யதே து₃:க்க₂ம் கர்ணோ யத் ப்ராஹஸத் தத₃ா ॥"

[பார-ஆர 12-128, 129]

[எனக்குக் கணவருமில்லை; பிள்ளைகளுமில்லை; உறவினருமில்லை; ஸஹோதரருமில்லை; தகப்பனுமில்லை; மதுஸூதனனே! நீயுமில்லை, நீசர்களாலே

அவமதிக்கப்பட்டுத் துன்புற்ற என்னை நீங்களெல்லாரும் உறவற்றவர்கள் போலே கைவிட்டீர்களன்றோ. கர்ணன் என்னைப்பார்த்துச் சிரித்ததிலுண்டான துன்பம் எனக்கு இன்னமும் ஆறவில்லை.] என்று திரௌபதியானவள், தனக்கு சரணாகதியினால் பலன் கிடைக்கவில்லையென்றும், கண்ணனும் தன்னை ரக்ஷிக்கவில்லையென்றும் கதறுகிறாள். இதனாலும் சரணாகதியானது உபாயாந்தரஸம்ஸர்க்கத்தாலே தடைபட்டது என்று கொள்ளவேண்டியது அவசியமாகிறது. இவையெல்லாவற்றையும் திருவுள்ளத்திற்கொண்டே கோவிந்தநாம வ்யாக்யானத்தில் "இவளுக்கும் புடைவை சுரக்கும் திருநாமமிருக்கும்படி" என்று பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் செய்தருளினார்.

7. இனி, "திரௌபதியின் சரணாகதி பிறகு பலனளித்ததாகப் பெரியவாச்சான்பிள்ளை தனிச்லோகத்தில் பலவிடங்களில் அருளியிருக்கிறாரே; சணற்கயிறுகண்ட ப்ரஹ்மாஸ்திரம்போலே தடைபட்ட சரணாகதி பிறகுதான் எப்படிப் பலனளிக்கமுடியும்?" என்னும் கேள்வி எழுகின்றது. இதற்குப் பரிஹாரம் வருமாறு:-

"உபாயாபாய ஸம்யோகே₃ நிஷ்ட₂யா ஹீயதேऽநயா।
அபாயஸம்ப்லவே ஸத்₃ய: ப்ராயச்சித்திம் ஸமாசரேத்॥
ப்ராயச்சித்திரியம் ஸாऽத்ர யத்புந: ஶரணம் வ்ரஜேத்।
உபாயாநாமுபாயத்வஸ்வீகாரேப்யேவமேவ ஹி॥"
[ல-த 17-92, 93, 94]

[உபாயாந்தரமாவது, (விஹிதத்தை அநுஷ்டியாமை, நிஷித்தத்தை அநுஷ்டித்தல் என்று இருவகைப்படும்) அபாயங்களாவது, சரணாகதனுக்கு ஸம்பந்தப்பட்டால், அவனுடைய சரணாகதிநிஷ்டை நழுவும். அபாய ஸம்பந்தம் ஏற்பட்டால் உடனே பிராயச்சித்தம் செய்யவேண்டும்; மறுபடியும் சரணமடைவதே பிராயச்சித்தமாகும். மற்ற உபாயங்களில் உபாயபுத்தி வைத்தாலும் இவ்வண்ணமே (மறுபடியும் சரணமடைவதாகிற) பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும்.] என்று லக்ஷ்மீதந்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ப்ரபத்திநிஷ்டனுக்கு உபாயாந்தர ஸம்யோகம் ஏற்பட்டால் ப்ரபத்திநிஷ்டை தடைபடும் என்றும் மறுபடியும் சரணம்புகுதலாகிற பிராயச்சித்தத்தை அநுஷ்டித்தால் அத்தடை நீங்கிவிடும் என்றும் விளங்குகிறது. இப்படி திரௌபதி எங்கேயாவது மறுபடியும் ப்ரபத்தியை மேலே அனுஷ்டித்திருக்கிறாளா என்று மஹாபாரதத்தில் ஆராய்வோம். முதல்தடவை பாண்டவர்களை வனத்தில் சந்தித்துவிட்டு திரௌபதியின் குறையைக் கேட்டுத் திரும்பிய

கண்ணன், திரௌபதீசரணாகதி திருநாமஸங்கீர்த்தனத்தால் தடைபட்டுக் கிடப்பதும், ராஜ்யப்ராப்திசத்ருஸம்ஹாரரூப பலன்களிலே பங்குபெறும் பாண்டவர்கள் சரணாகதியனுஷ்டானத்தில் அந்வயமில்லாமலிருப்பதும் ஆகிய இவ்விருகுறைகளையும் தீர்க்கத் திருவுள்ளம்பற்றி, மறுபடியும் ஸத்தியபாமைப்பிராட்டியோடு எழுந்தருளுகிறான். கபடநாடகஸூத்ர தாரியான அப்பெருமான் உடனேயே மார்க்கண்டேயபகவானையும் வருவித்து, அவரை தர்மோபதேசம் செய்யத் தூண்டுகிறான்.

"ப்₄ரமத்யேவ ஹி மே பு₃த்₃தி₄ர்
த்₃ருஷ்ட்வாऽऽத்மாநம் ஸுகா₂ச்ச்யுதம் ।
தா₄ர்த்தராஷ்ட்ராம்ஶ்ச து₃ர்வ்ருத்தாந்
ருத்₃த்₄யத: ப்ரேக்ஷ்ய ஸர்வஶ: ॥"

[பார-ஆர 186-4]

[நான் ராஜ்யஸுகத்திலிருந்து நழுவிநிற்பதையும், துஷ்டரான துரியோதனாதியர் எல்லாவகையிலும் பெருமைபெற்றிருப்பதையும்கண்டு என் அறிவு கலங்குகிறது.] என்றுதொடங்கி மார்க்கண்டேயரை தர்மபுத்திரரும் எனக்குள்ள தர்மாதர்மமயக்கத்தை நீக்கவேணும் என்று கேட்க, அவர் நெடும்போது பகவானுடைய பெருமையைச் சொல்லிப்போந்து,

"ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாத₄வ: ।
க₃ச்ச₂த்₄வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷபா₄: ॥"

[பார-ஆர 192-56]

[எல்லாவுலகங்கட்கும் தாய்தந்தையாயிருப்பவன் மாதவன். மனிதர் தலைவர்களே! அப்படிப்பட்ட இவனை சரணமடையுங்கள்.] என்று உபதேசிக்க,

"ஏவமுக்தாச்ச தே பார்த்தா₂: யமௌ ச புருஷர்ஷபௌ₄ ।
த்₃ரௌபத்₃யா ஸஹிதா: ஸர்வே நமச்சக்ருர் ஜநார்த்த₃நம் ॥"

[பார-ஆர 192-57]

[இப்படிச் சொல்லப்பட்ட குந்திபுத்திரர்களும் நகுலசகாதேவர்களும், திரௌபதியோடுகூட எல்லாரும் ஜநார்த்தனனை நமஸ்கரித்தனர்.] என்று பஞ்சபாண்டவர்கள் திரௌபதியோடுகூடக் கண்ணனை சரணமடைந்தனர் என்றும்,

"ஸ சைதாந் புருஷவ்யாக்₄ர: ஸாம்நா பரமவல்குநா ।
ஸாந்த்வயாமாஸ மாநார்ஹோ மந்யமாநோ யதா₂விதி₄ ॥"

[பார-ஆர 192 58]

[புருஷார்த்தலேவருய், மதிக்கத்தக்கவருன அக்கண்ணனும் மிகமதுரமான வார்த்தைசொல்லி, சாஸ்திரவிதியை நினைத்துக்கொண்டு ஸமாதானம் செய்தான்.] என்று, திருநாமஸங்கீர்த்தனத்தால் தடைபட்ட சரணுகதியானது புன:ப்ரபத்தியாகிற ப்ராயச்சித்தம் செய்யப்பட்டவுடன் தடை நீங்கப்பெறும் என்னும் சாஸ்திரவிதியை நினைத்துக்கொண்டு ஸமாதானம் செய்தான் கண்ணன் என்று அடுத்த ச்லோகத்திலும் இவ்வர்த்தம் சொல்லப்பட்டது. இங்கு அனுஷ்டானவேளையில் நமஸ்கரித்தனர் என்றது உபதேசத்திற்கு அனுகுணமாக 'சரணமடைந்தனர்' என்னும் பொருளையுடையது என்று ஆசாரியர்கள் நிர்வஹித்தனர். "த்ரௌபத்₃யா ஸஹிதா:" என்றிருப்பதாலே, "ஸஹயுக்தே அப்ரத₄ானே" என்கிறபாணினி ஸூத்ரத்தின்படி, பூர்வப்ரபத்திஸ்மரணமாத்திரமாயிருக்கையாலே அப்ரதானமான புனச்சரணுகதியையே திரௌபதி அனுஷ்டித்தாள் என்றும், பஞ்ச பாண்டவர்கள் ராஜ்யார்த்தமாகவும், சத்ருஸம்ஹார்த்தமாகவும் முக்கிய ப்ரபத்தியையே அனுஷ்டித்தனர் என்றும் உணர்த்தப்படுகிறது. இவ்விரண்டாவது பிரபத்தியால், திரௌபதியின் முதல்பிரபத்திக்கிருந்த தடையும் நீங்கியது; பலபோக்தாக்களான பாண்டவர்கள் சரணுகதி செய்யவில்லையென்னும் குறையும் நீங்கியது. இதற்குப்பின் பஞ்சபாண்டவர்களுடையவும் திரௌபதியுடையவும் விருப்பப்படி வனவாஸம் அஜ்ஞாதவாஸம் ஆகியவை முடிந்தபின் கண்ணன் தூது செல்வது கொல்லாமாக் கோல் கொலைசெய்து பாரதப்போர் எல்லாச்சேனையும் அவிப்பது முதலான ஆனைத்தொழில்களைச் செய்து திரௌபதியின் முதல் சரணுகதியை ஸபலமாக்கினுன் என்று கொள்வதே பொருத்தமாகும். சரணுகதியின் பலன்களைக் கண்ணன் அருளியதைக் குறிப்பிடும்போது பெரியவாச்சான்பிள்ளை பலகால் 'பின்பு' 'பின்பு' என்று அருளியிருப்பது இக்கருத்தைத் திருவுள்ளத்திற்கொண்டதேயாகவேண்டும்.

8. புருஷகாரபுரஸ்ஸரணமில்லாமையாலோ, திருநாமஸங்கீர்த்தனத்தாலோ, திரௌபதிசரணுகதி அடியோடு நழுவிவிட்டது என்று கொள்ளுமவர்கள் பக்ஷத்தில், (1.) பெரியவாச்சான்பிள்ளை அந்த சரணுகதிக்குப் பிறகு பலன் கிடைக்கது என்று அருளியிருப்பது ஒட்டாது (2) தனி த்வயம் முதலான கிரந்தங்களில் மற்ற ஆசாரியர்களும் திரௌபதீப்ரபத்தியை ஸபலமானதாகவும், புஷ்கலமானதாகவும் அருளியிருப்பது ஒட்டாது.

9. திரௌபதியின் முதல் சரணுகதியானது செய்தவுடனேயே தடைபடவில்லை, அதுவே வஸ்திரவிருத்தி முதலான எல்லாப் பலன்களையுமளித்தது என்று கொள்வார் பக்ஷத்தில் பின்வரும் அஸ்வாரஸ்யங்கள்

ஏற்படுகின்றன:-(1) "ஸக்ருதுச்சாரோ ப4வதி" என்று கடவல்லியிலும், ''ஸக்ருதேவ ப்ரபந்நாய'' என்று ராமசரம ச்லோகத்திலும், "ஸக்ருதே3வ ஹி சாஸ்த்ரார்த்த2:" [17-92] என்று லக்ஷ்மீதந்திரத்திலும் உரைத்தபடியே ப்ரபத்தியை ஒருதடவையே செய்ய வேண்டுமாகையால், சத்ருநிரஸனபூர்வகமான ராஜ்யப்ராப்திக்காக தர்ம புத்ரர்திகளோடு கூட திரௌபதி மறுபடியும் சரணமடைந்தது அவர்களுக்கு ஒட்டாது. (2) பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானப்படி திரௌபதி பிரபத்திக்குப் பலனாக உடனே பெறவேண்டுமென்று விரும்பியவையான கூரார்ராழி வெண்சங்கேந்தி வந்தருளி முகங்காட்டுகையையும், மயிர் முடிப்பித்தலையும், கண்ணாலே அலரவிழித்துக் குளிரநோக்குதலையும், மற்றும் ராஜ்யப்ராப்தி முதலான இஷ்டப்ராப்திகளையும், நூற்றுவரை மரணமடைவித்தல் முதலான அநிஷ்டநிவ்ருத்திகளையும் ஏன் நெடுநாள் கழித்துப் பெற்றாள் என்பதற்கு அவர்கள் காரணம் சொல்லமுடியாது. (3) பெரியவாச்சான்பிள்ளை, திரௌபதி விரும்பிய மற்ற எல்லாப் பலன்களுமிருக்கப் புடவை சுரந்ததை மாத்திரம் பொருக்கியெடுத்து, "இவளுக்குப் புடைவை சுரக்கும் திருநாமமிருக்கும்படி" என்று அருளியிருப்பது ஒட்டாது. (4) திரௌபதி வனவாஸத்தின்போது கண்ணனும் சரணமடைந்த தன்னைக் கைவிட்டு விட்டதாகக் கதறியது பொருந்தாது. (5) தத்வநிஷ்கர்ஷபரமான முமுக்ஷுப்படி ஸூத்ரங்கள் பொருளற்றவையாகின்றன. (6) திருவாய்மொழி (3-3-6) ஈட்டில் "நம்பேர் தன் காரியஞ் செய்ததத்தனைபோக்கி, நாம் இவளுக்கு ஒன்றும் செய்திலோமிறே என்று இருந்தான்" என்று அருளியிருப்பது ஒட்டாது.

10. இவ்விடத்தில் ஓர் ஐயம் ஏற்படக்கூடும்: "அசேதனமான திருநாமம் எப்படிப் புடைவை சுரக்கமுடியும்? அத்திருநாம ஸங்கீர்த்தனத்தால் உகந்த பரமபுருஷன்தானே பலனையளிக்கமுடியும். அப்படியிருக்கும்போது, 'அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும்' என்றும், 'நம்பேர் தன் கார்யம் செய்ததித்தனைபோக்கி நாம் இவளுக்கு ஒன்றும் செய்திலோமிறே' என்று கண்ணன் உரைத்ததாகவும் கூறுவது எப்படி ஒட்டும்? இது ரஸோக்தியாகத் தானே இருக்கமுடியும்" என்னும் ஐயம் ஏற்படக்கூடும். இங்கு ஒரு தர்மஸூக்ஷ்மத்தை அறியவேண்டும். ஒரு குடும்பத்தலைவன், தன்னையே உபாயமாகப் பற்றியிருக்கும் தன் பெண்டு பிள்ளைகளடங்கிய தன் குடும்பத்தினரையும் ரக்ஷிக்கிறான்; தன் வீட்டில் கூலிவேலை செய்து பிழைக்கும் வேலைக்காரனையும் ரக்ஷிக்கிறான். இருவருக்கும் பலனளிப்பவன் அவனேயாயினும் ரக்ஷணத்தில் நெடுவாசியுண்டு. குடும்பத்தினரை ரக்ஷிக்கும்போது ஒரு பிரதிப்பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் ஸர்வவிதமாகவும் ரக்ஷிக்கிறானாகையாலே அவர்களுக்கு ஜீவனோ

பாயம் அவனேயாகிறுன். வேலைக்காரனையோவெனில் வேலைசெய்தால்தான், அதுவும் வேலைக்குத்தகுந்த கூலிகொடுத்து ரக்ஷிக்கிறுன். வேலைசெய்ய வில்லையென்றுல் ரக்ஷிப்பதில்லை. ஆகையால் வேலைக்காரன் விஷயத்தில் பலப்ரதன் யஜமானனேயாஞலும் ஜீவனேபாயம் வேலையேயாகிறது. இதுபோலவே ஸர்வேச்வரனும் தன்னையே உபாயமாகப் பற்றிநிற்கும் பிரபந்நர்களை யாதொரு பிரதிப்ரயோஜனத்தையும் எதிர்பாராமல் ஸர்வ விதமாகவும் ரக்ஷிக்கிறுஞகையாலே அவர்களுக்கு ஜீவனேபாயம் அவனே யாகிறுன். திருநாமஸங்கீர்த்தனம் முதலான உபாயாந்தரங்களைப் பற்றிய வர்களுக்கோவெனில் அவ்வுபாயாந்தரங்களை அனுஷ்டித்தால்தான், வேலை யின் அளவுக்குக் கூலிகொடுப்பதுபோலே பலன்கொடுத்து ரக்ஷிக்கிறுன். அவ்வுபாயாந்தரங்களைப் பத்தும்பத்தாக அனுஷ்டிக்கவில்லையென்றுல் அவர்களை ரக்ஷிப்பதில்லை. ஆகையால் உபாயாந்தர நிஷ்டர்கள் விஷயத்தில் பலப்ரதன் ஸர்வேச்வரனேயாஞலும், ரக்ஷணேபாயம் அவரவர் அனுஷ்டிக்கும் உபாயாந்தரங்களேயாகின்றன. ஆகையால், திருநாமஸங்கீர்த்தன மாகிற உபாயாந்தரத்தைப் பற்றிவிட்ட திரௌபதி விஷயத்தில் கண்ணன் தூரஸ்தஞுஞலும் திருநாமம் கிட்டிநின்று உதவிற்று என்று பிள்ளை லோகாசார்யர் அருளியதும், 'நம்பேர் தன் காரியஞ்செய்ததத்தனைபோக்கி, நாம் இவளுக்கு ஒன்றும் செய்திலோமிறே' என்று கண்ணன் கூறியதாக ஈட்டில் அருளியதும் மிகப்பொருந்திநிற்கும். இவற்றை ரஸோக்தியாகக் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

இனி, "'த்ரௌபதிக்கு நாமோச்சாரணத்தில் உபாயத்வபுத்தி நடையாடி, அத்தால் ப்ரபத்தி நழுவி, நாமோச்சாரணமே வஸ்த்ரவர்த்தனத் துக்கு ஹேதுவாய்த்து' என்றும் சிலர் சொல்லுவார்கள்; அது, நாமோச் சாரணத்துக்குப் பலம் கொண்டுபோனவள் விஷயத்தில், 'நாதிஸ்வஸ்தமநா யயெள' என்று கண்ணன் யாவஜ்ஜீவம் புண்பட்டிருந்தமைக்குச் சேராதிறே" [ஸ்ரீவசநபூஷணம் 31-வது வாக்கியம் எம்பார் ஜீயர்ஸ்வாமி யரும்பதம்] என்னும் ஆக்ஷேபத்தை ஆராய்வோம். திரௌபதி சரணுகதி நிஷ்டையே என்பதையும், அவளுடைய சரணுகதியானது எவ்விதமான குறைவுமற்றது என்பதையும், 'ஒறுகு பரிபூர்ணமாகப் பலனளித்தது என் பதையும் ஒப்புக்கொள்ளுகிறும் நாம். முற்கூறிய ஆக்ஷேபத்தை எழுப்பும் எம்பார் ஜீயர் ஸ்வாமிகள் புருஷகாரத்தை முன்னிடாமையாலே பழுது பட்ட சரணுகதியைச் செய்தவள் திரௌபதி என்கிறுர்கள். இப்படிப் பழுதுபட்ட சரணுகதியைச் செய்தவள் விஷயத்திலே கண்ணன் கால முள்ளவரையில் புண்பட்டிருந்தான் என்பதே உண்மையில் பொருந்தாது. மேலும், திரௌபதிக்கு ஏற்பட்ட ஆபத்தானது மஹத்தானது. அத்தகைய ஆபத்திலும் அவள் லஜ்ஜையை விட்டாள்; புடைவையைப் பிடித்திருந்த

அவதாரிகை:—ஸ்ரீராமாயணத்தாலும், மஹாபாரதத்தாலும், ஸ்ரீவிஷ்ணுபுராணத்தாலும், பிராட்டியினுடையவும், த்₃ரௌபதி₃யினுடையவும், சிந்தயந்தியினுடையவும்

கையையும் விட்டாள் இவளுடைய மஹாவிச்வாஸத்தைப் பரீக்ஷிப்பதற்காக அப்போதும் கண்ணன் உதவாமலிருக்கவே, ஆபத்தாலே அறிவு கலங்கித் திருநாமத்திலே உபாயபுத்தியை வைத்துவிட்டாள். இதுஒரு பெரிய தோஷமன்று. இதனாலேயே கண்ணன், "நம்மையே நம்பியிருந்த திரௌபதியை நாம் காலத்திலே ரக்ஷிக்காமல் தாமதித்துவிட்டோமே; நம்முடைய திருநாமமன்றோ அவளுடைய மானத்தைக்காத்தது. நாம் ஒன்றும் செய்யப்பெற்றிலோமே. திருநாமத்தை அவள் உபாயமாக நினைக்கும்படி பார்த்திருந்ததும் உண்மையில் நம் குற்றமேயன்றோ" என்று புண்பட்டான். இக்குறையை நீக்குவதற்காகவே மார்க்கண்டேய பகவானைக் கொண்டு உபதேசம் செய்வித்து புநச்சரணாகதியை அனுஷ்டிக்கும்படி செய்து சரணாகதியை ஸபலமாக்கி எல்லாப் பலன்களையும் அளித்தான். காலமுள்ளவரையில் அவள் கோவிந்தா என்று கூப்பிடும்படியாகத்தான் தாமதித்ததை நினைத்துப் புண்பட்டுமிருந்தான். ஆகையால் இவ்வாக்ஷேபமும் நம்முடைய பக்ஷத்திற்குக் குறையாகாது. திரௌபதீ சரணாகதியானது திருநாமஸங்கீர்த்தனத்தாலே சிலகாலம் பலனளிக்காமல் தடைபட்டது என்று கல்பிக்கவேண்டிய ஒருகுறையே நம்முடைய நிர்வாஹத்தில் உள்ளது. கீழே விரிவாக நிரூபித்துக்காட்டிய ப்ரமாணப₃லத்தாலும் அர்த்த₂ப₃லத்தாலுமே இப்படிக் கல்பிக்கிறோமாகையாலே உண்மையில் இது குறையுமில்லை. ஸகலபூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் பொருந்திய நிர்வாஹம் இதுவேயென்பது நடுநிலையாளர்க்கு நன்குவிளங்கும் இனி, வியாக்கியானத்தைக் காண்போம்.

அவதாரிகை:—ஸ்ரீராமாயணத்திலே, "தத் தஸ்ய ஸத்₃ருசம் ப₄வேத்" [ரா-ஸு 39-30] [என்னை ரக்ஷிப்பது ராமபிரானுக்கே உரியது] என்று தன் சக்தியையும் கைவிட்ட பிராட்டியின் நிஷ்டையைச் சொல்லிற்று. ஸ்ரீமஹாபாரதத்தாலே கண்ணனையே ரக்ஷகனாகப்பற்றித் தன் லஜ்ஜையையும் விட்டு நின்ற திரௌபதியின் நிஷ்டை சொல்லிற்று.

"தத₃ப்ராப்தி மஹாது₃க்க விலீநா சேஷபாதகா ।
தச்சித்தவிமலாஹ்லாத₃க்ஷீணபுண்யசயா ததா₂ ॥
சிந்தயந்தீ ஜக₃த்ஸூதிம் பரப்₃ரஹ்மஸ்வரூபிணம் ।
நிருச்ச்₂வாஸதயா முக்திம் க₃தாந்யா கோ₃பகந்யகா ॥"
[வி-பு 5-13-21-32]

அத்₄யவஸாயத்தை ப்ரதிபாதி₃க்கையாலேயிறே இவை ப்ரப₃லப்ரமாணமாயிற்று. இதில் மஹாப₄ாரதோக்தமான த்ரௌபதி₃யினுடைய ஶரணாக₃தி நிஷ்டை₂யை வெளியிடுகிறது இஶ்லோகம். அதாவது ஸர்வேஶ்வரன் ரக்ஷிக்கைக்குப் பரிகரமான அத்₄யவஸாயத்தைச் சொல்லிற்றாயிற்று. அப்படியேயிறே "स्मर्तव्यो भगवान् हरिः" (ஸ்மர்த்தவ்யோ ப₄க₃வான்ஹரி;) என்றதும். இவ்வத்₄யவஸாயத்தைக் கொண்டு *பொய்ச்

[கண்ணனை அடையாமையாலுண்டான பெருந்துன்பத்தாலே எல்லாப் பாபங்களையும் அநுபவித்துக் கழித்தவளாய், அவனைப் பற்றிய நினைவினாலே பரிசுத்தமான பேரானந்தத்தையடைந்து எல்லாப் புண்ணியங்களையும் அநுபவித்துக் கழித்தவளாய், ஜகத்காரணனும், பரப்ரஹ்மஸ்வரூபியுமான அவனை நினைக்கின்றவளாய், (புண்ணியபாபங்கள் அடியோடு கழிகையாலே) மூச்சடங்கப் பெற்றவளான ஓரிடைச்சி மோக்ஷத்தையடைந்தாள்] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே கண்ணனுடைய குழலிசையைக்கேட்டு வீட்டைவிட்டு வாசல்வரையில் வந்த ஓரிடைச்சி தன் மாமன் மாமியர் வாசலிலிருக்கையாலே அப்படியே நின்று கண்ணனை அடையப்பெறாமல் பெருந்துன்பத்தையும், "சிந்தயந்தீ" [நினைக்கின்றவள்] என்றே வழங்கலாம்படி அவனை நினைக்கையாலே பேரானந்தத்தையும் ஒருகணத்திலேயே அனுபவித்து இப்படி ஸுகதுக்காநுபவத்தாலே எல்லாக் கர்மங்களும் கழிகையாலே உயிரையே விட்ட சிந்தயந்தியின் நிஷ்டை சொல்லிற்று. இப்படி இம்மூன்று நூல்களிலே இம்மூவருடைய நிஷ்டைகளைச் சொல்லுகையாலே இவை மூன்றும் மிகச்சிறந்த பிரமாணநூல்களாய் விளங்குகின்றன. இவற்றில், மஹாபாரதத்தில் சொல்லப்பட்ட திரௌபதியின் சரணாகதிநிஷ்டையை வெளியிடுகிறது இந்த ச்லோகம். அதாவது,– ஸர்வேச்வரன் ரக்ஷிப்பதற்கு உறுப்பான மஹாவிச்வாஸமெனப்படும் மனவுறுதியைச் சொல்லுகிறது. பேராபத்து வந்தபோது இப்படி மஹாவிச்வாஸத்தோடு பகவானை நினைக்கவேணுமென்பதை,

"ஜ்ஞாதம் மயா வஸிஷ்டே₂ந புராகீ₃தம் மஹாத்மநா |
மஹத்யாபதி₃ ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ ப₄க₃வாந்ஹரி:||
[பார-ஸபா 90-42]

['பேராபத்து வந்தபோது பகவானான ஹரி நினைக்கத்தக்கவன் என்று முன்னொரு காலத்தில் வஸிஷ்டபகவான் உரைத்திருப்பதை நானறிவேன்] என்று திரௌபதியே சரணமடைவதற்கு முன் உரைத்தாளன்றோ. "பொய்ச்சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய்" [பெரியாழ்

சூதிலே தோற்கையாலே ஸபா₄மத்₄யத்திலே து₃ம்ஶாஸநா க்ருஷ்டையாய், அதினலே பரிபூ₄தையான தான், அரக்ஷக ரான ப₄ர்த்தாக்கள் முதலானவர்களை ரக்ஷகராகக் கூப்பிட்ட இழவுதீர, ஸர்வரக்ஷகனனவன்றன்னை ரக்ஷகனகத் துணிந்து அவனுடைய ரக்ஷகத்வோபயோகி₃யான கு₃ணங்களைச் சொல்லி ஶரணம் புகுகிருள்.

வ்யா :— (ஶங்க₂சக்ரக₃தா₃பாணே) கைப்படையில் லாதானையோ நான் கைகூப்பிற்று? (த்₃வாரகாநிலய ஓரிருப்பிடமில்லாதானையோ நான் நேர்ந்தது? (அச்யுத) தன்னை அடைந்தாரை நழுவவிடுமவனையோ நான் அடைந் தது? (கோ₃விந்த₃) தன் ஆஶ்ரிதரை நோவுபடவிட்டிருக்கு

திரு 2-1-1] என்கிறபடியே பஞ்சபாண்டவர்கள் சகுனியின் மாயச்சூதிலே தோற்ருர்கள். துரியோதனன் ஆணைப்படி, துச்சாஸனன் ரஜஸ்வலையா யிருந்த திரௌபதியை சபைநடுவே இழுத்துவந்தான்; துகிலையும் உரிய ஆரம்பித்தான். இப்படி அவமானப்படுத்தப்பட்ட திரௌபதியானவள், ரக்ஷகரல்லாத கணவன்மார்கள், பீஷ்மர், துரோணர் முதலானுரை 'ரக்ஷிக்க வேண்டும்'என்று கூப்பிட்ட குறைதீர ''மஹாவிச்வாஸபூர்வகம்''[பரதமுனி] என்று சொல்லப்பட்ட மஹாவிச்வாஸத்தை முன்னிட்டுக்கொண்டு ஸர்வ ரக்ஷகனன கண்ணனையே ரக்ஷகனுகத் துணிந்து, அவன் தன்னை ரக்ஷிப்ப தற்கு உதவிசெய்யும் குணங்களைச்சொல்லி சரணம் புகுகிருள்.

வ்யா:—(சங்க₂சக்ரக₃தா₃பாணியே) கையில் ஆயுதமில்லாதவனையோ நான் கைகூப்பினேன்? ஒன்றுக்கு மூன்று ஆயுதங்களைக் கைப்பற்றின வனையன்ருே கையெடுத்துக் கூப்பிட்டேன். (த்₃வாரகாநிலயனே) ஓரிருப் பிடமில்லாதவனையோ நான் சரணமடைந்தேன்? துவாரபதிக்கொற்றவனை யன்ருே சரணமடைந்தேன். (அச்சுதனே) தன்னை அடைந்தாரை நழுவ விடுமவனையோ நான் சரணமடைந்தேன்? ''ந ச்யவந்த யஸ்மாதி₃த்யச்யுத:'' [இவனிடமிருந்து (அடியார்கள்) நழுவார்களாகையாலே அச்யுதன் எனப் படுகிருன்.] என்கிற வ்யுத்பத்தியின்படியே அடியவரை நழுவவிடாதவன் என்று பெயர்படைத்தவனையன்ருே சரணடைந்தேன். (கோவிந்தனே) தன்னையடைந்தாரைத் துன்பமுறப் பார்த்திருக்குமவனையோ நான் அண்டினது? ''கா₃வ: விந்த₃ந்த்யேநம்'' [பசுக்கள் (ரக்ஷணத்திற்காக) இவனையடைகின்றன.] ''கா₃:விந்த₃தி'' [பசுக்களை (ரக்ஷிப்பதற்காகத்)

மவனையோ நான் ஆஶ்ரயித்தது? (புண்டரீகாக்ஷ) கண் ணில்லாதானையோ நான் காலைக்கட்டிற்று? (ரக்ஷமாம்) ருசி யில்லாதேயோ நான் ஶரணம் புகுந்தது? (ஶரணாகதாம்) ஆகையாலே, ப₂லஸித்₃தி₄யில் கண்ணழிவுவர ஹேதுவில்லை என்று துணிகிறாள்.

(ஶங்க₂சக்ரக₃தா₃பாணே) நீ ஆயுத₄பாணியாயிருக்க நான் அம்ப₃ரத்தைப் பறிகொடுத்தேன். 2. (ஶங்க₂சக்ரக₃தா₃ பாணே) "சுடர்விடும் ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை" என்கிறபடியே, நீ ஸதா₃ பஞ்சாயுத₄ங்களை த₄ரித்திருக்கிறது ஶரணாக₃தரக்ஷணத்துக்காகவன்றோ? ஸகலாபந்நிவ்ருத்திக்கும் ஹேது உன் கைதானே? "सुदर्शनं चिन्तितमात्रमाशु" (ஸுத₃ர்

தானேயடைகிறான்] என்கிற வ்யுத்பத்திகளின்படியே, தன்னையண்டின பசுக்களையும் துன்பமுறாமல் மேல்விழுந்து காப்பாற்றுமவனையன்றோ நானண்டினேன். (தாமரைக்கண்ணனே) கண் (1. கண், 2. இரக்கம்) இல் லாதவனையோ நான் காலைக்கட்டினேன்? தயாவாத்ஸல்யாதிகுணங்களைக் கோட்சொல்லித்தரும் செந்தாமரைக்கண்ணையுடையவனையன்றோ நான் காலைப்பிடித்தேன். (என்னை ரக்ஷிப்பாய்) ருசியில்லாமலோ நான் சரணம் புகுந்தது? மஹாவிச்வாஸத்துடனன்றோ சரணம்புகுந்தேன். (சரணமடைந் தவளை) இப்படி சரணமடைந்தவளாகையாலே நான் பலனடைவதற்குத் தடையுண்டாகக் காரணமில்லை என்று துணிகிறாள்.

1. (சங்கசக்ரகதாபாணியே) நீ ஆயுதபாணியாயிருந்தபோதிலும் நான் ஆடையைப் பறிகொடுத்தேன். 2. (சங்கசக்ரகதாபாணியே) சங்கசக்ர கதைகளைச் சொன்னது பஞ்சாயுதங்களுக்கும் உபலக்ஷணம். "சுடர்விடு மைம்படை அங்கையுளமர்ந்தனை" [திருவெழுகூற்றிருக்கை] என்கிறபடியே நீ எப்போதும் சங்கம், சக்கரம், கதை, சார்ங்கம் (வில்), வாள் என்னும் ஐந்து ஆயுதங்களையும் தரித்திருக்கிறது சரணமடைந்தாரை ரக்ஷிப்பதற் காகவன்றோ? எல்லாத் துன்பங்களும் தீர்வதற்குக் காரணமாயிருப்பது உன் கைதானே?

"ஸுத₃ர்ஶநம் சிந்திதமாத்ரமாஶு
தஸ்யாக்₃ரஹஸ்தம் ஸ்வயமாருரோஹ" [பார-பீஷ்ம 59-58]

ஸநம் சிந்திதமாத்ரமாஸ") என்று, நீ கைவந்தசக்கரத்தென் கண்ணனுயிருக்க. "காப்பாரார் இவ்விடத்து" என்று நான் கைவிரிப்பதென்? நான் கைவிட்டிருக்க நீ கைக்கொண் டிருப்பதற்கு ப்ரயோஜநம் வேண்டாவோ? பஞ்சாயுத₄ங் களையும் த₄ரிக்கிறது பரிப₄வத்தில் நொந்தாரை ரக்ஷிக்க வன்றோ? (ஸங்க₂சக்ரக₃த₃ாபாணே) நான் கைவிட்டபடியே அவன் படை தொட்டான். அங்ஙனம் தொட்டபடியிறே. "மழுங்காத வைந்நுதிய சக்கரநல் வலத்தையாய்த் தொழுங் காதற் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" அப்படியே கூராராழி வெண்சங்கேந்தி வந்தருளி, தனக்கு முகங்காட்டவேணும் என்று கருத்து. பின்பு இவளுக்காக

[நினைத்தவுடனேயே ஸுதர்சனம் தானே கண்ணனுடைய விரல்நுனியின் மேல் ஏறிநின்றது.] என்றும், "கைவந்த சக்கரத்தென் கண்ணன்" [திருவாய் 5-4-8] என்றும் கூறுகிறபடியே நீ கைவந்த சக்கரத்து என் கண்ணனுயிருக்க, "காப்பாரார் இவ்விடத்து" [திருவாய் 5-4-6,7] என்று நான் கைவிரிக்கலாமோ? நான் ஆடையைப் பிடிப்பதிலும் கைவாங்கி நிற்க, நீ ஆயுதத்தைப் பிடித்துநிற்பதற்குப் பயன்வேண்டாமோ? ஐந்து ஆயுதங்களையும் தரித்துநிற்பது என்னைப்போலே அவமானத்தாலே வருந்துமவர்களை ரக்ஷிக்கவன்றோ. 3. (சங்கசக்ரகதாபாணியே) என்னை ரக்ஷித்துக்கொள்ள நான் முயற்சியுடையவளாய், புடைவையைப்பிடித்து நின்றவளவும் அவன் உதாஸீனனுயிருந்தான். நான் என் முயற்சியினின்றும் கைவாங்கிப் புடைவையைவிட்டவுடன் அவன் என் விரோதிகளையழிக்க பஞ்சாயுதங்களையும் ஏந்திநின்றான் என்று கூறுகிறதாகவுமாம். "க₃ஜ ஆகர்ஷதே தீரே க்₃ராஹ ஆகர்ஷதே ஜலே" [விஷ்ணுதர் 69-46] [கஜேந் திரன் (பன்னெடுங்காலம்) கரையைநோக்கியிழுத்தது. முதலை நீரைநோக்கி யிழுத்தது] என்கிறபடியே கஜேந்திராழ்வான் பன்னெடுங்காலம் தன் முயற்சியாலே தன்னை ரக்ஷித்துக்கொள்ள முயன்றபோதெல்லாம் வாளா விருந்தவன், அவன் கைசோர்ந்து 'ஆதிமூலமே' என்று கையெடுத்துக் கூப்பிட்டவுடன்,

"மழுங்காத வைந்நுதிய சக்கரநல் வலத்தையாய்த்
தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே"

[திருவாய் 3-1-9]

விறே. "स पाञ्चजन्योऽच्युतवक्त्रवायुना" (ஸ பாஞ்சஜந்யோऽச்யுத வக்த்ரவாயுநா) "हृदयानि व्यदारयत्" (ஹ்ருத₃யாநி வ்யத₃ா ரயத்) என்று * கலங்கச் சங்கம் வாய் வைத்ததும், * ஆழி கொண்டன்றிரவி மறைத்ததும், * கொல்லாமாக்கோல் கொலைசெய்து பாரதப்போர் எல்லாச்சேனையும் இருநிலத்

என்கிறபடியே முதலையையழிக்கச் சக்கரமேந்தி மிகவேகமாகத் தோன்றி ஞனன்றே. அவ்வண்ணமே, 'கூராராழி வெண்சங்கேந்தி" [திருவாய் 6-9-1] வந்தருளித் தனக்கு முகங்காட்டவேணும் என்று கருத்து. அப்படியாகில் அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து கஜேந்திரனுக்கு முகங்காட்டியது போலே இவளுக்கு ஏன் முக்ங்காட்டவில்லை? எனில்: இவளுடைய மஹாவிச்வாஸத்தைச் சோதிப்பதற்காகக் கண்ணன் சிலகணங்கள் தாழ்க்க, ஆபத்தின் கனத்தாலே அறிவுகலங்கி, 'அவளிலும் விஞ்சிய அவனுடைய திருநாமமாவது நம் மானத்தைக் காக்காதா?' என்னும் நினைவுடன் திரௌபதியானவள் கோவிந்தநாமத்தை உச்சரித்துவிட்டாள். இப்படி உபாயாந்தர ஸம்ஸர்க்கம் ஏற்பட்டுவிட்டதாகையாலே இவள் சரணாகதிக்குப் பலமாக விரும்பிய கூராராழி வெண்சங்கேந்தி வந்து முகங்காட்டுவது முதலானவற்றை கஜேந்திரனுக்குப்போலே எம்பெருமான் உடனே செய்யமுடியவில்லை. இக்குறை தீருவதற்காகவே, மார்க்கண்டேய பகவானையிட்டு உபதேசிப்பித்து, உபாயாந்தரஸம்ஸர்க்கத்திற்கு ப்ராயச்சித்தமாயிருக்கும் புந:சரணாகதியை அநுஷ்டிப்பித்து,அதற்குப்பின்பு இவளுக்காகவே, "ஸ பாஞ்சஜந்யோச்யுத வக்த்ரவாயுநா ப்₄ருசம் ஸுபூர் ணோத₃ரநிஸ்ஸ்ருதத்₄வநி: ஜக₃த்ஸபாதாள வியத்₃தி₃கீ₃ச்வரம் ப்ரகம் பயாமாஸ யுகா₃த்யயே யதா₂" [பார-த்ரோ 73-58] [அச்சுதனுடைய திருமுகவாயுவினாலே மிகவும் நிறைந்த உட்புறத்தினின்று வெளிப்படும் ஒலியையுடைய அந்தப் பாஞ்சஜந்யம், பாதாளம், ஆகாயம், திக்பாலகர்கள் ஆகிய எல்லாவற்றையும் ஊழிகாலத்திற்போலே நடுக்கமுறச்செய்தது] என்றும், "ஸ கோ₄ஷோ தா₄ர்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருத₃யாநி வ்யதா₃ரயத்" [கீதை 1-19] [திருதராஷ்டிர புத்திரர்களின் நெஞ்சைப்பிளந்தது அந்தப் பாஞ்சஜந்ய கோஷம்.] என்றும், "பந்தார் விரலாள் பாஞ்சலி கூந்தல் முடிக்கப்பாரதத்துக் கந்தார்களிற்றுக் கழல்மன்னர் கலங்கச் சங்கம் வாய் வைத்தான்"[பெரியதிரு 6-7-8] என்றும், "ஆழிகொண்டன்றிரவி மறைப்ப" [பெரியாழ்திரு 1-4-8] என்றும், "கொல்லாமாக்கோல் கொலைசெய்து பாரதப்போர் எல்லாச்சேனையும் இருநிலத்தவித்த" [திருவாய் 3-2-3] என்றும் சொல்லுகிற இவள் விரும்பிய சரணாகதிபலன்களை அளித்தான் கண்ணன். இக்காரணத்தாலேயே இவளுடைய சரணாகதி காலங்கழித்துப்

தவித்ததும். (ஶங்க₂சக்ரக₃த₃ாபாணே) ''அருளார் திருச் சக்கரத்தால்'' இத்யாதி₃ ''இவற்றின் புறத்தாள் என்று எண்ணே?'' (ஶங்க₂சக்ரக₃த₃ாபாணே) * துளிக்கின்றவான் இந்நிலம் சுடராழி சங்கேந்தி அளிக்கின்றவவனுயிருக்கிற உனக்கு அப₃லையை ரக்ஷிக்கை பணியோ? நான் அழகுக் கிட்ட வளைபோல் ஆயிற்றே நீயிட்ட பத்திரம்?

இனி, அவன் நிலைகலங்கி வரும்படி அவன் நிலையைச் சொல்லிக் கூப்பிடுகிருள், (த்₃வாரகாநிலயாச்யுத) நீ * வண்டுவராபதி மன்னனுய், நழுவதலின்றிக்கே நாட்டாளாய் நிற்க, நான் பிடித்தார்க்கெல்லாம் பெண்டிராகவோ?

பலித்தது. 4. (சங்கசக்ரகதாபாணியே) "அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர் ஈங்கோர் பெண்பால் பொருளோ எனும் இகழ்வோ இவற்றின் புறத்தாள் என்றெண்ணே தெருளோம் அரவணையீர்'' [திருவிருத்தம்-33] என்கிறபடியே அடியவர்பால் அருள் நிரம்பிய ஆயுதங்களை ஏந்திநின்றும் என்னை ரக்ஷிக்காமலிருப்பது உனக்கு ரக்ஷ்யமாயிருக்கும் அகல் விசும்பும் நிலனுமாகிற உபயவிபூதிக்கும் அப்பாற்பட்டவள் நான் என்னும் கருத்தாலோ என்றுமாம். 5. (சங்கசக்ரகதாபாணியே) "துளிக்கின்றவான் இந்நிலம் சுடராழி சங்கேந்தி அளிக்கின்ற மாயப்பிரான்'' [திருவாய் 2-3-10] என்று சங்கசக்கரங்களாலே உபயவிபூதிகளையும் ரக்ஷிப்பவனுகச் சொல்லப்படும் உனக்கு ஓரபலையான என்னை ரக்ஷிப்பது ஒரு பெருங் காரியமோ? நான் அழகுக்கணிந்திருக்கும் சங்கு வளைபோலாயிற்றே நீயணிந்த சங்கசக்கரங்களாகிற ஆயுதங்கள்.

இது சொல்லியும் அவன் வராமையாலே, அவன் நிலைகலங்கி வரும்படி அவன் நிற்கும் நிலையைச் சொல்லிக்கூப்பிடுகிருள்: (த்வாரகாநிலயனே! அச்யுதனே!) "வண்டுவராபதி மன்னன்'' [திருவாய் 5-3-6] எனப்படுமவனுன நீ ''ந ச்யவத இத்யச்யுத:'' [(தன்னிலையிலிருந்து) நழுவதலில்லாதவனுகையாலே அச்சுதன் எனப்படுகிருன்.] என்கிற வ்யுத்பத்தியின்படியே, ''நாட்டிற் பிறந்து படாதன பட்டு மனிசர்க்கா'' [திருவாய் 7-5-2] என்று நாட்டாளாய் நிற்கும் நிலைக்கு என்றும் நழுவுதலில்லாதவனுயிருக்க, நான் தொட்டவனுக்கெல்லாம் மனைவியாவதோ? என்று கருத்து.

(த்வாரகாநிலயாச்யுத) பரமபத₃நிலயனையோ நான் கூப்பிடு கிறது? ஸாது₄பரித்ராணம் பண்ணவந்த இடத்தேயன்றோ. * அயர்வறுமமரர்களுக்கு முகங்கொடுத்தவிடமன்றே நான் அர்த்தித்தது; அப₃லைகளுக்கு முகங்கொடுத்தவிடமன்றோ? * பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு பௌவமெறிதுவரை எல்லாரும் சூழச் சிங்காசனத்திலே இருக்குமிடமன்றோ? "एकस्मिन्नेव गोविन्दः" (ஏகஸ்மிந்நேவ கோ₃விந்த₃:) இத்யாதி₃. ஆச்ரிதையான ஒருத்தியை உபேக்ஷித்தால் அபி₄மதர்களான வர்கள் பலர் முகம் உமக்குப்போகவேண்டாவோ? (த்வாரகா நிலயாச்யுத) நீயும் என்னைப் போல் நிலையிழந்திருக்

---

2. (த்வாரகாநிலயனே! அச்யுதனே!) கைக்கெட்டாத பரமபதநாதனையோ நான் கூப்பிடுவது? "பரித்ராணாய ஸாதூ₄நாம்—ஸம்ப₄வாமி" [கீதை 4-8] [நல்லோர்களை ரக்ஷிப்பதற்காக நான் அவதரிக்கிறேன்.] என்கிறபடியே நல்லோர்களை ரக்ஷிக்க நிலைநிற்குமிடமான துவாரகையிலிருப்பவனையன்றோ கூப்பிடுகிறேன். "அயர்வறும் அமரர்கள் அதிபதி" [திருவாய்1-1-1] என்கிறபடியே நித்யஸூரிகளுக்கு முகங்காட்டும் அவனையல்லவே நான் வேண்டியது. அபலைகளான ஆய்ச்சிகளுக்கும் முகங்கொடுத்த அச்சுதனான இவனையன்றோ நான்வேண்டியது. "பல்லாயிரம் பெருந் தேவிமாரோடு பௌவம் எறிதுவரை எல்லாரும் சூழச்சிங்காசனத்திலே இருந்தான்" [பெரியாழ்திரு 4-1-6] என்கிறபடியே தேவிமாரை நழுவ விடாமலிருக்கையாலே அச்யுதனாய் துவாரகையில் இருப்பவனையன்றோ கூப்பிடுகிறேன்.

"ஏகஸ்மிந்நேவ கோ₃விந்த₃: காலே தாஸாம் மஹாமுநே।
ஜக்₃ராஹ விதி₄வத் பாணீந் ப்ருத₂க்₃கே₃ஹேஷு த₄ர்மத:॥"
[வி-பு 5-31-17]

[மஹாமுனிவரே! கோவிந்தன் ஒரேகாலத்தில் தனித்தனியான வீடுகளில் பதினாறுமாயிரவரான அந்த ஸ்திரீகள் அனைவரையும் விதிப்படியும் சாஸ்திரமுறைப்படியும் பாணிக்ரஹணம் செய்துகொண்டான்.] என்கிற படியே பல பிராட்டிமாரை உடையவனாயிற்றே நீ. அடியவளான என் னொருத்தியை இகழ்ந்தால் உனக்கு இனியவர்களான அத்தனைபேர் முகத்திலும் நீ விழிக்கவேண்டாமா? 3 (த்வாரகாநிலயனே! அச்யுதனே!)

கிருயோ? அவர் ஒருநிலே நின்றது என்பரேல், ''திரைபொரு கடல்சூழ் திண்மதிள் துவரை வேந்து தன் மைத்துனன் மார்க்காய்'' என்கிறபடியே. * அரசினையவிய அரசினையருளும் ஆழியானுயிற்றே! (த்₃வாரகாநிலயாச்யுத) ஆராய்ச்சியைத் தவிர்ந்த அத₄ர்மமான ஸபை₁போலாயிற்றே உன் த₄ர்ம ஸபையும். (அச்யுத) என்று அவனையல்லாதாரை என்றும் தன்னை நழுவாமல் நோக்கும்படியான பெயரைச் சொல்லு கிருள். *அச்சுதனிறே அடியவர் வினைகெடுப்பான். ''**अच्युताहं तवास्मि**'' (அச்யுதாஹம் தவாஸ்மி) என்கிருள். மித்ரப₄ாவத் திலே ''**न त्यजेयं**'' (நத்யஜேயம்) என்கிற நீ, ஶரணாகத₃தையான

நீயும் என்னைப்போலே நிலேயிழந்திருக்கிருயோ என்னை ரக்ஷிக்காமலிருப் பதற்கு? துவாரகையை நிலேயாகக்கொண்டவனுய் நிலே நழுவாமலிருக்கிரு யன்ருே? 'கண்ணன் ஒரு நிலேயிலே நிற்கிருன்' என்று இங்கு இவள் அநுஸந்தித்ததற்காகவன்ருே

''திரைபொரு கடல்சூழ் திண்மதிள் துவரை
வேந்து தன்மைத்துனன் மார்க்காய்
அரசினையவிய அரசினையருளும் அரி புருடோத்தமன்''
[பெரியாழ்திரு 4-7-8]

என்கிறபடியே, இவளுடைய சரணாகதிக்குப் பலனளிக்கும்போது இவளுடைய எதிரிகளை அழிப்பதையும் செய்து இவர்களுக்கு நிலேயான ராஜ்யத்தையும் கொடுத்தான். [இதிலிருந்து திரௌபதியானவள் தன் சரணாகதிக்குப் பலனாக சத்ருஸம்ஹாரத்தையும், ராஜ்யப்ராப்தியையும் விரும்பினுள் என்று புலப்படுகிறது.] 4. (த்வாரகாநிலயனே! அச்யுதனே!) நன்மையெது, தீமையெது என்னும் ஆராய்ச்சியைக் கைவிட்டு அதர்ம வழியில் நிற்கும் இந்த துரியோதனசபைபோல் ஆயிற்றே உன்னுடைய தர்மஸபையும். 5. (அச்யுதனே!) என்று அவனைத்தவிர்த்த மற்றவர்களை, உச்சாரணமாத்திரத்தாலே என்றும் நழுவாமல் ரக்ஷிக்கும் பெயரைச் சொல்லுகிருள். அச்சுதனன்ருே அடியவர் வினைகெடுப்பான். ''அச்யுதாஹம் தவாஸ்மீதி ஸைவ ஸம்ஸாரபே₄ஷஜம்'' [ ] ['அச்சுதனே! நான் உனக்கு அடியேனுகிறேன்' என்பதே ஸம்ஸாரநோய்க்கு மருந் தாகும்] என்கிறபடியே ஸம்ஸாரநோய்க்கே மருந்தான நாமத்தைச் சொல்லுகிருள். ''மித்திரன் என்னும் பாவனை (வேஷம்) இருந்தாகில், அவனையும் ஒருபோதும் விடமாட்டேன்'' [ரா-யு 18-3] என்கிற நீ சரண

என்னை ஶத்ருக்கள் நலியும்படி காட்டிக்கொடுத்திருப்பதே! அவஸந்நையாய், அநாதை₂யாயிருக்கிற என்னை நெகிழுகையே ப்ராப்தமோ? நீயும் உன் ஸ்வப₄ாவத்தில் நெகிழிலன்றோ என்னுடை நெகிழவேண்டுவது! என்னை நெகிழ்ந்தோ உன் பேர் உண்டாவது? (ஶங்க₂சக்ரக₃த₃ாபாணே த்₃வாரகாநிலயாச்யுத) "तमसः परमो धाता शङ्खचक्रगदाधरः" (தமஸ: பரமோ த்₄ாதா ஶங்க₂சக்ரக₃த₃ாத₄ர:) என்றாள் ஒருத்தி. இவளும் இப்படியே பேசுகிறாள். "जातोऽसि देवदेवेश शङ्खचक्रगदाधर" (ஜாதோऽஸி தே₃வதே₃வேஶ ஶங்க₂சக்ரக₃த₃ாத₄ர) என்னக் கடவதிறே. "प्राकारः सर्ववृष्णीनां" (ப்ராகார: ஸா்வவ்ருஷ்ணீநாம்) என்றிருக்கும் நீ, இவர்களுக்குக் கடலை அரண்செய்து கொடுத்து ஶத்ருக்கள் கையில் காட்டிக்கொடாமல் *காக்குமியல்வினனாயிருக்கிற உனக்கு ஶத்ருக்கள் கையில் அகப்

மடைந்த எவ்வை எதிரிகள் அவமதிக்கும்படி காட்டிக்கொடுத்திருப்பதே! வருந்திநிற்பவளாய், வேறொரு ரக்ஷகரில்லாத என்னைக் கைவிடுவதுதான் உனக்குத் தகுதியோ? ஸ்வபாவத்தில் நழுவாதவனாகையாலேயன்றோ அச்யுதன் என்று பெயர்படைத்திருக்கிறாய். நீ அடியவரை ரக்ஷிக்கும் உன் ஸ்வபாவத்திலிருந்து நழுவினாலன்றோ என்உடை என்உடம்பை விட்டு நழுவலாம். என்னை நழுவவிட்டால், 'அச்யுதன்' [அடியவரை நழுவவிடாதவன்] என்னும் பெயர் நிலைநிற்குமோ? 6. (சங்கசக்ரகதா பாணியே! துவாரகாநிலயனே! அச்யுதனே!) "தமஸ்ஸுக்கு மேற்பட்டவன்; (அனைத்தையும்) தரிப்பவன்; சங்கசக்ரகதைகளை தரிப்பவன்" [ரா-யு 114-15] என்றாள் மண்டோதரி. இவளும் இப்படியே சங்கசக்ர கதாபாணியென்கிறாள். "தேவதேவேசனே! சங்கசக்ரகதாதரனே! நீயன்றோ பிறந்திருக்கிறாய்" [வி-பு 5-3-10] என்றாளன்றோ மற்றொரு பெண்பிள்ளையான தேவகியும். 7. (துவாரகாநிலயனே! அச்யுதனே!) "வ்ருஷ்ணி குலத்திலுதித்த அனைவர்க்கும் ரக்ஷகமான மதிளாயிருப்பவன்" [பார-ஸபா 36-12] என்றிருக்கும் நீ வ்ருஷ்ணிகளுக்காக துவாரகையிலே கடலை அரண்செய்து கொடுத்து எதிரிகள் கையில் காட்டிக்கொடுக்காமல் * காக்குமியல்வினனும் கண்ணபெருமானாய், அதனாலேயே அச்யுதன் என்று அழைக்கப்படுமவனாயிருக்கிறாய்; அப்படிப்பட்ட நீ 'ஸால்வனோடு யுத்தம் செய்து கொண்டிருந்தேன்; அதனால் வரமுடியவில்லை' என்று

---

* திருவாய் 2-2-9.

படுவதென்? செய்வதென்? பின்பு ''रथं स्थापय मेऽच्युत'' (ரத2ம் ஸ்த2ாபய மேऽச்யுத) என்னும்படியிறே இவளுக்காக ஸாரதி2யாய் வ்யவஸ்தி2தனானதும். நீ கைகழலாநேமியானா யிருக்க, என் மொய்குழல்கள் இரண்டும் விழும்படியாவதே! என்று *பொற்சக்கரத்தரியனையச்சுதனைப் பற்றுகிறாள்.

(கோ3விந்த3) இனி, அரைகுலையத் தலைகுலைய அலமாக் கும்படியான முடிசூடினபேரைச் சொல்லிக் கூப்பிட்டு முறையிடுகிறாள். ''गोविन्देति...ऋणं प्रवृद्धं'' (கோ3விந்தே3தி... ருணம் ப்ரவ்ருத்3த3ம்) அவன் திருவுள்ளம் புண்படும்படி

சொல்வது எப்படி? [இதிலிருந்து ஸால்வயுத்தம் கண்ணன் நேரில் வாராமைக்கு உண்மைக் காரணமல்லவென்பதும், உபாயாந்தரஸம்ஸர்க் கத்தால் சரணாகதிநிஷ்டை தடைபட்டுவிட்டதாலேயே கண்ணன் நேரில் எழுந்தருளவில்லையென்பதுமே பெரியவாச்சான்பிள்ளையின் திருவுள்ள மென்று விளங்குகிறது.] இவளுடைய சரணாகதிநிஷ்டைக்கிருந்த உபா யந்தரஸம்ஸர்க்கமாகிற குறை புநःப்ரபத்தியாகிற பிராயச்சித்தத்தாலே நீங்கிய பின்பு, ''அச்யுதனே! என் தேரை நிறுத்து'' [கீதை 1-21] என்று அழைக்கலாம்படியன்றோ இவளுக்காக அவன் ஸாரதியாய் நிலைநின்றதும். 8. (சக்ரபாணியே! அச்சுதா) ''எப்போதும் கைகழலாநேமியான்'' [பெரிய திருவ-87] என்கிற நீயிருக்கும்போது, இருமருங்குமிருக்கும் என் மொய் குழல்கள் அவிழ்ந்து விழும்படியாவதே! என்று * பொற்சக்கரத்தரியினை அச்சுதனைப் பற்றுகிறாள்.

1. (கோவிந்தனே!) 'அச்யுதனே!' என்றபின்பும் உதவக்காணாமை யாலே, அடுத்தபடியாக அவனை அரைகுலையத் தலைகுலைய வருந்தியோடி வரச்செய்வதாய், இந்திரனாலே கோவிந்தபட்டாபிஷேகம் செய்யப்பெற்ற அவனுக்கு முடிசூடின பெயரான கோவிந்தநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு முறையிடுகிறாள்.

''கோவிந்தே3தி யத3ாக்ரந்த3த் க்ருஷ்ணா மாம் தூ3ரவாஸிநம்।
ருணம் ப்ரவ்ருத்3த4மிவ மே ஹ்ருத3யாந் நாபஸர்ப்பதி॥''

[பார-உத் 47-39]

[தூரத்திலிருந்த என்னைக்குறித்து திரௌபதியானவள் ''கோவிந்தா'' என்று கூப்பிட்டது யாதொன்றுண்டோ, அதுவட்டியாலே மிகவளர்ந்

---

* திருவாய் 3-10-4.

உயிர்நிலையிலே ஒன்றைச் சொல்லிற்று. (கோ₃விந்த₃) நீ கோ₃விந்தா₃பி₄ஷேகம்பண்ணி கோ₃ப்தாவாயிருக்க, இவ்விடம் அராஜகமாய் ஒருவர் கூறை எழுவருடுக்கும்படியிருப்பதென்? இவளுக்குப் படவை சுரக்கும் திருநாமமிருக்கும்படி. (கோ₃விந்த₃) நீ ஆஶ்ரிதரக்ஷணத்திலே தீ₃க்ஷித்திருக்க, "**कृष्णाश्रया**" (க்ருஷ்ணாஶ்ரயா) என்றிருக்கிற என்னை க்ருபை பண்ணாதொழிவதென்? "நாராயணா" என்று உன் சிறுபேரையோ நான் சொல்லிற்று? "**नाम्नैतत्तव गोविन्द नाम त्वत्तस्सदाधिकम्**" (நாமைதத்தவ கோ₃விந்த₃ நாம த்வத்தஸ் ஸதா₃தி₄கம்) என்று உன்னிலும் அதி₄கமான உன் பேரையன்றோ

திருக்கும் கடன்போலே என்நெஞ்சை விட்டு நீங்குகிறதில்லை.] என்கிறபடியே அவன் திருவுள்ளம் புண்படும்படி உயிர்நிலையிலே ஒன்றைச் சொல்லிற்று. சரணம் புகுந்தது 'ருணம்' [கடன்] ஆயிற்று. இங்கு கோவிந்தநாமத்தைச் சொல்லி சரணம் புகுந்தது 'வ்ருத்₃த₄ம் ருணம்' [விருத்தியடைந்த கடன்] ஆயிற்று. மேலே உபாயபு₃த்₃தி₄யோடு மறுபடியும் கோவிந்த₃நாமத்தைச் சொன்னது 'ப்ரவ்ருத்₃த₄ம் ருணம்' [மிகவும் விருத்தியடைந்த கடன்] ஆயிற்று என்று எம்பெருமானின் திருவுள்ளம். 2. (கோ₃விந்தனே) நீ கோவிந்தபட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு இடையரையும், இடைச்சிகளையும், பசுக்களையும் கன்றுகளையுங்கூட ரக்ஷிப்பவனாயிருக்க, இவ்விடம் தன்னரசுநாடாய், ஒருவனுடைய வஸ்திரத்தைப் பிடுங்கி ஏழுபேர் உடுக்கும்படியாகலாமோ? மேலே இவளுக்குப் புடவை சுரக்கப்போவது இந்த கோவிந்தநாமமேயாகும் [இதிலிருந்து ப்ரபத்தியின் பலனாகவே திரௌபதிக்குப் புடவை சுரந்தது என்னும் பக்ஷம் பெரியவாச்சான்பிள்ளையுகந்ததன்று என்று விளங்குகிறது] 3. (கோவிந்தனே) நீ அடியாரை ரக்ஷிப்பதை விரதமாகக் கொண்டிருக்க, "கிருஷ்ணனையே கதியாகக்கொண்டவர்கள் பாண்டவர்கள்" [பார-த்ரோண 183-24] என்றிருக்கிற என்னிடம் தயை காட்டாமலிருப்பதேன்? "நாராயணா" என்று உன் சிறுபேரையோ நான் சொன்னது? "கோவிந்தனே! உன்னுடைய இந்த நாமம் உன்னைக்காட்டிலும் எப்போதும் சிறந்தது" [ ] என்கிறபடியே கட்டிப்பொன்னைப்போன்ற உன்னைக்காட்டிலும் சிறந்த பணிப்பொன்போன்ற உன் பேரையன்றோ நான் சொன்னது.

"ஸக்ருத் ஸ்ம்ருதோऽபி கோ₃விந்த₃: ந்ருணாம் ஜந்மஶதை: க்ருதம் ।
பாபராஶிம் த₃ஹத்யாஶு தூலராஶிமிவாநல: ॥" [ ]

நான் சொல்லிற்று. "सकृत्स्मृतोऽपि गोविन्दः" (ஸக்ருத் ஸம்ருதோऽபி கோ₃விந்த₃:) ஸகலப்ரவ்ருத்திநிவ்ருத்திகளைப் பண்ணவற்றானது உன் திருநாமமன்றோ. (கோ₃விந்த₃) நான் குழல்பேணுமலிருக்க, நீ *குழலிருண்டு சுருண்டேறிய குஞ்சிக்கோவிந்தனய் மயிர்பேணியிருப்பதென்? (கோ₃விந்த₃) நீ முடிசூடுவித்திருக்க, நான் "साहं केशग्रहं प्राप्ता" (ஸாஹம் கேஶக்₃ரஹம் ப்ராப்தா) என்னும்படியாவதென்? என்று *கோ₃விந்தன் குணம்பாடி ஆவிகாத்து குணஜ்ஞானத்தாலே நிர்ப்ப₄ரையானுள். பின்பிறே மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்ததும். (கோ₃விந்த₃) ஜக₃த்₃தி₄தார்த்த₂மாக

[கோவிந்தநாமம் ஒருதடவை நினைக்கப்பட்டபோதிலும், மனிதர்கள் நூறுபிறவிகளில செய்த பாபக்கூட்டத்தை, பஞ்சுக்குவியலைத் தீ எரிப்பது போலே, உடனே எரித்தொழித்துவிடும்.] என்கிறபடியே எல்லாப் பலன்களையும் கொடுப்பதாகிற ப்ருவ்ருத்திகளையும், எல்லாப் பாபங்களையும் போக்குவதாகிற நிவ்ருத்திகளையும்பண்ண வல்லமையுடையது உன் திருநாமமன்றோ. 4. (கோவிந்தனே) "கௌ₃ளர் நாதித்₃யே ப₃லீவர்த்தே... ரச்மித்₃ருக்₃ப₃ாணலோமஸு" என்கிற கேசவகோசத்தின்படி கோ₃சப்தம் குழலைச்சொல்லுவதாய், "நான் மயிர் முடிக்காமலிருக்க, நீ 'குழலிருண்டு சுருண்டேறிய குஞ்சிக் கோவிந்தன்' [பெரியாழ் 3-6-11] என்னத்தக்கவனாய் குழலைப்பேணியிருக்கலாமோ? 5. (கோவிந்தனே) நீ கோவிந்தபட்டாபிஷேகம் செய்துகொண்டிருக்க, "ஸாஹம் கேசக்₃ரஹம் ப்ராப்தா த்வயி ஜீவத்யபி ப்ரபோ₄" [பார-உத் 81-24] [ஐயனே! நீ உயிரோடிருக்கையிலேயே நான், ஒருவன் என் மயிரைத் தீண்டும்படியானேன்] என்னும் நிலையை அடையலாமோ? என்றுகூறி, "கோவிந்தன் குணம்பாடி ஆவிகாத்திருப்பேனே" [நாச்-திரு 8-3] என்கிறபடியே கோவிந்தநாமத்தாலே சொல்லப்படும் ஸௌசில்யாதிகுணத்தையறிந்து மனச்சுமை குறைந்தவளானுள். [இதிலிருந்து இந்த கோவிந்தநாமத்தைச் சொல்லும்போது, திருநாமத்திலே திரௌபதி உபாயபுத்தியைக் கொள்ளவில்லை என்று புலப்படுகிறது.] இப்படி இவள் தன் மயிர்முடித்தலை சரணுகதிக்குப் பலனுகக் கருதியதால் தான், பின்பு சரணுகதி பலிக்கும்போது, "மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்து" [பெரியாழ் 4-9-6] என்கிற பலனையும் அருளினுன் கண்ணன். 6. (கோவிந்தனே) "ஜக₃த்₃தி₄தார்த்த₂ம் கோ₃விந்த₃:" [ ] [உலகின் நன்மைக்காக அவதரித்தான் கோவிந்தன்] என்கிறபடியே உலகின்

வந்து அவதரித்தவனல்லேயோ? (த்₃வாரகாநிலய கோ₃விந்த₃) "த்துவாராபதிக்காவலன் கன்றுமேய்த்து விளையாடும் கோவலனைக் கூறுகிறாள். (கோ₃விந்த₃) "கோவிந்தன் (பசு?) மேய்த்தன" இறே. நீ பசுமேய்க்கக் கற்றவத்தனையல்லவோ? பரிப₄வத்தில் ரக்ஷிப்பது உனக்குப் பணியாயிருப்பதென்? (கோ₃விந்த₃) என்னுடைய ரக்ஷணத்துக்கு மலையெடுக்க வேணுமோ? கண்ணும்ல நோக்க அமையாதோ? **"गोविन्दं गोपतिं देवं सन्ततं शरणं व्रज"** (கோ₃விந்த₃ம் கோ₃பதிம் தே₃வம் ஸந்ததம் ஶரணம் வ்ரஜ) என்கிறது இவளநுஷ்டாநத்தைப் பின் செல்லும்படியாயிறே இருப்பது.

(புண்ட₃ரீகாக்ஷ) பத்₃மபத்ராக்ஷியான நான் கமலக்கண் முத்தம் சோரவிருக்க, **"किमर्थं तव नेत्राभ्यां"** (கிமர்த்த₂ம் தவ

நன்மைக்காக வந்து அவதரித்தவனல்லேயோ? 7.(த்வாரகாநிலயனே! கோவிந்தனே!) "துவராபதிக் காவலன் கன்றுமேய்த்து விளையாடும் கோவலன்" [நாச்-திரு 4-8] எனப்படுமவனைக் கூப்பிடுகிறாள். 8. (கோவிந்தனே) பசு மேய்த்தவனே! என்றபடி. "கோமளவான் கன்றைப் புல்கிக் கோவிந்தன் மேய்த்தன என்னும்" [திருவாய் 4-4-5] என்று கூறப்படுகிறதன்றோ. நீ பசுமேய்க்கத்தான் கற்றாய்போலும்! பிறர் துன்புறும்போது ரக்ஷிப்பது உன் காரியமாகாதே! என்றுமாம். 9. (கோவிந்தனே) பசுக்களை ரக்ஷித்தவனே! என்றபடி. இந்திரன் கல்மழைபொழிந்தபோது பசுக்களை ரக்ஷிக்க மலையை எடுக்கவேண்டியிருந்தது. என்னை ரக்ஷிக்க அவ்வளவு சிரமமும் வேண்டாமே! கண்ணாலே நோக்கினால் போதுமே! "பசுக்களுக்குப் பதியாயிருக்கும் கோவிந்தனெனும் தேவனையே எப்போதும் சரணம் பற்றுவாய்" [ ] என்கிற சாஸ்திரவசனமும் இவளநுஷ்டானத்தைப் பின் பற்றுகிறது என்று சொல்லும்படியிருக்கிறது இவளுடைய சரணாகதி நிஷ்டை. "விதயச்ச வைதிகா: த்வதீயகம்பீரமனோநுஸாரிண:" [ஸ்தோ-ர-20] [வேதவிதிகளும் உன்னடியார்களுடைய ஆழ்ந்த திருவுள்ளத்தைப் பின்செல்கின்றன.] என்று சொல்லப்பட்டதன்றோ.

1. (தாமரைக்கண்ணனே) "பாஞ்சால்யா: பத்₃மபத்ராக்ஷ்யா:" [பார-] என்கிறபடியே தாமரையிதழ்போன்ற கண்களையுடைய நான் கமலக்கண்ணிலிருந்து கண்ணீர் முத்தம் சிந்தநிற்க, "கிமர்த்த₂ம் தவ நேத்ராப்₄யாம் வாரி ஸ்ரவதி சோகஜம், புண்ட₃ரீகவிசாலாப்₄யாம் விப்ர

நேத்ராப்யாம்) என்கிறபடியே *உன் சோதிவாய்திறந்துன் தாமரைக் கண்களால் நோக்காதொழிவதென்? (புண்ட$_3$ரீகாக்ஷ) என்னுடைய ஆபத்துக்கு அவலோகநத$_3$ாநமன்றோ அபேக்ஷிதம்? (கோ$_3$விந்த$_3$ புண்ட$_3$ரீகாக்ஷ) "कृष्णं कमलपत्राक्षं" (க்ருஷ்ணம் கமலபத்ராக்ஷம்) என்னக்கடவதிறே. "संभ्रमैस्तुष्य गोविन्द" (ஸம்ப்$_4$ரமைஸ்துஷ்யகோ$_3$விந்த$_3$) என்றவநந்தரத்திலே "किमर्थं पुण्डरीकाक्ष" (கிமர்த்த$_2$ம் புண்ட$_3$ரீகாக்ஷ) என்றானிறே.

கீர்ணமிவோத$_3$கம்" [ரா-ஸு 33-4] [தாமரைபோல் நீண்ட உன் திருக் கண்களிலிருந்து நீர்ப்பெருக்குப்போன்ற துன்பக்கண்ணீர் ஏன் வடிகின்றது?] என்று அனுமன் பிராட்டியைக் கேட்டாற்போலே *உன்சோதிவாய் திறந்து என்னைக்கேட்டு, *உன் தாமரைக்கண்களால் நோக்காமலிருப்ப தேன்? 2. (தாமரைக்கண்ணனே) "அவலோகநத$_3$ாநேந பூயோ மாம் பாலயாச்யுத" [வி-பு 1-20-16] [அச்யுதனே! உன் கடாக்ஷத்தையளித்து என்னை மறுபடியும் காப்பாற்றுவாயாக] என்கிறபடியே என்னுடைய ஆபத்துத்திர உன் தாமரைக்கண்நோக்கன்றோ வேண்டியது. 3 (கோவிந்தனே! தாமரைக்கண்ணனே!) "தாமரையிதழ்க் கண்ணையுடைய கண்ணனே" [பார-ஸபா 62-9] என்று சொல்லப்பட்டதன்றோ.

"ஸம்ப்$_4$ரமைஸ் துஷ்ய கோ$_3$விந்த$_3$ ஏதந்ந: பரமம் த$_4$நம்।
அந்யத$_2$ா ஹி விஶேஷேண கஸ்த்வாமர்ச்சிது மர்ஹதி ॥
[பார-உத் 91-44]

[கோவிந்தனே! (உன்னைப் பூஜிப்பதில்) எங்களுடைய பரபரப்பைக்கண்டே நீ திருப்தியுறவேண்டும். இப்பரபரப்பே எங்களுக்குப் பெருஞ்செல்வமாகும். வேறுவிதமான சிறப்புடன் எவன்தான் உன்னைப்பூஜிக்க வல்லவனுவான்?] என்று விதுரன் கோவிந்தநாமத்தைச் சொன்னவுடன் கண்ணனுடைய கண் அப்போதலர்ந்த செந்தாமரைபோல் ஆக, அதைக்கண்ட துரியோதனன்,

§ "பீ$_4$ஷ்மத்$_3$ரோணுவதிக்ரம்ய மாஞ்சைவ மது$_4$ஸூத$_3$ந।
கிமர்த்த$_2$ம் புண்ட$_3$ரீகாக்ஷ பு$_4$க்தம் வ்ருஷளபே$_4$ாஜநம் ॥"

[மதுசூதனனே! தாமரைக்கண்ணனே! பீஷ்மத்ரோணர்களையும் என்னையும் விட்டு, ஏன் சூத்ரஸ்திரீக்குப் பிறந்த விதுரன் வீட்டிலே விருந்துண்டாய்?] என்று அத்தாமரைக்கண்ணழகைப் பேசினனன்றோ.

---

* திருவாய் 9-2-1. § தற்போதுள்ள பாரதகோசங்களில் இச்லோகமில்லை.

(புண்டரீகாக்ஷ) நான் கண்கலங்கியிருக்க, நீ கண்வளர்த்தி யோடேயிருப்பதென்? (புண்டரீகாக்ஷ) நீ கண்ணுடையவனு யிருக்க, நான் கண்டார் கண்பார்வைக்கிலக்காய்க் கண்கலங்கு வதென்? (புண்டரீகாக்ஷ, நான் கண்சிவந்திருக்க, நீ உன் முகத் தன கண்களல்லவாயிருப்பதென்? (புண்டரீகாக்ஷ) அவன் கண் செம்பளித்திருந்தான்; பின்பு கண்ணாலே அலரவிழித்த தும், இவளைக் குளிரநோக்கிற்றும். **"कृत्वा भारावतरणं"** (க்ருத்வா பாராவதரணம்) இத்யாதி. அநுகூலரக்ஷணத்துக்கும், ப்ரதி கூலநிரஸநத்துக்கும் பரிகரம் ஒன்றேயாயிற்று. (புண்டரீ காக்ஷ) "தாமரைக்கண்ணனோ! தனியேன் தனியாளனோ!" என்கிருள். (புண்டரீகாக்ஷ அச்யுத) "தாமரைக்கண்ணா!

---

4. (தாமரைக்கண்ணனே) நான் கண்கலங்கியிருக்க நீ கண்மலர்ந்திருப்பதே! 5. (தாமரைக்கண்ணனே) நீ கண்ணுடையவனாயிருக்க, நான் கண்டவர் களுடைய கண்பார்வைக்கு இலக்காய்க் கண்கலங்குவதேன்? 6. (தாமரைக் கண்ணனே) நான் கண் சிவந்திருக்க, நீ "உன் முகத்தன கண்களல்லவே" [நாச்-திரு 2-5] என்று "இவை தாமரையேயொழியக் கண்களல்ல" என்னலாம்படியிருப்பதேன்? 7. (தாமரைக்கண்ணனே) ப்ரபத்தியாகிற ஸூர்யன், உபாயாந்தரஸம்ஸர்க்கமாகிற மேகத்தாலே மறைக்கப் பட்டிருந்தவரையில் அவனுடைய திருக்கண்ணாகிற தாமரை மூடிக்கிடந்தது. புநச்சரணாகதியாகிற காற்றடித்து அந்த மேகம் விலகி ப்ரபத்தி ஸூர்யன் பிரகாசித்தபின்பு, திருக்கண்ணாகிற தாமரை இவளை மலரவிழித்துக் குளிரநோக்கிற்று.

"க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந: ।
மோக்ஷயித்வா தநும் ப்ராப்த: க்ருஷ்ண: ஸ்வஸ்தாநமுத்தமம் ॥"
[பார-மௌஸல 9-34]

[தாமரைத்தடங்கண்ணனான கிருஷ்ணன் மண்ணின் பாரத்தை நீக்கிவிட்டு தன் திருமேனியையும் விட்டுவிட்டு மிகச்சிறந்ததான தன்னுடைய பரம பதத்தை அடைந்துவிட்டான்.] என்கிறபடியே அநுகூலரை ரக்ஷிப்பதற் கும் எதிரிகளை அழிப்பதற்கும் இக்கண் ஒன்றே கருவியாயிருப்பது. 8. (தாமரைக்கண்ணனே!) "தாமரைக்கண்ணனோ! தனியேன் தனி யாளனோ" [திருவாய் 7-6-1] என்கிருள். 9. (தாமரைக்கண்ணா! அச்சுதா)

அச்யுதா" என்கிறாள். (அச்யுத புண்ட$_3$ரீகாக்ஷ) "வீவின்பம் மிகவெல்லை நிகழ்ந்த நம்மச்சுதன் வீவில் சீரன் மலர்க் கண்ணன்" என்கிறாள். (புண்ட$_3$ரீகாக்ஷ) **"कप्यासं पुण्डरीक-मेवमक्षिणी"** (கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ) என்கிற ச்ருத்யர்த்தம் இவளுக்குக் கையாளாயிருக்கும்படி. (புண்ட$_3$ரீகாக்ஷ) **"जितन्ते पुण्डरीकाक्ष"** (ஜிதந்தே புண்டரீகாக்ஷ) என்று இவள் முக்$_3$த$_4$ாநுப$_4$ாவ்யமான கண்களிலே ஜிதையாயிருக்கும்படி. (புண்ட$_3$ரீகாக்ஷ) **"स एष पृथुदीर्घाक्षः संबन्धी ते जनार्दनः"** (ஸ ஏஷ ப்ருது$_2$தீ$_3$ர்க்க$_4$ாக்ஷ: ஸம்ப$_3$ந்தீ$_4$ தே ஜநார்த்த$_3$ந:) என்று இவள் பேசினபடி கேட்டுக்கொண்டிருக்குமே. வழிபறிக்கும் தஶையிலே தாய்முகத்திலே விழிக்க ஆசைப்படுவாரைப்போலே. *தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண்ணனைக் காணவாயிற்று இவளாசைப்படுகிறது. (ஶங்க$_2$சக்ர க$_3$த$_3$ாபாணே புண்ட$_3$ரீகாக்ஷ) "சங்குசக்கரங்களென்று கை கூப்பும் தாமரைக் கண்ணென்றே தளரும்" என்கிறாள்.

"தாமரைக்கண்ணா! அச்சுதா" என்கிறாள். 10. (அச்புதா! தாமரைக்கண்ணா) "வீவில் இன்பம் மிக எல்லை நிகழ்ந்த நம் அச்சுதன் வீவில்சீரன் மலர்க் கண்ணன்" [திருவாய்4-5-3] என்கிறாள். 11. (தாமரைக்கண்ணா) "அந்தப் பரமபுருஷனுக்கு சூரியனால் மலர்ந்த தாமரைபோன்ற இருகண்கள் உள" [சாந் 1-7] என்கிற உபனிஷதர்த்தம் இவளுக்கு விதே$_4$யமாயிருக்கிறபடி. 12. (தாமரைக்கண்ணனே) "தாமரைக்கண்ணனே! உன்னால் (இவ்வாத்ம வஸ்து) ஜயிக்கப்பட்டது" [ஜிதந்தே-1] என்று இவள் அவனுடைய அழகியதாய், அநுபவிக்கத்தக்கதான கண்களிலே தோற்றிருக்கும்படி. 13. (தாமரைக்கண்ணனே) "அந்தப் பரமபுருஷன்தான், (தாமரைபோல்) அகன்று நீண்ட கண்ணையுடையவனாய், உனக்கு ஸம்பந்தியான இந்தக் கண்ணன்" [பார-வந 192-51] என்று இவள் பேசுவதை ஆர்வத்தோடு தன் தாமரைக்கண்ணை மலரவிழித்துக் கேட்டுக்கொண்டிருப்பான் கண்ணன், கள்ளர் வழிப்பறி செய்யுமிடத்திலே (களவுகண்டார்) தாய்முகத்திலே விழிக்க ஆசைப்படுவதுபோலே, துகிலுரியும் துஷ்டர் நிறைந்த துர்யோதன சபையிலே *உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணனைக் காணவாயிற்று இவள் ஆசைப்படுகிறது. 14. (சங்கசக்ரகதாபாணியே! தாமரைக்கண்ணனே!) "சங்குசக்கரங்களென்று கைகூப்பும் தாமரைக்

---

* பெரியதிரு 7-1-9.

(புண்டரீகாக்ஷ ஸங்க₂சக்ரக₃த₃பாணே) "பங்கயக்கண்ணனென்கோ சங்குசக்கரத்தனென்கோ" என்கிறாள். (புண்ட₃ரீகாக்ஷ) "पाहि मां पुण्डरीकाक्ष न जाने शरणं परं" (பாஹி மாம் புண்ட₃ரீகாக்ஷ ந ஜாநே சரணம் பரம்) என்கிறாள்.

(ரக்ஷமாம்) 1. ரக்ஷாபேக்ஷையுடைய என்னை; 2. அநாதையான என்னை. 3. அப₃லையான என்னை. 4. ஆஶ்ரிதையான என்னை. 5. அநந்யஶரணையான என்னை. (ரக்ஷமாம்) ரக்ஷிக்கையாவது விரோதி₄யைப் போக்குகையும். அபேக்ஷிதங்களைக் கொடுக்கையும். "அலமன்னுமடல்" இத்யாதி₃.

கண்ணென்றே தளரும்" [திருவாய் 7-2-1] என்கிறாள். 15. (தாமரைக் கண்ணனே! சங்கசக்ரகதாபாணியே) "பங்கயக்கண்ணனென்கோ?...சங்கு சக்கரத்தன் என்கோ" [திருவாய் 3-4-3] என்கிறாள். 16. (புண்டரீகாக்ஷனே) "புண்டரீகாக்ஷனே! என்னைக் காப்பாற்று. வேறு புகலறியேன்" [ஜிதந்தே 1-8] என்கிறாள்.

(என்னை ரக்ஷிப்பாய்) (என்னை) 1. ரக்ஷிக்கவேணும் என்னும் அபேக்ஷையுடைய என்னை. 2. நாதனற்ற என்னை. 3. பலமற்ற பெண்ணான என்னை. 4. உன்னை சரணமடைந்த என்னை. 5. வேறு புகலற்ற என்னை. (ரக்ஷிப்பாய்) ரக்ஷிக்கையாவது,–விரோதிகளான துர்யோதன துச்சாஸநாதிகளை அழிப்பதும், தான் விரும்பியவையான வஸ்திரவிருத்தி, ராஜ்ய ப்ராப்தி, கூராராழிவெண்சங்கேந்திவருகை, கண்ணாலே மலரநோக்குகை, குளிர வார்த்தை சொல்லுவது முதலானவற்றை அருளுவதும். அடுத்தபடியாகத் திருநாமஸங்கீர்த்தனத்திலே இவள் உபாயபுத்திகொள்ளுகையாலே, அதற்குப் பலமாக இவள் கருதிய வஸ்திரவிருத்தியைமாத்திரம் திருநாமஸங்கீர்த்தனம் செய்து கொடுத்தது. "த்₃ரௌபத்₃யா ஸஹிதா: ஸர்வே நமச்சக்ருர் ஜநார்த்த₃நம்" [பார-வந 192-56] [திரௌபதியோடு கூடப்பாண்டவர்களனைவரும் ஜநார்த்தனனை சரணமடைந்தனர்] என்றவிடத்திலே அநுஷ்டிக்கப்பட்ட ப்ராயச்சித்தரூபமான புந:சரணாகதிக்குப் பின்மற்ற எல்லாப் பலன்களும் சரணாகதிக்குப் பலமாகக் கிடைத்தன.

"அலமன்னுமடல் சூரிசங்கமடுத்து
அடலாழியினால் அணியாருருவின்
புலமன்னு வடம்புனை கொங்கையினாள்

(ஶரணாக₃தாம்) ஶரணமடைந்த இவளுக்காகவிறே *பண்டுநூற்றுவரை மரணமடைவித்ததும். இவளுக்கு வஸ்த்ரவர்த்த₄நமும், ஶத்ருஸம்ஹாரமும் அபேக்ஷிதம். "रक्षापेक्षां प्रतीक्षते" (ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே) என்று. *எழுது மென்னுமிது மிகையாயிறே அத்தலைக்கு இருப்பதும். (ஶரணாக₃தாம்) ஶத்ருவாகிலும் விடவொண்ணாதே ரக்ஷிக்க வேண்டும்படியான ஶரணாக₃தித₄ர்மத்தை அநுஷ்டி₂த்தேன். க₄ாதுகனான வேடன் விஷயத்திலே, திர்யக்கான பக்ஷி, தன்னை அழியமாறி ரக்ஷித்தபடி கண்டால், ஶரணாக₃த வத்ஸலனான

பொறைதீர முனாள் அடுவாளமரில்
பலமன்னர்படச் சுடராழியினைப்
பகலோன் மறையப் பணிகொண்டு அணிசேர்
நிலமன்னனுமாய் உலகாண்டவனுக்கு
இடம் மாமலையாவது நீர்மலையே. [பெரியதிரு 2-4-3]

என்கிற பாசுரத்திலே திரௌபதிக்கு சரணாகதிபலனாகக்கிடைத்த பலன்களில் சில பேசப்பட்டன.

1. (சரணமடைந்தவளை) சரணமடைந்த இவளுக்காகவன்றோ மஹாபாரதயுத்தத்திலே துரியோதனன் முதலான நூற்றுவரை மரணமடைவித்தான் கண்ணன். இவள் சரணாகதிபலனாக விரும்பியவற்றிலே ஸ்திரவிருத்தியும், சத்ருஸம்ஹாரமும் முக்கியமானவை. "ரக்ஷிக்கவேணும் என்னும் அபேக்ஷையை சேதனனிடமிருந்து எதிர்பார்க்கிறான் ஸர்வேச்வரன்" [ல-த 17-78] என்றும், "தொழுது மாமலர் நீர்சுடர் தூபங்கொண்டு எழுதும் என்னுமிது மிகையாதலின்" [திருவாய் 9-3-9] என்றும் சொல்லுகிறபடியே இந்த ரக்ஷாபேக்ஷையும் மிகையாகவன்றோ அவனுக்கிருப்பது. 2. (சரணமடைந்தவளை) "தஸ்மாது₃பி வத்₄யம் ப்ரபந்நம் ந ப்ரதிப்ரயச்ச₂ந்தி" [யஜு-கா 6-5-20,29] [ஆகையால், கொல்லத்தக்கவனாயினும், சரணமடைந்தவனைக் காட்டிக்கொடுப்பதில்லை.] "சரணாக₃த: அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய:" [ரா-யு 18-28] [சரணமடைந்த எதிரி உயிரைவிட்டாவது காப்பாற்றப்படவேண்டியவன்] என்கிறபடியே எதிரியாயிருந்தாலும் கைவிடாமல் ரக்ஷிக்கவேண்டும்படியான சரணாகதிதர்மத்தை அனுஷ்டித்தேன். கொல்லுகின்ற வேடன் விஷயத்திலே பகுத்தறிவற்ற விலங்கான பக்ஷி தன் உயிரையே கொடுத்து ரக்ஷித்ததைக்கண்டால், "சரணாக₃தவத்ஸல:" [ரா-ஸு 21-21] என்று

நீ ஶரணாகதையான என்விஷயத்தில் என்னசெய்யவேண்டும்? இவனிப்படியே. **"नातिस्वस्थमनाः"** (நாதிஸ்வஸ்தமநா:) என்று இழவோடே எழுந்தருளிற்றும். (ஶரணாகதாம்) ஆண் பிறந்தார்க்கெல்லாம் அடைக்கலமாயிருக்க, பெண்பிறந்தார் அடைக்கலம் புகுந்தால், "அஞ்சேல்" என்னாதிருப்பதேன்? **"माशुचः"**(மாஶுச:)என்று ஒருவார்த்தையன்றோ வேண்டுவது.

(ஶங்கசக்ரகதாபாணே...ஶரணாகதாம்) நீ ரக்ஷணபரிகரங்களையுடையவனாவது; ஆஸந்நனாவது; ஆஶ்ரிதரை நழுவவிடாதவனாவது; ஆஶ்ரிதரக்ஷணத்திலே தீக்ஷித்திருக்குமவனாவது; கண்ணுடையவனாவது; நான் ரக்ஷாபேக்ஷையுடையளாய் ஶரணம்புகுவது; ஆகையாலே ரக்ஷிக்கக்குறையென்?

சரணமடைந்தவரிடம் வாத்ஸல்யமுடையவனெனப் பிரசித்திபெற்ற நீ சரணமடைந்த என்விஷயத்தில் என்ன செய்யவேண்டும்? இவனும், சரணாகதிபலனைக் கொடுக்கவேண்டியதையெல்லாம் கொடுத்தும், "மனம் மிகவும் திருப்தியில்லாமலே தன்னடிச்சோதிக்கு எழுந்தருளினான்" [ ] என்கிறபடியே, 'செய்யவேண்டிய காலத்தில் செய்யமுடியாமல், காலம்தாழ்த்துப் பலனளிக்கவேண்டியதாக நேரிட்டுவிட்டதே' என்னும் குறையாலே எல்லாம் செய்தும் ஒன்றும் செய்யாதவனாய் வருத்தத்தோடே இந்நிலவுலகைவிட்டுப் பிரிந்தானன்றோ. 3. (சரணமடைந்தவளை) பலமுள்ள ஆணாகப்பிறந்த தேவர்கள், விபீஷணன், அர்ஜுனன் முதலானோர்க்கெல்லாம் அடைக்கலமாயிருக்க, பலமற்ற பெண்ணாகப்பிறந்த நான் சரணம் புகுந்தால் 'அஞ்சேல்' என்னாமலிருக்கலாமா? "வருந்தாதே" [கீதை 18-66] என்று ஒரு வார்த்தையன்றோ நான் வேண்டுவது.

(சங்கசக்ரகதாபாணியே.....சரணமடைந்த என்னை ரக்ஷிப்பாய்) அடியவரைக் காக்கும் கருவிகளான சங்கசக்கரகதைகளை உடையவனாகவுமிருக்கிறாய்; அருகிலே துவாரகையில் எழுந்தருளியிருக்கிறாய்; அடியவரை நழுவவிடாத அச்யுதனாயிருக்கிறாய்; கோவிந்தபட்டாபிஷேகம் செய்து கொண்டு எளியவர்களை ரக்ஷிப்பதையே விரதமாகக் கொண்டிருக்கிறாய்; கண் (1. தாமரைக்கண்; 2. இரக்கம்) உடையவனாயிருக்கிறாய்; நான்'ரக்ஷிக்கவேணும்' என்னும் அபேக்ஷையுடையவளாய் சரணம் புகுந்திருக்கிறேன். ஆகையாலே ரக்ஷிக்கத்தட்டென்ன?

(ஶங்கசக்ரக₃த₃ாபாணே) என்கையாலே ஜ்ஞாநஶக்த்யாதி₃ யோகத்தைச் சொல்லி, (த்₃வாரகாநிலயாச்யுத கோ₃விந்த₃புண்ட₃ரீகாக்ஷ) என்கையாலே வாத்ஸல்ய ஸௌஶீல்ய ஸௌலப்₄யாதி₃கு₃ணங்களைச் சொல்லி, (ரக்ஷ மாம்) என்கையாலே அகிஞ்சநாதி₄காரியென்னுமிடம் சொல்லி, (ஶரணுக₃தாம்) என்கையாலே உபாயாத்₄யவஸாயம் சொல்லித் தலைக்கட்டுகிறது.

இத்தால் லஜ்ஜாபுரஸ்ஸரமாக இதரோபாயத்யாக₃ஞ் சொல்லி, ஸித்₃தே₄ாபாயஸ்வீகாரம் பண்ணுகை அதி₄காரி க்ருத்யம் என்றதாயிற்று.

பாரதாதி₃ தனிச்லோகம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

"சங்கசக்ரகதாபாணியே" என்கையாலே துஷ்டநிக்ரஹத்துக்குரிய ஜ்ஞானம், சக்தி முதலான ஆச்ரிதகார்யாபாதககுண முடையவனென்று கூறி, "துவாரகாநிலயனே!" என்று ஸௌலப்யத்தையும், "அச்யுத" என்று ஸ்வாமித்வ வாத்ஸல்யங்களையும், "கோவிந்த" என்று ஸௌசீல்யத்தையும், "புண்டரீகாக்ஷ" என்று வாத்ஸல்யாதிகளையும் கூறுவதன் மூலம் ஆச்ரயணஸௌகர்யாபாத₃ககுணமுடையவனென்று சொல்லி, "என்னை ரக்ஷிப்பாய்" என்று கைம்முதலற்றவனே சரணமடையவுரியவனென்பதைச் சொல்லி, "சரணமடைந்த" என்கையாலே, அவனையே உபாயமாக நினைக்கும் உறுதியைச் சொல்லிமுடிக்கிறது.

இந்த ச்லோகத்தால், லஜ்ஜையோடு கூட மற்ற உபாயங்களை விட்டமையைச் சொல்லி, ஸித்₃தே₄ாபாயமான பகவானைப் பற்றுகையே சரணமடையும் அதிகாரி செய்யவேண்டியது என்று சொல்லிற்றாயிற்று.

ஸ்ரீவைஷ்ணவஸு₃தர்சநபத்ரதி₄பஞன
ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமித₃ாஸன் இயற்றிய
பாரதாதி₃ தனிச்லோகத₃ர்ப்பணம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சிறந்த
ஸ்ரீவைஷ்ணவ
மாதப்பத்திரிகை

சார்வரி மார்கழியி
லிருந்து பதினலாவது
வருடம் நடை
பெறுகிறது.

ஆசிரியர்:-

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

வருடச்சந்தா ரூ. 3-00.

வேதம், ஸ்மிருதிகள், இதிஹாஸங்கள் முதலிய வற்றிலிருந்து ஸ்ரீமந்நாராயணனின் பெருமையை விளக்கும் கட்டுரைகளும், தமிழில் கீதா வ்யாக்யான மும், விவரண ஸஹிதமான ஸ்ரீராமாயண தனிச்லோக மும், திவ்யப்ரபந்தங்களுக்கு எளிய விவரணங்களோடு கூடிய பூர்வாசார்ய வ்யாக்யானங்களும், கம்பராமா யணவுரையும், பெரியாழ்வார் ப்ரபாவமும், விசிஷ்டாத் வைத ப்ரகரணக்ரந்தமான விவரண ஸஹித சாரீரக காரிகாவளியும், விசிஷ்டாத்வைதவிஜயமும், மற்றும் பல விஷயங்களும் வெளிவருகின்றன.

ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு முதலானவற்றோடுகூடிய பெரியவாச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களின் க்ரந்தங்கள்.

	க்ரந்தங்கள்	விலை	தபால்
1.	பரந்தரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள்	1-50	-18
2.	ஸ்தோத்ரரத்ந சதுஃச்லோகி ஜிதந்தே வ்யாக்யானங்கள்	3-00	-38
3.	திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-50	-18
4.	முதல்திருவந்தாதி வ்யாக்யானம்	1-88	-25
5.	பெருமாள் திருமொழி வ்யாக்யானம்	1-88	-25
6.	திருமாலை வ்யாக்யானம்	2-75	-31
7.	திருவாசிரியம் பெரியதிருவந்தாதி வ்யாக்யானம்	1-63	-25
8.	சதுஃச்லோகி வ்யாக்யானம் (நாயனாராச்சான்பிள்ளை)	1-50	-18
9.	கத்ய வ்யாக்யானங்கள்	2-00	-25
10.	நாச்சியார் திருமொழி வ்யாக்யானம்	4-00	-50
11.	திருச்சந்தவிருத்த வ்யாக்யானம்	3-00	-38
12.	நான்முகன்திருவந்தாதி வ்யாக்யானம் (விவரணத்துடன்)	2-50	-38
	ஷை மலிவுப்பதிப்பு	2-00	-38
13.	ஸ்ரீராமாயண தனிச்லோகம் (விவரணத்துடன்)	3-50	-38
	ஷை மலிவுப்பதிப்பு	2-75	-38
14.	திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்	0-50	-08
15.	பாசுரப்படி ராமாயணம் (விலையில்லை தபாற்கூலி 0-08)		
16.	அமலனாதிபிரான் வ்யாக்யானங்கள்	1-88	-25
17.	கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யானம்	2-75	-38
18.	சிறியதிருமடல் வ்யாக்யானம் (விவரணத்துடன்)	1-38	-25
19.	முமுக்ஷுப்படி வ்யாக்யானம்	2-50	-37
20.	பெரியதிருமடல் வ்யாக்யானம்	1-50	-25

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

1.	திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-50	-18
2.	திருப்பாவை வ்யாக்யானம்	2-25	-25
3.	ஸந்த்யாவந்தந பாஷ்யம்	2-25	-25
4.	புருஷஸூக்த வ்யாக்யானம்	0-75	-12
5.	நாராயணஸூக்த வ்யாக்யானம்	0-75	-12
6.	ஸ்ரீஸூக்த வ்யாக்யானம்	2-00	-38
	ஷை மலிவுப்பதிப்பு	1-50	-31
7.	பூ நீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள்	1-75	-25
8.	கம்பராமாயணம் (கையடைப்படலம்முடிய)	2-50	-38
9.	ராமாநுஜதேசிக ஸ்தோத்ரங்கள்	1-00	-18
10.	பாகவத தசமஸ்கந்த கீர்த்தனை பூர்வபாகம்	4-00	-50
	ஷை உத்தரபாகம்	4-00	-50
12.	ஸ்ரீகேசவ மணிமாலை	0-50	-08
13.	ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தவம்	0-37	-08
14.	யதிராஜவிம்சதி வ்யாக்யானம்	0-88	-12
15.	ஸந்மதகாரிகாவளீ	1-75	-25
16.	தேஹளீசஸுப்ரபாதம்	0-25	

கிடைக்குமிடம்:—S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3. புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீ:

ஸ்ரீராமாயண தனிச்லோகத்தில்

பூர்வார்த்தத்தில் எடுக்கப்பட்ட ச்லோகங்களின்

பாதாநுக்ரமணிகை

[பருத்த எழுத்தில் இருப்பவை மூல ச்லோகங்கள்.
சாதாரண எழுத்திலிருப்பவை வ்யாக்யானத்தில் எடுக்கப்பட்டவை.]

ப$_2$

ப$_3$

ஸ்ரீராமாயண தனிச்லோகம் பூர்வபாகத்தில் எடுக்கப்பட்ட ஸ்ரீராமாயண ச்லோகங்களின் பாதாநுக்ரமணிகை முற்றிற்று.

ஸ்ரீராமாயண தனிச்லோகம் உத்தரபாகத்தில் எடுக்கப்பட்ட ஸ்ரீராமாயண ச்லோகங்களின்

பாதாநுக்ரமணிகை

த3

ஸ்ரீராமாயண தனிச்லோகம் உத்தரபாகத்தில் எடுக்கப்பட்ட ஸ்ரீராமாயண ச்லோகங்களின் பாதாநுக்ரமணிகை முற்றிற்று.

பூர்வபாகத்திலெடுக்கப்பட்ட இதர ப்ரமாணங்களின்

அநுக்ரமணிகை

பூர்வபாகத்தில் இதரப்ரமாண அநுக்ரமணிகை முற்றிற்று.

உத்தரபாகத்திலெடுக்கப்பட்ட இதர ப்ரமாணங்களின்

அநுக்ரமணிகை

ம

ய

ர

ல

வ

உத்தரபாகத்தில் இதரப்ரமாண அநுக்ரமணிகை முற்றிற்று.

பாரதாதி தனிச்லோகத்திலெடுக்கப்பட்ட ப்ரமாணங்களின்

அநுக்ரமணிகை

பாரதாதிதனிச்லோக ப்ரமாணநுக்ரமணிகை முற்றிற்று.

பூர்வபாகத்தில் ப்ரமாணாகரபரிசிஷ்டம்

[தனிச்லோகத$_3$ர்ப்பணம் பூர்வபாகத்தில் ஆகரம் கொடுக்காமல் விடப்பட்ட ப்ரமாணங்களில் சிலவற்றுக்குக் கீழே ஆகரங்கள் கொடுக்கப்படுகிறது. அவ்விடங்களில் குறித்துக்கொள்வது]

பக்கம்	ப்ரமாணத் தொடக்கம்	ஆகரம்
2	மநஸா துவிஶ	விஷ்ணுதர்மோத் 275-2
6,253	நித்யம் நித்யா	ஸாத்வதம்
17	தேஷாம்தேஜோ	ஆபஸ்தம்பதர் 2-13-8
79	ஆர்த்தார்த்தே	ப்ருஹஸ்பதிஸ்ம்ருதி [கெய்க்வாட்பதிப்பு 25-13]
162	ரிக்தஹஸ்தேந	ப்ரஹ்மாண்டபு-உத்தரபாகம்-43-67
197	பிதுர்த$_3$ஶகு$_3$ணம்	வஸிஷ்ட 13-2
220	அக்நிர்தே$_3$வா	தை-ஸம் 5-1
269	ருஜுப்ரணம	ரகு 6-25
270	நிதர்ஶநமஸாராணம் / லகு$_4$ர்ப$_3$ஹுத்ருணம்	மாகம் 2-50
271	ந த்வாத்ருணத்வம் / ந த்வாத்ருணய	மஹாபாஷ்யம்ஸூ 2-13-17

272	ஜ்ஞாநேந ஹீந:	நரஸிம்ஹபு 16-13
276	விப்ரபீடா₃	யாஜ்ஞவல்க்ய 2-218
306	நாப்ருஷ்ட:	மநு 2-110
312	விபரீதஸ்தத₂ா	விஷ்ணுதர்மம் 109-74
313	த்ரஸ்யத்யபி	ரா-யு 114-3

உத்தரபாகத்தில் ப்ரமாணாகரபரிசிஷ்டம்

பக்கம்	ப்ரமாணத் தொடக்கம்	ஆகரம் அல்லது முழுப்ரமாணம்
4	ஸ்வே ஸ்வே	ரா-பா 1-96
8.40	ப்₄ராதா ஸ்வா	மநு 2-226
44	ஸமித்ர	ரா-பா 15-27
48	ஸஹஸ்ரந்து	பாலராமாயணம் 4-30
81	நித்யம்நித்யா	ஸாத்வதம்
114	கர்ணௌ பிதா₄ய	பாகவதம் 4-4-17
132	ஸுஹ்ருத₃ா	ரா-யு 17-31
339	தஸ்மிந் ப்ரஸங்கே...	ப்ரஸீத₃த்யச்யுதஸ் தஸ்மிந்...
342	உன்னை எய்தி	பெரியதிரு 6-3-4
367	கஷாய பக்தி: கஷாயேகர்ம	பாரதம் சாந்தி 276-39
415	விப்ராத்	பாகவதம் 7-9-10
470	இத₃ாநீமிவ	மீமாம்ஸாச்லோகவார்த்திகம் சோத₃நாஸூத்ரம்-ச்லோ 99
516	ஸ்வேத₃ாம்புகணிகாஞ்சிதம்	வி. பு. 5-20-54
534	யத்கத₂ா...	புருஷார்த்தே₂ாऽயமேவைகோ யத்கத₂ா...

பக்கம் 535-ல் "ஸ ஸ்வர்க்க உதீ₃ரித:" என்றொரு ப்ரமாணம்எடுக்கப்பட்டுள்ளது. அதை "ஸ ஸ்வத்₄வர உதீ₃ரித:" என்று திருத்திக்கொள்ளவும். பொருளையும் தக்கபடி திருத்திக்கொள்ளவும் அதன் பூர்ணச்லோகமும் ஆகரமும் பொருளும் பின்வருமாறு:—

"ஸமித்ஸாத₄நகாதீ₃நாம் யஜ்ஞாநாம் ந்யாஸமாத்மந: ।
நமஸா யோऽகரோத்₃தே₃வே ஸ ஸ்வத்₄வர உதீ₃ரித: ॥"
[அஹிர் 37-37]

[ஸமித் முதலானவற்றை ஸாதனமாகக்கொண்ட யஜ்ஞங்களைக்காட்டிலும், எவனொருவன் 'நம:' என்னும் சப்தத்தாலே தேவனிடத்தில் தன்னை ஸமர்ப்பிக்கிறனோ அவனே நல்ல யாகத்தைச் செய்தவன் என்று கூறப்படுகிறன்.]

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
27	12	श्रत्वा	श्रुत्वा
44	23	ரா-ஆ	ரா-பா 15-27
75	7	क्षिपं	क्षिप्रं
83	7	पावकोपयं	पावकोपमं
102	2	अन्तर्धा नगता	अन्तर्धानगता
114	8	निर्यायात्	निरयात्
,,	9	நிர்யாயாத்	நிரயாத்
117	13	शत्रसैन्यं....शत्ररत	शत्रुसैन्यं....शत्रुरत
126	6	कषिराजेन	कपिराजेन
133	15	आज्ञातं	अज्ञातं
150	10	31	41
197	5	भुवो	भ्रुवो
222	10	महाप्राज्ञ	महाप्राज्ञः
223	3	युर्वृत्तो	दुर्वृत्तो
,,	16	श्रत्वा	श्रुत्वा
229	11	यच्छेयः	यच्छ्रेयः
236	21	18-33	18-13
249	13	भस्मस	भस्मसा-
,,	14	ात्कुरुते	त्कुरुते
295	7	हन्मा	हन्या
298	2	श्रत्तु	शत्रुः
311	2	मोहद्वापि	मोहाद्वापि
320	13	प्रह्यस	प्रसह्य

328	1	यहुक्त	यदुक्त
346	14	सुखावि	सुखानि
356	29	செத்துக்கிறதோ	செத்துக்கிடக் கிறதோ
391	8	दुखः	दुःख
535	11	स्वर्ग...ஸ்வர்க்க$_3$	स्वध्वर...ஸ்வத்$_4$வர
,,	31	அதுவே ஸ்வர்க்கம் எனப்படுகிறது	அவனே நல்ல யாகத் தைச் செய்தவன் எனப்படுகிறான்.
587	6	भिक्लुप्तः	भिक्लृप्तः
633	3	ச்லோகங்களின்	ஸ்ரீராமாயணச்லோ கங்களின்

மூலச்லோகங்களின் ஸூசிகை

ராமாயணம்–பூர்வபாகம்

ராமாயணம் – உத்தரபாகம்

பாரதாதி தனிச்லோகம்

பழைய பதிப்புகளில் உள்ள அசுத்தபாடங்களும், நம் பதிப்பில் அவற்றின் திருந்திய பாடங்களும்.

பக்கம்	ப்ரதீகம் அல்லது வரி	அசுத்தபாடம்	சுத்தபாடம்
9	வாக்யம்	விஹிதங்களை	ஹிதங்களை
13	ஆஜகாம	ஸம்பந்தமில்லாமையாலும்	ஸம்பந்தமில்லாமையும்
16	மேருஶிகூரா காரம்	ஸ்திரனையும்	ஸ்திரனைபடியும்
,,	தீ₃ப்தாமிவ ஶதஹ்ரத₃ாம்	த்₃ருஷ்டாந்தமாகப் பொருமையாலே	த்₃ருஷ்டாந்தமாகப் போராமையாலே
20	து₃ர்த₄ர்ஷ:	புகுந்தவனுக்குப்	புகுந்தவனுக்கும்
46	வ்யாக்யானக் கடைசி	ப்ரதிப்ரயச்சூதி	ப்ரதிப்ரயச்சூந்தி
74	மாம்	எழுநல்ல	இழைநல்ல
74	க்ஷிப்ரம்	விரையும் கார்யம் தூங்கெனத் தூங்கும் கார்யம் விரையும்	"விரையும் கார்யம் தூங்கேல்; தூங்கும் கார்யம் விரையேல்"
79	மஹாத்மநே அவதாரிகை	புகழவேண்டுவது	புகழ்வேண்டுவது
84	மஹாத்மநே (8)	பொறிவாளராய்	பேரறிவாளராய்
*87	ஸர்வலோக ஶரண்யாய (9)	தேவயோநிகளாயும், மநுஷ்யயோநிகளாயும்...... தர்மார்த்திகளாயும், காமார்த்திகளாயும்	*தேவயோநிகளாயும், திர்யக்யோநிகளாயும் மநுஷ்யயோநிகளாயும்...... தர்மார்த்திகளாயும் அர்த்தார்த்திகளாயும், காமார்த்திகளாயும், மோக்ஷார்த்திகளாயும்

---

* இது நம்முடைய பதிப்பிலும் தவருகவே உள்ளது. திருத்திக்கொள்ளவும். விவரணத்திலும், "அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாலுவகைப் புருஷார்த்தங்களையும் விரும்புமவரையும்" என்று திருத்திக்கொள்க.

99	கடைசி	பெரியபெருமாளைப் பேரிட்டு	பெருமாளைப் பிராட்டி.
121	ஏஷ விபீ₄ஷண:...	விஹிதமாயிருக்க... க்ரூரகர்மாவிறே. அவன்	விஹிதமாயிருக்கை;... க்ரூரகர்மாவிறே அவன்;
127	கபிராஜேந யது₃க்தம்	அடர்ந்து	அடர்த்து
,,	ஹேதுமத்	ராவணாவரஜத்வாத்உபபத்தி...	ராவணாவரஜத்வாத்₃யுபபத்தி ....
133	தே	கேட்டத்துக்குக் கருத்து, அறிகையும்	(தே) கேட்டத்துக்குக் கருத்தறிகையும்,
137	தொடக்கம்	கு₃ணாத்தம்	கு₃ணாயத்தம்
156	(பாபாத்)	(ப்ராப்த:) என்று	(பாபாத்) என்று
159	ஸம்ப்ரேக்ஷ்ய...	ஶங்கநீயனென்றும் ஆராயும்படி இன்னதென்றும்	ஶங்கநீயனென்று ஆராயும்படி இன்னதென்று
165	அவதாரிகையின் கடைசி வாக்கியம் பழைய பதிப்புகளில் வியாக்கியானத்தொடக்க வாக்கியமாகக் காணப்படுகிறது.		
166	அதிஶாயயிதும்...	நிலையைப்போக்கை	நிலையைப்பேர்க்கை.
170	அவதாரிகை	நின்றநிலைக்குநன்மை	நின்று நிலைக்கும் நன்மை
172	முதல்வரி	சொல்லும்போது	சொல்லுவது
,,	நாபிஸங்க₄ர்ஷாத்	நிர்ப்பந்த₄த்தால்	நிர்ப்பந்தித்துச்
173	ந ச காமத:	அழித்துக்கொள்ளாதே	அழைத்துக்கொள்ளாதே
174	வசநம்வக்ஷ்யாமி	நெருக்கினாற்போலே	நறுக்கினாற்போலே
202	கார்யம்	கர்த்தவ்யதை	கர்த்தவ்யத்தை
228	வரி 14	சரமார்த்த₂த்துக்கு	சரமத்வத்துக்கு
230	வரி 8	தன்னைப் பாரென்று	தன்னைபற்றென்று
240	வரி 1	இன்னாடியும்	இந்நாலடியும்
249	வரி 1	"நம:" என்றாய்	ந மம) என்றாய்
254	வரி 7	என்றது	என்பது

259	,, 9	பரித்யாஜ்யராவார்	அபரித்யாஜ்யராவார்
261	வரி 1	இதிசொரு	இதொரு
262	வரி 2	ஆசார்ய ஏவோப ஸங்க்$_3$ராஹ்ய:	ப்ராசார்யாயோபஸங்க்$_3$ருஹ்ய
294	வா	ஹிதமாத்ரனை	அஹிதமாத்ரனை
297	ஹரிக$_3$ணேஸ்	நீரருளீர்	நீர் உளீர்
309	ஆர்த்த:...	(த்$_3$ருப்த:)ப்ரபந்நனும்...	த்$_3$ருப்தப்ரபந்நனும்...
309	,,	ப்ராப்தவசநமும்	ஆப்தவசநமும்
310	வரி 4	ரிக்தஹஸ்தனைக் கொண்டு	ரக்தஹஸ்தனைக் கொண்டு
318	தவாஸ்மி...	உபாயத்தையும்	உபேயத்தையும்
320	வரி 8	பண்ணுகிறவ தான்	பண்ணுகிறவன், தான்
321	வரி 6	செருக்கி நான்... என்ற	(பா) செருக்கினால்... என்று
329	வரி 1	பிணக்குண்டாயல்ல;எல்லார்க்கும்	பிணக்குண்டாயல்ல: சிலரோடே வெறுப்புண்டாயல்ல; எல்லார்க்கும்
,,	வரி 5	அவையடக்கும்	அவையடக்கம்.
330	வரி 16	"மித்ரபா$_4$வேநஸம்ப்ராப்தம்"	மித்ரபா$_4$வேந ஸம் ப்ராப்தன்
334	வரி 1	ஆகவிது,	ஆகிறது;
334	வரி 14	அநுபூ$_4$கபர	அநுபூ$_4$கசர
341	வரி 1	யிருந்ததீயென்னென்னில்	யிருந்ததீயென்னில்
357	வரி 2	பால்பாய	பால்பாயப்பாய
,,	வரி 3	ஸர்வஶரணாகதனை	பூர்வ ஶரணாகதனை
368	வரி 5	ததே$_3$கோபாயதா யாந்து	ததே$_3$கோபாயதா யாச்ஞா
375	வரி 8	த்ராதுகாம	த்ராணகாம
376	வரி 13	என்னுமகத்துக்குள்ளே	என்றும் அகத்துக்குள்ளே
380	வரி 4	என்றும் ப்ரக்ரியையாலே	என்னும் ப்ரக்ரியையாலே.

383	வரி 11.12	பிதாமஹபுரோகாஸ்தே	பிதாமஹபுரோகாம்ஸ்தாந்
384	வரி 8	முலைக்கடுப்புசுரக்குமாப்போலே	முலைக்கடுப்புத்தீரச்சுரக்குமாப்போலே.
386	ஏதத்வ்ரதம்	இகுநமக்கு	இது நமக்கு
,,	வரி 10	என்றபடியிலே	என்று அடியிலே
,,	வரி 14	பொழுதேழுங் காதல் பூண்ட	பொழிலேழுங்காவல் பூண்ட
395	வரி 1	(ஆர்ய த்வம்...)	(ஆர்யம் த்வம்)
413	லோசநாப்யாம்...	ராமம்	ராமோ
423	வரி 2	அருளிச்செய்தாராகமாவும்	அருளிச்செய்தாராகவுமாம்
424	வரி 1	எந்தான்	என்தான்
430	வரி 2, 3	தௌர்பல்ய	பாரதௌர்பல்ய
432	வரி 10	பண்ணுகிறார்	பண்ணுகிறான்
435	வரி 2, 7	திவங்கதா:	திஶோகதா:
,,	வரி 16	ஆருடைமைக்கும்	ஆளுடைமைக்கும்
436	வரி 3	தோரோம் என்று	தோற்றோம் என்று
,,	வரி 9	படுவது	பட்டு
443	வரி 6	ஸாமாந்யத்திலே	விஶேஷத்திலே
445	வரி 4	என் தகவிலை	தகவிலை
457	வரி 5	இதெல்லாம்	இதெல்லாம் என்?
465	வரி 12	அஹம்சக்ரேண	க்ராஹம் சக்ரேண
467	வரி 5	வருகையான	யவநிகையான
483	பரிவ்ருத:	கிடந்ததேஶத்திலே	கிடந்தேஶத்திலே
486	ஸர்வ லோகேச்வர:	காதல்பூண்ட	காவல்பூண்ட
487	ஸாக்ஷாத்...	ஸ ஈஶோஸ்ய	ய ஈஶேஸ்ய
487	ஸாக்ஷாத்...	கரணஜந்ய	காரணஜந்ய
490	ஸர்வ லோகேச்வர:...	இருந்தவவர்;	இருந்தார் அவர்
,,	,,	பொடித்தாரத்தனை	பொடிந்தாரத்தனை
496	வரி 15	வீடரியப்பிடித்து	பிட்ரியைப்பிடித்து
497	வரி 5	உன்னோட்டமாகக்	கண்ணோட்டமறக்

500	வரி 1	ச$_2$ாதி$_3$க்க	ப$_3$ாதி$_4$க்க
500	வரி 2	இவரோ	இவரே
500	பரமாத்மா...	எல்லாருக்கும் நியாமக	எல்லாருக்கும்மேலாய் நியாமக
501	மஹாந்...	ஶரீரவியுக்தராம்படி	ஶரீரவியுக்தனும்படி
504	வரி 1,2	இவருடைய	இவளுடைய
505	வரி 15	முன்னே சொல்ல	முன்னே கொல்ல
506	வரி 9	ப$_4$க$_3$வத$_3$பசாரிகளையும்,	ப$_4$க$_3$வதாபசாரிகளையும். ப$_4$ாக$_3$வதாபசாரிகளையும்
507	வரி 7	உன்பால் வேணுமோ?	உன் வால் வேணுமோ?
507,508	வத$_4$ார்ஹாணும்	கழித்துப்புகக் கடவதோ?	கிழித்துப்புகடக் கடவதோ?
510	வரி 1	இங்ஙன் நிறத்த தாகாது	இங்ஙன் நீர்த்த் தாகாதே
510	வரி 3.4	நமக்குத்திரையனுகை	நற்குதிரையாக
516	த$_3$த்$_3$ருஶ:	காணப்பெறுதே	காணப்பெறுத
528	9, 10	ஜ்ஞானவியோக$_3$	ஜ்ஞானவியுக்தயோக$_3$
533	வரி 4	உதோத்வமஸ்மே தந்வாம் விஸஸுே	உதோ த்வஸ்மை தந்வம் விஸஸ்ரே
*535	யஜத்ரா:	ஸ்வர்க்க$_3$	*ஸ்வத்$_4$வர
539	வரி 1	முடுத்துக்	முடித்துக்
544	வரி 5	உத்தரோக்த	உத்தரோத்தர
549	ஸ்ரீமாந்...	பஶ்யந்த்யச்யுத	(பா)பாஸ்யந்த்யச்யுத
550	வரி 5	சொல்லவேண்டாத	செல்லவேண்டாத
551	வரி 5, 6	வடமதுரை	வடவரை
,,	வரி 10	சௌஶிராஜ	சௌரிராஜ
567	ஸ்ம்ருதிருப...	ப்ரதீ$_3$யமாநே	ப்ரமீயமாணே
571	வரி 6, 7, 8	புருஷகுத்ஸாயப்$_4$ருகு$_3$ஜே	புருகுத்ஸாயபூ$_4$பு$_4$ஜே
573	வரி 12, 13	அந்நாதி$_3$ஸர்வ	அஹம்ஹிஸர்வ
574	வரி 1, 2, 3	மருதோங்யே... ப்ராப்தம்	மநுமங்யே...ப்ராணம்

---

* நம்முடைய பதிப்பிலும் இது தவருக விழுந்துவிட்டது; திருத்திக்கொள்ளவும்.

575	,, 1	பர்யவஸாந	அபர்யவஸாந
576	,, 6	ஸ்வரூபவிஶேஷமாக	ஸவரூபவிஷயமாக
577	,, 2	ப்ராப்தி	ப்ராபக
*580	,, 13	இக்கர்மந்தன்னை	* இக்ரமந்தன்னை
613	,, 11	ஸுத3ர்ஶநம் சிந்தித்தமாத்ரம் ''ஆஶு'' என்று	,,ஸுத3ர்ஶநம் சிந்தித மாத்ரமாஶு'' என்று
617	, 7	கோவிந்தே3	கோ3விந்த3:
619	,, 4	என்னுடையநெகிழ்	என் உடை நெகிழ
620	,, 4	மொய்க்கழல்கள்	மொய்குழல்கள்
623	,, 3	கோவிந்தன் பசு மேய்க்தனவிறே; (கோ3ாவிந்த3)	(கோ3ாவிந்த3)''கோவிந்தன் மேய்த்தன'' இறே.
623	,, 10	பின்சொல்லும்	பின்செல்லும்
625	,, 2.3	நீ கண்டார்	நீ கண்ணுடையவனாயிருக்க,நான்கண்டார்
626	,, 8.9	ஸகே3ஸம்ப்ரதிதீ3ர்க்4காக்ஷ:	ஸ ஏஷ ப்ருது2 தீர்க்க4ாக்ஷ:

◇◇◇◇◇◇

ஒரு முக்கியமான பிழை திருத்தம்

ஸ்ரீராமாயணதனிச்லோகம் உத்தரபாகத்தில் எடுக்கப்பட்ட இதர ப்ரமாணங்களின் அனுக்ரமணிகையில் இருக்கவேண்டிய பின்வரும் ப்ரமாணங்கள், பூர்வபாகத்தில் எடுக்கப்பட்ட இதர ப்ரமாணங்களின் அநுக்ரமணிகையில் சேர்ந்துவிட்டன. அவற்றை உத்தரபாக இதர ப்ரமாண அநுக்ரமணிகையில் சேர்த்துக்கொள்ளவும். அவையாவன:—

ஈசதே தே3வ ஏ	490	ஜிகும்ப்4கு3வதா	468
ஔரஸம்மித்ர	108	ஹிரண்மயேபரே	86, 462, 472, 487
ஜக3தாமுபகா	492	ஹீநாங்நவஸ்த்ர	481
ஜல்போஸ்யவிஜ	173	ஹ்ருதி3ஹ்யயமாத்மா	475
ஜிதந்தே	468		

*நம்முடைய பதிப்பிலும் இது தவருக விழுந்துவிட்டது; திருத்திக்கொள்ளவும்

ஆகரமோ, முழுவடிவமோ, அல்லது இரண்டுமோ
தெரியவேண்டிய ப்ரமாணங்களின் அட்டவணை.

[இப்ரமாணங்கள் உள்ளவிடங்கள், அவற்றின் மேற்மகுதி முதலானவற்றை ப்ரமாண அநுக்ரமணிகையிலிருந்து தெரிந்துகொள்வது.]

ஸ்ரீராமாயண தனிச்லோகம் – பூர்வபாகம்.

1 அக்நிஹோத்ராச்ச
2 * அத்யஜங்கப2லாந்
3 அநுபஹதாம் வ்ருத்திம்
4 அபராதா4நபி4ஜ்ஞ:
5 அஸத்ஸமாவித4வா
6 ஆத்மயாதா2த்ம்ய
7 ஆத்மாநம் தத்வதோ
8 ஆத்மாவை புருஷஸ்ய
9 ஆபத்3யபிஸ்வகார்
10 ஆவாப்4யாம் கர்மாணி
11 உபாயோகு3ருரேவ
12 / கந்யாகாமயதேரூபம்
13 குஶத3ர்ப்ப4த4ரா:
14 கூடயுத்3தா4ஹிராக்ஷஸா:
15 கௌசிகோயஶஸாம்
16 சகோரா இவ
17 சண்டா3ள:பக்ஷி
18 சுக்ருஶர்வந
19 ஜாமாதாத3ஶமோ
20 ஜ்ஞாதேஹீச்சா2
21 ஜ்ஞாநவிஜ்ஞாந
22 ஜ்யேஷ்டோ2ப்4ராதா
23 தபோதா3நம்தப:
24 தேநாநுக்3ருஹீதோ
25 த்ருணமிவலகு4
26 த்ருணம்ஶூரஸ்ய
27 து3ர்க்3ரஹம்மநஸா
28 நபரமுக2நிரீக்ஷணம்
29 நித்யம் நித்யா
30 நீதிமாந் பு3த்3தி4
31 பதிரேகோக3தி
32 பராதீ4நா:ஸ்த்ரிய:
33 பரிபூ4தாவிஷ்ணு
34 பரீதம்துதி3நம்
35 || ப்ரத்யக்ஷேகு3ரவ:
36 ப்ரயத்ந: ஸ்வாத்ம
37 ப்ரீதிவிஷ்பா2ரிதே
38 ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து
39 பா3லஆஷோடா3ஶாத்3
40 பா3ல:க்ரீடநகாய
41 ப்3ரஹ்மருத்3ரேந்த்3ர
42 ப4ர்த்தாரமவலம்
43 பூ4மி:க்ஷேத்ரம்களத்ரஞ்ச
44 ப்4ருங்கா3ரதா4ரா

---

* ஸ்ரீராமாயணம் அயோத்யாகாண்டம் (41-10)ல் "வ்யஸ்ருஜங் கபா3ளாந் நாகா3:" என்றுள்ளதின் பாடபேதமேயிது.

/ இதன் முழுவடிவம்:-
கந்யா காமயதே ரூபம் மாதா வித்தம் பிதா ச்ருதம்।
பா3ந்த4வா: குலமிச்ச2ந்தி ம்ருஷ்டாந்நமிதரே ஜநா: ||

|| இதன் முழுவடிவம்:-
ப்ரத்யக்ஷே கு3ரவ: ஸ்துத்யா: பரோக்ஷே மித்ரபா3ந்த4வா:।
கார்யாந்தே தாஸப்4ருத்யாச்ச புத்ரகா ந கதா3சந ||

45 மநோஹிஹேது:
46 மாதாபுத்ரஸ்ய
47 மிதி$_2$லாயாம்
48 யதோநவேத$_3$
49 யத்ரநாஸ்தி
50 யத்$_3$தி$_4$மநஸா
51 யத்$_3$ப்$_3$ராஹ்மணச்சா
52 ரக்தாயஸ்யநேத்ரபாணி:
53 ரமணீயோஹ்யயம்
54 ராஜீவம்ரக்தபத்$_3$மம்
55 ராஜ்யகாமவிஷயா
56 ரூபேணவநிதாஜநம்
57 வத$_4$ச்சத$_4$ர்ம
58 விச்வாதி$_4$கம்ருத்$_3$ரம்
59 ஶத்ரோ:ஶேஷம்ந
60 ஶாஸ்த்ரத்$_3$ருஷ்டேந
61 ஶோகாக்$_3$நி:ப்ரத$_4$க்ஷ்யதி
62 ச்ருதமாஸீந்மரீசித:
63 /ச்ரேயாம்ஸிப$_3$ஹூ
64 ஸச்ச$_2$ப்$_3$த$_3$:ஸாது$_4$
65 ஸத்யம்பூ$_4$தஹிதம்
66 ஸந்நத்$_3$தௌ$_4$விசரிஷ்யத:
67 ஸபிதாயஸ்து
68 ஸர்வேந்த்$_3$ரியைரபி
69 ஸாத$_4$வ:க்ஷீணதே$_3$ஹா:
70 ஸிம்ஹாஸநேப்ரபு$_4$:
71 ஸ்தம்பே$_3$நஸலிலேந
72 ஸ்திமிதவிகஸிதாநாம்
73 ஹரிபா$_3$ஹ்யாஸ்து
74 ஹஸந்நிவந்ருபோ
75 ஹாபுத்ரேதிசவாதி$_3$ந்ய:

ஸ்ரீராமாயண தனிச்லோகம் — உத்தரபாகம்

1 அதித்யப்ராக்ருதாந்
2 அத்$_3$ருஷ்டமுத்$_3$தி$_3$ச்ய
3 அபராஜித:
4 அர்த்த$_2$வந்மது$_4$ரம்
5 ஆகேஶக்$_3$ரஹணாந்
6 ஆத்மாவைபுருஷஸ்ய
7 ஆபத்$_3$யபிஸ்வ
8 ஆஸ்த்ரீபா$_3$லம்
9 இத$_3$ம்விமாநமா
10 உத்தமாநாந்து
11 உத்பந்நஸ்ய
12 உபாஸநப்ராரம்பே$_2$
13 ஏஷாம்விபூ$_4$தி
14 கண்டகேநேவ
15 கார்யஸ்த்ரிஷ்வபி$_4$
16 கிந்த்வர்த்தி$_3$நா
17 கீர்த்திமுத்$_3$தி$_3$ச்ய
18 கௌமோத$_3$கீம்ஜ்ஞாந
19 க்ஷாந்தமித்யப்$_3$ர
20 சலாஹிப்ரா
21 ஜல்போऽஸ்ய
22 ஜிதம்ப$_4$க$_3$வதா
23 ஜ்ஞாநதே$_3$ஶபரி
24 தத்ரபா$_4$க$_3$வதா
25 தந்மித்ரம்யத்ர
26 தஸ்மிந்ப்ரஸந்நே
27 நததா$_2$விததை$_2$ர்
28 நப்ராணேகுருதே
29 நாஸஹாயஸ்ய
30 நாஹமாத்மாநம்

/ இதன் முழுவடிவம்:-

ச்ரேயாம்ஸி ப$_3$ஹூவிக்$_4$நாநி ப$_4$வந்தி மஹதாமபி।
அச்ரேயஸி ப்ரவ்ருத்தே து குத்ர யாந்தி விகா$_4$தகா:॥

பாரதாதிதனிச்லோகம்

* இதன் முழுவடிவம்:-

வசஸ்யந்யந்மநஸ் யந்யத் கர்மண்யந்யத் து₃ராத்மநாம் ।
வசஸ்யேகம் மநஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மநாம் ॥

ஸ்ரீநிவாஸம் பிரஸ், 8-புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.